ஆளுநர் உரை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்



ஆளுநர் உரை மீது

கலைஞரின்
சட்டமன்ற உரைகள்

துணை முதல்வர் தளபதி
மு.க.ஸ்டாலின் 58வது பிறந்தநாள்
விழாவில் வழங்கப்பட்டது.
இளைஞரணி
தி.மு.க மாணவரணி செயலாளர்

வெளியீடு :
தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

விற்பனை உரிமை :
பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல்பதிப்பு : மே, 2007

இரண்டாம் பதிப்பு : ஜூலை, 2008

G1002309

விலை ரூ. 400/-

894.811
TAM

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப் பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான "திருக்குவளை" உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு

நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத் தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான்

அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி"யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என்

இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக் கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.


இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில்

எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப்

பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத் தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவி யங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்'' பொன்விழா கொண்டாடப்படும் இந்தக்

குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரிப் பிரச்சினை மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

ஆளுநர் உரை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

ஆளுநர் உரை மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

உரை : 1 **நாள் : 04.05.1957**

கலைஞர் மு. கருணாநிதி : அவைத் தலைவர் அவர்களே, இன்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை, தூற்றவும் வரவில்லை; என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி இங்கு நண்பர்கள் அபிப்பிராயம் தெரிவித்த நேரத்தில், எதிர்க்கட்சியினரைப் பற்றி இங்கு பேசப்பட்ட நேரத்தில், குறை கூறுவதையே எதிர்க்கட்சியினர் தொழிலாகக் கொண்டு பேசுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப்பட்டது. குறைகளை எடுத்துச் சொல்லி நிறைவேற்றுவதற்காகத்தான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோமே தவிர, செய்திருக்கிற காரியங்களைப் பன்னிப் பன்னிச் சொல்லி, அவைகளைப் பாராட்டுவதற்காக நாம் இங்கு வரவில்லை. அத்தகைய காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற பாராட்டு விழாக்கள் எல்லாம், வெளியிலே அந்தக் காரியங்களால் பயன் பெறுகிறவர்களால் நடத்தப்படுவது மிகப்பொருத்த முடையது என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. குறைகளை எடுத்துச் சொல்லி சரி செய்து கொள்வதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம்.

அந்தக் காலத்தில் மன்னர்கள், மக்களின் குறைகளைத் தெரிந்து அவர்களுக்கு நல்வாழ்வு நல்குவதற்கு இரவு நேரங்களில்

"நகர்ச்சோதனை" என்ற பெயரால் மாறுவேடம் தாங்கி, மக்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளை எல்லாம் தெரிந்து, கொலுமண்டபத்தில் உட்கார்ந்து அந்தக் குறைகளைப் போக்கினார்கள் என்று பழைய காலச் சரித்திரத்திலிருந்து படித்திருக்கிறோம். இது மன்னர்கள் ஆளும் காலம் அல்ல; மக்கள் ஆளுகின்ற காலம். இந்தக் காலத்திலும், அதேபோல் மந்திரிகள் மாறுவேடம் தாங்கி மக்களின் குறைகளைக் கண்டுவர வேண்டுமென்று நான் கோரவில்லை. நாடகத்திலே அனுபவம் பெற்ற நாங்கள் ஒருவேளை ஆளும் கட்சியினராக வந்தால் அந்த வேடங்களைப் போட்டு, மக்களின் குறைகளை கண்டுபிடிக்க முடியும். அந்த அனுபவம் இல்லாத மந்திரிகளை அதைச் செய்யவேண்டுமென்று நான் கோரமாட்டேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர்க்கட்சி ஒன்று தேவையென்பது, எதை எடுத்தாலும் எதிர்த்துப் பேசுவதற்காக அல்ல என்பதை இங்கு பேசிய பலர் சுட்டிக்காட்டினார்கள். ஆளுகின்றவர்கள் யாரைத் துணைக் கொள்ளல் வேண்டுமென்பதைப் பற்றி, வள்ளுவர் பெருமான், தன்னுடைய திருக்குறளில், "பெரியாரைத் துணை கோடல்" என்ற அதிகாரத்தில், ஆளுகின்றவர்கள் பெரியாரை தங்களுடைய துணைவராகக் கொள்ளவேண்டுமென்று கூறியிருக்கிறார். எந்தப் பெரியாரைத் துணைகொள்ள வேண்டுமென்று கூறினார் என்றால், எதையும் "சரி, சரி" என்று சொல்லி கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல;

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரி லானும் கெடும்"

என்று வள்ளுவர் குறள் வகுத்திருக்கிறார். சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக் கொள்ளாத மன்னன் பகைவர்கள் இல்லையாயினும் தன்னைத் தானே கெடுத்துக் கொள்வான், கெட்டுவிடுவான் என்று சொல்லி யிருக்கிறார். அந்த முறையிலே இடித்துச் சொல்வதற்காகவே வந்திருக்கிற பெரியார்களுடைய துணையை ஆளுகின்றவர்கள் பெறவேண்டுமென்று வள்ளுவர் அந்தக் காலத்திலேயே உணர்ந்து சொன்னார் போலும்! கவர்னருடைய உரையைப் பற்றி இங்கு பேசிய பல நண்பர்கள் "கன்னியாகுமரியை வரவேற்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கன்னியாகுமரியை நாம்

தேவிகுளக் கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதோ நின்று கொண்டு வரவேற்காமல், சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்றுகொண்டு வரவேற்கிறோம் என்று எண்ணும்போது, தேவிகுளம் பீர்மேட்டைப் பெறுவதற்கு வழிவகை காணப்பட வில்லை; கவர்னர் உரையில் - என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து நில சீர்திருத்தச் சட்டங்களின் பேரால், நியாய வாரச் சட்டங்களின் பேரால் விவசாயிகள் திருப்தியடைந்து சுமுகமான நிலைமையில் இருக்கிறார்கள் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். என்னுடைய குளித்தலை தொகுதியைப் பொறுத்தவரையிலும் திருச்சி மாவட்டத்திலும் இன்றையதினம் இந்த நியாய வாரச் சட்டத்தின் காரணமாகவும் சீர்திருத்தச் சட்டத்தின் காரணமாகவும் எழுந்த வழக்கு உயர் நீதி மன்றம் சென்று அங்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக மக்களுக்கு வேதனையை உண்டாக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதை யாரும் மறந்துவிட வில்லை. மறுத்து விடவும் முடியாது. விவசாயிகள் வீடுகளில் தங்களுடைய மனைவி மக்களுடன் வேதனை அடைந்து புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். குமுறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நியாய வாரச் சட்டம் காரணமாக குளித்தலைத் தொகுதி நங்கவரம் பகுதியிலும் திம்மாச்சிபுரம் பகுதியிலும் விவசாயிகள் எந்த அளவிற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தினம் தினம் பத்திரிகைகளில் வரும் செய்திகளைக் கண்டும் விவசாயிகள் பகுதியில் எழுப்பப்படும் கூக்குரலைக் கண்டும் எந்த முறையில் அங்கு நிலைமை இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு கையேரு வாரம் என்றும் மாட்டு வாரம் என்றும் இரண்டு வித வாரம் இருக்கின்றன. இப்படி இரண்டு விதமான வாரம் இருப்பதன் காரணமாக அவர்களுக்கு இந்த நியாய வாரச் சட்டம் பயன்படக்கூடாது என்று கருதி அதை விவசாயிகள் பயன் அடையாத முறையில் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அங்கு தீர்ப்பு வாங்கி வந்திருக்கிறார்கள். அந்த தீர்ப்பின் காரணமாக விவசாயிகள் நியாய வாரச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும், வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும் இருக்கிறார்கள். இன்றையதினம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அந்த ரீதியில் வழங்கி இருக்கிறது. அதன் காரணமாக மாட்டுவார ஏருக்காரர்கள் என்றால் யார்,

கையேருக்காரர்கள் என்றால் யார் என்ற பிரச்சினை எழும்பி அதைப்பற்றி விளக்கத்தை கவனிக்கும்போதுதான் நிலைமை தெரிய வருகிறது. மாடும் தந்து அவர்களுடைய சொந்த உழைப்பை சிந்தி நிலம் உடையவர்களிடத்தில் விதை, உரம், ஏரு இவைகளைப் பெற்று அப்படிப் பெறுகிற அந்தப் பொருள் களுக்காக விளைச்சலில் அவர்கள் தனியாக தானியமாகவோ அல்லது பொருளாகவோ எடுத்துக் கொண்ட பிறகு 60 : 40 என்று பெறவேண்டும் என்று சொல்லப்பட்டாலும் இன்றையதினம் மாட்டு ஏருக்காரர்கள் விவசாயிகள் அல்ல என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைப்போலவே கையேருக்காரர்கள் யார் என்றால் அவர்கள் பெரும்பாலும் ஆதி திராவிடவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், பழங்குடி மக்கள் என்கின்ற பிற்பட்ட மக்கள் பாட்டாளி மக்கள் அப்படிப்பட்ட வர்க்கத்தினருக்காகத்தான் இந்த நியாய வாரச் சட்டம் செய்யப் பட்டது. அந்த அடிப்படையில் அவர்களுக்கென்று இந்த நியாய வாரச் சட்டத்தையும் நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தாலும் அவர்கள் அவைகளின் பயனை அடைய முடியாமல் நீதிமன்றம் தீர்ப்பு அளித்து விட்டது. அந்த அடிப்படையிலாவது எந்த அளவிலாவது இந்த நியாய வாரச் சட்டம் அவர்களுக்கு நன்மை வழங்கி இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட மாட்டு ஏருக்காரர்களும் கையேருக்காரர்களும் சாகுபடியாளர்கள் அல்ல என்கின்ற தீர்ப்புக்கு இன்று ஆளாகி இருக்கிறார்கள். அதன் மேல் அப்பீல் செய்யப்பட்டு மீண்டும் வழக்கு வரும் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் எடுத்துக்கொள்ளப் போவதாக இருக்கிறது. அதற்குள் விவசாயிகளுடைய நிலைமை என்னவென்றால் முத்து முத்தாக வியர்வை சிந்தி மணி மணியாக நெற்குவியலைத் தந்தவர்கள் களத்துமேட்டிலே காவலர் புடை சூழ அதைக்கொட்டி விட்டு வீட்டிலே வறுமைத்தேள் கொட்டிட வாடிக்கிடக்கிறார்கள். குளித்தலைத் தொகுதியில் இப்பொழுது நிலவி வருகிற, இப்படிப்பட்ட நிலைமையைப் பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட மறந்தது வருந்தத்தக்க ஒன்று.

நெருக்கடிக்கு ஆளாகி இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உயர் நீதிமன்றம் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு

முன்னதாக புதிய ஒரு திருத்த சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அதையும் துரிதமாகக் கொண்டு வரவேண்டும். ஏழைத் தொழிலாளர்களுடைய, ஏழை விவசாயிகளுடைய அவல நிலைமையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது என்பதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றுமே இல்லை என்பதை மிகவும் கவலை கொண்டு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து உணவு பற்றாக்குறை நிலையைப் பற்றியது! கவர்னர் அவர்களுடைய உரையில் உணவு விலை குறையவில்லை என்று குறிப்பிட்டாலும் உணவு விலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க இயலாது. எங்கு பார்த்தாலும் உணவு விலை விஷம் போல் தினம் தினம் ஏறிக் கொண்டு இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். ஆந்திராவிலுள்ள பெருவாரியான உபரி அரிசி தமிழகத்திற்குப் பயன்படாமல் வட நாட்டில் சோளப் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்குள்ள கோதுமையை கொண்டு வடக்கே சரிக்கட்டுவதற்குப் பதிலாக ஆந்திராவிலுள்ள உபரியான அரிசியை தமிழ் நாட்டிற்கு பயன்படாத முறையில் எடுத்துச் சென்றதானது இங்கு விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. இதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் எந்தவிதமான குறிப்பும் காணப்பட வில்லை. இப்படி விலைவாசிகள் உயர்வைத் தடுக்க எப்படிப்பட்ட வழிவகை செய்யப்படும் என்பதும் சொல்லப்படவில்லை.

உணவு நிலைமையை சமாளிப்பதற்கு சர்க்கார் உணவு பெருக்கத்திற்கு திட்டங்கள் செய்யவேண்டும். இந்த சர்க்கார் கையில்லாத ஊமையின் நிலைமையில்தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து சுட்டிக்காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால் உணவு நிலை பற்றாக்குறை இதுபோன்றே எப்பொழுதும் நீடித்துக்கொண்டே இருக்கும். இத்தகைய நிலைமைகளிலிருந்து திராவிடம் விடுபட்டு திராவிடம் தனித்து, செழித்து நின்று, வளம்பெற, வாழ, நல்ல முறையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும். அதற்கு குறிப்பாக உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். குடகனார் திட்டம் தேவை என்ற முயற்சி

ஒன்று குளித்தலைத் தொகுதியில் 1952-ஆம் ஆண்டு முதற்கொண்டே இருந்து வருகிறது. அதைப் பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப் பட்டு வருகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்களிடமும், கனம் ரெவினியூ அமைச்சர் அவர்களிடமும், கனம் மராமத்து அமைச்சர் அவர்களிடமும், கனம் நிதி அமைச்சர் அவர்களிடமும் பல தடவை பல மனுக்கள் மூலமாக குறிப்பிடப்பட் டிருக்கிறது. அங்குள்ள P.W.D.சூப்ரவைசர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்து துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்பதை ஆய்ந்து சொல்லியிருக்கிறார். அழகாபுரி என்கிற இடத்தில் ஒரு அணை கட்டினால் அதன் மூலமாக சுமார் பத்தாயிரம் ஏக்கர் புஞ்சை நிலத்தை நஞ்சையாக மாற்றக்கூடிய வசதி இருக்கிறது. அதற்கு 12 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொல்லப்பட் டிருக்கிறது. இது கவனிப்பார் அற்றுக் கிடக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் அலட்சியப்படுத்தப்படுவதைப் பற்றியெல்லாம் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் சிறிதும் குறிப்பிட வில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.



உரை : 2 நாள் : 10.12.1959

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உயர்திருவாளர் மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றியுள்ள உரையின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கவர்னர் அவர்களது உரையின் இறுதிப் பகுதியில் கடமைகளை நிறைவேற்றுவதில் "கடமையுணர்ச்சி யுடனும் கண்ணியத்துடனும் செயலாற்றுவீர்கள்" என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவருடைய உரையின் மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் விலைவாசி உயர்வைத் தடுக்க வேண்டுமென்று, குறைக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு யாராவது என்னுடைய தொகுதிக்கு வந்தால் அவர்களுடைய விரல்களை வெட்டி விடுவோம் என்று சொல்கிற அளவுக்கு காங்கிரஸ் நண்பர்கள் தங்களது விவாத உரையில் தங்கள் கண்யத்தைக் காப்பாற்றி யிருக்கிறார்கள். காந்தியாரின் உருவப்படத்தை மாட்டி வைத்துக் கொண்டு அஹிம்சையைப் பற்றி இங்கு மிக அழகாக எடுத்துச் சொல்லி வருகிறார்கள். பிரான்ஸ் நாட்டில் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டு மென்று பாட்டாளி மக்கள் குமுறி எழுந்து "எங்களுக்கு ரொட்டி வேண்டுமென்று சொன்ன நேரத்தில் பிரான்ஸ் நாட்டு இராணி ரொட்டி கிடைக்கவில்லையா என்று ஆச்சரியத்தோடு கேட்டு விட்டு ரொட்டி கிடைக்க வில்லை என்றால் கேக் சாப்பிடுங்கள் என்று சொன்னாளாம். அவள் தெரியாத்தனமாக அப்படிச் சொன்னாள். ஆனால் "பௌலான்" என்ற ஒரு கவர்னர் அதே பிரான்ஸ் நாட்டில், ரொட்டி கிடைக்கவில்லை என்றால் புல்லைச் சாப்பிடுங்கள் என்று சொன்னான். அவன் ஆணவத்தோடு பதில் சொன்னான். ஆனால் தெரியாத்தனமாக சொன்ன அரசிக்கும்,

ஆணவத்தோடு பதிலளித்த கவர்னருக்கும் அளித்த தீர்ப்பு ஒன்றுதான் என்பதை நான் இங்கே மிக மிக வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

விலைவாசிகள் ஏற்றம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் நாட்டில் ஏற்பட்டிருக்கிற தொல்லை தீர வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் சர்க்காரோடு ஒத்துழைப்பதற்கு தயாராயிருக்கிறோம், நல்ல திட்டங்களை சர்க்கார் அளிக்குமானால் என்ற நிபந்தனையின் பேரில் எதிர்க் கட்சிக்காரர்கள் கண்டனக் கூட்டங்கள் நடத்தினார்களே தவிர சர்க்காரைக் கவிழ்த்துவிட வேண்டுமென்றோ அல்லது சர்க்காரைக் குற்றம் சாட்டவேண்டுமென்பதற்காகவோ அல்ல என்பது அந்த சர்வ கட்சி கண்டனக் கூட்டங்களில் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் மக்கள் சர்க்காருக்கு எதிராக நடத்துகிற பொதுஜனக் கிளர்ச்சியை, இன்னும் சொல்லப் போனால் புரட்சியை கொஞ்சம் அடக்கி வைப்பதற்குக்கூட சர்வகட்சியின் அணிவகுப்பு, சர்வகட்சியின் ஒற்றுமை பயன்படும் என்றுதான் அந்தக் கண்டனக் கூட்டங்களில் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது என்பதை இந்த சட்டசபையில் நான் குறிப்பிட விரும்புகிறேன். உணவுப் பிரச்சினை என்பது ஒரு நாட்டு மக்களின், சாதாரண பிரஜையின் உரிய கோரிக்கைகளில் ஒன்று. உணவு, உடை, உறையுள் என்ற சாதாரண பிரச்னைகளுக்குக் கூட ஏறத்தாழ 12 ஆண்டு காலமாக நடைபெறுகிற சுதந்திர சர்க்கார் என்று சொல்லப்படுகிற இந்த சர்க்காரினால் தீர்வு காணப் படவில்லை என்பதை யாராவது கண்டிக்காமலோ அல்லது குறிப்பிட்டுச் சொல்லாமலோ இருக்க முடியாது. கவர்னர் பெருமான் அவர்கள் 4-2-1959-ல், "உணவுப் பற்றாக்குறை நீடித்து வருவது, வேளாண்மைப் பொருள்களின் விளைவை நாம் இன்னும் பன்மடங்கு பெருக்கும் வகையிலே தொடர்ந்து முயலவேண்டும் என்னும் படிப்பினையைத்தான் வலியுறுத்துகிறது." என்று கூறியிருக்கிறார்கள். அதே கவர்னர் 5-12-1959-ல் ஆற்றிய உரையில், "வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம்தான் நமது உணவுப் பிரச்சினைக்கு நிரந்தரமான பரிகாரம் காண முடியும்" என்று அதையே திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள். 4-2-1959-ல் எதைச் சொன்னாரோ அதையே 5-12-1959-லும் சொல்லியிருக்கிறார்கள். 4-2-1959-ல் பெற்ற படிப்பினையை ஏறத்தாழ 10 மாதங்கள் சுமந்த பின்னரும் அப்படியே இருக்குமானால் முயற்சி என்கிற குழந்தை

பிறக்கவில்லை என்பதோடு உள்ளபடியே சர்க்கார் கர்ப்பத்தடைப் பிரசாரம் அதற்குத்தான் பயன்பட்டதோ என்று சந்தேகப் படுகிறேன். உற்பத்தி ஏன் பெருகவில்லை, உற்பத்தி பெருகினாலும் ஏன் நாட்டிலே இத்தகைய தொல்லை இருக்கிறது என்பதைப்பற்றி எடுத்துக் கூறுகிற நேரத்தில் நிலவுடமைக்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்கிற ஒரு பிரச்சினையை கவர்னர் அவரது உரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல ஆண்டு காலமாகவே நிலவுடமைக்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்ற கொள்கையை இந்த சர்க்கார் எடுத்துச் சொல்லி வருகிறது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஏடுகள் மூலம் எழுதுகிறார்கள், மேடைகளில் காரசாரமாக பேசுகிறார்கள், ஆனால் உச்சவரம்பு கட்டப்பட்டதா? அதற்கான முயற்சிகள் எத்தனை வருட காலமாக எடுக்கப்பட்டு வருகிறது என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

கவர்னர் பெருமான் அவர்கள் 58-வது ஆண்டில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார், "நில உடமைக்கு உச்சவரம்பு கட்டுவது பற்றி அரசாங்கம் இப்போது தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது, இதில் ஒரு முடிவு ஏற்படுமுன் நிலைமை மேலும் சிக்கலாகாமல் தடுக்கவேண்டும். உத்தேச வரம்புக்கு மீறி நிலத்தைச் சொந்தமாக்க விரும்பும் போக்கை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டும். எனவே, தற்காலிகமாக நில உடமைக்கு ஒரு உச்சவரம்பு கட்டி, அந்த வரம்புக்கு மேற்பட்டு, நிலத்தைச் சொந்தமாக்குவதைத் தடை செய்யும் வகையில் ஓர் இடைக்கால சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் எண்ணியுள்ளது." என்று 8-2-1958-ல் பேசியிருக்கிறார். அதன் பின்னால் 4-2-1959-ல் இதே கவர்னர் அவர்கள் பேசும்பொழுது "நில உடமைக்கு வரம்பு கட்டும் வகையிலே மிக விரைவில் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்"என்று குறிப்பிட்டிருக்கிறார். அதன் பின்னால் சமீபத்தில் 5-2-1959-ல் நிகழ்த்திய உரையில் "நில உடமைக்கு மேல் வரம்பு நிர்ணயிக்கும் மசோதாவின் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன" என்று குறிப்பிடுகிறார். இதை யெல்லாம் சேர்த்து கவனிக்கும் நேரத்தில் பயமேற்படுகிறது, காரணம் நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டும் என்கின்ற தூய எண்ணம் இவர்களுக்கு கொஞ்சமும் இல்லை என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. எலியை பிடிப்பதற்காக, பூனையை வளர்த்து, அந்தப் பூனைக்கு மணியையும் கட்டி அது வரும் நேரத்தையும்

அறிவிப்பது போலுள்ள புத்திசாலித்தனம்தான் இருக்கிறது இதில் என்று எண்ண வேண்டியிருக்கிறது. புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்லி நிலப்பிரபுக்கள் அனைவரும் உஷாராகிவிடுங்கள் என்று கூறி, அவர்கள் தங்கள் உற்றார் உறவினருக்கும், நெருங்கிய நண்பர்களுக்கும் தங்கள் நிலத்தை எல்லாம் பிரித்துக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பத்தையும் அளித்துக்கொண்டிருக்கிற அலங்கோலமான நிலைதான் இருந்து வருகிறது என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது. கவர்னர் அவர்களது உரையில், இதே சட்டமன்றத்தில் பல தடவைகளிலும் வலியுறுத்தி சொல்லப்பட்டுவந்த - பஸ் போக்குவரத்தை எல்லாம் தேசீய மயமாக்கவேண்டும் என்பதைப்பற்றி - எந்தவிதமான வாசகமும் காணப்படவில்லை. பஸ் தொழில் தேசீயமயமாக்கவேண்டும் என்று முற்போக்கு கட்சிகள் எல்லாம் சொல்லுகிற நேரத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லாம் எதிர்க்கத்தான் செய்கிறார்கள். பஸ் முதலாளிகள் இல்லாவிட்டால் காங்கிரஸ் இல்லை என்ற நிலைதான் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. பஸ் முதலாளிகளால்தான் இன்று காங்கிரஸ் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை மிக மிக, வற்புறுத்திக் கூறுவதோடு மட்டுமல்ல, அதற்கான ஆதாரங்களை எங்களுக்கு எடுத்துக் காட்ட முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பஸ் முதலாளிகளால்தான் காங்கிரஸ் காப்பாற்றப் படுகிறது, இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸின் உயிர் இன்று பஸ் முதலாளிகளின் கையில்தான் இருக்கிறது என்று குறிப்பிடலாம். புராணத்தில் சொல்லப்பட் டிருப்பதுபோல் மயில் ராவணனின் உயிர் எங்கே இருக்கிறது என்று அனுமான் தேடிக் கொண்டிருந்த நேரத்தில் அது ஏதோ பத்து காதத்திற்கு அப்பால் உள்ள மலைச்சாரலில் ஒரு தடாகமிருக்கிறது, அதையும் தாண்டிப் போனால் ஒரு சுரங்கம் இருக்கிறது, அதற்குள்ளில் ஒரு குகை இருக்கிறது, அதன் மத்தியில் இருக்கும் டப்பாவில் ஒரு வண்டு இருக்கும், அதைப் பிடித்து நசுக்கினால்தான் மயில் ராவணனைக் கொல்ல முடியும் என்று புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : இதில் எவ்வளவு உண்மை இருக்கிறதோ, அந்த உண்மைதான் கனம் அங்கத்தினர் அவர்கள் சிறிது முன்னால் சொன்ன காரியத்திலும் இருக்கும் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(கைதட்டல்)

கலைஞர் மு. கருணாநிதி : அந்தக் கதைப்படி டப்பாவில் இருக்கும் வண்டைப் பிடித்து நசுக்கினால் எப்படி மயில் ராவணனுடைய உயிரைப் போக்கடிக்க முடியுமோ, அதே போன்று பஸ்தொழிலை தேசீயமயமாக்கிவிட்டால் காங்கிரஸின் நிலையும் ஆகிவிடும் என்பதை எடுத்துக்காட்டவே விரும்பினேன்.

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : அப்படியானால் பஸ் தொழிலை தேசீயமயமாக்கவேண்டும் என்று சொல்வது காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதற்காகத்தானா? அல்லது நாட்டினுடைய நன்மையைக் கருதியா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : நாட்டினுடைய நன்மைக் காகத்தான் பஸ் தொழில் தேசீயமயமாக்கப்பட வேண்டும் என்று சொல்லுகின்றோம். ஆனால் பஸ் தொழில் தேசீயமயமாக்கப் பட்டுவிட்டால் ஒழிக்கப்பட வேண்டியவை எல்லாம் தானாகவே ஒழிந்து போய்விடும்.

உரை : 3 நாள் : 10.08.1960

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப்பற்றி என்னுடைய கருத்துக்களை சொல்லுகின்ற நிலையில் நான் இங்கு நின்று கொண்டிருக்கின்றேன். கவர்னர் அவர்களுடைய உரை இங்குள்ள ஆளும் கட்சி உறுப்பினர்களால் நன்றி நோக்குடன் பாராட்டப்பட்டது என்றாலும் எதிர்க்கட்சிகளால் போற்றுகின்ற அளவில் இந்த உரையில் இந்த நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகின்ற பல பல திட்டங்கள் இல்லை என்பதை சுட்டிக்காட்டவும், இந்த உரையில் போதுமான அளவு திருப்தி இல்லை என்பதை எடுத்துக் காட்டவும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற முறையில் இங்கு எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர கவர்னர் அவர்களுடைய உரையை வேண்டுமென்றே புறக்கணித்து மறுத்துப் பேச வேண்டும் என்பதல்ல எங்கள் நோக்கம் என்பதை அமைச்சர் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களில் இருக்கின்ற நல்லெண்ணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையில் அண்மையில் நடைபெற்ற மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய வேலை நிறுத்தத்தைக் குறிப்பிட்டு அந்த வேலைநிறுத்தம் பொது மக்களுடைய ஆதரவாலும் போலீசாருடைய நல்ல நடவடிக்கை களினாலும் எந்த அளவுக்கு சமாளிக்கப்பட்டது என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இங்கு பேசிய கனம் உறுப்பினர்களில் சிலர் இந்த வேலைநிறுத்தத்தைத் தோற்கடிக்கின்ற அளவுக்கு பொதுமக்கள் தாங்களாகவே ஊழியர்களாக இருந்துகொண்டு அதை சமாளித்தார்கள் என்பதைப் பெருமையோடு குறிப்பிட்டார்கள். நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புவது

வேலைநிறுத்தத்தைச் சமாளிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் நிரந்தரமாகவே அந்தந்த வேலைகளில் ஒரு வேளை நியமிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக கொஞ்ச நாட்களில் இப்போது வேலைநிறுத்தம் செய்தவர்கள் என்ன கோரிக்கைகளை எல்லாம் கேட்டார்களோ அதைவிடக் கூடுதலாக சில கோரிக்கைகளை ஏன் கேட்கமாட்டார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கோரிக்கை அளவில், தேவை அளவில் அவர்களுடைய போராட்ட முறை அல்லது அவர்களுடைய வேலைநிறுத்த முறை எப்படியிருந்தாலும் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படை கொள்கை என்ன என்பதைச் சற்று ஆராய்ந்து பார்த்து அதற்கான நடவடிக்கை எடுக்க சர்க்கார் தவறிவிட்டது என்பதை நாம் இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதைச் செய்யத் தவறி விட்டோம் என்று உள்ளத்தில் தெரிந்திருந்த போதிலும் இனிமேலாவது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களை பழிவாங்குகின்ற முறையைச் செய்துகொண்டு வராமல், அவர்களுடைய குழந்தைகள், குட்டிகள் அவர்களுடைய ஏழை குடும்பங்கள் நல்லமுறையில் மறுமலர்ச்சி யடைந்து வாழக் கூடிய வகையில், அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்க வேண்டும் என்பதை இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

மொழிப்பிரச்சினையைப்பற்றி கவர்னர் அவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிடும்பொழுது நேரு அவர்களுடைய வாக்குறுதியும், ஜனாதிபதியினுடைய உத்தரவும் ஒன்றாக இருக்கிறது என்று சூசகமாக குறிப்பிட்டு மொழிப்பிரச்சினை தொல்லை குறைந்து விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்குப் பதிலாக இந்த வாசகம் எப்படி இருந்திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன் என்றால் "1959-ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் நாள் நமது பிரதம மந்திரி பேசிய பேச்சும், அரசியல் அமைப்பின் 344-வது பிரிவும் ஒன்றுக்கொன்று முரணாயிருந்ததினால், நிலைமையை விளக்குகின்ற முறையில் மீண்டும் குடியரசுத் தலைவர், தலைமை அமைச்சர் நேரு, உள் நாட்டு அமைச்சர் பந்த் இவர்கள் அறிக்கைகளை தந்து உறுதி மொழிகள் அளிப்பதற்குக் காரணமாயிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை பாராட்டுகிறேன்" என்று இப்படி கவர்னர் அவர்களுடைய உரை இருந்திருக்குமானால், அதைப்பார்த்து நான் சந்தோஷப்படுவேன். வேலைநிறுத்தத்தை சமாளித்ததாகக் கூறப்படும் பொதுமக்களைப்

பாராட்டுவதற்கு கவர்னர் அவர்களுடைய உரையில் எப்படி இடம் கிடைத்ததோ, அதே போன்று மொழித் தொல்லை நீங்கியதற்குக் காரணமாயிருந்த எதிர்க்கட்சியினரை பாராட்டியிருந்தால் உள்ளபடியே நாங்கள் பெருமைப்பட்டிருப்போம். ஆனால் நேரு அவர்கள் தந்த உறுதி மொழியும், மத்திய அரசவையிலிருந்து வந்த உறுதிமொழியும் போதுமானதுதானா இதை வைத்துக்கொண்டு வெற்றிமுரசு தட்டுவது சரிதானா என்று கேட்டால் - கனம் சபாநாயகர் மூலமாக நான் இந்தச் சபைக்குக் கூறிக்கொள்கிறேன் - இத்தகைய உறுதிமொழி வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டதற்குக் காரணமே, நாட்டிலே கொலை நடந்தால் கொலையைச் சமாளிக்க - கொலையைத் தடுக்க - ஒரு சட்டம் வேண்டுமென்று சொல்லக்கூடிய முறையில்தான் நாங்களும் உறுதிமொழி கேட்டோம். சட்டம் வந்த காரணத்தினால் கொலை தடுக்கப்பட்டு விடுமா என்று கேட்கிறார்கள். நடக்கக் கூடும் - இல்லை என்று மறுக்கவில்லை. அதற்காக சட்டமே வரக்கூடாது, கொலை நடந்தால் பார்த்துக்கொள்ளலாம் என்று இருக்க முடியாது. இந்த முறையில் சிலர் நிதி அமைச்சர் அவர்களைக் கூட குற்றம் சாட்டி இந்த அவையில் பேசியதைக் கேட்டேன். கொலையைத் தடுக்கும் அளவுக்கு முதற்படியாக சட்டம் வந்தது போல இந்த உறுதிமொழி வந்திருக்கிறது. இதைத்தான் எங்கள் வெற்றி என்று எண்ணுகிறோம் - பெருமிதமடைந்திருக்கிறோம். "நிச்சயமாக நாட்டில் நடக்கின்ற தமிழ் கொலை தடுக்கப்பட்டு விட்டதா" என்று கேட்டால், "அல்ல" என்று இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் பேசும்போது, நமது மாநிலத்திலுள்ள தாணாக்காரர்களுக்குப் பயிற்சி கொடுப்பதிலும், அற நிலைய நிர்வாகங்களிலும் எந்த அளவுக்கு இந்தி திணிக்கப் படுகிறது - பயன்படுத்தப்படுகிறது - என்று குறிப்பிட்டுள்ளார்கள், நான் மிக மிக வருத்தத்தோடு இதைச் சொல்ல விரும்புகிறேன். உறுதிமொழி கொடுத்துவிட்டு, டில்லியிலிருந்து வந்து தமிழகத்து மண்ணிலே உலவும் நேரத்தில், நாளைய தினம் நடைபெறவிருக்கின்ற சுதந்திர விழாவினையொட்டி ஜனாதிபதி அவர்களின் சார்பில் வந்துள்ள அழைப்பில் ஒரு புறத்தில் பார்த்தால் ஆங்கிலத்திலும், மற்றொரு புறத்தில் பார்த்தால் இந்தியிலும் அச்சிடப்பட்டு அழைப்பு அனுப்பப் பட்டிருக்கின்றது. (அழைப்பிதழைக் காட்டி) இந்த அழைப்பு ஆங்கிலத்திலும் தமிழிலும் இருந்தால் போதாதா?

அந்தச் சட்ட மன்றத்திலுள்ள உறுப்பினர்களில் பலர் கேள்வி நேரத்தில் முதற் கேள்விக்குக் கொடுக்கப்படும் பதிலை ஆங்கிலத்தில் தராதீர்கள், தமிழில் தந்தால்தான் எங்களால் துணைக் கேள்விகள் கேட்க முடியும் என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்று இத்தகைய சட்ட மன்ற உறுப்பினர்கள் இதை யாரிடத்திலாவது கொண்டு போய்க் காட்டி, இது என்ன என்று கேட்கும் அவல நிலை இருக்குமானால், ஜனாதிபதியின் உறுதிமொழியை இந்த மன்றமோ, அல்லது இந்த அமைச்சரவையோ எப்படிக் காப்பாற்றப் போகிறது? எனவே இதனை சுதந்திரத் திருவிழாவிற்கு வரவேற்பதற்காக காகிதத்தில் தரப்பட்ட அட்டை என்று கருதாமல், நமது மான உணர்ச்சியை உறிஞ்சுகிற அட்டையாக இதனை நான் கருதுகிறேன். உள்ளபடியே மொழிப் பிரச்சினையில் தீர்வு காணவேண்டுமென்றால் அரசியல் சட்டத்திலே மொழிபற்றிய பிரிவுக்கு திருத்தம் செய்தாக வேண்டும். அரசியல் சட்டம் திருத்தப்படும் வரையில் எங்கள் போராட்டம் ஓயாது, ஓயாது. மறைமுகமாக இந்தியைத் திணிப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் கவனித்துக் கொண்டு வருகிறது. இந்த வெற்றியில் திளைத்து விடாமல் இந்தி ஆதிக்கத்தை முழு மூச்சோடு எதிர்த்தே நிற்போம் என்று அமைச்சர்களுக்கு நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி குறிப்பிட்டு விட்டு இதைப் பற்றி அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் பாராட்டத் தக்கதாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கருத்துக்களைக் கூறத் தயார் தான். தரப்பட்ட கருத்துக்கள், இந்த மன்றத்திலே எங்களால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள், சிறப்புக் குழுக்களை அமைத்து எங்கள் தலைவர் அவர்கள் அழைக்கப்பட்டு பேசும் போது அவர்களால் தரப்பட்ட கருத்துக்கள் உள்ளபடியே மரியாதையோடு, மதிப்போடு ஒப்புக்கொள்ளப்படுகிறதா? - இல்லை. கமிட்டிகளில் பேசப்படுவது, கமிட்டிகளில் தெரிவிக்கப் படும் கருத்துக்கள் அம்பலத்திற்கு வரக் கூடாது என்பது மரபு, மாண்பு. இத்தகைய மரபையும் மாண்பையும் மீறி, நமது கண்ணியம் மிகுந்த, நேர்மை கொண்ட நிதி அமைச்சர் அவர்கள், செங்கற்பட்டு மாவட்டத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் திட்டக்

குழுவில் தந்த யோசனையைப் பற்றி கூறி, அதையடுத்து ஒரு பண்டாரக் கதையைச் சொல்லி, அண்ணாதுரை ஒரு பண்டாரம் என்ற முறையில் . . .

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : உங்கள் பத்திரிகையில்தான் முதலில் "அண்ணா 1,000 கோடி கேட்டார்" என்று கொட்டை எழுத்தில் போட்டுக் கொண்டீர்கள். முதலில் அம்பலத்திற்குக் கொண்டு வந்தது யார் என்று கேட்டால் கனம் அண்ணாதுரை அவர்கள்தான் அதை அம்பலத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

பேரறிஞர் அண்ணா : எல்லாப் பத்திரிகைகளிலும் இதைப் பற்றி வந்த அளவுக்குத்தான் எங்கள் பத்திரிகையிலும் வந்தது. நான் குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி வேறு ஒன்றும் அதிகமாக எங்கள் பத்திரிகையில் வந்துவிடவில்லை.

மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் : பத்திரிகை குறிப்புக் கொடுத்ததுகூட நாங்கள் அல்ல - தாங்கள்தான்.

மாண்புமிகு சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அண்ணாதுரை அவர்களும் கனம் அமைச்சர் அவர்களும் இம்மாதிரி ஒருவர் மாறி ஒருவர் பேசிக்கொண்டிருந்தால் கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்களின் நிலை என்ன ஆவது?

கலைஞர் மு. கருணாநிதி : இப்போது மட்டுமல்ல பல ஆண்டுகளாகவே திராவிட முன்னேற்றக் கழகம், வடநாட்டுக் காரர்களால் தென்னகம் வஞ்சிக்கப்படவில்லை என்று நீங்கள் நிரூபிக்க வேண்டுமானால், நாட்டுக்குத் தேவையான வேலைகள் 200 கோடியில், 300 கோடியில் நிறைவேறாது, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கோடிக்குத் திட்டம் தீட்டி நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி வருகிறது. திட்டங்களைப் பற்றிப் பேசுவதற்காகக் கூடிய குழுவில் அண்ணா அவர்கள் தெரிவித்த திட்டங்கள் நையாண்டி செய்யக் கூடிய திட்டங்கள்தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அண்ணா அவர்கள் என்னென்ன கூறியிருக்கிறார்கள்? பணக்காரர்களிட மிருக்கக் கூடிய பணத்தை பல வழிகளில் பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்; கவனிக்கப்படாமல் இருக்கக் கூடிய தரிசு நிலங்களை உடனடியாகக் கவனித்து தானியங்கள் விளைவிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்; சூரிய வெளிச்சத் திலிருந்து

மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்; நாட்டின் முன்னேற்றத் திட்டங்களில் ராணுவத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்; அணு சக்தி உலை கட்டியாக வேண்டுமென்று கூறியிருக்கிறார்; கைத்தறித் துணியை எல்லா நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்றார். புதிய, புதிய தொழிற்சாலைகளையெல்லாம் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றார்; சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையும், அலுமினியத் தொழிற்சாலையும் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்; முந்திரியிலிருந்து பிளாஸ்டிக் தயாரிக்க வேண்டுமென்று கூறினார்; காப்பி, டீ, ரப்பர் தோட்டங்களை தேசீயமயமாக்கி வருவாயை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்றார்; நீலகிரியில் ஒரு பால் பண்ணை அமைக்க வேண்டுமென்று சொன்னார்; தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு இரட்டை ரயில் பாதை போட வேண்டுமென்று கூறினார்; தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னார்; சேது சமுத்திரம் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்; மாங்கனீஸ் தாதுவை ஏற்றுமதி செய்வதை நிறுத்தி அதை இங்கேயே பயன்படுத்த வேண்டுமென்று கூறினார். ஆக, இத்தகைய உயர்ந்த திட்டங்களை அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார். ஆனால் அவர் பண்டாரம் என்று பழிக்கப்பட்டார். அவராவது பழிக்கக் கூடிய அளவுக்குத் திட்டம் தந்தார் என்றால், அடுத்த திங்களே லோகநாதன் கமிட்டியார் கேட்டிருக்கிறார்கள் ஆயிரம் கோடி அல்ல - இரண்டாயிரம் கோடி. ஆயிரம் கோடி ரூபாய் கேட்டதற்கே பண்டாரம் என்று சொன்னபோது, 2,000 கோடி ரூபாய் கேட்ட அவரை நல்ல வேளையாக இரட்டைப் பண்டாரம் என்று அமைச்சர் சொல்லவில்லை - தப்பித்துக் கொண்டார். இன்றைய நிலையில் இந்தத் திட்டங்களைப் பற்றி ஆளுங் கட்சி உறுப்பினர்கள் வெளியிலே போய் என்ன சொல்லுவார்களோ என்றுகூட நாங்கள் அஞ்சுகிறோம். இப்படிப் பட்ட மாமன்றத்தில் பேசியதை வைத்துக் கொண்டு வெளியிலே போய் ஆளுங் கட்சிக்காரர்கள் "அண்ணா கசாப்புக் கடை வைக்கச் சொல்லுகிறார்" என்றும், "கருணாநிதி கடல் பாசியில் அல்வா கிண்டச் சொல்கிறார்" என்றும் நையாண்டி செய்வார்கள் என்று சபாநாயகர் மூலமாக இந்த அமைச்சரவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1971-க்குள் நமது

வாழ்க்கைத் தரம் உயர, 230 ரூபாய் நபர் வருமானம் இருக்கக் கூடியது 325 ரூபாய் அளவுக்கு அதிகரிக்க, 20 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க 2,000 கோடி ரூபாய் வேண்டும் என்று டாக்டர் லோகநாதன் குழு சிபாரிசு செய்திருக்கிறது. ஒரு பழமொழி - சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் என்று - சொல்வார்கள். சபாநாயகர் மூலமாக நான் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன், மத்திய சர்க்கார் சட்டியில் 10,000 கோடி ரூபாய் இருக்கிறது. அதிலே உங்கள் அகப்பையில் 1,000 கோடி வரட்டும். 10,000 கோடியில் ஒன்றும் அகப்பையில் வரவில்லை என்றால் உங்கள் அகப்பையில் காம்பு இருக்கிறது, ஆனால் கொட்டாங்கச்சி இல்லை என்று ஆகிறது - உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று பொருள்படுகிறது. நீங்கள் அதிகாரம் பெறுங்கள். நீங்கள் நல்லவர்கள்தான் - வல்லவர்கள் அல்ல வட நாட்டோடு பேசி சண்டை போட்டுப் பெறுவதில் என்று நான் வருத்தத்தோடு கூறிக் கொள்ளுகிறேன். தூத்துக்குடி துறைமுகத்தைப் பற்றி நேற்று இங்கே பேசப்பட்டது. அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். தூத்துக்குடி பக்கம் போகும் போதுதானே இது ஞாபகம் வருகிறது. டில்லிக்குப் போகும் போது நினைவு வரவேண்டாமா? தூத்துக்குடிக்குப் போகும்போது அங்குள்ள மக்களுக்கு ஆசை காட்டிவிட்டு டில்லிக்குப் போகும் போது மறந்துவிடுவானேன்? அமைச்சர் அவர்கள் உறுதிமொழியை நிச்சயமாகக் காப்பாற்ற வேண்டும், நேரு அவர்களுடைய உறுதிமொழியைப் போல, பந்த் அவர்களுடைய உறுதிமொழியைப் போல, கனம் சுப்பிரமணியம் அவர்களும் அங்கு இருந்து உறுதிமொழி அளிக்கத் தகுதி படைத்தவர் என்ற காரணத்தினால் இந்த உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக கனம் அங்கத்தினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறியது போல நாட்டுக்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்கவில்லை, உதகையி லுள்ள ஒரு வீட்டுக்கு தமிழகம் என்று கனம் சுப்பிரமணியம் அவர்கள், நாட்டுக்கு வைக்க வேண்டிய பெயரை ஒரு வீட்டுக்கு வைத்திருக்கிறார். தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது. உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம் 5 பிணங்கள் தருவதற்கு. எழுத்துக்கு எத்தனை பிணம் வேண்டுமானாலும் தரத் தயாராக

இருக்கிறோம், தமிழ் நாடு என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனாதிபதி அவர்கள் தானாக தனது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு வழிகாட்டியாக இருக்கிறார். அந்த முறையைப் பின்பற்றி, கவர்னர் அவர்களும் தான் குறைத்துக் கொண்ட சம்பளக் கணக்கை நம்மிடம் தெரிவிப்பார் - தெரிவிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.



உரை : 4 **நாள் : 24.04.1962**

கலைஞர் மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் நாங்கள் கலந்து கொள்கிற நேரத்தில், கவர்னர் பெருமானுடைய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேச முடியாமல் இருக்கின்ற நிலைமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரையில் குறை கூறக்கூடாது என்பதை நன்றி தெரிவித்து முன்மொழிந்த வழிமொழிந்த கனம் அங்கத்தினர்கள் எதிர்க்கட்சிக்காரர்களைப் பார்த்து கேட்டுக்கொண்டார்கள். எதிர்க் கட்சியிலே வீற்றிருக்கின்ற நாங்கள் குறைபாடுகள் கண்ட இடத்திலே ஆளும் கட்சியினருக்குச் சுட்டிக்காட்டி அந்த குறைபாடுகளை நீக்கி நிறைவு செய்யக் கடமையாகக் கொண்டிருக்கிற காரணத்தினால், கவர்னர் பெருமான் உரையிலே இருக்கின்ற குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி இருக்கிறோம். இல்லை, குறைகளைப் பற்றியே பேசக்கூடாது, கவர்னர் பெருமானுடைய உரையிலே உள்ள நிறைகளைப் பற்றி மாத்திரம்தான் பேச வேண்டுமென்றால், குறைகளைப் பற்றியே இந்த மன்றத்தில் பேசக்கூடாது என்று ஒரு சட்டம் வகுத்து விட்டால், அப்போது நாம் அனைவரும் சேர்ந்து கவர்னர் உரைக்கு ஆராதனை செய்து ஏற்றுக் கொள்வதற்கு கட்டுப்பட்டு விடலாம். அப்படி இல்லாமல், கவர்னர் அவர்களுடைய உரை இந்த மன்றத்திலே படிக்கப்பட்டு அதன்மீது விவாதம் என்கிற முறையும் அங்கீகரிக்கப்பட்டு, அந்த ஏற்பாட்டின் அடிப்படையிலே எதிர்க்கட்சிகளிலே இருக்கிறவர்கள் குறை கூறுவதற்கு முன்வருகிறார்கள் என்றால், அது தகாது, கூடாது, அர்த்தமற்றது என்று பேசுவது எதன்பாற்பட்டது என்றுதான் புரியவில்லை.

கவர்னர் பெருமானுடைய உரையிலே அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலைப் பற்றி முதல் பகுதியிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "தங்களைச் சுற்றிக் கிளப்பப்பட்ட அரசியல் மாச்சரியங்களால் பரபரப்பு அடையாமல் நிதானத் தோடும் விவேகத்தோடும் பொதுமக்கள் வாக்குரிமையைச் செலுத்தினர்" என்கின்ற அளவிலே பொதுமக்கள் நிதானமாக நடந்து கொண்டார்கள் என்று குறிப்பிட்டிருக்கிற அளவுக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் நிதானம் தவறி வாக்குகளை கள்ளச் சாராயம் குடித்துவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு வாக்களித்து விட்டார்கள் என்ற அமைச்சர்கள் கூற்றுக்கு நல்ல பதிலாக நிதானத்தோடுதான் பொதுமக்கள் வாக்களித்து இருக்கிறார்கள் என்று கவர்னர் பெருமான் உரையிலே தெரிவித்திருப்பதற்கு பாராட்டு தெரிவித்துக் கொள்கிறோம். இப்படி நிதானத்தோடு அவர்கள் வாக்களித்து இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு இருப்பதுபோல், அவர்கள் பரபரப்புக்கு ஆளாக்கப் படாமல், பரபரப்பு அடையாமல் காப்பாற்றப்பட்டிருக்கிறார்களா என்றால், உள்ளபடியே நடைபெற்று முடிந்த தேர்தலில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஜனநாயகம், அளவிலே குறைவாகவும், பணநாயகம் அளவிலே அதிகமாகவும், அதே நேரத்திலே அதிகாரங்கள் துர்விநியோகம் செய்யப்பட்டும், அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தும், அமைச்சர்கள் தங்கள் அந்தஸ்தை, தங்களுக்குள்ள பதவி கவுரவத்தை தேர்தல் காலத்திலே பயன்படுத்திக் கொண்டும் தேர்தல் நடத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டை நான் கவர்னர் உரையின்மீது பேசுகின்ற இந்த இடத்திலே எடுத்துரைக்க விரும்புகின்றேன். 1957-ம் ஆண்டு நாங்கள் முதல் தடவையாக இந்த சட்டசபையிலே நுழைந்த நேரத்தில், கவர்னர் உரையைப் பற்றி குறிப்பிட்டு விட்டு, பொதுத் தேர்தலில் மந்திரிகள் நடந்துகொண்ட தகாத போக்கை எடுத்துரைத்தபோது அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற காலத்தில் குறிப்பிட்டார்கள். "ஒவ்வொரு மந்திரியும் தனித்தனியாக இன்னின்ன காரியங்கள் தவறாகச் செய்தார்கள். இன்னின்ன பேச்சுக்கள் பேசினார்கள், எந்தெந்த முறையில் மந்திரியின் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுகளை சுட்டிக் காட்டினால், அதை நாங்கள் வரவேற்கிறோம். அதற்காக விசாரணை நடத்துவதற்கும்

தயாராக இருக்கிறோம். எந்தெந்த காரியங்களில் மக்களிடம் தப்பு அபிப்பிராயம் ஏற்பட்டது என்று திட்டவட்டமான குற்றச் சாட்டுகளை எழுதிக் கொடுங்கள். அதை விசாரிக்கத் தயாராக இருக்கிறோம், இதற்கு கனம் முதன் மந்திரியும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் அவர்களுடைய கருத்திற்கிணங்க இங்கு இரண்டொரு செய்திகள் குறிப்பிட விரும்புகிறேன்.

தேர்தல் காலத்தில் 11 கட்சிகளைக் கொண்ட ஒரு தேர்தல் ஒழுங்குமுறைக் குழு அமைக்கப்பட்டது. அதில் முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டு, சுதந்திரா கட்சி, பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி போன்ற இன்னும் பிற கட்சிகள் எல்லாம் இதிலே இடம் பெற்றிருந்தன. இந்தக் கட்சிகள் எல்லாம் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இதிலே ஒழுங்கு முறைகள் அமைக்கப்பட்ட நேரத்தில், "மற்ற அரசியல் கட்சிகளைப் பற்றி பேசும்போது கட்சித் தலைவர்கள், ஊழியர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி குறிப்பிட்டுக் குறை கூறிப் பேசக் கூடாது" என்று ஒரு ஒழுங்கு நிர்ணயிக்கப் பட்டது. நான் கட்சியிலே உள்ள தொண்டர்களையோ அல்லது வேறு ஒரு சொற்பொழிவாளரின் பேச்சைப் பற்றிக்கூட குறிப்பிடவில்லை. கனம் மந்திரிகளேகூட அப்படிப்பட்ட முறையிலே பேசினார்கள் என்பதை மிகமிக வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சைத் தொகுதியிலே பேசிய அமைச்சர் ஒருவர் தனிப்பட்ட முறையிலே, "சினிமாவுக்குக் கதை எழுதுகிறவர், வசனம் எழுதுகிறவர், சட்டசபைக்குப் போய் என்ன செய்யப் போகிறார்?" என்று திலகர் கட்டத்திலே நடைபெற்ற கூட்டத்திலே பேசினார். அதேபோல் இங்கு இப்போது நிதியமைச்சராக வீற்றிருக்கும் கனம் பக்தவத்சலம் அவர்கள் விருத்தாச்சலம் தொகுதியிலே "மாநாடு நடத்தி கழகத் தலைவர்கள் பணத்தை பங்கு போட்டுக் கொள்கிறார்கள்" என்று பேசியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகையிலே படித்து, அந்தக் குறிப்பையும் வைத்திருக்கிறேன். இப்படிப் பேசவில்லை என்று கனம் பக்தவத்சலம் அவர்கள் தெரிவிப்பாரேயானால் அப்போதே மறுப்பு தெரிவித்திருக்க வேண்டும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்த ஒழுங்குமுறையாக, கோயில்கள், மசூதிகள், மாதாகோயில்கள் அல்லது வேறு வழிபாட்டு இடங்களைத் தேர்தல்

பிரசாரத்திற்காக உபயோகிக்கக் கூடாது என்று 11 கட்சிகள் கொண்ட கூட்டத்தில் ஒழுங்குமுறையாக நிர்ணயம் செய்யப் பட்டது. ஆனால், திருவாரூர் தொகுதியில் காங்கிரசுக்கு ஆதரவு காட்ட பள்ளிவாசலில் முஸ்லீம்கள் கூட்டத்தில் கனம் கக்கன் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்திருக்கிறார். முஸ்லீம்கள் காங்கிரசுக்கு ஆதரவு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டும் இருக்கிறார். இன்னும் ஆளும் கட்சி தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக தனது அதிகார அந்தஸ்தை பயன்படுத்தியதாக புகார் வராதபடி பார்த்துக்கொள்ளும் என்று ஒழுங்குமுறைக் குழுவில் உறுதி அளிக்கப்பட்டது. நம்முடைய மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன் தஞ்சை, திருவையாறு, அதிராம் பட்டணம் தொகுதிகளில் தேர்தல் நேரத்தில் இருந்தார். இப்படித் தேர்தல் நேரத்தில் அவர் பிரசாரத்தில் ஈடுபட்டதை நான் குறையாகக் கூறவில்லை. தஞ்சையில் வாக்குச் சாவடிகளுக்கு காங்கிரஸ் வேட்பாளரை அழைத்துக் கொண்டு போனது, அவர்களுக்கு ஆதரவு கோரியது ஆகியவைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தஞ்சையில் உள்ள வக்கீல் சங்கத்தில், "Hon. Industries Minister Sri. R. Venkataraman desires to address the Bar," என்று ஒரு அறிக்கை அனுப்பப்பட்டு, வக்கீல்கள் சங்கத்தில் காங்கிரஸ் கட்சி வேட்பாளருடன் கனம் அமைச்சர் வெங்கடராமன் அவர்கள் சென்று, காங்கிரசுக்கு ஆதரவு திரட்டியிருக்கிறார்கள். இது ஆளும் கட்சியில் இருக்கிற அமைச்சர்கள் தங்கள் அந்தஸ்தையும், பதவியையும் தேர்தலுக்கு பயன்படுத்தும் குற்றத்திற்கு உட்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

முன்பு கேரளாவிலே கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர் அவை அமைத்த நேரத்திலே, ஒரு இடைத்தேர்தல் நடைபெற்றது. தேவிகுளம், பீர்மேடு தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்ற அந்த நேரத்தில் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், அந்த இடைத்தேர்தலில் ஈடுபடாமல், அவர்கள் தேர்தல் பிரசாரத் திற்குக்கூட வராமல் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கு பேசிய கனம் அங்கத்தினர்கள் இத் தேர்தல் நேரத்தில் ஆபாசமான சுவரொட்டிகளை எதிர்க்கட்சிக்காரர்கள் வெளியிட்டனர் என்பதை எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு

கட்சிகள் கொண்ட தேர்தல் ஒழுங்குமுறைக் குழுவில் அங்கம் பெறாத காரணத்தினால், எவ்வளவு ஆபாசமான சுவரொட்டி களையும் வெளியிடவும், எவ்வளவு ஆபாசமான தேர்தல் பிரசாரம் புரியவும் தங்களுக்கு உரிமை இருப்பதாகக் கருதிக் கொண்டு, திராவிடக் கழகத்தினர் காங்கிரசுக்கு ஆதரவாக பிரசாரம் செய்கின்ற நேரத்திலே, கேவலமான சுவரொட்டிகளை ஒட்டினார்கள். அதைப் பற்றி சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்? ஆபாசமான சுவரொட்டிகளில் தேர்தலில் ஈடுபட்ட கழக வேட்பாளர்களின், தலைவர்களின் குடும்பத்தினர் இழுக்கப்பட்டிருக்கிறார்கள், இழிவுபடுத்தப் பட்டிருக்கிறார்கள். எங்களுடைய வீட்டுப் பெண்டிர்கள் பற்றி மிகமிகக் கேவலமாக பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறது. எங்களுடைய தாய்மார்கள், எங்களைப் பெற்றவர்கள் - நம்முடைய தாய்மார்கள், நம்மைப் பெற்றவர்கள் என்றே கூறுகிறேன் - நம்மைப் பெற்றெடுத்தது இப்படிப்பட்ட இழிசொற் களையும் பழி சொற்களையும் அவர்கள் நம் மூலம் பெறுவதற்கு இல்லை. நம்மை இப்படிப்பட்ட பொதுப் பணியில் அவர்கள் விடுத்திருப்பது அவர்கள் செய்த மாபெரும் குற்றம் என்று கருதிக்கொண்டு காங்கிரசுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட திராவிடக் கழகத்தினர் இந்த மாமன்றத்தில் உச்சரிக்கத் தகாத வார்த்தைகளை தேர்தல் நேரத்தில் உச்சரித்திருக்கிறார்கள். மோசமான சுவரொட்டிகளை ஊர்வலத்தில் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கேவலமான விளம்பரங்களையெல்லாம் பத்திரிகைகளிலும் பிரசுரித்திருக் கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தேர்தல் காலத்தில் நடைபெற்ற கலவரங்களில், அதிகாரிகள் நடுநிலையாக நடந்துகொண்டார்களா என்றால், ,இல்லை என்பதற்கு பல உதாரணங்கள் காட்டமுடியும்.

25-12-1961 நாளன்று பூவிருந்தவல்லி கரையான் சாவடியில் சென்னைத் தோழர்கள் காஞ்சீபுரத்திலிருந்து சைக்கிள்களில் ஊர்வலமாகத் திரும்பியபோது, அந்த நேரத்தில் வழியில் அடிக்கப்பட்டு, மறிக்கப்பட்டு, தாக்கப்பட்டிருக்கிறார்கள். போலீசாரிடம் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியும், கவனிக்கப் படவில்லை.

26-12-1961 அன்று மண்ணூர் தி. மு. க. தோழர் ஏ. பழனி தாக்கப்பட்டார். அவர் நட்டிருந்த கொடிக்கம்பம் வெட்டப்பட்டது.

சம்பவ நேரத்தில் திருப்பெரும்புதூர் போலீஸ் நிலையத்தினர் தாக்குதலுக்கு உடந்தையாக இருந்து அந்த நல்ல காரியத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

26-12-1961 அன்று திருநின்ற ஊரில் தி. மு. க. தோழர்கள் ஜெயராமன், ராதா ஆகிய இருவரும் பூவிருந்தவல்லி வட்டாரத் தலைவரால் பழிசொல் கூறி விரட்டி அடிக்கப்பட்டனர்.

31-12-1961 காலை வடசென்னையில் துவக்கப்பட்ட காங்கிரஸ் பிரசார ஊர்வலத்தினர், தண்டையார்பேட்டை யிலிருந்து மைலாப்பூர் வரையில் செல்லும் 5083 என் உள்ள 4-ம் நெம்பர் பஸ் டிரைவர் வரதனையும், கண்டக்டர் ராமனாதனையும் அடித்து துன்புறுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும், போலீசார் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை.

மாதவரம் பகுதியில் திருமங்கலம் கிராமம் தி. மு. கழகத்தில் காங்கிரசார் புகுந்து கலவரம் விளைவித்தார்கள். அன்று இரவே வில்லிவாக்கம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டும், கவனிக்கப்படவில்லை.

1-1-1962-ம் நாளன்று பெரிய காஞ்சீபுரம் ரெட்டை மண்டபத்துக்கு அருகில் தி. மு. க. தோழர் ஆர். தனபால் அவர்களின் தேநீர் கடையை மறைக்கும் அளவுக்கு காங்கிரஸ் தேர்தல் பிரசார விளம்பர தட்டிகள் வைக்கப்பட்டன. போலீசுக்கு புகார் செய்யப்பட்டும், கேட்பார் அற்றுப் போயிற்று. தனபால் கடைக்கு தீ வைக்கப்பட்டது.

30-1-1962-ம் நாளன்று கனம் கே. ஏ. மதியழகன் அவர்களை தேர்தல் அலுவலக வாயிலில் குத்திக் கொலை செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. அதுபற்றி போலீசாருக்கு எடுத்துச் சொல்லப்பட்டும், அது அலட்சியம் செய்யப்பட்டு மிக சாதாரணமாக விடப்பட்டது.

9-2-1962 அன்று சோளிங்கர் தொகுதியில் பி. ஜி. சுந்தரம் என்ற தி. மு. க. தோழரைத் தாக்கியதோடு, கூஷவர பிளேடால் வயிற்றையும் அறுத்தார்கள். போலீஸில் புகார் செய்யப்பட்டும் கவனிக்கப்படவில்லை.

10-2-1962 அன்று உத்திரமேரூர் தொகுதியில் கழக ஆதரவாளருக்காக வேலை செய்த மருத்துவான்பாடி ஊராட்சிமன்றத் துணைத்தலைவர் குப்புசாமி என்னும் ஐம்பது வயதுப் பெரியவர், கிணற்றில் தள்ளப்பட்டு மிதக்கவிடப்பட்டார்.

11-2-1962 அன்று அரக்கோணம் தொகுதி சம்பத்ராயன் பேட்டையில் கழக ஊர்வலம் சென்றபோது வட்டக் காங்கிரஸ் தலைவர் தலைமையில் கலகம் விளைவித்தனர், தாக்கினார்கள். கழக வேட்பாளர் போலீஸ் அதிகாரியிடம் புகார் செய்தபோது அதிகாரிகள் கழகத் தோழர்களை, இழிமொழி கூறி விரட்டினார்கள்.

16-2-1962 அன்று தஞ்சைத் தொகுதியில் தி. மு. க. வுக்கு வேலை செய்த 10 பேர்கள் நல்லுச்சேரியில் இரவு 2 மணிக்கு கைது செய்யப்பட்டார்கள். காலையிலே அவர்கள் ஜாமீனில் விடப்பட வேண்டும் என்று வக்கீல் டி.எஸ்.பி. யிடம் கேட்டபொழுது, தடுப்புக் காவல் சட்டப்படி அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும், விடுதலை செய்ய முடியாது என்றும் கூறப்பட்டது. 17-ம் தேதி தேர்தல் நேரத்தில், மாலை 4½ மணிக்கு விடுவிக்கப்பட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான் பொதுத் தேர்தலில் அதிகாரங்கள் துர்வினியோகிக்கப்பட்டும், அதிகாரிகளில் பலர் நடுநிலையாளர்களாக இல்லாமல் நடந்துகொண்டும், அதற்கெல்லாம் தப்பி இன்று நாங்கள் எதிர்க்கட்சியினராக இந்த மன்றத்தில் அமர்ந்துகொண்டிருக்கிறோம். அப்படி அமர்ந்திருக்கிற நாங்கள் எங்களுக்குள்ள வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு, கவர்னர் பெருமான் உரையிலே சொல்லாமல் விடப்பட்டிருக்கிற இனங்களை எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

மின்சார அபிவிருத்தி வேலைகளைப்பற்றி கவர்னர் குறிப்பிட்டிருப்பதை ஒட்டி பேசுகின்ற நேரத்தில், எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் திரு. மாதா கவுடர் அவர்கள் நம் மாநிலம்தான் இந்திய துணைக்கண்டத்திலேயே மின்சார அபிவிருத்தியில் மிகச் சிறந்தது, தலையாயது என்றெல்லாம் பெருமையோடு கூறினார்கள். நான் அதுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். நமக்கு இருக்கிற அந்த ஒரே ஒரு பெருமையாவது

ஒழுங்காக இருக்கவேண்டாமா? அதை நாம் இன்னும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 1,500 கிராமங்களுக்கு ஆண்டுதோறும் மின்சாரம் விஸ்தரிக்கப்படுகிறது என்பது போதாது. இன்னும் எண்ணிறந்த கிராமங்கள் இருட்டிலே அடைபட்டு திண்டாடிக் கொண்டிருக்கின்றன. சுடலைக்குச் செல்லுகிற வழியிலே பிணத்தைத் தூக்கிக்கொண்டு அவர்கள் வயல் வரப்பிலே இருட்டிலே நடந்துசெல்லும்பொழுது, பாதையில் தடுக்கி விட்டுப் பிணத்தையும் கீழே போட்டுக்கொண்டு விழக்கூடிய பரிதாபகர மான காட்சியை இன்னமும் நம் நாட்டிலுள்ள பல கிராமங்களில் பார்க்கிறோம். மின்சார வசதி அதிகமான கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்படுகிறது என்று பெருமை அடைகிற அதே நேரத்தில், இருளடைந்த கிராமங்கள் இன்னும் அதிகம் இருக்கின்றன என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வேலூர், ஆரணி, திருவண்ணாமலை, வந்தவாசி, திண்டிவனம், செஞ்சி, திருப்பத்தூர், குடியாத்தம் போன்ற இடங்களில் பல ஆண்டுகள் தொடர்ந்து மின்சார போர்டில் வேலை பார்க்கும் என். எம். ஆர். தொழிலாளர்கள், தினக் கூலி தொழிலாளர்கள் வேலை குறைவு என்று காரணம் காட்டப்பட்டு ஏறத்தாழ 500-க்கு மேற்பட்டவர்கள் வேலையிலிருந்து நீக்கப் பட்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் மின்சார இலாகாவை வகிக்கின்ற அமைச்சர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிற அந்த 500 தொழிலாளர்களுக்கும் நல்வாழ்வு அளிப்பதற்கு நீங்கள் முனைந்து முயலவேண்டும். ஏனென்றால், மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேலைக்குறைவு என்று காரணம் காட்டப்படுவது அவ்வளவு பொருத்தம் இல்லை. காரணம், இந்தத் திட்டத்தில் மின்சாரம் மேலும் மேலும் தீவிரமாகவும், வேகமாகவும், அதிகமான இடங்களுக்கு விஸ்தரிக்கவும் படுகிறது. மின்சார வசதிகள் பெருக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிற காரணத்தினால், நான் இங்கு இதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேலைக் குறைவு என்ற காரணம் காட்ட முடியாது என்ற நிலைமையினால், இந்தத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் உரையிலே புதிய காகித தொழிற்சாலை, பெரிய கலப்பு உருக்குத் தொழிற்சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, புதிய மூன்று சர்க்கரை ஆலைகள் இவைகள் எல்லாம் தனியார் துறையில் அமைய இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் துறை, பொதுத் துறை இரண்டும் இருப்பதுதான் நடைமுறை சமதர்மம் என்று நம்முடைய சர்க்கார் கருதிக்கொண்டிருக்கிறது. சமதர்மத்திற்கு இது முற்றிலும் முரண்பாடான கருத்தாக இருக்கிறது. தனியார் துறை, பொதுத் துறை இப்படி இரண்டும் இருப்பதானது, நாம் அனுஷ்டிக்கின்ற நடைமுறை சமதர்மம் என்று கூறிக்கொள்வது முரண்பாடான கருத்து. இப்படிப்பட்ட தொழில்கள் தேசீயமய மாக்கப்படவேண்டும். அதைப்பற்றி கவர்னர் பெருமான் உரையில் தெளிவு இல்லை, விளக்கம் இல்லை. கொள்கை கோடிட்டுக் காட்டப்படவில்லை.

அதேபோல, பஸ் போக்குவரத்து தொழில் தேசீய மயமாக்கப்பட வேண்டும் என்கின்ற கொள்கை கவர்னர் உரையிலே இல்லை என்பதற்காக நான் வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். '120 மைல்களுக்கு மேற்பட்ட தூரத்திலுள்ள பஸ் போக்குவரத்துகளையெல்லாம் நாங்கள் தேசீயமயமாக்கப் போகிறோம்' என்கின்ற ஒரு செய்தியை அமைச்சர் அவர்கள் இன்று காலையிலே கேள்வி நேரத்திலே அறிவித்திருந்தாலும், அப்படி தனிப் பிரிவு இல்லாமல் கூடுமானவரையிலே எல்லா பஸ் போக்குவரத்துகளையும் தேசீயமயமாக்குகிற முயற்சிகளிலே இந்த சர்க்கார் உடனடியாக ஈடுபட வேண்டும். உண்மையிலேயே, ஒரு பஸ் ரூட்டை ஒருவர் வாங்கினால், அடுத்த ஆண்டு, அதற்கடுத்த ஆண்டு, அவர் ஒரு பஸ் முதலாளியாகக் காட்சி தருகிறார். முதலாளி மட்டுமல்ல, அவர் ஆளும் கட்சியை மிரட்டும் அளவுக்கு வலிமை படைத்தவராக ஆகிவிடுகிறார். ஒரு பஸ் ரூட் வாங்கினால் போதும்; ஒரு நாளைக்கு ரூ. 100 லாபம் என்றால், அந்த லாபம் மாதத்தில் ரூ. 3,000 ஆகி, அதுவே வருஷத்தில் ரூ. 36,000 என்றும், இரண்டாண்டில் ரூ. 72,000 ஆகிவிடும் நிலை ஏற்பட்டு, அந்த ரூட்டை மாத்திரம் வைத்துக்கொண்டு அதையே அடமானம் வைத்து பொருள் திரட்டி பஸ் வாங்கி, தவணைகளில் கடனை அடைத்து விடும் பெரும் முதலாளியாகச் சுலபமாக

ஆகிறார். இப்படி உழைக்காமல் பொருள் திரட்டும் வழியாக இருக்கிறது, தனியார் வேட்டைக்காடாக இருக்கிறது.

இது அடக்கப்பட்டு, பஸ் தொழில் தேசீயமயமாக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கவர்னர் உரையில் ஒன்று குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாம்பரம் - விழுப்புரம் மின்சாரப் பாதை வேலைகள் நல்ல முறையிலே நடைபெறுவதாக கவர்னர் உரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இருப்பினும், ஏப்ரல் 19-ம் தேதி பத்திரிகையில் வந்திருக்கும் செய்தி, தாம்பரம்-விழுப்புரம் மார்க்கத்தில் மின்சார மயமாக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் முன்னமேயே இணக்கம் தெரிவித்திருந்தும், அது அமுலாக்கப் படுவதற்கான எவ்விதத் திட்டமும் கிடையாது. அந்தத் திட்டம் நான்காவது திட்ட காலத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது, என்று, செய்தி வந்திருக்கிறது. இது பற்றிய விளக்கத்தை கனம் நிதி அமைச்சர் தமது பதிலில் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ரூ. 291 கோடியளவில் வகுத்துள்ள நமது திட்டத்தில் மத்திய உதவியின் அளவு ரூ. 190 கோடி என்று வரையறுக்கப் பட்டுள்ளது. எனவே, புதிதாக நிதி வசதிகளை நாம் எந்த அளவுக்குப் பெருக்கிக்கொள்ள முடிகிறதோ அதைப் பொறுத்துத் தான் திட்ட வேலைகளை விரிவாக்கிக் கொள்ளமுடியும் என்று கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார். மிச்சம் இருக்கும் உபரித் தொகையை மாநில சர்க்கார் எந்த வகையில் ஈடு செய்யப் போகிறது? ஏற்கனவே மத்திய அரசு வரி 72 கோடி ரூபாய் நம் தலையில் விழுந்திருக்கிறது. அதைப் பார்க்கும் போது இன்னும் நாம் நிதி திரட்ட வேண்டுமென்பதைப் பார்த்தால், மெத்த பயமாக இருக்கிறது. வரி போடாமல் அரசாங்கத்தை எப்படி நடத்த முடியும் என்கிறார்கள். வரி போடுவதைக் குறைத்துக் கூறவோ மறுப்புச் சொல்லவோ இல்லை நாங்கள். ஆனால் போடும் வரி ஏழைகளை, பாட்டாளிகளை, அன்றாடம் காய்ச்சிகளை, அரை வயிற்றுக் கஞ்சிக்கு இல்லாதவர்களை பாதிக்கும் வரிகளாக அமைந்து அவர்கள் மேலும் மேலும் அல்லல்படும், அவதிப் படும் வகையான வரிகளாக நிதியமைச்சர் வரவு - செலவுத் திட்டத்திலே இடம் பெறவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விலைவாசிகள் ஏற்றத்தைத் தடுப்பது பற்றி கவர்னர் உரையில் ஒரு வரியும் இல்லை. விலைவாசிகளின் ஏற்றத்தைக் கட்டுப்படுத்தப் போகிறார்களா, எப்பொழுது, எப்படி? விலைகள் கட்டுப்படுத்தப் படவேண்டும், அவை இறங்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்தில் பிரசாரமாகக் கொண்டது. அதை மறுக்கவில்லை. நாங்கள் வந்தால், மூன்று படி அரிசி போடுவோம் என்று சொன்னதை, முதல் அமைச்சர் மட்டுமல்லாமல், மன்றத்தில் மற்ற ஆளும் கட்சி அங்கத்தினர்களும் "ஏன் மூன்று படி அரிசி போடவில்லை" என்று கேட்பது பொறுத்தமற்றது. நாங்கள் 50 பேர்கள் இருக்கிறோம். நாங்கள் 50 பேர்கள் வந்தால் அப்படிச் செய்வோம் என்று அறிக்கை விடவில்லை; எந்தக் கட்சியும் அப்படி அறிக்கை விடாது. எந்தக் கட்சியும் நிர்வாகத்தை ஏற்கும் நேரத்தில், நாங்கள் இதைச் செய்வோம், அதைச் செய்வோம் என்றுதான் தேர்தல் அறிக்கை விடுவார்கள். இன்றைக்கு நாங்கள் எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிறோம். ஆளும் கட்சியாக அமர வில்லை. எனவே எங்களைப் பார்த்து மூன்று படி அரிசி போடவில்லை என்று சொல்வது சரியாகாது. ஆளும் கட்சியாக உள்ளவர்கள் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அமைச்சர் அம்மையார் ஒரு கூட்டத்தில் சொன்னபடி ஒன்றரைப் படி அரிசியாவது போடுங்கள் என்றுதான் ஆளும் கட்சிக்காரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். விலைவாசிகள் குறைய வேண்டும் என்றால், கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றால், பாங்கிகள் தேசீயமயமாக்கப்பட வேண்டும். பத்து ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் எல்லா நிலச் சொந்தக்காரர்களிடமும் அவர்கள் சாப்பாட்டுக்குத் தேவையானது போக மீதி உள்ள உபரி உணவு தானியங்களை சர்க்காரே நியாயவிலைக்குக் கொள்முதல் செய்து, ஏழைகளால் வாங்க முடிந்த அளவுக்கு விலைவாசிகளைக் குறைக்க வேண்டும். இடைத்தரகர்கள் அகற்றப்படவேண்டும், அந்த முயற்சியிலே அமைச்சர்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, இந்த கவர்னர் உரையிலே விலைகள் விஷம் போல் ஏறவும், பொதுமக்கள் அகவிலையால் அல்லற்படவும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகவும், வேதனை, தற்கொலை அதிகமாகவும், இயற்கை வளங்கள் பாழ்படவும், இல்லாமை

மக்களைத் தாக்கவும், தாய்மொழியின் எதிர்காலம் பாழ்படவும், இந்தி மொழியின் ஆதிக்கம் ஏற்படவும், மாநில அரசு தலையாட்டியாகவும், இந்திய அரசு ஆட்டிப்படைக்கவும், தொழில்கள் தனிப்பட்டோர் லாப வேட்டைக்காடாகவும், தொழிலாளர் உழைத்து உருக்குலைவோராகவும், நெசவாளர், விவசாயிகள் வாழ்வு நைந்து போகவும், வரிச்சுமை அதிகமாகவும், ஏழைகள் வரியால் தாக்கப்படவுமான பயங்கரங்களுக்குப் பரிகாரம் காணப்படவில்லை. ஆகவே இந்த உரை பிணி நீக்காத மருந்து என்று கூறி முடிக்கிறேன்.



உரை : 5 **நாள் : 03.02.1966**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1966-ம் ஆண்டுக்கான கவர்னர் உரையின் மீது நடைபெற்றுவருகிற விவாதத்தின் தொடர்ச்சியாக என்னுடைய கருத்துக்களையும் எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

என்ன காரணத்தினாலோ பெருமைக்குரிய கவர்னர் அவர்கள், பதவியேற்ற காலந்தொட்டு இது வரையில், அவருடைய பொன்னான பாதங்கள் இந்த மாமன்றத்திலே படாத அளவுக்கு நாமெல்லாம் துர்ப்பாக்கியசாலிகளாக ஆகிவிட்டோம். அவர் இந்த மன்றத்திற்கு வந்து உரையாற்றுகின்ற அந்தப் பாங்கினை காண வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிற இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் ஏமாறுகிற வகையில், அவர் இங்கு வந்து உரையாற்றுவது இல்லை என்பது உள்ளபடியே நாம் எல்லாம் கவலைப்படத்தக்க செய்தியே ஆகும். ஆனால் அதற்குப் பதிலாக, அந்தப் பொறுப்பில் நமது தலைமை நீதிபதி காணப்படுவது நமக்கு அனுபவமாக ஆகிவிட்ட ஒன்று ஆகும். கவர்னர் அவர்கள் விடுமுறையில் செல்லுவது என்பது குறை காண முடியாத ஒன்று ஆகும். அதே போல், கவர்னர் இல்லாதபோது தலைமை நீதிபதி அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதும் சட்ட சம்மதம் ஆகும். இதில் நான் குறை காண முற்படவில்லை. ஆனால், இந்த மன்றத்தில் உருவாக்குகிற சட்டம் அத்தனையும் செல்லுபடி யாகும் சட்டம் என்றோ, மக்களால் ஏள்றுக் கொள்ளத்தக்க சட்டம் என்றோ கூறி விட முடியாது. உருவாக்குகிற சட்டங்களில் கையொப்பம் இடுகிற பொறுப்பு, தாற்காலிக கவர்னராக இருக்கக் கூடிய மாநில தலைமை நீதிபதி அவர்களுக்கு உரிய ஒன்றாக இருக்கிறது. இந்த முறையில் தானே கையொப்பமிட்டுச் சட்டமாகும்போது, குடிமகன்

ஒருவனுக்கு அதிருப்தி அளிப்பதாக இருக்கிற காரணத்தினால், தாற்காலிக கவர்னர் தலைமை நீதிபதியாக நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கிற நேரத்தில், அந்தச் சட்டத்தைச் செல்லுபடியாகாமல் ஆக்க வேண்டுமென்ற அடிப்படையில் முறையிட்டுக் கொள்ளப்பட்டு வருகிற நேரத்தில், அதற்கான தீர்ப்பைச் சொல்லுகிற தர்ம சங்கடமான நிலைமை ஏற்படுகிறது என்று சொல்லாமல் இருக்க முடியாது. நியாயம் வழங்கப்படும் என்று நம்பினாலும், சட்டமாகிற நேரத்தில் தாற்காலிக கவர்னராக இருந்து கையொப்பமிட்டு விட்டு, பிறகு செல்லுபடியாகாமல் ஆக்கப்பட வேண்டும் என்று ஒரு குடிமகன் முறையிட்டுக் கொள்ளும்போது, வழக்கு மன்றத்தில் அபிப்பிராயம் சொல்லும் நீதிபதியாகவும் இருப்பதில் உள்ளபடியே எவ்வளவு சங்கடமான நிலை இருக்கிறது என்பதை மாமன்றமும், அமைச்சர் அவையும் யோசித்துப் பார்க்க வேண்டும். இது போன்ற நிலைமை, அடிக்கடி கவர்னர் அவர்கள் விடுமுறையில் செல்லுகின்ற நிலைமை, வேறு மாநிலங்களில் நிகழவில்லை. இந்த மாநிலத்திலேதான் குறிப்பாக அடிக்கடி நடைபெறுகிற காரணத்தினால் இந்த மாதிரியான சிக்கலைத் தவிர்க்கும் வகையில் நல்ல முடிவைக் காணுகிற முறையில் நல்ல முறையை வகுக்கவேண்டியது இந்த மாமன்றத்தில் உள்ளவர்கள் கடமை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையில், மறைந்த கடமை வீரர் லால் பகதூர் அவர்களுக்காகச் செலுத்தப்பட்டிருக்கிற இரங்கல் உரை யோடு என்னுடைய துயரார்ந்த இரங்கலையும் இணைத்துக் கொள்கிறேன். அதனையொட்டி இன்றைய இந்திய துணைக் கண்டத்தின் பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிற இந்திரா அம்மையாருக்கு வாழ்த்துக் கூறப்பட்டிருக்கிறது. இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செத்தவர்களுக்குத் தான் அனுதாபம் தெரிவிப்பார்கள், வந்தவர்களுக்கு வாழ்த்தோ பாராட்டோ கூற மாட்டார்கள் என்று குறைபட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு அந்தக் குறையை வைக்காமல், பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிற இந்திரா அம்மையாரை வாழ்த்துகிறேன். 'தந்தையார் நேருவைப்போல் நீடுபுகழ்பெற்று வாழ்க!' என்று வாழ்த்துகிறேன். பாராட்டுகளை 'ரிசர்வ்' செய்து வைத்துக்கொண்டு, பரிபாலனத்தைப் பார்த்த பிறகு சொல்லலாம் என்று வைத்துக்கொள்கிறேன். அந்த வகையில்

திராவிட முன்னேற்றக் கழகம் குறுகிய நோக்கத்திற்கு ஆட்படாமல் செயலாற்றுகிற இயக்கம் என்று ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே ஒன்றைக் குறிப்பிடுவது இந்த மன்றத்திலே பொருத்தம் அற்றது என்று நான் எண்ணவில்லை. 1964-ம் ஆண்டு கவர்னர் உரை தரப்பட்ட நேரத்தில் அதிலே ஒன்று கோடிட்டுக் காட்டப்பட்டது. இந்த மன்றத்திலே முதல் அமைச்சராக வீற்றிருந்த காமராஜர் அவர்கள் பதவியிலிருந்து விலகி, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டதைப் பாராட்டி, அவரது சேவையும், அறிவுரையும் இந்த மன்றத்திற்கு அடிக்கடி வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. என்ன காரணமோ, நாம் செய்த துர்ப்பாக்கியம், கவர்னர் அவர்களுடைய வேண்டுகோள் கூட நிராகரிக்கப்பட்டு, காமராஜர், அவர்களுடைய சேவையையும், அறிவுரையையும் தராமல் இதுவரையில் இருந்துவிட்டார்கள். அதே நேரத்தில் அந்த சொற்றொடரைப் பற்றி ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர், "காமராஜர் அருமையான திட்டத்தைக் கொடுத்தார்; அதன் விளைவாக விலகினார்; ரஷ்ய நாட்டில் 'கே-ப்ளான்' என்று குருஷ்சேவ் ப்ளான் என்று கூறப்பட்ட அளவுக்கு, காமராஜர் திட்டம் 'கே-திட்டம்' என்று பெயர் பெறத்தக்க, புகழ் வாய்ந்த திட்டம்" என்று இதே மன்றத்தில் இன்றைய தினம் வீற்றிருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் பாராட்டி கவர்னர் உரை மீதான விவாதத்தில் கூறியிருக்கிறார்கள். எனக்குள்ள கவலையெல்லாம் இந்த 1966-வது ஆண்டு கவர்னர் அவர்கள் உரையில் இந்தத் திட்டத்திற்கு ஒரு அனுதாபம் கூட தெரிவிக்காமலே பேசிவிட்டார்களே என்பதுதான். ஏனென்றால் 1964-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம், அன்று போற்றி புகழப்பட்ட அந்தத் திட்டம், இன்று இந்திரா காந்தி அவர்களின் அமைச்சர் அவையில் கடைசியாக அடியோடு அழிக்கப்பட்டுவிட்டது என்ற முறையில், மூத்த மந்திரிகள் பதவியிலிருந்து விலகவேண்டும் என்பதற்கு மாறாக, மூத்த மந்திரிகள் பதவியில் இருப்பது மட்டுமல்ல, மூத்த மந்திரிகளைவிட வயது அதிகமான மூத்த மந்திரிகளும் அமைச்சர் அவையில் இடம் பெற்று விட்டார்கள். ஆகவே, இந்தத் திட்டம் அனுதாபத்திற்குரிய திட்டமாக மாறியிருக்கிறது.

'தாஷ்கெண்ட்' சமாதானம் பற்றி கவர்னர் உரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 'தாஷ்கெண்ட்' பிரகடனம் திராவிட முன்னேற்றக் கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். அமைதி நிலவவேண்டும், அமைதி சமாதானம் முழங்குவதற்கு இன்றியமையாத ஒன்று என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் உணர்ந்திருக்கிறது. அமைதி நிலவ வேண்டும், அல்லது அமைதிக்கு மாறாக பகைவர்கள் எல்லைப் புறத்தில் படையெடுத்து வந்தால், எதிரிகள் மோதினால், அந்த நேரத்தில் அவர்களை ஊதி அழிக்க எதிர்க் கட்சிகள் அத்தனையும் தங்களுடைய ஒத்துழைப்பை தரும், தந்துகொண்டிருக்கும், தந்தது என்பதில் எந்தவிதமான ஐயமும் கிடையாது. ஆனால், ஒரே ஒரு சந்தேகம். அந்த ஒத்துழைப்பு சர்க்காருக்கா? அல்லது காங்கிரஸ் கட்சிக்கா? என்பதுதான் இந்தக் கேள்விதான் இன்றைய தினம் பெரிய அளவிலே உருவெடுத்திருக்கிறது. பெரும்பாலும் பாதுகாப்பிற்காக செலவிடப்பட்ட நேரம், நினைப்பு எல்லாம் இந்த நாட்டைப் பொறுத்த வரையில் சர்க்கார் என்ற பெயரால், தனிப்பட்ட காங்கிரஸ் கட்சியினுடைய செல்வாக்கை உயர்த்துவதற்குத் தான் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று நான் கூறினால், அதை மறுக்க முடியாது. 'போர்முனைச் செய்திகளை ஆர்வத்துடன் கேட்பதற்கு, மக்கள் மிக்க எழுச்சியுடன் கூட்டங்களுக்கு வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையை தக்க முறையில் பயன்படுத்திக்கொண்டு, காங்கிரஸ்காரர்கள் பொதுமக்களைச் சந்தித்து காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கை வளர்த்துக்கொள்ள வேண்டும்' என்று இப்படிப் பேசியது காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத் தலைவர் ஒருவராக இருந்தால் நான் அதிர்ச்சி அடைய மாட்டேன். இப்படிப் பேசியது யார் என்றால், இந்திய துணைக் கண்டத்தின் உள்துறை அமைச்சர் திரு. குல்சாரிலால் நந்தா. திரு. நந்தா அவர்கள் இப்படி குஜராத் ஊழியர்கள் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். பாதுகாப்பிற்கான ஆதரவான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு காங்கிரஸ் கட்சியினுடைய செல்வாக்கை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று பொறுப்பு வாய்ந்த உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்கள் ஊழியர் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். கட்சிக் காரியத்திற்காக பாதுகாப்பு நேரம் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது என்பதற்கு இதைவிட

அதிகமாக நான் உதாரணம் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

அந்த வகையில் மதுரைக் கோவில் தங்கத்தை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் அவர்கள் பெறலாமா என்ற ஒரு கேள்வியை என்னுடைய மதிப்பிற்குரிய தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கேட்டார்கள். அதற்கு முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் விடுத்த பதில் சட்ட ரீதியாகப் பெறலாம் என்ற நிலைமையில் இல்லை. அவர்கள் என்ன கூறினார்கள்? அவர் மிகப் பெரிய தலைவர், ஆகவே, பெறலாம் என்று பேசினார்கள். அவர் அமெரிக்கத் தலைவருடன் கைகுலுக்குகிறார், ரஷ்யத் தலைவருடன் பேசுகிறார். அவர் பெரிய தலைவர், அவர் மதுரை கோவில் தங்கத்தை பெற்றால் என்ன என்று பேசினார். அவர் புகழுடையவர், பெரிய தலைவர் என்று நாங்களும் கருதுகிறோம். ரஷ்ய, அமெரிக்கத் தலைவர்களுடன் கைகுலுக்கியதையும், குலாவிப் பேசியதையும் உள்ளபடியே பூரிப்போடு பார்க்கிறோம். ஆனால் விவாதத்திற்குரிய பிரச்னை அது அல்ல. திரு. காமராசர் பெரிய தலைவர் தான்; உயர்ந்த தலைவர் தான்; மறுக்கவில்லை, ஆனால், திரு. பக்தவத்சலம் அவர்களுடைய பதில் எப்படி இருக்க வேண்டும்? பெரிய தலைவர், தவறு சிறியது, ஆகவே பொருட் படுத்தக்கூடாது என்று அவர் குறிப்பிட்டிருந்தால், அது நல்ல வாதமாகும். அதை விடுத்து, பெரிய தலைவர், ஆகவே தவறு செய்யலாம் என்பது வாதமாகாது. யானைக்கும் அடி சறுக்கும் என்ற ரீதியிலே, பெரிய தலைவர், சிறிய தவறு செய்துவிட்டார் என்று கூறிவிட்டால், அது பொருட்படுத்தத்தக்க ஒன்றாக இல்லாமல் போய்விடும். அதை விடுத்து, பெரிய தலைவர், ஆகவே, தவறு செய்யலாம் என்று கூறுவது நல்ல வாதமாகாது என்பதைத்தான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அவர் பெரிய தலைவர் என்று ஒத்துக்கொள்கிறார்களே, அந்தத் தலைவர் நாட்டிற்காகச் சொன்ன கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்றால், இல்லை. திட்டங்களுக்கு அதிகமாகச் செலவிடக்கூடாது என்று வெகு வேகமாக, தீவிரமான, கருத்துக்களை வெளியிட்டார். அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதா? இல்லை; கிடையாது. அமெரிக்காவிலிருந்து உணவு தானியத்தை இங்கு இறக்குமதி செய்து இந்திய

மக்களுடைய மானத்தைக் குலைக்கும்படிச் செய்யலாமா என்று வருத்தப்பட்டு, திரு. காமராசர் தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்தார். அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா? இல்லை, ஆனால், இன்றைய தினம் காமராசர் பெரியவர் ஆகவே, தங்கம் வாங்கலாம் என்பதற்கு மாத்திரம் அந்த வாதத்தை வைத்திருப்பது சரியானதா? பெரிய தலைவர் சொன்ன சில கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல் வைத்திருக்கிறார்களே? அதை மாற்றி, அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அதைப் போலவே தங்கம் வாங்கியதும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஒன்று என்ற ஒரு வாதத்தை முதல் அமைச்சர் அவர்கள் வைத்திருந்தால், உள்ளபடியே நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம்.

எப்படியோ பாதுகாப்பு நிலவரங்களெல்லாம் ஓரளவுக்கு முடிவு பெற்று, பகை ஒழிந்து இப்பொழுது அமைதி நிலவுகிறது. பெரும் புயலுக்குப் பின் ஏற்பட்ட நிலை போன்ற ஒரு நிலை இன்றைய தினம் இந்த நாட்டில் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலை இன்று நாட்டில் நிலவுகிறது என்று எண்ணுகிற காரணத்தினால் 1967-ம் ஆண்டு வருகிற பொதுத் தேர்தலுக்கு வேண்டிய பூர்வாங்கமான வேலைகளையெல்லாம் ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றையதினம் இருக்கிற நெருக்கடி நிலையை ரத்து செய்துவிட்டு, பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு, பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. அதுதான் கழகத்தின் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்துமாகும். பாதுகாப்புச் சட்டம் இருந்துதான் தீரவேண்டும் என்றால், நெருக்கடி நிலை இருப்பதாக அர்த்தம். நெருக்கடி நிலை இருக்கும்பொழுது தேர்தல் தேவையில்லை. தேர்தல் நடத்தக் கூடிய அளவுக்கு சூழ்நிலை ஒழுங்காக இருக்கிறது என்றால், பாதுகாப்புச் சட்டம் தேவையில்லை. இந்த வாதத்தில் எதற்கு வலுவேற்றப்போகிறார்கள் அரசினர் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். சர்வாதிகார சர்க்கார் பாகிஸ்தான் சர்க்கார். அங்கு இன்னும் பாதுகாப்புச் சட்டம் வாபஸ் பெறப்படவில்லை. ஜனநாயக சர்க்கார் இந்திய சர்க்கார். இங்கேயும் பாதுகாப்புச் சட்டம் வாபஸ் பெறப்படவில்லை. எனவே சர்வாதிகார சர்க்காருக்கும் ஜனநாயகச் சர்க்காருக்கும் இருக்கிற வேற்றுமைகளை நீங்கள் எப்படித் தான் காட்டப் போகிறீர்கள், விளக்கப்போகிறீர்கள் என்ற சந்தேகம் எனக்கு எழும்புகிறது.

பாதுகாப்புச் சட்டம் இருந்தால் தேர்தல் நடத்தக் கூடாதா? உபதேர்தல்கள் நடைபெறவில்லையா? என்று கேட்கலாம். கேரளாவில் நடைபெற்றதை நாம் பார்த்தோம். அதன் முடிவு என்ன ஆயிற்று? அங்கே பாதுகாப்புச் சட்டம் குறுக்கிட்டு, சட்ட மன்ற உறுப்பினர்கள் உறுதி மொழி எடுத்துக்கொள்வதற்குக் கூட மன்றத்தில் நுழைய முடியாத அளவுக்குத் தடுக்கப்பட்டு, தேர்தல் ரத்து செய்யப்பட்டதை நாம் யாரும் மறந்திருக்க முடியாது. பாதுகாப்புச் சட்டம் தேர்தலின்போது நீடித்திருந்தால் எழுத்துக்கு, பேச்சுக்கு, எண்ணத்திற்கு, கருத்துக்கு, எதிர்க்கட்சி தேர்தல் வேலைகளுக்கு அத்தனைக்கும் தடை ஏற்படும் என்பதை நான் நிச்சயமாகக் கூற முடியும். இன்றைக்கே காங்கிரஸ் கட்சியினுடைய ஏடுகள் மிரட்டுகின்றன. நான் என்னுடைய பத்திரிகையிலே காமராசரை கொள்கை ரீதியாக கண்டனம் செய்து எழுதினேன் என்பதற்காக ஒரு காங்கிரஸ் ஏடு 'கருணாநிதி ஜாக்கிரதை, காமராசரைப் பற்றித் தொடர்ந்து இப்படி எழுதினால், பாளையங்கோட்டை நினைவு இருக்கட்டும்' என்று எழுதுகிறது. அது அமைச்சர் திரு. பூவராகன் வகுத்துள்ள இலக்கணப்படி தரமுள்ள ஏடு; அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டினால் அது தரமற்ற ஏடு; நம்நாடு, முரசொலி - தரமற்ற ஏடுகள். காமராசரைப் பற்றித் தாக்கி எழுதினால், பாளையங்கோட்டை அனுபவம் வரும், ஜாக்கிரதை என்று காங்கிரஸ் ஏடு எழுதுகிறது. காங்கிரஸ் கட்சி சர்க்காரை இயக்கும் அளவுக்கு இருக்கிறது. பொது மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு நடைபெறுகிறது சர்க்கார். சர்க்கார் நடுநிலைமையில் உள்ள ஒன்று என்ற உயர்ந்த நிலை இன்றைய தினம் மறுக்கப்படுகிறது. அதற்கு ஒரே ஒரு உதாரணம் தருகிறேன். சிறிய உதாரணம், ஆனால், சீரிய உதாரணம் என்று கருதுகிறேன். சபாநாயகர் அவர்களுக்குக் கூட அதைப்பற்றி கடிதம் வந்திருப்பதாக நான் ஏடுகளில் பார்த்தேன். திருச்சி நகரசபை, காங்கிரஸ் கட்சி நிர்வாகத்தில் நடைபெறுகிறது. அங்கு நான் ஒரு விழாவுக்கு தலைமை வகிக்கச் சென்றேன். மறைந்த தலைவர் திரு. ரத்தினவேலு தேவர் அவர்களின் பெயரால் திருச்சி பொது மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு கட்டப்பட்ட மாமண்டபம் அது. அந்த மன்றத்தின் உள்ளே போய் உட்காரப் போனேன். அங்கே ஒருவர் வந்து 'இங்கே உட்காராதீர்கள், வேறு இடத்திற்கு வாருங்கள்' என்று சொன்னார். எதிரே முதல் வரிசையில் மூன்று நாற்காலிகள் சட்டம் அடிக்கப்பட்டு, கம்பி

போடப்பட்டு, பூட்டு மாட்டப்பட்டிருந்தது. ஏன் இதை பூட்டி வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். 'இந்த நாற்காலிகளில் ஒன்றில் நகர சபைத் தலைவர், இன்னொன்றில் உப தலைவர், அதற்குப் பக்கத்தில் இருப்பதில் கமிஷனர் ஆகியோர்கள்தான் அமரலாம். மற்றவர்கள் அமரக்கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் வந்தால் அமரட்டும், வராத நேரத்தில் ஏன் பூட்டி வைக்க வேண்டும் என்று கேட்டேன். இல்லை, எங்களுக்கு இப்படி புதியதாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சாவி கிடையாதா என்று கேட்டதற்கு, இருக்கிறது, கொடுக்க முடியாது என்று அந்த மன்றத்திலுள்ளவர்கள் மறுத்து விட்டார்கள். இதைப்பற்றி அங்கே பேசினேன். நான் கேட்கிறேன், இங்கே வீற்றிருக்கும் அமைச்சர்கள் இங்கே இருக்கும் நேரத்தில் தான் இந்த நாற்காலிகளுக்குச் சொந்தம் கொண்டாடுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், கவர்னர் அவர்கள் இந்த மன்றத்தில் உரை நிகழ்த்தும் பொழுது, இந்த மன்றத்தின் உறுப்பினர்களும், மேல் அவை உறுப்பினர்களும் இங்கே கூடுகின்றபொழுது, மத்தியிலே போடப்பட்டிருக்கிற அமைச்சர்களின் பெயர் பொறிக்கப்பட்ட சீட்டுகள் மறைந்து விடுகின்றன. எல்லோரும், எங்கு வேண்டுமானாலும் அமரலாம் என்ற நிலை இருக்கிறது. முதல் அமைச்சர், தொழில் அமைச்சர், உள்துறை அமைச்சர், இன்னும் மற்ற அமைச்சர்களும் இந்த மன்றத்திற்கு வெளியே வைத்துக்கொள்கிற பாதுகாப்புக் கூட்டம் அல்லது வேறு பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளும் பொழுது அங்கே அவர்கள் வந்து உட்காருவதற்கு அவர்களுக்கென்று போடப்பட்ட நாற்காலிகள் இல்லாமல் இருப்பது இழுக்கு என்று கருதவில்லை.

முதல் அமைச்சர் நாற்காலிப் பயித்தியம் என்பார்கள். திருச்சி நகரசபை நாற்காலி பயித்தியத்திற்கு மருந்து காண்பது அமைச்சர்களுடைய கடமை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முரசுக்கட்டிலில் படுத்து உறங்கும் பெரும் குற்றம் புரிந்த புலவருக்கு விசிறி கொண்டு வீசினான் தமிழ் மன்னன். அது தமிழ் மன்னன் பண்பாடு என்று வரலாறு கூறுகிறது. பாடுபட்டு, வரி கொடுக்கின்ற மக்களை, நண்பர்களை, பெரியோர்களை அவமானப்படுத்த மூன்று நாற்காலிகளை அங்கே பூட்டிவைத்திருக்கிறார்கள். அதைச்சொன்னது தவறானது என்று நம்முடைய சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்

என்று ஏடுகளில் பார்த்தேன். அவர்கள் எந்த வகையில் அதை ஆராய்வாரோ எனக்குத் தெரியாது. இந்த அமைச்சரவை அந்த அக்கிரமத்தை ஒழிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கவர்னர் உரையில் மிக முக்கியமான இடம் பெற்றிருப்பது உணவுப் பிரச்சினையாகும். இந்த உணவுப் பிரச்சினை 18 ஆண்டு காலமாக நமது நாட்டில் தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது. உணவுப் பிரச்சினையில் இந்த மந்த நிலை, சிக்கல் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. இதற்கான காரணங்களிலே, மிக முக்கியமானது நிலச்சீர்திருத்தம் என்ற பெயரிலே, சட்டத்தை ஏற்படுத்திவிட்டு, பெயரளவில் ஏட்டில் எழிலான திட்டமாக இயற்றிவிட்டு, அந்த நிலச்சீர்திருத்தம் நல்ல முறையிலே, விவசாயிகளின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்கிற வகையில் செயல் படுத்தப்படவில்லை, என்கிற குற்றச்சாட்டைச் சொல்கிறேன். ஊசி வாங்கிவரச் சொன்ன குருவிற்கு, ஊசியை வாங்கி பனை மரத்தில் குத்தி நான்கு சீடர்கள் தூக்கி வந்ததுபோல விவசாய உற்பத்திக்காக அதிகாரிகள் குவிந்து கிடக்கிறார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள், அதிகாரிகள் ஜீப் கார்களில் மாத்திரம் போனால் போதாது, அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே இருக்கும், சுவர், திரை விலக்கப்படவேண்டும் என்றார்கள். உணவு உற்பத்தியாகட்டும், மற்ற உற்பத்தியாகட்டும், நேரு வாக்குபோல - அழகாக எழுதி வைத்திருக்கிறார்கள் - அதிகாரிகள் குவிகிறார்கள், அலுவல்கள் அதிகரிக்கப்படுகின்றன. பணம், செலவழிக்கப் படுகிறது, அவ்வளவுதான். பிள்ளை பிழைக்கவில்லை, எண்ணெய்ச் செலவு தான் மிச்சம் என்கிற நிலைதான் உணவுப் பிரச்சினையில் நம் நாடு இருப்பது.

1971-ல் 18 அவுன்ஸ் அரிசி கிடைத்து, நம் தேவை பூர்த்தியாகும் நிலை வரும் என்று கவர்னர் உரையில் அறுதியிட்டுக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், இன்னொரு செய்தி, சனவரி 1-ம் தேதி இந்திய புள்ளிவிவர சங்க மகாநாட்டில், புள்ளிவிவர டைரக்டர் பி. வி. சுகாத்மே, கூறியிருக்கிறார் "உணவு உற்பத்திப் பெருக்கம், கால்நடை அபிவிருத்தி, மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியவை மூலம், 1975-ல் தான் உணவுப்

பிரச்சினையில் தன்னிறைவு ஏற்படக்கூடும்" என்று. 1971-ல் என்று கவர்னர் உரை செப்புகிறது. ஆனால் 1975-ல் தான் இந்த நிலை வர முடியும் என்று புள்ளி விவர டைரக்டர் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்.

உணவுக் கார்ப்பொரேஷன் தலைவராக இருந்து பதவியிலிருந்து விலகி விட்டிருக்கிற. திரு. டி. ஏ. பாய் அவர்கள், ஒன்றைச் சொல்லியிருக்கிறார். "இந்தியாவின் உணவு உற்பத்தி அளவு என்ன என்பது குறித்து பல்வேறு அளவுகள் வெளியாகியிருக்கின்றன. இவைகளில் எது சரி எனத் தெரியவில்லை. இறக்குமதியாகிற உணவு தானிய அளவுதான் சரியானது என்று புலப்படுகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார் உணவுக் கார்ப்பொரேஷன் தலைவர். இன்னொன்றும் சொன்னார். "நம்மூர் அரிசியில் கல் பொறுக்க ஒரு மணி நேரம் ஆகிறது. ஆனால் அமெரிக்காவிலிருந்து வரும் அரிசியை நேரிடையாக பாத்திரத்தில் போட்டு வேகவைக்கும் அளவுக்கு துல்லியமாக இருக்கிறது" என்று பதவிகளில், பொறுப்புகளில் இருந்தவர்கள் மனம்விட்டுப் பேசக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் ஊக்குவிக்கப்படவில்லை, உற்சாகம் அளிக்கப்பட வில்லை, பணம் வீண் விரயம் ஆகிறது. அதிகாரிகள், அலுவல்கள் அதிகரிக்கின்றன. இதுதான் இன்றைக்கு இருக்கும் நிலைமை.

"தற்போதைய வரி விதிப்பு முறை ஒரே மாதிரியாக இருக்கிறது. பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்கிறவர் களுடைய கொடுக்கும் சக்தியைக் கருத்தில் கொண்டு செய்ததாக இல்லை. நெல்லுக்கும், கரும்புக்கும் ஒரேமாதிரி வரிவிதிப்பது நியாயமா? நெல்லைவிட, கரும்பிலும் கடலைப் பயிரிலும் அதிக வருமானம் கிடைக்கிறது. இருந்தபோதிலும் நெல்மீது வரி விதிப்பு அதிகமாகும். இந்த முறை மாற்றப்பட்டு நியாயம் வழங்கப்பட வேண்டும்" என்று நான் சொன்னால், அமைச்சர்களுக்குக் கோபம் வரும். ஆனால், இதைச் சொன்னவர், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் அவர்களே. இந்த வரிவிதிப்பு நியாயம் ஆகாது, இதை மாற்ற வேண்டும், கரும்புச் சாகுபடியிலும், கடலைச் சாகுபடியிலும் நெல்பயிரைவிட அதிகமான வருமானம் கிடைக்கிறது. ஆகவே நெல்பயிருக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரி

குறைக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்களே சொல்லியிருக்கிறார். இவர்கள் மறந்து போயிருக்கலாம். ஆகவே, ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து ராஜஸ்தானத்திலே பல மாவட்டங்களிலே பஞ்ச நிலைமை ஏற்பட்டு விட்டதால், விதிப்பதாக இருந்த கூடுதல் வரியை கைவிட்டிருக்கிறார்கள் என்று ஜெய்ப்பூரிலிருந்து வெளிவந்த, நவம்பர் 23-ம் தேதி செய்தியில் பார்த்தேன். ராஜஸ்தானத்தில் வரி விதிவிலக்கு செய்திருக்கிறார்கள். கூடுதலாக வரிபோடும் எண்ணத்தைக் கைவிட்டு இருக்கிறார்கள். ஆனால், இங்கே, தஞ்சையிலும் வேறு பல மாவட்டங்களிலும் வரிவிலக்குச் செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் இருந்தும், அவை இப்பொழுது நீக்கப்பட வேண்டிய, கோரிக்கைகள் நிறைவேற்றப் படவேண்டியதற்கு நான் கூறியது நல்ல சான்று ஆகும், எடுத்துக்காட்டாகும் என்பதை அமைச்சரவைக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நாம் போடும் திட்டங்கள் ஏட்டளவுத் திட்டங்களாக மட்டும் இருந்தால் எந்தவிதப் பயனையும் அடையமுடியாது. உதாரணமாக, அம்மையார் திருமதி குழந்தையம்மாள் எம்.எல்.ஏ. பேசும் நேரத்திலே டி.டி.டி. 75 சத விகிதம் வாங்க கள்ள மார்கெட்டின் தயவைத்தான் நாடினேன் என்று குறிப்பிட்டார்கள். கள்ளச் சந்தையில் வாங்க வேண்டியிருந்தது என்று இந்த சட்ட மன்றத்திலேயே அம்மையார் பேசுகிறார்கள் என்றால் என்ன அர்த்தம் என்று கருதுகிறார்கள்? விவசாயத்தை ஊக்குவிப்பது எங்கே? "லஞ்சம் வாங்குவது தவறுதான். ஆனால் கொடுக்கா விட்டால் வேலை நடக்காதே" என்று ஸ்ரீபிரகாசா கூறியதுதான் என் ஞாபகத்திற்கு வருகிறது. கள்ளச் சந்தையில் ஈடுபட்டால் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் கள்ளச் சந்தையில் ஈடுபட்டு பொருள்களை வாங்கினால்தான் காரியங்களைச் செய்ய முடியும் என்ற நிலைக்கு நாடு வந்திருக்கிறது. இன்றைய அரிசி ரேஷன் முறையில் கொடுக்கப்படுகிறது. கொடுக்கப்படும் அரிசி தரமானதாக இருக்கவில்லை. சென்னையில் இருக்கிறவர்கள் நிலம் உடையவர்கள் வெளி ஊரிலிருந்து அரிசி கொண்டு வரவேண்டும் என்று முடியாமல், தொழில் அமைச்சர் வெங்கட்ட ராமன் அவர்களை அணுகி, நான் திருவாரூரிலிருந்து அரிசி கொண்டு

வரமுடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர்கள், "என் கதியே அப்படித்தான்" என்று சொன்னார்கள் (சிரிப்பு). மந்திரி கதியும் என் கதியுமே இப்படி என்றால், சாதாரண நடுத்தர மக்கள் நிலைமை என்ன என்பதை சர்க்கார் எண்ணிப்பார்க்க வேண்டும். நிலம் உடையவர்கள் அரிசி கொண்டுவர வேண்டும். நிலம் இல்லாதவர்கள் கூட அரிசி கொண்டு வரலாம் என்று சட்டத்தை, விதியை மாற்றியமைக்க வேண்டும். நிலம் இல்லாதவர்கள் கூட அரிசி கொண்டுவரலாம் என்று அரிசி பங்கீட்டுக் கார்டுப்படி எவ்வளவு அரிசியோ அதைக் கொண்டு வர ஏற்பாடு செய்தால், நிலம் இல்லாதவர்கள் கூட அரிசி கொண்டு வரமுடியும். கொள்முதலும் ஒரு விதத்தில் நல்ல முறையாக நடக்க வழி செய்ததாக இருக்கும்.

விவசாயத்திற்கு, மற்ற தொழில்கள் போல, பருவமழை மட்டுமல்லாமல், மின்சாரமும் தேவைப்படுகிறது. அனல் மின்சாரம் நாட்டுக்கு தேவையாகிறது. அனல் மின்சாரம் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொழில் அமைச்சருக்கு இந்த மன்றத்தின் மூலம் பல முறை எடுத்துச் சொல்லப் பட்டிருப்பது அனைவருக்கும் ஞாபகம் இருக்கும். ஒவ்வொரு வரவு செலவு விவாதத்தின் போதும், கவர்னர் உரைமீது விவாதம் நடைபெறும் போதும். பல திட்டங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எண்ணூர், தூத்துக்குடி அனல் மின்சார திட்டங்கள் எழுதிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. நிறைவேறியதா என்றால் இல்லை. 1½ வருஷம் ஆகிறது. நிறைவேறவில்லை. திட்டக் கமிஷன் ஒத்துக் கொண்டது; டெல்லி அரசாங்கம் ஒத்துக்கொண்டது. ஆனால் இன்னும் வேலை முறைகளை தொடங்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன். இப்படி பத்திரிகையாளர் களிடம் தெரிவித்ததாகத் தெரிந்தது. அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம், டெல்லி பாராளு மன்றத்திலே, திரு. கே. எல். ராவ் அவர்கள் "தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம், எண்ணூர் அனல் மின்சாரத் திட்டம் இவை எதிலும் சேர்க்கப்பட வில்லை. எந்தத் திட்டத்திற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட வில்லை. அந்த விதமான வேலைகள் எதுவும் தொடங்கப்படவில்லை'' என்று கூறினார்கள். உடனே பத்திரிகையாளர் களெல்லாம் நம்முடைய தொழில் அமைச்சர்

அவர்களிடம் சென்று, "இதற்கு என்ன சொல்லுகிறீர்" என்று கேட்க, உடனே தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், "இதோ இருக்கிறது பாருங்கள், கே. எல். ராவ் அவர்கள் எழுதிய கடிதம்" என்று காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. டில்லியில் திரு. அசோக் மேத்தா அவர்களும் முன்னாள் நிதி அமைச்சர் திரு. டி. டி. கே. அவர்களும், திரு. கே. எல். ராவ் அவர்களும் நம்முடைய தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களும் கூடிக் கலந்து, எண்ணூரில் அனல் மின்சார நிலையமும், தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையமும் அமைக்க முடிவு செய்துவிட்டு, அதுபற்றி முடிவு செய்யப்பட்டது என்பதை ஆதாரபூர்வமாக் அறிவிக்கின்ற ஒரு கடிதத்தை, அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் 20-6-1965 தேதியிட்டு நம்முடைய அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். இவ்வளவும் செய்துவிட்டு, கிராமங்களிலே சொல்வார்களே, முழுப் பூசணியைச் சோற்றிலே மறைப்பது என்று, அதைப்போல, "எண்ணூரா? தூத்துக்குடியா? எப்பொழுது அங்கீகரித்தோம்? வேலையா? என்றைக்கு? யார் சொன்னது" என்று திரு. கே. எல். ராவ் அவர்கள் பேசுகிறார்கள். "இல்லை, இல்லை, அவர் கடிதம் எழுதியிருக்கிறார்" என்று நம்முடைய அமைச்சர் அங்கலாய்க்கிறார். அவர் கண்டித்துப் பேசுவதும் நாம் அங்கலாய்ப்பதும் என்ற இந்த நிலைமையோடு காரியங்கள் முடிந்துவிடலாமா? "ஏன் இப்படிச் சொல்லிவிட்டுத் திரித்துக் கூறுகின்றீர்?" என்று கேட்கின்ற திராணியை, திறமையை, துணிவை; இந்த அமைச்சரவை பெற வேண்டாமா? என்று தான் நான் கேட்கின்றேன்.

இறுதியாக, இப்பொழுது வேதனைக்கு உரிய ஒன்று, தமிழகத்தைப் பொறுத்த வரையில் உலுக்கிக் கொண்டிருக்கிற மொழிப் பிரச்சினை ஆகும். மொழிப் பிரச்சினை என்றாலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கனல் கக்கும் கண்ணோடுதான் எங்களைப் பார்ப்பார். நாட்டிலே தமிழக மக்களுடைய இதயத்தில் பீறிட்டுக் கிளம்புகிற தமிழ் உணர்ச்சிக்கு அணை போட்டுத் தடுக்க வழி இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிற இந்த அமைச்சரவைக்கு மொழிப் பிரச்சினை என்றாலே கோபம் வரத்தான் செய்யும். மாணவர்கள் இந்த

894.8115
TAM

ஆண்டும் மொழிப் பிரச்சினையிலே தாங்கள் கொண்டிருக்கும் கருத்துக்களை மிக அமைதியான முறையிலே இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். யாரோ அவர்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்றும், இப்படியெல்லாம் அரசியலிலே ஈடுபடலாமா என்றும் நம்முடைய அமைச்சர்கள் கண்டித்துப் பேசிய வாதங்களை எல்லாம் நான் ஏடுகளிலே கண்டேன். ஒருவர் பேசியிருக்கிறார். நம்முடைய மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர், காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த திரு. செங்கல்வராயன் அவர்கள் பேசியிருக்கிறார். அவர் ஒரு வழக்கறிஞரும் கூட. அவர் பேசிய இடமோ கல்லூரி ஒன்றில். அவர் குறிப்பிட்டிருக்கிறார் :

G1002309

> "மாணவர்களின் சந்தேகத்தைப் போக்காமல் அவர்களை அரசியலில் ஈடுபடக் கூடாது என்றால், மறைந்த சத்ய மூர்த்தி அவர்கள் கூறியதுபோல், அரசியலே மாணவர்களை இழுத்துக் கொள்ளும்."

என்று பாராளுமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. செங்கல்வராயன் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு கல்லூரிக் கூட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தினுடைய உணர்ச்சிகளை மறந்துவிடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் குடியரசு தினத்தில் பேசும்போது, "பதினான்கு மொழிகளையும் ஆட்சி மொழியாக்க முடியுமா? ஏதோ இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து மொழிகளை ஆக்கலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு, மூன்று, நான்கு ஐந்து என்பதில் தமிழும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய தாழ்மையான வேண்டுகோள் ஆகும்.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி யாரும் கேட்கவில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : "கேட்கவில்லை" என்று சொல்கிறார். 'சொல்லவில்லை' என்று சொல்லிவிடுவாரோ என்று நினைத்தேன்.

மாண்புமிகு திரு. எம். பக்தவத்சலம் : அப்படிக் கேட்க வில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : அப்படிக் கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். இப்பொழுது கேட்கிறோம். இனிமேலாவது அருள் பாலிக்கட்டும் என்று அமைச்சரவையை நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். "சொல்லவில்லை" என்று சொல்லிவிடுவாரோ என்று வேதனைப்பட்டேன். நல்ல காலம், அவர் சொல்லியிருக்கிறார்.

ஆகவே, நாலைந்து மொழிகள் இப்பொழுது ஆட்சி மொழியாகட்டும், பிறகு ஒன்பதாக ஆகட்டும், அவசரம் அவசரமாகக்கூட அல்ல; கொஞ்சம் கொஞ்சமாகவே ஆகட்டும். படிப்படியாக ஆகட்டும், கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களும், சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தில், தமிழைப் பாட மொழியாக ஆக்கவேண்டும் என்பதை முன்னுரையிலே சேர்க்க வேண்டும் என்றுதானே சொன்னார். ஒரேயடியாக நாளைக்கே ஆகவேண்டும் என்றா நாங்கள் சொல்வோம்? படிப்படியாக முயற்சிகள் செய்தாக வேண்டும் என்றுதான், "14 மொழிகளும் ஆகட்டும், அது வரையில் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்கட்டும்" என்று சொன்னோம். ஐந்தோடு நிறுத்தினால் அதைப்பற்றிக் கூட யோசிக்கலாம். அது நல்ல முடிவு கூட, ஆகவே, அந்த நிலையிலேயே முதல் அமைச்சர் அவர்கள் நிலையாக நின்று, மறுபடியும் நிலையாக இருக்கக்கூடிய அளவுக்கு அவர் இந்தக் காரியத்திலே ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, இந்தக் கவர்னர் உரையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், நேரு அவர்கள் ஒரு சமயத்தில் குறிப்பிட்ட வாசகத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். "இந்தியாவைப் போல குறிக்கோள் மிக்க நாடு உலகத்திலே எந்த நாடும் இல்லை" என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, அடுத்த வரியிலே, "இந்தியாவைப் போல குறிக்கோளுக்கும் செயல்முறைக்கும் இடையிலே பெரிய அகலம் உள்ள நாடும் உலகத்திலேயே வேறு எதுவும் கிடையாது" என்று சொன்னார். அந்த அடிப்படையிலே தான் கவர்னர் பெருமான் உரையும் அமைந்திருக்கிறது என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

உரை : 6 **நாள் : 25.02.1969**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதம் முடிவுற்று பதில் அளிக்க வேண்டிய கட்டத்தில் நான் நின்று கொண்டிருக்கிறேன். நான் இந்தப் பொறுப்புக்குப் புதியவன் என்ற அளவில் - எனக்கு ஏற்கனவே ஒரு கெட்டபெயர் உண்டு, கொஞ்சம் ஆத்திரக்காரன் கோபப்படக்கூடியவன் என்றெல்லாம்; இந்த நிலையில் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோமே எப்படி இதைச் சமாளிப்பது என்று நான் எண்ணியபோது எனக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கருணையான முகந்தான் அப்போது தோன்றியது. அவர்கள் முதலில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்த அமைச்சரவையை வரவேற்று இனிய மொழிகளாலும், கனிவான வார்த்தைகளாலும் எங்களுக்குச் சொல்ல வேண்டிய அறிவுரைகளை எல்லாம் இந்த முதல் சந்தர்ப்பத்தில் சொல்வார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், இனிமேல் நான் எவ்வளவு கோபித்துக் கொண்டாலும், எவ்வளவு ஆத்திரப்பட்டாலும் பரவாயில்லை என்ற அளவிற்கு அவர் இன்றைய தினம் கனல் பிழம்பாகக் காட்சியளித்திருக்கிறார்கள். நான் அவர்களிடத்தில் எதிர்பார்த்ததெல்லாம் இனிய நல்லுரைகள். இந்த அமைச்சரவை எப்படித் தங்கள் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான கருத்துரைகள், அறிவுரைகள் இவைகளைத்தான் நான் எதிர்பார்த்தேன். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்றுமில்லாத அளவிற்கு இன்று மிகுந்த கோபத்துடன் பேசியதை. ஒருவேளை நான் ஊகிக்கிறேன், அப்படிப் பேசினால் இவனும் துள்ளி விழுவான் பதிலுக்கு, அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கருதி அந்தத் தந்திரத்தைக் கையாண்டார்களோ என்னவோ

எனக்குப் புரிய வில்லை. ஆனால் அண்ணாவின் தம்பியாகிய நான் அவ்வளவு சுலபத்தில் அவருடைய வலையில் சிக்கிவிடமாட்டேன் என்பதை மட்டும் (ஆரவாரம்) இங்கு, மிகுந்த திடத்தோடு, தெம்போடு, ஆனால் உறுதியாக, தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரைமீது பேசுகிற நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், ஏனைய தோழமைக் கட்சித் தலைவர்களும், இம் மாமன்றத்தின் உறுப்பினர்களும் எடுத்துக் கூறியது நாம் இழக்கக்கூடாத ஒன்றை இழந்துவிட்டு இந்த மன்றத்தில் அமர்ந்திருக்கிறோம் என்ற சோகச் செய்தியாகும். தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்தவரும், தரணிவாழ் தமிழ் மக்களின் உள்ளங்களிலெல்லாம் சிம்மாசனம் போட்டு சக்கரவர்த்தியாக அமர்ந்திருந்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் திடீரென்று மறைந்து விட்டார்கள். அவர்கள் உடல் நலிவுற்று இருந்த நேரத்தில் அவர்கள் உடல் நலம் பெறவேண்டும் என்று சொல்லி தொடங்கியது ஆளுநர் அவர்களுடைய உரை. ஆனால் அந்த உரையின் மீதான விவாதம் முடிகிற நேரத்தில் அண்ணா அவர்கள் இல்லை. அண்ணா அவர்களை எப்படியும் காப்பாற்றிவிடவேண்டும் என்பதற்காக எடுத்த முயற்சிகள் எல்லாம் பயனற்றுப் போயின. இந்நிலையில் அண்ணா அவர்களின் மறைவையொட்டி சிலவற்றைச் சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அண்ணா அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அமெரிக்காவிலிருந்து வந்த மருத்துவ நிபுணர்களும் நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள, குறிப்பாக சென்னையைச் சேர்ந்த மருத்துவர்களும் எடுத்துக்கொண்ட சிரமங்கள் சாதாரணமானவை அல்ல. ஆனால், அந்த சிரமங்களுக்கேற்ற வெற்றி கிடைக்கவில்லை என்றாலும், அவர்கள் அல்லும், பகலும் அண்ணா அவர்களைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டார்கள். ஊண் உறக்கமின்றி அண்ணா அவர்களின் அருகாமையிலிருந்து எல்லாச் சிகிக்சைகளையும் செய்தார்கள், சொல்லப் போனால், உலகத்திலேயே எந்தத் தலைவனுக்கும் நடைபெறமுடியாத அளவிற்கு அக்கறையோடு சிகிச்சையும் டாக்டர்களின் கவனிப்பும் பேரறிஞர் அண்ணா அவர்களின் உடல் நலம் பெற வேண்டுமென்பதில் இருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அந்தளவிற்கு தங்கள் உழைப்பை நல்கி, தங்களுடைய பாசத்தைக் காட்டி, கடமையுணர்வைக் காட்டிய மருத்துவர்கள் அத்தனை பேர்களுக்கும் இந்த அரசின் சார்பில் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே தமிழ் நாட்டின் ஆளுநராகிய மேன்மை தாங்கிய சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களும், அவர்களுடைய துணைவியாரும் அண்ணா அவர்களை தங்கள் குடும்பச் சொந்தக்காரர் போலவே கருதி, சொல்லப்போனால் அறிஞர் அண்ணா அவர்கள் என் சகோதரர் என்றே அவர்கள் வாஞ்சையோடு அழைத்தார்கள். அந்த அளவிற்கு நேச உணர்வோடு, அண்ணா அவர்கள், அடையாறு மருத்துவ மனையில், இருந்த நேரத்தில் இரவு பகல் பாராது ஓடோடி வந்து, அண்ணா அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்று பிரார்த்தித்து அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக இந்த அரசின் சார்பில் ஆளுநர் அவர்களுக்கும், அவரது துணைவியார் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் மறைவெய்தியபோது அண்மை மாநிலங்களிலுள்ள அமைச்சர்கள் எல்லாம் வருகை தந்தார்கள். வந்து, தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்கள். இந்தியாவின் உள்துறை அமைச்சராகிய மாண்புமிகு திரு. சவான் அவர்கள் சென்னைக்கு வந்து, அண்ணா அவர்களுக்கு மரியாதை தெரிவித்து சவ ஊர்வலத்திலும் கலந்து கொண்டு அடக்கம் செய்யப்படுகிற வரையில் உடன் இருந்து தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தமிழக மக்களுக்கும் இந்த அரசுக்கும் தெரிவித்துக் கொண்டதற்காக மாண்புமிகு திரு. சவான் அவர்களுக்கும் இந்த அரசின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இங்கு ஷெரீஃப் அவர்களால் நடத்தப்பட்ட அனுதாபக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆறுதல் உரை வழங்கியும், அண்ணா அவர்கள் கட்டிக் காத்த மாநில அரசு மத்தியப் பேரரசு நல்லுறவு மேலும், மேலும் செழிப்படைகிற அளவிற்கு தமிழகத்தினுடைய புதிய அரசு நடந்து கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறியும், அண்ணா அவர்களின் இல்லம் சென்று அண்ணியார் அவர்களையும், அண்ணாவின் செல்வங்களையும் தேற்றியும் தமிழகம் வந்து

திரும்பிய இந்திய துணைக் கண்டத்து பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. காமராஜர் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், வெளியிலே இருக்கின்ற தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்கள் உடல்நலம் பெறவேண்டுமென்று வாழ்த்தியும், அது பயனற்றுப்போன நிலையில் பெரும் ஆறுதல் கூறியும் அவர்கள் அண்ணா அவர்களிடத்திலே கொண்டிருந்த அன்பினை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டமைக்காகத் தமிழக அரசின் சார்பில் அவர்களுக்கு என்னுடைய இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழகத்திலே மாத்திரம் அல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலும், வெளிநாடுகளிலும் நடைபெறுகின்ற ஏடுகளில் இரங்கல் தெரிவித்து தமிழ்நாட்டு மக்களுக்கும், அண்ணா அவர்கள் குடும்பத்திற்கும் எழுதிய இதழாளர்களுக்கும், ஏடு நடத்தியவர்கள் அத்தனை பேர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற சில சம்பவங்களை குறித்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களிடமிருந்து அதை எதிர்பார்க்கவில்லை. மிகுந்த வேதனையோடுதான் நான் அதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். குறுக்கிடக்கூட எழ முடியாத அளவுக்கு நான் உள்ளம் களைத்துப் போனேன். ஏனென்றால், மிகுந்த பெருந்தன்மை வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் இப்படிப்பட்ட சொற்களைக் கூறுவார் என்று நான் கிஞ்சிற்றும் எதிர்பார்க்கவில்லை. அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அவரை மெரினா கடற்கரையில் அடக்கம் செய்யவேண்டுமென்ற முடிவினை அண்ணா அவர்களின் வீட்டாரைக் கலந்துகொண்டு நாங்கள் எடுத்தோம். அவர்கள் அடக்கம் செய்யப்படப் போகிறார்கள் என்ற செய்தியை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்

தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடத்திலேயும் அண்ணா அவர்களின் இல்லத்திலேயே கூறினேன். என்னுடைய நண்பர் திரு. ஈ. வி. கே. சம்பத் அவர்களிடத்திலேயும் புதைக்கப் படுவதைப்பற்றிச் சொன்னேன். அதற்கு அவர், அது புதைக்கப் படும் இடமாக மாத்திரம் இருக்கக் கூடாது, அங்கு அண்ணா அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். ஒருவேளை, விட்டகுறை தொட்டகுறை என்பதுபோல இரத்தப் பாசத்தினால் அப்படிச் சொல்லி யிருக்கக்கூடும். அந்த அளவிற்கு மற்றக் கட்சித் தலைவர் களிடையே இதைப்பற்றி நானும், ஏனைய அமைச்சர்களும், முன்னாள் அமைச்சர் நாவலர் நெடுஞ் செழியன் அவர்களும் எடுத்துக்கூறியிருக்கிறோம். மெரினா கடற்கரையிலே அண்ணா அவர்களுடைய உடல் அடக்கம் செய்யப்பட்டிருப்பது ஏதோ பொதுமக்களால் ஆட்சேபிக்கப் படுகிறது என்ற முறையில் கூறுகிறார்கள். நேற்றைய தினம் பேசிய எதிர்க்கட்சியின் கொறடா திரு. வினாயகம் அவர்கள் கூட எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து கொள்ளாமல் அண்ணா உடலைப் புதைக்கலாமா என்று கேட்டார்கள். அது புனிதமாக இருக்க வேண்டிய இடம், அங்கே போய் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யலாமா என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இப்பொழுது கேட்டார்கள். நாமெல்லாம் பார்க்கிறோம்; நாட்டு மக்கள் அன்றாடம் அங்கு வந்து கொண்டிருக்கிறார்கள், கறுங்கொடி ஏந்திய கையோடு, அண்ணா அவர்களின் திரு ஓவியத்தைப் பிடித்தவர்களாய் மலர் வளையங்கள் எடுத்தவர்களாய் அணி, அணியாக, சாரி, சாரியாக மெரினா கடற்கரைக்கு வந்து, பல்கலைக்கழக மண்டபத்திற்கு எதிரே அடக்கம் செய்யப்பட்டிருக்கின்ற அண்ணா அவர்களுடைய கல்லறையில் தங்களுடைய வணக்கங்களைத் தெரிவித்து விட்டுப் போகிறார்கள். தாங்கள் பெற வேண்டிய உணர்வுகளைப் பெற்றுத் திரும்புகிறார்கள். இது எப்படிப் பெரிய குற்றமாகும்? எப்படிப் பொதுமக்கள் ஆட்சேபிக்கிறார்கள்? யார் அந்தப் பொதுமக்கள்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர் கள் எந்த ஆகாயத்திலேயிருந்து குதித்தார்கள் என்றுதான் நான் அந்தப் பொதுமக்களைத் தேடித்தேடிப் பார்க்கிறேன். எனக்குத் தெரியவில்லை. உத்தமர் காந்தியார் மறைந்தபொழுது அவருடைய அஸ்தியை எடுத்துத் தமிழ்நாட்டு ஆறுகளி லெல்லாம் கரைத்தார்கள். அப்படிக் கரைத்த நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொண்டுதான் காங்கிரஸ்காரர்கள்

கரைத்தார்களா? அப்பொழுது இப்படிப்பட்ட ஆட்சேபனை எழுப்பப்பட்டதுண்டா? காரணம், அப்பொழுதிருந்த எதிர்க்கட்சி பண்பு மிகுந்ததாக, அரசியல் நாகரிகம் கொண்டதாக இருந்த காரணத்தினால் அந்தப் பிரச்சினையை யாரும் கிளப்பவில்லை. கன்னியாகுமரியில் கட்டப்பட்டிருக்கும் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டிருப்பது காந்தியாருடைய அஸ்திதான். அதை அங்கே புதைத்துத்தான் காந்தியாருடைய நினைவு மண்டபத்தை எழுப்பியிருக்கிறார்கள் என்பதையும் நாம் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

இப்படிப்பட்ட சில காரணங்களால்தான், இப்படிப்பட்ட பேச்சுக்கள் சில வரும் என்ற காரணத்தினால்தான் நேற்று முன் தினம் அண்ணியார் அவர்களுக்கு மானியம் தர வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியபோதுகூட நான் சர்வ ஜாக்கிரதையாகப் பதில் சொன்னேன். அண்ணியார் அவர்கள் ஆட்சேபிக்கவில்லை என்று சொன்னால் அதற்குத் தயாராக இருக்கிறேன் என்று. அண்ணா அவர்களுடைய திருவுருவப் படத்தை இங்கு வைக்க எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சேபிக்கவில்லையே தவிர, ஆனால் அவர்களுடைய பேச்சிலேயிருந்து வெளியான ஒவ்வொரு வார்த்தையும் அதை அவர் விரும்பவில்லை என்றுதான் தெரிவித்தது. அப்படியானால் எல்லா முதலமைச்சருடைய படங்களையும் இங்கே மாட்டலாமா என்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் முதலமைச்சராக இல்லாமலேயே தமிழ்நாட்டு மக்களின் கோடானு கோடி இதயங்களைக் கொள்ளை கொண்ட சக்ரவர்த்தி அண்ணா அவர்கள். (ஆரவாரம்) சட்டப்படியே பேசினாலும் கூட அண்ணா அவர்கள் முதலமைச்சராகவே இருந்து மறைந்து விட்டவர்கள். முதலமைச்சராகயிருந்த இராஜாஜி அவர்களுடைய படம் இங்கே மாட்டப் பட்டிருக்கிறது. முதலமைச்சராகவேயிருந்து, இரண்டாண்டுக் காலம் இந்த மாமன்றத்திலே, கருத்திருமன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அளவளாவி, அன்பொழுகப் பேசி கன்னித்தமிழிலே கனியதிரும் வார்த்தைகளால் இந்த மாமன்றத்திலேயுள்ளவர்களின் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தை இந்த மாமன்றத்திலே வைப்பதற்கு நண்பர்கள் விரும்பிய நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவர்களும் அதை இம்மியளவும் மறுக்க

மாட்டார்கள் என்று கருதியே அந்தப் படம் இங்கே வைக்கப் படும் என்று அன்று இந்தக் கருத்தினை வெளியிட்டேன். ஆனால் அவர் இன்று பேசிய பேச்சிலேயிருந்து, எல்லா முதலமைச்சர்களுடைய படமும் வைக்கப்படப் போகிறதா என்று கேட்டதிலிருந்து அவருடைய எண்ணம் தெரிந்தது. வெளியிலே இருப்பவர்கள் அவரைக் கேட்பார்கள். கருணாநிதி சொல்லும்பொழுது நீங்கள் சும்மா உட்கார்ந்திருந்தீர்களா என்று அவரைக் கேட்பார்கள். அவருக்குள்ள சங்கடம் எனக்குத் தெரிகிறது. அதனால்தான் இதையாவது சொல்லி வைத்துவிட்டு வெளியிலே போய் 'பார், பார், என்னுடைய வெறுப்பைச் சொல்லிவிட்டேன் போதுமா? உங்கள் ஆசை தீர்ந்ததா?' என்று கூறிச் சமாதானம் அடைவார்கள். அதற்காகத்தான் அவ்வாறு கூறியிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். நேற்றைய தினம் அண்ணியார் அவர்களைச் சந்தித்துக் கேட்டேன். தங்களுக்கு மானியம் தர வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது, அதை ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? என்று. அதற்கு அவர்கள் "நான்கூட முதலிலே அதற்குச் சம்மதிக்கலாமா என்றுதான் இருந்தேனடா தம்பி, ஆனால் அண்ணா அவர்களின் உடலை மெரினாவில் புதைத்ததைப் பற்றி வினாயகம் பேசியதைப் பார்த்த பிறகு அது வேண்டாமென்று கருதிவிட்டேன். மானியத்தைப் பெற்றுக் கொள்வதைப்பற்றி இப்பொழுது அவர்கள் பேசாவிட்டாலும் அடுத்த ஆண்டு பேசுவார்கள். இங்கே இருப்பவர்கள் பேசா விட்டாலும் அவர்களில் வேறுசில பேர் பேசுவார்கள். ஆகவே அந்த மானியத் தொகை எனக்குத் தேவையில்லை" என்று குறிப்பிட்டு விட்டார்கள். ஆகவே, அண்ணாவின் குடும்பத்தைச் சேர்ந்த நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவின் குடும்பம் என்ற முறையிலும், தோழமைக் குடும்பத்தைச் சேர்ந்த கட்சி என்ற வகையிலும் நாங்களே அண்ணியார் அவர்களுக்குத் தேவையான அந்த உதவியைத் தருவது என்கின்ற முடிவுக்கு நேற்று வந்துவிட்டோம், (ஆரவாரம்) வினாயகம் அவர்கள் பேசியதற்குப் பிறகு.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள், நாகர்கோயில் தேர்தலில் தாங்கள் பெற்ற வெற்றி அபரிமிதமான வெற்றி, அதனால் வட புலத்திலே சூடு பிடித்திருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். வடபுலம் வரையில் அது சூடு

பிடிக்கும் அதே நேரத்திலேதான், அந்தச் சூடு அங்கே பரவுகிற அதே நேரத்திலேதான் மேற்கு வங்காளத்திலே சவுத்துப் போய் விட்டது. இந்தச் சூடு அங்கே பரவும் அதே நேரத்திலேதான் பீகார் பிசுபிசுத்துப் போய் விட்டது. இந்தச் சூடு அங்கே பரவும் அதே நேரத்திலேதான் உத்திரப்பிரதேசம் இங்கா, அங்கா, இப்படியா, அப்படியா என்று ஊசலாடிக்கொண்டிருக்கிறது. பஞ்சாப் பயங்கரத் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறது. நாகர்கோயில் இடைத்தேர்தலில் பெற்ற வெற்றி, ஒரு பாராளு மன்றத் தேர்தல் வெற்றி, அதிலும் எல்லா இடங்களும் அவர்களுக்கே என்று இருந்த இடங்கள் - நாகர்கோயில் நகரத்தைத் தவிர - அந்த இடத்திலே அவர்களுக்குரிய இடமாக இருந்ததைப் பெற்றுக்கொண்டு 'கைவிரலை காட்டி பார், பார், நான் பிடித்துக் கொண்டேன். பிடித்துக் கொண்டேன்' என்று குறிப்பிடுவதைப் போல 'நாகர்கோயிலில் நாங்கள் வெற்றி பெற்று விட்டோம். வடக்கே சூடு பிடித்திருக்கிறது' என்று சொல்கிறார்கள். வடக்கே சூடு பிடித்திருக்கிறதோ இல்லையோ, நாகர்கோயில் வெற்றியினால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சிலே சூடு பிடித்திருக்கிறது என்பதை நான் இங்கே கண்டேன்.

இங்கு பேசிய உறுப்பினர்களும், எதிர்க்கட்சியிலே உள்ள மற்ற உறுப்பினர்களும் மிகக் குறிப்பாக எடுத்துச் சொன்ன விஷயங்கள், வறட்சிப் பகுதிகளின் நிலை, தொழில் நிலை, வேலை வாய்ப்பின்மை, கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களின் நிலை, வெண்மணி சம்பவம், நாகர்கோயில் தேர்தல் ஆகிய இந்தத் தலைப்புகளிலே தங்கள் கருத்துக்களை எடுத்து வெளி யிட்டார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கவர்னர் உரையில் எள்ளளவும் நுழையவில்லை. அவர் நுழைந்திருந்தால் சில பாராட்டுக்களை கொடுத்திருப்பார். நான் எப்படி நன்றி தெரிவிக்க முடியும் என்று கேட்டார். அவர் தெரிவிக்கவில்லை யென்றாலும் பரவாயில்லை என்றுதான் நான் ஆரம்பத்திலேயே எனது நன்றிகளைத் தெரிவித்தேன். நன்றி தெரிவிப்பதற்கு எதுவுமே இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே சொன்னார்கள்.

உணவைப் பொறுத்தவரையில் நாம் இன்றையதினம் ஒரு நெருக்கடியான நிலைமையை சமாளித்துத் தீர வேண்டிய, ஆனால்

ஏக்கம் கலந்த ஒரு எதிர்காலத்தை சிந்திக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம் என்பதை மறந்து விடுவதற்கில்லை. 1968-ல் 7.5 இலட்சம் டன் அளவு அரிசி கொள்முதல் செய்தோம். ஆனால், வரும் சம்பா காலத்தில், 1-1-1969-லிருந்து 31-5-1969 வரை, மே திங்கள் வரையில் 4 இலட்சத்து 75 ஆயிரம் டன் கொள்முதல் செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் வறட்சி மிகுமேயானால் அது எந்த அளவுக்கு கிடைக்கும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கத் தவறக் கூடாது. மொத்த விளைவில் ஐந்திலே ஒரு பங்கை நாம் கொள்முதல் செய்து கொண்டு வருகிறோம் என்பதும் இந்த கொள்முதலுக்கு நாம் வருவாய்த் துறையையும் உணவு இலாகாவையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும், இந்த கொள்முதலில் சரிவர நடந்து கொள்ளாமல் இருப்பவர்களிடத்திலே தான் காவல் துறையினர் சென்றிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதையும் கொள்முதல் பற்றி பல விமர்சனங்கள் செய்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மூன்றில் ஒரு பங்கு மக்களை உணவு வழங்கு திட்டத்தின் கீழே பயன் அடையச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். சென்னையிலும் கோவையிலும், சென்னையை, கோவையை சுற்றியிருக்கிற சுற்றுப்புறப் பகுதிகளிலேயும் 45 இலட்சம் மக்களுக்கு படியரிசி திட்டத்தின் மூலம் பலன் கிடைத்திருக்கிறது. 130 இலட்சம் மக்களுக்குக் குடும்பக் கார்டு முறையினால் பயன் அடையத் தக்க காரியங்கள் இந்த அரசின் மூலம் செய்யப்பட்டு வருகிறது. அப்படி இருக்கிற இந்த நிலைமையிலே உபரி மாவட்டமாக இருந்து மற்ற மாவட்டங்களுக்கு உணவு தானியங்களை வழங்குகிற அளவுக்கு இருந்த வட ஆற்காடு மாவட்டமும், செங்கற்பட்டு மாவட்டமும் பருவ மழையின்மை காரணமாக பாதிக்கப்பட்டதால் நமது தேவையை நிறைவு செய்ய நாம் இயலாதவர்களாகவும் மத்திய அரசிடத்திலேயிருந்து ஒரு இலட்சம் டன் அரிசி எங்களுக்குத் தேவை என்று கேட்க வேண்டிய சூழ்நிலையிலே உள்ளவர் களாகவும் இன்றையதினம் இருக்கிறோம்.

கேரளத்திற்கும், மகாராஷ்டிரத்திற்கும், மேற்கு வங்காளத்திற்கும் ஆகிய இந்த மூன்று மாநிலங்களுக்கும் அரிசி

வழங்க வேண்டிய பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால் நம்முடைய கோரிக்கை பற்றி அவர்கள் தொடக்கத்திலே மறுப்புரைத்தாலும் நாம் விடாப்பிடியாக இருந்து தீர வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அது மாத்திரம் அல்ல, நம்முடைய மாநிலத்திலே நெருக்கடி இருந்த நேரத்திலே கூட அகில இந்திய ரீதியிலே நாம் மத்திய அரசினுடைய வேண்டுகோளுக்கு இணங்கி கேரளாவுக்கு அரிசி அனுப்பி வைத்திருக்கின்றோம். இவைகளையெல்லாம் எடுத்துக் கூறி இந்த நிலைமையை சமாளிப்பதற்கு மத்திய அரசிடமிருந்து நாம் ஒரு இலட்சம் டன் அரிசியை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறோம். இதற்கிடையே ஆந்திராவிலிருந்து மைலோவும் மத்திய பிரதேசத்திலிருந்து சோளமும் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. செங்கோதுமையைத்தான் வட ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற பகுதிகளிலேயுள்ள மக்கள் பெரிதும் விரும்புகிற காரணத்தால் அவைகளை வரவழைப்பதற்கான ஏற்பாடுகளுக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வறட்சி நிலையில் கொள்முதலைத் தீவிரப்படுத்தவும் அப்படி தீவிரப் படுத்துவதற்கு நிலச்சுவான்தார்கள், விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் இந்த அரசு அவர்களையெல்லாம் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்ளுகிறது. ஏனென்றால் இது இலட்சோப இலட்சம் மக்களுடைய வயிற்றுப் பிரச்சினையாகும். இந்த வயிற்றுப் பிரச்சினையில் நிலக் கிழார்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் சட்டம், நீதி இவைகளையெல்லாம் பேசிக் கொண்டு நாங்கள் வழக்கு மன்றம் செல்லுகிறோம் என்கின்ற அளவுக்குச் செல்வார்களானால் இலட்சோப இலட்சம் மக்களுடைய வயிற்றுப் பிரச்சினைக்கு விரோதமான, காலந்தாழ்த்தும் செயலிலே அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று பொருள் ஆகிவிடும். ஆகவே, தான் நான் இந்த மாமன்றத்தின் சார்பாக, கொள்முதலுக்கு மிகுந்த துணை புரிகின்ற அளவுக்கு நிலக்கிழார்கள் துணிந்து முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசிகளைப் பற்றியெல்லாம் பேசப்பட்டது. விலைவாசிகள் எல்லாம் அதிகமாக ஏறி விட்டன என்றெல்லாம் கூறப்பட்டது. 1968-ம் ஆண்டு முதல் வெளிச் சந்தையிலே புழுங்கல் அரிசியினுடைய விலை இறங்கு முகமாகவே இருந்து

வருகிறது. ஆகஸ்டுக்குப் பிறகு சற்று விலை ஏறி இருப்பது உண்மை. சம்பா அறுவடைக்குப் பிறகு இந்த விலையிலே கணிசமான இறக்கம் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் வறட்சி நிலைமை மிகுமேயானால் நாம் அதைக் கூட எண்ணிப் பார்க்க முடியாத நிலையிலே அல்லலுற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே தான், நெருக்கடியான நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு சில காரியங்களை ஆற்ற வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். வேறு உணவு தானியங்க ளுடைய விலையைப் பொறுத்து பயறு விலை 1967-ம் ஆண்டு இருந்ததைவிட 1968-ல் 40 சதவிகிதம் குறைந்திருக்கிறது. கடலை விலை 1967-ம் ஆண்டு இருந்ததைவிட 1968-ல் 60 சதவிகிதம் குறைந்திருக்கிறது. பச்சைப் பயறு 1967 ஜூலையில் குவிண்டால் ரூ. 195. இப்பொழுது ரூ. 133 என்கின்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. உளுந்து 1967 ஆகஸ்டிலே ரூ. 244 என்றால் இப்பொழுது ரூ. 133 என்கின்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. கடலை எண்ணெய் 1968 செப்டம்பரிலே ரூ. 378 என்றால் டிசம்பரில் ரூ. 300 ஆகக் குறைந்திருக்கிறது. நல்லெண்ணெய் 1968 பிப்ரவரியிலே ரூ. 470 என்றால் டிசம்பரில் ரூ. 350 ஆகக் குறைந்திருக்கிறது. கம்பு 1967-ல் 70 முதல் 85 வரை விற்றது. 1968-ல் 60 முதல் 75 வரை குறைந்துள்ளது. சிறு தானியங்க ளுடைய விலையைப் பொறுத்தவரையில் ஆந்திரா, மைசூர் போன்ற மாநிலங்களைவிட விலைகள் குறைவான அளவுக்குத் தான் இருக்கின்றன.

வறட்சிப் பகுதிகளைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். ஒருசில மாவட்டங்களைத் தவிர வேறு எல்லா மாவட்டங்களிலும் இந்த நிலைமை இருக்கிறது என்பதை நான் மறுப்பதற்கில்லை. அதற்காகத் தான் கடந்த 17-ம் நாளன்று நானும் ஏனைய, தொடர்புடைய அமைச்சர்களும், மாவட்டங் களுடைய ஆட்சித் தலைவர்களும் அதிகாரிகளும் கலந்து சில முடிவுகளை எடுத்திருக்கின்றோம். அந்த முடிவுக்கு ஏற்ப செங்கற்பட்டு மாவட்டத்தில் இரண்டு பருவ மழைப் பொய்த்ததன் காரணமாக மானவாரி இறைவைகள் வறண்டு போயிருப்பதால் அவற்றையே நம்பி அங்கு பயிர் செய்யப்பட்டிருப்பதால், அந்த

மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது என்பதை உணர்ந்து, மொத்தத்தில் புஞ்சைப் பயிர்கள், பாசன நெற் பயிர்கள் உட்பட மிகவும் மோசமாக விளைந்துள்ளன. ஆகவே, சிறிய, பெரிய பாசன வாயில்களுக்குப் பழுது பார்த்தல், குடி மராமத்து வேலைகள், குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துதல், சாலை வேலைகள், தக்காவிக் கடன் வழங்குதல் ஆகியவற்றிற்காக ரூ. 35.5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்திற்கு அத்தகைய காரியங்களுக்காக ரூ. 35.5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர் மாவட்டம் மிகக் கடுமையான வறண்ட பிரதேசம். அங்கு வாய்க்கால்கள் வறண்டுள்ளதால் தாராபுரம், பல்லடம், அவினாசி வட்டங்கள் மிகக் கடும் பஞ்சம் ஏற்படுமோ என்று அஞ்சுகிற வகையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு குடியானவர்கள் கால்நடை தீவனம் வாங்குவதற்காக அவர்களுக்கு அரசு ரூ. 10 இலட்சம் கடன் ஒப்பளிக்க வேண்டி வந்தது. மக்களை குடி நீர் பஞ்சத்திலிருந்து காப்பாற்றுவதற்காக குடி நீர் கிணறுகளை ஆழப் படுத்துவதற்காக ரூ. 8 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இயல்பிலேயே வறண்ட மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தின் காய்ந்து போன பகுதிகள் சொற்ப மழை காரணமாக மேலும் பாதிக்கப் பட்டுள்ளன. ஆகவே, அந்த மாவட்டத்தில் துயர் தணிப்பு வேலைகளுக்காக ரூ. 40 இலட்சம் செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய வட்டங்களில் துயர் தணிப்பு வேலைகளை உடனடியாக துவக்கும் பொருட்டு, ரூ. 10 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அங்கே சிறு பாசன வேலைகள், குடிநீர் கிணறுகளை ஆழப் படுத்துதல் போன்ற செப்பனிடு பணிகளைச் செய்ய துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு கொடுப்பதன் பொருட்டு, சாலை வேலைகளை மேற் கொள்ள அரசு ரூ. 10 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலே ராதாபுரத்திற்கு ரூ. 8.5 லட்சம் துயர் தணிப்பு வேலைகளுக்காக ஒப்பளிப்பு

வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, ரூ. 157 இலட்சம் இந்த வறட்சிப் பகுதிகளிலே நிவாரணம் அளிப்பதற்கு, ஆழ் கிணறுகளை தோண்டுதல், இருக்கிற கிணறுகளை ஆழப்படுத்துதல், குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வேலைகளிலே ஈடுபடுதல், சாலை வசதிகளைச் செய்தல், பாசன வசதிகளைப் பெருக்குதல், அந்த வேலைகளிலே பாதிக்கப் பட்டவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் வாங்கும் சக்திக்கான பணம் அவர்கள் கைக்கு வரும் நிலையைச் செய்தல், அதே நேரத்தில் அங்கு ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைச் சீர்படுத்து வதற்கான திட்டங்களை நிறைவேற்றுதல் ஆகிய இந்த நிலையிலேதான் 17-ம் தேதி மாநாட்டிலே முடிவுகள் எடுக்கப்பட்டன.

நான் இந்த நேரத்தில் இந்த அரசின் சார்பாக, இந்த அமைச்சர் அவையின் சார்பாக, உங்களுடைய ஒத்துழைப்போடு, ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பருவ மழை தவறினாலும், பருவ மழை பொய்த்தே விட்டாலும் கூட, உணவு உற்பத்திக்குப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற அளவுக்கு பாசனத் திட்டங்கள், குழாய் கிணறுகள், ஆழக்கிணறுகள் இவைகளைத் தோண்டுவதிலும், அதைப்போலவே இன்னும் மூன்று ஆண்டு காலத்திற்குள்ளாக தமிழ் நாட்டிலே எந்த இடத்திலும் கூட குடி தண்ணீர்ப் பிரச்சினை இல்லை என்கின்ற அளவுக்கு ஆக்குகின்ற அளவுக்கு இந்த அரசு அதை முதல்நிலைப்படுத்தி எல்லா வகையான காரியங்களையும் செய்யும் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். (ஆரவாரம்).

தொழில் வளம் பற்றிப் பேசினார்கள். அதைப்பற்றி சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. ஆதிமூலம் அவர்களும் குறிப் பிட்டார்கள். மற்ற கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவராகிய நண்பர் திரு. கருத்திருமன் அவர்களும் சொன்னார்கள். 'என்ன இருக்கிறது? நாங்கள் செய்ததுதானே, நாங்கள் செய்ததுதானே' என்று சொன்னார்கள். அவர்கள் செய்கின்ற தவறைச் சொல்லும்போது மாத்திரம் "நாங்கள் செய்ததைச் சொல்லாதே, நன்மைகளைச் 'சொல், சொல்' என்று கேட்பார். எல்லாம் அவர்கள் செய்தது தான். இன்னும் கொஞ்ச நாள் போனதும் 'நீங்கள் உட்கார்ந்திருக்கின்ற இடம் கூட நாங்கள் செய்ததுதானே, நீங்கள் உட்கார்ந்திருக்கின்ற

நாற்காலிகூட நாங்கள் செய்து போட்டதுதானே' என்று கூட கேட்டாலும் கேட்பார்கள். அவர்கள் செய்ததாகச் சொன்ன பட்டியலில் சிலவற்றை விட்டுவிட்டார்கள். 'எல்லாம் செய்தீர்கள், தமிழ் நாடு என்ற பெயர் வைத்துவிட்டீர்களா என்று கேட்டால் 'நாங்கள் எங்கள் கட்சிக்கே தமிழ் நாடு காங்கிரஸ் என்ற பெயரை வைக்கவில்லையா? என்று கேட்டார். உண்மைதான். பெருமைப்படுகிறேன். கட்சிக்கே தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி என்ற பெயரை வைத்தார்கள். சங்கர லிங்கனார் கேட்டபோது, உங்கள் கட்சிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் என்று பெயர் வைத்த நீங்கள் 'உண்ணாவிரதம் இருந்து செத்துத் தொலைக்காதீர்கள், தமிழ்நாடு என்ற பெயரை வைக்கிறோம்' என்று சொல்லி, அந்தக் கிழவனாருடைய உயிரைக் காப்பாற்றி யிருக்கக் கூடாதா? செய்திருக்கலாமே? நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் பொழுது 'கட்சிக்கே பெயர் வைத்திருக்கிறீர்களே, தமிழ்நாடு என்று பெயர் வைக்கக்கூடாதா? என்று நெடுஞ்செழியன் அவர்களும், நானும், மதியழகன் அவர்களும் அதற்கான தீர்மானம் கொண்டுவந்தபொழுது, நீங்கள் அதை மறுத்தீர்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இதுமாதிரி யாராவது கொள்கைக்கு உயிரை விடுகிறேன் என்று சொன்னால் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா என்று நான் இதிலிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அது கொள்கை யினுடைய நியாயத்தைப் பொறுத்தது. கருத்திருமன் அவர்கள் கிருபானந்தவாரியாருக்காக உயிரை விடுகிறேன் என்று சொன்னால், அதற்காக நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, தமிழ்நாடு என்ற பெயரை வைத்தோம் என்றால், அது மிகச் சாதாரணமான காரியமாகத்தான் தெரியலாம். ஏதோ ஒரு உணர்ச்சிபூர்வமான காரியமாகத்தான் தெரியலாம். ஆனால், தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும் என்பதற்காக இந்த நாட்டிலே 20 ஆண்டுக் காலமாக நடைபெற்ற போராட்ட சரித்திரம் சாதாரணமானது அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, முஸ்லீம் லீக் இன்று இங்கு இருக்கிற அத்தனை கட்சிக்காரர்களும் 20 ஆண்டுக் காலமாகத் தாங்கள் நடத்திய மகாநாடுகளிலே, தாங்கள் நடத்திய போராட்டங்களிலே,

தாங்கள் சிறை புகுந்தது மூலம், இந்த நாட்டிற்கு தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும் என்று கேட்ட காலத்தில் மறுக்கப்பட்டது. அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, இந்த இடத்தில் அமர்ந்த பிறகு, அதைத் தீர்மான வடிவமாக ஆக்கி, மத்தியப் பேரரசு அதை ஒத்துக்கொண்டிருக்கிறது என்பது சாதாரணமான காரியமல்ல. தமிழ் நாடு காங்கிரஸ் என்ற பெயர் வைத்துக் கொண்டிருந்தோம் என்று சொன்னால் மாத்திரம் போதாது. அப்படிப் பெயர் வைத்துக்கொண்டிருந்த நாங்கள் சங்கரலிங்க நாடாரைத் துடிக்கத் துடிக்கச் சாகவும் விட்டோம் என்பதையும் சொல்லியிருக்க வேண்டும். நீங்கள் அதைச் சொல்லாவிட்டாலும், பாக்கியை நாங்கள் சொல்கிறோம். அதற்காகவாவது அதைச் சொல்லாமல் விட்டு விடுங்கள். இதைச் சொன்னால் உடனே கோபித்துத் கொள்ளாதீர்கள். 'நாங்கள் தான் அதைச் செய்தோம், அதைச் செய்தோம்' என்று சொல்கிறீர்கள் நீங்கள் ஒன்றும் புதிதாகச் செய்யவில்லை, நாங்கள் செய்ததைத் தான் நீங்கள் விரிவாக்குகிறீர்கள்' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள், வேண்டாமா? நீங்கள் கட்டிய அணைக் கட்டுகளையெல்லாம் அழிப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டம் என்று சொல்லிவிட்டு வந்தோமா? நீங்கள் கட்டிய பாசனத் திட்டத்தையெல்லாம் பாழாக்குவதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டம் என்று பிரகடனப்படுத்திவிட்டுத் தான் வந்தோமா? அல்லது நீங்கள் எதுவும் செய்யவில்லை என்று நாங்கள் கூறினோமா? 'செய்வதைத் திருந்தச் செய்' என்று சொன்னோம். நீங்கள் செய்தது யாருக்குப் போய் பயன்பட வேண்டுமோ அவர்களுக்குப் பயன்படவில்லை என்று நாங்கள் அல்ல, அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த என்னுடைய மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய, நாகர்கோவில் வெற்றி வீரர் காமராஜர் அவர்கள் திருச்சியில் நடைபெற்ற மகாநாட்டில் சொன்னார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் பார்த்தோம்; திட்டங்களுடைய பலன் ஏழைகளுக்குப் போய்ச் சேரவில்லை. பணக்காரர்கள்தான் மேலும் மேலும் பணக்காரர்களாக ஆகிறார்கள் என்று காமராஜ் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். நாங்களா இப்படிச் சொல்கிறோம், நாங்களா இப்படிக் குற்றம் சாட்டுகிறோம்? இதைக் கொஞ்சம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தொழில் வளம் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் நசித்துப் போய்விட்டது என்று சொன்னார்கள். நீங்கள் உருவாக்கிய தொழிற்சாலைகளையெல்லாம் நாங்கள் என்ன அலங்கோலப்படுத்தி விட்டோமா? இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தொழில் துறையில் பெரிய மந்தம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. தொழில் துறையில் மந்தம் என்றால், அது தமிழ் நாட்டில் மாத்திரம் அல்ல. பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருப்பெறாத காரணத்தினால், வடிவம் எடுக்காத காரணத்தினால், கருக்கொள்ளாமலே இருந்த காரணத்தினால், இந்தியா முழுவதும் தொழில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருந்த நேரத்தில்கூட தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தொழில் வளம் எந்த அளவுக்குப் பெருக்கப்பட்டிருக்கிறது என்றால், கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசுத் துறையின் மூலம் 3 தொழில் திட்டங்கள் ரூ. 90 கோடி 95 லட்சம் முதலீட்டில்; மாநில அரசுத் துறை மூலம் இரண்டு தொழில் திட்டங்கள் ரூ. 11 கோடி 82 லட்சம் முதலீட்டில்; கூட்டுறவுத் துறையில் 5 தொழில் திட்டங்கள் ரூ. 3 கோடி 80 இலட்சம் முதலீட்டில்; தனியார் துறையில் 52 தொழில் திட்டங்கள் ரூ. 50 கோடி 67 லட்சத்தில். இவ்வளவும் அன்றி, மத்திய அரசின் பரிசீலனையிலிருக்கிற தொழில் உரிமங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை, மத்திய அரசுத் துறை ஒன்று - அதனுடைய முதலீடு ரூ. 2.75 இலட்சம்; மாநில அரசுத் துறையில் ஒரு தொழில் திட்டம் - இரசாயனத் தொழிற்சாலைத் திட்டம். அதற்கு முதலீடு ரூ. 40 கோடி. கூட்டுறவுத் துறையில் 3 தொழில் திட்டங்கள் ரூ. 6.60 லட்சத்தில்; தனியார் துறையில் ரூ. 25 கோடி 57 லட்சம் முதலீட்டில் 32 திட்டங்கள்; ஆக ரூ. 74 கோடி 92 லட்சத்தில் உரிமங்களுக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை இருக்கிறது. 1964ம் ஆண்டில் உரிமங்களின் எண்ணிக்கை 2, 1965-ம் ஆண்டில் உரிமங்களின் எண்ணிக்கை 4, 1966-ம் ஆண்டில் 8, 1967-லும் 8, 1968-ல் 2, அந்த அளவுக்கு தொழில் துறையிலே மந்த நிலை ஒன்றும் பயங்கரமான அளவுக்கு ஏற்படவில்லை. பொதுவாக இந்தியா பூராவும் மந்த நிலை இருந்தது. அந்த மந்த நிலை தமிழ் நாட்டின் அளவுக்கும் இருந்தது.

ஆதிமூலம் அவர்கள் "தனியார் முதலாளிகளை, தொழில் அதிபர்களை நீங்கள் வரவிடமாட்டீர்களா?" என்று கேட்டார்கள். நான் தமிழக அரசின் சார்பாகச் சொல்கிறேன், பொதுத் துறையிலே தமிழக அரசுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்றாலும், பொதுத்துறை என்பது பிலாக்காய் என்றால், இன்றைக்கு வருகிற தனியார்துறை என்ற கிளாக்காயை நாங்கள் வெறுப்பவர் அல்ல. தனியார் துறையினர், தொழில் அதிபர்கள், தைரியமாக நம்பிக்கையோடு தமிழ் நாட்டில் தங்களுடைய தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றலாம், அவர்களுக்கு தமிழக அரசின் ஆதரவு பரிபூரணமாக உண்டு என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தொழில் வளம் பெருகினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பகுதியிலே குறைகிறது. அதற்கு தொழில் அதிபர்கள் மாத்திரம் அல்லாமல் - நான் சொல்கிற உதாரணம் சிறியதாக இருந்தாலும் - தொழிற் சங்கங்களை நடத்துகிற யூனியன்களின் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். இதில் ஏற்கனவே பதவியிலே இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கொடுப்பது நல்லதா அல்லது வேலையிலே இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை அளிப்பது நல்லதா என்ற கேள்விக்கு தொழிற்சங்கத் தலைவர்கள் தங்களுடைய மனதைத் தொட்டுப்பார்த்து பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, பஸ் போக்குவரத்தில் கண்டக்டர்களாக இருப்பவர்களெல்லாம் செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக ஆகலாம் என்று இருக்கிறது. அது பதவி உயர்வு. ஆனால் கண்டக்டர்களாக இருப்பவர்கள் பதவி உயர்வு என்ற பெயரால் செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக ஆகாமல் இருந்தாலும் அவர்கள் ஏதோ ஒரு வேலையில் கண்டக்டர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் வெளியிலே இருந்து 100 பேர்களை செக்கிங் இன்ஸ்பெக்டர் களாக எடுக்கின்ற நேரத்தில் 100 பேர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால், யூனியன் தலைவர்கள் வெளியிலிருந்து யாரையும் வேலைக்கு எடுக்கக் கூடாது, ஏற்கனவே வேலையில் இருப்பவர்களுக்கேதான் பதவி உயர்வு கொடுக்கவேண்டும் என்று

கூறுகிறார்கள். செக்கிங் இன்ஸ்பெக்டருக்கான தகுதி, படிப்பு எல்லாம் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்துக் கொண்டு, தகுதிப் பத்திரத்தையும் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க இங்கே முட்டுக்கட்டை இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தில், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க – முழுவதும் இல்லை, ஓரளவிற்கு – நாம் முன்னோடியாகச் செய்வதற்கு முயற்சி செய்கிறோம். இதில் யூனியன் தலைவர்களுடைய ஒத்துழைப்புத் தேவை; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குத் தொழில் அதிபர்களுடைய உற்சாகம் மிகுந்த ஒத்துழைப்புத் தேவை. தொழிலாளர்கள் ஒத்துழைப்புத் தேவை. தொழிலாளர், தொழிலதிபர் இவர்களிடையே சுமுகமான உறவை உண்டாக்க, சட்டம், அமைதி, ஒழுங்கு இவை கெடாத வகையில் பாதுகாத்து நிலைநிறுத்த, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், இந்த சர்க்கார் நிச்சயமாக உறுதிகொள்ளும் என்பதைத்தான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

மூடப்பட்டுள்ள கோவை பஞ்சாலைகள் பற்றியும், அல்லல்படும் 16,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பற்றியும், இங்கே பல முறைகள் பேசப்பட்டிருக்கிறது. காலையிலே கேள்விக்குப் பதில் அளிக்கும்போது கூடச் சொன்னேன். பஞ்சாலைத் தொழிலாளர் தலைவர்கள், மற்றவர்களை அரசு அளவில் அழைத்து, விரைவில் ஒரு மாநாடு கூட்டி பேச இருக்கிறேன். இதற்கு மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு நான் இந்த விஷயத்தில் விரைவில் முடிவு காண வேண்டும் என்று எண்ணியிருப்பதாகக் கூறியிருக்கிறேன். அரசின் சார்பாக இரண்டு நாட்களுக்கு முன் ஒரு அறிக்கையும் வெளி யிட்டிருக்கிறேன். அந்த மாநாடு விரைவில் நடைபெறும். கோவை பஞ்சாலைகள் மூடியிருப்பதன் காரணமாக வாடிக்கொண்டி ருக்கிற 16,000 தொழிலாளர்கள் பிரச்சினை அனுதாபத்தோடு கவனிக்கப்பட வேண்டும். அவர்களுடைய பிரச்சினை அனுதாபத்தோடு கவனிக்கப்பட, மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு வேண்டும். அப்படி மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்பு தரவேண்டுமென்று, காங்கிரஸ் நண்பர்கள், உறு துணையாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் பிரச்சினையில், இன்னும், தொழிலாளர்

தலைவர்கள் ஒத்துழைப்புத் தேவை; மூடப் பட்டிருக்கிற மில்களைச் சேர்ந்த தொழிலாளர்களுடைய வயிறு காயாமல் இருக்க தொழில் அதிபர்கள் ஒரு படி கீழேயிறங்கி வந்து உதவி செய்ய வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

கீழ்வெண்மணி சம்பந்தமாக கருத்துக்கள் பேசப்பட்டன. மிகக் கொடுமையான சம்பவம். உள்ளத்தை உருக்கக்கூடிய சம்பவம். நினைத்து, நினைத்து கண்ணீர் வடிக்கத்தக்க சம்பவம். இது சம்பந்தமாக எதிர்க்கட்சியில் கண்டனத் தீர்மானம் கொடுத் திருப்பதால், மறுபடியும் பேசியதையே பேசுவது அவர்களுக்கும் அறைத்த மாவு, பதில் சொல்லுவதும் அறைத்த மாவை அறைப்பது போல இருக்கும். ஆகவே கண்டனத் தீர்மானம் வரும்போது விளக்கமாகப் பேசலாம் என்று நினைத்து, இப்படிப் பட்ட வன்முறைகள் இனிமேலும் நடைபெறாமல் இருப்பதற்காக நாமெல்லாம் ஒத்துழைப்போமாக என்ற அளவில் நிறுத்திக் கொள்கிறேன்.

இறுதியாக, நாகர்கோவில் தேர்தலைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட நேரத்தில், நாங்கள் தேர்தலில் எப்படி நடந்தோம் என்றார்கள். வேறு எங்கேயெல்லாம் எப்படிப் பட்ட சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதற்குச் சில குறிப்புக்களைப் படிக்க விரும்புகிறேன். இப்பொழுது வடக்கே நடைபெற்ற தேர்தலில் என்னென்ன சம்பவங்கள் நடைபெற்றன என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அறிந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

"உ. பி. இடைக்கால தேர்தல் - போலீஸ் சுட்டு இருவர் காயம்."

மீரட்டு ஜில்லாவிலுள்ள, பர்னாவா அசெம்பிளி தொகுதி யிலுள்ள புஸார் வாக்குச்சாவடிக்கு இரண்டு பர்லாங் தூரத்தில் கட்டுமீறிப்போன ஒரு கூட்டத்தின் மீது போலீசார் இரண்டு ரவுண்டு சுட்டனர். இரண்டு பேர் காயம் அடைந்தனர்.

"28 வோட்டுச் சாவடிகளில் மறுதேர்தல்"
சென் வர்மா தகவல்.

பீகாரில் சில வாக்குச்சாவடிகளிலிருந்து வோட்டுப் பெட்டிகள்...

(திரு. பி. ஜி. கருத்திருமன் : எந்தப் பேப்பர்?) 'நவசக்தி' தான்.

"... பறித்துச் செல்லப்பட்டதாக, மறு வாக்குப்பதிவு உத்தரவிடப்பட்டது."

"வேட்பாளர் கோஷ்டி மோதலில் 5 பேர் பலி.
பல வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு ஒத்திவைப்பு.
- இது பீகார் தேர்தலில்.

"வோட்டுப்பதிவின்போது கலவரம், துப்பாக்கிச் சூடு, ஐந்து பேர் சாவு."

"மேற்கு வங்கம்.
தேர்தல் அலுவலகம் அருகே போலீஸ் தடியடி.
கண்ணீர்ப் புகை."

"உ. பி. வோட்டுச் சாவடியில் மோதல் - இருவர் சுடப்பட்டு மரணம்.

"உ. பி. தேர்தலில் கடும் மோதல் - 3 பேர் பலி - 60 பேர் காயம்."

"லட்சுமணபுரி - காங்கிரஸ் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படும் 20 பேர்கள் தடிகள், கத்திகள் சகிதம் நேற்று அவ்வால்பூர் வோட்டுச் சாவடியில் பாரதீய கிராந்தி தள ஆதரவாளர்களைத் தாக்கியதாகத் தகவல் கிடைத்துள்ளது."

இப்படி பல பல சம்பவங்கள் இப்படிப்பட்ட சம்பவங் களெல்லாம் இப்பொழுது நடைபெற்று முடிந்திருக்கின்றன, மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம், பஞ்சாப், பீகார் தேர்தலில். இவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது, நாகர்கோவில் எவ்வளவோ பரவாயில்லை.

நாகர்கோவில் தேர்தலில் ஆளும் கட்சி எப்படி இருந்தது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொன்னார்கள். ஆளும் கட்சி அமைச்சர்களும், மற்றவர்களும், பயணிகள் விடுதியில் இருந்தது, பாளையங்கோட்டை சிறைச்சாலைதானோ என்று சொல்லும் அளவுக்கு அடங்கி, ஒடுங்கி இருக்க வேண்டி வந்தது. நானும், திரு. ஆதித்தனாரும் அமைச்சர் முத்துசாமியும்

இருந்த பயணிகள் விடுதியை முற்றுகை இட்டார்கள் காங்கிரஸ் நண்பர்கள். மிகக் கேவலமான பாஷையில் பேசினார்கள். எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார், நீங்கள் பழைய அமைச்சர்களைப் பேசிய பாஷையில் என்று. அது சரியா என்பது இருக்கட்டும். நானே சொல்லுகிறேன், வெட்கம் இல்லாமல், கூச்சம் இல்லாமல் சொல்லுகிறேன். "கருணாநிதி, காலிப்பயலே, வெளியே வாடா" என்றார்கள். பயணிகள் விடுதியில் இருக்கும் எங்கள் காதில் விழுந்ததோ இல்லையோ என்று, கல்லை எறிந்தும், ஒலிபெருக்கி மூலமும் சொன்னார்கள். இவ்வளவுக்கும் பிறகு நாங்கள் ...

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தாங்கள் இருந்த விடுதியிலே இரு 'பாம்கள்' போலீஸ்காரர்கள் கண்டு எடுத்ததாகச் சொல்லப்பட்டதே. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதைப்பற்றி விசாரணை நடந்ததா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 'பாம்' களும் இல்லை, பாம்புகளும் இல்லை.

நாங்கள் கூட்டங்களுக்கு கார்களில் சென்று கொண்டிருந் தோம். ஈதாவனை என்ற ஊரிலிருந்து, இன்னொரு ஊருக்குப் போய்க்கொண்டிருந்தோம். அப்பொழுது காங்கிரஸ் தொண்டர்கள் எங்களைத் தடுத்து நிறுத்தினார்கள். போலீஸ் அதிகாரி அவர்களை விலக்கி, வழி ஏற்படுத்தினார். நான் சொன்னேன், 'வேண்டாம். அந்த ஊருக்கு செய்தி அனுப்பி விடுங்கள் நான் வரவில்லை என்று' என்று குறிப்பிட்டு விட்டு, திரும்பி நாங்கள் நாகர்கோவிலுக்கே வந்தோம். இப்படிப்பட்ட பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கிட்டுவைக் கொலை செய்ததை விடவா? இவ்வளவு பயங்கரமான அரசியல் கொலையில் என்ன என்ன வாதங்கள்? எதிர்க்கட்சித் தலைவர் வாதாடக்கூடும், அரசியல் கொலை யில்லை என்று. ஆனால், அந்த வட்டாரத்தில் உள்ளவர்களுக்குத் தெரியும். கிட்டுவின் பிரேத விசாரணை முடிந்து, கிட்டுவின் பிரேதம் அவருடைய தாய்க்கும், மனைவிக்கும் அளிக்கப் பட்டதும், இடுகாட்டுக்கு போகுமுன், கிட்டுவின் வீட்டில் பிரேதத்தைக் குளிப்பாட்டும் போது, எல்லோரும் ஆயிரக்

கணக்கானவர்கள் சவ ஊர்வலத்தில் சேர்ந்து போகக் காத்துக் கொண்டு இருக்கும்போது, ஒரு நடிகர் தலைமையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், கிட்டுவின் வீட்டு வழியாக, வீதி வழியாக தேர்தல் ஊர்வலம் வந்தார்கள். அந்த நேரத்தில் ஊர்வலம் வரலாமா? கிட்டு படுகொலை செய்யப்பட்டு மாண்டு கிடக்கிறான். இளைஞனை இழந்த தாய், தாரம், குழந்தைகள் இவர்கள் அலறி அழுதுகொண்டிருக்கிற நேரத்தில், உற்ற தோழர்களும், தோழமைக் கட்சிக்காரர்களும் குழுமி இறுதி மரியாதை செலுத்த இருக்கும் நேரத்தில், கடைசி முறையாக கையாலே தாய் மகனுக்குக் குளிப்பாட்டலை நடத்திக் கொண்டிருக்கும் நேரத்தில், அந்த நேரத்தில் காங்கிரஸ்காரர்கள், கிட்டு வீட்டைக் கடந்து செல்வதற்காக, ஊர்வலமாக வந்தார்கள். அந்த நேரத்தில், கிட்டு வீட்டைச் சேர்ந்தவர்களும், அந்தத் தெருவில் உள்ளவர்களும் குறுக்கே படுத்துக்கொண்டு, ஊர்வலம் செல்லக் கூடாது என்று கேட்டுக்கொண்டார்கள். எங்கே ஊர்வலம் போனால் கலவரம் ஏற்பட்டு தடியடியில் கொண்டுபோய்விடுமோ, வேறு பயங்கரம் ஏற்படுமோ என்று பயந்து, திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் ரத்தினவேலு பாண்டியன் முதலியவர்கள், அந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி வந்தவர்களை கையெடுத்துக் கும்பிட்டு, 'ஒரு கொலையோடு போகட்டும், ஐயா, திரும்பிச் செல்லுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்பிறகு போலீசாரும் சமாதானம் சொல்ல, அங்கே ஒரு அமைதியைக் காண முடிந்தது. நாகர்கோவில் சம்பவங்கள் எத்தனையோ நடந்து விட்டன. ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்கள், கூட்டணிக் கட்சிக்காக வேலை செய்த நண்பர்கள், எவ்வளவு அல்லல்களுக்கு உட்பட்டார்கள் என்பதெல்லாம் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் நாங்களும் அடிபட்டோம் என்கிறார்கள். பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு மேல்சபையில் அழகாக சொன்னார்கள். "நீங்கள் தவறு செய்தீர்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். நாங்கள் தவறு செய்தோம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இரண்டு பேர்களும் தவறு செய்யவேண்டுமா?" என்ற கருத்துப்பட அந்தப் பெரியவர், கிருஷ்ணசாமி நாயுடு பேசினார்கள். நாங்கள் அவர்கள் சொல்வதை அங்கீகரிக்கிறோமா இல்லையா என்பது வேறு விஷயம்.

ஆகவே, இனிமேலாவது 'நாகர்கோவில்கள்' நடை பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமை யாகும் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் மிகுந்த பணிவோடு எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நாம் ஒரு நல்ல சமுதாயத்தை - மறுமலர்ச்சியைக் - காண விரும்பி அந்தப் பாதையில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களை இழந்த நிலைமையில் இருக்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் வாழவும், தமிழ்நாடு செழிக்கவும் அரும்பாடு பட்டார்கள். தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் எடுத்துக் கூறியது போல் - ம. பொ. சி. அவர்கள் நம்பிக்கை தளர வேண்டியதில்லை - அண்ணா அவர்கள் இல்லாத காரணத்தினால் தமிழ் அன்னைக்கு உரிய ஆசனம் கிடைக்காமல் போய்விடுமோ என்று கவலைப் பட வேண்டியதில்லை. அண்ணா அவர்கள் வாழ்த்தோடும், ஆசியோடும் இளையவனாக பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நான் உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறேன்.

அடுத்தபடியாக, நான் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவன். மிகவும் பிற்போக்கான வகுப்பினர் பட்டியலில் என் வகுப்புக்கு ஓர் இடம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால் பின்தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காக என் உயிரையே பணயமாக வைத்துப் போராடுவேன் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நான் இப்படிக் கூறுகின்ற சமயத்தில் முற்போக்கு சமுதாயத்திற்கு எந்தவிதமான ஆபத்தும் வந்து விடாதபடி பார்த்துக் கொள்வேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் புதிய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் என்னை வாழ்த்துவார். ஆசி கூறுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். எச்சரிக்கை செய்வதும் ஒரு வகை வாழ்த்துதான் என்று ஏற்று, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களையெல்லாம்

மரபுப்படி உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று வேண்டிக் கொண்டு நான் அமர்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை நான் கேட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில், நான் குறிப்பிட்ட சில விஷயங்களைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதற்கான சில விஷயங்களைச் சொல்லி முடிக்க லாம் என்று நினைக்கிறேன். மறைந்த முதலமைச்சர் அறிஞர் திரு. அண்ணாதுரை அவர்களுடைய படத்தை சட்டப் பேரவையில் மாட்டுவதைப்பற்றி எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையில் எங்கள் கருத்தை எடுத்துச் சொல்ல உரிமை உண்டு. திரு. அண்ணா துரை அவர்களிடம் நெருங்கிப் பழகியவன் நான். அவருக்கு என்னைவிட நெருங்கிப் பழகியவரும் நண்பரும் யாரும் இருக்க முடியாது. என் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்க முடியாது. (சிரிப்பு) இதில் சிரிப்பதற்கு இடமில்லை. நான் முதலில் என்னுடைய, எங்கள் கட்சியினுடைய கருத்தைப் பேச்சின் மூலமாக உரை நிகழ்த்திவிட்ட பிறகு, முதலமைச்சர் அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். திரு. அண்ணாதுரை அவர்களின் படம் சபையில் மாட்டப்படுவது குறித்து அவர்கள் என்னைக் கலந்து பேசுவதற்கும், நான் ஏற்றுக் கொள்வதற்கும் உரிமை இருக்கிறது.

முதலாவதாக வேறுவிதமாக என்னிடமிருந்து விஷயங்களை எதிர்பார்த்தார்கள். நான் ஆசி கொடுக்கவில்லையே என்று சொன்னார்கள். நான் இப்பொழுதும் சொல்கிறேன். புதிய முதலமைச்சருக்கு நான் மனப்பூர்வமாக என்னுடைய ஆசியை மனப்பூர்வமாகச் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய ஆசி எப்பொழுதும் அவருக்கு உண்டு என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தான் பிற்போக்கு சமூகத்தைச் சேர்ந்தவன் என்பதை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் பிற்போக்கு வகுப்பைச் சேர்ந்தவன்தான். அந்தப் பிற்போக்கு வகுப்பினருக்கான பட்டியலில் இருவரும் ஒன்றாகவே இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலவல் பாவம்;

நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்,

என்று பாரதியார் கூறியிருக்கிறார். நீதி செழிக்க வேண்டும், மதி பெருக வேண்டும். (மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகனைப் பார்த்தவாறு) இந்த மதி அல்ல, நமது மதி பெருக வேண்டும், (பெருஞ்சிரிப்பு), கல்வி பெருக வேண்டும், மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் எல்லாம் போக வேண்டும், ஜனநாயக அமைப்பிலே யார் வேண்டுமானாலும் முதலமைச்சராக வரலாம். கடிந்து சொல்வதற்கும் அடித்துச் சொல்வதற்கும் இடம் இல்லை. “சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும்” என்ற முறையிலேயே அன்போடும் பாசத்தோடும் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நான் சொல்லும்படியான விஷயங்களை எல்லாம், எதிர்க்கட்சியினர் கூறும் விஷயங்களை யெல்லாம் சரியாக ஆராய்ந்து ஆட்சி நடத்தி, இந்த அரசு நல்ல வரவேற்பிற்கும், அன்புக்கும் பாத்திரமாக விளங்க வேண்டும். முதலமைச்சர் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிட இன்னும் பட்ஜெட் விவாதம் போன்றவைகளில் நிறைய சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் புதிய முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய கட்சியின் சார்பாகவும் உளம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு, எங்களுடைய ஆசி பரிபூரணமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : “கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்” என்ற வாசகத்தின் உண்மையை இப்போது புரிந்து கொண்டேன்.

உரை : 7 நாள் : 28.01.1970

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்றுள்ள விவாதத்தில் இறுதியாக என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த அளவு அவகாசத்தையாவது தந்தமைக்காக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்ற ஆண்டு இதே நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடையாறு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை முடிக்கப் பெற்று, மருத்துவ நிபுணர்களெல்லாம் அவர் உயிர் பிழைத்துக் கொள்வார் என்று நம்பிக்கை தெரிவித்து, அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே இந்த மாமன்றத்தில், இந்த நேரத்திலே நாம் கூடியிருந்தோம். ஆனால் அந்த நம்பிக்கை வீணாகின்ற அளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார்கள் என்பதும், அவர்களுக்குப் பிறகு இந்த ஆட்சிப் பொறுப்பை மிகச் சாமானியர்களாகிய நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்தப் பேரவை அறியும். ஏறத்தாழ இந்த ஓராண்டுக் காலமாக, இன்னும் நான்கைந்து நாட்கள் நிறைவேறினால் ஓராண்டு முடிந்து விடக் கூடிய இந்தக் காலத்தில், இந்த அரசு பல வெற்றிகரமான சாதனைகளைச் செய்திருக்கிறது. மக்களுடைய அன்பைப் பெற்றிருக்கிறது என்றால் ஏதோ முதலமைச்சராக இருக்கிற நானோ அல்லது அமைச்சரவையில் உள்ள நண்பர்களோ அல்லது ஆளுங்கட்சியில் இருக்கும் நாங்கள் மாத்திரம்தான் காரணம் என்று பெருமையடித்துக்கொள்ள விரும்ப வில்லை. எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்புடனும், எல்லாக் கட்சித் தலைவர்களின் நல்லெண்ணத்தோடு, இந்த ஓராண்டுக் காலமாக, அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு,

தமிழகத்திலே ஒரு நல்ல அமைதியையும், மற்ற மாநிலத்துக் காரர்கள் பார்த்து வியந்து பாராட்டத்தக்க ஒரு நிலைமையையும் உருவாக்கியிருக்கிறோம் என்றால் அந்த வெற்றியில் எங்களுக்கு மாத்திரம் பங்கு இல்லை, இந்த மாமன்றத்திலிருக்கின்ற அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை நான் இங்கே மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆளுநர் உரையின்மீது விவாதத்தின் முடிவுரையிலே மட்டும் நான் பேசுகின்ற பேச்சு இது என்று கருத வேண்டாம். கடந்த 2, 3 தினங்களுக்கு முன்பு வேறு சில மாநிலங்களிலே சுற்றுப் பிரயாணம் செய்த நேரத்திலே, அங்கு மற்ற மாநிலங்களினுடைய அரசியல் மேதைகளெல்லாம் தமிழகத்திலுள்ள அமைதியையும், தமிழகத்தில் நடைபெறுகின்ற நல்லாட்சியையும் குறித்து பாராட்டு தெரிவித்து யாராவது பேசுவார்களேயானால், அதற்குப் பதில் அளிக்கும் நேரத்தில் இந்தப் பெருமைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் உரியது அல்ல, இந்தப் பெருமைக்குத் தமிழ் நாட்டிலே இருக்கிற எல்லா எதிர்க்கட்சிகளும் தருகின்ற ஒத்துழைப்புதான் அந்த அமைதிக்குக் காரணம், இந்த பெருமைக்கு அவர்களும் காரணம் என்று மிகுந்த பெருந்தன்மை யுடனும் தன்னடக்கத்துடனும், அறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த அந்தப் பாடத்தின்படி என்றென்றைக்கும் சொல்லி வந்திருக்கிறேன். அதைத்தான் இன்றைக்கு சொல்கிறேன்.

இன்று இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வழக்கத்திற்கு மாறாக கொஞ்சம் கடுமையான பதங்களையெல்லாம் பயன்படுத்தி, தங்களுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். ஒருவேளை நான் உடல் நலமில்லாமல், உடல் நலிவுற்றுக் கொஞ்சம் பலகீனமாக வந்திருக்கிறேன் என்ற காரணத்தால், பலகீனமானவர்களுக்கு எப்பொழுதும் ஆத்திரம் அதிகம், அதைப் பயன்படுத்தி இந்தக் கடுமையான வார்த்தைகளை உபயோகித்திருப்பார்களோ என்று நினைக்கிறேன். அதனால் ஆத்திரத்திற்கு ஆளாவேன் என்று கருதியிருக்கலாம். நான் உட்கார்ந்திருக்கும் இடம் அண்ணா அவர்கள் உட்கார்ந்து விட்டு விட்டுப் போன இடம். ஆகவே, நான் ஆத்திரத்திற்கு இடம் அளிக்க மாட்டேன். "ஜம்பம், டம்பம் என்றும், கேலியாகவும், கிண்டலாகவும், மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரையும் கைது செய்ய வேண்டும், யோக்கியதை இருக்கிறதா, நாணயம் இருக்கிறதா", இவையெல்லாம் கனிவான மொழி பேசக் கூடிய

திரு. கருத்திருமன் அவர்களிடமிருந்து எப்படித்தான் இன்று வந்தனவோ எனக்கே புரியவில்லை. இப்படிப் பேசாவிட்டால் வெளியிலேயிருக்கும் காங்கிரஸ்காரர்கள் தொந்தரவு செய்கிறார்கள். அதுவும் எனக்குத் தெரிகிறது.

பி. ஜி. கருத்திருமன் : அப்படி ஒருவர் தொந்தரவு செய்து நான் பேசினேன் என்றால், அவர்கள் கட்சியிலேயும் ஏதாவது சொல்கிறார்களா, சொல்லியபடி பேசுகிறார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எங்கள் கட்சியிலே அப்படிப்பட்ட சங்கடம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சில் பொதுவாக முதல் கட்டத்தில் வறட்சிப் பணியைப்பற்றி நீண்ட நேரம் எடுத்துச் சொன்னார்கள். அவைகளைத் தவிர அவர்கள் பேசியது அனைத்தும் இந்த அவையிலே இந்த மூன்று ஆண்டுகாலமாகத் தொடர்ந்து அடிக்கடி பேசி வருகின்ற பழைய செய்திகள் தான் என்பதை அவர்களும் நன்றாக அறிவார்கள். ஏனென்றால், சபையினுடைய நடவடிக்கைப் புத்தகங்கள் சாட்சிக்கு இருக்கின்ற காரணத்தினால் அதை அவர் மறுக்க முடியாது. வறட்சிப் பணிகள் குறித்து இந்த மாமன்றத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களும், மிக விளக்கமாக எடுத்துரைத் திருக்கிறார்கள். 1968-ல் எப்பொழுதுமே சாதாரணமாகப் பெய்ய வேண்டிய 920 மில்லி மீட்டர் மழை பொழிவதற்குப் பதிலாக, 742 மில்லி மீட்டர் அளவுதான் மழை பொழிந்தது என்பதாலும், அதன் காரணமாகத் தமிழ் நாட்டில் ஒரு சில மாவட்டங்களைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் உணவு உற்பத்தி குறைந்தது, கண்மாய்கள், குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் அனைத்தும் வறண்டன, வயல்கள் வெடித்துக் கிடந்தன என்கின்ற செய்திகள் நமக்குப் புதிதல்ல. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தண்ணீர் தேவை, மழை தேவை. அதே நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வாய்ப்புக் கூறுகள் அடைபட்ட காரணத்தினால், வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்தார்கள். அந்த நேரத்தில் வறட்சிப் பணிகளுக்காக நாம் மாற்று வேலை என்கின்ற பெயரால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக எடுத்துக் கொண்ட வேலைகளைப் பற்றி உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

13,400 பெரிய சிறிய நீர்ப்பாசன ஏரிகள் தூர் எடுக்கப் பட்டன. 5,500 சாலை வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. 683 மண்வள பாதுகாப்பு வேலைகள், 821 குடிமராமத்து வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. ஒரே சமயத்தில் 40,600 வேலைகள் உச்ச கட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றன. அதிலே 8 லட்சம் வேளாண்மைத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெற்று மகிழ்ந்தார்கள். நான் சென்ற பல்வேறு மாவட்டங்களில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட முடியாமல் தத்தளித்துக் கொண்டு, அன்றாட சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டி ருந்தவர்கள், இப்படிப்பட்ட மாற்று வேலை திட்டங்கள் மூலம் 8 லட்சம் தொழிலாளர்கள் 40,600 வேலைகளில் ஈடுபட்டார்கள். மாநிலம் முழுவதும் இதையன்னியில் 34,265 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு, தண்ணீர் புதிதாகப் பெறுவதற்கான சூழ் நிலையும் உருவாக்கப்பட்டது.

இவைகளைப் பற்றிய கணக்கு எங்கே, கணக்கு எங்கே என்று இந்த அவையிலே பொதுவாக எதிர்க்கட்சி உறுப்பினர்களால் கேட்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களினால் கொஞ்சம் வேகமாகவும் இப்பொழுது கேட்கப்பட்டது. குடிநீர் வசதிக்காக மாத்திரம் ரூ. 5.88 கோடி செலவழித்திருக்கிறோம். சிறிய பாசன வேலை களுக்காக ரூ. 2.79 கோடி பெரிய பாசன வேலைகளுக்கு ரூ. 2.23 கோடி, சாலைகளுக்கு ரூ. 3.23 கோடி, மண்வளப் பாதுகாப்பு வேலைகளுக்கு ரூ. 21 லட்சம், குடிமராமத்து வேலைகளுக்கு ரூ. 9,06,000, பாறை உடைப்புக் கருவிகளை வாங்குவதற்கு ரூ. 63,65,000, விவசாயிகளுக்குக் கடன் உதவிக்காக ரூ. 2 கோடி 65 லட்சம், இப்படி ரூ. 17.68 கோடி மொத்தத்தில் செலவிடப் பட்டிருக்கிறது. இதிலே மாவட்ட வாரியாகக் கணக்கு :-

செங்கற்பட்டுக்கு ரூ. 2 கோடி 17 லட்சம்.

வட ஆற்காட்டுக்கு ரூ. 3 கோடி 7 லட்சம்.

தென் ஆற்காட்டுக்கு ரூ. 1 கோடி 56 லட்சம்.

தஞ்சைக்கு ரூ. 55 லட்சம்.

திருச்சிக்கு ரூ. 87 லட்சம்.

மதுரைக்கு ரூ. 1 கோடி 20 லட்சம்.

இராமநாதபுரத்திற்கு ரூ. 2 கோடி 32 லட்சம்.

நெல்லைக்கு ரூ. 77 லட்சம்.

சேலத்திற்கு ரூ. 1 கோடி 3 லட்சம்.

தர்மபுரிக்கு ரூ. 83 லட்சம்.

கோவைக்கு ரூ. 2 கோடி 37 லட்சம்.

நீலகிரிக்கு ரூ. 11.5 லட்சம்.

கன்யாகுமரிக்கு ரூ. 23 லட்சம்.

என்பதாகும். இவைகளிலே குறிப்பிடத்தக்க பணிகள் என்று பார்த்தால், ஆங்காங்கு ஒவ்வொரு மாவட்டத்திலும், நூற்றுக் கணக்கான பணிகளை நாம் காண முடியும். மிக முக்கியமான வற்றை மட்டும் உங்களிடம் குறிப்பிட விரும்புகிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி தொகுதியிலும், அருகாமையில் காடாம்புலியூர் பகுதியிலும் - அங்குள்ள கிணறுகள் ஏறத்தாழ 150, 200 அடி அளவுக்கு ஆழமான கிணறுகள் - அவ்வளவு ஆழமாக இருந்தாலும், அந்தக் கிணறுகளில் இருக்கக் கூடிய தண்ணீர் 2 அடி, 3 அடி உயரத்திற்கு மேல் இருக்காது - அந்தத் தண்ணீரையும் பயன்படுத்த முடியாதபடி, அந்தப் பகுதியிலிருக்கிற அரிசன மக்கள் எப்படியாவது மழை பெய்து குட்டைகளில் தண்ணீர் தேங்கினால், ஆடு மாடுகள் குளிக்கின்ற, குடிக்கின்ற அந்தத் தண்ணீரை அரிசனங்கள் குடிப்பதற்குப் பயன்படுத்தி வந்திருக்கின்ற பயங்கரமான காலம் நூற்றாண்டு காலமாக இருந்து வருகிறது. வறட்சிப் பணியை பயன்படுத்திக் கொண்டு, நிவாரணத் தில் ஈடுபட்டு, பூமிக்கு அடியில் 700 அடிக்குக் கீழே கடல் போன்ற அளவில் தண்ணீர் விரிந்து பரந்து காணப்பட்டதை அறிந்து, உடனடியாக முயற்சி செய்து, ஆழ் துளைக் கிணறுகள் மூலம் அதனை வெளிக் கொணர்ந்து, மேல்நிலைத் தொட்டிகளில் நீரைத் தேக்கி, அந்தப் பகுதி முழுவதும் குழாய் மூலம் தண்ணீர் வரும்படியாகச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருக்கிற மக்கள் அத்தனை பேராலும் பாராட்டப்படுகின்ற ஒரு காரியமாக இருக்கிறது அது. நூற்றாண்டு காலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினை அங்கே தீர்க்கப்பட்டிருக்கிறது.

மதுராந்தகம் ஏரி பல நூற்றாண்டு காலமாகத் தூர் எடுக்கப் படாத ஏரி; அந்த ஏரி தூர் எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், மழையின் காரணமாகத் தேங்கியிருக்கின்ற தண்ணீர் ஏற்கனவே

6 மாத காலத்திற்கு வரும் என்றால் - உதாரணத்திற்காகச் சொல்கிறேன் - மேலும் 6 மாத காலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்கின்ற அளவுக்கு நாம் தூர் எடுத்திருக்கிற காரணத்தினால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிற காட்சியைக் காண்கிறோம்.

கன்யாகுமரி மாவட்டத்தில் கடலோரத்தில் இருக்கிற கிராமங்களில் ஏறத்தாழ 35 கிராமங்களில் இதுவரையில் சுதந்திரம் பெற்று 20 ஆண்டு காலத்திற்குப் பின் கூட அங்கிருக்கிற கிணறுகளில் ஊறுகின்ற உப்புத் தண்ணீரைத்தான் அந்தப் பகுதியில் இருக்கிற மீனவப் பெருங்குடி மக்கள் குடித்து, தங்களுடைய தாகவிடாயைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய பயங்கர சூழ்நிலை இருந்தது. நல்ல தண்ணீர் வேண்டும் என்பதற்காக 4 மைல், 5 மைல் நடந்து, குடத்தை எடுத்துச் சென்று, அங்கிருந்து நல்ல தண்ணீரைக் கொண்டு வரக்கூடிய கொடுமையில் அங்கிருந்த மக்கள் வாடிக் கொண்டிருந்தார்கள். வேடிக்கையாகக் கூட சொல்வார்கள், அந்தப் பகுதியிலிருப்பவர்களுக்குப் பெண்கள் கொடுப்பது என்றால் கூட பயப்படுவார்கள் என்ற அளவுக்கு அங்கே தண்ணீர் பஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப் பட்ட இடத்தில் கடலோரப் பகுதிகளிலே 36 கிராமங்களில் நல்ல தண்ணீருள்ள கிணறுகள் எங்கே இருக்கின்றன என்று தேடி, வெகு தொலைவிலே இருந்தாலும் பரவாயில்லை என்று கருதி, அங்கெல்லாம் மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப்பட்டு, அங்கிருந்து குழாய்கள் மூலம் 36 கிராமங்களுக்கு, இப்பொழுது 6 கிராமங்களைத் தவிர, பாக்கி 30 கிராமங்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் அளிக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாகத் தீர்க்கப் படாத பிரச்சினை கன்யாகுமரி மாவட்டத்தில் கடலோரப் பகுதியில் இருக்கிற கிராமங்களில் தீர்க்கப்பட்டு, அந்த மக்கள் பெரு மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

வறட்சி நிவாரணத்திற்காகச் செலவழிக்கப்பட்ட இந்தத் தொகை ரூ. 17.68 கோடி. இதிலே எவ்வளவு மத்திய அரசின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கிறது, நாம் எவ்வளவு செய்தோம் என்கின்ற விளக்கங்களெல்லாம் ஏற்கனவே இந்த அரசின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏதோ மத்திய சர்க்கார் ஒரு காரணத்திற்காக இங்கிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தை விலைக்கு வாங்குவதற்காக, அல்லது குடியரசுத் தலைவர்

தேர்தலுக்காக அந்தப் பணத்தைக் கொடுத்துவிட்டார்கள் என்றெல்லாம் பேசுவது, ஏதோ மேடையிலே மாலை நேரத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதல்ல, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர், அவர்கள், இந்த மாமன்றத்தில் இப்பொழுது எடுத்துச் சொன்னது எனக்கு மிகுந்த வியப்பை அளிக்கிறது.

பொதுவாக ஒரு மாநிலம் வறட்சிப் பணிக்கு செலவிடுவது என்றால் முதல் ரூ. 50 லட்சம் அந்த மாநிலமே செலவிடவேண்டும் என்ற நியதி இருக்கிறது. அதற்கு மேல் அதற்கு எவ்வளவு செலவானாலும், அந்தச் செலவில் மத்திய அரசு எவ்வளவு கொடுப்பது, மாநில அரசு எவ்வளவு கொடுப்பது, மத்திய அரசு கொடுக்கின்ற தொகையில் கடன் எவ்வளவு, மானியம் எவ்வளவு, என்கின்ற நியதிகளெல்லாம் ஏற்கனவே வகுக்கப்பட்டிருக்கின்றன. குடியாட்சித் தலைவர் தேர்தலுக்குப் பின் அல்ல, குடியாட்சித் தலைவர் தேர்தலுக்கு முன்பே, இன்னும் சொல்லப் போனால் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும், திரு. நிஜலிங்கப்பா அவர்களுக்கும் இடையே தகராறு வந்ததற்குப் பின்னாலல்ல, வருவதற்கு முன்பே, பல ஆண்டு காலமாகவே இந்த நியதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. வறட்சி நிவாரணத்திற்கு செலவழிக்கப்படும் தொகையில் முதல் ரூ. 50 லட்சம் மாநில அரசே ஏற்க வேண்டும்; அதற்கு மேல் செலவாகும் தொகையில் 50 சதவிகிதம் மத்திய அரசு மானியமாகவும், 25 சதவிகிதம் மத்திய அரசு கடனாகவும் வழங்க வேண்டும். செலவழிக்கப்படுகிற தொகையிலே மீதியுள்ள 25 சதவிகிதம் மாநில அரசே பொறுப்பேற்று செலவழிக்க வேண்டும். இது தான் உள்ள நியதி. இந்த உதவித் தொகையிலே மற்ற மாநிலங்களுக்கும் நம்முடைய மாநிலத்திற்கும் கொடுக்கப் பட்டுள்ள தொகையிலே வித்தியாசம் இருந்தால், ஒரு வேளை அந்த மாநிலத்திலுள்ள வறட்சிக் கொடுமை குறைவாக இருக்கலாம். அல்லது, வறட்சிக் கொடுமை அதிகமாக இருந்தும், அந்த மாநில அரசு அதை அகற்றுவதற்கு அதிக அக்கறை எடுத்துக்கொள்ளாமலும் இருக்கலாம். அதைத்தவிர வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது.

ஜனாதிபதி தேர்தல் ஆகஸ்ட் மாதம், 16-ந்தேதி நடந்தது,. சிண்டிகேட் - இண்டிகேட் பிளவு செப்டம்பர் - அக்டோபரில் ஆரம்பமானது. அதற்குப் பிறகுதான் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

பாராளுமன்றத்தில் வந்தது. 1969, ஜூன் மாதம், மத்திய சர்க்காரிலிருந்து ராமச்சந்திரன் தலைமையில் ஒரு குழு தமிழகத்திற்கு வந்தது. வறட்சி நிவாரண வேலைகள் என்னென்ன, தேவை என்ன எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யலாம், என்பதை யெல்லாம் வரையறுக்க ஜூன் மாதத்தில் அந்தக் குழு வந்தது. அந்தக் குழு பல மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்து, வறட்சி நிவாரணத்திற்கு ரூ. 15 கோடி வரையில் செலவழிக்கலாம். இன்னும், அதற்கு மேலும் செலவழிக்கத் தேவைப்பட்டால், பருவ மழை மேலும் பொய்க்குமேயானால் அதிகம் செலவழிக்கலாம் என்று, ரூ. 15 கோடிக்குத் திட்டம் தீட்டிவிட்டு, ராமச்சந்திரன் குழு அந்தத் திட்ட அறிக்கையை மத்திய சர்க்காரிடம் கொடுத்தது, ஜூன் மாதத்தில். ஜூன் மாதத்தில் பிளவுக்கு விதை கூட ஊன்றப்பட வில்லை. ஜூன் மாதத்தில் ஜனாதிபதி தேர்தலில் யார் யார் போட்டியிடுகிறார்கள் என்ற சர்ச்சை எழவில்லை; ஜனாதிபதி பற்றி காங்கிரஸில் இப்படிப்பட்ட சச்சரவுக்கு ஆயத்தம் உருவாக்கப் படவில்லை; ஜூன் மாதத்தில் இங்கே வந்த குழு ரூ. 15 கோடி வேண்டும் என்று அறுதியிட்டு இருக்கிறது. மேலும் பருவ மழை பொய்க்குமானால், அதிகப் படியான பணம் ஒதுக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு 3 கோடி, 4 கோடி, 5 கோடி என்று கொடுத்துக் கொண்டே இருந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த விவரத்தையும் தருகிறேன்.

அதாவது, நான் அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு இந்தப் பொறுப்பேற்ற பிறகு, மார்ச் 31-ல் 1¼ கோடி வந்திருக்கிறது. மாதா மாதம் தந்திருக்கிறார்கள். மே மாதம் அனுப்பவில்லை. செய்திருக்கும் வேலைகளைக் காட்டி பணம் கேட்க வேண்டும். மார்ச் மாதத்தில் 1¼ கோடி; ஏப்ரல் மாதத்தில் 2 கோடி; ஜூன் மாதத்தில் 13-ந் தேதி 2 கோடி; ஜூலை மாதம் 22-ம் தேதி 3 கோடி. ஆக, இதுவரையில் 8¼ கோடி ரூபாய் வாங்கிவிட்டோம். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு 8¼ கோடி. அதற்கும் பிறகு 6 கோடி தான், மாதா மாதம் விகிதாச்சாரப்படி பணம் தரப்பட்டதே தவிர, ஏதோ பேரம் பேசி தந்து விட்டார்கள், என்று கூறுகின்ற கூற்று, உண்மைக்குப் புறம்பானது என்று எடுத்துக் காட்டவே இதை எடுத்துச் சொன்னேன். ரூ 8¼ கோடி மத்திய சர்க்காரிலிருந்து பெற்று பணி செய்தபோது, நாம் மாநில சர்க்கார்

செலவழித்திருந்தது ரூ. 14 கோடி, நாம் 14 கோடியைச் செலவழித்துவிட்டு, தாக்கீது அனுப்பினோம். அவர்கள் 8¼ கோடி அனுப்பினார்கள்.

இந்த மாநிலத்திற்கு மட்டுந்தானா? மற்ற மாநிலங்களுக்குத் தரப்படவில்லையா? 1967-68-ல் அப்பொழுதெல்லாம் காங்கிரசில் புகைச்சலும், காய்ச்சலும் இல்லை. அந்த நேரத்தில், அதாவது, 1967-68-ல் ஆந்திர மாநிலத்திற்கு தரப்பட்ட பணம், வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 15 கோடி; 1967-68ல் பீகாருக்குத் தரப்பட்ட பணம் ரூ. 41 கோடி; அதற்கு முன்பே 1966-67-ல் நீங்கள் மிக ஒற்றுமையாக இருந்த நேரத்தில், பீகாருக்கு கொடுத்தது ரூ. 18 கோடி;, 1967-68-ல், இன்னொரு அணிவகுப்பை நடத்தும், மொரார்ஜி தேசாய் மாநிலமாகிய குஜராத்துக்குத் தரப்பட்ட பணம் ரூ. 11 கோடி; இப்படி எல்லா மாநிலங்களுக்கும் தரப்பட்டிருந்த போதிலும் நம்முடைய மாநில அரசு எடுத்துக் கொண்ட அக்கறையின் காரணமாக, இன்னின்ன பணிகளை நிறைவேற்றியிருக்கிறோம், இன்னின்ன செலவினங்களைச் செய்திருக்கிறோம் என்று கூறிக் கேட்டதன் மேல், ரூ. 14¼ கோடி தரப்பட்டது.

அந்தப் பணம் எந்த எந்த முறைகளில் வறட்சிப் பணிகளுக்குச் செலவழிக்கப்பட்டது என்ற விவரமும் தருகிறேன். ஊராட்சித் தலைவர்கள் மூலம், வேலைகள் எங்கெங்கு நிறைவேற்றப்பட முடியுமோ, அங்கெல்லாம் செய்யப் பட்டது; ஏரி, கால்வாய் தூர் எடுக்கும் வேலைகள் இவற்றால் பயன் அடைவோர்கள் (பெனிபிஷரிஸ்) பொறுப்பில், அப்படிப்பட்ட வேலைகள் அவர்களிடம் விட்டு விட்டோம். மூன்றாவதாக, பெருவழித் துறை, பொதுப் பணித்துறை, வேளாண்மைத் துறை இவைகளால் சில வேலைகள் நிறைவேற்றப்பட்டன. நான்காவதாக, ரெஜிஸ்ட்டர்ட் கண்ட்ராக்டர்கள் மூலம், அவர்களால் செய்யக்கூடிய வேலைகள் அவர்களிடம் தரப்பட்டன. இந்த நான்கு முறைகளில் தான் வேலைகள் செய்யப்பட்டன.

இதிலே கட்சி வேறுபாடு உண்டா? திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் இருக்கும் தொகுதிகளுக்குத்தான் அதிகமாகச் செலவழிக்கப்பட்டது என்று உண்டா? அதற்கான விவரத்தையும் இந்தச் சபைக்குத் தருகிறேன். ஏதோ காரசாரமாகப் பதில் அளித்து விட்டேன் என்பதற்காக அல்ல, உறுப்பினர்கள்

மனத்தில் ஐயம் எழுந்திருக்குமேயானால், இதை எடுத்துச் கூறுவது அவசியம் என்ற வகையில் சொல்லுகிறேன். செங்கல்பட்டுக்கு ஒதுக்கப்பட்ட பணம், ரூ. 1 கோடி, 75 லட்சம், சராசரி ஒவ்வொரு தொகுதிக்கும் பங்கிட்டால் ஒரு தொகுதிக்கு ரூ. 12 லட்சம் வர வேண்டும், அதிலே நம்முடைய திருத்தணித் தொகுதிக்கு மட்டும் ரூ. 15 லட்சத்து, 26 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருத்தணித் தொகுதிக்காக திரு. வினாயகத்தைப் பாராட்ட வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் பாராட்டாததால், நான் பாராட்டுகிறேன். வடாற்காடு மாவட்டத்தில், திருவண்ணாமலைக்கு,, காங்கிரஸ் உறுப்பினர் தொகுதிக்கு ரூ. 15 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்த மாவட்டத்திலேயே, கணியம்பாடி என்ற காங்கிரஸ் உறுப்பினர் தொகுதிக்கு ஒதுக்கப்பட்டது ரூ 14 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய். அந்த மாவட்டத்திலேயே எல்லாத் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் இருக்கும் தொகுதி களுக்கும், இதைவிடக் குறைவான தொகைதான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில், சுதந்திராக் கட்சி உறுப்பினர் இருக்கும் உசிலம்பட்டித் தொகுதிக்கு ரூ. 12.46 லட்சம் செலவழிக் கப்பட்டது. திருமங்கலத்திற்கு ரூ. 9.92 லட்சம், வடமதுரைக்கு ரூ. 7.77 லட்சம். இவைகளெல்லாம், காங்கிரஸ் உறுப்பினர்கள், மற்றும் கழக உறுப்பினர்கள் அல்லாதவர்கள் இருக்கும் தொகுதிகளுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. திரு. ஓ. பி. ராமன் தொகுதிக்கு, அங்கே அதிகத் தேவையில்லை என்பதால், ரூ. 23,000 தான் செலவழிக்கப்பட்டது. தேவையிருக்கும் இடங்களுக்கு அதிகமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் தொகுதியாகிய ராதாபுரத்திற்கு ரூ. 13 லட்சத்திற்கு மேல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கோவையில் காங்கேயம் பகுதிக்கு ரூ. 13.46 லட்சம் செலவழிக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் சாதிக் பாட்சாவின் தொகுதி, உடுமலைப்பேட்டை, நிதி அமைச்சர் பிறந்த ஊர், அதற்கு ரூ. 1.07 லட்சம்.

இவ்வளவுக்கும் பிறகு கணக்குகள் சரியில்லை, கணக்குகள் சரியில்லை, விவரங்கள் இல்லை, விவரங்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். எங்களுக்கு இருக்கும் வருத்த மெல்லாம், சபையில் வைக்கும் பல புத்தகங்களை, விவரங்களை எதிர்க்

கட்சித் தலைவர் முழுவதும் படிக்கவில்லை என்கிற குறைதான் (பலத்த சிரிப்பு) கேலியாகச் சொல்லவில்லை. இவன் என்ன வைப்பது, நான் என்ன படிப்பது என்றும் இருக்கலாம். 12-9-1969-லேயே செலவழித்திருக்கும் ரூ. 15 கோடிக்கு விவரம் கொடுத்து அறிக்கை வைத்திருக்கிறது. குடிநீருக்கு இவ்வளவு, சாலைக்கு இவ்வளவு, பாசனங்களுக்கு இவ்வளவு, கிணறுகளுக்கு இவ்வளவு என்றெல்லாம். மாவட்ட ரீதியாக, பஞ்சாயத்து யூனியன் ரீதியாக கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், இந்தக் கணக்குகளைத் தணிக்கை செய்ய என்று நிதித் துறையில் தனிப் பிரிவு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தனிப் பிரிவு ஆய்வு செய்வது மட்டுமல்லாமல் இந்தக் கணக்குகள் அகவுண்டென்டண்ட்-ஜனரல் தணிக்கைக்கும் அனுப்பப்படுகிறது. அதன் பிறகு அது பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கு, பப்ளிக் அகவுன்ட்ஸ் கமிட்டிக்கு வர இருக்கிறது. பப்ளிக் அகவுன்ட்ஸ் கமிட்டி தலைவரே நம் எதிர்க்கட்சித் தலைவர் தான். கணக்குகளைப் பார்க்கும் அதிகாரம் அவருக்கு இருக்கிறது. அப்படிக் கணக்குகளைப் பார்த்து, தவறு என்று சொன்னால் அவற்றிற்கு வருத்தம் தெரிவிக்க, அல்லது தவறுகளை இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்ள, எதிர்க்கட்சிகளுடைய கருத்துக்களைக் கேட்டு நடக்க, ஆளும் கட்சி என்றைக்கும் கடமைப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூற உள்ளபடியே பெருமைப்படுகிறேன். அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, அங்கொன்று, இங்கொன்று தவறு நடந்திருக்கலாம்; பதினேழு கோடி ரூபாய் செலவழித் திருக்கும் போது, ஆயிரம், இரண்டாயிரம் அளவில் ஊழல்கள் நடந்திருக்கலாம். அவற்றைப் பொதுக் கணக்குக் குழுவில் தாங்கள் கண்டுபிடித்து, இந்தப் பேரவைக்கோ அல்லது சர்க்காருக்கோ எடுத்துச் சொல்வார்களானால், அரசு அவற்றை ஆராயவும், அப்படிப்பட்ட குற்றம் இனிமேல் வராமல் பார்த்துக் கொள்ளவும் முயற்சிகளை மேற்கொள்ளும். அதை விட்டுவிட்டு, கடைசி லகான் உங்கள் கையில் இருக்கும் போது, இதற்கு யார் பொறுப்பு, அதற்கு யார் பொறுப்பு என்று சொத்தை, சோடைகளையெல்லாம் கேட்பது சரியல்ல. பொதுவாகப் பதினெட்டு கோடி ரூபாயைச் செலவழிக்க வில்லை, பதினெட்டு கோடி ரூபாய் கட்சிக்கே செலவாயிற்று என்று சொல்வது பொருத்தமுடையதாகாது. அது தமிழ்நாட்டுப்

பண்புக்கும் ஏற்றது அல்ல. நாங்கள் முன்பு எதிர்க்கட்சியில் இருந்தபோது ஆளும் கட்சியான காங்கிரஸைப் பார்த்து, 'நீங்கள் மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து இன்னும் பணம் கேளுங்கள்' என்றுதான் வற்புறுத்தினோம். இனிமேல் நீங்களும் எங்களைப் போல் சொல்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். காரணம், மத்திய சர்க்காரிலே இருக்கிறவர்கள் வேறாக இருக்கிற காரணத்தாலே, நீங்களும் இன்னும் அதிகமான பணம் கேளுங்கள் என்று வலியுறுத்திக் கேட்பீர்கள். (சிரிப்பு) இவ்வளவு பணம் உங்களுக்கு கிடைத்துவிட்டதே, உத்திரப் பிரதேசத்திற்கு இவ்வளவுதானே கொடுத்தார்கள் என்றெல்லாம் பேசுவது நல்லதல்ல என்பதற்காகத் தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் யாரும் மத்திய சர்க்கார் இவ்வளவு அதிகமான பணம் கொடுத்து விட்டதே என்று சொன்னதாகத் தெரியவில்லை. மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் செய்த உபகாரத்திற்காக நன்றியறி தலுக்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள். வேண்டுமானால் நாங்களும் சிபாரிசு செய்கிறோம் என்று ஏகமனதாகத்தானே தீர்மானம் போட்டோம். வாங்கிய பணம் எவ்வளவு? அவ்வளவு பணத்திற்கும் கணக்குச் சரியாக இருக்கிறதா, இல்லையா என்பதுதான். கணக்கு எல்லாம் சரியாக இருக்க வேண்டும் என்பதுதான். உத்திரப் பிரதேசத்திற்குக் கொடுத்ததைவிட இங்கு அதிகமாகக் கொடுத்துவிட்டார்கள் என்று யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் மத்தியில் ஆட்சி செய்வது இப்போது இருக்கிற இந்திரா காந்தியா அல்லது அப்போது இருந்த இந்திரா காந்தியா என்பதல்ல பிரச்சினை. தேவையான பணத்தை நிச்சயமாக வாங்க வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சொன்னது குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறதா? அப்படி யாரும் சொல்லவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து பணம் கேளுங்கள் என்று எங்களைத் தூண்டிவிடுவதைக் குறைத்துக் கொண்டு விட்டதாகவும், அதற்குக் காரணம் வறட்சிக்காக அந்தப் பணம் பயன்படுத்தப்படவில்லை யென்றும்' கூறினார். வறட்சிக்காக அந்தப் பணம் பயன்படுத்த வில்லையென்று கூறுவது நம்முடைய பண்புக்கு ஏற்றதல்ல. எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறவர்கள் ஆளும் கட்சியுடன் ஒத்துழைக்க வேண்டும். நல்ல காரியங்கள் செய்யும் போது, ஒத்துழைத்து, மக்களுக்கு நன்மைகள் பெருக உதவ வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன், உத்திரப் பிரதேசத்திற்கு இவ்வளவு பணம், தமிழகத்திற்கு இவ்வளவு பணம் என்று சொல்லவில்லை யென்று அவர் சொல்கிறார். எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் பெருந்தன்மை படைத்தவர். அவர் நிச்சயமாகக் கூறியிருக்க மாட்டார். அப்படிச் சொல்லியிருந்தால், யார் சொன்னார்களோ அவர்களைப் போய்த் தாக்கட்டும்.

அடுத்தபடியாக, விலைவாசியைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் நமது மாநிலத்தில் அவற்றின் உற்பத்தி மிகக் குறைவு. நம்முடைய தேவையில் பெருமளவு ஆந்திரா, மைசூர், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங் களிலிருந்துதான் வருகிற காரணத்தால் தான் அவற்றின் விலைகள் சற்று இப்போது கூடுதலாகியிருக்கும் காட்சியைப் பார்க்கிறோம், விலைவாசிகள் ஒரேயடியாக இறங்கி விட்டன என்று எங்கள் தரப்பில் சாதிக்கவில்லை. முன்பு இருந்ததற்கு, சென்ற மாதத்தில், சென்ற வாரத்தில் விலை சற்றுக் குறைந்திருக்கிறது என்று திருப்திப்பட்டுக்கொள்ளலாம். பருப்பு வகைகளின் விலை அனைத்திந்திய உற்பத்தியைப் பொறுத்தவரையில் அதன் அடிப்படையிலும், ரிசர்வ் பாங்க் கடைபிடிக்கும் கடன் கொள்கையின் அடிப்படையிலும், ரயில்வே வாகன்கள் ஒரு மாதத் திற்குக் கிடைக்கும் எண்ணிக்கையைப் பொறுத்தும்கூட இந்த விலைவாசிகளின் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. கடலை எண்ணெயைப் பொறுத்தவரையில், வறட்சியின் காரணத்தால் தமிழ் நாட்டில் மணிலா உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்ட காரணத்தால் விலை உயர்ந்த அளவிற்குச் சென்று தற்பொழுது ஓரளவு இறங்கத்

தொடங்கியிருக்கிறது. மிளகாயைப் பொறுத்தவரையில் ஆந்திராவில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தினால் மிளகாயின் உற்பத்தி பாதிக்கப்பட்டதாலேயே விலை ஏறியிருக்கிறது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சற்று விலை இறங்கியிருக்கிறது. வெறும் புள்ளி விவரத்தைச் சொன்னால்கூட நமது எதிர்க் கட்சியினர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நானும் அவரும் சேர்ந்து ஒத்துக்கொள்கின்ற பத்திரிகையான சுதேசமித்திரன் 25-1-1970-ம் தேதியிட்ட இதழில், வெளிவந்துள்ள செய்தியின்படி, கடலைப் பருப்பு, பச்சைப்பருப்பு, பட்டாணிப் பருப்பு, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற எல்லாப் பருப்புகளின் விலைகளும் குவிண்டாலுக்கு 5 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை குறைந்திருக்கிறது. மிளகாய் விலை குவிண்டாலுக்கு 10 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையில் குறைந்துள்ளது என்று செய்தி வந்திருக்கிறது. விலைகள் குறைந்து வருவது மகிழ்ச்சி தரக்கூடியது அல்லவா? விலைகள் குறைவதற்கான எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்கிறோம்.

அடுத்தபடியாக வேலைவாய்ப்பைப் பற்றிப் பேசும்போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற எதிர்க்கட்சித் தலைவர் களும் குறிப்பிட்டுப் பேசினார்கள். வேலைவாய்ப்புப் பிரச்சினை தமிழ்நாட்டில்தான் நிலவுகிறது என்று கூறுவது பொருத்தமற்ற தாகும். இது அகில இந்திய ரீதியில் நாடு பூராவிலும் உள்ள பிரச்சினையாகும். நாடு முழுவதிலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிற காட்சியை நாம் பார்க்கிறோம். டெல்லியில் நடந்த தேசீய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் 1980-ம் ஆண்டில் இந்த நாட்டில் 16 கோடி மக்கள் மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத நிலை, ஒரு பயங்கரமான நிலைமை எதிர்காலத்தில் ஏற்படும் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த நான்காவது ஐந்தாண்டு வரைவு ஏட்டிலே வரைந்து காட்டியிருக்கிறார்கள். வேலைவாய்ப்புகளைப் பொறுத்த வரையில் தொடர்ந்து எந்த வழியில் அரசு செயல்பட்டு வருகிறது என்பதைக் கூறுகிறேன்.

நீர்ப்பாசனத் துறை, பெருவழித் துறை, பொதுச் சுகாதாரம், பொறியியல் துறை, மின்சார வாரியம் முதலியவற்றில் வரும் ஆண்டுகளில் நாம் அத் துறைகளில் ஏற்று நிறைவேற்றத்தக்க

திட்டங்களைப் பற்றி ஆராய்ச்சிப் பிரிவுகளை உருவாக்கி, அதன் மூலம் நீர்ப்பாசனத் துறையில் 200 பேருக்கும், பொதுச் சுகாதாரத் துறையிலே 100 பேருக்கும், மின்சார வாரியத்திலே 200 பேருக்குமாக மொத்தம் 500 பொறியியல் பட்டதாரிகளுக்கும் பாலிடெக்னிக்கில் படித்தோர் உட்பட வேலைவாய்ப்பு ஏற்படுத்தப் படும். அதற்காக கல்வித் துறைக்காக அரசு செலவிடும் தொகை 1966-67-ம் ஆண்டில் ரூ. 45.85 கோடியிலிருந்து 1969-70-ல் ரூ. 66.38 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1967க்குப் பின் 197 உயர் நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. நாங்கள் வந்தால் பள்ளிக் கூடங்கள் மூடப்படும் என்று சொல்லப்பட்டதற்கு மாறாக 197 பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு ஆசிரியர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகராட்சி மன்றங் களுக்கும் சென்னை மாநகராட்சிக்கும் மாநில அரசால் கொடுக்கப் பட்ட கிராண்ட் 50 சதவீதத்திலிருந்து 66-2/3 சதவீதமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்வதற்காக லைப்ரரிகள், விஞ்ஞானக் கூடங்கள் ஆகியவற்றின் முன்னேற்றத் திற்காகவும், 108 உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 40 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது.

பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு எந்தவிதமான உதவிகள் என்பதுபற்றிச் சூசகமாகக் கூட ஆளுநர் உரையிலே சொல்லப்படவில்லையென்ற கருத்துகள் கூறப்பட்டன. தாயகம் திரும்பியோருக்குப் புனர்வாழ்வு அளிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டவை பலவாகும். வியாபாரம், தொழில் முதலிய ஆரம்பிப்பதற்கான கடன் தொகை ரூ. 2 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 2.80 கோடி ரூபாய் இதற்காக வழங்கப் பட்டிருக்கிறது.

வீடுகள் கட்டுவதற்காகக் கடனாகவும், கிராண்ட் ஆகவும் 20 லட்சம் ரூபாய் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கிறது. 860 குடும்பங்களுக்கு விவசாயம் செய்ய நிலங்கள் வழங்கப்பட்டி ருக்கின்றன. 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சுமார் 3 ஆயிரம் குடும்பங்களைக் குடியமர்த்தும் திட்டம் அடுத்த ஆண்டில் நிறைவேற்றப்படும்.

அடுத்தபடியாக அரசு ஊழியர்களுக்கு அரசு செய்திருப்பது போதாது, அரசு ஊழியர்களின் குறைகள் தீர்க்கப் பட வேண்டும் என்று பலர் பேசினார்கள். அரசு ஊழியர்களின் குறைகள் அகற்றப்பட வேண்டும் என்பதற்கான வழிவகைகளை யெல்லாம் ஆராய்வதற்காக தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். 1-4-1967 முதல் அரசு செய்திருக்கிற நன்மைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பல ஆண்டுகளாக மாநில அரசு ஊழியர்கள் கேட்டுக்கொண்டிருந்த நகர ஈட்டுப் படி 1-10-1967 முதல் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு 65 லட்சம் ரூபாயை அரசு செலவழிக்கிறது. இந்த அரசு பதவி ஏற்றதிலிருந்து மூன்று முறை மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு எப்போதெல்லாம் உயர்த்தியதோ, அவ்வப் போதெல்லாம் பஞ்சப் படியை நாமும் உயர்த்தியிருக்கிறோம். அதற்காக 14.42 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகிறது. உதகை, கூனூர், கொடைக்கானல் போன்ற மலைவாசஸ்தலங்களில் இருக்கும் அரசு ஊழியர்களுக்கு குளிர்கால அலவன்ஸ் வழங்கப் பட்டிருக்கிறது. இதற்காக நாம் ஆண்டு ஒன்றுக்கு 1.57 லட்சம் ரூபாய் செலவிடுகிறோம். அரசு ஊழியர்களுக்கு விடுமுறை கால ஊதியம் 12 மாத சராசரியிலிருந்து 10 மாத சராசரியாக மாற்றப் பட்டது. விடுமுறை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக அந்த விடுமுறை காலத்திற்கான ஊதியத்தைப் பெறுவதற்கு அரசு ஊழியர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கும், அவர்களுடைய பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் திருமணத்திற்காக ஆகும் செலவிற்காக 2 ஆயிரம் ரூபாய் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது. மேலும் அரசு ஊழியர் யாராவது பதவிக் காலத்திலே இறந்து போனால் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவித் தொகையாக வழங்கப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஆசிரியர்களுடைய குறைபாடுகளைப் பற்றிக் கூறினார்கள், அதை அரசாங்கம் உணராமல் இல்லை. அதற்காகவும் டாக்டர் பால் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு ஆசிரியர் களுடைய குறைகள் எப்படித் தீர்க்கப்படலாம் என்பதைப் பற்றி ஆய்வு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்கிடையில் 89 ரூபாய் வரையில் சம்பளம் வாங்கும் ஆசிரியர்களது அகவிலைப்

படி 1-1-1967-ல் 47 ரூபாயாக இருந்ததை 1-1-1969-ல் 71 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம். 90 ரூபாயில் இருந்து 149 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கு 1-1-67-இல் 70 ரூபாய் அகவிலைப்படி இருந்தது. அதை 1-1-69 இல் இருந்து 98 ரூபாயாக உயர்த்தி யிருக்கிறோம். ரூ. 150 முதல் 209 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள் 1-1-67 இல் 90 ரூபாய் பெற்று வந்தார்கள். 1-1-1969 முதல் அகவிலைப்படி ரூ. 122 ஆகப் பெறுகிறார்கள். ரூ. 210 முதல் 399 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள் 1-1-69க்கு முன்பு 110 ரூபாய் வாங்கி வந்தார்கள் என்றால் அதற்குப் பிறகு அகவிலைப்படி 146 ஆக வாங்கி வருகிறார்கள். 400 இல் இருந்து 500 ரூபாய் வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி 1-1-67-இல் ரூ 120 ஆகத்தான் இருந்தது. 1-1-69 முதல் 164 ஆகக் கொடுக்கப்படுகிறது. நகர ஈட்டுப்படியும் அவர்களுடைய சம்பளத்தில் 7½% அளிக்கப் படுகிறது. அடுத்து 11,000 ஹையர்கிரேடு ஆசிரியர் பதவியை செக்ன்டரிகிரேடு ஆசிரியர் பதவியாக மாற்றியிருக்கிறோம். இதன்மூலம் 1967-68 இல் 5,000 பேர்களும், 1968-69-இல் 3,000 பேர்களும் செகண்டரி கிரேட் பதவிக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். மிச்சம் 3,000 பேர்களும் மாற்றப்பட்டு வருகிறார்கள். இப்படி ஹையர் கிரேடு ஆசிரியர் செகண்டரி கிரேடு ஆசிரியராக மாற்றப்படுவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஆசிரியர் 624 ரூபாய் அதிகமாகப் பெற்று வருகிறார்கள். இப்படி இந்த அரசு செய்து வந்திருக்கின்ற நன்மைகள் சிலவற்றைச் சொன்னேன். 1-4-55-க்குப் பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்குத் தான் ஓய்வு ஊதியம் உண்டு என்று வைத்திருக்கிறார்கள். 1-4-55-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வு ஊதியம் உண்டு என்று இந்த அரசு மாற்றியிருக்கிறது.

அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ளதுபோல் தனியார் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் விடுமுறை விதிகள் - லீவ் ரூல்ஸ் - 1-4-1968 முதல் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

தனியார் பள்ளிகளுக்கும் குடும்ப பென்ஷன் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சித்துறை ஆசிரியர்களுக்கும் கைத்தறி ஆடை வாங்க கடன் வசதி 1969 அக்டோபர் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மற்ற கோரிக்கைகளை எல்லாம் ஆராய்வதற்காகத்தான் டாக்டர் பால் அவர்களது தலைமையில் ஒரு குழு நியமிக்கப் பட்டிருக்கிறது என்பதைச் சொன்னேன்.

அடுத்து, இந்த மாமன்றத்தில் சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருக்கின்றன. அதிலே சக்தி பைப் நிறுவனத்தைப் பற்றியது ஒன்றாகும். அந்த நிறுவனத்தாரிடம் இருந்து பைப்புகள் வாங்கிக்கொள்வதற்கு முன்பணமாக 25 லட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு தனிநபருக்கு இப்படிச் சலுகை அளிக்கலாமா என்று கேட்கப்பட்டது. அந்த தனிப்பட்டவர் இப்போது அந்தக் கட்சியிலிருந்து மாறுபட்டு வேறிடத்திற்கு வந்திருக்கலாம். அவர் காங்கிரஸ் கட்சியில் இருந்த நேரத்தில், காங்கிரஸ் அவரால் பாதுகாக்கப்பட்டு வந்த நேரத்தில் இந்த அரசு அப்போதும் ஒரு தொழில் வளரவேண்டுமென்ற காரணத்திற்காக 4 ஆயிரம் டன்னுக்கு பைப் வாங்க அவர்களிடத்தில் ஆர்டர் கொடுத்திருக்கிறது என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த சக்தி பைப் நிறுவனத்தை எடுத்துக்கொண்டால் 2.63 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். அதிலே 19 லட்சம் மட்டுமே அந்தத் தனியாரின் முதலீடாக இருக்கிறது. மற்ற முதலீடுகள் மாநில அரசையும் மத்திய அரசையும் சார்ந்த பல்வேறு தொழில் வளர்ச்சிக்கான நிதி உதவும் நிறுவனங்களால் போடப்பட்டிருப்பதாகும். குறிப்பாக தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் ரூ. 18.55 லட்சம் முதலீடாகவும், ரூ. 19லட்சம் கடனாகவும் வழங்கி யிருக்கிறது.

இன்டஸ்ட்ரியல் கிரெடிட் அண்ட் இன்வெஸ்ட்மென்ட் ஸ்தாபனம் ரூ. 8.36 லட்சம் முதலீடாகவும், ரூ. 15 லட்சம் கடனாகவும் அளித்திருக்கிறது.

எல். ஐ. ஸி. இந்த நிறுவனத்தில் 10 லட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கிறது.

இன்டஸ்ட்ரியல் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா ரூ. 1.04 கோடி கடனாக அளித்திருக்கிறது.

இந்தியன் பாங்க் ரூ. 15 லட்சம் கடனாக அளித்திருக்கிறது. இவ்வாறு அதைச் சேர்ந்த பல்வேறு தொழில் வளர்ச்சி

நிறுவனங்கள் பெருமளவில் முதலீடாகவும், கடனாகவும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனம் ஒன்றே ஒன்றுதான் நம் மாநிலத்தில் குழாய் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை. அங்கே 700-க்கும் மேற்பட்டவர்கள் வேலை செய்து வருகின்றார்கள். இது மூடப்படுமானால், இந்த எழுநூறு, எண்ணூறு தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். நம்முடைய மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரே ஒரு குழாய் உற்பத்தித் தொழிற்சாலையும் மூடப்பட்டுவிடும். அந்த நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்த நிறுவனத்திடம் இருந்து பைப்புகள் வாங்கிக் கொள்வதற்கு முன்பணமாக ரூ. 25 லட்சம் அட்வான்ஸ் கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

விதிமுறைகளின்படி மாநிலத்திலேயே அமைந்துள்ள தொழிற்சாலையில் இருந்து பொருள்களை வாங்குவதற்கு ரேட் காண்டிராக்டுக்கு மேலும் 10 சதவீதம் விலை கொடுப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்றாலும் நாம் சக்தி பைப் நிறுவனத்தாரிடம் இந்த 25 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுக்கிற போது டி. ஜி. எஸ். டி. ரேட் காண்டிராக்ட் விலைகளிலேயே குழாய்கள் சப்ளை செய்யப்பட வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம்.

15 ஆயிரம் டன் குழாய்களுக்கான விலையில் 5-ல் ஒரு பாகமாக ரூ. 25 லட்சம்தான் அட்வான்ஸ் செய்திருக்கிறோம்.

15 ஆயிரம் டன் குழாய்கள் நமக்கு எதற்கு என்று கேட்கலாம். நாம் வரும் ஆண்டில் அவசரமாக சாக்கடைத் திட்டங்கள் பலவற்றையும், குடிநீர்த் திட்டங்கள் பலவற்றையும் உருவாக்கி நிறைவேற்றவேண்டுமென்று தீவிர திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். அந்த 15 ஆயிரம் டன் பைப்பு களுக்குத்தான் முன் பணமாக 25 லட்சம் அளித்திருக்கிறோம். அதோடு இந்த அட்வான்ஸ் தொகைக்கும் சக்தி பைப் நிறுவனத்தார் ஏழே முக்கால் சதவிகிதம் அரசுக்கு வட்டியும் செலுத்த வேண்டும்.

இது போன்று முன் பணம் அளிப்பது இந்த ஒரு நிறுவனத்துக்கு மாத்திரமல்ல. டபிளியூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 10 லட்சம் முன்னமேயே வழங்கப்

பட்டிருக்கிறது. இந்தியா மீட்டர்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூபாய் 5 லட்சம் இத்தகைய உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆக இதில் எந்த விதமான அரசியல் நோக்கமும் கிடையாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரே ஒரு குழாய் உற்பத்தி தொழிற்சாலை மூடப்பட்டு விடக்கூடாது என்பது தான் எங்கள் லட்சியம்.

சுற்றுலா கண்காட்சியைப்பற்றி நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் இங்கே பேசியிருக்கிறார்கள். நம்முடைய திரு. சித்தன் அவர்களும் பேசத் தொடங்கினார்கள். நேரம் இல்லாத காரணத்தினால் ஒன்றிரண்டு கருத்தைச் சொல்லி முடித்து விட்டார்கள். திரு. கருப்பையா அவர்கள் அதைப்பற்றிப் பேசினார்கள்.

சுற்றுலாக் கண்காட்சிக்கு இந்த அரசு ரூ. 2 லட்சம் கிராண்டாகவும், ரூ. 1.25 லட்சம் இடவாடகையாகவும் ரூ. 15 லட்சம் பல்வேறு அரசுத் துறைகளுக்கு கண்காட்சியில் பங்கு கொள்ளும் செலவிற்காகவும் ஆக நாலே முக்கால் லட்சம் கொடுத்திருக்கிறது. இவ்வரசின் சாதனைகளை மக்களுக்கு நல்ல முறையில் விளக்கிக் கூற வேண்டுமென்ற நோக்கத்துடனேதான் இந்த சுற்றுலாக் காட்சியில் அரசு பங்கெடுத்துக்கொண்டுள்ளதே தவிர தனி நபர் களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காக அல்ல, கண்காட்சியை தமிழகத்தில் மட்டும் அல்ல இந்தியா முழுவதிலும் வளர்க்கவேண்டுமென்பதற்காகத்தான் பெருமுயற்சி செய்யப் பட்டிருக்கிறது. இந்த அரசு வந்த பிறகுதான் இப்படிச் செய்யப் பட்டிருக்கிறதா, இதற்கு முன்னால் எல்லாம் எப்படி நடந்து வந்திருக்கிறது என்பதை சற்று நீண்ட விளக்கமாக இருந்தாலும்கூட எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

1952-53-ல் தேனாம்பேட்டையில் நடைபெற்ற அகில இந்திய கதர் சுதேசி கண்காட்சியை அமைத்தவர்கள் ஒவ்வொரு டிக்கட்டின் பேரிலும் ஒவ்வொரு அணா அதிகமாக வசூலித்து அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையை மாநில அரசுக்கு கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். அதற்காக அதிகப் பணமும் முன்கூட்டியே பெற்றுக்கொண்டார்கள். ஒத்துக்கொண்டபடி ஒரு டிக்கட்டின் மேல் 1 அணா அதிகம் வைத்து ரூ. 32,935 வசூல்

செய்தார்கள். ஆனால் அதை அரசுக்கு செலுத்தவில்லை. எப்படி இந்திரா காந்தியார் தேர்தல் சமயத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்திற்கு வந்திருந்தபோது அரசுக்கு ஆன செலவை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தருவதாக ஒத்துக்கொண்டு இதுவரை அந்தத் தொகையை செலுத்தவில்லையோ அதுபோலத்தான்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அந்தப் பணத்திற்குப் பொறுப்பு நான் என்று சொல்லியிருக்கிறேன். அந்த விவரம் எனக்கு இன்னும் வரவில்லை. இதுபற்றி திரு. சுப்பிரமணியம் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் குறைந்த தொகையைச் சொன்னார்கள். ஆனால் அரசிடம் இருந்து அதிகமான தொகை கேட்டு வந்திருந்தது. நான் அதுபற்றி சீப் செக்ரடரியிடமே சரியான கணக்கை அனுப்பிவையுங்கள், அதற்குப் பொறுப்பு நான் என்று தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் திரு. கருத்திருமன் அவர்களைக் குற்றம் சாட்டவில்லை. அதற்கு அவர் பொறுப்பாளியும் அல்ல. அது எப்படி வரவில்லையோ அப்படி இது வரவில்லை என்பதற்கு உதாரணம் காட்டினேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவருக்குப் பல முறை கடிதம் எழுதப்பட்டுவிட்டது. நோட்டீஸ் விடவேண்டியதுதான் பாக்கி. அப்படி ஒரு அணா வீதம் வசூலிக்கப்பட்ட ரூபாய். 32.935 பல முறைகள் அரசு கடிதம் எழுதியும் அந்தப்பணம் வரவில்லை. இவற்றையெல்லாம் தவறுகள் என்று எதற்காக எடுத்துச் சொல்கிறேன் என்றால் தவறு செய்யலாம் என்று குறிப்பிட அல்ல. காலாகாலமாக தமிழகத்தில் கண்காட்சிகளை வளர்ப்பதற்காகப் பணம் கொடுக்கப்பட்டு வந்து இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இவற்றை எல்லாம் குறிப்பிட்டேன். 1960-லே பெங்களூரிலே மைசூர் மாநில காங்கிரஸ் நடத்திய மாநாட்டிலே பல்வேறு மாநில அரசுகளும் கலந்து கொண்டிருக்கின்றன, அதிலே கலந்துகொள்வதற்காக தமிழக அரசின் பணத்திலிருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1961-ஆம் ஆண்டிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை யொட்டி கண்காட்சி மதுரையிலே நடைபெற்ற பொழுது மாநில அரசு 53 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறது. 1959-60-இல்

புதுடெல்லியில் நடைபெற்ற உலக தேசியக் கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக அளிக்கப் பட்ட தொகை 6.85 லட்சம் ஆகும். இப்படி ஒரு கட்சியினுடைய வசதிக்காக சேர்க்கப்படுகிற பணத்திற்கு மாநில அரசு பல நேரங்களில் கொடுத்திருக்கிறது. 1962-லே சென்னை தீவுத் திடலிலே விவசாயக் கண்காட்சி நடத்துவதற்காக தனிப்பட்ட வர்கள் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டு அதற்கு 11 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1968-ம் ஆண்டிலே நடந்த வர்த்தகத் தொழில் கண்காட்சிக்காக அளிக்கப்பட்ட தொகை 13.95 லட்சம் ஆகும். இதற்காக 1968-ஆம் ஆண்டிலே மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கையெழுத்திட்டார்கள். 1966-ஆம் ஆண்டிலே திரு. ஹாஜா ஷெரிப் அவர்களைக் காரியதரிசியாகக் கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிற்காக ஒதுக்கப் பட்ட தொகையைச் சொல்கிறேன், பயந்து விடக் கூடாது. சாலை களுக்காக, நெடுஞ்சாலைத்துறை சாலைகளுக்கான ஆணை எண் 1357-ன் படி 13 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. மாநகராட்சிச் சாலைகளைச் செப்பனிட 13 லட்சத்து இரண்டாயிரம் ரூபாய்; குடிநீர் வசதிக்காக 3 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய்; கழிவுநீர்க் குழாய்களைப் பொருத்துவதற்காக 3 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய்; வீட்டு வசதி வாரியத்திற்கு முன் பணமாக அளிக்கப்பட்டது 50 ஆயிரம் ரூபாய்; இண்டியன் மேனுபாக்சரர்ஸ் அசோஷியேஷன் என்ற பெயரால் திரு. ஹாஜா ஷெரிப் அவர்கள் செயலாளராக இருந்தபொழுது அந்த உதவிகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன. புதிய அரசு வந்ததற்குப் பிறகும் 13.95 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பழைய அரசு கலந்து கொண்டு கணிசமான தொகைகளைத் தந்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுகள் இவை. சுற்றுலாக் கண்காட்சிக்கு பல மாநிலங்களிலிருந்து வந்து ஸ்டால்கள் வைத்திருக்கிறார்கள். அந்த முறையிலேதான் தமிழக அரசின் சார்பிலேயும் ஸ்டால்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஒன்றும் பெரிய புகாருக்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, நேற்றுக்கூட அவர்கள் சொன்னார்கள். இந்தக் கண்காட்சிக்காக மனோகரன், சிட்டிபாபு, பரிமளம் இவர்கள் நடத்துகிற கண்காட்சிக்காக 4 லட்சத்து 75 ஆயிரம் கொடுத்தது

மிகைப்படுத்தப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம், நான்கு லட்சம், 10 லட்சம் என்று தரப் பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது ஒரு வார்த்தை கேட்டிருக்கிறோமா? அந்தப் பண்பாட்டை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சாதாரண விஷயத்தில் குற்றச்சாட்டுகள் சொல்ல நாங்கள் விரும்பினோமா? நீங்கள் எதற்கெடுத்தாலும் அது சரியில்லை, இது சரியில்லை என்று சொல்கிறீர்கள். இந்த ஆண்டு தேனாம்பேட்டையில் நடக்கின்ற கண்காட்சிக்காக 1 லட்சம் ரூபாய் தரப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டும் தரப்பட்டிருக்கிறது. பார்க் பேர் கண்காட்சிக்கும் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தரப்பட்டிருப்பதை அந்தச் செயலாளர் பாராட்டிப் பேசியிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். நல்ல வேளையாக வெளியிலேயாவது பாராட்டி யிருக்கிறார்கள். கட்சியின் சார்பிலே நடத்தப்படுகின்ற கண்காட்சி களுக்கு இனிமேல் எந்தவிதமான பணமும் தருவதில்லை என்ற முடிவு அரசு எடுத்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பேசிய உறுப்பினர்களில் பலர் கவர்னர் உரையிலே எந்தவிதமான கொள்கையும் இல்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரங்களை மாநில அரசு பெறவேண்டும் என்று சொல்லியிருப்பதைவிட கவர்னர் உரையிலே புதிய கொள்கையை வலுவான கொள்கை என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை. அன்று பேசிய தமிழரசுக் கழகத்தலைவர் திரு. ம. பொ. சி. அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். மத்திய அரசின் பிடியிலிருந்து அதிகமான அதிகாரங்களைப் பெறவேண்டும், அந்த சிக்கலிலிருந்து விடுபட்டாகவேண்டும். இன்னும் நம்முடைய மாநிலத்திற்காகச் செய்யவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. இந்த மூன்றாண்டுக்காலத்திலும் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிற்பட்டு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கிற இந்த ஓராண்டுக் காலத்திலும் நாங்கள் எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்று மார்தட்டிக்கொள்ளவில்லை. செய்து விட்டோம் பாராட்டுங்கள் என்று உங்களை நாங்கள் வற்புறுத்தவில்லை. போனால் போகிறது. அண்ணா மறைந்ததற்குப் பிறகு செய்து

வருகிறார்கள் என்று நான்கு வார்த்தைகள் திருப்தியாகச் சொல்வீர்களா என்று பார்த்தோம். அதுவும் இல்லையென்றால் பரவாயில்லை. மக்களுக்கு எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்ற கர்வத்தோடு நாங்கள் இல்லை. இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. அதற்குத் தடையாக அதிகாரங்கள் பல மத்திய அரசினிடத்திலே குவித்துவைத்துக் கொண்டு இருக்கிறார்கள். வேறு மாநிலங்களிலே உள்ள தொழில் முன்னேற்றத்தைக் காட்டிலும் தமிழகத்திலே முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இன்னும் தொழிலிலே முன்னேறுவதற்கு வாய்ப்புக் கூறுகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு முடியாமல் லைசென்ஸ் வழங்குகின்ற உரிமையை மத்திய அரசு வைத்துக் கொண்டு உரிமம் கேட்க 10 தடவைகள் கடிதம் எழுதி, நான்கு தடவைகள் அமைச்சர்கள் சென்று சொல்லி பிறகு உரிமங்களைப் பெறுகிறோம் என்ற பரிதாபகரமான சூழ்நிலை இருக்கிறது. இன்னும் எத்தனையோ அதிகாரங்கள் பெறவேண்டியிருக்கின்றன. அந்த அதிகாரங்களைப் பெறுவதற்கு நாம் முயல வேண்டும். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே யார் யார் இருக்கலாம் எப்படிப்பட்டவர் இருக்கலாம் என்பதைப்பற்றி இடதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியினர் தெரிவித்தார்கள். அந்தக் குழு அமைக்கப்பட்டாகிவிட்டது. என்ன என்ன அதிகாரங்கள் பெறவேண்டும் என்பதைச் சட்ட ரீதியாகத் தெரிந்துகொண்டு அரசியல் ரீதியாக அவற்றைப் பெற பிறகு முயற்சிக்கலாம். வாதிடுவோம், வாதிட்டுப் பயனில்லையென்றால் போராடுவோம். அந்த நேரத்திலே எதிர்க்கட்சித் தலைவர் நம்மோடு இருப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் மத்திய அரசு இப்பொழுது அவருடைய அரசு அல்ல. நிச்சயமாக அப்பொழுது அவர் நம்மோடு இருப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன், மாநில அரசுக்கு மத்திய அரசிடமிருந்து அதிகமான அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற கொள்கையில் வெற்றி பெற நாம் பாடுபடுவோம், பாடுபடுவோம் என்று தெரிவித்துக்கொண்டு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுத்திருக்கும் திருத்தங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

உரை : 8 நாள் : 02.04.1971

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையின் மீது இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேழவேந்தன் கொண்டுவந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை யொட்டி எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்களுடைய நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் உள்பட மொத்தம் 67 பேர் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 183 பேர் இங்கே இருந்தாலும், கழகத்தின் சார்பிலே உரையாற்றியவர்கள் 33 பேர். எதிர்க்கட்சியிலே மொத்தம் 52 பேர் இருந்தாலும் 34 பேர் உரையாற்றுவதற்கான வாய்ப்பினை இங்கே பெற்றிருக்கிறார்கள். இது ஒன்றே ஆளுங்கட்சி எதிர் தரப்பிலே உள்ளவர்களை நல்ல வகையிலே மதிக்கிறது என்பதற்குச் சரியான சான்றாகும் என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்ட தேர்தலைப்பற்றி விவாதிக்கையில் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றும்போது காரசாரமாக விவாதம் நடைபெற்றதை இந்த மாமன்றத்திலே உள்ள அனைவரும் நன்றாக அறிவோம். ஆனால் ஒவ்வொருவரும் தங்களுடைய தொகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்களை எடுத்துச் சொல்லி விட்டு, இனிமேல் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறியதில் இருந்தே, யாரும் இந்த வன்முறை

வெறியாட்டங்களை நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் விரும்பவில்லை என்பது வெகு தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசும்போது அழகாகக் குறிப்பிட்டார்கள், "நடந்தவை களை மறந்துவிட்டு, ஜனநாயகத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு, நாட்டின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து நின்று பாடுபடுவோம்" என்று. அப்படிப் பாடுபட வேண்டும் என்று எண்ணுகிற நேரத்தில், நடந்து முடிந்த தேர்தல் ஏதோ ஒரு மோசடியானது, தவறாக நடந்து விட்டது என்ற பிரசாரம் இங்கே அவையிலே செய்யப்பட்டாலும் சரி, அல்லது வெளியிலே செய்வதாக இருந்தாலும் சரி, அது நல்லதல்ல, பொருத்தமுடையதும் அல்ல. தேர்தல் முடிவு வெளியானதும் சுதந்திராக் கட்சியின் ஒரு பெருந்தலைவரான திரு. மசானி அவர்கள் தெரிவித்த கருத்து 12-3-1971 தினமணி பத்திரிகையில் வெளியாகி இருந்தது. வாக்காளர்கள் திட்டவட்டமாக பாராளுமன்றத்திற்கும், அவரது கட்சிக்கும் நம்பிக்கையோடு அளித்த வாக்குகளை, ஜனநாயகவாதி என்ற ரீதியில், தீர்ப்பினை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக சுதந்திரக் கட்சித் தலைவர் மசானி இன்று பத்திரிகையில் கூறிய கருத்துக்கள் என்று செய்தி வெளியாகி இருந்தது. அதுதான் ஜனநாயகத்திலே போற்றிப் பாராட்ட வேண்டிய நல்ல மரபாகும்.

அடுத்தபடியாக, மையிலே ஏதோ இரசாயனக் கலவை, ஏதோ மாயங்கள் நடந்தன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார், வரவு செலவுத் திட்டத்தின் மீது பேசும்போது, இந்திர ஜாலங்கள் நடந்துவிட்டன என்று சொன்னார்கள். இந்திர ஜாலங்கள் என்று அவர் குறிப்பிடுவதை நான் புரிந்து கொள்கிறேன். இந்திர ஜாலங்கள் நடந்து விட்டன என்று குறைப் பட்டார்கள். மையிலே தவறு இருக்கிறது, அதை வைத்தால் உடனே காய்ந்து விடுகிறது, வேறு மாதிரி மாறி விடுகிறது என்றெல்லாம் இன்றைக்கும் பேசப்படுகிறது, எழுதப்படுகிறது.

வாக்குச் சீட்டில் மோசடி நடந்ததா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்ட நேரத்தில், ஜனநாயகக் கூட்டணியில் உள்ள சில கட்சிகளின் ஆதரவோடு சுயேச்சையாகப் போட்டியிட்ட டாட்டா அவர்கள் அந்தப் புகாரை மறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அது 19-3-1971-ம் தேதிய இந்தியன் எக்ஸ்பிரஸ்

பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது. தனது தோல்வியை எதிர்த்து தான் வழக்குத் தொடரப் போவதாக வந்துள்ள செய்தியை மறுத்து, நாவல் டாட்டா அவர்கள் அறிக்கை ஒன்று விட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களாவன :-

"நான் தேர்தல் முடிவை எதிர்த்து மனு எதையும் தாக்கல் செய்ய விரும்பவில்லை. அவ்வாறு ஒருபோதும் யோசித்தது மில்லை. நான் வழக்காடப் போவதாக வந்துள்ள செய்தி குறும்புத் தனமானது. வாக்குச் சீட்டுகளில் இரசாயன மை பயன்படுத்தப் பட்டது என்னும் புகார்கள் நெருங்கிய தொடர்பில்லாதது. கற்பனையானது. மர்ம இரசாயன மை பயன்படுத்தப்பட்டது, விசேஷ வாக்குச் சீட்டுகளிருந்தன என்ற புகார்களெல்லாம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் நான் சுமார் 20,000 வாக்குகளைத்தான் பெற்றிருப்பேன். நீரிலிருந்து வெளியே தூக்கிப் போட்ட மீன் போலாகிவிட்டேன். மீண்டும் தண்ணீருக்கே போகவிரும்புகிறேன்."

நான் இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், மக்களின் தீர்ப்பை எவ்வளவு மிகுந்த பெருந்தன்மை யோடு அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் நான் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அதேபோல் நேற்றையதினம் மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். டி. பார்த்தசாரதி அவர்கள், "சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலில் இந்திரா காங்கிரசுக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு தந்ததால் அதன் முற்போக்குக் கொள்கையில் மக்கள் தங்கள் நம்பிக்கையைத் தெரிவித்தனர் என்பது நிரூபணமாகிவிட்டது. இந்திரா காந்தியின் தலைமைக்கு மக்கள் பெருவாரியான ஆதரவு அளித்தனர். ஜனநாயகவாதி என்ற முறையில் மக்கள் தீர்ப்பை நான் ஏற்கிறேன்" என்று கூறி, அந்த (நிஜலிங்கப்பா) காங்கிரஸையே கூட அவர் விட்டிருக்கிறார். அவரோடு வேறு சிலரும் சென்றிருக்கிறார்கள். இப்படி தேர்தல் முடிவை அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டில் ஏதோ மோசடி நடந்து விட்டது, மோசடி நடந்துவிட்டது என்று இன்றைக்கும் பேசப்படுகிறது. 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ ஒரு விபத்தின்

காரணமாக திடீரென்று வெற்றி பெற்று புதிய ஆளும் கட்சியாக வந்து அமர்ந்து விட்டது, ஆகவே இந்தத் தடவை அவர்கள் மீண்டும் வருவது என்பது நம்பமுடியாத ஒன்று, என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். கோட்டையிலே யார் யார் எந்தெந்த இடத்தில் வந்து அமர்வது என்று மந்திரிகள் பட்டியலைக் கூட அவர்களாகவே தயாரித்துக்கொண்டு, மந்திரியாக நியமிக்கப்பட வாக்குறுதி அளிக்கப்பட்ட ஒருவர் கூட தன் கண் பார்வையில் சற்று கோளாறு இருக்கிறது என்ற காரணத்திற்காக தமக்குத் தெரிந்த டாக்டர் ஒருவரை நாடிச் சென்று பதவிப் பிரமாணம் படிப்பதற்காகத் தனக்குக் கண்ணாடி மாற்றப்படவேண்டும் என்று கேட்கிற அளவிற்கு அவர்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். பெரும் தலைவர்கள் எல்லாம், நிருபர்கள் அவர்களைச் சந்திக்கப் போனபோது "பத்தாம் தேதிக்குப் பிறகு கோட்டையில் வந்து சந்தியுங்கள்'' என்று சொல்கிற அளவிற்கு நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அவர்கள் இப்படி நம்பிக்கை தெரிவித்து அறிக்கை வெளியிட்டார்கள். நாட்டில் பலரும் அப்படி என்ன ஒரு மாறுதல் திடீரென்று நிகழப் போகிறது என்று எதிர் பார்த்தார்கள். அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் பெட்டியில் இருக்கிற நேரத்தில் யார் யாருக்கு எந்தெந்த இடம், யார் யாருக்கு என்னென்ன இலாகாக்கள் என்றெல்லாம் அவர்கள் பேசிப் பிரித்துக்கொண்டிருந்த நேரத்தில், "என்னைப் பிடித்து சிறையில் வைப்பார்களாம், வைத்தால் என்ன, நாங்கள் ஏழு நாட்களுக்குப் பிறகு விடுதலையாகி விடுவோம்'' என்றும் ஆட்சிக்கு வந்துவிடுவோம் என்றும் மிகுந்த தைரியத்தோடும், துணிவோடும், நம்பிக்கையோடும் எண்ணிக்கொண்டிருந்தவர்கள், பத்தாம் தேதி அன்று வாக்குகள் எண்ணப்பட்டு முற்றிலும் மாறான முடிவுகள் வந்ததும் இந்த முடிவிற்குப்பிறகு, மக்கள் அளித்த தீர்ப்பிற்குப் பிறகு, தங்களுடைய கூற்றை அப்படியே மாற்றிக்கொண்டு தேர்தலே மோசடியானது, தேர்தலே நம்பிக்கையற்றது, இந்தத் தேர்தலே தவறானது என்று தேர்தல் அடிப்படையையே தகர்க்கத் தூண்டி விட்டார்கள்.

நேற்றையதினம் பலர் இங்கு பேசியிருக்கிறார்கள். தேர்தலில் இன்னும் நவீனமான முறைகள் எல்லாம் பயன்படுத்தப் படவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. மேலும் நவீனமான முறைகள் தேவைதான். ஆனால் தேர்தலில் அங்கொன்றும் இங்கொன்றும்

என்று சில குறைகள் இருக்கலாமே தவிர, குற்றங்கள் இருப்பதாக நாம் கூறுவது நல்லதல்ல. குறைகளுக்கும் குற்றங்களுக்கும் உள்ள பொருளை நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். குறைகள் என்றால் ஆங்காங்கே சென்று உடனடியாகக் களையப்பட வேண்டியது. தெரிந்து மீறிச் செய்யப்படுகிற காரியங்கள் குற்றங்களாகும். அப்படி எந்தக் குற்றமும் இந்தத் தேர்தலில் நடைபெறவில்லை.

முன்பெல்லாம் சொல்வார்கள், மாண்புமிகு உறுப்பினர், மதுரை உறுப்பினர் திரு. திருப்பதி அவர்கள் குறிப்பிட்டதுபோல், "பெட்டியை மாற்றி விட்டார்கள்", "பெட்டியை உடைத்து விட்டார்கள்" என்றெல்லாம் சொல்வார்கள். எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. 1957-ம் ஆண்டு என் நண்பர் ஒருவர் தேர்தலில் நின்றார். நின்ற அவர், ஒரு கூட்டத்தில் வந்து பேசும்போது அன்றுதான் அவருடைய பெட்டி உடைக்கப்பட்டு ஓட்டுகள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் மேடையில் பேசும்போது முதல் தேதி முதல் எம். எல். ஏ. பேசுகிறேன் என்று அவர் உறுதியாகச் சொன்னார். அவர் பேசிவிட்டு இறங்கியதும், அவர் தோற்றுவிட்டார் என்ற செய்தி வந்தது. அதிலும் மூன்றாவது இடத்தில் வாக்குகள் வாங்கினார் என்ற செய்தி வந்தது. "நீங்கள் அப்படிப் பேசினீர்களே, தோற்று விட்டீர்களே இப்போது", என்று கேட்ட போது அவர், "பெட்டியை உடைத்து விட்டார்கள்" என்று கோபத்தோடு சொன்னார். நான் கொஞ்சம் அமைதியோடு, "பெட்டியை உடைக்காமல் எப்படி எண்ண முடியும்? பெட்டியை உடைத்துத்தானே வாக்குச்சீட்டுகளை எண்ணிப் பார்க்க வேண்டும்?" என்று சொன்னேன். ஆக, தோற்றுப்போகிறபோது இம்மாதிரி எதையும் சொல்லத் தோன்றும். ஆனால் அதுதான் உண்மை என்று நம்பிக் கொண்டிருக்கக்கூடாது. நடந்தது என்ன என்பதை நாடு நன்கு அறியும்.

நம்முடைய பெருமதிப்பிற்குரிய உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது, இந்தத் தேர்தலில் ஜாதி உணர்வுகள் தலைகாட்டின, கடவுள்கள் இழுக்கப்பட்டார்கள், ஆஸ்திக நாஸ்திக வாதங்கள் தேவையில்லாமல் தேர்தலில் பயன்படுத்தப்பட்டன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆமாம், இந்தத் தேர்தலில், என்றைக்கும் இல்லாத அளவிற்கு வகுப்புணர்ச்சிகள் தூண்டப்பட்ட காட்சியை நாம் பார்த்தோம்.

ஆனால், அந்த வகுப்புவாத சக்திகள் பெரும்பான்மையான அளவில் வெற்றியைப் பெறவில்லை என்பதையும் நாம் கண்டோம்.

எங்கேயோ நடைபெற்ற, சேலம் நகரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இணைத்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியோடு இணைத்து, ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்கக் கூடாது என்றெல்லாம் சேலம் நிகழ்ச்சியோடு தேர்தலுக்கு முடி போட்டார்கள். சேலம் நிகழ்ச்சியை, இன்றும் சொல்கிறேன், யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. சேலத்தில் நடைபெற்ற சம்பவங்களை யாரும் ஏற்றுக்கொள்ள இயலாது. நான், சேலம் சம்பவம் நடைபெற்ற இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம் மதுரை சென்றிருந்தபோது நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்ட நேரத்தில், "சேலம் நிகழ்ச்சிகளை நான் ஏற்றுக்கொள்ளவில்லை, காவல்துறையினர் அதைப்பற்றி நடவடிக்கைகள் எடுப்பார்கள்" என்றுதான் கூறினேனே அல்லாமல், "அவர்களிடம் விளக்கங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன" என்று கூறினேனே தவிர, "சேலம் நிகழ்ச்சியில் என்ன தவறு?" என்று நான் கேட்கவில்லை.

ஆனால், சேலம் நிகழ்ச்சி நடந்து முடிந்து விட்டது. அதற்குப் பிறகும் சேலம் நிகழ்ச்சியில் என்னென்ன நடந்ததோ அவற்றையெல்லாம் பெரிய பெரிய சுவரொட்டிகள் போட்டு ஊரெல்லாம் ஒட்டவேண்டியது அவசியந்தானா? எண்ணிப் பார்க்க வேண்டும். உள்ளபடியே கடவுள்மீது நம்பிக்கையுள்ளவர் கள் என்றால் அப்படிச் செய்வார்களா?

என்ன போட்டிருந்தார்கள் சுவரொட்டிகளில்? ராமன் படத்தையும், முருகன் படத்தையும் போட்டு, பெரியார் அதை செருப்பால் தாக்குவது போலவும்போட்டு, அதை நான் பார்த்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருப்பதைப் போலவும் போட்டு, ஊரெல்லாம் சுவரொட்டிகள் ஒட்டினார்கள். உள்ளபடியே, கடவுளே அதை அனுமதிக்கக்கூடிய காரியமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். சேலம் நிகழ்ச்சி தவறு என்றால், ஊரெல்லாம் அந்தத் தவறு இப்படித்தான் நடந்தது என்று சொல்லவேண்டுமா? சிந்தித்துப் பார்க்க நமக்கெல்லாம் உரிமை உண்டு.

ஒருவரின் தகப்பனாரை ஒருவன் சண்டையில் அடித்து விடுகிறான். அப்படி அடிக்கப்பட்ட நேரத்தில் அதை

புகைப்படமும் எடுத்துவிடுகிறான் ஒருவன். அடித்தவன் மீது அடிபட்டவனின் அன்பு மகன், ஒன்று வழக்கு மன்றத்திற்குச் செல்வான். இல்லை, வழக்குமன்றத்திற்குச் சென்று விவகாரத்தை அவ்வளவு பெரிதாக்காமல் சும்மா இருந்து விடுவான். இந்த இரண்டையும் விட்டுவிட்டு, அடித்தவன் தீயவன் என்பதை உலகத்திற்குச் சொல்ல வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட அந்த புகைப்படத்தைப் பெரிதாக்கி, அதை ப்ளாக் செய்து, அழகான வண்ணத்தில் சுவரொட்டிகள் அடித்து, அதை ஊரெல்லாம் ஒட்டினால், அந்தத் தந்தை மகனைக் கூப்பிட்டு, "அட பாவி, அவன் ஒரு இடத்தில்தான் என்னை அடித்தான், நீ ஊரெல்லாம் என்னை அடிக்கச் செய்திருக்கிறாயே" என்று கூறி அவர் வருத்தப்பட மாட்டாரா?

அதேபோல் கடவுள், அவர்களாவது ஒரு இடத்தில் செய்தார்கள், நீங்கள் ஊர் எல்லாம் செய்திருக்கிறீர்களே, பார், பார், உங்களுக்கு 15 இடங்களுக்கு மேல், 6 இடங்களுக்கு மேல் ஒரு இடத்தில் கூட வெற்றி அளிக்கப் போவதில்லை என்று, இது மக்கள் அளித்த தீர்ப்பு என்பது மட்டுமல்ல, மகேசனும் தீர்ப்பளித்திருக்கிறார். எங்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வதுண்டு, மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று. மகேசனும் சேர்ந்து அளித்த தீர்ப்புதான் இந்தத் தீர்ப்பு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், இந்த ஆட்சியிலே பத்திரிகை சுதந்திரம் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டார்கள். ஒரு பத்திரிகையிலே சில வெறுக்கத்தக்க, வேண்டத்தகாத படங்கள், வெளிவரத்தகாத படங்கள், வெளியிடப்பட்டன என்ற காரணத்தால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த நடவடிக்கைகளின் உள் பொருளுக்கு நான் செல்ல விரும்பவில்லை.

இந்த ஆட்சி நான்காண்டு காலத்தில் எத்தனை பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுத்தது? எத்தனை பத்திரிகை களிடமிருந்து ஜாமீன் தொகை கேட்டது? எத்தனை பத்திரிகைகள் மீது தடை விதித்தது? எத்தனை நாடகங்களுக்குத் தடை போட்டது? எத்தனை நூலுக்குத் தடை போட்டது? 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் எத்தனை பத்திரிகைகள் மீது

நடவடிக்கை எடுக்கப்பட்டது தெரியுமா? 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் மித்திரன் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்பட வில்லையா? தினத்தந்தி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்பட வில்லையா? அதனுடைய உரிமையாளர் கைது செய்யப்படவில்லையா? முரசொலி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அதனுடைய ஆசிரியர் கைது செய்யப்படவில்லையா? 'மாலை மணி' பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அதனுடைய அலுவலகத்தில் புகுந்து ஆசிரியர் கைது செய்யப் படவில்லையா? விடுதலை, திராவிடநாடு போன்ற பத்திரிகை களிடத்தில் ஜாமீன் தொகை கேட்கப்படவில்லையா? 'இரணியன்' நாடகம் தடை செய்யப்படவில்லையா? 'தூக்குமேடை' நாடகம் தடை செய்யப்படவில்லையா? 'உதயசூரியன்' நாடகம் தடை செய்யப்படவில்லையா? 'போர்வாள்' நாடகம் தடை செய்யப் படவில்லையா? நூல்களைப் பொறுத்தவரையில், பெரியார் பொன்மொழி, இலட்சிய வரலாறு, ராவணக்காவியம் போன்ற பல நூல்கள் தடுக்கப்படவில்லையா? அரசாங்கச் சார்பில் தடை உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன, பத்திரிகை சுதந்திரம் பறி போயிற்று என்று எப்படிச் சொல்கிறார்கள் என்றால், எங்கள் அமைச்சரவையில் இருக்கும் யாரைப் பற்றியாவது, ஆளும் கட்சியில் இருக்கும் எவரைப் பற்றியாவது, தனிப்பட்ட முறையில், மக்கள் தவறாகப் புரிந்துகொள்ளவேண்டுமென்ற கெட்ட நோக்கத்தோடு எழுதப்படுகிற விஷயங்களை நாங்கள் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமல் வேறு எங்கே செல்வது? கருணாநிதி தன்னுடைய கட்சிப் பணத்தை, தேர்தல் நிதியை எடுத்து, சினிமா படம் எடுத்துவிட்டான் என்று பத்திரிகையில் செய்தி போட்டார்கள். நானும் ஒவ்வொரு கூட்டத்திலும் இல்லை, இல்லை என்று சொன்னேன். அவர்கள் ஆமாம், ஆமாம், என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றால்தான், அதற்குச் சரியான வழிகாணமுடியும் என்று நீதிமன்றத்திற்கு சென்றோம். நீதிமன்றத்திற்குச் செல்கிறவர்கள் நீதிமன்றம் தரும் தீர்ப்பை ஏற்கத் தயார் என்று செல்லும் நேரத்தில் எழுதியவர்களும் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராகத் தான் இருக்க வேண்டும். சில பத்திரிகைகளால் எங்கள் மீது

சுமத்தப்பட்ட அபாண்டங்களை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டதே தவிர, எந்தப் பத்திரிகையும் தடைசெய்யப் படவில்லை. எந்த நாடகமும் தடை செய்யப்படவில்லை. ஒரு நாடகத்தைத் தடைசெய்ய வேண்டுமென்று, காங்கிரஸ் ஒன்றாக இருந்த காலத்தில், காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் கூட நான் எழுந்து, "எழுத்து உரிமையைப் பறிப்பது நல்லதல்ல. எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் ஆதரித்தால் ஆதரிக்கட்டும், இல்லா விட்டால் மூட்டை கட்டிக்கொண்டு செல்லட்டும்" என்று சொன்னேனே தவிர, ஆமாம், நாடகம் தடைசெய்யப் படவேண்டுமென்று சொல்லவில்லை, இதை நாடு நன்றாக அறியும். அது பத்திரிகையிலும் வந்து இருக்கிறது.

தேர்தல் நேரத்தில் நடந்துவிட்ட கொலைகள் 17 என்று அன்றையதினம் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் பேசும்போது சொன்னேன் அதற்கெல்லாம் ஆளுநர் உரைக்குப் பதிலளிக்கும் நேரத்தில் குறிப்பிடுகிறேன் என்று. 17 கொலைகள் நடந்து இருக்கின்றன என்று சொன்னால், அவை தேர்தல் காலத்திற்கு முன்னும் பின்னும் நடைபெற்று இருக்கின்றன. நடைபெற்ற கொலைகள் தேர்தலுக்குத் தொடர்புடைய கொலைகள் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்வது தவறாகும். 17 கொலைகளில் ஒன்பது பத்து கொலைகள் அரசியல் தொடர்புடையனவாக உள்ளன, மற்றபடி தனிப்பட்ட தகராறுகள் அவர்களுக்குள்ளே இருந்ததால் ஏற்பட்டன என்றுதான் நமக்குச் செய்திகள் கூறுகின்றன. அந்த வழக்குகள் அனைத்தும் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால், நான் அதன் மீது அதிகம் ஆராயப் புக வில்லை என்றாலும், நாம் இந்த மன்றத்தில், ஒவ்வொரு நாளும், 'கொலைகள் விழக்கூடாது, வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக் கூடாது' என்று பேசிக்கொண்டே இருக்கிற காலத்தில்தான், நேற்று இரவு கூட, பறங்கிமலைத் தொகுதியில், எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வெற்றி பெற்று வந்த தொகுதியில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முருகேசன் குத்திக் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். ஆகவே, கொலைகள் எந்த அரசியல் காரணத்திற்காக நடைபெற்றாலும், எந்த அரசியல் கட்சிக்காரர்களால் நடத்தப்பட்டாலும், அவைகள் தடுத்து நிறுத்தப்படவேண்டும். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இதைச்

செய்தாலும் மிகவும் கண்டிக்கத் தக்கதுதான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் விரும்புகிறேன். பலரும் இங்கே அபிப்பிராயம் தெரிவித்தார்கள். சர்வ கட்சித் தலைவர்களும் சேர்ந்து அறிக்கை விடவேண்டுமென்று சொன்னார்கள். நான் அதற்கு மறுப்புக் கூறவில்லை. நாம் அறிக்கை விடுகின்ற அதே நேரத்தில், நமக்கு அடுத்து இருக்கிற ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள தலைவர்களும் அந்த முறையைக் கடைப்பிடித்தாக வேண்டும். தமிழ்நாட்டில் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வரும் பண்பாடும், நாகரீகமும் காப்பாற்றப் படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் உரையில் எந்தத் திட்டங்களும் இல்லை, எந்தக் கொள்கையும் இல்லை என்று குறை சொல்லப்பட்டது. ஆனால், இந்த கவர்னர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திலும், இடைக்கால நிதி-நிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெற்ற நேரத்திலும், ஆளும் கட்சியின் சார்பில் நாம் பல்வேறு வகையான முற்போக்குக் கொள்கைகளை எல்லாம் நிறைவேற்றக் காத்து இருக்கிறோம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறோம். நாம் எந்த முற்போக்குத் திட்டங்களை யெல்லாம், அதுவும் குறிப்பாக, நிஜலிங்கப்பா காங்கிரஸ் மூலமாக, பல முற்போக்குத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என்று கோரிக்கை விடுகிற நேரத்தில், நாம் மெத்த மகிழ்ச்சியோடு அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில், ஓரக் கண்ணால் டாக்டர் ஹாண்டே அவர்களைப் பார்த்து, இது எல்லாம் உங்கள் கட்சிக்கு, ஜனநாயகக் கூட்டணிக்கு உடன்பாடுதானா? என்று பார்ப்பேனே தவிர, அதை நிறைவேற்றக் கூடாது என்ற எண்ணம் கிஞ்சிற்றும் இல்லை. முற்போக்குத் திட்டம் யார் சொன்னாலும் அதை நிறை வேற்றித் தர நாங்கள் தயாராக இருக்கிறோம். அவற்றின் மூலம் எங்களுக்கு நன்மையே தவிர தீமை ஒன்றும் இல்லை. கைத்தறி நெசவாளர்களைப் பற்றிச் சொல்ல வில்லை, சேது சமுத்திரம் திட்டத்தைப் பற்றிச் சொல்லவில்லை, அதைச் சொல்ல வில்லை, இதைச் சொல்லவில்லை என்ற காரணத்தினாலே, அவற்றில் இந்த அரசுக்கு அக்கறை இல்லை என்று எண்ணி விடக்கூடாது. மிகவும், குறிப்பாகவும் சிறப்பாகவும் மாநிலத் திட்டக் குழு அமைப்பது ஆளுநர் அவர்கள் உரையில்

அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த திட்டக் குழு திட்டங்களைத் தீட்டி, மத்தியில் இருக்கும் திட்டக் குழு போல் செயல்படுமா என்றால், இல்லை, ஒரு ஆய்வுரை கூறும் குழுவாக அமையும்.

பத்து ஆண்டு காலத்திற்குப் பிறகு நம்முடைய தமிழ் நாட்டின் நிலை எப்படி இருக்கும், மக்கள் பெருக்கம் எவ்வாறு இருக்கும், வேலை - வாய்ப்பு வசதிகள் எப்படி இருக்கும், கல்வி முன்னேற்றம் எப்படி இருக்கும், போக்குவரத்து வசதிகள் எப்படி இருக்கும், விவசாய வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்பதை ஆராய்ந்து, நமது மாநிலத் திட்டக்குழு, அதனுடைய வரைவினை அவ்வப்போது அரசிடம் தரும். அந்த வரைவினைத் தர இருக்கிற அந்தத் திட்டக்குழுவை வெகு விரைவில் நாம் நியமிக்க இருக்கிறோம். அந்தக் குழுவின் ஆய்வை 1972-73 வரவு-செலவுத் திட்டத்தை இந்த மாமன்றத்திலே நாம் விவாதிக்கிற நேரத்தில், அதற்காக சில நாட்களை ஒதுக்கி இந்த மன்றம் விவாதித்து ஏற்ற முடிவை அளிக்கும். நாம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிற நம் மாநிலம் எவ்வாறு இருக்கும், என்னென்ன தேவைகளை நாம் ஆராய வேண்டும், என்னென்ன வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பதற்காகத்தான், முயற்சிப்பதற்காகத்தான் அந்தத் திட்டக் குழுவை அமைக்கிறோம். இந்தத் திட்டங்கள் எல்லாம் மத்திய அரசு அளவில் நிறைவேற்றுகிற திட்டங்களாக, மாநில அரசு அளவிலே நிறைவேற்றுகிற திட்டங்களாக, அல்லது தனியார் துறையில் நிறைவேற்றும் திட்டங்களாக என்னென்ன திட்டங்கள் அமையக்கூடும் என்பதை இந்த மாநிலத் திட்டக் குழு ஆராயும். ஆராய்ந்து நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் ஒழுங்காகவும், செம்மையாகவும், விரைவாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெறவேண்டுமானால், நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருக்க வேண்டும். நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இருந்திடவும், மேலும் நல்ல முறையில் முடுக்கி விடப்பட வேண்டுமென்பதற்காகவும், அதிகாரிகளின் கடமையை நல்ல வகையில் பயன்படுத்து வதற்காகத்தான் நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவை ஆளுநர் அவர்களுடைய உரையில் இந்த அரசாங்கத்தின் சார்பில் அறிவித்து இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் இருக்கும் தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி இந்த மாமன்றத்தில் இருக்கும்

உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டிய எண்ணங்களை நான் வர வேற்கிறேன். அதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் தாமதங்கள் தவிர்க்கப்பட்டால்தான் அரசாங்கம் நிறைவேற்ற இருக்கும் திட்டங்கள், அந்தத் திட்டங்களுக்காக அரசு அள்ளி இறைக்கும் பணம் ஆகியவை எல்லாம் ஏழை எளிய மக்களின் படிக்கட்டுகளில் சென்று அமைதியான வாழ்வு வாழ வகை செய்ய முடியும்.

நமது அதிகாரிகள் கடமை உணர்ந்தவர்கள். கடமை உணர்ந்த அதிகாரிகள் பல பேர் இருக்கிறார்கள். அதே நேரத்தில் சில அதிகாரிகள் வேறு மாதிரி எண்ணம் கொண்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் திருந்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் திருந்திக் கொண்டால் மட்டும் போதாது, திருந்திக்கொண்ட அதிகாரிகளை இணைத்து, நிர்வாக இயந்திரம் மிக வேகமாகச் சென்றிடவும் ஆக்கப்பூர்வமாக கருத்துக்களை எடுத்துக் கூறவும் இந்த நிர்வாகச் சீர்திருத்தக் குழுவை அமைத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நிர்வாக சீர்திருத்தக் குழு அமைத்தது சரிதான், அதிகாரிகளுக்கு பதவி நீடிப்பு விஷயத்தில் யாருக்கும் சலுகை காட்டக் கூடாது என்று சொன்னார்கள். அமைச்சரவை கூட அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்கிறது. பதவி நீடிப்பு கூடாது, அந்தப் பதவிக்கு வரக் காத்துக் கொண்டு இருக்கிற, எண்ணற்ற இளம் சமுதாயத்தினருக்கு வேலை வாய்ப்பு வழிகளையும் நாம் உருவாக்கித் தரவேண்டுமென்ற அடிப்படையில்தான் அமைச்சரவை கூட்டத்திலேயே இந்த முடிவை மேற்கொண்டு இருக்கிறோம்.

பதவி நீடிப்பைப் பொறுத்தவரையில் சில நிபுணர்கள், இவர்களை விட்டால் அந்த இடங்களுக்கு வேறு தகுதியான ஆட்கள் கிடையாது, அவ்வாறு நிபுணத்துவம் உள்ளவர்கள் இப்பொழுது அவர்களைவிட முடியாது என்ற நிலையில் மருத்துவத் துறை போன்ற சில அத்தியாவசிய துறைகளைத்தவிர மற்ற துறைகளில் பதவி நீடிப்பு கிடையாது என்ற அமைச்சரவையின் முடிவு சில இடங்களில் இப்பொழுது சரியான

முறையில் நிறைவேறாமல் இருக்கலாம். அதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டிருந்தன. முக்கியமாக திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய உரையின் அடிப்படையில் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். நிச்சயம் மிகவும் தவிர்க்க முடியாத காரணங்கள் அல்லாமல், பதவி நீடிப்பை இந்த அரசாங்கம் இனி ஏற்றுக்கொள்ளாது, நிச்சயம் தராது என்பதையும் நான் இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்).

நம்முடைய நாட்டிலே தொழில் வளம் எவ்வாறு இருக்கிறது என்பது பலராலே போற்றப்பட்டது, பாராட்டப்பட்டது. சில உறுப்பினர்களால், நல்ல வகையிலே தொழில் வளம் இல்லை என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

கவர்னர் உரையிலே, தூத்துக்குடி உரத் தொழிற் சாலையைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதற்கான அனுமதி விரைவிலே கிடைக்கும் என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் கவர்னர் உரையின்மீது விவாதம் நடத்திக் கொண்டிருக்கிற இப்பொழுது இந்த உரத் தொழிற்சாலைக்கு நாப்தா மூலப் பொருளாக நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. ரூ. 65 கோடி திட்டம் அந்தத் திட்டம். ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டம் இந்த நம்முடைய தூத்துக்குடி உரத் தொழிற் சாலைத் திட்டம். இதற்கு மாநில அரசு ரூ. 3 கோடி, தனியார் பிரதிநிதிகள் ரூ. 3 கோடி, தனியார் பிரதிநிதிகளின் முயற்சியினால் அரசு சார்புள்ளதும், அரசு சார்பற்றதுமான நிறுவனங் களின் வாயிலாக மீதமுள்ள தொகை திரட்டப்பட்டு இந்த உரத் தொழிற் சாலை அமைகிறது. நாம் இதை ஜாயிண்டு செக்டாரில் அமைத் திருக்கிறோம். ஜாயிண்டு செக்டாரில் அமைத்திருக்கிற நேரத்தில், அரசாங்கத்தினுடைய கண்காணிப்பு இந்தத் தொழிற்சாலையிலே இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாக, அரசாங்கத்தின் சார்பிலே நான்கு டைரக்டர்கள் இதிலே இருக்கிறார்கள்.

அதைப்போலவே ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் ரூ. 20 கோடி அளவில் விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதற்கான தொடக்கப் பேச்சுவார்த்தைகளெல்லாம் முடிவுற்றிருக்கிறது. அது சம்பந்தமாக அணு சக்தி ஆணைக்

குழுவுடன் நம்முடைய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி யிருக்கிறார்கள். இந்த ஹெவி வாட்டர் உற்பத்தித் திட்டம் வந்துவிடுமேயானால், நம்முடைய கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு ஹெவிவாட்டர் பயன்படக்கூடிய அளவுக்கு ரூ. 20 கோடியில் ஒரு பெரிய திட்டமாக தமிழகத்திற்கு வர இருக்கிறது.

சேலம் உருக்காலைத் திட்டத்தைப்பற்றி இங்கே பலரும் பேசினார்கள். ரூ. 110 கோடியில் இந்தத் திட்டம் நமக்குக் கிடைத்தது. இந்தத் திட்டம் கிடைத்ததைப்பற்றி பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் - எதிர்த்தரப்பில் உள்ளவர்கள் - குறிப்பாக நிஜலிங்கப்பா காங்கிரஸில் உள்ளவர்களெல்லாம் 'இது எங்களுடைய காலத்தில் சொல்லப்பட்டதுதான், எங்களுடைய காலத்தில் கேட்கப்பட்டதுதான்' என்றெல்லாம் சொன்னார்கள். நானும் அதை மறுக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், சேலம் உருக்காலைத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்ற நேரத்தில் "நான் இந்தத் திட்டத்திற்காக ஆரம்ப காலத்தில் பாடுபட்ட காமராஜ் அவர்களுக்கும், வெங்கட்டராமன் அவர்களுக்கும், சுப்பிரமணியம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறேன். நாங்கள் யாரும் நன்றி மறந்துவிடுபவர்கள் அல்லர். அரசியல் பண்பாட்டை இழந்துவிடுபவர்கள் அல்லர். ஆனாலும், இந்தத் திட்டம் இடைக்காலத்தில் கிடப்பிலே போடப்பட்டது, இது வராது என்கின்ற அளவுக்கு முடிவு செய்யப்பட்டு விட்டது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. இதற்காக நாம் பெரிய போராட்டம் ஒன்றை நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கட்சியினரும் இணைந்து எழுச்சி நாளைக் கொண்டாடி, அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் நாடெங்கிலும் பல்வேறு பகுதிகளில் பேசி, தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு நடைபெற்ற தேசீய வளர்ச்சிக் குழுவில், முதல் அமைச்சர் கலந்துகொண்ட மாநாட்டில் நான் "சேலம் உருக்காலைத் திட்டத்தை எங்களுக்கு அளிக்காவிட்டால்,, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை நிறுவாவிட்டால், நான்கு கோடி தமிழ் மக்களுடைய சார்பாகச் சொல்கிறேன், இந்த நான்காவது

ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்னுடைய சம்மதத்தைத் தரமுடியாது" என்று திட்டவட்டமாகச் சொன்னேன்.

'நீங்கள் எதிர்த்துப் பேசுவதில்லை. அங்கு போனதும் வளைந்து விடுகிறீர்கள், இங்கே தான் வீரமாகப் பேசுகிறீர்கள், அங்கு சென்று துணிச்சலாகக் கேட்டதில்லை' என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். இதே வார்த்தைகளைச் சொன்னேன். வெளியே வந்தபிறகு சில தலைவர்களெல்லாம், டெல்லியில் உள்ள தமிழ்நாட்டுத் தலைவர்களெல்லாம் என்னைச் சந்தித்து 'இப்படி என். டி. சி. கூட்டத்தில் வேகமாகப் பேசலாமா? நிபந்தனை போட்டுப் பேசலாமா? ஒரு வேளை சேலம் உருக்காலை கிடைக்காவிட்டால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட்டுவிடுவதா?' என்று கூடக் கேட்டார்கள். பிறகு 10 நாளைக்குள் சேலம் உருக்காலை கிடைத்து விட்டது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

'நாங்கள்தான் கேட்டோம், நாங்கள் தான் கேட்டோம், ஆகவே உங்களுக்கு வெற்றி சொந்தம் இல்லை' என்று கூறுகிறார்கள்.

ஒரு வீட்டிலே அழகான பெண் இருக்கிறாள். பல பேர் போய் பெண் கேட்கிறார்கள். பையன் பிடிக்கவில்லை, நல்ல வருமானம் இல்லை, நல்ல அழகு இல்லை என்று சொல்லி தட்டிக் கழித்துவிட்டு, கடைசியில் அந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகி, திருமண ஊர்வலம் வரும்பொழுது, பாதை ஓரத்தில் நின்று கொண்டு 'நான் கேட்ட பெண்தான் உங்களுக்குக் கிடைத்து விட்டது' என்று சொல்வதா? கட்டினவனுக்குத்தான் பெண்ணே தவிர, கேட்டவனுக்கெல்லாம் அல்ல என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைப்போலத்தான் தி. மு. க. ஆட்சிக்கு வெற்றி கிடைத்தது. வெற்றியை நாங்கள் கொண்டாடுகிறோம். அனைவரும் சேர்ந்து கொண்டாடுகிறோம். ஆனால், வெற்றி கிடைத்த நேரத்தில், 'நாங்கள்தான் கேட்டோம், நாங்கள்தான் கேட்டோம்' என்று சொல்வதா?

அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கூட, 'இவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள், உணவு

உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்றால், எங்கள் காலத்தில் போட்ட திட்டம்தான்' என்றார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால், எங்கள் காலத்து வயல்கள் என்று கூடச் சொல்லலாம். ஆகவே, சொன்னதை, செய்ததை நாங்கள் கெடுக்காமல், மேலும் அது தொடர்பாக முயற்சியில் ஈடுபட்டு நல்லவைகளை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோமா, இல்லையா? அதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதைவிட்டு விட்டு 'நாங்கள் செய்தோம், நாங்கள் செய்தோம்' என்று சொன்னால், எப்படி?

அதிக உணவு உற்பத்தி என்றால், மழை பெய்தது, ஆகவேதான் அதிக உணவு உற்பத்தி என்று சொல்லுவது, வாதத்திற்கு எடுத்துக்கொள்வோமானால், நல்லவர்கள் இருக்கிறார்கள், மழை பெய்கிறது என்று அதையும் சொல்லலாம் அல்லவா? நான் சொல்கிறேன், மழை பற்றாக்குறை காலம் உண்டு. கடந்த நான்காண்டு காலத்தில் வறட்சி கூட வந்தது. வறட்சியையும் சமாளித்துத் தான் நாங்கள் உணவு உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்கியிருக்கிறோம், அதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

சேலம் தொழிற்சாலையைப் போல அடுத்து பல பெரிய தொழிற்சாலைகள் நம்முடைய நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன நம்முடைய மாநிலம் பெற்றிருக்கிறது. அந்த அளவுக்குப் பெரிய தொகை கொண்ட தொழிற்சாலைகள் இல்லை யென்றாலும், டயர் தொழிற்சாலை ஒன்று வருகிறது. சோடியம் ஹைட்ரோ சல்பேட் தொழிற்சாலை ஒன்று வருகிறது. சோடா ஆஷ் தொழிற்சாலை, அதுவும் ஜாயிண்டு செக்டாரில் கூட்டுத் துறையிலே உருவாகிறது. நைலான் தொழிற்சாலை விரைவிலே வரும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. பாலிஸ்டர் ஃபைபர் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது.

மேலும் பல தொழிற்சாலைகள் நமது நாட்டில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதற்கான விவரங்களைக் காட்டுகிற குறிப்புகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்த முடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். தொழில் உற்பத்தி குறிப்பீட்டெண் (இண்டெக்ஸ் ஆஃப் இன்டெஸ்ட்ரியல்

ப்ரொடக்ஷன் என்ற தலைப்பிலே 1967-ல் 158.3, 1968-ல் 166.3, 1969-ல் 172.8, 1970-ல் 182.3 என்கிற அளவுக்கு ஆகியிருக்கிறது. அதைப்போலவே பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 1967-ல் 7,065, 1970-ல் 7,922. எதுவும் குறைந்துவிடவில்லை.

பொதுத்துறையிலும், தனியார் துறையிலும் பதிவான நிறுவனங்கள், கம்பெனிகள் 1967-ல் 91, 1969-ல் 116, 1970-ல் முதல் 6 மாதங்களில் 76 கம்பெனிகள் பதிவாகியிருக்கின்றன.

தொழில் உரிமங்களுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப் பட்ட விண்ணப்பங்கள், 1967-ல் 38. அவற்றிலே 16 விண்ணப்பங்களுக்கு தொழிற்சாலை ஆரம்பிக்க உரிமங்கள் கிடைத்தன. 1968-ல் 51 விண்ணப்பங்கள் அனுப்பினோம். அவற்றிலே 9-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1969-ல் 97 அனுப்பினோம், 12-க்கு லைசென்ஸ் கிடைத்தது. 1970-ல் 142 விண்ணப்பங்கள் அனுப்பினோம், அவற்றிலே இதுவரையிலே 36-க்கு லைசென்ஸ் கிடைத்திருக்கிறது. ஆகவே, தொழிற் சாலைகளை ஆரம்பிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாமலே இருந்து விட்டோம் என்று சொல்வதற்கில்லை.

சிறு தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் ...

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of information, Sir, sorry to interrupt the Hon. Chief Minister.

சேலம் உருக்காலை வந்துவிட்டது என்பதை நாங்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம். அதிலே எப்பொழுது வேலை தொடங்கப்படும், எதற்காக சுணக்கம் இருக்கிறது என்பதைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் எந்தவிதமான பதிலையும் சொல்லவில்லை. அதைப்பற்றிக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதை முடித்து விட்டுச் சொல்லுகிறேன். சிறு தொழிலில், தொழில் வர்த்தக இயக்குநரால் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் :-

1967-ல்	-	11,929.
1968-ல்	-	13,571.
1969-ல்	-	18,063.
1970-ல்	-	21,857.

ஆக, இந்த அளவிற்குத் தொழில் துறையில் நாம் முன்னேறி யிருக்கிறோம் என்றாலும், இது உள்ளபடியே போதுமான முன்னேற்றம் இல்லை. இன்னும் அனுமதிகள் கொடுக்கப்பட வேண்டும். 100 கேட்டால் 30-க்கு அனுமதி கிடைக்கிறது. ஆகவே இதில் குறைபாடு இல்லாமல் இல்லை.

தொடர்ந்து மத்திய சர்க்காரிடம், இன்னும் அதிகமாகத் தொழில் வளர்ச்சி வளர்ந்திட வேண்டும் என்கிற கொள்கையின் அடிப்படையில் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

அதே வகையில் சேலம் உருக்காலை வேலையையும் வெகு விரைவில் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி எடுத்துச் சொல்லுகிறோம். மேலும் ஒரு அறிக்கை தேவைதானா? ஆராய்ச்சிகள் முடிந்துதானே அறிக்கை கொடுக்கப்பட்டது? மறுபடியும் அறிக்கை எதற்கு என்று குறிப்பிட்டார்கள். ஏன் அறிக்கை தேவை என்றால், அது பெரிய அறிக்கையாக இருக்காது, ஒரு திருத்த அறிக்கையாகவே இருக்கும். அது ஏன் தேவை? இந்த அறிக்கை வெளியாகிப் பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுவிட்டது. தொழிற்சாலை வராது என்ற நிலையில் அறிக்கையை ஏறெடுத்துப் பார்க்காத சூழ்நிலை உருவாகி விட்டது. உருக்காலை வருகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டு, காலக் கடத்தல் காரணமாக, தாமதம் காரணமாக, அந்த அறிக்கையில் சில திருத்தங்கள் தேவைப்பட்டன. அப்படிப்பட்ட அறிக்கையையும் ஆறு மாத காலத்தில் கொடுத்து, வேலையைத் தொடங்கிட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறோம். நல்ல சூழ்நிலை இருப்பதால், தேர்தலுக்குப் பின்னால் ஆட்சி மாற்றத்தில், அமைச்சரவை மாற்றங்கள் காரணமாக சேலம் உருக்காலை ஏற்படுவதற்கு, சீக்கிரமே செயல்படுவதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாகியிருப்பதாக அறிகிறேன். இதிலே நாம் அவசரப்படுகிறோம். அதே நேரத்தில், ஆறு மாதங்களில் அறிக்கை வரவேண்டும் என்றும் மத்திய சர்க்காரிடத்தில் வலியுறுத்து கிறோம். அறிக்கை தேவையா, இல்லையா என்பதில்லை வாதம். தேவை என்பதை நாம் அறவே மறுக்கவில்லை. காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக, சில திருத்தம் தேவை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆறு மாதங்கள்தான். அதற்குள் சமர்ப்பித்துவிட வேண்டும் என்று ஒத்துக்கொண்டிருக்கிறோம்.

மேலும் மேலும் தொழிற்சாலைகளை விரைவில் உருவாக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருப்போம் என்பதையும் தெரிவிக்கிறேன். தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுத்துறை இவைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டது. கூட்டுத் துறை என்பது என்ன, கூட்டுத் துறை என்பது அநேகமாக தனியார் துறையாகத்தான் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரால் கருத்து தெரிவிக்கப்பட்டது. ஜாயிண்ட் ஸெக்டார் என்பதில், தனியாருடைய ஊக்கமும், அரசாங்கக் கண்காணிப்பும் இருக்கும். முன்பெல்லாம், தனியார் துறை என்றால் அரசாங்கக் கண்காணிப்பு கிடையாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மெட்ராஸ் அலுமினியம் பாக்டரியில், அதற்கு ஷேர் காபிடல், முதலீடு 3 கோடி ரூபாய். அதிலே, தனியார் 1½ கோடி ரூபாயும், அரசாங்கம் 1½ கோடி ரூபாயும் போட்டு, கண்காணிக்கும் பொறுப்பை அரசாங்கம் வைத்துக் கொள்ளாமல் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அலுவல்கள் 1½ மணியோடு முடிவடைய வேண்டுமாதலால், மாண்புமிகு முதல் அமைச்சர் உரையை முடிப்பதற்கும் மற்ற அலுவல்கள் முடிவதற்கும் தொடர்ந்து உட்கார அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

(அனுமதி அளிக்கப்பட்டது)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மெட்ராஸ் அலுமினியம் பாக்டரியில் மூன்று கோடி ரூபாய் ஷேர் காபிடல் என்றால், அரசு 1½ கோடி ரூபாயும், தனியார் 1½ கோடி ரூபாயும் போட்டார்கள். ஆனால், அரசின் கண்காணிப்பு இல்லை. அரசின் சார்பில் ஒரே ஒரு டைரக்டர் இருக்கிறார். அரசைக் கலந்துகொண்டு பாக்டரியில் தனியார் தங்கள் காரியங்களைச் செய்வதில்லை.

இப்பொழுது ஏற்பட்டிருக்கிற ஜாயிண்ட் ஸெக்டாரில் நிலைமை முற்றிலும் மாறுபட்டது. தனியாருடைய ஊக்கம் பயன்படுத்தப்படுகிறது. அரசாங்கத்தின் கண்காணிப்பு இருக்கிறது. இரண்டும் இணைந்து கூட்டுத் துறைக்கொள்கை நிறைவேறுகிறது என்ற அளவில், இந்த அரசு புதிய கொள்கையை உருவாக்கி யிருக்கிறது.

தமிழ் நாடு தொழில் வளம் பெற வேண்டும் என்கிற எண்ணத்தில், பொதுத் துறைதான் நம் முடிவான லட்சியம். ஆனாலும் அப்படிச் சொல்லிக்கொண்டே இருக்கும் காரணத்தால், தொழில் வளம் அழிந்து, தொய்ந்து விடக் கூடாது என்கிற எண்ணத்தின் அடிப்படையில்தான், இன்றைக்கு இந்தக் கூட்டுத் துறையை நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். இறுதி லட்சியம் பொதுத் துறை என்பதை இந்த மாமன்றத்திற்கு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் குறிப்பிட்டபடி, வேலை வாய்ப்புக்கள் பற்றி பெரிதும் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேலை வாய்ப்புக்களை அளிப்பதில், தமிழ்நாடு, மத்திய சர்க்கார் அளவில் பல திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் காலதாமதம் ஆனதன் காரணத்தால், திட்டங்கள் இல்லாததால், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. பட்டதாரிகள், பொறியாளர்கள், இவர்களுக்கெல்லாம் வேலை அளிக்கக்கூடிய திட்டங்கள் இல்லை என்பதால், அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் காரணமாக, வேலைவாய்ப்பு இன்மை நாட்டில் பெருகியதை மறுத்திட இயலாது.

மாநில மட்டத்தில் சில காரியங்களைச் செய்திருந்தாலும், அது பூரண திருப்தி அளிக்கக்கூடியதாக இல்லை; புன்னகை அளிக்கக் கூடியதாக இல்லை. ஆனாலும், 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. எந்தச் சம்பளமும் பெறாமல், குடும்பத்தை நடத்த முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பவர்களுக்கு இந்த ஊதியமாவது கிடைக்க வேண்டும் என்று தொழில்பயில் ஆசிரியர்களுக்கு உதவி அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு, அனைவரும் வேலைக்குச் சேர்ந்துவிட்டனர். அதேபோலத்தான் 2,400 பொறியாளர்களுக்கு உதவியளிக்க முன்வந்ததில் 27-2-1971 அன்றோடு 1,795 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதில் 1,600 பேர்கள் வேலையில் சேர்ந்துவிட்டார்கள். மீதம் உள்ளவர்கள் சில வாரங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இப்படி 6,500 ஆசிரியர்களுக்கும், 2,400 பொறியாளர் களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்தோம் என்றால், அதன் காரணமாக தமிழ் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் அறவே ஒழிந்துவிடும் என்ற எண்ணத்தில் செய்யவில்லை. இந்த அரசுக்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆர்வம் இருக்கிறது என்பதைக் காட்டத்தான் இது செய்யப்பட்டது. இந்த ஆர்வம் மேலும் மேலும் பெருகும். மேலும் மேலும் பெருகுகின்ற வகையில் திட்டங்கள் தீட்டப்படும் என்பதற்கு இது விடிவெள்ளி என்ற அளவில் இந்தக் காரியம் செய்யப்பட்ட தேயல்லாமல், இதை வைத்துக்கொண்டு வேலை வாய்ப்பு போதுமா என்று கேட்பது நல்லதல்ல.

மேலும் மேலும் வேலை வாய்ப்புக்கள் பெருகிட மத்திய சர்க்காரும் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மாவட்டத்திலும், 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்று திட்டம். கிராமப்புறத்தை ப்ளாக் ப்ளாக்காக எடுத்துக் கொள்கிறார்கள் ஒவ்வொரு ப்ளாக்கிலும் 1,000 பேர்களுக்கு வேலை கொடுப்பது. ஒரு மாவட்டத்தில் 10 ப்ளாக்குகள் எடுத்து, 1,0000 பேர்களுக்கு வேலை கொடுப்பது என்பது மத்திய சர்க்காருடைய திட்டம். அதைப்பற்றி ஆராய, வருகிற 7-ம் தேதி சென்னை மாநகரத்தில் கலெக்டர்கள் மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். அப்பொழுது கலந்து பேசி, திட்டம் நிறைவேறத்தக்க சாத்தியக்கூறுகள் எவையெவை, இருக்கின்ற சிக்கல்கள் என்னென்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து முடிவுகளெடுக்கப்படும். தலைமைச் செயலாளர்கள் மாநாடு டெல்லியில் நடக்கவிருக்கிற காரணத்தால், அந்த மாநாட்டில், இங்கே எடுக்கப்பட்ட முடிவுகள் நம் தலைமைச் செயலாளர் மூலம் அறிவிக்கப்படவிருக்கிறது. டெல்லி மாநாட்டில் இந்தக் கிராமப்புறத் திட்டம் விவாதிக்கப்படும்.

இந்தக் கிராமப்புற மக்களுக்கு வேலைகள் கொடுப்பது மாத்திரம் மக்களுக்குப் போதுமா? விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் வருஷத்தில் ஆறு மாதம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது வேலை கொடுக்கும். ஆனால், படித்துவிட்டு, வேலையற்றிருக்கும் நம்முடைய வாலிபர்கள், இளைஞர்கள் இவர்களுக்கு வேலைவாய்ப்பு என்ன என்று கேள்வி

போட்டார்கள். இந்தக் கேள்வி எதிர்க்கட்சியில் இருக்கிறவர் களுடைய உள்ளங்களில் மட்டும் இருப்பது என்பதில்லை. ஆளுங்கட்சியிலிருக்கின்ற அத்தனை உறுப்பினர் களுடைய உள்ளங்களிலும் குமுறிக் கொந்தளிக்கும் கேள்வி இது.

கல்லூரிகளில் சலுகைகள் கொடுத்துப் படிக்க வைத்துவிட்டு, புதிய புதிய கல்லூரிகளைத் திறந்து, அவற்றிற்கு அனுப்புகிறோம். மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுப்புகிறோம். பட்டதாரிகளாக ஆகிறார்கள். அப்படிக் கல்லூரிகளிலிருந்து வெளிவந்ததும் அவர்கள் வேலை எங்கே, வேலை எங்கே, என்று கேட்கிறார்கள். நாம் அவர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். பதில் சொல்லப் போகிறோம்; நல்ல முறையில் பதில் சொல்லப் போகிறோம்.

அதனால்தான் இந்தத் தேர்தலில் முற்போக்குக் கூட்டணி வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து, ஆதரவு பெற்று, இந்த மாமன்றத்திலும், மத்திய சர்க்காரிலும் அரசுகள் அமைத்திருக்கும் காட்சியைக் காண்கிறோம்.

அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்று வதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முன் நின்றிருக்கிறது. முன்பு 1967-ம் ஆண்டு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பான்மையானவற்றை திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியிருக்கிறது.

இந்தப் புதிய அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, அண்ணா அவர்களுடைய வழியில் நின்று, தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொன்ன நாட்டு மக்களுக்குத் தேவையான காரியங்கள் என்ன, எப்படி வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டும். எப்படி சுதந்திர நாட்டில் ஏழைக்குச் சுதந்திரம் வேண்டும், எப்படி பாட்டாளிக்கும், தொழிலாளிக்கும் விடிவுகாலம் ஏற்பட வேண்டும், ஏழை வீட்டில் என்றென்றும் நல்ல விளக்கு எரிந்திட வேண்டுமென்பதற்காக என்னென்ன வாக்குறுதிகள் அளித்தோமோ அந்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்ற இந்த அரசு கொஞ்சம் கூடத் தயங்காது, தயங்காது என்பதை மிகுந்த திட்டவட்டமாக இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறிக் கொள்ளுகிறேன்.

மின்சாரத் துறையில் பல்லாயிரக்கணக்கான மகஜர்களைப் பெற்றீர்களே, ஒருவரைக் கூட வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வில்லையே என்று பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் இப்படித் தகவல் அறியாமல் பேசுகிறார்களே என்பதுதான் என் கவலை. பல்லாயிரக்கணக்கான மனுக்களைப் பெற்றது உண்மை. அந்த மனுக்கள் என்னென்ன வேலைகளுக்காகக் கோரப் பட்டனவோ அந்த வேலைகளுக்கு எல்லாம் ஆட்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் பில் கலெக்டர்கள் 360 பேர்; டைப்பிஸ்ட்கள் 100 பேர்; கிளார்க்குகள் 1.500பேர். இந்த 1,500 பேரில் 400 பேர் இன்னும் வேலையில் சேரவில்லை. 1,100 பேர் வேலையில் சேர்ந்து விட்டார்கள். மீதிப்பேர் இன்னும் ஒரு மாதத்தில் வேலையில் சேர இருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தரப்பட்ட தகவல் - அவர் சொல்லிய தகவல் என்று சொல்லவில்லை - தவறான தகவல். மின்சார வாரியத்தில் மனுக்களைப் பெற்று யாரையும் வேலையில் சேர்க்கவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விலைவாசி பற்றிப் பேசப்பட்டது. எல்லா வகையிலும் விலைவாசி அறவே குறைந்துவிட்டது என்று யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. விலைவாசி, உணவு தானியங்களைப் பொறுத்தவரை குறைந்திருக்கிறது. வேறு சில விஷயங்களிலும் குறைந்திருக்கிறது. எல்லாப் பொருள்களின் விலையும் குறைய வேண்டுமென்றால் மத்திய சர்க்கார் ஒத்துழைப்புடன்தான் செய்ய முடியும். இதுதான் கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. இதனை யாரும் மறுத்திட முடியாது.

விலைவாசியைப் பொறுத்தவரை திருச்சி மார்க்கட்டை எடுத்துக் கொண்டால் இரண்டாம் ரக அரிசியின் விலை மார்ச் 70-ல் 100 கிலோகிராம் கொண்ட மூட்டை ரூ. 100 ஆக இருந்தது. மார்ச் 71-ல் ரூ. 86.60 ஆகக் குறைந்திருக்கிறது. சோளம் மார்ச் 70-ல் ரூ. 85.3 ஆக இருந்தது மார்ச் 71-ல் ரூ. 73.35 ஆகக் குறைந்திருக்கிறது. கம்பு 70 ரூபாயாக இருந்தது 52 ரூபாயாக குறைந்திருக்கிறது. ராகி 70 ரூபாயாக இருந்தது 62 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. கடலை எண்ணெய் 470 ரூபாயாக இருந்தது 445 ரூபாயாகக் குறைந்திருக்கிறது.

பருப்பு வகை, சில எண்ணெய் வகைகளின் விலை சற்று ஏறி இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அவற்றின் விலை குறைய உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். அதற்காகத்தான் பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க நாம் தனித் தொகை ஒதுக்கி, ஆறு லட்சம் ஏக்கரில் தமிழ் நாட்டில் பருப்பு வகைகளை விளைவிக்க வேண்டுமென்று திட்டம் தீட்டினோம்.

100 கிலோகிராம் மிளகாய் 1970-ல் 410 ரூபாயாக இருந்தது. 1971-ல் 350 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. புளி விலை கொஞ்சம் ஏறி இருக்கிறது. அது 180 ரூபாயாக இருந்தது 200 ரூபாயாக ஏறி இருக்கிறது. மஞ்சள் - ஈரோடுதான் மஞ்சளுக்குப் பேர் போனது - ஈரோடு மார்க்கட்படி 380 ரூபாயாக இருந்தது, 180 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. மஞ்சள் விலை குறைந்ததைப் பெண்கள் அதிகமாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். விறகு விலை 14-ல் இருந்து 18 ஆக ஏறியுள்ளது.

விலைவாசி அறவே குறைந்து விட்டது என்று நாங்கள் கூறவில்லை. விலைவாசி குறைவதற்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

அதே நேரத்தில் மத்திய அரசு விலைவாசிகளை உயர்த்தும்போது நம்மைக் கலந்துகொண்டு செய்தாக வேண்டும். அதைத்தான் மாண்புமிகு திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் 'விலை உயர்வை எதிர்த்தீர்களா?' என்று கேட்டார்கள். எதிர்ப்பதற்கு எங்கள் கையைப் பலப்படுத்துங்கள். எல்லோரும் சேர்ந்து எதிர்ப்போம். எதிர்ப்பதற்கு நாங்கள் அஞ்சுபவர்கள் அல்ல. எந்த முறையிலே எதிர்ப்பது? அந்த எதிர்ப்பைத்தான் கவர்னர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் இணைத் திருக்கும் வாசகங்கள் தெரிவிக்கின்றன. மத்திய அரசு சம்பள உயர்வு அறிக்கையாக இருந்தாலும், விலைவாசிகளை உயர்த்துவதாக இருந்தாலும் மாநிலங்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அது நம்முடைய எதிர்ப்பைக் காட்டுகின்ற உணர்ச்சியின் அடிப்படையில் உள்ள வாசகங்கள்தான்.

திட்டங்களுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு நீங்கள் அவர்களுடன் வாதித்தீர்களா, என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் நேற்றையதினம் கேட்டார்கள். இன்றைக்கு அதற்குப்

பதில் சொல்லுவதாகக் குறிப்பிட்டேன். எத்தனை முறை கடிதம் எழுதினோம்? எத்தனை முறை சந்தித்துப் பேசி இருக்கிறோம்? கடிதங்களின் முழு விவரங்களைக் கொடுக்க முடியாவிட்டாலும் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

28-8-1969 அன்று இன்று பேரவைத் தலைவராக இருக்கின்ற அன்றைய நிதியமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்தில் அறிக்கை ஒன்றை வைத்தார்கள். அதில் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய சதவிகிதம் குறைந்ததைக் குறித்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

25-9-69 அன்று இந்திய பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தில் இந்திய ஆணைக்குழு இழைத்த அநீதி, திட்டக் குழுவின் தகுதி முறைகளினால் நேர்ந்துள்ள நஷ்டம், ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி நியாயம் வழங்கப்பட வேண்டு மென்று கேட்டிருக்கிறேன்.

29-11-69 அன்று இந்திய பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியதோடு இந்தியப் பிரதமரையும் திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்களையும் சந்தித்து நீண்ட நேரம் இதைப்பற்றி விவாதித்திருக்கிறேன்.

இதற்குப் பிறகு இரண்டு மூன்று தடவை நிதியமைச்சர் திட்டக் குழுவினரோடு பேசி நமக்கு சாதகமான ஒரு முடிவுக்கு வர முடியாததால் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு நிச்சயிக்கப் படாமல் போய் விட்டது. 6-3-70 அன்று ஊதியக் குழுவின் சிபாரிசுகளால் ஏற்படக் கூடும் பெரும் செலவினை ஈடுகட்ட மத்திய அரசு உதவியளிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. 21-3-70 அன்று நடந்த தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் 'டிஸ்ஸென்ட்' எழுதினார்களா என்று கேட்டார்கள். அந்தக் கூட்டத்திலேதான் நான் மூன்று நிபந்தனைகளைச் சொன்னேன். ஒன்று சேலம் உருக்காலை; இரண்டாவது சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்ட 800 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்திற்குப் பங்கு வர வேண்டும் என்பது. மூன்றாவது ஒவ்வொரு மாநிலத்திலும் பின்தங்கிய பகுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளுக்கும் பணம் ஒதுக்கவேண்டுமென்பது. ஆக, இந்த

மூன்று நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால்தான் திட்டத்திற்கு சம்மதம் தருவோம் என்று சொன்னோம். அதற்குப் பிறகுதான் முதல் தடவையாக 800 கோடி ரூபாயில் 7 கோடி ரூபாய் தந்தார்கள். இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளான இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், தர்மபுரி மாவட்டத்திற்கும் இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கி யிருக்கிறார்கள். முதலிலே சொல்லப்பட்ட சேலம் உருக்காலைக்கும் இசைவு தந்தார்கள்.

15-4-70 அன்று நமக்கு சிறப்பு உதவி அளிப்பது அவசியம் என்றும் அதற்காக நம் நிதி வாயில்களைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் நாம் கோரினோம். 25-4-70 அன்று இதே கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

19-8-70 அன்று நம் இக்கட்டான நிதிநிலையை விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். டாக்டர் காட்கில் அவர்கள் உடல்நிலை சரியாக இல்லாததால் ஒத்திவைக்கப்பட்டிருந்த சந்திப்பு துரிதமாக நடத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினோம். 12-10-70 அன்று நம்முடைய தொழிலமைச்சர், அதிகாரிகள் அனைவரும் சேர்ந்து டாக்டர் காட்கில் அவர்களை சந்தித்துப் பேசினோம். நம் வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை ஓரளவுக்கு ஒப்புக்கொண்ட காட்கில் அவர்கள் அதிகாரிகள் மட்டத்தில் நம் நிதி பற்றிய புள்ளி விவரங்கள் திரும்பப் பரிசீலிக்கப்பட வேண்டுமென்ற அளவோடு பேச்சு வார்த்தை முடிந்தது. 12-10-1970 அன்று நடந்த சந்திப்புக்குப் பிறகு 31-10-70 அன்றும் 1-11-70 அன்றும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. 31-12-70 அன்று தலைமை யமைச்சரிடம் இதே கோரிக்கைகளை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். 19-1-1971 அன்று தலைமை அமைச்சருக்கு மீண்டும் இது குறித்து வற்புறுத்தி கடிதம் எழுதி யிருக்கிறேன்.

12-1-71 அன்று திட்டக்குழுச் செயலாளர் நம் வாதங்களுக்கு ஒரு சில மறுப்புகள் தெரிவிக்கும் நீண்ட குறிப்பை அரசுக்கு அனுப்பினார். அதற்கு 3-2-71 அன்று மறுபடியும் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படித் தொடர்ந்து மத்திய அரசோடு போராடிக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : 21-3-1970 அன்று நடந்த என்.டி.சி; மீட்டிங்கில் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சில நிபந்தனைகளைக் கூறியதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மீட்டிங்கில் இதையெல்லாம் செயலில் ஒத்துக்கொள்ளும் வகையில் அதிகார பூர்வமாக தெரிவிக்கும் வகையில் வாய்மொழியாக சொன்னதோடு மட்டுமல்லாமல் 'டிஸ்ஸென்டிங்' எழுதியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அங்கே நமது பேச்சுக்கள் தான் பதிவு செய்யப்பட்டு அப்படி ரெக்கார்டுகள் எதுவும் பதிவு செய்யவில்லை. 'டிசன்டிங் நோட்ஸ்' எதுவும் எழுதப்படவில்லை, அவ்வளவுதான்.

நாம் எந்தெந்த அளவிற்குப் போராடியிருக்கிறோம், எந்தெந்த அளவிற்குப் போராடி வெற்றி பெற்றிருக்கிறோம், பெற வேண்டிய உரிமைகளை எப்படி எப்படியெல்லாம் வலியுறுத்திப் பெற்றிருக்கிறோம் என்பதற்காகத்தான் இதையெல்லாம் சுட்டிக் காட்டுகிறேன்.

நாம் மத்திய அரசிடம் கேட்டது 250 கோடி ரூபாய்; ஆனால் மத்திய அரசு நமக்கு 202 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்திருக்கிறது. மத்திய அரசின் சார்பிலே அங்கே இருக்கிற திட்டக் குழு மாநிலங்களுக்கு என்று சில தகுதிகளை வரையறுத்தது. அந்த தகுதிகள் என்ன என்ன என்று பார்த்தால் மக்கள் தொகையிலே 60 சதவிகிதம், நபர்வாரி வருமானம் (பெர் கேபிடா இன்கம்) என்பதிலே ஒரு 10 சதவிகிதம், தனிப் பிரச்னைகள் என்பதற்காக ஒரு 10 சதவிகிதம், வரி விதிக்க எடுத்த முயற்சிகளுக்காக ஒரு 10 சதவிகிதம்; தொடர்ந்து திட்ட வேலைகள் நடைபெறுகின்றனவா என்ற அடிப்படையில் பத்து சதவிகிதம் என்ற அளவில் வரையறுத்து இருக்கிறது. இந்த அளவில்தான் மாநிலத்தின் தகுதிகள் என்று தகுதியை உருவாக்கினார்கள். இந்த அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு கிடைக்கக்கூடியது கிடைக்காமல் போய் இருக்கிறது. ஆகவே இந்தத் தகுதிகளை வரையறுத்த முறைகளை எதிர்க்கிறேன்.

ஆந்திரா 40 கோடி ரூபாய் இழந்து விட்டது. மத்திய பிரதேசம் 20 கோடி ரூபாயை இழந்திருக்கிறது. மைசூர் 40 கோடி

ரூபாயை இழந்து விட்டது. மேற்கு வங்காளம் 24 கோடி ரூபாயை இழந்து விட்டது. தமிழ்நாடு 48 கோடி ரூபாயை இழந்து விட்டது.

நபர்வாரி சராசரி வருமானம் என்று இருக்கிறதே ஒரு பத்து சதவீதம், அதை அகில இந்திய கணக்கிலே பார்த்தால் அனைத்திந்திய சராசரி 418 ரூபாய். தமிழ்நாடு 434 ரூபாய். இந்த 418 ரூபாய்க்கு நபர்வாரி வருமானம் இருந்தவர்களுக்கு உதவி மறுக்கப்பட்டது. நமக்கு - தமிழ்நாட்டுக்கு - 16 ரூபாய் அதிகமானது என்ற காரணத்தாலே, நமக்கு அந்த பத்து சதவீதம் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். 418-க்கும் 434-க்கும் அதிக வித்தியாசம் இல்லையென்ற அளவிற்கு அவர்கள் செயல்பட்டிருந்தால் நமக்கு மேலும் 25 அல்லது 30 கோடி ரூபாய் கிடைத்திருக்கும். அதே நேரத்தில் என்ன செய்தார்கள். 9 மாநிலங்களுக்கு 800 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக தந்தார்கள். தமிழ்நாடு, மைசூர், ஆந்திரா, மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் இழப்புக்களானாலும் நம்மைத் தவிர்த்து மீதி ஐந்து மாநிலங்களுக்கும் ஆக 9 மாநிலங்களுக்கும் சிறப்பு நிதி உதவி தரப்பட்டிருக்கிறது. அந்த நிதியில் நமக்கு பங்கு இல்லை. அதிகமாக சண்டை போட்டு நிபந்தனை போட்டு தேசிய வளர்ச்சிக்குழு (என்.டி.சி) கூட்டத்தில் கேட்டபோது 7 கோடி ரூபாய் தரப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு தர மறுக்கிறார்கள். அதைத்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம்.

தனிப்பிரச்சினையாகக் கணக்கிட்டு மேற்கு வங்காளத்தின் கல்கத்தா நகரத்திற்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சென்னை மாநிலத்தை தனிப்பிரச்சினையாக கணக்கிட்டு, சென்னை மாநகரத்திற்குத் தனியாகப் பணம் கொடுக்கவில்லை. சென்னை மாநகரில் மவுண்ட் ரோடு மற்ற பல ரோடுகளையும் பார்த்துவிட்டு, சென்னைமாநகரம் எல்லாவகையிலும் முன்னேறியிருக்கிறது என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள நான் விரும்வில்லை. கடற்கரையோரத்தில் இருக்கிற குப்பங்களில் எவ்வளவோ பேர் நடுத்தெருவில்கூட படுப்பதற்கு பாய் அற்ற நிலையில் இருக்கிறார்கள். குடிசைகள் எல்லாம் இருள் சூழ்ந்திருக்கிறது. சுகாதார வசதி கிடைத்தபாடில்லை. ஆனாலும் நாம் 40 கோடி ரூபாய் அளவிலே குடிசை மாற்று வாரியத்தை

அமைத்திருக்கிறோம். இதைத் தனிப்பிரச்சினையாக ஆக்கி மத்திய அரசு கவனித்து அதிலே பத்து சதவீதம் ஒதுக்கி யிருந்தால் நமக்கு ஒரு பத்துகோடி ரூபாய் கிடைத்திருக்கும், மாநிலத் தகுதி என்ற அடிப்படையில் செயல்படுகிறவிதம், நமக்கு மறுக்கப்படுகிற விதம் சரியில்லை. ஐந்து மாநிலங்களுக்கு இழப்பு ஏற்பட்டு தமிழ்நாட்டைத் தவிர நான்கு மாநிலங்களுக்கு வேறு ஐந்து மாநிலங்களுடன் சேர்த்து 800 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக தரப்படுகிறது. அதில் நமக்கு பங்கு இல்லையென்று சொல்வது நியாயம் அல்ல என்பதைத்தான் கவர்னர் அவர்களுடைய உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

நாம் போராடி எதுவுமே பெறவில்லையா என்று கேட்டால் போராடி பெற்றிருக்கிறோம் என்று சொல்ல விழைகிறேன். கையாலாகாதவர்கள் புள்ளி விவரங்களைக் கேட்டறியாதவர்கள் என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லா விட்டாலும், சுற்றிச் சுற்றி அந்த பொருள் தொனிக்கும்படியாகப் பேசினார்கள். சென்ற ஆண்டு மட்டும் வாதிட்டு வறட்சிப் பணிக்காக 14 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம். அடுத்து, ராயலசீமா கடன். ராஜாஜி ஆட்சியில் ரிசர்வ் பாங்கின் ஓவர் டிராப்ட் ஆக 23 கோடி ரூபாய் இருந்தது. அதில் நமக்கு 13 கோடி ரூபாய் பங்கு உண்டு. இப்போது பேரவைத்தலைவராக இருப்பவர் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். அந்தக் கடன் 13 கோடி ரூபாய் போராடியதன் விளைவாக தவணையாக 4 வருடமாக தள்ளிக் கொடுத்து வருகிற சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படியாக நாம் சென்ற ஆண்டு 31 கோடி ரூபாயைப் பெற்றிருக்கிறோம். பல்வேறு பணிகளுக்காக நாம் 14 கோடி ரூபாய், பின்னர் 10 கோடி ரூபாய், பின்னர் 7 கோடி ரூபாய் ஆக 800 கோடி ரூபாயிலிருந்து சென்ற ஆண்டு வாதிட்டுக் கேட்கப் பெற்றது 31 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல இந்த ஆண்டும் பெற வேண்டு மென்பதற்காகத்தான் சட்டசபையில் இப்படி அறிக்கை வைத்திருக்கிறோமே, பேசுகிறோமே, இவையெல்லாம் எங்களுடைய எதிர்ப்புத்தான். தமிழ்நாட்டு மக்களுடைய சார்பாக மத்திய அரசுக்குக் காட்டும் எதிர்ப்புத்தான் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மக்களிலே சிலபேர் எங்கே பிரிவினையில் கொண்டு போய்விடுமோ என்று அஞ்சுகிறார்கள். அப்படி அஞ்சத் தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். இந்திய நாட்டு ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டிருக்கிறோம், இந்திய நாடு ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறோம். இந்தியப் பாராளுமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கிழக்கு வங்காளப் பிரச்சினையைப் பற்றி அந்தத் தீர்மானம் பரிந்துரைத்திருக்கிறது. ஒரு நாடு பிரிந்து போகிறபோது பாராளுமன்றத்திலே ஆதரவு தரப் படுகிறது. அதைப்பற்றிய சர்ச்சையில் நான் இறங்க விரும்ப வில்லை. கிழக்கு பாகிஸ்தான் தலைவராக இருக்கிற முஜிபுர் ரகிமான் என்ன கோரிக்கைகளை ஆரம்பத்தில் வைத்தார்? சிலோனில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையில் ரகிமானுடைய ஆறு அம்ச திட்டம் இருக்கிறது. இவைகளை யெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொண்டு அதை திருப்பித் திருப்பிச் சொல்கிறது என்று யாரும் கருத வேண்டாம். இப்போது சுதந்திர நாடு என்று கேட்கிற ரகிமான் முதலில் 6 அம்ச திட்டத்தைத்தான் வைத்தார். முதல் திட்டம் கிழக்குப் பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தான் இரண்டு மாநிலங்களில் உண்மையான தன்மையில் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டும்; இது நாம் கேட்கிற சுயாட்சியின் உண்மையான தன்மையில் கூட்டாட்சி ஏற்பட வேண்டும் என தோன்றக் கூடும். இரண்டாவது திட்டம், பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகிய இரண்டு மட்டும் மத்திய அரசின் அதிகார வரம்பில் வர வேண்டும். மீதி அத்தனை அதிகாரங்களும் மாநிலத்திற்கு வரவேண்டும். நான் அப்படிச் சொல்லவில்லை. 'நம்முடைய மாநில சுயாட்சியில்' அப்படிச் சொல்லவில்லை.

மூன்றாவதாக, கரன்சி நோட்டு இரண்டு பகுதிகளுக்கும் தனித்தனியாக இருக்க வேண்டும். அடுத்தது, வரிபோடும் அதிகாரமும், வசூலிக்கும் அதிகாரமும் மாநிலத்திற்கே இருக்க வேண்டும். இந்த வருமானத்திலிருந்து மத்திய அரசின் நிர்வாகத்திற்கு ஒரு பகுதியை செலுத்துவது என்பது இங்கே தலைகீழாக இருக்கிறது. மத்திய அரசு வசூலித்து ஒரு பகுதியைத் தான் நமக்குக் கொடுத்து வருகிறார்கள். அடுத்து, அந்தந்த மாநில

அந்நியச் செலாவணி வருமானம் அந்தந்த மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கவேண்டும். மத்திய அரசின் செலவுக்குத் தேவையான அந்நியச் செலாவணியை மாநில அரசு பங்காகச் செலுத்த வேண்டும். அடுத்து, வர்த்தகம், தொழில் வளர்ச்சிகளுக்காக வெளிநாடுகளோடு ஒப்பந்தம் செய்துகொள்கிற உரிமைகளை மாநிலத்திற்கே வழங்கவேண்டும். ஆறாவது (ஏ) தனி ராணுவம் இருமாநிலங்களுக்கும் தனித்தனியாக இருக்க வேண்டும். அதிலேயே (பி) வங்க மொழியும் கூட்டாட்சி மொழிகளில் ஒன்றாக வேண்டும்.

இவைகள் எல்லாம் முஜிபுர் ரகிமான் தன்னுடைய மாநில சுயாட்சித் திட்டத்திற்காக எடுத்துவைத்த 6 அம்சமாகும். இப்போது அவரது மாநில சுயாட்சித் திட்டம் நாட்டுக்குச் சுதந்திரம் தேடுகிற திட்டமாக, பாகிஸ்தானில் இருந்தே பிரிந்து போகிற திட்டமாகிவிட்டதைக் காண்கிறோம்.

மேலவையிலே நான் பேசும்போது குறிப்பிட்டேன். மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் பேசும்போது சொன்னார்கள் - நம்முடைய உரிமைகளுக்காக நாங்கள் எத்தகைய போராட்டம் நடத்தினாலும் - போராட்டம் இல்லை - எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் உதவத் தயார் என்று சொன்னார்கள். நான் பேசும்போது குறிப்பிட்டேன். அவர் கவனம் இல்லாமல் சொல்லவில்லை. நாங்கள் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் உதவத் தயார் என்று திரு. ராஜாராம் அவர்கள் சொன்னார்கள் என்றால், நாங்கள் எடுக்கிற நடவடிக்கைகள் எல்லாம் அறவழி முறையில் இருக்கும், இந்தியாவைப் பலப்படுத்தி மாநிலங்களும் வளப்படுகிற முறையில் தான் இருக்கும் என்கிற நம்பிக்கையின் காரணமாகத்தான் எத்தகைய நடவடிக்கை எடுத்தாலும் ஒத்துழைக்கத் தயார் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன்.

அதையேதான் நான் இங்கும் சொல்கிறேன். நாம் கோருகிற அதிகாரங்கள் மாநிலத்தை தனியாகப் பிரிப்பதற்கு அல்ல - இந்தியா எப்போதும் ஒன்றாக வலுப்பெற்று இருப்பதற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் என்று கோருகிறோம். மாநில அதிகாரங்களில் மத்திய தலையீடு அடிக்கடி இல்லாதபடி

மத்தியில் அதிகாரங்கள் மேலும் மேலும் குவித்து கொள்வது தவிர்க்கப்படவேண்டும். மத்திய அரசின் அதிகாரச் சுமை குறைந்தால் அதுவும் செம்மையாக திறம்பட தன் பணியை ஆற்ற முடியும். மாநிலங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்படுவதன் மூலம் மாநிலங்கள் வளமடையும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இவைகள் எல்லாம் எதிரொலிக்கிறது கவர்னரின் உரையிலும், ஏனைய எனது அறிக்கைகளிலும். அதுதான் இந்த மன்றத்தின் ஏகோபித்த வாசகமாக உருக்கொள்ளவேண்டும்.

கவர்னர்பெருமான் உரையில் புரட்சிகரம் இல்லை, சோஷலிசம் இல்லை என்று சொன்னார்கள். விவாதத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திரு. மணலி கந்தசாமி அவர்கள், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நிலச் சீர்திருத்தம் பற்றிச் சொன்னார்கள். பல அன்பர்கள் தகுந்தமாற்றம் - புரட்சி கரமான மாறுதல் உண்டாக்கப்படவேண்டும் என்றார்கள். நிலம் இல்லாதவர்கள் இருக்கக்கூடாது. 50 சென்ட் நிலமாவது எல்லோருக்கும் இருக்கவேண்டும், 15 குழி மனைக்கட்டாவது இருந்தாக வேண்டுமென்கிற புதிய சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தக்க ஏற்பாட்டைச் செய்யும் என்பதை தங்கள் மூலமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய தலைமையில் உருவாகியிருக்கின்ற அந்தக் குழு விரைவில் அந்தப் பணியை ஆராயத் தொடங்கும்.

பஸ் உச்சவரம்பைப்பற்றிக்கூடச் சொன்னார்கள். அந்த அடிப்படைக் கருத்தை இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நேற்று திருமதி. அனந்தநாயகி அவர்கள் பேசும்போதுகூட குறுக்கிட்டுச் சொன்னேன். பஸ்ஸுக்கு உச்சவரம்பு விரைவில் வரும். ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டோடு வரும் என்று இந்த நேரத்திலும் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

பஸ் என்றவுடன் நினைவுக்கு வருகிறது. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பஸ்ஸுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச பாஸ் அளிக்க வேண்டும் என்பதாகக் குறிப்பிட்டார்கள். அதைக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டு எப்படி எப்படிச் செய்யலாம் என்பதை யோசனை செய்து தக்க முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்க

பஸ்களுக்கு மாத்திரம் சொல்கிறேன். இப்போதே பல தகராறுகள் கண்டக்டர்களுக்கும், மற்றவர்களுக்கும் நடக்கின்றன. எம். எல். ஏ.- க்களுக்கு இலவச பாஸ் வழங்கப்படுகிறபோது எம். எல். ஏ,- க்களுக்கும், கண்டக்டர்களுக்கும் தகராறு என்கிற நிலை வராது பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பையும் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். ஆகவே அந்த இலவச பஸ் பாஸ்களை வழங்குகின்ற அளவுக்கு இந்த அரசு அந்தத் திட்டங்களை ஆராய்ந்து வகுக்கும் என்று எடுத்துக் கூறுகிறேன்.

சில உறுப்பினர்கள் இப்போது எம். எல். ஏ-க்களுக்கு மாதம் அளிக்கப்படுகிற ரூ. 250-ஐ கொஞ்சம் அதிகமாக்கினால் நல்லது என்று கேட்டார்கள். பணத்தை அதிகமாக்கவேண்டாம், பகிரங்கமாகத் தெரியும் மக்களுக்கு என்பதாக திரு. கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள். என்றாலும் இறுதியில் அது பற்றி எப்படிச் செய்தாலும் சரி என்று முடிவு செய்கிற பொறுப்பை என்னிடத்தில் விட்டுவிட்டார்கள். நானும் இதுபற்றி எல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்துபேசி முடிவு எடுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தங்களைத் திரும்பப்பெறவேண்டுமென்று பணிவுடன் வேண்டிக்கொண்டு இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister has just now read out six demands of Sheikh Mujibar Rehaman. I want to know whether he has picked out any of the demands. Also has the reference to these demands got any relevant to the matter under discussion in this House?

அவற்றை இந்த அவையில் குறிப்பிட்ட காரணம் என்ன? அவற்றில் எதை எதை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது பற்றிய விளக்கங்களை முதல் அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு. கலைஞர் மு. கருணாநிதி : நான் பேசினது முழுவதையும் திரு. ஹாண்டே அவர்கள் கவனிக்கவில்லை என்று தெரிகிறது. இதைப்பற்றி வெளியில் திரு. பக்தவத்சலம் போன்றவர்கள் கூட குழப்பம் அடைந்திருப்பதாகச் சொன்னார்கள். திரு. ரகிமான் அவர்கள் முன்னர் சுயாட்சி கோரவில்லை என்ற கருத்தும் சொல்லப்பட்டது. அவர் முதன் முதலில் மாநில சுயாட்சித் திட்டமாக இந்த ஆறு அம்சங்களை அறிவித்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொன்னேன். இவற்றில் எதை எதை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பது இப்போது சொல்வதற்கில்லை. ராஜமன்னர் குழுவின் அறிக்கை வந்த பிறகு தெரியும்.

உரை : 9 நாள் : 31.01.1972

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமகனார் அவர்கள் சட்டப் பேரவை, சட்ட மேலவை கூட்டுக் கூட்டத்திலே ஆற்றிய உரையினையொட்டி இந்த மாமன்றத்தில் இதுவரையிலும் நிறுவனக் காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்பட 49 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அறிவித்து இருக்கிறார்கள்.

கவர்னர் அவர்களுடைய உரையின் தொடக்கத்தில், "நமது முப்படையினரின் வீரதீரத்தாலும், நமது பிரதம மந்திரி அவர்களின் ஒப்புவமையற்ற, பதட்டமடையாத, தகைசால் தலைமை காரணமாகவும், நமது வாக்குறுதியை நாம் நிறைவேற்ற முடிந்தது" என்று போரின் முடிவு குறித்து பொறுப்போடு குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசிய பொழுது இதிலே நாட்டினுடைய பிரதமர் இந்திரா காந்தியையும், தமிழ்நாட்டு முதலமைச்சரையும் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத் தக்கதுதான் என்றாலும் இப்படியெல்லாம் பர்சனால்டி கல்ட் வளர்க்கப்படக் கூடாது என்று தெரிவித்தார்கள். ஒருவேளை இதனை யொட்டித்தானோ என்னவோ நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகளுக்கும் வீரர்களுக்கும் மாத்திரம் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, இந்திய அரசாங்கத்திற்கு என்று மட்டும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருடைய பெயரும், பாதுகாப்பு அமைச்சர் போன்றவர் களுடைய பெயரும் விடப்பட்டு இருக்கிறதோ என்று நான் கருது கிறேன். ஆனால் இது அண்மையிலேதான் காங்கிரஸ் கட்சியின்

சார்பில் எடுக்கப்பட்ட முடிவாக இருக்கும் என்று கருதுகிறேன். போர் முடிந்தவுடன் இந்த மாமன்றத்திலே நாம் ஒரு தீர்மானம் எடுத்தபொழுது உறுப்பினர் திருமதி. அனந்தநாயகி அம்மையார் அவர்கள், இந்திரா காந்திக்குக் கிடைத்த வெற்றி தாய்க் குலத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று சொன்னார்கள். நான் கூடச் சொன்னேன், தாய்க்குலத்தின் பெருமையை உலகம் எல்லாம் உணர்ந்தும் நீங்கள் தாமதமாக உணர்ந்ததற்காக நன்றி என்று சொல்லியிருக்கிறேன். இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் பெர்சனால்டி கல்ட் என்ற வகையிலே அவ்வளவு புகழ்ந்த காங்கிரஸ் கட்சியினர் திடீரென்று, இந்திரா காந்தி அவர்களைப் புகழ்வது பெர்சனால்டி கல்ட் என்று குறிப்பிடுவது வியப்புக்கும் வேதனைக்கும் உரியதாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாங்கள் பாராட்ட வேண்டிய நேரத்திலே பாராட்டினோம். நீங்கள் அதையே வைத்து விளம்பரம் தேடிக்கொண்டிருக்கிறீர்கள், அதுதான் பெர்சனால்டி கல்ட். திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நாங்கள் பாராட்டவேண்டிய நேரத்திலே பாராட்டாமல் இருப்பதே கிடையாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இந்த அருமையான கருத்தை அப்படியே இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நான் சமர்ப்பிக்கிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில் முதலமைச்சரைப் பாராட்டுகின்ற பாவத்தை அவர் எங்கும் செய்ததாகத் தெரிய வில்லை. இந்த உரையில் போர் வீரர்களின் குடும்பத்தினரைப் பற்றிக் குறிப்பிட்டு அவர்களுக்கு எல்லாவகையிலும் உதவியளிக்கத் தமிழ் நாடு அரசு பல நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதெனக் கூறிக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று தமிழ் நாடு அரசைப்பற்றித்தான் குறிப்பிட்டிருக்கிறார்களே அல்லாமல் நல்லவேளையாக என்னுடைய பெயர் இதிலே குறிப்பிடப்படவில்லை என்பதும், முதலமைச்சர் என்னும் வார்த்தை இந்த இடத்திலே வரவில்லை என்பதும் கவனிக்கத் தக்க ஒன்றாகும். ஆனால் பிரதமர் இந்திரா காந்தியை மாத்திரம்தான் பாராட்டப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை, இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் குறிப்பிட்ட பொன்

மொழியை எடுத்துக்காட்டி, "இழிக்கப்பட்ட இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் தங்கள் தன்மானத்தை நிலை நாட்டியுள்ளது மட்டுமன்றி, தங்கள் நாணயத்தைக் காப்பாற்றி ஜனநாயக அடித் தளத்தை வலுப்படுத்தியுள்ளனர்" எனக் கூறிக்கொள்வதில் நாம் பெருமைப் படலாம் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

அடுத்தபடியாக, "இந்தியாவில் புகலடைய வேண்டி வந்தது. இலட்சக்கணக்கான மக்கள் அவதியால் அல்லலுற்று ஓடி வந்தபோது அஞ்சேல் என அவர்களுக்குத் தஞ்சமளித்துக் காப்பாற்றுவதற்கு இந்த நாடு முழுவதும் ஓரணியாகத் திரண்டு நின்றது" என்று நாட்டு மக்கள் ஓரணியாகம் திரண்டதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து, "இந்திய மக்கள் அனைவரும் மனமார்ந்த ஒத்துழைப்பு நல்கியிராவிட்டால், நமக்கு ஏற்பட்ட சுமையினைத் தாங்க, ஆதாரங்கள் அனைத்தையும் திரட்ட முடியாமற் போயிருக்கும்" என்று இந்திய மக்களைத்தான் உரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.

அந்த உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற அடிப்படையிலே எழுந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் இந்த நேரத்தில் நானும் மீண்டும் ஒருமுறை தமிழ்நாட்டின் சார்பாக இந்தப் போரின் வெற்றிக்கு முழுமுதல் காரணமாகயிருந்த முப்படைத் தளபதிகளையும், வீரர்களையும், இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்களையும், பாதுகாப்பு அமைச்சர் ஜகஜீவன் ராம் அவர்களையும், இந்த வெற்றிக்கு ஈடுகொடுக்கின்ற அளவில் ஓரணியிலே நின்ற நம்முடைய நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்ளு வதிலே நான் மிகுந்த பெருமை அடைகிறேன் என்று இங்கே அறிவிக்கிறேன்.

வீர மரணம் அடைந்த தமிழ்நாட்டுப் போர் வீரர்களின் குடும்பங்களுக்கு உரிய உதவிகள் உடனடியாகச் சென்று சேரவில்லை என்ற கருத்து இங்கே பேசிய சில உறுப்பினர்களால் இரண்டொரு நாட்களுக்கு முன்பு தெரிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த போரில் மாண்ட வீரர்களின் எண்ணிக்கை இதுவரையிலே கிடைத்த ஒரு கணக்கின்படி 98 பேர்களாகும். இந்த 98 பேரோடு இந்தக் கணக்கு நின்றுவிடுமா

என்றால் நிற்காது, அதனால்தான் இதுவரையிலே கிடைத்த கணக்கின்படி என்று நான் குறிப்பிட்டேன். அந்த 98 பேர்களில் 61 பேர்களின் குடும்பங்களுக்கு குடும்பத்திற்கு 5,000 ரூபாய் வீதம் தமிழக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்த அந்த உதவித் தொகை அளிக்கப்பட்டாகிவிட்டது. மீதமுள்ள குடும்பங்களில் சரியான வாரிசுதாரர் யார் என்பதைப் பரிசீலனை செய்கின்ற அந்த வகையிலே சற்றுக் காலதாமதம் ஆகிறது என்பதை நான் எடுத்துக் கூறி, அதுவும் விரையில் வழங்கப்பட பரிசீலனைகள் முற்றுப்பெறும் என்ற தகவலை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் பெருமானுடைய உரையில் குறிப்பிடப் பட்டிருக்கின்ற பல கருத்துகள் அல்லது தமிழ்நாடு அரசு செயல்படும் பல திட்டங்கள் சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் வகையிலே இருந்திடவில்லை என்று இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கோடிட்டுக் காட்டினார்கள்.

30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்த உச்சவரம்பினை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று ஆக்கியிருப்பது சமதர்ம திட்டத்தின் அடிப்படையில்தான் என்பதை அப்படிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

அதுமட்டுமல்ல, கரும்புக்கு, மேய்ச்சல் நிலங்களுக்கு இதுவரையிலேயிருந்த விதிவிலக்கு அகற்றப்பட்டதாக இந்த அரசு முடிவெடுத்து அறிவித்திருப்பதும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு அடையாளம்தான் என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, ஏற்கனவேயிருந்த உச்சவரம்பின் காரணமாக தப்பித்துக் கொள்ளும் வகையிலே நாட்டிலே பலபேர் பினாமி என்னும் அளவிற்கு சட்டத்திலேயிருந்து மறைந்து கொள்ள செய்திருக்கும் ஏற்பாடுகளையெல்லாம் கவனித்ததோடு, அதிலிருந்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்க ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதன் அடிப்படையில் அந்த பினாமி தாரர்களை யெல்லாம் பிடிக்கின்ற வகையிலேயும் இந்த அரசு நல்ல முயற்சிகளிலே ஈடுபடும் என்று நான் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் அதைக்

குறிப்பிட்டிருக்கின்றேன். வெகு அண்மையிலே நடைபெற விருக்கும் நிலச் சீர்திருத்த அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தில் இவைகளைப் பற்றியும், நிலச் சீர்திருத்தத்தைப் பற்றியும் நாம் விவாதிக்க இருக்கிறோம். அதில் தரப்படும் கருத்துக்களின் அடிப்படையில் நல்ல முடிவுகளை தமிழ்நாட்டில் நிலச் சீர்திருத்தத்தையொட்டி எடுக்க இருக்கிறோம். இவைக ளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற்கான அடையாளங்களே தவிர வேறு அல்ல.

பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர் களுக்குப் பல்லாண்டுக் காலமாக இருந்த பிரச்சினை அவர்களுடைய குடியிருப்பு மனைகள் அவர்களுக்குச் சொந்தமாக ஆக்கப்படாமல் இருந்ததாகும். அதை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததற்கிணங்க அந்தக் குடியிருப்பு மனைகளை தஞ்சை மாவட்டத்திலேயிருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று திட்டம் தீட்டி அதைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். அதுவும் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு சென்று கொண்டிருக்கிறது என்பதற்கேற்ற அறிகுறியேயாகும்.

10 பேருந்து வண்டிகளுக்குமேல் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்று வரையறுத்து அதற்கு ஒரு உச்ச வரம்பினைக் கொண்டுவந்து, டி.வி.எஸ்., எஸ்.ஆர்.வி.எஸ்., ஏ.பி.டி., ராமன் அண்ட் ராமன் போன்ற பெரிய பஸ் நிறுவனங் களையெல்லாம் தேசீய உடைமையாக ஆக்கியிருப்பதும் இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கி விரைந்து நடைபோடுகிறது என்பதற்கான அடையாளங்களேயன்னியில் வேறல்ல.

நம்முடைய சென்னை மாநகரத்திலே 600 குடிசைப் பகுதிகளை 7 ஆண்டுக் காலத்திற்குள்ளாக மாற்றியமைத்து குடிசைவாழ் மக்களுக்கு நல்ல கல் வீடுகளைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடு தொடங்கப்பெற்று இதற்கு 40 கோடி ரூபாய் செலவழிப்பது என்று திட்டமிட்டு இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் குடிசைகளாயிருந்த இடங்களில் நல்ல கல் வீடுகளும், மாடிக் கட்டிடங்களும் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு

இருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் சமதர்ம சமுதாயத்தை நோக்கி இந்த அரசு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளங்களே தவிர வேறல்ல.

தமிழ்நாட்டிலே பல ஆண்டுக் காலமாக அலைக்கழித்து வரும் பிரச்சினை பிச்சைக்காரர்களின் தொல்லை. பிச்சைக் காரர்களால் மக்களுக்கு ஏற்படும் தொல்லை மட்டுமல்ல, பிச்சை எடுப்பவர் களுக்கும் ஏற்படுகின்ற தொல்லைகள், இந்த இரண்டு தொல்லைகளிலிருந்தும் மக்களைக் காப்பாற்றும், பிச்சைக்காரர்களைக் காப்பாற்றும் முறையில் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டில்தான் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து இந்த ஆண்டு 3 விடுதிகளும், தொடர்ந்து பல விடுதிகளைத் தமிழ்நாட்டில் அமைக்க நாம் எடுத்திருக்கும் முறை இந்த அரசு சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்கிறது என்பதற்கான அடையாளமே தவிர வேறல்ல.

பின் தங்கியோர் நலனுக்காக 1966-67-இல் அவர்களுடைய நலனுக்காக மாநில அரசின் சார்பாக செலவழிக் கப்பட்ட தொகை 91 இலட்சம் ரூபாய். ஆனால் 1971-72-இல் அது 3 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அரிசன மக்களுக்காக 1966-67-ல் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்கு, நலனுக்கு, மாநில அரசின் சார்பாக 3.59 கோடி ரூபாய் என்றிருந்தது. 1971-72-இல் 5.3 கோடி ரூபாயாக அரிசன நலனுக்காக உயர்த்தப்படட்டிருக்கிறது. அருமை நண்பர் வடிவேல் அவர்கள் அன்றைக்குப் பேசும்பொழுது குறிப் பிட்டார்கள், 3 கோடி 5 கோடியாக உயர்த்தியிருப்பதைப் பாராட்டு கிறேன், அதேநேரத்தில் அரிசன மக்களின் தொகையும் உயர்ந்திருக்கும் என்பதை முதலமைச்சர் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறினார்கள். நான் உடனடியாக அந்தப் புள்ளிவிவரங்களைத் தேடிக் கண்டுபிடித்தேன். 1966-67-இல் 3 கோடியே 59 இலட்சம் ரூபாய் அந்த மக்களுக்காக, அரிசன மக்களுக்கா செலவழிக்கப் பட்டபொழுது இருந்த மக்கள் தொகை 60.6 இலட்சம்பேர். 60.6 இலட்சம் அரிசன மக்கள் இருந்தபொழுது 3 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. 1971-72-இல் 73.96 இலட்சந்தான் அரிசன மக்கள் இருக்கிறார்கள். ஆக, 13 இலட்சம் பேர்கள்தான்

ஜனத்தொகையில் உயர்ந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் 2 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவி மாநில அரசின் சார்பில் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு குறையைச் சொன்னார்கள். 'கிராமத்தில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடன்கள் போய்ச் சேருவதிலே அவர்கள் தரவேண்டிய வட்டித் தொகை அதிகமாக இருக்கிறது. ரிசர்வ் பாங்கியிலிருந்து நீங்கள் 3 சதவிகிதம் வட்டிக்குப் பெற்று அதை 9 சதவிகிதம் வட்டிக்குக் கிராமப்புறத்து விவசாயிகளுக்குத் தருகிறீர்களே. அது நியாயமல்ல' என்று எடுத்துரைத்தார்கள்.

நான் அவர்களைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் நிலைமையை விளங்க வைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட அந்த வட்டி விகிதம் பழைய வட்டி விகிதங்கள் ஆகும். புதிய வட்டி விகிதங்கள், குறுகிய காலக் கடனுக்கு ரிசர்வ் பாங்கியில் இருந்து மாநில வங்கிக்கு 4 சதவிகிதம் வட்டி என்ற வகையில் பணம் தரப்படுகிறது. இதற்கு நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். அந்த 4 சதவிகிதம், மாநில வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்குச் செல்லும்போது 4.50 சதவிகிதமாக மாறுகிறது. அது மாவட்ட வங்கியிலிருந்து கூட்டுறவுச் சங்கத்திற்குச் செல்லும்போது 6.50 சதவிகிதமாக மாறுகிறது. கூட்டுறவுச் சங்கத் திலிருந்து விவசாயிக்குச் செல்லும்போது 8.70 சதவிகிதமாக அந்த வட்டி மாறுகிறது.

இப்படி அதிகமாகிறதே என்று கேட்டால் இந்த மூன்று கட்டங்களிலும் ஏற்படுகின்ற நிர்வாகச் செலவுகள், சங்கத்திலே பங்கு வைத்திருக்கக்கூடியவர்களுக்கு தரப்படுகின்ற டிவிடென்ட் போன்றவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, 3 சதவிகிதம் 9 சதவிகிதம் ஆயிற்று என்று சொல்வது சரியல்ல. 4 சதவிகிதம் என்பது 8.70 ஆக மாறுகிறது. அது மூன்று கட்டங் களிலுள்ள நிர்வாகச் செலவுகளின் காரணமாக இப்படி உயர்ந் திருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் அந்த விவசாயிகள் வெளியே கடன் வாங்கினால் எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டும், எவ்வளவு அதிகமான வட்டி கொடுக்க வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறியாதவர்கள் அல்ல. கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கிராம விவசாயிகள் இந்தக் கடனைப் பெறுவதால் அவர்கள் பயனடைகிறார்களே அல்லாமல், வேறல்ல.

பொதுவாகப் பேசிய எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் பலரும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டதைப் பற்றிக் குறை கூறினார்கள். குறை கூறினார்களே அல்லாமல் அதை வன்மையாகக் கண்டித்தார்கள் என்று நான் சொல்லமாட்டேன். மின் கட்டண உயர்வு விவசாயிகளைப் பொறுத்தவரையில் 1.2 காசுதான் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, 10.8 காசு என்று இருந்ததை 12 காசு என்று நாம் உயர்த்தியிருக்கிறோம். இப்படி உயர்த்திய பிறகும் மின் வாரியத்திற்கு 6, 7 கோடி ரூபாய் நஷ்டம் வருகிறது என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு மாநிலங்களில் இதைவிட மின் கட்டணம் விவசாயிகளுக்கு அதிகமாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மகாராஷ்டிராவில் 18 காசு; பீகாரில் 18 காசு; குஜராத்தில் 16 காசு; ஹரியானாவில் 16 காசு; அஸ்ஸாமில் 16 காசு; உத்திரப் பிரதேசத்தில் 15 காசு; ஆந்திராவில் 12 காசு; மைசூரில் 12 காசு.

கேரளாவில் குறைவாக இருக்கிறதே என்று கேட்கக் கூடும். கேரளாவில் இறைவைப் பாசனம் அதிகமில்லை. கிணற்றுத் தண்ணீரை எடுத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் நிலைமை இல்லை. அது மாத்திரமல்ல, டிஸ்ட்ரிப்யூஷன் செலவும் கேரளாவில் அதிகம் இல்லை.

ஆகவே, 1.2 காசு என்ற அளவுக்கு நாம் மின் கட்டணத்தை உயர்த்தியிருப்பது பெரிய உயர்வு அல்ல என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலரும் பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள். கவர்னர் உரையில் கைத்தறியாளர்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்று

குறிப்பிட்டார்கள். இது வழக்கமாக நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்திலிருந்தே சொல்லுகின்ற ஒரு சம்பிரதாயம் உண்டு.

கவர்னர் உரையில் எல்லாவற்றையும் சொல்லிவிடுவது என்பது இயலாத காரியம். தமிழ்நாட்டில் இருக்கும் எல்லாப் பிரச்சினையையும் பற்றிக் கவர்னர் உரையில் சொல்லுவது என்றால் கவர்னர் ஒரு மூன்று நாட்கள் இந்த மாமன்றத்தில் நின்று கொண்டிருக்க வேண்டிய கஷ்டம் அவருக்கு ஏற்படும். அந்த அளவுக்குப் பெரிய புத்தகத்தைப் படிக்க வேண்டியிருக்கும். அப்போதும் சில விஷயங்கள் விட்டுப் போய்விடக் கூடும்.

கவர்னர் உரையில் சொல்லப்படாத விஷயங்களை எடுத்துச் சொல்லத்தான் மாமன்றத்திலே விவாதம் நடக்கிறது. ஆகவே, எல்லாவற்றையும் சொல்லி விட்டால் விவாதிப்பதற்கு விஷயமே இல்லாமல் போய்விடக் கூடும் என்பதால் சில விஷயங்கள் விட்டு வைக்கப்படுகின்றன.

கைத்தறியாளர்களைப் பொறுத்தவரை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 750 லட்சம் ரூபாய். இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1,060 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழு கோடி ரூபாய்க்குப் பதிலாக பத்து கோடி ரூபாய் அளவுக்கு நெசவாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலே மாத்திரம் 1967-68 முதல் செயல்படுகின்ற முதன்மையான திட்டமாக, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமாக, அரசே நேரடியாகப் பங்குகொள்ளும் திட்டமாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலதனத்தில் அரசே பங்கு கொள்ளுகின்ற அளவுக்குத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு அதன் காரணமாகப் பயனடைந்த சங்கங்கள் 469. இதற்காக 26 லட்சம் ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. இவ்வாறு அரசு உதவி செய்கிற காரணத்தால் ரிசர்வ் பாங்கியில் இருந்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதிவசதி அளித்து வளர்ச்சியடைந்திருக்கின்றன. அந்த வளர்ச்சியைப் பார்க்கும்போது 1966-67-ல் 371 லட்சமாக இருந்தது 1971-72-ல் 606 லட்சம் என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

புது ரகத் துணிகளை உற்பத்தி செய்ய புதிய நவீன முறைகளைக் கையாண்டு நெசவாளர்கள் பயிற்சி பெற புதிய

பயிற்சி நிறுவனங்கள் 1969-70-ல் தொடங்கப்பட்டு ஆண்டு தோறும் அதிலே நூற்றுக்கணக்கானவர்கள் பயிற்சி பெற்றிருக் கிறார்கள். அதற்காக இதுவரை செலவாகியிருக்கும் தொகை மாத்திரம், 1969 முதல் 1971 வரை 11 லட்சம் ரூபாய் ஆகும். அதிலே, 1969-70-ல் 353 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்; 1970-71-ல் 2,160 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்; 1971-72-ல் 2,500 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மொத்தம் 5,013 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இப்போது நெசவாளர்களுக்கு இருக்கும் முக்கிய குறைபாடு - அவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிடைக்கிற ஊதியத்தை விட தனியாரிடத்தில் வேலை செய்கிற நெசவாளர்களுக்குக் கிடைக்கிற ஊதியம் குறைவாக இருக்கிறது. என்பதாகும். கூட்டுறவுச் சங்கங்களில் தரப்படுகின்ற ஊதியத்தையும் வரையறுத்து நிர்ணயிக்கவும், கூட்டுறவுக்கு வெளியில் உள்ள நெசவாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தை நிர்ணயிப்பதும் அவசியம் என்று இந்த அரசு கருதுகிற காரணத்தால், அதற்காக என்று குழு ஒன்று உருவாக்கப்பட்டு, அந்தக் குழு இந்த ஊதிய விகிதத்தைப் பற்றி விரைவில் அறிவிக்கும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாமன்றத்தின் மூலமாக நெசவாளர் குடும்பங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் தகராறுகளைப் பற்றி இந்த மன்றத்தில் விரிவாகப் பேசப்பட்டது. நம்முடைய மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் வழக்கத்திற்கு மாறாகக் கொஞ்சம் வேகமாகக் கூட அதைப் பற்றிப் பேசி விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பெரும்பாலான தொழில் தகராறுகள் பேசித் தீர்க்கப்பட்டிருக்கின்றன. இதிலே அரசு எப்போதும் வீண் கவுரவப் பிரச்சினையாக எந்த நேரத்திலும் பார்த்தது கிடையாது என்பதைத் தொழில் துறையிலே ஈடுபட்டிருக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் நன்றாக உணருவார்கள். ஏதோ ஒன்றிரண்டு சம்பவங்களில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று வன்முறைச் செயல்கள் நடைபெறுகிற அளவுக்கு நிலைமை போயிருக்கலாம். ஆனால் மொத்தத்தில் பார்த்தால் கடந்த

நாலைந்து ஆண்டுகளாக தொழில் தகராறுகள் பெரும்பாலும் பேசியே தீர்க்கப்பட்டிருக்கின்றன.

பெரியவர் அன்புக்குரிய மணலி கந்தசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள். 'அன்புக்குரிய' என்று சொல்லுவதால் யாரும் சந்தேகப்பட வேண்டாம். அவர்கள் என்னுடைய அன்புக்கும், மதிப்புக்கும் கூட உரியவர்கள். அவர்கள் பேசும்போது கூடச் சொன்னார்கள். அவர்களுடைய வயதுக்கு மேல் ஆவேச உணர்ச்சியோடு, 'அந்தத் தலைவர்களுடைய அரசியலை வெறுக்கிறேன்; ஆனால் அப்படி அவர்கள் அடிபட்டதை எல்லாம் கண்டிக்காமல் இருக்க முடியாது' என்று சொன்னார்கள். எந்தக் காரணத்திற்காக, யார் அடிபட்டாலும் காயமுற்றாலும், அதற்காக வருந்தாத எஃகு உள்ளம், கல் மனம் நம் யாருக்கும் இல்லை. நம் தமிழ்நாட்டின் அரசியலில் அதைத் தான் நாம் போற்றிப் பாதுகாத்து வருகிறோம். யார் யார் அடிபட்டார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த சுந்தரம் அவர்களை விட்டு விட்டார்கள். அதைச் சொன்னால் அவர்களுடைய கட்சியைப் பற்றிச் சொன்னதாக வந்துவிடும் என்று அவர்கள் விட்டு விட்டார்களோ என்னவோ? நான் அதை விட்டு விட்டால் அவர்கள் ஒருவேளை கோபித்துக் கொள்ளக் கூடும் என்று அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவருக்கும் சேர்த்து நான் வருத்தத்தைத் தெரிவிக்கிறேன்.

அதே நேரத்தில் பெரியவர் மணலி போன்றவர்கள் 54 திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், தொழிலாளர்களாலேயே தாக்கப்பட்டு மருத்துவ மனையில் இருக்கிறார்களே, அவர்களைப் பற்றியும் ஒரு வார்த்தை சொல்லி யிருந்தால் பெரியவருடைய வார்த்தையில் இருபுறத்திலும் அனுதாபம் பிறந்திருக்கிறது என்று மகிழ்ந்திருக்கக் கூடும். ஒரு வேளை நேரம் போதாத காரணத்தால் அவசரத்திலே அவர்கள் விட்டு இருக்கலாம் என்று நான் கருதுகிறேனே அல்லாமல், திராவிட முன்னேற்றக்கழகத் தொழிலாளர்களானாலும், கம்யூனிஸ்ட் தொழிலாளர்களானாலும், காங்கிரஸ் தொழிலாளர் களானாலும், வேறு எந்தக் கட்சியைச் சார்ந்த தொழிலாளர் களானாலும் அவர்களுக்காக அனுதாபப்படக் கூடிய பரந்த மனம்

படைத்த தொழிற்சங்கத்தலைவர்தான் திரு. மணலி கந்தசாமி என்பதை நான் நன்றாக அறிவேன். அவர்களிடத்திலே எனக்கு ஒரு தனி மரியாதை உண்டு. எனக்கு மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குக் கூட அவர்களிடத்திலே ஒரு நல்ல மதிப்பும், மரியாதையும் உண்டு. ஏன் அந்த மரியாதை, மதிப்பு வைத்து இருக்கிறோம் என்றால்.... அவர் பேசும்போது சொன்னார் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் ஆயிரம் குற்றங்கள் இருந்தாலும் நாங்கள் காமராஜரோடோ அல்லது இராஜாஜியோடோ என்றைக்குமே சேர்ந்து விடமாட்டோம் என்று. அவர் அப்படிச் சொன்னது எங்களுக்கு உறுதிமொழி அளிப்பது மாதிரி இருந்தாலும், அவர்கள் கட்சியில் இருக்கும் பிளவு மனப்பான்மைக்கு விட்ட ஒரு எச்சரிக்கை என்றே நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு தூய உள்ளம் அவருக்கு இருக்கிற காரணத்தால்தான், அவர்களிடத்திலே எங்களுக்கு என்றைக்குமே ஒரு தனி மரியாதை, மதிப்பு உண்டு.

ஆகவே, தொழில்தகராறுகள் பேசித் தீர்க்கப்படவேண்டு மென்ற அளவில் இந்த அரசு தங்களுடைய கடந்த கால நடவடிக்கைகள் மூலம் மெய்ப்பித்துக்காட்டி வருகிறது. அதற்கு ஏற்ப, தொழிற்சங்கத் தலைவர்களும் இந்த அரசோடு மேலும் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன், அந்த யூனியன் தலைவர் தொழிலாளியாக இருக்கவேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் கருத்தைப் பற்றி பல தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் இப்போதே உடனடியாக பதில் சொல்ல விரும்பாமல், அந்தத் தலைவர்களின் கருத்துக் களைப் புறக்கணிக்கக் கருதாமல், அந்தக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், அவைகளை ஆராய்ந்து, அடுத்து நடைபெறவிருக்கிற சட்டமன்றக் கூட்டத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கை விவாதிக்கப்படுகின்ற கூட்டத்தில், அது பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன். ஆகவே, எல்லோருடைய கருத்துக்களையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அது பற்றி பிறகு மீண்டும் ஒரு முறை விவாதிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலையைப் பற்றி எல்லாக் கட்சியின் தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சேலம் இரும்பாலை இவ்வளவு தாமதப்படுவதற்கு என்னென்ன காரணங்கள் என்று கேட்டார்கள். அவர்கள் கூட சொன்னார்கள், தேர்தல் காலத்தில் சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் நாட்டிவிட்டு, தேர்தலில் வெற்றி பெற்று விட்டார்கள் என்று சொன்னார்கள், திரு. நாடார் அவர்கள். சேலம் இரும்பாலைக்கு அடிக்கல் விழா நடத்துகிறபோது, தேர்தல் வரும் என்று ஜாடையாகக் கூட தெரியாது. இது எல்லாம் அவர்களுடைய பழைய வழக்கம். திருச்சிக்கு அருகேயுள்ள திருமானூரில் பெரிய பாலம் ஒன்று கட்டுவதற்காக தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு அப்போதிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் திருமதி. இந்திரா காந்திக்கு தந்தி கொடுத்து, சாங்ஷன் வாங்கி அடிக்கல் போட்டார்கள். அடிக்கல் அப்படியே இருந்தது. அந்தப் பக்கமாகப் போன சில பேர், இது ஏதோ காளியோ, மாரியம்மனோ என்று கருதி, அதற்கு மஞ்சள் பூசி, பொட்டு வைத்து, தேங்காய் உடைத்துப் பிறகுதான், ஆஹா இது அடிக்கல், இது தேர்தல் நேரத்திற்காகப் போடப்பட்டு இருக்கலாம் என்று விஷயம் புரிந்தது. அந்தப் பாலம் கட்டப்படாமலேயே இருந்தது. அவர்கள் செய்யத் தவறியதையெல்லாம் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் இரும்பாலையைப் பொறுத்தவரையில், அது ரூ. 300 கோடிக்கு நடைபெறவேண்டுமென்ற வாதத்தில் நாம் எப்போதும் பின்வாங்கியது இல்லை. அதிலிருந்து பின்வாங்கப் போவதில்லை. அது மாத்திரமல்ல. கஞ்சமலைத் தாதுவை எடுத்துத்தான் அந்த உருக்காலை வரவேண்டுமென்று சொல்கிற அந்தப் பிரச்சினையிலும் நாங்கள் பின்வாங்கவில்லை. கஞ்சமலைத் தாதுவை எடுத்து ஜப்பான் நாட்டுக்காரன் அங்கே தொழிற்சாலை வைக்க முடியும் என்று சொல்கிறபோது, கஞ்சமலைத் தாதுவைக் கொண்டு உருக்காலை இங்கே அமைக்கலாம் என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன் டில்லியில் நடைபெற்ற அலுவலாளர்கள் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. நாம் மகிழ்ச்சியடையத் தக்க அளவுக்கு விரைவில், அந்தத் திட்டம் நாம் கோருகிற வகையில்

தொடங்கப்படவிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கைதட்டல்).

சில குறைபாடுகள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டன. அவர்கள் கூட சொன்னார்கள், பத்திரிகைகள் எல்லாம் மிரட்டப் படுகின்றன. பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் எல்லாம் கொடுக்கப்படுவதில்லை. ஆளும் கட்சிப்பத்திரிகைகளுக்குத்தான் தரப்படுகின்றன என்ற செய்திகள் எல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் விளம்பரங்கள் கொடுப்பது என்ற முறையில் இந்த அரசு நடந்து கொள்ளவில்லை. தமிழரசுப் பத்திரிகையில் குத்தகை, ஒப்பந்தம் ஆகிய விளம்பரங்கள் வரும் என்று அறிவித்து அரசு ஆணை பிறப்பித்த அதே நேரத்திலே அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த விளம்பரங்கள் சில அவசர நிலையை ஒட்டி வேறு பத்திரிகைகளிலும் வெளியிடலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கொப்ப, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் மாத்திரம் 200-க்கு மேற்பட்ட விளம்பரங்கள் திரு. ஹாண்டே அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல தரப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சிப் பத்திரிகையான 'முரசொலிக்கு' 90 விளம்பரங்களும், இந்து பத்திரிகைக்கு 115 விளம்பரங்களும், மெயில் பத்திரிகைக்கு 150 விளம்பரங்களும், ஸ்டேட்ஸ்மன் பத்திரிகைக்கு 50-க்கு மேற்பட்ட விளம்பரங்களும் தரப்பட்டு இருக்கின்றன. ஆளும் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் அந்த விளம்பரங்கள் தரப் படவில்லை என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய முரசொலிக்கு 90 அட்வர்டைஸ்மெண்ட்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

The Hon. Chief Minister has told the names of papers given advertisements. What about the Opposition papers like Navasakthi, Nathigam, etc.? I think the standard of Murasoli and these papers are the same. I have got a copy of 'Murasoli', wherein I have been personally attacked. You give adtertisements to such papers. Then, why not you give advertisements to papers who criticise the Government openly. That is my question.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெயில், ஹிந்து ஆகிய பத்திரிகைகள் கூடத்தான் அரசாங்கத்தை விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் என்பதற்கு அர்த்தம் புரியாமல் பேசிக்கொண்டிருக்கக்கூடாது.

DR. H. V. HANDE : Personally, I have been attacked. I have been called 'Ularuvayan' about what discussion took place in the Assembly. That is how 'Murasoli' - functions. Not even that My constituency voters also had been attacked. Perhaps it is not known to them that the same constituency people had elected a DMK member in 1967. Such is the manner in which, what happened here in the Assembly, is described in 'Murasoli'. I have been personally attacked. You give Government advertisements to such papers. When such is the case, why can't you give advertisements which criticise the Government, the Opposition papers. Why should advertisements be given only for papers which support the ruling party? I want to know why the advertisements are not given to papers which criticise the Government. I do not get straight answers to my questions.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒருவரை விமர்சனம் செய்வதற்கும், அவதூறாக செய்திகளை வெளியிடுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. பத்திரிகைக்காரர்கள் மிரட்டப்படுகிறார்கள், பழிவாங்கப் படுகிறார்கள் என்றெல்லாம் இங்கே மாத்திரமல்ல, காங்கிரஸ் கட்சி செயற்குழு கூட அப்படித் தீர்மானம் போட்டு இருப்பதாக அறிகிறேன். ஆனால் அரசாங்கத்தை, அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதுகிற எந்தப் பத்திரிகை மீது அரசு வழக்குப் போட்டு இருக்கிறது. அரசாங்கக் கொள்கைகளை எதிர்த்து எழுதாமல், அவதூறான விஷயங்களை எழுதுகிற நேரத்தில், அதற்குப் பதில் அளித்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதாது, நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள் தங்களை நிரபராதிகள் என்று நிரூபித்துக்கொள்ள வேண்டிய அவசியத்திற்குள்ளாகிறார்கள்.

ஆகவேதான், முதலிலே நவசக்தி பத்திரிகை மீது வழக்கு போடப்பட்டது - 1967-ல் கழகம் ஆட்சிக்கு வந்த நேரத்தில். அப்போது நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தேன்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறவர்கள் எல்லாம் தலையிலே ஹெல்மெட் போட்டுக்கொள்ள வேண்டும். அதைப் பற்றி பொதுமக்கள் அபிப்பிராயம் என்ன என்று அறிந்து, பல மருத்துவர்கள் சொன்ன யோசனையின் பேரில், ஹெல்மெட் போட்டுக்கொண்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டால் - தலையில் அடிபட்டால் கூட - உயிருக்கு ஆபத்து இருக்காது என்பதை உணர்ந்து, பொதுமக்கள் அபிப்பிராயம் அறிய ஒரு அறிக்கை விடப்பட்டது. அந்தப் பத்திரிக்கைக்காரர்கள் என்ன எழுதினார்கள் தெரியுமா? "குல்லாய் போடுகிறார் கருணாநிதி" என்று எழுதி யாரோ ஹெல்மெட் விற்பவனுக்குப் பணம் சம்பாதித்துக் கொடுப்பதற்காக இப்படி மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் எல்லாம் ஹெல்மெட் போடவேண்டுமென்று சொல்கிறார் கருணாநிதி என்று எழுதப்பட்டது. அதை எதிர்த்துத் தான் வழக்காடி, அந்த வழக்கிலே அதை எழுதிய அதனுடைய ஆசிரியருக்கும், அதனுடைய உரிமையாளருக்கும் ரூ. 500 அபராதம் விதிக்கப்பட்டு, அதை அவர்கள் கட்டியிருக்கும் சம்பவம் நடைபெற்று வருகிறது.

அதைப்போலவே இன்னொரு பத்திரிகை. 'இவர்கள் சந்தித்தால்' என்ற தலைப்பில் ஆபாசக் கற்பனை செய்து எழுதியதன் காரணமாக வழக்கு நடத்தி - ஜெயக்கொடி பத்திரிகை மீது - பத்திரிகை ஆசிரியருக்கு 3 திங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தலைமை செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார். உயர்நீதிமன்றத்திலும் அது உறுதி செய்யப் பட்டது.

தமிழ்நாட்டைப் பங்கு போடுகிறார்கள் தி. மு. க. மந்திரிகள் என்று ஒரு செய்தி வந்தது. அதை எதிர்த்து வழக்கு தொடரப் பட்டு அந்த வழக்கில் தீர்ப்பளித்தார்கள். அமைச்சர்கள் வழக்கு மன்றத்துக்குச் செல்ல நேரிட்டது. அதிலும் சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள். அதற்குப் பிறகும் "ஏமாந்த மக்களைக் கற்பழிக்க, களவாட, குடித்துவிட்டுக் கும்மாளம் போட அவர்களுக்கு வாக்களித்து விட்டீர்கள்" என்ற தலைப்பிலே ஒரு பகிரங்கமான செய்தியை ஒரு பத்திரிகை வெளியிட்டு இருந்தது. அதுவும் அதே ஜெயக்கொடி பத்திரிகைதான். அதன் மீது வழக்கு போடப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

பிறகு "நாத்திகம்" பத்திரிகையில் "மந்திரிகள் சொத்துக் கணக்கு" என்கிற தலைப்பில் ஆட்சேபகரமான கட்டுரை ஒன்றை எழுதினார். வழக்கு போடப்பட்டு 3 திங்கள் சாதாரண சிறைத் தண்டனையும் ரூ. 1,000 அபராதமும் செஷன்ஸ் நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் தீர்ப்பு அளித்தார்கள். பிறகு அதே நாத்திகம் பத்திரிகை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் டாக்டர் எமதர்பார். சவக்கிடங்கில் சேர்க்கப்பட்ட பெண்மணி பிரசவித்தாள். இவ்வாறெல்லாம் தவறான செய்தியை வெளியிட்டது. அதற்கு வழக்குத் தொடரப்பட்டு 6 மாதம் அவருக்குச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று செஷன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்து உயர்நீதிமன்றத்தில் அது உறுதி செய்யப்பட்டது.

இப்படியே பல அவதூறான விஷயங்கள். இப்படி 9 தடவை வழக்கு போடப்பட்டது. ஒவ்வொரு வழக்கிலும் அபராதம் கட்டினார்கள், அல்லது சிறை சென்றார்கள், அல்லது மன்னிப்புக் கேட்டார்கள் என்கின்ற அளவுக்கு அவர்கள் பத்திரிகை ஆசிரியர்கள் மீது வழக்கு போடப்பட்டது அல்லாமல் இந்த அரசாங்கத்தின் தேசீய உடமை தவறானது என்று அரசாங்கத்தின் பக்கமோ அல்லது அமைச்சர்கள் பக்கமோ எங்களுடைய பேச்சுக்களை விமர்சித்தார்கள் என்பதற்காக யார் மீதும் எந்த வழக்கும் போடவில்லை. ஆனால், அவதூறான செய்திகளை வேண்டுமென்றே வெளியிட்ட பத்திரிகைகள் மீது வழக்குகள் போடப்பட்டன.

டாக்டர் ஹாண்டே அவர்களைப்பற்றி முரசொலியில் உளருவாயன் என்று எழுதி இருந்தால் அவர்கள், "நான் உளருவாயன் இல்லை, நன்றாகப் பேசக் கூடியவன்" என்று முரசொலியின் மீது வழக்குப் போடலாம்.

தலைவரவர்களே, அடுத்து கோவை மில்களைத் திறப்பதைப் பற்றிய பிரச்சினை. இங்கு அதைப்பற்றி அக்கறை உள்ளவர்களால் பேசப்பட்டது. இப்படிப்பட்ட பெரிய, பெரிய பிரச்சினைகளில் அக்கறை உள்ளவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். கோவை மில்களைத் திறப்பது தொழிலாளர்கள் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பது. . .

DR. H. V. HANDE : Why should advertisements be given only to papers belonging to the Ruling Party?

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : விளம்பரங்கள் கொடுப்பதுபற்றி அரசாங்கம்தான் முடிவு செய்யவேண்டும்.

DR. H. V. HANDE : Nowhere in the whole of India .....

MR. SPEAKER : The Hon. Chief Minister is not yielding. The Hon. Member Dr. Hande should resume his seat.

DR. H. V. HANDE : I may explain.....

MR. SPEAKER : I ask the hon. Member to resume his seat.....

DR. H. V. HANDE : The ruling party papers.....

MR. SPEAKER : I must again tell that the hon. Member DR. H. V. Hande should resume his seat.

THIRU. R. PONNAPPA NADAR : We shall not generate heat in the Assembly.

MR. SPEAKER : Dr. Hande should now resume his seat.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : விளம்பரங்கள் கொடுப்பது என்பது காலகாலத்திற்கு அரசாங்கம் எந்த முறையைப் பின்பற்றி வந்திருக்கிறதோ அதே முறையைத்தான் இந்த அரசாங்கம் பின்பற்ற வேண்டி இருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. விளம்பரங்கள் கொடுப்பது அரசாங்கத்தைப் பொறுத்த விஷயம். அதற்குக் கொடு, இதற்குக் கொடு என்று சிபாரிசு செய்வதை யாரும் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது போன்ற இப்படிப் பட்ட பெரிய பிரச்சினைகளைப் பற்றி கவனிக்கின்ற பெரியவர்கள் பல பேர் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யானை வேட்டை செல்கிற நேரத்தில் முயல் வேட்டை ஆடமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் எழுப்பியிருக்கிற குறிக்கோள்களில் ஒன்று மூடிய ஆலைகளைப் பற்றிய பிரச்சினை ஆகும். கோவையில் தற்போது மூடப் பட்டிருக்கும் ஆலைகளில் நாம் இந்த அரசின் சார்பால் 5 ஆலைகளைத் திறந்து இருக்கிறோம். அந்த 5 ஆலைகளைத் திறந்தபோது கிட்டத்தட்ட 93.33 லட்சம் ரூபாய்

மாநில அரசின் சார்பாக முதலீடு செய்து அந்த ஆலைகளை நாம் திறந்தோம். அப்போது மத்திய அரசின் சார்பிலே என்.டி.சி., அவர்கள் நமக்குத் தரவேண்டிய பங்குத் தொகை 47 லட்சத்தில் இன்னும் அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகை, அந்த 5 ஆலைகளைத் திறப்பதற்கு, ரூ. 20 லட்சம் அளவுக்கு வரவேண்டியிருக்கிறது. மேலும் மூடப்பட்டிருக்கிற 6 ஆலைகளைத் திறக்க வேண்டுமென்று நானும் நமது தொழில் அமைச்சரும் டெல்லியிலே பலமுறை வலியுறுத்தி இருக்கிறோம். ஒரு முறை அந்தத் தொடர்புடைய ஒரு அமைச்சர் நீங்கள் விமானம் ஏறுவதற்கு முன்பாக 3 மணிக்கே இந்த உத்திரவு போட்டு உங்களுக்கு நான் அனுப்புகிறேன் என்று கூடச் சொன்னார்கள். விமானம்தான் வந்தது. உத்திரவு இதுவரையில் இல்லை. இப்போது மூடப்பட்ட 6 ஆலைகளை எடுத்து திறந்து நடத்த வேண்டுமானால், சோமசுந்தரா மில்லில் நடைமுறை மூலதனம் 26.80 லட்சம் ரூபாய், அதை நவீன இயந்திரமாக்குவதற்கு ரூ. 25.50 லட்சம். காளீஸ்வரா மில்ஸ் - 32 லட்சம் நடைமுறை மூலதனம், நவீன இயந்திரமாக்க ரூ. 27 லட்சம், கோயமுத்தூர் மில்லுக்கு ரூ. 60 லட்சம் நடைமுறை மூலதனம், நவீன இயந்திரமாக்குவதற்கு ரூ. 80 லட்சம், ஆக மொத்த நடைமுறை மூலதனம் 118 லட்சம் ரூபாய், நவீன இயந்திரமயமாக்க ரூ. 132 லட்சம் தேவைப்படுகிறது. மாநில அரசு இந்த 3 மில்களைத் திறக்க நம்முடைய சதவிகிதம் 49 : 51 என்பதில் 49 என்கின்ற பங்கு நாம் தருவதற்கு தயாராக இருக்கிறோம் என்று மாநில அரசின் சார்பாக சம்மதம் கொடுத்திருக்கிறோம். சோமசுந்தரா மில்ஸ் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. மற்ற இரண்டு மில்களின் இயந்திரத்தின் மதிப்பீட்டுக்கு முன்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மத்திய அரசு நமக்கு கூறியிருக்கிறது.

அடுத்து, 3 மில்கள் - பங்கஜா மில் நடைமுறை மூலதனம் ரூ. 24 லட்சம் தேவை. பாலமலை ரங்கனாதர் மில்ஸ்க்கு நடைமுறை மூலதனம் ரூ. 8.62 லட்சம் தேவை. இவைகளை அவசரச் சட்டத்தின் கீழ் எடுக்க மத்திய அரசைக் கேட்டோம். உயர்நீதிமன்றத்திலே (லிக்விடேஷன் செய்ய) அந்த வழக்கு இருக்கிற காரணத்தால் அந்த மில்களைப் பற்றிய உயர்நீதி

மன்றத்தின் உத்திரவு பெறப்படும். அதற்குப் பிறகுதான் எடுத்துக் கொள்ளலாம். செங்கோட்டையில் இருக்கிற பாலராமவர்மா டெக்ஸ்டைல் மில்லின் நடைமுறை மூலதனம் 9.40 லட்சம் ரூபாய். இதை நவீன இயந்திரமயமாக்க ரூ. 30.25 லட்சம், நம்முடைய பங்கை நாம் செலுத்தத் தயார் என்று சொல்லிவிட்டோம். ஆனால் அவர்கள் செலுத்தாவிட்டால் 2, 3 கோடி போனால் போகிற தென்று மாநில அரசே எடுத்து நடத்துங்களேன் என்று சொல்லத் தான் நமது தங்கமணி அவர்களின் உதடுகள் துடித்துக் கொண்டிருக்கிறது என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அந்த அளவுக்கு நம்மிடம் நிதி வசதி இருக்கிறதா என்பது ஒன்று, நிதி வசதி இருந்தாலும் மத்திய அரசு அனுமதியில்லாமல் செய்ய முடியுமா என்பது ஒன்று. இன்றைக்கு இருக்கிற ஐ.டி.ஆர். ஆக்ட் படி மத்திய அரசு அதை ஏற்று மாநில அரசுக்கு அனுமதி கொடுத்தால்தான் நம்மால் எடுத்து நடத்த முடியும். இப்படிப்பட்ட இந்தப் பிரச்சினையை எந்த அளவுக்கு - முக்கால் பகுதிக்கு மேல் மத்திய அரசின் தொடர்புடைய பிரச்சினையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திடல் வேண்டும்.

எந்தக் காரணத்திற்காக அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல் கோவையில் இருக்கும் கட்சி சார்பற்ற எல்லா தொழிற் சங்கத் தலைவர்களும் ஒரு கிளர்ச்சியிலே ஈடுபடவேண்டும் என்கிற போர்க்கொடியை உயர்த்தி இருக்கிறார்களோ, அது ஒரு அறப்போர்தான் என்றும், இது அமைதியான போர்க் கொடி என்றுதான் கருதுகிறேன். ஆனால் இந்தப் போர்க் கொடி உயர்த்துவதற்கு முன்பாக மத்திய அரசு ஒரு நல்ல செய்தியை மாநில அரசின் மூலமாக கோவை மில் தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கும் என நான் நம்புகிறேன். அதை மத்திய அரசு உடனடியாகச் செய்யவேண்டும் என்று இந்த மன்றத்தின் சார்பாகவும், தொழிற்சங்கத் தலைவர்களின் சார்பாகவும், இங்கே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சார்பாகவும் மத்திய அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

விலைவாசியைப்பற்றி இங்கே பேசப்பட்டது. விலைவாசி எல்லாப் பொருட்களுக்கும் உயர்ந்துவிடவில்லை. விலைவாசி யினுடைய உயர்வு அல்லது தாழ்வு என்கின்ற புள்ளி

விவரங்களையெல்லாம் நான் வைத்திருக்கிறேன் என்றாலும், அவைகளை இங்கு விவரமாக எடுத்துச் சொல்வதற்கு நேரமில்லை என்று கருதுகிறேன். ஆகவே அடுத்தக் கூட்டத் தொடரில் விலைவாசிகளைப்பற்றி நான் எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகிறேன். உதாரணமாக மிளகாய், புளி, எண்ணெய் - தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் - போன்ற பொருட்களுக்கு விலை நல்ல அளவுக்கு இன்றைக்கு குறைந்திருக்கிறது. அரிசியின் விலையும் குறையத் தொடங்கி யிருக்கிறது. நாம் அரிசியே கிடைக்காத ஒரு காலத்திலே வாழ்ந்து இப்பொழுது அரிசி கிடைக்கின்ற ஒரு காலத்திற்கு வந்திருந்தாலும், அதிலே ஏற்பட்ட சில நிலவரங்களின் காரணமாக அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்றாலும், அது வெகு விரைவிலே, பிப்ரவரியிலே அரிசியின் விலை வீழ்ச்சி யடையும் என்ற ஒரு நல்ல செய்தியை நாம் காணமுடியும். சில பொருட்களின் விலை உயர்ந்திருக்கிறது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு ரூபாய் என்று இருந்தது போன ஆண்டு. இந்த ஆண்டு 3 ரூபாய் என்று ஆகிவிட்டதை மாத்திரம் நாம் கணக்கிலே கொள்ளக் கூடாது. இரண்டு ரூபாய் மூன்று ரூபாயாகிவிட்டது என்று அந்தப் புள்ளி விவரத்தைச் சொல்கிறீர்கள். அதே நேரத்தில் பணப்புழக்கம் எந்த அளவுக்குப் பெருகியிருக்கிறது என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அந்தப் பணப் புழக்கம் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கிறதா என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்லியாக வேண்டும். இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் ஆவது பெரிதல்ல. அந்த மூன்று ரூபாயைக் கொடுத்துப் பொருளை வாங்கக் கூடிய அளவுக்கு வாங்கும் சக்தி நமக்கு ஏற்படுமேயானால், இரண்டு ரூபாய் மூன்று ரூபாயானாலும், மூன்று ரூபாய் நான்கு ரூபாயானாலும் கவலையில்லை.

இன்றைக்கு வெளிநாடுகளுக்குச் செல்கிறோம். அங்கே செல்கின்ற நேரத்தில் அங்கே டாக்சி ஓட்டுகிற டிரைவரைப் பார்த்து, 'உன்னுடைய சம்பளம் என்ன' என்றால், அவர் தருகின்ற டாலர் கணக்கையோ பவுன் கணக்கையோ பார்த்தால், நம்முடைய ரூபாய் கணக்கில் 3,000 ரூபாய் சம்பளமாகக் கிடைக்கிறது. ஆகா, 3,000 - ஆ! என்று எண்ணுகிற அதே நேரத்தில் உன்னுடைய வீட்டு வாடகை என்ன என்றால் 1,000 ரூபாய் என்கின்ற அளவுக்கு

கணக்குச் சொல்கிறார்கள். ஆகவேதான் வாங்குகிற சக்தி, பணப் புழக்கம் இவைகளை மனதிலே வைத்துக் கொண்டு தான் விலைவாசியின் உயர்வை நாம் கணக்கிட வேண்டும். இரண்டு மூன்றாகிவிட்டது அல்லது மூன்று ஐந்தாகிவிட்டது என்று சொல்கின்ற நேரத்தில் அதை வாங்குகிற அளவுக்கு வாங்கும் சக்தி ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் பணப் புழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அது சாதாரண ஏழை எளிய மக்களை முழுமையும் போய்ச் சேர்கின்ற அளவுக்கு அது ஏற்பட வில்லை. அப்படி ஏற்பட வேண்டுமானால் வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம் போக நல்ல தொழில்கள் உருவாக வேண்டும். நல்ல தொழில்கள் உருவாவதற்கு மத்திய அரசு மாநில அரசுகளுடைய கோரிக்கைகளை தாமதமில்லாமல் நிறைவேற்ற வேண்டும். மாநில அரசின் கோரிக்கைகள் தாமதப் படுகின்ற காரணத்தாலேதான் நல்ல வேலை வாய்ப்புகளை, நாம் இளைஞர் அணியிலே 2,000 பேர், ஆசிரியர்கள் என்ற பெயரில் 6,000 பேர், புதிய போலீஸ்காரர்கள் என்ற பெயரில் 2,000 பேர் என்று ஆயிரக்கணக்கிலே வேலை வாய்ப்புக்களை அளித்தாலும், லட்சக்கணக்கிலே இன்றைக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்ற பேருண்மையை நாம் மறந்து விடுவதற்கில்லை.

ஆகவே, தொழில் துறையிலே மாநில அரசுகள் இன்னும் கொஞ்சம் கைகளிலே இருக்கின்ற கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு வேகமாக நடைபோட வேண்டும். அப்படி வேகமாக மாநில அரசுகள் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தோழமை கொண்டிருக்கின்ற கட்சித் தலைவர்களெல்லாம் கேட்கின்றார்கள். நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில் என்ன, என்ன அதிகாரங்கள் என்று தொகுத்துச் சொல்லும்போது ஒவ்வொரு அதிகாரப் பட்டியலையும் ஒரே நேரத்தில் சொல்வதற்கு இயலாத காரணத்தினால் மொத்தமாகத் தலைப்பிட்டு மாநில சுயாட்சி என்று கேட்கின்றோம். இந்த மாநில சுயாட்சி இந்தியாவிலேயிருந்து தமிழ்நாட்டைப்

பிரித்துக்கொள்ள வேண்டும் என்கின்ற அடிப்படையில் எழுந்தது அல்ல. இன்றைக்கு "ஆகா! மாநில சுயாட்சி கேட்கலாமா, பார், பார்! விட்டேனா!" என்றெல்லாம் பலபேர் சவால் விடுகின்றார்களே, நான் அவர்களுக்குச் சொல்கின்றேன். அவர்களெல்லாம் இணைந்திருந்தபோது, 1971-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் பிரகடனத்திலே சொல்லி இருக்கிறோம். ''இந்திய அரசியல் முறை கூட்டாட்சி முறை என்று வர்ணிக்கப்பட்டாலும் அந்தத் தராசு மத்திய அரசின் பக்கம் அதிக பட்சம் சாய்ந்து இருப்பதால் அதிகாரத் துறையிலும் நிதித் துறையிலும், மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால் அதே நேரம் இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டும் என்ற லட்சியத்திற்கு ஊறு தேடாமல் எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தை திருத்த மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம். அரசியல் துறை அதிகாரங்களும் நிதித் துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டும் என்ற ஆசையால் அல்ல. மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்டபிறகு எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்கு தொண்டாற்ற முடியும் என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்". இது 1971ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாகும். அரசியல் சட்டம் அதற்காகத் திருத்தப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை உள்ளடக்கிய தேர்தல் பிரகடனமாகும்.

அதே நேரத்தில் Communist Party of India Election Munifesto-ல் என்ன சொல்கிறார்களென்றால் The Constitutional provision relating to Centre-State relations should be amended to provide for more powers to the State consistent with the basic unity of the country". இதையேதான் திராவிட முன்னேற்றக்

கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் நாம் அப்பொழுதே வெளியிட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையிலும், "மைய மாநில அரசுகளின் துறைகளின் பட்டியல் விவரமாக பிரிக்கப்பட்டிருந்தாலும் உண்மையான அதிகாரம் மத்திய அரசின் கையிலேதான் இருக்கிறது. மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் துறைகளின் உத்தரவுகள் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றே அமுல்படுத்தப்பட வேண்டியிருப்பதால் அவைகளுக்கு மதிப்பு கிடையாது. பொருளாதார சம்பந்தமான எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருப்பதால் மாநில அரசு மத்திய அரசிடம் கையேந்தும் நிலை இருக்கிறது. பொருளாதாரத் திட்டங்களுக்கும், வேளாண்மைத் திட்டங்களும் மத்திய அரசின் தயவை எதிர்பார்த்தே நடக்கவேண்டியிருக்கிறது".

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இப்போது மத்தியில் குவிந்திருக்கும் ஏராளமான அதிகாரக் குவியல் மாநிலங்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்து ஒரு போலீஸ் ஆட்சியை உருவாக்கும் ஒரு பயங்கரமான நிலை உருவாகும் என்று இந்திய மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை செய்கின்றது என்கின்ற அளவிலே மார்க்சிஸ்ட்டுகளுடைய தேர்தல் அறிக்கை தொடங்கி இப்படி முடித்திருக்கின்றார்கள்.

அதைப்போலத்தான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1967 மார்ச் திங்கள் 19-ம் தேதி வெளியிட்ட கருத்துக்களை அப்பொழுது கல்கி பத்திரிகையிலே தலையங்கமாக எழுதி யிருக்கிறார்கள். தலைப்பே, 'உண்மை சமஷ்டி வருக வருகவே'. இது தலைப்பு. அதிலே எழுதியிருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக்கழகம் ஏதோ ஒரு பிரதேசத்திற்குரிய கட்சி என்றும், அகில இந்திய அடிப்படையில் அதற்கு முக்கியத்துவம் இல்லை என்றும் மேலெழுந்தவாரியாக சிலர் நினைத்து விடலாம். அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படையை இராஜாஜி அவர்களே தெளிவு செய்திருக்கிறார். இங்குதான் இராஜாஜியின், கருத்து வரப் போகிறது. எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையாக சுவாதீனம் பெற்று அவற்றின் சமஷ்டியாக

டெல்லி சர்க்கார் அமைய வேண்டும் என்ற அகில இந்திய பிரச்சினையை திராவிட முன்னேற்றக் கழகம் தனது அடிப்படையாகக் கொண்டது. ஒரே சர்க்கார் நாடு முழுதும் ஆள்வதை யூனிடரி முறை என்றும், மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு ஆட்சி புரிவதை 'ஃபெடரல்' சமஷ்டி முறை என்றும் சொல்வார்கள். அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின் பற்றுகிறது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகர சபையின் ஸ்தானத்திற்குக் கொண்டு வந்துள்ளது. இந்தியா போன்ற பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்புக்களை மத்தியிலே மட்டும் குவிப்பது திறமையின்மை யைத்தான் உண்டாக்கும். அதோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடிக்கியாளும் கொடுமையும் சேர்கிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்கு தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே திராவிட முன்னேற்றக் கழகம். அது தேசப் பிரிவினை கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டியாகும்''. இது 19-3-1967 அறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தை முகப்பில்தாங்கி 'கல்கி' இதழில் வெளிவந்தது.

அது மாத்திரமல்ல. இன்னும்கூட தீவிரமாக இராஜாஜி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லி, அப்பொழுது 'நம்நாடு' பத்திரிகையில் எடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சொல்கிறார், "பாரத சர்க்காருக்கே எல்லா வளமும் அதிகாரமும் ரத்த ஓட்டமும் சென்றுவிடுவது பிரதேச முன்னேற்றத்திற்கு பாதகம் விளைவிக்கும். திராவிடம் என்பது தென்னாட்டின் பெயர். அதன் முன்னேற்றத்தை முக்கியமாக கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம். திராவிடம் என்றால் உடனே ஜாதி பேதம், பிராமணத் துவேஷம் என்று எண்ணத் தோன்றும். அதற்குக் காரணங்களை ஆராயத் தேவையில்லை. ஆகவே, திராவிடத்தை 'ஜனகணமந' என்று நாம் பாடும் நாட்டு வணக்கப் பாட்டில் சொல்லப்பட்ட திராவிடத்தைக் கவனித்துக் காத்துவருவோமாக. இதை ஜாதித் துவேஷக் கூட்டத்தாருக்குமட்டும் மானியமாக விட்டுவிடாமல் எல்லோரும் ஒன்றுபட்டு வேலை செய்ய

வேண்டும்" என்று இராஜாஜி அவர்கள் திராவிடத்திற்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

இரு கட்சிகளும் ஒன்றாக இருந்தபோது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும், கூட்டணியிலேயிருந்து பிரிந்துபோனபிறகு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டியதில்லை என்றும் கூறுவது கட்சியின் பொதுக் கொள்கைக்கு ஊனம் உண்டாக்கும் செயலாகும். 'ஒன்றாக இருந்தோம் சொன்னேன்' என்றால் அப்படிச் சொல்லப்படுகின்ற அந்தக் கொள்கைகளுக்கு எந்த விதமான மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விடும்.

மாநிலங்களுக்கு அதிக, அதிகாரம் வேண்டும் என்று முன்னாள் தலைமை நீதிபதி திரு. கே. சுப்பாராவ் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு. கே. சந்தானம் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று முன்னாள் கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரி பாட் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சுதந்தராக் கட்சியின் ஒரிசா முதல்வர் திரு. சிங் தேவ் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று திரு. காமராஜ் அவர்கள் எடுத்துச் சொன்ன அதிகாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று டாக்டர் ஆர். சி. கூப்பர் அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும் என்று திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொன்ன ஆதாரங்களை, சுதந்தராக் கட்சியின் நண்பராக இருக்கிற திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்னால் சொல்லி இருக்கிறார்கள். முன்பு ஒன்றாக இருந்தபோது அது, இப்போது இல்லை என்றார்களே, இப்போதும் சாமிநாதன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. அதற்காக இவ்வளவு ஆதாரங்களைத் தேடிக்கொண்டுவந்து பேசியிருக்க

வேண்டியதில்லை. ஆனால் அது பிரிவினையில் கொண்டு போய் விட்டுவிடக்கூடிய அளவில் இருக்கக்கூடாது என்பதைத்தான் சொல்கிறோம். உங்களுடைய மாநாட்டு வரவேற்பிலே உள்ள செய்தி அப்படி இருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இவ்வளவு சுலபமாகப் புரியும் என்றிருந்தால், நான் வேலை மெனக்கெட்டுப் போய் இவ்வளவு ஆதாரங்களையும் தேடிக்கொண்டு வந்திருக்க வேண்டியதில்லைதான் (பலத்த சிரிப்பு).

ஆனால் திருமணம் என்று சொன்னவுடன் குழந்தை பிறந்துவிடுமே; குழந்தை பிறந்தால் தாயின் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமே; தாயின் உயிர் போய்விடுமே என்று நினைத்துக் கொண்டிருந்தால் நாட்டில் திருமணமே நடைபெறாது போய்விடும். அதைப்போலதான் மாநில சுயாட்சி என்று சொன்ன வுடனே மாநிலப் பிரிவினைக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள். எப்படி திருமணம் என்றவுடன், குழந்தை பிறந்து விடும்; குழந்தை பிறந்துவிட்டால் தாயின் உயிர் போய்விடும் என்ற பயம் ஏற்படுகிறதோ, அதைப் போலதான் மாநில சுயாட்சி என்றதும், பிரிவினை ஏற்பட்டு விடும்; இந்தியா உடைந்து விடும், சின்னாபின்னமடைந்துவிடும் என்று நினைப்பதும் என்று சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

இன்றைக்கு, இந்தியா பலவீனப்படக்கூடாது; இந்தியா சிதறுபடக்கூடாது என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கிறோம். திராவிடநாடு பிரிவினை கேட்ட நேரத்திலே, எங்களை யார் யார் எதிர்த்தார்களோ; எங்கள் மீது யார் யார் குற்றஞ்சாட்டினார்களோ அவர்களை எல்லாம் விட இன்றைக்கு நாங்கள் ஒருபடி மேலே சென்றிருக்கிறோம் என்பதை சந்தேகவாதிகளுக்கு விளக்கிட விழைகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால், 1969-ஆம் ஆண்டு எங்களையெல்லாம் ஆளாகி விட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்துவிட்ட நேரம், அண்ணா அவர்களைப் பிரிந்து ஆறாத் துயரில் நாங்கள் எல்லாம் மூழ்கி யிருந்த நேரம் நாடு நெருக்கடியான நிலையில் இருந்தது. எங்களுக்குப் பிரிவினை எண்ணம் இருக்குமானால் அந்த நேரத்திலே நாங்கள்

பிரிவினையை வலியுறுத்தியிருப்போம். ஆனால் நாங்கள் செய்ததென்ன? இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப்படுத்தினோம். இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்தால், மத்தியிலே அரசு கவிழும். அப்போது இந்தியா இருந்த நிலையில் மத்தியிலே ஆட்சி கவிழ்ந்தால், இந்தியா உடைபடும்; சிதறுண்டு சின்னா பின்னமாகும். அந்த நிலையை நாங்கள் விரும்பாததால் இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுப்படுத்தினோம்.

அந்த நேரத்தில் தமிழ்நாட்டிலே இருந்த சிலர், நாங்கள் திராவிட நாடு பிரிவினைக் கேட்டபோது எங்களை எதிர்த்தவர்கள், எங்கள்மீது குற்றஞ்சாட்டினவர்கள், "திராவிட நாடு பிரிவினைக் கேட்டீர்களே; இப்போது இந்திரா காந்தியின் பின்னால் ஏன் செல்கிறீர்கள்? உங்கள் கொள்கையை இப்போது வலியுறுத்துவது தானே" என்று எங்களைத் தூண்டிவிட்டார்கள்.

அவர்கள் தூண்டிவிட்டமாதிரி, அந்த நேரத்தில் நாங்கள் பிரிவினைக் கோரிக்கையை திராவிடநாடு கோரிக்கையை - வலியுறுத்தியிருந்தால் இந்தியா பலவீனப்பட்டிருக்கும். இந்திரா காந்தி அம்மையாரின் பலம் குறைந்திருக்கும். இந்தியப் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்பட்டிருக்கும். ஒரு அமைதியற்ற நிலை ஏற்பட்டிருக்கும். அதன் காரணமாக இந்தியாவே தூள் தூளாகப் போகக் கூடியச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். இந்திராகாந்தி அம்மையாரின் கரம் வலுப்பெற்றதால் இந்தியா உடையாமல், அமைதி குலையாமல், பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாமல் இருந்தது. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும் பங்கு உண்டு என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறிட விரும்பு கிறேன். இதை நாங்கள் நன்றி எதிர்பார்த்துச் செய்யவில்லை. கைமாறு கருதி நாங்கள் இதைச் செய்யவில்லை. எங்களுடைய தூய நட்பின் அடிப்படையிலேதான் இதைச் செய்தோம்.

இந்திரா காந்தி அம்மையாரின் கரத்தை வலுவிழக்கச் செய்து, மத்திய அரசைக் கவிழ்த்து, மாநில சுயாட்சி பெறவேண்டும் என்பதல்ல கழக அரசின் நோக்கம். அப்படிப் பட்ட அரசியல் லாபம் தேடுவர்கள் நாங்களல்ல என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம். எனவே, இந்திரா அம்மையாரின் அரசுக்கு உறுதுணையாக இருந்து, மத்திய அரசுக்கு உட்பட்ட

மாநில சுயாட்சி பெற்று, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெற வேண்டுமென்ற இந்த வேண்டுகோளுக்கு, இந்தக் கோரிக்கைக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைக்குமென்ற உறுதியோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பெரியார் அவர்கள் தமிழரசுப் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்களே, அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? அல்லது அதைக் கண்டித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதுபோன்ற பிரச்சினைக்குரிய கட்டுரைகள் தமிழரசுப் பத்திரிகையில் வெளியிடக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. பெரியார் எழுதியிருக்கிற கட்டுரை கூட அரசியல் ரீதியில் அவருக்கே உரித்தான நடையில் பஞ்சமர்கள், சூத்திரர்கள் என்கிற பிடிப்பில் இருந்து விடுபடவேண்டுமானால் இந்தியா ஒன்றாக இருந்தால் முடியுமா என்று கேட்கிற அளவில்தான் முடிக்கப்பட்டிருக்கிறதே தவிர திராவிட நாடு வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. எனினும் இது போன்ற ஆட்சேபத்திற்குரிய கட்டுரைகளை இனி வெளியிடக்கூடாது என்பதாக எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் ஒரு கேள்வி. முதல் அமைச்சர் சொல்கிறபோது 6 மில்களைத் திறப்பதற்கு மத்திய அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப் படுவதாகச் சொன்னார்கள். 12 மில்கள் இருக்கின்றனவே, மீதமுள்ள 6 மில்களைப்பற்றி எந்தவித ஏற்பாடும் செய்யப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : முதலிலே அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே 6 மில்களைத் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது என்பதுதான் முடிவாயிற்று. இவை நல்லபடியாகத் திறக்கப்பட்ட பிறகு மற்ற 6 மில்களைப் பற்றியும் கவனிக்கலாம்.

MR. SPEAKER : Now the hon. Member, Dr. Hande, can seek one clarification (Laughter).

Dr. H. V. HANDE : Sir, I am very grateful to the obliging Speaker. Tomorrow is the last day we are meeting. Within the next 20 days, would it not be better to improve the industrial climate in the Madras City? Would it not be better to see that the hot atmosphere outside is removed?

அப்படியின்றி ஒரு காரசாரமான நிலைமையே நீடித்தால் அது நம் மாநிலத் தொழில் வளர்ச்சியையே பாதிக்காதா? இதுபற்றி அரசு என்ன யோசனை சொல்ல முடியும் என்று கேட்க விரும்புகிறேன். வழக்குகளைத் திரும்பப் பெற்று தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வழக்குகளைத் திரும்பப் பெறுவது வழக்குகளின் தன்மையைப் பொறுத்தது. ஆனால் தொழில் அமைதியை ஏற்படுத்த அனைத்துக்கட்சித் தலைவர்களோடு கலந்து பேச அரசு தயாராய் இருக்கிறது.

உரை : 10 நாள் : 12.02.1973

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களும், நானும் கலந்துகொள்கின்றது உள்ளிட்ட இந்த எண்ணிக்கையை வைத்துப்பார்த்தால் 53 பேர் இந்த விவாதத்தில் கலந்துகொண்டிருக்கிறோம்.

இந்த 53 பேரில் - என்னையும் சேர்த்து ஆளும் கட்சியின் சார்பில் 21 உறுப்பினர்களும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் சார்பில் 9 உறுப்பினர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 6 உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சியின் சார்பில் 4 உறுப்பினர்களும், பார்வோர்ட் பிளாக் கட்சியின் சார்பில் 3 உறுப்பினர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் 4 உறுப்பினர்களும், முஸ்லீம் லீக் சார்பில் 4 உறுப்பினர்களும் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஒருவரும், சுயேச்சை ஒருவரும் ஆக 53 பேர் ஆளுநர் உரையின்மீது திரு. கணபதி அவர்கள் கொண்டு வந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை ஒட்டியும், எதிர்த்தும் விவாதங்களில் ஈடுபட்டிருக்கிறோம். பௌராணிகர்கள் எந்தவொரு காரியத்தையும் கணபதியை வைத்துத்தான் ஆரம்பிப்பது போலவோ என்னவோ இயற்கையாக இந்த ஆண்டு ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை திரு. கணபதி அவர்கள் கொண்டு வந்து அதில் விவாதமும் நடைபெற்றிருக்கிறது. இதை நான் சொன்னால்கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் கணபதியைப் பற்றி இங்கே பேசலாமா? முருகனைப் பற்றி அவர் பேசினார்; இவர் கணபதியைப் பற்றிப் பேசலாமா? என்று கேட்கக் கூடும். இந்த விவாதத்தில் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின்

தலைவர் மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொஞ்சம் வேகமாகவே தன்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

திரு. ஹாண்டே அவர்கள் வழக்கம்போல் அவருடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், பார்வேர்ட் ப்ளாக் சார்பிலும், ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆளுநர் அவர்களது உரையில் முதல் இடத்தைப் பெறுவது மூதறிஞர் இராஜாஜி அவர்களது மறைவு குறித்த வரிகளாகும். அவர்களுடைய இழப்பு தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலும், இந்திய நாட்டைப் பொறுத்தவரையிலும் எவ்வளவு பெரிய இழப்பு என்பதனை இராஜாஜி அவர்களுக்காக இரங்கல் தீர்மானத்தை இந்த அவையிலே நாம் நிறைவேற்றிய நேரத்தில் மிக விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறோம். நான் அன்றைக்கே எடுத்துச் சொன்னேன். இராஜாஜி அவர்களுக்கான நினைவு மண்டபம் ஒன்றினை காந்தி அடிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபத்தின் அருகே அமைக்க இருக்கிறோம் என்பதனையும், இந்தியக் குடியரசுத் தலைவர் அதற்கான அடிக்கல் நாட்டு விழாவினை நடத்தி வைக்க இங்கே வருகை தர இருக்கிறார்கள் என்றும் சொன்னேன்.

அப்போதே இன்னொன்றும் குறிப்பிட்டேன். இராஜாஜி அவர்கள் பிறந்த இல்லமான ஓசூரை அடுத்த தொரப்பள்ளி கிராமத்திலே உள்ள அவரது இல்லத்தையும் அரசாங்கம் விலைக்கு வாங்கி இராஜாஜி அவர்களுடைய நினைவுச் சின்னமாக ஆக்கிடும் முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருப்பதாகவும் சொன்னேன். அதற்கு உரியவர்கள்; அந்த வீட்டை விலைக்குப் பெற்றிருப்பவர்கள் கொஞ்சம் அதிகத் தொகை அதற்குச் சொல்லி வருகிற காரணத்தால் இன்னும் அதிலே ஒரு முடிவு எடுக்கப் படவில்லை என்றும் சொன்னேன். நான் அதை அறிவித்த பிறகு அவர்களே முதலில் குறிப்பிட்ட விலையில் இப்போது பாதி விலைக்கே தருவதற்குச் சம்மதித்திருக்கிறார்கள். அவர்களுடன் பேசி முடிவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. விரைவிலே அந்த இடமும்

பெறப்பட்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு நினைவுச் சின்னமாக அமைக்கப்பட இருக்கிறது என்பதனையும் தெரிவித்துக்கொள்வேன்.

இராஜாஜி அவர்களுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னம் அமைக்கப்படவேண்டுமானால் அது இப்படிப்பட்ட கட்டடங்கள் அல்ல, அவருடைய உள்ளத்திலே பதிந்திருந்த மதுவிலக்குக் கொள்கையை, நாம் கடைப்பிடித்தால்தான் அவர்களுக்கு நிரந்தர மான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கினோம் என்ற பெயரைப் பெறமுடியும் என்று முன்னாள் அமைச்சரும் ஸ்தாபன காங்கிரஸ் கட்சி உறுப்பினருமான திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். மதுவிலக்கினைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கிற கருத்தானாலும் அல்லது சுதந்திராக் கட்சியினுடைய தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டிருக்கிற கருத்தானாலும், அல்லது முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திரு. திருப்பூர் மொய்தீன் அவர்கள் கொண்டிருக்கிற கருத்தானாலும் அந்தக் கருத்திற்கு முரண்பாடான கருத்தல்ல இன்றைய அரசின் கருத்து. அதை நான் பலமுறை திட்ட வட்டமாக இங்கேயும் அறிவித்திருக்கிறேன். ஆனால் மது விலக்கை அமுலாக்குகிற நேரத்தில் ஏற்படுகிற சங்கடங்கள், அதிலே வெற்றி கிடைக்காமல் நாம் தலை குனிகிற நிலைமைகள், அரசுக்கு வரவேண்டிய வருமானமும் போய், வேறு மாநிலங்களுக்கு நம்முடைய அரசுக்கு வரவேண்டிய வருமானம் போய்ச் சேருகிற நிலைமையும் ஏற்பட்டு, இங்கேயும் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் போன்ற சட்டத்திற்குப் புறம்பான நிலைமைகள் ஏற்படுவதும் நாம் பல ஆண்டுக்காலமாக அனுபவத்தில் கண்டிருக்கிறோம். ஆகவேதான் மதுவிலக்கைப் பொறுத்தவரையில் ஒரு மாநிலம் மாத்திரம் ஒரு முடிவினை மேற்கொள்ளுவது என்பது இயலாத காரியமாகயிருக்கிறது, இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலே அது தளர்த்தப்பட்டு விட்ட காரணத்தினால்.

இராஜாஜி அவர்கள் தமிழகத்திற்கு மாத்திரம் சொந்த மானவர் அல்ல. அவர் ஒரு தேசீயச் சின்னம். அத்தகைய சின்னத்தை நாம் நினைவுபடுத்தி அமைக்க வேண்டுமென்றால் இந்தியா முழுமைக்கும் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வருகிற முயற்சியிலே இந்தியப் பேரரசு வெற்றிபெறுமேயானால் நான் அன்றைக்குக் கூறியதைப் போல அதை முதலில் இரு

கையேந்தி வரவேற்று அமல்படுத்தக் கூடிய முதல் மாநிலமாக நம்முடைய தமிழ் நாடுதான் இருக்கும் என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்வேன்.

ஆகவே, இராஜாஜி அவர்களுக்கான மதுவிலக்குத் தொடர்பான நினைவுச் சின்னம் தமிழ்நாட்டில் மாத்திரம் அமைந்தால் போதாது, இந்தியா முழுமைக்கும் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்கு எந்த விதத்திலும் என்னுடைய கருத்து பின் அடைந்தது அல்ல, ஒட்டியதுதான் என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் அவர்களின் உரை எப்படிப்பட்டது என்ற விமர்சனத்தை எல்லாம் மாற்றுக் கட்சியில் இருந்து பலரும் அறிவித்து இருக்கிறார்கள். கவர்னர் உரை அரசாங்கத்தினுடைய பிரதிபலிப்புத்தான் என்ற காரணத்தால், அதை ஏன் வானிலை அறிக்கை என்று சொல்லக் கூடாது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் வாதிட்டார்கள். காலையிலே பேசிய முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவர் திருப்பூர் மொய்தீன் அவர்கள்கூட நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னபோது நான் எண்ணிக்கொண்டு இருப்பதைத்தான் சொல்லப் போகிறார் என்று கருதினேன். ஆனால் அந்தப் பேச்சின் போக்கு அவையிலே எழுந்த பல்வேறு சுழலிலே வேறு வகையில் திரும்பிவிட்டது என்பதை நான் உணர்ந்தேன்.

வானிலை அறிவிப்பு என்பது சாதாரணமானதல்ல. நாட்டுக்கு வரப் போகிற புயலை, மழையை, வானிலைச் சூழ்நிலையை அறிவித்து, அனைவரையும் எச்சரிக்கை செய்யும் ஒரு அறிவிப்புத்தான் வானிலை அறிவிப்பு ஆகும். இதை அந்தக் கட்சியில் இருந்துகொண்டு எப்படி எதிர்ப்பது? அதை எதிர்த்ததாகவும் தெரியக்கூடாது, ஆதரிப்பதாகவும் தெரியக் கூடாது என்று எண்ணியோ என்னவோ நம்முடைய அம்மையார் டி. என். அனந்தநாயகி அவர்கள் சூசகமாக அதை வானிலை அறிவிப்பு என்று சொன்னதன்மூலம் இந்த உரை எச்சரிக்கையான உரை, மக்களை எச்சரிக்கைப்படுத்துகின்ற உரை, யாருக்கும் எந்தப் பாதகமும் ஏற்படாமல் முன்கூட்டியே அறிவிப்புச் செய்கின்ற உரை என்கின்ற வகையிலே அவர்கள் பெருமைப் படுத்தினார்கள் என்று நான் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த வானிலை அறிவிப்பு

சரியான நேரத்திலே வந்த காரணத்தினாலேதான் தமிழ் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதத்தால் நாம் மிகப் பலமான அபாயத்திற்கு ஆளாகாமல் ஓரளவு தப்பித்துக் கொண்டோம். அந்த வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது தமிழ்நாட்டு அரசு எந்தெந்த வகையில் தன்னுடைய பணிகளைச் செய்தது என்பதற்கான விவரங்களை இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலேயே சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் அடித்த புயலாலும், ஏற்பட்ட வெள்ளத்தாலும், தென்னார்க்காடு, கோவை, திருச்சி, தஞ்சை, நீலகிரி, செங்கற்பட்டு, வடார்க்காடு, சேலம், தர்மபுரி, சென்னை ஆகிய மாவட்டங்களில் சாலைகள், வீடுகள், பாசன அணைகள், வயல்கள் ஆகியவைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது.

இந்தப் புயலாலும், பெரு மழையாலும் 40 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டது என்று மதிப்பிடப்பட்டது. நிவாரணப் பணிகளுக்காக ரூ. 25 கோடி அளவில் கடனாகவும், மானியமாகவும் வழங்குமாறு மத்திய அரசை நாம் கேட்டு இருக்கிறோம். தமிழ்நாடு அரசு துயர் தணிப்புப் பணிகளுக்காக உடனடியாக 5 கோடி ரூபாய் செலவிட அனுமதி வழங்கியதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் மறந்து இருக்க இயலாது.

தஞ்சாவூர், தென்னார்க்காடு மற்றும் 8 மாவட்டங்களிலும் மொத்தம் இது வரை வழங்கப்பட்டுள்ள தொகை 4.31 கோடி ரூபாயாகும். இதிலே 31-1-1973 வரையிலும் செலவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற தொகை ரூ. 204.15 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை இரண்டு லட்சம். இந்த 2 லட்சம் வீடுகளுக்கு ரூ. 80 வீதம் நாம் அவர்களுக்கு நிதி உதவி வழங்கி இருக்கிறோம். ஏற்கனவே, 40 ரூபாய் என்று இருந்ததை 80 ரூபாயாக ஆக்கி, அப்படி பாதிக்கப்பட்ட இரண்டு லட்சம் வீட்டுக்காரர்களுக்கு அளித்த வகையில் 158 லட்சம் ரூபாய் இந்த அரசு தந்திருக்கிறது.

அரிசன குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள ரூ. 250 வரை வட்டியில்லாமல் கடன் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதுவும் அமுல்படுத்தப்படுகிறது.

மணல் மேடிட்ட, மண் அடித்துச் செல்லப்பட்ட நிலங்கள் 10,000 ஏக்கர்கள். அந்த நிலங்களைச் செப்பனிட இதுவரையிலே எந்த அரசும் ஏற்றுக்கொள்ளாத ஒரு பொறுப்பை, இந்த அரசு ஏற்றுக்கொண்டு, அந்த நிலங்களை அரசே செப்பனிடுகின்ற வேலையை ஏற்றுக்கொள்கிறது என்று அறிவித்த வகையிலே அதற்குச் செலவு மட்டும் ஒரு கோடி ரூபாய் என்பதை நான் மிகுந்த பெருமையோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள முடியும். செப்பனிடும் பணியில் 75 புல்டோசர்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. உயிரிழந்த குடும்பங்கள் 81. இதுவரையிலே புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உயிரிழந்த குடும்பங்களுக்கு பெரும் தொகை உதவியாக அளிக்கப்பட்ட வரலாறு கிடையாது. இந்த அரசு 81 குடும்பங்களுக்கும் - அதிலே 39 பேர் அந்தக் குடும்பங்களின் தலைவர்களாக இருந்த காரணத்தால் அந்தக் குடும்பத்தாருக்கு தலா 2,000 ரூபாய் வீதம், 78,000 ரூபாயும், குடும்பத் தலைவர் இல்லாமல் மற்றவர்கள் இறந்துபோயிருந்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 500 முதல் 1,000 ரூபாய் வரை இழப்பு ஈடாக அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் நாம் மத்திய அரசிடம் உதவியைக் கேட்டோம். 25 கோடி ரூபாய் நாம் கேட்டோம்.

நேற்று வரையிலே அவர்கள் மூன்றரை கோடி ரூபாய் அனுமதித்தார்கள். இன்றைக்கு இந்த அவைக்கு நான் மகிழ்ச்சியான ஒரு செய்தியைச் சொல்லிக்கொள்ள முடியும். இப்போது எனக்குக் கிடைத்த தகவலின்படி ரூ. 14.25 கோடி மத்திய அரசு இந்த வெள்ள நிவாரண உதவிக்காக வழங்கியிருக்கிறது என்பதை நன்றி உணர்வோடு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதிலே நடப்பு ஆண்டுக்காக ரூ. 7 கோடியும், அடுத்த ஆண்டு செலவுக்காக ரூ. 7¼ கோடியும் கணக்கிலே வைக்கப்படும். இந்த 14¼ கோடி ரூபாய் ஏற்கெனவே நமக்குக் கொடுத்திருக்கிற 3½ கோடி ரூபாயையும் உள்ளிட்டு வழங்கப்பட்டிருக்கிற உதவித் தொகை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏரிகள், குளங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் குறித்தும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1,524 பெரிய ஏரிகளும் 1,387 சிறிய ஏரிகளும் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. இதிலே நாம் இதுவரையில் ஏற்றுக்கொண்டிருக்கிற வேலைகள்

5,921. அதிலே 1,191 வேலைகள் முழுவதும் முடிவுபெற்று, மீதியுள்ள 4,100 வேலைகள் விரைவிலே முடிவுறத்தக்க வகையிலே பணி நடைபெற்றுக்கெண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இந்த மன்றத்தில் ஏற்கெனவே அறிவித்த சலுகைகள் அன்னியில், ஆங்காங்கு வெள்ளச் சேதங்களைப் பார்ப்பதற்குப் போனபோது அறிவித்த சிலவற்றையும் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக பவானி ஆற்றில், அங்கே முதல் கட்டமாக கரையைக் கட்டி உயர்த்துவதற்காக 17 லட்சம் ரூபாயில் ஒரு திட்டத்தைத் துவக்கிவைக்க நான் சென்றிருந்தேன். அங்கே இடிந்து கிடந்த ஒரு பள்ளிக்கூடத்தைக் காட்டி, இதற்குப் பதிலாக, வேறு புதிய இடத்திலே பள்ளிக்கூடம் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இடிந்துவிட்ட அந்தப் பள்ளிக்கூடத்தைப் பெண்கள் பள்ளிக்கூடமாக மாற்ற வேண்டுமென்றும் பவானியிலே உள்ள பொது மக்கள் என்னிடத்திலே முறையீடு தந்தார்கள். நான் உடனே அதனை ஏற்றுக்கொண்டு பவானியிலே புதிய பள்ளிக்கூடம் கட்ட 5 லட்சம் ரூபாய்க்கு அங்கேயே அனுமதி வழங்கிவிட்டுத் திரும்பினேன்.

கோவையிலும், சேலத்திலும் என்னைச் சந்தித்த நெசவாளர் பெருமக்கள் தங்களுடைய நெசவுத் தொழிலுக்கான கருவிகள் எல்லாம் வெள்ளத்தால் அழிந்து போய்விட்டன, பாழாகி விட்டன என்று கூறியபோது அவர்களுக்கு வெள்ளத்திலே தங்களுடைய கருவிகளை இழந்துவிட்ட நெசவாளர் தோழர்கள் அந்த இழந்துவிட்ட நெசவுக் கருவிகளை வாங்குவதற்காக, நெசவாளத் தொழிலாளர்களுக்கு ரூ. 100 அரசின் சார்பிலே மானியமாக அளிக்கப்படும் என்று உறுதி கூறினேன். அந்தவகையிலே கோவை மாவட்டத்தில் இதுவரை இந்த நூறு ரூபாய் பெற்ற நெசவாளர்களின் எண்ணிக்கை - 1,405 என்பதையும், சேலம் மாவட்டத்தில் பயன் அடைந்த நெசவாளர்களின் எண்ணிக்கை 300 என்பதையும், இதற்காக ரூ. 1,70,500 வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரி மாணவர்கள் பலரும் அரசாங்கத்தினுடைய வேண்டுகோளை ஏற்று இந்த அரும்பணியிலே ஈடுபட்டார்கள் - வெள்ள நிவாரணப் பணியிலே, அதிலே பவானி பகுதியில்

பணியாற்றிக் கொண்டிருந்த மாணவர் ஆற்றுச் சூழலிலே அடித்துக்கொண்டு போகப்பட்டார் - ஜேம்ஸ் டானியல் என்ற தாம்பரம் கிறித்துவக் கல்லூரி மாணவர் அங்கே அடித்துச் செல்லப்பட்டார் என்று கேள்விப்பட்டதும் அவருடைய குடும்பத்தாருக்கு ரூ. 5,000 அரசின் சார்பிலே வழங்கப்பட்டது என்பதை நான் இங்கே நினைவுபடுத்துகிறேன்.

கோவையில் வீடு இழந்த 3,216 பேருக்கு வீடு கட்டுவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் ரூ. 8 லட்சம் வரையிலே கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் புயலால், அனாதைக் குழந்தைகளானவர்கள் 4 பேர்கள். எஸ். துரைராஜ் என்ற 10 வயது பையனும், எஸ். கல்பகம் என்ற 7 வயது சிறுமியும், எஸ். நடராசன் ஆகிய மூன்று குழந்தைகளும் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நெல்லை மாவட்டத்தில் நெல்லையப்பன் காந்திமதி அம்மாள் தேவஸ்தான அனாதை விடுதியில் 8-2-1973 அன்று சேர்க்கப் பட்டு இருக்கிறார்கள். உதகமண்டலத்திலே வீடிழந்து, தாய் தந்தையரை இழந்த சித்திக் என்ற 4 வயது பையனை தந்தை பெரியார் இராமசாமி அவர்கள் எடுத்து வளர்ப்பதாகச் சொன்னார்கள். ஆனால் முஸ்லீம் சமுதாயத்தினுடைய முறைப்படி, அவர்கள் ஸ்வீகாரம் போவது அவர்களுடைய மத சம்பிரதாயப்படி தடுக்கப்படுகின்றது என்று சொன்ன காரணத்தினால், அந்தப் பையனுடைய எதிர்காலத்திற்காக நீண்ட கால சேமிப்பு டிபாசிட்டாக ரூ. 2,000 அரசின் சார்பில் வங்கியில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அதைத்தவிர, அரசு ஊழியர் ஒருவர் பதவியில் இருக்கும்பொழுது இறந்துபோனால், அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் எல்லாக் கல்விச் சலுகைகளும் இந்தச் சிறுவனுக்கு அளிக்கப்படும் என்றும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தில் வீடு இழந்து உதவி பெற்றவர்கள் 49,381 பேர். இதற்கான மொத்தப் பணச் செலவு ரூ. 23,10,690 ஆகும். இதிலே சைதாப்பேட்டை, தியாகராயநகர் ஆகிய பகுதிகளில் 11,272 பேரும், மைலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதிகளில் 10,395 பேரும் இந்த உதவியைப் பெற்றிருக்கிறார்கள். இதிலே முழுமையாக வீடு

இழந்தவர்களுக்கு ரூ. 80 வீதமும், ஓரளவு பாதிக்கப்பட்டவர் களுக்கு ரூ. 60, ரூ. 40 என்கின்ற வகையிலும் பணஉதவி செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு அரசின் சார்பில் உடனடியாக நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன என்பதற்கும், அதைச் சுற்றிப் பார்த்து விவரம் அறிய வந்த மத்திய அரசு அனுப்பிய குழுவினர் சரியான தகவல்கள் அறிந்து மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதற்கும் இதைவிட வேறு சான்றுகளை நான் சொல்ல முடியாது.

ஆனால், எதிலும் ஒரு தவறு கற்பிக்க வேண்டும் என்று கருதுகின்ற சில பேர் நாட்டில் இருக்கிறார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக அமைச்சர் பெருமக்களும், அரசாங்க அதிகாரிகளும், பொது மக்களுடைய பிரதிநிதிகளும் பறந்தோடிச் செல்கின்ற நேரத்திலும், மத்திய சர்க்கார் பணம் அனுப்பினால் அது ஊழல் ஆகிவிடும், அது தவறாகச் செலவிடப்படும் என்கின்ற முறையில் இங்கே பல பேர் பிரச்சாரம் செய்தார்கள். நான் இங்கே உள்ள எதிர்க் கட்சியினர் சிலர் சொல்வது பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. டெல்லியிலிருந்து வந்த காங்கிரஸ் கட்சியினுடைய பொறுப்பிலே இருக்கிற திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார்கூட ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கிற பணம் அவர்களுடைய கையில் போய்ச் சேர்வதில்லை என்கின்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இங்கே இருக்கின்ற ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. ராமையா அவர்கள்கூட இதே குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஆனால், வந்து ஆராய்ந்து பார்த்த குழுவினர் நல்ல முறையிலே நடைபெற்றிருக்கிறது என்பதனையும், அந்தக் குழுவினரே நம்முடைய அதிகாரிகளை விட்டு விட்டுத் தனியாகச் சென்று பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற ஏழை மக்களைப் பார்த்து, வீடு இழந்தவர்களைப் பார்த்து "உங்களுக்கு எவ்வளவு பணம் கிடைத்தது?" என்கின்ற கணக்குகளையெல்லாம் கேட்டு, அவர்கள் சரியான முறையிலே தான் இந்த உதவிகள் செய்யப்படுகின்றன; பண விநியோகம் நடைபெறுகிறது : பொருள் விநியோகம் நடைபெறுகிறது என்கின்ற

அந்தப் புள்ளிவிவரத்தை மத்திய அரசிற்குத் தந்திருக்கிறார்கள். அதன் விளைவாகத்தான் இன்றைக்கு 14 கோடி 25 லட்சம் ரூபாய்க்கான அனுமதியை மத்திய அரசு நமக்கு வழங்கி யிருக்கிறது என்பதனையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசின் உதவி எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்குமேல் கூட வேண்டும் என்று வற்புறுத்தத் தயார்தான். ஆனால் மகாராஷ்டிரத்தில் இம்மாதிரி மத்திய அரசு பண உதவி செய்யும் பொழுது, மத்திய அரசின் அதிகாரிகளும் கூட இருந்து, விநியோகத்தைக் கண்காணித்தார்களே, அம்மாதிரி முறையைத் தமிழ்நாட்டிலும் அனுமதிப்பீர்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இங்கே கண்காணிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. எதற்கு எடுத்தாலும் சந்தேகப்படுவது, உண்மையிலே மனத்திற்குள் சந்தேகம் இருக்கிறதோ, இல்லையோ, அப்படி ஒரு புழுதியை வாரி இறைப்பது; இதையே எதிர்க்கட்சிக்காரர்கள் வேலையாக வைத்துக்கொண்டிருந்தால், நல்ல காரியங்களை நடத்த முடியாது. மராட்டியத்தில் என்ன நடைபெறுகிறது என்பது எனக்குத் தெரியாது. எந்த வகையிலே நடைபெறுகிறதோ எனக்குத் தெரியாது. அப்படி மராட்டியத்தைக் கண்காணிக்க வேண்டிய அளவிற்கு அங்கே தவறு நடைபெறுகிறதாவென்பதும் எனக்குத் தெரியாது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : நாங்கள் சொல்வதை யெல்லாம் ஏதோ புழுதி வாரி இறைப்பதற்காகவே சொல்கிறோம் என்று நீங்கள் எடுத்துக்கொள்வது தவறு. என்னுடைய தொகுதியில் பல குடிசைகளில் நான்கு சுவர்களும் இடிந்து கிடந்தும்கூட, அவர்களுக்குக்கூட உதவி போய்ச் சேரவில்லை. நானும் தாசில்தாரிடம் இரண்டு முறை பார்த்துச் சொன்னேன். இப்படிச் சரியான முறையில் நீங்கள் கணக்கு எடுக்காமல் இருக்கின்றீர்களே என்று சொல்கிறோம். ஏதோ எங்கோ சில குறைகள் இருக்கின்றன என்பதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறோம். ஏதோ நாங்கள் புழுதியை வாரி இறைப்பதாக அவரே சொல்லுவது தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : குறைகள் ஏற்படலாம், திரு. ஹாண்டே அவர்கள்கூட, அந்த வெள்ளச் சேதத்திற்காக நிவாரணங்கள் அளிக்கப்பட்டபோது, பாதிக்கப் பட்டவர்களுக்கு சென்னை மாநகரத்தில் நிவாரணம் அளிக்கப் பட்டபோது, அவர்களுடைய தொகுதியில் ஒரு ஐந்து, ஆறு இடங்களில், நிவாரணம் அளிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு, என்னிடம் கடிதம் மூலம் எழுதித் தந்தார்கள். இந்த அவை நடந்த போதுதான் கொடுத்தார். அதை உடனடியாகக் கவனித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற விவரங்களை திரு. ஹாண்டே அவர்களுக்கு நானே அனுப்பி வைத்தேன். அதைப்போல அம்மையார் அவர்கள் இந்த அவையில் - ஓகோ! வரவில்லை அப்போது - கொடுத் திருக்கலாம். அப்படிக் கொடுக்காத காரணத்தினால் அது கவனிக்கப்படாமல் போயிருக்கலாம். இப்பொழுதுகூட எந்த எந்த இடத்தில் இந்தத் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று குறிப்பிட்டுக் காட்டினால், அவைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நிச்சயமாகத் தயாராக இருக்கிறது.

அடுத்து, இந்த உரையின்மீது நடைபெற்ற விவாதத்தில் விவசாயிகளுடைய கோரிக்கைகளை அரசு சரியானபடி கவனிக்கவில்லை. அல்லது உடன்பாட்டிலே ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தவில்லை என்ற விவாதம் முக்கியமாக இருந்தது. குறிப்பாக, காங்கிரஸ் கட்சியினுடைய மதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள், விவசாயிகள் கிளர்ந்து எழுவார்கள் என்கிற வகையில்கூட வெளியிடங்களில் பேசி வருகிறார்கள். பத்திரிகைகளிலே அவைகள் பெரிய எழுத்துச் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் விவசாயிகளின் கோரிக்கைகள் எந்த உடன்பாட்டிற்கு வந்தன, அந்த உடன்பாட்டை இந்த அரசு நடைமுறைப்படுத்தியதா, இல்லையா என்பதை இந்த அவைக்கு நான் விளக்குவதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் விளக்குவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவர்களுடைய முதல் கோரிக்கை, விவசாயத்திற்கான மின்கட்டண உயர்வை ரத்துச் செய்ய வேண்டும். மின் துண்டிப்பு செய்தல் கூடாது. வறண்ட கிணறுகளுக்கு வருடாந்திர குறைந்த பட்சக் கட்டணம் வசூலித்தலை நிறுத்த வேண்டும். இது கோரிக்கை.

உடன்பாடு என்ன? விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணம் ஒரு மாதத்தில் உபயோகப்படுத்தப்படும், மின்சாரத்திற்கு முதல் 100 யூனிட்டுகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 12 பைசாவாகவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு யூனிட்டுக்கும் 11 பைசாவாகவும் நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இது உடன்பாடு, எடுக்கப்பட்ட நடவடிக்கை - இதன்படி மாற்றி யமைத்து, 1-8-1972 அன்று அரசு ஆணை பிறப்பித்தது. அவ்வாறு அதை அரசு நிறைவேற்றியிருக்கிறது.

இரண்டாவது கோரிக்கை, அரசாங்கக் கடன், கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் உட்பட சகல கடன் பாக்கிகளையும் வஜா செய்ய வேண்டும். மோட்டார் பம்பு செட்டுகள், கால்நடைகள், விவசாய சொத்துக்களை ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். இது கோரிக்கை.

உடன்பாடு என்ன? மாநிலத்தில் வறட்சியுள்ள இடங்களில் கடன் வசூலிப்பதில் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அது தொடர்ந்து அமல்படுத்தப்படும். மேலும் வறட்சிப் பகுதிகளை வருவாய் வாரிய உறுப்பினர்கள் மாவட்டவாரியாகப் பார்வையிட்ட பின்னர் எந்தெந்தப் பகுதிகள் விளைச்சல் அற்ற பகுதிகள் என்று தீர்மானிக்கப்படுகிறதோ அந்தப் பகுதிகளில் கடன் பாக்கிகளுக்குத் தவணை அளிப்பது போன்ற சலுகைகள் அளிக்கப்படும். இதற்கிடையில் ஜப்தி போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது. இது உடன்பாடு. எடுக்கப்பட்ட நடவடிக்கை. அரசு ஆணையின்படி மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், எல்லாக் கூட்டுறவு வங்கிகளுக்கும், துறையின் அதிகாரிகளுக்கும் கடன் பாக்கிகளை வசூல் செய்வதில் கெடுபிடி நடவடிக்கை இல்லாமல் பார்த்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். பின்னர் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக மேற்சொன்ன உத்தரவு 30-6-1973 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாயிகளுக்கு உதவும் வகையில் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற மாநில அரசு கோரிக்கை செய்து, ரிசர்வ் வங்கி ரூ. 4.54 கோடி கடனுதவி அளித்திருக்கிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும்

இதே விதமான குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடனாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் சேதமான கிணறுகளைச் செப்பனிடவும், மண் அடிக்கப்பட்ட நிலங்களைச் சீர் செய்யவும் மத்திய வங்கிகள் மத்திய காலக் கடன்கள் வழங்குவதற்கான உத்தரவைக் கூட்டுறவுப் பதிவாளர் பிறப்பித்துள்ளார்.

மூன்றாவது கோரிக்கை, விவசாயப் பிரதிநிதிகளும், அரசாங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து விவசாயப் பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று, விற்பனை செய்ய வேண்டும். இது மூன்றாவது கோரிக்கை.

இதில் என்ன உடன்பாடு ஏற்பட்டுள்ளது? விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்பதற்கு "ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்" நிறுவுவதை, கொள்கை அளவில் அரசு ஏற்றுப் பரிசீலிக்கும், விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயம் செய்வதற்கு விவசாயப் பிரதிநிதி உள்ளிட்ட குழு ஒன்றை அமைப்பது பற்றிப் பரிசீலிப்பதோடு, தேங்கியுள்ள பருத்தி முதலியவற்றைக் கொள்முதல் செய்வது பற்றியும் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுதான் உடன்பாடு. எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? தேங்கியுள்ள பருத்தி இருப்பினை விற்பதில் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளைப்பற்றி மத்திய அரசுக்குத் தமிழக அரசு எடுத்துச் சொல்லியுள்ளது. பருத்திக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கும் கொள்கைபற்றி மத்திய அரசு முடிவு எடுக்க வேண்டும் என்று இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியப் பருத்திக் கழகம் எந்த அளவுக்குப் பருத்தியைக் கொள்முதல் செய்கிறது என்பதையும் கொள்முதல் விலையையும் முன் கூட்டியே அறிவிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு வற்புறுத்தி வந்துள்ளது. விலை நிர்ணயம் செய்யும் குழு அமைப்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது ஒன்று தான் இன்னும் பரிசீலனையில் இருக்கின்ற விஷயம்.

அடுத்த கோரிக்கை நான்காவது கோரிக்கை. பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும் என்பது கோரிக்கை. கம்யூனிஸ்ட் கட்சி

உள்ளிட்ட அத்தனை பேரும் விடுத்த கோரிக்கை - பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும். புதிதாகப் போடப்பட்டுள்ள நில வரி, செஸ் வரிகளைக் கைவிட வேண்டும்; விவசாய பம்பு செட்டுகளுக்கும், ரசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்ய வேண்டும்; இது கோரிக்கை.

ஏற்பட்ட உடன்பாடு என்ன? 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாய வருமான வரியில் கணக்கு வைப்பது கட்டாயமில்லை என்றும், ஏக்கரா எல்லை அளவு இல்லாமல் கம்பவுண்டிங் முறையில் வரி செலுத்தலாமென்றும் முன்பு அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளையொட்டி மேலும் சிறிய விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியில் சலுகை அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும். அந்தச் சலுகை உதாரணமாக 7.5 ஸ்டாண்டார்டு ஏக்கரா வகையில் வருமான வரி இல்லை என்பதை பத்து ஸ்டாண்டார்டு ஏக்கரா என்று ஆக்குவது பற்றியும், ஸ்டாண்டார்டு ஏக்கரா கணக்கிடுவதில் மாற்றம் செய்வ தாகவும் இருக்கும். இது உடன்பாடு.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாய வருமான வரி திருத்தச் சட்டத்தின்படி கீழ்க் கண்ட சலுகைகள் அளிக்கப்பட்டன. 7.5 ஸ்டாண்டார்டு ஏக்கருக்கு வரிவிலக்கு அளித்து இருந்த நிலையை மாற்றி தற்பொழுது 10 ஸ்டாண்டார்டு ஏக்கருக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. தற்போது 10.00 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு வருமான அடிப்படையில் வரி விதிக்கும்போது 4,000 ரூபாய் வரி விலக்கு அளிக்கப்பட்டது. இதில் தற்போது 5,000 ரூபாய் வரை வரி விலக்கு அளிக்க உத்தரவு இடப்பட்டுள்ளது.

பிளாண்டேஷன் பயிர்களுக்கு, முன்பு 30 ஸ்டாண்டார்டு ஏக்கர் வரை கம்பவுண்ட் செய்துகொள்ளலாம். தற்போது எவ்வித ஏக்கர் எல்லை அளவும் இல்லாமல் வரியைக் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம்.

பிளாண்டேஷன் பயிர்களுக்கு முன்பு உயர்ந்த பட்சம் 30 ஸ்டாண்டார்டு ஏக்கருக்கு மட்டும் கம்பவுண்டிங் செய்ய விதியில் இடம் இருந்தது. தற்போது 30 ஸ்டாண்டார்டு ஏக்கரா என்பது 50 ஸ்டாண்டார்டு ஏக்கராவாக உயர்த்தப்பட்டது.

கம்பவுண்டிங் கட்டண விகிதங்கள் தற்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

பாக்கு, திராட்சை, கரும்பு, நிலக்கடலை, பருத்தி, பயறு, தென்னை ஆகிய பயிர்கள் விளையும் நிலங்களை ஸ்டாண்டார்டு ஏக்கராக மாற்றுவதில் மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டன.

உதாரணமாக முன்பு ஒரு ஏக்கரில் 6-ல் ஒரு பங்கு பாக்கு பயிரிட்டால் அது ஒரு ஸ்டாண்டார்டு ஏக்கர் என்று எடுத்துக் கொள்ளப்பட்டது. தற்போது ஒரு ஏக்கரில் 3-ல் ஒரு பங்கு பாக்கு பயிரிட்டால் அதை ஒரு ஸ்டாண்டார்டு ஏக்கர் என்று எடுத்துக் கொள்ளலாம். இந்த வகையிலே அந்த உடன்பாடு இந்த அவையிலே நிறைவேற்றி வைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஐந்தாவது கோரிக்கை, பாசனக் கட்டுப்பாட்டை நீக்கி தண்டத் தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும். இது கோரிக்கை. உடன்பாடு என்னவென்றால் ஏற்கெனவே இதற்கான தற்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இந்தப் பகுதிகளில் விவசாயிகளின் மாநாட்டைக் கூட்டிப் பரிசீலித்துத் தக்க முடிவு எடுக்கப்படும். ஏற்பட்ட உடன்பாடு இது.

எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 22-1-1973-ல் கோவையில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தி அம்மாநாட்டில் பயிர் செய்வது சம்பந்தமான கட்டுப்பாடுகள் பற்றி விவாதிக்கப் பட்டுள்ளது. முடிவுகள் விரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றன.

ஆறாவது கோரிக்கை, பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடியாக நீர்ப்பாசனம் செய்ய உத்தரவிடச் செய்ய வேண்டும்; அதுவரை அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாகப் பிரகடனப் படுத்த வேண்டும். இது ஆறாவது கோரிக்கை.

உடன்பாடு என்ன? இதுபற்றி மத்தியத் திட்டக் குழுவுடனும். கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும். தொடர்பு கொண்டிருக்கிறோம். அது எடுக்கப்பட்ட நடவடிக்கை. பலமுறை பேச்சுவார்த்தைகளை அந்த அரசுகளோடு இந்த அரசு நடத்திக்கொண்டிருக்கிறது.

ஏழாவது கோரிக்கை, விவசாயக் கால்நடைகள், பயிர்கள் பாதுகாப்பு (இன்ஷூரன்ஸ்) செய்யப்பட வேண்டும். ஏற்பட்ட

உடன்பாடு என்ன? மாநில அரசுக்கு இந்தக் கொள்கை உடன்பாடு உடையது. மத்திய அரசிடம் இதுபற்றி வலியுறுத்தப்படும், வலியுறுத்தி வருகிறோம். ஆனால் மத்திய அரசிடமிருந்து பதிலில்லை. பல கடிதங்கள் எழுதியிருக்கிறோம். இதற்கான அறிக்கையைத் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்திலிருந்து தானியக் காப்பீடு சாத்தியக் கூறுகளைப் பற்றி அரசிற்கு இப்போது அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதையும் பெற்று மத்திய அரசிற்கு மீண்டும் நினைவூட்டுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

இனாம் ஒழிப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்வது, இனாம் நிலங்களை உழுதுகொண்டிருக்கும் உழவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். இதற்கென்ன உடன்பாடு? இந்தப் பிரச்சினை பரிசீலனை செய்யப்படும்.

அதற்கேற்ப எடுக்கப்பட்ட நடவடிக்கை 1963-ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் பல்வேறு பிரிவுகளில், இந்து, முஸ்லீம், கிறித்துவ மத ஸ்தாபனங்களுக்கும், தனிப்பட்ட இனாம்தாரர்களுக்கும் எந்த அளவுப் பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை நிலவரித் திட்ட ஆணையாளரை மாநிலம் முழுமைக்கும் சேகரித்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. செட்டில்மெண்ட் அலுவலர்கள் மூலம் ஒருவித விசாரணையும், தாசில்தார்கள் மூலம் மற்றொரு விசாரணையும் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. இவைகளின் மூலம் கிடைக்கப்பெறும் புள்ளிவிவரங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க மிகவும் தேவைப்படும். வருவாய் வாரியத்தின் இறுதி அறிக்கை வரப்பெற்றதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதுபற்றி தனியார் மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டபோது, அரசாங்கம் அதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது; விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டதே. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அது வருவாய் வாரியத்தின் இறுதி அறிக்கை வந்தவுடன், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒன்பதாவது கோரிக்கை. அதை அவர்களே வலியுறுத்த வில்லை.

பத்தாவது கோரிக்கை, விவசாய வேலைகளில் பாதிக்கப் பட்டவர்களுக்கும், மரணம் அடைந்தவர்களுடைய குடும்பங் களுக்கும் அரசு நிவாரணம் அளிக்க வேண்டும். இது கோரிக்கை.

இதிலே ஏற்பட்ட உடன்பாடு என்ன? விவசாயத் தொழி லாளர்கள், விவசாயிகள், இரு தரப்பினரும் மாவட்ட வாரியாக விவசாயத் தொழிலாளர்களுடைய பொது நல நிதி உருவாக்கவும், அதற்கு அரசு சார்பில் ஈட்டு நிதி அளிக்கவும் பரிசீலிக்கப்படும்.

இன்னும் அவர்கள் ஏற்றுக்கொண்டவாறு அந்தச் சங்கத்தார் விவசாயிகளுடைய பொது நல நிதியைத் திரட்டவில்லை. அவர்கள் திரட்டியதும் அதற்கு ஈடாக அரசு நிதி அளிக்கத் தயாராக இருக்கிறது.

பதினோராவது கோரிக்கை, விவசாயத் தொழிலாளர் களுக்கும் கிராமப்புற ஏழை மக்களுக்கும் அரசுச் செலவிலேயே குடியிருப்பு மனை நிலம் வழங்கி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்; விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் பூராவும் கூலி நிர்ணயச் சட்டம் வேண்டுமென்பதாகும். இது கோரிக்கை.

ஏற்பட்ட உடன்பாடு என்ன? குடியிருப்பு மனை நிலம் ஏழை மக்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வழங்குவது பற்றி மாநிலம் முழுவதும் சட்டத்தை விரிவாக்க முதலமைச்சர் ஏற்கனவே கலெக்டர்கள் மாநாட்டில் அறிவித்தி ருப்பதையொட்டி அந்த முயற்சி விரைவுபடுத்தப்படும். விவசாயத் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுவதும் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவரவும் அதுபற்றி ஆராயவும் ஒரு கமிஷன் ஏற்படுத்தப்படும்.

இந்த இரண்டு காரியங்களும் செய்து முடிக்கப் பட்டிருக்கின்றன.

பன்னிரெண்டாவது கோரிக்கை, வனத் தரிசு புறம்போக்கு நிலங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர் களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

ஏற்பட்ட உடன்பாடு. வனத்துறையில் இப்போதே காடுகள் அல்லாத நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு

ஐம்பத்து இரண்டாயிரம் ஏக்கர் பகிர்ந்தளிக்கத் திட்டம் உள்ளது. புறம்போக்கு நிலங்களும் இலட்சக்கணக்கானவர்களுக்குத் தொடர்ந்து பகிர்ந்தளிக்கப்படுகிறது. விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத்தான் இதுபோன்ற நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. அது தீவிரமாக அமுல்படுத்தப்படும். இதுதான் உடன்பாடு.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். 1972-73-ஆம் ஆண்டில் அரசு 75,000 ஏக்கர் நிலத்தை அடமானம் என நிர்ணயம் செய்தது, அதில் நவம்பர் 1972 முடிய 51,000 ஏக்கர் நிலம் அடமானம் செய்யப்பட்டு விட்டது. 1972-73 நிதியாண்டு முடிவதற்குள் நிர்ணயிக்கப்பட்ட இந்த இலக்கை அடைந்துவிடலாம்.

இந்த அளவிலே விவசாயிகளுடைய கோரிக்கை மிகப் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கான ஆதாரங்களை நான் இங்கே எடுத்துச்சொன்ன குறிப்புகளின் மூலமாக இந்த அவைக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த அவையிலே மிக முக்கியமாகப் பேசப் பட்ட பிரச்சனை, இன்று மக்களுடைய கவனத்தை ஈர்த்துக் கொண்டிருக்கின்ற பெரிய பிரச்சினை, மின்சார வெட்டு. மிக நெருக்கடியான நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை யாரும் மறுத்திடத் தயாராக இல்லை. ஆனால் அனைவருடைய ஒத்துழைப்போடு இந்தப் பிரச்னையை நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மின்சார வெட்டைப்பற்றிப் பேசிய நேரத்தில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களானாலும் சரி, அல்லது மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களானாலும் தலைவர்களானாலும் சரி, இந்த அரசு மின் உற்பத்தி செய்யவே இல்லை என்ற ஒரு பெரிய குற்றச்சாட்டை எடுத்துக்கூறினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் 1966-67-ல் 857 மெகாவாட் உச்ச மின் தேவை demand இருந்தது. இப்போது 1971-72 ஆம் ஆண்டிலே அது 1,326 மெகாவாட்டாக மாறி இருக்கிறது. 1966-67-ல் நீர் மின்நிலையங்கள் நமக்கு வழங்கிய உற்பத்தி 21,000 லட்சம் யூனிட். ஆனால் 1971-72-ல் அது 37,490 லட்சம் யூனிட்டாக நீர் மின்

நிலையங்கள் மூலம் கிடைக்கிறது. அனல் மின் நிலையங்கள் 1966-67-ல் 4,050 லட்சம் யூனிட் உற்பத்தி செய்தது. இன்றைக்கு 1971-72-ல் அது 4,050 லட்சத்திற்கு மாறாக 6,180 லட்சம் யூனிட் இன்றைக்குக் கிடைக்கிறது.

நெய்வேலி, கேரளா, மைசூர் மாநிலங்களிலிருந்து 1966-67-ல் வாங்கப்பட்ட மின்சாரம் 15,980 லட்சம் யூனிட். 1971-72-ல் அது 24,490 லட்சம் யூனிட்டாக உயர்ந்தது. இதிலே மின்வெட்டு இப்போதுதான் - தமிழ்நாட்டிலே முன்னேற்றக் கழக அரசிலே வந்துவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டு சில பேர் பேசினார்கள். அவர்களுக்கு 1961-ம் ஆண்டிலிருந்து இந்த மின்சாரத் துறையிலே ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1961-ம் ஆண்டு தமிழ் நாட்டில் ஏற்பட்ட மின்சார வெட்டு 40 சதவீதம் 12 நாட்களுக்கு வெட்டப்பட்டது. பின்னால் 15 சத வீதம் சுமார் 6 நாட்களுக்கு வெட்டப்பட்டது. 1962-ம் ஆண்டு 40 சதவீதம் 15 நாட்களுக்கு, 1963-ம் ஆண்டு 80 சதவீதம் 16 நாட்களுக்கு, 1964-ம் ஆண்டு 40 சதவீதம் 3 நாட்களுக்கு, பிறகு அது 80 சதவீதம் ஆக்கப்பட்டது 18 நாட்களுக்கு, 1965-ம் ஆண்டு 25 சதவீதம் இரண்டு மாதங்களுக்கு, 1966-ம் ஆண்டு 25 சத வீதம் 7 மாதங்களுக்கு. 1967 முதல் 69 வரை மின்வெட்டு இல்லை. 1970-ம் ஆண்டில் 40 சதவீதம் வெட்டப்பட்டது 6 நாட்களுக்கு - நெய்வேலி அப்போது மூடப்பட்ட காரணத்தால் - 1971-ல் மின்வெட்டு இல்லை. 1972-ல் 25 சதவீதம் மின்வெட்டு 23 நாட்களுக்கு.

பிறகு 1-10-1972-க்குப் பிறகு இதுவரையிலே 25 சதவீத மின்வெட்டு 4 மாதங்களுக்கு வெட்டப்பட்டிருக்கிறது. குறிப்பாகத் தொழிற்சாலைகளுக்கு வெட்டு உயர்த்தப்பட்டு 40 சதவீதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிலைமைகள் நெருக்கடியாகக் கூடும். அதை மறுக்க விரும்பவில்லை. மறைக்கத் தேவையும் இல்லை. ஆனால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில், அங்கே இல்லையா என்று கேட்டு நாம் ஆறுதல் பெறமுடியாது என்பதை நிச்சயமாக ஒத்துக்கொள்கிறேன். ஆனாலும், இது வெறும் தமிழ் நாட்டிலே மாத்திரம் உள்ள பிரச்சினை மட்டுமல்ல. அனைத்திந்தியாவிலும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

மற்ற மாநிலங்களில் தற்போதுள்ள மின்சார வெட்டின் அளவு :- அரியானா 80 சதவீதம், பஞ்சாப் 75 சதவீதம், உத்தரப் பிரதேசம் 40 சதவீதம், ஆந்திரப்பிரதேசம் 30 சதவீதம், மைசூர், குஜராத், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் 25 சதவீதம், மேற்கு வங்கம் 15 சதவீதம் இன்றைக்கு மின்வெட்டு மூலம் கடைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இன்றையதினம் எடுத்துச் சொல்லப்பட்ட மிகப் பெரிய குறையாகச் சொல்லப்பட்டது. பார்ப்பவர்களுக்குப் பாமரர்களுக்கு - ஓகோ இதனால் தானே இவ்வளவு பெரிய ஆபத்து என்று எண்ணிடத்தக்க அளவுக்குப் பெரிய குறையாக ஒன்று சொல்லப்பட்டது; சினிமாக்கள் மூன்று காட்சிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இது ஒரு குற்றச்சாட்டு. இரண்டாவது நீங்கள் ரூரல் எலக்டிரிபிகேஷன், கிராமங்களுக்கு மின் வசதி கொடுப்பதற்கான ஒரு பெரிய திட்டத்தை ஆரம்பித்தீர்கள். அதன் காரணமாகத்தான் இந்தச் சங்கடமான நிலைமை வந்துவிட்டது என்று சொன்னார்கள். முதலில், சினிமாவுக்கு மூன்று காட்சிகளுக்கான மின்சாரம் நாம் வழங்கவில்லை. நாம் ஒரு காட்சியைக் குறைத்து விடுங்கள் என்று உத்தரவிட்டபோது நாங்கள் 2 காட்சிக்குரிய மின்சாரத்தில் விசிறி முதலானவைகளைக் குறைத்துக்கொண்டு 3 காட்சிகள் நடத்திக் கொள்கிறோம் என்று கேட்டுக் கொண்டதால், 2 காட்சிக் குரிய மின்சாரம் தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சினிமா விற்கும் அல்லது தெரு விளக்குகளுக்கும் கிராமப்புறத்து விளக்குகளுக்கும் ஆகின்ற செலவு எவ்வளவு என்பதைத் தயவுசெய்து நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

பார்ப்பதற்குப் பிரகாசமாக இருப்பதைச் சொல்லி, பார் பார் பட்டணத்தில், எவ்வளவு விளக்குகள் எரிகின்றன. பார் பார் சினிமாக்கள் நடக்கின்றன. பார் பார் கிராமத்திற்கு எல்லாம் இவர்கள் விளக்குகள் போட ஆரம்பித்து இருக்கிறார்கள் என்று கூறுகின்றனர்.

அரிசனக் காலனிகளுக்கு 1967 வரையில் 4 ஆயிரம் காலனிகளுக்குத்தான் போடப்பட்டிருக்கிறது. இன்று இந்த ஆட்சியிலே 20 ஆயிரம் காலனிகளுக்கு மின் விளக்குகள் போடப்பட்டு முடிந்து விட்டது. இவைகளை எல்லாம் செய்தது தவறு என்பதைப் போல் - ஆராயாமல் செய்த வேலை என்பதைப்

போல - இன்றைக்குப் பேசுகிறார்கள். அதற்காகத்தான் இந்தக் கணக்கை அளிக்க விரும்புகிறேன்.

ஒரு நாளைக்கு நம்முடைய மாநிலத்திற்குப் பல்வேறு துறைகளுக்கும் தேவையான மின்சாரம் 225 லட்சம் யூனிட்டுகள்.

இதிலே, இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே, தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மின்சாரம் 115 லட்சம் யூனிட்டுகள், கிட்டத்தட்ட 50 சதவீதம் தருகிறோம்.

விவசாயத்திற்கு இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே தருவது 45 லட்சம் யூனிட்டுகள், 20 சதவீதம் தருகிறோம்.

வீட்டு உபயோகத்திற்கு 9,50,000 யூனிட்டுகள் இந்த 225 லட்சம் யூனிட்டில் இருந்து தருகிறோம். அதாவது 4.2 சதவீதம்.

தெருவிளக்குகளுக்குப் பயன்படுத்தப்படுவது இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே - கிராமத்திலே எல்லாம் லைட் போட்டுக் கொடுத்துவிட்டார்கள்; அதனால்தான் பற்றாக்குறை என்று சொன்னார்களே; அதற்கு நான் சொல்லுகிற பதில் இந்த 225 லட்சம் யூனிட்டுகளிலே 2 லட்சத்து 50 ஆயிரம் யூனிட்டுகள் தான். அதாவது 1 பெர்சென்ட் தான் தெரு விளக்குகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிற மின்சாரம்.

சினிமாக்களுக்கு 225 லட்சம் யூனிட்டுகளிலே உபயோகப் படுத்துகின்ற மின்சாரம் ஒரு நாளைக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் யூனிட். ½ சதவீதம். அதாவது 0.5 சதவீதம்.

கடைகளுக்கு 6 லட்சத்து 60 ஆயிரம் யூனிட்டுகள். அதாவது 3 சதவீதம்.

அத்தியாவசிய சர்வீஸ்களுக்கு 7 லட்சம் யூனிட்டுகள். அதாவது 4.3 சதவீதம்.

இதிலே எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்றால், தொழில் நிறுவனங்களுக்கு 115 லட்சம் யூனிட்டாக இருந்ததை, 80 லட்சத்து 60 ஆயிரம் யூனிட்டுகளாக இப்பொழுது, இந்த 40 சதவீதம் வெட்டின் மூலம், குறைத்து இருக்கிறோம். அவர்களுக்கு, மொத்தம் மின் வழங்குவதில் 36 சதவீதம் தொழிற்சாலைக்குக் கிடைக்கிறது.

விவசாயத்திற்கு 45 லட்சம் யூனிட் அப்படியே கொடுக்கிறோம். வெட்டு இல்லை. அவர்களுக்கு மொத்த மின் வழங்குவதில் 20 சதவீதம் வழங்குகிறோம்.

வீட்டு உபயோகத்திற்காக 9 லட்சத்து 50 ஆயிரம் யூனிட்டை 8 லட்சத்து 70 ஆயிரம் யூனிட்டுகளாகக் குறைத்து இருக்கிறோம். 25 சதவீதம் - 100 யூனிட்டுக்கு மேற்பட்டால் வெட்டு என்கிற வகையில்.

தெரு விளக்குகளுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் யூனிட், இதைக் குறைத்து 1 லட்சத்து 25 ஆயிரம் யூனிட்டுகள் ஆகக் குறைத்திருக்கிறோம். தெருவிளக்கைப் பொறுத்த வரையில் 50 சதவீதம் மின்வெட்டு.

சினிமாக்களுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் யூனிட்டை 90 ஆயிரம் யூனிட்டுகள் என்று குறைத்து இருக்கிறோம். 33¾ சத வீதம் மின்வெட்டு சினிமாக்களுக்கு. 0.5 சதவீதம் தான் சினிமாக்களுக்கு உபயோகிக்கப்பட்டது. இப்பொழுது 0.4 சதவீதம் தான் சினிமாக்களுக்கு உபயோகிக்கப்படுகிறது.

கடைகளுக்கு 6 லட்சத்து 60 ஆயிரம் யூனிட் என்று இருந்ததை 5 லட்சத்து 10 ஆயிரம் யூனிட்டுகள் என்று குறைத்து இருக்கிறோம்.

அத்தியாவசிய சர்வீஸ்களுக்குக் குறைக்கவில்லை.

முன்பு இழப்பு, 225 லட்சம் யூனிட்டாக இருந்தபோது, 38 லட்சத்து 10 ஆயிரம் யூனிட். அதாவது 17 சதவீதம். இப்பொழுது 32 லட்சத்து 60 ஆயிரம் யூனிட்டாகக் குறைத்து இருக்கிற காரணத்தால் இழப்பு 14.2 சதவிகிதமாகிறது. இந்த இழப்பு தமிழ் நாட்டிலே 17 சதவிகிதம் ஏற்படுகிறது என்ற காரணத்தாலேதான் மின்சாரப் பற்றாக்குறை வந்தது. இது ஒரு கண்டனக் கணை. நாம் மற்ற மாநிலங்களையும் ஒப்பிட வேண்டும். இந்த இழப்பு 1970-71-ஆம் ஆண்டு கணக்குப்படி அரியானாவில் 27.96 சதவீதம், ஆந்திரப்பிரதேசத்தில் 25.41 சதவீதம், உத்திரப் பிரதேசத்தில் 24.48 சதவீதம், பீகாரில் 22.87 சதவீதம், பஞ்சாபில் 22.37 சதவீதம், ஜம்மு-காஷ்மீரில் 21.49 சதவீதம். நாகாலாந்தில் 20.34 சதவீதம். அஸ்ஸாமில் 17.71 சதவீதம். மத்தியப் பிரதேசத்தில் 14.7 சதவீதம் குஜராத்தில் 14.57 சதவீதம். மைசூரில் 14.69 சதவீதம்.

அகில இந்திய சராசரி இழப்பு 17.31 சதவீதமாகும். நம்முடைய மாநிலத்தினுடைய இழப்பு 17 சதவீதமாகும்.

மற்ற மாநிலங்களை விடக் குறைவாக இருந்தாலும் ஏன் மைசூரைவிட - குஜராத்தைவிட - ஆந்திரத்தைவிடக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று பார்த்தால், தமிழ் நாட்டில் மின் கம்பித் தொடர்களின் நீளம் 1 லட்சத்து 94 ஆயிரம் கி. மீ. மைசூரில் 1 லட்சத்து 29 ஆயிரம் கி. மீ. மின் கம்பிகளின் நீளம். ஆந்திரப் பிரதேசத்தில் 97 ஆயிரம் கி. மீ. மின் கம்பிகளின் நீளம் மின் கம்பிகள் நெடுந்தூரத்திற்குப் போக போக, இழப்பு கொஞ்சம் அதிகப்படுகிறது.

அது மாத்திரமல்ல; ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 2.21 லட்சம்தான். மைசூரில் இருக்கிற பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 1.57 லட்சம். ஆனால், தமிழ் நாட்டில் 1966-67-ல் 2 லட்சம் பம்பு செட்டுக்கள். இன்றைக்குத் தமிழக அரசினுடைய பெருமுயற்சியின் காரணமாக இந்த 2 லட்சம் பம்பு செட்டுகள் 6 லட்சத்து 24 ஆயிரமாக உயர்ந்து இருக்கின்ற காட்சியினை நாம் காணுகின்றோம். ஆகவே, இந்த இழப்பு, மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற நேரத்தில் நம்முடைய தேவை, நாம் ஏற்படுத்தியிருக்கின்ற வசதிகள், சாதனைக் கூறுகள் இவைகளைக் காணுகிற நேரத்திலும் அது அவ்வளவாகப் பொருட்படுத்தக் கூடியதாக இல்லை. மேலும் இந்த இழப்பைக் குறைக்க வேண்டும் என்பதிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் செலுத்திய கவனத்தோடு நான் என்னுடைய உள்ளத்தை இணைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதையெல்லாம் மின்சார போர்டு செய்ய வேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கின்றேன்.

Dr. H. V. HANDE : The Hon. Chief Minister was saying that there was no serious power cut for agriculturists and industries. But actually the position to-day is that there is serious lay-off in Coimbatore and industrial belts surrounding it and we have also received information that for agricultural pumpsets, there is no electric supply and consequently the farmers are suffering in many places in the State.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவைகளைப் பிறகு சொல்கிறேன். இந்த அரசு வந்தபிறகு மின்சார

உற்பத்திக்கான திட்டங்களே நிறைவேற்றப்படவில்லை என்று குறைபாடு. இந்த அரசு வந்தபிறகு தான் 60 மெகாவாட்டுக்கான ஆளியாறு திட்டம், 100 மெகாவாட் அளிக்கும் கோதையாறு திட்டம், 95 மெகாவாட் அளிக்கும் சோலையாறு திட்டம், 30 மெகாவாட்டுக்கான பேசின் பிரிட்ஜ் நீட்டிப்புத் திட்டம், 230 மெகா வாட்டுக்கான எண்ணூர் திட்டம் - மொத்தம் 515 மெகாவாட் வழங்கக்கூடியதாக இந்தத் திட்டங்கள் இந்த அரசினுடைய ஆட்சிக் காலத்திலேதான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மேலும் ஆரம்ப வேலை நடந்துகொண்டிருக்கும் திட்டங்கள் - 220 மெகாவாட் கொண்ட எண்ணூர் விஸ்தரிப்புத் திட்டம், 35 மெகாவாட் கொண்ட சுருளியாறு திட்டம், 20 மெகா வாட் கொண்ட சேர்வலாறு திட்டம், 50 மெகாவாட் கொண்ட நெல்லித்துறை திட்டம், 200 மெகாவாட் கொண்ட காடம்பாறை திட்டம், 110 மெகாவாட் கொண்ட குந்தா 4-வது கட்ட திட்டம் ஆக 635 மெகாவாட் கொண்ட திட்டங்களுக்கும் ஆரம்ப வேலைகளை இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட திட்டங்கள் தூத்துக்குடி அனல் மின்நிலையத் திட்டம் 400 மெகா வாட் கொண்டது. இன்னும் ஒப்புதல் கிடைக்கவில்லை.

மேட்டூர் அனல் மின்நிலையம் 330 மெகாவாட் கொண்டது. சிறிய நீர் மின் திட்டங்கள் 165 மெகாவாட் கொண்டது. இதை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறோம். ஒப்புதலுக்காக இவை காத்துக் கொண்டிருக்கின்ற திட்டங்கள்.

மத்திய அரசுத் திட்டம் என்கிற பெரிய திட்டம், கல்பாக்கம் அணு மின்நிலையம் 470 மெகாவாட் கொண்ட திட்டமாகும். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் 1,000 மெகாவாட் கொண்டதாகும். தூத்துக்குடி அணு மின்நிலையம் 1,000 மெகாவாட் கொண்டதாகும். இவைகளைப்பற்றியெல்லாம் நாம் மத்திய அரசிடத்திலே வாதாடிப் பெறவில்லை. மத்திய அரசுக்கு இவைகளைப்பற்றியெல்லாம் சரியானபடி எடுத்துச் சொல்லவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் வேறு சில மாண்புமிகு உறுப்பினர்களும் வேகமாக எடுத்துச் சொன்னார்கள். பல முறையும் இவைகளைப்பற்றி நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு கலைஞர் அவர்கள் தற்போதுள்ள மின்வெட்டைப்பற்றிச் சொன்னார்கள். இன்னும் நான்கு மாதங்களில் நிலைமை மோசமாகத்தான் இருக்கும். ஆகவே இதைத் தடுப்பதற்கு எல்லாக் கட்சிகளையும் சேர்த்து ஒரு போர்க்கால நடவடிக்கை போல் நான்-ப்ரொடெக்டிவ் பர்பஸஸ் - அதாவது சினிமா, அலங்காரம், வீட்டு உபயோகம் இவைகளுக்கான மின்சக்தி விநியோகத்தைக் குறைத்து தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் அதிகப்படியான மின்சக்தியைக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் இருந்து பேசவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : No power is as costly as 'no power' என்பதாக பாபா சொன்னதாக ஆளுநர் அவர்களது இந்த உரையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது தெரு விளக்குகளுக்காவது பயன் தரக்கூடிய சமயநல்லூர் பிளாண்ட் ஏன் மூடப்பட்டது?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : இப்போதே மணி ஒன்றேமுக்கால் ஆகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் உரையை முடித்தவுடன் ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோவையில் இருந்து வந்திருக்கக்கூடிய தந்திகளில் கோவையைச் சுற்றி பம்பு செட்டு களுக்கு 4 மணி நேரம் மின்சார சப்ளை கிடைக்கிறது என்றும், அதற்கு அப்பால் இருக்கிற குக்கிராமங்களில் எல்லாம் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் கூடக் கிடைக்கவில்லை, எப்போது கிடைக்கிறது என்றும் தெரியாமல் இருக்கிறது என்பதாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், அமைச்சர் அவர்கள் எசென்ஷியல் சர்வீசுகளுக்கு 7 லட்சம் யூனிட் கொடுக்கிறோம், அதில் கட்டுப்பாடு இல்லை என்று சொல்கிறார். ஆனால் ஆஸ்பத்திரி ஆப்பரேஷன்

தியேட்டர்களில் திடீர் திடீர் என்று மின்சப்ளை போய்விடுவது பற்றி எங்களுக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : இது பாயின்ட் ஆப் ஆர்டரா? புகார்கள் வருகின்றன என்றால், அதற்கு ஆதாரங்களைக் காட்ட வேண்டாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது எலெக்ட்ரிசிடி ஃபெயில்யூர். அமைச்சர் குறிப்பிட்டது எலெக்ட்ரிசிடி கட். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியவேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சமயம் வரும் போதெல்லாம் திரு. தங்கமணி அவர்கள் சமயநல்லூரைப்பற்றி பேசாமல் இருப்பது இல்லை. இப்பொழுதும் சொன்னார்கள். எனக்கும் இப்போது சமயம் வந்தது. நேற்று அவர் சொன்ன ஒரு விஷயத்திற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். 225 லட்சம் யூனிட் மின்சாரம் தேவைப்படுகிற நேரத்தில் 1 லட்சம் யூனிட் உற்பத்தி செய்யக்கூடிய சமயநல்லூர் மின்சார நிலையத்தை மூடலாமா என்றார். இந்த ஒரு லட்சம் யூனிட் பெறுவதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 55 லட்சம் நட்டத்திற்கு நாம் ஆளாக வேண்டியவர்களாக இருந்தோம். அதனால் தான் முன்பு இருந்த அரசாங்கம் இதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு நிபுணர் குழுவை நியமித்தது. அந்தக் குழுவினர்தான் அதைப் பரிசீலனை செய்து அதை விற்றுவிடலாம் என்று தெரிவித்த தன்பேரில் விற்பதற்கு டெண்டர் கோரப்பட்டது. தனிப்பட்டவர் களிடம் விற்காமல் இன்னொரு மாநிலத்திற்காவது அளிக்கக் கூடாதா என்றார்கள். நேற்றையதினம் திரு. தங்கமணி அவர்கள் பஞ்சாப் மாநிலம் 42 லட்சத்திற்கும் அதிகமாக வாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தார்கள் ஏன் அவர்களுக்கு விற்று இருக்கக்கூடாது என்று குற்றம் சாட்டிப் பேசினார்கள். அப்போதே மறுத்தேன். மறுத்தவுடன், "நீங்கள் எல்லாம் குற்றமற்றவர்கள், நல்லவர்கள்" என்று கேலிப் பேச்சாகப் பேசி நேற்றும் சரி, இன்றும் சரி முடித்து விட்டார்கள். 9-7-1970-ல் பஞ்சாப் மின்வாரியம் எழுதிய கடிதம் இதுதான்.

The offer of Rs. 40 lakhs was made on behalf of our Board. However, as a matter of compromise, an agreed figure

of Rs. 42 lakhs had been adopted subject to conformation by the Board on either side.

என்பதாக முதலில் 40 லட்சத்திற்குக் கேட்டவர்கள் பிறகு 42 லட்சத்திற்கு ஒத்துக்கொண்டார்கள். பின்னர் 6-8-1971-இல்

I regret to say the Board gave a second look to your offer and have decided not to proceed with it further.

என்பதாக எழுதிவிட்டார்கள். இது அவர்களது இரண்டாவது கடிதம். இதைவிட இவர்களுக்கு என்ன விளக்கத்தை நான் அளிக்க முடியும் என்று தெரியவில்லை. ஆகவே, அதை நான் அந்த அளவோடு விட்டுவிடுகிறேன்.

Dr. H. V. HANDE : The Hon. Chief Minister said that the report had asked the Government to sell the Samayanallur plant. It is not so. I shall quote from the report.

"The possibility of utilising the equipment and building after closure should be examined."

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரே ஒரு விஷயம் என்னவென்றால் 59 லட்சத்திற்கு விற்றதாகச் சொல்கிறார்கள். ப்ளோர் ப்ரைஸ் 1 கோடி என்று வைத்து விற்க முயன்றிருந்தால்...

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒருவேளை திரு. தங்கமணி அவர்கள் அமைச்சராக இருந்திருந்தால் அப்படி 1 கோடி ப்ளோர் ப்ரைஸ் என்று வைத்து நல்ல விலைக்கு விற்றிருக்கக்கூடும். அவரது வியாபாரத்திறமை எங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் புக் வால்யுவை சட்டப்படி நிர்ணயித்து விற்பனை செய்துவிட்டோம். எங்களால் சட்டப்படி நடக்க முடியுமே தவிர தங்கமணி சொன்னது போல குத்துமதிப்பாக வைத்து வியாபாரம் செய்ய இந்த அமைச்சர்களால் முடியாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் மின்சாரப் பற்றாக்குறை ஏன் ஏற்பட்டது என்பதற்கான விளக்கங்களைத் தரும்பொழுது - நமக்கு இந்த நிலைமை ஏற்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் தென்மேற்குப் பருவ மழை சரிவர இல்லாததுதான் என்பதை உணர வேண்டும். குந்தா, பரம்பிகுளம்,

ஆளியாறு, பைக்காரா ஆகிய நீர் நிலையங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது. எந்த அளவுக்குக் குறைந்தது என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். சென்ற ஆண்டு குந்தாவில் 87,860 லட்சம் கன அடி தண்ணீர் இருந்தது. நடப்பு ஆண்டில் 1,550 லட்சம் கன அடி ஆகக் குறைந்திருக்கிறது. பரம்பிக்குளம் - ஆளியாற்றில் சென்ற ஆண்டு 54,240 லட்சம் கன அடியாக இருந்தது நடப்பு ஆண்டில் 15.5 லட்சம் கன அடியாகிவிட்டது. பைக்காராவில் சென்ற ஆண்டு நீர் அளவு 29,400 லட்சம் கன அடி. நடப்பு ஆண்டில் அங்குள்ள நீரளவு 5,270 லட்சம் கன அடி. ஆக, 1972-ல் இந்த மூன்று நிலையங்களிலும் நாள் ஒன்றுக்கு சுமார் 80 லட்சம் யூனிட் மின்சாரம் தயாரிக்க முடிந்தது. 1973-ஆம் ஆண்டு மார்ச்சில் நாள் ஒன்றுக்கு 5 லட்சம் யூனிட் மட்டும்தான் உற்பத்தி செய்ய இயலும். டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். மற்றவர்களும் கேட்டார்கள்.

இதையே நம்பியிராமல் நாம் அனல் மின்சாரம், அணு மின்சாரம் ஆகியவைகளிலே போதிய கவனத்தைச் செலுத்தியிருக்க வேண்டாமா, அதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டாமா, இரண்டாவது நெய்வேலிச் சுரங்கத்தைத் துவங்குவதற்கு வற்புறுத்தியிருக்க வேண்டாமா, என்று, வேண்டாமா என்று கேட்பதிலிருந்து இந்த அரசு எதையும் செய்யவில்லையென்று அவர்கள் சொல்வதாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

1965-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள், அப்பொழுது பிரதம அமைச்சராக இருந்த திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அப்பொழுது மத்திய அரசு இந்த அரசுக்கு அளித்த பதில், "தென் பிராந்தியத்தில் செயல்படப் போகும் பல மின்சாரத் திட்டங்கள் அளிக்கும் மின்சக்தியே போதுமானது" என்பது. பிறகு, இந்த அரசு 1968-ம் ஆண்டு நவம்பரில் மத்திய அரசினுடைய திட்டக் குழுவுக்குக் கொடுத்த ஐந்தாண்டுத் திட்ட வரைவில், கல்பாக்கம் அணு மின்சார நிலையம் 200 மெகாவாட்டிலிருந்து 400 மெகா வாட்டாக

உயர்த்தப்பட வேண்டும் என்றும், தூத்துக்குடியிலே ஒரு அனு மின்நிலையமும், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கமும் ஏற்படுத்த வேண்டுமென்றும் இந்த அரசு வலியுறுத்தி யுள்ளது. 1968-ஆம் ஆண்டு நவம்பரிலே திட்டக் குழுவுக்குக் கொடுத்த ஐந்தாண்டுத் திட்ட வரைவிலே நாம் இதை வலியுறுத்தி யிருக்கிறோம். இந்த வரைவு சட்டப்பேரவையிலே வைக்கப் பட்டதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அதைத் தொடர்ந்து 1969-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் தேதி நான், நமது தலைமையமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதிலே குறிப்பிட்டேன்.

"The development of a second mine cut at Neyveli has been engaging the attention of both the Central and State Governments for some time now. This is another case of a project, the feasibility and need of which has been fully established. I would like to draw your attention to the need to provide for this too in the Fourth Plan".

என்று எழுதினேன். அதற்குப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில் என்ன குறிப்பிட்டார்கள் என்றால்,

"The continuing constraint on our resources makes this doubly difficult. When the time comes to decide on the creation of additional steel capacity, the points made in your letter will naturally be taken into account. On similar considerations, a decision on the second mine cut at Neyveli, as you will appreciate, will also have to wait."

என்று பிரதமர் அவர்கள் எனக்குப் பதில் எழுதினார்கள்.

அது மாத்திரமல்ல, நான் இன்னும் ஒன்றையும் ஞாபகப் படுத்த விரும்புகிறேன், மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு. இதே அவையில், 1969-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26-ஆம் நாள், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய வரைவு, நம்முடைய சட்டமன்றத்திலே விவாதித்து, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்திலே என்ன

குறிப்பிட்டோம்? மத்திய அரசுக்கு அந்தத் தீர்மானத்தை அனுப்பி வைத்தோம்.

"In particular, this House urges that the Government of India should proceed immediately with the implementation of the following Central Sector Projects, the economic viability and technical feasibility of which have been well established :-

1. Salem Steel Plant;

2. Sethusamudram Project;

3. Second mine-cut at Neyveli;

4. Expansion of the installed capacity of the Kalpakkam atomic energy Plant.

என்ற இந்தத் தீர்மானத்தை இதே சட்டமன்றப் பேரவையிலே நாம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம்.

அது மாத்திரமல்ல, 1970-ஆம் ஆண்டு தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசியபொழுது, நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். 1972-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் திரு. மோகன் குமாரமங்கலம், திரு. சி. சுப்பிரமணியம், டாக்டர். கே. எல். ராவ், ஆகியோர்களுக்கு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதான அவசியத்தை வலியுறுத்தி வற்புறுத்தி அரசின் சார்பிலே நான் ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் அளித்த திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் இரண்டாவது நிலக்கரி சுரங்கத்தைக் குறித்து பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக் கிறார்கள் என்று பதில் கடிதத்திலே தெரிவித்திருக்கின்றார்.

மத்திய திட்ட அமைச்சர் திரு. தார் அவர்கள் 1972-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இங்கே வந்தார்கள். திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், அக்டோபர் மாதத்திலே முதலமைச்சருக்கு அவருடைய "பவரை"ப் பற்றித்தான் கவலை இருந்ததே தவிர, இந்த "பவரை"ப் பற்றிக் கவலை இல்லை என்று. அதற்காகத்தான் நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன். திரு. தார் அவர்கள் அக்டோபர் மாதம் இங்கே வந்தபொழுது,

அவரிடத்திலே கொடுக்கப்பட்ட அறிக்கையிலே நான் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்தேன்.

"In respect of Neyveli, it is found, that the quantity of lignite mined, is not adequate, to utilise the capacity already installed, due to various factors including in particular the adverse ore-overburden ratio. It is learnt, that some immediate steps are under examination, to enable Neyveli Lignite Corporation, to run the plant atleast to 400 M.W capacity. In addition to such steps, work on opening the second mine cut has to be initiated early, in order to utilise the capacity already created, and also to tide over the perennial power shortage."

என்று அந்த அறிக்கையிலே குறிப்பிட்டு திரு. தார் அவர்களிடத்திலே அதைப்பற்றி நீண்டநேரம் நாங்கள் கலந்துரை யாடியிருக்கிறோம். மத்திய அரசு ஒன்றை மறந்துவிடக் கூடாது. தொழில் வளர்ச்சியிலே மாநிலங்கள் முன்னேற வேண்டுமென்று திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்தில் அந்தத் தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே மத்திய அரசு போதிய அக்கறை செலுத்தவில்லையென்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டாகும். மத்திய அரசைக் கேட்கவில்லை, கேட்கவில்லை என்று கூறிவிட்டால் மாத்திரம் போதாது. மாநில அரசு தானாக முன்வந்து இங்கே ஒரு மின்சார உற்பத்தி சாதனத்தை உருவாக்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறதா யென்பதை மாநில அரசைக் குற்றம் சாட்டுகிற நேரத்தில், தொழில் அதிபர்களானாலும் அல்லது மாண்புமிகு மாற்றுக் கட்சி உறுப்பினர்களானாலும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

இன்றைக்கு போடப்பட்டிருக்கின்ற திட்டங்களின்படி, 1983-84-லே கூட நம்முடைய மாநிலத்திற்கு 1,500 மெகாவாட் உற்பத்தி பற்றாக்குறையாக இருக்கும் என்றுதான் கணக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. நாம் போட்டிருக்கிற திட்டங்களை யெல்லாம் நிறைவேற்றிவிட்டாலும்கூட, வளரக்கூடிய தொழில்

உற்பத்தியில் 1983-84-ம் ஆண்டு 1,500 மெகாவாட் குறைவான தாகத்தான் நம்முடைய மின் உற்பத்தி இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவேதான் மத்திய அரசு இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்யவேண்டும்.

ஆளுநர் உரையிலே, நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுவதை இப்பொழுது ஆரம்பித்தாலும் முடிக்க 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று குறிப்பிட்டதை அம்மையார் அவர்கள் கேலியாகச் சொன்னார்கள். இப்பொழுது ஆரம்பித்தாலும் 8 ஆண்டுக்காலம் ஆகும், அதுவரையிலே இந்த மின் வெட்டினால் பாதிக்கப்படுபவர்களுடைய கதி என்ன என்று கேட்டார்கள். இப்பொழுது ஆரம்பித்தால் 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று சொன்னதற்குக் காரணம், 1965-லே இந்த அரசு நினைவூட்டியதை - பக்தவத்சலம் அவர்களுடைய காலத்திலே - இப்பொழுதே ஆரம்பித்திருந்தால் இப்பொழுது இந்தக் கஷ்டம் நமக்கு ஏற்பட்டு இருக்காது என்பதைச் சொல்லத் தான் கவர்னர் அவர்கள் இப்பொழுது ஆரம்பித்தாலும் 8 ஆண்டுக்காலம் ஆகும் என்று சொல்லியிருக்கின்றார்.

1964-ல், 1965-ல் பிறகு 1967-ல் நாம் நினைவூட்டிய நேரத்திலேயெல்லாம், பலமுறை வற்புறுத்திய நேரத்திலெல்லாம் மத்திய அரசு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்திற்கு ஒப்புதல் அளித்திருக்குமேயானால், கொஞ்சம் காத்திருங்கள் என்று சொல்லாமல், பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து வருகிறார்கள் என்று கூறாமல், இப்பொழுது இருக்கிற நிதிக் கஷ்டத்திலே இதைப்பற்றி யோசிக்க முடியாதென்று தட்டிக் கழிக்காமல், மத்திய அரசு இப்படிப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கு அனுமதி வழங்கியிருக்குமேயானால் - இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்காது என்பதற்காகத்தான் நெய்வேலி இரண்டாவது சுரங்கம் உருவாவதற்கு இப்பொழுது தொடங்கினாலும் 8 ஆண்டுக் காலம் ஆகும் என்று ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆகவே, மின்சாரத்திலே மேலும் வெட்டு வருவதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். அதை எப்படி யோசிக்கப்போகிறோம், அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசிக்கப் போகிறோமா என்று திரு. பழனிச்சாமி அவர்கள் கேட்டார்கள். இப்போது அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய அபிப்பிராயங்களை இந்த மாமன்றத்திலே பெற்றிருக்கிறோம். பேரவையிலே பெற்றுக் கொண்டிருக்கிறோம். மேலவையிலேயும் அனைத்துக்கட்சித் தலைவர்களுடைய கருத்துக்களையும் பெறுகின்ற வாய்ப்பை உடையவர்களாக இருக்கிறோம். இன்னும் எதிர்பாராமல் உ.றுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, போர்க்கால வேகத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற சங்கடம் வருமென்றால், அந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரையும் அலட்சியப் படுத்தி விட்டு இந்த அரசு தன்னுடைய காரியங்களிலே செல்லாது என்பதை மாத்திரம் நான் இந்த அவைக்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்வேன், தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வேன். இந்த நெருக்கடியான நிலை நாமாக வரவழைத்துக் கொண்டது அல்ல. இயற்கையாக ஏற்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட நிலைமை வருமென்று தெரியாததாலோ என்னவோ மத்திய அரசும் நாம் வேண்டுகோள் விடுத்த நேரத்திலேயெல்லாம் காலதாமதம் செய்துவிட்டது. மாநில அரசு தன்னுடைய வேண்டுகோளை வைக்க என்றைக்கும் தவறியதில்லை. சுட்டிக் காட்டவும் தவறியதில்லை; நிலைமையை விளக்கத் தயங்கியதில்லை. அப்படியிருந்தும் எதிர்பாராத சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருக்கிற நேரத்திலே அனைவரும், எல்லாக் கட்சிக்காரர்களும், பொதுமக்களும், தொழிலாளர்களும், அனைவரும் கலந்து அரசோடு இந்தக் காரியத்திலே ஒரு தியாகத்திற்குத் தயாராகத்தான் இருக்க வேண்டுமென்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

பல்வேறு பிரச்னைகள் இந்த மன்றத்திலே பேசப் பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் நான் தனித்தனியாகப் பதில்

சொல்வதற்கான நேரம் இல்லையென்றே கருதுகின்றேன். பொதுவாக, திண்டுக்கல் இடைத்தேர்தலைப் பற்றிக் கடைசியாகப் பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் உட்பட பல மாற்றுக்கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திண்டுக்கல்லிலே யார் வெற்றிபெறுவார்கள், யார் தோற்பார்கள், தேர்தல் முடிவு என்ன என்பதைப்பற்றியெல்லாம் கூட இங்கே பேசி முடித்து ஆகிவிட்டது. நான் அங்கே செல்ல விரும்பவில்லை. (அங்கே என்றால் திண்டுக்கல்லுக்கு அல்ல.) இங்கே அந்தப் பிரச்னைக்குச் செல்லவில்லை. திண்டுக்கல் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிடும், அங்கே மக்கள் சக்தியே கிடையாது தி. மு. க. வுக்கு என்று பேசப்பட்ட காலம் போய் இப்பொழுது திடீரென்று, திண்டுக்கல்லிலே ஏதோ கள்ள ஓட்டுச் சேர்த்துவிட்டார்கள், கள்ள ஓட்டுச் சேர்த்து விட்டார்கள் என்று பத்திரிகைகளிலே வருவதைப் பார்க்கிற நேரத்தில் அங்கே இருக்கின்ற ஒரு மறவர் குலத்துத் தோழனைச் சந்தித்தால் அவர் ஆம், கள்ள ஓட்டுத்தான் சேர்த்து இருக்கிறோம் என்று சொன்னார். அந்த சிலேடை எனக்கு முதலிலே புரியவில்லை. பிறகுதான் எனக்குப் புரிந்தது. பிறகு நானே சிரித்துக்கொண்டேன்; அதை நான் இந்த அவையிலே விளக்குவது நல்லதல்லயென்கிற காரணத்தினால் - ஏதோ 50 ஆயிரம் ஓட்டு, ஒரு லட்சம் ஓட்டு சேர்க்கப்பட்டுவிட்டது என்றெல்லாம் கூறப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கள்ளர்கள் ஓட்டுக்கும் கள்ள ஓட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டிற்கும் சிலேடை பேசி அந்த இனத்தின் பெருமையைக் குறைக்கக் கூடிய அளவுக்குப் பேசுவது நியாயமல்ல.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்த இனமே என்னை வாரிசாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள், அந்த இனத்தோடு கலகம் மூட்டுகிற முயற்சியில் தோல்வியடைந்து விடுவீர்கள். 1971-ஆம் ஆண்டு சுருக்கமுறையில் வாக்காளர் பட்டியலைத் திருத்திய பின் திண்டுக்கல் தொகுதியில் வாக்காளர் களுடைய கணக்கு 6,31,308 ஆகும். இராசாங்கம் அவர்கள் மறைந்ததும் இன்றைக்கு அதிகாரிகள் சென்று வாக்காளர்களைப்

பற்றிய விவரங்களைச் சேகரிப்பார்களே அந்த முறைப்படி சேர்ந்துள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 5,666 ஆகும். அன்று இருந்த வாக்காளரின் எண்ணிக்கை 6,31,308, ஆனால் இப்பொழுதிருக்கிற நிலைமை 6,36,974. ஆக, 5,666 தான் அதிகம். பிறகு தொகுதிவாரியாக வாக்காளர்கள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள்.

திருமங்கலம் சட்ட மன்றத் தொகுதியில் பிறகு சேர்க்கக் கோரிய வாக்காளர்கள் 1,180; உசிலம்பட்டி சட்ட மன்றத் தொகுதியில் 988; நிலக்கோட்டை சட்ட மன்றத் தொகுதியில் 1,574; சோழவந்தான் சட்ட மன்றத் தொகுதியில் 3,489; திண்டுக்கல் சட்ட மன்றத் தொகுதியில் 2,438; ஆத்தூர் சட்ட மன்றத் தொகுதியில் 1,893; மொத்தம் பிறகு சேர்க்கக் கோரிய வாக்காளர்களின் எண்ணிக்கை 11,562 ஆகும். இதிலே, ஆட்சேபம் தெரிவித்து வந்த மனுக்கள் 303. இதுதான் இருக்கின்ற விவரம்.

இந்த நிலையில் 50 ஆயிரம் சேர்த்துவிட்டார்கள், 1 லட்சம் சேர்த்துவிட்டார்கள், மத்திய தேர்தல் அதிகாரியே வந்து தேர்தல் நடத்த வேண்டும், பயங்கர ஊழல்கள் நடந்துவிட்டன, பெரிய போராட்டம் நடத்துவோம் கிடு கிடு போராட்டம் நடத்துவோம் என்றெல்லாம் சொல்வது - உள்ளபடியே தமிழ்நாட்டிலே நாம் வளர்த்து வருகின்ற ஒரு அரசியல் மரபுக்கு நாமே இழுக்குத் தேடுகிற சூழ்நிலையை உண்டாக்குகிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சுவாமிதாஸ் அவர்கள் - கன்னியாகுமரி மாவட்டத் தினுடைய மாண்புமிகு உறுப்பினர் - ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அங்கே தச்சம்பறம்பு என்ற ஒரு ஊரில் 3½ லட்சம் ரூபாய் அளவுக்குத் தேவையின்றி செலவு செய்துவிட்டார்கள். அது, முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவருடைய ஊர். ஆகவே செலவு செய்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். நிலைமையென்ன வென்றால் இந்திய நாட்டினுடைய விடுதலை வெள்ளி விழாவைக் கொண்டாடு வதற்காகத் தமிழ்நாட்டில் இருக்கின்ற 374 ஊராட்சி ஒன்றியங்களும் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளவர்கள் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அதை நல்ல கிராமமாகச் செம்மை யான கிராமமாக தூய்மையான கிராமமாக ஆக்குவதற்கு முனைய

வேண்டுமென்று இந்திய அரசு மாநில அரசின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதற்கு ஏற்ப தமிழ்நாட்டில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் 374 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. எப்படி அங்கே தச்சம்பறம்பு என்ற கிராமன் தேர்ந்தெடுக்கப்பட்டதோ, அதைப்போலவே கன்னியா குமரி மாவட்டத்தில் ஒன்பது கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் என்றே நான் கருதுகிறேன். அப்படி அகஸ்தீசு வரத்திலே, முன்னேற்றக் கழகத்தின் தலைவர் இல்லாவிட்டாலும், அங்கேயும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சொன்னார் 3 லட்சம் ரூபாய் திட்டம், 44 ஆயிரம் ரூபாய் செலவாகி விட்டது என்று. உண்மை என்னவென்றால் திட்டம் 77,000 ரூபாய்தான். இன்னும் மத்திய அரசிடமிருந்து அதுபற்றிய தாக்கீது எதுவும் வராத காரணத்தினால் அந்த வேலையே ஆரம்பிக்கப்படவில்லை, எதுவும் செலவு செய்யப்படவில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தச்சம்பறம்பு என்ற கிராமத்தில் 235 பேர்கள்தான் வாக்காளர்களாக இருக்கிறார்கள். அது ஒரு சிறு கிராமமாக இருக்கிறது. திராவிட முன்னற்றக் கழகத்தினைச் சார்ந்த சேர்மன் இருக்கிறார் என்ற காரணத்தினால் தான் அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. 10 ஆயிரம் பேர்களுக்கு மேல் இருக்கிற பெரிய கிராமங்கள் எல்லாம் இருக்கிறபோது, ஏன் இதைத் தேர்ந்தெடுத்தார்கள்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்தக் கிராமத்தில் 235 பேர்கள் இருப்பதாகத் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் எனக்கு வந்திருக்கிற தகவல் 2,074 பேர்கள். எது சரியென்று பிறகு சரிபார்த்துக் கொள்கிறேன். அங்கே மக்கள் தொகை 2,074 பேர்கள் என்றும், அதிலே 80 சதவிகிதம் பேர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கின்றனர் என்றும் தகவல் வந்திருக்கிறது. நான் இப்போதே வாதிட விரும்ப வில்லை; எது சரி என்று நானும் விசாரிக்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் விசாரிக்கவேண்டும். பிறகு கிடைக்கும் தகவலை ஒருவரோடொருவர் பரிமாறிக்கொள்வது நல்லது. 42 ஆயிரம்

ரூபாய் செலவாகிவிட்டது என்று சொன்னார்கள். இன்னும் ஒரு பைசா கூடச் செலவாகவில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. தங்கமணி அவர்கள், இங்கே சோஷலிசத் திட்டங்கள் எதுவும் நிறைவேறவில்லை, எல்லாத் திட்டங்களையும் "கேரளாவில்தான் நிறைவேற்றுகிறோம், இங்கே தனியார்களை வளர்க்கிறீர்கள்" என்றெல்லாம் சொன்னார்கள். பஸ்களைத் தேசீய மயமாக்கிய நேரத்திலேகூட ஏதோ டி.வி. எஸ். க்குக் கொடுத்ததைவிட ஏ.பி,டி.-க்கு அதிகமாகக் கொடுத்து விட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். டி.வி.எஸ். கம்பெனியின் பஸ்கள் "பார்க்கோ" இயந்திரங்கள். ஆனால் ஏ. பி. டி. யின் இயந்திரங்கள் உயர்ந்தவைகள். பென்ஸ் வண்டிகள், அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று, டி.வி.எஸ்.க்குக் கொடுத்த இழப்பீடு 1,25,42,741 ரூபாய். அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்று சொல்லக்கூடிய ஏ.பி.டி.-க்கு கொடுத்து இருப்பது 56,82,378 ரூபாய். 346 வண்டிகள் டி.வி.எஸ்- இடமிருந்து எடுக்கப்பட்டன. அந்த 346 வண்டிகளில் "பார்க்கோ" வண்டிகள் அதிகம். ஏ.பி.டி.-யிடமிருந்து எடுக்கப்பட்ட 112 வண்டிகளில் பென்ஸ் வண்டிகள் பெரும்பான்மையான வண்டிகள். இந்த விளக்கத்தை நான் அவர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஒரு கோடி 25 லட்சம் ரூபாயில் பிராவிடண்ட் ஃபண்ட் மற்றவைகள் போக ஒரு கோடிக்கும் கம்மியாகக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கேரள மாநிலத்திலேதான் பொதுத்துறை வேகமாக வளர்கிறது, தனியார் துறை இல்லை, ஆனால் இங்கேதான் தனியார் துறை வளர்க்கப் படுகிறது என்ற போக்கிலே சில கருத்துக்களைச் சொன்னார்கள். கேரளாவில் பிர்லாவின் தொழிற்சாலை வர வேண்டுமென்று வரவேற்பு கொடுத்துவந்து அங்கே பிர்லாவின் தொழிற்சாலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அதுமட்டுமல்ல, "சில்க் பேக்டரி" ஒன்றை நடத்தி வருவதும் தனியார் நிறுவனம்தான். டியூப் லைட் செய்கின்ற Toshiba-Anand என்ற பெயரில் ஒரு தனியார் நிறுவனம் சமீப காலத்தில் தொழில் தொடங்கி நடத்தி வருகிறது என்பதையும் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அது மாத்திரமல்ல, "பிரிமீயர் டயர்ஸ்" என்ற ஒரு குஜராத்தி நிறுவனம் எர்ணாகுளத்தின் அருகே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியுள்ளது. கேரளத்தில் பல கயிறு தொழிற்சாலைகள் தனியார் துறையில்தான் இப்போதும் உள்ளன. எனவே, கேரளாவில் தனியார் துறை முழுவதையுமே தேசீய மயமாக்கிவிட்டார்கள் என்று கூறுவது பொருத்த முடையதல்ல என்பதற்காகத்தான் நான் இதை எடுத்துச் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் பேச்சிலே பெரும் பகுதி, ஆளுங்கட்சி இரண்டாகப் போய்விட்டது என்பதைப்பற்றிய கவலையை உள்ளடக்கியதாக இருந்தது. மற்றக் கட்சிகள் இரண்டாகப் போனபோது நாங்கள் போய்ச் சேரவில்லை, ஆனால் ஆளுங்கட்சி இரண்டாகப் போனபிறகு நாங்கள் ஏன் போய்ச் சேர்ந்தோம் தெரியுமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். இங்கே ஆளுங்கட்சி இரண்டாக ஆகிவிட்டது, ஆகவே போய்ச் சேர்ந்தோம் என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அதிர்ஷ்டக்காரர், அவர்கள் இங்கே வராவிட்டாலும், அவரைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதற்கு அவருடைய கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ.க்கள் இங்கே வராவிட்டாலும், அவ்வளவு பேருடைய பொறுப்பையும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக்கொண்டு, எம். ஜி. ஆர். அவர்களுடைய சிலாக்கிய குணங்களை, அவருடைய தியாகத்தை, அவருக்கு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்ற சக்தியை, பெருமையை, செல்வாக்கை இங்கே எடுத்துச்சொன்னதற்காக உள்ளபடியே என்னுடைய பழைய நண்பர் என்ற பெயரால் எம். ஜி. ஆர். அவர்களின் சார்பாக என்னுடைய பணிவன்பான நன்றியைத் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

எவ்வளவோ அதிகமாகச் சொல்லியிருக்கின்றார்கள். காந்திக்குக் கூட இவ்வளவு கூட்டம் வந்ததில்லை என்று

கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசியதை நான் பத்திரிகைகளில் படித்தேன். என்னென்னவோ நடந்து விட்டது என்றெல்லாம் சொன்னார்கள். இந்த இரண்டு, மூன்று மாத காலங்களில் நாடே அல்லோகல்லோலப் பட்டுவிட்டது என்று சொன்னார்கள். நான் இல்லை என்று அதை மறுக்கவில்லை.

அன்றைக்குப் பேசிய திரு. சுவாமிதாஸ் அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஏறிச்சென்ற ஒரு பஸ்ஸை வழியிலே அ.தி.மு.க. உறுப்பினர்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மறித்தார்கள் என்றும், பிறகு நிறுத்திவிட்டார்கள் என்றும், ஏன் பஸ்ஸை நிறுத்திவிட்டீர்கள் என்று டிரைவரையும், கண்டக்டரையும் கேட்ட போது, நிறுத்தாவிட்டால் அடிப்பார்கள், பஸ்ஸை கொளுத்தி விடுவார்கள் என்றும் சொன்னார்கள் என்ற தகவலை நம்முடைய திரு. சுவாமிதாஸ் அவர்களே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதை நான் சொன்னால் ஏதோ ஸ்தாபன காங்கிரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மறைமுகமான ஒரு உறவு இருப்பதாக யாரும் பழிக்கக்கூடும். அதற்காகவே நிரம்ப அதிக மாகத் தாக்குகிறார்கள். காமராஜ் அவர்களை நான் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, என் வீட்டுத் திருமணத்தில் தவிர வேறு எந்த இடத்திலும் சந்தித்ததும் கிடையாது, பேசியதும் கிடையாது. ஆனால், காமராஜர், கருணாநிதிக்கு அண்ணன் – இது புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திட்டவட்டமான அறிவிப்பு. எதிலே? ஊழலில். கருணாநிதி ஊழலிலே தம்பி, காமராஜர் கருணாநிதிக்கு அண்ணன். வேடிக்கை என்னவென்றால் அவர் உங்களைப்பார்த்து ஊழல் மன்னர்கள் என்று சொல்கிறார். நீங்கள் எங்களைப் பார்த்து ஊழல் மன்னர்கள் என்கிறீர்கள். இப்படி ஒருவருக்கொருவர் ஊழல் மன்னர்கள், ஊழல் மன்னர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு நடந்த வேடிக்கை என்னவென்றால் கே.டி.கே. தங்கமணி அவர்கள் கடைசியாக பன்சிலால் ஒன்றாம் நம்பர் ஊழல் மன்னர் என்று சொல்லிவிட்டார். அதை நம்முடைய ஆளும் காங்கிரஸ் கட்சிக் காரர்கள் காதாரக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அதை நான் கவனித்தேன்.

ஆகவே, இப்படி ஒருவருக்கொருவர் ஊழல் மன்னர்கள், ஊழல் மன்னர்கள் என்று கூறிக்கொண்டிருப்பது பொருத்தம்

தானா? இது எங்கே கொண்டுபோய்விடும்? காமராஜரே சொல்லி யிருக்கிறார் என்று புத்தகத்தைப் படித்துக் காட்டினேனே, இன்னொருவரைப் பார்த்து ஊழல் பேர்வழி என்று சொல்பவர்தான் சரியான ஊழல் பேர்வழி என்று காமராஜரே சொல்லியிருக்கிறாரே, அந்தப் பெருந்தலைவரின் பொன் மொழியை, எதை ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளா விட்டாலும் இதை ஏற்றுக்கொள்ள வேண்டாமா? அவரையும் ஊழல் பேர்வழி என்று சொல்லி, எங்கள் அண்ணாவையும் சேர்த்து எம்.ஜி.ஆர் அவர்கள் சொன்னார்கள். இராஜாஜியிடத்தில் நான் கேட்டபொழுது, "நீ, இந்த ஊழல் ஒழிப்பு இயக்கத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பித்திருக்க வேண்டும்" என்று இராஜாஜி அவர்கள் சொன்னார்களாம். இராஜாஜி அவர்கள் அப்படிச் சொன்னாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் பத்திரிகைகளிலும், இராஜாஜியின் மறைவுக்குப் பிறகு வானொலியிலும் சொன்னார்கள். இராஜாஜி அவர்கள் அப்படிச் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அவர்கள் மறத்துக்கூட இருக்கலாம். ஆனால் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இராஜாஜி மறுத்த பிறகும், அவர்கள் மறைந்தபிறகும் சொன்னார்கள். இதை பத்தாண்டு காலத்திற்கு முன்பே ஆரம்பித்திருக்க வேண்டுமென்றால், காமராஜர் காலத்திலிருந்து, பக்தவத்சலம் காலத்திலிருந்து, அறிஞர் அண்ணா காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் ஊழல் நடந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டதைப்போல எம்.ஜி.ஆர். அவர்கள் பல அறிக்கைகளிலே சொல்லி இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர், ஊழல், ஊழல் என்று பேசிக் கொண்டேயிருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

கமிஷன் வை, கமிஷன் வை, கமிஷன் போடு, என்று யாரைப் பார்த்தாலும் கமிஷன் போடு கமிஷன் போடுஎன்று கேட்டால் நாங்கள் யாரிடத்திலேயிருந்து கமிஷன் வாங்கினோம்? வாங்கினால் அல்லவா கமிஷன் போட! (சிரிப்பு) கமிஷன் போடு கமிஷன் போடு என்றால் என்ன வேடிக்கை? விசாரணைக்குழு போடுவதற்கு மத்திய சர்க்காருக்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொல்லுகிறோம். அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொல்லுகின்ற நேரத்தில்.....

திரு. கே. டி. கே. தங்கமணி : இதேமன்றத்தில்தான் நீங்கள் சொன்னீர்கள், சான்றுகள் இருந்தால் சொல்லுங்கள்,

விவரங்கள் இருந்தால் சொல்லுங்கள், அப்படிச் சொன்னால் நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னீர்கள். ஆகவேதான் முறையாக, சட்டப்படி விவரங்களையெல்லாம் சேகரித்து இப்படிக் கமிஷன் போட வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் கொடுத்தோம். அதுதான் முறை. இல்லாவிட்டால் தெருவிலே நின்று பேசிக்கொண்டிருக்கலாம். முறையாகத் தயாரித்து மத்திய அரசுக்குக் கொடுத்தபிறகு மத்திய அரசை கமிஷன் போட வேண்டுமென்று கேட்கிறோம். இன்னமும் அப்படிச் சொல்லிக் கொண்டுதான் இருப்போம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதற்குப் பல முறை பதில் சொல்லியாகிவிட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி : விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். ஆனால் உங்கள் கட்சியிலே உள்ள அங்கத்தினர்கள் சொல்வது வேறு, அது வியாபாரிகள் சொல்லும் கமிஷன். அதை இதோடு சொல்வது எப்படிப் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பல விஷயங்கள் உங்களுக்குப் புரியாது. என்ன செய்வது?

விசாரணைக்குழு அமைப்பதற்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொன்னால் அதை - அண்ணா அவர்களுடைய பல பேச்சுகளை இங்கே எடுத்துப் படித்துக் காட்டிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு ஞாபகப் படுத்துவேன் - இந்தக் கருத்தை எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பிலே எழுதி யிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய உள்துறை அமைச்சராக இருந்த திரு. சவான் அவர்கள் "லோக்பால்" என்கின்ற அமைப்பை நிறுவிட எண்ணம் கொண்டு மாநில அமைச்சர்க ளிடத்திலே கருத்தையறிந்தார்கள். அப்பொழுது ஒரிசாவின் முதலமைச்சராக இருந்த சிங்தேவ் - சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர் - என்ன எழுதினார், சவான் அவர்களுக்கு, அறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த எங்கள் தலைவர் என்ன எழுதினார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அண்ணா சொன்னார்கள்.

'Constitutionally the Central Ministers are under the control of the Prime Minister and the State Ministers are under the control of the Chief Minister. The Chief Minsiter is independent of the Prime Minister and Home Minister. So the Chief Minister will be the authority of the State Ministers.'

இது அண்ணா சொன்ன கருத்து. அதே நேரத்தில் ஏப்ரல் 10-ஆம் தேதி 1968-ஆம் ஆண்டில் திரு. சவான் அவர்களுக்கு ஒரிசாவின் முதலமைச்சராக இருந்த சிங்தேவ் அவர்கள் எழுதினார்கள்.

'It may not be in keeping with the demands of Constitutional propriety that the observance of the code of conduct by the Chief Minister should be entrusted to the Prime Minister and the Union Home Minister.

In order to develop proper democratic practices the State Legislature should be the authority for enforcing the observance of the code of conduct by the Chief Minister in the same way as the Parliament is the authority for ensuring the observance of the code by the Prime Minister.'

"ஒரு அரசின் முதலமைச்சர் நெறிமுறைகளைப் பின் பற்றுவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பை, நாட்டின் பிரதமரோ, அல்லது உள்துறை அமைச்சரோ ஏற்றுக் கொள்வது என்பது அரசியலமைப்பின் அடிப்படைக்கு உகந்ததாகாது. அரசியல் நெறிமுறைகள் வழுவாமல் நாட்டின் பிரதமர் செயல் படுகிறாரா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு எப்படி நாடாளுமன்றத்திற்கு இருக்கிறதோ, அதைப் போலவே, ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் நெறிமுறைகள் வழுவாமல் நடக்கிறாரா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அதிகாரமும் படைத்தது அந்த மாநில சட்டமன்றந்தான். இதுதான் சிறந்த ஜனநாயகப் பண்புகளை வளர்க்க ஏதுவாக இருக்கும்" என்று ஒரிஸ்ஸா முதலமைச்சர் சிங்தேவ் அவர்கள் கடிதம் எழுதி திரு. சவான் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்.

பிறகு 23-3-1968-ல் அண்ணா அவர்கள் அமைச்ச ரவையைக் கூட்டி, அருமை நண்பர் மதியழகன் உள்ளிட்ட

அமைச்சரவையைக் கூட்டி, முடிவெடுத்தார்கள். அந்த முடிவை மத்திய அரசுக்கு அனுப்பினார்கள்.

'The Council have examined the suggestion in detail and have decided not to agree to it on various grounds including the ground that the institution of Lokpal as contemplated will impinge on the State's autonomy guaranteed by the Constitution.

அதுமாத்திரமல்ல. கடிதம் எழுதினார்கள் - 2-6-1968-ல் சவானுக்கு அண்ணா அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

"We feel that the setting up of a Lokpal as contemplated by A. R. C. would impinge on the State's Autonomy as envisaged in the Constitution ans as such we would advise against it."

என்று கடிதமே எழுதினார்கள். நாங்கள் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தினுடைய அடிப்படையில்தான் இன்றைக்கும் மத்திய அரசுக்கு அந்த உரிமை இருக்கிறதா என்ற கேள்விக் குறியை எழுப்புகிறோமே அல்லாமல் வேறல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுவேன்.

ஆகவே, மத்திய அரசு ஒரு விசாரணைக் குழுவைப் போட வேண்டும், போட வேண்டுமென்று சொல்லுவது - இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு உங்களுக்கு வெறுப்பாக இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். தங்கமணி அவர்களுக்கு இங்கே உட்கார்ந்திருக்கும் நாங்கள் பிடிக்காமல் பின்னால் இருப்பவர்கள் மீது புதிய ஆசை பிறந்திருக்கலாம். "கருணாநிதி சர்க்கார் ராஜினாமா செய்யட்டும்; கழக சர்க்கார் வரட்டும்" என்று அவர் சொல்லுகிறார். இந்த வேலை எல்லாம் நான் தெரிந்து கொள்ளாத வேலை அல்ல. இது எதற்காக நடைபெறுகிற முயற்சி என்பதை நான் புரிந்து கொள்ளாதவன் அல்ல, ஆகவே, கருணாநிதி இருப்பதா, நெடுஞ்செழியன் இருப்பதா, அன்பழகனா, நடராசனா, சத்தியவாணிமுத்தா, மற்றவர்களா என்பதை நிர்ணயிக்க வேண்டியவர்கள் எங்களுக்கு பின்னால் இருக்கின்ற 176 பேர்களே அன்னியில் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அல்ல.

இவர்கள் இந்தக் கட்சியினுடைய யோசனைகளை, கட்சித் தலைவர்களுடைய யோசனைகளை ஏற்பவர்கள். அதைப் போலவே கட்சியிலே இருக்கின்ற கீழ்மட்டத் தொண்டர்களிலே யிருந்து பொதுக்குழு, செயற்குழு அங்கே இருக்கும் ஜனநாயக முறைப்படி அந்த யோசனைகளைத்தான் நாங்கள் ஏற்பவர்களே தவிர வேறல்ல என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு வெறுப்பின் காரணமாக செய்து விடுகிறோம். இதையே ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டு வருங்காலத்தில் இந்தியாவிலேயே மத்திய அரசிலே ஒரு கட்சியும் மாநில அரசுகளில் வேறு கட்சியும் இருந்தால் அந்தக் கட்சியை மாநில அரசிலிருந்து துரத்துவதற்கு, விரட்டுவதற்கு நான்கு எம். எல். ஏ.-க்களைப் பிடித்து, இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிடித்து, "ஒரு புகார் கொடு உடனே விசாரணைக் கமிஷன் போடுகிறோம், உடனே ராஜினாமா செய்" என்று கிளர்ச்சி செய்து அங்கே அந்த அரசை ஒழித்து விடலாம், அழித்து விடலாம் என்ற மனப்பான்மை இன்றைக்கு இருக்கின்ற இந்திரா காந்திக்கு அல்ல - என்றைக்கோ அமைகின்ற மத்திய அரசுக்கு, அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சிக்கு ஏற்பட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

இவைகளைச் சொல்லுகின்ற காரணத்தினால் தவறுகள் நடைபெற வேண்டுமென்று நான் அனுமதிப்பவன் அல்ல. தவறுகள் நடைபெறுகிறது என்றால் அதற்குரியவர் யாராக இருந்தாலும், யார் அதைச் செய்தாலும், என் அண்ணன் தம்பியாக இருந்தாலும், பெற்ற பிள்ளையாக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன் என்பதைப் பலமுறை இங்கே சொல்லியிருக்கிறேன். என் உயிரனைய நண்பர்கள் மீதும் அப்படிப்பட்ட நடவடிக்கை களை மேற்கொண்டிருக்கிறேன் என்பதற்குப் பல்வேறு உதாரணங்களைக் காட்ட முடியும்.

அந்த அடிப்படையில்தான் நேற்று முன்தினம் அறிவித் திருக்கிறேன். பொதுவாழ்வில் ஈடுபட்டவர்கள் மீது குற்றங் குறைகள் சொல்லப்பட்டால், புகார்கள் சொல்லப்பட்டால் அதை

விசாரிப்பதற்கான ஒரு கமிஷனை மாநில அளவில் நியமிக்க ஒரு சட்டத்தை இந்த அவையிலே நாம் நிறைவேற்ற வேண்டும், அதைப் பற்றி அறிவிக்க இருக்கிறேன் என்று சொன்னேன். அதனுடைய சுருக்கத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு பொதுப்பணி ஆற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டம் என்ற பெயரில் சட்ட முன்வடிவு ஒன்று இன்று சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர், மாநகராட்சிகளின் நிலைக் குழு அல்லது இதர குழுக்களின் தலைவர், நகராட்சிகளின் தலைவர், துணைத்தலைவர், நிலைக்குழு அல்லது இதர குழுக்களின் தலைவர், ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர், துணைத் தலைவர், ஊராட்சி மன்றங்களின் தலைவர், துணைத் தலைவர், இதர குழுக்களின் தலைவர், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வருவார்கள். இவர்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டுகளை இந்தச் சட்டத்தின்கீழ் விசாரிக்கலாம். உயர்நீதிமன்ற நீதிபதித் தகுதியுள்ள நீதிபதி ஒருவர் நியமிக்கப்படுவார். இந்த நீதிபதிமுன் குற்றச்சாட்டுகளை யார் வேண்டுமானாலும் சமர்ப்பிக்கலாம். குற்றம் சாட்டுபவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

நீதிபதி விசாரித்துத் தரும் தீர்ப்பின்மீது அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும். லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்க இந்த அமைப்பு பயன்படும்.

இந்தச் சட்டம் இந்த அவையிலே விவாதிக்கப்பட இருக்கிறது. அதற்கு முன்பு பொறுக்குக் குழுவுக்கு விடலாம் என்ற நிலை இருக்கிறது. இதிலே வந்திருக்கிற இவ்வளவு பேரும் இடம் பெறலாமா, இன்னும் யாரையாவது இணைத்துக் கொள்ளலாமா என்பதையெல்லாம் செலக்ட் கமிட்டி ஆராய்ந்து விவாதித்து சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

ஆகவே, பொழுதுதோறும், பொழுதுதோறும் செய்ய வேண்டிய பல வேலைகளை விட்டுவிட்டு இதே வேலையில் எல்லோரும் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைச் சொல்லுகின்ற காரணத்தால் சில பேர் கவரப் படுகிறார்கள் என்று தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல் அவருக்கு மக்கள் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் நாம் நம்பத் தயாராக இல்லை. கிரிக்கெட் மாட்ச் பார்த்தோம். எல்லோரும்தான் பார்த்தோம். நானும் பார்த்தேன். நாவலரும் பார்த்தார். மற்ற அமைச்சர்களும் பார்த்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து கூடப் பார்த்தேன். அந்தக் கிரிக்கெட் ஆட்டத்திலே 11 பேர் ஆடுகிறார்கள். இரண்டு பேர் பாட் செய்கிறார்கள். பார்க்கின்ற ரசிகர்கள் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரே ஒரு ஆள் மாத்திரம் தினந்தோறும் பாவாடை கட்டிக் கொண்டு கையில் தகர டப்பாவை வைத்துக்கொண்டு ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான் ஐம்பதினாயிரம் ரசிகர்களும் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் துரதிருஷ்டிக் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்ப்பவர்கள் உட்பட கொஞ்ச நேரம் மாட்சைப் பார்த்து விட்டு கொஞ்ச நேரம் அந்தப் பக்கம் கண்ணைத் திருப்புகிறார்கள். அவன், எண்ணிக் கொள்வதா? அந்த ஐம்பதாயிரம் பேரும் ஆடுகின்ற சந்திரசேகரையோ, பிரசன்னாவையோ, பிளச்சரையோ, லூயிசையோ, பட்டோடியையோ கவனிக்காமல் என்னைத்தான் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவன் எண்ணிக்கொண்டால் எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனமாக இருக்கக் கூடும் என்பதை மாத்திரம் தெரிவித்து, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது கொடுக்கப்பட்ட திருத்தங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு ஜில்லாக்களில் இருந்து நூற்றுக் கணக்கான தந்திகள் வந்திருக்கின்றன. அவர்களுக்கு கரென்ட் நிரந்தரமாகக் கிடைக்கவில்லை. கிடைக்குமென்று வரையறுத்து இன்னும் சொல்லப்படவில்லை. ஆகவே, எப்போது அவர்களுக்கு பம்ப் செட்டுக்கு கரென்ட் கிடைக்கும் என்ற விவரத்தைக் கூறுவார்களா?

டாக்டர் எச். வி. ஹாண்டே : இரண்டு பிரச்சினை. தொழிலாளர்கள் "லே ஆஃப்"-ல் ஈடுபட்டிருக்கிறார்கள். கோவைப் பகுதியில் விவசாயிகளுக்கு கரென்ட் கிடைக்கவில்லை. முன்னறிவிப்பு இல்லாமல் கட் செய்கிறார்கள். இப்போது எப்படி மின்சாரத்தை விநியோகம் செய்கிறார்கள் என்று அறிவித்தால், விவசாயிகளுக்கு முன்கூட்டியே சொன்னால் சவுகரியமாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கிரிக்கட் பற்றிச் சொன்னார்கள். மாட்சில் 11 பேர் ஒரு நாள் பூராவும் ஆடுகிறார்கள், இரண்டு பேர் பாட் செய்கிறார்கள். மறுநாளும் இதே 11 பேரும் அங்கு காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை வைத்துக் கொண்டுதான் "இட் இஸ் நாட் கிரிக்கட்" என்று சொல்லுவார்கள். ஒருவருக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தை மற்றவர்களுக்கும் கொடுக்காது இல்லாதவர்களைப் பற்றிப் பேசுவது முறையா என்று பார்க்க வேண்டும். மேல்நாடுகளில் அதற்கு மாறாக "இட் இஸ் நாட் கிரிக்கட்" என்று சொல்லுவார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு கருணாநிதி : கிரிக்கட்டைப் பற்றிப் பேசியதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. சில அரசியல் கிறுக்கர்களைப் பற்றிச் சொன்னேன். அவ்வளவுதான்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் முக்கியமான ஒரு பிரச்சினையைப் பற்றிக் கேட்டார்கள். தங்கமணி அவர்களுக்கு அது முக்கியமானதாகத் தோன்றவில்லை. விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் மின்சாரம் தரப்படுகிறபோது திடீரென்று நின்றுவிடுவது பற்றிக் கூறினார்கள். அது பற்றி நான் கலந்து பேசி கவனம் செலுத்துகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் இதுபோன்ற குற்றங் குறைகளை எடுத்துக் கூறினால் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்போம் என்று இந்த மன்றத்தில் உறுதியளிக்கிறேன்.

*

உரை : 11 நாள் : 28.01.1974

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது ஏழு நாட்களாக நடந்து வந்துள்ள விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற வகையில் நான் இந்த மன்றத்தில் நிற்கின்றேன்.

காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு தலைவர் அவர்களும், மற்றும் வேறு கட்சிகளுடைய தலைவர்களும் கவர்னரின் உரை மீதான விவாதத்திலே பேசி முடிக்கிற நேரத்தில், ஒவ்வொரு உரையிலும் அவர்கள் கடைசியாக வைத்திருக்கிற முத்தாய்ப்பு, நாங்கள் செய்ய வேண்டிய ஒரு பெரும் சாதனை பதவியைவிட்டு விலகுவதுதான் என்பதாகும். பதவியில் இருந்து விலகுங்கள் என்பது கடைசி வாசகமாகும். அது ஒருவேளை இந்தத் தடவை, இந்தக் கூட்டத் தொடரில், எதிர்க்கட்சிகளின் தலைவரவர்களால் ஒருவேளை எடுத்துச் சொல்லப்படாமல் இருந்து விடுமோ என்று எதிர்பார்த்ததற்கு மாறாகத்தான் அவர்கள் அனைவருமே அந்தப் பொன்னான வாசகத்தோடு தங்கள் உரையை முடித்திருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 75 பேர் இந்த உரையிலே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களோடு 76-வது பேர் முடிந்து 77-வது நபராக நான் இப்பொழுது பேசுகிறேன். ஆக, 76-ல் மீண்டும் நாங்கள்தான் பேசிக் கொண்டிருப்போம் இந்த இடத்தில் என்பதற்கு இது ஒரு நல்ல அடையாளமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்)

இந்த அவையினுடைய உறுப்பினராக இருக்கிற திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் குடியரசு நாளையொட்டி பத்மஸ்ரீ என்ற விருதினைப் பெற்றமைக்கு தலைவர் அவர்களே, தாங்கள்

இந்த அவையின் சார்பில் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித் திருக்கிறீர்கள். தாங்கள் அளித்துள்ள அந்த வாழ்த்தோடும், பாராட்டோடும் நானும் என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களை ஜோதி அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை தமிழகத்தில் நேர்ந்துவிட்ட மிகப் பெரிய துயர சம்பவத்தைத் தொடக்கமாகக் கொண்டு இங்கே ஆற்றப் பட்டிருக்கிறது. தமிழ் இனத்தின் தனிப் பெரும் தலைவராகவும், உலகப் பகுத்தறிவாளர் இயக்கத்திலே முன்வரிசையிலே வைத்து எண்ணப்படத்தக்க நிலையிலே பணியாற்றியவராகவும், இந்திய சீர்திருத்தவாதிகளில் முன்னணியில் நிற்பவர்களுக்குள்ளே ஒருவராகத் திகழ்ந்தவருமான தந்தை பெரியார் அவர்களுடைய மறைவுக்கு ஆளுநர் அவர்களின் உரையின் வாயிலாக வெளியிட்டுள்ள இரங்கலோடு இந்த மாமன்றத்திலுள்ள எல்லாக் கட்சிகளினுடைய உறுப்பினர்களும் தங்களுடைய இதயத்தை இணைத்தது பெரியார் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற மரியாதையாகும்.

மரியாதை மட்டும் போதாது. அவர்கள் எந்த சாதி சமய வழக்குகள் நாட்டைவிட்டு அகலவேண்டும் என்று கருதினார் களோ, அவைகளுக்கெல்லாம் நாமும் நம்மால் இயன்ற அளவில் நம்முடைய நேரத்தைச் செலவிடவேண்டும். அவைகளை அழிப்பதற்கு, மூடக் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைப் பதற்கு அனைவரும் ஒருமித்த கருத்தோடு உழைத்திட வேண்டும் என்கின்ற சூளுரையையும் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆளுநருடைய உரையில் மிக முக்கியமாக மாநில அரசுக்கு மத்திய அரசு நியாயமாக வழங்கவேண்டிய பங்குத் தொகைகள் அளிக்கப்படவில்லை, உதவிகள் வழங்கப்பட வில்லை, அவைகளைக் கோருகின்ற தன்மையில் ஆளுநர் உரையின் வாசகங்கள் பல்வேறு இடங்களில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபற்றி இங்கே இரண்டு விதமான கருத்துக்கள் பேசப்பட்டன.

எதற்கெடுத்தாலும் மத்திய அரசிடத்திலே நீங்கள் மோதுகிறீர்கள், மத்திய அரசைக் குறை கூறுகிறீர்கள் என்கின்ற ஒரு கருத்து. வேறு ஒரு கருத்து, நீங்கள் மத்திய அரசிடத்தில்

கேட்க வேண்டிய முறையில் கேட்கவில்லை, புத்திசாலித் தனமாகக் கேட்கவில்லை, திறமை காட்டிக் கேட்கவில்லை, சாதுர்யமாக வாதாடவில்லை என்றெல்லாம் இன்னொரு கருத்து இங்கே வெளியிடப்பட்டது.

மத்திய சர்க்காரோடு ஏன் மோதுகிறீர்கள் என்று கேட்ட அந்தக் கருத்தைவிட, கொஞ்சம் கடுமையாகவும் காரசாரமான வார்த்தைகளையும் கலந்து, உங்களுக்குக் காரசாரத் தன்மை இல்லை, திறமையில்லை மத்திய அரசோடு வாதாட என்று குற்றம் சாட்டப்பட்ட அந்தக் கருத்துக்களுக்கு நான் அதிக மதிப்பைத் தருகிறேன். ஏனென்றால், எப்படியோ ஒரு வகையில் மத்திய சர்க்கார் தரவேண்டிய இடத்தில் இருக்கிறது. மாநில சர்க்கார் பெறவேண்டிய இடத்தில் இருக்கிறது.

ஆகவே, இங்கே ஆற்றப்படுகின்ற உரைகள், மாநில சர்க்காரைக் குறைகூறி சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகள், நீங்கள் மேலும் தீவிரமாகவும், திறமையாகவும் மத்திய சர்க்காரிடத்தில் கேட்கவேண்டும் என்று கூறி எங்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே அமைகின்ற காரணத்தினால், சொல்லிலேதான் காராசாரம் இல்லை. ஆகவே, நம்மை ஊக்கப்படுத்துகிறார்கள், உற்சாகப்படுத்துகிறார்கள் என்கின்ற அளவில் நான் இந்தக் கருத்துக்கு மதிப்பு அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. இன்னும் நாம் வேகமாகவும், வலியுறுத்தியும் மத்திய சர்க்காரிடத்திலே மாநில சர்க்காருக்குத் தேவையான பல காரியங்களைப் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். என்பதில் இருவிதமான கருத்துக்கு இடமே இல்லை. ஆனாலும் இந்த 6, 7 ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்தினிடத்தில் தட்டிக் கேட்டு, வலியுறுத்தி, வாதாடிப் போராடி பல்வேறு நலன்களை மாநிலத்திற்குப் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. மத்திய சர்க்காரைக் கேட்கத் துணிவு இல்லை என்று வாதாடுகின்ற நண்பர்களுக்குச் சொல்லுவேன்.

1970-ம் ஆண்டு மார்ச் திங்கள் டெல்லி பட்டணத்தில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விவாதம் நடைபெற்றபொழுது

நான் உரையாற்றிய நேரத்தில் குறிப்பிட்டேன். நீண்ட நெடுங் காலமாகக் கேட்டு வருகிற சேலம் உருக்காலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறவில்லை, என்றால் தமிழ் நாட்டிலே இருக்கிற மக்களுடைய சார்பாக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்தேன்.

நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. அவ்வளவு வேகமாக வாதாடிய காரணத்தினால் சேலம் உருக்காலை நமக்கு விரைவிலே கிடைத்தது என்பதையும், அதனுடைய தொடக்க விழாவை இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் நடத்தி வைத்தார்கள் என்பதையும் நாடு நன்றாக உணரும்.

ஆகவே, சேலம் திட்டத்திற்காக நாம் போராடியிருக் கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்க இயலாது என்று கண்டிப்பாக சொல்கின்ற அளவுக்கு முதலமைச்சர்கள் கலந்து கொண்ட தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

வீராணம் திட்டம் மாநில அரசினுடைய திட்டம் என்றாலும் கூட, அது பல கோடி ரூபாய் திட்டம் என்ற காரணத்தினால், இருக்கின்ற முறைப்படி மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டும் என்ற காரணத்தினால், அதற்காகவே கிட்டத்தட்ட ஓராண்டு காலம் மாநில அரசு மத்திய அரசோடு வாதாடி, அதைப் பெறுவதிலே வெற்றி பெற்றிருக்கிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு அனுமதி பெறுவதற்காக நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும், நம்முடைய அரசு அலுவலர்களும் எத்தனை முறை டெல்லியிலுள்ள அமைச்சர்களைச் சந்தித்துப் பேசியிருப்போம், பிரதம அமைச்சரை சந்தித்துப் பேசியிருப்போம், அதை அமைப்பதற்கான காரணங்கள் எவ்வளவு பொருத்தமானவை என்பதனை எடுத்துக் கூறியிருப் போம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்குப்பிறகுதான் நாம் அந்த அனுமதியை அவர் களிடத்திலே பெற முடிந்தது என்பதை யாரும் மறந்துவிட இயலாது.

அதைப்போலவே, தூத்துக்குடியில் ஜாயிண்ட் செக்டாரில் ஒரு உரத்தொழிற்சாலை ரூ, 100 கோடி அளவுக்கு இன்றைக்குத்

தொடங்கப் பெற்று, அதனுடைய முதல் கட்ட வேலைகள் ஆரம்பமாகிவிட்டன என்றால், அதற்கும் இந்த அரசு முன்னோடியாக இருந்து, மத்திய சர்க்காரோடு வாதாடிப் போராடி அதையும் பெற்றிருக்கிறது.

நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம் - அந்தத் திட்டத்திற்கு நம்முடைய அரசு எத்தனை முறைகள் குரல் எழுப்பியிருக்கிறது என்பதை மறப்பது அவ்வளவு நல்லது அல்ல. பல முறை குரல் எழுப்பியிருக்கிறோம். ஒருமுறை நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம் வருகின்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறப்போவதில்லை என்ற செய்தி பத்திரிகையில் வந்தவுடன் நம்முடைய அதிகாரிகள் டெல்லிக்கு அனுப்பப்பட்டார்கள். நானும் மத்திய சர்க்காரோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டேன், அதற்குப் பிறகு இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தைப் போட்டோம். நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம் இந்தத் திட்டத்தில் கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும் என்கின்ற தீர்மானத்தை ஒரே மனதாக நாம் நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தை அன்று மாலையே நம்முடைய அமைச்சர் திரு. இராசாராம் டெல்லிக்கு எடுத்துச் சென்றார்கள். பிரதம அமைச்சரிடம் அளித்தார்கள். அதோடுகூட முடிந்துவிடவில்லை.

அதற்குப் பிறகும் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டம் 9-12-73 அன்று நடைபெற்றபொழுது நான் அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டேன், வலியுறுத்திப் பேசினேன். நம்முடைய மின் உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படாவிட்டால் தமிழகத்தின் எதிர்காலம் வளம் மிகுந்ததாக இருக்காது என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்னவுடன் பதிலளித்த அமைச்சர் திரு. தார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதை அப்படியே இங்கே குறிப்பிடுகின்றேன்.

"I would assure the Chief Minister of Tamil Nadu that as far as the expansion of power based on lignite is concerned, this matter has been discussed by the Finance Minister and by me with the Ministers from both the Federal Republic of Germany and also the German Democratic Republic who have great experience in exploitation of low grade coal as we have in the case of Tamil Nadu. I would also draw his kind attention to

the series of meetings we have had with the Chief Minister, with his officers who have been very co-operative in ensuring that nearly a thousand mega watt of power is established at Tuticorin and for this, it will be recalled we have taken into account the supply of coal by the sea route, through considerable distance at considerable cost. We have also taken into account the establishment of Kundah and Solaiyar Projects. I mentioned this in order to allay apprehensions, if there was any room for it, for my distinguished friend, Mr. Karunanidhi, that in the matter of development, he need have no apprehensions whatso - ever from us, from the Planning Commission, because in his case, and if I may say so, in no other case, I always have an enquiry or two which I receive from the Prime Minister." என்று இதே வாசகத்தைத் திட்டக் குழுவினுடைய துணைத்தலைவர் அமைச்சர் தார் அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுவிலே நம்பிக்கை ஊட்டுகின்ற விதத்திலே குறிப்பிட்டார்கள்.

அது மாத்திரமல்ல. அதற்குப் பிறகு சனவரி 1-ம் நாள் நடைபெற்ற திட்டக் குழுவின் கூட்டத்தில் நானும் அமைச்சர் மாதவனும் கலந்து கொண்டபோது இதே கருத்துக்களை வலியுறுத்தி எடுத்துச் சொல்லி இதற்கு பச்சைக் கொடி காட்டப் படுகிறது என்ற அளவுக்கு மேலும் நம்பிக்கை ஊட்டுகின்ற விதத்தில் திட்டக் குழு நமக்கு அறிவித்திருக்கின்றது.

நான் இவைகளை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், எத்தனை முறை நாம் இவைகளைப் பற்றி அணுகியிருக்கிறோம், நமது அணுகுமுறைகளைப் பற்றி மத்திய அரசு எந்த அளவுக்குப் பெருமைப்படுகிறது, எந்த அளவுக்குப் பாராட்டுகிறது, எந்த அளவுக்குக் கவனம் செலுத்துகிறது, அணுகுமுறை சாதாரண மானதாக இருந்தால், நாம் எடுத்துச் சொல்கின்ற காரணங்கள் போலியானவைகளாக இருந்திருந்தால், அல்லது எடுத்து வைக்கின்ற நிலைக்கு இயலாத அசக்தர்களாக இருந்திருந்தால் - நமது பொன்னப்ப நாடார் அழகாக குறிப்பிட்டார்கள், கையாலாகாதவர்கள் - ஆள லாயக்கற்றவர்கள் என்று - அப்படிப்பட்டவர்களாக இருந்தால், நம்முடைய அணுமுறையை - செய்கிறார்களோ இல்லையோ, மத்திய சர்க்கார் பாராட்டுகின்ற அளவுக்கு இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடவேண்டாம்.

ஐந்து கோடி ரூபாய் பாம்பன் பால இடத்திற்கும் மாநில அரசு மத்திய சர்க்காரோடு வாதிட்டுத்தான் பெற்றிருக்கிறது. ஆகவே, அணுகு முறையிலே எந்தவிதமான தடையுமில்லை, தேக்கமுமில்லை, திறமைக் குறைவுமில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் உரையில் அடுத்து மிகமிக முக்கியமாகக் குறிப்பிடப்படுவது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம். இந்தத் திட்டத்தில் நாம் முதலில் ரூ. 1,532 கோடிக்காவது நம்முடைய ஐந்தாவது திட்டம் அமைய வேண்டுமென்று விரும்பினோம். இதற்கான காரணங்களை எடுத்துக் கூறினோம். விவாதத்திற்குப் பிறகு, குறைந்த பட்சம் ரூ. 1,200 கோடியிலாவது நமது திட்டம் அமையவேண்டுமென்று நாம் நமது திட்ட நிகலை சமர்ப் பித்தோம். ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, 1974 சனவரி 1-ஆம் தேதி திட்டக் குழுவோடு நாம் நடத்திய பேச்சு வார்த்தையின் போது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டிற்கு ரூ. 108 கோடி அளவுக்குத்தான் வசதிகள் தரப்படும் என்று திட்டக் குழு நம்மிடத்தில் சுட்டிக்காட்டியது. அது முடிந்த முடிவல்ல. ஆனால், நாம் எடுத்துச் சொல்வது, நடப்பு ஆண்டிலேயே - இப்போது நடந்துகொண்டிருக்கிற ஆண்டிலேயே ரூ. 126 கோடிக்கு திட்டத்தை ஆண்டு திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறபோது, நீங்கள் ஐந்தாவது திட்டத்தின் முதல் ஆண்டே அதற்கும் குறைவான ஒதுக்குவது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று எடுத்து வாதிட்டிருக்கிறோம். அது மாத்திரமல்ல. ஒன்றை ஞாபகப்படுத்தினோம்.

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது தமிழகத்தின் சார்பாக நானும், கர்நாடக முதல்வரும் மேற்கு வங்க முதல்வரும் ஒரு கருத்தை அங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னோம். அதாவது, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பு திட்டக் குழுவிலிருந்து மாநில அரசுகளுக்கு ஒரு தகவல் அனுப்பப்பட்டது. அது என்ன வென்றால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டுத் திட்டத்தின் அளவு நடைமுறை ஆண்டு திட்ட அளவில்தான் இருக்கும். அந்த அளவுக்குத்தான் பார்த்துக் கொள்ள வேண்டு மென்று அவர்கள் ஒரு தகவலை அனுப்பினார்கள். அதை

தமிழகமும், கர்நாடகமும், மேற்கு வங்கமும் தேசிய வளர்ச்சிக் குழுவிலே கடுமையாக எதிர்த்ததன் காரணமாக, அப்படி அனுப்பிய தகவலை நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம் என்று திட்டக் குழுவினுடைய அமைச்சர் மதிப்புக்குரிய தார் அவர்கள் அங்கே எடுத்துச் சொன்னார்கள்.

நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் ரூ. 126 கோடி நடப்பு ஆண்டு - அதே இந்த ஆண்டும் இருக்குமானால் tempo of economic activitiy அதாவது பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் தடைப்பட்டுப் போய்விடக்கூடும். எனவே ரூ. 126 கோடி என்பதை ரூ, 150 கோடி என்ற அளவுக்காவது ஆக்கித் தரவேண்டு மென்று நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். இப்பொழுதும் நம்பிக் கொண்டிருக்கிறேன், சுமார் ரூ. 150 கோடி அளவுக்காவது வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டுத் திட்டம் அமையுமென்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

அடுத்து, ஆறாவது நிதிக் குழு. அது பற்றிய பிரச்சினையை ஆளுநர் அவர்கள் . . . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ரூ. 150 கோடிக்கு இந்தத் திட்டமிடுவதாக எடுத்துச் சொன்னார்கள். நான் சொன்னது, டி.பி. தார் மீண்டும் தமிழக முதலமைச்சர் மீதே குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார். எக்ஸ்ட்ரா இன்கம் ரூ. 188-85 கோடி கொடுக்க முடியாததால் நிதி ஒதுக்க முடியவில்லை என்று குற்றச்சாட்டை உங்கள் அரசின் மீதே சொல்கிறார். அதற்கு என்ன விளக்கம் தந்தீர்கள்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவைகளுக் கெல்லாம் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. நாம் வரி போடுவதைப் பொறுத்து நம்முடைய வருமானம், வசதி பெருக்கிக்கொள்வது பொறுத்து திட்டங்கள் அமையும் என்று சொன்னார்கள். அதைப் பற்றி விவரமாகப் பேசியிருக்கின்றோம். அந்த விவாதங்கள் மிக விரிவான முறையில் நடைபெற்றிருக்கின்றன. நம்முடைய ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பேசும் நேரத்தில் அதில் மேலும் விளக்கங்களை அளிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

ஆறாவது நிதிக்குழுவினிடம் நமது கோரிக்கைகளை, மாநில அரசின் தேவைகளைச் சரியாக எடுத்து வைக்கவில்லை என்றுகூட இங்கே பேசப்பட்டது. நான் உள்ளபடியே வருத்தப் படுகிறேன். ஆறாவது நிதிக்குழுவின் அறிக்கைக்கேற்ப

நம்முடைய தமிழக அரசு ஒரு பதில் அறிக்கையைத் தயாரித்து ஆறாவது நிதிக் குழு எப்படியெல்லாம் தமிழ் நாட்டைக் கவனத்தில் வைக்க வேண்டும், எந்தெந்த வகையில் எல்லாம் தமிழ் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். மாநிலங்களுக்காக அந்த ஆறாவது நிதிக் குழு எந்தெந்த அடிப்படையில் தன்னுடைய பணியினைச் செய்திட வேண்டும் என்பதற்கு, வேறு சில மாநிலங்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவுக்குக்கூட சில அடிப்படை வரையறைகளை செய்து அளித்திருக்கின்றோம்.

அது மாத்திரமல்ல. மேலவை உறுப்பினர்களுக்கும் – பேரவை உறுப்பினர்களுக்கும் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே நாம் ஆறாவது நிதிக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள அறிக்கை, மெமோராண்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்துப் பேரவையிலும், மேலவையிலும் நாம் அனுப்பியுள்ள அந்த அறிக்கையை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் பேசி இருக்கிறார்கள். ஆனால் இங்கே சில பேர் பேசுகின்ற நேரத்தில் அதை நாம் சரியான முறையில் அணுகிடவில்லை, அதன் காரணமாக ஆறாவது நிதிக் குழு நமக்குத் தரவேண்டிய வாய்ப்பு வசதிகளையெல்லாம் இழந்து விட்டோமென்று குற்றஞ் சாட்டினார்கள்.

ஆறாவதுநிதிக் குழு இங்கு வந்த நேரத்திலே தமிழ்நாட்டிலே உள்ள சிலபேர் அந்த நிதிக் குழுவைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் வருவதைக் கேள்விப்பட்டவுடன் நாங்கள் நிதிக் குழு சம்பந்தமாக மாநிலங்களுக்கு ஒதுக்குகிற நிதி சம்பந்தமாகப் பேசலாமா என்று அவர்களைக் கேட்டு, அப்படிக் கேட்டவர்களை அவர்கள் அழைத்துப் பேசியிருக்கிறார்கள்.

திரு. பி. வி. ராஜமன்னார், திரு. சந்தானம், திரு. மாறன், எம். பி. ஆகியவர்கள் நிதிக் குழுவை சந்தித்துப் பேசியிருக் கிறார்கள். அப்படி பலரும் கூட அதிலே ஆர்வம் படைத்தவர்கள் பேசியிருக்கலாம். நான் பேசாததைக் குற்றமாகச் சொல்லவில்லை.

பிப்ரவரி மாதத்தில் கமிஷனின் அறிக்கையை இங்கே வைத்த பிறகும் அதுபற்றி எதையும் சொல்லாமல் இன்றைக்கு கவர்னரின் உரையின் மீது ஆறாவது நிதிக்குழு இன்னும் அதிகமான முறையில் நியாயம் வழங்கியிருக்கலாம் என்று

எடுத்துக்காட்டிய பிறகு நியாயம் வழங்கப்படாததற்குக் காரணம் நம் அணுகுமுறை சரியானதல்ல என்று கூறுவது பொருத்தமுடையதல்ல. நம் அணுகுமுறையில் ஆறாவது நிதிக் குழுவின் முன்னால் வைத்த சில முக்கியமான கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசு மாநிலங்களுக்கு வரி, வருவாய், உதவித் தொகை, மானியங்கள் ஆகியவற்றை பிரித்து வழங்கும் ஏற்பாட்டில் பல குறைபாடுகள் இருக்கின்றன. நிதிக் குழுவும், திட்டக் குழுவும் மாநிலங்களின் தேவையைத் தனித்தனியே கருதிப் பார்ப்பதற்குப் பதிலாக மாநிலங்களின் தேவை அனைத்தையும் ஒருசேர நிதிக் குழுவே கருதிப் பார்க்கவேண்டும். இது நான் முதலில் குறிப்பிட்டது.

அடுத்து, பின் தங்கிய பகுதிகளில் பிரச்சினைகளை "குறைந்த அளவு தேவையான திட்டங்கள்" நிறைவேற்றுவதன் மூலம் தீர்ப்பதெனக் கொள்வோமானால் பின்னடைந்த நிலை என்ற அடிப்படையில் திரும்பத் திரும்ப மாநிலங்கள் பிரிக்க வேண்டிய தில்லை என நாம் அதில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

என்ன செய்கிறார்கள் என்றால் பின்னடைந்த மாநிலங்கள், பிற்போக்கான மாநிலங்கள் என்று தொகுத்துவைத்துக்கொண்டு அவைகளுக்கு அதிக உதவிகளைச் செய்கிற ஏற்பாட்டினைத் திட்டக் குழுவும், நிதிக்குழுவும் செய்கின்றன.

அதற்காகத்தான் நாம் சொல்வது, இந்தியாவில் உள்ள பின் தங்கிய பகுதிகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, எந்த எந்தத் துறையில் அவை பின்தங்கி இருக்கின்றன என்பதைக் கண்டு, அவற்றுக்கு என்று "மினிமம் நீட்ஸ் பரொகிராம்" தீட்டுவார் களானால் பின்னடைந்த நிலை என்ற அடிப்படையில் திரும்பத் திரும்ப மாநிலங்களைப் பிரிக்கவேண்டியதில்லை, முற்போக்கான மாநிலங்கள் பின்தங்கிய மாநிலங்கள் என்ற அந்த இக்கட்டிலே சிக்கிக்கொண்டு எங்கள் தேவைகளை இழக்க நேரிடாது என்ற கருத்தோடு இந்த முக்கியமான கருத்தை எடுத்துச் சொன்னோம்.

மேலும், வளர்ச்சியுற்றது என்று குறிப்பிடப்படும் மாநிலங் களிலும், பின் தங்கிய பகுதிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒரு பகுதி பின்னடைந்த நிலையில் உள்ளது என்று தீர்மானிக்க "தனி

நபர் வருமானம்" (பர் காபிடா இன்கம்) சரியான அளவு இல்லை என்பதையும் நாம் சுட்டிக் காட்டினோம்.

எப்படி என்றால் பர் காபிடா இன்கம் கணக்கிடுகிறார்கள் என்றால், ஒரு மாநிலத்தில் இருக்கிற 200 பணக்காரர்கள், மிச்ச மிருக்கிற சாதாரண மக்களையும், கூட்டிப் பார்த்து, இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, மொத்தத்தால் வகுத்து சராசரி வருமானத்தைக் கணக்கிடுகிறார்கள். "ஏ" என்பவர் ஒரு பணக்காரர் - மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார். "பி" என்பவர் ஒரு சாதாரண நிலையில் உள்ளவர். மாதம் 200 ரூபாய் சம்பாதிக்கிறார். இந்த இரண்டு பேர்களுடைய வருமானத்தையும் கூட்டி ரூ. 1,200 என்று கொண்டு, அதை இரண்டால் வகுத்து, ஆளுக்கு ரூ. 600 வருகிறது என்று பார்க்கிறது என்பது, பார்ப்பதற்கு அழகாக இருக்கலாம். ஆனால் "ஏ" சம்பாதிப்பது ஆயிரம் ரூபாய், "பி" சம்பாதிப்பது 200 ரூபாய்தான். இந்த இரண்டையும் கூட்டி, 1,200-ஐ இரண்டால் வகுத்தால் பர் காபிடா ரூ. 600 கிடைக்கிறது. ஆகவே, அதை அளவு கோலாக வைத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் ஆறாவது நிதிக் குழுவிடம் எடுத்துச் சொன்னோம். இயற்கை வளங்களைப் பொறுத்த வரையில் நமது மாநிலத்தில் அவர்கள் குறிப்பிடுகிறது போல - மற்ற மாநிலங்களைக் காட்டிலும், இயற்கை வளங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன என்பதையும் நிதிக் குழுவுக்கு வெகு விளக்கமாக எடுத்துச் சொன்னோம்.

மேலும் ஒரு மாநில வரி வருவாயை (டாக்ஸ் எபர்ட்ஸ்) பெருக்குவதற்கு எடுத்துள்ள முயற்சியை எண்ணிப்பாராமல் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கொண்ட மாநிலங் களுக்கு உதவித் தொகை அளிப்பதால் மாநிலங்கள் மேலும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கத் தூண்டு கோலாய் அமையும். பற்றாக்குறை வரவு செலவுத் திட்டமாக இருந்தால் அந்த மாநிலத்திற்கு துண்டுவிழுகிற அந்த அளவுக்கு நிதி வழங்கப்படும், மிகுந்த இடைவெளி நிரப்பப்படும் என்ற சூழ்நிலை இருந்தால் நாம் பற்றாக்குறை பட்ஜெட் அளித்தால்தான் பணம் கிடைக்கும் என்ற நிலைமையை மாநிலங்களில் ஏற்படுத்தும். ஆகவே, அந்த அடிப்படையில் நிதிக்குழு தன்னுடைய பரிந்துரையைச் செய்யக்கூடாது என்று அரசின் சார்பில் எடுத்துச் சொன்னோம்.

திட்டக் குழுவினிடத்தில் சொன்ன வார்த்தைகளை அப்படியே சுட்டிக் காட்டுவது நலம் என்று கருதுகிறேன்.

"The Planning Commission is aware that we had been amongst the leaders in additional mobilisation during the Fourth Plan. In fact, our efforts in relation to our per capita income, is the highest in the country, and out of a total additional, mobilisation of 1058 crores and odd, our State records nearly 159 crores. Unfortunately, the result of this has been that we have suffered at the hands of the Finance Commission, which rewards, a State in direct proportion to its revenue gaps." இப்படியெல்லாம் நம்முடைய குரல் திட்டக் குழுவானாலும் சரி, அல்லது நிதிக் குழுவானாலும் சரி தயவு தாட்சண்யமின்றி தட்டிக் கேட்கின்ற முறையில் எழுப்பப்பட்டிருக்கிறது.

மதுவிலக்கு பற்றியும் இங்கே பேசப்பட்டது. நமது பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியின் வேறுசில உறுப்பினர்களும் பூரண மதுவிலக்கு வரவேண்டும் என்றெல்லாம் பேசினார்கள். நாம் இன்றைய சூழ்நிலையில் 200 கோடி ரூபாயை ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இழக்கிறோம் என்று நிதிக் குழுவிடத்தில் எடுத்துச் சொல்லியும் கூட, அகில இந்தியாவில் மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டிய மத்திய அரசு, உத்தமர் காந்தியடிகளின் கொள்கையை அனைத்து இந்தியாவிலும் பரப்புவதற்கு முன்னோடியாக இருக்க வேண்டிய மத்திய அரசு நாம் எவ்வளவோ சங்கடங்களுக்கிடையே வேறுவழியில்லை என்று மதுவிலக்குக் கொள்கையை ஒத்தி வைத்து. 1½ ஆண்டுகளில் நாற்பது, ஐம்பது கோடி ரூபாய் அதன் மூலம் மாநிலத்திற்கு வருவாய் தேடி, இப்போது அதுவும் இழந்து, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நிதிக்கமிஷன் நம்முடைய நிலையை எண்ணி உதவிடுவார்களா என்று பார்த்தால் அவர்கள் பார்க்கிற பார்வை "உன்னை யார் மதுவிலக்கை அமல்படுத்தச் சொன்னது?" என்பதுபோல் இருக்கிறதே தவிர, அவர்கள் அப்படிச் சொன்னார்களா என்று கேட்பார்கள் சொல்லவில்லை. பார்வைக்குப் பொருள் கூறுகிறேன் - சிலபேர் பார்வைக்குப் பொருள் கூறுவது சுலபம் - நிதிக் குழு நாம் எடுத்துக்கொண்ட இந்த முயற்சிக்கு

ஒரு அடையாளப் பரிசை அளிக்கின்ற வகையில் கூட சிறு தொகையையும் ஒதுக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. அதையும் ஆளுநர் அவர்களே தம் உரையில் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள்.

இந்த அவையில் ஆளுநர் உரையின்மீது நடந்த விவாதத்தில் மிக உரமாகப் பேசப்பட்ட விஷயம் உரம், உரம் பற்றி மிக உரமாகப் பேசப்பட்டது. ஆனால் உரம், உரம் என்று இங்கே பேசுகிற நேரத்தில் நாம் கேட்க வேண்டிய வரம் மத்திய சர்க்காரைப்பார்த்து என்பதைப்பற்றி மன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் கூட ஏனோ புரியவில்லை. நமது அருமை நண்பர் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து கூட "உங்களுக்குள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஏன் இந்தக் காரியத்தைச் செய்யக்கூடாது?" என்று கேட்டார்கள்.

உரத்தைப்பற்றி கொஞ்சம் கேட்பதில் தொய்வு - சலிப்புத் தட்டினாலும் கூட நான் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். உரம் வெளிநாட்டில் இருந்து நமக்கு இறக்குமதி செய்யப்படுகிற உரம் பூல் (pool) என்ற தலைப்பில் வைக்கப் பட்டிருக்கிறது. உள்நாட்டில் தயாரிக்கப்படுகிற உரம் நான்-பூல் (Non-Pool) என்ற தலைப்பில் வைக்கப்படுகிறது. நாம் இதைக்கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு பருவங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்த உரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்றன. பிப்ரவரி முதல் ஜூலை வரை - காரிப் பருவம் - ஆகஸ்ட் முதல் சனவரி வரை ராபி பருவம் - இந்தப் பருவங்களில் வேண்டிய உர ஒதுக்கீட்டை மத்திய அரசே செய்து வருகிறது. ஆறு மாதத்திற்கு ஒரு முறை உரம் ஒதுக்கீடு செய்கிறபோது இறக்குமதி செய்கிற உரத்தை - பூல் (pool)-இல் இவ்வளவு என்றும், உள்நாட்டு உரத்தை நான்பூல் - (Non-pool)-இல் இவ்வளவு என்றும் நம்முடைய தேவையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒதுக்கீடு செய்கிறார்கள்.

1973-74 ஆம் ஆண்டுக்கு நமக்குத் தேவையானது மூன்று லட்சத்து ஐயாயிரம் டன்கள். சென்ற ஆண்டு நமக்குத் தேவை இதைவிடக் குறைவுதான். அதற்கு முந்திய ஆண்டு அதைவிடக் குறைவுதான். உரம் அதிகமாகப் போட வேண்டுமென்ற ஆர்வம்

விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் வந்திருக்கிற காரணத்தினால், உரத்தின் பயனை பத்திரிகையில் எடுத்துச் சொல்லி, வேளாண்மைத்துறை வாயிலாக எடுத்துச் சொல்லி, வானொலி மூலமாக விளக்கி வருகின்ற காரணத்தினால், சாகுபடிக்குப் புதியதாக ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் கொண்டுவரப் பட்டிருக்கிற காரணத்தினால் – விவசாய மக்களின் தேவை மூன்று லட்சத்து ஐயாயிரம் டன்களாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டு உரம் கேட்கப்பட்டது.

ஆனால் நமக்கு மொத்தமாகக் கிடைத்தது ஒரு லட்சத்து எண்பதாயிரம் டன்கள்தான். இதை ஒதுக்கியது மத்திய அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்னர் உரையில் இரண்டு லட்சம் சொச்சம் டன்கள் உரம் கிடைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே இதில் எது சரி ?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் இதுவரை கிடைத்திருப்பதைப் பற்றி சொல்லிக்கொண்டுவருகிறேன். வெளி, உள்நாட்டு உரத்தையும் சேர்த்துத்தான்.

இதிலே முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஓர் அம்சம், நமக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற வெளிநாட்டு உரம் முழுவதும் (1) தஞ்சாவூர் கூட்டுறவு மார்க்கெட்டில் ஃபெடரேஷன், (2) தமிழ் நாடு கூட்டுறவு மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் ஆகியவைகளின் மூலமாக விநியோகம் செய்கின்ற பொறுப்பை 1-4-1973 முதல் ஒப்படைப்பது என்று முடிவு எடுத்து, வெளிநாட்டு உரப் பூலில் இருந்து ஒதுக்கப்பட்ட உரத்தைத் தஞ்சாவூர் கூட்டுறவு மார்க்கெட்டிங் ஃபெடரேஷன், தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் ஆகிய இரண்டின் மூலம் விநியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இதிலே கேட்கப்பட்ட உரம் – 1973 ஜூலை முதல் சனவரி 1974 வரை ராபி பருவத்திற்கு ஒரு லட்சத்து எண்பத்தைந்தாயிரம். அதிலே கேட்கப்பட்ட வெளிநாட்டு உரம் – ஒரு லட்சத்து ஆறாயிரம் டன்கள். மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது நாற்பத் தெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு டன்கள். ஒதுக்கப்பட்ட அளவையாவது கொடுத்தார்களா என்றால் இல்லை. அதிலேகூட

முப்பத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு டன்களே நமக்குக் கிடைத்தது. ஒதுக்கீடு செய்ததில் கொடுக்க வேண்டியது பதினாலாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது டன்கள். இந்த 33,907 டன் உரத்தையும் நாம் கூட்டுறவுத் துறையிலே இயங்கிவரும் 3,027 கிராமக் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்களின் மூலமாக விநியோகம் செய்து வருகிறோம். இதற்காக கார்டு முறைகளை உண்டு பண்ணி விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய கண்காணிப்பில் உரம் விநியோகம் செய்யப் படுகிறது.

இந்தக் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனத்தின் மூலம் விநியோகிப்பதில் ஓரிரு இடங்களில் தவறு நடைபெறவில்லை யென்று நான் சொல்லமாட்டேன். ஆனால், எல்லா இடங்களிலும் தவறு நடைபெறுவதாகச் சொல்லக் கூடாது. ஒரு இடத்திலே தவறு நடைபெற்றால், போதாதா, ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போதாதா என்று கேட்கலாம். அந்த எடுத்துக்காட்டு இதற்குப் பொருந்தாது. ஏனென்றால், வைக்கப்பட்டிருப்பது பல குடம் பால்கள். ஆனால் ஒரு குடம் பாலில் விஷம் விழுந்து விட்டது என்பதற்காக பல குடம் பால்களையும் தூக்கி எறிந்துவிட முடியாது.

அந்த வகையிலே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான இடங்களில் உரவிநியோகம் செய்யப்படுகிற நேரத்தில் ஒன்றிரண்டு இடங்களில் ஏற்படுகிற தவறுகளைக் கொண்டு ஏதோ கூட்டுறவுத் துறையே மோசமாக இயங்குகிறது, அதிலே எல்லா இடங்களிலும் ஊழல் நடைபெறுகிறது என்று நாம் கற்பனை செய்து கொள்வது நல்லதல்ல.

உள்நாட்டு உரத்தைப் பொறுத்தவரையில் நம் மாநிலத்திற்கு ஒவ்வொரு பருவத்திற்கும் ஒதுக்கப்படுகின்ற உரப் பங்கீட்டில் 66 சதவிகிதம் மாண்புமிகு உணவு அமைச்சர் அன்றைக்கு எடுத்துச் சொன்னதைப் போல - தனிப்பட்ட உரத் தொழிற்சாலைகளின் ஏஜென்டுகளால் இயங்கி வருகின்ற 6,428 சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப் படுகிறது. இப்படி உள்நாட்டு உரம் கடந்த ராபி பருவத்தில் மத்திய அரசு நமக்கு ஒதுக்கியது 60,000 டன். அதிலே நமக்குக் கிடைத்தது 45,278 டன். இன்னும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கொடுக்கப்படாதது

24,000 டன். நமக்குக் கிடைத்த 45,278 டன்னில் 66 சதவிகிதம் அதாவது 3-ல் 2 பங்கு தனியார் சில்லறை விற்பனைக் கடைகளுக்குப் போகிறது. அதில், 45,000 டன்னில் 3-ல் 2 பங்கு, 66 சதவிகிதம் பங்கு தனியார் சில்லறை விற்பனை நிலையங்களுக்குச் செல்கிறது. அவர்கள் ஒழுங்காகவும், நியாயமாகவும் விற்பனை செய்கிறார்களா என்பதைக் கண்காணித்து அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை.

அன்றைக்கு திரு. மாரிமுத்து அவர்கள் கேட்டார்கள், மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையா என்று. மாநில அரசுக்குச் சில அதிகாரங்கள் இருக்கின்றன. நான் அவைகளை இங்கே கோடிட்டுக் காட்டிட விரும்புகிறேன்.

இங்கே ரூபாய் 55-க்கு விற்கவேண்டிய உரம் ரூபாய் 110-க்கு விற்கிறது, ரூபாய் 135-க்கு விற்கிறது, ரூபாய் 150-க்கு விற்கிறது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தனியார் மூலமாக விநியோகிக்கப்படுகிற உரங்கள் அப்படி விற்கப்படுகின்றன. அவைகளைக் கண்காணித்து, தீவிர நடவடிக்கை எடுக்க நம்மால் இயலாது என்று எடுத்துக்கூறி 19-11-1973--ல் தமிழ் நாட்டு அரசாங்கத்தின் சார்பில் நீண்ட கடிதம் ஒன்றை மத்திய அரசுக்கு எழுதினோம். அதைப்படித்து விட வேண்டுமென்று நான் உள்ளபடியே விரும்புகிறேன். ஏனென்றால், நாம் முயற்சியை மேற்கொள்ளுகிறோமோ, இல்லையா என்பதை எடுத்துக் காட்டுவதற்காக.

"The entire pool stocks of fertilisers are now being distributed only through the two Co-operative Federations functioning in this State, namely, the Tamil Nadu Co-operative Marketing Federation Limited, and the Thanjavur Co-operative Marketing Federation Limited, and the Thanjavur Co-operative Marketing secured by them, only on the strength of the identity cards issued to the ryots; and such a course is expected to minimise any malpractices on the part of the Co-operatives. But, it has been found difficult to exercise an effective check on the distribution of non-pool stocks by the

private dealers, who get their supplies from the Marketeers of the indigenous manufacturers resort to all sorts of malpractices such as black-marketing, transporting outside the State, etc. Such malpractices are on the increase day by day especially in respect of Urea, which is in great demand. Unless the State Government are equipped with the necessary powers to requisition stocks from the Producers and Private dealers in an emergent situation, when such a course is warranted, it may prove difficult to ensure a proper distribution of non-pool fertilisers and thereby meet the seasonal demands of the ryots, at the right time, and at the notified prices. Section 3 of the Essential Commodities Act, 1955, enable the Central Government to control the price, to regulate supply, etc. Section 5 of the Act deals with the delegation of these powers to the State Government."

அந்த செக்ஷன் 5 அடிப்படையில் மாநில அரசுக்கு அதிகாரங்கள் தரவேண்டுமென்று கடிதம் எழுதினோம். அதற்கு மத்திய அரசிடமிருந்து 7-1-1974-ல் கடிதம் வந்தது.

அதிலே என்ன சொன்னார்கள்? 1996-ஆம் ஆண்டிலேயே எடுத்த மத்திய மந்திரி சபையினுடைய முடிவின்படி தனியார் உர உற்பத்தி ஆலைகள் உரங்கள் விற்கின்ற உரிமையைப் பெற்றிருக் கிறார்கள் என்றும் அவர்கள் தொழிலுக்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு இதை ஒரு வாய்ப்பாக வைத்திருக்கிறார்கள் என்றும் மத்திய அரசு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் சொல்கிறேன்.

"In this connection, another point that has to be reckoned with is, that under 1966 decision of the Cabinet, private manufacturers have been given freedom of marketing, in order to invite more capital into the industry . . . We feel that all this and vigorous action under the Fertiliser (Control) Order will be sufficient to deal with most of the malpractices at present. The Government of India regret their inability to agree to your request to delegate powers of requisition and distribute fertilisers held with private manufacturers." இப்பொழுது இருக்கிற . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது பூல் ஸ்டாக் வெளி நாடுகளிலிருந்து வருகிறதே அவை பூராவற்றையும் சர்க்கார் விநியோகம் பண்ணுகிறதா அல்லது அதிலும் ஏதாவது பிரைவேட் ஆட்களுக்குக் கொடுக்கின்றோமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், நான்-பூல் ஸ்டாக்ஸ் பற்றி அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், இப்பொழுது நான் - பூல் ஸ்டாக் சம்பந்தமாகக்கூட, மாநில அரசே விலை பிக்ஸ் பண்ணி, அந்த விலைக்கு அதிகமாக விற்றால் நடவடிக்கை எடுக்கிறார்களே, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களிலே, அது எவ்வாறு சாத்தியம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வெளிநாடு களிலிருந்து வருகிற உரம் பொறுத்த வரையில் நான் ஏற்கனவே சொன்னேன், அது சர்க்கார் மூலமாகத்தான் வினியோகிக்கப் படுகிறது - பூலில்தான். உள்நாட்டு உரம் என்றால்தான் நான்-பூலில் இருக்கிறது. இப்பொழுது இருக்கிற சட்டத்தையே பயன் படுத்திக் கொள்ளலாம் .

மற்ற மாநிலத்தில் பயன்படுத்தப்படுகிறதே என்று திரு. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற பெர்டிலைசர் கண்ட்ரோல் ஆர்டர் 1957-இன் படி என்ன செய்யலாம் என்றால், கடைகளில் நுழைந்து தஸ்தாவேஜ்களைக் கைப்பற்றி ஒழுங்காக கணக்கு வைத்திருக்கிறார்களா என்று சரி பார்க்கலாம். உரத்தில் கலப்படம் இல்லாமல் தரத்தின்படி அவைகளை விற்கிறார்களா என்று கண்காணிக்கலாம். அவர்கள் ஒழுங்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கிறார்களா என்று கண்காணிக்கலாம். இந்த அதிகாரம் மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் தனியார் துறையிலுள்ள சில்லறை விற்பனைக் கடைகளின்மீது இந்த நடவடிக்கைகளை எடுக்கலாம்.

ஆனால், நான் மேலே சொல்லியிருக்கின்ற அந்த 3 தலைப்புகளில் ஏதாவது குறைகள் இருக்கின்றனவென்றால் அவர்கள்மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் ? உரத்தைப் பறிமுதல் செய்யவோ, மற்றும் நாம் கார்டுகளைக் கொடுத்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்யுங்கள் என்று சொல்லவோ நிச்சயமாக நமக்கு அதிகாரம் கிடையாது.

அது மாத்திரமல்லாமல், இன்று சில்லறை விற்பனையாளர் களுடைய கடைகளுக்குச் சென்றுதான் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியுமே அல்லாமல் அவர்கள் தவறு செய்கிற நேரத்தில் கூட்டுறவுத் துறையின் மூலமாக, அந்த விநியோகத்தைச் செய்கிற உரிமையை அளிக்க இப்பொழுதுள்ள சட்டத்தின்படி அதிகாரம் கிடையாது.

அது மாத்திரமல்ல, சில்லறை விற்பனையாளர்கள்மீது வழக்குகளைப் போடலாம், இரசாயன உரத்தை உற்பத்தி செய்கின்ற உரத் தொழிற்சாலையில் நுழைந்து அவர்களிடத்தில் உள்ள இருப்புகளைக் கேட்கவோ, கலப்படம் செய்கிறார்களா என்று பார்க்கவோ அதிகாரம் கிடையாது. ஆகவேதான் அந்த அதிகாரத்தை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறோம்.

பெர்டிலைசர் கண்ட்ரோல் ஆர்டரின் கீழ் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 1971-72-ல் 96 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன; 1972-73-ல் 243; 1973-74-ல் (30-11-1973 வரை) 179 வழக்குகள் இப்போது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நாம் நடவடிக்கை எடுக்காமல் இல்லை, ஆனால் தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு நாம் அதிகாரம் கேட்டதற்கு, அவர்கள் 1966-லேயே முடிவு எடுத்து விட்டோம், தொழிற்சாலைகள் தொழில் நடத்த பணம் வேண்டுமென்பதற்காக அந்த வழிவகை செய்யப்பட்டிருக் கிறது என்று அவர்கள் நமக்குக் கறாராக பதில் எழுதி விட்டார்கள் என்பதை இந்த அவைக்குச் சொல்வதை என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தேவையான உரத்தைக் கேட்டால் நமக்குத் தருவதாகச் சொல்வதும் பாதி, பிறகு, சொன்னதிலே நமக்குக் கிடைத்ததும் மிகவும் குறைவு, கிடைக்கக்கூடிய குறைவான இரசாயன உரத்தையும் - உள்நாட்டு இரசாயன உரத்திலே - 60 சதவீதத்தை தனியார் ஏஜெண்டுகள் மூலமாகத்தான் விநியோகிக்க வேண்டும். அந்தக் கொள்கை மாற்றப்பட்டாக வேண்டும். இந்தக் கொள்கை மாற்றப் படுமானால் இப்பொழுது கிடைக்கின்ற உரத்தை விநியோகிக்க நம்மால் நிச்சயமாக முடியும்.

ஒரு குறுக்குக் கேள்வி எழும். இதற்கு முன்னே அரசாங்கச் சார்பில் விநியோகிக்கும்போது கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள்

நடைபெறவில்லையா என்று. அவை வேறோரிடத்தில் நடை பெற்றாலும் அவை உடனடியாக நடவடிக்கைகளுக்கு ஆளா கின்றன என்பதையும் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

நம்முடைய ஜோதி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சில முக்கியமான பிரச்சினைகளை இங்கே எழுப்பினார்கள். அதிலே மிக முக்கியமாக சிறுவாணித் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் எப்படி, எப்படி ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள், ஏனென்றால் ஏற்கெனவே மிகப் பயங்கரமாக விதிகளைப் போட்டார்கள், இப்போது எவ்வாறு ஒப்பந்தம் அமைந்திருக்கிறது என்று கேட்டார்கள். சில பேர் கோயம்புத்தூர் தேர்தலுக்காக சிறுவாணித் திட்டம் வருவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், 10-5-1969-இல், நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் நானும் நண்பர் மதி அவர்களும் திருவனந்த புரத்திற்குச் சென்று அங்கே திரு. ஈ. எம். எஸ். அவர்களோடு - அவர் அப்பொழுது முதலமைச்சராக இருந்தார் - பேச்சுவார்த்தைகளை நடத்தி அதன் தொடர்பாக பல கட்டங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்று நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கேரள மாநிலத்து அமைச்சர்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று, 19-8-1973-இல் இரு அரசுகளுக்கிடையே நல்ல ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தினுடைய ஷரத்துக்கள் என்ன என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(1) கோயம்புத்தூர் நகராட்சி நகருக்கும் அதனை அடுத்துள்ள பகுதிகளுக்கும் தேவைப்படும் குடிநீரினை வழங்கு வதற்காக ஒவ்வொரு ஆண்டும் சிறுவாணித் திட்டத்திலிருந்து 1,300 மில்லியன் கன அடிக்கு மேற்படாத நீர் (சராசரியாக அன்றாடம் வழங்கப்படும் நீர் அளவு 223 இலட்சம் காலன்) திருப்பிவிடப்படும். இதில் வீடு, சமுதாயம், தொழிற்சாலை தேவைகளுக்கு நீர் வழங்கப்படுவது அடங்கும், ஆனால் பாசனத்திற்கு நீர் வழங்கப்படுவது அடங்காது.

(2) இந்த அணை, தமிழ்நாடு அரசின் செலவில் கேரள அரசால் கேரளப் பகுதிக்குள்ளேயே கட்டப்பட்டு பேணிவரப்படும்.

(3) நீர்த் தேக்க நீரை முறைப்படுத்தி வழங்கும் வகையில் இவ்விரண்டு அரசுகளையும் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட கூட்டுக் கட்டுப்பாட்டுக் குழு ஒன்று செயல்படும்.

(4) இந்த அணையை ஏறத்தாழ நான்காண்டு கால அளவில் முடிப்பதற்கு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ள கேரள அரசு ஒப்புக்கொள்கிறது.

(5) இந்த ஒப்பந்தம் 99 ஆண்டு காலத்திற்கு முழுமையாகச் செயலில் இருந்து வரும். இது தமிழ்நாடு அரசின் விருப்பத்தின் பேரில், இரு தரப்பாரும் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் புதுப்பிக்கப்படத்தக்கதாகும்.

(6) இவ்விரு தரப்புகளுக்குமிடையே எச்சமயத்திலும் தோன்றக்கூடிய ஒரு தகராறு, ஐயப்பாடு, கருத்து வேற்றுமை, அல்லது பிரச்சினைகள் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்படும்.

இப்படி நல்ல முறையிலே இரண்டு அரசுகளுக்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல் சுமுகமான முறையிலே இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட காரணத்தால், திரு. அச்சுத மேனனும், நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும் கோயம்புத்தூரிலே திறப்பு விழாவிற்குச் சென்றபொழுது சிறுவாணித் திட்ட விழாவில், மக்கள் பாராட்டைப் பெற்று நடைபெறுகின்ற அந்த விழாவில் கேரளமும் தமிழ்நாடும் பக்கத்திலே பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள் ஒன்றுக்கொன்று எவ்வாறெல்லாம் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்ற முறையிலே கேரளத்திற்கு ஒரு ஆண்டிற்கு15 ஆயிரம் டன் அரிசி வழங்கத் தயாராக இருப்பதாக - பேரம் அல்ல - சொன்னேன்.

திரு. அச்சுத மேனன் பேசுகின்ற நேரத்திலே தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை வருகிறபோது மின்சாரம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். குடியரசு நாள் விழா கூட கொண்டாட முடியாத நிலையில் உள்ள குஜராத்திற்கு உணவு வழங்கினோம், கர்நாடகத்திற்கு உணவு வழங்கினோம், மராட்டியத்திற்கு உணவு வழங்கினோம், மேற்கு வங்கத்திற்கு உணவு வழங்கினோம், பல்வேறு மாநிலங்களுக்கு உணவு வழங்கி வருகிறோம். அப்படி வழங்கிக்கொண்டிருக்கும் பொழுதே இடையிலே ஒரு உத்திரவு வந்தது; எங்களைக்

கேட்காமலேயே மத்திய அரசின் வாயிலாக அல்லாமல் மாநிலங்கள் அவர்களுக்குள்ளே உணவு வழங்குவதைப்பற்றி மத்திய அரசிடமிருந்து கட்டளை வந்தது. அவற்றையெல்லாம் சொன்னால் மாநில சுயாட்சி வாதம் ஆரம்பமாகிவிடும். நம்முடைய பெரியவர் திரு. மணலி அவர்கள் அதற்காக இரண்டு, மூன்று நாட்கள் தனியாக ஒதுக்கி விவாதிக்கலாம் என்றார்கள். ஆகவே அதை . . . .

திருமதி. த. ந. அனந்தநாயகி : மற்ற மாநிலங்களுக்கு உணவு கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். உணவு வழங்குகிற முறையிலே அரசாங்கமே நெல்லை ப்ரக்யூர் செய்கிறார்களா? அல்லது தனி வியாபாரிகள் இங்கே வந்து கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எப்.சி.ஐ. மூலமாகத்தான் வழங்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசு அந்தத் தடையை நீக்கி விட்டதாகச் சொல்லப்படுகிறதே. அப்படி பத்திரிகைகளிலேயெல்லாம் வந்ததே அது உண்மையா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்தத் தடை நீங்கியதாகத் தெரியவில்லை. அம்மையார் அவர்கள் மாநில அரசுகளுக்கு உணவு வழங்குவதைப் பாராட்டுகிறேன் என்று சொன்னார்கள். அதோடு அடுத்த வார்த்தையையும் சொல்லி யிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்படி உணவு வழங்குவதைத் தடுப்பதைக் கண்டிக்கிறேன் என்று சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன், பரவாயில்லை, அவர்களை நான் அப்படிப்பட்ட ஆபத்திலே சிக்கவைக்க விரும்பவில்லை.

குஜராத்திலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டு அங்கே இதுவரையிலும் 30, 40 பேர்கள் போராட்டத்திலே இறந்திருக் கிறார்கள் என்று அரசாங்கம் தருகிற கணக்குப்படி, ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலே வருகின்ற குறிப்புப்படி தெரிகிறது. தமிழ்நாட்டிலே விவசாயிகள் போராட்டத்திலே 20 பேர்கள் இறந்தபொழுது பிரதம மந்திரி அவர்கள் தமிழக அரசின் அணுகுமுறை சரியாக இல்லை என்று சொன்னார்கள். குஜராத்தின்

அணுகுமுறை தமிழக அரசிற்கு வரவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுதுகூட தமிழக அரசின் சார்பில் குஜராத்தின் கஷ்டத்தைப் போக்க நம்மால் முடிந்த அளவுக்கு அரிசி அளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் ஆளுநர் உரை விவாதத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (கைதட்டல்) பட்டினிப் போராட்டம் காந்தி பிறந்த மாநிலத்திலேயே நடைபெறுகிறது என்பதாலும், இந்தியாவிலேயே இந்திப் போராட்டத்தின்மூலம் குடியரசு நாள் விழாகூட கொண்டாட முடியாத மாநிலமாக இருப்பதாலும்; குடியரசு நாளிலே கூட துப்பாக்கிச் சூடுகள் ஓயவில்லை என்ற நிலைமை இருக்கிற மாநிலமாக இருக்கிறது என்பதாலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு இயன்ற உதவியை குஜராத் மாநிலத்திற்கு செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. எல்லாக் குற்றச்சாட்டு களுக்கும் பதில் அளிக்க விரும்பவில்லை. ஏனென்றால் பல தவறுகளுக்கு வழக்கு போடப்படவில்லை, போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான் விசாரித்துப் பார்த்ததில் வழக்குகள் போடப்பட்டும் அல்லது போலீஸார் புலனாய்வு நடைபெறுகின்றன என்றும் செய்திகள் வருகின்ற காரணத்தினால் அவைகளுக்கு எல்லாம் நான் விரிவான விளக்கங்கள் சொல்ல விரும்பவில்லை, நேரம் போதாத காரணத்தால், ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற எந்தப் புகாராக இருந்தாலும், எந்த அதிகாரி மீது சொல்லி இருந்தாலும் சரி, வேறு யார்மீது சொல்லியிருந்தாலும் சரி, இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சென்னை திரைப்படக் கல்லூரிபற்றிப் பேசப்பட்டது. ஏதோ அந்தக் கல்லூரிக்கு 60 இலட்சம் ரூபாய் கொடுக்கப் பட்டதாகவும் அந்த 60 இலட்சம் எங்கே போனது என்ற கேள்வி எழுந்தது. பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை மாத்திரம் வைத்துக் கொண்டு குற்றச்சாட்டுகளிலே நுழைவது சரியல்ல என்பதை எனது அன்பிற்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய உறுப்பினர் களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ 60 இலட்சம் அப்படியே கொடுக்கப்பட்டு ஏப்பம்

விடப்பட்டது போல எங்கே சென்றது என்று கேள்விகளை எழுப்புவது முறையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அறுபது இலட்ச ரூபாய்க்கு ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டது. அந்த மாஸ்டர் பிளான் மூலமாக ஐந்தாண்டுக் காலத்திலே திரைப்படப் பிரிவின் வளர்ச்சிக்காக 60 இலட்சம் ரூபாய் செலவழிக்கலாம் என்று திட்டமிடப்பட்டது. இது அன்னியில் பட்ஜெட் மூலமாக ஒதுக்குவது வேறு. இந்த 60 இலட்சம் ரூபாய் மாஸ்டர் பிளான் என்ற அடிப்படையிலே ஒதுக்கப் பட்டது. 1970-71-ஆம் ஆண்டில் திரைப்படக் கல்லூரிக்குக் கருவிகள் வாங்க ரூபாய் 1,89,000, மாணவர்கள் படம் எடுக்க ரூபாய் 18,000 செலவழிக்கப்பட்டது. 1971-72-ஆம் ஆண்டில் திரைப்படக் கருவிகள் வாங்க ரூபாய் 39,000, மாணவர்கள் படம் எடுக்க ரூபாய் 38,000, கட்டடங்கள் கட்ட ரூ. 28,000 செலவழிக்கப்பட்டது. 1972-73-ஆம் ஆண்டில் கருவிகள் வாங்க ரூபாய் 2,66,000 மாணவர்கள் படம் எடுக்க 58,000 ரூபாய், கட்டடங்கள் கட்ட 6,00,000 ரூபாய் செலவழிக்கப்பட்டது. இப்பொழுதுதான் நாங்கள் சென்று அந்தக் கட்டடங்களைத் திறந்துவைத்தோம். 6 இலட்சம் ரூபாய் கட்டடம். ஆகவே 1970-71-ஆம் ஆண்டு முதல் 1973-74-ஆம் ஆண்டு வரையிலே கருவிகள் வாங்குவதற்காக 4,94,000 ரூபாயும் மாணவர்கள் படம் எடுக்க 1,14,000 ரூபாயும், கட்டடங்கள் கட்டுவதற்காக 11,11,000 ரூபாயும் ஆகமொத்தம் 17 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது.

ஆனால் 60 இலட்சம் எங்கே என்றும் கருணாநிதி பாக்கெட்டிலே போட்டுக் கொண்டாரா? வீடு கட்டிக்கொண்டாரா? எங்கே சென்றது? யார் எடுத்துக் கொண்டார்கள் என்றெல்லாம் கேட்பது சரியல்ல. 60 இலட்ச ரூபாய் திட்டத்தில் 17 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் சில கோரிக்கைகளை எழுப்பினார்கள். திரு. கே. டி. கே. அவர்கள் கேட்டதற்கு அன்றைக்கே நான் விளக்கங்களைச் சொல்லியிருக்கிறேன். வெளிநாட்டிலிருந்து ஒரு கருவி 12 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவி, திரைப்படக் கல்லூரிக்கு வேண்டியிருக்கிறது, அதற்காக அன்னியச் செலாவணி கேட்டு நாம் மத்திய அரசுக்கு எழுதி சுமார் 3 நாட்கள் அல்ல,

மூன்று வாராங்கள் அல்ல, மூன்று மாதங்கள் அல்ல, மூன்று ஆண்டுக் காலமாக அனுமதி மத்திய சர்க்காரிடத் திலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். திரைப்படக் கல்லூரிக்கு 12 இலட்ச ரூபாய்க்குக் கருவி வாங்குவதற்காக அன்னியச் செலவாணி கேட்டு நாம் அனுப்பியுள்ள விண்ணப்பம் மத்திய அரசிடம் தேங்கிக்கிடக்கிறது. ஆகவே மாணவர்களுடைய தேவையை நாம் நிறைவுசெய்ய முடியாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அரகண்டநல்லூரைப்பற்றி நம்முடைய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது கூறினார்கள். எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் அதிகமான விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. ஆனாலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்று எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். 1972 ஜூன் மாதத்தில் அரகண்டநல்லூரைச் சேர்ந்த திரு. ஷேக் ராவுத்தர் என்பவர் லெவி நெல்லை வாங்கி அரிசியாக்கும் முகவராக - ஏஜெண்டாக - நியமிக்கப்பட்டார். 1972 டிசம்பரில் நெல்மூட்டைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறினார். பிறகு, அவர் கொடுத்த செய்தி பொய் என்று தெய்வசிகாமணி என்பவர் கடிதம் எழுதினார். உடனடியாக அதைக் கலெக்டருக்கு அனுப்பி விசாரிக்கச் சொன்னேன். 1973 சனவரி மாதம், அவர் கொடுத்த செய்தி பொய் என்று தெரியவந்தது. பிறகு மார்ச் திங்களில் கோட்டாட்சித் தலைவர் - ஆர்.டி.ஓ. - விசாரணை செய்தார். பிறகு மே மாதம் 2-ம் தேதி தாலுக்கா சப்ளை அதிகாரி காந்தராஜ் சஸ்பண்டு செய்யப்பட்டார். தாசில்தார் அஜீஸ் கான் மே மாதம் 6-ஆம் தேதி சஸ்பண்ட் செய்யப்பட்டார். ஜூன் மாதம் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் பேரில் உணவுத் துறைக்கும், காவல் துறைக்கும், விசாரணை செய்ய ஒப்படைக்கப் பட்டது. ஜூலை மாதத்தில், வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் அரசுக்கு ஏற்பட்ட இழப்புத் தொகையை ஏன் வசூல் செய்யக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஷேக் ராவுத்தருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. பிறகு ஆகஸ்டு மாதம் ஷேக் ராவுத்தர் கைது செய்யப்பட்டு பின்பு ஜாமீனில் வெளியே வந்தார். அதே ஆகஸ்டு மாதம் 17-ஆம் தேதி அவர் மேல் சிவில்,

கிரிமினல் நடவடிக்கை எடுப்பதை உயர்நீதி மன்றம் தடை செய்தது. அப்படித் தடை உத்தரவு வந்த பிறகும் வாளாவிருக்கவில்லை.

17-8-1973 அன்று ஷேக் ராவுத்தரிடமிருந்து பாக்கி வசூல் செய்வதை உயர்நீதிமன்றம் தற்காலிகமாக தடை செய்துவிட்ட படியால், மேற்படி ஷேக் ராவுத்தரின் தாவர, ஜங்கம் சொத்துகளை "கிரிமினல் லா-அமெண்ட்மெண்ட்-ஆர்டினன்ஸ்" ஆக்டின்படி ஜப்தி செய்ய அனுமதி கோரி மாவட்ட நீதி மன்றத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை மனுசெய்துகொள்ளும்படி அரசு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டிருக்கிறது. ஆகவே, இது தொடர்பாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கம்பத்தில் ஏதோ போலீசார் கள்ள நோட்டைப் பிடிக்கும் விவகாரத்தில் கேரள அரசோடு ஒத்துழைக்கவில்லை என்பதாக "மலையாள மனோரமா" என்ற பத்திரிகையில் தகவல் வந்ததாக கம்பம் கோபால் அவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இதிலே உள்ள விசித்திரம் என்னவென்றால், கம்பத்திலேயிருந்த போலீசார் தீவிரமாக ஒத்துழைத்தார்கள் என்பதுதான் உண்மை. 1-12-1973-ஆம் தேதியன்று கேரள போலீசைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த கள்ளநோட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட சில நபர்களைப் பிடிப்பதற்காக கம்பத்திற்கு வந்திருந்தார்கள். அது சமயம் தமிழ்நாட்டு போலீசார் - அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்த தகவலின் பேரில் இந்தக் கள்ள நோட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவர்களையும், அச்சடிக்கப்பட்ட செந்தாமரை அச்சகத்தையும் கண்காணித்து வந்தார்கள். போலீசிலே ஒற்றர் முறை என்று உண்டு. சிலரோடு அணுகியே ஆராய்வார்கள். இப்படி அணாகியிருந்த நேரத்தில் இவர்களையும் குற்றவாளிகள் என எண்ணிவிட்டார்கள். இது இவர்களுடைய திறமையைக் காட்டுகிறது. 1-ஆம் தேதி கைது செய்ய வேண்டுமென்று வந்தார்கள். நமது போலீசார் 6-ஆம் தேதி குற்றவாளிகளைக் கண்டு பிடித்து கைது செய்து, அச்சு இயந்திரத்தைக் கைப்பற்றி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. எனவே, 6-ஆம் தேதி கேரள போலீசார் வந்தார்கள். 6-ஆம் தேதி குற்றவாளிகள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பத்திரிகையில் இப்படிப்பட்ட

ஒரு செய்தி வந்து, அதில் இங்கேயுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் ஒரு செய்தி திரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

முழுக்க முழுக்க, வழக்கிலே சம்பந்தப்பட்ட அனைவரும் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களெல்லாம் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். விஸ்தாரமாக, பெரிய திட்டம் கேரளாவிலேதான் போடப்பட்டதாக தகவல் வந்திருக்கிறது. ஏற்கனவே கள்ள நோட்டு வழக்கில் சம்பந்தப்பட்டு, தண்டனை பெற்று அந்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் அப்பீலில் இருக்கும் போது அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விரோதிகள் மறுபடியும் கள்ள நோட்டு அச்சடிக்கச் சதி செய்திருக்கிறார்கள். தண்டித்தால் ஒரே தண்டனையாக வரட்டும் என்ற எண்ணமோ என்னவோ தெரியவில்லை. அதற்குத் தேவையான அச்சு இயந்திரம் மற்றும் உபகரணங்களை கேரளத்தில் இருந்து கொண்டு வந்து மறுபடியும் அச்சடித்திருக்கிறார்கள். இந்தச் சதி நடந்த விரிவான ஏற்பாடு களைப் பற்றி மேற்கண்ட பத்திரிகையோ, துண்டுப் பிரசுரமோ குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரளத்திலேயும், தமிழ்நாட்டிலேயுள்ள சில பத்திரிகைகளைப்போல் ஒரு பத்திரிகை இருப்பதற்காக வருந்துகிறேன். ஒருவேளை அந்தப் பத்திரிகைக்குத் தவறான தகவல் கொடுக்கப் பட்டிருக்குமேயானால் "மலையாள மனோரமா" என்ற அந்தப் பத்திரிகை தன் தவறைத் திருத்திக்கொள்ளும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, திரு. எட்மண்ட் அவர்கள் நெல்லையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்காக வாங்கப்பட்ட நிலத்தைப்பற்றிக் கூறினார்கள். அன்றைக்கே நான் சொன்னேன், 3 ஏக்கர் 3 இலட்சம் என்று சொல்லிவிட்டு விடக்கூடாது என்று. ஏக்கர் என்றால் எவ்வளவு, அதற்கு எத்தனை கிரவுண்டுகள், எத்தனை சென்டு என்ற அந்தக் கணக்கைப் பார்க்காமல் 3 ஏக்கர் 3 இலட்சம் என்று சொல்வது நல்லது அல்ல. அப்படி அந்த இடத்தில் வாங்கப்பட்டது என்றால், அது எவ்வளவு மையமான இடம், பக்கத்து நிலத்தின் விலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னார்கள், ஒரு ஏக்கர் நிலம் 10,000 ரூபாய்க்கு மேல் விலை போகாது, ஆக 30,000 ரூபாய்க்கு வாங்கக் கூடிய நிலத்தை 3 லட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக் கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு பாளையங் கோட்டை நகரில் டி. எஸ். எண். 723/1 ஏ, 723/2, 724/1, ஆகிய சர்வே எண்களில் அடங்கியுள்ள 3 ஏக்கர் 39 செண்ட் நிலத்தை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் அலுவலகம் கட்டுவதற்கும், பணிமனை கட்டுவதற்கும், வாங்க உத்தேசித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நிலத்தினுடைய மதிப்பைத் தெரிவிக்குமாறு கடிதம் எழுதப்பட்டது. 724/1 சர்வே எண்ணில் ஒரு கட்டடம் உள்ளது என்பதையும் நம்முடைய எட்மண்ட் அவர்கள் மறந்துவிட்டு ஒரு தவறான தகவலைக் கூறினார்கள். இவ்வளவு சம்பிரதாயங்களுக்குப் பிறகு விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. வெறும் நிலம் மட்டுமல்ல, ஒரு கட்டிடமும் இருக்கிறது. அந்தக் கட்டிடத்திற்குப் பொதுபணித் துறையின் மதிப்பீடு 50,000 ரூபாய். விற்பவர்கள் இலட்சம் ரூபாய் கூடச் சொன்னார்கள், ஆனால் பொதுப் பணித்துறையின், மதிப்பீடு 50,000 ரூபாய். ஆனால் பக்கத்தில் உள்ள நிலம் 64-ஆம் ஆண்டு வாங்கப்பட்ட நிலம். யாரும் தனிப்பட்டவர்கள் அல்ல, ஒரு சர்ச். Indian Evangelical Luthern Church Trust Association என்கின்ற அசோசியேஷன் 1964-ஆம் ஆண்டு, 7-11-1964-இல், இப்பொழுது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு வாங்கப்பட்டிருக்கும் நிலத்திற்கு அருகில், 742/1-பி, 742/3-ஏ ஆகிய சர்வே எண்களில் அடங்கியுள்ள 25 செண்ட் நிலங்களை வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் வாங்கியுள்ள நிலத்திற்கும், அந்த நிலத்திற்கும் இடையிலே உள்ள தூரம் 12 அடிதான். என்ன விலை தெரியுமா? அவர்களுக்கு முதலிலே ஒரு கிரவுண்ட் என்றால், என்ன கணக்கு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 5½ செண்ட் கொண்டது ஒரு கிரவுண்டு. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு நாம் கொடுத்துள்ள விலை 5½ செண்ட் கொண்ட ஒரு கிரவுண்டுக்கு ரூ. 4,031.50 காசு ஒரு கிரவுண்டுக்கு. மாதாகோவில் டிரஸ்ட், 1964-ம் ஆண்டில் 5,500 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த சர்வே எண்களில் 723/1-ஏ, 1 ஏக்கர் 30 செண்ட் இருபோக நஞ்சை நிலம், சர்வே எண் 723/2 நிலம் 41 செண்ட் புஞ்சை, சர்வே எண் 724/1 நிலம் 1 ஏக்கர் 68 செண்ட் புஞ்சை நிலம். ஆகவே 3 ஏக்கர் 39 செண்ட் நிலம், வெறும் 3 ஏக்கர் மட்டுமல்ல, 3 ஏக்கர் 39 செண்ட், 50,000

ரூபாய் பெறுமானமுள்ளது என்று பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டிடம் இவைகளைச் சேர்த்துதான், ஏற்கனவே 5,500 ரூபாய்க்கு வாங்கப் பட்டுள்ள இடத்திற்கு 12 அடி தொலைவில்தான் வாங்கப் பட்டுள்ளது. நகரின் மையமான இடத்தில். பக்கத்தில் ஒரு வீட்டுக்காரர், பத்திரிகைக்காரர் அங்கு பத்திரிகை நடத்திக் கொண்டிருப்பவர், திருநெல்வேலி பத்திரிகைக்காரர், தினமலர் பத்திரிகைக்காரர் - அவர் இந்த இடத்தை இங்கே வாங்கிவிட்டால் தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால் படிப்பட்ட ஒரு செய்தி கர்த்தாவாக இருந்து வருகிறார் என்பதால் 3 லட்சம் 3 ஏக்கர் என்று சொல்லப்படுகிறது. 1964-லே ஒரு கிரவுண்டு 5,500 ரூபாய்க்கு வாங்கப்பட்ட இடத்திற்கு அருகில் 4,031 ரூபாய் 50 காசு என்ற கிரயத்தைக் கொடுத்துத்தான் வாங்கப் பட்டிருக்கிறது. எனவே இதிலே எந்விதமான தவறும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காயாமொழி என்ற இடத்தில் நஞ்சை வயலே கிடையாது, அங்கு கார்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். காயா மொழி என்ற இடத்தில் 222 ஏக்கர் நஞ்சை நிலம் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஒருவேளை அது சரியாக இல்லாவிட்டால் நான் திருநெல்வேலிக்கு வரும் நேரத்தில், எட்மண்ட் அவர்கள் - பயப்படமாட்டார்கள் என்று கருதுகின்றேன், நாங்கள் வலை வீசுவதாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன் - அந்த வகையில் அவர்களோடு போய் நிலைமையைத் தெரிந்துகொள்ள நிச்சயமாக நான் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிம்சனைப் பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துக் கூறினார்கள். சிம்சன் விவகாரத்தில் 45 நாட்களில் விசாரணை முடிய வேண்டு மென்று சொல்லப்பட்டிருந்தும்கூட 160 விசாரணைக்கு மேல் நடை பெற்றதாலும், 600-க்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப் பட்டதாலும் நாள் கடந்து விட்டது.

இப்போது அவர்களும் விசாரணைகளை எல்லாம் முடித்து விட்டார்கள். முதலமைச்சருக்கு விரைவில் அந்த விசாரணை யினுடைய விவரங்களை அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். அது அனுப்பப்பட்டதும் சீக்கிரமாகப் பரிசீலனை செய்து

தக்க முடிவு எடுக்கப்படும் என்ற உறுதியினை நான் இங்கே இந்த விவகாரத்தை எடுத்துச் சொன்ன மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் அத்தனை பேருக்கும் எடுத்துச் சொல்லி, இந்த விவாதத்தில் பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன அனைவருக்கும் மனதார நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன். வணக்கம். (ஆரவாரம்)

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் சிம்சன் தொழிலாளர்கள் தலைவர்கள் வந்து பார்த்தபோது 45 நாட்களுக்குள்ளாக முடித்துவிடுகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்களும் அதை நம்பினார்கள். 45 நாட்களுக்குள்ளாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. கால தாமதம் எதனால் ஏற்பட்டது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சொன்னேன், நீங்கள் கவனிக்கவில்லை. 160 விசாரணைகள் நடந்திருக்கின்றன. 600 சாட்சிகளை விசாரிக்க தாமதம் ஏற்பட்டது. இப்போது முடித்து விட்டார்கள், எனக்கு அனுப்பி வைக்கப்படும் என்று சொன்னார்கள். வந்ததும் தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. முனு ஆதி : நான் சொன்னவை மீது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதுபற்றி இப்போது சொல்லப்படுமா, பின்னால் சொல்லப்படுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஆதி அவர்கள் திருமுடிவாக்கத்தில் ஒருவருக்கு ஃபைன் போடப்பட்டது பற்றிச் சொன்னார்கள். அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஒரு பெண்ணை பலாத்காரம் செய்தார் என்ற காரணத்தால் ஊர் மக்களே பஞ்சாயத்தில் கூடி அபராதம் போடப்பட்டதாகவும், அவரும் கட்டிவிட்டார் என்றும் தகவல் வந்திருக்கிறது. மேலும் விசாரித்துச் சொல்லுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பாளையங்கோட்டை, கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்திற்குப் பிற்பாடு மாணவர்கள் கிளர்ச்சியின் காரணமாக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டி ருக்கின்றன. அவற்றைப் புனர் பரிசீலனை செய்து வாபஸ் வாங்க இந்த அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, repatriates from Burma and Ceylon are without any help and what steps the Government have taken to render assistance to them. This is a very important issue and I would like to have some sort of explanation from the Hon. Chief Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு கருத்துக்கும் முதலமைச்சரிடத்தில் விளக்கம் கேட்கக் கூடாது.

(திரு. முனு ஆதி எழுந்தார்,)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : Sir, it is not usual to press the amendment. So I am not pressing it.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் திருத்தங்கள் எல்லாம் ஒரே திருத்தமாக என்னுடைய பெயரிலே இருக்கின்றன. நான் மூன்றாவது பக்கத்தில் இருக்கக்கூடிய திருத்தம் 13-ஐ மாத்திரம் வற்புறுத்த விரும்புகிறேன்.

'the spiralling price and mal-administration of essential commodities like chemical fertilisers, cement, sugar, yarn, etc.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தம் ஒரே திருத்தந்தான். திருத்தத்திற்கு அமெண்ட்மெண்ட் கொடுக்க முடியாது. முழுமையாக வற்புறுத்துகிறீர்களா? திரும்பப் பெறுகிறீர்களா? ஒரு பகுதியை மட்டும் வற்புறுத்துகிறேன் என்று சொல்ல முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் திருத்தங்களைத் தனித்தனியாகத்தான் கொடுத்தேன். எப்படியோ எல்லாவற்றையும்

ஒன்றாக "கிளப்" பண்ணியிருக்கிறார்கள். குறிப்பிட்ட இந்தத் திருத்தத்தை நான் வற்புறுத்த விரும்புகிறேன். அது கஷ்டமாக இருக்குமென்றால் திருத்தத்தை அப்படியே வற்புறுத்துகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திருமதி த. ந. அனந்தநாயகி : விலையேற்றம் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது. உணவுப் பிரச்சினைப் பற்றிப் முதலமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை, விலையைக் குறைக்கப் போகிறாரா இல்லையா, விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப் போகிறார் இல்லையா என்று தெரியவில்லை. ஆகவே, திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதைப் பற்றிப் பிரதமரைக் கலந்து கொண்டு சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத்தை வற்புறுத்துகிறார்களா இல்லையா என்று மட்டுந்தான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணத்தை எல்லாம் இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

திருமதி. அனந்தநாயகி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. ஆ. கு. சுப்பையாவின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முதலமைச்சருடைய சமாதானம் சரியாக இல்லையென்ற காரணத்தால் நான் என்னுடைய ஏழு திருத்தங்களையும் வலியுறுத்துகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

திரு. சோ. அழகர்சாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்குவிடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. என். கே. பழனிசாமி : நான் 1, 2, 3 திருத்தங்களை வற்புறுத்துகிறேன்.

திருத்தங்கள் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி - "1974-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ஆம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடைய வர்களாவர்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



உரை : 12 நாள் : 27.02.1975

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது அருமை நண்பர் கணேசன் அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒட்டியும், திருத்தங்களைத் தந்து அதனை ஒட்டியும் இந்த அவையிலே மிகச் சிறப்பான விவாதங்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. நம்முடைய நண்பர் எட்மண்ட் அவர்கள் ஆளுநர் உரையைக் கண்டிக்கிறேன் என்று குறிப்பிட்டு, முதல் அமைச்சரைப் பாராட்டுகிறேன் என்று தன்னுடைய வாதத்தைத் தொடங்கினார். அந்தப் பாராட்டுக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் பாராட்டியதற்கான காரணத்தைத் தொடர்ந்து குறிப்பிட்டார். முதல் அமைச்சர் மத்திய அரசின் மீது எப்படிப்பட்ட குறைபாடுகளைச் சொல்ல வேண்டும் என்று கருதுகிறார்களோ, அவைகளையெல்லாம் கவர்னர் வாயிலாக எடுத்துச் சொல்வதில் வெற்றி பெற்றிருக்கிறார், ஆகவே அவரைப் பாராட்டுகிறேன் என்று எனக்குப் பாராட்டுதலைத் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டில் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டபோதும், ஆளுநர் உரையாற்றி யிருக்கிறார்கள். 1968-ம் ஆண்டில் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோதும் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் இந்த மன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்கள். எட்மண்ட் அவர்கள் சொன்ன வாதத்தின்படியும் மற்றும் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிற அடிப்படையிலும் ஆளுநர் உரைகள் அரசின் உரைகள்தான். ஆளுநர் உரை என்பது ஒரு சம்பிரதாயம். அரசினுடைய கொள்கைகள்தான் அதில் எடுத்துச் சொல்லப்படுகின்றன. அரசினுடைய திட்டங்கள், எதிர்கால

நடவடிக்கைகள் இவற்றிற்கான குறிப்புகள் ஆளுநர் உரையில் காட்டப்படுகின்றன. 1967-ம் ஆண்டு அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபொழுது ஆற்றிய உரையிலும், எப்படி இன்றைக்கு ஆளுநர் உரையிலே முதல் அமைச்சருடைய கருத்துக்கள் எதிர் ஒலிக்கின்றன மத்திய அரசைப்பற்றி என்று குறிப்பிட்டிருக்கிறாரோ அதைப்போலவே, அன்றைக்கும் அண்ணா அவர்களுடைய கருத்துக்கள்தான் அந்த உரையிலே எதிரொலித்திருக்கின்றன. சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது :

> "கூட்டு அரசியல் அமைப்பு முறை" (Federal Constitution) ஒன்றிற்குட்பட்டு மாநில அரசாங்கம் இயங்க வேண்டிய நிலையில் உள்ளது. நாடு முழுவதற்கும் ஏற்றதொரு பொருளாதாரக் கொள்கையை நெறிமுறைப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தை சார்ந்தது. எனவே, மாநில அரசாங்கம் தனித்த முறையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் விலைவாசிகள் ஏற்றச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகைகள் பெருமளவில் முன்னேற்றம் காண முடியாத ஒரு நிலை இருப்பதையும் இவ்வரசாங்கம் உணர்ந்துள்ளது. . ."

அது மாத்திரமல்ல.

> "மக்களின் விருப்பங்களை நடைமுறையில் நிறைவேற்று வதற்கு தனக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கு வதற்கான ஏற்ற தருணம் வந்துவிட்டது என்றும் மாநில அரசாங்கம் கருதுகிறது. கூட்டு ஆட்சி நடை முறையில் மலரவேண்டும் என்ற எண்ணம் இன்று எங்கும் மேலோங்கியுள்ளது. . ."

அடுத்த சில பக்கங்களுக்குப் பிறகு,

> "நமது அரசியல் அமைப்பின் கூட்டாட்சி இயல்பை வலியுறுத்திச் சொல்லவேண்டிய அவசியமும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் நிலை எப்படியிருக்க வேண்டுமென்று முதலில் கருதப் பட்டதோ அந்த நிலையை அளிக்கவேண்டிய அவசியமும் இன்று தோன்றி யுள்ளன. திட்டத்தை தீட்டுவதிலும், செயலாற்றுவதிலும் தீட்டுவதிலும், செயலாற்றுவதிலும் மாநிலங்கள் இனியும்

செயலற்ற பார்வையாளர்களாக இல்லாமல், சுறுசுறுப்பான பங்கு கொள்பவர்களாக மாறவேண்டும். . .”

அது மாத்திரமல்ல. கவர்னர் உரைதான், முதல் அமைச்சரைப் பாராட்டினாரே எட்மண்ட் அவர்கள், அந்த முதல் அமைச்சர் தயாரித்த உரைதான்.

“மத்திய அமைச்சகங்களின் தற்போதைய பணியை மறு ஆய்வு செய்து, மாநிலங்களின் அதிகார வரம்பிற்குள் முற்றும் அடங்குகிற துறைகளில் மத்திய அமைச்சகங்கள் கடந்த சில ஆண்டுகளில் நிதி வரையறைகளையும், ஏனைய வரையறைகளையும் விதிப்பதன் வாயிலாக அதிகமாய்த் தலையிடத் தொடங்கியுள்ள இப்போக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும்.”

மேலும் 1968-ம் ஆண்டு கவர்னர் உரையில் குறிப்பிடுகிறார் :

“கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவத்தையொட்டி, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய நிதி வசதிகளையும் அதிகாரங்களையும் வரையறுக்கிற அரசியலமைப்பின் விதித்துறைகளை உயர்மட்ட அளவில் மறு ஆய்வு செய்தல் இன்றியமையாத தென்பது எனது அரசின் உறுதியான கருத்தாகும்.”

முதலமைச்சர் கருணாநிதி ஆளுநர் அவர்களுடைய உரையின் மூலமாக அந்தக் கருத்துக்களையெல்லாம் ஏற்றி, மத்திய அரசோடு ஆளுநரை போராட வைத்துவிட்டதாக திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். இது 1967-68-ல் அண்ணா அவர்கள் காட்டிய வழியே அல்லாமல், நாங்களாக உருவாக்கிக் கொண்ட வழி அல்ல என்பதையும், உள்ளபடியே அண்ணாவின் தம்பிகளாக இருப்பவர்கள் ஆட்சியை நடத்துகின்ற காரணத்தினால் 1967-ம் ஆண்டில் ஆளுநர் உரையில் எந்தக் கருத்துக்கள் இடம் பெற்றனவோ, அந்தக் கருத்துக்கள்தான் இப்பொழுது அறிவிக்கப்பட்ட ஆளுநர் உரையிலும் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன என்பதையும் நான் அவர்களுக்குக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையிலே இந்த அவையிலே பெரும்பாலும் இன்றைக்கு தமிழகத்திலுள்ள வறட்சி சூழல் பற்றி விரிவாகப் பேசப்பட்டிருக்கிறது. இந்த வறட்சியை எப்படி நாம் சமாளிப்பது என்பதற்கான ஆக்கபூர்வமான கருத்துக்களும் இங்கே எடுத்துச்சொல்லப்பட்டன. எதிர்க்கட்சி வரிசையிலிருந்து எதிர்த்தே தீரவேண்டும் என்கின்ற நிலைமையிலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்றாலும், நான் அவைகளையெல்லாம் பெரிதுபடுத்திக் கொண்டிராமல், எதிர்க்கட்சி வரிசையிலிருந்து சொல்லப்பட்ட கருத்துக்களில் ஏற்றுக்கொள்ளவேண்டிய கருத்துக்கள் இருக்குமேயானால் அவைகளையெல்லாம் நிச்சயம் ஏற்றுக்கொண்டு, இந்த வறட்சித் துயர் துடைப்புப் பணிகளை மிகவும் சீரிய முறையிலே செயல்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கிற மொத்தம் ஏறத்தாழ 17,000 ரெவின்யூ கிராமங்களில் 11,000 கிராமங்கள் வறட்சியால் தாக்கப் பட்டுள்ளன. இந்த 11,000 கிராமங்களில் வறட்சிப் பணிகளை நாம் தீவிரப்படுத்தவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அந்தக் காரணத்தினாலேதான் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக நடப்பு நிதியாண்டில் 10 கோடி ரூபாயை இந்த வறட்சி துயர் தணிப்பிற்காக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதற்காக 10 கோடி ரூபாய் நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்றாலும் வருவாய்த் துறை அமைச்சர் அன்றைக்கு வெளியிட்ட கருத்திற்கேற்ப இதுவரையில் 29,000 வேலைகள் 11½ கோடி ரூபாய் மதிப்பில் அனுமதிக்கப்பட்டு, அந்த வேலைகள் தொடங்கப்பெற்றுள்ளன.

இதன்னியில் - வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கியிருக்கிற அந்த 10 கோடி ரூபாய் அல்லாமல் இயல்பான திட்டச் செலவுகளுக்கு நடப்பு நிதியாண்டில் நாம் ஒதுக்கியிருக்கிற பணத்திலிருந்து வறட்சி நிவாரணப் பணிகளுக்கு, அந்த வேலைத் திட்டங்கள் நிறைவேறுவதற்கு திருப்பி விடப் பட்டிருக்கிற தொகை 7 கோடியாகும். ஆக, நடப்பு நிதியாண்டில் 17 கோடி ரூபாய் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நாம் செலவிடுவதற்கு முனைந்துள்ளோம்.

இந்த 17 கோடி ரூபாய் அல்லாமல் குடிநீர் திட்டத்திற்காக - அதிலும் குறிப்பாக வறட்சிப் பகுதிகளில் இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக குடிநீர் வாரியத்தின் மூலமாகவும் வேறுபல ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டத் திட்டங்களின் தன்மையிலும் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. இதையும் சேர்த்துக்கொள்வோமேயானால் கிட்டத் தட்ட 19 கோடி ரூபாய் அளவுக்கு நடப்பு நிதியாண்டில் நாம் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று கணக்கிடலாம்.

இந்த வறட்சி நிவாரணப் பணிகள் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்குப் பெரிதும் பயன்பட வேண்டுமென்பதும், அப்படி வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகிற நேரத்தில் உருவாக்கப் படுகின்ற திட்டங்கள் நிரந்தரமாகப் பயன்படக்கூடிய திட்டங் களாக அமைய வேண்டுமென்பதும் அரசின் கொள்கையாகும். அதற்கேற்பத்தான் சிறிய, நடுத்தர, சற்று பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு இந்தப் பணியில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, சொல்ல வேண்டுமானால் மிகப்பெரிய கண் மாய்களான இராஜசிங்கமங்கலம் ஏரியும், இராமநாதபுரம் பெரிய ஏரியும், திருப்பத்தூர் ஏரியும், புதுக்கோட்டையில் கபினாடு கண்மாயும் - இவைகள் எல்லாம் இந்த வறட்சி நிவாரணப் பணிகளையொட்டி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற மிகப் பெரும் பணிகளாகும்.

திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். வேறுபல எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போதும் எடுத்துச் சொன்னார்கள். வறட்சி வருகிற வரையில் இவைகளை ஆழப் படுத்த காத்திருக்க வேண்டுமா என்று கேட்டார்கள். வறட்சி வராமல் தண்ணீர் தேங்கி இருக்கிற காலத்தில் இவைகளை ஆழப் படுத்துவது என்பது இயலாத காரியம்.

கடந்த 1969-ம் ஆண்டு வறட்சி வந்தபோதுகூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி நான் அறிவித்தது நன்றாக நினைவிருக்கிறது. 'நாம் இந்த பாதகத்தை சாதகமாக

ஆக்கிக்கொண்டு, இந்த வறட்சியை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, குளங்கள், ஏரிகள், கண்மாய்கள், வாய்க்கால்கள் இவைகளை எல்லாம் ஆழப்படுத்துகின்ற பணியை உடனடியாக உருவாக்க வேண்டும்' என்று எடுத்துச் சொன்னேன். அதற்கேற்ப அன்றைக்கு ஆழப்படுத்தப்பட்ட மதுராந்தகம் போன்ற ஏரிகள் எல்லாம் மறுபடியும் பெய்த மழையின் காரணமாக ஏற்கெனவே இருந்த கொள்ளளவைவிட அதிகம் கொள்ளளவு பெற்றன என்பதை யாரும் மறுத்திட இயலாது. அப்படி பல நிரந்தரமான பணிகள் 1969-ம் ஆண்டில் உருவாக்கப்பட்டன.

நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். 60 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்று ஆளுநர் பெருமான் உரையிலே சொல்லப் பட்டிருக்கிறதே; அது எங்ஙனம் இயலும் என்று கேட்டார்கள். மனித நாள் - அதாவது மனித உழைப்பு நான் (மான் டேஸ்) என்ற வகையிலேதான் வருகின்ற 8, 9 மாதங்களில் ஏறத்தாழ 60 லட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தை தீட்டியிருக்கிறோம்.

அவர்கள் இன்னொரு ஐயப்பாட்டையும் எழுப்பினார்கள். 65 சதவிகிதம் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது - ஊதியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது; 35 சதவிகிதம் எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு என்று சொல்லப்பட்டிருக்கிறதே; அது சரியா, நியாயமா? அது தேவையா என்ற ஐயப்பாட்டை எழுப்பினார்கள். அதிலே 35 சதவிகிதம் எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு என்று கூறப்பட வில்லை. 65 சதவிகிதம் ஊதியமாகத் தரப்போகிறோம்; மீதம் 35 சதவிகிதம் இருக்கிறது என்பது சரியான வாதமாகும். ஆனால் அந்த 35 சதவிகிதம் பொதுவாக இந்த வேலைவாய்ப்புகளைப் பெறுபவர்களுக்காக வழங்கவேண்டிய மூலப் பொருட்கள் - சிமெண்ட், உருக்கு, செங்கல் மற்றும் குழாய்கள் - இவைகளை எல்லாம் வாங்குவதற்காக அந்த 35 சதவிகிதம் ஒதுக்கப் பட்டிருக்கிறதே அல்லாமல் அதை எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு என்று நாம் எண்ணிடத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணிகள் எப்படி நடைபெற வேண்டுமென்பதையும் இந்த அரசு வரையறை செய்திருக்கிறது. ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்களுடைய மேற்பார்வையிலே எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஆங்காங்கு இருக்கிற அதிகாரிகள் இவர்கள் அனைவரும் கலந்து இந்தப் பணிகள் ஒழுங்காக நடைபெறுகிறதை அடிக்கடி கண்காணித்து வருகிற முறைகளையெல்லாம் வகுத்து, 5,000 ரூபாய் வரையுள்ள பணிகளுக்கு பி.டி.ஓ. - வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அளவில் அனுமதிக்கலாம் என்றும், 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரையுள்ள பணிகளை கோட்ட ஆட்சி அதிகாரிகள் - ஆர்.டி.ஓ. - அனுமதிக்கலாம் என்றும், 10,000 ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதிக்கலாம் என்றும் அதற்கு மேற்பட்ட தொகையினை நிர்ணயித்து நடைபெறுகின்ற திட்டங்கள் அந்தந்தத் துறை தலைமை அதிகாரிகளையும் அரசையும் கலந்து முடிவெடுத்து அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் வரையறை செய்திருக்கிறோம்.

இதிலே கண்காணிப்புகள் வேண்டும், தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஏதோ அரசு இதில் கண்காணிப்பு இருக்கக்கூடாது என்று எண்ணுவது போலவும், அல்லது தவறு நடக்க வேண்டும்; அதன் காரணமாக ஒரு கெட்ட பெயரை இந்த அரசு வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமென்று கருதி இருப்பதைப் போலவும் எண்ணிக் கொண்டு கண்காணிப்பு வேண்டும், தவறு நடக்கக் கூடாது என்று பேசியதை அறிவுரைகளாக நான் எடுத்துக் கொள்கிறேன். ஆனால் தவறு நடக்கிறது, நடக்கிறது என்று வேண்டுமென்றே சுட்டிக்காட்டுவது நல்ல மரபை நிச்சயமாக வளர்க்காது; அது இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறவர் களுடைய உற்சாகத்தைக் குறைத்துவிடக் கூடும் என்பதை, 'தவறு, தவறு' என்று அடிக்கடி எடுத்துக்காட்டுபவர்களுக்கு எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையாகும் என்று குறிப்பிடுவேன்.

எட்மண்ட் அவர்கள் கூறினார்கள். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 1969-ம் ஆண்டு நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளில் தவறுகள் இருந்தன என்று தனக்கு புகார் வந்தது.

என்று சொன்னார்; அதற்கு முதலமைச்சர் என்ன பதில் சொல்கிறார் என்று கேட்டார். அவர் அப்படி கேட்காவிட்டாலும், அவர் கேட்ட தோரணை அதற்கு என்ன பதில் என்பது போல் இருந்தது.

நான் என்ன பதில் சொல்வது? எட்மண்ட் அவர்களே பதில் சொன்னார்கள். இதே முதலமைச்சர் 1969-ம் ஆண்டு இந்த பொறுப்பில் வீற்றிருந்தபோது 17 கோடி ரூபாய் செலவில் ஏற்பட்ட வறட்சி நிவாரண பணிகள் மிகச் செம்மையாக நடைபெற்றன; இப்போது ஏன் நடைபெறவில்லை என்று எட்மண்ட் கேட்டு பிரதமருக்கு பதில் சொல்லியிருக்கிறார்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் சொன்னதெல்லாம், பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் 22-ம் தேதி சென்னையில் பேசிய பேச்சில் '1969-ம் ஆண்டு மத்திய அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக தமிழ் நாட்டுக்குக் கொடுத்த பணத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து இன்னும் கணக்கு அனுப்பப்படவில்லை' என்று குற்றஞ்சாட்டி சொல்லி யிருக்கிறார்கள், என்று சொன்னேன். அதற்கு முதலமைச்சரின் விளக்கம் தேவை என்பதுதான்; பணி நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. நீங்கள் பணிகளைச் செய்திருக்கலாம்; அதற்கான கணக்கை அனுப்பவில்லை என்று பிரதமர் சொன்னதாகச் சொன்னேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கணக்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னதாக எட்மண்ட் அவர்கள் சொல்லவில்லை. அனுப்பினோமா இல்லையா என்பதற்குப் பின்னால் பதில் சொல்கிறேன்.

1969-ம் ஆண்டு பணிகள், நற்பணிகள் மிகச் செம்மையாக நடைபெற்ற பணிகள். இதே முதலமைச்சர் கருணாநிதிதான் - கருணாநிதி என்று ஆரம்பித்து திருத்திக்கொண்டார், பிறகு கலைஞர் கருணாநிதி என்று திருத்திக் கொண்டார் - அன்றைக்கு முதலமைச்சராக இருந்தார். அவர் இன்றைக்கு ஏன் இதை ஒழுங்காக நடத்தவில்லை என்று கேட்டார். 1969-லே ஒழுங்காக நடந்தது என்று அவரே ஒப்புக்கொண்டு, பிறகு இன்றைக்கு இந்திரா காந்தி அம்மையார் புகார் சொல்கிறார் என்று சொல்வது

ஒன்றுக்கொன்று பொருத்தமாக இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

1969-ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 18.64 கோடி ரூபாய். இந்த 18.64 கோடி எப்படி மாநில அரசுக்கு கிடைத்தது, எப்படி செலவிடப்பட்டது என்பதை விபரமாகச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும்.

மத்திய அரசு 11.25 கோடி ரூபாயைக் கடனாகவே வழங்கி இருக்கிறது; 1 கோடி ரூபாயைத்தான் மானியமாக வழங்கி யிருக்கிறது. 14.25 கோடி ரூபாய் 1969-ம் ஆண்டு மத்திய அரசு நமக்கு வழங்கிய தொகை. அதிலே கடன் 11.25 கோடி ரூபாய், மிச்சம் உள்ள தொகை 3 கோடியே சொச்சம் ரூபாய் - நம்முடைய மாநில அரசு 1969-ம் ஆண்டு செலவழித்திருக்கிறது.

ஒன்று, கணக்கை அனுப்பவிடல்லை என்று சொன்னார். அவர்களுக்குத் தெரியும். 1969-70 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட். அந்த ஆடிட் ரிப்போர்ட்டில் அக்கவுண்டன்ட் ஜெனரல் கையெழுத்திட்டு, அது மட்டுமல்ல, ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் அறிக்கை. அந்த அறிக்கையில் 1969-ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளில் ஊழல் எதுவும் நடந்ததாக எந்த விதமான குறிப்பையும் அவர்கள் எழுத வில்லை. அதன் தொடர்பாக பார்வையிட்ட பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி - நம்முடைய மாநில அரசின் சார்பில் போடப்பட்ட கமிட்டி - அதுவும் வறட்சி நிவாரணப் பணிகளில் கணக்கு வழக்குகளை பார்வையிட்ட பிறகு எந்தவிதமான ஊழலும் நடைபெற்றதாக எதுவும் குறிப்பிடவில்லை. ஆக, இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் தமக்குக் கணக்கு வரவில்லை என்று சொன்னதாக திரு. எட்மண்ட் கூறியது புதிய கூற்று ஆகும். ஆனால் இந்திராகாந்தி அம்மையார் சொன்னதாக - ஒழுங்கான பத்திரிகைகளில் நான் படித்தது, 'அதுபற்றி புகார்கள் வந்தன. இப்படிப்பட்ட புகார்கள் பல மாநிலங்களில் இருந்தும் வருகின்றன. நாம் செலவழிக்கிற பணம் மக்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டும்' என்பதைத்தான் திருமதி. இந்திராகாந்தி அம்மையார் கூறினார்களே யல்லாமல் வேறு எதையும்

கூறவில்லை. அதை வைத்துக்கொண்டு திருமதி. இந்திராகாந்தி அவர்களே குறை கூறிவிட்டார்கள் என்று - பழிபோட முடியாதா என்ற எண்ணத்தில் செய்திகளை தேடி அலைந்து கொண்டிருக் கிறவர்கள் எதையாவது இந்த ஆட்சிக்கு எதிராக எழுத வேண்டும் என்று தவறான தலைப்புகளைக் கட்டி எழுதி யிருப்பார்களே தவிர வேறு அல்ல.

நண்பர் ஜேம்ஸ் அவர்கள் கூடச் சொன்னார்கள். இன்று திரு. லத்தீப் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். '1969-இல் நடைபெற்ற வறட்சிப் பணிகள் குறித்து புகார்கள் வந்திருக் கின்றனவா, அதைப்பற்றி ஆராய்ந்திருக்கிறீர்களா' என்று. நான் அந்தக் கேள்விகளை ஆராய்ந்து நமக்கு பதில் அளிக்கும் படியாக நமது அரசு வருவாய்த்துறை செயலாளரிடம் கேட்டுக் கொண்டேன். அவர் எனக்கு வழங்கியுள்ள பதிலில் குறிப்பிட்டி ருக்கிறார்கள்.

"I have carefully gone through the Secretariat Personal Registers of the Revenue Department for the period from September 1968 to July 1970 relating to the subject 'Drought Relief'. It is seen that no petition alleging misuse of drought funds has been forwarded by the Government of India to the State Government either for investigation or for remarks during this period."

என்று ரெவின்யூ செக்ரடரி கையெழுத்திட்டு இந்தப் பதிலை எனக்கு அனுப்பியிருக்கிறார். இதைத்தான் நண்பர் ஜேம்ஸ் அவர்களும், இன்றையதினம் திரு. லத்தீப் அவர்களும் கேட்டார்கள். "1969-இல் நடந்த வறட்சி பணிகள் குறித்து புகார்கள் வந்திருக்கின்றனவா; அதுபற்றி மத்திய அரசு நம்மிடத்தில் ஏதாவது விளக்கம் கேட்டிருக்கிறதா" என்று. இந்த அரசுக்கு அதுபோல எதுவும் வரவில்லை என்பதைத்தான் வருவாய்த் துறை செயலாளரின் விளக்கம் சுட்டிக் காட்டுகிறது.

பிறகு '1972-ஆம் ஆண்டிலே வெள்ளம் ஏற்பட்டது. அந்த வெள்ளத்தைச் சமாளிக்க அதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 13.61 கோடி ரூபாய். அந்த 13.61 கோடி ரூபாயிலும் மத்திய அரசு நமக்கு கடனாக 8.89 கோடி தந்தது. மானியமாக 87 லட்சம்தான் தந்தது. ஆக, மத்திய அரசு கடனாகவும், மானியமாகவும் தந்தது

9.76 கோடிதான். இதில் கடனாக இருப்பது 8.89 கோடியாகும். மீதி நான்கு கோடி ரூபாயையும் மாநில அரசேதான் அப்போது செலவு செய்திருக்கிறது. மிச்சமுள்ள பெருந்தொகை கடன் நிலையில்தான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

1969-இல் நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகளானாலும், பிறகு 1972-இல் நடைபெற்ற வெள்ள நிவாரணப் பணிகளானாலும் - இவைகளில் எந்தத் தவறும் நடைபெறவில்லை. எந்த ஊழலும் நடைபெறவில்லை என்பதை நான் பலமுறை எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

நான் ஒன்று சொல்வேன். பல கோடி ரூபாய் காரியங்கள் நடைபெறுகிற காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தவறுகள் நடைபெற்று - அந்தத் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அந்தத் தவறுகளைக் களைவதற்காக தவறு செய்தவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் இந்த அரசின் மீது குறை சொல்வதில் நியாயம் இருக்க முடியும். நான் இன்றைக்கும் சொல்கிறேன் இதை மேற்பார்வை பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது. ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி - தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஆக நம் அனைவருக்கும் இந்தக் கடமையிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களல்லாத பொதுமக்களுக்கும் கூட அந்தக் கடமை இருக்கிறது. அவர்கள் அந்தக் கடமையைச் செவ்வனே நிறைவேற்றி - எங்கு தவறு நடந்தாலும் - என்னை ஒரு கமிட்டியில் போட்டால்தான் அந்தத் தவறைக் கண்டுபிடிக்க முடியும்" என்றில்லாமல் - பொறுப்பைக் கொடுத்தால்தான் அதைக் கண்டு பிடிப்போம் என்று பிடிவாதம் பிடிக்காமல் - அவரவர்கள் தங்கள் தங்கள் கடமையை உணர்ந்து எங்கு தவறு நடந்தாலும் அதைச் சுட்டிக்காட்ட முற்பட்டால் இந்தக் காரியங்கள் இன்னும் திறம்பட நடைபெறும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். வறட்சி நிவாரணப் பணிகள் சரியான முறையில் நடைபெறுவற்கு அரசுதான் அங்கங்கே சர்வகட்சி கமிட்டிகளைப்

போட்டால்தான் என்ன? போடக் கூடாது என்பதில் பிடிவாதம் காட்ட வேண்டிய அவசியம் என்ன? அதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சர்வகட்சி கமிட்டி போடுவது என்றால் சில இடங்களில் - நம் நாட்டில் எத்தனை கட்சிகள்தான் இருக்கின்றன என்பதற்கு எண்ணிக்கையே தெரியவில்லை. சில இடங்களில் சர்வகட்சி என்கிறபோது பிரதிநிதிகளே இல்லாமல் இருப்பார்கள். அப்படிப் பட்ட சங்கடங்கள் காரணமாகத்தான் சர்வகட்சி கமிட்டி தேவை யில்லையென்று கருதுகிறேன். இந்த கண்காணிப்புப் பணிகளை பொதுமக்களேகூட ஏற்றுக் கொள்ளலாம்.

அடுத்து, நமது குடிநீர் வாரியத்தின் சார்பாக என்ன காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதாக நமது கே.டி.கே. தங்கமணி அவர்கள் பேசும்போது கூடக் குறிப்பிட்டார்கள். 2, 3 மைல் தூரம் சென்று குடி தண்ணீர் கொண்டிவர வேண்டிய நிலையில் பல இடங்களில் மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் அல்லலுறுகிறார்கள் என்று சொன்னார். நான் அவைகளை அறவே மறுக்கவில்லை. இந்த நிலைமைகளை மாற்றி அமைப்பதற்கு வேண்டிய பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். குடிதண்ணீர் பிரச்சினையைச் சமாளிக்க குடிநீர் வாரியத்தின் சார்பாக மாத்திரம் வறட்சி நிவாரண சிறப்புப் பணிகளாக 2,392 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த நடப்பு நிதியாண்டில் அதைத்தவிர இந்த நிதி ஆண்டில் கிராமங்களில் 1,107 மேல்நிலைத் தொட்டிகள் கட்டுவதற்கும், 2,150 இடங்களில் ஹாண்டு பம்பு போடுவதற்கும் பணிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இவை எல்லா வற்றுக்குமாக சுமார் 5½ கோடி ரூபாய், நான் முதலில் குறிப்பிட்ட 19 கோடி ரூபாயை உள்ளிட்டு, 5½ கோடி ரூபாய் குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகளுக்கு செலவிட திட்டமிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வறட்சி நேரத்தில் உணவுத் தட்டுப்பாடும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த உணவுத் தட்டுப்பாட்டை நாம்

முழுமையாகப் போக்க முடியாமல் இன்றைக்கு தவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதும், அதற்கு மத்திய அரசினிடத்தில் உதவியைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதும், பொது மக்களும் சங்கடத்தை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதும் இந்த அவையில் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களாகும்.

உணவு தானியங்களைப் பரவலாக விநியோகம் செய்வதற்கு அரசின் சார்பில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் தொகையோடு நாம் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிற குடும்பக் கார்டுகள் இவைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ 90 லட்சத்தில் இருந்து 95 லட்சம் குடும்பக் கார்டுகள் இருந்திடல் வேண்டும் நம் மாநிலத்திலுள்ள மக்கள் தொகை கணக்கின்படி. இதில் இதுவரை 37 லட்சம் குடும்பக் கார்டுகளை நாம் இப்போது வழங்கி, நியாய விலையில் உணவு தானியங்களை வழங்கி வருகிறோம். இதை மேலும் விரிவுபடுத்த, நமது வருவாய்த் துறை அமைச்சர் குறிப்பிடுகின்ற நேரத்தில் கூட 70 லட்சம் குடும்பங்களுக்கு உணவு தானியம் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்த முயற்சியின் காரணமாக அந்த 70 லட்சம் குடும்பங்கள் என்பதைக்கூட 75 லட்சம் குடும்பங்கள் வரை உணவு தானியம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்வேன். இப்படி வழங்குவதற்கே நமக்கு மாதந்தோறும் 55 ஆயிரம் டன் அரிசி, 55 ஆயிரம் டன் கோதுமை தேவைப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவு வழங்குவதற்கே கூட இது தேவைப்படுகிறது. ஆகவேதான் இதிலே ஒரு லட்சம் டன் அரிசியையும் கோதுமையுமாக நமக்கு மத்தியஅரசு தரவேண்டுமென்று நாம் கேட்டோம். அதிலே பிப்ரவரி திங்களில் இருந்து ஏற்கெனவே தந்துகொண்டிருக்கிற 9 ஆயிரம் ஆகவேதான் இதிலே ஒரு லட்சம் டன் அரிசியையும் கோதுமையுமாக மத்திய அரசு நமக்கு வழங்கியிருக்கிறது. அண்மையில் நான் பிரதமரையும் திரு. ஜனஜீவன்ராம் அவர்களையும் சந்தித்து மீண்டும் வலியுறுத்தியதற்கு, வருகிற மார்ச் திங்கள் முதல் 50 ஆயிரம் டன் கோதுமைக்குப் பதிலாக

60 ஆயிரம் டன் கோதுமையை மத்திய அரசு கொடுக்கும் என்பதை இந்த மன்றத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : அன்றைக்கு சுகாதார அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது மத்திய அரசு நமக்கு 50 ஆயிரம் டன் கோதுமையை பிப்ரவரி திங்களில் தர ஒத்துக் கொண்டிருக்கிறதே தவிர இன்னும் அது நமக்குக் கிடைக்க வில்லை என்று சொன்னார்கள். இப்போது முதலமைச்சர் அவர்கள் அது நமக்குக் கிடைத்திருக்கிறது என்கிறாரே, இதில் எது உண்மை என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. அன்பழகன் : அந்த 50 ஆயிரம் டன் கோதுமை தருவது என்ற அடிப்படையில் அரிசியும் இவ்வளவு வேண்டுமென்று கேட்கப் பட்டிருக்கிறது. அது முழுவதும் கிடைக்கவில்லை என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன்.

திரு. எஸ். வடிவேல் : முதலமைச்சர் அவர்கள் 75 லட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். இந்த 75 லட்சத்தில் விவசாயத் தொழிலாளர்களைச் சேர்த்திருக் கிறார்களா அல்லது விட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : விவசாயத் தொழிலாளர்களிடத்தில் நண்பர் வடிவேல் அவர்களைவிட, இந்த அரசுக்கு அதிக அக்கறை உண்டு என்பதை நண்பர் வடிவேல் அவர்களே உணர்வார்கள்.

வருகிற மார்ச் திங்களிலிருந்து கோதுமை 60,000 டன்னாக நமக்குக் கிடைக்கவிருக்கிறது. அந்தத் தகவல் நமக்கு நேற்றை தினம்தான் கிடைக்கிருக்கிறது. ஆகவே அதை இந்த அவையில் தெரிவிப்பது பொருத்தம் என்ற வகையில் இப்பொழுது தெரிவிக்கின்றேன்.

அரிசி தேவை என்பதை வலியுறுத்தி நானும் உணவு அமைச்சர் நண்பர் மாதவனும் டெல்லிக்குச் சென்று பிரதம

அமைச்சரிடமும் மாண்புமிகு ஜெகஜீவன்ராம் அவர்களிடத்திலும், மாண்புமிகு சி. சுப்பிரமணி அவர்களிடத்திலும், மாண்புமிகு சிண்டே அவர்களிடத்திலும் மீண்டும் மீண்டும் கேட்டிருக்கிறோம். வெளிநாட்டு அரிசியையாவது வரவழைத்துக் கொடுங்கள். விலை கொஞ்சம் கூடுதலாகயிருந்தாலும் அதுபற்றிய பிசச்சினையை மத்திய அரசும் மாநில அரசும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கலாம். ஆகவே, வெளிநாட்டு அரிசியையாவது வரவழையுங்கள் என்று நாம் கேட்டிருக்கிறோம். அதிலும் நாம் நம்பிக்கையாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இதுவரையிலே அதுபற்றிய நல்ல செய்தி நமக்கு கிடைக்க வில்லையென்றாலும், விரையிலே அதுபற்றிய நல்ல செய்தி கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த அவையிலே லெவி கொள் முதல் பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டன, நாம் நிர்ணயித்திருக்கிற லெயி கொள்முதல் ஆற்றுப் பாசனத்திலே ½ ஏக்கருக்குக் குறைவாக இருந்தாலும் லெவி இல்லையென்றும் ஆற்றுப் பாசனம் இல்லாத மற்ற இடங்களில் 1 ஏக்கர் வரையிலே லெவி இல்லையென்றும் நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதனைப் போலவே ஆற்றுப் பாசனத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கும் ½ ஏக்கருக்குப் பதிலாக 1 ஏக்காரக ஆக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப்பட்டன. அதை ஏற்க இயலாதிருப்பதற்கு உள்ள முக்கியமான காரணத்தை நான் குறிப்பிடுவது அவசியம் என்றே கருதுகிறேன்.

நஞ்சை நிலம் படைத்தவர்கள், 1 ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள் இன்றைக்கு மொத்தமாக நஞ்சை நிலம் படைத்தவர்களில் 50 சதவிகிதம் இருக்கிறார்கள். இந்த நஞ்சை நிலம் படைத்வர்களுக்கு, ஒரு ஏக்கர் வைத்திருப்ப வர்களுக்கு நாம் விதிவிலக்கு அளித்து விடுவோமானால் நம்முடைய கொள்முதல் பெரிதும் பாதிக்கப்படும்.

அதேபோல குத்தகைதார்களிடமிருந்து அவர்களுடைய பங்கிலிருந்து கொள்முதல் செய்யக் கூடாது என்ற கருத்தும் எடுத்துக் கூறப்பட்டது. அப்படி கொள்முதல் செய்வதில்லை யென்று நாம் அவர்களுக்கு விதிவிலக்கு அளித்துவிட்டால்,

குத்தகைதார்களுடைய சதவிகிதம் நம்முடைய மாநிலத்தில், மொத்தத்தில் 20 சதவிதம் என்று இருப்பதால் அந்த 20 சதவிகிதத் தினரிடமிருந்தும் கொள்முதல் மூலமாக நமக்கு எதுவும் கிடைக்காமல் போய்விடும். அதற்காகத்தான் ஒரு சமரச ஏற்படாக குத்தகைதாரர்களும் நில உடமையாளர்களும் கூட்டுப் பொறுப்பாக அரசாங்கக் கொள்முதலுக்கு நெல் தரவேண்டு மென்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். இவைகளையெல்லாம் மாந்றுவது என்பது இயலாத காரியம். ஒருபுறத்திலே கொள்முதல் தீவிரப் படுத்தப்படவில்லையென்று வாதிடுகிறார்கள். இன்னொரு புறத்திலே பொது விநியோக முறைபோதாததாக இருக்கிறது என்று வாதிடுகிறோம். கொள்முதலைத் தீவிரமாக்க வேண்டு மென்று வாதிடுவதிலும் பொது விநியோக முறையை அதிகமாக்கு, விரிமாக்கு என்று வாதிடுவதும் ஒன்றுக்கொன்று முரணான வாதங்கள் என்பதை உணர்வார்களானால் இந்த வேறு பட்ட கருத்துக்களைச் சொல்ல மாட்டார்களென்றே நம்புகிறேன்.

பொது விநியோகத்திலே கூட தவறுகள் ஏற்பட்டு விடாமலிருக்க வேண்டுமென்பதற்காகத் தனியாரிடத்திலே இந்த விநியோகத்தை ஒப்படைக்காமல் ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும், சிலில் சப்ளைகஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் இந்த இரண்டு அமைப்புக்களும் இல்லாத இடங்களில் கிராமப் பொது மக்களுடைய குழுக்களின் மூலமும் இந்தப் பொது விநியோகத்தை, தானிய விநியோகத்தை நடத்திக் கொண்டு வருகிறோம்.

பெரிய நிலச்சுவான்தார்களிடத்தில் நெல் கொள் முதலுக்குச் செல்வதில்லையென்ற ஒரு கூற்று இங்கே எடுத்துக் காட்டப்பட்டது. அது தவறானது. பெரிய நிலக் கிழார்களிடத்திலே கொள்முதல் செய்ய இந்த அரசு அஞ்சுகிறது என்கிற வாதத்தினை நான் ஏற்றுக்கொள்ள இயலாது. நாட்டு மக்கள் அதனை நன்றாக உணர்வார்கள்.

எங்கேயாவது, எந்த அதிகாரியாவது பெரிய மிராசுதார் களிடத்திலே கொள்முதல் செய்ய பயந்தார், அல்லது தவிர்த்தர் என்று எந்த அதிகாரி மீதாவது குற்றத்தை நீங்கள் சுமத்துவீர் களானால் அது ஆதாரம் உள்ள குற்றச்சாட்டாக இருக்குமானால்

அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே உங்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நேரத்தில் பட்டினிச் சாவு ஏற்படுகிறது என்று சொல்லாமல் இருந்தால் . . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : மார்ச் மாதம் முதற் கொண்டு, 60,000 டன் கோதுமையை மத்திய அரசு கொடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்படியானால் 6 கோடி கிலோ ஆகிறது. அவர் ஏற்கனவே சொன்ன குடும்ப அடிப்டையிலே பார்த்தால், கிராமப் புறத்திலே விவசாயத் தொழிலாளிகள் உட்பட ஒவ்வொரு குடும்பத்திற்கும் குறைந்தது 7 கிலோவாவது கிடைக்குமே, அதற்கு உத்தாவாதம் செய்ய அரசாங்க ஏற்பாடு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அந்த அளவிற்கு அதிகமாகக் கொடுக்க இயலாது என்ற காரணத்தாலேதான் குறித்த அளவு, அந்தந்த மாவட்ட நிலைமைக்கு ஏற்ப, பகுதி நிலைமைகளுக்கேற்ப, நாம் அந்த அளவை தரமுடியும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதிக அளவு கொடுப்பதற்கேற்ற அளவுக்கு நம்மிடத்திலே உணவு தானியங்கள் இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

பட்டினி சாவு பற்றி பேசுகிற நேரத்தில் அதிகமாகப் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருவரங்குளம் பகுதியில் 40 பேர், 50 பேர் இறந்து விட்டார்கள். அவர்களெல்லாம் பட்டினி காரணமாகச் செத்து விட்டார்கள் என்று பத்திரிகையிலும் செய்திகள் வருகின்றன இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் அதை எடுத்துப் பேசினார்கள்.

இலங்கையிலிருந்து வந்த அகதிகள் 3-7-1974 முதல் 10-1-1975 வரை இந்தத் திருவரங்குளத்திலே வந்து குடியேறினார்கள். அப்படிக் குடியேறிய குடும்பங்களுடைய மொத்த எண்ணிக்கை 246. இந்த 246 குடும்பங்களின் மொத்த தொகை 1,800. இந்த 1,800 பேரில் 42 பேர் மரணம் அடைந்திருக் கிறார்கள் - எவ்வளவு காலத்திலே ? 26-7-1974 முதல் 29-1-1975 வரை, 6 மாதங்களில் 42 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : முதல் முதலிலே புதுக் கோட்டை பகுதியிலே நான் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது, அவர்கள் இதை அறிவித்தனர். அங்கு அவர்கள் ஆஸ்பத்திரியிலும் மற்ற விதத்திலும் தெரிவித்தது, 3 மாத காத்திலே 32 பேர், குறிப்பாக, சிலோனிலிருந்து வந்த அகதிகள், திருவரங்குளம் காலனியிலிருந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். சாராரணக் குழந்தைகளும், மற்றவர்களும் இறந்திருக்கிறார்கள். அதனை இன்றைக்குப் பிரிசீலினை செய்து பார்த்தால் எப்படி இறந்தனர் என்று தெரியும். நாங்கள் பட்டினியால் செத்தார்கள் என்று சொல்லலாம். நீங்கள் அப்படி இல்லை, குறைந்த சாப்பாடு, அல்லது டையரியா ஆகிய காரணங்களால் இறந்தார்கள் என்று சொல்லலாம். இப்படி போதுமான வசதியில்லாத காரணத்தாலே, குறிப்பிட்ட பகுதியிலே அவர்கள் கணக்குப்படியே 42 பேர் இறந்திருப்பது பாராட்டத்தக்க விஷயமா ?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : யாரும் அதற்காகப் பாராட்டுக் கூட்டம் போட வேண்டுமென்று விரும்ப பில்லை. மொத்தமுள்ள 1,800 பேரில் இறந்தவர்கள் 42 பேர், அது 6 மாத காலத்தில். நம் அதிகாரிகள் மூலமாகவும், மற்றும் விசாரித்த அளவில் வலிப்பு நோயால், வயோதிகத்தால், பாம்புக் கடியால், கருச் சிதைவார், பிரசவ நேரத்தில் இப்படி இறந்தவர்கள் என்கின்ற காரணங்கள்தான் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த மொத்தம் 246 குடும்பங்களில் வசதி படைத்த குடும்பங்கள் போக மீதமுள்ள 203 குடும்பபங்களுக்கு இந்த 6, 7 மாத காலத்தில் பிழைப்பு மானியமாக, இலங்கையிலிருந்து வந்த அகதிகள் என்ற வகையில், அவர்களுக்கு ரூ. 1,03,500 வழங்கப் பட்டிருக்கிறது. 203 குடும்பங்களுக்கு அது வழங்கப்பட்டது போக, மொத்தமுள்ள 246 குடும்பங்களுக்கும் விவசாயக் கடனாக ரூபாய் 1 இலட்சம் இதுவரையிலே வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே வரும் போது, ரூபாய் 5,500 லிருந்து ரூபாய் 10,000 வரை சொத்துடையவர்கள் அல்லது ரூபாய் 5,000 வரை சொத்துடையவர்கள் என்கின்ற பாகுபாட்டின் அடிப்படையிலே கூடப் பல அகதிகள் வந்திருக்கிறார்கள்.

இலங்கையிலிருந்து வந்ததும் அங்குள்ள மாறிய தட்ப வெப்பங்களுக்கும் இங்குள்ள தட்ப வெப்பங்களுக்குமுள்ள

மாறான சூழ்நிலைகளாலும் சிலருக்கு வியாதிகள் ஏற்பட்டன என்கின்ற காரணங்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஏதோ பட்டினிச் சாவு இருந்து அதை மறைக்க வேண்டுமென்று அரசு ஒரு காலும் விரும்பவில்லை. பட்டினிச்சாவு, பசி, இவைகளையெல்லாம் போக்கத்தான் நாமனைவரும் இங்கு சொல்லப்பட்ட, எல்லா விவாதங்களிலுமிருக்கிற நல்ல காரியங்களையெல்லாம் குறித்துச் செய்வதற்கு முயன்று வருகிறோம்.

நான் அறிவித்தேன், சென்ற முறை, டீசல் பம்ப செட் வைப்பதற்கு இப்பொழுது மானியம் வழங்கப்படுவதில்லை, இந்த வறட்சியையொட்டி ரூபாய் 1,000 அவர்களுக்கு மானியம் வழங்கப்படும் என்று அறிவித்தேன், அதிலே எத்தனை பேருக்கு வழக்கப்பட்டிருக்கிறது? இதெல்லாம் வெறும் ஏட்டளவிலே தானிருக்கிறது என்றெல்லாம் கூட பேசப்பட்டது. நான் அவர்களுக்குக் கூறுவது, நாம் தனியாக 17-12-1974-ல் ஜி. ஓ. போட்டு, 31-12-1974 வரையில் 578 டீசல் பம்பு செட்டுகளுக்கு மானியம் கொடுத்திருக்கிறோம். 15-2-1975 வரை 861 டீசல் செட்டுகளுக்கு மானியம் கொடுத்திருக்கிறோம். ஆகமொத்தம் 1439 டீசல் பம்பு செட்டுகளுக்கு ரூபாய் 1,000 வீதம் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். நீங்கள் தரவேண்டிய ரூபாய் 1,000 மானியத்தை முதலிலேயே தருவதில்லை. டீசல் பம்ப் செட்டுகளை அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கூட்டுறவு சங்கத்திலே வாங்கிய பிறகு கடைசித் தவணையாகத்தான் ரூ. 500, ரூ. 500 என்று கொடுக்கிறார்கள், ஆகவே ஒரு 500 ரூபாயை கடைசி தவணையாகவும் ஒரு 500 ரூபாயை முதல் தவணையாகவும் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. நான் மாண்புமிகு உறுப்பினர் களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு முன்னால் 500 பின்னால் 500 என்று கூட இல்லாமல் முதலிலேயே 1,000 ரூபாயை அரசு மானியமாக வழங்கும் என்ற மகிழ்ச்சிகாமான செய்தியை இங்கே தெரிவித்துக்கொள்ளுவேன்.

திரு. அழகர்சாமி அவர்கள் பேசும்போது விளம்பரங் களுக்கு செலவழிக்கிறீர்கள், விளம்பரங்களில் வந்த விஷயங்கள் நிறைவேறவில்லை என்றார். கிணறுகளை ஆழப்படுத்துதல்,

கிணறுகளுக்கு அடிவெட்டு வெட்டுதல் போன்ற இவைகளுக்கு என்ன கடன் கொடுத்தீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். கிணறுகளை ஆழப்படுத்துதல், அடிவெட்டு வெட்டுதல் ஆகியவற்றிற்காக 1-4-1974 முதல் 31-1-1975 வரையில் நிலவள வங்கி மூலம் 33, 51 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் வறட்சிக் காலமாகிய டிசம்பர் 1974 முதல் ஜனவரி 1975 வரையில் 2 மாத காலத்திற்கு மாத்திரம் 5,66 லட்சம் ரூபாய் 280 பேர்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு சில குற்றச்சாட்டுக்களையும் இங்கே எடுத்துக் காட்டியுள்ளார்கள். அண்ணா தி. மு. க. சார்பிலே பேசிய நண்பர் குழ. செல்லையா அவர்கள் ஏதோ நெல் கொள்முதல் செய்வதற்காக உணவுக் கார்ப்பரேஷன் மூலமாக ஆர். பி. முருகன் செட்டியார் என்பவருக்கு ரூ. 1,74,685-க்கு 17-1-1975 அன்று ஒரு செக் வழக்கப்பட்டது என்றும் அந்த செக் நம்பர் குறித்தும் அதே போல் ஆளே கிடையாது என்றும் சொன்னார்கள். குற்றச்சாட்டு வரையிலே சரிதான். ஆனால் அந்த ஏமாற்றுக்காரர் அந்த செக்கைக் கொண்டு வங்கியிலே மாற்ற முடியாமல் அதற்கு முன்பே பிடிக்கப்பட்டார். அவர் 1.74 இலட்சம் ரூபாய்க்குக் கொள்முதல் நெல்லைக் கொடுத்தாக ஒரு போலிக் கணக்கைத் தயாரித்து, பட்டுக்கோட்டை தண்டாயுதம் அரிசி எண்ணெய் ஆலையின் சொந்தக்காரான திரு. முருகையன் செட்டியாரின் பெயரில் ஒரு கணக்குக் கொடுத்துள்ளார். முருகையன் செட்டியாரின் பெயரில் கொள்முதல் செய்ய ஒருவரையும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நியமிக்கவில்லை. ஆனால் அதிகாரிகளின் கையெழுத்தையும் முருகையன் செட்டியாரின் கையெழுத்தையும் போலியாக இவரே கையெழுத்திட்டு அம்மாபேட்டை இளநிலை கணக்கு அதிகாரியிடம் பொய்க் கணக்குக் கொடுத்து செக்கை வாங்கினார். ஆலையின் சொந்தக்காரரான இப்ரஹீம் - இப்ரஹீம் என்வரின் மகன் ஆனசு என்பவர் - அவருடைய தகப்பனாருக்கே தெரியாது செய்த இந்த மோசடி பற்றி அவருக்குத் தெரியவந்து அவர்கள் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து இப்ரஹீம் மகனுடன் அவரோடு சம்பந்தப்பட்ட வேறு இருவர் பேரிலும்

போலீசாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வருகிறது, அந்த செக் வங்கியில் போய் பணம் கொடுக்கப்படவில்லை. அதற்கு முன்பே இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதோ 60 லட்ச ரூபாய் தான் விதை நெல்லுக்கு ஒதுக்க இருப்பதாக ஆளுநர் வரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் அது புதுக்கோட்டைக்கே போதுமா என்று புதிய அ.தி.மு.க. உறுப்பினர் இளஞ்செழியன் அவர்கள் கேட்டார்கள். 60 லட்சம் ரூபாய் என்று போட்டிருந்தால் புதுக்கோட்டைக்கே போதாதுதான். ஆனால் மேலும் 60 லட்சம் ரூபாய்க்கு வாங்கப் படும் என்றுதான் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தமாக, மாநிலத்திற்கு விதை நெல்லுக்காக 60 லட்ச ரூபாய் என்று குறிப்பிடப்படவில்லை. மொத்த விதை நெல் 19 ஆயிரம் டன் என்றும் அதற்காக மதிப்பீட்டுச் செலவு 3 கோடியே 10 லட்சம் என்றும் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே குறிப்பாக சொல்லப்பட்ட வாசகங்களுக்கு அதுவும் அரசியல் ரீதியாகச் சொல்லப்பட்ட வாசகங்களில் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் எடுத்துச் சொன்னது மாநில சுயாட்சி பற்றியது ஆகும். மாநில சுயாட்சி பற்றி தங்கமணி அவர்கள் கவர்னர் உரையிலே கூட அதிகக் கவனம் செலுத்தாமல் திரு. தங்கமணி அவர்கள் மாநில சுயாட்சி கொள்கையை எதிர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டியபோது அதற்கு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் ரஷ்ய நாட்டிலே இருப்பதைப் பற்றிச் சுட்டிக்காட்டி அதற்குப் பதில் கேட்டபோது சின்னப் பிள்ளைகளுக்கு எல்லாம் நான் என்ன பதில் சொல்வது என்று எண்ணியோ என்னவோ திரு. தங்கமணி அவர்கள் பதில் சொல்லலாமலேயே அமர்ந்து விட்டார்கள் என்று கருதுகிறான். . . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : ரஷ்ய நாட்டைப்பற்றி காட்டிய உதாரணம் தவறு என்று நான் அந்த அமைச்சரிடம் தனியாக தெரிவித்தேன், ரஷ்ய நாட்டில் இருக்கிற, கான்ஸ்டிட்யூஷனில் பிரிந்து போகக்கூடிய உரிமை கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட

எப்போதும் அது அமுலுக்கு வருவது கிடையாது. காரணம், ஒரே கட்சி ஆட்சியிலே இருப்பதால் அந்த நிலை வராது என்பதால் அப்படி வைத்திருக்கிறார்கள். . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஒரே கட்சி ஆட்சியிலிருப்பதால் அமுலுக்கு வராது, பல கட்சி ஆட்சி யிருந்தால் அமுலுக்கு வரும், ஆகவே சுயாட்சி கொடுங்கள் என்று கேட்கிறோம். . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : ரஷ்ய அரசியல் சட்டத்தில் மாநில சுயாட்சியும் பிரித்து போகும் உரிமையும் ஏட்டளவிலே தான் கொடுக்ககப்பட்டிருக்கிறதே யொழிய நடைமுறையிலே கொடுக்கப்படவில்லை. ஐ. நா. சபையில் இடம் பெறுவதற்கு மட்டுமே உக்ரேலும், பைலோ ரஷ்யாவும் தனியாகக் கூறப்ட்டன. ஆனால் லாட்வியாவும், லித்தோனியாவும் தனியுரிமை கேட்ட போது அது கடுமையாக ஒடுக்கப்பட்டது. இதுதான் வரலாறு.

திரு. கே. டி. கே. தங்கமணி : இது ஒரு சாதாரண அக்கடமிக் பிரச்னையாகி விடக்கூடாதே என்பதற்காக நான் பதில் சொல்லவில்லை. என்னிடம் பதில் சொல்வதற்கு விஷயங்கள் இருக்கின்றன. பைலோ ரஷ்யா, உக்ரேனியா ஆகிய இரண்டுக்கும் ஐ.நா.விலே இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவை இரண்டும் ரஷ்யாவிலே இணைந்து இருக்கவேண்டு மென்று விரும்புகின்ற பகுதிகள் ஆகும். அவர்கள் பிரிந்து போக வேண்டுமென்று சொல்லவில்லை. ஸ்டாலினைப் பொறுத்த வரையில் முதல் முதலில் என்ன மினிட்ஸ் சொல்லப் பட்டதோ அதனுடைய காப்பியை நான் பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. யுத்தம் முடிந்ததற்குப் பிறகு முதலாளித்துவ நாடுகள் எல்லாம் சேர்ந்துகொள்ளக் கூடும். ரஷ்யா பெரிய நாடாக இருக்கிறது, இரண்டு கோடி மக்களை இழந்துவிட்டிருக்கிறது, ஆகவே ஒரு பிரிதிநிதித்துவம் போதாது, ஆகவே மூன்றாவது கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள், அதனால்தான் கொடுக்கப்பட்டது. அதனால்தான் நான் ஹிஸ்டாரிக்கல் பேக்ரவுண்ட் இருக்கிறது என்று சொன்னேன். இங்குகூட அட்டானமி என்று வரக்கூடிய காலத்திலே ரொம்பப் பின்தங்கிய பகுதிகளுக்குத்தான் இன்னும் அதிகமான வசதியைக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே அந்த கன்சப்ஷன் இருக்கிறதே

தவிர தமிழ்நாட்டிற்கு அட்டானமி வேண்டுமென்று சொல்வது It is taking us in a reverse direction என்ற முறையிலே அந்தக் கருத்து பொருத்தமில்லை என்றுதான் எடுத்துச்சொன்னேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, மாநில சுயாட்சிபற்றி அண்ணா சொன்ன மாநில சுயாட்சி என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாநில சுயாட்சிபற்றி ஒரு மாநாடு நடத்தி ஒரு தனிக்கொடி இந்த மாநிலத்திற்கு வேண்டுமென்று கேட்டார்கள். ஆகவே தமிழ்நாட்டிற்கு ஒரு தனிக்கொடியும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு தனி இடம் வேண்டும் என்பதுதான் தி. மு. க. வினுடைய கொள்கையா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திரு. இராமச்சந்திரன் ஐ.நா. விலே தனி இடம் ரஷ்யவிலுள்ள ஒரு மாநிலத்திற்கு இருந்தது என்று குறிப்பிட்டது அந்த அளவிற்கு அங்கே மாநில சுயாட்சி இருக்கிறது என்ற அளவிற்குத் தெரிவிப் பதற்குத்தானே தவிர ஐ.நா.விலே தமிழ்நாட்டிற்கு ஒரு தனி இடம் வேண்டுமென்பதற்கா அல்ல. அதை முதலில் புரித்துக்கொள்ள வேண்டும். ரஷ்யவிலே பிரிந்துபோகும் உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி இருக்கிறது.

திரு, ஏ, சுப்பிரமணியம் : ஏட்டிலேதான் அங்கே இருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அங்கே ஏட்டிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். இங்கே ஏட்டிலே இருந்தால் நாட்டிலே கொண்டுவரக்கூடிய தைரியம் எங்களுக்கு இருக்கிறது. ரஷ்யாவிலே ஏட்டிலேதான் இருக்கிறது. நடைமுறையில் இல்லை, ஏட்டிலேதான் இருக்கிறது, நாட்டிலே இல்லை . . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : நடைமுறையில் வராது என்றுதான் ஏட்டிலே வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ரஷ்யாவிலே இருப்பது பிரிந்து போகக்கூடிய உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி, ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் கோருவது பிரிந்துபோக்கூடிய உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி அல்ல.

நாடு பிரிந்துபோகாமல் இருப்பதற்குத்தான் மாநில சுயாட்சி வேண்டும் என்று தி. மு. க. கேட்கிறது. இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சி கொள்கையைப் பற்றி யாருக்கும் ஐயம் வராது என்று கருதுகிறேன்.

பெரியார் மணலி அவர்களுடைய உரையில், அவருக்குரிய வயது, அனுபவம், தியாகம், தொண்டு இவைகளின் அடிப்படையிலே எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சில அறிவுரைகள் கூறி ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சில அறிவுரைகளைக் கூறியிருக்கிறார்கள். ஒரு கட்சியை நடத்துவது என்பது எவ்வளவு பெரிய சிரமமான காரியம் என்பது மணலி போன்றவர்கள் புரித்துகொள்ளாதது அல்ல, அவர்களே கூறியதைப்போல் திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப் பெற்று இன்றைக்கு மட்டுமே பல சோதனைகளைச் சந்திப்பது அல்ல, அண்ணா அவர்களுடைய காலத்திலேயே பல சோதனைகளைச் சந்தித்து அவர்களை அண்ணா அண்ணா என்று அன்பொழுக அழைத்தவர்களே மேடைகளிலும் ஏட்டிலும் திருவாளர் அண்ணாதுரை என்று அழைக்கின்ற அளவிற்கு அவரே அந்த சோதனையை சமாளிக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டு அண்ணா அவர்கள் அதனைச் சமாளித்தார்கள். பெரியவர் மணலி போன்றவர்கள், பிறப்பட்ட மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் நடத்தப்படுகிற இந்த இயக்கம் அழிந்து போகாமல் காப்பதற்கு இந்தக் கழகத்தினுடைய தலைவர்கள் முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை சொன்னார்கள். அதைச் செயல்படுத்த நாங்கள் அண்ணா வழியிலே என்றென்றும் அயராது உழைப்போம் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, கவர்னர் உரையிலே பல திருத்தங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே திருத்தங்களை வலியுறுத்துவது மரபு அல்ல என்பதையொட்டி அவைகளைத் திரும்பப் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆளுநர் உரையைச் சில கட்சியினர் புறக்கணித்ததாகச் சொல்லப்பட்டது. அதை நான் நம்பவில்லை. யாரும் ஆளுநர்

உரையைப் புறக்கணிக்கவில்லை என்பதுதான் என்னுடைய வாதம். திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்தில் எதிர்க் காட்சியாக இருந்த நேரத்தில் ஆளுநர் உரையைப் புறக்கணித்து இந்த அவையின் பக்கமே வராமல் இருந்துவிட்டது. ஆனால் இப்பொழுது ஆளுநர் உரை நிகழ்த்தும்பொழுது யார் யார் புறக்கணிக்கப் போவதாகச் சொன்னார்களோ, அவர்கள் இந்த அவையின் தாழ்வராம் வரையில் வந்து கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். கையெழுத்துப் போட்டாலும் அவைக்கு வந்ததாகத்தான் அர்த்தம். எம்.ஜி.ஆர். அவைக்கு வரவில்லை யென்று வாதிடும்போது அவர் கையெழுத்துப் போடுகிறார். ஆகவே அவைக்கு வந்ததாக அர்த்தம் என்று கூறுகிற அந்த வாதத்தின் அடிப்படையில் பார்த்தால் கையெழுத்துப் போடடிருக்கிறீர்கள். * * *

ஆகவே, நீங்கள் அனைவரும் ஆளுநர் உரையில் கலந்து கொண்டீர்கள் என்ற மகிழ்ச்சியோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, ஆளுநர் உரையை நாங்கள் பகிஷ்காரம் செய்யவில்லை என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். நாங்கள் அவைக்கு வந்திருத்தாகவும், கையெழுத்துப் போட்டதாகவும் சொன்னார்கள். Yes, we signed. நாங்கள் எதற்காகக் கையெழுத்துப் போட்டோம் என்பதை விளக்க வேண்டும். நாங்கள் எதற்ககாக் கையெழுத்திட்டோம் என்றால், முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், நம்முடைய சட்டமன்றத்தில் லாபிகூட சட்டமன்றத்தின் பகுதிதான் என்று. அந்த விதி எங்களுக்கும் தெரியும். ஆனால் எங்களுடைய நோக்கமெல்லாம் ஆளுநர் உரையை நாங்கள் பகிஷ்கரிப்பதாகக் கூறினோம், அது அவர்களுக்குத் தெரியவேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமன்ற கட்டிடத்துக்குள்ளே வந்திருத்தார்கள். தங்களுடைய வருகையை நிரூபிக்கப் பதிவேட்டில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் ஆளுநர் உரை நிகழ்த்தும் நேரத்தில் அந்த மன்றத்தில் இருக்கமாட்டோம் என்பதைக் காட்டத்தான் அவ்வாறு செய்தோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கடைசியிலே முதலமைச்சரவர்கள் ரொம்ப லைட்டாக an attack on political parties ரொம்ப லைட்டாகப் பேசி ஏதோ நாங்களெல்லாம் இங்கே வந்தோம் என்று சொன்ன நிகழ்ச்சி கண்டிப்பாக நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட கட்சியைப் பொறுத்தவரையில் ஆளுநர் உரையைப் பகிஷ்கரிக்கிறோம் என்றால்

Boycotting Governor's Adrress அந்த சிட்டிங் பூராவும் பகிஷ்கரிக்கவில்லை என்று அறிக்கை விட்டிருக்கிறோம். இங்கே ஒரு மரபு இருக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தில் இருக்கின்ற மரபு என்னவென்றால், ஜனாதிபதி இரண்டு அவைகளையும் கட்டி வைத்துச் செய்யும் பிரசங்கம் இருக்கிறதே அது பிரசங்கமே இல்லை. அது பொதுவாக நடத்தும் ஒரு பிரசங்கம். பிறகு அரை மணி நேரம் கழித்து தனியாக இரண்டு சபைகளையும் கூட்டுகிறார்கள். அப்பொழுது அங்கேயிருக்கும் ஜனாதிபதி உரை சபைக்கு முன்னால் வைக்கப்படுகிறது.

After that it is laid on the table of the House. The House takes note of that. அந்தமாதிரி முறை இங்கே இல்லை, இரண்டையும் சேர்த்து வைத்து ஒரு கூட்டம் மாதிரி நடக்கிறதே தவிர அந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தின் கருத்துக்களைச் சொல்வதைப் பகிஷ்கரிக்கிறோம் என்று அரசியல் ரீதியாகச் சொன்னோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வருத்தப்படுவார்களேயானால், நான் சொல்கிறேன், * * *

வந்தார்கள் என்று நான் சொல்லவே இல்லை, அப்படி ஏதாவது நான் சொன்னதாகக் காதில் விழுந்திருந்தால் அது நிச்சயமாக நடவடிக்கைக் குறிப்பில் இருக்கவேண்டாம். அப்படி நான் சொல்லவேயில்லை, கையெழுத்துப் போட்டால் வந்ததாகத்தான் அர்த்தம், எனவே அவைக்கு வந்தார்கள் என்று மகிழ்ச்சியைத் தான் தெரிவித்தேன். ஏன் போட்டீர்கள் என்று கேட்கவில்லை. திரு. எட்மண்ட் அவர்கள் தாழ்வாரம் வரையில்தான் தாங்கள் வந்தாகவும், அங்கே வந்ததால் இங்கே வந்ததாக அர்த்தம் அல்ல என்றும் குறிப்பிட்டார்கள். இந்த வாதம் வரும்பொழுது வேறொரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

விஷயத்திற்கு வேறொரு மாதிரியாக அந்த வாதம் திரும்புகிறது. வீட்டு வாசலையே மிதிக்க மாட்டேன் என்று சொல்லிட்டு பிறகு தாழ்வாரத்தில் வந்து உட்காந்திருந்துவிட்டு வீட்டிற்கே போகவில்லை என்று சொல்லும் வாதத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நாங்கள் கையெழுத்துப் போட்டோம் என்றால் எதற்காகப் போட்டோம்? கையெழுத்துப் போட வில்லை என்றால். It would mean we were absent. We wanted to make it known to the Government that we were present in the lobby but not present during the Governor's Address. There is difference between absence and boycotting.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, சில நேரங்களில் வாக்-அவுட் செய்கிறோம். * * *

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நடவடிக்கைக் குறிப்பிலே இருக்க வேண்டாமென்று சொன்னதை மறுபடியும் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டு விட்டு வாக்-அவுட் செய்தால் அந்தக் கையெழுத்து ரத்தாகாது. அந்த அடிப்படையில் வந்ததாகத்தான் கருதப்படும். எனவே, அந்த அடிப்படையிலேயே இப்பொழுதும் நாங்கள் வெளியே இருந்தோம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, என்னுடைய பேச்சிலே பல்லாயிரக்கணக்கான கார்டுகளை ஒரே கடைக்க அளிப்பதால் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னேன். எனவே, 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று ஏற்படுத்தப்படுமா? அல்லது 1,000 கார்டுகளுக்கு ஒரு கடை என்றாவது ஏற்படுத்தப் படுமா? என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்கள்? ஏனென்றால் கூட்டுறவுச் சங்கக் கடைகளும், சிலில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகளும் குறைந்த அளவில் தான் இருக்கின்றன. எனவே என்ன அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர வர்களே, ஏற்கனவே 7,000 கார்டுகள் என்ற அளவில் கொடுக்கப் பட்டது. இப்பொழுது 2,000 கார்டுகள் என்று ஆக்கப் பட்டிருக்கிறது. அம்மையார் அவர்கள் கூறும் கருத்தை யோசித்து இன்னும் தகுந்த அளவிற்கு ஆக்க முடியுமா என்பதை யோசிக்கலாம்.

உரை : 13 நாள் : 15.07.1977

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பெற்ற ஆளுநர் அவர்களுடைய உரை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க முன்வந்துள்ளேன்.

அதற்கு முன்பு என்னுடைய நண்பர்கள் பலர் ஆளும் கட்சியின் அமைச்சர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். திருமண வீட்டில் மணமக்களை வாழ்த்தும்போது கூட, அழைப்பு பெற்றவர்கள் அனைவரும் வருவார்கள். வாழ்த்திவிட்டுச் செல்வார்கள். ஆனால் மணவீட்டாரின் அண்ணனோ தம்பியோ, உற்றார் உறவினரோ வாழ்த்திய பிறகும் அந்தக் குடும்பம் எவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதில் மிகுந்த அக்கறையோடும், சில நேரங்களில் ஒழுங்கு தவறுமேயானால் மணமக்கள் நல்ல முறையில் இல்வாழ்வு நடத்திட வேண்டும் என்று எடுத்துச் சொல்கிற அறிவுரை கூறுகிறபோது பண்போடும்,

“நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு”.

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கொப்ப நடந்துகொள்வதும் உண்டு. வாழ்த்திய நெருங்கிய உற்றார் உறவினர்கள் எப்படி அந்த மண மக்களின் வாழ்க்கை நடைபெறுகிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருப்பார்களோ அதேபோல்தான் என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் கூறி ஆளும் கட்சி எவ்வாறு இயங்குகிறது என்பதை உன்னிப்பாக திராவிட

முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கவனித்து ஆக்க பூர்வமான யோசனைகளை ஆளும் கட்சிக்குத் தெரிவிக்கிற கடமை உணர்ச்சியோடு எதிர்க்கட்சியினுடைய பொறுப்புக்களை இங்கு நிறைவேற்றுவோம் என்பதை எடுத்துக்கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அமைச்சரவையை வரவேற்று, மக்கள் தீர்ப்பை ஏற்று அமைச்சரவையில் வீற்றிருக்கிற என்னுடைய இனிய நண்பர்கள், பழைய நண்பர்கள் பலரை வாழ்த்துகிற அதே நேரத்தில் உரையாற்றிய ஆளுநர் அவர்களையும் நான் தனிப்பட்ட முறையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால நெருக்கடிக் கொடுமைகளால் பாதிக்கப் பட்டவர்களில் ஒருவர் இன்றையதினம் தமிழகத்தினுடைய ஆளுநராகப் பொறுப்பேற்றிருக்கிற மேன்மை தங்கிய பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் ஆவார்கள். இந்தியாவிலே நடைபெற்ற இரண்டாவது சுதந்திரப் போராட்டடத்தில் அவர்கள் தன்னையும் ஒரு வீரராக இணைத்துக்கொண்டு இந்தியா பெற்ற சுதந்திரம் பேணிக்காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக குரல் கொடுத்த காரணத்திற்காக அவர் பரோடா வெடிகுண்டு வழக்கில் சம்பந்தப் படுத்தப்பட்டு, நல்லவேளையாக இந்திரா காங்கிரஸ் ஆட்சி தொடர்ந்து இருக்குமேயானால் ஆயுள் தண்டனை பெற்ற கைதியாக இருக்க வேண்டியவர், அது தொடராத காரணத்தால் நமக்கு ஆளுநராகக் கிடைத்திருக்கிறார். எனவே அவரையும் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

ஆளுநர் அவர்களை வாழ்த்துகின்ற நேரத்தில் அரசாங்கத்தினுடைய கொள்கை ஏடு என்று கருதப்படுகின்ற ஆளுநர் உரையைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை எடுத்துக்கூறுவது என்னுடைய தலையாய கடமையாகும். ஆளுநர் உரை எப்படியிருக்கிறது என்று கேட்கிற நேரத்தில் முதல் தோற்றத்தைப்பற்றி சொல்லுகின்ற கருத்துக்கும். அதன் பிறகு ஆய்ந்து கவனித்து அதில் இருக்கின்ற கருத்துக்களைப்பற்றி சொல்லுகின்ற கருத்துக்கும் ஓரளவு வேறுபாடு இருக்கலாம்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லாவற்றையும் பாராட்டிக்கொண்டேயிருப்பார்கள் என்று ஆளும் கட்சியினர்

எதிர்பார்ப்பதும், எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டேயிருக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் எண்ணிக்கொண்டிருப்பதும் தவறு. பாராட்ட வேண்டியதை பாராட்டி ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துச்சொல்லி, எவை எவை தவறு உடையவை, திருத்தப்பட வேண்டியவை என்பதை கூறுகின்ற பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருக்கின்றது.

அந்தவகையில் ஆளுநர் அவர்களுடைய உரையில் மத்திய மாநில உறவைப்பற்றி கூறப்பட்டிருக்கின்ற கருத்து வரவேற்கத்தக்க ஒன்றாகும். "மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன்மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன்மூலம், தமிழ் நாட்டினை வளம் கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காணமுடியுமென நம்புகிறோம்" . . . இது ஆளுநர் உரையில் உள்ள பகுதியாகும்.

ஆளுநர் உரையின் இப்பகுதி இருப்பதற்கு வரவேற்பு தெரிவிக்கின்ற அதேநேரத்தில் நம்முடைய உரிமைக்குரல், மேலும் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு, கல்வி, மாநிலப் பட்டியலிலிருந்து மத்திய போலீசாரை மாநில அரசை கேட்காமலேயே தன்னுடைய விருப்பப்படி மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுப்பிவைக்கலாம் என்கின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

ஆளுநர் உரையில் மத்திய மாநில உறவுபற்றி இவ்வாறு கூறப்பட்டிருப்பதற்குப் பதிலாக வேறு ஒன்றையும் குறிப்பிட்டு இருப்பார்களேயானால் நாங்கள் மெத்தவும் மகிழ்ச்சி அடைந் திருப்போம். 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ம் நாள் இம்மாமன்றத்தில் கொண்டுவரப்பட்டு ஏப்ரல் 20-ம் நாள் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சி தீர்மானத்தை நான் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த தீர்மானத்தில் உள்ள வாசகங்கள் இன்றைக்கும் குறிப்பிடப்பட்டிருக்கின்ற வாசகங்களைவிட கடுமையானவை என்று சொல்லமாட்டேன். நம்முடைய உரிமைகளை எப்படி

வலியுறுத்தப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தன என்பதைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அப்போது இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகம் . . . ''பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றி செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது . . .'' என்கின்ற தீர்மானம் 1974-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் நாள் இந்த மாமன்றத்தில் நிறைவேறியது.

அந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்த பிறகு, தொடர்ந்து பேசியவர் திரு. ஆலடி அருணா அவர்கள், இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்கள்.

அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த நேரத்தில் குறிப்பிட்ட ஒன்றிரண்டு கருத்துக்களை நான் இங்கே கூறிட விரும்புகிறேன். 1945-ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் மாநில சுயாட்சி கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், 1947-ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் பண்டித நேரு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தைப்பற்றி பேசுகையில், "மாநிலப்பகுதிகள் என்று சொல்லப்படுபவை அரசியல் சட்டத்தில் தனித்து, சுயாட்சி உள்ள பகுதியாக, சுதந்திரமாக செயல்படும், இதற்கான - அதிகாரங்களும் அளிக்கப்படும்", என்பதை பண்டித நேரு அவர்கள் சுட்டிக்காட்டியதையும் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். அப்போது எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லுங்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : அப்போது நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகத்தான் இருந்தீர்கள். எனவே, முதல்வர் அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். அன்றைக்கு இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், இன்றைக்கு அமைச்சராக இருக்கின்ற நண்பர் எட்மண்ட் அவர்களை (பழகிய தோஷத்தால் பெயர் சொல்லும் உரிமை எடுத்துக்கொள்கிறேன்) துணைத் தலைவராகக் கொண்ட அந்தக் கட்சியின் சார்பில் பேசியவர்கள் மாநில சுயாட்சிக் கொள்கையை எதிர்த்தார்கள் என்றாலும், ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்து என்னவென்றால், 'மாநிலத்திலே இருக்கின்ற ஆட்சி நல்ல ஆட்சியாக இருந்தால், மாநில சுயாட்சி கேட்பதற்கு உரிமை இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிச்சயமாக மாநில சுயாட்சி கேட்போம். அப்போது கொடுக்க வேண்டுமென்பதில் சந்தேகம் கிடையாது' என்று சொன்னார்கள்.

அப்படி அவர்கள் சொன்னவுடனே, அப்போது அவருக்கு நான் ஒரு உத்திரவாதம் கொடுத்தேன். 'அப்படி நீங்கள் மாநில சுயாட்சி கேட்கும்போது ஒருவேளை நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தால் நிச்சயமாக அதை ஆதரிப்போம்' என்ற பரந்த மனப்பான்மையோடு அப்போது எடுத்துச் சொன்னேன், நீங்கள் இப்போது ஆளும் கட்சியாக இருக்கிறீர்கள். எனவே, இப்போது நான் ஆளுங்கட்சிக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 'எந்தக் கட்சி கேட்கிறது, எந்தக் கட்சி ஆளுங் கட்சியாக இருந்துகேட்கிறது என்றில்லாமல், இன்றுள்ள ஆளுங்கட்சி மாநில சுயாட்சியை, இந்த கோரிக்கையை இந்த மாமன்றத்தில் வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றினாலும் அல்லது அந்தக் கோரிக்கையை டில்லியை நோக்கி வற்புறுத்த வேண்டுமென்றாலும் திராவிட முன்னேற்றக் கழகம், கேட்பது யார் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல், கேட்கப்படும் விவகாரம் என்ன என்பதிலே தன்னுடைய தனிக் கவனத்தைச் செலுத்தி, மற்ற எந்தப் பிரச்சனைகளிலும் ஈடுபடாமல், நீங்கள் அல்லவா கொண்டுவந்திருக்கிறீர்கள், உங்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்துவிடுவதா என்றெல்லாம் தேவையற்ற பிரச்னைகளுக்கெல்லாம் செல்லாமல் நிச்சயமாக அந்தத் தீர்மானத்தை 'ஆதரிப்போம், ஆதரிப்போம், ஆதரிப்போம்' என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள அத்தனைபேருக்கும், ஆளும் கட்சிக்கும் உறுதிகூறுகின்ற வகையிலே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (ஆரவாரம்)

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1968-ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில், இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். "மேல் அதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்திருக்கிறது. மாநில சுயாட்சி என்பது தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல". இது 1968 ஆம் ஆண்டு மாநில சுயாட்சி மாநாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்கூறிய கருத்தாகும்.

அது மாத்திரமல்ல; மேலவையில் கவர்னர் உரையின் மீது 1967 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகின்றபோதுகூட ஒரு அழகான விளக்கம் அளித்தார்கள். இதுதான் அது. "மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் உள்ள தொடர்புபற்றி நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு சில முறைகளில் ஐயப்பாடுகள், அச்ச உணர்ச்சிகள் தோன்றியுள்ளன. அவை தேவையற்றது. அதே நேரத்தில், மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் சரியாக நடக்கிறதா என்று பார்த்துக்கொள்வதற்காக இருக்கிற சட்டாம்பிள்ளை என்ற மனப்பான்மையை விட்டுவிட வேண்டும். இந்த மனப்பான்மை இருக்கின்ற வரையிலே மாநில சர்க்கார் உள்ளத்திலே அருவருப்பு உணர்ச்சி நிச்சயமாகத் தோன்றும். இதையெல்லாம் சொல்கிறபோது, சிலர் இவன் விட்டுவிட்டதாக வெளியே சொல்கிற திராவிட நாட்டை மறைத்து, இப்போது கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். அப்படிச் சந்தேகப்படுகிறவர்கள், அவர்களே நிலைக்கண்ணாடி முன் நின்றுகொண்டு இது என்ன பயங்கர உருவம் என்று அவர்களே சொல்லிக்கொள்ளக் கூடும்" என்று அண்ணா குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல், அளவுக்கு மீறிய அதிகாரக் குவியல்கள் இன்றையத் தினம் மத்திய சர்க்காரிலே நிறைந்து கிடக்கின்ற காரணத்தினாலேதான், அவர்கள் எந்த நேரத்திலும், எந்த ஆட்சியையும் கவிழ்த்துவிடலாம் என்கின்ற எண்ணம்கொண்டு, அந்த அடிப்படையிலே இயங்கிக்கொண்டு வருகின்றார்கள். நான் எந்தெந்த ஆட்சிகள், எப்போது கவிழ்க்கப்பட்டிருக்கின்றன என்கின்ற விவரங்களுக்குள் நுழைய விரும்பவில்லை. மத்திய சர்க்கார் தற்போது தனக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு, எந்த மாநில அரசைக் கவிழ்த்தாலும்,

அதை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளாது என்பதை பல நேரங்களில் நாங்கள் எடுத்துச்சொல்லி இருக்கிறோம். ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் பீகார் மாநிலத்திலே போராடிய நேரத்திலேகூட, நாங்கள் அந்தப் போராட்டத்தின் தன்மையை வரவேற்றோமே தவிர, ஆதரித்தோமே தவிர, மத்திய அரசு பீகார் மாநில அரசைக் கலைக்க வேண்டுமென்று கொண்டுவந்த கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கவில்லை; ஏற்றுக்கொள்ளவில்லை.

காரணம், இப்படி மத்திய அரசிடத்தில் போய் சொல்லி மாநில அரசைக் கவிழ்க்கின்ற வேலையை நாம் ஊக்கப்படுத்தி விடுவோ மானால், மேலும் மேலும் மத்திய அரசு இஷ்டம்போல் மாநில அரசுகளைக் கலைக்கின்ற உரிமையை மிக வலிவோடு பெற்றுவிடுகிறது. அந்த வகையிலேதான் அன்றைக்கே அந்தக் கருத்துக்கு மாறுபட்டவர்களாக இருந்திருக்கிறோம்.

கவர்னர் அவர்களுடைய உரையில் இன்னொன்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. "தமிழ்நாட்டில் 17 மாத காலம் நீண்ட, குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று. . ." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, இந்த 'நீண்ட' என்பதற்குப் பிறகு 'கமா' போட்டிருப்பதைப் பல உறுப்பினர்கள் சரியாகப் பார்க்காமல், "17 மாத காலம் நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி" என்ற வகையில் வைத்துக்கொண்டு இரண்டொருவர் வியாக்கியானம் செய்தார்கள். "நீண்ட குடியரசுத் தலைவர் ஆட்சி" என்று உள்ள கவர்னர் உரையில், தமிழ்ப் புத்தகத்தில்கூட மிக எச்சரிக்கையாக "17 மாத காலம் நீண்ட" என்ற அந்தச் சொல்லுக்குப் பிறகு 'கமா' போடப்பட்டு 17 மாத காலம் என்பது நீண்ட காலம் என்ற அர்த்தத்தில் போடவில்லை என்றாலும் 17 மாத காலமாக இருந்த குடியரசுத் தலைவருடைய ஆட்சி என்கின்ற வகையிலே கவர்னரின் உரையிலே அது குறிப்பிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆனால் ஏன் அந்த 17 மாத காலம் நீண்ட அந்த குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கே உருவாயிற்று ? என்ன காரணம் ? இங்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தன்னுடைய பதவிக் காலத்தை மக்கள் தந்த தீர்ப்பின் அடிப்படையிலே, ஜனநாயக அடிப்படையிலே பதவிக்காலத்தை இழக்க வேண்டியிருப்பதற்கு

50 நாட்கள்தான் மிச்சம் இருந்தது. அதற்குள்ளாக அவ்வளவு அவசரப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி இங்கே பிரகடனப் படுத்தப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது.

அதற்கு அடிப்படையான காரணம் என்று இங்கே பேசிய சில நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள்கூட சில காரணங்களை எடுத்துச்சொன்னார்கள். இந்த அவையைப் பொறுத்தவரை ஆளும் கட்சிக்கும் எங்களுக்கும் இருக்கும் வேறுபாடு - ஆளும் கட்சியை ஆதரித்துப் பேச ஏராளமான கட்சிகள் இருக்கின்றன. அதே நேரத்தில் எதிர்க்கட்சியாகவுள்ள திராவிட முன்னேற்றக் கழகம், தோழமைக் கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சியானாலும், அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியானாலும், அல்லது தோழமைக் கட்சியாக இல்லாத இந்திய கம்யூனிஸ்ட் கட்சியானாலும், வேறு ஆளும் கட்சி தோழமைக் கட்சிகளானாலும், அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, பேச்சுவாக்கில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு தட்டுத் தட்டி விட்டுத்தான் இந்தக் கவர்னர் உரையிலே தங்களுடைய பேச்சை நடத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, நான் சொல்ல வேண்டுமானால் - ஏதோ ஜனதா இன்னும் எங்களைத் தாக்க ஆரம்பிக்கவில்லை இந்த மன்றத்தில் அதுவரையில் மகிழ்ச்சி. நாங்கள் தன்னந்தனியாக நின்று எங்களுடைய கொள்கைகளை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் நாங்கள் ஏற்றிருக்கின்ற ஆயுதம் அறிஞர் அண்ணா அவர்கள் தந்த வலிவான கொள்கை ஆயுதம் என்ற உணர்வோடு எங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம்.

கழக ஆட்சி கலைக்கப்பட்டதற்கு மிக முக்கியமான காரணம் 17-6-1975-ல் திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய ஒரு தீர்மானம். நாங்கள் அந்தத் தீர்மானத்தை கழக வரலாற்றிலேயே மிக மிக முக்கியமானது என்று கருதுகிறோம். இன்று இல்லாவிட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் அந்தத் தீர்மானம் ஒரு முக்கியமான இடத்தைப் பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு நிச்சயமாக இருக்கிறது.

1975 ஜூன் திங்கள் 26-ம் தேதி காலை இந்திரா காந்தி அம்மையார் இந்தியத் திருநாட்டில் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது செய்திப் பத்திரிகையில் வந்தவுடன், மறுநாள் காலை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழு கூடியது. செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தின் வாசகங்களின் ஒரு பகுதியை இங்கே நான் எடுத்துச் சொல்லுவது மிகப் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

"உண்மையின் உருவம் மறைக்கப்பட்டு - பொய்யின் நிழலில் நின்றுகொண்டு - எதிர்க்கட்சிகளை அடக்குவதற்குத் திட்டம் தயாரித்து - அந்தத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான போலிக் காரணங்களைத் தேடி அலைந்து - வீண் அபவாதங்களை வாரி இறைத்து - எடுத்ததற்கெல்லாம் "சதி, வெளிநாட்டுத் தொடர்பு, பிற்போக்குவாதிகள்" என்ற சொற்களைப் பொழிந்து - காலாகாலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் திருமதி இந்திராகாந்தி அவர்கள் நேற்றையதினம் (26-6-1975) அதிகாலையில் சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழாவை நடத்தியிருக்கிறார்.

வெளிநாட்டார் பகையிலிருந்து நாட்டை மீட்க அணி திரண்டு நின்றவர்களையெல்லாம் இன்று 'உள்நாட்டைப் பாதுகாக்கிறேன் என்ற பெயரால் சிறைக் கொட்டடிகளில் தள்ளியிருக்கிறார்.

இந்திய மண்ணின் விடுதலைக்காகத் தியாகத் தழும்புகளை ஏற்ற பழம்பெரும் தேசபக்தர்கள், 'கைதிகள்' என்ற பரிசினை இந்திரா ஆட்சியில் பெற்றிருக்கிறார்கள்.

வெள்ளையர் ஆட்சியின்போதும் இல்லாத கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசத் தலைவர்களின் மீது ஏவிவிடப்பட்ட அடக்குமுறை கண்டு நாடு குமுறி எழுந்துள்ளது. எல்லாச் செய்திகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டன. அப்படி ஒரு சட்டம் பாய்ந்துள்ளது இப்போது வையம் புகழ் தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தியைக்கூட வானொலி வெளியிடவில்லை. 'சிலர் கைது' என்று கூறி - நாட்டின் நாயகர்களை - நபர்களில் சிலராக வானொலி வர்ணித்துள்ளது.

தணிக்கை செய்யப்பட்ட பிறகே பத்திரிகைகளில் செய்திகள் வெளிவரவேண்டுமாம்.

விடுதலை பெற்ற இந்தியாவில் எத்தனையோ முறை எதிர்க்கட்சிகளின் எழுச்சிமிக்க கிளர்ச்சிகள் எரிமலையாக வெடித்திருக்கின்றன. அப்போதெல்லாம், ஜவகர் காலத்திலோ, லால்பகதூர் காலத்திலோ பாயாத உள்நாட்டுப் பாதுகாப்பு அவசரச் சட்டம் இன்று முதன்முறையாகப் பாய்வானேன் ?

சதி நடத்துவோர் - வன்முறையில் ஈடுபடுவோர் தகாத முறையில் பேசுவோர் - எழுதுவோர் தண்டிக்கப்பட ஏற்கனவே எத்தனையோ சட்டங்கள் இருக்கும்போது நாட்டைச் சர்வாதிகாரப் பாதைக்கு இழுத்துச் செல்லும் வகையில் இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வருவது தேவைதானா ?

இவைகளையெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் சிந்தித்துப் பார்த்து, அவசரகாலப் பிரகடனத்தினை திரும்பப் பெற்றுக்கொண்டு - நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்திட முன்வரவேண்டும்.

பத்திரிகையாளர்களின் கைக் கட்டுக்களை அவிழ்த்து விட்டு பத்திரிகைகளுக்குரிய நியாயமான உரிமைகளைத் தடையின்றி வழங்கிடவேண்டும். அதுவே, "இந்திய ஜனநாயகத்துக்குப் பெருமை சேர்க்கும் காரியமாகும்" என்று தி. மு. க. செயற்குழு சுட்டிக்காட்டுவதோடு -

ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்த செயற்குழு தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் வெற்றிபெற இந்திய நாட்டு மக்கள் - சிறப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் காந்தியடிகள் நெறியை மறவாமலும், ஜனநாயகச் சின்னமாம் அறிஞர் அண்ணாவின் பாதையிலிருந்து தவறாமலும் தமக்கே உரிய தனிப் பண்பாட்டுடன் - அமைதியான முறையில் - வன்முறை தவிர்த்த வழியில் - சட்டம், ஒழுங்குக்கு ஊறு நேரா வண்ணம், நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது."

இது முன்னேற்றக் கழகத்தினுடைய தீர்மானமாகும். இது அண்ணா அவர்களுடைய வழிநின்று போடப்பட்ட தீர்மானமாகும்

என்பதற்கு ஒரு சான்று சொல்லவேண்டுமானால் இன்று பொதுப்பணித் துறை அமைச்சர் பண்ணுருட்டி திரு. இராமச்சந்திரன் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சுக்களை யெல்லாம் தொகுத்து "Anna Speaks in Rajya Sabha (1962-1966)" என்ற தலைப்பிலே ஒரு புத்தகம் வெளியிட்டு இருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திலே 1966 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் அண்ணா அவர்கள் ராஜ்ய சபாவிலே - டெல்லி மாநிலங்கள் அவையிலே ஆற்றிய உரையிலே - அப்போது பிரதமராக இந்திரா காந்தி அவர்கள் வீற்றிருந்தார்கள் - அப்போது அவசர காலச் சட்டம், வெளிநாட்டுப் பாதுகாப்பு என்ற பெயரால் போடப்பட்டு அது நீக்கப்படாத சூழ்நிலை - அப்போது அண்ணா அவர்கள் பேசுகிறார்கள் :

"This Government and those who are running this Government should not arrogate to themselves the monopoly of patriotism and consider that others do not have patriotic instincts at all. Therefore I would demand of this Government that they should forthwith lift this emergency and this D.I.R. and release those who are kept in jail for long number of years. And unless and until they do that they would not have a claim to decency and democracy."

'இந்த அரசும் அரசை நடத்துவோரும் தான் தேசப் பற்றுள்ளவர்கள் என்றும் மற்றவர் தேசப்பற்று இல்லாதவர் என்றும் நினைக்கக்கூடாது. எனவே, மத்திய அரசு உடனடியாக நெருக்கடி நிலையை நீக்கியும், பாதுகாப்புச் சட்டத்தை அகற்றியும் சிறையில் நீண்ட நாட்களாக இருப்போரை விடுவிக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையேல் அவர்கள் நாகரீகமான ஜனநாயக வாதிகள் என்று கூறிக்கொள்ள முடியாது'. என்று அண்ணா அவர்கள் 1966 ஆம் ஆண்டிலிருந்த, இவ்வளவு கொடுமைகள் இல்லாத, அந்த அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று மானிலங்கள் அவையிலே வாதாடினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணா அவர்கள் வழியிலே நின்று ஒரு தீர்மானத்தைப் போட்ட பிறகு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய செயற்குழுவைக் கூட்டி அவசரகால நிலை குறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

"அரசியல் கட்சிகளாலும், மக்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்தியக் குடியரசு சட்டத்தின்

விதிகளின்படிதான் அவசரகாலச் சட்டம், அமல் படுத்தப் பட்டிருக்கிறது. எனவே, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியக் குடியரசுச் சட்டத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டோ அல்லது மக்களின்மீது புதியதொரு சட்டத்தைத் திணித்தோ எந்தச் சட்டமும் சர்வாதிகார முறையில் அமலாகவில்லை. எனவே இன்று சர்வாதிகாரம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என சில கட்சிகள் சொல்வதை இந்தச் செயற்குழு ஏற்றுக்கொள்ளாததோடு கண்டிக்கவும் செய்கிறது."

1975 ஆம் ஆண்டு ஜூலை 11-12 ஆகிய நாட்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அவசர காலச் சட்டத்திற்கு நியாயம் கற்பிக்கின்ற முறையில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அவசரகாலச் சட்டம் எவ்வளவு கொடுமையானது என்பதை அட்டர்னி ஜெனரல் திரு. நிரண் டே அவர்களே, ஒரு நீதிமன்றத்திலே குறிப்பிட்டுள்ளார்.

"விரும்பியவரைக் காவலில் வைக்கவும், விரும்பியவரைக் கொல்லவும், பட்டினி போட்டுச் சாக அடிக்கவும் அவசரச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது. அதற்கு மாற்று நிவாரணமே இல்லை" என்று இந்தியப் பேரரசினுடைய அட்டர்னி ஜெனரல் நிரண் டே நீதிமன்றத்திலே வாதாடினார்கள்.

அப்படிப்பட்ட அவசரக் காலச் சட்டத்தைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்துத் தீர்மானத்தை நிறைவேற்றியது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நெருக்கடியை ஆதரித்தது.

ஆனால் அண்மைக்காலத்திலே எனக்கு ஒரு ஆறுதல். ஏனென்றால், இப்பொழுது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் கருத்தை மாற்றிக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு பெரிய நீதிபதியே அறிவுரை கூறியிருப்பதாக நான் கருதுகின்றேன். அந்த அறிவுரையில் அந்த நீதிபதி சொல்கிறார் - "1967-லேயே தமிழக மக்கள் காங்கிரஸ் கட்சியை முழுமையாக நிராகரித்து விட்டார்கள். இன்னும் காங்கிரசில் ஒரு

கோஷ்டிதான் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறது என்றும் மீண்டும் இந்திரா காங்கிரசுக்கு உயிர் அளித்தால் அது ஜனநாயகத்தைப் பாழ்படுத்திவிடுமென்றும் தமிழக மக்கள் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார்கள். மீண்டும் அந்தக் கட்சியிடத்தில் அதிகாரத்தை ஒப்படைப்பது தனி நபர் சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்து, மக்கள், உரிமைகளை இழந்து பரிதவிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். மீண்டும் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வருமானால் ஜனநாயகத்தை நிலைநிறுத்தப் போராடியவர்களையும், நீதித்துறை சுதந்திரத்திற்குப் போராடிய வர்களையும் அச்சமற்ற வாழ்க்கைக்காக வாதாடியவர்களையும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் அது ஈடுபடவே செய்யும். 'நெருக்கடி நிலை' என்கிற தீய சொப்பனத்தை நினைத்துப் பார்ப்பதே ஒரு பயங்கரமான அனுபவம். உரிமை பறிக்கப்பட்ட சூழலை எண்ணிப்பார்த்தாலே உணர்ச்சிகள் செயலற்றுப் போகின்றன. ஆகவே தமிழக வாக்காளர்கள் ஒருபோதும் இனிமேல் இந்திரா காங்கிரசுக்கு வாக்களிக்கமாட்டார்கள்."

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மீண்டும் காங்கிரஸ் தலையெடுக்க விடக்கூடாது என்று இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பேசியநேரத்தில் அதற்குப் பதிலளித்து நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் நேற்றையதினம் அதே பாணியிலே தங்கள் பதிலை வழங்கினார்கள். நான் அந்தச் சொற்களுக்குள்ளே புகுந்திட விரும்பவில்லை. அந்தக் கருத்தைத்தான் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அவசர காலச் சட்டத்தை ஆதரித்து தீர்மானத்தை நிறைவேற்றியதோ அந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே தன்னுடைய கருத்தை மாற்றிக்கொண்டு இந்தியாவில் நடைபெற்றது ஒரு சர்வாதிகார ஆட்சிதான் இந்தியாவில் நடைபெற்றது நீதித்துறையையும் சுதந்திரத்தையும் பாதிக்கக்கூடிய ஒரு ஆட்சிதான், மீண்டும் அதே காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வருவார்களேயானால் அச்சமற்ற வாழ்க்கைக்காக வாதாடியவர்களையும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவே செய்வர், நெருக்கடி நிலை என்ற

தீய சொப்பனத்தை நினைத்துப் பார்ப்பதே ஒரு பயங்கர அனுபவம் - இப்படிச் சொன்னவர் யார் என்றால் நம்முடைய சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு கே. என். முதலியார் அவர்கள் - நாராயணசாமி முதலியார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்பொழுது என்றால் 9-6-1977 அன்று. ஜூன் திங்களில் சொல்லியிருக்கிறார்கள். ஆதாரம் என்னவென்றால் நம்முடைய முதலமைச்சரவர்களை ஆசிரியராகக் கொண்டிருந்த அண்ணா பத்திரிகையிலேயே அந்தக் கட்டுரை வெளியாகியிருக்கிறது. "நெருக்கடி நிலை என்ற தீய சொப்பனம்" என்று அன்றைய சட்டத்துறை அமைச்சரவர்கள், முதலமைச்சரவர்களை ஆசிரியராகக் கொண்டிருந்த பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதைப் படித்துப் பார்த்த நேரத்தில் ஒரு பெரிய மாற்றம், நெருக்கடி நிலையைப்பற்றி ஒரு புதிய மாற்றம், நல்ல சிந்தனை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்ற வகையிலே நான் ஆறுதல் அடைகின்றேன்.

ஒரு முன்னாள் நீதிபதி தன்னுடைய கருத்தை அழுத்தந் திருத்தமாகச் சொல்லி எந்த அளவிற்கு அவசரகாலச் சட்டத்தால் நீதித்துறை பாதிக்கப்பட்டது, எந்த அளவுக்கு மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டன என்பதை எடுத்துச் சொல்லி, அதற்காக வாதாடியதற்காக, ஏற்கனவே அவசர நிலைக் காலத்திற்கு ஆதரவாகத் தீர்மானம் போடப்பட்டிருந்தாலும், அப்படித் தீர்மானம் போடப்பட்டது தவறு என்று உணரத்தக்க அளவில், அந்தத் தீர்மானம் எதை ஒரு நல்ல கனவு என்று கருதிக்கொண்டிருந்ததோ, நல்ல எதிர்காலத்திற்கான ஒரு வழி என்று கருதிக்கொண் டிருந்ததோ அதை, "அல்ல அல்ல ஒரு தீய சொப்பனம் கெட்ட கனவு" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்ன இன்றைய சட்ட அமைச்சரவர்களை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆட்சியை எந்த வகையிலே கலைத்தார்கள் என்பதைப் பற்றி எல்லாம் இங்கே நெடிய வாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. 1976 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் தேதி மாலை ஆட்சி கலைக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அதுவரையிலே தமிழகத்திலே கவர்னராக இருந்த மேதகு

கே. கே. ஷா அவர்களுக்கு அந்தச் செய்தி தெரியுமா என்றால் தெரியாது. அரசியல் சட்டம் 356-வது பிரிவின்படி கவர்னர் ஒரு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். அந்த ரிப்போர்ட்டின் மீது மத்தியிலே உள்ளவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் 1976-ம் வருஷம் சனவரி திங்கள் 31-ம் நாள் காலையில், அவர் கிண்டியிலே உள்ள காந்தி மண்டபத்திலே பேசும்பொழுது திராவிட முன்னேற்றக் கழக அரசு காந்தியடிகளுடைய அடிச்சுவட்டை யொட்டி நடைபெறுகிற அரசு என்று பாராட்டிப் பேசுகிறார் ஆனால் மாலையிலே ஆட்சி கவிழ்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசைப்பற்றி கவர்னராக இருந்த கே. கே. ஷா அவர்கள் பல விபரீதமான அறிக்கைகளைத் தருகிறார். ஊழல் உள்ள அரசு, நிர்வாகத்திலே குறுக்கிட்ட அரசு, பண்பற்ற அரசு என்கின்ற வகையிலேயெல்லாம் அன்றைய கவர்னர் அறிக்கை வெளியிடுகிறார். ஆனால் நடந்தது என்னவென்று கருதப்படுகின்றதென்றால், இங்கிருந்து அவர் அனுப்புகிற அறிக்கைகூட டெல்லியிலே உள்துறை அமைச்சகத்திலே தயாரிக்கப்பட்டு அதற்கு முன்னே, ஆட்சியைக் கலைத்துவிட்டு அதன் பிறகு ஆளுநரிடத்திலே கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள்; அல்லது பிரகடனப்படுத்துவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள் என்ற தகவல்தான் . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கவர்னரைப்பற்றி அவர்பேரிலே ஒரு குற்றம் சுமத்தக்கூடிய வகையிலே அவர் செயல்படாமல் இருந்தார் என்ற வகையிலே குற்றம் சாட்டினால், அது சரியானதல்ல.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்படியெல்லாம் பாராளுமன்றத்திலேகூட இப்போழுது பேசப்படுகிறது. அந்த விவகாரங்கள் எல்லாம் இப்பொழுது பேசப்படுகிறது என்பது மாத்திரம் அல்ல, நான் டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது உள்துறை அமைச்சர் கரண் சிங் அவர்களிடத்திலேகூட அதைப்பற்றி எடுத்துச்சொல்லியிருக்கிறேன். அந்த விவரங்களை ஆராய்ந்து கண்டுபிடிப்பதாக, அதுபற்றிய விவரங்களைச் சேகரிப்பதாக உள்துறை அமைச்சர்கூட என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். எனவேதான் சொல்கிறேன், இப்படி ஒரு ரிப்போர்ட் ஏற்கனவே உள்துறை அமைச்சகத்தில் தயாரிக்கப்பட்டு, ஆட்சி

கலைக்கப்பட்ட பிறகு கையெழுத்து வாங்கப்பட்டது என்பது என்னுடைய புகார். அதை உள்துறை அமைச்சகம் கவனிக்க வேண்டுமென்பது எங்களது கோரிக்கை.

கலைத்ததற்கு முக்கியமான காரணத்தை நண்பர் மாரிமுத்து அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

விசாரணைக் கமிஷன் போட வேண்டாமா ? விசாரணைக் கமிஷன் இருக்கின்ற நேரத்திலே ஒரு அரசு இயங்கினால் உண்மை வெளிவருமா ? எனவே விசாரணைக் கமிஷன் அமைக்க வசதியாக அரசைக் கலைத்துவிட்டோம், அல்லது கலைத்து விட்டார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வாதத்தையே கொஞ்சம் சுட்டிப் பார்த்தால் இப்பொழுது கர்நாடக மாநிலத்து முதலமைச்சர் மாண்புமிகு தேவராஜ் அர்ஸ் மீது விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. ஆந்திரத்து முதலமைச்சர் மாண்புமிகு வெங்கல் ராவ் மீது விசாரணைக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. இரண்டும் காங்கிரஸ் கட்சியினுடைய முதலமைச்சர்கள் பதவியேற்றிருக்கிற மாநிலங்கள். ஆனால் அந்த மாநில அரசுகள் விசாரணைக் கமிஷனுக்காகக் கலைக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், கலைக்கப்படவில்லை.

அது மாத்திரமல்ல, அவரவருக்கு என்று ஒன்று ஏற்பட்டால் தான் உரிமை முழக்கங்கள் எல்லாம் வருகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை நான் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் தெரியா என்று நான் விவரங்களைச் சொல்லி விவாதத்தை விரிவாக்க விரும்பவில்லை.

சில புகார்கள் குடியரசுத் தலைவரிடத்திலே கொடுக்கப்பட்டு, அவைமீது விளக்கம் கேட்டு, பிரதமர் அவர்கள் தமிழக அரசுக்குப் புகார்களை அனுப்பி வைத்தார்கள். அப்படி அனுப்பி வைத்த நேரத்திலே நான் அதற்கான விளக்கங்களை அனுப்பிவிட்டு பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு அனுப்பிய கடிதத்தில் ஒன்றைக் குறிப்பிட்டேன். அந்தக் கடிதம் அனுப்பப்பட்ட தேதி 14-12-1972. அதில் என்ன குறிப்பிட்டேன் என்றால், ". . . . நம் அரசியல் சட்டத்தின் அமைப்பு ஒற்றையாட்சி

முறையில் அன்றி கூட்டாட்சி முறையில் உள்ளது. மாநில உறுப்பினங்கள் ஒவ்வொன்றும் மத்திய அரசுக்குக் கீழ்ப்பட்ட நிலையின்றி, வரம்புக்குட்பட்ட தன்னுரிமையுடன் இயங்குவதாகும்.

மாநில அரசின் அமைச்சரவை அம்மாநிலத்தின் சட்டப்பேரவைக்குப் பொறுப்பானது என்ற முறையில் இயங்குகிறது. இதுவே "பார்லிமென்டரி" சனநாயக முறையாகும், கூட்டாட்சி அமைப்பின் சாரமுமாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும், மாநில அமைச்சரவை மத்திய அமைச்சரவைக்குக் கட்டுப்பட்டு இயங்குவதாக அரசியல் சட்டத்தில் எங்கும் கூறப்படவில்லை. எனவே, மத்திய அரசு நியமிக்கும் விசாரணைக் குழுவிற்கு மாநில அமைச்சரவையைக் கட்டுப்பட செய்யும் முயற்சி நம் அரசமைப்பு முறைக்கு ஒவ்வாத செயலாகும். . ." இது நான் எழுதிய கடிதம் ஆகும்; மிகுந்த கண்டனத்திற்கு ஆளாகிய கடிதம்.

ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் இவ்வளவு ஆணவத்தோடு மத்திய அரசுக்கு ஒரு மடல் எழுதுவதா என்றெல்லாம் எதிர்க் கட்சிக்காரர்கள் மார் தட்டிக் கேட்ட காலம் - கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ் உட்பட அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட அனைவரும் மார் தட்டிக் கேட்ட காலமது.

ஆனால் இன்றைக்கு இதே தேவராஜ் அர்ஸ் அவர்கள்மீது விசாரணைக் கமிஷன் அறிவிக்கப்பட்டதும், திரு. மொரார்ஜி தேசாய்க்கு - இந்தியப் பிரதமருக்கு - அவர் என்ன கடிதம் எழுதியிருக்கிறார் ? மே மாதம் 13 ஆம் தேதி - 4,000 வார்த்தைகள் கொண்ட கடிதமாம் - பத்திரிகைகள் எல்லாம் புகழ்ந்து பாராட்டுகின்றன. கருணாநிதி எழுதினால்தான் வார்த்தைகளை எண்ணிக்கூட அல்ல. வாசகங்களைப் பற்றியே கூடக் கண்டனங்கள். இப்போது வார்த்தைகளையே எண்ணிக்கூட பத்திரிகையில் போடுகிறார்கள் 4,000 வார்த்தைகள் கொண்ட மிக விரிவான கடிதத்தை மொரார்ஜி தேசாய்க்கு - இந்தியப் பிரதமருக்கு தேவராஜ் அர்ஸ் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதில் ஒரு பகுதியை மாத்திரம் படிக்க விரும்புகிறேன்.

"மாமூல் சூழ்நிலையில் ஒரு மாநிலத்தில் இயங்கும் மந்திரிசபை சட்டசபையில் பெரும்பான்மையோரின் ஆதரவைப்

பெற்றிருந்தால் மாநில அதிகார வரம்புக்கு உட்பட்ட விஷயங்களில் மாநில அரசின் மீது மத்திய அரசு கட்டுப்பாடு கொள்ள முடியாது", என்று அர்ஸ் கடிதம் கூறுகிறது. மாநில சட்டசபைக்குப் பொறுப்பான மந்திரிசபையின் செயல்கள்மீது கட்டுப்பாடு செலுத்த மத்திய அரசு அதிகாரம் பெற முடியாது. மாநிலத்தின் ஏகபோக அதிகார வரம்பு சம்பந்தப்பட்ட விஷயங்களில் மத்திய அரசு நீதி விசாரணை நடத்துவது அனுமதிக்கப்பட்டால். அரசியல் சாசனம் கூறும் சமஷ்டி அமைப்பை அழிப்பதாகிவிடும். அந்த நிலையில் அரசியல் நிர்ணய சாசனம் நேரடியாகத் தடுப்பதை மறைமுகமாக மத்திய அரசு செய்தாக வேண்டும்.

அர்ஸ் அவர்கள் எடுத்து வைத்த அந்த அருமையான வாதத்திற்கு இன்று அட்வகேட் ஜெனரலாக இருக்கும் வி. பி. இராமன் அவர்கள்தான் வாதாடுகிறார் என்று கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஏனென்றால் அவரேதான் மத்திய சார்க்கார் நம்மீது அமைத்த கமிஷன் நியாயம்தான் என்று வாதாடிக் கொண்டிருக்கிறார். ஆனால் வழக்கறிஞர்கள் இந்தத் தரப்பிலும் வாதாடலாம்; அந்தத் தரப்பிலும் வாதாடலாம். நான் அதிலே நுழைய விரும்பவில்லை. நான் செய்தியைத்தான் சொல்கிறேன் – விமர்சனம் செய்யவில்லை.

அர்ஸ் கொடுத்திருக்கிற வாக்குமூலம் சரியானதுதான் – அவர் எழுதிக்கொடுத்த வாக்குமூலம் சரியானதுதான் என்று நம்முடைய அட்வகேட் ஜெனரல் வி. பி. இராமன் அவர்கள் அர்ஸுக்காக வாதாடுகிறார் என்ற செய்தியைப் பார்க்கிற நேரத்தில் அன்றில்லாவிட்டாலும் இன்றைக்காவது மாநில உரிமைகளுக்காகப் பரிந்து பேசுகிற ஒரு அட்வகேட் ஜெனரல் – ஒரு வழக்கறிஞர் தமிழகத்திலே இருந்து கர்நாடகத்திற்குச் செல்கிறார் என்கிற நேரத்தில் – இந்திய நாட்டிலேயே மாநில உரிமைகளுக்காகப் போராடுகின்ற வலிமையும் திறமையும் படைத்த ஒரு மாநிலம் தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதை எண்ணி எண்ணி நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசு கலைக்கப்பட்டது – பிறகு, விசாரணைக் கமிஷன் – வழக்குகள் – சென்னைச் சிறைச்சாலை சித்திரவதைகள்

இத்தனையும் நடைபெற்றன. இவைகளெல்லாம் 17 மாதக் கொடுமைகள்.

சென்னை சிறைச்சாலையிலே என்னென்ன நடைபெற்றன என்பதை எல்லாம் ஆராய ஒரு குழு இப்போது தனது பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் நாட்டுக்குத் தெரிந்த காரியங்கள்தான்.

நமது முதலமைச்சரவர்கள் டெல்லிப் பட்டணத்திற்கு. . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையில் குறுக்கிடுவதற்காக அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஒரு விளக்கத்தை மாத்திரம் இந்த மன்றம் உங்கள் மூலம் பெறவேண்டுமென்று கருதி ஒரு விளக்கத்தை நான் அவரிடத்திலே பெற முயலுகிறேன்.

1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றியும் அதற்குப் பின்னாலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றியும் எடுத்து விளக்கினார்கள்.

அதைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் தேதி நிகழ்ச்சிக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். அப்பொழுதிருந்த அரசைக் கலைத்த நிகழ்ச்சிக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். இடையிலே 7 மாத காலத்தை அவர்கள் தாண்டிவிட்டார்கள். அந்த 7 மாத காலத்திலே என்ன நடைபெற்றது என்று அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அவசர நிலைப் பிரகடனத்தை மிகக் கடுமையாக அண்ணா அவர்கள் வழியிலே நின்று எதிர்த்த ஆற்றலை எடுத்துக்காட்டிய அவர்கள்தான் அதற்குப் பின்னாலே ஆட்சியிலே 7 மாதங்கள் இருந்தார்கள்.

அந்த அவசரநிலைப் பிரகடனம் தந்த உரிமைகளை வைத்துக்கொண்டு 7 மாத காலத்தில் அவர்கள் எப்படி ஆட்சி நடத்தினார்கள், யார் யாரைக் கைது செய்தார்கள், யார், யாரைக்

கைது செய்ய வேண்டுமென்று அதிகாரிகளை வற்புறுத்தினார்கள், யார் யாரைக் கைது செய்ய அதிகாரிகள் மறுத்தார்கள் என்பது போன்ற தகவல்கள் எல்லாம். இந்த நாட்டு மக்களிடத்திலே பரவலாகப் பேசப்படுகின்றது. அந்த 7 மாதகால ஆட்சியில் அவசர நிலையை ஒத்துக்கொண்டு அவர்கள் ஆட்சியிலே இருந்து என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள், யார் யாரை கைது செய்தார்கள், யார், யாரைக் கைது செய்ய விரும்பினார்கள்; அப்படிக் கைதுசெய்ய ஏன் அதிகாரிகள் மறுத்தார்கள் என்ற தகவல்களை எல்லாம் பேரவைத் தலைவர் மூலம் இந்த மன்றத்திற்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவித்தால் அது உதவியாக இருக்கும் (ஆரவாரம்).

கலைஞர் மு. கருணாநிதி : விளக்கம் கேட்டதற்கே இவ்வளவு பெரிய ஆரவாரமா? தலைவரவர்களே, ஏழு மாதகாலத்தை விரிவாகச் சொல்வதற்கு நீங்கள் எனக்கு நேரம் அளிக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் ஒன்று இரண்டு சொல்ல விரும்புகிறேன்.

7 மாத காலத்தில் இங்கே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அவசர காலச் சட்டத்தை எதிர்த்துக் கொண்டேதான் இங்கே இருந்தது. அது மாத்திரமல்ல. அவசர காலச் சட்டத்தை எதிர்த்துக்கொண்டு இருக்கிற ஆட்சி இங்கே இருக்கலாமா என்று சட்டமன்றத்திலே கூட கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்ற பெயரால் கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

நான் அப்போது அளித்த பதிலுரைதான் 'வாளும் கேடயமும்' என்ற தலைப்பில் தமிழிலும், "ஸ்வோர்டு அண்ட் ஷீல்ட்" என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகம்கூட குடியரசுத் தலைவரின் ஆட்சிக்குப் பிறகு பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது.

அப்படிப் பறிமுதல் செய்யப்பட்ட புத்தகம், என்ன புத்தகம் என்றால், சட்டசபையில் ஒரு முதலமைச்சர் ஆற்றிய உரை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தப் பறிமுதல் உத்தரவை ரத்து செய்து, அந்தப் புத்தகம் வெளியே வர அனுமதிப்பார் களானால். அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் கேட்ட கேள்விக்கு

பதில் அதிலே இருக்கிறது என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : நான் வெளியிடப்பட்ட வரலாற்றைக் கேட்கவில்லை. இப்போது நீங்கள் சொன்னீர்களே ஆளுநர் அவர்கள் இடத்தில் எப்படி எப்படி எல்லாமோ கையெழுத்து வாங்கிவிட்டார்கள். இப்போது அந்தத் தகவலை சொல்ல உரிமை இருக்கிறது என்று, அப்படி 7 மாத காலத்திலே மறைக்கப்பட்ட வரலாற்றை உங்கள்மூலம் சொன்னால் உதவிகரமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர்களே, நெருக்கடி நிலை பற்றி விவாதிப்பது என்றால், 17 மாதம் அல்ல, அதற்கு முன்பு இருந்த 9 மாதத்தையும் சேர்த்து விவாதிக்க தாங்கள் இந்த அவையிலே பட்ஜெட் நேரத்திலே ஒரு மூன்று மணி நேரத்தை ஒதுக்கித்தருவீர்கள் என்றால், நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் அதுபற்றிக் கலந்து ஆலோசித்து ஒதுக்கித்தந்தால், வசதியாக இருக்கும். அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு எடுத்து, விவாதிக்க நேரம் ஒதுக்கினால் அந்த விவாதத்தை நடத்தலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் இரண்டாம் தேதி அன்று உள்துறை அமைச்சர் சரண்சிங் அவர்களைச் சந்தித்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்துள்ளது. அப்போது திரு. சரண்சிங் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்தில் சொன்னதாகவும் தகவல் சொல்லப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன. நெருக்கடி நேரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடைபெற்ற அக்ரமங்கள், அதிக்ரமங்கள் பற்றி உள்துறை அமைச்சர் திரு. சரண் சிங் முதலமைச்சர் அவர்களிடத்தில் குறிப்பிட்டு அவைகளைக் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்ததாகவும் இந்த விஷயத்தில் மாநில அரசுக்கு எந்தவிதமான உதவியையும் மத்திய அரசு வழங்கும் என்று கூறியுள்ளார் என்று ஆங்கில ஏடுகள் அனைத்திலும் வந்த செய்தியாகும்.

அதை நான் படித்து இருக்கிறேன். அது மாத்திரமல்ல, ஒரு சீனியர் அதிகாரியின் தலைமையில் அதிகாரிகளின்

துணையோடு அமைக்கப்பட்டுள்ள 'ஷா கமிஷன்' இந்த அத்துமீறிய நடவடிக்கைகள் பற்றி 'ஷா கமிஷன்' விசாரணை செய்ய கோஆர்டினேட் செய்வது என்ற தன்மையில் குழுக்களை ஒவ்வொரு மாநிலத்திலும் அமைத்து, மத்திய அரசுக்கு மாநில அரசு எப்படியெப்படி அனுப்பவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசுக்குக் கூறி இருப்பதாகவும் ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன.

இந்த குழுக்கள் பொதுமக்களிடத்திலிருந்து வரும் புகார்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்து எவை எவை ஷா கமிஷனின் ஆய்வுக்கு செல்ல வேண்டியவை என்கிற கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்து தெளிவான புகார்களை மாநில குழுக்கள் மூலம் பெற்று ஷா கமிஷனுக்கு மாநில அரசுகள் அனுப்பி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் ஏடுகளில் நான் செய்தி பார்த்தேன். அதனுடைய உண்மையான தகவல் அரசிடம் இருப்பதால் நாங்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லை. மாநிலங்கள் ஷா கமிஷன் விசாரணையில் ஒத்துழைப்பது தவிர்க்க முடியாதது ஆகும் என்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் குறிப்பிட்டு இருப்பதாகவும் ஏடுகளில் செய்தி பார்த்தேன்.

அதற்கு ஏற்ப அரியானாவில் இரண்டு விசாரணைக் கமிஷன் போடப்பட்டு அத்துமீறிய நடவடிக்கைகளைப்பற்றி விசாரிக்கப் போவதாகவும் அறிகிறோம். அதேபோல் உத்திரப் பிரதேசத்திலும் இரண்டு விசாரணைக் கமிஷன் போடப்பட்டு அத்துமீறிய நடவடிக்கைகளைப்பற்றி விசாரிக்க இருப்பதாகவும் ஏடுகளின் மூலம் அறிகிறோம்.

இங்கேகூட, ஆளுநர் ஆட்சியிலே, மேதகு பட்வாரி அவர்களாலே, சென்னை சிறைச்சாலைக் கொடுமைகளைப்பற்றி விசாரிக்க ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இன்னும் விசாரிக்கப்படவேண்டிய கொடுமைகள் பல இருக்கின்றன. அக்ரமங்கள் பல இருக்கின்றன. அவைகளுக்கும் குழு அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக்குழு சென்னைச் சிறைச்சாலைக் கொடுமைகளுக்காக மாத்திரம்தான் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, முதல்வர்

அவர்கள், திரு சரண்சிங் அவர்கள் கூறிய அந்த வேண்டுகோளை ஏற்று அப்படிப்பட்ட குழுக்களை இங்கே அமைப்பார்களேயானால் நிரம்பப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறிய சிறிய விவகாரங்களில் எல்லாம், அதிகார வர்க்கத்தினர் செய்த கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் மேலவையில் பல உறுப்பினர்கள் மற்றும் மேலவை எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு மேலவையில் முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள்.

பாடப் புத்தகங்களிலெல்லாம், நாம் பல ஆண்டு காலமாக எடுத்துச்சொல்லி வருகின்ற கருத்துக்களை கடந்த கால கழக ஆட்சியில் மாணவர்கள் உள்ளத்தில் பதியத்தக்க வகையிலும், ஒரு சமுதாய சீர்திருத்த நோக்கம் மாணவர்களுக்கு வரவேண்டும் என்கிற, எண்ணத்தோடு வெளியிடப்பட்ட பாடங்களெல்லாம் இந்த ஓராண்டுக் காலத்திலே அகற்றப்பட்டிருக்கின்றன. பெரியார் வழி – பேரறிஞர் அண்ணா பாதை என்றெல்லாம் சொல்லிக்கொள்கிறோம். நான் இந்த அரசைக் குறை கூறவில்லை.

பதினேழு மாத காலத்திலிருந்த குடியரசுத் தலைவர் ஆட்சியில் 1976–ம் ஆண்டு முதல் பதிப்பு என்று வெளியிடப்பட்ட பத்தாம் வகுப்பு தமிழ்ப் பாட புத்தகம். அதிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரைப்பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறார்கள்.

அந்தக் கட்டுரை அந்தப் புத்தகத்திலே இடம் பெற்றிருக் கிறது. அதிலே யாருடைய மனமும் புண்படாத வகையில் பெரியாரைப்பற்றி என்ன சொல்ல வேண்டுமோ – சமுதாயத்தைப்பற்றி என்ன சொல்ல வேண்டுமோ – தன்மான உணர்வு எப்படித் தழைத்தோங்க வேண்டும் என்பது குறித்து என்ன சொல்ல வேண்டுமோ, அடித்தளத்து மக்களின் நல்வாழ்வுக்கு எப்படிப் பாடுபட வேண்டும் என்பதைப்பற்றி எவ்வாறு சொல்ல வேண்டுமோ, அடித்தளத்து மக்களின் நல்வாழ்வுக்கு எப்படிப் பாடுபட வேண்டும் என்பதைப்பற்றி எவ்வாறு சொல்ல வேண்டுமோ – எப்படி தமிழகம் பகுத்தறிவுபுரியாக இருக்க

வேண்டும் என்பதுபற்றி எப்படிச் சொல்ல வேண்டுமோ அவைகளை அண்ணா அவர்கள் எழுதி இருக்கிறார்கள். அந்தக் கட்டுரையுடன் 76 ஆம் ஆண்டு ஒரு புத்தகம் போடுகிறார்கள். 77 ஆம் ஆண்டிலே அந்த தமிழ் பாடப் புத்தகம் மாணவர்களுக்கு இருந்திருக்கக்கூடாதா ? இல்லை.

ஏன் புதிதாக வேறொரு புத்தகம் போட்டார்கள் என்றால் அந்தப் பாடத்தை மாத்திரம், பெரியாரைப்பற்றி அறிஞர் அண்ணா எழுதிய அந்தப் பாடத்தை மாத்திரம் தனியாக எடுத்தால் தெரிந்துவிடும் என்பதற்காக அந்தப் புத்தகத்தையே தூக்கி எறிந்துவிட்டு அதற்குப் பதிலாக புதிய புத்தகம் போட்டார்கள். அதற்கு எத்தனை லட்சம் செலவாயிற்றோ? 10 ஆம் வகுப்பிற்கு புதிய தமிழ் பாடப் புத்தகம் தயாரித்தார்கள். அதில் நாலு ஐந்து கட்டுரைகள், மிக முக்கியமானவை. நமச்சிவாய முதலியாரைப் பற்றிய கட்டுரை, நாவலர் சோமசுந்தர பாரதியார் எழுதிய கட்டுரை, பேரறிஞர் அண்ணா பெரியாரைப் பற்றி எழுதிய கட்டுரை இவை அத்தனையும் அகற்றிவிட்டு அந்தப் புத்தகத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இது அக்கிரமமா, கொடுமையா என்று கேட்பீர்களேயானால் அது சமுதாயத்திற்குச் செய்யப்பட்ட கொடுமை.

எதிர்காலத்திலே தமிழ்நாட்டு மாணவன், தமிழ் நாட்டினுடைய வரலாற்றை உணர்ந்து தமிழகத்திலே பெரும் தலைவர்களால் உருவாக்கப்பட்ட உணர்ச்சிகளை மறந்து, அவன் அடிமைப்புழுவாக ஆகவேண்டுமென்ற நோக்கத்தோடு இப்படிப்பட்ட உணர்வுகள் தலையெடுப்பதே தவறு என்கிற எண்ணத்தோடு அந்தப் பாடப் புத்தகம் மாற்றப்பட்டதாகத்தான் நான் கருதுகிறேன். இவைகள் விசாரிக்கப்பட வேண்டும்.

மேலவையிலே முதல்வர் சொன்னதைப் புரிந்துகொண் டிருக்கிறேன். அவர்கள் அண்ணா எழுதிய அதே கட்டுரையை இன்னொரு அனுபந்தமாக அச்சடித்து அதே புத்தகத்தில் இணைக்க உத்தேசித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்றாலும்கூட, மாற்றப்பட்டது ஏன் என்பதை விசாரித்து அறிந்து அப்படிப்பட்ட மாறுதலுக்கு காரணமான அதிகாரவர்க் கத்தினர் யார் என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பதினேழு மாத காலத்தில் நடைபெற்ற கொடுமைகளை வரிசைப்படுத்திச் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமே சோதனைக்கு ஆளாக்கப்பட்டது, வருமான வரி சோதனைக்கு. வேறு எந்தச் சோதனைக்கும் அல்ல. வருமான வரி அரசியல் கட்சிகளுக்கு இல்லை என்ற நிலை இருந்தாலும்கூட வருமான வரிப் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைச் சிக்க வைக்க வேண்டும் என்பதற்காக, திராவிட முன்னேற்றக் கழகச் செயலகம் அன்பகம் ரெயிட் செய்யப்பட்டது. கணக்குகள் எடுத்துச் செல்லப்பட்டன. அதுமாத்திரம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மினிட்ஸ் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அதற்குப் பிறகு நடந்த பொதுக்குழு கூட்ட நடவடிக்கைகள், செயற்குழு கூட்ட நடவடிக்கைகள் புதுப் புத்தகங்களில் எழுதப்படுகின்றன. பழைய புத்தகங்கள் எங்களிடத்தில் இல்லை. இது ஒரு கட்டத்தில், நெருக்கடி காலத்தில் அதிகாரவர்க்கம் நடந்துகொண்ட முறையாகும்.

என்னோடு யார் யார் நான்கு நாட்கள் காரில் வந்தாலும் ஐந்தாம் நாள் மிசா கைதியாக கைது செய்யப்படுகிற பரிசு அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. முன்னாள் அமைச்சர் திரு. கண்ணப்பன் இரண்டு நாட்கள் என் காரில் என்னுடன் வந்தார்கள். அடுத்த நாள் அவர் மிசா கைதியானார். முன்னாள் மேயர் திரு. சா. கணேசன் அவர்கள் இரண்டு நாட்கள் என்னுடன் காரில் வந்தார்கள். மறுநாள் மிசா கைதி, தென் சென்னையைச் சேர்ந்த திரு. டி. ஆர். பாலசுப்பிரமணியம் என்னோடு இரண்டு நாட்கள் காரில் வந்தார்கள். மறுநாள் மிசா கைதி. திரு. சுருளிவேல் இரண்டு நாள் வந்தார்கள். மறுநாள் மிசா கைதி.

கழகத்தின் வழக்கறிஞர் திரு. கணபதி அவர்களது வீடு சோதனையிடப்பட்டது. எதுவும் கிடைக்கவில்லை. என்றாலும் சில டாக்குமெண்டுகள் கிடைத்திருப்பதாக, எடுத்துச் செல்லப்பட்டு சி.பி.ஐ. விசாரணை நடைபெற்றது. முரசொலி அலுவலகம் காலை 9 மணி முதல் இரவு 1 மணி வரை சோதனையிடப்பட்டது. எனக்கு எதிராகப் பொய் சாட்சி சொல்லவில்லை என்பதற்காகப் பலபேர்கள் மிசா கைதிகளாக ஆக்கப்பட்டார்கள். வேடிக்கைக்கு சொல்கிறேன், என்றாலும் வேதனையோட சொல்கிறேன்.

நான் தலைமைப் பதவியில் இருக்கக்கூடாது என்று சிலபேர் அறிக்கைவிட்டார்கள். அந்த அறிக்கையை மறுத்து தந்திகள் வந்தன. 14-3-1976 அன்று திரு. செபாஸ்டியன் என்பவர் எனக்கு ஒரு தந்தி கொடுத்தார். தந்தி வாசகம் என்ன தெரியுமா ?

"We condemn S.S.R. statement". You are our esteemed Leader for ever."

"நாங்கள் ராஜேந்திரன் அறிக்கையைக் கண்டிக்கிறோம். நீங்கள்தான் எங்களுக்கு என்றைக்கும் தலைவர்" என ஒரு தந்தி கொடுக்கிறார். அதற்குரிய கட்டணம் 6 ரூபாய் 50 காசைக் கட்டிவிட்டார். 14 ஆம் தேதி தந்தி கொடுக்கப்பட்டது. 19 ஆம் தேதி அவருக்கு அண்ணாசாலை டெலிகிராபிக் சூப்பர்வைசரிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. என்ன தெரியுமா ? அந்தத் தந்தி அப்ஜக்ஷனபிள் (Objectionable), அந்தத் தந்தி ஆட்சேபகரமானது. ஆகவே, உங்கள் பணத்தைத் திரும்பி வாங்கிப்போங்கள் என்று பணத்தைத் திரும்பிக்கொடுக்கிறார்கள். "உங்களையே தலைவராக ஏற்றுக்கொள்கிறோம்" எனக் கொடுக்கப்பட்ட தந்தி நெருக்கடி நேரத்தில் ஆட்சேபகரமானது. ஐந்து நாள் கழித்து அந்த அதிகாரி தந்தி கொடுத்தவரை திரும்ப அழைத்து பணத்தைத் திருப்பிக்கொடுக்கிறார்.

திருத்துறைப் பூண்டியில் இருந்து ஒருவர் 13-2-1976 அன்று தந்தி கொடுக்கிறார்.

'Lakhs and lakhs of volunteers like myself have got abolute confidence and faith in your leadership. Please continue to guide and lead us. Don't get disheartened by some betrayals and some traitors.'

"நீங்கள் மனம் தளராமல் இருங்கள். உங்கள் பின்னால் நாங்கள் இருக்கிறோம்" என கழகத்தின் செயல்வீரர்கள் என்ற முறையில் தந்தி கொடுக்கிறார். அவர் ஒரு வழக்கறிஞர். கழகத் தொண்டர். பன்னீர்செல்வம் என்பது பெயர். அன்று மாலையே அந்தத் தந்தி பற்றி விசாரிக்கிறார்கள். மறுநாள் அந்த வழக்கறிஞர் கைது செய்யப்படுகிறார்.

மன்னார்குடி நடராசன் - என்னிடம் 30 கோடி ரூபாய் இருப்பதாக டெல்லியிலேயே இருந்து நோட்டீஸ் அச்சடித்துக் கொடுத்தார்களே - அதற்காக மன்னார்குடி நடராசனை அழைத்து,

நாகப்பட்டினம் காவல் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்து, 'எங்கே தங்கம், எங்கே தங்கம்' கொடுத்திருக்கிறார் என்று கேட்டு அவர் 'இல்லை இல்லை' என்று சொல்லி, மறுத்த பிறகு அவரை விடுவித்திருக்கிறார்கள்.

சீர்காழியில் ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். குமாரசாமி என்கிற நண்பர் - வெற்றிலை வியாபாரி - ஒரு நாளைக்கு ஐயாயிரம் டர்ன்ஓவர் வரும் - தம் வீட்டிற்கு சாப்பிட அழைத்தார். நான் அப்போதே ஆபத்து வரும் என்று சொன்னேன். இல்லை வந்தே தீரவேண்டும் என்று சொன்னார்கள். இப்போது எம்.எல்.ஏ. ஆக உள்ள சுப்ரவேலுவும் பூம்புகார் கணேசனும் என்னை வற்புறுத்தி அழைத்துச் சென்றார்கள். அவர் வீட்டில் சாப்பிட்டுவிட்டு இரவு ரெயில் ஏறி நான் மறுநாள் சென்னை வருகிறேன். அடுத்த நாள் அந்த குமாரசாமி கைது செய்யப்பட்டு, கையில் விலங்கிடப்பட்டு சீர்காழி கடைத்தெரு வழியாக அழைத்துச்செல்லப்பட்டிருக்கிறார். திருச்சி சிறைச்சாலையில் 9 மாத காலம் பூட்டி வைக்கப்பட்டிருக்கிறார்.

அதேபோல சேலத்தில் ஹால் மீட்டிங். அப்போது பொதுக் கூட்டங்கள் நடத்த முடியாது. அந்த ஹால் மீட்டிங்கிற்கு திரு. ரத்தினசபாபதி தலைமை தாங்குவதாக இருந்தார். முதல் நாளே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஆலத்தம்பாடி எம்.எல்.ஏ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றிருந்தேன். மறுநாள் அவர் மிசாவின் கீழ் கைது செய்யப்படுகிறார்.

ரெட் ஹில்ஸ்-ல் ஏழுமலை என்பவர் மீட்டிங் நடத்த அவர்களது மில்லைக் கொடுத்தார்கள். மறுநாள் அவர் மிஸாவின் கீழ் கைது செய்யப்படுகிறார்.

குடந்தை தமிழ் மாறன் சகோதரி திருமணத்திற்குச் செல்கிறேன். திருமணம் கழிந்த மறுநாள் குடந்தை தமிழ்மாறன் கைது செய்யப்படுகிறார்.

திண்டிவனத்திற்கு ஒரு திருமணத்திற்குச் செல்கிறேன். அங்குள்ள நகரச் செயலாளர் துரை வரவேற்புக்கு ஏற்பாடு செய்தார்கள். முதல் நாளே அவர் மிஸாவில் கைது செய்யப்படுகிறார்.

திருவாரூரில் ஒரு கூட்டத்தில் பேசுகிறேன். நகரச் செயலாளர் என்னோடு பேசுகிறார். மறுநாள் அவர் மிஸாவில் கைது செய்யப்படுகிறார்.

விருத்தாசலத்தில் ஒரு திருமணத்தில் கலந்துகொள்ளச் செல்கிறேன். அந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த ராஜு என்பவர் முதல் நாள் மிஸாவில் கைது செய்யப்படுகிறார்.

இதைவிட பெரிய அக்கிரமம் ஒன்றைச் சொல்கிறேன். திருச்சி சிறைச்சாலையில் நடைபெற்றது. ஆரம்பக் கட்டத்தில் எனக்கும் சந்தேகம் இருந்தது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிந்து கொண்டால் நல்லது என்று அதைச் சொல்கிறேன். சுப்பிரமணியம் என்ற நண்பர், அரியலூரைச் சேர்ந்தவர். அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. அவரையும் சிறையில் அடைத்துவிட்டார்கள், மிஸா கைதிகளில் ஒருவராக, ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு. அவர் எழுதியிருக்கிறார். நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்று. என்னை ஏன் சிறையில் அடைத்துவிட்டீர்கள் என்று கேட்டு எழுதியிருக்கிறார். அதற்குப் பதில் வரவில்லை. சிறைக்குள்ளே வந்ததுதான் வந்துவிட்டோம், இனி தி.மு.க. ஆகிவிடுவோம் என்று தி.மு.க. ஆக ஆகிவிட்டார். அவர் சிறைச்சாலைக்குச் செல்வதற்கு முன்னால் திருமண ஏற்பாடு ஆகியிருக்கிறது. அந்தத் திருமணத்திற்காக அவர் பரோல் கேட்டிருக்கிறார். பரோல் கொடுக்கப்பட்டிருக்கிறது, இரண்டு நாட்கள். முதல் நாள் இரவு வரவேண்டும். மறுநாள் காலை திருமணம். அதற்கு மறுநாள் காலை திரும்பிவிட வேண்டும். சுப்பிரமண்யம் போலீஸாரோடு செல்கிறார். முதல் நாள் இரவு போலீஸழரோடு பேசிக்கொண்டிருக்கிறார். காலையில் திருமணம். அன்றிரவு முதல் இரவு. நிகழ்ச்சியை நாள் பார்த்து வைத்திருக்கிறார்கள், கொஞ்சம் வைதீகத்தில் நம்பிக்கை உள்ள அவரது பெற்றோர்கள். சகோதரிகள் என்னை மன்னிக்க வேண்டும். போலீஸார் சொல்கிறார்கள். முதல் இரவு அன்று நாங்களும் அந்த அறையில் இருப்போம் என்று போலீஸார் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையில் நான் குறுக்கீடு செய்கிறேன் என்று

அருள்கூர்ந்து கருத வேண்டாம். அவரே எண்ணிப் பார்க்க நான் கேட்டுக்கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலிருந்து தொலை தூரத்திற்கு அவர்கள் அகன்று சென்றிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : திருச்சி 200 மைல்தான், தொலைதூரம் அல்ல.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : திருச்சிபற்றிச் சொல்ல வில்லை இவ்வளவு புரியாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க வில்லை. நான் ஆளுநர் உரைபற்றிச் சொன்னேன். (ஆரவாரம்.)

கலைஞர் மு. கருணாநிதி : ஆளுநர் அவர்களது உரையில் நெருக்கடி நிலைபற்றி பேசவேண்டியது மிக அவசியம் என்பதை அவை முன்னவர் அவர்கள் அறியாமல் இருப்பதற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். (ஆரவாரம்).

ஆகவே இந்த திருச்சி சிறைச்சம்பவத்தையும் முதல் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு அந்தக் குழு போட வேண்டிய அவசியத்தை அவர் உணரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். ஏனெனில் 2 ஆம் தேதிகூட டெல்லியில் அவர்களிடம் சொல்லப்பட்ட கருத்துக்களை யொட்டித்தான், ஆளுநர் அவர்கள் உரைமீது பொதுவாகச் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்ற மரபு இருக்கிறது என்பதால் சொன்னேனே தவிர வேறு அல்ல.

அடுத்து, ஆளுநர் அவர்கள் உரையில் வரவேற்கத்தக்க அம்சமாக இருப்பது, 16 ஆயிரம் கிராமங்களில் நியாயவிலைக் கடைகளை அமைத்து, அதன்மூலம் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற பிற உணவு தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்றவை, புளி, எண்ணெய் இதுபோன்ற இன்றியமையாத பொருட்களை வழங்க முடிவு செய்யப்பட் டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதொன்றாகும். அதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்றுக் கொள்கிறேன். ஏற்கெனவே 9,000 கடைகள் திறக்கப்பட்டிருந்தாலும், அவைகள் சொஸைட்டிகள் மூலமாக நடைபெற்றுக்கொண் டிருக்கின்ற கடைகள் ஆகும். இப்போது 16,000 ரெவின்யூ கிராமங்களில் கடைகள் திறப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், இங்கே தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரப் பட்டியல் புத்தகத்தைப் பார்த்தால், 17 ஆயிரத்து சொச்சம் ரெவின்யூ கிராமங்கள் இருப்பதாக இருக்கிறது. ஆகவே இன்னும் ஆயிரம் கிராமங்களைச் சேர்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். 16 ஆயிரம் கிராமங்கள் என்று வைத்துக்கொண்டாலும்கூட சில விவரங்களை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவது என்னுடைய கடமை. ஏனென்றால் ஆக்க பூர்வமான யோசனைகளைச் சொல்வதாக தொடக்கத்திலேயே நான் சொன்னேன். அந்தப் பொறுப்பின் காரணமாக சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நியாயவிலைக் கடைக்கு மூன்று பேர்களாவது அலுவலர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், நமது தொழிலாளர் நல அமைச்சர் திரு. ராகாவனந்தம் அவர்கள் விடமாட்டார்கள். அப்படி மூன்று பேர்களை அதாவது ஒரு பேக்கர், ஒரு ஸேல்ஸ்மேன், ஒரு கேஷியர் என்ற வகையில் மூன்று பேர்கள், அந்த இடங்களுக்கான வாடகை முதலிய செலவும், சாமான்கள் வாங்கி விற்பதற்கான முதலுக்கான வட்டி இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கிற நேரத்தில், மொத்தம் ஒரு கடைக்கு மாதந்தோறும் ஆகின்ற நிர்வாகச் செலவு என்ற வகையில் ஒரு ஆயிரம் ரூபாயாவது ஆகும் என்று நான் கருதுகிறேன்.

இப்படி ஆயிரம் ரூபாய் ஆகிற நேரத்தில் ஒரு நாளைக்கு 330 ரூபாய்க்காவது அந்த நியாயவிலைக் கடையிலே விற்பனை நடந்தால்தான் மாதம் சுமார் 10,000 ரூபாய்க்கு ஏறத்தாழ வியாபாரம் நடந்தால்தான் 10 சதவீத லாபம் என்று வைத்துக்கொண்டால்கூட, ஒரு கடைக்கு ஆயிரம் ரூபாய் லாபத்தின் மூலமாக நிர்வாகச் செலவு கட்டுப்படியாக கூடிய நிலைமையை நாம் உருவாக்க முடியும். அதாவது ஒரு கடையில் நாள் ஒன்றுக்கு 330 ரூபாய்க்கு விற்பனையாக வேண்டும். இதை நான் டிஸ்கரேஜ் செய்வதாக தயவு செய்து எண்ணக்கூடாது. இதை கணக்கிடுகின்ற நேரத்தில் ஒரு கடைக்கு ஆயிரம் ரூபாய் என்றால், 16 ஆயிரம் கடைகளுக்கு ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய், அதாவது ஆண்டு ஒன்றுக்கு சுமார் 18 கோடி ரூபாய் ஆகிறது. இந்த 18 கோடி ரூபாய் விற்பனை மூலமாக நாம் ஈடுசெய்கிற நேரத்தில், ஒரு ஏழெட்டு கோடி ரூபாய் துண்டு விழக்கூடும். அப்படி துண்டு விழுந்தாலும் பரவாயில்லை

என்ற முடிவோடு இந்த 16 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை திறக்க முன்வந்த இந்த அரசை நான் பாராட்டுவதோடு, இதிலே விட்டுப்போன 1,039 ரெவின்யூ கிராமங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன ஆலோசனையை நிதித்துறையோடு கலந்து பேசி இந்த ஆயிரம் ரூபாய் நிர்வாகச் செலவை குறைப்பதற்கு ஏதாவது வழிவகை காணவேண்டும்.

இப்போது இளைஞர் அணியிலிருந்து பலபேர்கள், 175 ரூபாய் ஊதியம் பெற்றவர்கள் எல்லாம் அகற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பயன்படுத்திக்கொள்வதன் மூலமாக, மாதம் ஆயிரம் ரூபாய் நிர்வாகச் செலவு என்பதை குறைத்துக்கொள்ள இயலுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சம், ஊராட்சி ஒன்றியங்கள், நகரசபைகளின் தலைவர்களை மக்கள் நேரடியாக தேர்ந்தெடுப்பர் என்கின்ற ஒரு அம்சமாகும். இதை பரிசீலிக்க வேண்டும் என்று எதிர்க் கட்சியிலிருந்து ஒரு உறுப்பினர் கேட்டுக்கொண்டபோது, ஆளும்சட்சி உறுப்பினர் ஒருவர், இதில் எதிர்கட்சித் தலைவரின் கருத்து என்ன என்று கேட்டார். அதற்கு நான் 15-ம் தேதி சொல்வதாக சொன்னேன். சொன்னபடி நான் இன்றைக்குச் சொல்கிறேன். 15-ம் தேதி என்று நான் சொல்வதாக சொன்ன வாக்குறுதியை நான் நிறைவேற்றிவிட்டேன். இக்கருத்தை நான் கொள்கை வடிவத்தில் வரவேற்கிறேன். இதில் உள்ள நடைமுறை சிக்கல்களை எண்ணிப்பார்க்கவேண்டும்.

ஏற்கனவே எதிர்க்கட்சி வரிசையில் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில், இந்தக் கருத்தை சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நான் கழக ஆட்சியில், முதல் கட்டமாக ஊராட்சி மன்றத் தலைவர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது. அதை பரீட்சார்த்தமாக வைத்துப் பார்த்துக்கொண்டு, அடுத்து ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி தலைவர்கள் தேர்தலைகளை வைத்துக்கொள்ளலாம் என்று யோசிக்கப்பட்டது. அது பரிசீலனையில் இருந்தது. அது புறக்கணிக்கப்பட்டதோ அலட்சியப்படுத்தப்பட்டதோ - ஆகாது.

இங்கே காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும், மற்ற கட்சிகளைச் சார்ந்தவர்களும் இதிலுள்ள சங்கடங்களை சொன்னார்கள், ஒரு தலைவரை நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அந்த ஒன்றியத்தில் பிற ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருப்பார்கள். இவ்விதம் உறுப்பினர்களான பிறகு தலைவர் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவரை மாற்ற முடியாது. இந்தப் பிரச்னை ஏற்படும்.

அதே நேரத்தில் ஒரு கேள்வி எழாமல் இல்லை. ஏற்கனவே ஊராட்சி மன்றத்தில் இப்படிப்பட்ட தகராறுகள் இல்லையா என்ற கேள்வி எழாமல் இல்லை. ஆனால் ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை மிகக் குறைவான எல்லைகளைக் கொண்டவை. ஊராட்சி மன்றத்தில் நடைபெறுகின்ற நடைமுறையைப் பார்த்தால், ஊராட்சி மன்றத் தலைவர்களே கூட, உறுப்பினர்களின் வீடுகளுக்கெல்லாம் போய் கையெழுத்து வாங்கிக்கொண்டு தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்வது என்பது கிராமங்களில் இருக்கின்ற வழக்கமாக இருக்கிறது.

ஆனால் யூனியன் நிலைமை அப்படியில்லை. தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால், துணைத் தலைவரோ மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருக்குப் பக்கத்திலே கவுன்சிலர்கள் எல்லாம் உட்கார்ந்துகொண்டு இருக்கும்போது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் தகராறு ஏற்படும் சூழ்நிலை உருவாக முடியும். அந்த நிலையிலே இதுபோன்ற சிக்கல்களையெல்லாம் ஆராய்ந்து எப்படிப் பரிகாரம் காணலாம் என்று யோசிப்பதற்கு, எதிர்க்கட்சித் தலைவர்களையும் கலந்துகொண்டு காரியமாற்றுவது சிலாக்கியமானது என்றே கருதுகிறேன். அந்த வகையிலே இந்த அரசு பஞ்சாயத்து யூனியன் நிர்வாகிகளை எப்படித் தேர்ந்தெடுப்பது என்கின்ற அறிவிப்பைச் செய்வதற்கு முன்பு, அனைத்துக் கட்சியினரையும் கலந்துகொண்டு செய்வது நல்லது என்று கூறி கொள்கை வடிவிலே இதை வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

கடைசியாக, இந்த கவர்னர் அவர்களுடைய உரையிலே நான் வரவேற்கின்ற மிக முக்கியமான ஒரு அம்சத்தைப் பற்றிக்

குறிப்பிட விரும்புகின்றேன். இந்தியைப் பொறுத்தவரையில் ஒரு மொழிக் கொள்கை உறுதியானது என்று உறுதிப்படுத்தி இருப்பதை வரவேற்கிறேன். இதைச் சொல்வதில், உணர்ச்சி பூர்வமாக எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், எனக்கு ஒன்று அச்சமாக இருந்தது. இன்றைய தமிழக அரசின் நிதி அமைச்சரும், இந்த அவையின் முன்னவருமான திரு. மனோகரன் அவர்கள். இந்த தமிழக அரசு கலைக்கப்பட்டவுடன், 10-3-1976 என்று கருதுகிறேன், டெல்லியிலே, பாராளுமன்றத்தில் பேசிய காலத்தில், தமிழக அரசு கலைக்கப்பட்டது எவ்வளவு நியாயமானது என்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூறும் அளவிற்கு, என்னை எவ்வளவு கண்டிக்க முடியுமோ, அந்த அளவுக்கு அவர்களுக்கே உரிய அருமையான மொழியில், அவருடைய பாணியிலே முழங்கிய அந்தப் பேச்சு ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'He' என்றால் கருணாநிதி.

'He (Karunanidhi) raked up the Hindi issue. We are for Hindi. The Hindi language must flourish and must be nourished, for each and every language has a hoary tradition. But Karunanidhi very cleverly raked up the issue and said that the Central Government was imposing Hindi on the unwilling people of the South. By doing it, he thought that the people as well as the student community would rally behind him and give him full support. . .'

என்று அன்றைக்கு இன்றைய அவை முன்னவரும் என்னுடைய அருமை நண்பருமான மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மனோகரன் அவர்கள், அன்றைக்குப் பாராளுமன்றத்திலே பேசியபோது "We are for Hindi" என்று சொல்லியிருக்கிறார். (பலத்த ஆரவாரம்).

திரு. துரைமுருகன் : *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதற்கு * * என்று சொல்வது ? இதை சபை குறிப்பிலேயிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நான் நாடாளுமன்றத்தில் பேசும்போது, இந்தியை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கின்றது என்று பேசியதாக இங்கே குறிப்பிட்டார்கள். எனது முழுப் பேச்சை எடுத்து வைத்துக்கொண்டு, அந்தப் பேச்சில் நான் என்ன குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை எடுத்துச் சொன்னால்தான், எனது பேச்சின் நிறைவை இந்தச் சபை புரிந்துகொள்ள முடியும் என்பதை நான் பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் குறிப்பிட்டது, இந்தி மொழிக்கு நாங்கள் எதிரிகள் அல்ல என்ற கருத்தை வலியுறுத்தி, அனைத்து மொழிகளுக்கும் சம உரிமை உண்டு என்பதையும் வலியுறுத்திச் சொல்கின்ற நேரத்தில், நீங்கள் இன்றைக்குச் சொல்லுகின்ற இந்தப் போக்கைப் பயன்படுத்தி திரு. கருணாநிதி அவர்கள் இந்தப் பிரச்னையை நாட்டு மக்கள் மத்தியிலே வைத்து, அதன்மூலம் ஒரு கிளர்ச்சியை கொந்தளிப்பை, குழப்பத்தை உண்டாக்கி விடுவார் என்கின்ற கருத்தை அவைத் தலைவருக்கு எடுத்துச் சொன்னேன்.

இன்றைக்கும் சொல்லுகிறேன். நண்பர் கருணாநிதி அவர்கள் அதை விட்டு விட்டார்கள். நான் இதை பய உணர்ச்சியோடு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சொல்லுகிறேன் - 'மாணவர்கள் தன் பக்கத்தில் அதன் மூலம் அணி திரண்டுவிடக் கூடும் என்று கருதுகிறார்,

"But the discredited Chief Minister of Tamil Nadu has been rejected by the people of Tamil Nadu lock, stock and barrel.

என்றுகூடக் குறிப்பிட்டிருக்கிறேன். அதை அவரது நலன் கருதி விட்டது பற்றிக் கவலையில்லை. ஆனால் எந்த நேரத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் இந்தி ஒன்றுதான் இந்தியாவை ஆளுகின்ற மொழி என்று சொன்னேன் என்று எனது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நிரூபிப்பார்களானால் எந்தத் தண்டனைக்கும் நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : மன்னிக்க வேண்டும். நான் அவை முன்னவர் அளவு ஆங்கிலம் படித்தவன் அல்ல. 'நாங்கள்

இந்திக்கு எதிரி அல்ல' என்ற கருத்தை எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் சொல்வதானால் - 'We are not against Hindi' என்றுதான் சொல்லியிருப்பேன். என்னைவிட அதிக ஆங்கிலம் படித்தவர் அவர். அவர் - 'We are for Hindi' என்று கூறியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மன்னித்துக்கொள்ள வேண்டும். சொல்லுவதில் முறைகள் இருக்கின்றன. அவர் பின்பற்றுகிற முறை அது; நான் பின்பற்றுகிற முறை இது.

கலைஞர் மு. கருணாநிதி : அவர்கள் அப்படிப் பேசிய பிறகு எனக்கு வந்த பயம் எல்லாம் அன்று உள்துறை அமைச்சர் - நான் இங்கே பார்லிமென்ட் ப்ரொசீடிங்கை வைத்துக்கொண் டிருக்கிறேன் - பிரம்மானந்த ரெட்டி அவர்கள், இன்று அவை முன்னவராக இருப்பவரை அல்ல, அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் மனோகரன் அவர்களைப் பாராட்டிப் பேசுகிறார். மனோகரன் பாராளுமன்ற உறுப்பினராக ஆங்கிலத்தில் பேசியதைத் தமிழில் சொல்லுகிறேன் -

" அவர் இந்திப் பிரச்சினையைத் தூண்டிவிட்டார். நாங்கள் இந்தியை ஆதரிக்கிறோம் (அல்லது) நாங்கள் இந்திக்காக இருக்கிறோம். இந்தி மொழி செழிப்பாக்கப் பாடுபட வேண்டும். வளர்க்கப்பட வேண்டும்; ஏனெனில் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு புராதன மரபு உண்டு. ஆனால் கருணாநிதி மிகவும் புத்திசாலித்தனமாக இந்தப் பிரச்சினையைத் தூண்டிவிட்டார். மத்திய அரசு, விருப்பமில்லாத தென்னக மக்கள் மீது இந்தியைத் திணிப்பதாகக் கூறினார். அப்படிச் சொல்வதால் மக்களும் மாணவர் சமுதாயமும் தனக்குப் பின்னால் ஒன்று திரண்டு முழு ஆதரவை அளிக்குமென்று அவர் நினைத்தார்."

இவர் இப்படிக் குறிப்பிட்டதற்குப் பிரம்மானந்த ரெட்டி சொல்லுகிறார் -

"I am glad that Mr. Manoharan has said that they stand for the development of Hindi throughout the country. It is a very good thing he is against all actions of rank parochialism, that is a very good thing. I welcome that statement, and I would request him and his leader/ Mr. M. G. Ramachandran to repeat it *ad nauseum,* as many times as

they like, in every nook and corner of Tamil Nadu. Youth of Tamil Nadu must grow with a better sense of responsibility, with better notions of All India with a better sense of national unity, national integrity. They should not be frogs in the well. That will act to your detriment in the long run. . .'

"நாடு முழுவதும் இந்தி வளர்க்கப் பாடுபடுவதுதான் தங்களது நிலை என்று திரு. மனோகரன் சொன்னதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இது மிகவும் நல்ல காரியம், வெறுக்கத்தக்க குறுகிய மனப்பான்மை கொண்ட நடவடிக்கைகளுக்கு அவர் எதிரானவராக இருக்கிறார். இது மிகவும் நல்ல காரியம். நான் அந்த அறிவிப்பை (ஸ்டேட்மெண்ட்) வரவேற்கிறேன். அதைத் திரும்பத் திரும்ப சலிப்புத் தட்டுமளவிற்குச் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டும். அவர்கள் விரும்புகிற வரைக்கும் திரும்பச் சொல்ல வேண்டும்; தமிழ் நாட்டில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சொல்ல வேண்டும் என்று அவரையும், அவரது தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனையும் நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் நமது தமிழ்நாட்டு இளைஞர்கள் நல்ல பொறுப்புணர்வோடு நல்ல அகில இந்திய கருத்தோடு, தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு குறித்து நல்ல உணர்வோடு வளர்ந்தாக வேண்டும். அவர்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்கக்கூடாது. காலப் போக்கில் அது உங்களுக்குத் தீமையான காரிய மாகிவிடும்."

என்று ரெட்டி பாராட்டிச் சொன்னார். அதனால் எனக்கு அச்சம் ஏற்பட்டது. கவர்னர் உரையைப் படித்த பிறகு அந்த அச்சம் நீங்கிவிட்டது. அது மாத்திரமல்ல, நேற்று ஜேம்ஸ் அவர்களைப் பார்த்து அவை முன்னவர் 'இரு மொழிக் கொள்கைக்கு ஆபத்து வந்தால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் போராடும். நீங்கள் எங்களோடு சேர்ந்து போராடத் தயார்தானா' என்று கேட்டவுடனேயே பாராளுமன்றத்தில் அவர் பேசிய பேச்சால் எனக்கு ஏற்பட்ட அச்சமும், பிரம்மானந்த ரெட்டி

பாராட்டியதால் ஏற்பட்ட பயமும் நேற்றுக் காலையிலேயே நீங்கிவிட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எனது பெயரைக் குறிப்பிட்ட காரணத்தால் ஒரு கிளாரிபிகேஷன் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்தபோது, பிரம்மானந்த ரெட்டி அவர்கள் பேசும்போது 'நண்பர் மனோகரன் நாடு முழுவதும் இந்தி பரவுவதை ஆதரிக்கிறேன் என்று கூறினார். மனோகரன் அவர்கள் தமிழ் நாட்டிலும் அதைப் பரப்ப வேண்டும்' என்ற கருத்தைச் சுட்டிக்காட்டிப் பேசியபோது பாராளுமன்றத்தில் அதற்கு மனோகரன் எதிர்ப்புத் தெரிவித்தாரா ? நேற்றையதினம் நான் கூறிய கருத்தைத்தான் அவர்களே பாராளுமன்றத்தில் அன்று இருந்த அரசுக்கு எதிராகக் கூறியிருக்கிறார்கள் என்பதை இப்போதாவது ஒப்புக்கொள்ளுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே இந்த மொழிப் பிரச்னையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

> " இந்தி திணிப்பு உருவத்தில் வந்தாலும் அதை முழு மூச்சுடன் எதிர்ப்போம். மறைந்த பிரதமர் ஜவகர்லால் நேரு கொடுத்த உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற பாடுபடுவோம்"

என்று 22-5-1977 அன்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் "மேக்னா கார்ட்டா" என்று தலைப்பிட்டு வெளியிடப்பட்ட தேர்தல் பிரகடனத்தில் கூறியுள்ளார்கள். நேரு அவர்களின் உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம்பெற வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவும், செயற் குழுவும் தீர்மானங்களை நிறைவேற்றியிருக் கின்றன. நேரு அவர்களின் உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம்பெறத் தக்க முறையிலே ஆளுங்கட்சி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் முழு ஒத்துழைப்பையும் இந்த மன்றத்திலே தரும் என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து சில வேண்டுகோள்களோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

அதே தேர்தல் அறிக்கையில் "சில பெரும் தொழில்களுக்கு மின் கட்டணச் சலுகை தந்தும், அதே நேரத்தில் வேளாண்மைக்கும் வீட்டிற்கும் பயன்படுகிற மின்சாரத்துக்கு அதிகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அதைப் பரிசீலனை செய்து உணவு உற்பத்தி பெருகிட வேளாண்மைக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டணத்தைக் குறைப்போம்" என்று சொல்லப்பட்டுள்ளது.

நலிந்துபோன தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்தும் அதற்கேற்ப சட்டத்தை உருவாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லப்படுகிறது.

பயிர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்களிப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் உடனடியாக உருவாக்கவும், படிப்படியாக ஆனால் உறுதியாக நிறைவேற்றவும் முன்வரவேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்வேன்.

அதுபோலவே மூன்றாவது சம்பளக் கமிஷன் தேவை என்று கூறப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு மேதகு ஆளுநர் அவர்கள் 3-வது சம்பள கமிஷன் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் வருகின்ற வரவு-செலவுத் திட்டத்திலே அரசு அலுவலர்களுக்கு இனிய அறிவிப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 29-12-1972 அன்று தென்னகம் ஏட்டிலும், 31-12-1972 அன்று ஆனந்தவிகடன் ஏட்டிலும் அருமையான ஒரு கட்டுரையை எழுதியிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் என்ன என்ன என்று சொல்லும்போது

'இன்று தினப்பத்திரிகை ஒன்றில் தமிழக அரசு ஒரு குழுவை நியமித்திருப்பதாகப் படித்தேன். விவசாயிகளுக்கு அன்றாடக் கூலியை எந்த அளவுக்கு உயர்த்தலாம் என்பதைப்பற்றி

ஆராய்ந்து கருத்துக் கூறவே அந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அதில் விளக்கப்பட்டிருக்கிறது.

தினக்கூலி என்பதை அறவே அகற்றியே ஆகவேண்டும். மாதச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அதுவும் போகலாபத்தில் பங்கும் தரப்பட்டே தீரவேண்டும்.

வாயில்லாப் பூச்சிகளான விவசாயிகளை அவ்வப்போது ஒரு சில ரூபாய்களை அதிகப்படுத்துவதுபோல பாவனைகாட்டி அவர்களைப் புகழ்ந்து பாராட்டி பேசியே நெடுங்காலத்திற்கு ஊமைகளாகவே அழுத்திவிடலாம் என்று யாரும் மனப்பால் குடிக்கவேண்டாம்.

விவசாய சமூகம் இனிமேலும் பொறுத்திருக்குமென்று வீண் கற்பனையில் யாரும் மூழ்கி இருக்க வேண்டாம். விவசாயிகளின் நியாயமான கோரிக்கைக்கு அடிப்படையான நியாய உரிமைக்குரல் அண்ணா தி.மு.கழகத்தின் வாயிலாக ஒலித்துவிட்டது. மேலும் தொடர்ந்து அண்ணா தி.மு.கழகம் விவசாயிகள் பிரச்சினையை நல்லதோர் அறவழியில் மக்கள் முன் விளக்கி அவர்களின் ஆதரவைப் பெற்று விவசாயிகளின் துயர் துடைக்கும் உண்மைத் திட்டத்தை நிறைவேற்ற உழைக்கும் என்று இன்றைய முதலமைச்சர் 1972 ஆம் ஆண்டில் விகடனிலே ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தினக்கூலியை அகற்றிவிட்டு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்பது கொள்கை அறிவிப்பாக வெளிவரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கடைசியாக, கவர்னர் உரையிலே தொடக்கத்திலேயும் இறுதியிலேயும் லஞ்சலாவண்யமற்ற ஊழலற்ற அரசமைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காக அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகளுக்குத் தன்னுடைய முழுமையான ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருக்கிறது. ஆனால் ஒன்றே ஒன்று. ஊழல் பேர்வழிகள் என்று புகார் சொல்லப் பட்டவர்கள் பலபேர் இன்றைக்கு அவர்களுடைய நிழலிலே இருந்துகொண்டிருக்கிறார்கள், அவர்களைக் கண்காணிக்கத் தவறி விடவேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் முதலமைச்சரை குறைசொல்லவில்லை, "இவர்கள் எல்லாம்

இருந்தால் கருணாநிதிக்கு ஆபத்து'' என்று யார் யாரை அடையாளம் காட்டிச் சொன்னார்களோ அவர்களில் சிலபேர்கள் அல்ல, பெரும்பாலோர் அவர்களுடைய நிழலிலே நின்றுகொண்டு ஊழலைப்பற்றி உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நானும் முதலமைச்சராகிய அவரும் நீண்டகாலம் பழகியவர்கள், நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டவர்கள். அவரைப்பற்றி எனக்குத் தெரியும், என்னைப்பற்றி அவருக்குத் தெரியும் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரம் என்று அவருடைய கரத்தைப்பற்றி வர்ணிப்பார்கள். அது கொடுத்துச் சிவந்த கரம் என்று ஒத்துக்கொள்ளும் அதே நேரத்தில், அவர்கள் ஒன்றை ஒத்துக்கொள்ள வேண்டும். ''கருணாநிதியின் கரம் கட்சிப் பணத்தை எடுத்துச் சிவந்த கரம் அல்ல'' என்பதை ஒத்துக்கொள்வார் என்று நம்பிக்கொண்டு, இந்த ஆளுநர் உரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் கூறிய ஆக்கபூர்வமான யோசனைகளையெல்லாம் கவனித்து, அதற்கேற்ற வகையில் இந்த அரசு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதுவரையிலே வாய்ப்பு அளித்த அவைத் தலைவரவர்களுக்கு நன்றிகூறி அமர்கின்றேன், வணக்கம்.



உரை : 14 **நாள் : 09.09.1978**

கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் அவைத் தலைவராகிய தங்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அவையினுடைய நிகழ்ச்சிகள் முறையாக வகுக்கப்படுகின்றன என்றாலும்கூட, தவிர்க்க முடியாத சூழ்நிலையால் சில நேரங்களில் அந்த நிகழ்ச்சிகளில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு தடவையும் நாம் எடுத்துக்கொள்கிற நிகழ்ச்சிகள் குறித்த காலத்திலே நடைமுறைப்படுத்த முடியாமல் காலம் தள்ளிக்கொண்டே போகிற ஒரு நிலைமை இந்த மாமன்றத்தில் அடிக்கடி ஏற்படுவதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையின்மீது நேற்றோடு விவாதம் முடிவு அடைவதாக இருந்தது. நேற்று மற்றவர்கள் எல்லாம் பேசி, எதிர்க்கட்சியின் சார்பில் நானும் பேசி, முதல்வர் அவர்கள் பதிலளிப்பது என்று எற்கனவே முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சிகளிலுமுள்ள உறுப்பினர்கள் தங்களுக்குப் பேச வாய்ப்பு இல்லையென்று எடுத்துச் சொன்ன முறையீட்டின் காரணமாகவும், எதிர்க்கட்சியிலுள்ள வேறு சில தலைவர்கள் நேற்றையதினம் நீண்ட நேரம் பேச வேண்டிய சூழ்நிலை இருந்த காரணத்தாலும், நான் கோவை மாவட்டத்தில் ஏற்கனவே ஒப்புக்கொண்ட சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை எல்லாம் நாளையதினம் தள்ளிவைத்து இன்றையதினம் இங்கே

கலந்துகொண்டு கழகத்தின் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்க வேண்டுமென்று தங்களையும் அவை முன்னவரையும் கேட்டுக்கொண்டு பிறகு முதலமைச்சருடன் கலந்து பேசி, இன்று கட்சித் தலைவர்களும், நானும் பேசிய பிறகு முதல்வர் அவர்கள் பதிலளிப்பதாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் எனக்குச் சந்தேகம் - பல தடவை முதலமைச்சருடைய பதில் தள்ளிப்போடப்பட்டுக் கொண்டே போவது இந்த அவையிலே வாடிக்கையாக ஆகிவிட்ட ஒன்று என்ற காரணத்தால் நான் நேற்று மீண்டும் தங்களைக் கேட்டேன். பிறகு தொலைபேசி மூலமாகத் தங்களோடு தொடர்புகொண்டு கேட்டேன். இன்றைக்குச் சட்டமன்றச் செயலாளர் அவர்கள், காலையிலேயே எதிர்க்கட்சியினுடைய தலைவர்களுடைய கருத்துரைகளும், முதல்வர் அவர்கள் பதிலும் இன்று காலையோடு முடிந்துவிடுகிறது என்ற செய்தியை எனக்குச் சொன்னார்கள்.

எதிர்பாராமல் கலை உலகத்தினுடைய பெரும் புள்ளிகளில் ஒருவரான புகழ் பெற்ற சின்னப்ப தேவர் அவர்கள் மறைந்துவிட்ட காரணத்தால் அதற்குச் சென்றுவிட்டு முதல்வர் அவர்கள் இன்று காலையில் வந்துவிடுவார்கள் என்றும் எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் பேசுகிற நேரத்தில் இங்கு இருப்பார்கள் என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் காலையில் பத்திரிகையைப் பார்த்தபிறகு இன்று காலையில்தான் முதல்வர் அவர்கள் கோவைக்குச் செல்லுகிறார் என்றும், எப்போது வருகிறார் என்றும் தெரியாத சூழ்நிலையில் மீண்டும் நான் தங்களுக்குத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு கேட்டேன். தாங்கள் அவை முன்னவரைக் கலந்துகொண்டு சொல்வதாகச் சொன்னீர்கள். காலையில் பேசிவிட்டால் முதல்வர் அவர்கள் வந்து பதில் சொல்லுவார் என்று தாங்கள் குறிப்பிட்டீர்கள்.

ஒருவேளை நான் பேசுகின்ற நேரத்திலே இடையிலே அவர் வந்தாலும் வந்துவிடக்கூடும் என்ற நம்பிக்கையோடு நான் இங்கே பேசத் தொடங்குகிறேன். எனினும், அவையினுடைய நடவடிக்கைகள் அவை முன்னவருக்கும் எதிர்க்கட்சிகளில் உள்ள தலைவர்களுக்கும், எனக்கு மாத்திரமல்ல, மன்றத் தலைவர்களும் கலந்துபேசி ஒரு உடன்பாட்டின்படி நடைபெறுமானால் அவையை சுமுகமாக நடத்திச்செல்லவும் வகுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்காக, செம்மையாக நடைபெறச் செய்யவும் வழிவகுத்தவர்களாக நாம்

ஆவோம், அதற்கு இனியாவது வேண்டிய ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தங்களையும் அவை முன்னவர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நான் எதிர்க்கட்சித் தலைவரவர்கள், உங்கள் அறையிலிருந்து தொலைபேசியில் என்னோடு பேசியபோது இன்றைக்குக் காலையில் குறிப்பிட்ட இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசியதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நீங்கள் காலையிலே பேசுவதும், மாலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலுரை தருவதுமான சூழ்நிலையை ஏற்படுத்துவது சரியாக இருக்குமா என்று கேட்டபொழுது எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார் என்பதை நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : நேற்றல்ல, முந்தாநாள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : 9-ஆம் தேதி பேசுவதாக அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : நான் அவை முன்னவரோடு தொடர்புகொண்டது நேற்றல்ல, நேற்று முன் தினம் தொடர்புகொண்டேன், நேற்று நேரடியாக தங்களிடத்திலே பேசினேன். நான் சொல்வது, நிகழ்ச்சி நிரலில் வகுக்கப்பட்டதற்கு மாறாக, தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலன்றி, அடிக்கடி மாற்றம் ஏற்படக்கூடாது, அதை நாம் கண்காணித்துக் கொள்ளவேண்டுமென்ற முறையிலே நான் இந்த வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே இங்கே பேசிய பல நண்பர்களும் எடுத்துக் காட்டியதைப்போல் காவிரிப் பிரச்சினைப்பற்றி தமிழக அரசு கொண்டுள்ள முடிவும் நிலையும் வரவேற்கத்தக்க ஒன்றாக அமைந்து இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் காவிரிப் பிரச்சினையில் முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏதோ தவறு விளைவித்துவிட்டது என்ற பரவலான பிரச்சாரத்தை அன்று ஆளுங்கட்சியினர் நாடு முழுவதும் செய்துவந்தார்கள். ஆனால்

அண்மையிலே டெல்லிப் பட்டணத்திலே நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டிற்குப் பிறகு நம்முடைய முதல்வர் அவர்கள் நிருபர்களிடத்திலே அளித்துள்ள செய்தியிலோ அல்லது விடுத்த அறிக்கையிலோ திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். ஏற்கனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அரசு இருந்த காலத்திலே காவிரிப் பிரச்சினையில் என்ன நிலையைக் கொண்டிருந்ததோ அதே நிலையைத்தான் இன்றைக்குள்ள இந்த அரசும் கொண்டிருக்கிறது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். எனவே அந்த அறிவிப்பின் மூலமாகவே காவிரிப் பிரச்சினையில் முன்பிருந்த கழக அரசு எந்தவிதமான தவறினையும் செய்யவில்லை என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்திலே கவர்னர் அவர்களுடைய உரையிலே 9 ஆம் பக்கத்திலே "குடியரசுத் தலைவர் ஆட்சியின்போதும், அதற்குமுன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து காவிரி நீர் பங்கீடு பற்றி இந்த அரசும் முனைப்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றது" என்று உள்ள வாக்கியம் கொஞ்சம் அச்சத்தை எனக்குத் தரத்தான்செய்கிறது. ஏனென்றால் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போதும் அதற்கு முன்பு மக்களாட்சி முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் என்று இரண்டையும் இணைத்திருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக அரசு இருந்தபோது அனைத்துக் கட்சித் தலைவர்களையும் இங்கே அடிக்கடி கூட்டி அவர்களுடைய, அரிய ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் பெற்று அவர்களுடைய ஆலோசனைகளை மாத்திரம் அல்ல, முன்னாள் முதல்வர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்களை அணுகியும் பெரியவர் பக்தவத்சலம் அவர்களை அணுகியும் காவிரிப் பிரச்சினைப்பற்றி அரிய யோசனைகளையெல்லாம் கேட்பதை தமிழக அரசு அன்றைக்கு தன்னுடைய நிலையாகக் கொண்டிருந்தது. ஆனால் 1976 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியின்பொழுது, நம்முடைய மின்துறை அமைச்சர் குறிப்பிட்டார்கள், ஒப்பந்தம் அல்ல என்று, ஆனால் ஏதோ ஒருவிதமான உடன்பாடு ஏற்பட்டு, அதை இன்றைக்குக் கர்நாடக அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதைப் பாத்திரிகைகளிலே நாம் செய்தியாகப் பார்க்கிறோம், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் அது விளக்கப்பட்டதாக நான்

அறிகிறேன். இங்கே தந்த உரையிலே, குடியரசுத் தலைவர் ஆட்சியின்போதும், அதற்கு முன் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்பட்ட அரசும் நடத்திய பேச்சு வார்த்தைகள் தொடரும் என்று இந்த இரண்டு ஆட்சியின் பொழுதும் எடுக்கப்பட்ட முடிவுகளை அல்லது பேசப்பட்ட கருத்துக்களைத் தொடர்ந்து என்று கவர்னர் உரையிலே இருப்பது எங்கே ஆபத்தை விளைவித்துவிடக்கூடுமோ என்று அஞ்சுகிறேன். குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது எடுக்கப்பட்ட உடன்பாடு அல்லது பேச்சுவார்த்தை தமிழ்நாட்டு மக்களுக்குப் பாதகமான முறையில் அமைந்தது என்பதை அன்றைக்கு நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

இங்கே அரசு இன்றைக்கு எடுத்திருக்கின்ற காவிரி பிரச்சினை பற்றிய முடிவு, முதலமைச்சர் அறிவித்திருப்பதைப் போல அரசாங்கத்தினுடைய நிலையை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு மாறாக, அதே கருத்தை வேறுவிதமாகக்கூடச் சொல்லியிருக்கலாம். தமிழ்நாட்டிலே உள்ள அனைத்துக் கட்சிகளினுடைய கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டால் அது அரசின் கரத்தைப் பலப்படுத்துவதற்குக் கூடப் பயன்படும் என்று நான் நம்புகிறேன். கர்நாடகத்திலே அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சரவர்கள் அங்குள்ள எதிர்க்கட்சிகளை யெல்லாம் பார்த்துச் சொல்கிறார்கள், "நீங்களெல்லாம் காவிரிப் பிரச்சினைமீது வேகமாகப் பேசுவதை நான் வரவேற்கிறேன், அப்பொழுதுதான் அதை வைத்துக்கொண்டு நான் போராட முடியும்" என்றெல்லாம் அவர் பேசுகிறார். அதைப்போலவே, காவிரிப் பிரச்சினையிலே தெளிவான முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் தாமதமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சிகளின் சார்பில் குறைகள் கூறப்பட்ட தாலும் அவைகளை நீங்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே நடத்துகின்ற பேச்சுவார்த்தைக்கு ஏற்ற போர்க் கருவிகளாக ஏற்றுக்கொண்டு நம் மாநிலத்திற்கு நன்மைகள் விளையும் வகையில் இந்தப் பிரச்சனையில் நல்ல தீர்வு காணவேண்டுமென்று நான் இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு முழக்கம் இடம்பெற்றிருப்பதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகின்றேன்.

அதே நேரத்திலே, இங்கு காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், ஜனதாக் கட்சியின் சார்பிலேயும் பேசிய தலைவரவர்களும், உறுப்பினர்களும் இந்தித் திணிப்பு இல்லை என்று பிரதமர் அறிவித்துவிட்ட பிறகு அதைப்பற்றி நீங்கள் ஏன் சந்தேகப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தித் திணிப்பு இல்லை என்று சொல்லிக்கொண்டே இந்தியைப் படித்தால்தான் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கும் என்று நாட்டு மக்களைப் பார்த்துச் சொல்வது ஒருவகையான திணிப்பே தவிர வேறல்ல, இந்தக் காரணத்தாலேதான் இந்தித் திணிப்பை எதிர்ப்போம் என்ற முழக்கத்தைகூட மாற்றி இந்தியை எதிர்ப்போம் என்று சொல்ல வேண்டிய அளவிற்கு இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியைத் திணிக்க மாட்டோம், ஆனால் எதிர் காலத்தில் ஆட்சிமொழியாக, தொடர்பு மொழியாக இந்திதான் இருக்கும் என்று சொல்கிறார்கள். வெளியிலே வீசுகின்ற வாடை காற்று உள்ளே நுழையாது என்று உத்தரவாதம் அளித்துவிட்டு, ஆனால் ஜன்னலைத் திறந்து வை என்று சொல்வதைப் போல், இந்தியைத் திணிக்க மாட்டோம், ஆனால் இந்தி படிக்காவிட்டால் எதிர்கால வாழ்வு நன்றாக இருக்காது என்று கூறுவது மறைமுகமான இந்தித் திணிப்பு என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது. அந்தக் கொள்கைச் சார்புடைய மற்றக் கட்சிகளும் கருதுகின்றன. இந்தியாவிலே உள்ள 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாக வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய குறிக்கோள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் குறிக்கோளை விரைவிலே எட்டுவது சாத்தியமா என்ற கேள்வி எழுகின்ற நேரத்தில் அந்தக் குறிக்கோளை நாம் எட்டுகின்ற வரையில் ஒரு சமரச ஏற்பாடாக ஆங்கிலம் நீடித்தே தீரவேண்டுமென்ற கொள்கையை நாம் எடுத்துச்சொல்லி வருகிறோம்.

(பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கைகள் வீசப்பெற்றன.)

இரு மொழிக் கொள்கை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நடைமுறையிலே இருந்து வருகிறது.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், 1968 ஆம் ஆண்டு மீண்டும் மொழிப் போராட்டத்திற்கான நிலைமை உருவானபொழுது இந்தச் சட்டமன்றத்திலே அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி தமிழ் நாட்டில் பள்ளிக்கூடங்களில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் தான்; இந்திக்கு இடம் இல்லை. இந்திக் கற்றுத் தருகின்ற ஆசிரியர்களுக்கு மாற்று வேலை தரப்படும் என்கின்ற அறிவிப்பை இந்த மாமன்றத்திலே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இந்த இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டிலே மாத்திரம் அல்ல, இந்தியா முழுமையும் கடைபிடிக்கப்பட வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன். சிலர் தவறாக எண்ணக் கூடும், இந்தியா முழுமையும் இரு மொழிக் கொள்கை கடைபிடிக்கப்பட வேண்டுமென்று சொன்னால் ஆங்கிலம், இந்தி என்ற இருமொழிக் கொள்கையா என்ற கேள்வி எழக்கூடும். நான் அதற்குத் தருகின்ற விளக்கம் எல்லாம் தமிழ் நாட்டிலே தமிழும் ஆங்கிலமும் என்று இருப்பதுபோல், ஆந்திராவிலே தெலுங்கும் ஆங்கிலமும் என்றும் கர்நாடகத்திலே கன்னட மொழியும் ஆங்கிலமும் என்றும் கேரளாவிலே மலையாள மொழியும் ஆங்கிலமும் என்றும் மேற்கு வங்கத்திலே வங்க மொழியும் ஆங்கிலமும் என்றும் உத்தரப்பிரதேசத்திலே இந்தியும் ஆங்கிலமும் என்றும் மத்திய பிரதேசத்திலே இந்தியும் ஆங்கிலமும் என்றும் இருந்து விடுமேயானால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பல்வேறு சலுகைகளைப் பெறவும் வேலை வாய்ப்புகளிலே முதலிடத்தைப் பெற்றுக்கொள்ளவும் தேர்வுகளிலே அதிக எண்களைப் பெற்று ஆதிக்க சக்தியாக உருவெடுக்கவுமான சூழ்நிலை நிச்சயமாக மாற்றப்படும்.

இல்லையேல் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக எடுத்துக்கொண்டு இந்தி, படிக்காவிட்டால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்கின்ற மறைமுகமான கட்டாயத்திற்கு - நேரடியான கட்டாயம் அல்ல, நேரடியான திணிப்பு அல்ல, மறைமுகமான திணிப்புக்கு ஆளாக்கி, இந்தி பேசாத மாநில மக்கள், அதுவும் குறிப்பாக 40 ஆண்டுகாலமாக மொழிப் போராட்ட வரலாற்றுக்கு உரியவர்களாக இருக்கிற தமிழ் நாட்டு மக்கள் இரண்டாந்தரக்

குடிமக்களாக ஆக்கப்பட்டு விடுவார்கள் என்கின்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான் - ஐயப்பாடு என்று கூடச் சொல்லமாட்டேன் - உறுதியாக எதிர்காலத்திலே நடைபெறக்கூடிய அந்த ஆபத்தை உணருகிற காரணத்தாலேதான் நாம் இந்தியை எதிர்க்கிறோம். இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் என்பதைக்கூட மாற்றிக்கொண்டு இந்தியை எதிர்க்கிறோம் என்று சொல்லக்கூடிய நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம்.

இரண்டொரு உதாரணங்களைச் சொல்வோமானால், எனக்குச் சென்னையில் நடைபெற்ற 'மெட்ராஸ் பீச் ரெயில்வே ஸ்டேஷன்' அங்கே 'நவஜீவன் எக்ஸ்பிரஸ்' என்கின்ற ஒரு புகை வண்டியினுடைய 'இனாகுரேஷன்னுக்கு' அழைப்பிதழ் எனக்கு வந்தது, அந்த அழைப்பிதழில் முதல் பக்கத்திலே இந்தியிலே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அதை பார்த்தால், 11 என்கின்ற எழுத்தையும் 1978 என்கின்ற எழுத்தையும் தவிர வேறு எதுவும் எனக்குப் புரியவில்லை. இரண்டாவது பக்கத்திலும் இந்தியிலேதான் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது பக்கத்தில் ஆங்கிலத்திலே அச்சடிக்கப்பட்டிருக்கிறது. நிகழ்ச்சி நடைபெறுகிற இடம் தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னைப்பட்டினம். சென்னை நகரிலே நவஜீவன் எக்ஸ்பிரஸ் தொடக்கவிழா நடைபெறுகிறது. இதிலே ஆளுநர் தலைமை வகித்து அந்த விழாவை நடத்திவைக்கிறார். ஆனால், இதிலே தமிழுக்கு இடம் இல்லை. முதல் இடத்தை, முக்கியமான இடத்தை, முதல் பக்கத்தை, இரண்டாவது பக்கத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பது இந்தி, அதிலாவது ஆங்கிலத்திற்கு இன்னொரு பக்கம் ஒதுக்கியிருக் கிறார்கள். எனக்கு இன்னொரு தகவல் சான்றாகக் கிடைத்திருக்கிறது. அதை இந்த அவையிலே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மண விழாக்களுக்கு வாழ்த்து மடல், 'கிரீட்டிங்ஸ்' அனுப்புவதற்கு அஞ்சல் நிலையங்களில் இப்படிப்பட்ட வாழ்த்து மடல்களை விற்பனை செய்கிறார்கள். இதுவரையிலே இந்த வாழ்த்து மடல்கள் ஆங்கிலத்திலே அச்சடிக்கப்பட்டு வந்தன. ஏதோ தமிழிலே அச்சடிக்கப்பட்டுவிட்டது என்று நான் மகிழ்ச்சியாகச் சொல்லப்போகிறேன் என்று யாரும் எண்ணி மகிழ்ந்துவிட வேண்டாம். இப்பொழுது அது அறவே மாற்றப்பட்டு வாழ்த்துமடல்கள் முழுக்க, முழுக்க இந்தியிலே அச்சடிக்கப்பட்டு

அவைகள் அஞ்சலகங்களிலே விற்பனையாகிக் கொண்டிருக் கின்றன.

மெல்ல மெல்ல ஆனால் மறைமுகமாக எப்படியும் உறுதியாக தமிழகத்திலே இந்தி பேசாத மக்களிடையே இந்தியை நுழைப்பதற்கு சூழ்ச்சி வலை பின்னப்படுகிறது என்கின்ற குற்றச்சாட்டை நான் இந்த அவையிலே சொல்லாமல் இருக்க முடியாது. எனவேதான் எந்த வகையிலாவது எதிர்காலத்திலே இந்தியா முழுமையும் இந்தி மொழியைத் தொடர்பு மொழியாக ஆக்கியே தீரவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற மத்திய அரசும், மத்திய அரசுக்கு ஆதரவு தருகிற வடபுலத்து மாநிலங்களிலே உள்ளவர்களும் திட்டத்தை வகுத்துக்கொண் டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பு இல்லை என்ற பேரால் இப்படிப்பட்ட மறைமுகமான காரியங்கள் நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே பிறந்த தமிழன் இப்படி ஒரு இந்தி வாழ்த்து மடலை வாங்கி இன்னொரு தமிழனுக்கு வாழ்த்து அனுப்ப வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்தியை எதிர்ப்பதே தவறு என்று சிலபேர்கள் பேசினார்களே, அது பொருள் பொதிந்த வாதமா என்பதை அந்த நண்பர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவை கூடி இருக்கும் இந்த நேரம் பெரியாருடைய நூற்றாண்டு விழாவை நாம் அண்மைக்காலத்திலே கொண்டாட இருக்கின்ற நேரம் ஆகும். பெரியாருடைய 100-வது பிறந்த நாள் விழா, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய 70-வது பிறந்தநாள் விழா இவைகளை எல்லாம் கொண்டாடுகின்ற சூழ்நிலையிலே இந்த அவை கூடியிருக்கிறது. எனவே அதற்குள்ளாக அவையி னுடைய நிகழ்ச்சிகள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதிலே அவைத் தலைவர் மாத்திரம் அல்ல, அவை முன்னவர் மாத்திரம் அல்ல, நாங்களும்கூடத் துடிப்பாக இருக்கிறோம்.

இப்போது பெரியாருடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துவைப்பது முறை என்று கருதுகிறேன். அதிலே எனக்குள்ள குறைபாடு ஒன்றைத் தெரிவிக்காமல் இருக்க இயலாது. பல குழுக்கள் - அனைத்துக்

கட்சிகளின் குழுக்கள் - அரசின் சார்பிலே அமைக்கப்படுகிறது. அப்படி அமைக்கப்படுகிற நேரத்தில் இந்தக் குழுக்களில் உங்களின் கட்சியின் சார்பாக யார் இடம்பெறுகிறார் என்கின்ற கேள்வியை அந்தக் கட்சியினுடைய தலைவருக்கோ அல்லது பொதுச் செயலாளருக்கோ அல்லது கட்சியினுடைய தலைமை நிலையத்திற்கோ அரசின் சார்பிலே எழுதி, அவர்கள் யார் இதிலே இடம்பெறுகிறார்கள் என்று அறிவித்து, அவர்களை இடம்பெறச் செய்வதுதான் முறையான காரியமாக இருக்க முடியும். ஆனால் பெரியார் நூற்றாண்டு விழாக்குழு என்று ஒன்று அமைக்கப்பட்ட பொழுது எங்களுடைய கட்சியினுடைய தலைமையைக் கலந்துகொள்ளாமலேயே ஒரு உறுப்பினருடைய பெயர் அதிலே குறிப்பிடப்பட்டது. அதற்குப் பிறகு அந்த உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இல்லை. அதன் பிறகுகூட நண்பர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு தனியாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. பெரியாருடன் நீங்கள் நீண்டகாலம் பழகியவர்கள், எனவே அந்தக் குழுவிலே நீங்கள் அங்கம் வகிக்கவேண்டும் என்று ஒரு கடிதம் செய்தித் துறை வாயிலாக அனுப்பப்படுகிறது, அதற்கு அவர் எழுதிய பதில் நீங்கள் தலைமைக் கழகத்திற்கு எழுதிக் கேட்டால் அவர்கள் மூலமாகத்தான் அவர்கள் என்னை நியமிக்க முடியுமே தவிர, நான் தனிப்பட்ட ஆள் அல்ல, அந்தக் கட்சியிலே ஒரு அங்கம் வகிக்கிறேன், எனவே தலைமைக் கழகத்திற்கு எழுதிக் கேளுங்கள் என்று பதில் அனுப்பினார், அதுகூட பத்திரிகைகளிலே செய்தியாக வந்திருக்கின்றது. முறைப்படி இது நடைபெறுமானால் அது பாராட்டத்தக்கதாக இருக்கும். ஆனால் அந்தக் குழுக்களில், அந்தக் கட்சியின் உறுப்பினர் இன்னார்தான் இருக்கவேண்டும் என்று சொல்கிற அந்த உரிமையும் அரசாங்கத்தினுடைய செய்தித் துறையோ அல்லது அரசாங்கமோ எடுத்துக்கொள்வது நல்லதல்ல என்பதை எடுத்துக்காட்ட நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

பெரியாருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற நேரத்தில் நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் பல நண்பர்கள் எங்கள் கட்சியின் சார்பிலேயும், மற்ற நண்பர்களும் எடுத்துக் காட்டியதைப் போல இந்த மன்றத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய படம் திறந்து வைக்கப்பட

வேண்டும் என்கின்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிலர் சொல்லக்கூடும், பெரியார் இந்த மன்றத்திலே இருந்தவர் இல்லை. எந்தப் பொறுப்பிலும் இந்த மன்றத்திலே இருந்தவர் இல்லை என்று. வள்ளுவர் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. எந்தப் பொறுப்பிலும் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. இங்கே அவைத் தலைவருக்கு மேலே இருக்கிற காந்தி அடிகளும் இந்த மன்றத்தில் இருந்தவர் இல்லை. இந்த மன்றத்தில் எந்தப் பொறுப்பிலும் இருந்தவர் இல்லை. ஆனால் அவர்கள் நம்முடைய மன்றத்தில் இருக்கிற எல்லோருடைய உள்ளத்திலும் இருப்பதைப்போலத்தான் தந்தை பெரியார் அவர்களும் இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களின் உள்ளத்திலே இடம்பெற்று இருக்கிறார். நம்முடைய உள்ளத்திலே இடம் பெற்று இருக்கும் தந்தை பெரியார் தமிழ்ச் சமுதாயத்தை விழிப்புறச் செய்யவேண்டும் என்று காலமெல்லாம் கடுமையான பிரச்சாரம் செய்தவர், தன்மான உணர்வு தமிழனுக்குத் தேவை என்று எடுத்துச்சொல்லி, அதற்காக எண்ணற்ற இன்னல்களை ஏற்றுக்கொண்ட அந்தக் கிழச் சிங்கத்தின் படம் இந்த மன்றத்தில் திறந்து வைப்பதன்மூலம் பெருமை அடையும், அந்த பணியைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியாரின் 100-வது விழா அன்று சிறைச்சாலையில் இருக்கிறதூக்கு தண்டனை பெற்ற கைதிகளுக்கு, அவர்களுடைய தண்டனையை ஆயுட் கால தண்டனையாக மாற்றலாம். அதைப்போலவே, ஆயுட்கால தண்டனை பெற்ற கைதிகளுக்கு தண்டனை குறைப்புச் செய்யலாம். இந்த இரண்டு தண்டனை இல்லாது வேறு தண்டனை பெற்ற கைதிகளுக்கும் ஓரளவு தண்டனை குறைப்பதன்மூலம் பெரியார் 100-வது விழாவில் ஒரு அடையாளமாக நாம் அந்தக் காரியத்தைச் செய்தோம் என்ற நிலைமை ஏற்படும். அதையும் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக விரும்பத்தகாத சில காரியங்கள், சாதிப் பூசல்கள், வகுப்புக் கலவரங்கள், 'பழனி, விழுப்புரம், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, புதுக்கோட்டை, கோவை போன்ற பல இடங்களில் நடைபெற்று இருப்பது மிக

மிக வருந்தத்தக்க ஒன்றாகும். அவற்றைத் தவிர்க்க எல்லாக் கட்சிகளுடைய ஒத்துழைப்பையும் அரசு பெற்றிட வேண்டும். விழுப்புரத்தில் நடைபெற்ற சம்பவம் மிகவும் கோரமான சம்பவம் ஆகும். பன்னிரெண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் உயிர் பறிக்கப் பட்டது. பல ஏழை எளியவர்களின் வீடுகள் தகர்க்கப்பட்டன. பல பெண்கள் நடுத்தெருவில் நிற்கும் அளவிற்கு அவர்களுடைய உடைமைகளை இழந்துவிட்டனர். அவர்களுடைய கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. அவைகளைத் தடுக்க தக்க நேரத்தில் காவல் துறையினர் முன் ஜாக்கிரதையோடு நடவடிக்கை எடுத்து இருப்பார்களானால் தவிர்த்து இருக்க முடியும் என்ற கருத்தை எதிர்க்கட்சியின் சார்பில் நானும் சரி, மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் சரி எடுத்துக்காட்டி இருக்கின்றோம். நான் விழுப்புரத்திற்குச் சென்றபோது, நான் தங்கி இருந்த விடுதியைச் சுற்றி ஏராளமான பேர் வந்து அவர்களுடைய குறைகளை எடுத்துச்சொன்னபோது நான் அவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் அமைதியாக இருங்கள், அதிலும் குறிப்பாக நம்முடைய கழகத்தைச் சேர்ந்த நண்பர்களுக்கு நான் சொல்வது எல்லா வகைகளிலும் ஒத்துழைப்பையும், அமைதியையும் ஏற்படுத்துவதற்கு நாம் அரசுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்ற கருத்தை நான் எடுத்துச் சொல்லிவிட்டு வந்தேன். சென்னைக்கு வந்த உடனே நிருபர்கள் கூட்டத்திலே அதே கருத்தைத்தான் நான் எடுத்துச்சொன்னேன். ஆனால் எதற்கெடுத்தாலும் எதிர்க்கட்சியைக் குறை சொல்லவேண்டுமென்று ஆளும் கட்சியில் உள்ள அமைச்சர்கள் அல்லது ஆளும் கட்சியில் உள்ள முன்னணி நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் நிகழ்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டிவிடுகிற போக்கில் நடந்துகொண்டது என்ற நிலையிலே அவர்களுடைய கருத்தை அமைத்துப் பேசினார்களே அல்லாமல் நாங்கள் எடுத்துச்சொன்ன நிலை என்ன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள் என்பதை நான் இங்கே வருத்தத்தோடு மறுபடியும் சொல்லாமல் இருக்க முடியாது.

விழுப்புரம் சம்பவத்தை நேரில் கண்டறிவதற்காக எங்கள் கழகத்தின் சார்பாக பொருளாளர் சாதிக் பாட்சா அவர்களும். சட்டமன்ற உறுப்பினர் சு. பாலன் அவர்களும் சென்றார்கள்.

அதற்குப் பிறகு நானும் மற்றவர்களும் விழுப்புரம் சம்பவத்தைப் பார்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறச்சென்றோம். செல்வதற்கு முன்பே எங்களுடைய கழகத்தின் விவசாய அணிச் செயலாளர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை முன்கூட்டியே விழுப்புரத்திற்குச் சென்று - நாங்கள் திடீரென்று பாதிக்கப்பட்ட இடத்திற்குச் செல்வதால் ஏதாவது சிறு அசம்பாவிதம் ஏற்படுமானால் அதனால் மீண்டும் ஒரு அமளிக்கு வித்திட்ட நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது என்று - விழுப்புரத்தில் தங்கி இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை அதிகாரி ஆகியோரை சந்தித்து, நான் வருவதாக எடுத்துச்சொல்லி, அவர்கள் தங்கி இருக்கும் அந்த இடத்திற்கே நான் வந்து சந்திப்பதாகச் சொல்லி, அவர்கள் ஏற்பாடு செய்து இருந்தார்கள். நான் போய் தங்கி இருக்கிற இடத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை; அப்படி வரவேண்டுமென்று நான் எதிர்பார்ப்பவனும் அல்ல; அப்படி எதிர்பார்ப்பதற்கு நான் ஏமாளியும் அல்ல. எனவே, நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களை சொல்லி அனுப்பி, அன்று காலையிலே விழுப்புரம் சென்று, அங்கே தங்கியிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பார்த்து, "எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார். உங்களிடத்திலே சில விவரங்களைக் கேட்டு, அதன்பிறகு பாதிக்கப்பட்ட இடத்திற்குச் செல்லலாம் என்று இருக்கிறார்" என்று சொன்னபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் "நான் அவர்களுக்கு அனுமதி தர இயலாது, நான் ரவுண்ட் போகிற இடத்தில் வேண்டுமானால் சந்திக்கிறேன்'' என்று நண்பர் கிருஷ்ணமூர்த்தியிடம் சொல்லிவிட்டார்.

அதற்குப் பிறகு இன்னொரு இடத்தில் தங்கி இருந்த எஸ்.பி. அவர்களிடம் கிருஷ்ணமூர்த்தி போய் சொல்லி, "உங்களைச் சந்திக்க எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார், அதற்கு வசதி செய்துகொடுங்கள்" என்று சொன்னபோது, அதற்குப் பதில் சொல்லாமல் அங்கே இருந்து - கருணாநிதி வந்தால் என்ன நடக்குமோ என்ற அச்சத்தின் காரணமாக எப்படியாவது அதைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் - ஜீப்பை எடுத்துக்கொண்டு போய்விட்டார். இப்படி மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல்துறை

அதிகாரியும் நடந்து கொண்டது மிக மிக வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. அரசு நேரடியாக அவர்கள் செய்கையை கண்டிக்காவிட்டாலும், அல்லது ஒப்புக்கொள்ள மறுத்தாலும், அந்த அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தாலும், அவர்களிடம் தனிப்பட்ட முறையிலே எடுத்துச்சொல்லி, இப்படிப் போகக்கூடாது என்ற நிலையை அரசு எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

விழுப்புரத்தில் நடந்ததுபோன்று வேறு பல இடங்களிலும் நடைபெற்றிருக்கின்றன. வடாற்காடு மாவட்டத்தில் பேரணாம் பட்டில் நடந்திருக்கிறது. இப்படிப்பட்ட வகுப்பு கலவரங்கள் இந்துக்களையும் முஸ்லீம்களையும் பொறுத்தவரையில் தமிழகத்தில் அவர்கள் அண்ணன் தம்பிகளாக, சகோதரர்களாக, நல்ல நட்புறவு கொண்டவர்களாக வாழ்ந்துவந்து கொண்டிருக் கிறார்கள். பெரியாருடைய பிரச்சாரத்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பணியினாலும், அவர்கள் இருவரோடும் சேர்ந்திருந்த பண்பாளராக கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களின் பெரும் முயற்சியாலும் தமிழ்நாட்டில் இந்து - முஸ்லீம்களிடையே நல்ல சகோதரத்துவம் நிலவி வருகிறது. அது கெடக்கூடிய நிலையில் பேரணாம்பட்டு சம்பவம் நடந்திருக்கிறது. நான் அந்தச் சூழ்நிலைகளைத் திரும்பவும் சொல்லி பிரச்சனையை மேலும் மோசமானதாக ஆக்கிவிட விரும்பாத காரணத்தால் அதன் தொடர்பாக வேறு பிரச்சனைகள் உருவாகக்கூடாது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பேரணாம்பட்டில் நடந்த கலவரத்தை அடுத்து வடாற்காடு மாவட்டம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பே திருவண்ணாமலையில் 27-8-1978-ம் நாளன்று திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று அங்குள்ள திராவிட முன்னேற்றக் கழக நகர அமைப்பு வேண்டுகோள் விடுத்தது அதிகாரிகளிடத்தில், உள்ளூர் அதிகாரிகள் ஒத்துக்கொண்டால் ஏற்றுக்கொள்ளலாம் என்று மேலதிகாரிகள் தெரிவித்தார்கள். உள்ளூர் அதிகாரிகள் அதற்கு ஆட்சேபணை இல்லை என்று

தெரிவித்ததாக எனக்கு நம்பகமான தகவல் வந்தது. ஆனால் மேலதிகாரிகள் கூட்டம் நடைபெற அனுமதிக்கவில்லை. எனவே, 144 தடை உத்தரவை மீறி திருவண்ணாமலையிலே திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற்று, கோவை இராமநாதன், தேவகி பாண்டியன், முருகையன், தர்மலிங்கம் உட்பட 35 பேர் கைது செய்யப்பட்டு, சம்மன் வரும்போது நீங்கள் வரவேண்டும்; உங்கள்மீது வழக்கு தொடரப்படும் என்று சொல்லி அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

நான் இங்கே எடுத்துச்சொல்ல முற்படுவது என்னவென்றால் அப்படியே திருவண்ணாமலையில் திராவிட முன்னேற்றக் கழகக்கூட்டம் நடைபெற்றிருந்தாலும் நான் இங்கே எடுத்துச்சொன்னதைப்போல இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்ந்து வருகிறார்கள்; அந்தச் சூழ்நிலை கெட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையிலே அந்தக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் நிச்சயமாகப் பேசியிருப்பார்கள்; அமளியை உருவாக்குகின்ற தன்மையிலும், கலவரம் நடக்க வேண்டுமென்ற தன்மையிலும் பேசியிருக்கமாட்டார்கள். இருந்தாலும் 144 தடை உத்தரவைக் காட்டி 35 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால், அதே நாளில் வந்தவாசியில் பாதிரி என்ற கிராமத்தில் அண்ணா தி. மு. க.வினர் கூட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தினுடைய விளம்பர துண்டுத்தாள் என்னிடத்தில் இருக்கிறது. 27-8-1978, வந்தவாசி - அந்தக் கூட்டம் பாதிரி கிராமத்தில் அதே நாளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆளுக்கொரு நீதி, ஒரு கட்சிக்கு தடை, இன்னொரு கட்சி கூட்டம் நடத்தலாம் என்று அனுமதி, இது அரசின் தலையீடு, அரசியல் நோக்கத்தோடு திட்டமிட்டு செய்யப்பட்டது என்று நான் சொல்லமாட்டேன். அங்கு இருக்கிற அதிகாரிகள் அப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள்; அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்பதால் இங்கே எடுத்துக்காட்டுகிறேன்.

திரு. அ. க. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, அதே 27 ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் திருவண்ணாமலையில் பேசுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த நேரத்திலே 144 தடை உத்தரவு போடப்பட்டிருந்தது. கூட்டம் நடத்தக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னதன் பேரில் அன்றைக்கு உணவு அமைச்சர் அவர்களின் கூட்டமும் ரத்து செய்யப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் வேலூரிலே ஒரு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் குட்டைமேடு என்ற பகுதியில் அன்றைக்குக் கூட்டப்பட்டிருக்கின்றது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவு சரிவர பல இடங்களுக்கும் செல்லாத காரணத்தாலேயே சில இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள் 27 ஆம் தேதி கூட்டப்பட்டன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : என்னுடைய கருத்துக்கும், என்னுடைய வாதத்துக்கும் வலு சேர்க்கின்ற அளவிற்கு உறுப்பினர் அவர்கள் விளக்கம் அளித்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஒரே மாவட்டத்தில் 144 தடை உத்தரவு போட்டுவிட்டு ஒரு இடத்திலே கூட்டம் நடத்தியவர்களைக் கைது செய்வதும் இன்னொரு இடத்திலே கூட்டம் நடத்தியவர்களைக் கைது செய்யாமல் இருப்பதுமான இந்தப் போக்கு சட்டம், ஒழுங்கு அமைதியைக் காப்பதற்கு அடையாளமாக இருக்குமா என்ற கருத்தைத்தான் சொன்னேன். அரசாங்கத்திலிருந்து அப்படிப்பட்ட ஆணைகள் போனதாக நான் சொல்லவில்லை. அதிகாரிகள் முரண்பாடான போக்குகளை வட ஆற்காடு மாவட்டத்திலே கடைப்பிடித்தார்கள் என்றுதான் சொன்னேன். ஒரே மாவட்த்திலே தடை உத்தரவு என்று போட்டுவிட்டு ஒரு இடத்திலே கூட்டம் நடத்துவதும் இன்னொரு இடத்திலே கூட்டம் நடத்தாமல் இருக்கவுமான சூழ்நிலையினை உருவாக்கி இருக்கிறார்கள். அது முறையல்ல என்பதைத்தான் சொன்னேன்.

ஆளுநர் உரையில் மிக முக்கியமாக இந்த ஓர் ஆண்டு காலத்தில், இந்த ஆட்சியில் எந்தத் தலையீடுகளும் கிடையாது,

குறுக்கீடுகளும் கிடையாது, முறைகேடுகளும் கிடையாது, ஊழலை எதிர்ப்பதில் ஒரு பெரும் போராட்டமே நடைபெற்றுக்கொண் டிருக்கின்றது என்பன போன்ற மையக் கருத்துக்கள் எல்லாம் எடுத்துக்கூறப்பட்டு அதை வைத்து ஆளும் கட்சியிலே உள்ள அருமை நண்பர்கள் எல்லாம் இங்கே மிக விரிவாகப் பேசி இருக்கிறார்கள். இங்கே உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த ஆணை ஒன்றை மிகச் சுருக்கமாக இங்கே சுட்டிக் காட்டினார்.

தலைவரவர்களே, பெயர்கள் எதுவும் குறிப்பிட்டால் அது இந்த அவையின் மரபுக்கு ஒத்ததாகாது என்று அவைத் தலைவர் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்ற காரணத்தால், ஏற்கனவே அளிக்கப்பட்ட தீர்ப்பினை சுட்டிக்காட்டி இருக்கின்ற காரணத்தால் நான் பெயர் எதையும் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் நடைபெற்ற முறைகேடு எப்படிப்பட்டது என்பதை நான் இந்த அவைக்கும் நாட்டு மக்களுக்கும் உணர்த்த வேண்டிய இடத்திலே இருக்கிறேன். 21-6-1978-லே செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பிறப்பித்த ஆணை இது. அதிலே அவர் சொல்கிறார் 'நேரிலே சென்று பார்வையிட்ட வகையிலேயும் (நான் முழுவதும் படிக்கவில்லை, ஆங்காங்கே இருக்கின்ற குறிப்பிட்ட இடங்களை மாத்திரம் மொழிபெயர்த்துப் படிக்கின்றேன்) நேரிலே சென்று பார்வையிட்ட வகையிலேயும் விசாரித்த வகையிலேயும் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள திரிசூலம் அண்ணா அரிசன் புளூ மெட்டல் வொர்க்கர்ஸ் கோ-ஆப்பரேடிவ் சொசைட்டியினர் அதனுடைய தலைவரின் சொற்படி சர்வே நம்பர் 25/2பி என்ற அரசாங்க நிலத்தில் அரசாங்கத்தின் ஒப்புதலோ கலெக்டரின் ஒப்புதலோ இல்லாமல் கல்வெட்டத் தொடங்கி இருக்கிறார்கள். அஂதன்னியில் திரு. வி. குப்புசாமி ஐயர் என்பவர் குத்தகைக்கு எடுத்துள்ள இடத்திலேயும் அந்த சொசைட்டியினர் கல்லை வெட்டி இருக்கிறார்கள். இந்தத் தவறு நடைபெற்றது என்பதை துணைத் தலைவர் விசாரணையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்படி அந்த சொசைட்டியின் தலைவர் நடந்துகொண்டது டிரஸ்பாஸ் -

The quarrying is illegal and illicit. Nothing prevented the President of the Society.

கலெக்டர் மேலும் சொல்கிறார் :

The President has allowed his people to commit the offence of illicit quarrying and trespass. The offence committed is grave and taking law into one's hands should not be encouraged.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சொல்கிறார்கள். சட்டம் அதன் கடமையைச் செய்யும், சட்டத்தை யாரும் தன் கையில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று. ஆனால் கலெக்டர் தன் உத்தரவில் சொல்கிறார்,

the offence committed is grave and taking law into one's hands

இந்தக் குற்றத்திற்கு எதிராக கலெக்டர் அவர்கள் முக்கியமாக என்ன குறிப்பிடுகிறார்கள் என்பதை, அதை ஆங்கிலத்தில் படிக்கிறேன், taking a lenient view.

இந்தக் குற்றத்திற்கு எதிராக அவர்கள் எடுக்கிற ஆக்ஷன், நடவடிக்கைகள், lenient view.

2,470 லாரி லோடுகள் இல்லிஸிட் முறையில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

Pending decision on the offence and trespass, I compound the offence of illicit quarrying of blue metal jelly of 2,470 lorry loads and order recovery of Rs. 33,345.

அதற்கு அபராதம், 'லீனியன்ட் வ்யூ' எடுத்த காரணத்தால், ஏன், 'லீனியன்ட் வ்யூ' எடுத்தார்கள் என்று தெரியவில்லை - ஒரு சொசைட்டி, அங்கீகரிக்கப்படாத சொசைட்டி, அங்கீகரிக்கப்படாத சொசைட்டியின் தலைவர் அங்குள்ள எல்லா நிலங்களிலும் புகுந்து விளையாடிச் செல்கிறார். எல்லாக் கற்களையும் எடுக்கச் சொல்கிறார்கள். அரசாங்க நிலங்களிலுள்ள கற்களை மட்டும் அல்ல, இன்னொருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிற நிலங்களிலும் இவர்களது ஆட்கள் தங்குதடையின்றி செல்கிறார்கள். அவரை எதுவும் தடுக்க முடியாது என்று கலெக்டரே கண்ணீர் விடுகிறார்.. இந்த ஆர்டரை போட்டுவிட்டு கலெக்டர் இந்தப் பணத்தை 15 நாட்களுக்குள் கட்டவேண்டும் என்று அண்ணா ஹரிஜன ப்ளூ மெட்டல் கூட்டுறவு சொசைட்டி தலைவருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த உத்தரவு 21-6-78-ல் இடப்பட்டு இருக்கிறது. பணம், ரூ. 33,000, 2,470 லாரி லோடுகள். உரிய விலைதானா என்று எனக்குத் தெரியாது. 'லீனியன்ட் வ்யூ' எடுத்திருக்கிற காரணத்தால் குறைந்த விலையாகக்கூட இருக்கலாம். அதுவும் கட்டப்பட்டதா இல்லையா என்று தெரியவில்லை. யார் அந்த சொசைட்டியின் தலைவர்? அவர்கள் ஆளும்கட்சியின் ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்று சொல்லப்படுகிற நிலையில் நான் கேட்க விரும்புகிறேன். கவர்னர் அவர்களது உரையில், நிர்வாகத்தில் எந்தவிதமான தலையீடும் இல்லை, எந்தவிதமான ஊழலும் இல்லை, ஊழலை எதிர்த்துப் போராடுகிறோம் என்று சொல்லி 2,470 லாரி லோடுகளை அவருக்கு உரிமை இல்லாத அரசாங்கத்தினுடைய இடத்திலும், இன்னொருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிற இடத்திலும், இன்னொருவர் குத்தகைக்கு எடுத்திருக்கிற இடத்திலும் நுழைந்து அவற்றை திருட்டுத்தனமாக, 'இல்லீகல்', 'இல்லிஸிட்' என்று கலெக்டரே ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு எடுத்திருக்கும் முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்று நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கழக ஆட்சிக் காலத்தில் மருத்துவக் கல்லூரியிலோ அல்லது என்ஜினீயரிங் கல்லூரியிலோ அட்மிஷன் விஷயத்தில் யாராவது ஒரு மாணவர் வழக்குமன்றத்திற்கு சென்றுவிடுவாரேயானால், நீதிமன்றத்திற்கு சென்றுவிடுவாரேயானால் அது பெரிய பூதாகரமாகப் பேசப்பட்டு பார், பார், ஊழல், ஊழல் என்று சொல்லி முழக்கமிடுவது இன்றைக்கு ஆளும் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தபோது வாடிக்கையாகக் கொண்டிருந்த ஒரு விவகாரம். நான் தங்களிடம் இன்றைக்கு சுட்டிக்காட்ட விரும்புவது, மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய தேர்வெண்கள் சென்ற ஆண்டு திருத்தத்தோடு வெளியிடப்பட்டன. டைப் செய்யும்போது இது தவறாகச் செய்யப்பட்டு விட்டது என்று கூறி திருத்தத்தோடு சென்ற ஆண்டு வெளியிடப்பட்டன. அதைப்பற்றி பிரச்னைகள் அப்போது எழுந்தன. அதற்கு சில விளக்கங்கள், சமாதானங்கள் தரப்பட்டன. அதே தவறு இந்த ஆண்டும் நடைபெற்றிருக்கிறது. அந்தத் தவறை விட்டுவிடுவோம் அதற்கு அரசாங்கச் சார்பில் என்ன சமாதானம் வேண்டுமானாலும் சொல்லட்டும், மருத்துவக்

கல்லூரி மாணவர்களின் தேர்வுப் பட்டியல்கூட வெளியிடப்படுவதில் தாமதம். இந்த அரசாங்கம் தாமதத்தில் ஒரு மிக முக்கியமான இடத்தை வகித்து வருகிறது. அதற்காக அவசரம் வேண்டும் என்று சொல்லமாட்டேன். தாமதத்திற்கும் அவசரத்திற்கும் இடையில் விரைவு என்று ஒன்று இருக்கிறது. அதை இந்த அரசு கடைப்பிடிக்கவில்லை என்பதுதான் என்னுடைய குறைபாடு, என்னுடைய குற்றச்சாட்டு விரைவாக முடிவுகள் எடுக்கப்படாமல் பல்கலைக் கழக துணைவேந்தர்கள் பதவிகள், சென்னைப் பல்கலைக் கழகமானாலும் சரி, மதுரைப் பல்கலைக் கழகமானாலும் சரி இவற்றிற்கு யாரை நியமிப்பது என்பதிலிருந்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பட்டியல், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பட்டியல் வெளியிடுகிற வரையில் பெரும் தாமதத்தை நாம் இன்றைக்குக் காண்கிறோம். அதிலும் மருத்துவ் கல்லூரி தேர்வு பெறாத சில மாணவர்கள் நாங்கள் அதிக எண்களைப் பெற்றிருக் கிறோம், நாங்கள் தகுதிபடைத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று கூறி நீதிமன்றத்தில் வழக்காடச் சென்றிருக்கிறார்கள்.

என்ஜினீயரிங் கல்லூரியை எடுத்துக்கொண்டால் ஒரு பெரிய விபரீதமான வேடிக்கை நடைபெற்றிருக்கிறது. என்ன வேடிக்கை என்றால் முதலில் தேர்வுப் பட்டியல் வெளியானது. அதில் 95 சதவிகிதம் மார்க்குகள் வாங்கிய ஒரு இஸ்லாமிய மாணவன் தன்னை தேர்ந்தெடுக்கவில்லை என்று வழக்கு போட்டார். அந்த வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தபோது, அரசாங்கத்தின் சார்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் என்ன கூறினார் என்றால், அரசாங்கத்தின் சார்பில் என்ன எடுத்து வைக்கப்பட்டது என்றால், 'இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட்' எழுதியவர்கள் அதிக மார்க்குகள் வாங்கியிருக்கலாம். நாங்கள் வைத்திருக்கின்ற தேர்வு கமிட்டியினுடைய கொள்கை என்னவென்றால், இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்குகள் வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வு கமிட்டியினுடைய கொள்கை என்று அரசாங்க சார்பில் வாதாடிய அரசாங்க வக்கீல் எடுத்துக் கூறியிருக்கிறார். இவ்விதம் வாதாடி முடித்துவிட்ட பிறகுதான் உண்மை தெரிந்திருக்கிறது. இதே போன்று இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்

வாங்கிய இன்னொரு மாணவரைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அவர் யார் என்றால், ஜி. கோவர்த்தனன் என்பவர், தேர்ந்தெடுக்கப் பட்ட எண். 13703. இந்த எண்ணுள்ளவர் 'இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட்' எழுதி அதிக மார்க்கு வாங்கியவர் அவர் எஞ்சினீயரிங் காலேஜ்-க்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் - தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு, இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கிய மாணவன் தான் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று உயர்நீதிமன்றத் திற்கு வந்த பின்னால், அதன்மீது அரசாங்க வக்கீல் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப் பதில்லை என்பது தேர்வுக் கமிட்டியின் கொள்கை என்று நீதிமன்றத்தில் வாதாடுகிறார்கள். தீர்ப்பு வேறு விதமாக அமைந்தது. அது வேறு விஷயம்.

இருப்பினும் நீதிமன்றத்தில் அரசாங்க வக்கீல் உண்மைக்கு மாறாக சொல்லிவிட்டதால், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கோவர்த்தனன் என்பவர் 13703 என்ற எண் வெற்றி பெற்றுள்ளதாக பத்திரிகையில் வெளிவந்துவிட்ட பிறகு, சேலம் எஞ்சினீயரிங் கல்லூரியில் சேர்வதற்காகச் செல்கிறார். ஆனால் அங்கே இவரை சேர்க்காதே என்று உத்தரவு போகிறது. என்ன காரணம் தெரியுமா? இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க்கு வாங்கியவர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை என்பது தேர்வு கமிட்டியினுடைய கொள்கை, இது அரசாங்கத்தினுடைய கொள்கை என்று நீதிமன்றத்தில் அரசாங்க வக்கீல் வாதாடி இருக்கிறார். ஆனால் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கிய ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தேர்ந்தெடுத்த பிறகு சேலம் எஞ்சினீயரிங் கல்லூரியில் சேருவதற்கு அவர் செல்லும்போது, அவரை அங்கே சேர்க்காதே என்று சொல்லுவதற்கு காரணம் ஏற்கனவே இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கியவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட் எழுதி அதிக மார்க் வாங்கியவரை சேர்த்துக்கொள்ள முடியாது. இதன் அடிப்படையில் அரசாங்க வக்கீல் நீதிமன்றத்தில் வாதாடியிருக்கிறார். அந்த வாதத்திற்கு முரணாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காக இம்ப்ரூவ்மென்ட் டெஸ்ட்டில் அதிக மார்க்கு வாங்கிய மாணவர் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறார். ஆகவே இடித்துக்கொண்டு போய் தேர்ந்தெடுக்கப்பட்ட

அந்த மாணவரைத் தடுத்திருக்கிறார்கள். இப்படி பெரிய குழப்பம், துக்ளக் தர்பார் என்று சொல்வார்கள். ஆனால் சரித்திர ஆசிரியர்கள் அதற்கு மாறுபடுகிறார்கள். ஆனால் இங்கே அதற்கு வியாக்கியான வடிவமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த மாணவனும் இப்போது தன்னை செலக்ட் செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாகக் கேள்வி.

இப்படிப்பட்ட பெரியதொரு குழப்பம், நிர்வாகத்தில் தேர்வு முறையில் ஏற்பட்டிருக்கிறது. இவைகளை நான் இந்த அவையில் எடுத்துச் சொல்வதின் மூலமாக பொதுமக்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும் எடுத்துச்சொல்லிக்கொள்வதோடு, இவ்வளவு தவறுகளையும் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களைப் பார்த்து, அடிக்கடி ஊழல் ஊழல் என்றும், முறைகேடு முறைகேடு என்றும் சொல்லிக்கொண்டிருப்பதில் பொருள் இருக்க முடியுமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக மிக முக்கியமான ஒரு விஷயத்தை, உடனடியாக நடவடிக்கை எடுத்து பரிசீலிக்க வேண்டிய விஷயத்தை ஒரு விசாரணைக் கமிஷன் வைத்தால் அந்த விசாரணை கமிஷனில் நானே சாட்சியங்களை கொண்டு வந்து நிரூபிக்க முடியும் என்கிற ஒரு விஷயத்தை இந்த அவைமுன் எடுத்து வைக்க விரும்புகின்றேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் புட்லூர் என்கிற கிராமம். திருவள்ளூர் தாலுகாவில் இருக்கிற கிராமம். இதன் அருகாமையில் முருக்கஞ்சேரி இடத்தில் கூவம் ஆறு இருக்கிறது. இங்கு மணல் குத்தகை விடுகிற முறை முன்னால் இருந்து வந்தது. இந்த முறையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் நிறுத்திவிட்டோம். ஏனென்றால், குத்தகை மூலம் மணலை ஏராளமாக கொண்டுபோய் விடுவதால், அங்கேயுள்ள பம்பு செட்டுகளுக்கு வரவேண்டிய நீரோட்டம் கெட்டுவிடுகிறது என்று விவசாயிகள் முறையிட்டார்கள். அதற்காக கழக அரசு காலத்தில் அந்த முறை தடை செய்து நிறுத்தப்பட்டது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பதவிக்கு வந்த பிறகு 15-7-1977-ல் முன்பு கழக அரசால் விவசாயிகளுக்கு சாதகமாக எடுக்கப்பட்ட முடிவை மாற்றி விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படும்படியான அளவில், இந்த முருக்கஞ்சேரி பகுதியில் மணல் எடுக்கின்ற குத்தகை

கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை டி. எம். தண்டபாணி என்பவர் 30,100 ரூபாய்க்கு ஏலம் எடுத்திருக்கிறார்.

அவர் இப்போது இல்லை; இறந்துவிட்டார். அவர் அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர். கொல்லப்பட்டுவிட்டார் என்பதை நான் எடுத்துச் சொல்லும்போது, அவர் தி.மு.க. வாக இருந்தாலும் அல்லது அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வாக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், கொல்லப்பட்ட ஒருவர் எந்தச் சூழ்நிலையில் கொல்லப்பட்டார்? ஆனால் அந்தக் கொலை எந்த அளவிற்கு மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை இம் மாமன்றத்தின் மூலமாக அரசுக்கு எடுத்துச் சொல்வதன் மூலம், பரிகாரம் கிடைக்கும் என்பதற்காக எடுத்துச் சொல்கிறேன். அந்த தண்டபாணி என்கிற ஏலம் எடுத்தவருக்கும், ஆளும் கட்சியிலே உயர்பதவியில் இருக்கும் எம்.எல்.ஏ.-க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்தக் குத்தகை சம்பந்தமாக, பண தொடர்புகளும் இருந்திருக்கின்றன. அதற்கு என்னிடத்தில் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. தண்டபாணி அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் ஆதரவாளர் என்பதற்கு அவரே அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வி.ல் சந்தா செலுத்தி, ரசீது பெற்றிருக்கிறார். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தலைமைக் கழகத்தின் காசாளர் கையெழுத்திட்டு, ரசீதும் கொடுத்திருக்கிறார். அந்த அளவிற்கு இறந்துவிட்ட தண்டபாணி அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆதரவாளர்தான். திடீரென்று அவர் அந்த மணல் குத்தகை எடுத்து, நிறையப் பணம் சம்பாதித்தார். ஒரு நாள், 6-5-1978 அன்று வெளியே சென்றவர் வீட்டுக்கு திரும்பவில்லை. இரண்டு நாட்கள் காணவில்லை. வீட்டிலே உள்ளவர்கள் போலீஸாரிடம் முறையிடுகிறார்கள். பிறகு, 9-ஆம் தேதி 'மாலை முரசு' பத்திரிகையில், அந்தப் பகுதியில் குளத்திலே ஒரு பிணம் மிதந்தது, அது ஜி.எச்.க்கு கொண்டுவரப்பட்டு அடையாளம் தெரியாத பிணம் என்ற செய்தி வருகிறது. 9-5-1978 அன்று அந்தச் செய்தியைப் படித்தவுடன் தண்டபாணி குடும்பத்தினர் ஆவடி போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று விசாரிக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் பிணம், ஜி.எச்.-லே இருக்கிறது, அங்கே போய் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். உடனடியாக, தண்டபாணியின் உறவினர்கள்

ஜி.எச்.-க்குச் சென்று, சவத்தைப் பார்த்து, அது தண்டபாணிதான் என்று அடையாளம் கண்டுபிடிக்கின்றார்கள். பிறகு, சவம் அவர் வீட்டாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அதைக் கொண்டுவந்து, அவர் கிராமமான புட்லூர் கிராமத்தில் தகனம் செய்துவிடுகிறார்கள்.

அதற்குப் பிறகு, அவர்கள் ஜி.எச்.க்குச் சென்று அவரது உறவினர்கள் தண்டபாணி பிரேத பரிசோதனையின் சர்டிபிகேட் கேட்கின்றார்கள். அதற்கு ஜி.எச். தந்த பதில் என்ன தெரியுமா? அடையாளம் தெரியாத பிணங்களுக்கு, விதிப்படி சர்டிபிகேட் கொடுப்பது பழக்கமில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நான் எழுப்புகின்ற கேள்வியெல்லாம், அச்சவத்தை குறிப்பிட்ட அந்த வீட்டாரிடம் எப்படிக் கொடுத்தார்கள்? அவர்கள் அடையாளம் கண்டுபிடித்த பிறகு, அவர் என்னுடைய கணவன், அவர் என்னுடைய அண்ணன், மாமன், மைத்துனர் என்றெல்லாம் சொல்லிய பிறகு, அச்சவத்தைக் கொடுத்துவிட்ட பிறகு, ஜி.எச்.-லே சர்டிபிகேட் கேட்கும்போது, அடையாளம் தெரியாத பிணத்திற்கு விதிப்படி சர்டிபிகேட் தரமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். பிறகு 10 நாட்கள் கழித்து, தண்டபாணியின் விதவை மனைவி சக்குபாய் அவர்தம் வீட்டிலே இருக்கின்ற பீரோவிலே சில கடிதங்களைக் காண்கிறார். அந்தக் கடிதங்கள் எல்லாம் தண்டபாணி கைப்பட எழுதப்பட்டவை. அதிலே என்ன எழுதியிருக்கிறது என்றால், தான் எடுத்த மணல் குத்தகை விவரத்தையும் தனக்கும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-க்கும் இடையே இருந்த பணத் தொடர்பு பற்றியும், தனக்கும் அந்த எம்.எல்.ஏ.-க்கும் ஏற்பட்ட பகை பற்றியும் குறிப்பிட்டு, கைப்பட கடிதம் எழுதியிருக்கிறார், கவர்னர் அவர்களின் விலாசமிட்டு.

ஆளும் கட்சி எம்.எல்.ஏ. வுக்கு முதலில் கார் வாங்க 20,000 கொடுத்தேன் என்று கைப்பட எழுதியிருக்கிறார்கள். அதன் போட்டோ-ஸ்டாட் காப்பியும், கடிதமும் என்னிடம் இருக்கின்றன. அடிக்கடி மிரட்டியதன்பேரில், ரூபாய் 8,000-ம், அதற்குப் பிறகு ரூபாய் 2,000-ம் ஆகமொத்தம் ரூ. 30,000 தான் ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-வுக்கு கொடுத்திருக்கிறேன் என்று தண்டபாணி கைப்பட எழுதியிருக்கிறார். பணவிவகாரத் தகராறு ஏற்பட்டு, இந்தக் கடிதம் 30-1-1978-ல் அவர் கைப்பட எழுதப்பட்டு, பீரோவில் இருக்கிறது. அந்த எம்.எல்.ஏ.-வினால் தன் உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து

ஏற்படலாம் என்று அவர் கைப்பட எழுதியிருக்கிறார். அவர் பயந்தவாறு, அவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. மேலும், அவர் துண்டுத் தாளில் சில கணக்குகளை எழுதியிருக்கிறார். அதைப் படித்தால், எப்படி ஊழலற்ற ஆட்சி நடைபெறுகிறது என்ற உண்மையை உணர்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

கணக்குப் பட்டியல் -

1-4-1978 - திருப்பதிக்கு 6,000 ரூபாய்; அது ஆள் பெயரோ அல்லது திருப்பதி உண்டியலில் போட்டாரோ எனக்குத் தெரியாது. எம்.பி.-க்கு 4,000 ரூபாய்; எந்த எம்.பி. தெரியாது, பெயர் இல்லை. எங்கள் கட்சியில் ஒரே ஒரு எம்.பி.-தான் இருக்கிறார் - ஆசைத்தம்பி., ஆர்.டி.ஓ.-வுக்கு 1,750 ரூபாய்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களை இங்கே தருகிறார்கள். அவை குற்றச்சாட்டுகள் என்ற வகையில் அமைகின்றன. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் சோமசுந்தரம் அவர்கள் சில விவரங்களைச் சொல்கிறபோது அந்த விவரங்களை அவர் நம்புகிறாரா என்பதுதான் முக்கியம் என்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் யார் வேண்டுமானாலும் எதையாவது ஒன்றை எழுதி வைத்துவிட்டால் அதை இங்கு வந்து படிப்பது சரிதானா ?

கலைஞர் மு. கருணாநிதி : இறந்துபோனவருடைய மரணவாக்கு மூலம் போல் இருக்கிறது. அவருடைய கைப்பட எழுதிய கடிதத்தைத்தான் படிக்கிறேன். ஃபோட்டோஸ்டட் காப்பியைக் கூட நம்பாமல், அவர் கைப்பட எழுதிய கடிதத்தையே வாங்கி, அவர் டில்லிக்குச் சென்றிருந்தபோது மனைவிக்கு எழுதிய கடிதம், தபாலில் வந்த கடிதத்தோடு ஒத்திட்டுப் பார்த்து இவ்வளவு ஆதாரங்களோடு வைத்திருக்கிறேன். நான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் அவருடைய துணைவியாரும், சகோதரரும் வந்து என்னிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்து இதை அரசாங்கத்திடம் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உங்கள் மீது குற்றம் சொல்லவில்லை. எந்தக் கட்சியிலும் தவறு செய்பவர்கள் இருக்கக்கூடும். நான் இதற்குப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். ஒரு விசாரணை வைக்கப்படுமானால் அந்த

விசாரணையில் இவ்வளவு சாட்சியங்களையும் கொண்டுவந்து தந்து பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஹெட் கிளார்க்குக்கு 150 ரூபாய்; தாலுகா ஆபீசில் 500 ரூபாய்; தாலுகா ஆபீஸ் ஹெட் கிளார்க்குக்கு 200 ரூபாய். இதெல்லாம் லஞ்ச ஊழல் இல்லையா, ஆட்சியின் தலையீடு இல்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருப்பதிக்கு 6,000 ரூபாய்; எம்.பி.க்கு 4,000 ரூபாய்; ஆர். டி. ஓ. -வுக்கு 1,750 ரூபாய்; ஹெட் கிளார்க்குக்கு 150 ரூபாய்; தாலுகா ஆபீசில் 500 ரூபாய்; தாலுகா ஆபீஸ் ஹெட்கிளார்க்குக்கு 200 ரூபாய். இப்படியெல்லாம் மணல் குத்தகை விஷயமாக பல பண புழக்கங்களைச் செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

8-6-1978 அன்று ஐ.ஜி. ஆப் போலீசுக்கு இறந்த தண்டபாணியின் மனைவி சக்குபாய் நீண்ட கடிதம் எழுதி யார் கொலை செய்திருக்கக்கூடும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இறந்த தண்டபாணி மனைவி சக்குபாய் கொலைக்கு யார் காரணமாக இருக்கக்கூடும் என்று கூறுகிற விஷயம் பற்றி, கைப்படக் கடிதம் எழுதி இதுவரை ஐ.ஜி. ஆப் போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை ?

ஒருவர் கொலை செய்யப்பட்டார் அல்லது தற்கொலை செய்துகொண்டார். பிணம் குளத்தில் மிதந்தது; சந்தேகங்கள் எழுகின்றன என்ற உடனே அந்த வீட்டைப் போலீசார் சோதனையிட்டிருக்க வேண்டாமா ? தடயங்கள் கிடைக்குமா என்று பார்த்திருக்க வேண்டாமா ? அப்படிப் பார்த்திருந்தால் தடயங்கள் கிடைத்திருக்காதா ? ஆனால் பார்க்காததும் நல்லது என்று கருதுகிறேன். பார்த்து தடயங்கள் கிடைத்திருந்தால் என்ன கதியாகி இருக்குமோ தெரியாது. இப்போது தடயங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. இந்த நேரத்தில் இதற்காக விசாரணை வைக்கப்படுமானால் அவற்றைத் தரத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய அவை முன்னவர் மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் போலீஸ் இலாகாவையும் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்தப் புகாரை இறந்த தண்டபாணியின் மனைவி என்னிடத்தில் கொண்டுவந்து கொடுத்து

விவரங்களைக் கூறிய காரணத்தால் சக்குபாய் குடும்பத்திற்கு என்ன ஆபத்து ஏற்படுமோ என்ற பெரும் அச்சத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய அச்சத்தைப் போக்கும் வகையில் இந்த அரசு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அந்தக் குடும்பத்திற்கே கூட பல தொல்லைகள் இந்த விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்ட காரணத்தால் ஏற்படக்கூடும் என்பதால் அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பை ஐ. ஜி ஆப் போலீஸ் மூலமாக அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, ஊழலற்ற ஆட்சி, முறைகேடு எதுவும் இல்லாத ஆட்சி. புனிதமான ஆட்சி, உத்தமமான ஆட்சி என்றெல்லாம் கூறி, அடிக்கடி, கவர்னர் உரையாக இருந்தாலும் சரி, பட்ஜட் பிரசங்கமாக இருந்தாலும் சரி, எந்த நேரத்திலும் ஊழலை எதிர்த்துப் போராடுகிறோம். போராடுகிறோம் என்று கூறிக்கொண்டு இவ்வளவு ஊழல்களை தன்னகத்தே வைத்துக்கொண்டு இருக்கும் ஆட்சி இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஒன்றைச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து விட்டதைப் போல் அவர்களாகவே கற்பனை செய்துகொண்டு "இணையலாமா?" என்று கேட்டார்கள். வேடிக்கை என்னவென்றால் அவர்களும் எங்களோடு சேரமாட்டார்களாம், நாங்களும் யாரோடும் சேரக்கூடாதாம். இது என்ன வாதம்? அதற்குப் பெயர் விதண்டாவாதம் தானே தவிர வேறு பெயர் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஒன்று, கொள்கை ரீதியில் திராவிட முன்னேற்றக் கழகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் முரண்பாடு கொண்டவையல்ல. டெல்லி மாநிலங்கள் அவையிலே நண்பர் ராமமூர்த்தி அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாறனும் மற்றவர்களும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அது 356-வது பிரிவு அரசியல் சட்டத்திலே இடம்பெறக் கூடாது என்ற திருத்தமாகும். 356-வது பிரிவின்படி எந்த நேரத்திலேயும் மாநில அரசைக் கலைத்துவிட்டு - கவர்னர்

சிபாரிசு செய்தாலும் செய்யாவிட்டாலும் கூட - குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தலாம் என்ற நிலை இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த நிலை இப்போதும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அந்த 356-வது பிரிவு இருந்து கொண்டிருக்கிறது. நினைத்தாலும் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தலாம் என்ற நிலை இருக்கக்கூடாது என்ற திருத்தத்தை அளித்து, அந்தத் திருத்தத்தை திராவிட முன்னேற்றக் கழகம், முஸ்லீம் லீக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பார்வார்ட் பிளாக் கட்சி, ஆதரித்து வாக்களித்திருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கோரிக்கை எழுப்புவதிலே தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் திருத்தத்தை ராஜ்ய சபாவிலே, மாநிலங்கள் அவையிலே, எதிர்த்து இருக்கிறது, இதை நான் ஆளுங்கட்சிக்கு அல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நினைவுபடுத்தி இந்த அளவில் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

உரை : 15 **நாள் : 13.02.1980**

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

உடல்நிலை மிகவும் சரியில்லாத சூழ்நிலையில் 7-ம் தேதியோ அல்லது 9-ம் தேதியோ என்னுடைய உரை அமையும் என்று எதிர்பார்த்து, நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்ட காரணத்தால், இப்போது உடல் நலிவோடு இந்த மன்றத்தில் சில கருத்துக்களை எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய ஆளும் கட்சி, அதனுடைய தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்கள் எடுத்துரைத்த கருத்துக்களும் எதிர் கட்சிகளின் சார்பில் எடுத்துரைத்த கருத்துக்களும் இந்த மாமன்றத்தின் குறிப்பேடுகளில் ஏறியிருக்கின்றன. நான் முதலிலே ஒன்றை மிகுந்த கவலையோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தோன்றி சற்றொப்ப இரண்டரை ஆண்டுக் காலம் ஆகிறது. இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் பல சமயங்களில் நடைபெற்றிருக்கின்றன.

சட்டமன்ற நடவடிக்கைகளில் கேள்வி நேரம் என்பது மிக முக்கியமானது. இன்றியமையாதது. நம்முடைய மாண்புமிகு முதலவர் அவர்கள் ஏற்றிருக்கிற இலாக்காக்கள் முக்கியமான இலாக்காக்கள். காவல் துறை இலாகா, இதுவரை ஏற்றுக் கொண்டிருந்து இடையில் வேறு இடத்திற்குச் சென்று மீண்டும் திரும்பிவிட்ட தொழில் இலாக்கா, பொதுத்துறை இப்படி மிக

முக்கியமான இலாக்காக்களை எல்லாம் நிர்வகித்து வருகிற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் அந்த இலாக்காக்கள் பற்றிய கேள்விகளுக்கு ஏழு அல்லது எட்டு கேள்விகளுக்குத்தான் இந்த மன்றத்திலே பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றால் நூற்றுக்கணக்கான கேள்விகள் தொழில் துறையைப் பற்றியும், காவல் துறையைப் பற்றியும் வேறுபல அவர் நிர்வகிக்கிற இலாக்காக்கள் பற்றியும் எழுப்பப்பட்டும் கூட அவைகள் எல்லாம் ஒரு மூலையில் தள்ளப்பட்டு முதல் அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தில் அவைக்கே வராமல் முதல்வருக்கு உரிய கேள்விகள் கேள்வித் தாளில் இடம் பெறாமல் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பல்வேறு விளக்கங்களைத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதை நான் கவலையோடு தெரிவிப்பது மாத்திரமல்ல அது கண்டனத்திற்குரிய ஒன்று என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு தடவை கூட்டத் தொடர் நடைபெற்ற நேரத்தில் நான் இடையில் எழுந்து பல நேரங்களில் இப்பிரச்சினையை எழுப்பலாமா என்று எண்ணிய நேரத்தில் எனக்கேகூடக் கொஞ்சம் கூச்சமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் ஏன் முதல் அமைச்சர் வரவில்லை. ஏன் கேள்விகளுக்குப் பதில் சொல்லவில்லை என்று கேட்பது எதிர்கட்சித் தலைவருக்கு வழக்கமாகிவிட்டது என்றளவிற்கு நிலைமை ஆகிவிடுமோ என்ற கூச்சத்தின் அடிப்படையில் நான் அப்பிரச்சினையைக்கூட எழுப்பவில்லை. இருந்தாலும் இவ்வளவு துறைகளையும் தன்னகத்தே வைத்திருக்கிற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மக்களுக்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் வாயிலாகத் தெரிவிக்க வேண்டிய பல கருத்துக்களைத் தெரிவிக்கத் தவறியதும் அல்லது தெரிவிக்க மறுத்தோ அல்லது புறக்கணித்தோ அவர்கள் கேள்வி நேரத்தில் வராமல் இருந்ததும் பெரும் குற்றம் என்று நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கூட்டத் தொடரில் கண்டனத் தீர்மானத்தின் மீது நான் உரையாற்றியபோது, சில முக்கிய பிரச்சினைகளை எடுத்து வைத்தேன். பல்கேரியா பால்டிகா கப்பல் பேர சம்பந்தமாக நடைபெற்ற முறைகேடுகள், விதிமுறை மீறல்கள், ஊழல்கள் இவைகளைப் பற்றி ஒரு விசாரணை நடத்தவேண்டுமென்று

சொல்லி, உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு நடத்தப்பட வேண்டும், அப்படி நடத்தப் படுமானால், நான் அதற்குரிய ஆதாரங்களை இந்த அவையிலே எடுத்து வைக்கத் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிடும்போது, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், அதை ஏற்றுக் கொண்டு உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிப்பதற்கு இந்த அவையிலே உறுதிமொழி அளித்தார்கள். ஆனால், அந்த உறுதிமொழி என்ன ஆயிற்று? கேள்விக்குறியாக ஆகிவிட்டது. இன்றுடன் அந்த உறுதிமொழி 100-வது நாள் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அந்த உறுதிமொழியைத் தொடர்ந்து ஏற்கெனவே இருந்து மறைந்து விட்ட லோக்தள் சர்க்காரர், காபந்து சர்க்கார், அந்தச் சர்க்காருடைய பிரமதருக்கு எழுதப்பட்டதாகவும், உச்ச நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி இப்போது யாரையும் இதற்காக ஒதுக்குவதற்கு இயலாது என்று பதில் அனுப்பிதாகவும், அந்தப் பதில் ஒன்றே இந்தப் பிரச்சினையை தாங்கள் சமாளித்துக் கொள்ளப் போதுமானது என்ற நிலையில் முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் வாளாக இருந்துவிட்டதை எண்ணும் போது நான் இதையும் ஒரு பெருங் குற்றமாக சாட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அளிக்கப்பட்ட உறுதிமொழியை காப்பாற்ற தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற் கொண்டிருக்க வேண்டும். அப்படி மேற்கொள்ளப்படவில்லை. சுப்ரீம் கோர்ட்டினுடைய ஜட்ஜின் மூலமாகக் கிடைத்த கடிதம் ஒன்றையே வைத்துக்கொண்டு, விசாரணை தேவையில்லை என்கின்ற முடிவுக்கு வருவது, அளிக்கப்பட்ட உறுதிமொழியைக் காப்பாற்றியது ஆகாது என்று மீண்டும் மீண்டும் நான் குற்றம் சுமத்துகிறேன்.

காபந்து சர்க்கார், சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜுக்கு எழுதி, காபந்து சர்க்காருக்கு எழுதிய பதில் தமிழக அரசுக்கு வந்து, அவர்கள் அனுப்பி இப்படி நடைபெற்ற ஒரு ஏற்பாடு, காபந்து சர்க்காருக்கும் தமிழக சர்க்காருக்கும் இடையே ஏற்பட்ட ஒரு ஏற்பாட்டின் மூலமே நிலைமையைச் சமாளித்து விடலாம் என்று கருதுவது நல்லதல்ல. புதிதாக உருவாகி இருக்கின்ற மத்திய அரசிடம் மீண்டும், மீண்டும் வலியுறுத்தி, ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியை நியமித்து, விசாரணை நடத்துவதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஏன் முன்வரவில்லை என்ற வினாவை நான் இங்கே தொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கவர்னர் உரையைத் தொடங்குவதற்கு முன்பே நம்முடைய முதலமைச்சர் அவர்களால் பல அறிவிப்புகள் நாட்டு மக்களுக்கு வெளியிடப்பட்டன. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் வருமான வரம்பு பற்றிய அறிவிப்பும், மதுவிலக்கு கொள்கையில் ஏற்பட்ட தளர்ச்சி அல்லது மாறுதல் குறித்த அறிவிப்பும் கவர்னர் உரைக்கு முன்பே, கவர்னர் உரை தொடங்குவதற்கு, 4, 5 நாட்களுக்கு முன்பே வெளியிடப்பட்டது.

இப்போது, நிதிநிலை அறிக்கை இந்த மாத இறுதியில் அல்லது மார்ச்சு மாத முதல் வாரத்தில் அறிவிக்கப்படுவதற்கு முன்பே, கவர்னர் உரை விவாதத்திற்கு இடையே, இந்தக் கூட்டத் தொடரில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் பல சலுகைகள், பல சம்பள உயர்வுகள் இந்த அவையிலே அறிவிக்கப்பட்டிருக் கின்றன.

ஆனால் எந்த ஒரு அறிவிப்பும் தொடர்புடையவர்களைக் கலந்து பேசி அல்லது தொடர்புடையவர்கள் சொல்லுகிற நேரத்தில் அதை உற்றுக் கவனித்து சிந்தித்து அதன் சார்பாக எடுக்கப்பட்ட முடிவுகளாக இருக்கின்றனவா என்றால் இல்லை.

உதாரணத்திற்கு நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அழகர்சாமி அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல் போலீஸ் இலாகாவில் அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்குச் சலுகைகள் வழங்குவதாக அறிவிக்கப்பட்டு அவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டு பிரச்சினை முடிவடைந்துவிட்டது என்று நாம் ஆறுதல் பெறுகிற நேரத்தில் அது முடிவடையவில்லை, அரைக் கிணறு தாண்டிய நிலையில்தான் இருக்கிறது என்ற அளவில் அவர்கள் - காவல்துறை சார்நிலைப் பணியாளர்கள் சார்பாக விடுத்துள்ள வேண்டுகோளில் - 'டிஸ்மிஸ் ஆனவர்களுக்கு நிபந்தனையின்றி மீண்டும் வேலை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றும். போலீசார் மீது தொடரப் பட்ட வழக்குகளையும் இலாக்கா நடவடிக்கைகளையும் ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றும், இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பணியில் சேர்ந்த போலீசாருக்கு வழங்கப்பட்ட பதவி இறக்கம், சம்பள உயர்வு நிறுத்தம் போன்ற தண்டனைகளை ரத்து செய்ய முன்வரவில்லை என்றும் போராட்ட காலத்தில் முறைகேடாக வழங்கப்பட்ட பதவி உயர்வுகளை ரத்து

செய்யவில்லை என்றும் வேலை நிறுத்த காலத்தில் இறந்த காவலர்கள் குடும்பத்திற்கு பென்ஷன். குடும்ப நல நிதி பத்தாயிரம் ரூபாய் வழங்கவேண்டுமென்ற மனிதாபிமானக் கோரிக்கை கூட மறுக்கப்பட்டது என்றாலும் போராட்டத்தின் போது காலிசெய்யப் பட்ட போலீசார் வீடுகளுக்குப் பதிலாக அவர்களுக்கு வீடுகள் ஒதுக்க வேண்டு மென்பதற்குப் பதில் இல்லையென்றும் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி அவர்கள் தங்களுடையகோரிக்கையை இந்த அரசின் முன்னால் மீண்டும் வைத்திருக்கிறார்கள்.

எனவேதான் அழைத்துப் பேசி, அணுகுமுறை செம்மையாக இருந்து காரியங்களை ஒழுங்காக நிறைவேற்றத் தவறுகிற அரசாக இந்த அரசு இருந்து வருகிறது என்ற குற்றத்தை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று, தஞ்சை மாவட்டத்தில் நடைபெறுகிற சம்பவம் கேட்பதற்கு அல்லது படிப்பதற்கு சாதாரணமாக இருக்கலாம். தஞ்சையில், குடந்தை நகரில் விரைவில் மகாமகத் திருவிழா நடைபெற இருக்கிறது. மகாமகத் திருவிழாவுக்கு அதிலே நம்பிக்கையுள்ளவர்கள் செல்லுவதைப் பற்றி நமக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1967-ஆம் ஆண்டு உருவாகி அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நான் குடந்தைக்குச் சென்று மகாமகத்திற்கு வருகிற பிரயாணிகள் வந்து நீராடிவிட்டு உடனடியாக ஊர் திரும்புகிற வசதி வாய்ப்புகளைச் செய்தால்தான் அவர்கள் ஒரே இடத்தில் கூடியிருந்து தொத்து நோய்களுக்கு ஆளாகாமல் தடுக்கப்பட முடியும் என்பதால் 'ரிங் ரோடு' குடந்தை மாநகரத்தைச் சுற்றி சுற்றுச் சாலை ஆறு லட்சம் ரூபாய் செலவில் அமைத்து அந்தக் குளத்தை தூர் வாரி மகாமகம் ஒழுங்காக நடைபெற, அதிலே நம்பிக்கை கொண்டவர்கள் வந்து தங்களுடைய யாத்திரையை முடித்துவிட்டுச் செல்ல முன்னேற்றக் கழக அரசு 1967-68-ஆம் ஆண்டில் முனைந்து காரியங்களைச் செய்திருக்கிறது. அதே போல் இப்போதும் இந்த அரசு அத்தகைய ஏற்பாடுகளைச் செய்வதை நான் குறை கூறவில்லை. அவரவர்கள் எண்ணத்திற்கு, அவரவர்கள் நம்பிக்கைக்கு குறுக்கே இந்த அரசு

நிற்கவேண்டு மென்று நான் கூறவில்லை, ஆனால் நடப்பது என்ன? அங்கே ஒரு பதக்கம் விற்பனை செய்யப்படுகிறது. பதக்கத்திலே ஒரு புறத்திலே லிங்கத்தின் படமும், இன்னொரு பக்கத்திலே மகாமகக் குளத்தின் படமும் பொறிக்கப்பட்டு அந்த டாலர் 100 ரூபாயில் ஒரு டாலர், 50 ரூபாயில் ஒரு டாலர் என்று விற்பனை செய்யப் படுகிறது. இந்த விற்பனையை மேற்கொண்டு நடத்துகிறவர் யார் என்றால் தஞ்சை மாவட்டாட்சித் தலைவர். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த விற்பனையை மேற்கொண்டு அதனை நடத்துவதற்கு ஆர்வம் காட்டுகிற அதே நேரத்தில் அவர் தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு நேர்முகக் கடிதங்களை அனுப்புகிறார். அதிலே ஒன்றை நான் எடுத்துக் காட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

'நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள் - முன்னிலை. ஏ. ஆர். ஆறுமுகம் என்று போட்டு - பொருள் : திருவிழா - கும்பகோண மகாமகத் திருவிழா - 1980 - திருவிழா டாலர்கள் - விற்பனை சம்பந்தமான அலுவலர்களுக்கு ஒதுக்கீடு - உத்தரவு வழங்கல்.

பார்வை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முகக் கடிதம். கும்பகோணம் கோட்டாட்சித் தலைவர் அவர்களின் கடிதம் எண் 36/5/79 தேதி 24-1-1980. இதிலே பிறப்பிக்கப் பட்ட, கடிதத்தின் வாயிலாகப் பிறப்பிக்கப்பட்ட ஒரு உத்தரவு -

அந்த உத்தரவில் ஒவ்வொருவரும் அந்த டாலரை விற்றே ஆக வேண்டும், ஒவ்வொரு அதிகாரியும். எந்த எந்த அதிகாரிகள் அதன் கீழே வருகிறார்கள் என்றால் துணை வேளாண்மை அலுவலர், அதைப் போலவே ஊர்நல அலுவலர், கலவை உர ஆய்வாளர், ஒன்றிய ஓவர்சீயர், ஒன்றிய பொருளாளர் இன்னோ ரன்ன அந்த மாவட்டத்திலே இருக்கின்ற பல்வேறு அதிகாரிகளும் 100 ரூபாய் டாலரை, 50 ரூபாய் டாலரை பெற்று, அதனை விற்று பணத்தைச் செலுத்தியாக வேண்டும். அதிலே ஒரு குறிப்பு, டாலர்கள் விற்பனையாகவில்லையென்று கூறி திருப்பித் தருதல் கூடாது. அப்படி ஒரு குறிப்பு இருந்தால் அந்த அதிகாரி ஒன்று, தனது கையில் இருந்து பணத்தைப் போட்டு மேல் அதிகாரி

களிடத்திலே நல்ல பெயரை வாங்கிக் கொள்ள வேண்டும். அல்லது சில தவறான நடவடிக்கைகளோடு மற்றவர்களுக்கு சலுகை அளித்து அதன் மூலம் டாலர் ஒன்றுக்கு 100 ரூபாய் அல்லது 50 ரூபாய் பெற்று, தான் ஆற்றியாக வேண்டிய கடமையை ஆற்றியாக வேண்டும்.

எனவே, முறைகேடுகள் தொடர்ந்து மலிந்துகொண்டே இருக்கின்றன என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகள். கண்டனத் தீர்மானத்திலே எடுத்துச் சொல்லப்பட்ட முறைகேடுகள். குறை பாடுகளுக்குப் பிறகு இந்த 3, 4 மாத காலத்தில் இந்த ஆட்சி திருந்தியிருக்கிறதா என்றால் இல்லை. நான் ஒரு அறிவிப்பை அல்லது ஒரு ஆணையை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்பு கிறேன். இன்ஸ்டிட்யூட் ஆப் பிலிம் டெக்னாலஜி அரசு ஸ்டுடியோ என்ற ஒன்று இருக்கிறது. அந்த அரசு ஸ்டுடியோவில் பிலிம் டெக்னாலஜி பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு வசதிகளைப் பெறுகின்ற மாணவர்கள் எல்லாம் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அதிலே இதுவரையில் சிவதாணுப்பிள்ளை என்பவர் பிரின்ஸ்பாலாக, முதல்வராக பொறுப்பேற்று இருந்தார். அவர் 30-6-1979 உடன் ஓய்வு பெறுகிற வயதை அடைந்து ஓய்வு பெறுகிறார். ஓய்வுபெற்ற பிறகு அவருக்கு சீப் செக்ரடரி டு கவர்ன் மென்ட் திரு. கார்த்திகேயனிடமிருந்து செல்கிற ஆணை என்ன தெரியுமா? அந்த ஓய்வுபெறுகிற அதிகாரியினுடைய இடம் அபயன்ஸில் வைக்கப்படும். எவ்வளவு நாளைக்கு அந்தப் பதவி அபேயன்ஸில் வைக்கப்படும். 3 ஆண்டுக் காலத்திற்கு.

The Government now direct that the post of Principal, Institute of Film Technology for a period of three years from 1-7-1979 and that a post of President be created on contract basis to head the Institute of Film Technology and the Tamil Nadu Films Division and to co-ordinate the activities of the two institutions . . . . . .

பிரின்சிபால் என்கின்ற பதவி அபேயன்ஸில் வைக்கப்பட்டு, 3 ஆண்டுக் காலத்திற்கு அபேயன்ஸில் வைக்கப்பட்டு, பிரசிடென்ட் என்ற புதிய பதவி உருவாக்கப்படுகிறது. அந்தப் புதிய பதவிக்கு,

The Government also direct that the incumbent of the post of President be paid a consolidated pay of Rs. 2,000/ and provided with facilities attached now to the post of Principal, Institute of Film Technology, telephone facility at his residence and the provision of a car with a driver for official purposes and a peon at his residence.

அந்தத் தலைவர் பதவிக்கு 2 ஆயிரம் ரூபாய் மாதச் சம்பளம், ஒரு கார், அவருடைய வீட்டிலே ஒரு பியூன், டேலிபோன் இத்தியாதிவசதிகள் செய்யப்படுகின்றன. அந்த இடத்திலே உட்கார வைக்கப்பட்டவர் எனக்குக் கூட வேண்டியவர், திரை யுலகத்திலே நம்முடைய முதலமைச்சருக்குக் கூட நெருக்கமானவர்தான். ப. நீலகண்டன் அவர்கள் அந்த இடத்தில் அமர்த்தப்பட்டார்கள். பிரின்சிபால் பதவி அபேயன்ஸில் வைத்துவிட்டு, மூன்று ஆண்டுக் காலத்திற்கு அபேயன்ஸில் வைத்துவிட்டு பிரசிடென்ட் பதவியை திடீரென்று உருவாக்கி நீலகண்டன் என்ற நல்ல நண்பர் நான் மறுக்கவில்லை - அவர் எனக்கும் வேண்டியவர் தான் மறுக்கவில்லை, அவரை அந்த இடத்திலே அமர்த்த வேண்டு மென்பதற்காக புதிய பதவியை உருவாக்கி 2 ஆயிரம் சம்பளம் தர வேண்டுமா? ஆகவே நீங்கள் திருந்துகிற வழியாக இல்லையே, அதைத்தானே இது காட்டுகிறது என்பதற்குத்தான் நான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து, இன்னொரு உதாரணம் சொல்ல வேண்டுமே யானால், வீட்டு வசதி வாரிய வீடுகளை ஒதுக்கிடுவதில் ஏற்பட்டுள்ள முறை கேடுகளை நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். வீட்டு வசதி வாரியத்தில் கட்டி வழங்கப்படும் வீடுகள், நான்கு வகைப்படும். ஒன்று : இ. டபிள்யூ. எஸ்., அதாவது எம்ப்ளாயிஸ் ஒர்க்கர்ஸ் ஸ்கீம், இது ஆண்டு வருமானம் 6,000 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு ஒதுக்கப் படுகிற வீடுகள், அடுத்தது, லோயர் இகைம் குரூப் - எல்.ஐ.ஜி. பிளாட் - ஆண்டு வருமானம் ரூ. 9,600 ரூபாய் வரை உள்ளவர் களுக்கு. அடுத்தது, மிடில் இன்கம் குரூப் - எம்.ஐ.ஜி. பிளாட் - ஆண்டு வருமானம் 9,600 ரூபாய் முதல் 24,000 ரூபாய் வரை உள்ளவர்களுக்கு. அடுத்தது, எச்.ஐ.ஜி. பிளாட் - ஹையர் இன்கம்

குரூப் - ஆண்டு வருமானம் 24,000 ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்கு.

அரசாங்க ஆணை எண். ஜி. ஒ. எம். எஸ். எண். 399, தேதி: 2-3-1979-ன் படி கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மனுக்கள் கோரி விளம்பரம் செய்யப்பட்டு, கடைசி தேதிக்குள் வரப்பட்ட மனுக்களைப் பரிசீலித்து, கீழ்க்கண்ட விகிதாச்சாரத்தின்படி குலுக்கல் முறைப்படி வழங்கப்பட வேண்டும். நன்றாகக் கவனிக்க வேண்டும். குலுக்கல்படி.

விகிதாசாரம் என்ன ? தாழ்த்தப்பட்டவர்களுக்கு 10 சதவீதம். மாநில அரசு ஊழியர்களுக்கு 8½ சதவீதம், மத்திய அரசு ஊழியர்களுக்கு 11 சதவீதம். பாதுகாப்புத் துறை ஊழியர்களுக்கு 7½ சதவீதம். முடி திருத்துவோர், துணி வெளுப்போர் 5 சதவீதம், மற்ற பொதுமக்களுக்கு 48 சதவீதம்.

இதற்கு அடுத்து அரசாங்கம் 23-4-1979 அன்று எண். 21244, கே. 2/79-ன் படி ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறது. அதாவது, மொத்தம் உள்ள வீடுகளில் 90 சதவீதம் முன்னால் சொன்ன அரசாங்க ஆணைப்படி ஒதுக்கப்பட வேண்டுமென்றும், மீதியுள்ள 10 சதவீதம் வீடுகளை அரசாங்கமே தன்னிச்சையாக ஒதுக்கும் என்றும் அரசு தன்னுடைய மெமோவில் குறிப்பிடுகிறது.

நான் சொன்ன கணக்கு 100 சதவீதத்திற்கு. பிறகு அரசு இன்னொரு ஆணையைப் பிறப்பித்து 50 சதவீதத்தை முதலிலே குறிப்பிட்ட விகிதாச்சாரப்படி ஒதுக்கிவிட்டு 10 சதவீதத்தை அரசாங்கம் ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்து ஒரு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இந்த ஆணையின்படி இந்த வீடுகளை ஒதுக்கும் பொழுது வீடுகள் தேவைப்படுவோர் முதலில் மனுவைப் போடவேண்டும்; மனு போடும்போதே டெபாசிட் தொகையாக 500 ரூபாய் கட்ட வேண்டும்; அந்த மனுக்கள் அந்த மனுதாரர் பற்றிய முழு விவரங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும். அந்த மனுக்களில் பூர்த்தி செய்யப்பட்ட விஷயங்கள் உண்மையானவை என்று கெஜடட் ஆபீசர்களால் பரிந்துரைக்கப் பட வேண்டும். இவ்வளவு விதிமுறைகள். ஆனால் நடந்தது என்ன தெரியுமா?

கோட்டூர்புரத்தில் 13 வீடுகளுக்கான ஆணையை 21-1-80இல் கடந்த ஜனவரி மாதம் 21-ஆம் தேதி - 13 வீடுகளுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த 13 வீடுகளும் ஆண்டு வருமானம் 24,000 ரூபாய்க்கு மேல் அதாவது ஹையர் இன்கம் குரூப் - உள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பெரிய வீடுகள் ஆகும். அந்த 13 வீடுகளில் 3 வீடுகள் ஆர். கணபதி. என். நீலகண்டன். வி. வி. ரவி. என்பவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இந்த மூன்று பேர்களும் வீடு அவர்களுக்கு ஒதுக்கு கின்ற வரை அதற்கான அப்ளிகேஷன் - மனுவைப் போடவே இல்லை. மனு போடப்பட்டு, அதை கெஜட்டட் அந்தஸ்திலே உள்ள அதிகாரிகள் பரிசீலித்து, அதற்குப் பிறகுதான் அலாட்மெண்ட் செய்ய வேண்டுமென்று விதி முறைகள் இருந்தாலும்கூட, 13 வீடுகளில் 3 வீடுகள் கணபதி, என். நீலகண்டன், வி. வி. ரவி என்பவர்களுக்கு மனு இல்லாமலே அலாட்மெண்ட் செய்யப்படுகிறது.

ஆனால் அலாட்மெண்ட் செய்கின்ற அந்த அரசாங்கத் தினுடைய ஆணையில், அந்த அலாட்மெண்ட் யாருக்குச் செய்யப் பட்டதோ அவர்களிடம் வீட்டு வசதி வாரியம் மனுவினைக் கேட்டுப் பெற வேண்டுமென்று கூறப்படுகிறது. அலாட்மெண்ட் செய்துவிட்ட பிறகு. அவர்களிடத்திலே மனுவினைப் பெற வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது.

அதைப்போலவேதான் வி. வி. சீனிவாசன், அனந்தராமன், டாக்டர் ரகோத்தமன் ஆகிய மூன்று பேர்களுக்கு இந்த ஆணைப் படி மூன்று வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் மூவரும் எம். ஐ. ஜி. பிளாட்டுக்குத்தான் மனு செய்து கொண்டார்கள். அதாவது, மிடில் இன்கம் குரூப்புக்கு. ஆனால் ஒதுக்கப்பட்டது ஹையர் இன்கம் குரூப் பிளாட்டுகள். அவர்களுக்கு எப்படிப் பணம் கட்ட முடியும் என்று தெரியவில்லை. அவர்களுக்கு முறை கேடாக இந்த வீடுகள் கோட்டூர்புரத்திலே 13 வீடுகளுடைய ஒதுக்கப்பட்ட நிலை இவ்வாறாகும்.

அடுத்து, திருவான்மியூரில் கட்டப்பட்ட எம். ஐ. ஜி. பிளாக் 20-க்கான ஒதுக்கீடு, அரசு ஆணை ஜி. ஒ. எம். எஸ். எண். 74,

அதுவும் தேதி : 23-1-1980 தான். கடந்த ஜனவரி மாதம் 23-ஆம் தேதி; அரசுக்கு ரொம்ப அவசியம், அலாட் மென்ட், அவசரம் அவசரமாக செய்யப்படுகிறது. அந்த 20 வீடுகளில், 10 வீடுகள் அப்ளிகேஷன் இல்லாமலே, அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகிறது. அந்த 10 வீடுகளில் 7 வீடுகள் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த மாதம் நல்ல யோகமான மாதம். ஏனென்றால், நாடாளுமன்றத்தேர்தல் முடிவுக்குப் பிறகு, அவர் களுக்கு மனுக்கள் இல்லாமலே, அப்ளிகேஷன் இல்லாமலே, அலாட்மென்ட் போட்ட ஹவுசிங்போர்ட் வீடுகள், சேஸீஸ் இவை களெல்லாம் நிரம்பக் கிடைக்கின்றன. பஸ் ரூட்டுகள் எல்லாம் கூடக் கிடைக்கின்றன. ஆளுங்கட்சி எம். எல். ஏ. க்கள் இது வரையில் என்னைத் திட்டிக் கொண்டிருந்தாலும்கூட இப்பொழுது வாழ்த்திக் கொண்டிருப்பார்கள், மனத்திற்குள்ளாகவே என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் 7 எம். எல். ஏக்களுக்கு, அவர்களிடம் மனுக்கள் பெறாமலேயே - என்னிடத்திலே அவர்களுடைய பெயர்கள் எல்லாம் கூட இருக்கின்றன. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அதை முதலமைச்சரவர்கள் தொடர்புடைய அதிகாரிகளிடத்திலே அல்லது அமைச்சர்களிடத்திலே கலந்து பேசி அந்தப் பெயர்களை அறிந்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அது ஒருவேளை முதலமைச்சருடைய விருப்பத்தின் காரணமாகவே கொடுக்கப்பட்டதோ என்னவோ, எனக்குத் தெரியாது, ஆக, 7 எம். எல். ஏக்களுக்கு திருவான்மியூரில் கட்டப் பட்ட எம். ஐ. ஜி. ப்ளாட்டில் 20-க்கான ஒதுக்கிடு அரசாணை, 23-1-1980, நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு, 10 வீடுகள் அப்ளிகேஷன் இல்லாமலே அரசாங்கத்தால் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

அதைப் போலவேதான் அசோக் நகரிலும் மனுக்கள் இல்லாமல் வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 12 வீடுகள் அங்கே, அதிலே 5 வீடுகள் அப்ளிகேஷன் இல்லாமலேயே ஒதுக்கப் பட்டிருக்கின்றன. இது எவ்வளவு பெரிய முறைகேடு? ஆளுங் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களுக்காகச் செய்யப்பட்ட முறைகேடா அல்லவா ? இந்த முறைகேடு தொடரலாமா என்பதை

எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த உதாரணத்தைச் சொன்னேன். அதற்குரிய, அரசாங்கத்தினுடைய ஆணைகள் என்னிடத்திலே இருக்கின்றன. அப்ளிகேஷன்ஸ் போடா விட்டாலும் அலாட்மென்ட் செய்த பிறகு அவர்களிடத்திலே அப்ளிகேஷன்களைப் பெறுங்கள் என்று ஹவுசிங் போர்ட் சேர்மனுக்கு எழுதப்பட்ட கடிதத்தினுடைய நகல்களும் என்னிடத்திலே இருக்கின்றன. அந்த ஆதாரங் களுடன்தான் அவைகளை நான் இங்கே எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, பேசின் பிரிட்ஜ். பேசின் பிரிட்ஜில், மாநகராட்சிக்கு, சென்னை மாநராட்சிக்குச் சொந்தமான ஒரு இடம், இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள இடம். 1972 ஆம் ஆண்டு அந்த இடத்தைக் குத்தகைக்கு விட வேண்டுமென்று Brilliant Trading Corporation Private Limited சார்பிலும், கே. பி. நாராயணன் என்பவர் சார்பிலும், கோரப்பட்டது. அந்த மனுவை ஆராய்ந்த மாநகராட்சி, 5-12-1972-ல் அவர்களுக்குக் கீழே கண்ட பதிலை அனுப்பியது.

Your request for lease of land on Basin Bridge Road cannot be considered, as this land is required for road purposes for the Corporation.

(Sd./-) P. N. Subramaniam

என்று 5-12-1972-ல் அந்த இடம் சாலை வசதிக்காக ஒதுக்கப் பட்டுள்ள இடம், அதைத் தனிப்பட்டவர்கள் வியாபார ஸ்தல மாகவோ, கடைகளை அமைக்கவோ நிச்சயம் தர முடியாது என்று பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆனால், அந்த இடத்தை இப்பொழுது, ஆளுங்கட்சி எம். எல். ஏ. அவர்களுடைய - நான் பெயரைச் சொல்ல விரும்ப வில்லை; ஆளுங்கட்சி எம். எல். ஏ. ஒருவருடைய - தகப்பனார் பெயரால், அவருடைய 'சன்ஸ்' என்ற பெயரால், அந்த இடம் அவர்களுக்கு வழங்கப்பட்டு, அந்த ஆளுங்கட்சி சட்ட மன்ற உறுப்பினருடைய தந்தையார் இறந்து விட்ட பிறகு, அவரே அந்த இடத்தில் இப்பொழுது சர்வ ஆதிக்கத்தையும் செலுத்தி கொண்டிருக்கிறார்.

இது குறித்து சிலபேர் மசூதிக்குச் செல்வதற்கு எங்களுக்கு இடம் இல்லை. பாதையின் குறுக்கே அவர்கள் ஒரு விறகுத் தொட்டி - கட்டைத் தொட்டி இன்று அமைத்துக் கொண்டிருக் கிறார்கள். எனவே மசூதிக்குச் செல்ல எங்களுக்கு இடம் தேவை. கோர்ட்டார் இதுவரை செய்யப்பட்டுள்ள காரியங்களுக்கும் ஸ்டே தரவேண்டுமென்று கேட்ட போது கோர்ட்டாரும் இதற்கு மேல் அந்த இடத்தில் எதுவும் கட்டக் கூடாது என்று ஆணை பிறப் பித்திருக்கிறார்கள். ஆனால் கட்டப்பட்டிருக்கிற கட்டிடங்களின் போட்டோ படங்கள் இங்கே இருக்கின்றன. அந்தப் படங்களை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இங்கே தந்திருக்கிறேன். ஆக முறைகேடுகள் வளர்ந்து கொண்டே போகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இதையும் இங்கே வைத்தேன்.

விவாயிகளுடைய பிரச்சினை பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இங்கே விரிவாகப் பேசி இருக்கிறார்கள். விவசாயிகள் இன்றைக்கு தங்களுடைய மிக முக்கியமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறவில்லை என்பதாலும் அவர்களை அழைத்துப் பேசி தீர்வு காணக்கூடிய முயற்சிகளிலே இந்த அரசு ஈடுபடவில்லை என்பதாலும் மிகுந்த கொதிப்புற்றிருக்கிறார்கள் என்பதை நாடு அறியும்.

நாங்கள் ஜப்தி செய்வதே இல்லை என்று அரசாங்கத்தின் சார்பில் அடிக்கடி சொல்லப்பட்டாலும்கூட இதோ இருக்கிற இந்த அச்சடிக்கப்பட்ட துண்டு அறிக்கை என்ன கூறுகிறது என்பதை இங்கே படித்துக் காட்ட நான் விரும்புகிறேன்.

பி. 1453 பரவாக்கோட்டை : கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் பரவாக்கோட்டை "ஏல விளம்பரம்".

பரவாக்கோட்டை கிராம விவசாய கூட்டுறவு கடன் சங்கத் திலிருந்து கீழ்க்கண்ட பாக்கிதாரர்கள் செலுத்தவேண்டியகடன் பாக்கிக்காக 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள் 5, 6 நாட்களுக்கு முன்புதான் - அன்று ஜப்தி செய்யப்பட்டு கீழ்க் கண்ட ஜங்கம சொத்துக்கள், மன்னார்குடி காசுக்காரச் செட்டித்

தெருவில் இருக்கம் தஞ்சாவூர் கூட்டுறவு மத்திய வங்கிக் கிளையில் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாள் காலை 12 மணி அளவில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

அதில் சொத்து விவரம்

கு, மா, பாப்பாத்தி அம்மாள் - சொத்து விவரம் -

பிலிப்ஸ் ரேடியோ - "மேட் இன் இண்டியா" 1

மர நாற்காலி 2

சைக்கிள் "அட்லாஸ்" பழையது 1

பித்தளை தவலை 1

பித்தளை குவளை (சிறியது) 1

பித்தளைக் குடம் 1

பித்தளைச் செம்பு 1

அடுத்து சி. சி. உத்திராபதி - அவருடைய சொத்துக்கள் விவரம் - சைக்கிள் "பி. எஸ். ஏ." பச்சை கலர் டைனமோ இல்லாதது, பழுதடைந்தது 1

மர பெஞ்சு 1

பித்தளைத் தவலை - சின்னது 1

பித்தளை அரைக் குவளை ("பர்மாராணி" என்று பெயர் உடையது) 1

பஞ்சநாதன் சொத்தின் விவரம் -

ரேடியோ - பழையது (கன்டெம்ட்) 1

இட்லிப் பானை (தட்டும் மூடியும் இல்லாதது) 1

பித்தளைக் குடம் 1

ப. விஜயேந்திரன்-

பித்தளைக் குவளை 1

இட்லிப் பானை (தட்டும் மூடியும் இல்லாதது) 1
பித்தளை தவலை 1
பித்தளைத் தாம்பாளம் 1
மர பெஞ்சு (ஒரு சட்டம் உடைந்துபோனது). . 1

இவைகள் எல்லாம் 23 ஆம் தேதி ஏலம் விடப்படும் என்றும் கடந்த 7 ஆம் தேதி ஜப்தி செய்யப்பட்டது என்றும் ஏல உத்தியோகஸ்தர் தஞ்சை கூட்டுறவு மத்திய வங்கி தஞ்சாவூர் என்று கையொப்பம் இட்டு விளம்பரப்படுத்தப்பட்ட அறிக்கையைத்தான் இங்கே நான் படித்துக் காட்டினேன். எனவே ஜப்திகள் இல்லை யென்று பேசுவது விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு மாய்மாலமாக இருக்குமே தவிர வேறில்லை என்பதற்காகத் தான் இதை நான் எடுத்துக் காட்டினேன்.

அடுத்து நம்முடைய முதலமைச்சரைப் பொறுத்த வரையில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பும் சரி தேர்தலுக்குப் பிறகும் சரி அவரால் அல்லது அவருடைய பெயரால் சில முரண்பாடான அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன.

அவர்கள் தேர்தல் நடந்து முடிந்த சிவகாசிக்குச் சென்று அங்கு வெற்றிபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினருக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்க நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போது நம்முடைய முதலமைச்சர் சொன்னார் “சினிமாவுக்கு போ; சினிமாவுக்குப் போ; கட்சியிலே இருக்காதே; என்றால் சரி என்று கட்சியிலே இருப்பவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். என் கட்சியில் ஆள் இல்லையா? முதலமைச்சர் பொறுப்பு வகிக்கத் தகுதியானவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்; படித்தவர்கள் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். சரியான ஒருவரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு சினிமாவுக்குப் போகிறேன். இதனால் உங்களுக்குத்தான் நஷ்டம்; எனக்கு நஷ்டம் இல்லை. எனக்குப் படம் வரும். நான் முன்போலவே ராஜா மாதிரி இருப்பேன். நான் இப்போது சினிமாவில் நடிக்கத் தயாராக இல்லை. நடிக்க அழைக்கிறார்கள்.” நான்தான் வேண்டாம் என்று கூறிக் கொண்டிருக்கிறேன். இது 1980ஆம் ஆண்டு சனவரித் திங்கள்

29 ஆம் நாளில். பிறகு 1980ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாளில் "சினிமா எக்ஸ்பிரஸ்" இந்தியன் எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டில் நடைபெற்ற "சினிமா எக்ஸ்பிரஸ்" வெளியீட்டு விழாவில் முதலமைச்சர் பேசியதாக "தினமணியில்" செய்தி வந்திருக்கிறது.

"வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து தாம் சினிமாவில் மீண்டும் நடிக்கப் போவதாகவும் "இமயத்தின் உச்சியில்" என்ற தம்முடைய சொந்தப் படம் வருகிற தீபாவளியின் போது வெளியிடப்படும் என்றும் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் இங்கு கூறினார்."

"சட்டம் அனுமதித்தால் முதலமைச்சராக இருந்துகொண்டே தாம் நடிக்கப் போவதாகக் கூறினார். சட்டம் அனுமதிக்கவில்லை யென்றால் பொறுப்பை நண்பர்களிடம் ஒப்படைத்து விட்டு நடிக்கச் செல்வதாகவும்" அவர் கூறினார்.

"தினமணியில்" வந்தது; "தினந்தந்தி" பத்திரிகையிலும் இதே செய்தி வந்தது. சொந்தத்தில் "இமயத்தின் உச்சியிலே" என்ற படத்தை எடுக்கப் போகிறேன் என்று வந்தது.

அதன்பிறகு மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் ஒரு விளக்க அறிக்கையை முதலமைச்சர் சார்பில் வெளியிட்டார். "மக்கள் என்னை நம்பி ஒப்படைத்த பொறுப்பை விட்டு விலகி நடிப்புத் துறைக்குச் செல்லும் எண்ணம் எனக்கு அறவே இல்லை" என்று முதலமைச்சர் எம். ஜி. ஆர். இன்று தெளிவு படுத்தினார் என்று திரு. வீரப்பன் அவர்கள் சொன்னார்கள்.

ஏற்கனவே ஓரிரு படங்களில் பெருந்தொகை முதலீடு செய்து கணிசமான அளவுக்கு வளர்ந்துவிட்ட படங்கள் கடந்த இரண்டரை ஆண்டுக்காலமாக முடிக்கப்படாமல் இருக்கின்றன. என்னை நம்பி முதலீடு செய்தவர்களுடைய கஷ்டத்தை மனதில் கொண்டு மீண்டும் நடிப்பது பற்றி சொன்னேனே தவிர அரசியல் துறையிலிருந்து விலகி அல்லது ஒதுங்கி மக்கள் என்னை நம்பி ஒப்படைத்த பொறுப்பை விட்டுவிட்டு நடிப்புத் துறைக்குச் செல்லும் எண்ணம் எனக்கு அறவே இல்லை. அந்த எண்ணத்தில் கருத்துச் சொல்லவில்லை என்று எம். ஜி. ஆர் விளக்கினார்.

"சினிமா எக்ஸ்பிரஸ்" மாதமிருமுறை வெளியீட்டு விழாவில் சில தினங்களுக்கு முன்பு பேசிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஏப்ரல் மாதத்திலிருந்து மீண்டும் நடிப்புத் துறைக்குச் செல்ல இருப்பதாகவும் சட்டம் அனுமதித்தால் முதலமைச்சராக இருந்து கொண்டே நடிப்பேன் என்றும் அனுமதிக்காவிட்டால் வேறொருவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நடிப்புத் துறையில் ஈடுபடப் போவதாகவும் கூறியதாகச் செய்தி வெளியாகி இருந்தது. இதுபற்றி இன்றைய அரசியல் சூழ்நிலையில் பரவலாக கருத்து தெரிவிக்கப்பட்டதுடன் சட்டப் பேரவையிலும் இப் பிரச்சினை எழுப்பப்பட்டது. இது பற்றி நிருபர்கள் விளக்கம் கேட்டபோது முதலமைச்சரோடு செய்தித்துறை அமைச்சர் வீரப்பன் தொடர்பு கொண்டு இந்த விளக்கத்தை முதல்வர் சார்பில் இன்று மாலை அளித்தார். இந்த செய்தி "தினமணி" 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3ஆம் நாளில் வந்திருக்கிறது.

இங்கு சட்டமன்றத்திலே கேட்டபோது முதலமைச்சருக்கு அடுத்த இடத்திலே இருக்கின்ற அவை முன்னவர் மாண்புமிகு மனோகரன் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கவில்லை. முதலமைச்சர் வந்த பிறகுதான் பதில் அளிப்பார் என்று அவர் இடத்திலேதான் பதிலைப்பெற முடியும் என்ற கருத்துப்பட அவைத் தலைவர் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் சட்ட சபையிலே சொல்லப்படாமல் வெளியிலே அந்த கருத்துச் சொல்லப்பட்டது. ஆனால் சொல்லப்பட்ட கருத்தில் எவ்வளவு முரண்பாடு? முதலமைச்சர் சொன்னது சொந்தத்தில் படம் எடுப்பேன். படத்தினுடைய பெயரைக்கூட குறிப்பிட்டார். "இமயத்தின் உச்சியிலே" என்று சொந்தத்தில் படம் எடுப்பேன் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்களுடைய அறிக்கை யிலே காணப்படுகின்ற முரண்பாடு ஏற்கனவே ஒத்துக்கொண்டு பாதியில் நின்று போயிருக்கிற பழைய படங்களை முடித்துக் கொடுப்பதாகத்தான் முதலமைச்சர் சொன்னார்களே தவிர வேறல்ல என்று அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் அண்ணா அவர் களுடைய நினைவு நாளின்போது அண்ணா சதுக்கத்தில் பொதுச்

செயலாளர் நாவலர் அவர்கள் மூலமாக அவர்களுடைய கருத்தை நாவலர் படிக்க நாட்டுக்கு வெளியிட்டார். என் இரத்தத்தின் இரத்தமே உடன் பிறப்புக்களே அண்ணா சொன்ன கொள்கை களை நிறைவேற்றுவதுதான் இலட்சியம் ; விரைவில் பொதுக் கூட்டத்தில் பேசுவேன் ; மக்கள் தந்த பொறுப்பினை விட்டு ஒதுங்குவது என்பது என் உயிர் உள்ளவரை இல்லை, இல்லை. வெற்றி நமதே, நாளை நமதே, என்றும் நமதே என்று நாவலர் மூலமாக அவர் எழுதித் தந்து அது படிக்கப்பட்டது. ஆக 3, 4,நாட்களுக்குள்ளாக இத்தகைய முரண்பாடான அறிக்கை களில் முதலமைச்சர் தன்னைப்பற்றி நாட்டுக்கு பிரகடனப் படுத்துவது முறைதானா என்பதை எண்ணிப்பார்க்கத்தான் நான் இதை சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

இப்படி பல முரண்பாடான அறிவுப்புகள். மதுவிலக்கைத் தீவிரமாக நான் கடைபிடிக்கப் போகிறேன் என்று சொன்ன போதும் தாய்க்குலத்தைத்தான் காட்டினார். மதுவிலக்குக் கொள்கையை நான் தளர்த்தப் போகிறேன் அல்லது மாற்றி அமைக்கப் போகிறேன் என்று சொன்னபோதும் முதலமைச்சர் தாய்க்குலத்தை தான் சான்றுக்கு அழைத்தார்.

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு என்று கருதுகிறேன். அங்கே பேசும்போது முதலமைச்சரவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற ஒரு தாயைப் பார்த்து, இந்தத் தாய் கேட்கிறாளே, மது விலக்குச் சட்டத்தை நீங்கள் தளர்த்தப் போகிறீர்களாமே என்று கேட்கிறார். நான் அவர்களுக்குச் சொல்வேன். சத்தியமாக, உறுதியாக, என் அன்னையின் மீது ஆணையாக அதிலே மாறுதல் எதுவும் இருக்காது ; தளர்த்த மாட்டேன் என்று குறிப்பிட்டார்.

ஆனால் கவர்னர் உரைக்கு 4, 5 நாட்களுக்கு முன்பு மது விலக்குச் சட்டத்திலே அல்லது மதுவிலக்குச்சட்ட நடை முறையிலே பல மாறுதல்கள் செய்யப்பட்டு. 25 ரூபாய் யாரிடத்திலே இருத்தாலும் அவர்கள் தாசில்தார் அலுவலகத்திலே கட்டி, அதற்கான அனுமதியைப் பெற்று எல்லோரும் குடிக்கலாம் என்று ஒரு ஏற்பாடு இன்றைக்கு அமுலுக்கு வந்து, எல்லோரும் குடிக்கலாம். அதாவது 25 ரூபாய் கட்டியவர்கள் எல்லாம் குடிக்கலாம் என்ற ஏற்பாடு அமலுக்கு வந்த பிறகு அதற்கு என்று

கடைகள் வேண்டும் அல்லவா. அந்தக்கடைகள் ஏலம் விடப்படும் என்று முதலிலே அறிவிக்கப்பட்டு. இப்போது ஏலம் கூடவிடப் படமாட்டாது, குறிப்பிட்டவர்களுக்கு அந்தக் கடைகள் கொடுக்கப் படும். அதிலும் குறிப்பாக சாராயக் கடைகள்கூட ஏலம் விடப்பட மாட்டாது. குறிப்பிட்டவர்களுக்குத் தரப்படும் என்கின்ற வதந்திகள் எல்லாம் பரவிக் கொண்டிருக்கின்றன. நான் அதை உறுதிப்படுத்தி செய்தியாகச் சொல்லவில்லை ; அப்படிப்பட்ட வதந்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. எனவே மது விலக்கிலே இவ்வளவு தீவிரம் காட்டப்பட்டபோது, ஏற்கெனவே இருந்த சட்டம் போதுமானது. நீங்கள் கொண்டு வருகிற தீவிரச் சட்டங்களை ஆராய்ந்து முடிவு எடுக்க பொறுக்குக் குழுவுக்கு இந்தத் தீவிரச் சட்டத்தை அனுப்பிவையுங்கள் என்று இந்த மாமன்றத்திலே இருந்த அத்தனை பேர்களும் கேட்டபோது, முடியாது என்று மறுத்துவிட்டு, நான் சொன்னால் சொன்னதுதான் என்று ஒரே பிடிவாதமான இருந்துவிட்டு, முதலமைச்சர் வெளிநாடு சென்றிருக் கிறார். வந்த பிறகு அதைப்பற்றி யோசிப்பார் என்று நிதி அமைச்சர் அவர்கள் எங்களுக்கு எல்லாம் தந்த உறுதிமொழிகளுக்கெல்லாம் கூட மாறாக அந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றிவிட்டு, நாடு கடத்துகின்ற வகையிலே சட்டத்திலே பல பிரிவுகள் உள்ளடக்கப் பட்டு, திடீரென்று 25 ரூபாய் கட்டியவர்கள் எல்லாம் பெர்மிட் பெறலாம் என்ற அளவுக்கு இன்றைக்கு அந்தச் சட்டம் தளத்தப் பட்டு, தொய்வு விழுந்த நிலையிலே இன்று இருப்பதை நாம் காண்கின்றோம்.

பிற்படுத்தப்பட்டோருக்கு வருமான வரம்பின் அடிப்படை யிலேதான் உரிமைகள் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது சலுகைகள் அல்ல. சலுகைகள் என்பது வேறு. உரிமைகள் என்பது வேறு என்பதை பலமுறை நான் ஆதாரத்தோடு எடுத்துக் கூறியிருக்கிறேன். சலுகைகள் என்பது இலவசப் படிப்பு போன்றவை. உரிமைகள் என்பது அவர்களுக்கென்று உரிய இட ஒதுக்கீடுகள், ஆனால் இட ஒதுக்கீடுகளுக்கு வருமான வரம்பு 9 ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டபோது அதை திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இன்னும் வேறு பல அரசியல் கட்சிகளிலே உள்ள பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தலைவர்கள் அந்தச் சமுதாய நலனிலே

நாட்டம் கொண்டவர்கள் அத்தனை பேரும் எதிர்த்தோம். அப்படி எதிர்த்தபோது நம்முடைய முதலமைச்சரவர்கள், விருதுநகர் விழாக் கூட்டத்திலே பேசினார். அரசாங்க விழா எதுவாக இருந்தாலும் அங்கெல்லாம் அகப்பட்டுக் கொள்கின்ற ஒரே ஒரு இளித்தவாயன் நம்முடைய முதலமைச்சருக்கு நானாகத்தான் இருப்பேன். இது அரசாங்க விழா. மக்களுடைய வரிப்பணத்திலே நடத்தப்படுகிற விழா என்ற கணக்குக்கூட எடுத்துக் கொள்ளாமல் அங்கே பேசுகிறபோது சொன்னார். "அண்மையில் எம். பி. பி. எஸ்., பொறியியல் துறையில்இடம் பெற ரூபாய் 9,000 வரை வருமானம் என்று சொல்லியதை கருணாநிதி வேகமாக எதிர்க்கிறார். பொதுக் குழு கூட்டுவோம், போர்க்கொடி தூக்குவோம் என்று கூறுகிறார். இப்போதுதான் அவர் போராட்டம் நடத்துகிறாரா? முன்பெல்லாம் நடத்தவில்லையா? ஏதோ முதன்முதலாகப் போராட்டம் நடத்தப் போகிறவர் போல எழுதியிருக்கிறார். பொருளாதாரம்தான் இங்கே முன் நிற்கிறது. சமுதாய ஏற்றத்தாழ்வு பின்னே இருக்கின்றது. ஆனால் இதை எதிர்த்துத்தான் கருணாநிதி பொதுக் குழுவைக் கூட்டுவேன். போராட்டத்தை நடத்துவேன். போர்க்கொடி தூக்குவேன் என்று கூறுகிறார். எந்தக் கொடியை எங்கே நாட்டப் போகிறார்? இந்த இராமச்சந்திரனை எதிர்த்து போராட்டம் நடத்தப் போகிறாரா? அல்லது ஆட்சியை எதிர்த்தா என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும். இதற்கும் சில பேர் அவரோடு சேருகிறார்களே, சட்ட மன்றத்தில் முன்பு அண்ணா சொன்ன பதிலையே கருணாநிதிக்குப் பதிலாகச் சொல்வது சரியாக இருக்கும். "கருணாநிதியின் போராட்டத்தை மக்கள் முன் வைப்போம். இதற்கு மக்கள் பதில் சொல்வார்கள்" என்று அவர்களுடைய கட்சியின் அதிகார பூர்வமான ஏடாக இருக்கின்ற "அண்ணா" பத்திரிகையிலே 1979-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9-ம் நாளிலே வெளிவந்திருக்கின்றது.

அடுத்து நம்முடைய மாண்புமிகு காளிமுத்து அவர்கள் எழுதியிருக்கிறார். "பாதாள படிக்கட்டிலே இருப்போருக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே கிடந்து நெளியும் புழுக்களாக, உழலும் ஏழைகளுக்கு பிற்பட்ட சமூக எளியோருக்கு துணை புரிகின்ற அறிவிப்புக்கு எதிராக போர்க்கொடி தூக்குபவர்கள்

மேட்டுக்குடியினரின் பிரதிநிதிகளாக, முதலாளித்துவத்தின் பிரதிபலிப்புக்களாகத்தான் இருக்க முடியும்" என்று எழுதுகிறார். நாங்கள் எல்லாம் முதலாளித்துவத்தின் பிரதிபலிப்புகள் என்று அவர் கண்டுபிடித்திருக்கிறார், "அரசு அறிவித்துள்ள இந்தச் சலுகைகள் அதிகாரியின் மகனுக்குக் கிடைக்காது. ஆனால் அங்குள்ள பணியாளரின் பிள்ளைக்குக் கிடைக்கும். பண்ணையார் மகள் பங்கஜத்திற்குக் கிடைக்காது. கூலிவேலை செய்யும் குப்பன் மகள் வள்ளிக்குக் கிடைக்கும். இதைத்தான் கூடாது. கூடாது என்கிறார் கலைஞர். ஆபத்து. ஆபத்து என்று அபாய மணி அடிக்கிறார் வீரமணி. கலைஞரின் கூற்றுக்கு கல்யாணசுந்தரம் கட்சியும் மத்தளம் கொட்டுவதுதான் வியப்பிலும் வியப்பு. பணக்காரர்களின் எதிரிகளாக இருக்க வேண்டிய கம்யூனிஸ்ட்டுகள் ஏழைகளின் எதிரிகளாக ஆகிவிட்டதைப் பார்க்கும்போது இதை அரசியலாக்க கம்யூனிஸ்ட்டுகள் முடிவு செய்துவிட்டார்கள் என்பது புரிகிறது. அரிசியல் உணர்வோடு இதை எதிர்ப்பவர்கள் நேரடியாகவே முற்பட்ட சமூகத்தில் ஏழைகளாக இருக்கிறார்கள். பசி வந்தவர்களுக்கு ஆத்திரம் வந்தால் சில அரசியல் கட்சிகள் பறந்துவிடும். ஏழைகளின் கோபத்தைக் கிளராதீர். கடல் கொதித்தால், மலை வெடித்தால், நிலம் அசைந்தால் தாங்கிட எவராலும் இயலாது" இது மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்களின் கட்டுரை. "அண்ணா" ஏடு 11-7-1979.

இதைவிட பொதுச்செயலாளர் நாவலர் விடுத்த அறிக்கை யில் புரட்சித் தலைவர் பிற்பட்ட, பின்தங்கியவர்களுக்கு வாழ் வளிக்கவேண்டும் என்று நீண்டு சிந்தித்துதான் புதிய ஆணையைப் பிறப்பித்துள்ளார். இந்தப் புதிய ஆணையைப் பிறப்பித்ததால் புரட்சித் தலைவரவர்கள் தமிழக மக்களின் ஆதரவையும் வரவேற்பையும் நாள்தோறும் அளப்பறிய முறையில் பெற்றுக்கொண்டு வருகிறார்.

தமிழக மக்கள் கலைஞரின் போராட்டத்தை எதிர்த்து முறியடித்தே தீருவார்கள் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கலைஞரின் போராட்ட முயற்சிகள் அனைத்தும் வழக்கம்போல் அடியோடு விழுந்து என்றேனும் ஒரு நாள் அழிந்து ஒழிந்து

போகும் என்ற உறுதிப்பாடு தமிழக மக்கள் உள்ளத்தில் தோன்றி யிருக்கிறது. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் நாவலர் கட்டுரை. "அண்ணா" பத்திரிகையில் 4-8-1979-ல்,

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு ஆபத்து வந்தால் அரணாக இருப்பார் என்று நான் எதிர்பார்த்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சோமசுந்தரம் அவர்கள் கூடப் பேசினார், புதுக் கோட்டை என்று கருதுகிறேன். புரட்சித் தலைவர் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒட்டப்பந்தயம் துவக்கும்போது அதில் பங்கு கொள்பவர்கள் சமநிலையில் இருக்க வேண்டும். நொண்டியை மற்றவர்களோடு சேர்க்க முடியாதே. அப்படிப்பட்ட நொண்டிகளுக்குச் சலுகை தர வேண்டும். அந்த சலுகைதான் 9,000 வரம்பு. பட்டினி கிடப்பவர்களுக்கும் சலுகை. வயிறார சாப்பிட்டவர்களுக்கும் சலுகையா? அதனால்தான் புரட்சித் தலைவர் கூட 9,000 வரம்பு என்ற திட்டத்தை அறிவித்தார். இவ்வாறு அவர்கள் கொண்டு வந்த உத்தரவுக்கு அறிவித்த ஆணைக்கு எவ்வளவு வாதத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஒன்றைச் சொல்லி அதைத் திரும்ப பெற்றுக் கொள்ளக்கூடாதா என்று கேட்பார்கள். நானே உங்களுக்கு எடுத்து வைக்கிறேன். மதுவிலக்கை ஒத்திவைத்து விட்டு பிறகு மீண்டும் மதுவிலக்கை நீங்கள் கொண்டு வரவில்லையா என்று கேட்பார்கள். மது விலக்கை ஒத்திவைத்த நேரத்தில் மதுவிலக்கு வேண்டிய சூழ்நிலையை சொன்னேனே தவிர அனைவரும் மது அருந்தலாம் அதனால் கெடுதி இல்லை என்று, அதற்காக நான் வாதாடியாது கிடையாது. ஆனால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு அதனை பாதிக்கிற உத்தரவை பிறப்பித்துவிட்டு அந்த உத்தரவால் பிற்படுத்தப்பட்ட சமுதாய பாதிக்கப்படும் என்று சொன்ன நேரத்தில் என்ன கேட்டார்கள்? கருணாநிதியினுடைய மகனுக்கும் வீரமணியி னுடைய மகளுக்கும் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காதே என்றல்லவா பதறுகிறார்கள், என்றல்லவா நமது முதல் அமைச்சரைப் போன்றவர்கள் பொறுப்புள்ளவர்கள் பேசினார்கள். தாங்கள் செய்தது நியாயம் புரட்சிகரமான கருத்து என்றல்லவா அவர்கள் சொன்னார்கள். நண்பர் மாரிமுத்து அவர்களே எடுத்துக் காட்டியது போல "எக்கனாமிக்கலி பேக்வோர்டு" ஆக இருப்பது என்பது இப்பொழுது எங்கே போய்விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சொன்னது. 31 சதவீத மாகவே இருக்கட்டும், கை வைக்காதீர்கள். 18 சதவீதம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு அப்படியே இருக்கட்டும் கைவைக்காதீர்கள். மீதம் உள்ள ஜெனரல் காம்பிடிஷன் 51-ல் 10 அல்லது 15 சதவீதம் எடுத்து அதிலே எல்லா வகுப்பினரையும் சேர்த்து பிராமணர்கள் ஆனாலும் அல்லது வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் எல்லா வகுப்பையும் சேர்த்து பொருளாதாரத்திலே பலவீனமானவர்கள், ஏழை எளியவர்களுக்கு இதிலே இடம் ஒதுக்குங்கள் என்றுதானே குறிப்பிட்டோம். அதை காதிலே போட்டுக் கொள்ளாமல் போராட்டம் நடத்தப் போகிறார்களா பார்க்கலாம் என்று முரசம் அடித்து விட்டு இன்றைக்கு திடீரென்று ஒரே நாள் அறிவிப்பில் 30-ஐ 50 ஆக ஆக்கியிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். நான் ஒரு கூட்டத்திலே கூட குறிப்பிட்டேன். "இரண்டு கரண்டி சோறு போடு ஒரு கரண்டி பத்தாது" என்று கேட்ட நேரத்தில் கோபித்துக் கொண்ட அம்மையார் இந்திய முழுவதையும் எடுத்துக்கொள் என்று அடுக்களை கட்டியையே இலையில் கொட்டிவிட்டு போவதுபோல் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கோபம் கொண்டு கொடுத்திருக்கிறார்கள். அவருடைய கோபம் பிற்பட்ட சமுதாயத்திற்கு லாபம் என்றும்" அதே போல் அதை லாபமாகத் தான் நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். அதே நேரத்தில் தாழ்த்தப் பட்ட சமுதாயத்திற்கு 16 என்பதை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் 18 ஆக உயர்த்தியது போல 18 என்பதை 21 ஆக உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். அது உயர்த்தப்படவில்லை. அவைகளைப்பற்றி அறிவிப்பதற்கு முன்பாக இந்தச் சட்ட மன்றத்திலே விவாதம் நடத்திப் பலருடைய கருத்துக்களைத் தெரிந்து கொண்டு அதற்குப் பிறகு இந்த அறிவிப்பைச் செய்திருந்தால் பல குழப்பங்கள் வராமல் போயிருக்க முடியும். ஆனால் முதலிலேயும் வீம்பு, இப்பொழுதும் அவசரம், ஆகவே வீம்பும் அவசரமும்தான் இந்த அரசை இன்று நிலை குலைய வைத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

தேர்தல் காலத்திலே முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் அறிஞர் அண்ணாவினுடைய கொள்கையாகிய மாநில சுயாட்சிக் கொள்கையைச் சொல்கிறோம் கருணாநிதி இப்பொழுது ஏற்றுக் கொள்கிறாரா என்று கேட்டார்கள். மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று அப்படி ஒரு கொள்கையை அண்ணா அவர்கள் உருவாக்கிய கழகத்தின் கொள்கைத் தத்துவமாக இருந்தது. முதலமைச்சர் அவர்கள் பேசிய தேதி 8-12-1979-ல்.

இதை நான் என்னுடைய அருமை நண்பர் இன்று எதிர்க் கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர் களுடைய இந்த அறிக்கையை எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். 1974ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொது மத்தியின் கூட்டாட்சி மாநிலத்திலே சுயாட்சி என்ற தத்துவத்தை உள் அடக்கிய ஒரு தீர்மானம் ஏற்கெனவே ராஜமன்னார் கமிட்டி தந்த அறிக்கையினுடைய அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயல் குழு கூடி ஆலோசித்து செழியன், மாறன் இருவரையும் அமைப்பாளர் களாகக் கொண்ட அந்தக் குழு தந்த பரிந்துரையை அமைச்சர் அவையில் விவாதித்து சட்டமன்றத்திலே அந்தத் தீர்மானத்தை கொண்டு வந்த போது அதை எதிர்க் கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சி என்பதை நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில சுயாட்சி என்ற வார்த்தையை அண்ணா சொன்னாரா ? அந்தத் தத்துவத்தை அண்ணா ஏற்றுக் கொண்டாரா. இல்லவே இல்லை என்று அன்றைக்கு வாதிட்டவர்கள் இந்த அவையில் உள்ள அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்பதையும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அதைத் திருத்திக் கொண்டு அண்ணா சொன்னார் என்பதற்கு அன்றைக்கே ஆதாரங்களை எடுத்துக் காட்டினோம். அதை இன்றைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சராக இருக்கிற நண்பர் திரு. இராமசந்திரன் அவர்கள்

அன்றையதினம் அண்ணா அவர்கள் இல்லஸ்ட்ரேட்டட் வீக்லீக்குத் தந்திருந்த பேட்டியையே படித்துக்காட்டி அண்ணா அவர்கள் மாநிலச் சுயாட்சிக்கு ஆதரவாகத் தெரிவித்த கருத்துக் களில் மாநிலச் சுயாட்சி என்ற வார்த்தையை அவர்கள் பயன் படுத்தியதை இந்த அவையில் எடுத்துக் காட்டியும் கூட அண்ணா சொன்னதை அன்றைக்கிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தார் இந்த அவையிலே ஏற்றுக் கொள்ளவில்லை. எட்மண்ட் அவர்கள் அப்போது சொன்னார்கள் - எட்மண்ட் என்று சொல்வதற்காக மன்னிக்கவும். அப்போது அவர் எட்மண்டாகத் தான் இருந்தார். அதனால் சொல்கிறேன் - அண்ணா அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். கூடுதல் அதிகாரங்களை மாநிலங்கள் பெற்றாக வேண்டும் என்று. ஆனால் அந்த அதிகாரங்களை உங்கள் கையில் கொடுக்கக் கூடாது. உங்கள் கையில் கொடுப்பதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம் என்று. இன்று அமைச்சராக இருக்கும் திரு. எட்மண்ட் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் அதிகாரங்களைக் கொடுக்கக் கூடாது ; மாநில சுயாட்சி என்றிருப்பதால் அது எப்படி யிருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகயில்லை. நீங்கள் கேட்கிற கூடுதல் அதிகாரங்களை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும் ஒத்துக்கொண்டாலும் மாநிலங்களுக்கு இருக்கிற அதிகாரங்கள் போதாது. கூடுதலான அதிகாரங்கள் தேவை என்று நாங்கள் வலியுறுத்துகிற நேரத்தில் அந்த அதிகாரங்கள் இன்றைக்கு இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் கொடுக்கப் பட்டால் பாதிக்கப்படுகிறவர்கள் இந்த நாட்டிலே இருக்கிற எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள். இந்த நாட்டிலுள்ள பொது மக்கள் என்பதை மட்டும் மிகத் தெளிவாக கூறிக் கொள்கிறேன் என்று 20-4-1974-ல் இந்தப் பேரவையில் என் அருமை நண்பர் இன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருக்கிற திரு. எட்மண்ட் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

நான் அப்போதே சொன்னேன். எந்தக் கட்சியினுடைய ஆட்சியிடம் கொடுப்பது என்பதல்ல ; பிரச்சினை தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலங்களும் சுயாட்சித் தன்மையோடு விளங்கவேண்டும்; உண்மையான கூட்டாட்சித் தத்துவம் கருதித்தான் சொன்னோமே தவிர யார்

கையில் கொடுப்பது என்பதல்ல. நீங்களே ஆட்சிப் பொறுப்பில் இருந்து மாநிலச் சுயாட்சி தீர்மானத்தை இங்கே கொண்டு வருவீர்களானால் அதை ஆதரிக்கின்ற முதல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கும் என்று இந்த மன்றத்தில் சொன்னேன். நடவடிக்கைக் குறிப்பில் அது ஏறி இருக்கிறது. ஆக திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் கொடுக்கக் கூடாது என்று நீங்கள் சொன்னதற்காக இப்போது ஒரு வேளை மாநிலச் சுயாட்சி கொடுக்க மத்திய அரசு முன் வந்தால் நாங்கள் கொடுக்காதே, கொடுத்தால் எங்கள் கையில் கொடு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளரிடம் கொடுக்காதே என்று சொல்கிற குறுகிய மனப்பான்மை நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்காது என்பதை மாத்திரம் இந்த அவையில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல்கள் 5 நடந்து முடிந்து விட்டன. இந்த தேர்தலின் முடிவையொட்டி வெளியிலேயும் இந்தத் அவையிலேயும் பல கருத்துக்களும் கூறப்பட்டிருக்கின்றன. இது மாநிலத்தைப் பொறுத்ததல்ல என்று ஒரு வாதம் பலமாக இங்கே பேசப்படுகிறது. ஆனால் தேர்தலுக்கு முன்பு எடுத்து வைத்த கருத்துக்கள் என்ன ? அண்ணா பத்திரிகையில் என்னுடைய அருமைத் தம்பி மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் எவ்வளவு காரசாரமான கட்டுரைகள் எழுதினார்கள் என்பதும் அது அந்தக் கட்சியினுடைய அதிகாரபூர்வமான ஏடு என்பதும் நாடு அறிந்த ஒன்று. அவர் சொல்கிறார், உள்ளூரிலே செல்வாக்கு இழந்த உதவாக்கரை என ஒதுக்கப்பட்ட கட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள் - நல்ல வேளையாக கலைஞர் என்றாவது போட்டார்களே - உதவாக்கரை என்று ஒதுக்கப்பட்ட கட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்திந்தியாவில் வருகிற பொறுப்பை யாரிடம் தருவது என்பதை நிர்ணயிக்க வேண்டிய கடமை தன்னிடம்தான் இருப்பதைப் போல் தறுக்கோடு பேசுக்கிறார். நேருவின் மகளே வருக, நிலையான ஆட்சி தருக என்று அனைத்து இந்தியா சார்பாக ஏகப் பிரதிநிதிபோல் கருதிக் கொண்டு இந்திரா காந்திக்குக் கட்டியும் கூறுகிறார். அது 5-12-1979 அண்ணாவில் வந்த காளிமுத்துவின் கட்டுரை. திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ் கூட்டணி தனிப்பட்ட

எந்தக் கட்சிக்கும் எதிரான கூட்டணி அல்ல ; தமிழகத்திற்கே எதிரான கூட்டணி ; அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் – இந்திரா காங்கிரஸ் கூட்டணி என்பது தமிழகத்திற்கே எதிரான கூட்டணி. ஆகவேதான் அதை எதிர்க்க தமிழகத் தலைவர் தலைமையில் அணி அமைந்திருக்கிறது. புரட்சித் தலைவர் அணி அவர்களுக்கு புது ஆண்டில் புதுப் பாடம் கற்பிக்கும் என்பதில் உறுதி. இது காளிமுத்து அவர்கள் 4-12-1979-ல் எழுதியது.

11-12-1979-ல் நமது முதல் அமைச்சர் அவர்கள் பேசியது தலைமை என்றால் ராணுவத்தைப் போல் நாம் பணியாற்ற வேண்டும். அப்படிப் பணியாற்றினால் பா. ரா. எம். பி. ஆக முடியும். எம். ஜி. ஆர். மானத்தோடு வாழ முடியும். அவர் எம்.பி. ஆக வேண்டும். நான் மானத்தோடு வாழ வேண்டும் இதை மறந்து விடக் கூடாது. இது முதல் அமைச்சர் பேசியது.

பத்திரிகை உலகத்திலே மிகப் பெரியவர், தலைசிறந்த அரசியல்வாதி தினமணி ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன் அவர்கள் 1980-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளன்று அதாவது தேர்தல் நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவருடைய பத்திரிகையிலே எழுதினார் :

"தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டில் இப்போதைய தேர்தல் பிரச்சினை தி. மு. க. வேண்டுமா, அ. இ. தி. மு. க. வேண்டுமா என்பதே. தமிழ்நாட்டில் ஆளப் போவது ஜனதாவோ, இந்திரா காங்கிரசோ அல்ல. அணி அமைத்துள்ள அ. இ. தி. மு. க. தலைமையும் சரி, தி. மு. க. தலைமையும் சரி அவரவரது கூட்டணி கட்சிகளுக்கு விசுவாசமாகவே நடந்து வருகிறார்கள்.

இங்கு பிரச்சினை, இந்திரா கட்சியா, ஜனதா கட்சியா என்பதல்ல.

வட இந்திய மாநிலங்களில் – வங்காளம், பஞ்சாப் தவிர, மற்ற எல்லா மாநிலத்து அரசுகளில் ஜனதாவோ, இந்திராவோ அர்ஸ் காங்கிரஸோ பதவிக்கு வர முடியும். தமிழ்நாட்டில் அப்படி அல்ல.

தமிழ்நாடு ஓட்டர்கள் பார்க்க வேண்டியது திரு. மு. கருணாநிதியா, திரு. எம். ஜி. இராமச்சந்திரனா, என்பதுதான்."

இது "தினமணி" பத்திரிகையில் சிவராமன் அவர்கள் எழுதியது. இந்த ஆதாரங்கள் எல்லாம் நடைபெற்ற தேர்தல், நாடாளுமன்றத்தின் மத்தியில் யார் தலைமைப் பொறுப்பை ஏற்பது என்று கேள்வியின் அடிப்படையிலே நடந்தது என்றாலும் கூட, அதன் துணையாக மாநிலப் பிரச்சினைகளும் அதிலே அடங்கி யிருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள்; மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் 1979-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்று 'அண்ணா' இதழில் எழுதுகிறார் :

"கருணாநிதிக்கு அவரைப் பற்றி மட்டுமே கவலை. ஆனால் புரட்சித் தலைவருக்கு இந்தத் தமிழ் நலம் பற்றி, ஐயாவும், அண்ணாவும் ஆகியவர்களின் கொள்கைகளைப் பற்றிக் கவலை. குட்டி இட்லர், சேலைகட்டிய இட்லருக்கு வக்காலத்து வாங்குகிறார்.தமிழகத்தில் குப்பைக் கூடைக்கு போய்விட்ட சரக்கு. கொலு ஏறத் துடிக்கிறது." நான் குப்பைக் கூடைக்குப் போய் விட்ட சரக்காம். கொலு ஏறத் துடிக்கிறேனாம். மாண்புமிகு காளிமுத்து, அமைச்சர் அவர்களுடைய மணிவாசகம் இது. "தமிழகத்தில் குப்பைக் கூடைக்குப் போய்விட்ட சரக்கு கொலு ஏறத் துடிக்கிறது. இட்லர்கள் சகாப்தம் முடிந்துவிட்டது. இரண்டு இட்லர்களும் இனி .அரியணை ஏறப் போவதில்லை". இது 'அண்ணா' பத்திரிகையில் 1979-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாளன்று திரு. காளிமுத்து அவர்கள் எழுதிய கட்டுரை.

"11 ஆண்டுகளாக பிரதமராக இருந்தவர் இந்திரா ; 7 ஆண்டுகள் முதல்வராக இருந்தவர் கருணாநிதி. இவர்களது சொல்லுக்கும், செயலுக்கும் பல முரண்பாடுகள் உள்ளன. இப்படிப் பட்டவர்களால் ஜனநாயகம் காக்கப்பட மாட்டாது. இவர்களுக்கு ஓட்டளித்தால் மீண்டும் தேர்தல் நடப்பதற்கு உத்தரவாதம் இல்லை" - முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் 1980-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் நாளன்று 'அண்ணா' பத்திரிகையில் வந்த பேச்சு.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எப்போதும் ஆரூடம் கூறுவதில் வல்லவர்கள். அவர்கள் மயிலை, மாங்கொல்லை பொதுக் கூட்டத்தில் பேசுகிறார். வருகிற நாடாளு மன்றத் தேர்தலில், சென்னையில் மூன்று தொகுதிகளிலும்

நாங்கள்தான் வெற்றி பெறுவோம். அந்த அளவிற்கு மக்கள் முதல் அமைச்சர் அவர்கள் பின்னால் இருக்கிறார்கள். இன்றும் ஒரு வாரத்திற்குள் தி. மு. க. விலிருந்து 7 சட்ட மன்ற உறுப்பினர்கள் விலகி அண்ணா தி. மு. க.வில் சேருவார்கள். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, சட்டமன்றத்தில் 46 ஆக உள்ள தி. மு. க. வின் பலம் 26 ஆகக் குறையும், என்று சொன்னார்கள். அவை முன்னவர் அவர்களுடைய ஆருடம் பலித்ததா, இல்லை என்பதை அவையை ஒரு முறை உற்றுப் பார்த்தால் தெரியும்.

வாக்காளர் பட்டியலைப் பற்றித் தேர்தல் முடிந்த பிறகு அண்ணா தி. மு. க. தலைவர்கள் எல்லாம் அதில் தவறுகள் நடந்து விட்டதாகச் சொன்னார்கள். ஆனால், தேர்தலுக்கு முன்பு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ? சென்னையில், வாக்காளர் பட்டியலில் 6 இலட்சம் பேர்கள் விடப் பட்டிருப்பதாக தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறியிருப்பதைப் பற்றி முதல்வர் அவர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அதற்கு முதல்வர் அவர்கள் அளித்த பதில், அதிகாரிகள் வாக்குப் பதிவு செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பணியில் கவனத்தோடு இருந்தார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. வாக்குப்பதிவு செய்யும் அதிகாரிகள் நிச்சயமாக எந்தக் கட்சிக் காகவும், கருணாநிதி சொல்வது போன்ற தவறுகளில் ஈடுபட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால், தோல்விக்குப் பிறகு நேர்மாறான விளக்கம் அண்ணா தி. மு. க. தலைவர்களால் அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இங்கு நம்முடைய மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் பேசிய நேரத்திலே, வெளியிலே பொது மேடைகளில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்திலும், திண்டுக்கல் இடைத் தேர்தலில் நாங்கள் வெளியிட்ட கருத்துக்களுக்கும், இப்போது கருணாநிதி வெளியிட்ட கருத்துக்களுக்கும் வேறுபாடு உண்டு. ஏனென்றால், திண்டுக்கல் இடைத் தேர்தல் இந்த அரசாங்கத்தை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா, இல்லையா என்ற கேள்வியை

முதன்மையாக வைத்துத்தான் தேர்தல் நடைபெறுகின்றது என்று கருணாநிதி அறிவித்தார். ஆகவேதான் எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார். மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர் கோவிந்தராசன் அவர்களும் இந்த அவையில் சொன்னார். ஆனால், திண்டுக்கல் தேர்தலுக்குப் பின்பு, 1973-ம் ஆண்டு, மேத் திங்கள் 8-ம் நாளன்று கோவையிலே நடைபெற்ற "மே' தினவிழாக் கூட்டத்திலே நான்பேசும் போது சொன்னேன். "தேர்தல்கள் ஒரு நாட்டின் வரலாற்றில் புரண்டு விடக்கூடிய சில பக்கங்கள். அதிலே திண்டுக்கல் இடைத் தேர்தல் அப் பக்கத்தில் தேடிப் பார்க்க வேண்டிய ஒரு வரி. அவ்வளவுதான். பொதுத்தேர்தல் என்பது ஒரு பக்கம். இடைத்தேர்தல் என்பது ஒரு வரி. ஆகவேதான், இதில் அதிக கவனம் செலுத்த விரும்பவில்லை" என்று நான் குறிப்பிட்டேன்.

அது மாத்திரமல்ல. அந்த இடைத் தேர்தலுக்கு முன்பு நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள். "திண்டுக்கல் தேர்தலில் உங்கள் கட்சிக்கு நேர் எதிர்க் கட்சி எது? நான் சொன்ன பதில் - களத்தில் இருக்கும் போது எங்களுக்கு சரிநிகர் போட்டி யார் என்பதைத் தெரிவிப்பது தேர்தல் தந்திரமாகாது. திண்டுக்கல் தொகுதியைப் பொறுத்த வரை சரிநிகர் பலம் உள்ளவர்கள் யார் என்பதைச் சொல்ல விரும்பவில்லை. ஒரு தொகுதியில் காணப் படுகிற பலம் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல தமிழ்நாடு முழுமைக்கும் காணப்படுகிற பலம் என்று கருதிக் கொள்ள இயலாது. இது 1973-ம் ஆண்டு மேத் திங்கள் 4-ம் நாளில் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. "முரசொலி" பத்திரிகையிலும் வெளியிடப் பட்டிருக்கிறது.

ஆனால் திண்டுக்கல் தேர்தல் முடிந்த பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்போது எதிர்க்கட்யின் தலைவர்களில் ஒருவாராக இருந்த என்னுடைய இனிய நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் "தென்னகம்" பத்திரிகையில் விடுத்த அறிக்கையில் என்ன குறிப்பிடுகிறார் ? கருணாநிதி சர்க்காருக்கு தமிழகத்தின் நாலரைக் கோடி மக்கள் அளித்த அங்கீகாரத்தைத்

திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். இந்த அராஜக லஞ்ச ஊழல் அரசு மக்களின் திட்டவட்டமான தீர்ப்புக்கு எதிராக இனி ஒரு விநாடியும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க எந்தவிதமான அருகதையும் இல்லை என்ற தமிழகமக்களின் தீர்க்கமான முடிவின் எடுத்துக் காட்டுத்தான் திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் அண்ணா தி. மு. கழகத்திற்குத் தமிழக மக்கள் அளித்த ஆதரவு ஆகும். திண்டுக்கல் தீர்ப்பு நியாயமான சில பிரச்சினைகளுக்கு உடனடி பரிகாரம் காண ''இந்தியப் பேரரசுக்கும் கருணாநிதி கட்சிக்கும் கட்டளையிட்டிருக்கிறது. என்ன கட்டளை தெரியுமா? இந்தியப் பேரரசு சுணக்கமின்றி உடனடி விசாரணைக் கமிஷனை அமைத்து திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பதவியில் இருந்து விலக்க வேண்டும்''. திராவிட முன்னேற்றக் கழக அரசைப் கேட்டுக் கொண்டு இன்றைய முதலமைச்சர் அன்றைய தினம் எதிர்கட்சித் தலைவராக இருந்த எம். ஜி. ஆர். அவர்கள் தென்னகம் பத்திரிகையில் அறிக்கை விட்டார். எல்லாப் பத்திரிகையிலும் அந்த அறிக்கை வந்தது. இந்தியப் பேரரசு சுணக்கமின்றி விசாரணைக் கமிஷனை அமைத்து தி. மு. க. அரசைப் பதவியில் இருந்து விலக்க வேண்டுமென்று சொன்னார்.

நாங்கள் சொல்லுவதெல்லாம் – நீங்கள் பதவியில் நீடிப்பது நியாயம் அல்ல என்றுதான் சொல்லுகிறோம். நீங்கள் மத்திய சர்க்காரைக் கேட்டீர்கள். விசாரணைக் கமிஷன் வையுங்கள். விசாரணைக் கமிஷன் வைத்துவிட்டு இந்த அரசாங்கத்தை உடனடியாகப் பதவியில் இருந்து விலக்குங்கள் என்று மத்திய அரசுக்கு நீங்கள் அன்றைக்குச் சிபாரிசு செய்தீர்கள். கருணாநிதி சர்க்கருக்கு தமிழகத்தின் நாலரைக் கோடி மக்கள் அளித்த அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டார்கள். இனி ஒரு விநாடி கூட பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க எந்தவிதமான அருகதையும் இந்த அரசுக்கு இல்லையென்ற தமிழ்மக்களின் தீர்க்கமான முடிவின் எடுத்துக் காட்டுதான் திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. கழகத்திற்குத் தமிழக மக்கள் அளித்த மகத்தான ஆதரவாகும்.

என்னுடைய அன்புக்குரிய பெரியவர் கலியாணசுந்தரம் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திண்டுக்கல் தேர்தல் முடிந்ததும் வெளியிட்ட அறிவிப்பு - கருணாநிதியின் ஜனநாயக விரோதப் போக்குக்கு மாபெரும் அடியாகவே திண்டுக்கல் தேர்தல் முடிவு அமைந்திருக்கிறது. இந்த ஆட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதை திண்டுக்கல் தேர்தல் முடிவு எடுத்துக் காட்டிவிட்டது. தோழமைக் கட்சிகளின் ஆதரவோடு அ.இ.தி.மு.க. பெற்றுள்ள வெற்றி, அசெம்பிளியில் கருணாநிதிக்குள்ள மெஜாரிட்டி உண்மை நிலைக்குப் பொருத்தமானது அன்று என்பதற்கும் கருணாநிதி சாக்கார் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதற்கும் அத்தாட்சியாகும்' - எம். கல்யாணசுந்தரம், நிருபர்களுக்குப் பேட்டி, தென்னகம், நாள் 1973-ம் ஆண்டு மே திங்கள் 22-ம் நாள்.

பி. இராமமூர்த்தி அவர்கள் கொஞ்சம் சூடாகவே பதில் அளித்தார்கள் 'கருணாநிதியே உடனே ராஜினாமா செய்' - "தென்னகத்தின்" தலைப்பு இது 'அரசில் சட்டத்தை மேற்கோள் காட்டி சாக்குக் காட்டி ஐந்து ஆண்டுக் காலம் அதிகாரத்திலே நீடிக்க உரிமையுண்டு என்றெல்லாம், முதலமைச்சர் கூறுவதன் மூலம் தமிழக மக்கள் தி. மு. க. வை நிராகரித்து விட்டதை மறைக்க முடியாது. முதலமைச்சர் கருணாநிதிக்கு வெட்கமும், அரசியல் நாணயமும் சிறிதேனும் இருக்குமானால் ராஜினாமாச் செய்து சட்டசபையைக் கலைத்து விட்டு மக்களின் தீர்ப்பைக் கோர முன் வர வேண்டும். ஒரு இடைத் தேர்தல் முடிவுக்கு ராமமூர்த்தி சொன்னது - முதலமைச்சருக்கு வெட்கமும், அரசியல் நாணயமும் சிறிதேனும் இருக்குமானால் ராஜினாமாச் செய்து சட்டசபையைக் கலைத்துவிட்டு மக்களின் தீர்ப்பைக் கோர முன் வரவேண்டும். இது பி. ராமமூர்த்தி அவர்களின் அறிக்கை. தென்னகத்தில் 1973-ம் ஆண்டு மே திங்கள் 22-ம் நாள் வெளியானது.

மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் பாலசுப்பிரமணியம் அவர்கள் . . . . .

திரு. என். சங்கரய்யா : ஏற்கேனவே இந்த விஷயம் வரும் போது தோழர் கோவிந்தராஜன் அவர்கள் தெளிவாகக்

கூறினார்கள். மீண்டும் அதையே கூற விரும்புகிறேன். திண்டுக்கல் தேர்தல் நடந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லப்பட்டது. "எங்களுக்கு திண்டு; கல் உங்களுக்கு; என்று சொல்லப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவரை ஆதரித்த எங்களைப் போன்ற கட்சிகளுக்கு எதிராக திண்டுக்கல் நகரத்திலேயே நடத்தப்பட்டது என்பது உலகறிந்த இரகசியம். அப்படிப்பட்ட ஒரு நேரத்தின் இறுதியிலே மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இந்தத் தேர்தல் முடிவு பெற்ற பிறகு இன்றைக்குத் தாங்கள் சொல்வதுபோல் அதற்காகப் பொதுக் கூட்டங்களை நடத்தி ஆர்ப்பாட்டங்களை நடத்தி கவர்னரிடத்தில் மனுக்கொடுத்து இந்த அரசாங்கத்தை நீங்கள் டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை. தாங்கள் எழுப்பிய சவாலுக்குப் பதிலாகச் சொல்லப்பட்டது அந்த அறிக்கையே தவிர அதற்குப் பிறகு இந்த அரசாங்கம் ராஜினாமாச் செய்யவேண்டுமென்றோ அல்லது போக வேண்டுமென்றோ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதைத் தொடரவில்லை என்பதையும் தாங்கள் சொல்லிக் கொண்டிருப்பது அதற்கு நேர்மாறானது என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : ராஜிநாமாச் செய்ய வேண்டு மென்று மெள்மையாகச் சொல்லவில்லை. முதலமைச்சருக்கு வெட்கமும் அரசியல் நாணயமும் இருந்தால் ராஜிநாமாச் செய்து சட்டசபையைக் கலைத்துவிட்டு மக்களின் தீர்ப்பைக் கோர முன்வரவேண்டுமென்றுதான் பி. இராமமூர்த்தி சொன்னார். இது மென்மையான வார்த்தை என்று திரு. சங்கரய்யா சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் திண்டுக்கல் தேர்தலுக்கு முன்பு நான் சொன்னதைப் படித்துக்காட்டினேன். இது இந்த அரசாங்கத்தை அங்கீகரிக்கிறீர்களா இல்லையா என்பதற்காக வைக்கப்பட்ட தேர்தல் அல்ல; இது ஒரு இடைத் தேர்தல்தான் என்று குறிப்பிட்டேன். அவைகளை எல்லாம் நான் முதலிலேயே படித்துக் காட்டினேன். அதை திரு. சங்கரைய்யா அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன்.

அன்றைக்கு இன்னொன்றும் சொன்னார் நம்முடைய முதலமைச்சர், ஒரு அருமையான உதாரணம், திண்டுக்கல்

தொகுதியின் முடிவு தமிழகத்தின் முடிவாகாது என்று கூறுகிறவர்களுக்கு பணிவன்போடு நான் கூறிக்கொள்கிறேன், அண்ணா இருந்த போது அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்து கொள்ளலாமா கூடாதா என்று திருச்சி நகரத்தில் நடந்த கழக மாநாட்டுக்கு வந்த மக்களிடம் வாக்குகள் பெற்று அதையே தமிழகத்தின் முடிவாக ஏற்றுக் கொண்டார்கள், தமிழகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த பிரதிநிதிகள் பெரும்பான்மை முடிவு என்று சொல்லவும் முன்வருவார்கள். தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கான தொண்டர்கள், ஆதரவாளர்கள் இருந்தார்கள், அத்தனை பேரிடமிருந்தும் பெரும் பான்மை வாக்குகளைப் பெற்ற பிறகுதான் முடிவு செய்ய வேண்டுமென்று அண்ணா காத்திருக்கவில்லை. மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் போட்ட வாக்குகளை வைத்தே தேர்தலில் நிற்பது என்று முடிவு செய்தார். அதைப்போலவே நீங்கள் ஒரு இடைத் தேர்தலை வைத்தே ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்ற கருத்தை முதலமைச்சர் அப்போது எடுத்துச் சொன்னார்.

அது மாத்திரமல்ல. இன்னொன்றையும் சொன்னார், "கோவையிலும் புதுவையிலும் நடைபெற்ற தேர்தல்களில் இன்றைய ஆளுங்கட்சி ஒட்டுமொத்தமாக மக்களால் புறக்கணிக் கப்பட்டு விட்டது. மக்கள் நம்பிக்கையை இழந்து அரசியல் தார்மீகத் தகுதிகளை இழந்துவிட்ட நிலையில் இந்த மன்றத்தில் கருணாநிதி பட்ஜெட்டை எப்படிப் படிக்கலாம் என்று ஹாண்டே கேட்டார். ஹாண்டே எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை முக்கிய மானது என்று கூறி கம்யூனிஸ்ட் கட்சியை சேர்த்த திரு. கே. டி. கே. தங்கமணி அதை ஆதரித்தார்". அதாவது பட்ஜெட்டே படிக்கக் கூடாது என்று இங்கே டாக்டர் ஹண்டே சொல்லி அன்றைய தினம் அதை எதிர்த்தார். மக்களுடைய ஆதரவை கோவையிலும், புதுவையிலும் இழந்துவிட்டீர்கள். நீங்கள் பட்ஜெட்டே படிக்கக் கூடாது என்று கூறி, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் ஆதரித்து ஆமாம் பட்ஜெட்டே படிக்கக் கூடாது என்று ஒரு பெரிய அமளியே இந்த அவையிலே நடைபெற்றது. நான் கேட்கிறேன். அப்போது, புதுவையிலே நாங்கள் 3 இடங்களையாவது பெற்றிருந்தோம், 1974 ஆம் ஆண்டு

தேர்தலில். அதற்கே பட்ஜெட் படிக்கக் கூடாது என்றால் புதுவையிலே இப்போது அந்த இடத்தையும் பெறாத அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பட்ஜெட்டைப் படிக்கலாமா என்ற சந்தேகத்தைதான் நான் கேட்க விரும்புகிறேன். அதற்காக நீங்கள் படித்தால் நீங்கள் படிக்கக் கூடாது என்று நிச்சயமாக பண்பற்ற முறையில் நான் சொல்ல மாட்டேன்.

புதுவை, கோவை தேர்தல்கள் மூலம் மக்கள் கருணாநிதி கட்சியை அறவே புறக்கணித்துவிட்ட உண்மை வெளிப்படுகிறது. மக்கள் என்றைக்கோ அளித்த ஆதரவை வைத்துக்கொண்டு மக்களைத் தொடர்ந்து ஆளும் உரிமை இருப்பதாக கருணாநிதி பேசுவது ஜனநாயகம் அல்ல. உடனே ராஜிநாமாச் செய்வதுதான் மக்கள் தீர்ப்புக்கு மரியாதை செலுத்துவதாக இருக்கும். சமநீதி என்ற பத்திரிகை வெளியீட்டு விழாவில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர், இன்றைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் வெளியிட்ட கருத்து, தென்னகத்திலே 1964 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 4 ஆம் நாளில் வந்திருக்கிறது.

பிறகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய இல்லங்களுக்கு எல்லாம் சென்று அந்த உறுப்பினர்களை எல்லாம், நீங்கள் நாஜிநாமாச் செய்யுங்கள் என்று, கிட்டத்தட்ட 170 - 180 திராவிட முன்னேற்ற கழக சட்டமன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு ஆங்காங்கு பேரணி நடத்தி ராஜிநாமாச் செய்யுங்கள் என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

அது மாத்திரமல்ல, ஊர்வலம் நடத்தலாமா என்று திரு. சகரய்யா அவர்கள் கேட்டார்கள். மார்க்சிஸ்ட் கட்சிக்கும் நமக்கும் இருக்கிற வம்பு என்று நான் சொல்லவில்லை. உங்களுக்கும் எங்களுக்கும் தகராறு இருப்பதாக நான் கூற வில்லை. நான் கூறுவது எல்லாம் நம்பிக்கை இழந்த பின்னும் நாடாள்வதா என்ற தலைப்பைப் போட்டு அன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரே ஏடாக அதிகாரப் பூர்வமான ஏடாக விளங்கிய தென்னகத்தில் 1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாளில் எழுதிய வாசகத்தை மட்டும் நான் படிக்கிறேன். மக்களின் வாக்குகளைப் பெற்று

பதவிக்குச் சென்றீர்கள். மக்களை மறந்து லஞ்ச நாயகர்களாக ஆனீர்கள் இன்று நாடெங்கும் மூண்டு இருக்கும் எதிர்ப்பை அடக்க அராஜகம் நடத்துகிறீர்கள். இனியும் நீங்கள் எங்களுக்குப் பிரதிநிதிகள் அல்ல, எங்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்க விரும்பினால் நம்பிக்கை இழந்த ஊழல் அரசினை கருணாநிதி அமைச்சரவையை பதவியிலிருந்து விலக்க தீர்மானம் நிறைவேற்றுங்கள், இல்லையென்றால் கருணாநிதி ஆட்சியை அகற்ற முடியாது என்றால் எங்களுக்கு பிரநிதிகளாக நீங்கள் இருக்க முடியாது. எனவே, மக்கள் வாக்குகளை இழந்த திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினரே பதவியை ராஜிநாமாச் செய்க என்று வாக்காளர் பேரணி முழங்க இருக்கிறது. அண்ணன் வழி நடக்கும் ஆற்றல் மறவர்களே, அண்ணாவின் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்த பொம்மை அரசை வெளியேற்ற கருணாநிதி ஆட்சியை விலக்கு, இன்றேல் விலகு என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டளையிட வாக்காளப் பெருமக்களே பெருந்திரளாகப் பேரணியில் கலந்துகொள்வீர். ஜனநாயகம் தழைக்க அராஜகம் அழிய லஞ்ச ஊழல் ஒழிய அணி திரள்வீர். இது ஊர்வலத்திற்காக அன்றைய தினம் எழுதப்பட்ட ஒரு வாசகம் ஆகும். அராஜக அடக்கமுறை ஆட்சிபுரியும் கருணாநிதி அரசு வருகின்ற நவம்பர் 13 ஆம் தேதி சட்டமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன் பதவி விலக வேண்டும். இல்லையேல் நாட்டில் மக்கள் கொந்தளிப்பு ஏற்படும். இது எம். கல்யாணசுந்தரம் அவர்கள் "தென்னகத்திலே" 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2 ஆம் தேதியன்று வெளியிட்ட அறிக்கை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : யார் ஐயா உட்கார் என்று சொன்னது. மறுபடியும் உட்கார் என்று யாரும் சொல்லக் கூடாது (குறுக்கீடுகள்) உட்கார் என்று யார் சொன்னது? நான் காதால் கேட்டுவிட்டுப் பிறகுதான் சொல்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும். உங்களுக்குள்ளே பேசிக் கொள்ளாதீர்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மூன்று முறை எங்கள் கட்சியைப்பற்றி குறிப்பிட்ட பிறகு நான் எழுந்திருக்கிறேன், இடையிலே குறுகிட விரும்பவில்லை. இடைத் தேர்தலில் திண்டுக்கல் தேர்தலாக இருக்கலாம், கோவை தேர்தலாக இருக்கலாம். இந்தத் தேர்தல்களில் ஆட்சியைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப்பற்றி கொள்கையாக வைத்துதான் நாங்கள் தேர்தலிலே போட்டியிட்டோம். ஆகவேதான் அந்த இடத்திலே இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டோம். இப்பொழுது பாராளு மன்றத்தில் தேர்தல்; காங்கிரஸ் கட்சிக்கும் ஜனதா கட்சிக்கும்தான் பிரதானமான முரண்பாடு. அந்தத் தேர்தலையும் இந்தத் தேர்தலையும் ஒன்றாகப் பார்க்கிறார்களா என்று நான் அவரைக் கேட்க விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : திண்டுக்கல்லில் நடைபெற்றது சட்ட மன்றத் தேர்தல் அல்ல ; அதுவும் பாராளுமன்றத் தேர்தல்தான்.

இறுதியாக ஒரு அறிக்கை. நம்முடைய இன்றைய முதலமைச்சர் அன்றைய தினம் விடுத்தார். அந்த அறிக்கையில்

"நாளைக் கடத்தாதீர்" அறிவுரை எங்களுக்கு அப்பொழுது. அச்சுறுத்தல் நீலிக் கண்ணீர் வடித்தல் ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடும் என்ற தவறான நம்பிக்கையில் தொடர்ந்து பொய்களையே வாரி இறைத்தல் போன்றவைகளில் நாளைக் கடத்தாமல் முழு வெறுப்படைந்த மக்கள் சந்தேகத்தோடு உள்ள நண்பர்கள் ; ஆத்திரப்பட்டுள்ள நீதியைக் காப்பாற்ற விரும்பும் அதிகாரிகள் லஞ்ச ஊழல்களால் தன்னம்பிக்கையற்றுப்போன உங்கள் இதயம் இவைகளுக்கு இடையில் - அதிகாரிகள் எல்லாம் இழுக்கப்பட்டிருக்கிறார்கள் அப்பொழுது - இவைகளுக்கு இடையில் எத்தனை நாளைக்குத் தமிழக மக்களைக் கொடுமைப்படுத்தி சுகமாக வாழ்ந்துவிட முடியுமென்று கனவு காண்கிறீர்கள். தமிழக மக்களிடம் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் உடனடியாக ராஜினமாச் செய்து பொதுத் தேர்தலில் மக்களைச் சந்தியுங்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. அதற்கு அனைவரும் தலை வணங்குகிறோம்."

இது அன்றைய தினம் இன்றைய முதலமைச்சர் எதிர்க் கட்சி தலைவராக இருந்து "நாளைக் கடத்தாதீர்" என்று எச்சரிக்கை விடுத்துச் சொன்ன அறிக்கையாகும்.

நான் இவைகளை யெல்லாம் படிப்பதன் மூலம், நீங்கள் உடனடியாக இராஜினாமாச் செய்யுங்கள் என்று நான் இப்பொழுது இந்த மன்றத்திலே சொல்ல விரும்பவில்லை ; அல்லது இந்த ஆட்சியைக் கலையுங்கள் என்று நான் மத்திய சர்க்காரிடத்திலே போய் பரிந்துரை செய்யப் போவது இல்லை.

நான் கேட்கிறேன். நீங்கள் எடுத்து வைத்த வாதங்களுக்கு நீங்கள் அளிக்கின்ற பதில் என்ன? நீங்கள் எடுத்து வைத்த வாதத்திலே கடைசியாகச் சொன்னீர்களே, அதையே திரும்பிப் படிக்கிறேன் :

"அச்சுறுத்தல் நீலிக்கண்ணீர் வடித்தல் ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் உண்மையாகிவிடும் என்ற தவறான நம்பிக்கையில் தொடர்ந்து பொய்களையே வாரி இறைத்தல் போன்றவைகளில் நாளைக் கடத்தாதீர்கள். முழு வெறுப்படைந்த மக்கள் சந்தேகத்தோடு உள்ள நண்பர்கள், ஆத்திரப்பட்டு நீதியைக் காப்பாற்ற விரும்பும் அதிகாரிகள் லஞ்ச ஊழல்களால் தன்னம்பிக்கையற்றுப் போன உங்கள் இதயம், இவைகளுக்கு இடையில் எத்தனை நாளைக்குத் தமிழக மக்களைக் கொடுமைப்படுத்தி, சுகமாக வாழ்ந்து விட முடியுமென்று கனவு காண்கிறீர்கள். தமிழக மக்களிடம் உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் உடனடியாக ராஜினாமா செய்து பொதுத் தேர்தலில் மக்களைச் சந்தியுங்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. அதற்கு அனைவரும் தலை வணங்குவோம்".

நம்முடைய எம். ஜி. ஆர். அவர்களுடைய அதே இனிய வாசகத்தை இங்கே நினைவுபடுத்தி அமர்கிறேன்.

உரை : 16 நாள் : 04.02.1981

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களை இந்த அவையில் எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உரையின் மீதான விவாதத்திலே கலந்துகொண்டு பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்களைச் சேர்ந்த சிலர் மிக முக்கியமாக இந்த அவையிலே எதிர்க்கட்சித் தலைவரை மாற்ற வேண்டுமென்று தங்களுடைய தணியாத விழைவு ஒன்றினைத் தெரிவித்தார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குக் கண்ணியம் வேண்டும், பெருந்தன்மை வேண்டும், விரக்தி நிலையிலிருந்து மாறியவராக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துச்சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் மாற்றப்பட வேண்டும். அதற்கு இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று விவாதத்தை ஆரம்பித்து வைத்த ஆளும் கட்சி உறுப்பினர் இங்கு திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்கள்.

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்கு என்ன தகுதிகள் வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சென்று, அதற்குப் பிறகு இந்திரா காங்கிரசுக்குச் சென்று, அதற்குப் பிறகு ஜனதா கட்சிக்குச் சென்று அதற்குப் பிறகு மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து இப்படிப்பட்ட பயங்கரமான பாய்ச்சல்களை நடத்திக்கொண்டிருக்கிற ஒருவர்தான் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்குத் தகுதியானவர் என்று அந்த அருமை நண்பர் எண்ணுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

திரு. கோ. விஸ்வநாதன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது குறுக்கிடுவது வழக்கமல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உறுப்பினர்கள் உட்காரவேண்டும் நான் சொல்வதை கேளுங்கள். குறுக்கீடுகளை இன்றைக்கு அனுமதிக்கவில்லை அநேகமாக. அநேகமாக என்று நான் சொல்லியிருக்கிறேன். அவசியம் இல்லாததை அனுமதிப்பதற்கு இல்லை. (குறுக்கீடு). அவர்தான் அந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தார்.

திரு. கோ. விஸ்வநாதன் : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : திட்டமிட்டு அப்ஸ்டரக்ஷன் பண்ணுவதற்காக ரெடியாக வந்திருக்கிறார்கள் என்றுதான் தெரிகிறது (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விஸ்வநாதனை நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) திரு. விஸ்வநாதன் பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இன்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நானும் பேசவேண்டியிருக்கிறது. அவர்களுடைய பேச்சுக்கும் மற்றவர்களுடைய கருத்துக்களுக்கும் பதில் சொல்வது என்ற முடிவில் இன்றைய கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யாருக்காவது, அவர் சொல்லாததை இங்கே சொல்லிப் பேசியதாக இருந்தால் அதைப்பற்றி தனியாகப் பேசுவதற்கு வாய்ப்பு எடுத்துக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடித்தபிறகு அவருடைய கருத்தைச் சொல்வதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : ஆளுநருடைய உரை கூட்டம் தமிழகத்திலே எத்தகைய சூழ்நிலையிலே இந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவையிலே கூட்டப்பட்டிருக்கிறது என்பதனை இந்த மாமன்றத்திலே பேசிய பல கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் உறுப்பினர்களும் மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். விவசாயிகளுடைய கிளர்ச்சி நடைபெற்று அந்தக் கிளர்ச்சியிலே ஏறத்தாழ 10 பேர் சுட்டுக்கொல்லப்படுகிற சூழ்நிலை உருவாகி அத்தகைய ஒரு உச்சகட்ட அசம்பாவிதத்திற்குப் பிறகும், காவல் துறையினுடைய கட்டுக்கடங்காத அட்டூழியம் கிராமப்புறங்களிலே, குக்கிராமங்களிலே விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்கின்ற இடங்களிலே தொடர்ந்து நடைபெற்றதும், நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன என்பதும் வேதனையோடு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்று ஆகும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அருமை நண்பர் திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். திருவேங்கடம் - குறிஞ்சாகுளம் பகுதியிலே தேவையில்லாமல் தவிர்க்கக்கூடிய சூழ்நிலை இருந்தும் தவிர்க்கப்படாமல் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் ஆளுங்கட்சியினுடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள் என்று சொல்லி அந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலாமல் தோழமைக் கட்சியின் சார்பாக எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை இந்த அரசு சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று வலியுறுத்துவது என்னுடைய கடமையாகிறது. விவசாயிகள் கிளர்ச்சி, முழு அடைப்பு, வேலை நிறுத்தம் என்ற பெயரால் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது நெல்லை மாவட்டம் திருவேங்கடம் பகுதியிலேயும். செங்கற்பட்டு மாவட்டத்திலே திருத்தணி பகுதியிலேயும், தென் ஆற்காடு பகுதியிலே பண்ருட்டியிலேயும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன.

அதிலே குறிப்பாக, திருவேங்கடத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில், அங்கே பேருந்து செல்வதற்கான வழித்தடங்கள் அடைக்கப்பட்டன என்ற உண்மைக்கு மாறான ஒரு தகவலை அவர்களே உருவாக்கிக்கொண்டு, மாலை நான்கு மணியளவில், ஏறத்தாழ முழு அடைப்பு முற்றுப் பெறுகின்ற நேரத்தில், காவல்துறையினர் பலர் அணியணியாக அந்த ஊருக்குச் சென்று, செல்கிற நேரத்திலே வழியிலே உள்ள

தானியங்களைக் கொளுத்தி, சீர்குலைத்து, அழித்து, கிராமத்திற்குள்ளே நுழைந்த பொழுது, அந்தக் கிராமத்திலுள்ள விவசாயிகளினுடைய சங்கத்தின் தலைவராகவும், அந்தக் கிராமத்து மக்களால் பெரிதும் மதிக்கத்தக்கவராயும் இருந்த ஒரு முதியவர் தன்னுடைய கரங்களைக் கூப்பி தொழுதவாறு, போலீசாருக்கு முன்னால் வந்து, முழு அடைப்பு அமைதியாக நடைபெற்று முடிந்துவிட்டது; இங்கு பொதுவாகவே பேருந்துகள் அதிகமாகச் செல்வதில்லை; எனவே நாங்கள் அவைகளைத் தடுக்க வேண்டிய அவசியம்கூட எங்களுக்கு ஏற்படவில்லை; இரண்டொரு தனியார் பஸ்கள்தான் இங்கே செல்லும், அவைகள்கூட இன்றைக்கு வரவில்லை, எனவே நீங்கள் இங்கே வரத் தேவையில்லை என்று சொல்லிக்கொண்டு கைகூப்பித் தொழுது முறையீட்டைச் செய்து கொண்டிருக்கும்பொழுதே, அவருடைய நெஞ்சைப் பிளக்கிற அளவிற்குத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, தொடர்ந்து நடைபெற்ற அமளியிலே ஐந்து பேர் அங்கே கொல்லப்பட்டார்கள். அதிலும் பெரிய கொடுமை, துப்பாக்கிப் பிரயோகத்தால் மாத்திரம் அவர்கள் கொல்லப்படவில்லை. துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளான ஓரிருவரை அவர்கள் சாகாமல் இருக்கும்பொழுது போலீஸ் லாரியிலே தூக்கிப்போட்டு அந்த ஊர் மக்களுக்கு நேராகவே போலீசார் மிதித்துக் கொன்றார்கள். துப்பாக்கிப் பிரயோகத்திலே சாகவில்லை; எனவே சாகடிக்க வேண்டுமென்பதற்காக மிதித்துக் கொன்றார்கள் என்கின்ற இந்தச் செய்திகளெல்லாம் தமிழகத்திலே உள்ள கிராமப் பகுதிகளில் எவ்வளவு வேதனையான, விபரீதமான செய்திகள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

விவசாயிகளினுடைய பிரச்னை இன்னும் தீர்க்கப்படாத பிரச்னையாக இருந்து வருகிறது. அதிலே, அவர்களுடைய கடன்கள் அனைத்தையும் ரத்து செய்கிறேன் ஐந்தாண்டுக் காலத்திலே என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சட்டமன்றத் தேர்தலையொட்டி வாக்குறுதிகளை வழங்கினார்கள். விவசாயச் சங்கத் தலைவருடைய இல்லத்திற்கே சென்று அத்தகைய உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. பிறகு நிதிநிலை அறிக்கையிலே 40 கோடி ரூபாய் அல்லது 42 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் ரத்து என்று ஒரு குழப்பமான சூழ்நிலையில், தெளிவற்ற நிலையில் ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது. அதிலும் பயனடைந்தவர்கள் யார்? உண்மையிலேயே பயன்பெற

வேண்டியவர்கள் பயன் அடைந்தார்களா என்ற சந்தேகத்தை யெல்லாம் தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்களே இங்கே எடுத்துக்காட்டி இருக்கின்றார்கள்.

அதன் பின்னர் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சில கூட்டங்களில் இந்த 42 கோடி, அதோடு சேர்ந்த 16 கோடி தக்காவிக் கடன்கள் இவைகளைத் தவிர வேறு கடன்களை இந்த அரசு ரத்து செய்யாது என்று திட்டவட்டமாகக் கூறி ஏடுகளிலே வெளிவந்தன; அது வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவில் அண்ணா சாலையிலே, அண்ணா சிலைக்கு அருகாமையிலே நடைபெற்ற கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் 240 கோடி ரூபாயையும் ஐந்தாண்டுக் காலத்திலே இந்த அரசு ரத்து செய்யும் என்ற உறுதிமொழியினைத் தந்தார்கள்.

ஆனால், இந்த உறுதிமொழிகள் அனைத்தும் காப்பாற்றப் படாத, காற்றிலே பறக்க விடப்பட்ட, நிறைவேறும் என்கின்ற ஒரு நம்பிக்கையைக்கூட விவசாயிகளுக்கு அளிக்காத ஒரு சூழ்நிலையில் மின்வெட்டுக்கள், இன்னும் பல தொல்லைகளுக்கு விவசாயிகள் ஆளாக்கப்பட்டு, இந்தக் கிளர்ச்சி குமுறி எழுந்தது என்பதும், அது இன்னும் அடங்கியபாடில்லை, இன்னும் அது நீறுபூத்த நெருப்பாகத்தான் இருக்கிறது என்பதும் இந்த அவையிலே உள்ள நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அதற்கு என்ன பரிகாரங்களைச் செய்யப்போகிறோம் என்பதற்கான திட்டவட்டமான முடிவுகள், தமிழகத்திலே மிக முக்கியமான தொழிலாக இருக்கின்ற வேளாண்மைத் தொழில், அதிலே ஈடுபட்டிருக்கின்ற உழவர் பெருங்குடி மக்கள், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள உபத்திரவங்கள் இவைகளை நீக்குவதற்கு என்ன திட்டவட்டமான காரியங்களைச் செய்யப்போகிறோம் என்று தெளிவுரையாக இந்த ஆளுநர் உரை இல்லை என்பதுதான் எனக்குள்ள மெத்த வருத்தம் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தில் பக்கிங்ஹாம் அன்ட் கர்நாட்டிக் மில் தொழிலாளர்கள் 13,000 பேர் இந்தியாவிலே மிகப் பெரிய

ஆலை என்ற பேரும் புகழும் பெற்று, மிகப் பெரிய தொழிற் சங்கம் மற்றத் தொழிற் சங்கங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்குகின்ற தொழிற்சங்கம் என்கின்ற சிறப்புப் பெற்று, மிகப்பெரும் தலைவர்களெல்லாம் அதனுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார்கள் என்கின்ற கீர்த்தி பெற்று விளங்கும் பி அன்ட் சி மில் ஆலை மூடப்பட்ட காரணத்தினால் இன்றைக்கு 13,000 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்து, இன்னும் சில நாட்களுக்குப் பிறகு நடுத்தெருவிலே நிற்கவேண்டிய நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து மத்திய அரசோடு கலந்து பேசவோ அல்லது மாநில அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவோ தயக்கம் காட்டியது, தாமதம் காட்டியது. அதற்கான அவசரம் காட்டப்படவில்லை. அது அவசியமான பிரச்னையாகவும் உணரப்படவில்லை என்பதும் நான் இங்கே எடுத்து வைக்கின்ற மிக முக்கியமான குற்றச்சாட்டாகும்.

அவசரக் கோலம் அள்ளித் தெளி என்பதைப்போல், கிராமப்புறத்திலே கிராம அதிகாரிகளுடைய நிர்வாகத்திலே சில சீர்த்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப் பட்ட கருத்தானாலுங்கூட, அந்தக் கருத்தை நிறைவேற்றுவதிலே, முறைப்படி மாற்றுத் திட்டங்களை ஆராய்ந்து அதைச் செயல்படுத்துகின்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், திடீரென ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக 24,000 கிராம அதிகாரிகளை, வீட்டுக்கு அனுப்பிவிட்டு, மற்ற மாநிலங்களிலே அந்தக், கிராம அதிகாரிகளுக்கு எத்தகைய இழப்பீடுகள் தந்திருக்கிறார்கள். எத்தகைய நிவாரணங்கள், துயர் துடைப்புகள் தந்திருக்கிறார்கள் என்பதை யெல்லாம் எண்ணிப் பார்க்காமல் அவர்களை சமஸ்தானாதிபதிகளைப் போல் வர்ணித்து, அவர்கள் மீது இல்லாத, பொல்லாத, இழிவான பழியை யெல்லாம் சுமத்தி, வீட்டுக்கு அனுப்பி இருக்கின்ற அந்தச் செயல் கண்டிக்கத்தக்க செயலாகும். அதற்கான மறுபரிசீலனை நடைபெறும் என்ற நம்பிக்கை சொல்கூட ஆளுநர் உரையிலே இடம்பெறாமல், அதற்கான சட்டம் நிறைவேற்றப்படும் என்ற அளவிலேதான் இந்த அரசு தன்னுடைய நடவடிக்கையிலே மேலும் பிடிவாதமாக இருக்கின்றது என்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஆளுநர் உரையிலே அண்மையிலே நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடு பற்றிய குறிப்பு இருக்கிறது. உலகத் தமிழ் மாநாட்டிற்காக, தொடக்கத்திலே ஒரு பொது நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. அப்படி அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவினுடைய கூட்டம் எப்பொழுது கூடியது என்பதுதான் வேடிக்கையானது வேதனையானது. பொது நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டதும், உடனடியாகக் கூடி, அந்த மாநாட்டை எப்படியெல்லாம் நடத்தலாம் என்று திட்டங்களைத் தீட்டி எந்த வகையிலே அது சிறப்பாக அமைய வழி வகுக்கலாம் என்ற சீரிய யோசனைகளைப் பெற்று அந்த மாநாட்டுக்கான நடவடிக்கையிலே இறங்காத இந்த அரசு ஆளுநர் உரையிலே மாத்திரம் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறது. ". . . நன்கு உருவாக்கப்பட்ட சீரிய திட்டத்தினை வகுக்க இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டது" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மை நிலை என்னவென்றால், மாநாடு நடைபெறுவதற்கு 20 நாட்களுக்கு முன்புதான், அதாவது 13-12-1980, டிசம்பர் 13-ஆம் தேதிதான் சென்னை மாநகரத்திலே அந்தப் பொது நிர்வாகக் குழுவினுடைய கூட்டமே கூடி, என்னென்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசனை கேட்கவில்லை; என்னென்ன செய்திருக்கிறோம், என்னென்ன செய்யப்போகிறோம் என்பதை தாங்கள் ஏற்கெனவே அறிவித்த திட்டங்களை ஒரு 'இன்பார்மேஷன்', ஒரு செய்தியாக அந்தக் குழுவுக்குத் தரப்படுகிறதே அல்லாமல், முறைப்படி திட்டங்கள் எதுவும் அங்கே நடத்தப்படவில்லை, யோசிக்கப்பட வில்லை. அதனால்தான் அந்த மாநாடு, எந்த அளவிற்கு அவசரக் கோலமாக நடத்தப்பட்டது என்பதற்கு ஒரு துளி உதாரணத்தைத் தரவேண்டுமானால், வைக்கப்பட்ட சிலைகளிலே கூடக் கோளாறு. ஒன்றிரண்டு சிலைகள்தான் ஒரு அரை உருவச் சிலை, அல்லது முழு உருவச் சிலையாக வைக்கப்பட்டது.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டில், மதுரை மாநகரத்திலே திட்டமிட்டு அல்லது திட்டமிட்ட செயல்முறைகள் வகுக்கப்பட்டு காரியங்கள் நடைபெறாத காரணத்தினால் எந்த அளவுக்கு அலங்கோலங்கள் ஏற்பட்டன என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை முதலிலே நான் உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். பிறகு 15 நாள் 10 நாள் கழித்து அந்தத் தவறுகள் தீர்க்கப்பட்டதாக அறிகிறேன்.

அங்கே சிலைகள் வைக்கப்பட்டன, வைக்கப்பட்ட சிலைகள், சென்னையிலே அண்ணா அவர்கள் காலத்திலே வைக்கப்பட்டது போன்று முழு உருவச் சிலைகள் அல்ல. இதிலே ஒன்றிரண்டு சிலைகளைத் தவிர, அத்தனையும் சிலைகள் அல்ல. வெறும் தலைகள்தான் வைக்கப்பட்டன. அப்படி வைக்கப்பட்டதிலேகூட தாபர்ட்டி டி. நொபிலி-யின் தலை ஒன்றை சிலையாக வைத்து, அதற்குக் கீழே வைக்கப்பட்ட கல்வெட்டிலே, வீரமாமுனிவர் திருஉருவச் சிலை என்று எழுதப்பட்டு, அதனுடைய தலைவர் மாண்புமிகு விஜயசாரதி என்றும், திறப்பாளர் மாண்புமிகு இராமச்சந்திரன் என்கின்ற அடிக்கல் - நொபிலியினுடைய சிலைக்கு வைக்க வேண்டிய அடிக்கல்லை - வீரமாமுனிவர் சிலைக்கும், வீரமாமுனிவர் சிலைக்கு வைக்க வேண்டிய அடிக்கல்லை, நொபிலியினுடைய சிலைக்குக் கீழேயும் வைத்தார்கள்.

அதைப்போலவே, வீரமாமுனிவர் சிலையை வைத்து விட்டு, அந்தச் சிலைக்குக் கீழே - இது ராபர்ட் நொபிலியினுடைய சிலை என்று எழுதினார்கள். எனக்குள்ள வருத்தம் எல்லாம் உலகத்தில் இருந்து வந்திருந்த தமிழர்கள் எல்லாம் அதைப் பார்த்துவிட்டு, தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களுக்கு வீரமாமுனிவர் யார், ராபர்ட் நொபிலி யார் என்கிற வித்தியாசம் கூடத் தெரியாமல் போய்விட்டது என்று கேலி செய்து இருப்பார்களே என்ற வருத்தம்தான். எனவே, திட்டமிட்டு இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறவில்லை. முறையாகச் செயல்கள் வகுக்கப்படவில்லை என்பதற்கு இது ஒரு ஆதாரமாகும்.

சுற்றுலாத் துறை சார்பாக மதுரையிலே ஒரு ஓட்டல் - ஒரு விடுதி ஏறத்தாழ ரூபாய் 50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, 20 - 25 ஆயிர ரூபாய் செலவில் அந்த ஓட்டலுக்கு ராஜராஜன் என்ற பெயர் சூட்டப்பெற்று, எழுதப்பெற்று, அந்தப் பலகை வைக்கப்பட்டு, "இந்து" போன்ற பத்திரிகைகளில் எல்லாம்கூட அந்த ஓட்டலின் திறப்பு விழாவுக்கு விளம்பரங்கள் வெளியிடப்பெற்று, அப்படி வெளியிடப் பெற்ற விளம்பரத்தில் ஆளுநர் வாழ்த்து, முதலமைச்சரின் வாழ்த்து, மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் வாழ்த்து இவைகள் எல்லாம் இடம்பெற்று, சோழ மன்னன் ராஜராஜனின் பெயரால் இந்த விடுதி விளங்கும் என்று சோழமானின் கீர்த்திக்கும் புகழ்பாடப்பெற்று, இத்தனைக்கும் பிறகு திடீரென்று ராஜராஜனின் பெயரால் அமைந்த

அந்த விடுதியின் பெயரை ஒரே உத்தரவின் மூலம் மாற்றி அல்லது முதலமைச்சர் அங்கே சென்றவுடன் மாற்றி, "ஓட்டல் தமிழ்நாடு" என்கிற பெயரை வைத்துவிட்டார்கள். ஓட்டல் தமிழ்நாடு என்று பெயர் வைத்ததிலே எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. வருத்தமும் இல்லை. நான் கேட்பது எல்லாம், அதையே கொஞ்சம் ஆர, அமர சிந்தித்து முதலிலேயே "ஓட்டல் தமிழ் நாடு" என்று பெயர் வைத்து இருந்தால் என்ன ? அதை விட்டு விட்டு, முதலில் ராஜராஜன் என்று பெயர் வைப்பானேன் ? அந்தப் பெயரை வைத்துவிட்டு, பிறகு அந்தப் பெயரை மாற்றுவானேன் ? இது ஒரு பெரிய மாமன்னனுக்கு அவமானம் என்றுதான் தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் கருதுகிறார்கள் என்கிற ஆணித் தரமான குற்றச்சாட்டை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

அங்கே வெளியிடப்பட்ட மலர் குறித்து காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரும், என்னுடைய அருமை நண்பருமான திரு. சுந்தரராஜ் அவர்கள் இங்கே ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். அதிலே வெளியிடப்பட்டுள்ள ஒரு கட்டுரை 174 ஆம் பக்கம் முதல் 177 ஆம் பக்கம் வரையில் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறது. அதில் மறவர் குல பெருமக்கள் இழிவுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் விளக்கம் அளிக்கும்போது சொன்னார்கள் மறவர் என்றால் வீரர் என்ற பொருள், அந்தப் பொருளிலேதான் அது கையாளப்பட்டு இருக்கக்கூடும் என்று சொன்னார்கள். ஆனால் சம்பல் நதிப் பள்ளத்தாக்கில் இருப்பவர்கள் வீரர்கள் என்று அழைக்கப்படவில்லை. கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். கொள்ளைக்காரர்களை வீரர்கள் என்று அழைப்பது தவறு. மறவர் என்றால் வீரர், அந்த மறவர் என்கிற அடைமொழியை கொள்ளைக்காரர்கள் - கொள்ளைக்கார மறவர்கள் அல்லது கொடும் மறவர்கள் என்கிற பெயரால் அழைப்பது உள்ளபடியே அந்தக் குலத்தை இழிவுபடுத்துகின்ற ஒரு காரியமாகும்.

நாவலர் அவர்களோ அல்லது மற்றவர்களோ அன்றைக்கு ஒரே வரியிலே பதில் சொல்லியிருக்கலாம். அந்தக் கட்டுரையில் அந்தத் தவறு நேர்ந்து விட்டமைக்காக வருந்துகிறோம் என்று

சொல்லியிருக்கலாம். ஆனால் வாதத்திற்கு வாதம் எடுத்து வைத்து, அவர்களுடைய பிடிவாதத்தை இங்கே காட்டினார்களே அல்லாமல், ஏதோ தவறு நேர்ந்துவிட்டது, அந்த மலர் ஒரு வேளை அடுத்த பதிப்பு என்று வெளியிடுவதாக இருந்தால், அதிலே வராமல் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். அதற்குப் பதிலாக, அதுதான் சரி. அது சங்க இலக்கியத்தில் இருக்கிறது. எனவே, தவறு இல்லை என்று சொன்னார்கள்.

இதே கருத்தைத்தான் முன்பொருமுறை கழக ஆட்சியிலே நான் முதலமைச்சராகவும், நாவலர் அவர்கள் கல்வியமைச்சராகவும் பொறுப்பேற்று இருந்த நேரத்தில், பாடப் புத்தகத்திலே இப்படி மறவர்களை இழிவுபடுத்தும் சொல் வந்துவிட்டது என்று அன்று இருந்த பார்வார்ட் பிளாக் கட்சித் தோழர்கள் எடுத்துக்காட்டியபோது, நாவலர் அவர்கள் இலக்கியத்தில் இருக்கிறது என்று வாதிட்டார்கள். என்றாலும்கூட, அவர்கள் மனதைப் புண்படுத்துமேயானால், அதை எடுத்துவிடலாம் என்று சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பாடப் புத்தகத்திலே இருந்து அது அகற்றப்பட்டது.

இப்போது நாவலர் அவர்கள் எடுத்து வைத்த வாதம் – இலக்கியத்தில் இருக்கிறது என்ன செய்ய என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன் நானும், நாவலர் அவர்களும், நம்முடைய பேராசிரியர் அவர்களும் அமைச்சர் பொறுப்பில் இந்த அவையிலே இருந்த காலத்தில் ''நீராறும் கடலுடுத்த நிலமடந்தைக்கெழில் ஒழுகும், சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமதில்", என்ற மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையினுடைய பாடலை ''தமிழ்த்தாய் வாழ்த்தாக'' அரசு நிகழ்ச்சிகளில் பாடவேண்டும் என்று ஆணை பிறப்பித்தோம். அந்தப் பாடலிலே "ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம்" என்ற அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டோம். ஏனென்றால் ஒரு வாழ்த்து பாடப்படுகின்ற நேரத்திலே 'அழிந்து, ஒழிந்து' என்கின்ற இந்த சொற்களோ அல்லது இன்னொரு மொழியைக் கேலி செய்கின்ற அளவு 'ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து' என்று இருக்கின்ற சொற்களோ இடம்பெற வேண்டாம் என்பதற்காகத்தான் அன்றைக்கு "ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து" என்கின்ற அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டோம். மனோன்மணீயம்

சுந்தரம்பிள்ளை பாடியிருக்கிறாரே, இருந்தால் என்ன என்று நாங்கள் கேட்கவில்லை; அப்படி வைக்கவும் இல்லை. அதைப்போல நான் எழுதிய சிலப்பதிகார நாடகக் காப்பியம். அந்த நாடகக் காப்பியத்திலே கூட சிலம்பு திருடியவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் என்று இளங்கோவடிகள் எழுதியதை கூட மாற்றி, அது ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மனத்தைப் புண்படுத்தும் என்ற காரணத்தால் அரண்மனையிலுள்ள ஒரு அதிகாரிதான் அந்தக் காரியத்தைச் செய்தார் என்று கதையை மாற்றி, அப்படி எழுதிவிட்டு, அந்த நாடக இலக்கியத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னுரை தந்து, நம்முடைய நாவலர் அவர்களும் அந்தப் புத்தகத்தை வெளியிட்ட விழாவிலேயும் சரி, அந்தப் படம் வெளியீட்டு விழாவிலேயும் சரி அதைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். எனவே சிலப்பதிகாரத்திலே இருக்கிறதே, இன்னார்தான் சிலம்பு திருடினார் என்று வைத்தால் என்ன என்று நாம் அப்போது வாதிடவில்லை; யாரையும் புண்படுத்தாமல் இருக்கட்டும் என்பதற்காக.

நான் கேள்விப்பட்டேன். மதுரை மாநாட்டிலே கூட

“காவா நாவிற் கனகனும் விஜயனும்
விருந்தின் மன்னர் தம்மொடு கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலராகி
செப்பிய மொழிகளை சேரனுக்கு உணர்த்துவேன்”.

என்று கனக விஜயர் தமிழ் மன்னர்களை இகழ்ந்துரைத்தார் என்ற செய்தியை சேர மன்னனுக்குச் சொல்ல, செங்குட்டுவன் சீறியெழுந்து படைகொண்டு சென்று, வடபுலம் வரையிலே சென்று ஆங்காங்கே மன்னர்களை வென்று, குயிலார்லும் என்கின்ற இடத்திலே கனக விஜயரை சிறைப்பிடித்து, அவர்களுடைய தலையிலே கல்லேற்றி, கண்ணகிக்குச் சிலை வடிக்க தமிழகத்திற்குக் கொண்டுவந்தான்; வஞ்சி மூதூரில் சிலை நாட்டினான் என்ற அந்த வரலாற்றை மதுரையிலே பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் வருகின்ற காலத்திலே ஊர்வலத்திலே அலங்கார வண்டிகளிலே ஒரு வண்டியாக சேர்க்கப்பட்டிருந்தது. அந்த வண்டி இடம்பெறுமா என்று நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்களிடம் நிருபர்கள் கேட்டபோது,

"இடம்பெறும்" என்று அவர்கள் சிரித்துக்கொண்டே பதில் சொன்னார்கள் என்ற செய்திகள் எல்லாம் பத்திரிகைகளிலே வந்து, கடைசி நேரத்திலே அந்த வண்டி நிறுத்தப்பட்டுவிட்டது. ஏன் நிறுத்தப்பட்டது என்று நான் கேட்கவில்லை. நிறுத்தப்பட்ட வண்டி இலக்கியத்தில் இருக்கிறது; எனவே இருந்தால் என்ன என்று அப்போது நாவலர் வாதிடவில்லை. இருந்தாலும் கூட இது யாரையாவது புண்படுத்தக்கூடும் என்ற காரணத்தால் அந்த வண்டி நிறுத்தப்பட்டிருக்கிறது. இலக்கியத்திலே உள்ள வரலாற்று உண்மை. கனக விஜயன் தலையிலே கல்லேற்றி வந்தது வரலாற்று உண்மை. அந்த வண்டி நிறுத்தப்பட்டிருக்கிறது.

அரிச்சந்திரா நாடகம் பழைய இலக்கியம்தான்; இதிகாசம் தான். அதிலே தாழ்த்தப்பட்ட மக்கள் இழிவுபடுத்தப்படுகிறார்கள் என்பதற்காக ஒரு போராட்டமே நடைபெற்று நடத்தப்பட்டு, முன்பு இருந்த அரசாலே அன்றைக்கு தடை விதிக்கப்பட்டது. அது இலக்கியத்திலே இருக்கிறது; இதிகாசத்திலே இருக்கிறது; ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களை இழிவுபடுத்துவது தவறு இல்லை என்று யாரும் வாதிடவில்லை. நண்பர் இளையபெருமாள் போன்றவர்களுக்கு எல்லாம் நன்கு தெரியும். எனவேதான் இப்படி யாரையும் இழிவுபடுத்தக்கூடிய அளவுக்கு, புண்படுத்தக்கூடிய அளவுக்கு ஏதாவது இருக்குமானால் அவைகளை நாம் ஓரளவுக்கு கவனத்திற்கு கொண்டுவராமல் இருப்பது நல்லது என்ற முடிவை கழக அரசும் சரி, அண்ணா தி.மு.க. அரசும் சரி மேற்கொண் டிருக்கும்போது இந்த விவகாரத்தில் மாத்திரம் நான் சொன்னேன் என்பதற்காக அல்லது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே திரு. சுந்தரராஜ் சொன்னார் என்பதற்காக ஒரு பிடிவாதத்தை மேற்கொள்வது நல்லதல்ல. ஒரே வரியிலே, அன்றைக்கு எழுந்தவுடன் நம்முடைய முதலமைச்சரோ அல்லது நிதி அமைச்சரோ சொல்லியிருக்கலாம். எப்படியோ தவறு நேர்ந்துவிட்டது; அது எதிர்காலத்தில் திருத்திக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கலாம். எனவேதான் நீங்கள் வாதங்களை வைப்பதிலே போட்டி போடுகிறீர்களே அல்லாமல், இப்படிப்பட்ட காரியங்களில் பிடிவாதமாக இருக்கிறீர்கள் என்கின்ற குற்றத்தை நான் உங்கள்மீது சுமத்த தவிர்க்க முடியாத சூழ்நிலையிலே கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு ஜெகத்குரு சங்கராச்சாரியார் அவர்களுடைய ஆசியும் பெறப்பட்டது என்ற செய்தியும் நம்முடைய முதலமைச்சரால் வெளியிடப்பட்டது. நான் அதுபற்றி எத்தகைய விமரிசனங்களையோ கருத்து மாறுபாடுகளையோ எடுத்துகூற விரும்பவில்லை. உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஆசி அளித்த ஜெகத்குரு சங்கராச்சாரியார் அவர்கள் தமிழ்நாட்டிலே ஆண்டவனுக்கு, ஆலயங்களில் இருக்கிற விக்கிரகங்களுக்கு தமிழிலேயே அர்ச்சனை நடத்துவதற்கும் அனுமதி அளிப்பாரேயானால் உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஆசி அளித்ததைவிட அதிகப் பாராட்டுதலை நான் சங்கராச்சாரியார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருப்பேன். சங்கராச்சாரியாரோடு நெருக்கம் கொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அத்தகைய ஒரு அனுமதியை, இருக்கின்ற தடையை நீக்குகின்ற ஒரு நிலையை, சங்கராச்சாரியாரோடு கலந்து பேசி எதிர்காலத்திலே தமிழ்நாட்டு ஆலயங்களிலே எங்களுடைய தமிழ் கடவுள்களுக்கு தமிழ்தான் புரியும்; பிற மொழி புரியாது; எனவே தமிழில் அர்ச்சனை செய்ய சங்கராச்சாரியார் அவர்களே முன் நின்று, வலிய வந்து அவர்களே அதை அனுமதிக்கிற அளவுக்கு, நடைமுறைப்படுத்துகின்ற அளவுக்கு, ஒரு ஆலயத்திலே அவர்களே அதற்கு தொடக்க விழாவினை நடத்துகின்ற அளவுக்கு அனுமதித்து, முன்வருவார்களேயானால் நான் உள்ளபடியே மெத்த மகிழ்ச்சியடைவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த மாநாட்டில் நம்முடைய தமிழ்நாட்டின் உரிமைகள் சிலவற்றை நம்முடைய முதலமைச்சரவர்கள் விட்டுக்கொடுத்திருக் கிறார்கள் என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்கோ, இந்த நாட்டினுடைய கவனத்திற்கோ கூட அல்ல, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கண்காட்சி தொடக்க விழாவை நடத்த வந்த கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. குண்டுராவ் அவர்கள் ''இரண்டு மாநிலங்களுக்கிடையே பிரச்சினைகள் உள்ளது உண்மைதான், ஆனால் பரிவு உணர்வுடன் அணுகினால் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்'' என்று அவர் பேச - நான் தினமணியின் மதுரைப் பதிப்பில் 6-1-1981-லே வெளியிடப்பட்ட

செய்தியைத் தான் படிக்கிறேன் - எம். ஜி. ஆர் அவர்கள், - அதிலே எம். ஜி. ஆர் என்று இருக்கின்றது, எனவே ஏன் முதலமைச்சர் என்று சொல்லவில்லை என்று யாரும் கோபித்துக்கொள்ள வேண்டாம் - "தலைமை வகித்துப் பேசிய எம்.ஜி.ஆர். காவிரி நதி இரு மாநிலங்களிலும் பாய்வது பற்றி கர்நாடக முதல்வர் பேசியதைப்பற்றி குறிப்பிட்டு, இது நாசுக்கான பிரச்சினை என்றும் காவிரி நதியிலிருந்து கர்நாடகம் அதிகபட்ச பலனை பெறுவதில் தமிழகம் குறுக்கே நிற்காது என்றும் கூறினார்." இது மதுரை தினமணியில் வெளியாகி இருக்கின்றது. இதற்கு இதுவரையில் அரசின் சார்பிலே மறுப்பு வரவில்லை. காவிரி நதியிலிருந்து கர்நாடகம் அதிகபட்ச பலனைப் பெறுவதில் தமிழகம் குறுக்கே நிற்காது என்றும் கூறுவது தமிழ்நாட்டு மக்களுக்கு மிக மிக ஆபத்தான விவகாரம். என்ன சொல்லி இருக்க வேண்டும் என்றால் தமிழக ஆயக்கட்டுகளுக்கு குந்தகம் வராத வகையில் கர்நாடக மாநில மக்களும் பயனடைவதில் நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம் என்று சொல்லியிருந்தால் தமிழ் நாட்டு மக்களுக்கும் பாதகம் இல்லை. கர்நாடக மக்களுக்கும் பாதகம் இல்லாத ஒரு செய்தியாக இருந்திருக்கும். ஆனால் அதற்கு மாறாக காவிரியிலிருந்து கர்நாடகம் அதிகபட்ச பலனைப் பெறுவதில் தமிழகம் குறுக்கே நிற்காது என்று கூறியிருப்பது தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ்நாட்டிலே உள்ள பழம்பெரும் ஆயக்கட்டுகளைப் பெற்றிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பேரபாயத்தை உண்டாகக்கூடிய ஒரு செய்தியாகும்.

இன்னொன்று. இந்தக் காவிரி பிரச்சினை பற்றிப் பேசும் போது நான் குறிப்பிடுவது மிக மிக அவசியம். கடந்த செப்டம்பர் திங்கள் டெல்லியிலே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு நம்முடைய முதலமைச்சர், கேரளத்தினுடைய முதலமைச்சர், புதுவை மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஆகிய இவர்கள் எல்லாம் சென்று இருக்கும்போது கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வருகிறார் - இதிலே வேடிக்கை, விபரீதம் என்னவென்றால் கர்நாடக மாநிலத்தின் சார்பாக பேச்சுவார்த்தைக்கு வந்த முதலமைச்சர் குண்டுராவ் அவர்களோடு கர்நாடக மாநிலத்தினுடைய முன்னாள் அமைச்சர், இப்போது எந்தப் பதவியிலும் இல்லாத எச். எம். சென்னபாசப்பா அவர்கள் இடம்பெற்று பெரும்பான்மையான

வாதங்களை அந்த முதலமைச்சர்களின் மாநாட்டில் திரு. சென்னபாசப்பா அவர்கள் நடத்தி இருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலே எந்தப் பதவிப் பொறுப்பிலும் இல்லாத ஒருவர் மத்திய அரசு கூட்டிய அந்த முதலமைச்சர்களுடைய மாநாட்டு நிகழ்ச்சியில், காவிரி பிரச்சினை பற்றிய நிகழ்ச்சியில் அதிகப்படியான விவாதங்களை நீண்டநேரம் எடுத்தக்கொண்டு நடத்தி இருக்கிறார் என்பதும் அதைத் தமிழக அரசின் சார்பிலே தடுக்கவில்லை. அதுகூடாது என்று மறுக்கவில்லை என்பதும் உள்ளபடியே நம்முடைய துரதிர்ஷ்டமாகும். ஏனென்றால் தமிழ்நாட்டுக்கு அதிகமான அளவுக்கு காவிரி தண்ணீர் தரக்கூடாது என்றும், தமிழ்நாடு ஏன் முப்போக சாகுபடியைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கேள்வி கேட்பதிலே அழுத்தந்திருத்தமான எண்ணம் கொண்டவர் சென்னபாசப்பா. அவர் அப்படிப்பட்ட விவாதங்களில் கலந்துகொள்கிற நேரத்தில் தமிழ்நாட்டுக்கு நன்மைகள் கிடைக்கக்கூடிய முடிவுகளை நிச்சயமாக நாம் எதிர்பார்க்க முடியாது.

உலகத் தமிழ் மாநாட்டிலே இந்தித் திணிப்பு பிரச்சினையில் நம்முடைய இந்திய திருநாட்டினுடைய தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உறுதிமொழியைத் தந்ததை நம்முடைய ஆளுநர் உரையிலே அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்களும், மற்றுமுள்ள கட்சியின் தலைவர்களும் தங்களுடைய விவாதங்களை எடுத்து வைத்த நேரத்தில் வேறுபல கருத்துக்களை அதாவது இன்னும் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் உலகத் தமிழ் மாநாட்டிலேதான் இந்தக் கருத்தை இந்தியப் பிரதமர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். என்று இல்லை. அவர்கள் இந்தியப் பிரதமராக வருவதற்கு முன்பு கூட அதாவது இரண்டாவது முறையாக வருவதற்கு முன்பு கூட 1979-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள், சென்னை கடற்கரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நடத்தப்பட்ட பெரியார் அண்ணா பிறந்தநாள் விழாவில் அவர்கள் பேசும்போது, அவர்களுக்கு முன்பு நான் பேசிய நேரத்திலே குறிப்பிட்டதைத்

தொடர்ந்து அவர்கள் சொன்னார்கள் "என்னுடைய தந்தை அளித்த உறுதிமொழியை நான் காப்பாற்றுவேன், இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே நீடிக்கும்" என்று. அந்த உறுதிமொழியை அம்மையார் அவர்கள் தந்தார்கள்.

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு பிரதமராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகும் சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் அவர்கள் இங்கே வந்தபோதெல்லாம் அந்த உறுதிமொழியைத் தரத்தவறவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் - சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் அப்போது முதலமைச்சராக இல்லை - வாக்காளர்களைச் சந்திக்கும்போதெல்லாம் பிரதமர் அவர்களுடைய உறுதிமொழியை நம்பக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் கூட்டு சேர்ந்து இங்கே ஆட்சியை அமைப்பார்களேயானால் அண்ணா அவர்கள் கொண்டுவந்த இருமொழித் திட்டத்திற்கே ஆபத்து ஏற்படும் என்றும் மீண்டும் மும்மொழித் திட்டம் வந்துவிடும் என்றும் ஒருபீதியை மக்களிடத்திலே எழுப்பினார்கள். அப்பொழுது நாங்கள் விளக்கம் அளித்தோம். 68 ஆம் ஆண்டு, அண்ணா அவர்கள் இந்த அவையிலே இருமொழித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, இந்திரா காந்தி அம்மையார் தான் டெல்லியிலே பிரதமராக இருந்தார். அவர் அதை தடுக்கவில்லை, எனவே, இப்பொழுது இங்கே ஒரு கூட்டணி ஆட்சி அமைவதானாலும் கூட நிச்சயமாக இரு மொழித் திட்டத்திற்கு எந்த ஆபத்தும் வராது என்று சொல்லியும் கூட, ஏதோ தேர்தலுக்காக கருணாநிதியும், மற்றவர்களும் சொல்கிறார்கள் என்று என்னுடைய அன்புக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கு சொன்னார்களே அல்லாமல் வேறு அல்ல.

ஆனால் இன்றைக்கு முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டிலே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அளித்த இந்த உறுதிமொழியே நமக்கு போதுமானது என்றும், கேரளத்தினுடைய முதல் அமைச்சர் நாயனார் அவர்கள் அதை அழுத்தம் திருத்தமாகப் பேசும்போதுகூட, "அவர்கள் நிச்சயமாக இந்தியைத் திணிக்க மாட்டார்கள்" என்று கேரள முதலமைச்சர் நாயனார் அவர்களுக்கு ஆறுதல் கூறுகிற அளவிற்கும் பேசிஇருப்பது, தேர்தலுக்கு தேர்தல் நிலைமைகள்

மாறுகின்றன என்பதே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்த உறுதிமொழி நிலையானதாக ஆக்கப்பட வேண்டும் என்பதிலே அழுத்தம் திருத்தமான கருத்தோடு இருக்கிறோம்.

அப்படி நிலையானதாக ஆக்கப்படுவதற்கு அது அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டும். நேருவினுடைய உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டும். அதுவும் எப்படி இடம்பெற வேண்டும் என்றால், தமிழ் உள்ளிட்ட, இந்தியாவிலே இருக்கக்கூடிய தேசீய மொழிகள் அனைத்தும் மத்திய அரசினுடைய அலுவல் மொழியாக ஆக்கப்பெற வேண்டும் என்கிற குறிக்கோளோடு - இந்த வகையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய மொழிப் போர் இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. எனவே, எல்லா மொழிகளுக்கும் ஒரு சமத்துவ நிலைமை மத்திய அரசிலே ஏற்பட்டாக வேண்டும். இந்தித் திணிப்பு என்பது இருக்கவே கூடாது. அதற்கு முதல் கட்டமாக, தற்காலிக ஆறுதலாக நேருவினுடைய உறுதிமொழி இந்திரா காந்தி அவர்களால் காப்பாற்றப்படும் என்று சொல்லப்பட்டாலும் கூட - நான் விரும்பவும் இல்லை, அப்படி நேரக்கூடாது என்றும் விரும்புகிறேன், ஆனால் இயற்கையினுடைய வலிமையை யாரும் எதிர்த்து வெற்றி அடைந்துவிட முடியாது, அந்த வகையிலே எதிர்காலத்தில் இந்திராகாந்தி அம்மையாருக்குப் பிறகு வருபவர்கள் தமிழை, தமிழரை வாட்டி எடுக்கிறவர்களாக இரண்டாம் தர குடிமக்களாக ஆக்கிவிடுபவர்களாக இருந்தால் என்ன செய்வது என்ற அச்சத்தின் காரணமாகத்தான், நேருவினுடைய உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம்பெற்றாக வேண்டும் என்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தம் திருத்தமான கருத்தைக் கொண்டிருக்கிறது.

ஆளுநருடைய உரையில் 6-வது 5 ஆண்டு திட்டம் குறித்து சொல்லப்பட்ட செய்தியில், தமிழ் நாட்டின் 6-வது 5 ஆண்டு திட்டத்தின் அளவு அண்மையில் 3,150 கோடி ரூபாய் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களும், வெளியிலே இருக்கிற ஆளும் கட்சியைச் சார்ந்துள்ள அல்லது சேர்ந்துள்ள

ஏடுகளும்கூட, அதுபற்றிக் குறிப்பிட்டு வரலாறு காணாத நிகழ்ச்சி என்றெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். 6-வது 5 ஆண்டுத் திட்டத்திற்கு தமிழக அரசு மத்திய அரசிடம் கோரிய ஒப்புதல் முதலிலே 3,960 கோடி ரூபாய் என்பதை மறந்துவிடக் கூடாது. இதிலே இறுதியாக மத்திய அரசு ஒப்புதல் அளித்து இருப்பது 3,150 கோடி ரூபாய்தான். அதாவது தமிழ் நாட்டினுடைய நிதி ஆதாரங்களைக் கொண்டு தமிழ் நாட்டில் நீங்கள் இவ்வளவு கோடி ரூபாய்க்கு திட்டங்கள் நிறைவேற்ற நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம் என்பதுதான் அதற்குப் பொருளே தவிர வேறு அல்ல. ஏதோ 3,150 கோடி ரூபாயை மத்திய அரசு தமிழகத்திற்கு மானியமாகக் கொடுத்துவிட்டதைப் போன்று பேசுவது சரியல்ல.

நம்முடைய நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்ற இருக்கிற திட்டங்களுக்கு நாம் வகுத்து அளித்திருக்கிற 'டிராப்டை' அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் பொருள். திட்டத்திற்கு மத்தியிலே இருந்து பணம் வாங்குவது என்பது வேறு. ஒப்புதல் வாங்குவது என்பது வேறு. இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்துகொண்டால், அதன் அடிப்படையில் பார்த்து மத்திய அரசிடமிருந்து வாங்க வேண்டிய அளவிற்குத் தேவையான அல்லது உரிய உரிமை படைத்த தொகையை வாங்கியிருக்கிறோமா என்று பார்த்தால் - இல்லை. முதலிலே மத்திய அரசு 6-வது 5 ஆண்டுத் திட்டத்திற்கென ஒப்புக்கொண்டது 2,400 கோடி ரூபாய்தான். அப்படி 2,400 கோடி ரூபாய்க்கு ஒப்புக்கொண்டபோது, மத்திய அரசினுடைய மானியமாக, அல்லது உதவியாக - 'சென்டர் - அஸிஸ்டென்ஸ்' 612 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். இதை மிகவும் கவனம் வைத்துக்கொள்ள வேண்டும். 2,400 கோடி ரூபாய் முதலிலே அளிக்கப்பட்டபோது, 6-வது 5 ஆண்டு திட்டத்திற்கென மத்திய அரசின் உதவித் தொகையாக 612 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதாவது 2,400 கோடியில் 612 கோடி ரூபாய் என்பது சுமார் 25 சதவீதம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இப்போது திட்டத்தின் அளவு ரூபாய் 2,400 கோடியி லிருந்து 750 கோடி அதிகப்படுத்தி 3,150 கோடியாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஒப்புதல் கிடைத்திருக்கிறது. இதிலே ஒன்றை மறந்துவிடக்கூடாது. ரூ. 2,400 கோடிக்கு 612 கோடி மத்திய

அரசு உதவி என்றால் அது சுமார் 25 சதவீதம் என்றால் இப்போது 3,150 கோடி என்று திட்டம் உயர்த்தப்பட்ட பிறகு மத்திய அரசினுடைய உதவி 802 கோடி ரூபாய் நாம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நாம் பெற்றிருப்பது எவ்வளவு என்றால் 661 கோடி ரூபாய்தான். அதாவது 20 சதவீதம்தான். 2,400 கோடிக்கு மத்திய உதவி சுமார் 25 சதவீதம் என்று இருக்க 3,150 கோடியாக திட்டத் தொகை உயர்த்தப்பட்ட பிறகு 25 சதவீதம் என்பது குறைந்து 21 சதவீதம் ஆக ஆகியிருக்கிறது. "இதில் எனக்குத் திருப்திதான்" என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது தமிழ்நாட்டிற்கு பாதகமான, தமிழ் நாட்டுக்குக் கிடைக்க வேண்டியதை நாமே வலுவில் சென்று இழந்துவிடக்கூடிய ஒரு நிலை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

கவர்னர் உரையில் "மனம் திறந்து பேசுக" என்ற ஒரு சொற்றொடர் உள்ளது "நாங்கள் கடை திறந்து வைக்கவா வேண்டாமா" என்று மாண்புமிகு உறுப்பினர்களே 'மனம் திறந்து பேசுக' என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கவர்னர் வாயிலாகக் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் மனம் திறந்து பேசுவதை விட நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மனம் திறந்து இதைப்பற்றி என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பதை நினைவு கூறுவது மிக முக்கியமாகும். 1973-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 2-ம் நாள் அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற ராஜாஜி இரங்கற் கூட்டத்தில் நமது முதல் அமைச்சர் அவர்கள், அன்றைக்கு முதல் அமைச்சர் பொறுப்பில் இல்லாத நேரத்தில், பேசினார்கள். மதுவிலக்குத் தத்துவம் பேரறிஞர் அண்ணா அவர்களின் உயிர்க் கொள்கைகளில் ஒன்று. அதில் முழு மூச்சான நம்பிக்கை கொண்டவர் ராஜாஜி. எனவே அண்ணா அவர்கள் புனிதமாகக் கருதிய மதுவிலக்குக் கொள்கையை இந்த நாட்டில் நிலைபெற வழிகோலியவர் ராஜாஜி. இந்த மதுவிலக்கை திரும்பவும் கொண்டுவர எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டு உழைக்கும், முழு ஒத்துழைப்பு தரும் என்று 1973-ல் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இரங்கற் கூட்டத்தில் நம்முடைய இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள். பிறகு ஜூன் திங்கள் 7-ம் தேதி அவர் பேசிய பேச்சு அன்றிருந்த அந்த

கட்சியின் அதிகாரபூர்வமான ஏடான தென்னகத்தில். வெளிவருகிறது. அவர்கள் பேசியிருக்கிறார்கள். 1973 செப்டம்பர் திங்கள் அ.தி.மு.க. மாநாடு நடைபெற இருக்கிறது. அதற்குள் கட்சித் தேர்தல்கள் முடிவடையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் மாநாட்டில் அறிமுகம் செய்யப்படுவார்கள். (நான் அந்தப் பிரச்னைக்குள் செல்லவில்லை முடிவு அடைந்ததா இல்லையா 1973-ல் என்று). "1973 செப்டம்பர் திங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெறுகிறது, அதற்குள் கட்சித் தேர்தல்கள் முடிவடையும், தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் மாநாட்டில் அறிமுகம் செய்யப்படுவார்கள். அந்த மாநாட்டில் உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள் வெளியாகும்". இதற்குப் பிறகுதான் முக்கியமான விஷயம். "தாய்மார்களையே முழுமையாகக் கொண்டு மதுவிலக்கு அமல் நடத்தப்பட வேண்டும், போராட்டத்திற்கான தேதியை அந்த மாநாட்டில் அறிவிப்பேன்". என்று திராவிட முன்னேற்றக் கழக அரசை எதிர்த்து மதுவிலக்கை முழுமையாகக் கொண்டுவர, அமல்நடத்தப்பட தாய்மார்களையே முழுமையாகக் கொண்ட ஒரு போராட்டத்தை அந்த மாநாட்டில் அறிவிப்பேன் என்று 1973-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் தேதி இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் அன்றைக்கு மிக வீரமாக மிக உறுதியாகக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் முதல் அமைச்சரான பிறகு பேசி இன்று அதிகாரபூர்வமாக அவர்கள் ஏடாக விளங்குகிற அண்ணா இதழில் ஒரு பேச்சு வெளிவந்திருக்கிறது. அதில் என்ன பேசியிருக்கிறார்கள் என்றால், மது அருந்துபவர்கள் தங்கள் வாழ்வை பாழடித்துக்கொள்கிறார்கள். மதுவிலக்கை அமல்படுத்துவதில் குறுக்கிட்டு நெருக்கடி ஏற்படுத்தினால் எவ்வளவு விபரீதம் என்பதை சிந்திக்கவேண்டும். என் உயிர் இருக்கும் வரை நான் பதவியில் இருந்தாலும் சரி பதவியில் இல்லாவிட்டாலும் சரி பதவியில் வேறு ஒருவரை உட்கார வைத்து நான் ஓய்வு எடுத்துக்கொண்டாலும் சரி காந்தியடிகள், ராஜாஜி, பேரறிஞர் அண்ணா கொள்கையைப் பின்பற்றி நடப்பேன். இறுதி மூச்சு வரை மதுவிலக்கை நிறைவேற்றுவேன், என்னைப் பெற்ற அன்னையின் மீது உறுதி எடுத்துக்கொள்கிறேன்." என்று இவ்வளவு வீரமாக அன்னையின் மீது ஆணையிட்டுச் சொன்ன பிறகு, இவ்வளவு உறுதியாக இருக்கிற நீங்கள் எங்களிடத்தில்

இதைப்பற்றி மனம் திறந்த பேசுங்கள் என்று கேட்பானேன். நாங்கள் மனம் திறந்து பேசிய நேரத்தில் எல்லாம் எங்களுடைய சொல் இந்த அரசின் செவிகளில் விழுந்ததா ? திராவிட முன்னேற்றக் கழக அரசு மதுவிலக்கை ஒத்திவைத்து அதனால் இளைய தலைமுறை தன்னை பாழாக்கிக்கொண்டது, என்ற குற்றச்சாட்டை நண்பர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள்.

அவர்கள் சொல்லும்போது இளைய தலைமுறையினர் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், குடித்துவிட்டு வீணாகப் போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், புள்ளி விவரங் களைப் பார்க்கின்றபோது, காங்கிரஸ் ஆட்சி காலத்திலே முன்பு தி.மு.க. ஆட்சி காலத்திலே முன்பும், மதுவிலக்கு ஒத்தி வைக்கப் படுவதற்கு முன்பேகூட ஆண்டுதோறும் சிறைச்சாலைகளிலே இருந்த சாராய கைதிகளின் எண்ணிக்கை 3 இலட்சம் 2½ இலட்சம், 4 இலட்சம் என்றிருந்திருக்கிறது. மதுவிலக்கு அமுலில் இருந்து, இடையிலே ஒத்திவைக்கப்பட்ட காலத்திலேதான் இப்படி எல்லாம் இருந்திருக்கிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 200 பேர்கள் வார்னிஷைக் குடித்துவிட்டுச் செத்தார்கள். அதிலே ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் உட்பட 200 பேர்கள் வார்னிஷைக் குடித்துவிட்டுச் செத்தார்கள் என்ற செய்தியை நாம் மறந்திருக்க முடியாது, எனவே இளம் தலைமுறையினர் குடித்துவிட்டுக் கெடுவது கழக ஆட்சிக்குப் பிறகுதான், அதை ஒத்திவைத்தப் பிறகுதான் என்று சொல்லக்கூடிய குற்றச்சாட்டு தவறு. அன்றைக்கு விக்டோரியா ஆஸ்டலில் போலீசார் நுழைந்து 100 பாட்டில்களைக் கைப்பற்றினார்கள் என்கின்ற செய்தி வந்திருக்கிறது, எனவே, தி.மு.க. அதை ஒத்திவைத்ததால்தான் ஏதோ தீங்கு ஏற்பட்டுவிட்டது என்றும், இப்போது மீண்டும் அதை ஒத்திவைக்கவேண்டும் என்றும் ஒரு திட்டத்தை மனதிலே வைத்துக்கொண்டு, இந்தப் பழியை அவை உறுப்பினர்கள் மீது சுமத்திவிடலாம் என்ற வகையில் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்கிறேன் என்ற விதத்தில் இது தந்திரமாகக் கடைபிடிக்கப்பட்டிருக்குமானால், நான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசியதை ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே இந்தச் சட்டம் சரியாக அமுல்படுத்தப்பட்டாலும்,

அன்றைக்கு முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் பாக்கியுள்ள எல்லாக் கட்சிகளும் வாதாடி, நீங்கள் கொண்டுவரும் இந்தக் கறுப்புச் சட்டம் தவறான சட்டம், அது தேவையில்லை; நாடு கடத்தப்படுகின்ற அந்தச் சட்டம், ஊரைவிட்டு ஓட்டுகின்ற சட்டம் தேவையில்லை என்று சொன்னபோது, பிடிவாதமாக இருந்தது இந்த அரசுதான். இப்படி இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்குக் காரணம் "தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக' என்று முதல்வர் அவர்கள் விளக்கம் கூறினார்கள். பின்னர் ரூ. 25 கொடுத்துவிட்டு யார் வேண்டுமானாலும் 'லைசன்ஸ்' பெறலாம் என்று வந்தபோது, அப்போதும் 'தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக' என்று சொன்னார்கள். ஆனால் இப்போது எங்களுடைய அபிப்பிராயத்தை, 'மனம் திறந்து பேசுங்கள்' என்று கேட்கிறார்கள். மனம் திறந்து பேச என்ன இருக்கிறது? மதுவிலக்கை ரத்து செய்யலாம் என்று கருதுகிறீர்களா? நான் கேட்கிறேன். இன்னும் ரத்து செய்ய என்ன இருக்கிறது? கிட்டத்தட்ட எங்கு பார்த்தாலும் சாராயம் பெருக்கெடுத்து ஓடும் காட்சியை தமிழ்நாட்டின் தெருக்களிலே பார்க்க முடிகின்றது.

இந்தச் சமயத்திலே பட்டினப் பாலை நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது. சோழ நாட்டு வளத்தைக் கூறுவதற்காக 'வடித்த சோற்றுக் கஞ்சி தெருக்களிலே எல்லாம் ஓடிற்று' என்று பட்டினப் பாலையிலே படித்ததாக நினைவு. நாவலர் அவர்களுக்கு அந்தப் பாட்டே நினைவிலே இருக்கும். ஏனென்றால், நான் 10வது படித்தவன்தான். அவர்கள் நிரம்பப் படித்தவர்கள்; எனவே, அதிகமாக நினைவிருக்கும். அப்படிப் பட்டினப் பாலையிலே 'வடித்த சோற்றுக் கஞ்சி தெருக்களிலே எல்லாம் ஓடியதைப் போல, தமிழகத்திலே இன்று சாராயம், கள்ளச் சாராயம் தெருக்களிலே பெருக்கெடுத்து ஓடுகின்ற காட்சியைக் காண்கிறோம். இந்த நேரத்திலே மதுவிலக்கை ரத்து செய்யலாம் அல்லது ரத்து செய்யலாமா என்கின்ற வகையிலே, மனம் திறந்து பேசுங்கள் என்று கூறுவது, எந்த வகையிலே பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. எனவே, இதை முதலமைச்சர் அவர்கள் கருத்திற்கே விட்டுவிடுகிறேன்.

இந்த ஆளுநர் அவர்கள் உரையின் எல்லாப் பக்கங்களையும், எல்லா வரிகளையும் நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். வழக்கமாக ஆளுநர் உரையிலேயும், நிதி நிலை அறிக்கையிலேயும் இந்த அரசு ஊழலற்ற அரசு, ஊழலற்ற நிர்வாகத்தை நடத்தி வருகின்றது என்ற செய்தி பெருமைபட பேசப்பட்டிருக்கும். ஆனால், இந்த உரையிலே மனச்சாட்சி உறுத்திய காரணத்தினாலேயோ என்னவோ அந்த வார்த்தைகள் இடம்பெறவில்லை. இந்த அரசின்மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவைகளில் இரண்டொன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மற்றவைகளை அடுத்தடுத்து வருகின்ற சட்டமன்ற நிகழ்ச்சிகளில், நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலே ஒன்று, பீ. டி. எஸ். என்ற பல் வைத்தியப் பட்டப் படிப்பு இருக்கிறது. இந்தப் பல்வைத்தியப் பட்டப் படிப்பிற்கு மொத்த இடங்கள் 40 என்று கேள்விப்படுகிறேன். அதிலே, இதுவரை நிரப்பப்பட்ட இடங்கள் 35 என்றும் காலியாக உள்ளவை 5 என்றும் கேள்விப்படுகிறேன். மொத்த 40 இடங்களில், தமிழ்நாட்டு கோட்டா தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தரவேண்டியது 34. மத்திய அரசு கோட்டா 1, எக்ஸ்-சர்வீஸ்மென்களுக்கு 1, வெளிநாட்டு மாணவருக்கு 1, தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட 34 இடங்களில், 4 இடங்கள் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது எனக்கு வந்துள்ள தகவலாகும்.

அவர்களுடைய பெயர்கள்கூட எனக்குத் தரப்பட்டுள்ளன. அந்த நான்கு பேரும் - 34 இடம் தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தரப்பட வேண்டிய இடத்தை எடுத்து வெளிமாநில மாணவர்களுக்குத் தந்துள்ள இடம். - சுப்பிரியா பூஞ்சா, ரிஜிஸ்டர் நம்பர் 31; ராமநாத குருப்பிரசாத், ரிஜிஸ்டர் நம்பர் 195; அன்னு கோஷி, ரிஜிஸ்டர் நம்பர் 91; மொய்தீன் ஹசானா ரிஜிஸ்டர் நம்பர் 3033. இதிலே சுப்பிரியா பூஞ்சா என்ற மாணவர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். அவர் சென்னையில் இருப்பதாக முகவரியிட்டு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். இவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல். அடுத்து, மொய்தீன் ஹசானா என்பவரும் அன்னு கோஷி என்பவரும்

கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். அடுத்து, பம்பாயைச் சேர்ந்த பிரபல கிளாஸ்கோ கம்பெனி அதிபர் ஒருவருடைய மகன் ராமநாத் குருப்பிரசாத் - 20 ஆண்டுகளாக பம்பாயிலே வசிப்பவர், ஈரோடு, கோபிச் செட்டிப்பாளையத்தில் இருப்பதாகக் கொடுத்து விண்ணப்பம் செய்திருக்கிறார். அவருக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தகவல். இதிலே, ராமநாத் குருப்பிரசாத், அன்னுகோஷி, மொய்தீன் ஹசானா ஆகிய மூவரும் வெயிட்டிங் லிஸ்டில் இருந்து சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தகவல். இது உண்மையாக இருக்குமானால் இது மிகப் பெரிய முறைகேடு என்பதை இந்த அவையில் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த அரசுத் தமிழ் பண்பாட்டு மையம் என்ற ஒரு அமைப்பை 1978 ஆம் ஆண்டு ஏற்படுத்தி அதற்கு மொழிபெயர்ப்புத் துறையில் இருந்த ஒருவரை - டிரான்ஸ்லேஷன் டிப்பார்ட்மென்ட் - அதிலிருந்த ஒருவரை இயக்குநராகவும் நியமித்தது. அரசு கல்வித்துறை மூலமாக ஆணை எண். 393, 13-3-1979-ன்படி 5,03,624 ரூபாய்க்கு ஒரு 'செக்' காசோலை வழங்கியதன் பேரில் இயக்குநர் அந்தத் தொகையை வாங்கி சிண்டிகேட் வங்கியில் டெபாசிட் செய்தார். ஆனால் இதுநாள் வரை அந்தத் தொகைக்கானச் செலவினங்கள் பில்கள் மூலமோ, வவுச்சர்கள் மூலமோ சரி செய்யப்படவில்லை. எதற்காகத் தொகை ஒதுக்கப்பட்டதோ அந்தக் காரணங்களுக்காகத் தொகை செலவழிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. வங்கியிலிருந்து எந்தக் காரணமும் இல்லாமல் 14-3-1979 அன்று இருபதாயிரம் ரூபாயும் 31-3-1979 அன்று ஐம்பதாயிரம் ரூபாயும் அந்தத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் இயக்குநர் வாங்கியிருக்கிறார். வீடியோ டேப் ரெக்கார்டர் வாங்குவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் எடுத்து அண்ணா சாலை அன்சா கம்பெனியில் 96,000 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு அதற்குண்டான ரசீதையும் பெற்றுக்கொண்டிருக்கிறார். பிறகு இரண்டு மாதங்கள் கழித்து அதே கம்பெனி இவருக்கு இருபதாயிரம் ரூபாய்க்கான 'செக் ஒன்றைத் தந்திருக்கிறது. மேலும் இவர் அந்தக் கருவியை திரு. அஜீத் குமார் என்பவரிடமிருந்து வாங்கியது போலவும் அதன் விலை 1,40,000 ரூபாய் என்பது

போலவும் பேப்பர்களைத் தயார் செய்திருக்கிறார். இதன்மூலம் மாத்திரம் நாற்பதாயிரத்திற்கு மேல் இயக்குநர் ஊழல் செய்திருப்பதாகத் தெரிகிறது.

இதிலுள்ள அருங்காட்சியகத்திற்கு வாங்க வேண்டிய பொருள்கள் பற்றி முடிவு எடுப்பதற்காக நான்கு பேர்கள் கொண்ட குழு ஒன்று இருந்தபோதிலும் அவர்களுக்குத் தெரியாமல் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் தவறான வவுச்சர்களைத் தயார் செய்து இயக்குநர் பொருள்களை வாங்கியிருக்கிறார். அலுவலகத்திற்கு என்று வாங்கிய பொருள்களை எல்லாம் இயக்குநர் வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிட்டார் என்ற புகார் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட புகார்கள் அடங்கிய மனு ஒன்றின்மீது முன்னாள் நிதித்துறைச் செயலாளர் - பெயர் சொல்லுவதில் தவறு இல்லையென்று கருதுகிறேன் - முன்னாள் நிதித்துறைச் செயலாளர் திரு. கே. வெங்கடேசன் அவர்கள் 1-2-1980 ஆம் தேதியன்று ஒரு குறிப்பை எழுதி கல்வித்துறைச் செயலாளர் பார்வைக்கு இந்தப் புகார்களை எல்லாம் தொகுத்து அனுப்புகிறார். கல்வித் துறை சம்பந்தப்பட்ட கோப்பில் தன்னுடைய தெளிவான கருத்தைத் தெரிவிக்கிறது - என்ன கருத்து ? 'முன்னாள் கல்வித் துறைச் செயலாளர், மையம் சரியான பாதையில் நன்றாகச் செயல்பட வேண்டி இயக்குநருக்கு யோசனை கூறி வழிகாட்ட எவ்வளவோ முயன்றும், அவருக்கு மையத்தை எங்ஙனம் நடத்திச் செல்லவேண்டுமென்ற சரியான நோக்கமே புலப்படவில்லை. எல்லாவற்றையும் விட அடிப்படையான நிர்வாக விஷயங்களை, நிதி, செலவு, விதிமுறைகள், கோட்பாடுகள் ஆகியவையும் தனக்குக் கொஞ்சமும் ஒத்துவராது போன்று அவற்றுக்கு விரோத மனப்பான்மையை அவர் காட்டி நடந்துவருவது அஞ்சத்தக்கதாக உள்ளது. மொத்தத்தில் அவர் அப்பதவிக்கு முற்றிலும் பொருத்தமற்றவராக இருக்கிறார். இவ்வாறு கல்வித் துறை குறிப்பு எழுதுகிறது. அது மாத்திரமல்ல. அரசு ஆணை எண் 1849 நாள் 13-10-1978-ன் படி இயக்குநர் ஓராண்டு காலத்திற்குத்தான் பதவி வகிக்க இயலும். அதற்குப் பிறகு 16-10-1979-ல் இந்தப் பதவியை நீடித்து அரசு ஆணை பிறப்பித்திருக்க வேண்டும். அப்படி ஆணை பிறப்பிக்கப்படவே இல்லை. எனவே அரசாணை இல்லாமல் பதவி சாங்ஷன் செய்யப்படாமல் இவர் இந்தப் பதவியில் தொடர்ந்து இருந்திருக்கிறார். இந்த அரசு செய்த மிகப்

பெரிய தவறு இது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அவர் செய்த தவறுகளின் காரணமாக அவரை தாய்த் துறைக்கு - 'பேரன்ட் டிப்பார்ட்மெண்டிற்கு' - மொழி பெயர்ப்பு இயக்குநராகவே திருப்பி அனுப்ப முடிவுசெய்து அரசு ஆணை பிறப்பிக்கிறது. இந்த ஆணையை மீறி அந்த இயக்குநர் கோர்ட்டிற்குச் சென்று இடைக்காலத் தடை வாங்குகிறார். அரசு மேல் முறையீடு செய்து இடைக்கால தடை உத்திரவை நீக்கச் செய்கிறது. மேலும் இயக்குநர் ஒருமாத காலத்திற்குள் தமது பொறுப்புக்களையும் கணக்குகளையும் ஒப்படைக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றமே உத்திரவிடுகிறது. ஒரு மாத காலம் 31-5-1980 உடன் முடிகிறது. அதற்குள் அவர் பொறுப்புக்களை ஒப்படைக்கவில்லை. நீதி மன்றத்திலே வழக்கு இன்னும் முடிவு செய்யப்படவில்லை. சட்டத்துறைக்கு கோப்பு அனுப்பப்பட்ட பொழுது அவரை தாய்த் துறைக்குத் திரும்ப அனுப்பினாலும் கூட கூறப்பட்டுள்ள குறைகளின்பேரில் அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர முடியும். அவரை மீண்டும் இயக்குநராக நியமித்து ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான யோசனையோ அல்லது மையத்திற்குப் புதிய இயக்குநர் ஒருவரை நியமிப்பதற்கான யோசனையோ நிறைவேற்றுவதற்கும்கூட சட்டப்படி ஆட்சேபணை இல்லை. அதாவது நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிற காரணத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கலாம். ஆட்சேபணையில்லை என்பதாக சட்டத்துறை குறிப்பு எழுதுகிறது. இது முற்றிலும் நிர்வாகத் துறையில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை. நிறுத்தி வைப்பு ஆணை ரத்து செய்யப்பட்டுவிட்டதால் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள மூன்று யோசனைகளில் எந்த ஒன்றையும் நிறைவேற்றுவதற்காக உயர்நீதி மன்றத்தின் முன் நீதிப் பேராணை மனு நடப்பில் இருப்பது ஒரு தடையாகாது என்று சட்டத்துறை கருத்து அறிவிக்கிறது. நடவடிக்கை எடுப்பதால் தவறு இல்லை என்று சொல்கிறது. நிர்வாகத் துறை எடுக்கிற நடவடிக்கையிலே அந்த வழக்கு குறுக்கிடாது என்று கூறுகிறது. இதையெல்லாம் அலசி ஆராய்ந்து தலைமைச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கும்போது அவரை, அந்த இயக்குநரை தன் சொந்த இலாகாவிற்குத் திருப்பி

அனுப்பிவிட்டு, மொழி பெயர்ப்புத் துறைக்குத் திருப்பியனுப்பி விட்டு அவர் செய்துள்ள தவறுக்காக அவர்மீது இலாகாபூர்வமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று 2-1-1981 அன்று தலைமைச் செயலாளர் கருத்து எழுதுகிறார். கோப்பு கல்வித்துறைக்கு அனுப்பப்படுகிறது. கல்வியமைச்சர் என்ன எழுதுகிறார் என்றால் தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநராகவே அவரை நீடிக்க அனுமதித்துவிட்டு - இவ்வளவு தவறுகளைச் செய்தவரை, நீதிமன்றம் வரையிலும் சென்ற ஒருவரை, சட்டத்துறையிலே கருத்துப் பெற்ற பிறகு, தலைமைச் செயலாளர் சொந்த இலாகாவுக்கு பேரன்ட் டிபார்ட்மென்டிற்கு அவரை அனுப்பிவிடலாம், அவர்மீது இலாகா பூர்வமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று எழுதிவிட்ட பிறகு, கல்வியமைச்சர் எழுதுகிற குறிப்பிலே தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநராக நீடிக்க அவரை அனுமதித்துவிட்டு - குறைகள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று 12-1-1981 இல் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் ஊழல் புரிவோர்களின், குற்றம் செய்வோர்களின் . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது குறுக்கிடுவதற்குப் பொறுத்தருள வேண்டுகிறேன். குறிப்பாக நான் எழுப்புவது ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகும். அமைச்சரவைக்கு அல்லது அரசுத் துறைச் செயலாளர்களிடையே கோப்புகள் பரிமாறப்படுவதிலே இரண்டு வகைக் குறிப்புகள் உண்டு. ஒன்று கரன்ட் பைல், இன்னொன்றை நோட் பைல் என்பார்கள். ஒரு செயலாளரோ அல்லது அமைச்சரோ எழுதுகிற குறிப்புகள் நோட் பைல் என்பதாகும். ஆணையிடப்படுகிற அந்த விவரங்கள் கரன்ட் பைல் என்பதிலே வரும். அரசாங்க இரகசியங்களை பாதுகாக்கிற சட்டம் என்ற சொல்லுகிறபோது நோட் பைலிலே இருக்கிற விவரங்கள் அபிஷியல் சீக்ரட்ஸ் ஆக்டின் கீழே வரும். அப்படியிருக்கிற போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில விவரங்களைச் சொல்கிறார்கள். அதைப்பற்றித் தங்களிடம் சொன்னாரா ? அல்லது நோட் பைலைக் காட்டினாரா நோட் பைலிலே உள்ளது எப்படி எதிர்க்கட்சித் தலைவரிடத்திலே வந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவருக்கு அது எப்படிக் கிடைத்தது என்று என்னிடம் கேட்டுப் பயனில்லை.

Hon. Thiru S. Ramachandran : The Point is the Hon. Leader of the Opposition is quoting.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த தகவல் எப்படிக் கிடைத்தது என்று அவர் என்னிடம் சொல்லவேண்டிய தில்லை.

Hon. Thiru S. Ramachandran : This is very important. The Hon. Leader of the Opposition is quoting from the Note File. Note File is a secret thing. When such is the case how can the Leader of the Opposition have access to this file ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரகசியம் வெளியே போகாது பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவரிடம் இருப்பது சரியா என்று பார்க்க வேண்டியது நம்முடைய கடமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் பார்க்கலாம், கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பார்ப்பதற்கு முன்னால் இங்கே எப்படிப் பேசலாம் ? நாளைக்கு அது சரியில்லை என்று ஆகிவிட்டது என்றால். . .

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அடுத்து இன்னொன்று. அதிகாரிகள் சில தனிப்பட்ட அறக்கட்டளை களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தயவு செய்து கல்வியமைச்சர் எழுதிய அந்தக் குறிப்பை இங்கே படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தலைமைச் செயலாளர் எழுதியது, இவரைத் தன் சொந்த இலாகாவுக்குத்

திருப்பி அனுப்பிவிட்டு இவர் செய்துள்ள தவறுகளுக்காக அவர் மீது இலாகா பூர்வமாக நடவடிக்கை தொடரலாம். இது 2-1-1981. கல்வியமைச்சர் எழுதியது, தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநராக நீடிக்க அனுமதித்துவிட்டு குறைகள் மீது நடவடிக்கை எடுக்கலாம். இது 12-1-1981.

அடுத்து, சில அறக்கட்டளைகளுக்கு அதிகாரிகள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றார்கள். வசூல் செய்வதற்காக என்பது என்னுடைய குற்றச்சாட்டு. சத்யா எஜூகேஷனல் டிரஸ்ட் என்ற பெயரால் ஒரு டிரஸ்ட். நான் அந்தப் பெயருக்குரியவர்களிடத்தில் அதிக மரியாதை உள்ளவன், மதிப்புள்ளவன், அன்புள்ளவன், பாசம் உள்ளவன். எப்படி நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு என்னுடைய அன்னையாரிடத்திலே அன்பும் பாசமும் உண்டோ அதுபோல உள்ளவன்.

ஆனால், சத்யா எஜூகேஷனல் டிரஸ்ட் என்ற பெயரால் மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமும், பொதுப்பணித்துறை, வணிகவரித்துறை, உணவு வழங்குதுறை அதிகாரிகள் மூலமும், ஆங்காங்கு இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் இவைகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. நுழைவுக் கட்டணச் சீட்டுக்கள் 100 ரூபாய், 250 ரூபாய், 500 ரூபாய் என்றெல்லாம் அச்சடிக்கப்பட்டு வியாபாரிகள் நிர்ப்பந்திக்கப்பட் டிருக்கிறார்கள். அப்படி நிதி கொடுக்க விரும்பாத வியாபாரிகளுடைய கடைகள் சோதனை செய்யப்பட்டிருக்கின்றன திருச்சியிலே உள்ள, வியாபாரிகள் சங்கத்தினுடைய தலைவர், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பர், அவரிடத்திலே 2,000 ரூபாய் தரவேண்டுமென்று கேட்டு. . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் படிக்கின்ற குறிப்பு உங்களுக்கு முன்னதாகவே காண்பிக்கப்பட்டதா ? எனக்கு நோட்டீஸ் அனுப்பப்படவில்லை. பதில் நாங்கள் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசி முடிந்தவுடன் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவ ரவர்களே, என்னுடைய கேள்வி, முன்னறிவிப்பு இல்லாமல், நாங்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்புத் தராமல் இப்படி இங்கே படிப்பது சரிதானா? அது சட்டப்படி முறையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் குறிப்பாகத்தான் சொல்கிறேன், எந்த ஆதாரத்தையும் காட்டவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வியாபாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த வியாபாரி என்று சொன்னால் பரவாயில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : திருச்சியிலே, ஞானராஜ் என்ற வியாபாரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஞானராஜை இந்தக் குழுவே பார்க்கவில்லை. நான் அதற்காகத்தான் சொல்கிறேன், அந்த குழு அவரைச் சந்திக்கவே இல்லை. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்கிறபொழுது என்னிடத்தில் காட்டினால் நானே சொல்லியிருப்பேன், ஞானராஜுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை.

கலைஞர் மு. கருணாநிதி : நான் குழுவையே சொல்லவில்லை குழு போய் வற்புறுத்தியதாகச் சொல்லவில்லை. குழுவின் சார்பாக அதிகாரிகள் வற்புறுத்தி இருக்கின்றார்கள். அதைத்தான் சொல்கிறேன். ஞானராஜ் என்னிடத்திலே சொன்னார், என்னிடத்திலே வந்து முறையிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஞானராஜ் ஊரிலேயே இல்லை. அதைப்பற்றி விவாதம் தனியாக வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்வது ஒவ்வொருவரும் எழுந்து என்னிடம் சொன்னார்கள், என்னிடம் சொன்னார்கள் என்று சொல்லிக்கொண்டே இருந்தால் இதற்கு என்ன முடிவு என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. (குறுக்கீடு).

ஏதாவது சொல்ல வேண்டுமென்று விரும்புகின்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச வேண்டும். அல்லது அவர்களுடைய தலைவரிடத்தில் சொல்லிச் சொல்லட்டும். உட்கார்ந்து கொண்டே பேசுவது மரபு இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சத்யா அறக்கட்டளை பற்றி என்னிடத்திலே காட்டிவிட்டு இன்னார்தான் என்று சொல்லியிருந்தால் நானே சொல்லியிருப்பேன். அதைத் தவிர மீதியெல்லாம் பேசுங்கள்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எல்லாக் குற்றச்சாட்டுகளையும் முன்னாலேயே சொல்லிவிட்டு, முதல் நாள் ஒத்திகை பார்த்துவிட்டு மறுநாள் சட்டசபைக்குக் கொண்டுவர முடியாது. முதல் நாள் ஒத்திகை பார்த்துவிட்டு மறுநாள் சட்டசபைக்கு வர முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திகை பார்க்க வேண்டுமென்று நான் சொல்லவே இல்லை. சில பிரச்னைகள் இருக்கும்பொழுது அது சம்பந்தமாக ஆளுங்கட்சியும் தயார் செய்துகொள்ள வேண்டுமல்லவா ? (கூச்சல், குழப்பம்)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இன்றைக்குச் சொன்னால், நாளைக்குப் பதில் சொல்லுங்கள். உங்களிடம் எப்படிக் காட்ட முடியும் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலே இருக்கிற நாங்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்பது தப்பா ?

Thiru V. Krishnamurthi : Hon. Chief Minister can take his own time to reply.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிக் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டே இருப்பதும் உங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும்

நேரம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதும், வெளியிலே போய் வாய்தா கேட்கிறேன் என்று சொல்வதும், அது நாகரீகமான பண்பாடல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதிகாரிகள் துஷ்பிரயோகம் என்பதைத்தான் முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவந்தேன். அதை அவர்கள் விசாரித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவும், அது அவருடைய நன்மைக்காகவும் - ஒரு எஜுக்கேஷனல் டிரஸ்டுக்கு அதிகாரிகள் மற்றவர்களைத் துன்பப்படுத்தி இருக்கிறார்கள் என்பது பரவலாக, பல இடங்களில் நடைபெற்றிருக்கிற விவகாரமாக இருப்பதால், அதை முதலமைச்சரே விசாரித்து தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்தப் பிரச்னையை இந்த அளவோடு நான் நிறுத்துகிறேன்.

அடுத்து ஒன்று. நம்முடைய மாநிலத்தில், ஏன் நாடு முழுவதும் மிகப் பரவலாக பேசப்படுகின்ற எரி சாராய ஊழல்பற்றி சில விவரங்களை நான் இங்கே தர விரும்புகிறேன். பல கோடி ரூபாய்க்கு எரி சாராயத்திலே ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற செய்திகள் நாள்தோறும் வந்தவண்ணம் இருக்கின்றன. அதை ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலாக - அந்தத் தகவலைக் கண்டுபிடித்து, அதை - வெளியிட்டு, அந்த ஊழல் புகாரை மக்கள் முன்னால் வைத்தது என்பதைவிட தமிழ்நாட்டிலே உள்ள பத்திரிகைகள், கேரளாவிலே உள்ள பத்திரிகைகள், இவைகளில் எல்லாம் அந்தச் செய்திகள் மிகப் பெரிய அளவிலே வெளியிடப்பட்டு, அதற்குப் பிறகு, தமிழகத்திலே உள்ள ஒரு தலையாய எதிர்க்கட்சி என்ற முறையில், அதைப்பற்றி ஆராய்ந்து எங்களுடைய கருத்துக்களை நாங்கள் எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி இருக்கிறோம். ஏதோ, இந்தப் பலகோடி ரூபாய் எரி சாராய ஊழல் திடீரென்று மின்னல் போல நடைபெற்று விடவில்லை.

என்னுடைய நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே வெளி மாநிலங்களுக்கு எரிசாராயத்தை அனுப்பும்பொழுது ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை அனுப்பத் தேவையில்லையென்று நீக்கப்பட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள், நான்கூட எண்ணினேன்,

அப்படியும் நீக்கியிருப்பார்களா என்று எண்ணினேன். ஆனால், நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆதாரம் இல்லாமல் அதைப் பேசவில்லையென்பதை நான் புரிந்துகொண்டேன். எரிசாராயத் தயாரிப்பாளர்கள் அரசாங்கத்திடத்திலே ஒரு முறையீட்டை வைக்கிறார்கள். எப்பொழுது ? 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் 8-6-1979-ல் என்ன முறையீடு ? அந்த முறையீட்டின் அடிப்படையிலே பிறப்பிக்கப்பட்ட ஆணை என்ன ? முறையீடு ஜூன் 8 ஆம் தேதி, அந்த முறையீட்டின் அடிப்படையிலே பிரகடனப்படுத்தப்பட்ட ஆணை, ஜூன் 26 ஆம் தேதி 8-6-1979-ல் எரி சாராயத் தொழில் அதிபர்கள் வைத்த முறையீட்டை அரசு அவசரம், அவசரமாகக் கவனித்து, 26-6-1979-ல் ஆணை பிறப்பித்திருக்கிறது.

During the distillers meeting held at the Chambers of the Commissioner, P. & E. Prohibition and Excise, Madras, the Distillers pleaded that it was difficult to secure the presence of the Police escort and the Revenue Inspector together at the time lorries were available for inter State transport and it causes practical difficulties.

இப்படித் தெரிவிக்கிறார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரையும் போலீசாரையும் வெளி மாநிலங்களுக்கு, எரி சாராயத்தை அனுப்பும்பொழுது, லாரிகளில் அழைத்துச் சொல்வது இயலாததாக இருக்கிறது என்று எரி சாராயத் தொழில் அதிபர்கள் மது விலக்கு கலால் அதிகாரிகளிடத்திலே தங்களுடைய முறையீட்டைச் சொல்கிறார்கள். உடனடியாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலே,

The Board has examined the above request of the Distillers and hereby orders that the system of providing Revenue Escorts be withdrawn. Police escorts alone need accompany the consignments which are transported outside the State. Collectors Thiruchirappalli, Coimbatore and South Arcot are therefore requested to stop deputing Revenue Inspectors to accompany the consignments of alcohol to other States and to report compliance by return of post on the disbandment of the posts of Revenue Inspectors wherever special sanction to the posts exist.

அதாவது, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிற எரி சாராயத்தோடு ரெவின்யூ இன்ஸ்பெக்டரையும், அனுப்புவது சம்பந்தமாக எரி சாராயத் தொழில் அதிபர்கள் முறையிட்டதன் பேரில் ரெவின்யூ அதிகாரிகள் எரி சாராய வண்டிகளுடன் அனுப்பப்படுவதைத் திரும்பப் பெற்றுக்கொள்வது என்றும், போலீசார் மட்டும் உடன் சென்றால் போதும் என்றும் திருச்சி, கோவை, தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மற்ற மாநிலங்களுக்கு எரி சாராயம் செல்லும்போது, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நிறுத்திவிட வேண்டுமென்றும் அதற்காக என்று இருக்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பதவிகளை நீக்கிவிட வேண்டு மென்றும் ஆணை பிறப்பித்திருக்கிறது.

எவ்வளவு தாராளம் பாருங்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் களை எரி சாராய வண்டிகளோடு வெளி மாநிலங்களுக்கு சாராயம் எடுத்துச் செல்லும்போது, அனுப்பத் தேவையில்லை என்று தொழிலதிபர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க - வேறு எந்தப் பிரச்சினைக்கும் காட்டாத ஆர்வம், அக்கறை, அவசரமும் காட்டப்பட்டு - உடனடியாக அந்தப் பதவிகளையே கேன்சல் செய்து, அவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இது எரி சாராய அதிபர்களுக்கு மிகத் தோதான உத்தரவாகப் போடப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய முதல் குற்றச்சாட்டு.

அடுத்து மதுவிலக்குக் கலால் துறை, புரொகிபிஷன் அண்டு எக்சைஸ் டிபுடி கமிஷனர் இருக்கிறாரே அவர் ஒரு ஆணை பிறப்பிக்கிறார். அந்த ஆணை என். பி. 6642/80 படி ஜூலை 4, 1980 லிருந்து எரி சாராயம் வெளி மாநிலங்களுக்குச் செல்வது தடுக்கப்படுகிறது. சாராயம் வெளி மாநிலங்களுக்கு ஜூலை 4, 1980 முதல் செல்வது தடுக்கப்படுகிறது என்று உத்தரவு. தடை போடப்படுகிறது. இப்படித் தடை போடப்பட்டதன் நோக்கம் என்ன ? தடை போட்டால் ஏற்றுமதியாளர்கள் தங்களை அணுகுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்த்தபடியே நடக்கிறது. அவர்கள் அணுகுகிறார்கள். அதனுடைய விளைவு, அதே புரொகிபிஷன் அண்ட் எக்சைஸ் டெபுடி கமிஷனர் ஆகஸ்டு 28, 1980-ல் ஆணையிடுகிறார். அதாவது ஜூலை, மாதம்

தடை, ஆகஸ்டு 28-ந் தேதி ஒரு ஆணை. 'வெரி அர்ஜன்ட்' - சாதாரண அர்ஜன்ட் கூட அல்ல - வெரி அர்ஜன்ட்.

The Board has since relaxed the ban on the export of Alcohol to other States and has commenced issue of Permits to export.

அதாவது, ஜூலை 1980-ல் தடை. ஆகஸ்டிலே தடை நீக்கப்படுகிறது. இப்படித் தடை போடுவதும், நீக்குவதும் இந்த அரசிலே வாராந்திர விழாக்களாக மாறி காட்சி அளித்துக்கொண் டிருக்கின்றன. ஆகஸ்ட் இறுதியிலே தடை நீக்கம். செப்டம்பர் மாதத்திலே யார் யாருக்குக் கொடுத்தார்களோ தெரியாது எனக்கு. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் தென்னிந்திய வர்த்தக சபையிலே அக்டோபரிலே பேசுகிறார். ஜூலையில் தடை, ஆகஸ்டிலே தடை நீக்கம், அக்டோபரிலே தென்னிந்திய வர்த்தக சபையிலே, சேம்பர் ஆப் காமர்ஸிலே அக்டோபர் 12-ந் தேதி பேசும்போது குறிப்பிடுகிறார்கள். அவருடைய பேச்சு பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. என்ன அது? "தமிழ் நாட்டிலேயிருந்து 10 இலட்சம் லிட்டர் எரி சாராயம் வேறு மாநிலத்திற்கு அனுமதி கொடுத்தால், மேலும் 5 இலட்சம் லிட்டர் எரி சாராயத்தை அனுப்பினால் எப்படி? பிளாக்கில் பணம் வாங்கிக்கொண்டு இப்படிச் செய்தால் அது எப்படி நியாயமாகும். இப்படிப்பட்டவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுத்து மக்கள் மத்தியிலே கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன். அவ்வளவு எச்சரிக்கை இல்லாமலா அவர்கள் தொழிலைச் செய்கிறார்கள்" - ஆமாம், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையே மாற்றியாகிவிட்டதே - அவ்வளவு எச்சரிக்கை இல்லாமலா இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். "எவ்வளவு அனுமதி தரப்படுகிறதோ அவ்வளவு அனுப்புங்கள். 10 இலட்சம் அனுமதி கொடுத்தால் 20 இலட்சம் அனுப்புவது நிச்சயமாக நாட்டுக்குச் செய்யும் நல்லதல்ல" என்று முதலமைச்சர் அவர்கள் சேம்பர் ஆப் காமர்சில் பேசுகிறார். மறந்துவிடக்கூடாது. ஜூலையிலே தடை. ஆகஸ்டிலே தடை நீக்கம். அக்டோபர் 12-ந் தேதி பேசுகிறார், 10 இலட்சம் லிட்டர் அனுமதி கொடுத்தால் 15 இலட்சம் லிட்டர் எடுத்துப் போய்விட்டார்கள் என்று.

அப்படிப் பேசிய பேச்சு, உள்ளபடியே ஒரு நேர்மையான நாணயமான நிலையை அரசுக்கு உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலே பேசப்பட்டிருக்குமானால், அப்படிக் கடத்திச்சென்ற நபர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இதுவரையில் அந்த நபர்கள் யார் என்றாவது கூறப்பட்டதா, அந்த நடவடிக்கை என்ன என்றாவது விளக்கப்பட்டதா? அது மாத்திரம் அல்ல. இதேபோல பல பேர்களுக்குத் தொடர்ந்து கேரள மன்னம் கோவாபரேடிவ் சுகர்ஸ் அண்டு டிஸ்டிலரிஸ்-க்கு 9.96 இலட்சம் அனுப்பியது மாத்திரமல்ல, கேரளாவில் மெக்டோல் கம்பெனிக்கு - அது தனியார் கம்பெனி - 10 இலட்சம் லிட்டர் எடுத்துச் செல்லவும் அனுமதி தரப்பட்டது. இப்படிப் பல தனியார் கம்பெனிகளுக்கு, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அத்தியாவசியமான மருந்து போன்றவைகள் தயாரிப்பதற்குத் தேவையான எரி சாராயம் பிற மாநிலங்களுக்குத் தரப்படாமல், மது வகைகள் தயாரிப்பதற்குப் பிற மாநிலத் தனியார்களுக்குத் தரப்பட்டது.

நான் ஒன்றை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் உள்ள 'கெம்பிளாஸ்ட்' (கெமிகல்ஸ் அன்ட் பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட்) மேனேஜிங் டைரக்டர், திரு. என். சங்கரன் அவர்கள் ஒரு கருத்தரங்கில் பேசும்போது குறிப்பிடுகிறார்.

CHEMPLAST - Managing Director, Mr. N. Sankar has stated :

"The PVC Plant in the State was facing closure due to reduced availability of Industrial Alcohol"

அதாவது, தன்னுடைய தொழிற்சாலை மூடவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானதற்குக் காரணம் அதனுடைய தேவைக்குரிய இன்டஸ்ரியல் ஆல்கஹால் அதற்குத் தரப்படாததே என்று இங்கே இருக்கும் மேனேஜிங் டைரக்டர் - கெம்பிளாஸ்ட் சங்கர் பேசுகிறார்.

ஆனால் அத்தியாவசியமான மருந்துப் பொருள்கள் போன்றவற்றைத் தயாரிக்கவும், தமிழ் நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் உள்ள பற்றாக்குறையை நிவர்த்திக்கவும்

முயற்சி எடுத்துக்கொள்ளாத அரசு மது வகைகள் தயாரிப்பதற்காக பிற மாநிலங்களுக்கு எரிசாராயத்தை அனுப்புவதற்குத் தடைபோடுவதும், தடை நீக்குவதும், மறுபடியும் தடையைப் போடுவதும், மறுபடியும் தடையை நீக்குவதுமான இந்த வாராந்திர விழாக்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

மத்திய அரசில் மொலாசிஸ் போர்ட் என்று ஒன்று இருக்கிறது. அந்த 'போர்ட்' நாடு முழுவதிலும் எந்தெந்த மாநிலத்தில் உபரி எரி சாராயம் இருக்கிறது, எந்தெந்த மாநிலத்தில் எரி சாராயம் பற்றாக்குறையாக இருக்கிறது என்று கண்டறிந்து : தேவையான மாநிலங்களுக்கு உபரி மாநிலத்தில் இருந்து அங்கே அனுப்புங்கள் என்று சிபார்சு செய்யும். சிபார்சு செய்யும் உரிமைதான் அதற்கு உண்டே தவிர அனுப்புங்கள் என்று ஆணை பிறப்பிக்கும் உரிமை அந்த மத்திய மோலாசிஸ் போர்டுக்குக் கிடையாது. அப்படி சென்ற மோலாசிஸ் ஆண்டு - நவம்பர் டு நவம்பர், மோலாசிஸ் ஆண்டு என்று சொல்வார்கள் மருந்து தயாரிக்கும் காரியத்திற்காக ஆந்திர அரசுக்கு 60 இலட்சம் லிட்டர் எரி சாராயம் அனுப்புங்கள் என்று மோலாசிஸ் போர்ட் தமிழ் நாடு அரசுக்கு சிபார்சு செய்தது. ஆனால், இந்த அரசு கொடுத்தது 24 இலட்சம் லிட்டர் எரி சாராயம்தான். மீதி ஆந்திராவில் உள்ள தனி நபர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறதே அல்லாமல், ஆந்திர அரசுக்கு அனுப்புங்கள் என்று சொன்ன 60 இலட்சம் லிட்டர் அனுப்பப்படவில்லை, இதிலும் எல்லாத் தனியாருக்கும் கொடுத்தார்களா என்றால் இல்லை. இதோ ஒரு தனியார். அவருக்கு அவர்கள் கேட்டதை அவர் தரவில்லையோ என்னவோ எனக்குத் தெரியாது - இந்த அரசிலிருந்து என்ன பதில் எழுதுகிறார்கள் தெரியுமா ? அந்தத் தனியார் பெயர் -

Managing Director, M.L.R. Drinks Private Limited, 1476, White House, Palace Road, Kuppam, Andhra Pradesh.

அவர்களுக்கு இங்கே இருக்கிற

Joint Secretary to Government, Thiru Ramachandran, I.A.S.

அவர்கள் பதில் எழுதுகிறார்கள். அக்டோபர் மாதம் 15-ம் தேதி. அந்த பதிலில் சப்ஜெக்ட் போடுகிறபோது.

Subject : Prohibition and Excise - Allotment of Rectified spirit, silent spirit for manufacture of Rum liquor for supply to Defence Services - Regarding.

என்று போடுகிறார்கள். ராணுவ சர்வீசுக்கு ரம் தயாரிக்கத் தேவையான எரி சாராயம் கேட்டபோது, இங்கேயிருந்து அவருக்கு அனுப்பப்பட்ட பதில் :

"I am directed to state that the Government have not yet lifted the ban on the export of Alcohol to the other States and Foreign countries".

ஜூலையிலே தடை, ஆகஸ்ட் மாதத்திலே தடை நீக்கம். அக்டோபரிலே தடை என்று மறுபடியும் எழுதுகிறார்கள். சரி : இடையிலேதான் 10 இலட்சம் லிட்டர் கொடுத்ததற்கு 15 இலட்சம் லிட்டர் வேறு தனியாருக்குப் போய் இருக்கிறது. இதற்கடுத்து, ராணுவத்திற்கு ரம் தயாரிக்கின்ற அந்தக் காரியத்திற்காக வேண்டுமென்று தனியார் எழுதுகிறார்கள். அப்போது சொல்கிறார்கள் மீண்டும் தடை என்று. ஆகவே அதற்குப் பிறகுதான் மீண்டும் தடை அதாவது 15-1-1980-ல் எழுதிய பிறகுதான் மன்னத்திற்கும், அஹமத்கானுக்கும் இங்கே இருந்து எரி சாராயம் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

மத்திய மொலாசிஸ் போர்ட் சிபார்சுப்படி ஆந்திரா அரசுக்கு மருந்து தயாரிக்கத் தேவையான 60 இலட்சம் லிட்டர் தராமல், 25 இலட்சம் லிட்டர் தரப்படுகிறது. ராணுவத்தினர் சர்வீசுக்கு ரம் தயாரிக்க வேண்டும் என்று ஒரு தனியார் கம்பெனி கேட்கிறபோது தர மறுக்கிறார்கள். ஆனால் கேரளா மன்னம் சுகர்ஸ்க்கு கொடுக்கிறார்கள். அஹமத்கான் கும்பல் சென்னை வருகிறது. 5 நட்சத்திர ஓட்டல்களில் தங்குகிறது. பேரம் நடைபெறுகிறது. பல கோடி ரூபாய் ஊழலுக்கு வித்திடப்பட்டதே இந்தத் தமிழ் நாட்டிலேதான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். கேரள மாநிலத்தைப்பற்றிப் பேசப்பட்டாலும்கூட, இதற்கு வித்திட்ட மாநிலம் தமிழ்நாடுதான்.

அஹமத்கானுக்கு மட்டும் எப்படி பர்மிட் தரலாம். அந்த அஹமத்கான் இங்கேயுள்ள எக்சைஸ் அமைச்சரகத்திற்கு

எழுதியதாக ஒரு கடிதம் எல்லா மலையாளப் பத்திரிகைகளிலும் வெளிவந்து இருக்கிறது. நான் கடிதத்தைப் படிக்கப்போவது இல்லை. ஆனால் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பதைச் சொல்கிறேன். எரி சாராயக் கலையிலே நடுநாயகமாக விளங்கும் அஹமத்கான் என்ன குறிப்பிடுகிறார் என்றால் – 'தமிழ் நாடு அரசிடமிருந்து இந்தப் பர்மிட்டை வாங்குவதற்கு பகீரதப் பிரயத்தனமும், பெரும் அளவிற்குத் தொகையும் செலவழித்ததற்குப் பிறகுதான் இந்த எரி சாராயம் நமக்குக் கிடைத்தது என்பதை உங்கள் நினைவுக்குக் கொண்டுவருகிறேன்' என்று கேரள எக்சைஸ் துறை அமைச்சருக்கு அவர் எழுதுகிறார்.

ஒதுக்கீட்டை, அலாட்மென்டை பெறுவதற்கும் அவைகளை ஏற்ற லாரிகளை ஏற்பாடு செய்வதற்கும் ஒரு மிகப் பெரும் தொகையை நான் செலவு செய்திருக்கிறேன். ஆகவே எனக்கு அளிக்க வேண்டிய சலுகைகளை நீங்கள் அளிக்க வேண்டுமென்று அங்குள்ள அமைச்சர்களைக் கேட்கிறார் என்றால் செலவு இங்கே செய்திருக்கிறார்; அதிகப்படியாகச் செலவு செய்த விவரம், அரசாங்கத்திற்கு, அதிகாரிகளுக்கு செலவு செய்திருக்கிறேன் என்று அஹமத்கான் எழுதிய கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் தனியார் யார், யாரோ பிடிபடுகிறார்கள், இங்கேகூட லைசென்ஸ் ரத்து என்றெல்லாம் செய்தி வந்ததே தவிர எந்த பாக்டரிக்கு லைசென்ஸ் ரத்து என்கின்ற விவரங்கள் எதுவும் தெரியவில்லை. ஆனால் செய்திகள் வந்தவுடன், உடனேயே லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது என்று பத்திரிகையிலே செய்திகள் கொட்டை எழுத்திலே வந்தன. போலீசார் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள் என்று வந்தது. அவர்களுடைய நிலை என்ன ? அவர்கள்மீது என்ன விசாரணை ? உள்ளபடியே லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கிறதா என்ற விவரங்கள். எல்லாம் அவைக்கு அளிக்கப்படவேண்டிய விவரங்கள். யார் யாரையோ பிடிக்கிறார்கள். இதிலே கிளிகள் பிடிபடுகின்றன; புறாக்கள் பிடிபடுகின்றன; மயில்கள் பிடிபடுகின்றன. யார் யாரோ பிடிபடுகிறார்கள். ஏதோ வேடிக்கைக்காக சொல்லவில்லை. அன்றைக்குக்கூட இந்த அவையிலே பல மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

பல்கேரியா கப்பல் ஊழல் விவகாரத்தில் தொடர்பு பற்றி இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள்.* *

இப்படிப்பட்ட . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு உண்மையை வெளிக்குக் கொணர்வதற்காக ஆதாரங்களைச் சொல்வது அரசுக்கு உதவியாக இருக்கிறது என்றாலும் இங்கே பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறவர்களைப்பற்றி கடிதங்கள் வரும்போது, அதை காண்பித்து அவர்களிடமிருந்து பதிலைப்பெற்று இங்கே பதில் சொல்ல வாய்ப்புத்தந்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இப்படிப்பட்ட ஒரு பிரச்சனையை இங்கே எழுப்புவது சரிதானா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆதாரங்கள் இருக்கின்றன. உங்களிடத்திலே அவைகளைப்பற்றி சொல்லி விட்டுத்தான் இங்கே நான் பேசுகிறேன். எரி சாராயக் கடத்தல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே உறுப்பினர்களாக இல்லாதவர்களைப்பற்றிக் குறிப்பிடக்கூடாது என்பது ஏற்கனவே ஒரு மரபாக இருந்து வருகிறது. (குறுக்கீடுகள்). ஏனென்றால் அவர்களுக்கு தம்மீது சுமத்தப்பெற்ற குற்றச்சாட்டு களுக்குப் பதிலளிக்கும் வாய்ப்பு இந்த அவையில் இல்லை.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பல்கேரியா ஊழல் பற்றி குறிப்பிடும்போது * *

பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்களுடைய பெயரும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அவர்களுக்கு என்ன தொடர்பு என்பதுபற்றி பல்கேரியா ஊழல் பற்றி பேசும்போதே குறிப்பிட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தக் கடிதத்தினுடைய வாசகத்தை தயவுசெய்து இன்னொரு தடவை படித்தால் அதனுடைய நோக்கத்தை நீங்களே புரிந்துகொள்ளலாம்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, Reference is different from defamation

நீங்கள் வெளியிலே இருக்கிறவர்களைப்பற்றி டெபமேஷனோ அல்லது அவர்கள் மீது அவதூறோ சொல்வதை இந்த அவையிலே அனுமதிக்கப் போகிறீர்களா ? இந்த மாமன்றத்திலே உள்ளவரைப்பற்றி குறிப்பிடுவதில் தவறு இல்லை. ஆனால் வெளியில் உள்ளவர்கள் மீது இங்கே குற்றச்சாட்டு அவதூறு என்று கொண்டுவருவது நிச்சயமாக இந்த அவைக்கு ஏற்றது அல்ல.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே ஒரு லெட்டர் எழுதி, அந்த லெட்டரில் இந்த அரசாங்கத்திற்குத் தாம் செலவு செய்திருப்பதாக யாரோ தனி நபர் ஒருவர் அந்த அரசுக்கு எழுதியதாகச் சொல்கிறார்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள். அந்தக் கடிதம் அவரிடம் இருக்கிறதா ? அல்லது அந்தக் கடிதத்தின் நகல் இருக்கிறதா ? ஏதாவது பத்திரிகையில் வந்த செய்தியைப்பற்றிச் சொல்வதாக இருந்தால் பத்திரிகையில் வேண்டுமென்றுகூடச் சொல்லலாம். அதையெல்லாம் எப்படி ஆதாரமாகக் காட்ட முடியும் ? குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பதில் சொல்லட்டும். அது வேறு விவகாரம். இந்த அரசுக்குச் செலவு செய்தோம் என்று ஒருவர் கேரள அரசுக்கு அல்லது அமைச்சர்களுக்கு ஏதோ கடிதம் எழுதினார் என்று பத்திரிகையிலே செய்தி வந்தது என்று சொல்வதாக இருந்தால் அதற்கு என்ன ஆதாரம் ? அவர் எழுதிய கடிதம் இருக்கிறதா ? அல்லது அதன் நகல் இருக்கிறதா ? அல்லது கேரள அமைச்சர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்களா ? எப்படி ஆதாரம் வந்தது ? எப்படி அவர்கள் சொல்லலாம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் வந்ததைச் சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சொல்லும்போது அதற்கு பொறுப்பேற்றுக்கொண்டுதான் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தங்களிடம் அதைக் காண்பித்தாரா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகின்றவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டுதான் பேச வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவ ரவர்களே, தவறு நடந்தது என்று குற்றம் சாட்டுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு உரிமை இருக்கின்றது. அதற்கு நாங்கள் பதில் சொல்கிறோம். அது வேறு பிரச்சினை. ஆனால் இந்த அரசாங்கத்திற்குச் செலவு செய்திருக்கிறோம் என்று கேரள அமைச்சருக்கு ஒருவர் எழுதி இருக்கிறார் என்று சொல்கிறார்களே அந்தக் கடிதம் இருக்கிறதா ? அல்லது அப்படி எழுதியவர் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு எழுதி இருக்கிறாரா ? அந்தக் கடிதத்தின் நகல் இருக்கிறதா ?

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதற்கு நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய கருத்து இதுதான் : ஒருவர் தவறு செய்துவிட்டதாக, அதுவும் ஏதோ தான் பணம் செலவிட்டிருப்பதாக ஒத்துக்கொண்டு கடிதம் எழுதி இருப்பதாக ஒருவர் சொல்லி அதே நபர் இங்கே இருக்கின்ற ஒருவருக்கு 'நீங்கள் உதவி செய்ததற்கு நன்றி' என்று சொன்னது போன்ற வாசகங்களைச் சேர்த்து இங்கே படித்தால் அதனுடைய பொருள் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்தக் கடிதத்தைப் பொறுத்தவரையில் தங்களுடைய வீட்டு விழா நிகழ்ச்சிக்கு வந்தவர்களுக்கு இரண்டு பேருமாகக் கையெழுத்துப் போட்டு நன்றி தெரிவித்தார்கள். ஆகவே ஒரு குடும்பம் என்பதற்காகச் சொன்ன செய்தியே தவிர அதிலே ஒன்றும் குற்றச்சாட்டு இல்லை. அது ஒரு இன்டைரக்ட் ரெபரன்ஸ். அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவ ரவர்களே, கடிதம் வந்தது பற்றியும், பத்திரிகையிலே வந்தது பற்றியும் சொல்வார்கள் அல்லவா ? அதிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக்கொண்டு பேசுகிறோம் என்பதை உணர்ந்து பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே உங்களிடத்திலே ஆதாரங்கள் எல்லாம் காட்டிப் பேசப்போகிறேன் என்று சொன்னபோது பொறுப்பேற்றுக்கொண்டு தான் பேசுகிறேன் என்பதைச் சொல்லிவிட்டுத்தான் பேசுகிறேன். எரி சாராயக் கடத்தலை ஒட்டி மத்திய அரசின். . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்பிலே நான் குறுக்கிடவில்லை. ஒரே ஒரு விளக்கத்தைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். இங்கே அவர் படிக்கின்றபோது இந்த அவையிலே இல்லாதவரைப் பற்றிப் படித்ததற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் . . . (குறுக்கீடு) . . . மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உட்கார்ந்துகொண்டே பேசுகிறாரே, அது என்ன முறை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசக்கூடாது. பத்திரிகைகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி கருத்துக்களைச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, பத்திரிகைகளிலே அவரவர்களுடைய கருத்தை எழுதலாம். ஆகவே பத்திரிகைகளிலே யாரோ சொன்னார், யாரோ எழுதினார் என்று சொல்லி அதை எப்படி இங்கே பேச முடியும் ?

திரு. க. அன்பழகன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி உள் நோக்கம் கற்பித்துச் சொல்லப்பெறுவதை அனுமதிக்க முடியாது. பேரவைக் குறிப்பேட்டிலிருந்து அவற்றை நீக்கிவிட ஆணையிடுகிறேன். (கூச்சல், குழப்பம்)

திரு. க. அன்பழகன் : நான் உள்நோக்கம் வைத்தோ, அமைச்சர் அவர்களைக் குற்றம் சாட்டியோ எதையும் சொல்லவில்லை. என்னுடைய கருத்து என்னவென்றால், இந்தப்

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிரச்னை முதன் முதலில் பத்திரிகைகளிலேதான் வந்தது. இந்த விஷயத்தை பத்திரிகைகளில் பார்த்துத்தான் நாங்களே தெரிந்துகொண்டோம். முன்பும் பத்திரிகையில் வந்துள்ளதை வைத்துத்தான் முதல்வர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். எனவே தொடக்கமே பத்திரிகையிலே இருந்துதான் ஆரம்பித்தது. ஆகவே அரசுக்கு உதவி செய்வதற்காகவே அதை வைத்து இங்கே எடுத்துக்காட்டினார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அரசுக்கு உதவி செய்வதற்கு அவர்கள் தரும் உழைப்பைப்பற்றியோ, மேன்மையான நோக்கத்தைப் பற்றியோ குறை கூறவில்லை. பத்திரிகை செய்திகளை வைத்துக்கொண்டு, வேறு ஆதாரம் எதுவுமின்றி, இப்பேரவையில் இல்லாதவர்களைப்பற்றி இங்கே குற்றஞ்சாட்டுவது எப்படிச் சரியாகும் ? அவற்றுக்கு யார் பதில் சொல்வது ? சில ரெவின்யூ அதிகாரிகளின் பதவிகளை எடுத்தது பற்றிக்கூடச் சொன்னார்கள். அதுபோன்று அரசாங்கத்தைப் பற்றிச் சொல்வதற்கு பதில் சொல்ல வேண்டியது என்னுடைய பொறுப்பு. எந்த அடிப்படையில் அப்படிச் செய்தார்கள் என்பதையெல்லாம் இந்த அவைக்கு விளக்கிச் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். ஆனால் வெளியில் உள்ளவர்களைப் பற்றியெல்லாம் குற்றஞ்சாட்டி குறிப்பிட்டுப் பேசுவது எல்லாம் முறைதானா ? அதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சிக்கு ஆதரவான பத்திரிகைகளும் உண்டு. ஆளும் கட்சிக்கு எதிரான பத்திரிகைகளும் உண்டு. இப்படி இந்தியா பூராவும் இருக்கிறது. ஆகவே பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை வைத்துக்கொண்டு வளர்த்துக்கொண்டே போக முடியாது. வேறு ஆதாரங்கள் இருந்தால் கொடுக்கவேண்டும். வெளியில் உள்ளவர்களின் பெயர்களை இங்கே குறிப்பிட்டு குற்றஞ்சாட்டி பேசுவதையும் அனுமதிப்பதில்லை. எனவே, எதிர்க் கட்சித் தலைவர்* * என்று குறிப்பிட்டுச் சொன்ன பெயரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

கலைஞர் மு. கருணாநிதி : இந்தப் பேரம் நடப்பதற்கு* * உதவி செய்திருக்கிறார் என்பது என் குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டுகள் சொல்வதிலோ அல்லது இந்த அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்து வதிலோ எங்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அச்சமும், இல்லை. ஏனென்றால் மடியில் கனம் இருந்தால்தானே வெளியில் பயம் ஏற்படும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி ஒரு தெளிவான வரைமுறைகள் வைத்து நீங்கள் தீர்ப்பு வழங்க வேண்டியது முக்கியமானதொன்று. இங்கே இரண்டு பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஒன்று பத்திரிகைகளில் வருவதை வைத்து இங்கே பேசலாமா என்பதாகும். தங்கள் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவருகிறேன். இதே மன்றத்தில் 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி நடந்த விவாதத்தில் பத்திரிகை களில் வந்த செய்திகளை வைத்துக்கொண்டு பேசக்கூடாது என்று யார் தெரிவித்திருக்கிறார்கள் என்றால் அன்றைய தினம் முதல் அமைச்சராக இருந்த இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற டாக்டர் கலைஞரே தான் தெளிவாகத் தெரிவித்திருக் கிறார்கள். பத்திரிகைகளிலே வந்தசெய்திகளை ஆதாரமாக வைத்துப் பேசக்கூடாது என்று.

இரண்டாவதாக நான் தெரிவிக்க விரும்புவது என்ன வென்றால், வெளியே உள்ளவர்களைப்பற்றி குறிப்பிடலாமா? வெளியே இருக்கிறவர்களைப்பற்றிக் குறிப்பிடலாம், ஆனால் அவர்கள்மீது அவதூறாக குற்றஞ்சாட்டிச் சொல்கிறபோது அவர்கள் தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள வழி இல்லை. வெளியே பேசினால் நீதி மன்றத்திற்குப் போகலாம். ஆனால் சட்டமன்றத்தில் வெளியே இருக்கிற ஒருவரைப்பற்றி தவறாக, அவதூறாகப் பேசுகிறபோது அவருக்கு தன்னுடைய நியாயத்தை வற்புறுத்த வழியே இல்லை. ஆகவேதான் நம்முடைய

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

விதிமுறைகளைத் தெளிவாக வைத்துக்கொண்டிருக்கிறோம் வெளியே இருக்கிறவர்களைப்பற்றி அவதூறாகப் பேசக்கூடாது என்று. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவதூறாகப் பேசியிருக்கிறார்கள். அது மரபுக்கு முரணானது. அதை தாங்கள் நீக்குவதுதான் இந்த மரபைக் காப்பாற்றுகிற ஒரே வழி. ஆகவே அது சம்பந்தமாகவும் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற நடைமுறைப்படி இந்தியாவிலோ அல்லது தமிழ்நாட்டிலோ ஒருவர் தவறு செய்திருக்கிறார்கள் என்றால் இன்னார் தவறு செய்திருக்கிறார் என்று சொன்னதற்குப் பிறகுதான் அரசாங்கம் அதன் பேரில் விசாரணை தொடங்குவதற்கு முடியும். ஆகவே இன்னார் என்றே சொல்லக்கூடாது என்றால் அதற்கப்புறம் இங்கே எப்படி 'பங்க்ஷன்' செய்வது. ஆகவே அதை நீக்குவதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, யார் மீதாவது சந்தேகம் இருந்தால் அதைப்பற்றி இங்கே வெளியிடுவதில் தவறு இல்லைதான். இன்னார் செய்தார்கள் என்று கண்டிப்பாகச் சொல்லும்போது அவர்கள் இங்கே பதில் சொல்வதற்கு இருக்க வேண்டும். இந்த அவையில் இருப்பவர்கள் பதில் சொல்வதற்குத் தயாராயிருக்கிறோம். எல்லோரையும் உள்ளிட்டுத்தான் சொல்கிறேன். ஆனால் வெளியே இருக்கிறவர்கள் பற்றிச் சொல்லி, பத்திரிகைகளில் வந்திருக்கிறது என்று சொன்னால், இதை விசாரிப்பதற்கு சொல்கிற எண்ணமாகத் தெரியவில்லை. எங்களுக்குக் கடிதம் எழுதலாம், நேரடியாகச் சொல்லலாம், இதை விசாரித்துச் சொல்ல வேண்டும், இவ்வளவு நாட்களுக்குள்ளாக நீங்கள் சொல்லியாக வேண்டும் என்று எழுதுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை பற்றி பத்திரிகைகளில் வந்தது என்று நாங்கள் சொன்னாலும் கூட, அமைச்சர்களே இப்படி சாராயம் கடத்தப்பட்டதுபற்றி பல

கருத்துக்களை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார்கள். அமைச்சருடைய கருத்துக்கள் மூலமாக இது வெளியிடப்பட்டிருக்கிறது. கடத்தல் ஊழல் நடைபெற்ற தென்றால், பல்வேறு வகைகளில் எந்த இடத்தில் யார் எப்படி என்று வேண்டுமானால் அரசாங்கத்தின் மூலம் ஆராய்ந்து அல்லது எந்தெந்த அளவிற்கு யார் யார் பொறுப்பு என்று தீர்மானிக்க வேண்டும். இன்னும் முழுமையான அளவிற்கு விசாரிக்கப்படவில்லை. விசாரிக்கப்பட்டு முடிந்துவிடவில்லை என்ற நிலையில் இருக்கிறபோது ஒரு விசாரணைக்கு உரிய நிகழ்ச்சிகளில் யார் யார் சம்பந்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அரசாங்கம் தான் விசாரிக்கக்கூடிய நிலையில் சம்பந்தப்படவில்லை என்று சொல்லலாமே தவிர தரக்கூடிய செய்திகளை, இங்கே சொல்லப்பட்ட காரணத்தால் ஒரு குற்றச்சாட்டு முழு உருவம் எடுத்து அது முழு குற்றச்சாட்டாக ஆகிவிடுவதில்லை. குற்றச்சாட்டு சொல்லப்பட்டாலும் கூட ஒரு அமைச்சர் அந்தக் குற்றச்சாட்டுக்கு எங்களிடம் ஆதாரம் இல்லை என்று சொன்னாலும் கூட அது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதுதான். ஆனால் விசாரிக்கப்பட்டு ஒரு முடிவு எடுப்பது ஒரு தொடர்கதை போல் பல நிகழ்ச்சிகள் இருக்கிறபோது இடையில் சில பேர்களை விட்டுவிட்டுச் சென்றால் நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஆராய வாய்ப்பிருக்காது. ஒரு குற்றச்சாட்டை ஆராய்வதற்காக சொல்லக் கடமைப்பட்டிருக்கிற நிலையில் சூழ்நிலை காரணமாக வருகிற செய்திகளை வைத்து இங்கே சொல்லப்படுகிறதே தவிர நீங்கள் அதற்குப்பதில் சொல்வதன்மூலம் அரசுக்கு யார் மீதும் எந்தக் குற்றமும் இல்லை என்று சொல்லக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே சில கருத்துக்களை வைத்திருக்கிறோம். வெளியார்களைப் பற்றியே வரக்கூடாது என்றால் இங்கிருக்கிறவர்களைப்பற்றித்தான் குற்றம் சொல்ல முடியும்.

ஆகவே இங்கே இருக்கின்ற 234 உறுப்பினர்கள் மீதுதான் குற்றச்சாட்டுகள் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசுவது தவறு. * * இந்தச் சபைக்கும், எந்தச் சம்பந்தமும் கிடையாது. * * இல்லை. எனவே, அவர்களைப்பற்றிப் பேசக்கூடாது.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அது உண்மை என்று தெரிந்த பிறகு, அதை வெளியிடலாம் என்று சொன்னார்கள். ஆனால் பதில் சொல்வதற்கு அவர் இந்த அவையிலே இல்லை. இன்னொரு முக்கியமான அடிப்படைக் காரணமும் இதற்கு இருக்கிறது. வெளியில் சொன்னால், சம்பந்தப்பட்டவர் அது குறித்து வழக்கு மன்றத்திற்குப் போக பாதுகாப்பு இருக்கிறது. இங்கே சட்டமன்றத்திலே சொல்லி, அதற்குப் பிறகு பத்திரிகையிலே அது வெளிவருகிறபோது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்பதுதான் அடிப்படை ஆகவேதான் சொல்ல வேண்டியவைகளை வெளியிலே சொல்லட்டும். எங்களைப்பற்றி, ஆட்சியைப்பற்றி நிர்வாகத்தைப்பற்றி நிர்வாகத்திலே உள்ளவர்களைப் பற்றி, யாரைப்பற்றி வேண்டுமானாலும், அதிகாரிகளைப் பற்றி வேண்டுமானாலும் வெளியிலே சொல்வதற்கு உரிமை இருக்கிறது. தாராளமாகச் சொல்லுங்கள். அதற்கு பதில் சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் வெளியிலே இருப்பவர்களைப் பற்றி சட்டமன்றத்திலே சொல்லி, பிறகு அது பத்திரிகைகளிலே செய்தியாக வந்தால் - சட்டமன்றத்திலே பேசப்பட்டது என்று சொல்லி பாதுகாப்புத் தேடிக்கொள்ள முடியும் - அது மக்களுக்கு ஆபத்தானது.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்டவர்களை சம்மன் மூலமாக அழைக்க இது கோர்ட்டு அல்ல; இது சட்டமன்றம். (குறுக்கீடு) இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார். அகமத்கான் என்ற ஒருவர் கேரளத்தில் உள்ள அமைச்சர் ஒருவருக்கு கடிதம் எழுதியதாக பத்திரிகையில் வந்ததை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல்* * பற்றியும் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். இரண்டு பேர்களும் இந்த அவையிலே இல்லாதவர்கள். அவர்களால் வாதாட முடியாது; பேச முடியாது. முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, அவர்கள் இதைப்பற்றி வழக்கு

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

மன்றத்திற்குச் செல்லவும் உரிமையில்லை; வாதாடவும் முடியாது. எனவே, இவைகளை எல்லாம் அவைக் குறிப்பிலே இடம்பெறச் செய்வது என்பது இயலாத காரியம். இதைத்தான் ஏற்கனவே மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பத்திரிகைச் செய்திகளை ஆதாரங்களாக வைத்துப் பேசக்கூடாது என்று ஏற்கனவே முதல்வராக இருந்தவரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும் சொல்லியிருக்கிறார்கள் என்று மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் (குறுக்கீடு)

கலைஞர் மு. கருணாநிதி : பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசினால் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தேக விளக்கம் ஒன்றை மீண்டும் கேட்கிறேன். இங்கே பேசிவிட்டு, பத்திரிகையிலே வந்தால், யார் மீது குற்றம் சுமத்தப்படுகிறதோ, அவர் வழக்கு மன்றத்திற்குப் போக இயலாது. ஆகவே, அவருக்குப் பாதுகாப்பு கிடையாது. அவர்கள் வெளியிலே சொல்லட்டும். சம்பந்தப் பட்டவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போக முடியும். ஆனால், இங்கே பதில் சொல்ல முடியாமல் இருப்பவர்களைப்பற்றிப் பேசுவது நீதி ஆகாது.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே பேசிய பல்கேரிய ஊழலுக்குக்கூட வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திற்கு அழைத்தவர்கள் ஏன் வராமல் இருக்கிறார்கள்? எப்போது வருவார்கள் என்ற ஆவலில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, வழக்கு மன்றத்தைப்பற்றி ஒன்றும் பயப்படவில்லை.

தலைவர் அவர்களே, இந்த எரி சாராயக் கடத்தலைப்பற்றி செய்திகள் வந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே மத்திய அரசினுடைய கலால் துறை ஒரு சாராய தொழிற்சாலையை திடீரென்று சோதனையிடுகிறது. அதிலே மொலாசஸ் நிரம்பியிருக்க

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

வேண்டிய டாங்குகளில் மொலாச ஸுக்குப் பதிலாக வெறும் தண்ணீர் மாத்திரம்தான் நிரப்பப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப் படுகிறது. 800 டன் மொலாசஸ் கடத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக அந்த டாங்குகளில் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கிறது. அந்த 800 டன் மொலாசஸிலிருந்து 1 லட்சத்து 80 ஆயிரம் லிட்டர் எரிசாராயம் தயார் செய்யப்பட முடியும் என்று கணக்கிடப்படுகிறது. அதனுடைய விலை மாத்திரம் 60 லட்சம் ரூபாய். மத்திய அரசு கலால் துறை கண்டுபிடிக்கும் வரை மாநில அரசு கலால் துறை என்ன செய்துகொண்டிருந்தது என்று நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை சோதனையிடக்கூடாது என்று அரசுத் தரப்பிலே அறிவிக்கப்பட்டதோ அதுவும் தெரியவில்லை. எப்படி தொழிலதிபர்களுடைய முறையீட்டைக் கேட்டு உடனடியாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நிறுத்தியது மாத்திரமல்ல, அந்தப் பதவியே வேண்டாம் போ என்று அந்தப் பதவியையே இல்லாமல் ஆக்கிவிட்டார்களோ அதைப்போல் அந்த எரி சாராய தொழிலதிபர்களுக்கு இவ்வளவு உதவிகள் செய்யப்பட்டிருக் கின்றன. எனவே, பல கோடி ரூபாய் மதிப்புள்ள எரிசாராய கடத்தல் விவகாரம் கலால் துறை, காவல் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கும் தெரியாமல் நடந்திருக்க முடியாது என்பதும் இந்தத் தொழிலில் முழு நடவடிக்கைகளையும் மொலாசஸ் கொள்முதலிலிருந்து எரிசாராய உற்பத்தி அனுமதி அளிப்பது, கொண்டு செல்வது ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அரசின் முத்திரை இல்லாமல் இந்தத் தொழிலில் எதுவும் நகரக்கூட முடியாது என்பதும் இதிலே ஊழல் இருக்கிறது என்று சொல்லப்படுமேயானால் அதற்குப் பொருள் என்ன வென்றால் இந்த அரசு லஞ்சத்தைச் சட்டபூர்வமாக்கி விட்டது என்றுதான் நான் குற்றம் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே இந்த மாமன்றத்திலே பல்கேரியா கப்பல் ஊழலைப்பற்றி நான் எடுத்துச் சொன்னேன். அப்போது சுப்ரீம் கோர்ட் விசாரணைக்குத் தயார் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அப்போதிருந்த பிரதமர் சரண்சிங்கை கேட்டோம். அவர் இயலாது என்று கூறிவிட்டார் அல்லது அங்கிருந்து கடிதம் அனுப்பிவிட்டார்கள் என்ற அளவோடு நிறுத்திக்கொண்டார்கள்.

அதற்குப் பிறகு, பிரதமரை, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களை மாநாட்டுக்கு அழைக்க இரண்டுமுறை, 3 முறை சென்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த பல்கேரியா கப்பல் ஊழல் விவகாரத்திற்கு முன்பிருந்த அரசு, சரண்சிங்கினுடைய அரசு உச்ச நீதிமன்ற நீதிபதியை அனுப்ப மறுத்துவிட்டது, அம்மையார் அவர்களே தாங்களே தயவுசெய்து எங்களுக்கு ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதியை அனுப்பி உதவுங்கள் என்று கேட்டிருக்கலாம் கேட்கவில்லை. பல்கேரியா கப்பல் ஊழல் விவகாரத்தைப்பற்றி இங்கே பேசிய நேரத்திலே கடிதம் எல்லாம் படித்துக் காட்டப்பட்டிருக்கிறது. டெலக்ஸ் மெஸேஜ் எல்லாம் படித்துக் காட்டப்பட்டிருக்கிறது. 20-க்கு மேற்பட்ட ஆதாரங்கள் இந்த அவையிலே எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய மேனேஜிங் டைரக்டர் என்ன செய்தார், திரு ராமகிருஷ்ணன் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினுடைய மேனேஜிங் டைரக்டராக இருந்தார். இந்த அரசிலே அவரை சோஷியல் வெல்பேர் டிபார்ட்மென்டிலே கொண்டுபோய்த் தள்ளினார்கள். அவர் சில விஷயங்களைத் தடுத்தார். ஊழல் நடைபெறாமல் தடுப்பதற்கு முன் நின்றார் என்ற காரணத்திற்காக அவருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. அவைகளை யெல்லாம் நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்ட பிறகு சோஷியல் வெல்பேர் டிபார்ட்மென்ட்டிலே அவரைக் கொண்டுபோய் தள்ளியபிறகு அவர் வேலைக்கே வராமல் லீவ் போட்டுக்கொண்டு இருந்தார். பிறகு ஆட்சி, பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு கலைக்கப்பட்ட வுடன் அவர் தலைமை செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்; அந்தக் கடிதத்திலே குறிப்பிடுகிறார்; நேர்மையாகவும், நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட விடாத அ.தி.மு.க. அரசின் ஆணைகளை நான் நடைமுறைப்படுத்த விரும்பவில்லை என்பதால் விடுப்பிலேயே இதுவரையில் இருந்தேன். அந்த அரசு கவிழ்க்கப்பட்டுவிட்ட காரணத்தால் இப்போது மீண்டும் வேலையிலே சேருகிறேன் என்று சீப் செக்ரட்டரிக்குக் கடிதம் எழுதுகின்றார் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் என்றால் இந்த அரசினுடைய நேர்மையும் நியாயமும் எவ்வளவு என்பதை அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.


மடியிலே கனம் இல்லை வழியிலே பயமில்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி அவர்கள் சொன்னார்கள். இதையெல்லாம் நீங்கள் மடியிலே வைத்துக்கொண் டிருக்கமாட்டீர்கள், எனக்கு நன்றாகத் தெரியும். எனவே இதிலே பயமில்லை என்று சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. நான் இவர்களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், இந்த 12 கோடி எரிசாராய ஊழலுக்கு மாநில போலீஸ் விசாரணை போதாது என்பதும், நீங்களே ஒரு வழி கண்டு பிடியுங்கள்; ஏற்கனவே பல்கேரியா கப்பல் ஊழலுக்கு சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வருகிறார் வருகிறார் என்று சொன்னீர்களே, அதைப்போல சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வேண்டுமா ? அதை நீங்களே முடிவு செய்யுங்கள் அல்லது சி. பி. ஐ. விசாரணையா ? மாநில அரசிலே சி.பி.ஐ. விசாரணை வரலாமா, அது சுயாட்சிக்குப் பங்கம் அல்லவா என்றால் நீங்களே விரும்பிக் கேட்டு சி.பி.ஐ. விசாரணையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. எந்த முறையிலே உங்களை நிரபராதிகளாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அந்த முறைகளை நீங்கள் கடைப்பிடிப்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

நான் ஏதோ அரசுக்கு உதவிகரமாகப் பலபேரைக் குற்றம் சாட்டினேன் என்று யாரும் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நான் அரசையே குற்றஞ்சாட்டுகிறேன். முதலமைச்சரையே குற்றஞ்சாட்டுகிறேன்; அத்தனைபேரும் சேர்ந்துதான் இந்த ஊழல் நடைபெற்றிருக்கிறது. எனவே இந்த ஊழல் அரசின் சார்பாகப் படிக்கப்பட்ட கவர்னர் உரையை நான் ஏற்றுக்கொள்வதற்கு இயலாது என்று கூறி அமைகிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன் : தலைவரவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசுகிறபொழுது நான் கவர்னர் உரைக்கு முன்மொழிந்து பேசியதைப்பற்றிக் குறிப்பிட்டு, என்னுடைய கருத்துக்களுக்குப் பதில் சொல்வதற்குப் பதிலாக என்னைப்பற்றித் தனிப்பட்ட முறையிலே பேசினார்கள். அதிலே வேகம் இருந்ததே தவிர, விவேகம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அல்ல, மாண்புமிகு உறுப்பினரைப்பற்றித் தனியாகக் குறிப்பிடவே இல்லை. தனிப்பட்ட முறையிலே பெயரைச் சொல்லிக் குறிப்பிடவில்லை.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் என்ன சொன்னேன் என்று நீங்கள் மீண்டும் ஒருமுறை புரிந்துகொண்டால் அவருக்குப் பதில் அளிக்க உங்களுக்கு வாய்ப்பாக இருக்கும். நான் சொன்னது, இங்கே விவாதத்தைத் தொடங்கிவைத்த ஆளுங்கட்சி உறுப்பினர், பெருந்தன்மை உள்ள ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்; இவர் விரக்தி உள்ளவராக இருக்கிறார், இப்பொழுதுள்ள எதிர்க்கட்சித் தலைவர், ஆகவே, பெருந்தன்மையான ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்க வேண்டும், அதற்கு இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நான் அதைக் குறிப்பிட்டேன். குறிப்பிட்டுவிட்டு, பெருந்தன்மையுள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்றால் என்ன கருதுகிறார் என்று தெரியவில்லை, பல கட்சி மாறியவராக இருக்க வேண்டுமா? அவர் தி.மு.க. விலிருந்து அ.தி.மு.க.வுக்குச் சென்று, அங்கிருந்து காங்கிரசுக்குச் சென்று, ஜனதாவுக்குச் சென்று பிறகு அ.தி.மு.க.-வுக்கு வருகின்ற இப்படிப் பல கட்சி மாறியவராக இருக்க வேண்டுமா, அதுதான் பெருந்தன்மையா, அதுதான் பொருத்தமா எதிர்க்கட்சித் தலைவருக்கு என்று கேட்டேன். இதிலே திரு. விஸ்வநாதனைப்பற்றி நான் ஒன்றும் குறிப்பிடவில்லை.



உரை : 17 நாள் : 18.03.1985

***கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் உரையின்மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரை விவாதிக்கப்படுகிற இந்த நேரத்தில் மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையும் வெளிவந்திருக்கிறது. அந்த நிதிநிலை அறிக்கைக்கும் மாநில அரசின் நிதிநிலை அறிக்கைக்கும் இடையில் ஆளுநர் உரை குறித்த விவாதத்தில் நாம் கலந்து கொண்டிருக்கிறோம். என்னுடைய கருத்துக்களை தொகுத்து வைப்பதற்கு முன்பாக, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் மிகுந்த உடல் நலிவுற்று இன்றையதினம் நலம்பெற்று தொடர்ந்து பணிகளை மேற்கொள்கிற அளவுக்கு நம் முன்னால் இருப்பதற்கு என்னுடைய இதயமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநருடைய உரையின் தொடக்கத்தில் "இந்திரா காந்தி அம்மையாரின் கொடுமை மிகுந்த மரணத்தை முன்னிட்டு நாம் அனைவரும் மிகப் பெரிய கவலையில் ஆழ்ந்து கிடக்கையில், ஆளுகை அதிகாரத்தைச் சனநாயக முறைகளின்மூலம், அமைதியான முறையில் மாற்றிக் கொடுத்து, நாட்டை பழைய நிலைக்கு மீட்டுக் கொணர்ந்துள்ள சூழ்நிலை, நமக்கெல்லாம் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிப்பதாக இருக்கின்றது" என்ற வாசகமும், அதைத் தொடர்ந்து "பிரதமர் திரு. இராஜீவ் காந்தி தலைமையில் இந்த நாடு விரைந்து முன்னேறும் காலகட்டத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது" என்கிற வாசகமும் தரப்பட்டுள்ளன. எனவே ஆளுநருடைய உரை தமிழ்

மாநிலப் பிரச்சினைகளைப் பற்றி மாத்திரம் ஆராயாமல், இந்திய நாடு தழுவிய பிரச்சினைகளை எடுத்துக் கூறியிருக்கிற காரணத்தால், இன்றைக்கு இந்தியப் பேரரசின் சார்பாக வைக்கப் பட்டுள்ள மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கையைக் குறித்தும் அக்கருத்துக்களை எடுத்துக் கூறுவது ஆளுநர் உரையின் அடிப்படையில் பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

மத்திய அரசின் பட்ஜெட் குறித்து ஆந்திரத்தின் முதலமைச்சர் திரு. என். டி. இராம ராவ் அவர்கள் கூறியுள்ள கருத்து இது : "மாநில அரசின் திட்டங்களுக்கு மத்திய அரசு தனது நிதி உதவியை அதிகரிக்க பட்ஜெட்டில் உத்தேசித்திருப்பது ஒரு கண் துடைப்பு வேலையாகும். தற்சமயம் பணவீக்கம் மிகுந்துள்ள நிலையில் உயர்ந்து வரும் திட்டச் செலவைக் கூட இந்த நிதி உதவியால் சரிக்கட்ட இயலாது. பொருளாதாரத்தைச் சீர் திருத்தி அமைப்பதற்கான உண்மையான முயற்சி எடுக்கப் படவில்லை. பணக்காரர்களுக்குச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஏழை மக்களின் சுமை அதிகரித்துள்ளது. பெட்ரோலியப் பொருள்களின் மீது வரியை அதிகரித்திருப்பதால், பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவர். பட்ஜெட்டில் 3, – கோடி ரூபாய் துண்டு விழும் தொகையால் பணவீக்கம் மேலும் தீவிரமாகும் என்ற கருத்தை ஆந்திர முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

"நாடு ஒரு முன்னேற்றப் பாதையில் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் தலைமயில் கொண்டு செல்லப்டுகிறது" என்ற கருத்து ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருப்பதற்கு மாறாக அவர் செயல்படுகிறார் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் ஆந்திர முதலமைச்சருடைய இந்தக் கருத்து இருக்கிறது என்பதை நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

"மேற்கு வங்க முதலமைச்சர் மாண்புமிகு திரு. ஜோதி பாசு அவர்களும் மத்திய அரசினுடைய வரவுசெலவுத் திட்டத்தைக் குறித்துப் பேசும்போது, இது ஒரு மக்கள் விரோத பட்ஜெட். செல்வந்தர்களுக்கே அதிகச் சலுகை கொடுக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பபிட்டிருக்கிறார்கள்.

நம்முடைய மாநிலத்திலும், மத்தியிலும் பெரும் பொறுப்புக்களை வகித்த பேரன்புக்குரிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 'இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன்' என்று குறிப்பிட்டாலும்கூட, 'வரி நிவாரணம் அளித்துள்ளது வரவேற்கக் கூடியது என்றாலும், பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளதைப் போல அது செயலாற்றுதலை எட்டுமா என்பது சந்தேகமே. உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஊக்கம் இருப்பாதாகத் தோன்றவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மத்திய அரசின் முன்னாள் நிதியமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள், காங்கிரஸ் கட்சியின் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினராக அமர்ந்திருக்கும் அவர்கள், "It is not a departure from the past budget " "முத்தைய பட்ஜெட்டுக்களைவிட இது ஒன்றும் அவைகளை முந்திக் கொண்ட பட்ஜெட் அல்ல" என்று சுருக்கமாகக் கூறியிருக்கிறார்கள்.

பத்திரிகையில் வந்த செய்திகள் பலவற்றைப் பார்க்கும் போது, பருத்தி இழை மீதான தீர்வை 25 சதவீதம் உயர்த்தப் பட்டிருப்பது குறித்து கைத்தறித் தொழிலைச் சேர்ந்தவர்கள் அதிர்ச்சியையும், வேதனையையும் அடைந்துள்ளார்கள் என்று தெரிகிறது. இதனால் தென்னாடுதான் மிகவும் பாதிக்கப்படும். குறிப்பாக தமிழ் நாடு கைத்தறி நெவசாள பெருமக்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்ற செய்தி இந்த பட்ஜெட் குறித்து பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது.

திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் பாராட்டியிருக் கிறார்கள் என்றாலும், அதே நேரத்தில் "செல்வ வரிக்கு இதில் அளிக்கப்பட்டுள்ள சலுகை, வாரிசு வரி ரத்து ஆகியவை முற்றிலும் தேவையற்ற காரியமாகும். ஏழாவது திட்டத்திற்கான நிதிகளைத் திரட்ட இந்த ஆதாரங்களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். இதற்கு மாறாக இந்தத் தேவையற்ற காரியத்தைச் செய்திருக்கக் கூடாது. இத்தகைய செல்வந்தர்களுக்கான வரிகளுக்கு விலக்கு இருக்கத் தேவையில்லை'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்று காலையில் பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்க்கும் போது வாரிசு வரியைக் கைவிடுவது என்பதை கடைசி நேரத்தில்தான் மத்திய அரசினுடைய நிதியமைச்சர் அவர்களால்

அல்லது மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டிருப்பாதாகத் தோன்றுகிறது. சனிக்கிழமை அன்று நாடாளுமன்றத்திலே இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்துப் பேசிய நிதியமைச்சர் திரு. வி. பி. சிங் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிடும்போது, "வாரிசு வரி எந்த நோக்கத்திற்காக அமுல் நடத்தப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. செல்வ விநியோகம் சமமற்ற முறையில் இருப்பதைக் குறைப்பதும், மாநிலங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவுவதும்தான் இந்த வரி விதிப்பின் நோக்கமாகும். ஆனால் இந்த நோக்கம் நிறைவேறாததால், இந்த வாரிசு வரியை நீக்க உத்தேசித்துள்ளோம்" என்று மார்ச் மாதம் 16 ஆம் தேதியன்று கூறியிருக்கிறார்கள். ஆனால் மார்ச் 14 ஆம் தேதி இறுதியாக்கப்பட்ட பட்ஜெட் பற்றிய விளக்கக் குறிப்பில் இந்தத் தீர்வை இடம் பெற்றிருக்கிறது. மார்ச் 16 ஆம் தேதி இந்த தீர்வையை நிக்கியிருக்கிறார்கள். இதனால் உபயோகம் கிடையாது, இதனால் வருவாய் கிடையாது என்று கூறி 16 ஆம் தேதி நீக்கியிருக் கிறார்கள். இந்தத் தீர்வையின் மூலமாக 22½ கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அரசின் சார்பிலே கொடுக்கப்பட்ட விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. வாரிசு வரியைக் கைவிடுவது என்பது கடைசி நேரத்தில், கடைசி நிமிஷத்தில்தான் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பது புலனாகிறது என்று இன்று காலையில் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே இது செல்வந்தர்களுக்காக அவசர அவசரமாக அவர்களுடைய கோரிக்கையின்படி காட்டப்பட்ட ஒரு சலுகையாக இருக்கிறது. இது எப்படி நாட்டை முன்னேற்றப் பாதையில் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் நடத்திச் செல்ல முடியும் என்பதற்கு அடையாளமாக, சான்றாக இருக்கக்கூடும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. பல ஆண்டுக் காலமாக எதிர்க்கட்சிகள் போராடி அரசியல் கட்சிகளுக்கு கம்பெனிகள் நன்கொடை அளித்தல் கூடாது என்ற நிலை மாற்றப்பட்டு, அரசியல் கட்சி களுக்கு கம்பெனிகள் நன்கொடை அளித்திட முழு உரிமை என்றதால், இப்போது ஆளுங்கட்சிக்கு நிதியுதவி குவிந்திட ஒரு விசாலமான வழி ஏற்பட்டிருக்கின்றது. அதிலே எள்ளளவும் சந்தேகமே கிடையாது. திட்ட முதலீட்டின் வளர்ச்சியின்

அடிப்படையிலே வலு சேர்க்க தவறியிருப்பது ஒரு பரிதாபமான செயல் என்று இவ்வாறு 17-ம் தேதி இந்த பத்திரிகையினுடைய தலையங்கத்திலே கூறப்பட்டிருக்கிறது :-

"It is a pity the Government has not been able to muster the strength required to maintain the momentum in the growth of the plan outlay."

"திட்ட முதலீட்டுடன் வளர்ச்சியின் அடிப்படையை கவனித்து அதிலே வலு சேர்க்கத் தவறியிருப்பது ஒரு பரிதாபமான செயல்" என்று 'இந்து' பதிரிகை குறிப்பிட்டுக் காட்டுகிறது. இந்த திட்ட ஒதுக்கீடு இந்த மாநிலத்தையும் பாதிக்கும் என்ற காரணத்தினாலே விளக்கிட விரும்புகிறேன். 1984-85-ல் ஒதுக்கிய தொகையைவிட, இந்த ஆண்டு திட்ட முதலீட்டுக்காக ஒதுக்கியிருக்கின்ற தொகை ரூ, 1,149 கோடி. அதையும் சேர்த்து ரூ. 18,800 கோடி என்ற அளவிற்குத்தான் இன்று திட்ட முதலீடாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு திட்ட முதலீட்டுக்கு 25 சதவிகிதம் என்ற அளவுககுத்தான் அதிகமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு, 7 சதவிகிதம் என்ற அளவுக்குத்தான் அந்தத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஒதுக்கியதுபோல, இந்த ஆண்டு 25 சதவிகிதம் அளவுக்கு ஒதுக்கியிருந்தால், கிட்டத்தட்ட 18,500 கோடி ரூபாய் என்பது 20,760 கோடி ரூபாய் என்ற அளவிலாவது அமைந்திருக்கக் கூடும். திட்ட முதலீட்டைக் குறைத்ததன் காரணமாக பொதுத் துறை வலுவை இழக்க நேரிடும். இது மறைமுகமாக தனியார் துறைக்கு, பிரைவேட் செக்டாருக்கு - அதிகமான வாய்ப்பு வசதிகளைத் தரும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடடைப்பட்டிருக்கிறேன். எனவேதான் பெரும் முதலாளிகள் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற் றிருக்கிறார்கள் என்றால், அதற்கு ஆழ்ந்த பொருள் இருக்கிறது. எனவே ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டுள்ள கருத்துக்கள், பிரதமர் பொறுப்பை எற்றுள்ள திரு. இராஜீவ் காந்தி அவர்கள் நாட்டை முன்னேற்றப் பாதையில் - புரட்சிகாமான பாதையில்போய் தலைகீழ் பொருளாதார மாற்றத்தைச் செய்வார் என்ற நம்பிக்கைக்கு எள்ளளவும் இடமில்லை என்று ஆளுநர் குறிப்பிட்ட கருத்துக்கு மாறுபட்ட என் கருத்தினை நான் இங்கே பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

வருமான வரிக்கு நிவாரணம் தரப்பட்டிருக்கிறது. இப்போது தரப்பட்டுள்ள நிவாரணம் மூலம் யார் யார் பயன் அடைவார்கள்? ரூ. 20,000 ஆண்டு வருமானமுள்ளவர்களுக்கு, இப்போது அறிவிக்கப்பட்டுள்ள நிலையின்படி கிடைக்கின்ற நிவாரணம் ரூ. 625 தான். ஆனால் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு இந்த அறிவிப்பின்படி கிடைக்கின்ற நிவாரணம் ரூ. 10,406. ரூபாய் 5,00,000 ஆண்டுக்கு வருமானம் உள்ளவர் களுக்குக் கிடைக்கின்ற நிவாரணம் ரூ. 57,906. எனவே அதிகமான வருமானம் உள்ள செல்வந்தர்களுக்க 11,5 சதவீகிதம் நிவாரணம். ரூபாய் 20,000 வருமானம் உள்ள நடுத்தர மக்களுக்கு மூன்று சதவிகிதம்தான் இந்த நிவாரணம் கிடைக்கிறது என்பதைப் பார்க்கும்போது அதுவும் நடுத்தர மக்களை உற்சாகப்படுத்துகின்ற அளவிற்கு, மகிழ்ச்சி யடையத்தக்க அளவிற்குக் கொண்டு வரப்படும் ஒரு நிவாரணம் அல்ல என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே ரெயில்வே பட்ஜெட்டின்மூலம் பிரயாணி களுடைய கட்டணம், சரக்குகளுக்கான கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டிருப்பதால், விலைவாசிகள் உயர்ந்து ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்து நாட்டில் பரவலாகச் சொல்லப்பட்டு வருகிறது.

அதற்கிடையே ரெயில்வே பட்ஜெட்டின்மூலம் பத்திரிகைக் காகிதத்தின்மீது ஏற்பட்டுள்ள தீர்வையின்மூலம் டன்னுக்கு ரூ. 200 என்ற அளவிலே உயர்த்தப் பட்டிருக்கிறது. இதனால் இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய பெரிய பத்திரிகைகள், அரசாங்கத் தினுடைய விளம்பரங்கள், தனியார் துறையினுடைய விளம்பரங்கள் ஒரு 20 பக்கம், 16 பக்கம் விளம்பரங்களைப் பெறும் பத்திரிகைகள் வேண்டுமானால் நடமாட முடியும். நடுத்தரப் பத்திரிகைகள், சிறிய பத்திரிகைகள் பெருமளவுக்குப் பாதிக்கப்படும்.

டெலிவிஷன், ரேடியோ இவைகளுக்கு லைசென்ஸ் கட்டணம் கட்டத் தேவையில்லை. ஒரே ஒரு முறை கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் பிரச்சாரத்தை வேகவேகமாக ஒவ்வொரு பகுதியிலும் ஏற்படுத்

துவதற்கு சௌகரியமாக இருக்கும். அதே நேரத்தில் எதிர்க் கட்சிகள் கருத்துக்களை பதிலாகச் சொல்வதற்கு நடுத்தரப் பத்திரிகைகள், சிறிய பத்திரிகைகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. தாள்கள் விலை ஏற்றத்தின் காரணமாக, பத்திரிகைகளின் விலைகள் ஏற்றப்பட்டு, அதன் காரணமாக பத்திரிகைகளின் சர்குலேஷன் குறைய, அதற்குப் பிறகு பத்திரிகைகள் மூடப்படவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டு, எதிர்க் கட்சிகள் அவர்கள் கருத்துக்களை வெளியிட முடியாத அளவிற்குச் செய்து, இப்படி மறைமுகமாக தகவலைத் தடுக்கின்ற ஒரு நிலையை மத்திய அரசு உருவாக்கி யிருக்கின்றது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட்டதுபோல, பெட்ரோல், மண்ணெண்ணெய், சமையல் கேஸ், பீடி இப்படப்பட்ட பொருள் களுக்கெல்லாம் இன்றைக்கு மத்திய அரசினுடைய பட்ஜெட்டிலே விதிக்கப்பட்டுள்ள வரி எந்த அளவுக்குச் சாதாரண மக்களை, எளிய மக்களை, பொதுமக்களைப் பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று பத்திரிகையில் செய்தியைப் பார்த்தால், ஆட்டோ கட்டணம் உயரும், டாக்சி கட்டணம் உயரும், பஸ் கட்டணம் உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறதென்ற செய்திகள் வருகின்றன. இதைத் தொடர்ந்து விலைவாசிகளும் உயரக்கூடும். எனவே அழுத்தம்திருத்தமாகச் சொல்கிறேன், மத்திய அரசின் செல்வந்தர்களுக்காகப் போடப்பட்ட பட்ஜெட். இதிலே நாடு விரைந்து முன்னேற எந்தத் திட்டமும் கிடையாது என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டுள்ளதுபோல, பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் தலைமையில் நாடு விரைந்து முன்னேறும் காலகட்டத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்று குறிப்டிப்பட்டுள்ளதால், மத்திய நிதி அமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள பட்ஜெட்டில் அப்படிப்பட்ட திட்டங்களுக்கு அறிகுறி நிச்சயமாக இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. அந்த முடிவைத்தான் ஆந்திர முதலமைச்சர், மேற்கு வங்க முதலமைச்சர் ஆகியோர் எதிரோலித் திருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் மின்சார நிலை நம்முடைய மாநிலத்தில் எவ்வாறு இருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு

பெரிய முரண்பாடு, மின்சார வாரியத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள செய்திக்கும், மறு நாள் வெயியிடப்பட்ட நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரைக்கும் இருக்கிற முரண்பாட்டை, துணைத் தலைவர்களே, உங்கள் வாயிலாக இந்த அவைக்கு நினைவூட்டுவது என்னுடைய கடமையாகும். மதுரையில் தமிழக மின் வாரியத் தலைவரவர்கள் நிருபர்களைச் சந்தித்து, தமிழகத்திலே உள்ள மின்சார நிலைமைபற்றிக் குறிப்பிட்டுள் ளார்கள். "இந்த ஆண்டு தமிழ் நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கும். மோசமான பருவநிலை காரணமாக இந்த ஆண்டில் 100 கோடி யூனிட் விசை பற்றக்குறை எதிர் பார்க்கப்படுகிறது. புனல் மின்சார நிலையங்களில் நீர்த் தேக்க நிலவரம் மோசமாயிருப்பதும், சில அனல் மின் நிலையங்களில் உள்ள கோளாறுகளும் கூட இந்த நிலவரத்திற்குக் காரணங் களாகும்" என்ற ஆபத்தான செய்தியை, வருந்தத்தக்க செய்தியை தமிழக மின் வாரியத் தலைவர் அவர்கள் மார்ச் 7 ஆம் தேதி நிருபர்களுக்கு வெளியிட்டது ஏடுகளில் வெளிவருகிறது. மார்ச் 8 ஆம்தேதி ஆளுநர் பெருமான் அவர்கள் அறிக்கையைப் படிக்கிறார்கள். அந்த அறிக்கையில், "தமிழ்நாடு மின் வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனல் மின நிலையங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டதன் பலனாக மின் சக்தி உற்பத்தி பெருமளவு உயர்ந்துள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. 'மின் சக்தி உற்பத்தி உயர்ந்துள்ளது' என்ற கவர்னர் அவர்களின் உரைக்கும், பெருமளவுக்கு நிலைமை மோசமாக இருக்கிறது' என்ற மின் வாரியத் தலைவரவர்களின் பேட்டிக்கும் இருக்கின்ற முரண்பாட்டை உணர்ந்தாலே கவர்னர் அவர்கள் உரையிலே குற்றம் குறை காணலாமா என்று ஆதங்கப்படும் மாண்புமிகு உறுப்பினர்களிடம் இவைகளை எல்லாம் குற்றமாக, குறையாகக் கருதாமல் எப்படி இருக்க முடியுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திற்கு, தமிழகச் சட்டமன்ற பேரவையிலே தலைவராக இருந்த திரு. இராசாராம் அவர்கள் இன்றைக்கு தொழித் துறை அமைச்சராக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பொறுப்பு ஏற்ற பிறகு இந்த

அவையிலே நான் அவர்களை இன்னும் சந்திக்கவில்லை. ஒருவேளை இன்று வந்தாலும் வரக்கூடும். அவர்கள் தொழில் துறையை தமிழகத்தில் எப்படி வளர்ப்பது, அதற்கு மத்திய அரசோடு எப்படி வாதாடுவது என்பது குறித்து சில கருத்துக்களை ஒரு வார இதழுக்குப் பேட்டியாகத் தந்திருக்கிறார்கள். அந்த வார இதழினுடைய ஆசிரியர் தொழில் அமைச்சர் திரு. இராசாராம் அவர்களை கேள்விகள் கேட்கிறார், இவர் பதில் சொல்கிறார். அவற்றை இங்கே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு படிக்க விரும்புகிறேன். அவர் "பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல்ஸ், ஆவடி டேங்க் பேக்டரி, நெய்வேலி நிலக்கரி சுரங்கம், பெரம்பூர் கோச் பேக்டரி போன்ற திட்டங்களுடன் மத்திய அரசு நிறுத்திக் கொண்டு விட்டது. சுமார் 15 ஆண்டுகளாக மத்திய அரசுத் திட்டங்களை நிறுத்திக்கொண்டு விட்டதே, புதிதாகத் திட்டங்கள் எதுவும் இல்லையே, இதற்கு அரசியல் காரணமாக இருக்குமா?" என்று கேட்கிறார். அதற்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. இராசாராம் "அரசியல் அல்ல, அணுகுமுறை காரணம்" என்று சொல்லியிருக்கிறாரா? அப்படி என்றால் இதிலே ஏற்கெனவே இருந்தவர்களுடைய அணுகுமுறை சரியில்லை என்பதை தொழில் அமைச்சர் சூசகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அது வேறு விவகாரம். மேலும் சொல்கிறார், "இதற்காக என்று மற்ற மாநிலங்களின் சார்பாக தனிச் சிறப்பு அதிகாரிகளை டில்லியில் நியமித்து தங்களுடைய விண்ணப்பங்களை விரைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள், நாமும் அப்படிச் செய்ய வேண்டும். இதற்காக ஒரு தனி அமைப்பை டில்லியில் நிறுவுவதன் மூலம் அப்படிச் செய்யலாம்'' என்று சொல்கிறார். ஏற்கனவே இம்மாநிலத்தின் பிரதிநிதியாக ஒருவர் பொறுப்பேற்றிருக்கிறார். அவர் அமைச்சருக்குரிய அந்தஸ்துடன் பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கிறார்.

அப்படி இருக்கும்போது இதற்காக தனியாக இன்னொரு வரைப் பொறுப்பாளராக நியமித்து. ஒரு அலுவலகத்தையும் அங்கே அமைத்து, ஏற்கெனவே ஒரு பிரதிநிதி தனியாக

இருப்பதுடன்கூட, தேவையில்லாமல் இதற்கும் செலவிட வேண்டுமா? ஏற்கெனவே அங்கே இருக்கின்ற மாநில அரசு பிரதிநிதி இதை கவனிக்க மாட்டாரா? அதுமட்டுமல்லாமல், ஆளும் கட்சியின் சார்பாக அல்லது ஆளும் கட்சியின் ஆதரவோடு வெற்றி பெற்றிருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக, அல்லது எதிர்க் கட்சியின் சார்பாக தமிழகத்திலேயிருந்து வெற்றி பெற்றுச் சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது மக்கள் அவை உறுப்பினர்கள் இத்தகைய திட்டங்களுக்காக தமிழ் நாட்டுக்காக வாதாட மாட்டார்களா? ஏற்கனவே தமிழகத்தின் சார்பாக அங்கே பிரதிநிதியாக இருக்கின்ற திரு. எட்மண்ட் அவர்கள் இந்தக் காரியங்களை எல்லாம் கவனிக்கவில்லையா? புதிதாக மற்றொரு செலவை நாம் அங்கே உருவாக்க வேண்டுமா? இன்னொரு முக்கியமான விஷயத்தையும் அவருடைய பதிலில் சொல்கிறார். இதுதான் வேடிக்கைக்கும் வேதனைக்கும் உரிய விஷம். "டில்லியில் இருந்து இப்படி நமக்கு உதவக்கூடிய மத்திய அரசு அதிகாரிகள் தமிழ்நாட்டுக்கு வருகின்றார்கள். அவர்களை நாம் சிறப்பு விருந்தினர்களாக வரவேற்று, உபசரித்து நல்லுறவை வளர்ந்துக்கொள்ள வேண்டும்." அதற்கு அந்த ஆசிரியர் கேட்கிறார், "அப்படிச் செலவு செய்ய அரசு அனுமதிக்குமா"? அதாவது டில்லியிலிருந்து வருகிற மத்திய அரசு அதிகாரிகளை சிறப்பு விருந்தினர்களாக வரவேற்று உபசரித்து அனுப்ப வேண்டிய நிலை வருமானால், அதற்கு நிறைய செலவு ஆகுமே. அந்தச் செலவைச் செய்ய அரசு அனுமதிக்குமா என்று கேட்கிறார். அதற்கு மாண்புமிகு தொழில் அமைச்சர், நிச்சயமாக அனுமதிக்கும் என்று சொல்கிறார். அதிகாரிகளை அழைத்துக் கொண்டுபோய் நல்ல ஓட்டலில் விருந்து வைக்கலாம். இப்படிச் செலவு செய்வதெல்லாம், நமக்குக் கிடைக்கக்கூடிய லாபங்களைப் பார்த்தால், ரொம்ப சொற்பமான தொகைதான் என்று சொல்லி யிருக்கிறார். இது தொடர்பான கருத்தைச் சொல்வ தென்றால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்குக்கூட தெரியும், படமெடுப்பவர்கள் டிஸ்ட்ரிபியூட்டர்களுக்கு விருந்து வைத்து சில படங்களை அவர்கள் தலையில் கட்டுவது சில படக்கம்பெனிகளில் வழக்கம், அதுபோன்ற நிலை மேகலா பிக்சர்சிலும் இல்லை, எம்.ஜி.ஆர். பிக்சர்சிலும் இல்லை என்பது

அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஆகவே, மத்திய அரசு அதிகாரிகளை நல்ல முறையில் உபசரிப்பதன் மூலம் ஆகக்கூடிய செலவு நமக்குக் கிடைக்கிற லாபத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மிக சொற்பம் என்று தொழில் அமைச்சர் சொல்கிறார் என்றால், ஏதோ மத்திய அரசு விசுவாமித்திரரைப் போலவும் மாநில அரசுகள் மேனகைகள் போலவும் இருந்துதான் இந்த வரங்களைப் பெற வேண்டுமா? மத்திய அரசுக்கு இதில் கடமை இல்லையா? மத்திய அரசிலிருந்து வருகிற அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட விருந்து, கேளிக்கைகள், நல்ல உபசரிப்புகள் கொடுத்தால்தான் அவர்கள் நமது தொழில்களுக்கு அனுமதி விரைந்து வழங்குவார்களா என்பதைத்தான் நான் மிகுந்த ஆதங்கத்தோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்னொரு கருத்தையும் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். எலெக்ட்ரானிக் தொழில்களை (கம்யூட்டர்ஸ்) தமிழ்நாட்டில் அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். எலக்ட்ரானிக் தொழிற்சாலைகளுக்கு நான் எதிரியல்ல. அவைகளை ஒட்டு மொத்தமாக வெறுப்பவனுமல்ல. சில எலெக்ட்ரானிக் தொழில் களின் மூலம் குறைந்த வேலைவாய்ப்புதான் கிடைக்கும். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், ஏராளமான மக்கள் இன்றைக்கு வேலை வாய்ப்பு இல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இருக்கின்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கும் போது, இந்தியாவிலேயே வேலைவாய்ப்பு அற்றவர்களின் எண்ணிக்கை என்று பார்க்கும்போது, தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று மத்திய அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எலெக்ட்ரானிக் தொழிற்சாலையை அதிகரிக்க கவனம் செலுத்துவதன்மூலம் குறைந்த ஆட்களைக் கொண்டு நிறைந்த உற்பத்தியைச் செய்ய முடியும். ஆனால் வேலைவாய்ப்புப் பிரச்சினையைத் தீர்த்திட இயலுமா என்பதையும் மனதில் கொண்டு இந்தக் கருத்திலே ஒரு மாறுபாடான நிலையை உருவாக்கி, வேவையில்லாத திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய அளவுக்கு தொழில்

திட்டங்களை இந்த அரசு நிறைவேற்ற முன்வருமா என்ற வினாவையும் நான் இங்கே எழுப்ப விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் உள்ளாட்சித் தேர்தல்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நாம் இந்த அவையில் பேசிக் கொண்டிருக்கும்போதே, மற்றொரு அவையில் உள்ளாட்சித் தேர்தல்கள் வருகிற ஆகஸ்ட் - செப்டம்பர் திங்களில் நடைபெறும் என்றும், அதைக் கையெழுத்துப் போட்டு எழுதிக் கொடுக்கக் கூடத் தயாராக இருக்கிறேன் என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். நாங்கள் பாராட்டவே இல்லையென்று யாராவது கேட்பீர்களேயானால், இதைப் பாராட்டாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் உள்ளாட்சித் தேர்தல்கள்பற்றி எந்த அளவுக்கு எத்தனை முறைகள் அமைச்சர்களால் தேதிகள் அறிவிக்கப்பட்டு மீறப்பட்டிருக்கின்றன என்று பார்த்தலே தெரியும் என்று நான் நம்புகிறேன். அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள், பல நேரங்களில் இந்த அவையிலும் அந்த அவையிலும் பல தேதிகளை இதே உள்ளாட்சித் தேர்தலுக்காக அறிவித்திருத்தார். அப்போது மழைக்காலமாக இருந்தால் என்ன செய்வது என்று ஒரு சமயம் கேட்டபோது, அவருக்கே உரித்தான தமிழில், 'அடாது மழை பெய்தாலும் விடாது உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்தே தீரும்' என்று எடுத்துக் கூறியிருக்கிறார்.

அவருக்குப் பிறகு வந்த அமைச்சர் திரு. குழந்தைவேலு பல முறை தேதிகளை இரு அவையிலும் அறிவித்திருக்கிறார். அதற்குப் பிறகு வந்த அமைச்சர் சௌந்தரராஜன், இந்தத் தேதிகளை அறிவித்திருக்கிறார். ஆனால் சமீபத்தில் காலையில் தேதி அறிவித்த அன்று மாலையில் அந்த இலாக்கா அவரிடமிருந்து மாற்றப்பட்டுவிட்டது. இப்போது நான்காவதாக இந்தத் துறைக்கு அமைச்சராக ஒருவர் வந்திருக்கிறார். அவராவது உள்ளாட்சித் தேர்தலை நடத்துவார் என்று நாம் நம்புவோம்.

இன்று காலையில் கூட ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு 'ஜோக்' வந்திருந்ததைப் படித்தேன். தூக்கு மேடைக்குச் சென்று நின்றுகொண்டிருக்கும் ஒரு கைதியைப் பார்த்து, சிறை அதிகாரிகள் "உன்னுடைய கடைசி ஆசை என்ன?" என்று கேட்கிறார்கள். அதற்கு அவன் "அடுத்த பஞ்சாயத்துத் தேர்தலில் நான் ஓட்டுப்போட உரிமை வேண்டும்" என்று சொல்கிறான். கைதியின் எண்ணம் "பஞ்சாயத்துத் தேர்தலே நடக்கப் போவதில்லை, எனவே அந்த உறுதிமொழியை நாம் இப்போது வாங்கி விட்டால், நாம் சாகத் தேவையில்லை' என்பதால் அப்படிக் கேட்கிறானாம். அப்படிப்பட்ட ஒரு நகைச்சுவையை, 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகை என்று கருதுகிறேன், இன்று வெயியிட்டிருக்கிறது.

ஆகவே, உள்ளாட்சித் தேர்தல்களுக்காக பலமுறை உறுதிமொழி அளிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட 11-7-1982-ல் பத்திரிகைகளுக்குத் தந்த அறிவிப்பு ஒன்றில், "தமிழ்நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் எப்போது வேண்டுமானாலும் நடக்கும், எந்த நிமிஷத்திலும் நடத்துவோம், வெற்றி தோல்வி பற்றி பயந்தவர்கள் நாங்கள் அல்ல" என்று குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு, "தமிழ்நாட்டில் நகரசபை, பஞ்சாயத்துத் தேர்தல்களை, நடத்த அரசு தயாராக இருக்கிறது, யார் கோர்ட்டுக்குப் போனாலும், மக்களிடம் நிலைமையை விளக்கி விட்டு, பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவோம்" என்று 7-6-1983-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார், பின்னர் 3-6-1984-ல் நகரசபை மற்றும் மாநகராட்சித் தேர்தல்களில் வாக்காளர்களுக்கு புகைப்படத்தோடு கூடிய அடையாள அட்டையைத் தருவோம் என்று அவர் அப்போது சொன்னபோது, அது சாத்தியமா என்று நிருபர்கள் கேள்வி கேட்டார்கள். அதற்கு, இதுபற்றி தலைமைச் செயலாளர், மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தே கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. என்னுடைய நம்பிக்கை நான்கைந்து மாதங்களில் நிச்சயமாகப் படங்கள் எடுக்கப்பட்டு, ஒட்டப்பட்டு தேர்தல்களை நடத்த முடியும் என்பதுதான்" என்று முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்குப் பிறகு நிருபர்கள் கேட்கிறார்கள், "அப்படியானால் ஏன் நகராட்சி தனி அதிகாரிகளின் பதவிக்

காலத்தை நீட்டிக்க சட்டம் கொண்டுவருவது?'' என்று. "அதனால்தான் பதவிக் காலம் ஆறு மாதம் நீட்டிப்புக்கு சட்டம் கொண்டு வருகிறோம், ஆறு மாதத்தில் நிச்சயம் நடக்கும்" என்று 1984-ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளுக்கு உறுதியாகத் தெரிவித்தார்.

சட்டமன்றத்தில் 13-2-1984-ல் இரண்டு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரை என்று சொல்லப்படுகிற அந்த அறிக்கையில், "சட்டமன்றப் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்ததும்,உரிய நேரத்தில் இரண்டு கட்டமாக 19-4-1984 அன்றும் 23-4-1984 அன்றும் ஊராட்சித் தேர்தல்களை நடத்தவும் நகராட்சித் தேர்தல்களை 28-4-1984 அன்று நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளதென்று சென்ற ஆண்டு அச்சடித்தே கொடுத்திருக் கிறார்கள். இப்போது நமது நிதியமைச்சர் நாவலர் அவர்கள் எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறேன் என்று சொல்கிறார். அச்சடித்துக் கொடுத்ததே நிறைவேறாதபோது எழுதிக் கொடுப்பதாவது நிறைவேறுமா? என்ற ஐயப்பாடு எங்களுக்கு இருக்கிறது. இருந்தபோதிலும் இந்த ஆண்டு கவர்னர் உரையில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள்பற்றி எதுவுமே குறிப்பிடப்பட வில்லை. எதிர்க் கட்சிகள் குறையே சொல்வதா என்று கேட்பவர்களுக்குச் சொல்கின்றேன். எதிர்க் கட்சிகள் கருத்துக்களைச் சொன்னால்தான், சில நேரங்களில் நிவாரணம் கிடைக்கிறது என்பதற்கு உதாரணமாகத்தான், அந்த அவையிலும் இந்த அவையிலும் ஆளுநர் உரையிலே ஊராட்சி மன்றத் தேர்தல் களைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்கின்ற குற்ச் சாட்டுகளை எடுத்து, அவையின் முன்னால் வைத்த காரணத்தாலும், திராவிட கழகத்தின் சார்பில் நாடு தழுவிய போராட்டம், ஒவ்வொரு சிற்றூர், பேரூரிலும் நடத்தப்பட்ட காரணத்தினாலும், ஆளுநர் உரையிலே இல்லாத ஒன்றை நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்கிறபோது, எதிர்க் கட்சியினுடைய பணி எவ்வளவு தேவை என்பதை அரசு உணரும் என்று நான் நம்புகிறேன். எதற்கெடுத்தாலும் குற்றம் சொல்கிறோம் என்பதற்காக அல்ல, எடுத்துக்காட்ட வேண்டிய குறைபாடுகளை எடுத்துக்காட்ட வேண்டிய கடமையை எதிர்க் கட்சிகள் நிறைவேற்றுகின்றன என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேனேயல்லாமல் வேறல்ல.

நான் பாராட்டக்கூடிய மற்றொரு செய்தியையும் இந்த ஆளுநர் உரையிலே சொல்ல வேண்டும். நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் - அவையினுடைய முன்னவர் - அவர்கள் சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசுக்கு ஒரு தந்திச் செய்தி அனுப்பியதாக செய்தித்தாள்களிலே செய்தி வெளிவந்தது. "இந்தி வேகமாகப் பரப்பப்பட தொலைக்காட்கிள் இன்றைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அதிலே நேஷனல் பிரோகிராம் என்கின்ற பெயரால் அதற்காக அதிக நேரம் ஒதுக்கப்பட்டு, இந்தி பரப்பப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அந்த நேரத்தைக் குறைக்க வேண்டும்" என்ற ஒரு செய்தியை அவர்கள் டில்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்பதற்கு 15-3-1984 அன்று - மூன்று நாட்களுக்கு முன்பு - டில்லி பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்கள் ஒரு மொழி மசோதாவின் மீது - அதாவது நேபாள மொழியை எட்டாவது அட்டவணையிலே இனைத்திட வேண்டுமென்கின்ற தனி நபர் மசோதாவின் மீது - அந்த மன்றத்திலே அதனை ஆதரித்துப் பேசினார்கள். அவ்வாறு பேசும்போது ஆங்கலத்திலேயே பேசுகிறார், "I express my thanks to the Hon. Deputy Speaker for having permitted me to express my opinion on behalf of the D.M.K..... " இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் - அதாவது இந்திப் பகுதியிலேயிருந்து வந்திருக்கக் கூடிய உறுப்பினர்கள் எழுந்து, "Sir, to-day it has been decided the eveyone should speak either in his regional language or in the National language, that is, Hindi," என்று அழுத்தந்திருத் தமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது நாம் முடிவு எடுத்தபடி இந்த மன்றத்திலே ஒன்று அவரவர்கள் தாய்மொழியிலே பேசவேண்டும், இல்லாவிட்டால் தேசீய மொழியான இந்தியிலேதான் பேசவேண்டும் என்று

அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக் கிறார்கள். அப்போது டாக்டர் கலாநிதி அவர்கள், "We cannot accept that. It is an encroachment on my fundamental right. We cannot accept Hindi as a national language. I have every right to speak in any language I like. Being an Hon. Member, he should learn it. I have every right to speak in my own language or in English. In fact, Jawaharlal Nehru accepted English as a link language. He should understand that." என்று கூறியிருக்கிறார்கள். "ஆங்கிலம்தான் நாட்டின் தொடர்பு மொழி - Link Language - என்று நேரு அவர்களே ஒத்துக்கொண்டிருக் கிறார்கள். அந்த அடிப் படையிலேதான் நான் ஆங்கிலத்திலே பேசுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். பாராளுமன்றத்தில் வேறு மொழிக்காரர்கள் இருக்கின்ற காரணத்தினால், தமிழிலே பேசி, அது அந்த மொழியிலே மொழிபெயர்க்கப்படுகின்ற நேரத்தில் அது எந்த அளவுக்கு சரியாக மொழி பெயர்க்கப்படுகிறது என்பது, நாடாளுமன்ற அனுபவம் உள்ளவர்களுக்குத் தெரியும். அதைப்போல நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே ஆங்கிலம் தெரிந்தவர்கள், ஆங்கிலத்திலே அந்தக் கருத்துக்களை எடுத்துக்சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருந்தாலும்கூட இந்திப் பகுதியிலிருந்து வருகின்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆங்கிலத்திலே பேசுவதைக் தடுக்கிறார்கள். கூச்சல் போடுகிறார்கள் என்கிறபோது, நேருவினுடைய உறுதிமொழி என்ன ஆயிற்று என்கின்ற கேள்வி எழாமல் இல்லை. ஆனால் நல்லவேளையாக அ. இ. அ. தி. மு. க.விலிருந்து தேர்த்தெடுக்கப் பட்ட துணை சபாநாயகர் மாண்புமிகு திரு. தம்பிதுரை அவர்கள் "You carry on . . . " என்று சொல்லி டாக்டர் கலாநிதியைப் பேசுமாறு சொன்னதற்குப் பிறகு அவர் ஆங்கிலத்திலே பேசியிருக் கின்றார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நேருவினுடைய உறுதிமொழி "இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்றவரை ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்" என்பதுதான். அதைத்தான் கடந்த காலத்திலே 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் தேர்தல் உடன்பாடு கொண்ட அந்த நேரத்தில், சென்னை கடற்கரையில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவிலே திருமதி இந்திரா காந்தி

அம்மையார் அவர்கள் பேசுவதற்கு முன்பு பேசிய நான் "தங்களுடைய தந்தையார் தந்த உறுதிமொழியை தாங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்; அந்த வாக்குறுதியை நீங்கள் இந்த மாபெரும் கூட்டத்திலே தமிழ் நாட்டு மக்களுக்கு அளிக்க வேண்டும்" என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டேன். அதற்குப் பின்னர் பேசிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் - அப்போது அவர்கள் பிரதமராக இல்லை - " என் தந்தை நேரு அவர்கள் தந்த வாக்குறுதியை நான் நிச்சயமாகத் தொடர்ந்து கடைப் பிடிப்பேன்; இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்றவரை ஆங்கிலம் தொடர்வு மொழியாக நீடிக்கும்; அதிலே நான் உறுதியாக இருக்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள். நேரு சொன்னர்; உறுதியாக இருந்தார். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னார்கள்; கூடுமான வரையில் உறுதியாக இருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாமலேயேகூட இந்தியை இந்தியாவிலே ஒரு ஆதிக்க மொழியாக ஆக்கி மற்ற மொழிக்காரர்களை எல்லாம் இரண்டாம் தரக் குடிமக்களாக ஆக்கிவிட வேண்டுமென்று கருதுகின்ற இந்தி வெறியர்கள் பல முனைகளிலும் இந்தி ஆதிக்கத்தை இந்தியாவிலே, குறிப்பாகத் தமிழகத்திலே நிலை நாட்ட முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். எனவேதான் எந்தக் காலத்திலே யார் வந்தாலும்கூட, அசைக்க முடியாத அளவிற்கு, நேருவினுடைய உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டுமென்கின்ற அந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்திவருகிறது. அந்தக் கருத்துக்கு மாறுபாடான கருத்து ஆளும் கட்சிக்கு நிச்சயமாக இருக்க முடியாது என்று நான் நம்புகின்றேன். எனவே மாநில அரசின் சார்பாக நேருவினுடைய உறுதிமொழி அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டுமென்று வலியுறுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றைதினம் தமிழ்நாட்டு மக்களை மிகக் கொதிப்படையச் செய்து கொண்டிருக்கின்றது ஸ்ரீலங்கா பிரச்சினை ஆகும். இந்த ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்தும் நாவலர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினைக்கு கிட்டத்தட்ட 2 அல்லது 2½ ஆண்டுக்

காலத்திற்கு மேலாக தமிழ்நாட்டிலே பல்வேறு கட்சிகளின் சார்பிலும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், ஆளுங்கட்சியின் சார்பிலும் எடுக்கப்பட்ட அவரவர்களுக்கு ஏற்ற நடைமுறைகளின் காரணமாக எந்த நல்லதொரு முடிவும் இதுவரையிலே கிடைக்கவில்லை. பேச்சு வார்த்தைகளின் மூலமாக இது தீர்க்கப்படும் என்று ஒரு காலத்திலே நாம் நம்பவைக்கப்பட்டோம். இந்தப் பிரச்சினை 1958 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்காவிலே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக் கின்ற பிரச்சினை. ஆனால் அதற்கு உச்சகட்டமாக 1983 ஆம் ஆண்டு ஒரு இனப் படுகொலையே நடைபெறத் தொடங்கி இன்னும் ஓராண்டுக் காலத்திலே ஸ்ரீலங்காவிலே தமிழினமே அழிக்கப்பட்டு விடுமென்று அமிர்தலிங்கம் அவர்களே அஞ்சி, கலங்கி, நெஞ்சு நெக்குருக அறிக்கை விடுகின்ற அளவிற்கு அந்த நிலைமை இன்றைக்கு முற்றிப் போயிருக்கின்றது. நான் ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன். 1979 ஆம் ஆண்டு திருமதி. இந்திரா காந்தி அம்மையா அவர்கள் பிரதமராக இல்லாத நேரம். எதிர்க் கட்சியிலே இருந்த நேரம். அப்போது ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்து திரு. வைகுந்தவாசன் என்கின்ற தமிழர் களுக்காகப் போராடிக் கொண்டிருக்கிற பிரமுகர் திருமதி. இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கு திரு. வைகுந்தவாசனுக்கு திருமதி. இந்திரா காந்தி அம்மையார் ஒரு பதில் கடிதம் அனுப்பினார்கள். அந்தக் கடிதத்தில்,

"Dear Mr. Vaikuntavasan,

I have just received your letter of the 22nd August and I was horrified to see the enclosures. The Janata Party Government is going out of its way to be friendly with the present Government of Sri Lanka.

At the moment all attention is on our election. I will see if it is possible to bring this issue to the notice of the public in some other way.

Yours sincerely.

Indira Gandhi.

என்று ஆகஸ்ட் 27, 1979-ல் திரு. வைகுந்தவாசன் அவர்களுக்கு திருமதி. இந்திரா காந்தி அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

அப்போது மத்தியிலே அவர்கள் ஜனதா ஆட்சியைக் குறை கூறி, "அவுட் ஆஃப் தி வே சென்ற அவதாவது தவறான வழியிலே சென்று, ஸ்ரீலங்காவோடு நட்பு உரிமை பாராட்ட மத்திய அரசிலே இருக்கின்ற ஜனதா அரசு விரும்புகின்றது. அந்தக் காரணத்தினால் நான் சந்தேகப்படுகிறேன். தமிழகத்தினுடைய துன்பம் போக்கப் படுமா, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று சந்தேகப் படுகிறேன். எப்படி இருந்தாலும் எந்த வகையிலாகிலும் பொது மக்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன்" என்று அன்றைக்கு திருமதி இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்கள். ஆனால் 1983-ல் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் பிரதமராக இருந்த நேரத்தில்தான் ஸ்ரீலங்கா தீவில் இந்தக் கொடுமை நடைபெற்றது. அந்தக் கொடுமை நடைபெற்றபோது இந்திய அரசின் தவறைச் சுட்டிக்காட்டி, திரு. ஜி. கே. ரெட்டி அவர்கள் 'இந்து' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையின் ஒரு பகுதியில் அவர் தெரிவிக்கிறார் :

"The Government of India has also not taken the trouble to agitate international opinion over the years about the true character of Tamil problem in Sri Lanka, since most countries seem to imagine that all persons of Indian origin in the island are the descendants of about taken by the British from the nearby Tamil Nadu to work in the plantations."

இது 21-8-1983-ல் இந்த பத்திரிகையில் திரு. ஜி. கே. ரெட்டி அவர்கள் எழுதிய கட்டுரையில் உள்ளது. அதில் "ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்கள் அனைவரும் பிரிட்டிஷாரால் ஸ்ரீலங்காவில் தொட்டத் தொழிலாளர்களாக வேலைக்குக் கொண்டு செல்லப் பட்டவர்களின் சந்ததியினரே, என்ற எண்ணத்தைக் கொண்டுள்ள பல வெளிநாடுகளின் கருத்தை மாற்றி ஸ்ரீலங்கா தமிழர்களின் உண்மையான நிலைமைகளை உலக நாடுகளிடம் தெரிவிக்கும் பணியை இந்திய அரசாங்கம் நிறைவவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதே நேரத்தில் அதே ஆண்டில் "டைம்ஸ் ஆப் இந்தியா" ஒரு கருத்தைத் தெரிவித்தது :

"While it is understandable that foreigners wanting to confuse the issues and immobilise New Delhi on a matter of the

deepest concern to it should talk of interference by this country in Sri Lanka's internal affairs, it is shocking that items of us should also fall victim to that kind of interested propaganda campaign. The future of Tamil Nadu citizens in Sri Lanka is not just that island's internal problem and cannot be treated as much by this country because its own vital interests are involved." அதாவது "ஆழமாக அக்கறை செலுத்தப்பட வேண்டிய இந்தியப் பிரச்சினையை ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதாக வெளிநாடுகள் குழப்பி, டெல்லியைச் செயல்படவிடாமல் தடுப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது என்றாலும், நம்மவர்களில் சிலரும் அதுபோன்ற பிரச்சாரத்திற்கு இரையாகி இருப்பது ஒரு அதிர்ச்சியை உருவாக்குகிறது. ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர்களின் எதிர்காலம் அந்தக் தீவின் உள்நாட்டுப் பிரச்சினையல்ல. இந்தியாவின் நலன்களும் அதில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எனவே இந்தியா அதை உள்நாட்டுப் பிரச்சினை என்று கருதக்கூடாது" என்று எழுதியிருக்கிறது.

அடுத்து தமிழக அமைச்சர் மாண்புமிகு திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. சபையில் பேசும்போது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

"We confined ourselves only to the extent of flow of refugees from Sri Lanka. We neither criticised the policies of Sri Lanka nor criticised the actions of the Government of Sri Lanka. In fact, even in my intervention I had made it clear that we do not intend to interfere in the interest affaris of Sri Lanka. India does not support any separatist movement." அவர் பேசியது, "நாங்கள் அகதிகள் விஷயம்பற்றி மாத்திரம் நிறுத்திக் கொண்டோம். ஸ்ரீலங்கா அரசின் செயலையோ அல்லது ஸ்ரீலங்கா அரசின் கொள்கை யையோ விமர்சிக்கவில்லை. ஸ்ரீலங்கா வினுடைய உள்நாட்டு விவகாரத்தில் நாங்கள் தலையிடுமாறு சொல்லவில்லை. தலையிட வேண்டுமென்று விரும்பவுமில்லை" என்பதுதான். ஸ்ரீலங்காவில் உள்ள எந்தப் பிரிவினை இயக்கத்தையும் இந்தியா ஆதரிக்க வில்லை என்று அமைச்சர் மாண்புமிகு திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. வில் குறிப்பிட்டார்கள். ஒருவேளை இப்போது அந்த நிலை இல்லை என்பதையும் அவர்களும் அவர்கள் சார்ந்துள்ள இந்த அரசும் உணரும் என்று நான் நம்புகிறேன். அது ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையாக

ஒரு காலத்தில் இருந்திருக்கக்கூடும். ஆனால் ஒரு இனப் படுகொலையே நடைபெற்று, அந்த இனப்படு கொலை தடுக்கப்படாமல் அது தொடர்ந்து நடைபெற்று இன்றைக்கு ஸ்ரீலங்காவில் தமிழ் இனமே பூண்டோடு அற்றுப் போய்விடும் என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் நேரத்தில், அதை உள்நாட்டுப் பிரச்சினை என்று அன்றைக்கு இந்த அரசின் சார்பில் சொல்லப்பட அந்தக் கருத்துகூட இன்றைக்கு மாறியிருக்கும் என்று நம்புகிறேன், மாற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அமெரிக்காவிலிருந்து வெளியாகிற "Christian Science Monitor" என்ற ஏட்டில் ஒரு செய்தி வெளியிடப் பட்டிருக்கிறது. அதாவது "சிங்கள இராணுவத்தினர் 30 பேர் மன்னார் பகுதியிலுள்ள மக்களை, தமிழ் மக்களைக் கொன்று குவிக்கத் தொடங்கிவிட்டனர். இவர்களது படுகொலைத் தாக்குதல் ஆறு மணி நேரம் தொடர்ந்தது. மன்னார் நகரில் மத்திய மருத்துவ மனையில் இராணுவத்தினர் வெறிபிடித்துத் தாக்கினார்கள். சாலையில் சென்ற வாகனங்களைத் தடுத்து நிறுத்தி அதில் இருந்தவர்களை வெளியே இழுத்துப்போட்டு அந்த இடத்திலேயே ஈவு இரக்கமின்றி சுட்டுக் கொன்றார்கள். அருகில் உள்ள அஞ்சலகத்தில் பணி புரிந்து கொண்டிருந்த ஊழியர்களை வரிசையாக நிற்க வைத்து நிர்தாட்சண்யமாகச் சுட்டுப் படுகொலை செய்தார்கள். வயலில் வேலைபார்த்துக் கொண்டிருந்த ஊழியர் களையும் சிங்கள இராணுவத்தினர் விடவில்லை. அவர்களையும் சுட்டுக் கொன்றார்கள். இத்தாக்குதலில் அன்றைக்கு மாத்திரம் சுமார் 145 முதல் 150 பேர் செத்தார்கள். இருபது தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். அவர்கள் அருகில் இருக்கும் இராணுவ முகாமுக்கு இழுத்துச் செல்லப் பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறினார்கள் . . . . " என்று எழுதப்பட்டிருக்கிறது.

இப்போது இராமேஸ்வரம் பகுதியில் மாத்திரம் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற மீன்பிடி தொழில் முடங்கிக் கிடக்கிறது. 1,500-க்கு மேற்பட்ட படகுகள் இன்றைக்குக் கடலில் பயணம் செய்ய முடியாமல், மீனவர்கள் கடலில் செல்ல முடியாமல், அந்தப் படகுகளும் கரையோரங்களில் முடங்கிக் கிடக்கின்றன. நான் முதலிலே குறிப்பிட்டபடி, 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிற தொழில் அங்கே நசித்துப் போயிருக்கிறது என்பதை இந்திய அரசும் மறந்துவிடக் கூடாது.

அந்த அகதிகளுடைய வரத்து இப்போது குறைந்து விட்டது என்று நேற்று தொலைக் காட்சியில் ஒரு செய்தி சொன்னார்கள். அந்த முதல் வாசகத்தைக் கேட்டபோது, எனக்குக்கூட கொஞ்சம் மகிழ்ச்சியாக இருந்தது. "அகதிகளுடைய வரத்து குறைந்துவிட்டது. இன்றைக்கு 24 குடும்பங்கள்தான் வந்து இறங்கினார்கள்" என்று சொல்லப்பட்டது. நான் மகிழ்ச்சியோடு அடுத்த வரிகளைக் கவனித்தேன். அப்படி வரத்து குறைவதற்கான காரணம் ஸ்ரீலங்கா அரசு அங்கேயிருந்து வருகிற விசைப்படகு களைத் தடுத்து நிறுத்தி விட்டது என்பதுதான். அங்கே அடிபட்டு, உதைபட்டு, கற்பழிக்கப்பட்டு, மானபங்கப்படுத்தப்பட்டு திக்கு திசை மாறி எங்கேயாவது செல்லலாம் என்று தமிழகத்திற்கு ஓடி வர விரும்புகிற சூழ்நிலையில்கூட அந்தப் படகுகள் அவர்களுக்குக் கிடைக்காதபடி தடுத்துவிட்ட காரணத்தால்தான் நேற்றைய தினம் அகதிகள் வரத்து குறைத்திருக்கிறது. எனவே அவர்கள் இங்கே வந்து தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் வேதனைக்கு ஆளாகியிருக் கிறார்கள். அந்த வேதனைகள் பத்திரிகையில் வெளிவருகின்றன. இந்த மேலான மன்றத்திலும் அந்தக் கருத்துக்கள் என் சார்பிலும், கழகத்தின் சார்பிலும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காக சிலவற்றை நம்முடைய உணர்ச்சிகளைத் துண்டுவதாக இருந்தாலும், உள்ளத்தில் அழ வைக்கக் கூடியாக இருந்தாலும் அவைகளை - எடுத்துக்கூறுவது தமிழன் என்ற முறையில் எனது கடமை என்று சொல்லுகிறேன்.

அகதி முகாமில் உள்ள விஜயகுமார், பத்மநாபன் என்ற இருவர் சொன்ன செய்திகள் : "யாழ்ப்பாணத்திலிருந்து பத்து மைல் தூரத்தில் இராணுவமுகாம் உள்ளது. இராணுவத்தினர் விடுதலைப் புலிகளைத் தேடுகிறோம் என்று கூறிக்கொண்டு வீடுகளில் புகுந்து இளம் பெண்களையும், வாலிபர்களையும் அழைத்துச் செல்கிறார்கள். ஆண்களை, தலைமுடியை பிடித்து இழுத்து, மீசையை முறுக்கி விட்டு தடியால் அடித்தும் துன்புறுத்தினார்கள். இரண்டு கைகளையும் உயரே மரத்திலே கட்டி வைத்து 'விடுதலைப் புலிகள் எங்கே? என்று கேட்பார்கள். பிறகு அவர்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சுட்டுத் தள்ளுவார்கள். ஹெலிகாப்டர் மூலம் ரோந்து சுற்றி வரும்போது விஷ மருத்துகளையும், ஆசிட் திராவகத்தையும் தமிழர்கள் வாழும் பகுதியில் வீசி காயங்களை ஏற்படுத்துவார்கள்."

சேகர் என்ற அகதி சொல்கிறார் : "பள்ளிக்கூடம் சென்று விட்டு திரும்பும் மாணவர்களை நிறுத்தி வைத்துச் சுடுகிறார்கள். 'இவன்தான் வருங்கால விடுதலைப் புலி. இதோடு தொலை போ' என்று சொல்லி காலால் மிதித்துக் கொல்லுகிறார்கள். வீடுகளில் புகுத்து பெற்றோர்கள், சகோதரிகள் கண்முன்னால் இளம் பெண்களை கற்பழித்துக் கொடுமை செய்கிறார்கள். யாழ்ப்பாணம் குருநகர் இராணுவ முகாமில் 300 தமிழ்ப் பெண்களைக் கைதிகளாக வைத்துள்ளார்கள். அவர்களுடைய மானம் என்னவாயிற்று என்றே தெரியவில்லை. தமிழ் பெண்களை இராணுவத்தினர் கற்பழிக்கும்போது, 'இப்போது உன் வயிற்றில் ஈழப் புலி பிறக்காது. சிங்களச் சிங்கம்தான் பிறக்கும்' என்று கிண்டல் செய்கிறார்கள்.

பேசாலையிலிருந்து இந்தியாவிற்கு தப்பி வந்துவிட்ட ஹெலென் குரூஸ் என்ற பெண்மணி சொல்லும்போது, "இலங்கை தமிழ் பெண்கள் உயிருக்கு மாத்திரம் அஞ்சி தமிழத்திற்கு வரவில்லை; உயிரினும் மேலான மானத்தைக் காக்க இங்கே புகலிடம் தேடி வருகிறார்கள்" என்று குறிப்பிடுகிறார்கள்.

1983 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் "தமிழ் ஈழத்தை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தையும், தமிழ் ஈழம் தனியாக தமிழர்களுக்காகத் தர இந்திய அரசு எல்லா உதவி களையும் செய்ய வேண்டும், ஸ்ரீலங்காவில் ஓர் இனம் அழிந்து கொண்டிருப்பதைத் தடுத்திட, மனிதாபிமானத்தோடு பங்களா தேஷில் எடுத்த நடவடிக்கையைப்போல, பாலஸ்தீன விடுதலைக் கிளர்ச்சிக்கு தருகிற ஆதரவைப் போல் ஸ்ரீலங்கா தமிழர் விடுதலைக் கிளர்ச்சிக்கும் இந்திய அரசு ஆதரவு தர வேண்டும், தேவைப் பட்டால் இராணுவத்தை அனுப்ப வேண்டும்" என்று எடுத்துச் சொன்ன கருத்து இன்றைக்கு ஆளும் கட்சியிலே உள்ள அத்தனை பேராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறதோ இல்லையோ, ஒரு சில உறுப்பினர்களால் எதிரோலிக்கப்படுகிறது என்பதைக் காண்கிறேன். அதைப் போலவே காங்கிரஸ் கட்சியிலுள்ள வளர்ச்சி கொண்ட, துடிப்புள்ள சிலர் இராணுவத்தை அனுப்பித்தான் தீர வேண்டும் என்று சொல்லுவதையும் என்னால் காண முடிகிறது. அது மட்டுமல்ல. நடுநிலையாக இருந்து, அமைதியாக 'கன்சர்வேட்டீவ் தாட்ஸ்' என்பதைப் போல கருத்துக்களைச் சொல்லக்கூடிய ஏடுகளில்கூட, அதாவது கல்கி 10-3-1985 இதழில்

"இலங்கையில் நடப்பது தூக்கத்தை விரட்டுகிறது. உணவை வெறுக்கச் செய்கிறது. ஜெயவர்த்தனே ஆட்சியால் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது மட்டுமல்ல, இலங்கை அரசால் இலங்கை இராணுவத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விடுதலைப் புலிகளை வளைத்துப் பிடிக்க திராணியற்ற இராணுவம் அப்பாவி தமிழர்களைப் பழி வாங்குகிறது. நள்ளிரவில் தமிழர்கள் பகுதிகளில் புகுந்து கற்பழிக்கிறது. கொல்லுகிறது, கொள்ளை அடிக்கிறது. அகதிகளாக தமிழகத்திற்கு தப்பி ஓடிவரச் செய்கிறது. இதையெல்லாம், வீடு, வாசல், சொத்துக்கள் எல்லாம் இழந்து அங்கேயிருந்து வருகிற பல்லாயிரக்கணக்கான அகதிகள் கண்ணீர் கதைகள் வடிக்கின்றார்கள். அயல்நாட்டுப் பத்திரிகைகளும் சான்று தருகின்றன. ஆனால் நமக்கு என்னவோ ஈழத்து அரசை விடவும், மத்திய அரசின் மீதுதான் அதிகக் கோபம் வருகிறது. ஈழத் தமிழர்கள் துயர் துடைக்க இன்றுவரை நமது மத்திய அரசு என்ன வன்மையான நடவடிக்கையை எடுத்துள்ளது என்று பார்த்தால், உதட்டைப் பிதுக்க வேண்டியதாக இருக்கிறது. ஸ்ரீலங்கா மீது படையெடுக்கச் சாத்தியம் இல்லை என்று திரும்பத் திரும்பக் கூறி வருவதால், ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு மேலும் துணிச்சலைத் தந்து மேலும் அராஜகத்திற்கு வழி வகுத்ததைவிட அதிகமாக மத்திய அரசு என்ன செய்துவிட்டது? படையெடுக்க விரும்பவில்லை ஆனாலும் அந்த நிர்ப்பந்தத்திற்கு எம்மை ஆளாக்காதீர் என்று கூறினாலாவது கொஞ்சத்திற்குக் கொஞ்சம் சிங்களவர்களுக்கு பயமாக இருக்கும். அதுதான் போகட்டும், வேறு என்ன செய்தது புது டெல்லி . . . " இப்படி கல்கி பேசுகிறது. 'உலக அபிப்பிராயத்தை உருவாக்கியதா? ஐ.நா. சபையிலே பிரச்சினையைப்பற்றி வன்மையாகப் பேசப்பட்டதா? ஒரு அமைதிப் படை ஐ.நா. சபை சார்பில் அனுப்புமாறு கோரிக்கை பிறந்ததா? ஒரு மண்ணும் இல்லை. ஏதோ ஜி. பி. போனார், வந்தார்; அமிர்தலிங்கம் சென்றார், திரும்பினார், முடிந்தது கதை என்று இருக்கிறது. இந்த ஏனோ தானோ மனப்பான்மை மாறி, பிரச்சினை தீர ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு கடுமையான பிரயாசையை அவசாரமாக மேற்கொள்ள வேண்டும். முனைவாரா? ஏங்குகிறான், தமிழன்' என்று 'கல்கி இதழ் மார்ச் 10 ஆம் தேதி, ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது.

அதே மார்ச் 10 ஆம் தேதி ஆனந்தவிகடனில் வந்திருக்கிறது. "நாளுக்கு நாள் பாரதமாதாவின் பாதத்தின் அடியில் புரையோடிக் கொண்டிருக்கும் இந்தப் புண் எப்போது எந்த சிகிச்சையால் ஆறும் என்பது எல்லோராலும் கேட்கப்படும் ஒரு கேள்வி ஆகிவிட்டது. நாள்பட்டு புரையோடிவிட்ட புண்ணுக்கு அறுவைச் சிகிச்சைதானே வைத்தியம். அது எப்போது என்றுதான் எதிர்ப்பார்த்தபடி இருக்கிறார்கள்" என்று கட்டுரையாளர் இந்தக் கருத்தை கூறியிருக்கிறார்.

எனவே ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி நான் இவ்வாறு கருத்து கூறுகிற நேரத்தில் இந்த அளவில் தலைவர் அவர்களுக்கு ஒரு வேதனையான செய்தியையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது.

நம்முடைய தமிழகத்தின் சார்பில் மத்தியிலே உதவி அமைச்சராக பொறுப்பேற்றிருப்பவர்கள் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார் அவர்கள். அவர்களை ஆனந்தவிகடன் நிருபர் பேட்டி கண்டு, ஸ்ரீலங்கா தமிழர்கள் பற்றி சில கேள்விகளைக் கேட்கிறார். அவர் 'ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி' என்றுதான் ஆரம்பிக்கிறார். அதற்கு மத்திய உதவி அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் சொல்கின்றார், கொஞ்சம் கோபத்தோடு பதில் சொல்கிறார். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினைபற்றி என்று ஆரம்பித்தபோது, அம்மையார் அவர்கள், "தயவு செய்து இந்தப் பிரச்சினையை ஒரு இந்தியப் பிரச்சினையாகக் கருதுங்கள். தமிழர் பிரச்சினை என்று சொல்லி அதன்மூலம் ஒரு பிராந்திய உணர்வு ஏற்படும்'' என்று ஆணித்தரமாகப் பேசினார். "நான் ஒரு இந்தியன் என்று சொல்லத்தான் விரும்புகிறேன். தமிழ் மொழி, தாய்மொழி பக்தி என்று நிச்சயம் இருக்க வேண்டும். ஆனால் அதுவே ஒரு வெறியாக ஆகிவிடக்கூடாது. தமிழ், தமிழ் என்று கூறி எவ்வளவு நாசம் செய்துவிட்டார்கள் தமிழ்நாட்டை" என்று கூறியிருக்கிறார். மேலவைத் தலைவர் அவர்களே, உங்கள் முன்பாக இந்த வார்த்தைகளை நான் உச்சரிக்கும் போது, உங்களுடைய உணர்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை என்னால் புரித்து கொள்ள முடிகிறது. தமிழ், தமிழ் என்று கூறி நம் தமிழ்நாட்டை நாசம் செய்துவிட்டார்கள் என்கின்ற

ஆதங்கத்தோடு, அங்கலாய்ப்போடு மத்தியிலே அமைச்சராக இருக்கின்ற திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார் அவர்கள் 'இது தமிழர் பிரச்சினை' என்று சொல்லாதீர்கள். இது 'இந்தியர் பிரச்சினை' என்று சொல்கின்றார்கள். நான் கேட்கிறேன் ஸ்ரீலங்காவிலே இந்தியர் ஏது? ஸ்ரீலங்காவிலே சிங்களவர், தமிழர் இந்த இரண்டு இனங்கள்தானே இருக்கின்றன.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே அமைச்சராக இருக்கக்கூடிய திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் சொன்ன கருத்தைப்பற்றி இங்கே கூறுகிறபோது, எந்தச் சூழ்நிலையில் அவர்கள் பதில் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டாவதாக, அவர் சொன்ன கருத்தைப் படித்தபோது, ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களுக்கு விரோதமானதாக அவர் எதுவும் சொல்லவில்லை, மூன்றாவதாக சொல்லவேண்டுமானால், தமிழர் பிரச்சினை என்று சொல்வதைவிட இந்தியப் பிரச்சினை என்று சொன்னால், அதனால் பலன் கூடும் என்பதற்காகச் சொன்னாரே தவிர, தமிழர்கள் நலன் களுக்கு விரோதமாகச் சொன்னார் என்று வாதாட முடியாது.

கலைஞர் மு. கருணாநிதி : தமிழர் பிரச்சினை என்பது பிராந்திய உணர்வு என்று அவர் குறிப்பிட்டிருப்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. தலைவர் அவர்களும் அங்கே இல்லாமல், வேறு இடத்திலேயிருந்து பதில் அளித்தால், அவர்களும் 'தமிழர்கள் உணர்வுகளை பிராந்திய உணர்வுகள்' என்று சொல்வதை, நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் அவர்கள் நடுநிலைமையில் இருந்து தீர்ப்பு அளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். நான் அவரை சங்கடத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. ஆனால் "தமிழ், தமிழ் என்று கூறி நாட்டை நாசம் செய்துவிட்டார்கள்" என்று குறிப்பிடுவது உள்ளபடியே ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தல்ல. ஆனால் 'ஆனந்தவிகடன்' பத்திரிகையிலே அது வந்துள்ளது. எதையும் மாற்றிச் சொல்லவில்லை. இதே கருத்துதான். அதை இந்தியப் பிரச்சினை என்று சொல்வது மிக நலம் என்று அவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய எதிர்க் கட்சி தலைவரவர்கள் சொல்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன். நான் ஒரு கூட்டத்தில்கூடச் சொன்னேன். அதை இந்தியப் பிரச்சினை என்று

அம்மையார் அவர்களே ஏற்றுக்கொள்ளும்போது, என்னுடைய வாதம் இன்னும் பலமாகிறது. தமிழர்களுடைய பிரச்சினை என்ற காரணத்தாலே தலையிட முடியாது, அது உள் நாட்டு பிரச்சினை என்று சொல்லுகிறார்கள், அது இந்தியப் பிரச்சினை ஆகிவிடுகிறது. ஆக தமிழர் பிரச்சினை என்றால் அது எவ்வளவு மட்டம் அது இந்தியப் பிரச்சினை என்றானால்தான் அதில் வலு. சரி எங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, எங்கள் தமிழினத்தை வாழ வைப்பதற்காக, எங்கள் தமிழச்சிகளின் மானத்தை, கற்பை ஸ்ரீலங்காவில் பாதுகாப்பதற்காக இதை ஒத்துக் கொள்கிறேன். அது இந்தியப் பிரச்சினை என்ற உணர்வின் மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இந்திய பட்ஜெட்டிலே 8,000 கோடி ரூபாய் இந்தியப் பாதுகாப்புக்காக நிதி ஒதுக்கப்படுகிறது. எட்டாயிரம் கோடி ரூபாய் இந்தியப் பாதுகாப்புக்காக நிதி ஒதுக்கியதை நான் மறுக்கவில்லை. ஏனென்றால் உலகத்திலே உள்ள எல்லா நாடுகளும் இன்றைக்கு அகிம்சையிலேதான் தங்களுடைய நாட்டை நடத்துவது என்ற முடிவை எடுத்துவிடவில்லை. எந்த நேரத்திலும் போர் அபாயத்தை எதிர்பார்க்கும் ஒரு நாடு, இந்தியா போன்ற ஒரு பெரிய நாடு 8,000 கோடி ரூபாய் பாதுகாப்பு நிதியாக ஒதுக்குவதில் தவறில்லை. ஆனால் 8,000 கோடி ரூபாய் பாதுகாப்பு நிதியாக ஒதுக்கும் ஒரு நாட்டிற்குப் பக்கத்திலே உள்ள ஒரு சுண்டைக்காய் நாடு, ஸ்ரீலங்கா தீவைப் பார்த்து ஒன்றும் கேட்கவில்லை. அங்கே நம்முடைய தமிழர்கள் தினம் தினம் கொல்லப்படுகிறார்கள், அழிக்கப்படுகிறார்கள். அந்த இனமே அழிந்துவிடும். இங்கே அடுத்த கூட்டம், அடுத்த ஆண்டு நடக்கும் போது நாம் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக ஒரு அணுதாபத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய நிலைமையில் போய் முடியும். அங்கே தமிழர்களே இருக்க மாட்டார்கள். இங்கே வந்தவர்கள் போக மிச்சம் உள்ளவர்கள் அங்கே செத்தவர்களாக இருப்பார்கள். அங்கே தமிழர்களின் கல்லரைகளுக்கு இடமே இருக்காது. அங்கே தமிழன் எங்கே வீழ்ந்தானோ, எங்கே செத்தானோ, எங்கே சாம்பல் ஆனானோ என்ற அளவுக்குத்தான் ஸ்ரீலங்கா தமிழர்களுடைய கதி இருக்கும். எனவேதான், இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஸ்ரீலங்கா தமிழர்களைக் காப்பாற்றத் தவறினால், நாம் அனைவரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையில் ஒருமித்த கருத்தை எடுத்திட வேண்டும்.

அப்படிப்பட்ட ஒருமித்த கருத்தை எடுக்கும் போது, சர்வ கட்சிக் கூட்டங்கள்தான் அதற்கு முத்தாய்ப்பு வைக்கக் கூடியவைகள் என்று சொன்னால், நான் அந்தக் கூட்டங்களிலே எடுக்கப்படும் கருத்துக்களை ஏற்றுக்கொள்வேன். அதே நேரத்தில் அவரவர் வழி நின்று, அவரவர் உணர்வுக்கேற்ப போராட்டங்களை நடத்தி, ஸ்ரீலங்கா தமிழர்களை வாழ வைக்க நடவடிக்கை எடுப்போம். ஏற்கெனவே பல கட்சிகள் அதற்கு முன்மாதிரியாக இருக்கின்றன. அந்த முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போராட்டத் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறது என்று எடுத்துக் கூறி, நான் இங்கே எடுத்துச் சொன்ன ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை இந்தியப் பிரச்சினை போன்ற பிரச்சினைகளிலே ஆளுங்கட்சிக்கு எந்த விதமான மாறுபாடான கருத்து இருக்காது என்கின்ற காரணத்தால், இந்த கவர்னர் அவர்கள் உரையிலே இடம் பெற்றிருந்த அந்தக் கருத்துக்கள் மீது என்னுடைய வார்த்தைகளைப் பதிய வைத்து, கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.



உரை : 18 நாள் : 17.02.1989

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையின் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறி முன்மொழியப்பட்ட தீர்மானத்தை வழிமொழிந்தும், மறுப்புக் கருத்துக்கள் தெரிவித்தும், அறிவுரைகள் கூறியும், இந்த மாமன்றத்தில் இதுவரையிலே 44 பேர் உரையாற்றியிருக்கிறார்கள். அவர்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 13 பேர்; எதிர்க் கட்சிகளை, மற்றும் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 31 பேர் உரையாற்றியிருக்கின்றார்கள். உரையாற்றிய அனைவருக்கும் என்னுடைய நன்றியை, பாராட்டுக்களை, இளையவர்கள் பலர் இருக்கின்ற காரணத்தால் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்தில் நானும் நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் 32 ஆண்டுகளுக்கு முன்பு எங்களை ஆளாக்கிய அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கரம் பிடித்துக்கொண்டு நுழைந்தவர்கள். அப்பொழுது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக, பெரியவர் பக்தவத்சலம் அவர்களும், ஆர். வெங்கட்ராமன் அவர்களும், சி, சுப்பிரமணியம் அவர்களும், கக்கன் அவர்களும், இன்றைக்கு ஜனதா தள உறுப்பினராக அமர்ந்திருக்கின்ற நண்பர் பூவராகன் அவர்களும் அமைச்சர்களாக இருந்தார்கள். அன்றைய தினம் 57-லே நாங்கள் இருந்தபொழுதும் 62-ல் நாங்கள் இந்த அவையில் இருந்தபொழுதும் அவர்களையெல்லாம் சந்திக்க, அவர்களோடு வாதிட, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்றவர்கள், அதைப்போலவே இந்த 32 ஆண்டுக் காலத்தில், இடையிலே ஒரு 3, 4 ஆண்டுக் காலம் தவிர தொடர்ந்து இந்த மாமன்றத்திலே நானும் பேராசிரியர்

அவர்களும் பணியாற்றியிருக்கின்றோம். இடையிலே மேலவையில் நானும், பாராளுமன்றத்திலே பேராசிரியர் அவர்களும் பணியாற்றி இருக்கின்றோம். இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம், கடந்த காலம் ஒரு பெரும் தலைமுறை, பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள், தந்தை பெரியார், மூதறிஞர். பழகிடவும், அரசியல் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவுமான வாய்ப்புகளைப் பெற்று, ஒரு ஐம்பதாண்டுக் காலப் பொது வாழ்க்கை வாய்ப்புகளைப் பெற்று, ஒரு ஐம்பதாண்டுக் காலப் பொது வாழ்க்கையில் முப்பதாண்டு களுக்கு மேல் ஆட்சி மன்றத்தின் மூலமாகவும் பொது மக்களுக்குப் பணியாற்றுகின்ற வாய்ப்பினையும் பெற்று, இரண்டு மூன்று தலைமுறை கடந்து இன்றைக்கு, அன்றைக்கு அமைச்சராக இருந்த கோவிந்தசாமி அவர்களுடைய மகன் சம்பத் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்கவும், அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்களிலே ஒருவராக இருந்த பொன்னப்ப நாடாருடைய செல்வன் விஜயராகவன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்கவும், அன்றைக்கு எங்களோடு அமைச்சராக இருந்த அன்பில் அவர்களுடைய மகன் பொய்யாமொழி சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்கவும், எங்களோடு இருந்து துணை புரிந்து, இன்றைக்கும் துணை புரிந்து கொண்டிருக்கிற முன்னாள் மேலவையினுடைய உறுப்பினர் இளம் பரிதியினுடைய மகன் இன்றைக்கு இளம்வழுதி, என்னுடைய ஆருயிர் நண்பரும், என்றும் என்னை அகலாது என்னோடு ஒரு பாதுகாவலராகவே, மெய்க்காப்பாளராகவே இருந்து விளங்கிய கடலூர் இளம்வழுதி யினுடைய மகன் புகழேந்தி இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர் களாக இருந்து பணியாற்றவும், இப்படி ஒரு இளைய தலைமுறை இன்றைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு, நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுகின்ற நேரத்திலே, அவர்கள் எந்த வரிசையிலே இருந்தாலும்கூட அவர்களையெல்லாம் சந்திக்க, அவர்களுடைய இனிய வாதங்களைக் கேட்க, எழுச்சிமிகு உரைகளைக் கேட்க, எதிர்த்தரப்பிலேயிருந்து அவர்கள் உரையாற்றும்பொழுது அவைகளையெல்லாம் அறிவுரைகளாக எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன். எனவே, நீண்ட நெடுங்காலமாக இந்த அவையோடு தொடர்பு கொண்ட வகையில்,

இன்றைக்கும் தொடர்ந்து கிடைத்துள்ள இந்த வாய்ப்பை நான் எண்ணிப் பெருமிதம் கொள்ளுகின்றேன்.

அதே நேரத்தில், ஒரு தயக்கம் எனக்கு இல்லாமல் இல்லை. இந்த நாட்டிலே உள்ள மக்களுக்கெல்லாம் அவர்களுடைய நலிவு நீக்கி, நல்வாழ்வு தரக்கூடிய இந்தப் பொறுப்பை இந்த நாட்டு மக்கள் இந்த அரசுக்குத் தந்திருக்கின்ற நேரத்தில், அதை எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்கிற திகைப்பு இருந்தாலும்கூட, இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உங்கள் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் இங்கேயும், வெளியிலேயும்கூடக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்தப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக் கின்றோம்.

இந்த அவையிலே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராக திருநாவுக்கரசு அவர்கள் வீற்றிருக்கின்றார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராக இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் வீற்றிருக்கிறார்கள். தலைவர்கள் வந்து இந்த உரையைச் சிறப்பிக்காவிட்டாலும், துணையாக இருந்து இந்தத் தலைவர்களாவது சிறப்பித்தமைக்காக நான், அவர்களுக்கு துணைத் தலைவர் என்கின்ற பெயர்கள் மிகப் பொருத்தம் (சிரிப்பு) என்ற வகையிலே, அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்ளுகின்றேன்.

நேற்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல மாணவப் பருவத்திலேயிருந்து அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் – சொன்னார், கலைஞரோடு நான் நெருங்கிப் பழகுகிற வாய்ப்புப் பெற்றவன் இல்லை என்று சொன்னார். பழகியிருந்தால் என்ன நிலையோ எனக்குத் தெரியாது, பழகாத குற்றத்தால் ஏற்பட்டது என்ன நிலையோ, விவரிக்க விரும்பவில்லை. ஆனாலும், ஒரு துடிப்புள்ள இளைஞர், அவர் இங்கே எனக்கு 65 வயது என்பதையும் மறந்துவிட்டு, அவருடைய வயது மிக இளமையானது என்பதையும் சற்று ஒதுக்கி வைத்து விட்டு, முருகனே பரமசிவனுக்கு ஞானப்பால் ஊட்டியதைப்போல, நீங்கள் ஜாக்கிரதையாக ஆட்சியை நடத்துங்கள், எச்சரிக்கையாக ஆட்சியை நடத்துங்கள் என்று கூறியபொழுது நான் புளகாங்கிதம் உற்றேன்.

அதைப்போலவே, நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராகப் பொறுப்பேற்று இருக்கிறார் என்றாலும், அடிக்கடி அவர்கள் 'தேசீயம்' என்கின்ற சொல்லைப் பயன்படுத்தினாலும் கூட, அந்தத் தேசீயத்தோடு தமிழை இணைத்துத் தமிழை என்றைக்கும் மறந்தவர் அல்ல; தமிழ் உணர்வை என்றைக்கும் துறந்தவர் அல்ல, எனவே, அந்த வகையில் அந்த உணர்வு இந்த ஆட்சிக்குப் பெரிதும் துணை நிற்கும் என்று நான் கருதுகின்றேன்.

"அடுத்து, தொழிலாளர் இயக்கத்தினுடைய இரும்புத் தூண் என்று சொல்வதா அல்லது அரிவாள், சுத்தியல் என்று வர்ணிப்பதா என்று கூறக்கூடிய அளவுக்கு நீண்டநெடுங்காலமாக தொழிலாளர் இயக்கத்தோடு தொடர்பு கொண்டு எங்களுக்கு உற்ற நண்பராக, கருத்து மாறுபாடுகள் இருந்தாலும்கூட, பெருந் தன்மையோடு பழகுகின்ற நம்முடைய நண்பர் ரமணி அவர்கள் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தலைமைப் பொறுப்பை ஏற்று, அவர்களுடைய அறிவுரைகளையும் எங்களுக்கு தந்துகொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய சட்டமன்றத்தினுடைய பேரவையின் முன்னாள் தலைவர் அருமை நண்பர் பாண்டியன் அவர்கள் எங்களுடைய பத்துப் பேர்களை மொழிப் போராட்டத்தின் காரணமாக வெளியேற்றினாலும் கூட இன்றைக்கு நாங்கள் 146 பேர் உள்ளே அமர்ந்திருப்பதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் காட்சியைக் கண்டும் அவர்களுடைய அறிவுரைகள் - அவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்கின்ற அளவுக்கு சொல்லுகின்ற இடியுரைகள் இவை எல்லாம் - இந்த அரசுக்கு மெத்தவும் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அடுத்து, இன்றைக்கு நம்முடைய தீட்சிதர் அவர்கள் இங்கே வராவிட்டாலும் கூட நேற்றைக்கு அவர்கள் அரங்நாதன் சார்பாக எனக்கு திடகாத்திரம், தேக ஆரோக்கியம், நீண்ட ஆயுள் இவை எல்லாம் வேண்டுமென்று கேட்டார்கள். ஒரு வேளை கேட்டதை நேரிலே சொல்வதற்காகத் திருவரங்கம் சென்றிருக்கக் கூடும். (சிரிப்பு) இருந்தாலும் அவர்களுடைய அன்பும் ஆதரவும் என்றென்றும் எங்களுக்கு இருக்கும் என்று கருதுகிறேன்.

இளமைக்காலம் தொட்டு திராவிட இயக்கத்தின்பால் மாறாத அன்பும் யாராலும் பிரிக்க முடியாத பாசமும் கொண்டவர்

நம்முடைய இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (லத்தீப்) என்கின்ற அணியைச் சேர்ந்த என்னுடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள். அவர்கள் பன்மொழிப் புலவர். அன்றைக்கு இந்தியில் பேசிக் காட்டியதற்கேகூட காரணம் தனக்கு இந்தி தெரியும் என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற் காகவே அல்லாமல் இந்தியைப் பேசவேண்டும் என்ற ஆர்வத்தால் அல்ல. அப்படிப்பட்டவர் இன்றைக்கு இஸ்லாமிய சமுதாயத்தின் தூதுவனாக இந்த அவையிலே அமர்ந்து அந்தச் சமுதாயத்திற்கு, சிறுபான்மைச் சமுதாயத்திற்கு என்னென்ன செய்யவேண்டுமென்று எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய அந்த அறிவுரைகளைப் பெறுகின்ற வாய்ப்பினை நாங்களும் பெற்றிருக்கிறோம்.

அடுத்து அமர்ந்திருக்கிறவர் தமிழ்நாடு ஜனதா கட்சியினுடைய தலைவர் விஜயராகவன் அவர்கள். அவர்களுடைய தந்தையார் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் மரணம் அடைந்தபோது கண்ணீர் விட்டு அழுதவர்களிலே நானும் ஒருவன். அவருடைய சாம்பல் சென்னையிலே கொண்டு வந்து வைக்கப்பட்டபோது அதற்கு மாலையிட்டு, மரியாதை செலுத்தி, கண்கலங்கி, கைகூப்பி நின்றவன் நான். இன்னும் சொல்லப்போனால் அவருடைய மறைவுக்குப் பின் தம்பி-மன்னிக்க வேண்டும்; தம்பி என்று அழைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள், இருந்தாலும் உரிமையோடு சொல் கிறேன் - பொன். விஜயராகவன் அவர்கள் முன்பு தேர்தலிலே போட்டியிட்டபோது கூட பொன்னப்ப நாடார் அவர்களுடைய மகன் நிற்கிறார்; எனவே முதல் தடவை தி.மு.க. அங்கே போட்டியிடக்கூடாது என்று வேட்பாளரைக்கூட நிறுத்தவில்லை. அந்த அளவுக்கு அவர்பால் அன்பும் பாசமும் எங்களுக்கு நிரம்ப உண்டு. அவர் இங்கே வேகமாகப் பேசினாலும் கூட விவேகமான கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக் கிறார்கள். அது மெத்தவும் தொடர்ந்து பயன்படும் என்றே நான் நம்புகிறேன்.

அதைப்போல வல்லரசு அவர்கள் பசும்பொன் தேவர் அவர்களால் உருவாக்கப்பட்ட 'பார்வெர்டு பிளாக்' கட்சி யினுடைய ஒரு பிரிவான தமிழ்நாடு பார்வெர்டு பிளாக் கட்சியினுடைய பிரதிநிதியாக இங்கே வீற்றிருக்கிறார்கள். அந்த

அருமருந்தன்ன நண்பருடைய அறிவுரைகள், ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஏற்ற நல்ல சொற்கள் இந்த அரசுக்கு மெத்தவும் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

வராத காரணத்தால் மறந்துவிட்டேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், பிரச்சினைகளை மிக ஆழமாகப் புரிந்து கொண்டு அந்தப் பிரச்சினைகளை எடுத்து விளக்குவதிலே வல்லவர்களிலே ஒருவரானவர் அழகர்சாமி அவர்கள். அவர்கள் முன்வரிசையில் அமர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கொள்கைகளையும் அவர்கள் நிறைவேற்றக்கூடிய அந்த விளக்கங்களையும் எங்களுக்குத் தரக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றார்கள்.

எனவே, எதிர்வரிசையில் அமர்ந்திருக்கிற உங்கள் அனைவருடைய நல்வாழ்த்துக்களை, உங்கள் அனைவருடைய நல் எண்ணங்களை, நல்ல அறிவுரைகளை இந்த அரசு மதிக்கவும், வரவேற்கவும், ஏற்புடையவைகளை நிறைவேற்றவும் என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும்போது இந்த ஆளுநர் உரையில் பல இடங்களில் புள்ளிகள் காணப்படு கின்றன, பல இடங்களில் கோடுகள் காணப்படுகின்றன என்று சொன்னார்கள். இங்கேதான் நமது திறமை இருக்கிறது. புள்ளி களையும், கோடுகளையும் இணைத்தால் அழகான கோலங்கள் உருவாகும். அப்படிப்பட்ட எழுச்சிக்கோலத்தை உருவாக்கத்தான் ஆளுநர் உரையிலே புள்ளிகளும், கோடுகளும் அமைந்திருக் கின்றன. கோலம் சில நேரங்களில் அலங்கோலமாக ஆகிவிடக் கூடும். அலங்கோலமாக ஆக்குகிற முயற்சிகள் இந்தப் பக்கத்திலே இருந்து நடைபெற்றாலும், அந்தப் பக்கத்திலேயிருந்து நடை பெற்றாலும் அதைக் கண்காணிக்கக்கூடிய அரும்பெரும் திறனும், அத்தகைய உரிமையும் படைத்த பேரவைத் தலைவராகத் தாங்கள் வீற்றிருக்கிறீர்கள். எனவே தமிழ்நாடு எழுச்சிக் கோலம் பூண, தமிழ்நாடு எழில்கோலம் பூண நாம் அனைவரும் நம்முடைய திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ள புள்ளிகளையும்,

கோடுகளையும் பயன்படுத்திக் கொள்ள முன் வரவேண்டுமென்று முதலிலேயே நான் கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் குறிப் பிட்டார்கள். எல்லா மக்களுடைய வாக்குகளையும் பெற்றுமா நீங்கள் இந்த அவையிலே வீற்றிருக்கிறீர்கள், இல்லை நீங்கள் 5 கோடி மக்களுடைய வாக்குகளைப் பெற்று இங்கே வீற்றிருக்க வில்லை. எல்லா வாக்காளர்களுமாக வெளியே இருக்கின்ற 3 கோடி பேர்களுடைய வாக்குகளையும் பெற்று நீங்கள் இங்கே வீற்றிருக்கவில்லை என்று சொன்னார்கள். என்ன செய்வது? இன்றைக்கு இந்தியாவிலே இருக்கின்ற தேர்தல் முறை அப்படித் தான் இருக்கிறது. ஏனென்றால் விகிதாச்சாரம் பிரதிநிதித்துவம் என்கிற ஒரு முறை நடைமுறைக்கு வருகிற வரையில் இது தான் நாம் ஏற்றுக்கொண்டுள்ள முறை. அதற்கேற்பத்தான் வாக்குகளும், அந்த வாக்குகள் விழுவதைப் பொறுத்து இடங்களின் எண்ணிக்கையும் அமைய முடியும் என்பதை நாம் மறந்து விடவே கூடாது. விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறை வேண்டு மென்ற அந்தக் கருத்தை நம்முடைய அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி இருக்கிறார்கள்.

தினமணி பத்திரிகையின் பழைய ஆசிரியர் திரு. சிவராமன் அவர்கள் கூட அடிக்கடி அந்தக் கருத்தைக் கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலே உள்ள பல அரசியல் விற்பன்னர்கள் கூட அத்தகைய தேர்தல் முறை வரவேண்டுமென்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது அந்தத் தேர்தல் முறை இல்லை. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது என்றால் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல 33.44 விழுக்காடு பெற்றுத்தான் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அவர்கள் சொல்வதிலே பொருள் இருக்கிறது. 33½சதவீதம் வாக்குகள் பெற்ற நீங்கள் எப்படி எல்லா மக்களுக்கும் பிரதிநிதியாக ஆக முடியும் என்று கேட்டார்களே, அதில் பொருள் இருக்கிறது. நான் அந்தக் கருத்தைத்தான் எடுத்துக் கொள்கிறேன், வாதிட விரும்பவில்லை. ஆனால் அவர்களும், மற்றவர்களும் ஒன்றை மறந்துவிடக்கூடாது.

1977 ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது 130 இடங்களைப் பெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். அப்போது அவர்கள் பெற்ற வாக்குகளின் விகிதாச்சாரம் 30.37 சதவீதம்தான். 30.37 சதவீதம் வாக்குப் பெற்றவர்கள் மக்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றவர்கள் என்று எண்ணும்போது 33.44 சதவீதம் பெற்றவர்கள் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றவர்கள் அல்ல என்று யாரும் வாதிட்டுவிட இயலாது. இன்றைக்கு இருக்கிற தேர்தல் முறை அப்படி இருக்கிற காரணத்தால் அதை நான் சொல்ல வந்தேனே அல்லாமல் வேறல்ல.

எதற்கெடுத்தாலும் திரு. எம். ஜி. ஆர். அவர்களுடைய பெயரை எடுத்துக் கொண்டு அவரால் வந்துவிட்டது என்று குறை சொல்லாதிருப்பதற்காகக் கூட ஒரு கதையை நம்முடைய எதிர்க் கட்சித் துணைத்தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

ஒரு சிகை அலங்காரத் தொழிலாளி ஒரு அரசனுக்கு நாள்தோறும் சென்று முக வழிப்பிலே ஈடுபட்டார் என்றும், அப்படி ஈடுபட்டபோது ஒருநாள் அவன் கையிலே இருந்த தங்க மோதிரத்தை அரசன் பார்த்துவிட்டு, எப்படி நாடு இருக்கிறது என்று கேட்டான் என்றும், நாடு முழுவதும் தங்கக் குவியலாக இருக்கிறது என்று அவன் சொன்னான் என்றும், அதே தொழிலாளி மறுநாள் சென்றபோது மோதிரம் இல்லை என்றும், அப்போது அரசன் கேட்டான் நாடு எப்படி இருக்கிறது என்றும், நாட்டில் ஒரு குண்டுமணி அளவு கூட தங்கம் இல்லை என்று தொழிலாளி சொன்னான் என்றும் குறிப்பிட்டார்கள். எனக்குள்ள சந்தேகம் எல்லாம் முதல் நாள் போட்டுக் கொண்டு வந்த மோதிரத்தை மறுநாள் காணவில்லை என்றால் அந்த அரசன் மீது தான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. அவன் எண்ணியிருக்கலாம், சாதாரணத் தொழிலாளி எப்படி தங்க மோதிரம் போடலாம் என்று. அவன் வெளியே செல்லும்போது அந்தத் தங்க மோதிரத்தை தன்னுடைய சேவகர்களை விட்டுப் பறிக்கச் சொல்லியிருக்கலாம். அதனால் அவன் அரசனை

இடித்துக் காட்டுவதற்காக நாட்டில் குண்டுமணி அளவுக்கு கூடத் தங்கம் இல்லை என்று கூறியிருக்கலாம். கதைகளை வைத்துக் கொண்டு வாதம் செய்துகொண்டே போனால் அவரவர்களுடைய கற்பனைக்கு ஏற்றவாறு வாதங்களைச் செய்துகொண்டு போகலாம். இருந்தாலும் நாம் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டிய கட்டத்திலே இன்றைக்கு இந்த மாமன்றத்திலே கூடியிருக்கிறோம். இந்த மாமன்றத்தைப் பொறுத்தவரையில் பேசிய பல உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகள், தோழமைக் கட்சிகள், இவைகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லாம் ஒன்று சொன்னார்கள். "தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிடவில்லையே, அது ஏன்?" என்றெல்லாம் கேட்டார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூட அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதிலே 24-வது பகுதியை படித்துக் காட்டினார்கள். ஆனால் முழுவதையும் படித்துக் காட்டவில்லை. இந்த ஆளுநர் உரையிலே 24-வது பாராவிலே, நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ள, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் சட்டங்களின் முழு விவரங்கள் இந்த அவையில் அவ்வப்போதும் வரவு செலவுத் திட்ட அறிக்கையின் வாயிலாகவும் இந்தக் கூட்டத் தொடரில் உங்களின் ஒப்புதலுக்கு வைக்கப்படும். "அரசின் சார்பில் நிறைவேற்றப் படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ள" என்கின்ற வாசகத்தை நாகரீகமாக அமைத்திருப்பதற்குக் காரணம் கவர்னர் இதைப் படிக்கின்ற நேரத்தில், "திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள" என்று அவர் படிப்பது முறையாக இருக்காது. அவரைப் படிக்கச் சொல்லி வலியுறுத்துவது அரசியல் பண்பாக இருக்காது என்ற காரணத் தினாலேதான் "திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள அந்த உறுதிமொழிகள்" என்று குறிப்பிடாமல், இந்த அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் என

உறுதியளிக்கப்பட்டு அந்த விவரங்கள் எல்லாம் அடிக்கடி இந்த அவையிலே அவ்வப்போது தரப்படுகின்ற திட்டங்கள், சட்டங்கள் மூலமாகவும், வரவு செலவுத் திட்டம் வாயிலாகவும் உங்கள் ஒப்புதலுக்கு வைக்கப்படும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே அது எங்கே, இது எங்கே என்று அலைந்து திரியவேண்டுமென்ற அவசியம் யாருக்கும் இல்லை.

நம்முடைய திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்கள் பேசும் போதுகூடச் சொன்னார்கள். நான் அதைத் தேடிப் பார்க்கிறேன். கிருஷ்ணா நதித் திட்டத்தைத் தடவிப் பார்க்கிறேன். என்னென்னவோ செய்து பார்க்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். அந்தச் சொற்றொடர் எனக்கு நினைவில் இல்லை. தேடிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. 'அரசின் சார்பில் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ள' என்ற வாசகத்தை வைத்துக் கொண்டு தேர்தல் அறிக்கையை ஒரு முறை படித்துப் பார்த்தாலே அந்த அறிக்கையிலே சொல்லப் பட்டது படிப்படியாக, இந்தக் கூட்டத் தொடரிலும், இனி தொடர்ந்து நடைபெற இருக்கின்ற வரவு - செலவுத் திட்டக் கூட்டத் தொடரிலும் நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. உங்களுடைய அறிவுரைகளோடு உங்களுடைய கருத்துரைகளோடு, உங்களுடைய மேலான ஒப்புதலோடு அவைகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில உறுப்பினர்கள் வேகமாகப் பேசினார்கள். சிலர் கடுமையாகப் பேசினார்கள், அப்படிக் கடுமையாக, வேகமாகப் பேசினாலும் கூட, அவைகளை எல்லாம் இந்த அரசுக்குத் தேவைப்படுகின்ற சிகிச்சையாகத்தான் கருதிக் கொண்டேன். கண்ணப்பநாயனார் கடவுளுடைய முகத்திலே செருப்பை ஊன்றிக் கொண்டு சிகிச்சை செய்தார். கடவுள் முகத்திலே செருப்பை ஊன்றவேண்டுமென்பது கண்ணப்ப நாயனாருடைய நோக்கமல்ல. கடவுளுக்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்பது தான் நோக்கம். அதுபோல, நீங்கள் யாராவது கடுமையாகப் பேசியிருந்தாலும்கூட, அப்படிப் பேசியதையெல்லாம், கண்ணப்ப நாயனார் கடவுள் முகத்திலே செருப்பை ஊன்றியதுபோல நான்

எடுத்துக் கொள்வேன். நல்ல காரியத்திற்கு அரசைத் திருத்துவதற்காக, இந்த அரசிலே காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக நீங்கள் தந்த அறிவுரைகள், சிகிச்சை என்ற முறையிலேதான் எடுத்துக் கொள்வேன் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

உங்களுக்குத் தெரியும். 21-1-1989-ல் பொதுத் தேர்தல். அதற்குப் பிறகு 22 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை, கழகம் பெருமிதமான வெற்றியைப் பெற்றது என்ற செய்தி. உடனடியாக 25-ம் தேதியே சட்டமன்றக் கட்சிக் கூட்டம் கூட்டப்பெற்று கட்சியினுடைய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மறுநாள் 26-ம் தேதியே கவர்னர் அவர்களைச் சந்தித்து அமைச்சரவையினுடைய பட்டியல் வழங்கப்படுகிறது. மறுநாள் 27 ஆம் தேதியே அமைச்சரவை பதவி ஏற்கிறது. 28-ம் தேதி அண்ணா நினைவு நாளை ஒட்டியும் இந்த அமைச்சரவை பதவி ஏற்றதை யொட்டியும் சிறையிலே இருந்த கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு. ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்கு ஓர் ஆண்டும், மற்ற கைதிகளுக்கு 6 மாதமும் தண்டனைக் குறைப்பு செய்யப் பட்டு, அதன் காரணமாக 843 பேர் விடுதலை செய்யப் பட்டிருக்கிறார்கள். அதிலே 71 பேர் பெண்கள். தண்டனைக் குறைப்பினால் ஆதாயம் பெற்றவர்கள் எல்லா சிறைச்சாலை களிலும் 4 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள். மறுநாள் 30 ஆம் தேதி தலைமைச் செயலகத்தில் காந்தியடிகளுடைய நினைவு நாளில் உறுதிமொழி ஏற்பு. 1 ஆம் தேதி அமைச்சரவைக் கூட்டம். கேபினட் கூட்டம். 3 ஆம் தேதி அண்ணா நினைவஞ்சலியின் போது பெண்களுக்கு 30 சதவிகித வேலை என்று அரசின் அறிவிப்பு. 6 ஆம் தேதி சட்டப் பேரவைத் துவக்கம். உறுப்பினர்களுடைய பதவி ஏற்பு நிகழ்ச்சி. 7 ஆம் தேதி காலையில் உள்ளாட்சி மன்ற அமைச்சருடைய தலைமையில் ஒன்றியத் தலைவர்களுடைய கருத்தரங்கம். 8 ஆம் தேதி சட்டப் பேரவைத் தலைவர் தேர்தலும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் தேர்தலும், மறுநாளே டெல்லியில் பிரதமரையும் குடியரசுத் தலைவரையும், குடியரசுத் துணைத் தலைவரையும், நிதியமைச்சரையும் கலந்துகொண்டு பேசுகின்ற விவாதங்கள். இலங்கைப் பிரச்சினை குறித்து பிரதமருடன் இரண்டு சுற்று பேச்சு

வார்த்தை. இடையிலே வெளியுறவு அமைச்சரான நட்வர்சிங் கிடத்திலே 1½ மணி நேரத்திற்கு மேல் இலங்கைப் பிரச்சினை குறித்த விவரங்களை அறிந்து கொள்கின்ற வாய்ப்பு. 11 ஆம் தேதி கவர்னர் உரையும், அதைத் தொடர்ந்து இன்று வரையிலே இந்த விவாதத்திலே கலந்து கொள்கிற நிலை. நீங்கள் எண்ணிப் பாருங்கள். 22 ஆம் தேதி தேர்தல் முடிவிற்குப் பிறகு, எங்கே யாவது ஓய்வு எடுத்துக்கொண்டு, இந்த அரசு வெறுமனே இருந் திருக்கிறதா, சுழன்று சுழன்று பணியாற்றியிருக்கின்றதா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டு மென்று மாமன்ற உறுப்பினர்களை எல்லாம், தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

டெல்லிக்குச் சென்றபோது என்னென்ன பிரச்சினைகள் குறித்துப் பேசப்பட்டன என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப் பினர்கள் இங்கே சொல்லி, வினாக் கணைகளை இங்கே விடுத் தார்கள். அவர்களுக்கு விளக்கம் அளிக்கின்ற வகையில் மத்திய அரசிடத்தில் 200 கோடி ரூபாய் நாம் கேட்டிருக்கிறோம். ஏற்கெனவே கவர்னர் ஆட்சியில் ஆகஸ்ட் திங்களிலும். அதற்குப் பிறகு ஜனவரித் திங்களிலும், கவர்னர் அவர்களே 150 கோடி ரூபாய் திட்டத்திற்காக தேவைப்படுகிறது என்று குறிப்பிட் டிருக்கிறார். முதலில் இங்கே விவாதித்தபடி, 1400 கோடிக்கு மேற் பட்ட திட்டம் என்பது, நம்முடைய resources நிதி ஆதாரங்களை கணக்கிலே எடுத்துக்கொள்ளாமல் போடப்பட்ட ஒரு விளம்பரத் திட்டமாக அறிவித்த காரணத்தினாலேதான் 150 கோடி ரூபாய் வந்தாலும், 140 கோடி ரூபாய் திட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையிலேதான் 200 கோடி ரூபாய் தேவை என்று மத்திய நிதியமைச்சரிடத்திலேயும், பிரதமரிடத்திலேயும் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களும் அது குறித்து ஆவன செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். என்ன செய்வார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நம்பிக்கொண்டிருக்கிறோம். நெய்வேலியிலிருந்து royalty லாபத்திலே பங்கு இவைகளையும் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு நாங்கள் கேட்டிருக்கிறோம். இது 1956 ஆம் ஆண்டு முதல் கணக்கிடப் படவேண்டிய ஒன்று. அப்படிக் கணக்கிட்டால் 100 கோடி ரூபாய் அளவிற்கு நம்முடைய மாநில அரசுக்கு வர வேண்டியிருக்கும்.

அதைப்போல அரிசியையும் சர்க்கரையையும் அதிகமாக தமிழ் நாட்டிற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். 80 ஆயிரம் டன் வீதம் ஒதுக்கிக்கொண்டிருந்த நிலையை, திடீரென்று 40 ஆயிரம் டன் என்று குறைத்து ஒதுக்கிய காரணத்தால் அந்த 40 ஆயிரம் டன்னையும் சேர்த்துத் தர வேண்டுமென்று அங்கே யுள்ள தொடர்புடைய அமைச்சரிடத்திலும், குறிப்பாக தலைமை அமைச்சர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களிடத்திலும் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதுவன்னியில் தமிழகத் திற்கான பல்வேறு விஷயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக மத்திய அரசினுடைய முதலீடு தமிழ்நாட்டுத் தொழில் துறையில் அதிகமாக வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டிருக்கிறது. உதாரணமாக, ஆவடி ஆயுதத் தொழிற்சாலையை விரிவுபடுத்துவது, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி 3-வது சுரங்கமும் மின் உற்பத்தித் திட்டமும் என்ற கோரிக்கை, அதன் மூலம் கிடைக்கிற நிலக்கரியைத் பயன்படுத்திக்கொண்டு, தமிழ் நாடு மின்வாரியமே அனல் மின் நிலையம் ஏற்படுத்துகின்ற கோரிக்கையை வற்புறுத்துவது, காவிரி நதி தீரத்தை நவீனப் படுத்தல் modernisation scheme ஏற்கனவே உலக வங்கி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பணம் ஒதுக்கியதாகச் சொல்லி, அந்த வேலைகள் எல்லாம் தொடங்கப்பட்டு, இடையிலே ஏதோ தயக்கம் காட்டப்பட்டு விட்டது - பல்வேறு பிரச்சினைகளால், அதுவும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. கிழக்குக் கடற்கரை ஓரத்தினுடைய அந்தச் சாலை வலியுறுத்திக் கேட்கப் பட்டிருக்கிறது. கடலூரிலிருந்து கன்னியாகுமரி வரையிலே அந்தச் சாலையை அமைப்பதற்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சென்னையிலே சுரங்க வேக ரயில் பாதை கேட்கப்பட்டிருக்கிறது. சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு தி. மு. க. ஆட்சியிலே போராடி, சேலம் உருக்காலைத் திட்டம் இணைக்கப்படாத நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை தமிழக மக்கள் சார்பாக நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று என்.டி.சி. மீட்டிங்கிலே நான் வலியுறுத்தி, அடுத்த ஒரு வாரத்திலே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்து, அவர்களே நேரிலே வந்து, சேலத்திலே சேர்வராயன் மலை ஓரத்திலே அந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவை நடத்தினார்கள்.

ஆனால் அந்த உருக்காலைத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இறக்கப்பட்ட பிறகு, வெறும் உருட்டாலைத் திட்டமாக ஸ்டீல் ரோலிங் மில் என்ற அளவுக்கு ஆகிவிட்டது. அதை மறுபடியும் உருக்காலைத் திட்டமாக ஆக்க வேண்டுமென்று விளக்கங்களை அங்கே தந்திருக்கிறோம். இது போன்ற திட்டங்களைப் பற்றியெல்லாம் அங்கே கேட்டுக் கொண்டு, திரும்பியிருக்கிறோம். அதற்கு முன்பே, 7 ஆம் தேதியே, நகராட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை ஒன்றியத் தலைவர்களுடைய கூட்டத்தை சென்னையிலே கூட்டினோம். அந்தக் கூட்டத்திலே நகராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் அளித்த கருத்துக்களின் அடிப்படையில் இந்த மாமன்றத்தில் நான் சில அறிவிப்புகளை வெளியிட விரும்பு கிறேன், உங்களுடைய அன்பான ஆதரவும், மகிழ்ச்சியும் அதற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு.

1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பிறகு கடந்த கால அரசால் பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன.

ஒன்று, ஒவ்வொரு நகராட்சியிலும் மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர் தலைவராகவும், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த உதவி செயற் பொறியாளர், நகர மன்றத் தலைவர், மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் இருவர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது முன்பு. இப்போது, இனி இந்த அதிகாரம் முழுமையும் நகராட்சிகளுக்கே வழங்கப்படு மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இரண்டு, நிதி நிலைமை சீர் குலைந்த முறையில் செயல்படும் நகராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு அரசுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது முன்பு. நிதி ஆதாரங்களை, நிதி குறைந்த நகராட்சி மன்றங்களுக்குத் தர வேண்டியது அரசின் கடமையாக இருக்க, அதைக் காரணமாகக் காட்டி, நகராட்சி மன்றங்களைக் கலைப்போம் என்று தொடுக்கப்பட்ட அந்த

அதிகாரக் கணையை இந்த அரசு கைவிடுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மூன்று, சரியாகச் செயல்படாத மற்றும் தங்கள் பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் நகராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை, பொது மக்களின் வாக்கெடுப்பு எடுத்து, அவர் களின் பதவிகளை இழக்கச் செய்ய வழிவகை செய்யப்பட்டிருக் கிறது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இது நன்றாகத் தெரிந்தாலும் நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று. எனவே தவறான வர்கள்மீது நடவடிக்கை எடுக்க எத்தனையோ வழிமுறைகள் இருக்கும்போது மீண்டும் பொதுமக்களிடம் வாக்கெடுப்பு எடுப்ப தென்பது நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று என்பதால் இதுவும் கைவிடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அடுத்து, மத்திய அல்லது மாநில அரசுகளிடமிருந்து மானியம் அல்லது கடன் பெற்று நகராட்சிகளில் கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் திறப்பு விழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு நகர மன்றத் தலைவருக்கு தலைமை வகிக்கும் தகுதி கிடையாது. என்ன தகுதி தெரியுமா அவர்களுக்கு? நகர மன்றத் தலைவர்களோ அல்லது துணைத் தலைவர்களோ வரவேற்புரை மாத்திரம் நடத்தலாம். தலைமை வகிக்க முடியாது. இப்போது அவர்கள் தலைமையே ஏற்கலாமென்று இந்த அரசு அறிவிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இவைகள் எல்லாம் உரிமைகள் பறிக்கப்பட்டது மாத்திரமல்ல, கௌரவமே பறிக்கப் பட்டது. இந்த கௌரவங்கள் திரும்பத் தரப்படுகின்றன.

அடுத்து, நகர மன்றக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளும்போது, அவர்களுக்கு நகர மன்றத் தலைவர் அமரும் கூட்டத்தின் மேடையிலேயே இட ஒதுக்கீடு செய்ய வேண்டும். இது முந்தைய அரசினுடைய குறிப்பு. இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் கலந்து கொள்ளலாம். ஆனால் மேடையிலே இட ஒதுக்கீடு கட்டாயம் இல்லை என்று இந்த அரசு அறிவிக்கிறது. (மேசையைச் தட்டும் ஒலி.)

ஊராட்சி ஒன்றியங்கள், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி இணைப்பு உறுப்பினர்களை கோவாப்ட் செய்வதற்கு சிறப்புக் கூட்டங்கள் மற்றும் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான சிறப்புக் கூட்டங்கள் ஆகியவைகளைக் கூட்டும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவரிடமிருந்து பறிக்கப்பட்டு, கோட்ட வளர்ச்சி அலுவலர் களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அதை மாற்றி, இந்த அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியத் தலைவரிடமே வழங்கப்படும் என்றும் அறிவிக்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் நியமன உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களிடமே வழங்கப்படும் என்றும் அறிவிக்கிறேன்.

பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரமும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அரசுத் துறைக்கு முன்பு மாற்றப்பட்டுவிட்டது. இந்த அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கே வழங்கப்படும் என்று அறிவிக்கிறேன்.

தொடக்கக் கல்விப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து எடுக்கப்பட்டு, கல்வித் துறைக்குக் கொடுக்கப்பட்டது. இந்த அதிகாரம் மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கே வழங்கப்படுகிறது. ஆனாலும், அங்கே பணி புரியும் ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்களாகவே கருதப்படுவார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைக்கான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம், பயிற்சிவழித் திட்டத்தின் மூலமாக வேளாண்மைத் துறையிடம் முன்பு ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் விடப்படும் என்று அறிவிக்கிறேன்.

வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, ஒன்றிய அளவிலான ஆலோசனைக் குழு, அதாவது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஒன்றியத் தலைவர், சட்டப் பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்பட்ட நான்கு பேர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவிடம் முன்பு ஒப்படைக்கப் பட்டது. அதாவது,

ஒன்றியத் தலைவர் – பாவம் – அதன் உறுப்பினராக மாத்திரம்தான் இருப்பார். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைக் கண்டுபிடிக்கிற குழுவில் ஒன்றியத் தலைவர் வெறும் உறுப்பினராக மட்டும்தான் இருப்பார். இப்போது, அதை மாற்றி, மீண்டும் 1986 க்கு முன்பிருந்த நிலை உருவாக்கப்படும் என்று இன்றைக்கு அறிவிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட உரிமைகளை; அடிமட்டத்திலே உள்ள ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்குகிற இந்தக் கட்சிதான், இந்த அரசுதான் மாநில சுயாட்சியைக் கேட்கிறது. மாநில மக்கள் – எப்படி ஊர் மக்களோடு நகர மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, தலைவர்களும், உறுப்பினர்களும், பிரதிநிதிகளும் அதிக அதிகாரம் இருந்து, அதிக நன்மைகளை அவர்களுக்குச் செய்ய முடியுமோ அதைப்போல், மத்தியில் அதிகாரங்கள் குவிக்கப்படாமல், மாநிலங்களுக்கும் அதிக அதிகாரம் இருந்தால், மக்களோடு நெருங்கி, பல காரியங்களைச் செய்ய முடியும் என்ற காரணத்திற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். நம் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் கூட குறிப் பிட்டார்கள். ‘‘இதை நாங்கள் எங்களுடைய ஆட்சிக் காலத்திலேயே சொல்லி இருக்கிறோம், அண்ணா சொல்லி யிருக்கிறார்” என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்கு ஒரு வருத்தம் என்னவென்றால், 1974 ஆம் ஆண்டு இதே மாமன்றத்தில், மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோது, அதை ஆதரிக்கிற சூழ்நிலையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் இல்லை என்பதுதான். இதுதான் எனக்கு வருத்தமான செய்தி. ஆனால், இன்றைக்கு அது மாற்றப்பட்டு, அவர்களும் கூட சேர்ந்து மாநில சுயாட்சிக்காக முழக்கமிடுவதை, நமக்குக் கிடைத்த பெரு வாய்ப்பாகக் கருதி அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அவர் பேசும்போது, “ஏழையின் இளைத்த தோள் களில், சுமையை ஏற்றாமல், வருமானம் பெருக்கப்பட வழிவகை கோரப்படும்” என்று அறிக்கையிலே குறிப்பிட்டதை நம் எதிர்க் கட்சித் துணைத்தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டு, நீங்கள் வரி போடப் போகிறீர்கள். ஏழைகளைப்

பாதிக்காமல் வரிகளைப் போடுங்கள் என்று சொன்னார்கள். வரி போடப் போகிறோம்; யாருக்கு என்பதை விவரமாக இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முதலில் நான் பாடம் நடத்துவதாகத் தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். மன்னித்துக் கொள்ளுங்கள். இருந்தாலும் வயதில் கொஞ்சம் மூத்தவன். பொறுத்துக் கொள்ளுங்கள். 2, 3 சித்திரங்களை உங்கள் மனக்கண்ணின் முன்னால் நீங்கள் கற்பனை செய்து கொள்ளுங்கள்! எரி சாராயம் காய்ச்சுகிற தொழிற் சாலை ஒன்று. அதைச் சுற்றி ஒரு ரவுண்டு போட்டு வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு டிஸ்டிலரி என்று பெயர். அங்கே இருந்து ஒரு கோடு கிழியுங்கள். அதன் பக்கத்தில் 'ஐ.எம்.எப்.எஸ்' என்று இன்னொரு தொழிற்சாலை அதற்கும் ரவுண்டுபோட்டு, அதிலிருந்து ஒரு கோடு கிழியுங்கள். அங்கே இருந்து "டாஸ்மாக்" (தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன்) என்று எழுதி அதற்கும் ஒரு ரவுண்டு போட்டு அங்கே இருந்து ஒரு கோடு கிழித்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு அங்கே இருந்து ஒரு கோடு கிழித்து "ரீடெய்ல் ஷாப்" என்று எழுதிக் கொள்ளுங்கள். மீண்டும் நினைவுப்படுத்துகிறேன். நன்னன் பாடம் நடத்துவதைப் போல் - டி.வி,யில்!

முதல் ரவுண்டிலிருந்து ஒரு கோடு கிழித்து 'ஐ.எம்.எப்.எஸ்.' அங்கே இருந்து ஒரு கோடு போட்டு "டாஸ்மாக்" இது அரசாங்க நிறுவனம். அதற்கு அடுத்தது ரீடெய்ல். இந்த Distillery இருக்கிறதே எரி சாராயத்தை உற்பத்தி செய்கிற இடம் Rectified Spirit - உற்பத்தி செய்கிற இடம். I.M.F.S. என்று இருக்கிறதே அது பிராந்தி, விஸ்கி, ரம், ஜின் போன்ற இந்த அயல்நாட்டு முறை மதுபானங்களை உற்பத்தி செய்கிற இடம். அதற்கு அடுத்து, TASMAC - Tamil Nadu State Marketing Corporation அது இவைகளை எல்லாம் மொத்தத்தில் வாங்கி விநியோகிக்கிற நிறுவனம். (குறுக்கீடு) I.M.F.S. என்று மாற்றப்பட்டு விட்டது. அப்படி நான் சொன்ன இந்தப் படத்தை மனதில் வைத்துக்கொள்வீர்களானால் சரியாக இருக்கும். நான் பேசும் போது சில வார்த்தைகள் தவறி விடக்கூடாது என்பதற்காக எழுதியே படிக்க விரும்புகிறேன்.

நம்முடைய ஆளுநர் உரையில் 15-வது பாரா என்று கருதுகிறேன். படித்திருப்பீர்கள். 15-வது பாராவில், 'கடந்த காலத்தில்

மதுவிலக்குச் சட்டத்தின் தொடர்பாக அரசால் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்து மது உற்பத்தியாளர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. அதனால் மாநில அரசுக்கு நியாயமாகக் சிடைக்க வேண்டிய பெரும் வருவாய் இழப்பு கோடிக்கணக்கில் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றிடவும் மாநில அரசு தொடர்ந்து இழந்து வரும் நிதியாதாரத்தை மீட்டவும், பெருக்கிடவும் உரிய சட்டத் திருத்தமும், விதிகளில் மாற்றமும் உடனடியாக இக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்பதை இந்த அரசு மகிழ்வுடன் அறிவிக்கிறது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளைக் கூர்ந்து ஆராய்ந்தது. நீண்ட நெடு நாட்களாகவே மதுவிலக்குச் சட்டத்தின் விதிமுறைகளில் உள்ள குறைபாடு களையும், ஓட்டை உடைசல்களையும், சலுகைகளையும் சுட்டிக் காட்டி வந்த திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பின்பு, அந்த விதிமுறைகளைத் தீவிரமாக ஆராய்ந்தது. அரசுக்கு வரவேண்டிய ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி ஆகியவற்றில் நியாயமற்ற சலுகைகள் வழங்கப் பட்டிருப்பதை இந்த அரசு கண்டுபிடித்தது. ஆயத் தீர்வை அதாவது Excise Duty இந்த Excise Duty ஆயத்தீர்வைக்கு இலக்கணமே உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய வரி என்பது தான். கவனம் வைத்துக் கொள்ளுங்கள். ஆயத்தீர்வை Excise Duty என்றால் உற்பத்தியாளர்கள் செலுத்த வேண்டிய வரி அதாவது எரிசாராயத்தை, Rectified Spirit உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து பல்வேறு தேவைகளுக்காக அவற்றை வெளியே அனுப்பும்போது, அந்தத் தொழிற்சாலைகளின் வாசலை அந்த எரிசாராயம் கடந்து வெளியே வரும்போது அதற்குரிய Excise Duty யை அந்தத் தொழிற்சாலை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். Excise Duty என்றால் தொழிற்சாலைகளிலிருந்து Rectified Spirit வெளியே போகும் போது, அந்தத் தொழிற்சாலை அதை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். எரிசாராயம் இரண்டு உபயோகங்களுக்காக

விநியோகம் செய்யப்படுகிறது. ஒன்று, எரிசாராயத்தை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிற எரிசாராயம். அது Bulk Litre ஒன்றுக்கு 35 பைசா வீதம் including Vend Fee ஆயத்தீர்வை விதிக்கப்பட்டு, வழங்கப்படுகிறது. அதாவது தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகிற Rectified Spirit -க்கு 35-பைசா ஆயத்தீர்வை உண்டு. இரண்டாவது, மதுவகைகள் தயாரிக்கும் I.M.F.S. Indian Made Foreign Spirit இருக்கிறதே, இரண்டாவது, மதுவகைகளைத் தயாரிக்க விநியோகிக்கப்படும் எரிசாராயத்திற்கு ஒரு Proof Litre -க்கு எட்டு ரூபாய் ஆயத்தீர்வை விதிக்கப்பட்டு வழங்கப் பட்டு வந்தது. வந்தது - Past Tense. விதிக்கப்பட்டு வந்தது. இந்தத் தொழிற்சாலைகள் செலுத்த வேண்டிய ஒரு லிட்டருக்கு எட்டு ரூபாய் என்ற ஆயத்தீர்வையையும், (Excise Duty) ஒரு Bulk Litre -க்கு அவர்கள் செலுத்த வேண்டிய Vend Fee -யான ஒரு ரூபாயையும் அப்போதிருந்த அரசு, அப்போதிருந்த அரசு என்றால் கவர்னர் ஆட்சிக்கு முன்பிருந்த அரசு 1983-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதியிட்ட எம். எஸ். 783 எண்ணிட்ட அரசு ஆணை மூலமாக வரிவிலக்கு அளித்தது. எதற்கு? Excise Duty -க்கு, வரிவிலக்கு. வேண்டாம் என்று தள்ளிவிட்டது. அதாவது எரிசாராயத்திலிருந்து தொழிற் சாலைகள் அயல்நாட்டு முறை மதுவகைகள் தயார் செய்வதற்கு என்று விநியோகிக்கப்படும் எரிசாராயத்திற்கு பூரண வரிவிலக்கு கொடுக்கப்பட்டது. இந்த வரிவிலக்கு, Exemption எந்த காரணத்திற்காக கொடுக்கப்பட்டது என்பதற்கான விளக்கங்கள் இல்லை. காரணங்களை ஆண்டவனே அறிவான். இப்படிப்பட்ட தொரு சலுகை இந்தியாவிலேயே தமிழ் நாட்டிலே மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வரி விதிவிலக்கின் காரணமாக அரசுக்கு வரவேண்டிய வரி வருவாயில் முதலில் ஏற்பட்ட இழப்பு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 16 கோடி ரூபாய் (Sixteen crores) 83 முதல் 86 ஆம் ஆண்டு முடிய உள்ள கணக்குகளை ஆய்வு செய்த தணிக்கைத் துறைத் தலைவர், அக்கவுண்டண்ட் ஜெனரல் அவர்கள், தன்னுடைய அறிக்கையில் இதுகுறித்து 2 பெரிய சந்தேகங்களைக் கிளப்பினார். என்ன அது? Mohan Breweries and Distilleries என்ற மதுவகை தயாரிப்பாளர்கள் இந்த

வரியை 83-ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே கட்டாமல் இருக்கிறார்கள். இப்போது நீங்கள் ரத்து பண்ணுகிறீர்கள். அவர்கள் 83-க்கு முன்பிருந்தே கட்டாமல் இருக்கிறார்கள். அதாவது இந்த வரிவிலக்கு அளிக்கப்பட்ட 3-9-1983-க்கு முன்பும், அவர்கள் தங்கள் உற்பத்தியை ஆரம்பித்த, 29-5-1982 முதல் இந்த வரியை அரசுக்குச் செலுத்தவில்லை. இதைப்பற்றி அரசு மௌனமாக இருக்கிறது. ஏன்? அரசு, எரி சாராயத்திற்கு மட்டும் விதி விலக்கு அளித்திருந்த போதிலும் அயல்நாட்டு முறை மது வகைகளைத் தயாரிக்க, மற்ற பல்வேறு வகையான சாராயங்களும் பயன்படுகின்றன. குறிப்பாக சைலன்ட் ஸ்பிரிட், மால்ட் ஸ்பிரிட் - மொலாசஸ் பிளெயின், ஸ்பிரிட்-பிளெயின், ஸ்பிரிட் பிளென்டெட் மால்ட்ஸ்பிரிட் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் அரசு ஆணையில் எதுவும் குறிப்பிடப்பட வில்லை. ஏன் என்ற சந்தேகங்களை அக்கவுண்டன்ட் ஜெனரல் அவர்கள் எழுப்புகிறார். அவருக்கு ஒரே பதிலை, இந்த அரசு கொடுத்தது. என்ன பதில் தெரியுமா? தணிக்கைத்துறைத் தலைவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அப்போது அரசு ஒரு அரசு ஆணையின் மூலமாக நிவர்த்தித்தது. என்ன அரசு ஆணை தெரியுமா? அதாவது 3-9-1983 ஆம் நாளிட்ட அரசு ஆணையில் கொடுக்கப்பட்ட வரிச் சலுகை 29-5-1982 ஆம் தேதியிலிருந்து முன் தேதியிட்டு கொடுக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட், எக்சைஸ் டியூட்டிக்கு வரிவிலக்கு அதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் இப்படி ஒரு வரிச் சலுகைக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுப்பது எனக்குத் தெரிந்த வரையில் இதுதான் முதல் தடவை. (ஷேம்).

நான் டெல்லியில் கூட இதைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தேன். ஒரு பெரியவர் சொன்னார், திடுக்கிட்டுச் சொன்னார். ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட். அதுவும் எக்சைஸ் டியூட்டியை ரத்து செய்வதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டா? வரி போடுவதற்குத்தான் ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் போடுவார்கள் வரியை விலக்குவதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்டா என்று கூட கேட்டார்கள்.

அடுத்து, அப்படி கொடுக்கப்பட்ட வரிச் சலுகை என்பது ரெக்டிபைட் ஸ்பிரிட்டுக்கு மட்டுமல்லாமல் - ரெக்டிபைட்

ஸ்பிரிட்டுக்கு மாத்திரம் அல்ல - மதுவகைகளைத் தயாரிக்கப் பயன்படும் எல்லா வகையான சாராயத்திற்கும் பொருந்தும் என்றும், ரெக்டிபைட் ஸ்பிரிட் என்றால், மால்ட் ஸ்பிரிட் - சைலன்ட் ஸ்பிரிட் - நியூட்ரல் ஸ்பிரிட் போன்ற எல்லா எரி சாராயத்தையும் உள்ளடக்கியதுதான் என்ற ஆணை பிறப்பிக்கப் பட்டது. அதாவது இந்த வரி விலக்கு இருக்கிறதே, ரத்து. அது ரெக்டிபைட் ஸ்பிரிட்டுக்கு என்று மாத்திரம் அல்ல, ரெக்டிபைட் ஸ்பிரிட் என்றால், உயர்ந்த ரகங்களையும் குறிக்கும், அதாவது பென்சில் என்றால், பேனாவையும் குறிக்கும் என்பதைப் போல, ரெக்டிபைட் ஸ்பிரிட் என்றால், அது உயர்ந்த ஸ்பிரிட்டுக்களையும் குறிக்கும் என்று ஒரு விளக்கம். இதனால், இதுவரையிலே ஆண்டுக்கு 20 கோடி ரூபாய் இந்த அரசுக்கு சராசரி இழப்பு, இதுவரை ஏற்பட்ட இழப்பு இந்த 7 ஆண்டு காலத்தில் 140 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும். இந்தத் தொகை அரசுக்கு வராமல் வேறு எங்கேயோ போய்க்கொண்டு இருந்திருக்கிறது. அது எனக்குத் தெரியாது. நான் சொல்ல விரும்பவில்லை. 140 கோடி ரூபாய் இந்த 7 ஆண்டுக் காலத்தில் இப்படி யாரோ இதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், எதையோ கொடுத்துவிட்டு. இப்படி வரி விலக்கு அளித்தது அவசியம் இல்லாதது. அந்த வரிச் சலுகை அளித்ததில் ஒரு பெரிய பின்னணி உள்ளதாக இன்றுள்ள அரசு சந்தேகித்து, முதல் பணியாக அந்த வரிச் சலுகை ஆணையை ரத்து செய்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது எரி சாராயத் தொழிற்சாலைகள், மது வகைகள் தயாரிக்க எரி சாராயத்தை விநியோகம் செய்யும்போது, ஒரு ஃபுரூப் லிட்டருக்கு 8 ரூபாய் வீதம் ஆயத் தீர்வையும், ஒரு பல்க் லிட்டருக்கு Vend fee ஆக ஒரு ரூபாயும் கட்ட வேண்டாம் என்ற பழைய அரசின் ஆணையை ரத்து செய்து, இந்த அரசு இப்போது ஒரு ஆணையை பிறப்பித்து உள்ளது. அரசு ஆணை எண் எம். எஸ். 218, நாள் 14-2-1989, இதனால் ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கப் போகும் வருமானம் ரூபாய் 23 கோடியிலிருந்து 25 கோடியாக இருக்கும், அதாவது லஞ்சமாகப் போன பணம் இந்த அரசின் நிதிப் பஞ்சம் போக்க வருகிறது என்று . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதற்குப் பின்னர் விளக்கம் கேட்கலாம் என்றுதான் நினைத்தேன். குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன்.

இப்போது தமிழகம் முழுவதும் 'Distilleries' சாராயம் வழங்கப்பட்டது. ஏற்கனவே இருந்த முதலமைச்சர் காலத்திலே நிறுத்தப்பட்டு I.M.F.L -க்கு மட்டும் இருக்கிறது. அதில் சில சீர் திருத்தங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இங்கே நிறைவேற்றும் முகத்தான் படித்துக் கொண் டிருக்கிறார்கள், கூறிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி குறிப்பிடுகிற போது இதற்கு முன்னாலே இருந்த முதலமைச்சர் அவர்களைப் பற்றி குறிப்பிடுகிற விதத்திலே ஆண்டவன் என்றும், அது லஞ்சமாகப் போனது என்றும் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிற தமிழ் ஆற்றல் எல்லோருக்கும் தெரிந்ததுதான். என்றாலும் பத்திரிகைகளில் செய்திகள் வருகிறபோது ஆண்டவன் என்றும், அது லஞ்சமாகப் போனது என்றும் இப்படியெல்லாம் மறைந்த ஒரு தலைவரைப் பற்றி பேசுவது மரபல்ல என்பதைக் கூட மீறி, இங்கே முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு மக்களுடைய தலைவராக இருந்த புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களைக் கடுமையாக, அவர் உயிரோடு இருந்தபோது அவருடைய புகழைக் குறைக்க முயற்சித்தவர்கள், முடியாமல் தோற்றுப்போனவர்கள், மறைந்த தற்குப் பின்னால், அந்த முயற்சியிலே ஈடுபடுகிற விதத்திலே அவரைப்பற்றி தரக் குறைவாகப் பேசுவது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்படக் கூடாது. அதில் இருக்கிற தவறுகளை, சட்டத்திலே இருக்கிற தவறுகளைச் சொல்லட்டும், அந்தத் தவறுகள் திருத்தப்படப் போகிறதா என்பதைச் சொல்லட்டும் வரி விதிப்பைப் பற்றிச் சொல்லட்டும். அது லஞ்சமாகப் போனது, ஆண்டவனுக்குப் போனது, என்றெல்லாம் முன்னாள் முதலமைச்சர் மக்களின் இதயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படியே இந்த நிலை தொடருமேயானால் நாங்கள் இங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலை ஏற்படாது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இது யாராலும் கேட்க முடியாதது தான். ஏனென்றால் கேட்க சகிக்காத விஷயங்கள் இவை. அந்த அளவில் நடந்திருப்பதால்தான் சொல்கிறேன். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நான் ஆண்டவனுக்குத்தான் தெரியும் என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை. அதை நம்முடைய தீட்சிதர் ரொம்ப ரசித்தார். கருணாநிதியே ஆண்டவனைப் பற்றிச் சொல்கிறாரே என்று அவரே ரசித்தார். (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருக்கிறார்கள். செத்துப் போனவர் வந்து திரும்ப பதில் சொல்லப் போவது இல்லை. அவர் இறந்த புரட்சித் தலைவரைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும். எனக்கு ஆட்சேபணை இல்லை. என்ன குற்றச்சாட்டுகள் வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருங்கள். நீங்கள் சொன்னீர்கள், லஞ்சம் கூடப் பெற்றார்கள் என்று. அதையும் அனுமதிக்கின்றீர்கள். எனவே இதற்குக் கண்டனம் தெரிவித்து நாங்கள் வெளிநடப்பு செய்வோம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆரைத் திட்டுங்கள். அவர் இருந்தபோது சீனிவாசன் சொன்னார் சமாதி கட்ட வேண்டுமென்று. இப்போது அவருடைய புகழுக்கு சமாதி கட்ட வேண்டுமென்று பார்க்கிறார்கள். முன்னால் முயன்று தோற்றவர்கள் இப்போது முயற்சிக்கிறார்கள். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இது போன்ற விவகாரங்களை சொல்லிவிடுவார்கள் என்றுதான் நேற்றைய தினம் நான் அவரிடம் ஒரு விவகாரத்தையும் கொடுக்கவில்லை. இனி சொல்லக் கூடாது. கண்டுபிடித்தது என்னென்ன என்று எடுத்துச் சொல்லியிருப்பீர்களானால் அல்லது நான் சொன்னேனே பாராட்டுப் பத்திரம் அதை வாசிப்பேன். (குறுக்கீடு) நீங்கள் குற்றவாளிகள் என்று சொல்லிவிட்டீர்கள். அதைச் சொல்லக் கூடாது. அதனால் தான் நான் உங்களிடம் ஒன்றும் கொடுக்கவில்லை.

மறைந்த முதலமைச்சர் மீது சொல்வது, தொனிபடச் சொல்வது மரபு கிடையாது. அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை நேரடியாகப் பார்த்தவன் நான். (குறுக்கீடு) அமைதியாகச் சொல்கிறேன். பேச அனுமதியுங்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன் : அவர் மறைந்த நேரத்தில்கூட அவருடைய அறைக்குச் சென்றவர்களுக்குத் தெரியும். பழைய நாற்காலிகள் இரண்டு. (குறுக்கீடு) இதுதான் தவறு. அவரைப் பற்றிச் சொல்லாதீர்கள். நீங்கள் விசாரித்தீர்கள் என்றால் தெரியும். அதனால்தான் நான் சொன்னேன். நீங்கள் சொன்னது தவறு. நீங்கள் அரசியல் ஆக்கி விடாதீர்கள். நீங்கள் இதை விசாரித்துக் கண்டுபிடித்திருப்பீர்களேயானால் நல்லது (குறுக்கீடு) உங்களுக்குத் தமிழ் அறிவு அதிகம். (குறுக்கீடு)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கண்டுபிடித்துத் தான் நிவாரணம் தேடிக் கொண்டிருக்கிறோம். ரூ. 140 கோடி. இதுவரையில் வந்திருக்கிறது. இதைவிட என்ன இருக்கிறது?

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜெ) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். இல்லையென்றால் நான் வெளிநடப்புச் செய்வேன்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த விவகாரம் குறித்து இவ்வளவு விரிவாக இங்கே பேசுவதனால் என்ன பலன் வரப்போகிறது? நடவடிக்கை எடுத்துவிட்டுச் சொல்ல வேண்டும். இப்போது நீங்கள் குற்றவாளி களை உஷார்படுத்தி விட்டுவிட்டீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தொடர்ந்து, நான் டாஸ்மாக் பற்றி குறிப்பிட்டேன் அல்லவா? தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பொரேஷன். தமிழ்நாட்டிலே ஐந்து தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகிற இந்த அயல்நாட்டு

மதுவகைகளை மொத்தமாக வாங்கி சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனைக்குத் தருகிற உரிமையை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள டாஸ்மாக் நிறுவனம் பெற்றிருக்கிறது. அதுதான் தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பொரேஷன் நான் முதலிலே சொன்னேனே. படம் போட்டு வைத்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அங்கேயிருந்து டாஸ்மாக் நிறுவனம் அதை வாங்கி வருகிறது. அந்த நிறுவனம் முதலில் கூறிய 5 தொழிற் சாலைகளிலிருந்தும் மற்ற வெளி மாநிலங்களிலிருந்தும் மொத்த மாக மது வகைகளைத் தருவித்து சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகம் செய்து வந்தது.

மேற்கூறிய 5 தொழிற்சாலைகளிலேயும் உற்பத்தியாகிற மதுவகைகளை மொத்தமாக டாஸ்மாக் நிறுவனத்திற்கு விற்று விடுகிறார்கள். அந்த மொத்த விற்பனை விலையை அந்த தொழிற்சாலையின் உற்பத்தியாளர்களே நிர்ணயிக்கிறார்கள். அரசு நிர்ணயிக்கவில்லை, கமிஷனர் நிர்ணயிக்கவில்லை. இங்கேதான் கவர்னர் கூட இடையிலே புகுந்தார், விசாரிக்க. அந்த மொத்த விற்பனை விலையை அந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தி யாளர்களே நிர்ணயிக்கிறார்கள். அந்த மொத்த விலையை நிர்ணயிக்கிற உரிமையை, அதாவது உற்பத்தியாகிற செலவை அடிப்படையாகக் கொண்டு, அதற்கு மேல் உரிய லாபத்தைக் கூட்டி நிர்ணயிக்கிற உரிமை இந்த அரசுக்கோ அல்லது அரசு அதிகாரம் பெற்ற மதுவிலக்கு கமிஷனருக்கோ இதுவரை கிடையாது. அந்தத் தொழிற்சாலைகளில் தயாரிக்கிற மது வகைகள் பல வகை உள்ளன. எல்லா மது வகைகளுக்கும் எரி சாராயமே - ரெக்டிபைடு ஸ்பிரிட் - மூலப் பொருளாக இருப்பினும், வெவ்வேறு வகையான மது வகைகளுக்கு வெவ்வேறு வகையான விலை நிர்ணயிக்கப்படுகிறது.

டாஸ்மாக் நிறுவனம் இவற்றை வாங்கும்போது ஒரு கேஸுக்கு இன்ன விலை என்ற அடிப்படையில்தான் வாங்குகிறது. ஒரு கேஸ் என்பது 750 மில்லி அளவு கொண்ட 12 பாட்டில்களைக் கொண்டது. ஒரு கேஸின் விலை - இங்கே தான் வேடிக்கை - மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது. ஒரு கேஸின் விலை தமிழ்நாட்டில்தான் அதிகமாக

இருந்து வருகிறது. உதாரணமாக ஓல்ட்மாங்க் ரம் என்ற மது வகையின் ஒரு கேஸ் விலை, ஹோல்சேலில் டெல்லியில் 187.68 ரூ. மகாராஷ்டிராவில் 240 ரூபாய், கேரளத்தில் 220 ரூபாய், ஆந்திராவில் 248 ரூபாய், கர்நாடகத்தில் 214 ரூபாய், நம்முடைய தமிழ்நாட்டில் ரூபாய் 323.31 காசு. இப்படி ஒவ்வொரு வகையான மது வகைகளுக்கும் மொத்த விலைக்கு டாஸ்மாக் நிறுவனத்திற்கு விற்கப்படுகிற போது, எல்லா விலைகளும் மற்ற மாநிலங்களை விட அதிகமாகவே இருப்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டது. ஆகவே இந்த விலையை நிர்ணயம் செய்கிற அதிகாரம் இந்த அரசுக்கோ அல்லது அரசு அதிகாரம் பெற்ற ஆயத் தீர்வை கமிஷனருக்கோ இல்லாது இருப்பதைக் கண்டு, அந்த நிலையை மாற்றும்பொருட்டு இனிமேல் மொத்த விலையையும் சில்லறை விலையையும் நிர்ணயிக்கிற உரிமை இந்த அரசுக்கே இருக்க வேண்டும் என்று கருதி, முடிவெடுத்து, அரசு ஆணை மூலம் இந்த விதிமுறைகளைத் திருத்தி, இனிமேல் உற்பத்தியாகிற மது வகைகளை மொத்த வியாபாரமாக டாஸ்மாக் நிறுவனத்திற்கு கொடுக்கும்போதும் டாஸ்மாக் நிறுவனம் அவற்றை சில்லறை வியாபாரிகளுக்குக் கொடுக்கும்போதும் உள்ள விலையை நம்முடைய மதுவிலக்கு கமிஷனர்தான் நிர்ணயிப்பார் என்று அரசு இப்போது ஆணையிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இப்போதுதான் நாம் நிர்ணயிக்கிறோம். இதுவரையில் நிர்ணயிக்கப்படவில்லை. அந்தப் பணத்தினுடைய கதி எல்லாம் என்ன ஆயிற்று என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது என்ன மாறுகிறது தெரியுமா? அப்போது சாராய சாம்ராஜ்யம் பெற்றிருந்த அதிகாரத்தை இப்போது மக்கள் சாம்ராஜ்யம் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் மாற்றம் இப்போது. அயல்நாட்டு முறை . . . .

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாராய சாம்ராஜ்யம் பெற்ற அதிகாரம் என்றார்கள். அந்த சாராய சாம்ராஜ்யத்தில் இருந்தவர்களை கைது செய்து உள்ளே அடையுங்கள். நீங்கள் அதை செய்தால்தான் நீங்கள் சொன்னதை நான் கேட்பேன். நீங்கள் செய்யவில்லையென்றால் நீங்கள் சொன்னது அரசியல்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கைது செய்வது, தூக்கிலே போடுவது என்பது நம்முடைய பாண்டியன் அவர்களால் . . . . (சிரிப்பு) அவசரமாகப் போடப்படும் உத்தரவுகள்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, தவறாகச் சொல்லிவிடாதீர்கள் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன். தூக்கிலே போடுவது என்று சொல்லப்பட்டது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். முதலமைச்சருக்கு இருக்கக்கூடிய அதிகாரம் - உங்கள் கையிலே போலீஸ் இலாக்கா இருக்கிறது (குறுக்கீடு) இல்லை. இப்பொழுது நீங்கள் எல்லாம் சொல்லி விட்டீர்களே. ஒரு போலீஸ் ஆபீசர் வந்து இன்வெஸ்டிகேஷன் எடுக்கும்போது, இப்படியிப்படியெல்லாம் பண்ணப் போகிறேன் என்று சொன்னால் எந்தக் கேஸாவது நிற்குமா? நான் என்ன சொல்கிறேன் என்றால் நீங்கள் நடவடிக்கை எப்படி எடுக்க முடியும்?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதற்கு மாத்திரம் அல்ல. இன்னும் பல கோப்புகள் இருக்கின்றன; நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும். அயல்நாட்டு முறை மதுவகைகளின் மீதான வரி; IMFS அயல்நாட்டு முறை மது வகைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஒரு குறிப்பிட்ட விலைக்கு TASMAC நிறுவனத்திற்கு மொத்த வியாபாரம் செய்கிறபோது இரண்டுவிதமான வரிகளைச் செலுத்த வேண்டும்.

Excise Duty ஆயத்தீர்வை (2) மொத்த விலையில் ஆயத் தீர்வையைச் சேர்த்து என்ன விலை வருகிறதோ, அந்த விலைக்கு 20 சதவிகிதம் விற்பனை வரியும் 2 சதவிகிதம் Surcharge -ம் கட்ட வேண்டும். ஆயத் தீர்வையைக் கட்டவேண்டியது தயாரிப் பாளர்கள்தான் என்று சட்ட விதிகளில் முன்பு இருந்தது - முன்னே இருந்தது, சட்ட விதியிலே. தயாரிப்பாளர்கள்தான், உற்பத்தியாளர்கள்தான் இந்த ஆயத் தீர்வையைக் கட்ட வேண்டும் என்று. ஆனால் உற்பத்தியாளர்கள் அல்லது தயாரிப்பாளர்கள் கட்ட வேண்டிய அந்த ஆயத்தீர்வையை வாங்குபவர்கள்தான் கட்ட வேண்டும் என்று முந்தைய அரசு சட்ட விதிகளைத் திருத்தியது. யார் தெரியுமா வாங்குகிறவன்? டாஸ்மாக் அரசாங்க

நிறுவனம். அவனே கட்ட வேண்டும் என்று திருத்திவிட்டார்கள். அதாவது மது வகைகளைத் தயாரிக்கின்ற தயாரிப்பாளர்கள் கட்ட வேண்டிய ஆயத் தீர்வையை அந்த மது வகைகளை மொத்த விலைக்கு வாங்குகின்ற டாஸ்மாக் நிறுவனமே கட்டவேண்டு மென்று சட்ட விதிகள் முந்தைய அரசால் திருத்தப்பட்டன. இந்த அரசாங்கத்திற்கு தயாரிப்பாளர்கள் செலுத்த வேண்டிய ஆயத் தீர்வையை இந்த அரசாங்க நிறுவனமே கட்டவேண்டும் என்ற நிலைக்கு சட்டத்தையும் திருத்தினார்கள். இதன் விளைவாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய நியாயமான விற்பனை வரியும் வராமல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது,

உதாரணமாக, ஒரு மதுவகையின் விலை, ஒரு கேஸ் 336 ரூபாய். அதை விற்கின்றபோது தயாரிப்பாளர் 20 சதவிகிதம் விற்பனை வரியும், 2 சதவிகிதம் சர்சார்ஜும் கட்ட வேண்டும். அதாவது 336 ரூபாய்க்கு விற்கின்றபோது அதற்கு ரூ. 80 வரி கட்ட வேண்டும். அதே நேரத்தில் அதே 336 ரூபாய் விலை உள்ள மது வகைக்கு கட்டவேண்டிய Excise Duty ரூபாய் 168-ஐ உற்பத்தியாளர்கள் கட்டாமல் அரசு நிறுவனமான டாஸ்மாக் நிறுவனமே கட்டியிருக்கிறது. இந்த 168 ரூபாயும் கட்டினால் வரும் 504 ரூபாய்க்கு 20 சதவிகிதம் விற்பனை வரியும் 2 சதவிகிதம் சர்சார்ஜும் போட்டுப் பார்த்தால் 110 ரூபாய் வரியாகிறது. ஆனால் உற்பத்தியாளர் ஏற்கனவே கட்டியிருப்பது 80 ரூபாய்தான். இதனால் ஒரு மது வகையிலே மாத்திரம், ஒரு கேஸுக்கு 30 ரூபாய் நஷ்டம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறைபாட்டை 1983ஆம் ஆண்டிலேயிருந்து வணிகவரித்துறை திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னபோதிலும் அப்போதைய அரசு அதை காதிலே போட்டுக்கொள்ளவே இல்லை. ஒரு அதிகாரி சொல்லியிருக்கிறார். அதை காதிலே போட்டுக்கொள்ள வில்லை. இங்கேதான் கவர்னர் வருகிறார். இந்த விதத்தில் மட்டும் அரசுக்கு வரவேண்டிய வருவாயில் ஏற்பட்ட விற்பனை வரி இழப்பு 1987-ம் ஆண்டுவரை மொத்தம் 24 கோடி ரூபாய் என்றும், இந்த 24 கோடி ரூபாய்க்கு, வட்டி, நிகர வட்டி, அபராதம் ஆகியவைகளைச் சேர்த்து மொத்தம் 33 கோடி ரூபாய் என்றும் ஆக மொத்தம் தரவேண்டிய பாக்கி 57 கோடி ரூபாய் என்றும் கணக்கிட்டு அவற்றை வசூலிக்க கவர்னர் ஆட்சியில் முயற்சி செய்தபோது

அதை வழக்கு மன்றத்திற்கு எடுத்துச் சென்று தற்போது வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த ஃப்ராடில் பெரிய ஃப்ராடு ஒன்றே ஒன்றைக் கண்டு பிடித்தார் அவர். கண்டுபிடித்து 57 கோடி ரூபாயை வசூலிக்க ஆளுநர் ஆட்சியிலே முயற்சி எடுக்கப்பட்டபோது அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, அங்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவேதான் இனிமேலாவது இந்த அக்கிரமம் தொடராமல் இருக்க சட்ட விதிகளை இப்போது மறுபடியும் திருத்தி இந்த வரியை உற்பத்தியாளர்களே கட்டவேண்டும் என்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் டாஸ்மாக் என்ற அரசு நிறுவனம் முதலில் உற்பத்தியாளர்களுக்கு இந்த வரியைக் கட்டிவிட்டு பின்பு சில்லறை வியாபாரிகளிடமிருந்து அவற்றை வசூலிக்க வேண்டிய நிலை இல்லை. அரசுக்கு விற்பனை வரியில் இழப்பு ஏற்பட வழியில்லை. விற்பனை வரியிலே ஒரு கணிசமான வருமானம் அரசுக்கு அதிகமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று முக்கியமானது. மது வகைகள் மீது விதிக்கப்படும் எக்சைஸ் டியூட்டி இருக்கிறதே, இந்தத் தீர்வை, இது இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் ரொம்பக் குறைவு. இந்த எக்சைஸ் டியூட்டி - ஆயத் தீர்வை ஆந்திராவிலே ஒரு புரூஃப் லிட்டருக்கு 60 ரூபாய். பீகாரிலே 45 ரூபாய். கர்நாடகாவிலே 40 ரூபாய், மராட்டியத்திலே 52 ரூபாய், உத்திரப் பிரதேசத்திலே 40 ரூபாய், ஒரிஸ்ஸாவிலே 70 ரூபாய், ராஜஸ்தானத்திலே 75 ரூபாய், மேற்கு வங்கத்திலே 82 ரூபாய். தமிழ்நாட்டிலே வெறும் 25 ரூபாய். இதில் வேடிக்கை என்ன வென்றால், அதிகமான விகிதத்திலே ஆயத்தீர்வை செலுத்தக் கூடிய மாநிலங்களில் மது வகைகளின் மொத்த வியாபார நிலை குறைவாக இருக்கிறது.

அதிக ஆயத்தீர்வை செலுத்துகிறான் அல்லவா, அங்கே மொத்த வியாபார விலை குறைவாக இருக்கிறது. குறைவான ஆயத் தீர்வை செலுத்தக்கூடிய தமிழ்நாட்டிலே மொத்த வியாபார விலை அதிகமாக இருக்கிறது. ஏனென்றால், சாராய சாம்ராஜ்

யத்திற்குப் போகவேண்டுமே பணம், அதற்காக மொத்த விலை அதிகமாக இருக்கிறது. அரசிற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வருமானம் ஏதோ ஒரு காரணமாகக் கிடைக்காத அளவிற்குத் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கண்ட றிந்து இந்த அரசு இவற்றைச் சீர்திருத்தி, சட்டத் திருத்தத்தின் மூலமாக ஒரு புரூஃப் லிட்டருக்கு 25 ரூபாயக இருந்த ஆயத் தீர்வை 55 ரூபாயாக உயர்த்தப்படும். இதன்மூலம் ஆண்டொன் றிற்கு ஆயத்தீர்வையாக 56 கோடி ரூபாயும், விற்பனை வரியாக 14 கோடி ரூபாயும், மொத்தம் சுமார் 70 கோடி ரூபாய் அதிக வருமானம் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம் ஒரு பெரிய ஊழலின் ஊற்றுக்கண் அடைக்கப்பட்டு விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று, சில்லறை வியாபாரத்திலே 1985 ஆம் ஆண்டிலே சில்லறை வியாபாரக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை முன்பிருந்த அரசு பெற்றது. அப்படி வந்த பல்லாயிரக்கணக்கான விண்ணப்பங் களைப் பரிசீலித்துத் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக விண்ணப்பித்தவர்களில் சிலரையும், குறிப்பிட்ட தேதிக்குப் பின்பு விண்ணப்பித்தவர்களில் சிலரையும், விருப்பு, வெறுப்பு அடிப்படையில் தேர்ந்தெடுத்து அவர்களையும் சேர்த்து பலருக்கு உரிமம் வழங்கப்பட்டது.

அப்படி வழங்கப்பட்ட கடைகளுடைய எண்ணிக்கை 2035 தான். உரிமம் கிடைக்காத சில பேர் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். சில்லறை வியாபாரம் செய்வதற்கான உரிமம் பெற அவர்கள் இந்த அரசிற்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் 20,000 கட்டவேண்டும். இதனால் ஆண்டொன்றிற்கு அரசிற்குக் கிடைக்கும் வருமானம் சுமார் நாலு கோடி ரூபாய்தான். இந்த 2,035 கடைகளில் சுமார் ஆயிரம் கடைகள் மது வகை தயாரிப்பாளர்களுடைய பினாமிக் கடைகள். மொத்தத்திலேயும் அவர்கள் வாங்குகிறார்கள். அவர்களேதான் ரீட்டெயில் கடையும் வைத்திருக்கிறார்கள் - சில்லறைக் கடையும் வைத்திருக்கிறார்கள்.

அந்த 2,000 கடையிலே 1,000 கடை பினாமிக் கடை. தயாரிப்பாளர்களுடைய பினாமிகள் கடை உரிமம் பெற்றிருப்பதால் சில்லறை விற்பனையிலே ஆயத்தீர்வைத் துறையை ஏமாற்றி கணக்குக்கு வராமல் விற்பனை செய்வதற்கு ஏதுவாகவும் இருக்கிறது. இத்தகைய குறைகள் இருப்பதற்குக் காரணம், தற் போதுள்ள அணுகுமுறை, விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற் பட்டு நடக்கவேண்டிய விற்பனை இப்படிப் பல்வேறு குறைபாடு களுக்கு ஆளாகியிருப்பதால் அரசிற்குக் கிடைக்கவேண்டிய வருமானத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டு அந்தப் பணம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. அந்த முறையை இந்த அரசு ஆய்ந்ததில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதை உணர்ந்து, இந்தச் சில்லறை வியாபாரக் கடைகளின் உரிமம் 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்று முடிவடைகிறது; அதற்குப் பின்பு இந்தச் சில்லறை வியாபாரத்தை நடத்த ஏல முறையை (auction) அமல்படுத்தவேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது. இந்த ஏல முறை ஜூன் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

மக்கள் தொகையின் அடிப்படையில் எத்தனை கடைகள் தேவை என்பதைக் கணக்கிட்டு ஏல முறைகளுக்கு வேண்டிய முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறும், அந்த ஏலக் கடைகள் கோயில்கள், ஆலயங்கள், மசூதிகள், பள்ளிகள், தொழிற்சாலைகள் மற்றும் பொது இடங்களைத் தவிர்த்து அமையவேண்டுமெனவும் மது விலக்குக் கமிஷனருக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

இங்கே ஒரு நகைச்சுவையைச் சொல்லவேண்டும் முன்பு கோயிலுக்குப் பக்கத்திலே கடைகள் இருக்கக்கூடாது என்கிற போது, முன்பு இருந்த அரசு டெபனிஷன் கொடுத்தது, கோயில் என்றால் என்ன, பள்ளிக்கூடம் என்றால் என்ன என்று.

கோயில் என்றால், ஹிண்டு ரிலிஜியஸ் போர்டுக்குக் கீழே வருவதுதான் கோயில். பள்ளிக்கூடம் என்றால் சர்க்கார் நடத்து கிற பள்ளிக்கூடம்தான் பள்ளிக்கூடம். அதற்குப் பக்கத்திலேதான் கடை இருக்கக்கூடாதே தவிர, ஹிண்டு ரிலிஜியஸ் போர்டுக்குக் கீழே வராத கோயிலுக்குப் பக்கத்திலே கடை இருக்கலாம்.

சர்க்கார் பள்ளிக்கூடம் அல்லாத பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலே கடை இருக்கலாம் என்று டெபனிஷன் இருக்கிறது. அதெல்லாம் இப்போது இருக்காது.

தற்போதுள்ள முறை மாற்றப்பட்டு, ஏல முறை அமலுக்கு வரும்போது, அதனால் அரசிற்கு தற்போதுள்ள நாலு கோடி ரூபாய் என்பது இருபது கோடி ரூபாய் அளவிற்கு உயரும். மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பல்வேறு விதிமுறைகளைத் திருத்தி, பல்வேறு சலுகைகளை உற்பத்தியாளர்களுக்கு வழங்கியதால் அரசிற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான வருமானம் வராமல் வீழ்ச்சி அடைந்தது. அந்தக் குறைகளை மாற்றி, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு இந்த ஆயத் தீர்வை முறையை சீர்படுத்தியதன் மூலமாக இந்த இருபது நாட்களில் இந்த அரசு, இப் பிரச்சினையைத் தீவிரமாக ஆராய்ந்து, விதிமுறைகளுக்குப் பல்வேறு திருத்தங்களை வெளியிட்டு, இந்தச் சட்டத் திருத்தங்களை இந்த அவைக்கு முன் வைப்பதால் ஆண்டு ஒன்றிற்கு ஏறத்தாழ நூறு கோடி ரூபாய்க்கு மேலாக அரசிற்கு வருமானம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைத் தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள், வரி அதிகம் போடாமலேயே சமாளிக்க வேண்டும் என்று. இருந்தாலும் கூட 100 கோடி ரூபாய் தான் அதிலே கூட வருகிறது. இன்னும் கூட கொஞ்சம் அவர்களைக் கசக்கிப் பிழிந்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாக வரக்கூடும். இருந்தாலும் கூட நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குப் போதுமான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே ஒரு கொள்கை அறிவிப்பாக அறிவிக்கிறேன்.

ஐ. எம். எப். எஸ். என்னும் மது பானம் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் அனுமதியை இனிமேல் இந்த அரசு, தனிப்பட்டவர்கள் யாருக்கும் அளிக்காது. இப்போது இருக்கும் 5 மது பான தொழிற்சாலைகள் இனிமேல் இப்போதுள்ள உற்பத்தி அளவை விரிவுபடுத்துவதற்கும் இந்த அரசு அனுமதியை அளிக்காது. ஐ. எம். எப். எஸ். உற்பத்தியை அரசு நிறுவனமான டாஸ்மாக் படிப்படியாக ஏற்கும் என்றும் நான் அறிவிக்கிறேன்.

எனவே முன்பு இங்கே 100 கோடி ரூபாய்க்கு நடைபெற்று இருக்கிற இந்த இழப்பு, ஊழல், முறைகேடு 100 கோடி ரூபாய்க்கு மேல் அதுவும் ஆண்டுதோறும், ஒரு வரலாறு காணாத இமாலயன் கரப்ஷன், ரெக்கரிங் கரப்ஷன், பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த சாராய சாம்ராஜ்யத்தினை பதவி ஏற்ற 20 நாட்களிலே தரைமட்டம் ஆக்கியிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி). We have liquidated the liquor empire in Tamil Nadu. இன்னும் ஏதாவது விட்டுப் போயிருந்தால் தகவல் தருமாறு மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களை, பொதுமக்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் இது குறித்து மேலும் ஆராய்ந்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த அளவில் எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நிர்வாகச் சீர்திருத்தங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதிலே உற்பத்தி விலையை நிர்ணயிப்பது 'டாஸ்மாக்குக்கே' கொடுக்கப்பட்டு இருந்த அந்த அதிகாரம் இப்போது எக்சைஸ் கமிஷனருக்கு கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. டாஸ்மாக்கும் அரசு நிறுவனம்தான், அதிலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். இதிலே இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற எக்சைஸ் கமிஷனரும் ஐ.ஏ.எஸ். ஆபீசர்தான். அது ஒருபுறம் இருக்கட்டும்.

இன்னும் ஒன்று, அந்த டாஸ்மாக்கில் இருந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் அரசு சொன்னதைக் கேட்டு சலுகைகளைச் செய்தார்கள் என்று சொன்னார். இந்த எக்சைஸ் கமிஷனராக தனக்கு வேண்டியவர்களைப் போட்டுக்கொண்டு அரசு நினைப்பதை, உற்பத்தியாளர்களுக்கான விலையை நினைத்த அளவிலே செய்து கொள்ள வழி வகை இருக்கிறது. எனவே இந்த சந்தேகம் எல்லாம் எதுவும் இல்லாமல் நீங்கள் உடனடியாக இந்த மாதத்திலேயே இந்த ஐ. எம். எப். எஸ். உற்பத்தியை அரசே ஏற்று தனியாருக்குக் கொடுக்கப்படுவதை நிறுத்திவிட்டு அரசாங்கமே ஏற்று நடத்துங்கள்; இல்லை என்றால் இன்னும்

ஒன்று செய்யுங்கள். இதை முழுவதுமாக எடுத்து விடுங்கள். ஏனென்றால், மக்கள் குடிப் பழக்கத்திலிருந்து மீளட்டும். (கூச்சல்-குறுக்கீடு) ஏன் இருக்க வேண்டுமா? (குறுக்கீடு) நான் குடிக்க மாட்டேன்.

எனவே நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன், ஒட்டுமொத்தமாக அது எந்தவகையாக இருந்தாலும் சரி, ரம்மாக இருந்தாலும் சரி; பீராக இருந்தாலும் சரி; விஸ்கியாக இருந்தாலும் சரி; எத்தனை வகை இருக்கிறதோ எல்லாவற்றையும் எடுத்து விடுங்கள். எடுத்துவிட்டு வேறு வகையில் நிதி ஆதாரங்களை திரட்டுங்கள். இல்லை இது முடியாது சட்டத் திருத்தங்களைச் செய்து இனிமேல் புதிதாக லைசன்ஸ் தர மாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனிமேல் புதிதாக கொடுக்கவேண்டியது இல்லை. இருக்கிற லைசன்சே போதும். ஐந்தாக இருக்கிறது. எனவே ஏற்கனவே ஐந்து உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். ஒன்று அரசுடமை ஆக்குங்கள். அல்லது எடுத்து விடுங்கள்; இல்லையென்றால் பின்னாலே நீங்கள் செய்திருக்கும் சட்டத் திருத்தத்திலே பலவற்றை நாங்கள் சுட்டிக்காட்ட முடியும். இதிலே உங்கள் இஷ்டம் போல, இந்த ஆட்சியின் இஷ்டம்போல, இருக்கிற உற்பத்தியாளர்களை வைத்துக்கொண்டு இன்னும் இந்த அரசு நன்மை அடைய முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னைப்போல் பிறரை நினைக்கக்கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னைப்போல் பிறரை நினைத்துத்தான் முன்னால் இருந்த ஆண்டவனையெல்லாம் பல பேர் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய நேரத்திலே மிக பயங்கரமான உண்மைகளை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு ரூ. 100 கோடி அளவில்

ஏறத்தாழ 10 ஆண்டு காலத்திற்கு ரூ. 1,000 கோடி அளவில் சாராய சாம்ராஜ்யம் இங்கே நடந்திருக்கிறது. ஒரு parallel government இங்கே நடந்திருக்கிறது. இதற்குப் பொறுப்பானவர் களைக் கண்டு பிடித்து, யார் என்பதையும் அடையாளம் காட்டி, அவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப் போகிறீர்கள் என்பதையும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்தால், நீங்கள் இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்தவர்கள் ஆவீர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதற்கு ஒரு குறியீடு, 2 மாதம், 3 மாதம் வைத்து, இது யாருக்கெல்லாம் போய் இருக்கிறது, எந்த உற்பத்தியாளருக்குப் போயிருக்கிறது, என்ன தண்டனை அளிப்பீர்கள் என்பதைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பொறுத்திருந்து பாருங்கள், இன்னும் பல கோப்புகள் வரிசையாக அணிவகுத்துக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே, பேரவையின் அனுமதியோடு பேரவையின் நடவடிக்கைகள் சில மணித் துளிகள் நீட்டிக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோப்புகள் தொடரும், தொடரும் என்று பயமுறுத்தி எங்களுடைய வாயை அடைத்துவிட முடியாது. எந்தக் கோப்புகள் வேண்டுமானாலும் தொடரட்டும். அது கடந்த ஏழு ஆண்டு மட்டுமல்ல, அதற்கு முன்னாலேயிருந்த ஆட்சியிலேயிருந்து கூட தொடரட்டும். எல்லா கோப்புகளும் வரட்டும். வரும்போது அவற்றையெல்லாம் சந்திப்போம், ஓடி விட மாட்டோம். ஆகவே, கோப்புகளைக் காட்டி, எங்களுடைய வாயை அடைத்து விடலாம் என்று மட்டும் தயவுசெய்து பயமுறுத்த நினைக்காதீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சில கோப்புகளைப் பார்த்ததிலேயே 140 கோடி ரூபாய்க்கு மேல் ஊழல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல ஊழல்களைக் கண்டுபிடித்து அரசினுடைய நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்காகத் தான் இன்னும் பல கோப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றையும் இங்கே காண இருக்கிறோம் என்று குறிப்பிட்டேன்; யாரையும் பயமுறுத்துவதற்காக அல்ல.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல திட்டங்களை இங்கே அறிவித்தார்கள். பல மோசடிகள் நடந்திருக்கின்றன என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன்னும் பெரிய மோசடி நீண்ட நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. முன்பு முதல்வராக இருந்த நேரத்தில். இவர் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதாகச் சொல்லி, ஜெமினி பாலத்திற்குக் கீழே இரண்டு பக்கத்திலேயும் குதிரைகளை வைத்தார்கள். இன்றையதினம் குதிரைப் பந்தயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது வேறு விஷயம். அதிலே பெரிய மோசடி நடைபெறுவதாக நம்முடைய மாநிலத்திலேயிருந்து வெளி வருகிற ஒரு பெரிய பத்திரிகையில், ஒரு வாரத்திற்கு முன்னால், 10 நாட்களுக்கு முன்னால், பெட்டிச் செய்தி வெளியிட் டிருந்தார்கள். நாளைய தினம் நடைபெற இருக்கின்ற குதிரைப் பந்தயத்தில் எந்தக் குதிரை வெற்றி பெறப் போகிறது என்பதை இன்றே நிர்ணயம் செய்து குதிரைகள் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கின்றன. இனிமேல் அந்த குதிரைப் பந்தயச் செய்தியை எங்கள் பத்திரிகையிலே வெளியிடப் போவதில்லை யென்று சொல்லி ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கி றார்கள். ஏழைகள் அதிலே கசக்கிப் பிழியப்படுகிறார்கள், ஏழைகள் அதிலே மோசடிக்குள்ளாகிறார்கள். எனவே அதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஏற்கனவே குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற முனைப்போடு தான் இந்த அரசு சட்டம் கொண்டு வந்தது. அதற்குப் பிறகு

இடையிலே ஏற்பட்ட பல்வேறு நிலைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நன்றாகவே தெரியும் என்று கருதுகிறேன். நாங்கள் வந்து 20 நாள்தான் ஆகிறது. அதற்குள் இவ்வளவு விவகாரங்கள் நடைபெற்றிருக் கின்றன. இவ்வளவு பணிகளை ஆற்றியிருக்கிறோம்; இன்னும் பணிகள் ஆற்ற எங்களுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் ஆற்றுகிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நிச்சயமாக எங்களுடைய ஒத்துழைப்பு இருக்கும். நடவடிக்கை எடுப்பீர்களா? எப்பொழுது நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவற்றை யெல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, திரு. தங்கபாண்டியன் அவர்கள் பேசும்பொழுது அருப்புக்கோட்டை கூட்டுறவுச் சங்க ஊழல்கள் பற்றி பேசினார்கள். அதுகுறித்து அரசு விசாரணை நடத்தி, நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எல்லா பாண்டியன்கள் பேசியவையும் மனதிலே இருக்கின்றன. அவை பற்றியெல்லாம் பிறகு கவனிக்கப்படும். (சிரிப்பு)

திரு. பி. எச். பாண்டியன் : இனிமேல் நான் உங்களிடம் ஒரு ஆதாரமும் கொடுக்கமாட்டேன். நீங்கள் பேசிவிடுகிறீர்கள். நீங்கள் நடவடிக்கை எடுத்தால்தான் ....

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சில் இறுதியாக இன்னும் இரண்டு அறிவிப்புகள், இந்த மன்றம் மகிழத்தக்க அறிவிப்புகள். மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணம், இன்று அல்ல, கடந்த சில - 5, 6 மாதங்களுக்கு முன்னால், சில மருத்துவமனைகளுக்குச் சென்றபொழுது, மிகுந்த வேதனையான சூழ்நிலையை அந்த மருத்துவமனைகளிலே கண்டேன், ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே, பத்திரிகைகளிலேகூட அப்பொழுது அந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்பொழுது பொறுப்புக்கு வந்துவிட்ட காரணத்தால், நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைச் சில மருத்துவமனைகளுக்கு அனுப்பி, குறிப்பாக பொது மருத்துவமனைக்கு அனுப்பி, சில விவரங்களைத் தெரிந்து வரச் சொன்னேன். அவர் தந்த செய்தியை இங்கே படிக்கிறேன். "மாண்புமிகு தமிழக முதல்வர் உத்தரவின்படி இன்று மாலை 2.15 மணிக்கு சென்னை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த பொது மருத்துவமனையிலுள்ள இதய சிகிச்சைப் பிரிவை மேற்பார்வை இடச் சென்றிருந்தேன். அப்பொழுது நான் அங்கே கண்டறிந்த கீழ்க்கண்ட செய்திகளை இதயவலியோடு தங்களுக்குத் தருகிறேன். ரூபாய் 35 இலட்சத்திற்கு 7-1-1988-ல் வாங்கப்பட்ட Haema Camera சுமார் ஓராண்டுக் காலமாகியும் இதுவரை எங்கும் பொருத்தப்படாமல் உபயோகமின்றி ஒரு அறையில் முடங்கிக் கிடக்கிறது. அது இருதயப் பிரிவுக்குப் பயன்படக்கூடியது. 35 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது. ஒரு வருஷமாகப் பொருத்தப் படாமல் ஒரு அறையிலே முடங்கிக் கிடக்கிறது.

மேலும் Cathetisation Unit -ல் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு கருவி, ஆகஸ்ட் 84-ல் வாங்கப்பட்டுள்ளது. அதில் மிக முக்கியம் எனக் கருதப்படும் Byplant என்பது கடந்த மூன்றாண்டுகளாகச் செயல்படாமல் உள்ளது.

மேலும் இதய ஓட்டத்தினைப் பதிவு செய்ய அதிலே பொருத்தப்பட்டுள்ள Recorder என்ற கருவியும், பழுதடைந்து செயல்படாமல் உள்ளது. அதனுடைய மதிப்பு மாத்திரம் சுமார் 9 இலட்சம். அதிலே விந்தை என்னவென்றால், இதைப் பழுது பார்க்க வாங்க வேண்டிய புதிய பகுதிகள் Spare Parts அந்தத் துறை கொடுத்துள்ள கணக்கின்படி 10 இலட்சம். 9 இலட்சம் கருவி, ரிப்பேர் பார்ப்பதற்கு வாங்க வேண்டிய உபகரணங்கள் 10 இலட்சம். இக் கருவியை வாங்கியதில் உள்ள முறைகேடு பற்றி கணக்கு எடுத்ததில் தெரிய வந்துள்ளது; ஆடிட்டர் அறிக்கையிலும் குறிக்கப்பட்டுள்ளது. இக்கருவியைக் கொடுப்பதற்கு மனுச்செய்த Phillips மற்றும் Simpons கம்பெனிகளில் Simpons கம்பெனிக்கு இந்தத் துறையினர் ஆணை வழங்கி உள்ளார்கள். இதனால் அரசுக்கு 3.9 இலட்சம் அதிகம் செலவாகி இருக்கிறது.

இப்படிப் பல குறைபாடுகள் பல மருத்துவமனைகளில் இருக்கின்றன. மற்ற விஷயங்களையெல்லாம் விட முக்கியம் மக்களுடைய உயிரோடு விளையாடுகின்ற இந்த நிகழ்ச்சிகளைக் குறைக்க வேண்டுமென்பதற்காக உடனடியாக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, மூன்று மாத காலத்திற்குள்ளாக அவர்கள் ஒரு அறிக்கையைத் தந்து, அந்த அறிக்கையின்படி இந்த அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையிலே செயல்பட முனைகிறது. அந்தக் கமிட்டிக்கு Medical Education and Hospital Improvement Advisory Committee என்று பெயர். அதில் பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் இராமமூர்த்தி அவர்கள் தலைவராகவும், இலட்சுமணசாமி முதலியாருடைய மகன் வேணுகோபால் அவர்களும், Dr. Sam Moses அவர்களும் உறுப்பினர்களாக இருந்து செயல்படுவார்கள். Health Secretary, Convenor ஆக இருந்து செயல்படுவார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு அறிவிப்பு, நம்முடைய திரு. ரமணி போன்றவர்களுக்கும் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் பிரியமான அறிவிப்பு. மாதவரம் பால் பண்ணையில் 1980-ம் ஆண்டு ஒரு வேலை நிறுத்தம். அது எதற்காக என்றால், மதுரையில் நடைபெற்ற பால்பண்ணைத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்திற்கு அனுதாபம் தெரிவிக்கிற வகையிலே ஒரு அடையாள வேலை நிறுத்தம். அந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டவர்களையெல்லாம் அன்றிருந்த அரசு டிஸ்மிஸ் செய்துவிட்டது. அவர்கள் வழக்குக்குப் போனார்கள். நீதிமன்றம் அவர்களைச் சேர்க்க வேண்டுமென்று சொன்னது. ஆனால் இதுவரையிலே அவர்கள் சேர்க்கப்படவில்லை. அவர்களிலே பல பேர் 80-லேயிருந்து 8 வருஷம் ஆகிறது அல்லவா! பலபேர் ஆங்காங்கே சிதறிப் போய் விட்டார்கள். சில பேர் வேறு சில வேலைகளுக்குச் சென்று விட்டார்கள். நான் நேற்றைக்கு நம்முடைய பால் பண்ணை - அந்தத் துறையினுடைய அமைச்சரை அழைத்து அதுபற்றிப் பேசினேன். அவர்கள் கொடுத்த விவரப்படி இப்பொழுது அதிலே 489 தொழிலாளர்கள் தான் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். 489 இருந்தாலும் சரி. 500 இருந்தாலும் சரி, அவர்களெல்லாம் திரும்பவும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் தெரிவிக்கின்றேன்.

உரை : 19 நாள் : 24.01.1990

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இந்த மாமன்றத்தில் நம்முடைய நண்பர் திரு. ரமணி அவர்களோடு 40 பேர் தங்களுடைய கருத்துக்களை - உரையின் மீது கொள்கை விளக்கங்களை - இந்த அரசு இந்த உரையைத் தொடர்ந்து எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். உரைக்கு நன்றி தெரிவித்தும், உரையில் தங்களுக்குள்ள மன வேறுபாடுகளை எடுத்துரைத்தும் நடுநிலையாக நின்று இந்த அரசு செயல்பட வேண்டிய விதம் குறித்தும், உரையாற்றிய அனைவருக்கும் நான் இந்த அரசின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலில் ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்போடு என்னுடைய உரையைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன். நாளை மறுநாள் குடியரசு நாள். நேற்றையதினம் இதுவரையிலே பெருமளவுக்கு மறந்துபோயிருந்த அல்லது மறக்கின்ற அளவுக்குச் செய்யப் பட்டிருந்த, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுடைய பிறந்த நாளை, இந்தியா முழுமையும் கொண்டாடி, இந்தியாவினுடைய பிரதமர் தேசிய முன்னணியினுடைய தலைவர் திரு. வி. பி. சிங் அவர்கள் நேதாஜி அவர்களைப்பற்றி பாராட்டுரை வழங்கி தொலைக்காட்சியில் வானொலியில் அவருடைய அருமை பெருமைகள் எல்லாம் பேசப்பட்ட நாள். நாளை மறுநாள் குடியரசு நாள்.

அதற்கு இடையே, இந்த அரசு நாட்டின் விடுதலைக்காக போராடியவர்களை மறந்தது இல்லை என்பதற்கு அடையாளமாக கடந்த காலத்தில் பல காரியங்களைச் செய்திருக்கிறது, அதைப் போலவே எல்லை மீட்பு போராட்டம், மொழிக் காவலர்கள் என்ற

நிலையில் மொழியைப் பாதுகாக்க களம் புகுந்தவர்களுடைய தியாகம், இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்கெனவே 250 ரூபாயாக இருந்த மாதாந்திர ஓய்வு ஊதியமாக வழங்கப்பட்ட தொகையை, 350 ரூபாயாக மாற்றியது இந்த அவை உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

நேற்றையதினம் அவர்களின் சார்பாக காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த சிலரும், எந்த இயக்கத்தையும் சாராத சுதந்திரப் போராட்ட வீரர்களுக்காக அமைப்புகளை வைத்திருப்பவர்களும் என்னைச் சந்தித்து அவர்களுக்கு இலவசப் பேருந்து அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டார்கள். அதனை அதிகாரிகளோடு கலந்து பேசி இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் சுமார் 6,000 சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, மாநில அரசு ஓய்வு ஊதியமாக ரூபாய் 350 பெறுகிற அந்தப் போராட்ட வீரர்கள் மாநில அரசு ஓய்வு ஊதியம் பெறுகிற 6,000 போராட்ட வீரர்கள், அதேபோல எல்லைப் போராட்ட வீரர்கள் உள்ளிட்ட சுமார் 1,000 மொழிக் காவலர்கள், இவர்களுக்கு தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகச் செல்ல ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 5,000 கிலோ மீட்டர் என்ற அடிப்படையில், ரூபாய் 500 மதிப்புள்ள பேருந்து பாஸ் வழங்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (11.10 மணி)

இந்த ஆளுநர் உரையின் முகப்பில் இன்று மத்தியிலே அமைந்துள்ள தேசிய முன்னணி அரசு குறித்தும், அந்த அரசு தேர்தல் நேரத்திலே வழங்கிய வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றத் தொடங்கியிருப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை ஒட்டியும் வெட்டியும் இந்த மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துவைத்திருக் கின்றார்கள். குறிப்பாக இன்று காலையிலே பேசிய நம்முடைய சட்டப் பேரவையினுடைய முன்னாள் தலைவர், நண்பர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள், நேற்றையதினம் இங்கே உரையாற்றிய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ள மண்டல் கமிஷன் குறித்து தங்களுடைய பாராட்டுதலை, மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள், மண்டல் கமிஷன் என்பது

ஏற்கனவே ஜனதா ஆட்சிக் காலத்தில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20 ஆம் நாள் அறிவிக்கப்பட்ட ஒரு குழு தன் பணிகளைத் தொடங்கிய நாள் 21-3-1979. அறிக்கையை வழங்கிய தேதி 31-12-1980. அது நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்ட தேதி 20-4-1982. 1978-லே அறிவிக்கப்பட்டு, நாடாளுமன்றத்திலே அந்த அறிக்கை 1982-லே வைக்கப்பட்டு கிட்டத்தட்ட 8 ஆண்டுக் காலமாக அது கேட்பாரற்ற நிலையில், ஆனால் இந்தியாவிலே உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் குறிப்பாக தமிழகத்திலே உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அவர்களுக்காக குரல் எழுப்புகின்ற இயக்கங்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் போன்ற இயக்கங்கள் எடுத்த முயற்சிகளைப் பற்றியோ, அவர்கள் வடித்து எடுத்த மாநாட்டுத் தீர்மானங்களைப் பற்றியோ முன்பு இருந்த அரசு கவனிக்கவும் இல்லை, அதிலே ஆர்வம் காட்டவும் இல்லை. அதுமாத்திரமல்ல, நம்முடைய நண்பர் திரு. பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதுபோல இந்த அவையிலேயே கடந்த கூட்டத்தொடரில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஆராய்ந்து உடனடியாக நிறைவேற்ற மத்திய அரசு முன்வர வேண்டும் என்று நிறைவேற்றிய தீர்மானம் அன்றைய ராஜீவ் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதுபற்றியும் யாரும் கவலைப்படவில்லை. மண்டல கமிஷன் அறிக்கையிலே அப்போது தரப்பட்ட புள்ளி விவரங்களை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டிய மிக முக்கியமான குறிப்பாகும். மண்டல் கமிஷனை அமைத்த குறிக்கோளே இந்தியா முழுமையும் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்திய அரசினுடைய அலுவலகங்களிலோ அல்லது மத்திய அரசு சார்புடைய நிறுவனங்களிலோ இரயில்வே அல்லது வங்கிகள், நெய்வேலி லிக்னைட் போன்ற கார்பரேஷன்கள் இவற்றில் எல்லாம் வேலை வாய்ப்புகளை பிற்படுத்தப்பட்ட மக்கள் பெறமுடியாமல் ஏற்கனவே முன்னேறிய மக்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஒரு நியாயமான விழுக்காடு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அந்த மையக் கருத்தை வைத்துத்தான் மண்டல் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அப்படித் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்டபோது அதிலே தரப்பட்ட சில விவரங்களை இங்கே நான் படித்துக்காட்டுவது

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். கிளாஸ் 1. பெரிய அதிகாரிகள், மத்திய அரசு அல்லது நிறுவனங்கள் இவற்றிலே பணியாற்றுகின்ற பெரிய அதிகாரிகள் என்று பட்டியல் எடுத்துக்கொண்டால் மொத்தப் பணியாளர்கள் 1,74,043 பேர்கள். அதிலே தாழ்த்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும் 9,891 பேர். 1,74,000 பேரில் 9,800 பேர் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் 8,169 பேர். மீதமுள்ள 1,55,983 பேர் முன்னேறிய வகுப்புகளைச் சார்ந்தவர்கள். இது கிளாஸ் 1, அடுத்தது கிளாஸ் 2 அதிகாரிகள், அதிலே மொத்தம் உள்ள பணியாளர்கள் 9,12,925 அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,982. அதாவது முதல் வகுப்பு வேலைவாய்ப்புகளில் மிகக் குறைவாகவும், அடுத்து கிளாஸ் 2 என்ற அந்த வாய்ப்புகளில் ஓரளவு அதிகமாகவும் - ஆனால் நியாயமான அளவுக்கு அல்ல - ஓரளவு அதிகமாகவும் 9,12,925 மொத்தப் பணியாளர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 1,65,982 பேராக, பிற்படுத்தப்பட்டவர்கள் 97,000 பேராக, முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் 6,49,943 பேராக உள்ள இந்த நிலையையும் மண்டல் கமிஷனுடைய அறிக்கை வெளிப்படுத்தியது. கிளாஸ் 3, கிளாஸ் 4 ஆகிய இந்தப் பிரிவுகளைச் சேர்ந்த அலுவலாளர்களின் மொத்த எண்ணிக்கை 4,84,646. அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் 1,18,282 பேர், பிற்படுத்தப்பட்டவர்கள் 90,575 பேர். மீதமுள்ளவர்கள் முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

இந்த ஏற்றத்தாழ்வு ஒழிக்கப்பட்டு, வகுப்பு வாரியாக அவரவர்களுக்குள்ள உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே பரிந்துரைத்த இந்தக் குறிப்புகள் எதுவும் ராஜீவ்காந்தி காலத்திலே நடைபெற்ற அரசால் ஏற்றுக்கொள்ளப் படாமல் அல்லது அதை ஆய்ந்து ஒரு முடிவு எடுக்க முன்வராமல் புறக்கணிக்கப்பட்டு விட்டபோது, தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையில், மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று எடுத்துச் சொன்னதற்கு இணங்கவும் அதைபோலவே தமிழகத்திலே வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே மண்டல் கமிஷனின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும், அதற்காக நாம் குரல் எழுப்ப வேண்டும் என்று எடுத்துச்சொன்னதன்

அடிப்படையிலும் தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையில் அதைத் திட்டவட்டமாகத் தெரிவித்தவகையிலும் இன்றைய தினம் அதற்கான முயற்சிகள் மும்முரமாக மத்திய அரசிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அப்படி நடைபெறுகின்ற அந்த முயற்சிகள் ஏதோ ஒரு காரியம் நடைபெறக்கூடாது என்றால் அதன் தலையிலே ஒரு கல்லைப்போடு, இல்லாவிட்டால் கமிட்டியைப் போடு. ஒரு காலத்திலே 'கல்கி' சொன்னதைப்போல ஆகிவிடாமல் அந்தக்காரியம் உடனடியாக நிறைவேறுவதற்கு உரிய முயற்சிகளை - மத்தியிலே உள்ள அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை இங்கே நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போலவேதான், இந்த மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கு எப்படித் தேர்தல் அறிக்கையினுடைய அடிப்படையிலே தேசிய முன்னணி அரசு முன்வந்திருக்கின்றதோ, அதைப்போலவே தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்ட 'இன்டர்-ஸ்டேட் கவுன்சில்' அதையும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்கின்ற ஆர்வத்தோடு மத்தியிலே உள்ள தேசிய முன்னணி அரசு பணிகளைத் தொடங்கி இருக்கிறது. இது குறித்து நேற்றைய தினம் நம்முடைய நண்பர் திரு. பூவராகன் அவர்கள் இங்கே விளக்கமாகப் பேசி இருக்கின்றார்கள். முதல் நாள் இந்த விவாதம் தொடங்கிய நேரத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பில் உரையாற்றிய உறுப்பினர்கள், 'இன்டர்-ஸ்டேட் கவுன்சில்'-ஐ விமர்சித்து அதை ஏதோ ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைப் போலவும் இப்போது, 'இன்டர் - ஸ்டேட் கவுன்சிலை' ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதைப் போலவும் சில வினாக்களை எழுப்பினார்கள்.

இதே மாமன்றத்தில் 1974 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை நீங்கள் அனைவரும் தெளிவாக அறிவீர்கள். மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குக் காரணமாக, அடிப்படையாக அமைந்த அறிக்கை 'இராஜமன்னார் குழு அறிக்கையாக' இருந்தது என்பதையும் அந்தத் தீர்மானம்

நிறைவேற்றியபோது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இராஜ மன்னார் குழுவினுடைய அறிக்கை எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் அப்போது அனுப்பப்பட்டது. அன்றையதினம் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அன்றைய பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாநில சுயாட்சி என்பது பயங்கரமான ஒன்று என்று கூறாமல் இது முதலமைச்சர்களுடைய மட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய ஒன்று என்று, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் விவேகத்தோடு ஒரு பதிலை அன்றைய தினம் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். அதற்குத் தொடர் நடவடிக்கை இல்லையே தவிர, மாநில சுயாட்சி என்கின்ற வார்த்தை பயங்கரமானது என்றோ அல்லது நாட்டைப் பிரிக்கக்கூடியது என்றோ அல்லது தேச விரோதமானது என்றோ அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொல்லவில்லை.

ஆனால், மாநில சுயாட்சி என்றாலே தேச விரோதமானது என்ற ஒரு கருத்தை நாடாளுமன்றத் தேர்தல் நேரத்திலும் அதற்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் நேரத்திலும் இந்தியாவி னுடைய பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் எல்லா இடங்களிலும் பேசினார்கள். இது தேசத்தைப் பிரிக்ககூடியது; நாட்டைக் காட்டிக்கொடுக்கக் கூடியது; வெளிநாட்டுக்காரர்களுக்கு நாட்டை, துரோகம் செய்து காட்டிக்கொடுக்கக் கூடிய ஒன்று என்றெல்லாம் மிகக் கடுமையான, பயங்கரமான வார்த்தைகளைப் பயன்படுத்தி மாநில சுயாட்சி என்கின்ற அந்தத் தத்துவத்தையே உடைப்பதற்கு ராஜீவ் காந்தி அவர்கள் அன்றைக்கு முயற்சித் தார்கள். இன்டர்-ஸ்டேட் கவுன்சில், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்த ஒன்று என்பதற்கு அன்றைய தினம் இங்கே பேசிய உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்து வைத்த வாதம், நாம் 1974ஆம் ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்தின் முழுப் பகுதியையும் எடுத்துவைத்துக் கொள்ளாமல், அதிலே இரண்டு வரிகளை மாத்திரம் பிரித்து எடுத்துக்கொண்டது தன்னுடைய வாதத்திற்கு வலு சேர்த்துக்கொண்ட முயற்சியாகும்.

நம்முடைய 1974ஆம் ஆண்டு தீர்மானத்தில், அந்த வரிகள் அரசியல் அமைப்பின் 263ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள

மாநிலக் குழு, அனைத்து மாநிலக் குழு பயனற்றது. அதனால் எவ்விதப் பலனும் கிட்டாது என்று நாம் அதிலே சொல்லியிருந்தாலும்கூட, முன்னும் பின்னும் என்ன சொல்லியிருக்கிறோம் என்பதுதான் முக்கியம். முதலில், எல்லா முதலமைச்சர்களையும் அல்லது அவர்களுடைய நியமனதாரர்களையும் கொண்ட அனைத்து மாநிலங்கள் குழு அமைக்கப்பட வேண்டும்; எல்லா மாநிலங்களுக்கும் சம பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்; இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் அதன் தலைவராக இருக்க வேண்டும்; மைய அமைச்சர்கள் அந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கத் தேவையில்லை; பாதுகாப்பு, அயல்நாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து, நாணயச் செலாவணி ஆகியவை குறித்து எடுக்கப்படவேண்டிய எந்தவொரு நடவடிக்கையும், மைய மாநில அரசுகளுடைய உறவைப் பாதுகாக்கின்ற வகையில் அதைப் பொறுத்து, அனைத்து மாநிலக் குழு கலந்து ஆலோசிக்கப்படவேண்டும்; அதைப்போல, மைய அரசு மேற்கொள்ளும் பொருளாதாரம், நிதி, பணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் விவாதிக்கும் வாய்ப்பையும் அந்த மாநிலக் குழு, இன்டர்-ஸ்டேட் கவுன்சில் கொண்டிருக்க வேண்டும். அரசியல் அமைப்பின் 263ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள அனைத்து மாநிலக் குழு பயனற்றது; அதனால் எந்தப் பயனும் கிட்டாது. எனவே அனைத்து மாநிலக் குழுவினுடைய பரிந்துரைகள் மைய அரசையும் மாநில அரசுகளையும் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும். பரிந்துரை எதுவும், ஏதேனும் காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டால், அந்தப் பரிந்துரை நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை நாடாளுமன்றத்தின் முன்பும், மாநிலச் சட்டமன்றங்கள் முன்பும் வைக்கப்பட வேண்டுமென்பது; இன்டர்-ஸ்டேட் கவுன்சில் எப்படி மாற்றி அமைக்கப்படவேண்டுமென்ற நிலையிலே, 1974ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கொணர்ந்து இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினுடைய வாசகங்களாகும்.

இப்போதுகூட நம்முடைய பிரதமர் வி. பி. சிங் அவர்கள் 263 ஆவது பிரிவில் சொல்லப்பட்ட அனைத்தையும் அப்படியே

ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கூட, என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்று மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில் Inter-State Council கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது; அதிலே என்னென்ன திருத்தங்கள் செய்யலாம் என்பதை நீங்கள் எழுதி அனுப்பினீர்களேயானால் அவற்றையெல்லாம் நாங்கள் சீர்தூக்கிப் பார்த்து உடனடியாக முதலமைச்சர்களையெல்லாம் அழைத்து ஒரு மாநாடு கூட்டி அதிலே உங்களுடைய கருத்தைக் கேட்டு, அதிலே திருத்தங்களோடு அந்த 263ஆவது பிரிவை நடைமுறைப்படுத்த ஏதுவாக இருக்கும் என்று அவர்கள் எழுதி இருக்கின்றார்கள்.

நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 25-3-1989-ல் இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை வைத்தபோது நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். 'பிப்ரவரி திங்களில் புதுதில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மத்திய மாநில உறவுகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளேன். அவ்வமயம், சட்டம், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மத்திய மாநில அரசின் உறவுகள் குறித்து ஒன்றுக்கொன்று தொடர்பான முறையில் தொகுத்து விவாதிக்க, முன்வருவது அவசரமும் அவசியமுமானது ஆகும் என்று விளக்கியுள்ளேன். இதன் தொடர்பாக அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவின்கீழ் "அனைத்து மாநிலங்களின் குழுவை" Inter-State Council உடனடியாக ஏற்படுத்தவேண்டுமென்றும், அத்தகைய குழுவின் அமைப்பு செயல்முறைகள் பற்றி பிரதமர் அவர்கள் - அப்போது திரு. ராஜீவ்காந்தி பிரதமர் - மாநில முதலமைச்சர்களுடன் வெகு விரைவில் கலந்தாலோசிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளேன்' என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டேன். அப்போது அது கவனிக்கப்படவில்லை. இப்போது கவனிக்கப்பட்டிருக்கிறது. இதிலே இன்னொரு விஷயம் என்ன வென்றால், மத்திய மாநில உறவுகளைப் பற்றி அறிய மத்திய அரசு ஏற்கெனவே அமைத்த சர்க்காரியா கமிஷனுக்கு எல்லாக் கட்சிகளின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. அப்படி அனுப்பப்பட்டபோது, அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. அரசின் சார்பிலும் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. அந்தக் கருத்து எப்படி

அமைந்தன என்றால் இன்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையே இல்லை, 263-வது பிரிவையே எடுத்துவிடலாம் என்று அ.தி.மு.க. ஆட்சியினால் கருத்துக்கள் அனுப்பப்பட்டன. 1985-ம் ஆண்டு அந்தக் கருத்துக்கு ஒரு காரணம் சொன்னார்கள். அந்தக் குழு, மத்திய மாநில, அரசுகள் சொல்வதைக் கேட்டு நடக்கவேண்டு மென்ற அளவிலே இல்லாத காரணத்தால் இந்த 263-வது பிரிவையே எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். பிறகு மீண்டும் காரணம் கேட்டு சர்க்காரியா கமிஷன் அ.தி.மு.க. அரசை வினவியபோது, 1985-ம் ஆண்டு ஒரு கருத்தை எழுதினார்கள். அதுதான் வேடிக்கை. 35 ஆண்டுகளாக இந்த 263-வது பிரிவின்கீழ் இன்டர்-ஸ்டேட் கவுன்சில் அமையவில்லை, ஆகவே இனியும் அமையத் தேவையில்லை என்று முன்பிருந்த அ.தி.மு.க. அரசு ஒரு அருமையான கருத்தை எழுதி அப்படியே அந்தப் பிரிவை அரசியல் சட்டத்திலிருந்து எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், அ.தி.மு.க. அரசு இப்படி எழுதியது, இன்டர்-ஸ்டேட் கவுன்சில் உள்ள பிரிவையே எடுத்துவிடலாம் என்று. ஆனால் அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெளியிட்ட அவர்களது தேர்தல் அறிக்கையில் மத்திய மாநில அரசுகளின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண, இன்டர்-ஸ்டேட் கவுன்சிலை அமைத்திடப் பாடுபடுவோம் என்று தெரிவித்தார்கள். இது தேர்தல் அறிக்கை. 1985-ம் ஆண்டு இன்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவையில்லை என்று எழுதி, 263-வது பிரிவையே எடுத்துவிடலாம் என்று எழுதினார்கள், ஆகவே அந்த பதிலை படித்தார்களோ, படிக்கவில்லையோ, ஆனால் இப்படி இவர்களுடைய தேர்தல் அறிக்கையில் இன்டர்-ஸ்டேட் கவுன்சிலை அமைக்கப் பாடுபடுவோம் என்று அ.தி.மு.க. கட்சியின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வளவு முரண்பாடுகளுக்கு இடையில் இன்டர்-ஸ்டேட் கவுன்சிலைப்பற்றி அந்தக்கட்சி தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்கிற அதே நேரத்தில் நாம் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இன்டர்-ஸ்டேட் கவுன்சில் தேவை, அதற்காக 263-வது பிரிவில் சில திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று முடிவெடுத்து அந்த முடிவு எவ்வாறு அமையவேண்டுமென்பதற்கு முதலமைச்சர்களைக் கூட்டி, பிரதமர்

வி.பி. சிங் அவர்கள் கலந்தாலோசிக்கக் கூடிய ஒரு நல்ல நிலையை இந்த இன்டர்-ஸ்டேட் கவுன்சில் மட்டத்தில் உருவாக்கியிருப்பதற்கு நான் இந்த மாமன்றத்தில் அவருக்கும், மத்திய அரசுக்கும் நன்றி கூறப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே பேசிய நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களில் சிலர் குறிப்பாக நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும் நேற்றைய தினம் பேசிய திரு. பொன். விஜயராகவன் அவர்களும் பைனான்சியல் டிசிப்ளின் கெட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுரைகள் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக இலவச அரிசி, சத்துணவு, இலவச முட்டை வழங்குதல் போன்ற காரியங்களால் 'பைனான்ஷியல் டிசிப்ளின்' சீர் குலைந்துவிடும் என்கின்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்தச் செயல்பாடுகளால் நிச்சயமாக நிதியாதாரக் கட்டுப்பாடு குலைந்துவிடாது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மூலதனச் செலவையோ அல்லது திட்டச் செலவையோ காட்டி இந்த நலிந்தோருக்காகச் செய்யப்படுகிற இந்த நல்ல உதவிகள் பாதித்துவிடவில்லை. அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் நல்வாழ்வுத் திட்டங்களை நாம் செய்தாலும்கூட 1360 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு எந்த அளவிலும் குறையாது என்ற நம்பிக்கையோடு நாம் இருக்கிறோம்.

இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் இருக்கின்றன இந்தத் திட்ட ஆண்டு நிறைவுற. அதிலே நாம் ஏற்கெனவே அறிவித்தவாறு 1360 கோடி ரூபாய் என்று அறிவிக்கப்பட்ட செயல்பட்டுக்கொண்டு இருக்கிறோம். அதைப்போல மூலதனச் செலவும் எந்த வகையிலும் குறையப்போவது இல்லை என்ற உறுதியையும் நான் இந்த அவைக்குத்தரத் தயாராக இருக்கிறேன் ஆனால் கடந்த ஆண்டு அதாவது 1989 ஆம் ஆண்டில், ஆளுநர் ஆட்சியிலே அறிவிக்கப்பட்ட திட்டச் செலவு 1,457 கோடி ரூபாய். திருத்திய மதிப்பீட்டில் அது 1,202 கோடி ரூபாயாகக் குறைந்ததையும் நீங்கள் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நாங்கள் இந்த 1,360 கோடி ரூபாயை நிச்சயமாக இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்துவோம் என்று

உறுதிபூண்டிருப்பதை எண்ணும்போது ஏற்கெனவே பைனான்ஷியஸ் டிசிப்ளின், குலைந்துபோய் இருந்தாலும் அந்த டிசிப்ளின் குறையாமல் காப்பாற்றுகிற பொறுப்பை இந்த அரசு ஏற்று உங்கள் நம்பிக்கைக்கு உரியதாக நடக்கும் என்பதையும் நான் இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்வாழ்வுத் திட்டங்களுக்காக ஒரு அரசு செலவிடுவது இன்றைய சூழ்நிலையில் தவிர்க்க முடியாததொன்றாகும். நண்பர் திரு. பாண்டியன் அவர்கள்கூடச் சொன்னார்கள், ஓட்டுகளுக்காக நாம் செய்கின்ற காரியம் இது என்று. நான் அவருக்கும் சொல்கிறேன், மற்றும் இங்கே பேசிய பல நண்பர்களுக்கும் - இந்த இலவச உணவு, இலவச உடை, இலவச முட்டை இவை எல்லாம் தேவைதானா என்று கேட்ட மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் - நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள் வாக்களிப்பார்களா, அல்லது வாக்களிக்க மாட்டார்களா என்பதல்ல. நான் நன்றாக இதை ஆராய்ந்து பார்த்து இருக்கிறேன். நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் ஏறத்தாழ 60 இலட்சம் பிள்ளைகளுக்குச் சத்துணவு போடப்பட்டபோது அப்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலோ அல்லது அதற்குப் பிறகு நடைபெற்ற உள்ளாட்சிமன்றத் தேர்தலிலோ அந்தக் கட்சி வெற்றிபெற்றுவிடவில்லை. எனவே வாக்குகளுக்காக இந்தத் திட்டங்கள் என்றோ அல்லது திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதால் வாக்குகள் விழுந்துவிடும் என்றோ கடந்த காலத்திலே திரு. எம்.ஜி.ஆர். ஆட்சியிலே நாம் அதை ஆராய்ந்து பார்த்தால், அல்ல என்ற விடை நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். எனவே வாக்குகளுக்காக அல்ல.

வாழ்க்கையில் எந்தவிதமான பிடியும் இல்லாமல், சுதந்திர இந்தியாவில் இன்னமும் நடைபாதையில் வாழ்கிற மக்கள், ஊனமுற்ற நிலைமையில் எந்த உதவியும் கிடைக்காமல் நலிந்துகொண்டிருக்கிற மக்கள், தங்களுடைய நோயைப் போக்க முடியாமல் துடித்துக் கொண்டிருக்கிற மக்கள், பசிப்பிணியால் பரிதவித்துக்கொண் டிருக்கிற மக்கள், குடிசையில் குமுறிக்கொண்டிருக்கிற மக்கள்

ஆகிய இவர்களுக்கெல்லாம் ஒரு அரசு, நாங்கள் நீண்டகாலத் திட்டங்களைத் தந்து நிறைவேற்றுவோம், அதுவரையில் பொறுத்திரு என்று சொன்னால் அது 'அரசன் வருவான் கழுத்திலே உனக்கு மாலை சூட்டுவான்' என்று ஒரு ஏழையைப் பார்த்து 'அதுவரையில் நீ எதிர்பார்த்துக்கொண்டிரு' என்று சொல்லி அவளை ஏங்க வைத்து, எதிர்பார்த்தது நடக்காமல் அவள் வாழ்விழந்து போவதுபோல் அது முடிந்துவிடும். எனவேதான் இன்றைக்கே நம்மால் முடிந்த காரியங்களை, நல்லுதவிகளை அவர்களுக்குச் செய்யவேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அதற்காக நீண்ட காலத்திட்டங்களை இந்த அரசு புறக்கணித்துவிட வில்லை. புறக்கணிக்கப்போவதும் இல்லை. அதுவரையிலே பொறுத்திருக்க இயலாதவர்கள், துடித்துக்கொண்டு இருப்பவர்கள், அவர்களை ஓரளவுக்காவது கைதூக்கிவிடவேண்டும் என்று எடுக்கின்ற முயற்சிகள்தான் இவையே தவிர வேறு அல்ல. உங்களுக்கு ஒரு விவரத்தைச் சொல்லவேண்டுமேயானால், 10-1-1990 நாள் வரையில் இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டு, இந்தக் கால கட்டத்தில், இருதய நோய், அதனால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சைக்குச் சென்றவர்கள், சிறுநீரகக் கோளாறால் சிகிச்சைக்குச் சென்றவர்கள் மற்றும் வேறு பல நோய்களுக்கு ஆளாகியவர்கள் இவர்களுக்கெல்லாம் உதவி அளிக்கும்படி, இந்த மாமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்கள், கட்சி சார்பற்ற முறையில் அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், யார் ஆதாரங்களோடு அரசுக்கு முறையீடு செய்தாலும் அவை எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளாக இருதய நோய் சிகிச்சைக்காக மாத்திரம் 83 பேர்களுக்கு இந்த அரசு உதவித் தொகை வழங்கியிருக்கிறது. அதுபோலவே, சிறு நீரக சிகிச்சைக்காக 23 பேர்களுக்கு உதவித் தொகை வழங்கியிருக்கிறது. வேறு பல நோய்களுக்காக 9 பேர்களுக்கு, மொத்தம் 120 பேர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திருமண உதவித் திட்டம் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் பெயரால் அமைந்துள்ள திருமண உதவித் திட்டம். அதில் இதுவரையில் 10,100 பேர்களுக்கு, இந்த ஓராண்டுக் காலத்தில்,

முழுமையாக ஓராண்டு முடியாத இந்தக் கால கட்டத்தில் 10,100 பெண்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் படிக்கவேண்டுமென்ற ஊக்கத்தையும் பெறுகிறார்கள். அதே நேரத்தில் ஏழ்மை நிலைமையில் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு வாழ்வே இல்லை என்ற அவநம்பிக்கையிலிருந்து அவர்கள் விடுபட்டு ஒரு புதிய ஒளியை அவர்கள் பெறமுடிகிறது. இந்த ஓராண்டுக்காலத்திலே 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்களுக்கு வாழ்வு வழங்கப்பட்டு இருக்கின்றது. அதுபோலவே கருவுற்ற மகளிருக்கு கிட்டத்தட்ட 66 ஆயிரம் பெண்களுக்கு, அவர்கள் கருவுற்றிருக்கிற நேரத்திலே அவர்களுடைய ஆரோக்கியத்திற்கும், குழந்தை பிறந்த பிறகும்கூட அதற்கான செலவினங்களுக்காக 200 ரூபாய் தருவதாக அறிவித்து, அது அறிவிக்கப்பட்டு நின்றுவிடாமல், அப்படியும் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 5 அல்லது 6 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த செலவில் நம்முடைய நிதி ஆதாரக் கட்டுப்பாடு குலைந்துவிடும் என்று யாரும் அஞ்சத் தேவையில்லை. நீண்டகாலத் திட்டங்களை நாம் நிறைவேற்றுகிற அதே நேரத்திலேயே, இந்தத் திட்டங்களையும் நிறைவேற்ற, தவிர்க்கமுடியாத சூழ்நிலை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே பேசிய நண்பர்கள் சிலர் விவசாயி களுடைய பிரச்சினைபற்றி ஆளுநர் அவர்களுடைய உரையிலே எதுவும் குறிப்பிடவில்லை என்று வருத்தப்பட்டார்கள். விவசாயிகளுடைய வேதனைகளைத் தீர்க்க இன்னும் பல முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கோடிட்டுக் காட்டினார்கள். ஏற்கெனவே நம் வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித்ததற்கு இணங்க வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மாற்றியமைக்கப்பட்ட குறுகிய காலக் கடன்களும், தவணை தவறிய கடன் தொகைகள் அனைத்தும் அறவே ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. குறுகிய, மத்திய காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. நீண்டகாலக் கடன்கள் மீதுள்ள ஒத்தி வைக்கப்பட்டுள்ள வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதனால் 39 கோடி ரூபாய் செலவை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது அன்னியில்

கடந்த ஆண்டில் அரசு விவசாயிகளுக்கு வட்டிச் சலுகை அளிப்பதாக அறிவித்ததனால் அந்தச் சலுகையையும் அறிவித்ததோடு அதற்கு ஈடு செய்ய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்தத் தொகையை வழங்காத காரணத்தினால் நிலுவைத் தொகையாக நின்றுவிட்ட 6 கோடி ரூபாயை இந்த அரசுதான் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இதற்கேகூட நான் அடிக்கடி இந்த மாமன்றத்திலே எடுத்துக்காட்டியது போலவும். நம்முடைய உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர், முன்னால் அந்த பொறுப்பேற்றிருந்த திரு. வீராசாமி அவர்கள், இதைப்பற்றி மிக விவரமாக எடுத்துக்கூறியதுபோலவும், நபார்ட் நிறுவனத்தினுடைய பலமான எதிர்ப்பு இதற்கு இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் அவர்களோடு இங்கேயிருந்து அங்கே சென்று கலந்து பேசி இந்த 106 கோடி ரூபாயை நாங்கள் விவசாயிகளுக்காக உதவியாக செலவழிப்பதற்கு நீங்கள் குறுக்கே நிற்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டு இந்த 106 கோடி ரூபாய் அவர்களுடைய பளுவாக ஆகாமல் இருப்பதற்கு நாங்கள் வழிமுறைகள் காண மிகுந்த சிரமங்களை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.

ஒரு நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய திரு. ரமணி நல்ல சீதோஷ்ண நிலை இன்றைக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது அரசியலிலே ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இதைக் குறித்து மத்திய அரசோடு இந்த அரசின் சார்பில் பேச இருக்கிறோம். முன்பு இருந்த ராஜீவ் அரசு சிக்கல், அவர்களுடைய தொழிலில் உள்ள முன்னேற்றக் குறைவு போன்றவைகளைப் பற்றி எல்லாம ஆராய ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு 1988 அக்டோபர் திங்களில் ஒரு நல்ல அறிக்கையைக்கூட ராஜீவ் அரசு இருந்த காலத்திலே வழங்கியது. அதிலே விவசாயிகளுடைய கடன் பளுவைக் குறைப்பது பற்றிய வழிமுறைகளை எல்லாம் கூடச் சொல்லியிருந்தது. அதுமாத்திரமல்ல, கடன் பளுவைக் குறைக்க மத்திய அரசும், மாநில அரசுகளும் நிதிவசதிகளை எந்த வகையிலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய விரிவான சிபாரிசுகளும் அந்த அறிக்கையிலே இடம்பெற்றிருந்தன. ஆனால் அந்த அறிக்கைமீது ராஜீவ் காந்தியினுடைய அரசு எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது ஆச்சரியத்திற்கு உரிய ஒன்றல்ல. வழக்கம்போல அந்த அறிக்கையும் கிடப்பிலே போடப்பட்டது. ஆனால் இப்போது தேசிய முன்னணி அரசு விவசாயிகளுடைய பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்து ஓர் அரிய முடிவை எடுக்கக்கூடிய கட்டத்திற்கு வந்திருக்கிற காரணத்தாலே அதை நாங்கள் எதிர்பாத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முடிவுகள் வெளியான பிறகு வரவு - செலவுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு மேலும் என்ன நன்மைகளை வழங்க முடியும் என்பவற்றைச் சிந்தித்து அவை அறிவிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் நான் இன்றைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு 25 ரூபாய் நாம் அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறோம். கொடுக்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல, மத்திய அரசு அறிவித்தாலும் கூட கொடுக்காமல் இருக்கலாம். 1980ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் கொள்முதல் விலை 25 ரூபாயாக அதிகபட்சமாக உயர்த்தப்பட்டிருப்பது இப்போதுதான். அதனால் ஆகின்ற செலவு அரசுக்கு 27.5 கோடி ரூபாயாகும். இவ்வாறு 25 ரூபாய் அதிகம் கொடுப்பதன் காரணமாக நாம் தொடர்ந்து கொடுத்து வருகிற 35 ரூபாய் ஊக்கத் தொகையைக் குறைத்துவிடவில்லை. இதிலே அந்தப் பணத்தை கழித்துக்கொள்ளவும் இல்லை.

இந்த ஊக்கத்தொகை கொடுக்கின்ற வரலாறே எப்படி ஆரம்பமானது என்றால் முன்பு இந்த ஆட்சி நடைபெற்றபோது விவசாயிகளுடைய இந்தக் கொள்முதல் விலை உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசின் முன்னால் வைக்கப்பட்ட நேரத்தில் அவர்களின் சார்பாக நான் டெல்லிக்குச் சென்று அன்றைய வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்த திரு. பாபு ஜெகஜீவன்ராம் அவர்களிடத்திலே வாதாடினேன். அவர்களே என்னென்ன வழியோ சிந்தித்துப் பார்த்து, இந்தக் கொள்முதல் விலையை அதிகப்படுத்தித்தர இயலாது என்பதற்கான காரணங்களைச் சொல்லி, கடைசியாக அவர் எனக்கு வழி சொல்லிக் கொடுத்தார். ஊக்கத் தொகை என்கின்ற பெயரால், போக்குவரத்துச் செலவுகள் என்கின்ற பெயரால், நீயாக ஒரு தொகையைக் கொடுக்கலாம் என்று சொன்னதன்பேரில் 15 ரூபாய்

என்று அப்போது இந்த அரசு முதன் முதலாக இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தமிழகத்தில் விவசாயிகளுக்கு அந்த 15 ரூபாய் ஊக்கத் தொகையாகத் தரப்பட்டது தனியாக. அதுவாக வளர்ந்து 35 ரூபாயாக இன்றைக்கு ஆகியிருக்கிறது. இதனால் அரசுக்கு ஆகக்கூடிய செலவு 38½ கோடி ரூபாய் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல கரும்பு விலையைப் பொறுத்தவரையில் 8.5% ரெக்கவரி உள்ள கரும்புகளுக்கு 230 ரூபாயிலிருந்து டன் ஒன்றுக்கு 250 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். பம்ப் செட்டுகளுக்கு, 5 ஹார்ஸ் பவர் வாங்குபவர்களுக்கு இருந்த விற்பனை வரியை அறவே ரத்துச் செய்திருக்கிறோம். இதனால் 4 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு. மின் கட்டணத்தை 75 ரூபாயிலிருந்து 50 ரூபாய்க்கு ஒரு ஹார்ஸ் பவருக்குக் குறைத்து 10 கோடி ரூபாய் இழப்பை இந்த அரசு இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவற்றோடு விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய சலுகைகள் அல்லது அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பலன்கள் முற்றுப்பெற்றுவிட்டன என்று சொல்லமாட்டேன். என்றைக்கும் விவசாயிகளுடைய பிரச்சினை இருந்து கொண்டிருப்பவை என்பதை நான் மிக நன்றாக அறிவேன். எனவே, இவற்றை எல்லாம் சிந்தித்து பார்த்து நிதிநிலை அறிக்கையிலே இன்னும் விரிவாக அவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகள் பற்றி சொல்லப்படும் என்பதையும் இந்த மன்றத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவிரிப் பிரச்சினை குறித்து நம்முடைய திரு. தீட்சிதர் அவர்கள் கூட இன்று காலையில் விளக்கமாகப் பேசினார்கள். அதைப்பற்றி சில ஆதாரப்பூர்வமான உண்மைகளை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். வழக்குகளை, அதாவது காவிரிப் பிரச்சினையிலே தமிழ் நாட்டினுடைய உரிமையை மையப்படுத்தி நாம் தொடர்ந்திருந்த வழக்குகளை எந்தக் கட்சியையும் கேட்டுக்கொள்ளாமல் தமிழ்நாடு முதலமைச்சர் தானாக முன்வந்து அன்றைக்குத் திரும்பப் பெற்றுவிட்டார் என்கின்ற ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இங்கே அவையிலே பேசப்பட்ட, எடுத்து வைக்கப்பட்ட உண்மையான ஆதாரங்களை

மறுத்து, ஏதோ வெளியிலே பத்திரிகைகளிலே புழுதி வாரித் தூற்றிவிட்டால் - அதை வெளியிடுவதற்கும் சில பத்திரிகைகள் இருக்கின்ற காரணத்தால், அவர்களே அந்தப் பத்திரிகைக்காரர்களே இதை ஆராயாமல் இது எப்படி உண்மையாக இருக்க முடியும், எது உண்மையான ஆதாரம், எது போலியான ஆதாரம் என்பதைப்பற்றிக் கவலைப்படாமல் சில பத்திரிகைக்காரர்கள் அதைப் பெரிய அளவிலே வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிற காரணத்தால் அப்படி வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் 7-5-1972-லே இந்த வழக்குகளை வாபஸ் பெற்றுவிட்டோம். எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலாசிக்காமலே வாபஸ் பெற்றுவிட்டோம் என்றும் இன்னொரு குற்றச்சாட்டாக ஹேமாவதி, கபினி, ஹேரங்கி நதிகளில் கட்டப்படும் அணைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்பு இருந்த கழக அரசு முன்வரவில்லை என்கின்ற மற்றொரு குற்றச்சாட்டையும் சொல்லி தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது வெறுப்பு ஏற்படுத்த பெருத்த முயற்சி செய்யப்படுகிறது. அதைத்தான் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். 20 சதவீத மக்களை, இன்னமும் இவற்றை எல்லாம் நம்பிக்கொண்டு இருக்கிற மக்களைத் திருத்தி அவர்களுடைய விழிகளைத் திறக்க நாம் என்ன செய்யப்போகிறோம் என்று கேட்டார்கள். இந்த அரசு மாத்திரமல்ல அரசுக்கு அரசை நடத்துகின்ற ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சிகளாக இருக்கிற நாங்களும் உங்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். இதுபோன்ற புனைச் சுருட்டுகளால் உண்மைக்கு மாறான கருத்துக்களால், செய்திகளால் நாட்டு மக்களுடைய எண்ணத்தைத் திசை திருப்புகின்றவர்களை அடையாளம் காட்டுகின்ற முயற்சியிலே நாம் அனைவரும் தொடர்ந்து ஈடுபட்டு ஆகவேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய உண்மைக்குச் சற்றும் பொருந்தாத ஒரு செய்தி சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்து வைக்கின்ற ஆதாரங்கள் மூலமாக நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

21-5-1972 அன்றைய தினம் இந்திராகாந்தி அம்மையார் சென்னை வந்தார்கள். அவர்களிடத்தில் நான் காவிரிப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசினேன். அதைப்பற்றி பெங்களூரிலிருந்து

வெளியாகின்ற டெக்கான் ஹெரால்டு என்ற பத்திரிகையிலே பின்வருமாறு செய்தி வந்தது. "Prime Minister Indra Gandhi said today that inter-State disputes at river waters should be thrashed out by the Chief Ministers concerned. It is much easier that way. If there is anything I can do, I will certainly help, she told the pressman after Tamil Nadu Chief Minister Karunanidhi had met her." இந்த செய்தி டெக்கான் ஹெரால்டு பத்திரிக்கையிலே அப்போது வந்து இருக்கிறது.

அப்படிச் சந்தித்துப் பேசியபொழுதுதான் அவர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். வழக்கு இருக்கும்போது பேசுவது என்பது சற்றுச் சிரமமான காரியம். இருதரப்பிலும் எரிச்சல் ஊட்டக்கூடிய நிலைமையிலே பேச்சு வார்த்தை அமைய வேண்டாம். எனவே அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்கின்ற முயற்சியிலே ஈடுபடுவது நல்லது என்று என்னிடத்திலே சொன்னார். மீண்டும் முதலமைச்சர்களை அழைத்து வைத்துப் பேச அது வசதியாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதையொட்டி 29-5-1972-ல் மூன்று மாநில முதல்வர்கள் தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகிய 3 மாநில முதலமைச்சர் களுடைய கூட்டத்தை அன்றைக்கு இருந்த மத்திய அமைச்சர், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் கூட்டியிருப்பதாக அழைப்பு விடுத்தார்கள்.

29 ஆம் தேதி டில்லியிலே கூட்டம் என்றதும் 27-5-1972 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலே உள்ள கேபினட் அறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் யார், யார் கலந்துகொண்டார்கள் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன். திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், திருப்பூர் மொய்தீன், ஆறுமுகச்சாமி, ஏ. ஆர். மாரிமுத்து, எஸ். எஸ். ராமசாமி படையாச்சி, ஏ. ஆர். பெருமாள், ஆர். சக்திமோகன், கே. டி. கே. தங்கமணி, கே. ராஜாராம், ஏ. ஆர். தாமோதரன், டாக்டர் ஹெச். வி. ஹண்டே, டி. கே. சண்முகம், கே. எஸ். அப்துல் வகாப், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. - இவர்கள் அந்தக் கூட்டத்திலும் கலந்து கொண்டார்கள்; அதற்கு அடுத்து நான் டில்லிக்குச் சென்று

திரும்பிய பிறகு 4-6-1972-ல் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் அவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள்; அப்போது அந்தக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள், பேச்சு வார்த்தை மூலமே பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்றும், அதற்கு முன்னர் வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்வது நல்லது என்றும் தெரிவித்த கருத்து விளக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதுதான் அந்தக் கூட்டத்தினுடைய 'மினிட்ஸ்'.

அவர்களுடைய கருத்தை ஆராய்ந்த பிறகு 7-7-1972 அன்று ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு எண் 1/71-ஐத் திரும்பப் பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது, அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பிறகு, அந்த அடிப்படையிலே 28-8-1982 அன்று உச்ச நீதிமன்றத்திலே மனு விண்ணப்பிக்கப்பட்டு, தமிழக அரசு தொடர்ந்த வழக்கைத் திரும்பப் பெற அனுமதி வழங்கப்பட்டதோடு, தேவைப்பட்டால் மீண்டும் புது வழக்குத் தொடர உரிமை உண்டு என்ற அடிப்படையில்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனவே, 7-5-1972-லே வழக்குகள் வாபஸ் பெற்றதாக வெளியிலே சொல்லப்படுகிற கருத்தும் தவறு. அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசாமல் இந்தக் காரியம் நடைபெற்றது என்று சொல்வதும் தவறு. அதோடு ஸ்டே வாங்கவில்லையென்று சொல்லப்படுகின்ற கருத்தும் மிகமிகத் தவறு.

4-8-1971-ல் காவிரிப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தபொழுது அந்த வழக்கிலே தீர்ப்பளிக்கும் வரையிலும் மேலும் நடுவர் மன்றம் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரையிலும் கர்நாடகத்திலே கட்டப்பட்டுவரும் ஹேமாவதி, கபினி அணை, ஹேரங்கி அணை, ஸ்வர்ணவதி அணை மற்றும் காவிரியில் மற்ற கிளை நதிகளில் கட்டப்பட்டு வருகிற அணைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தா வண்ணம் தடை செய்யக்கோரி ஆணை பிறப்பிக்குமாறு ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை உச்ச நீதிமன்றம் 25-10-1971 அன்று பரிசீலித்து அந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. எனவே, நாம் ஸ்டே கேட்டதும் உண்மை; அந்த ஸ்டே தர முடியாது என்று உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டதும் உண்மை. அந்த உச்ச நீதிமன்றத்திலே அன்றைக்கு நீதிபதிகளாக இருந்து அந்த வழக்கை விசாரித்தவர்கள் Justice J. M. Shelat, Justice J. D. Dua, Justice S. C. Roy, Justice H.R. Khanna, Justice G.K. Miter. இவர்கள்தான் அந்த வழக்கை விசாரித்தவர்கள். கடைசியாக, Upon perusing the papers and upon hearing, the Court dismissed the Application என்ற வகையிலே அன்றைக்கு நாம் கேட்ட ஸ்டே நிராகரிக்கப்பட்டு விட்டது. அவற்றையெல்லாம் மறைத்துவிட்டு ஏதோ 7 ஆண்டுக்காலம் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் காவிரிப் பிரச்சினை பேசப்படவில்லையென்று கூறுகின்றவர்கள் 10 ஆண்டுக்காலமாக என்ன செய்துகொண் டிருந்தார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. வழக்கைத் திரும்பப் பெறும்பொழுதே இதே பிரச்சினைக்காக மீண்டும் வழக்கைத் தொடரலாம் என்கிற அந்த நிபந்தனையோடுதான் வழக்குத் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. ஆனால் 10 ஆண்டுக் காலத்தில் எந்த முயற்சியும் செய்யப்படவில்லையா அல்லது செய்து கடந்த காலத்திலே நடைபெற்ற அதே பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சிதான் விளைவாக இருந்ததா என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான் இதை ஒரு அரசியல் பிரச்சினையாக்க அன்றும் சரி இன்றும் சரி, என்றைக்கும் விரும்பவில்லை. ஆனால் இன்றைக்குக்கூட பத்திரிகையிலே பார்த்தேன், கர்நாடக சட்டசபையில் நாம் கேட்ட தண்ணீரை அளிக்க இயலாது என்று திட்டவட்டமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். 30 டி.எம்.சி. கேட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். 30 டி.எம்.சி. கேட்டு, அவர்கள் தரத் தயங்கிய பிறகு, அந்த 30 டி.எம்.சி. வேண்டுமென்று வலியுறுத்தி முதல் அமைச்சர் திரு. வீரேந்திர பட்டீலோடு இரண்டுமுறை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினேன். அவர் தருகிறேன் என்று சொன்னார். பிறகு, பொதுப் பணி அமைச்சரை அனுப்பி வைத்தேன். பொதுப் பணி அமைச்சர், அந்த மாநிலத்திலே முதல் அமைச்சர் இருப்பார், அவர்

மாலையிலே பெங்களூர் வருவார் என்ற அந்த நம்பிக்கையோடு அங்கே சென்றார். ஆனால், அந்த மாநில முதல் அமைச்சர் பெங்களூருக்குத் திரும்பாமல் டெல்லிக்குப் போய்விட்டார். டெல்லியிலும் விடவில்லை; அங்கே இருக்கிற மத்திய அமைச்சர் திரு. மாறனிடம் சொல்லி, திரு. வீரேந்திர பட்டீலோடு தொடர்பு கொள்ளச் சொன்னேன். அவரும் தொடர்பு கொண்டு பேசினார். அங்கிருந்து திரு. வீரேந்திர பட்டீல் சொன்னார், உங்கள் பொதுப் பணி அமைச்சரை மீண்டும் பெங்களூருக்கு அனுப்பி வையுங்கள் பேசுகிறேன் என்று. பொதுப்பணி அமைச்சர் பெங்களூர் சென்று அங்குள்ள நீர்ப்பாசன அமைச்சரோடு பேசினார், அதிகாரிகளோடு பேசினார்; அன்று மாலையிலே முதல் அமைச்சர் திரு. வீரேந்திர பட்டீலோடு பேசினார். எங்களால் இயன்றதைச் செய்கிறோம், உங்கள் முதல் அமைச்சரிடம் சொல்லுங்கள், நம்பிக்கையோடு இருக்குமாறு என்று சொல்லி அனுப்பினார்கள். அதற்குப் பிறகு, இங்குள்ள கஷ்டத்தை அவர்களுக்குப் புரியவைத்து, 15 டி.எம்.சி. யாவது வழங்குங்கள் என்று நாம் கேட்டு கடிதம் எழுதினோம். 15 டி.எம்.சி. வழங்குவதைப்பற்றி யோசிக்கிறோம் என்று அங்கிருந்த பொதுப்பணி அமைச்சர் - கர்நாடகத்துப் பொதுப்பணித் துறை அமைச்சர் பேசியதாகச் செய்தி வந்தது. நேற்றைய தினம் சட்டசபையிலே சொல்லியிருக்கிறார்கள், 30 டி.எம்.சி. தர இயலாது என்று. பேசித் தீர்க்கலாம் என்று சொல்கிறார்களே, நாம் இன்றைக்கு வறண்டு போயிருக்கிற அல்லது இன்னும் சில நாளில் வறண்டுவிடக்கூடிய அல்லது வாடி உலர்ந்துவிடக்கூடிய பயிர்களைக் காட்டி, தஞ்சை, திருச்சி போன்ற காவிரி நதித் தீரத்திலே வாழ்கின்ற தமிழக விவசாயிகளுடைய வயிற்றிலே அடிக்காதீர்கள் என்று இறைஞ்சிக் கேட்கின்ற இந்த நேரத்திலேகூட ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக 10 டி.எம்.சி.யோ, 15 டி.எம்.சி.யோ வழங்குவதற்குத் தயாராக இல்லாதவர்களிடத்தில் பேசி என்ன பயன் விளையும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

கடந்த காலத்திலே ஜனதா தள ஆட்சியினுடைய தலைவர், முதலமைச்சர் திரு. பொம்மை அவர்கள் இங்கே வந்தபோது, ஒரு பொதுக்கூட்டத்திலேதான், இந்த அமைச்சரவைக்கு நடைபெற்ற வாழ்த்துக் கூட்டத்தில், காவேரியிலிருந்து 5 டி. எம். சி., தண்ணீரை அவசரமாகத் தரவேண்டுமென்று கேட்டபோது அவர் அந்தக்

கூட்டத்திலேயே அறிவித்தார். அடுத்த ஒன்றிரண்டு வாரங்களில் அந்த 5 டி. எம். சி. தண்ணீரை ஜனதா தளக் கட்சியினுடைய முதலமைச்சர் நண்பர் திரு. பொம்மை அவர்கள் உடனடியாக தமிழ்நாட்டிற்கு வழங்கினார்கள்.

வேடிக்கை என்னவென்றால். அதற்கு முன்பு கவர்னர் ஆட்சியிலும் 5 டி. எம். சி. தண்ணீர் தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது அங்கிருந்து தண்ணீர் தரும்போதெல்லாம் அதற்கு மாற்றாக இங்கிருந்து மின்சாரம் தரப்பட்டிருக்கிறது. அப்படித் தரப்பட்ட மின்சாரத்திற்கு பரிமாற்றமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக அதற்கு ஓரளவு கட்டணமும் கேட்கப்பட்டிருக்கிறது. இது எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்றது. இந்தக் கணக்கை எல்லாம் இப்போது திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் நமக்கு எழுதி அந்தப் பழைய பாக்கி எல்லாம் இருக்கிறது, அதைஎல்லாம் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

அதிலே வேடிக்கை என்னவென்றால், இப்படி ஒரு பரிவர்த்தனை இல்லாமலே திரு. பொம்மை அவர்கள் 5 டி. எம். சி. தண்ணீர் கொடுத்தாரே, அதற்கும், அவர்கள் கேட்காத பரிவர்த்தனையை அதிலே நுழைத்து, அதற்கும் நீங்கள் மின்சாரம் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த நிபந்தனையைப் போட்டு திரு. பொம்மை அவர்கள் தண்ணீர் தரவில்லை. ஆனாலும் இவர்கள் நிபந்தனையை வலுவிலே புகுத்தி, அதையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நாம் கேட்ட தண்ணீரைப்பற்றி எந்தவிதமான பதிலும் கிடையாது. திரு. வீரேந்திர பட்டீலைப் பொறுத்தவரை நானும் அவரை மிக நன்றாக உணர்ந்தவன்; அவருக்கும் என்னை மிக நன்றாகத் தெரியும். இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் என்ன காரணத்தாலோ, எப்படி தமிழ்நாட்டிற்கு அரிசி வழங்கக்கூடாது என்று மத்திய அரசு அன்றைக்கு முடிவு எடுத்ததோ, அன்றைக்குத் தமிழக மக்களுடைய வயிற்றிலே அடித்ததோ, அதைப்போல தி. மு. க. ஆட்சி இருக்கிற காரணத்தால் தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களிலே இருக்கிற விவசாயிகளுடைய வயிற்றிலும் அடிக்கலாம் என்று அவர்களுக்கு யாராவது அரிசி வழங்காதவர்கள் இப்போது இந்த அறிவுரையை வழங்கி

இருப்பார்களோ என்று நான் எண்ணிட வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறேன்.

ஒரு மனிதாபிமானம் கூட இல்லாமல், மனித நேய உணர்வுகூட இல்லாமல் தஞ்சையிலே வாடுகின்ற, திருச்சியிலே வாடுகின்ற தென்னாற்காடு மாவட்டத்திலே வாடுகின்ற விவசாயி களுக்கு நாம் பலமுறை கேட்டும்கூட - இன்னும்கூடச் சொல்கிறேன். மூன்று நாட்களாக நான் தொலைபேசியிலே அவர்களோடு தொடர்புகொள்ள முயலுகிறேன். ஆனால் தவிர்த்துக்கொண்டே இருக்கிறார்கள், அவர்களால் பேச இயலவில்லை. இவ்வளவு நெருங்கிய நண்பர் பேச முடியவில்லை என்றால் எவ்வளவு பெரிய அரசியல் தாக்கம் இதிலே விளையாடுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்துக்கொள்ளலாம்.

சில பேர் கேட்கிறார்கள், முதலமைச்சர் ஏன் அங்கே போகக்கூடாது என்று. அங்கே போனால் சட்டசபையை விட்டுவிட்டு எங்கே போனார் என்று கேட்பார்கள். எதையும் பேசக்கூடிய அரசியல்வாதிகள் இதையும் பேசுவார்கள். எனவேதான் நான் இந்த அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டத்திலும் காவேரி தீரத்திலும் வாடிக்கொண்டிருக்கிற காய்ந்து கொண்டிருக்கிற அந்த நிலங்களை, பயிர்களைக் காப்பாற்ற மீண்டும் ஒருமுறை என்னுடைய நெருங்கிய நண்பர், கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களே, உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்; 10 டி. எம். சி.யோ, 15 டி. எம். சி.யோ தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட ஏற்பாடு செய்யுங்கள் என்று மிகுந்த பணிவன்போடு இந்த அவையின் சார்பாக வீரேந்திர பட்டீல் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளுடைய நிலைமையைப்பற்றி நண்பர் திரு. சொக்கர் அவர்கள் இங்கே விரிவாகப் பேசினார்கள். அவருக்கு விரிவாக நான் பதில் சொல்ல விரும்பினேன். ஆனால் அவர் இங்கே இல்லை. அவர் இங்கே இல்லாவிட்டாலும்கூட, நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும். சில பேர் தங்களுடைய கடமையைச் செய்ய மறந்தாலும்கூடக் கடமைகளை

கடமைகள் என்று உணர மறுத்தாலும்கூட, நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

நகராட்சிகளுடைய நிதியாதாரங்கள் கவலைப்படத்தக்க அளவில் இருப்பதை இந்த அரசு உணராமல் இல்லை. அவற்றை எல்லாம் உணர்ந்திருக்கிற காரணத்தால், நகராட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து வைத்துப் பேசியும், அதிகாரிகள் மட்டத்திலே கலந்து பேசியும், நிதியாதாரங்களை நகராட்சிகள் மேலும் பெருக்கிக்கொள்ள என்னென்ன வழிவகைகளைச் செய்யலாம் என்பதைக் குறித்து வரவு-செலவுத் திட்டத்திலே ஒரு நல்ல அறிவிப்பை இந்த அரசு வெளியிட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டுமானால், நம்முடைய சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால் - பம்பாய் மாநகராட்சி மன்றத்தின் பட்ஜெட், ஆண்டுக்கு 1,000 கோடி ரூபாய். ஆனால் சென்னை மாநகராட்சி மன்றத்தின் பட்ஜெட் வெறும் 68 கோடி ரூபாய். ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு பட்ஜெட்டைக் கொண்ட பம்பாய் மாநகராட்சி மன்றம், 68 கோடி ரூபாய் அளவுக்கு இயங்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிற நம்முடைய சென்னை மாநகராட்சி மன்றத்தின் நிலைமை. இவற்றை எண்ணிப்பார்த்தால். ஏதாவது ஒரு முயற்சி எடுத்து இந்த வருமானத்தை - இந்த பட்ஜெட்டினுடைய தொகையை விரிவாக்க வேண்டும் - பெருக்க வேண்டும் என்ற அந்த நிலையை இந்த அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

முன்பிருந்த அ.தி.மு.க. அரசு 1-6-1986-ல் நகராட்சி ஆசிரியர்கள், நகராட்சிகளிலே பணியாற்றும் இதர அலுவலாளர்கள் ஆகியவர்களையெல்லாம் அரசு அலுவலாளர்களாக ஆக்கி ஆணையிட்டது. ஆனால் அந்த ஆணை நடைமுறைப்படுத்தப்பட வில்லை. 1982-ல் போடப்பட்ட அந்த ஆணை நடைமுறைக்கே வரவில்லை. ஆணையினுடைய விவரம் என்னவென்றால் நகராட்சி ஆசிரியர்கள் - அதாவது நகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத இதர அலுவலர்களை, ஊழியர்களை அரசு அலுவலாளர்களாக்க அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் அந்த ஆணை நடைமுறைக்கே

வரவில்லை. இப்போது இந்த அரசு அதைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, நகராட்சி ஆசிரியர்கள், நகராட்சிப் பள்ளிகளிலே பணியாற்றும் அலுவலர்கள் ஆகியோருடைய முழுச் செலவையும் 1-4-1990 முதல் அரசாங்கமே நேரடியாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன், இதனால், நகராட்சிகளுக்கு ரூ. 10 கோடிக்குமேல் மீதமாகும் என்பதையும் நான் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன்.

முக்கியமான ஒன்றைச் சொன்னார்கள். பலரும் பேசினார்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு இன்சூரன்ஸ் திட்டம் இருந்தது. 10 ரூபாய் தொழிலாளர்களிடத்திலே - ஏழைகளிடத்திலே வாங்கப்பட்டது. அந்த ரூபாய் அவர்களுக்குத் திருப்பித் தரப்படாமலேயே அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. சிலபேருக்கு ரூ. 6½ தான் திருப்பியனுப்பப்படுகிறது - இது நியாயமா என்றெல்லாம் திரு. பீட்டர் ஆல்போன்ஸ்-ல் தொடங்கி மற்றும் இங்கே உள்ள திரு. பொன். விஜயராகவன் போன்றவர்களும், மற்றவர்களும் கேட்டார்கள்.

இந்தத் திட்டம் 1984ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இதிலே 16 லட்சம் பேர் சேர்ந்தார்கள். சேர்ந்தார்கள் என்பதைவிட சேர்க்கப்பட்டார்கள் என்பதுதான் சரியான தகவல். 3 அல்லது 4 லட்சம் பேர்தான் அவர்களாகவே முன்வந்து சேர்ந்தார்கள். இதிலே அதிகப்படியான பேர்களைச் சேர்க்க வேண்டுமென்று அன்றைக்குக் கிராமங்களிலேயிருந்த அதிகாரிகள் - வி. ஏ. ஒ. போன்றவர்களெல்லாம் உத்திரவிடப்பட்டு - நீங்கள் இவ்வளவு பேரைச் சேர்த்தாக வேண்டுமென்று உத்திரவிடப்பட்டு, அவர்களும் அதன் காரணமாகப் பலபேரைச் சேர்க்க முயன்று, அதிலே தோல்வியடைந்து அவர்களே சில பெயர்களை எழுதி, அவர்களுக்கான ரூ. 10-ஐயும் அவர்களே கட்டினார்கள். அதன்படி 16 லட்சம் பேர் சேர்ந்தார்கள். சேர்க்கும்போதே என்ன நிபந்தனை என்றால், இந்த 10 ரூபாயில் 3½ ரூபாய் லைப் இன்சூரன்ஸுக்குச் சென்றுவிடும். மீதமுள்ள 6½ ரூபாய்தான் உங்களுடைய கணக்கில் வைப்பு நிதியாக வைக்கப்படும் என்று 6½ ரூபாய் அளவுக்கு

மட்டுமே அவர்களுடைய வைப்பு நிதிக் கணக்கில் வைக்கப் பட்டது. அப்படி வைக்கப்பட்ட நிலையில் ஆறு ஆண்டுக்கு வசூலாகிற ரூ. 120-ல் 45 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. மீதமுள்ள 75 ரூபாய்தான் அவர்களின் வைப்பு நிதியில் வைக்கப்பட்டு, வட்டியோடு அவர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதிலே 4 லட்சம் பேரைத் தவிர 12 இலட்சம் பேர் 2, 3 மாதங்களுக்குப் பிறகு பணத்தை ஒழுங்காகக் கட்டவில்லை. 4 லட்சம் பேரிலும் பெரும்பாலோர் கட்டவில்லை. சில பேர் மட்டும் கட்டினார்கள். இவற்றையெல்லாம் ஆராய்ந்து அவர்களுக்கு இந்தப் பணத்தை ஓரளவுக்கு உரிய முறையில் திருப்பித் தருவதற்காக இப்போது அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய அ.தி.மு.க. நண்பர் திரு. அர்ஜுனன் பேசும்போது ஒரு தகவலைச் சொன்னார். எல்லோரும் அதிர்ச்சி யடையக்கூடிய ஒரு தகவலை இங்கே சொன்னார். கம்பல்சரி வெயிட்டிங்கில் ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளெல்லாம் இன்றைக்கு இந்த அரசிலே வைக்கப்பட்டு, பழி வாங்கப்படு கிறார்கள் என்று சொன்னார். அதற்கான ஆதாரம் என்ன என்று கேட்டபொழுது, ஆதாரங்கள் எதையும் அவர் தரவில்லை, எப்படி அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகத்தின்மீது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்லி அதை அவர் மறுத்தபிறகு எந்த ஆதாரமும் இல்லாமல் கைபிசைந்து நின்றாரோ அதைப்போலவே, இந்த கம்பல்சரி வெயிட்டிங் பற்றி ஒரு தகவலைச் சொன்னார். தவறான தகவலைச் சொன்னார். இந்த அரசைப் பொறுத்தவரையில் யாரையும் பழிவாங்குகின்ற அரசு அல்ல. கழக அரசிலேகூட ஒருசில நேரங்களில் சிலபேர் கம்பல்சரி வெயிட்டிங்கிலே இந்த ஆட்சியிலேகூட இருக்க நேரிட்டிருக்கிறது. ஆனால் அவர்களெல்லாம் ஐந்துநாள், பத்துநாள் என்ற அளவிலே தான் கம்பல்சரி வெயிட்டிங்கிலே இருக்க நேரிட்டிருக்கிறது. ஆனால் அவர்களெல்லாம் ஐந்து நாள், பத்து நாள் என்ற அளவிலேதான் கம்பல்சரி வெயிட்டிங்கிலே இருந்தார்கள். பழி வாங்கப்படுவதற்காக அல்ல. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில்

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அந்தப் பட்டியலிலே நான் எடுத்திருக்கிற கணக்கு, முப்பது நாட்களுக்கு மேல் கம்பல்சரி வெயிட்டிங்கில் வைக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கைத்தான். 28 நாள், 27 நாளெல்லாம் கணக்கிலே வரவில்லை. அது ஐம்பதுபேர் இருக்கும். முப்பது நாளைக்கு மேல் கம்பல்சரி வெயிட்டிங்கிலே வைக்கப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் :-

1986-ஆம் ஆண்டு எம்.ஏ.கே. தயாப், ஐ.ஏ.எஸ். 87 நாட்கள் வெயிட்டிங் லிஸ்ட்;

ஏ.எஸ். பத்மனாபன், 1983-ஆம் ஆண்டு 30 நாட்கள்;
எஸ்.ஏ. சுப்பிரமணி, 1986-ஆம் ஆண்டு 30 நாட்கள்;
வி. செல்வராஜ், 1987-ஆம் ஆண்டு 33 நாட்கள்;
அசோக் ஜோஷி, 1987-ஆம் ஆண்டு 50 நாட்கள்;
எஸ். அர்விந்த், ஐ.ஏ.எஸ். 1986-ஆம் ஆண்டு 42 நாட்கள்;
எ. நாகராஜன், 1983-ஆம் ஆண்டு 53 நாட்கள்;
அவரே 1986-ஆம் ஆண்டு 30 நாட்கள்;
எம். ராமு, 1982-ஆம் ஆண்டு 88 நாட்கள்;
1985-ஆம் ஆண்டு 72 நாட்கள்;
கே. ஏ. மேத்யூ, 1987-ஆம் ஆண்டு 53 நாட்கள்;
எஸ். சீனிவாசன், 1982-ஆம் ஆண்டு 35 நாட்கள்;
சித்ரா ஜெயபாலன், 1983-ஆம் ஆண்டு 45 நாட்கள்;
கிருஷ்ணசாமி ராஜுவன், 1984-ஆம் ஆண்டு 39 நாட்கள்;
எம் மாணிக்கவேலு, 1985-ஆம் ஆண்டு 63 நாட்கள்;
எம். கனகசபாபதி, 1986-ஆம் ஆண்டு 78 நாட்கள்;
டி. ஆர். சீனிவாசன் 1982-ஆம் ஆண்டு 36 நாட்கள்;
ரங்கமணி, 1982-ஆம் ஆண்டு 120 நாட்கள்;
ஆர். நாகராஜன், 1981-ஆம் ஆண்டு 41 நாட்கள்;

இவர்களையன்னியிலே 53 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முப்பது நாட்களுக்கும் குறைவாகக் கம்பல்சரி வெயிட்டிங்கிலே அன்றைக்கு வைக்கப்பட்டார்கள்.

ஐ. பி. எஸ். அதிகாரிகள் என்று எடுத்துக்கொண்டால் இதிலே நான் அதிகம் பேர்களைப் படிக்க வேண்டுமென்ற சிரமத்தின் காரணமாக ஐம்பது நாட்களுக்கு மேல் கம்பல்சரி வெயிட்டிங்கிலே

அன்றைக்கு இருந்தவர்களின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன்.

கே.ஜி. தினமணி, ஐ.பி.எஸ்., 1981-ஆம் ஆண்டு, 64 நாட்கள்;
ஆர். ராஜகோபாலன், 1981-ஆம் ஆண்டு 57 நாட்கள்;
நாஞ்சில் குமரன், 1982-ஆம் ஆண்டு 58 நாட்கள்;
வி.கே. ராஜகோபாலன், 1982-ஆம் ஆண்டு 62 நாட்கள்;
ஆர்.கே. ராகவன், 1982-ஆம் ஆண்டு 87 நாட்கள்;
ஜோசப், 1982-ஆம் ஆண்டு 73 நாட்கள்;
திலகவதி, 1983-ஆம் ஆண்டு 56 நாட்கள்;
எஸ். கணபதி, 1985-ஆம் ஆண்டு 63 நாட்கள்;
ஆர். எஸ். சுவாணி, 1985-ஆம் ஆண்டு 50 நாட்கள்;
ஆர். வி. சுப்பிரமணியம், 1985-ஆம் ஆண்டு 107 நாட்கள்;
வி.கே. ராஜகோபால், 1985-ஆம் ஆண்டு 107 நாட்கள்;
கே. கந்தசாமி, 1985-ஆம் ஆண்டு 62 நாட்கள்;
கே. கந்தசாமி, 1986-87-இல் 72 நாட்கள்;
வி. கே. ராஜகோபால், 1987-ஆம் ஆண்டு 69 நாட்கள்;
திலகவதி, 1988-ஆம் ஆண்டு 75 நாட்கள்;
கே. ஜி. கோபாலகிருஷ்ணா, 1988-ஆம் ஆண்டு 95 நாட்கள்;
கணேசன், 1988-ஆம் ஆண்டு 60 நாட்கள்.

ஆனால் அர்ஜுனன் பேசும்பொழுது இல்லாததைச் சொல்லி, இப்பொழுது சிலபேர் வெயிட்டிங் லிஸ்டிலே வைக்கப்பட்டிருக் கிறார்கள்; அவர்களுக்குத் தரப்பட்ட சம்பளத்தையெல்லாம் ஹோம் செக்கரட்டரி சம்பளத்திலேயிருந்தும், டி.ஜி.பி. சம்பளத்திலிருந்தும் பிடித்துக் கொள்வீர்களா என்று கேட்டார். இப்பொழுது யாரும் வெயிட்டிங் லிஸ்டிலே வைக்கப்படவில்லை. ஆனால், இப்பொழுது படித்துக் காட்டினேனே இவர்களுடைய சம்பளத்தையெல்லாம் யாரிடம் பிடித்துக்கொள்வது என்பதை அ.தி.மு.க. எதிர்க்கட்சித் தலைவர் இங்கே இருந்தால் சொல்லியிருப்பார். இவற்றையெல்லாம் சொல்ல வேண்டுமென்பதற்காகவோ என்னவோ, அவர்களெல்லாம் இன்றைக்குப் போய்விட்டார்கள், பரவாயில்லை.

இன்னொன்று. திரு. அர்ஜூனன் சொன்னார், அவர்களுடைய தலைவர் அல்லது தலைவியார் ஹைதராபாத் சென்றதாகவும், அவரைப் பின்பற்றி சி.ஐ.டி.க்கள் சென்றதாகவும் சொல்லி அதை மெய்ப்பிக்கின்ற வகையில் அந்த சி.ஐ.டி.க்கள் சென்ற கார் நம்பரையெல்லாம் இங்கே சொன்னார். பதிவேட்டிலேகூட அது பதிவாகியிருக்கின்றது. நம்பரையெல்லாம் எடுத்துப்பார்த்து நான் உடனடியாக இது யாருடைய கார் நம்பர்கள் என்று விசாரிக்கச் சொன்னேன். அவர்கள் பேசும்பொழுது எங்களுடைய பொதுச் செயலாளர் அவர்கள் சொந்த வேலையாக ஹைதராபாத் சென்றபொழுது சி.ஐ.டி. அதிகாரிகள், டி.டி.ஒ. 3448; டி.டி.எல். 149 என்ற எண்ணுடைய இரண்டு கார்களிலே பின்தொடர்ந்தார்கள் என்று கூறினார். டி.டி.எல். 149 என்ற எண்ணுள்ள வாகனம் ஒரு ஸ்கூட்டர். கார் அல்ல, இது சேலம் பெருமாள் கோவில் தெரு, டோர் நம்பர் 12-ஏ, அங்கே வசிக்கிற வரதப்பிள்ளை மகன் திரு. சி.வி. சுப்பிரமணியன் என்பவருக்கு உரியது. இன்னொன்று டி.டி.ஒ. 3448 என்ற எண்ணுடைய வாகனம் கார் அல்ல, அது ஒரு ட்ராக்டர். அது தஞ்சை மாவட்டம், மன்னார்குடி பாளையங்கோட்டை கிராமம் பன்னீர்செல்வம் மனைவி திருமதி. ப. லலிதா என்பவருக்கு உரிமை உடையது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட ஆதாரங்களை அள்ளி வீசி அவர் நேற்றைக்கு பேசியிருக்கிறார். மதுவிலக்கு, கள்ளச்சாராயம் இவைபற்றி நம்முடைய திரு. பூவராகன் அவர்கள் வெகு விரிவாகப் பேசியதை நான் படித்துப் பார்த்தேன். நான் அப்போது அவையில் இல்லை. பிறகு படித்துப் பார்த்தேன். யாருடைய பேச்சுக்களும் அலட்சியம் செய்யப்படக் கூடாது என்பதற்காக எல்லோருடைய பேச்சுக்களையும் படித்து பார்த்தேன். கள்ளச் சாராயம் பெருகி ஓடியதை அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் முழுமையாக ஒழிந்துவிட்டது என மார்தட்டிக்கொள்ளத் தயாராக இல்லை. அது முழுவதும் ஒழிக்கப்படுவதற்கு எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக காவல்துறையினுடைய ஒத்துழைப்பு மிக மிக அதிகமாகத் தேவை. ஏனென்றால், இதிலே அவர்களுக்கே

சில இடங்களில் உடன்பாடு இருக்கிறது. அவர்களுக்கே சிலருக்கு, நமக்கெல்லாம் தேர்தல் அலையன்ஸ் இருப்பதைப்போல், அவர்களுக்கு இதிலே அலையன்ஸ் இருக்கிறது என்பதெல்லாம் வெறும் கற்பனைகள் அல்ல, உண்மைகளாக இருக்கிற காரணத்தால் இனிமேல் இந்த கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபடுகிறவர்களைத் தண்டிப்பதைவிட அதற்குத் துணை போகிறவர்கள் காவலர்களாக இருந்தாலும் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களாக இருந்தாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மாத்திரம் குண்டர் சட்டம் அல்ல அதற்குத் துணைப்போகிற காவல் துறை அதிகாரிகளையும் குண்டர் சட்டம் தாக்கும் என்ற அளவிலே அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் மிக உறுதியோடு இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற ஆண்டு கவர்னர் உரையில் பத்தி 14 - அதிலே ஒன்றைச் சொன்னோம். நீதிமன்றங்களில் மதுவிலக்கு சம்பந்தமாகத் தேங்கிக் கிடக்கும் ஆறு இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகளில் விரைவில் தீர்வு காண மது விலக்குச் சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று குறிப்பிடப்பட்டது. அதன்படி பிப்ரவரி மாதம் ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவந்தோம். அதன்படி மதுவிலக்கு சட்டத்தில் 24-டி என்ற பிரிவு திருத்தப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் 1988-ல் நீதிமன்றம் மூலமாக இந்த சாராய வழக்குகளில், மதுவிலக்கு வழக்குகளில் ஆண்டு முழுவதும் வசூலான தொகை 37 இலட்சத்து 15 ஆயிரத்து 460 ரூபாய். ஆனால் 1989-ல் நவம்பர் மாதம் வரையில் நாம் எடுத்த முயற்சிகளின் காரணமாக, நீதிமன்றத்திலே வழக்குகளை விரைவுபடுத்தி நடத்தியதன் காரணமாக, அபராதமாக வசூலான தொகை 7 கோடியே 2 இலட்சத்து 29 ஆயிரத்து 120 ரூபாய். இதில் 35 இலட்சத்திற்கும் 7 கோடிக்கும் உள்ள வேறுபாட்டை நான் உணர்த்தத் தேவை இல்லை. எனவே, நீதிமன்றங்கள் மூலமாக பெரும்பாலான வழக்குகள் விரைவில் பைசல் செய்யப்பட்டன என்பதற்கு இது எடுத்துக்காட்டு. அதல்லாமல், 1988ஆம் ஆண்டு இறுதியில் 5 லட்சத்து 17 ஆயிரத்து 392 வழக்குகள் நிலுவையில் இருந்தன. இவற்றிலே சட்டத் திருத்தம் கொண்டுவந்தோமே

அதன்மூலம் கம்பவுண்டிங் முறையிலே அதாவது முன்முடிவு எடுக்கப்பட்டு, கம்பவுண்ட் செய்து தீர்க்கப்பட்ட வழக்குகள், அதிலே 2 லட்சத்து 93 ஆயிரத்து 42. 1989 நவம்பர் வரையில் போடப்பட்ட வழக்குகள் 4 லட்சத்து 68 ஆயிரத்து 854. இவைகளும் 1988 ஆம் ஆண்டிலே நிலுவையில் இருந்த 2 இலட்சத்து 24 ஆயிரத்து 350 வழக்குகளும், இதில் பெரும்பாலான வழக்குகள் பைசல் செய்யப்பட்டு அதன்மூலம் 6 கோடியே 98 லட்சத்து 66 ஆயிரத்து 45 ரூபாய் நவம்பர் மாதம் வரையில் வருவாயாகக் கிடைத்திருக்கிறது. எனவே, கள்ளச் சாராய வழக்குகள் தொடரப்படுகின்றன. அதன்மூலம் 13 கோடி ரூபாய் அபராதமாகவும் வசூலிக்கப்பட்டிருக்கிறது, 13 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டதிலிருந்து கள்ளச் சாராய வழக்குகள் அதிகமாகி இருக்கின்றன; எனவே, கள்ளச்சாராயமும் அதிகமாகியிருக்கிறது அல்லவா என்ற வாதத்தையும் உறுப்பினர்கள் எடுத்துவைக்கக்கூடும். ஆனாலும் அது நம்மையும் மீறி பெருகுகிற நேரத்தில் அந்தக் குற்றவாளிகள் பிடிபட்டு அந்தக் குற்றவாளிகளைக் கொண்டுபோய் சிறையில் வைத்து அவர்களுக்குச் சாப்பாடு போடுகிற செலவையும் அரசு செய்து கொண்டிருக்காமல், இந்த கம்பவுண்டிங் முறை மூலமாக வெகு விரைவில் அந்த அபராதத் தொகை அரசுக்குக் கிட்டுகிற காரியத்திலே ஈடுபட்டிருக்கிறது. கடந்த பட்ஜெட்டிலே சாராய சாம்ராஜ்யத்தைப்பற்றி விரிவாக எடுத்துச்சொன்னேன். இந்த ஊழல்களை ஒழிப்பதன்மூலம் 100 கோடி ரூபாய் நமக்கு கிடைக்கும் என்று எடுத்துச்சொன்னேன். அவரே இங்கே குறிப்பிட்டார். நம்முடைய திரு. லத்தீப் போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். நிதி ஆதாரக் கட்டுப்பாடு தேவை, டிசிப்ளின் தேவை என்பதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டபோது, அந்த நடைமுறையிலே உள்ள முறைகேடுகளை எல்லாம் அகற்றியதால், ஏற்கெனவே 120 கோடி ரூபாய் கிடைத்தது, மேலும் 120 கோடி ரூபாய் நமக்கு கிடைக்கிறது. மற்ற மாநிலங்களிலே உள்ள விலைக்கு ஏற்ப விலையும் உயர்த்தப்பட்ட காரணத்தால் 80 கோடி ரூபாய் ஆக 200 கோடி ரூபாயை அதிக வருவாயாக, உபரி வருவாயாக

பெறக்கூடிய ஒரு நிலைமையை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய திரு. ரமணி அவர்கள் மத்திய அரசோடு வாதாடி நாம் பல நன்மைகளை இந்த மாநிலத்திற்குப் பெறவேண்டிய ஏற்ற சூழ்நிலை இன்றைக்கு அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். இதே கருத்தை முன்வரிசையிலே உள்ள எல்லாத் தலைவர்களும் பேசி இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற தலைவர்களைச் சொல்கிறேன். அவர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். ராஜீவ் காந்தியினுடைய அரசு சில நேரங்களில் செயல்படாத அரசாக இருந்தது மாத்திரமல்ல, சில முக்கியமான பிரச்சினைகளில், மந்தமான, மிக மந்தமான அரசாக இருந்தது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

ஒன்பது பேர்களைக் கொலை செய்த ஜெயபிரகாஷ் என்ற ஒரு நபரைப்பற்றி தமிழ்நாடு முழுவதும், ஏன் இந்தியாவிலே பல மாநிலங்களில் பரபரப்பாக பேசப்படுகின்ற அளவிற்கு படங்கள் எல்லாம் போடப்பட்டன. அவருக்கு நீதிமன்றத்திலே தூக்குத் தண்டனை முதலிலே விதிக்கப்பட்டது. ஆனால் அவர் சார்பில் கருணை மனு அனுப்பப்பட்டது. அன்றைக்கு இருந்த தமிழக அரசு கருணை மனுவை ஏற்கவில்லை. பின்னர் மத்திய அரசுக்கு, குடியரசுத் தலைவருடைய கருணைக்காக அது இங்கிருந்து அனுப்பிவைக்கப்பட்டது. அப்படி அனுப்பி வைக்கப்பட்ட கருணை மனுவில் குடியரசுத் தலைவருடைய கையெழுத்தை, ஆம் அல்லது இல்லை, கருணை வழங்கப்படுகிறது அல்லது இல்லை என்று குறிப்பெழுதி கையெழுத்துப் போட, எவ்வளவு நாள் ஆனது என்பதைப் பார்க்கும்போது, எவ்வளவு மந்த கதியிலே மத்திய அரசு அன்றைக்குச் செயல்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளலாம். எல்லா சாட்சியங்களும் முடிந்து குடியரசுத் தலைவருடைய கருத்தைக் கேட்க 25-10-1985-லே அனுப்பப்பட்ட அந்தக் கருணை மனு 7-6-1988 வரையில் குடியரசுத் தலைவருடைய மாளிகைக்கே அனுப்பப்படாமல், மத்திய அரசிலே உள்துறை அமைச்சகத்திலே தூங்கிக்கொண்டு. கிட்டத்தட்ட 3 வருடங்கள் கழித்து, அது அனுப்பப்பட்டு, பிறகு குடியரசுத் தலைவர் தூக்குத் தண்டனையை உறுதி செய்து கையெழுத்துப் போட்டபிறகு

இந்த ஜெயபிரகாஷினுடைய தந்தை ஒரு ரிட் மனு தாக்கல் செய்து 3 வருடங்கள் என்னுடைய மகன் சிறையிலே இருந்துவிட்ட காரணத்தால் அந்த 3 வருடம், தாம் கொலை செய்யப்படப் போகிறோம், தாம் தூக்கு மாட்டப்படப்போகிறோம், சாகப் போகிறோம் என்ற மனவேதனையை அனுபவித்துவிட்ட காரணத்தால், அந்த மனவேதனை அவரை தூக்கிலே போட்டதற்கு சமம். எனவே அந்தத் தண்டனையை மாற்ற வேண்டும் என மனுச் செய்து அதை அந்த நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது. ஏற்கனவே இப்படி ஒரு வழக்கு இருந்ததை முன்மாதிரியாகக் காட்டி, நீதிமன்றமும் அதை ஏற்றுக்கொண்டு அந்த ஜெயபிரகாஷை இன்று மரண தண்டனையிலிருந்து விடுவித்து, ஆயுள் தண்டனை என்ற அளவிற்கு ஆக்கியிருக்கிறது. 3 ஆண்டுக்காலம் குடியரசுத் தலைவருடைய மாளிகைக்கே இவ்வளவு மிக முக்கியமான ஒரு கோப்பு அனுப்பப்பட்டு, கையெழுத்து போடக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்காத ஒரு அரசு அங்கே இருந்து இருக்கிறது. இது ஒரு தனிப்பட்ட விவகாரம். ஆனால் அந்த வழக்கில் நாம் இதைப்போன்ற ஒரு நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால் காலதாமதம் செய்வதன் மூலமே, ஒரு கடுமையான குற்றவாளியை மன்னித்துவிடலாம் என்ற ஒரு சூழல் ஏற்படக்கூடாது என்று இந்த அரசு மீண்டும் அந்தப் பிரச்சினையில் அப்பீல் செய்வதாக முடிவு எடுத்து இருக்கிறது. அதுமட்டுமல்ல, நான் ஒரு தனிப்பட்டவருடைய விவகாரத்திலே மத்திய அரசு எவ்வளவு காலதாமதம் செய்தது என்பதற்காக இதைச் சொன்னேன்.

நாம் இதே மாமன்றத்தில் நிறைவேற்றிய பெண்களுக்குச் சொத்தில் சம பங்கு உண்டு, சம உரிமை உண்டு என்று நிறைவேற்றிய நம்முடைய அந்தச் சட்டம் கூட கடந்த கால ஆட்சியிலே பலமுறை நினைவூட்டப்பட்டு எப்படி மேலவை வேண்டுமென்பது நினைவூட்டப்பட்டு, அது அங்கே உள்ளவர்களால் புறக்கணிக்கப்பட்டதோ, அதைவிட அதிகமான நினைவூட்டப்பட்ட ஒன்று பெண்களுடைய சொத்துரிமைச் சட்டம், அதைப்பற்றி எந்தவிதமான அக்கறையும் கொள்ளாமல் இருந்து, நல்ல வேளையாக தேசிய முன்னணி அரசு வந்தபிறகு, நான் இரண்டு நாளைக்கு முன்பு இங்கே அறிவித்ததைப் போல் நம்முடைய குடியரசுத் தலைவர் அனுமதியைப் பெற்று, அந்தச்

சட்டம் இன்றைக்கு நடைமுறைக்கு வரக்கூடிய ஒரு சூழலைப் பெற்றிருக்கிறது.

இது எல்லாம் வேண்டுமென்றே, ஒரு மாற்றுக் கட்சியினுடைய ஆட்சி நடைபெற்றால் காங்கிரஸ் அல்லாத ஒரு ஆட்சி நடைபெற்றால், அவர்களுடைய திட்டங்களை, சட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்தியிலே உள்ளவர்கள் ஒத்துழைப்புத் தராததை எடுத்துக்காட்டுவதாகும். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன?

நேற்றையதினம் இங்கே பேசிய நம்முடைய திருத்துறைப் பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பழனிச்சாமி அவர்கள் சொன்னார்கள். நம்முடைய திரு. ரமணி அவர்கள்கூட இன்றைக்கு நினைவூட்டினார், நரிமணத்திலே இன்றைக்கு கிடைத்துக்கொண் டிருக்கின்ற அந்த எண்ணெயைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். இயற்கை வாயுவைப்பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே 5, 6 மாதத்திற்கு முன்பு அன்றைக்கு இருந்த மத்திய அமைச்சரிடம் நான் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் இந்த எரிவாயு சம்பந்தப்பட்ட அந்தப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிகழ்ச்சியிலே சொன்னேன் பைப்லைன், மேற்கு மண்டலத்திலிருந்து தெற்குப் பகுதிக்கு அந்த எரிவாயு பைப்லைன் கொண்டுவரப்படவேண்டும், அதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். நல்ல யோசனை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அந்த யோசனையைப்பற்றி யாரும் அங்கே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அப்போது நாம் ஆட்சிப் பொறுப்பை இங்கே ஏற்று, பலமுறை முயன்றும் நடவாத ஒரு காவியத்தைப் பற்றி இன்றைக்கு இங்கே அந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மத்திய அமைச்சர் திரு. எம். எஸ். குருபாதசாமி அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்திற்கு அவரிடமிருந்து வந்துள்ள பதிலை நான் படிக்கிறேன்.

Dear Sri Karunanidhiji,

Please refer to your D.O. Letter, dated 18-12-1989 regarding the construction of a pipeline to the south from the western fields of

ONGC. GAIL have also been requested examine the feasibility of construction of a pipeline from the western fields to the southern region from the point of view of utilising this gas for meeting the power deficit in the southern starters. After receipt of the result if GAILS studies I shall get back to you.

M. S. GURUPADASWAMY

இது எவ்வளவு ஆறுதலான கடிதம், எவ்வளவு ஆர்வத்தோடு எவ்வளவு அவசரமாக விரைந்து எழுதப்பட்டக் கடிதம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த பைப்லைன் தென் பகுதிக்கு வருகின்ற நிலைமை ஏற்படுமானால், அந்த எரிவாயுவைக் கொண்டு இங்கே கிடைக்கின்ற எரிவாயுவையும் அதிலே இணைத்து 'பவர் ஜெனரேஷன்' உருவாக்கமுடியும், 'பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ்' அமைக்கமுடியும். உரத்தொழிற்சாலை அமைக்கமுடியும். இவை எல்லாம் தெற்குப் பகுதியிலே மேலும் மேலும் தொழில் வளத்தை உருவாக்கக்கூடியவையாக அமையும். இந்த அளவிலே இன்றைக்கு மாநில அரசுக்குத் துணையாக இருக்கக்கூடிய ஒரு மத்திய அரசு அமைந்திருக்கிறது. தேசிய முன்னனி அரசு அமைந்திருக்கிறது. அந்த அரசினுடைய ஒத்துழைப்போடு நாம் நம்முடைய உரிமைகளை அவர்களிடத்திலே கேட்டு பெற்று, அப்படி தராவிட்டால் போராடி பெற்று, இந்த மாநிலத்தினுடைய நல் வளத்திற்கு தொடர்ந்து பாடுபட்டு, இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற முறையில் உறுப்பினர்கள் அனைவரையும், எல்லா கட்சியினுடைய தலைவர்களையும் கேட்டுக்கொண்டு, ஆளுநர் உரையிலே நன்றி தெரிவித்தும், எதிர்த்தும் கருத்துக்களைச் சொன்ன அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியினை வழங்கி, இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலவை வேண்டுமென்று இந்த அவையிலே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, முந்தைய அரசு அதைத் தாமதித்தது என்பதை எல்லோரும் அறிவோம். இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது, அடுத்து வருகின்ற பாராளுமன்றக் கூட்டத்தொடரிலாவது அதை எடுத்துக்கொள்ள

மத்திய அரசு இணங்கியிருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) முன்பு இருந்த மத்திய அரசு அதைப்பற்றி பாராமுகமாக இருந்துவிட்ட காரணத்தால் இதுவரை நிறைவேறவில்லை. இப்போது உள்ள அரசு அடுத்த கூட்டத்தொடரிலாவது அதை நிறைவேற்றித் தருவதற்கு நம்முடைய அரசு வலியுறுத்துமா என கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : வற்புறுத்தத் தேவையில்லை என்று கருதுகிறேன், அவர்களே தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள் என்று நம்புகின்றேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ஜெயபிரகாஷ் வழக்கைப்பற்றிச் சொன்னார்கள். நண்பர் திரு. கணபதி அவர்கள்கூட பார்த்தார்கள். அதில் ஒரு சட்டப்பிரச்சினை இருக்கிறது. அதில் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தவேண்டும் என்பதற்காக நான் அதைச் சொல்லுகிறேன். 1978ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அதாவது மாநிலங்கள் அவையில் எந்தெந்த வழக்குகளுக்குத் தூக்கு கொடுக்க வேண்டும், எந்தெந்த வழக்குகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்கள். அதற்குப் பிறகு பாராளுமன்றம் கலைக்கப்பட்டது, அந்தச் சட்டம் இன்னும் பாராளுமன்றத்திலே (மக்களவை) நிறைவேற்றப்படவில்லை. 1982ஆம் ஆண்டு, இப்படி எந்தெந்த வழக்குகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்கக்கூடாது அல்லது வழங்க வேண்டுமென்று ஒரு நியதி இல்லாத காரணத்தால், ஒரு வழக்கில் நானே 1982 ஆம் ஆண்டு ஆஜராகி, நான்தான் ஒரு முன் உதாரணத்தை அன்றைக்கு உண்டாக்கினேன். இன்றைக்கு அதைத்தான் பின்பற்றுகிறார்கள், காரணம் அன்றைக்கு அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை.

மற்றொன்று ஜனாதிபதி 3 மாத காலத்திற்குள் மெர்சி பெட்டிஷனை இம்போஸ் செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது. இரண்டையும் தேசிய முன்னணி அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1990ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18ஆம் நாளன்று. . .

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரிலே நான் வலியுறுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அதிகாரிகளை அழைத்துப் பேசி தக்க முடிவு, உறுப்பினர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடையக்கூடிய அளவுக்குத் தெரிவிக்கிறேன் என்று சொன்ன பிரச்சினையை நான் பேசுகிறபோது சொன்னேன். சென்னை மாநகரத்திலே தர்ணா, உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் போன்றவற்றிற்கு அனுமதி அளிக்கக்கூடிய மாநகரக் காவல் துறையினுடைய போக்கு, இன்னமும் மாற்றம் இல்லாமல் இருக்கிறது என்று அந்த அறிவிப்பை இங்கே முதலமைச்சர் அவர்கள் அவையிலே தெரிவித்த நாள் 12 ஆம் தேதி, அதற்கு ஒரு வார காலம் கழித்து அந்தத் தடைகள் எல்லாம் அப்படியே நீடிக்கும் என்றும் அதே கமிஷனரால் அறிவிக்கப்பட்டது. அதிலே ஒரு மாற்றத்தைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உண்ணாவிரதம் தர்ணா செய்வதற்கு இந்த அரசு இடம் தராது, ஏனென்றால் அப்படிப்பட்ட நிலைமையே உருவாகாது.

உரை : 20 நாள் : 25.01.1991

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த அவையில் ஆற்றியுள்ள கருத்துக்களின் தொடர்பாக என்னுடைய கருத்துக்களையும் எடுத்து வைக்கின்ற வாய்ப்பினை இப்போது நான் பெற்றிருக்கிறேன்.

முதலில் என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இந்த அவையில் கடந்த 2, 3 நாட்களாக நடைபெற்ற நிகழ்ச்சிகள், ஜனநாயகத்திற்கே ஒரு தலைகுனிவை ஏற்படுத்துகின்ற அளவிற்கு அமைந்துள்ளள என்பதை நாட்டிலே உள்ள நல்லவர்களும், நல்லறிவாளர்களும் மிகத் தெளிவாகவே உணர்வார்கள்.

நம்முடைய நண்பர் திரு. பூவராகன் அவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டதைப் போல, உரையாற்றிய கவர்னர் பெருமான் அவர்கள் இந்த அவையில் சந்தித்த நிலை எவ்வாறு இருந்தது என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்களிடத்திலே சென்று முறையீடுகளை, இந்த அவையைப் பற்றி அல்லது அவையை நடத்திச் செல்கிற பொறுப்புமிக்க தங்களுடைய தீர்ப்புகளைப் பற்றி நடவடிக்கைகளைப் பற்றி, புகார்களைத் தருகின்றவர்கள் இந்த அவையிலே அவர்கள் யாருக்காக வக்காலத்து வாங்குகிறார்களோ, அவர்கள், அதே கவர்னர் அவர்கள் இங்கே வந்தபோது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை ஏனோ எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டார்கள்.

பொதுவாக ஆளுநர் உரை நிகழும்போது, எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள், விரும்பினால் ஆளும் கட்சியின் மீது சில

குறைகளைச் சொல்லி இதன் காரணமாக இந்த ஆளும் கட்சியின் சார்பாக ஆற்றப்படுகின்ற கவர்னர் உரையை நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று ஒரு 4, 5 வாக்கியங்களில், தங்களுடைய கருத்துக்களை எழுதிப் படித்தோ, அல்லது சொல்லிவிட்டோ வெளிநடப்புச் செய்வது இந்த அவையிலே வாடிக்கையாக இருந்து இருக்கிறது. விரும்புகின்ற எதிர்க்கட்சிகள் அப்படிச் செய்வார்கள். கலந்து கொள்ளலாம் என்று எண்ணுகிற எதிர்க்கட்சிகள் கலந்துகொள்வார்கள். இதுதான் இந்த அவையில் இதற்கு முன்பு நடைபெற்ற நடைமுறைகள்.

ஆனால் 18-ஆம் தேதி அன்று ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்த வந்தபோது, அவ்வாறு தங்களுடைய கருத்துக்களை நீண்டநேரம் படிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டு நீண்டநேரம் அந்தக் கருத்துக்களை எல்லாம் அவர்கள் படித்து, அவர்களுடைய மனத் திருப்திக்கு ஏற்றவாறு என்னையும், இந்த அரசையும் முறையே "தேசத் துரோகி" என்றும் 'தேசத் துரோக அரசு' என்றும் குறிப்பிட்டதோடு நிறைவு அடையாமல், உரையைப் படிக்க முனைந்த ஆளுநரைப் பார்த்து, "படிக்காதே, படிக்காதே" என்று முழக்கம் இட்டார்கள். முழக்கமிடுவதை ஆரம்பிப்பதற்கு என்றே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒருவர் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறார். அவர் அந்த முழக்கங்களை, ஒரு தாளிலே ஏற்கனவே திட்டமிட்டு, எழுதி வைக்கப்பட்ட முழக்கங்களை இங்கே படித்து, மற்றவர்கள் எல்லாம் அதைத் திருப்பிச் சொன்னார்கள். சொல்லும்போது, பொதுவாகத் தமிழில் மரியாதைக்குரிய மாண்புமிகுந்த சொற்கள் எவ்வளவோ இருக்கின்றன. அப்படிப்பட்ட சொற்கள் பயன்படுத்தப்படாமல் அன்றைக்கு மிக மரியாதைக் குறைவான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. ஒரு அரசைப் பார்த்து, "அரசே, இவர்களை எல்லாம் விடுதலை செய்" என்று சொல்லும்போது பயன்படுத்துகிற சொல்லுக்கும், அந்த அரசினுடைய முதலமைச்சரைப் பார்த்துப் பயன்படுத்துகிற சொல்லுக்கும் சற்று வேறுபாடு உண்டு. "விடுதலை செய்யுங்கள்" என்று சொல்வதுதான் தமிழில் மரபு. 'அரசே' என்று சொல்லும்போது "விடுதலை செய்" என்று சொல்வது மரபு. ஆனால் அன்றைய தினம் ஆளுநரைப் பார்த்து, அ.தி.மு.க. உறுப்பினர்கள் கொஞ்சம் மரியாதையைச் சேர்த்துக் கொண்டு "படிக்காதீர்கள்" என்றுகூடச் சொல்லாமல் "படிக்காதே, படிக்காதே" என்று

சொன்னார்கள். இதை ஆங்கிலத்திலே சொன்னால் அப்படிப்பட்ட சொற்கள் பாகுபடுத்திப் பார்க்க முடியாதவைகளாக அமைந்துவிட்ட காரணத்தால், 'do not read' அல்லது 'don't read' என்றுதான் சொல்ல முடியும். ஆங்கிலேயர் கூட, 'Please don't read' என்றுதான் சொல்வார்கள். அப்படி ஒரு மரபைப் பின்பற்றக் கூடியவர்கள்.

இங்கே அவ்வளவு மரியாதை தராவிட்டாலும் கூட, மரியாதைக் குறைவாக "படிக்காதே, படிக்காதே" என்று அவர் முன்னால், அவர் ஆற்றவந்த உரைப் புத்தகத்தை நீட்டி, நீட்டி முழங்கி விட்டுச் சென்றார்கள். ஆளுநர் அவர்கள் அந்தச் செயலை உன்னிப்பாகக் கவனித்துவிட்டுத்தான், தன்னுடைய கடமையை இங்கே ஆற்றிவிட்டுச் சென்றார்கள். அதற்குப் பிறகு இந்த அவையில் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களும், ஜனநாயகத்தினுடைய அடையாளச் சின்னமாக இந்த அவையினுடைய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடியவராக அமர்ந்திருக்கின்ற பேரவைத் தலைவராகிய நீங்களே தாக்கப்பட்ட நிகழ்ச்சியும் இங்கே பொறுப்பிலே இருக்கிற எல்லாக் கட்சித் தலைவர்களுடைய உள்ளத்தையும் உலுக்கி, தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா தளக்கட்சி, முஸ்லீம் லீக் கட்சி மற்றும் நம்முடைய நண்பர் பாண்டியன் போன்றவர்கள், பார்வார்டு பிளாக் கட்சியைச் சார்ந்தவர்கள். இவர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னது மாத்திரமல்ல, நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொன்னது மாத்திரமல்ல, அன்றைக்கு மிகுந்த உணர்ச்சியோடு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தி 'இது கண்டிக்கத் தக்கது' என்றே அன்றைக்குக் குறிப்பிட்டார். இந்த அவையில் உள்ள தலைவர்களும் சரி, மற்ற உறுப்பினர்களும் சரி, மிகக் கடுமையான தண்டனைதான் இத்தகைய செயலிலே அன்றைக்குக் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்த்தார்கள், வழங்கப்பட வேண்டுமென்று எண்ணினார்கள். அப்பொழுதிருந்த அந்தச் சூழலில் அப்படித்தான் எண்ணமுடியும். பிறகு நிதானமாகச் சிந்தித்துப் பார்க்கிற நேரத்தில், நமக்கே ஒரு பரிவு ஏற்பட்டு, கொஞ்சம் தளர்த்தலாமா என்றெல்லாம்

எண்ணுவது உண்டு. ஆனால் அன்றைய தினம் அத்தனை பேரும் இதைவிடக் கடுமையான தண்டனை வேண்டுமென்று எண்ணினார்கள். ஆனால் தாங்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு - இந்த தொடருக்கும், அடுத்த வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெறுகின்ற அந்தக் கூட்டத் தொடருக்கும் - வரக் கூடாது என்ற தீர்ப்பே வழங்கினீர்கள். இந்த இரண்டு தொடர் என்று சொல்கிற நேரத்தில், இரண்டு பெரிய தொடர் என்று எண்ணத் தோன்றும் மற்றவர்களுக்கு. ஆனால் தாங்கள் தீர்ப்பு வழங்கிய பிறகு எஞ்சியிருக்கிற நாட்கள் இரண்டே இரண்டு நாட்கள்தான். இந்த கவர்னர் உரை விவாதத் தொடரில் எஞ்சியிருப்பது இரண்டே இரண்டு நாட்கள்தான், நேற்றைய தினமும், இன்றைய தினமும்தான். அதற்குப் பிறகு இடையிலே 7, 8 நாட்களுக்கு விடுமுறை வந்து, அதன் பின்னர்தான் நேற்று நீங்கள் அறிவித்ததற்கொப்ப பிப்ரவரி 2 ஆம் தேதியன்று வரவு-செலவுத் திட்டம் இங்கே வைக்கப்பட்ட பிறகுதான் தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெற இருக்கின்றன. இதுபோன்ற அமளிகளின் மூலமாக நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியை நாம் ஆற்றத் தவறிவிடுகிறோம் என்பதனை அ.தி.மு.க. வினர் உணரவில்லை, காங்கிரஸ் கட்சியினர் உணரவில்லை என்பது வேதனைக்குரிய ஒன்றாகும். நேற்றைய தினம் மாலையிலும் சரி, இன்று காலையிலும் சரி, உரையாற்றிய கட்சித் தலைவர்களுடைய கருத்துக்கள், அவர்கள் எடுத்து வைத்த வாதங்கள், இந்த அரசின் மீது சொல்லப்பட்ட குறைபாடுகள், அவைகள் எப்படி எல்லாம் திருத்தப்பட வேண்டுமென்று அவர்கள் வகுத்தளித்த ஆலோசனைகள், அவைகளைக் கேட்டு நான் மகிழ்ந்திருக்கிறேன். ஒரு அரசு,

‘இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்’

என்ற குறளை உணர்ந்த அரசாக இருக்கவேண்டுமென்று நான் மிகத் தெளிவாக உணர்ந்தவன், இருக்கின்ற குற்றங்களை எடுத்துச் சொல்லி, குறைகளைச் சுட்டிக்காட்டி, இவைகள் திருத்தப்பட வேண்டும் என்று சொல்லுகின்ற எதிர்க்கட்சிகளைப் பெற்றிருந்தால் தான் ஆளும் கட்சி திறமையோடு செயல்பட முடியும். இல்லாவிட்டால் ஆளும் கட்சிக்கு ஒரு ஆணவம் ஏற்பட்டு விடும். நாம் எதைச் செய்தாலும் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் என்கிற

ஒரு துணிவு ஏற்பட்டுவிடும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியும், அதற்கு அடுத்துள்ள கட்சியும் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றிடத் தவறியது மாத்திரம் அல்ல. மற்றவர்களையும் இந்த அவையிலே அத்தகைய பணிகளை ஆற்ற விடாமல் தடுக்கிற வகையில் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் அமளி நிலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு என்ன நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டது என்றால், அதையும் நான் சொல்ல வேண்டும்.

என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ஆர் அவர்கள் மறைந்து, அதற்குப் பிறகு அவர்களுடைய கட்சிக்குள்ளே ஏற்பட்ட உட்பூசலின் காரணமாக பிளவு தோன்றி, யார் அன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்பது என்று அவர்களுடைய கட்சிக்குள்ளேயே கேள்வி வெடித்து, அதன் காரணமாக இந்த அவையிலே ஒரு பெரிய அமளி தோன்றி, அந்த அமளியை அடிப்படையாக வைத்து அன்றைய தினம் ஆட்சி கலைக்கப்பட்டது அல்லவா, அந்த நம்பிக்கைதான் அவர்களுக்கு. அதை ஒரு முன் உதாரணமாகக் கொண்டு சட்டசபைக்குள்ளே இப்படிப்பட்ட கலவரங்களைச் செய்தால், எப்படி திருமதி. ஜானகி அம்மையாருடைய ஆட்சி, அதைக் காரணமாக வைத்துக் கலைக்கப் பட்டதோ, அதைப் போல இந்த ஆட்சியும் கலைக்கப்படும் என்று நம்பினார்கள். அதை எனது நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் அன்றைக்குப் பேசும்போது கூடக் குறிப்பிட்டார்கள்.

நாங்கள் பொறுப்பு ஏற்ற பிறகு, 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25ஆம் நாள் இந்த அவையில் நடைபெற்ற சம்பவங்களை விளக்கினார்கள். நான் மீண்டும் அவைகளை விளக்கிக் கொண்டிருக்க விரும்பவில்லை. நீங்கள் தயவுசெய்து அந்த நாளைச் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு இரண்டு நாளைக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை ஒட்டி அன்றைக்கு அந்த அமளி இங்கே தோற்றுவிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சி என்ன? ஒரு அரசாங்க அலுவலர், சில பேரிடத்திலே பணத்தை வாங்கி ஏமாற்றிவிட்டார் என்று புகார் கொடுக்கப்பட்டு, அந்த அலுவலருடைய வீடு போலீசாரால் சோதனை இடப்பட்டபோது அங்கு சிக்கிய பொருள்களிலே ஒன்று, அன்றைய எதிர்க்கட்சி தலைவராக இருந்த திருமதி. ஜெயலலிதா அவர்களுடைய பதவி விலகல் கடிதம். அது கிடைத்தது. அந்தக் கடிதத்தைப் போலீசார்

கைப்பற்றினார்கள். அந்தக் கடிதம் ஒரிஜினல் மாத்திரம் அல்ல. அதிலிருந்து காப்பிகள் பல எடுக்கப்பட்டிருந்தன. எனவே அவர்கள் அதைக் கைப்பற்றி அந்தப் பிரதிகள் போலீசாருடைய கையிலே இருக்கும்போது அதன் ஒரிஜினல் யார் வாயிலாகவோ எனக்குத் தெரியாது. அதற்குப் பின்னணி என்னவோ அதுவும் எனக்குத் தெரியாது. அது அவைத் தலைவராகிய தங்களுக்குத் தரப்பட்டது. அதை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு தாங்களோ அல்லது ஆளும் கட்சியாக இருக்கிற நாங்களோ, "எதிர்க்கட்சித் தலைவர் ராஜினாமா செய்துவிட்டார். ஆகவே அவர் பதவி விலகத்தான் வேண்டும்" என்று யாரும் அன்றைக்கு அவசரப்படவில்லை.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. மறுநாள் தங்களைச் சந்திப்பதற்காக நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், கே.கே.எஸ். எஸ். ஆர் அவர்களும் தங்களுடைய அறைக்கு வந்திருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். மேலே நான் முதலமைச்சருடைய அறையிலே அப்போது இருந்தேன். நண்பர் வீராசாமி அவர்கள் இந்தத் தகவலை என்னிடத்திலே சொன்னார். திருநாவுக்கரசு அவர்களும், கே.கே.எஸ்.எஸ்.ஆர் அவர்களும் பேரவைத் தலைவருடைய அறைக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார். நான் வீராசாமி அவர்களிடத்திலே சொல்லி, இவர்களிடத்திலே சொல்லச் சொன்னேன். "இதிலே அவைத் தலைவரோ அல்லது இந்த ஆட்சியினரோ எத்தகைய அவசரமும் காட்டப் போவதில்லை. இந்தக் கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர் ராஜினாமா செய்துவிட்டார் என்று அவரைப் பதவி விலக்கப் போவதில்லை. தீர விசாரித்த பிறகு அதை, ராஜினாமா செய்வதாகச் சொல்லப்படுகிற ஜெயலலிதா அவர்கள் ஒப்புக்கொண்டால் ஒழிய, அந்தக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது" என்று சொல்லப்பட்டது. தாங்களும் இதே கருத்தைத்தான் அவர்களுக்குச் சொல்லி அனுப்பி, தாங்கள் ஜெயலலிதா அவர்களுக்குக் கடிதம் எழுதி, அவர், "நான் இப்போது ராஜினாமா செய்யவில்லை. அந்தக் கடிதம் தங்களுக்குத் தரப்பட்டிருந்தாலும்கூட அதைத் தாங்கள் ஏற்க வேண்டாம்" என்று சொன்ன பிறகு, அதை ஏற்கவில்லை. அந்தக் கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைப் பழி வாங்க வேண்டும் என்று அன்றைக்கு யாரும் கருதவில்லை. இப்படிப்பட்ட ஒரு கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு

அவர்களைப் பதவியிலிருந்து விலக்கி இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருந்தும், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாததற்காக ஒரு அமளி. ஏன் பயன்படுத்தவில்லை என்பதைப்போல் இந்த அவையிலே அளி நடத்தப்பட்டது. அதுவும் இது போன்ற பிரச்சினைகளை அவையிலே எழுப்ப வேண்டும் என்றால் அதற்கு ஒரு நியதி இருக்கிறது.

அந்த நியதியோ, முறையோ எதுவும் கடைப்பிடிக்கப்பட வில்லை. வரவு-செலவுத் திட்டம் படிக்கின்ற நாளில் குறுக்கிட்டுக் கேள்விகளைக் கேட்பதோ, வேறு பிரச்சினைகளைச் சொல்வதோ இயலாது. கவர்னர் அவர்கள், இந்த அவைக்கு என்ன நிகழ்வுகள் நடைபெற வேண்டும் என்று நிகழ்ச்சி நிரலை அனுப்பி வைக்கிறார்களோ, அதன்படிதான் இங்கே நிகழ்ச்சி நடைபெற வேண்டும். அப்படி நிகழ்ச்சி நடைபெறத் தொடங்கியிருந்த பொழுது, அதற்கு மாறாக, முற்றிலும் விதிகளுக்கு முரணாக அன்றைக்கு ஒரு பெரிய அமளியை ஏற்படுத்தினார்கள். அதற்குத் தெரிந்தோ, தெரியாமலோ, வேறு வழி இல்லாமலோ, அன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் துணை போக நேரிட்டது. அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் - ஏன் நம்முடைய திருநாவுக்கரசு கூட அன்றைக்கு எதிர்க்கட்சியிலே துணைத் தலைவராக அமர்ந்து பல முறை வலியுறுத்தினார்கள். இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகள் படம் எடுக்கப்பட்டிருக்கின்றன. டி. வி. எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போட்டுக்காட்ட வேண்டு மென்று கேட்டார்கள். தாங்களோ, இந்த அவையின் மரபின்படி அதுபோன்ற கலவரச் சூழ்நிலைகளை டி. வி. எடுத்து இருந்தாலும் கூட அதைப் போட்டுக்காட்டுவது சரியல்ல என்று அந்தக் கருத்தை வலியுறுத்திக் கொண்டு இருந்தீர்கள். ஆனால் அவர்கள் ஏதோ ஒரு பெரிய நடந்த கொடுமையை மறைப்பது போல எண்ணிக் கொண்டு அதைக் காட்டித்தான் தீர வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு நான் இதே அவையில் தங்களை மெத்த மரியாதையோடு கேட்டுகொண்டு அதற்குப் பிறகு தாங்கள் அதற்குச் சம்மதித்து டி. வி. நிலையத்தார்கள் எடுத்து இருக்கின்ற படத்தைப் போட்டுக் காட்டலாம் என்று அனுமதிக் கொடுத்தீர்கள். ஆனால் அதைப் போட்டுப் பார்க்க யாரும் முன்வரவில்லை. காரணம், அதைக் காட்ட முடியாது என்று சொன்ன வரையிலேதான் அவர்களுடைய கற்பனைகள் உயிரோடு வாழ்ந்தன. அதைக் காட்டலாம் என்கின்ற அனுமதியை நான் தங்களிடம் பெற்று,

தாங்கள் அனுமதி அளித்த பிறகு அந்த கற்பனைகள் அகால மரணம் அடைந்தன. இதுதான் நடந்த உண்மை. நான் அதைப் பற்றி மேலும் விளக்கங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. இப்படி இந்த ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் இன்னும் 5 ஆண்டுக் காலம் பொறுத்திருக்க வேண்டும், மக்களுடைய தீர்ப்பைப் பெற்று ஆட்சிக்கு வர, என்ற அங்கலாய்ப்பின் காரணமாக, ஆதங்கத்தின் காரணமாக உடனடியாக இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டும், ஜானகி அம்மையாருடைய ஆட்சியைக் கலைத்தது போல என்று எண்ணிச் செயல்பட்டார்கள்.

நேற்றைக்கு என்னுடைய நண்பர் லத்தீப் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்தியுங்கள்; அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காதீர்கள் என்று காங்கிரஸ்காரர்களுக்கும், அ.இ.அ.தி.மு.க.விற்கும் அறிவுரை வழங்கினார். அந்த அறிவுரையை அவர்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்வார்கள். அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காதீர்கள் என்று அவர் சொன்னார். அவர்கள் சிந்திப்பதில்லை. அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்கவில்லை அவர்கள். உடனடியாக கலைக்கவேண்டும்; தாங்கள் வந்து இங்கே நியமிக்கப்பட்ட முதலமைச்சர்களாக ஆக வேண்டும் என்று எண்ணும்போது அடுத்த தேர்தலைப் பற்றி அவர்கள் ஏன் சிந்திக்கப் போகிறார்கள்? அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பதாக இருந்தால் பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இன்னும் 1994ஆம் ஆண்டு வரையில் அல்லவா காத்திருக்க வேண்டும்? எனவேதான், நிச்சயமாக, லத்தீப் அவர்களே, நீங்கள் சொன்ன அந்த அறிவுரையை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திக்காதவர்கள். ஆனால் அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கிறார்களா என்றால் இல்லை. அடுத்த முதலமைச்சராகத் தாங்கள் வர வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ முதலமைச்சராக வருவது என்பது, அந்த இடத்திலே இருந்து மாறி இந்த இடத்திலே உட்கார்ந்து விடுவது என்பது அல்ல. ஜனநாயகத்திலே அதற்கென சில கடமைகள் இருக்கின்றன. முறைகள் இருக்கின்றன. அதற்கென பல வழிவகைகளும் இருக்கின்றன. மக்கள் பார்த்து அளிக்க வேண்டிய தீர்ப்புக்குப் பிறகுதான் ஒரு ஆட்சி, பொறுப்பை ஏற்க முடியும். ஆனால் இவைகளை எல்லாம் துச்சமென மதித்துவிட்டு

இந்த அரசைக் கலைப்பது பற்றியே, அதற்காக இல்லாத காரணங்களை எல்லாம் அவர்கள் கற்பித்துக் கொண்டு செயல் படுகிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் என்னுடைய உரையின் இறுதியில் நான் மேலும் சில விளக்கங்களை தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றைக்கே காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு குற்றத்தை என் மீது சுமத்தி அக்னிப் பிரவேசம் செய்ய கருணாநிதி - முதலமைச்சர் தயாரா என்று கேட்டார். அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். 25-ந் தேதி அன்றைக்கு அக்னிப் பிரவேசம் செய்கிறேன் என நான் சொன்னேன். அதைப்போல காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் - இரண்டு தலைவர்களில் யார் தலைவர் என்று எனக்குத் தெரியாது; தமிழ்நாட்டிலே உள்ள தலைவர்கள்; சட்டசபையில் உள்ள தலைவரா அல்லது வெளியிலே உள்ள தலைவரா அவர்களுக்குத் தலைவர் என்று எனக்குத் தெரியாது - அவர்கூடச் சொல்லியிருக்கிறார், அப்படியானால், கருணாநிதி இன்றைக்கு அக்னிப் பிரவேசம் வந்தால், தீ மிதித் திருவிழா நடத்தப் போகிறாரா? சட்டசபையில் தீயைப் போட்டு அதிலே நடக்கப் போகிறாரா அல்லது சபாநாயகருடைய மேடையிலே கற்பூரத்தை வைத்து அணைக்கப் போகிறாரா என்றெல்லாம் அவர் கேட்டிருக்கிறார். இதெல்லாம் பழைய கிராமத்து முறைகள். அக்னிப் பிரவேசம் என்பது - குமரி அனந்தன் இங்கேயிருந்தால் சொல்லியிருப்பேன். அவர் இலக்கியச் செல்வர். ஏனென்றால் இலக்கிய ரீதியாக சில வார்த்தைகள் உண்டு. அக்னிப் பிரவேசம் என்றால் இங்கு ஒரு பெரிய ஓம குண்டம் வளர்த்து, அதிலே அக்னியை வளர்த்து அதிலே நான் குதிப்பது என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இலக்கிய வாடை இல்லாத காரணத்தால். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தச் சொல்லுக்கு உண்மையான பொருள் என்ன என்பதைப் புரிந்த கொள்ளாமல் பேசுகின்றார்கள். அவைகளைப் பற்றி எல்லாம் நான் பிறகு சொல்கிறேன்.

முக்கியமாக இந்தக் கூட்டத் தொடரில் நம்மை வெகுவாகப் பாதித்துக் கொண்டிருக்கிற பிரச்சினை, நம்மை மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்தை மாத்திரமல்ல; நம்முடைய நாட்டை மாத்திரமல்ல; உலகத்திலே பல பகுதிகளைப் பாதித்துக்

கொண்டிருக்கிற பிரச்சினை வளைகுடாப் போர். இந்த வளைகுடாப் போரின் காரணமாக ஏற்படக் கூடிய விளைவுகள், அவைகளை நாம் எப்படிச் சந்திக்க வேண்டும் என்பதைப் பற்றி நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் இங்கே பேசியிருக்கிறார்கள். மற்றும் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசி யிருக்கிறார்கள். அதைப்பற்றி சில குறிப்புகளை உங்கள் முன்னால் வைக்க நான் விரும்புகிறேன். எத்தகைய நடவடிக்கைகளை - இந்தப் போரின் காரணமாக நம்முடைய நாடும், அதன் தொடர்பாக நம்முடைய மாநில மக்களும் பாதிக்கப்படும்போது, இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்கின்ற குறிப்புகளை உங்கள் முன்னால் வைப்பது நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

வளைகுடாப் போர் வருவதற்கு 3 அல்லது 4 மாதங்களுக்கு முன்பே பெட்ரோலியப் பொருட்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென்ற முயற்சியிலே தமிழ்நாடு அரசு ஈடுபட்டது. அந்தப் பொருள்கள் பதுக்கப்படுவதைத் தடுக்கவும், கள்ளச் சந்தையிலே விற்க முயற்சிப்பதைத் தடுக்கவும் 1955ல் நிறைவேற்றப்பட்ட Essential Commodities Act 10/1955 - அதன்கீழ் 'Motor Spirit and High Speed Diesel Prevention of mal-practices in Supply and Distribution Order என்ற விதிகள் 30-10-1990-ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. பேருந்துகளுக்கு டீசல் விநியோகத்தில் 10 சதவீதம் குறைக்க, பேருந்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய நிலைமை முதலிலே ஏற்பட்டது. மத்திய அரசு, பேருந்துகளுக்கு 10 சதவீதம் டீசல் உபயோகத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னதன் காரணமாக, பேருந்துகளின் எண்ணிக்கையைப் பரவலாகக் குறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும், அதன் காரணமாக மக்களிடையே பிரச்சினைகள் எழுந்த காரணத்தாலும், நம்முடைய பல்வேறு கட்சித் தலைவர்கள், நண்பர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள் - இவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன குறைபாடுகளை மனதார அறிவதாலும் ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பேருந்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அதற்கு முன்னால் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர், அதிகாரிகளுடனும், பல்வேறு மக்கள் பிரதிநிதிகளுடனும்

பேருந்துகளைப் பயன்படுத்துபவர்களுடைய பிரதிநிதிகளுடனும் கலந்து பேசி, ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் பேருந்துகளின் எண்ணிக்கையைக் குறைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

இருந்தாலும், விவசாயத்திற்கான டீசல் பம்புசெட்டுகள், டிராக்டர்கள், மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான விசைப் படகுகள் ஆகியவற்றிற்கு டீசல் குறையாமல் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வளைகுடாப் போர் ஆரம்பமானவுடன் பிரதமர் அவர்கள் 17-ந் தேதி டெல்லியிலே முதலமைச்சர்களுடைய கூட்டத்தைக் கூட்டினார்கள். 18-ந் தேதி இங்கே ஆளுநர் உரை இருந்த காரணத்தால் நான் செல்ல இயலவில்லை. டெல்லியிலே நீர்ப்பாசனத் துறை மாநாட்டிற்குச் சென்றிருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து, டெல்லியிலே நடைபெற்ற கூட்டத்தில் தலைமைச் செயலாளரும், உணவுத் துறைச் செயலாளரும் மாநில அரசின் சார்பில் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலும் நிலைமைகள் விரிவாக டெல்லியிலே ஆராயப்பட்டிருக்கின்றன. அது குறித்த விவரத்தை மத்திய அரசு, மாநில அரசுக்கு உடனடியாகத் தெரிவிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவரையில் அதுகுறித்த விவரங்கள் எதுவும் மாநில அரசுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை; விரைவிலே வந்து சேரும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதைத் தொடர்ந்து 22-1-1991 அன்று நம்முடைய மாநில அரசு உள்துறையின் சார்பில் உயர்மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் வளைகுடாப் போரை ஒட்டி ஏற்பட்டிக்கிற சூழ்நிலைகள் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. இன்றியமையாத பொருள்களான பால், உணவுப் பொருள்கள், காய்கறிகள், பழங்கள், முட்டைகள், எல்.பி.ஜி., சமையல் எண்ணெய், சர்க்கரை, பருப்பு வகைகள் ஆகியவைகளை ஏற்றிச் செல்லக் கூடிய வாகனங்களுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய பம்புசெட்டுகள், டிராக்டர்கள் ஆகியவைகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் ஒப்புதலோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குத் தேவையான பம்புசெட்டுகள், டிராக்டர்கள் ஆகியவைகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், மீன் பிடிக்கும் விசைப் படகுகளுக்குத் தேவையான டீசல் தருவது என்றும், இந்த டீசல் அவைகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் முறைப்படி கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழிலுக்கு - Industrial use பயணிகளுக்குத் தேவையான பேருந்துகளுக்கு பயணிகளுக்கான சிறு மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான டீசல் உபயோகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு உச்சவரம்பு வைக்காமல் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அந்த வாகனங்களுக்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்த லாரிகளுடைய எண்ணிக்கை 87 ஆயிரம். இதில் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய லாரிகள் சுமார் 20 ஆயிரம். இந்த 20 ஆயிரம் லாரிகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் டீசல் கிடைக்க வழிவகை செய்யப்படும். விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய டிராக்டர்கள் சுமார் 36 ஆயிரம். பொருட்களை ஏற்றிச்செல்லும் வேன்கள் போன்றவை சுமார் 8 ஆயிரம். பயணம் செய்யப் பயன்படும் பேருந்துகள் சுமார் 20 ஆயிரம் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவைகளுக்கும் ஒரு சீரான வினியோக முறையை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. டூரிஸ்டு கார்கள் 14 ஆயிரம் இருக்கின்றன. பயணம் செய்யப் பயன்படும் வேன்கள் 7 ஆயிரம் இருக்கின்றன. இவைகளுக்கு டீசல் உபயோகத்திற்கு உச்சவரம்பு கொண்டுவரப்படும். நான் முதலில் சொன்ன லாரிகள், டிராக்டர்கள், பேருந்துகள் இவைகளுக்கெல்லாம் டீசல் சீரான வினியோகம். இன்றைக்கு டூரிஸ்டு கார்களுக்கும், பயணம் செய்யப் பயன்படும் வேன்களுக்கும் உச்ச வரம்பு, டீசலைப் பயன்படுத்த உச்சவரம்பு. தனியார் பயன்படுத்தும் கார்கள், ஆட்டோ ரிக்ஷா போன்ற வாகனங்களுக்கு - போர் தொடருமானால் என எதிர்பார்க்கப்பட்டு - வரையறுக்கப்பட்ட அளவுக்கு மட்டுமே டீசல், பெட்ரோல் பயன்படுத்த வழி வகைகள் செய்யப்படும். அதே நேரத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க சில யோசனைகளும் அந்தக் கூட்டத்தில் செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:-

1. அரசு விடுமுறை நாட்களில் அரசாங்க வாகனங்கள் உபயோகப்படுவதைத் தடை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் வாரத்தில் 2 நாட்கள், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் முடிந்த வரை வாகனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

3. தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் உபயோகிக்கும் வாகனங்களுக்கு மாதத்திற்கு ஒரு அளவு வரையறுக்கப்பட்டு பெட்ரோல் மற்றும் டீசல் வழங்கப்படும்.

4. புதிய வாகனங்களைப் பதிவு செய்கின்ற செயலைச் சிறிது காலத்திற்கு ஒத்திவைக்கலாமென்ற யோசனையும் அரசுக்கு இருக்கிறது.

5, குறிப்பிட்ட பகுதியிலிருந்து அரசு அலுவலகங்களுக்குச் செல்ல என்று தனித்தனியாகக் கார்களைப் பயன்படுத்துகின்ற வர்களுக்கு பொதுப் பேருந்துகளில் குறிப்பிட்ட நேரத்தில் அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வசதியாக ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, இப்போது அசோக் நகர் என்று எடுத்துக் கொண்டால் அங்குள்ள அலுவலர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலிருந்து பெரும்பாலும் வருகிறார்கள். அவர்கள் தனித்தனியாகக் காரிலே அலுவலகத்திற்கு வராமல் அனைவரும் ஒரு இடத்திலே வந்து பேருந்துகளின் மூலமாக அலவலகத்திற்கு வரக்கூடிய அந்த வசதியைச் செய்யலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

இதைப்போலவே பெட்ரோல், டீசல் இவைகளை எப்படிச் சிக்கனமாகப் பயன்படுத்துவது என்பதற்கு நாம் நிர்ணயித்துள்ள இந்த முடிவுகளைப் போலவே இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல இந்த வளைகுடாப் போருக்குப் பிறகு ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளையும் அரசு எடுக்க முன் வந்துள்ளது. அதற்கு மத்திய அரசே பெரும் பொறுப்பு ஏற்று நடவடிக்கைகள் எடுக்க முன்வரவேண்டும் என்றாலும்கூட, மாநில அரசு தன்னுடைய அதிகாரத்திற்கு

உட்பட்டு தன்னால் இயன்ற அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்க இப்போது முன்வந்து இருக்கிறது. நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு வணிகர் சங்கங்களோடு கலந்து பேசி அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை என்னிடமும், மற்றும் அதிகாரிகளிடமும் நேற்றைய தினம் கலந்து பேசியதன் காரணமாக மக்கள் அன்றாட வாழ்வுக்குத் தேவையான இன்றியமையாத உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்கு சில நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது. அரிசியைப் பொறுத்தவரையில் பொது வினியோகத்திலே வழங்குவதற்கான அரிசி நம் கையிருப்பில் உள்ளது; வெளி மாநிலங்களிலேயிருந்து வணிகர்கள் அரிசி கொண்டு வரவும் தடை எதுவும் இல்லை. மேலும் பொதுவாக இந்த ஆண்டு சாகுபடி வழக்கமாக இருப்பது போலவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அரிசி விலை உயராமல் கட்டுப்பாட்டில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

கோதுமையைப் பொறுத்தவரையில் மத்திய அரசு தமிழ் நாட்டிலுள்ள மாவு மில்களுக்கு மாதம் 60 ஆயிரம் டன் கோதுமையை, நவம்பர், டிசம்பர் மாதம் வரையிலே அளித்து வந்தது. ஆனால், இப்போது அதை 50 ஆயிரம் டன்னாகக் குறைத்தது மாத்திரம் அல்லாமல் நடைமுறையையும் மாற்றி மில்களுக்குத் தரப்பட்ட அந்த கோதுமையைக் குறைத்து தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் மத்திய அரசின் சார்பில் ஃபுட் கார்ப்பரேஷன் சார்பில் கொடுக்கின்ற காரணத்தால் மைதாவினுடைய விலை இப்போது உயர்ந்து உள்ளது. இதைச் சுட்டிக்காட்டி, தேவையான கோதுமையை நமக்கு வழங்க மத்திய அரசுக்கு இந்த அரசு முறையீடு செய்திருக்கிறது. எனவே, அந்த முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டு மாவு மில்களுக்குத் தேவையான கோதுமையை அளிப்பதில் உள்ள இடர்ப்பாடுகள் நீங்கும் என்று நம்முடைய அரசு எதிர்பார்க்கிறது.

மண்ணெண்ணெய் - பொது விநியோக முறை மூலம் முறையாக இப்போது மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இதில் இப்போது பிரச்சினைகள் எதுவும் இல்லை. மத்திய அரசு வழங்குகின்ற ஒதுக்கீட்டைப் பொறுத்து நாம் அதனை வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள்

அறிவார்கள். மாநிலத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் தொடர்ந்து கிடைப்பதற்கு மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

பாமாயில் - சமையல் எண்ணெய் : இப்போது அதனுடைய விலை உயர்வு, அது கிடைக்காத நிலை காரணமாக நாமெல்லாம் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகி இருக்கின்றோம். அதற்க வியாபாரிகள் சொல்லுகின்ற காரணம், குஜராத் மாநிலத்தில் எண்ணெய் வித்துக்களின் குறைந்த விளைச்சல் மற்றும் மத்திய அரசு வெளிநாடுகளிலேயிருந்து சமையல் எண்ணெய் இறக்குமதி செய்வதைக் குறைத்து விட்டது இரண்டாவது காரணம். மூன்றாவதாக, போக்குவரத்துச் செலவு அதிகரித்துள்ளது. அங்கே, விளைச்சல் குறைவாக இருப்பதும் தேவையான சமையல் எண்ணெயை இறக்குமதி செய்வதை மத்திய அரசு வெகுவாகக் குறைத்து இருப்பதும் போக்குவரத்துச் செலவு அதிகமானதும் சமையல் எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள கிராக்கிக்கும், கிடைத்தாலும் அது அதிக விலை விற்கின்ற நிலைக்கும் காரணங்களாக அமைந்துள்ளன. நவம்பர், டிசம்பர் மாதங்களில் மத்திய அரசிடமிருந்து பாமாயில், மாநிலத்திற்கு தரப்படவே இல்லையென்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஜனவரி மாதத்திற்கான பாமாயிலும் இதுவரையில் மாநில அரசுக்கு மத்தியிலேயிருந்து ஒதுக்கப்படவேயில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன். விரைவில் பாமாயில் இறக்குமதி செய்யப்பட்டு ஓரளவிற்குக் கிடைக்கும் என்ற உறுதியை அண்மையிலே டெல்லியிலே நம்முடைய உணவு அமைச்சரும், உணவுத்துறைச் செயலாளரும் கலந்துகொண்ட அந்தப் பேச்சுவார்த்தையின்பொழுது, மத்திய அரசிலேயுள்ள அமைச்சர்கள் ஒரு உறுதியைத் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, நமக்கு விரைவிலே பாமாயில், அவர்கள் இறக்குமதி செய்வதையொட்டிக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பருப்பு வகைகளினுடைய விலைகளும் உயர்ந்திருக் கின்றன. குறைந்த விளைச்சல், அதிக போக்குவரத்துச் செலவு ஆகியவைகள்தான், இந்த விலை உயர்வுக்குக் காரணம். பிப்ரவரி மாதத்தில் சிலவகைப் பருப்புகள் அறுவடை முடிந்து சந்தைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில்

விலையேற்றத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்துவதற்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் பிற மாநிலங்களிலிருந்து துவரம்பருப்பு வாங்கி மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்களின் மூலம் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க முற்பட்டிருக்கிறது.

அதைப்போலவே காய்கறிகளினுடைய விலைகளும். இங்கே நம்முடைய பாண்டியன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல சில்லறைக் கடைகளில் மிகவும் உயர்ந்துள்ளது. பெருநகர்ப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, காய்கறிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக சென்னை மாநகரத்தில் சுமார் 50 இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவை தொடங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வளவுக்குப் பிறகும் போரை, அதன் விளைவுகளைப் பயன்படுத்தி இன்றியமையாப் பொருள்கள் பதுக்கப்பட்டாலோ, கடத்தப்பட்டாலோ, கலப்படம் செய்யப்பட்டாலோ, கொள்ளை இலாபத்திற்கு விற்கலாம் என்கின்ற எண்ணத்தோடு சமூக விரோதச் செயல்களிலே யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய ரமணி அவர்கள்கூட இங்கே சொன்னார்கள், "மிரட்டிக்கொண்டே இருந்தால் அதுவே ஒரு வாடிக்கையான விஷயமாக ஆகிவிடும், பிறகு யாரும் பயப்பட மாட்டார்கள்" என்று.

மத்தியிலே உள்ள உணவு அமைச்சரவர்கள் நேற்றைய தினம் எனக்குத் தந்துள்ள டெலக்ஸில்,

"GOVERNMENT HAVE RECEIVED REPORTS THAT SOME UNSCRUPULOUS TRADERS ARE TAKING ADVANTAGE OF THE GULF WAR AND INCRESING PRICES OF ESSENTIAL COMMODITIES WITHOUT ANY JUSTIFICATION. ARTIFICIAL SHORTAGES ARE BEING CREATED BY THE TRADERS IN SPITE OF ADEQUATE STOCKS OF COMMODITIES RESULTING IN ABNORMAL RISE IN PRICES. IN THE CIRCUMSTANCES, IT IS NECESSARY TO INTENSIFY DEHOARDING OPERATIONS. PLEASE ACTIVATE YOUR ENFORCEMENT MACHINERY AND MONITOR PRICE SITUATION ON DAY-TO-DAY BASIS. SELECTIVE ARRESTS, DETENTIONS OF NOTORIOUS BLACK-MARKETEERS, HOARDERS WILL HAVE A SALUTARY EFFECT ON THE PRICE SITUATION, SHALL BE GRATEFUL

IF I KEPT INFORMED OF THE ACTION TAKEN IN YOUR STATE IN THIS REGARD"

என்று, நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிய விவரத்தையும் மத்திய உணவு அமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திக்கும், மாநிலத்திற்கும் தொடர்பு இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்தக் கலைப்பு வேலையிலே ஈடுபட்டிருப்பவர்கள் உணர வேண்டும் என்பதற்காக அதைச் சொல்கிறேன்.

இவைகளை அன்னியில் போலீசாரை வைத்து, காவல் துறையினரை வைத்து, இத்தகைய சமூக விரோதிகளைக் கண்டு பிடிப்பது என்பதைவிட, அப்படிக் கண்டுபிடிக்கின்ற நேரத்திலே கூட, சில தவறுகள் ஏற்படுவதை உறுப்பினர்கள் அறிவார்கள். கண்டுபிடிக்கச் செல்கின்றவர்கள், நடவடிக்கை எடுக்கச் செல்கின்றவர்கள், சில நேரங்களில் வேண்டுமென்றே சிலரைக் கொடுமைக்கு ஆளாக்குகின்றார்கள் என்ற புகார்களும் வியாபாரிகளிடமிருந்து வரும். அதற்காக வணிகர்களுடைய கூட்டத்திலே அவர்களுடைய யோசனைப்படி ஒரு முடிவை அரசு எடுத்து இருக்கிறது. இன்றியமையாப் பொருள்கள் வாணிபத்திலே ஈடுபட்டுள்ள பல்வேறு மாநிலச் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொண்ட குழுவை அரசு ஏற்படுத்த முடிவெடுத்துள்ளது. இந்தக் குழு நான் குறிப்பிட்ட இந்த முடிவு குறித்து அரசுக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கும்; எடுக்கப்படுகிற நடவடிக்கைகளில் எத்தகைய சாதக பாதகங்கள் இருக்கின்றன என்பதையும் இந்தக் குழு அரசுக்குத் தெரிவிக்கும். அந்தக் குழுவிலே யார், யார் உறுப்பினர்கள் என்பது இன்னும் இரண்டொரு நாட்களில் மாநில அரசின் சார்பாக வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே பேசிய பல உறுப்பினர்கள் தங்களுடைய பகுதிகளிலே உள்ள வறட்சிக் கொடுமைகளைப் பற்றியெல்லாம் எடுத்து கூறியிருக்கின்றார்கள். இந்த உரையிலே வெறும் அரசியல் கருத்துக்களாக மாத்திரம் கூறிவிட்டுப் போய் விடுவதால், நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களும், அரசும் எப்படி விவாதித்து முடிவுகளை மேற்கொண்டிருக்கின்றன என்ற அந்தத் தேவை

மக்களுக்குப் போய்ச் சேராமலே போய்விடும். எனவேதான் நான் இவைகளையெல்லாம் குறிப்பிட விரும்புகின்றேன்.

நடப்பு ஆண்டிலேயிருந்து ஒன்பதாவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுமே யானால் நம்முடைய மாநிலத்திற்கு ஆண்டுக்கு 39 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். ஏற்கனவே இந்த அவையிலே நான் அதைப்பற்றி அறிவித்திருக்கின்றேன். 39 கோடி ரூபாய் இயற்கைச் சீற்றங்களுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதை அவ்வப்பொழுது, அந்தச் சீற்றங்கள் ஏற்படுகின்ற நேரத்தில், நாம் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றோம். அதிலே மத்திய அரசினுடைய பங்கு 75 சதவீதம் அந்த 39 கோடியில். அதாவது 29.25 கோடி. மாநில அரசின் பங்கு 9,75 கோடி. தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த 39 கோடி ரூபாய் போதுமானதாக இல்லை என்று நாம் மத்திய அரசினிடத்தில் முறையிட்டுகொண்டு வந்திருக்கிறோம். ஆனாலும், இது ஒன்பதாவது நிதிக் குழுவினுடைய பரிந்துரைகள், எனவே இதை மாற்றுவதற்கு இல்லை என்று பதில் வந்திருக்கிறது. ஒன்பதாவது நிதிக் குழுவைப்பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். குறிப்பாக தென்னக மாநிலங்கள் வெகுவாக ஒன்பதாவது நிதிக் குழுவினால் பாதிக்கப் பட்டிருக்கின்றன. ஒன்பதாவது நிதிக் குழுவினுடைய சிபாரிசில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் உ.பி.க்கு ஒதுக்கப்பட்டது. ராஜிவ் காந்தி காலத்திலே, அந்த அரசு இருந்தபொழுது ஒன்பதாவது நிதிக்குழு தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தது. உத்தரப் பிரதேசத்திற்குக் கிட்டத்தட்ட 1900 கோடி என்று - என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால் ஆயிரம் கோடியைத் தாண்டி ஒன்பதாவது நிதிக் குழுவிலே ஒதுக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு 40 கோடி. கர்நாடகத்திலே பொம்மை முதலமைச்சராக இருந்தார். அங்கே எதுவுமே ஒதுக்கப்படவில்லை. இப்படி ஒரு நிலை ஒன்பதாவது நிதிக் குழுவின் விளைவாக ஏற்பட்டதை மறந்திருக்க முடியாது. நமக்கு இந்த இயற்கைச் சீற்றங்களால் ஒதுக்கப்பட்ட ரூ. 39 கோடி போதாது என்று நாம் வாதிட்டும் கூட அவர்கள் ஒன்பதாவது நிதிக் குழுவின் சிபாரிசுகளை சுட்டிக்காட்டி, இதற்குமேல் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். இருந்த போதிலும், நாம் இந்த 39 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பின்வரும் பணத்தை, பல்வேறு துயர்துடைப்புப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம்;

1989-90-இல் சில மாவட்டங்களில் வடகிழக்குப் பருவ மழை குறைவாகப் பெய்ததால், நடப்பு ஆண்டில் குடிநீர் வழங்கும் பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. 3 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகள் போடுவதற்கும், சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சந்திக்கும் பொருட்டும், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ளவும், மொத்தமாக ரூ. 22,7 கோடி செலவிடப்பட்டுள்ளது. வெள்ள நிவாரணப் பணிகளுக்கென பின்வரும் தொகை ஏற்கனவே ஒதுக்கப் பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் பெருமழையால் ஏற்பட்ட சேதங்களைச் சீர்படுத்த ரூ. 80 இலட்சம்; சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. 2 கோடி. 2 கோடியே 80 இலட்சம் அன்னியில் தற்போது வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மேலும் பின்வரும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பத்தூரில் சாலைகள் செப்பனிட ரூ. 30 இலட்சம்; இராதாபுரம் வட்டத்தில் ஏரிகள், சாலைகள் செப்பனிடும் பணிகளுக்கு ரூ. 46 இலட்சம்; சென்னை மாநகராட்சி சாலைளைச் செப்பனிடுவதற்காக கூடுதல் தொகையாக ரூ. 5 கோடி. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலுள்ள சிறுபாசன ஏரிகளைச் செப்பனிட ரூ. 1.25 கோடி; தமிழ்நாட்டின் இதர பகுதிகளிலுள்ள சாலைகளைச் செப்பனிட ரூ. 3 கோடி; நீலகிரி மாவட்டம் மின்சார வாரியத்திற்குக் கூடுதலாக தொகை ரூ. 45 இலட்சம். எனவே மேலும் ரூ. 10.46 கோடி செலவிடப்படுகிறது. கடந்த ஆண்டு மழைக் குறைபாட்டினால் ஏற்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ. 22.72 கோடி செலவிட்ட தொகையையும், நடப்பு ஆண்டில் ஏற்பட்டுள்ள வெள்ள நிவாரணப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 13.26 கோடியையும் சேர்த்து, மொத்தமாக ரூ. 35.98 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 39 கோடியில் ரூ. 3 கோடி மாத்திரம்தான் மிச்சம் இருக்கிறது. இப்போது, இதனைப் பயன்படுத்தியும், மேலும் ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்து மொத்தமாக ரூ. 8 கோடி செலவில், சேலம், தர்மபுரி, வடாற்காடு-அம்பேத்கர் திருவண்ணாமலை - சம்புவராயர் போன்ற மாவட்டங்களில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட பாதிப்பையொட்டி

வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுதலாக 1,500 ஆழ்துளைக் கிணறுகள் போடப்படும். ஏற்கனவே வளர்ச்சித் திட்டத்தில் 10 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகளும், அது போதாமல் மேலும் ஐயாயிரம் சொச்சம் ஆழ்துளைக் கிணறுகளும் கவர்னர் உரையில் படிக்கப் பட்டிருக்கின்றன. அஃதன்னியில் கூடுதலாக இந்த வறட்சிப் பணிகளுக்காக 1,500 ஆழ்துளைக் கிணறுகள் போடப்படும். மேலும் கிணறுகளை ஆழப்படுத்தவும், ஏற்கனவே போடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளைச் செப்பனிடுவதற்கும், அத்தியாவசியம் எனத் தேவைப்பட்டால் லாரி மூலம் குடிநீர் வழங்குவதற்கும், குடிநீர்க் குழாய்களை நீட்டித்தல் போன்ற இதர பல்வேறு நிவாரணப் பணிகளுக்கும் இத்தொகை பயன்படுத்தப்படும். சாதாரணமாக வறட்சி நிவாரணப் பணிகள் மார்ச் மாதத்தில்தான் துவக்கப்படும். ஆனால் வறட்சி முந்திக்கொண்டு, முன்னரே துவங்கிவிட்ட காரணத்தினால், இப்போதே அந்தப் பணிகள் துவங்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஃதன்னியில் இந்த அரசின் சமூக நலத் திட்டங்கள் - அதை விரிவாகப் பேச விரும்பவில்லை என்றாலும், ஒன்றிரண்டை மட்டும் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். - 1989ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், இதுவரை ரூ. 17.30 கோடி செலவில், 34,595 பெண்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் வீதம் திருமண உதவித் தொகை இந்த அரசால் வழங்கப் பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில், இதற்கு நிதிநிலையில் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் உறுப்பினர்கள் இங்கே பேசியபோது, இது போதாமல் சில மாவட்டங்களில் சிரமம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். பற்றாக்குறை இருப்பதாகச் சொன்னார்கள். எனவே, இந்த உதவித் திட்டத்தின் கீழ் அதிகமான கோரிக்கைகள் வந்ததன் காரணமாக, இத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 8 கோடி என்பதை ரூ. 10.5 கோடியாக உயர்த்தியுள்ளோம். அப்படி உயர்த்தியும்கூட தற்போது மேலும் கோரிக்கைகள் வந்துள்ளதால், மேலும் கூடுதலாக ரூ. 1.5 கோடி ஒதுக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மொத்தமாக நடப்பாண்டில் ரூ. 12 கோடி இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. அதேபோல், முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் ரூ. 200 வீதம் இந்த இரண்டாண்டில் 3,71,805 பேருக்கு, கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ. 7.44 கோடி அளவுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இந்தத் திட்டத்திற்காக 4 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவும் போதாதென்று தெரிகிற காரணத்தால் மேலும் 50 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். குடும்பத் தலைவரை இழந்து வாடும் வறிய குடும்பங்களுக்கு 3,000 ரூபாய் வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதற்காக 3 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் நவம்பர், 1990 வரை 22,467 குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக மேலும் கோரிக்கைகள் வந்த வண்ணம் இருப்பதால் இந்த ஆண்டு கூடுதலாக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு நடப்பாண்டில் 5 கோடி ரூபாயிலே இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி).

நேற்று மாலையில் இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இன்சூரன்ஸ் திட்டம் பற்றிச் சொன்னார்கள். அதை ஏன் நிறுத்தி விட்டீர்கள் என்று கொஞ்சம் கோபமாகக் கூட நேற்றைக்குக் கேட்டார்கள். நண்பர் திரு. எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப் பட்ட திட்டம் நிறுத்தப்பட்டு விட்டதே என்று சொன்னார்கள். ஆனால் அந்தத் திட்டம் நல்ல நோக்கத்தோடுதான் ஆரம்பிக்கப் பட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால் அது ஒழுங்காகச் செயல்படவில்லை. அதை எம்.ஜி.ஆர். ஆரம்பித்தார் என்பதற்காக நான் சொல்லுவதாகக் கருதிக்கொள்ளக்கூடாது.

அதைப் போலவே கழக ஆட்சி இருந்தபோது ஒரு திட்டம், உங்களுக்கு ஞாபகம் இருக்கும், தென்னை மரப் படம் எல்லாம் போட்டு கீழே தண்ணீர் ஊற்றினால் மேலே தேங்காய் விழும். அதைப்போல் நீங்கள் 10 ரூபாய் கட்டினால் உங்களுக்கு இவ்வளவு ரூபாய் கிடைக்கும் என்றெல்லாம் திட்டம் போட்டோம். அதிலே யாரும் சரியாகச் சேரவும் இல்லை; சேர்ந்தவர்கள்

ஒழுங்காக, மாதாமாதமோ அல்லது 6 மாதத்திற்கு ஒரு தடவையோ பணம் கட்டவும் இல்லை. அது தோல்வியடைந்துவிட்டது. அப்போது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் அந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள், கலைவாணர் அரங்கத்தில். அந்தத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது. அந்தத் திட்டத்தினுடைய தோல்வியை முன்பிருந்த கழக அரசு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டி இருந்தது. அதைப்போலத்தான் இந்தத் திட்டம் 1984ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவர் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் கட்டவேண்டும். அப்படிக் கட்டுகிற தொகை ஒரு வருஷத்திற்கு 120 ரூபாய். ஆனால் அந்த 120 ரூபாயில் 45 ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குப் போய் சேர்ந்துவிடும். மீதம் உள்ள 75 ரூபாய் தனியாக வைப்பு நிதியில் வைக்கப்படும். அப்படி வைக்கப்பட்ட தொகைதான் உறுப்பினர்களுக்குத் திருப்பியளிக்கப்படும். இடையில் அவர்கள் இறந்துவிட்டால் 5,000 ரூபாய் அளவுக்கு அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைக்கும். இதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டது மாத்திரமல்ல; 31-3-89 வரையில் 14 இலட்சம் பேர் சேர்ந்து இருந்தார்கள். 14 இலட்சம் பேர் சேர்ந்திருந்தார்களே தவிர, அதிலே முறையாக மாதந்தோறும் சந்தா செலுத்தியவர்கள் சுமார் 4 இலட்சம் பேர்தான். 10 இலட்சம் பேர் பணம் செலுத்தவில்லை. 4 இலட்சம் பேர்தான் செலுத்தினார்கள். இந்தத் திட்டத்திலே சேர்ந்தவர்கள் இதிலே ஆர்வம் காட்டாத ஒரு சூழ்நிலையில் இத் திட்டத்தைத் தொடர வேண்டாம் என்று இந்த அரசு கருதி, இதற்கு மாற்றாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தத் திட்டத்தை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். அந்தத் திட்டத்தின்படி இந்த 10 ரூபாய் பணம் கட்டாமலே, விபத்திலே ஒருவர் இறந்து விட்டால் ஒரு தொழிலாளி இறந்து விட்டால் - இதுவும் தொழிலாளர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம்தான். எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம்தான். அது பலன் அளிக்காத காரணத்தால் அதை மாற்றி அதே தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிதி வழங்க, விபத்தில் அவர்கள் மாண்டு விடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி வழங்க 10,000 ரூபாய்த் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. அவர்கள் எந்த 10 ரூபாயும் கட்ட வேண்டிய அவசியம் இல்லை. எந்தெந்தத் தொழிலாளர்கள் என்றால் சலவைத் தொழிலாளர்கள், காலணி தயாரிக்கும் தொழிலாளர்கள், தச்சுத்

தொழிலாளர்கள், வண்டி கட்டுவோர், விலங்குகள் இழுக்கும் வண்டி ஓட்டுவோர், இரும்பு உலைக்கள வேலை செய்வோர், பொன், வெள்ளி வேலை செய்வோர், கூடை முடைவோர், கல் வெட்டுவோர், கல் செதுக்குவோர், பூச்சு வேலை செய்வோர், ஓட்டுவேலை செய்வோர், செங்கல் தொழிலாளி, கிணறு தோண்டுவோர், விவசாயத் தொழிலாளர்கள், சிறு, குறு விவசாயிகள், 2.5 ஏக்கருக்குக் குறைவான நிலம் உள்ளவர்கள், பதனீர் இறக்குவோர், வடிகால் தொழிலாளர்கள், பூச்சிமருந்து தெளிப்பவர்கள், பனை, தென்னை மரம் ஏறுபவர்கள், மீனவர்கள்– கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர் அல்லாத மீனவர்கள் – கட்டிட, கட்டுமானத் தொழிலாளர்கள், டிரக் ஓட்டுநர்கள், ஆட்டோ, ரிக்ஷா ஓட்டுநர்கள், தனியார் கார், டாக்சி, பேருந்து ஓட்டுநர்கள், முடி திருத்துபவர்கள், கைவண்டி இழுப்போர், மிதிவண்டி ஓட்டுநர், தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள், மட்பாண்டம் மற்றும் மண் பொம்மை செய்யும் குயவர், குலாளர், மற்றும் வேளாளர், வீடுகளில் பணிபுரிவோர் பாம்பு பிடிக்கும் தொழிலில் ஈடுபடுவோர் ஆகிய இவர்களுக்கெல்லாம் இத்திட்டத்தின்படி அவர்கள் விபத்தில் இறந்துவிட்டால் அவர்களுக்கு 10,000 ரூபாய் அளிக்கும் திட்டத்தின்படி இந்த இரண்டாண்டுக் காலத்தில் ஏறத்தாழ ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப் பட்டிருக்கிறது. இவைகளை அன்னியில் நான் முதலில் குறிப்பிட்டது போல, குடும்பத் தலைவரை இழந்துவிட்டால், அந்தக் குடும்பங்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற வகையில் நான், உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்த 2 ஆண்டுக் காலத்தில் 22,467 குடும்பங்களுக்கு இந்த 3 ஆயிரம் வீதம் தரப் பட்டிருக்கிறது. எனவேதான் திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியது போல அந்தத் திட்டத்தை நாம் நிறுத்தினாலும் கூட, இந்தத் திட்டத்தை நாம் வைத்திருக்கிறோம். இதிலே அவர்களுக்குப் பணம் திருப்பித் தரப்பட்டதா என்று கேட்டார்கள். அவர்கள் இதிலே கட்டிய பணம் – சுமார் 14 லட்சம் பேர் என்று குறிப்பிட்டேன். அந்த 14 லட்சம் பேர், இறுதியாக வந்த விவரத்தின் படி மொத்தக் கணக்குகள் 13,66,663. சுமாராக 13.6 லட்சம் கணக்குகள், அதிலே முடிக்கப்பட்ட கணக்குகள் 9,57,663. பணம் வழங்கப்பட்டது. அதாவது 9.58 லட்சம் பேர் இந்தக் கணக்கு களுக்குப் பணம் திரும்ப வழங்கப்பட்டு விட்டது. திருப்பி வழங்கப்பட்ட தொகை 8.58 கோடி ரூபாய் என்பதையும் நான்

தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி ஒரு ஆக்கப்பூர்வமான கேள்வியை எழுப்பி இந்தப் பதிலைப் பெறுவதற்கு எனக்கு உதவி செய்ததற்காக நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மேலும் நம்முடைய வரவு-செலவுத் திட்ட உரை இங்கே வைக்கப்பட்ட பிறகு அதிலே சொல்லப்படுகின்ற நம்முடைய மக்களுக்குத் தேவையான பல திட்டங்கள், உறுப்பினர்கள் எடுத்து வைக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே என்னுடைய எண்ணங்களைச் சொல்ல வேண்டிய வாய்ப்பு விரைவிலே பிப்ரவரி 2-ம் தேதிக்குப் பிறகு ஏற்படும் என்ற காரணத்தால் இந்தப் பிரச்சினைகளை இந்த அளவோடு நான் நிறுத்திக் கொண்டு, "அக்னிப் பிரவேச" பிரச்சினைகளுக்கு நான் வருகிறேன்.

திரு. கோ. வீரையன் : பிப்ரவரி என்பதால் முன்னதாகச் சொல்கிறேன். அந்த வறட்சி பற்றிச் சொல்லும்போது புதுக்கோட்டை மாவட்டம் அதிலே விடுபட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. இதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதைச் சேர்த்து சீர் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : விடுபட்டிருந்தால், அது இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் இங்கே பேசும்போது சொன்னார்கள். அவர் பேசிய அதே வாக்கியங்களை அவைக் குறிப்பிலிருந்து நான் எடுத்து முதலில் படிக்கிறேன்.

"முதலமைச்சரைப் பார்த்து, இந்த தேசத்திலே பாராளு மன்றத்திலே இருக்கின்ற பிரதமர் அவர்கள், 'இந்த நாட்டினுடைய இரகசியங்கள் வெளியே போய்விட்டன' என்று சொன்னால் அதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்த அவமானமாக நாங்கள் நினைக்கவில்லை. இந்த நாட்டிலே உள்ள 4½ கோடி தமிழ்மக்களுக்கு விடப்பட்ட சவாலாகத்தான் நினைக்கிறோம். ஒரு நாட்டிலே முதலமைச்சர் என்ற முறையில், பிரதமர் அவர்கள் இரகசியங்களைச் சொல்கிறார்கள். அந்த இரகசியங்களை

வெளியே சொல்லிவிட்டதாக பிரதமரே பாராளுமன்றத்திலே குற்றம் சாட்டுகிறார்".

இதுதான் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே ஆற்றிய உரை. இதற்குத்தான் "அக்னிப்பிரவேசம்" செய்வதற்குத் தயாரா? என்று அவர்கள் கேட்டார்கள்.

பிரதமருடைய பேச்சு பாராளுமன்றத்திலே அமைந்த நாள் 10-1-1991. அன்றைக்கு அவர்கள் பேசும்போது இரண்டு மூன்று கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே முதல் கருத்துக்கு வருகிறேன். "If I say something to the Chief Minister of a state, is it proper that this Chief Minister should make a public statement that he was coerced or forced to take such an action because of the insistance of the Prime Minister of this country" இது அவருடைய பேச்சிலே, ஒரு பகுதி. அதாவது இங்கே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு, நான் பிரதமரால் நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்று நான் சொன்னதைப் போல, பிரதமர் அவர்கள் பாராளுமன்றத்திலே சொல்லி இருக்கிறார்கள். இது பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுக்கப்பட்ட, எழுத்துக்கு எழுத்து தவறாத அந்த பிரதியாகும். "If I say something to the Chief Minister of a State, is it proper that this Chief Minister should make a public statement that he was coerced or forced to take such an action because of the insistance of the Prime Minister of this country."

நான் எந்த இடத்திலும், இலங்கைப் போராளிகளின் மீது மாநில அரசின் சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு பிரதமரால் நிர்ப்பந்திக்கப்பட்டேன் என்றோ, வற்புறுத்தப்பட்டேன் என்றோ என்றைக்கும் பேசியதும் இல்லை. எந்த நிருபர்கள் பேட்டியிலும் அப்படி நான் சொன்னதும் இல்லை. நான் சொன்னதெல்லாம் 15-12-1990-ல் கூட நிருபர்கள் என்னைச் சந்தித்துப் பேசியபோது, அவர்களிடத்திலே சொன்ன வாசகம். முரசொலியில் வந்ததை அப்படியே சொல்கிறேன். சந்திப்பு 15 ஆம் தேதி, முரசொலியில் வந்தது 16 ஆம் தேதி. சமீபத்தில் இலங்கைப் போராளிகளைப் பொறுத்தவரையில், மத்திய மாநில அரசுகள் கலந்து பேசித்தான் அந்த அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படித்தான் சொல்லியிருக்கிறேன். மத்திய, மாநில அரசுகள் கலந்து பேசி, நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றுதான் சொல்லியிருக்கிறேனே அல்லாமல், நான் நிர்ப்பந்தப்

படுத்தப்பட்டேன், பிரதமரால் என்று நான் என்றைக்கும் சொன்னது இல்லை. இதே செய்தி 16ஆம் தேதி 'இந்து' பேப்பரில் கூட வெளிவந்திருக்கின்றது.

"Mr. M. Karunanidhi pointed out that the Prime Minister had not cited any instance where the State had failed to carry out the directives of the Chandra Shekhar Government. Even the current crackdown on Srilankan Tamil militants in the State had been the outcome of the discussions the State had with the Union Government." என்று 'இந்து'-விலும் வந்திருக்கிறது. பிரதமர் நிர்ப்பந்தப்படுத்தி இந்தக் காரியத்தைச் செய்தேன் என்று நான் எங்கேயும் சொல்ல வில்லை. ஆனால் வேறு சில கட்சிக்காரர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்; நேற்று திரு. திருநாவுக்கரசு சொன்னார் அல்லவா? மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்காக மாநில அரசு இப்படி எல்லாம் செய்கிறது என்று. அதுமாதிரி வேறுசில கட்சிக்காரர்கள் பத்திரிகைகளில் அப்படி அறிவித்திருக்கிறார்கள். இலங்கைப் போராளிகளை நீங்கள் தனி முகாம்களிலே வைத்தது தவறு, அவர்களைக் கைது செய்தது தவறு. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது தவறு. இவை எல்லாம் நீங்கள் மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்காகச் செய்கிறீர்கள். . . .

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் அவர்கள், ஏதாவது ஒரு இரகசியத்தைச் சொல்லி, அதை முதலமைச்சர் அவர்கள் வெளியே சொன்னால்தான் தவறே தவிர, முதலமைச்சர் அவர்கள் ஒரு செயலில் ஈடுபடுகிறபோது அதற்கான விளக்கம் மக்களுக்குத்தான் சொல்லியாக வேண்டும். அப்போது முதலமைச்சர் சொன்னால்கூட அதில் தவறு இல்லை. "டைகர்ஸ் அரஸ்ட்" பண்ணப்பட்டபோது அது மறைக்கக்கூடிய செயல் அல்ல. அது வெளியே மக்களுக்குத் தெரிகிறது. முதலமைச்சர் சொன்னது ஒன்று. . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரகசியத்தைப் பற்றி பிறகு கூறுகிறேன். நான் சொல்ல விரும்புவது பிரதமர் என்னை நிர்ப்பந்தித்தார், ஆகவேதான் இதைச் செய்கிறேன் என்று நான் சொன்னதாகப் பிரதமர் பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறாரே, அது அவருக்குத் தரப்பட்ட தவறான தகவல். அவர் பத்திரிகைகளிலே பார்த்திருக்கலாம். அல்லது பத்திரிகைகளைக் கொண்டு போய்க்

காட்டியிருக்கலாம். இங்கே பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் நண்பர் ராமதாஸ் அவர்கள் கூட அதையேதான் சொன்னார். மத்திய அரசின் நிர்ப்பந்தத்திற்குக் கருணாநிதி பணிந்து இலங்கைப் போராளிகள்மீது நடவடிக்கை எடுக்கிறார் என்று சொன்னார். திரு. திருநாவுக்கரசு கூட அப்படி ஒரு அறிக்கை வெளியிட்டதாக எனக்கு நினைவு. இவைகளை யாரோ எடுத்துக் கொண்டுபோய் பிரதமரிடத்தில் காட்டி நான் சொன்னதாக அவரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அவர் என்னை நிர்ப்பந்தப் படுத்தவில்லை, நான் பிரதமரைச் சந்திக்கப் போனேன். என்னோடு முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த திரு மாறன் வந்தார். தலைமைச் செயலாளர் வந்திருந்தார். அதிகாரிகளுடன் உட்கார்ந்து பேசினோம். என்ன பேசினோம் என்பதை அடுத்த பகுதியைப் பற்றிப் பேசும்போது சொல்கிறேன்.

இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் பிரதமரும், நானும் பேசியபோது எத்தகைய நடவடிக்கைகள் – இலங்கைப் போராளிகள் இங்கே வன்முறைகளில் ஈடுபடாமல் இருக்க, தேவையில்லாத பிரச்சாரங்களைத் தவிர்க்க, அங்கே பார்த்தோம், இங்கே பார்த்தோம் என்று எல்லாம் சொல்லப்படுகிற பிரச்சாரங்களைத் தவிர்க்க, எந்தப் போராளிகளாக இருந்தாலும் எல்.டி.டி.இ. ஆக இருந்தாலும் இ.பி.ஆர்.எல்.எப். ஆக இருந்தாலும் – பொதுவாக, கிராமங்களில் சென்று கொஞ்சம் இலங்கைத் தமிழில் பேசினாலே அவர்கள் எல்.டி.டி.இ என்று சொல்லிவிடுகிறார்கள். அவர்கள் இ.பி.ஆர்.எல்.எப். ஆகக் கூட இருக்கலாம், அவர்கள் டெலோ ஆகக் கூட இருக்கலாம். அவர்கள் பிளாட் இயக்கத்தைச் சார்ந்தவர்களாகக் கூட இருக்கலாம். ஈராஸ் ஆகக் கூடக் இருக்கலாம். யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பெயர் விடுதலைப் புலிகள்தான்.

நீங்கள் தினத்தந்தி பத்திரிகையைப் பார்த்தால் யாராக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக “விடுதலைப் புலிகள்” என்றுதான் வரும். அப்படித்தான் அவர்கள் போடுவார்கள். வேண்டுமென்றே போடுவது அல்ல. அப்படிச் சொன்னால்தான் மற்றவர்களுக்குப் புரியும் என்று “விடுதலைப் புலிகள்” என்றுதான் போடுவார்கள். எந்தப் போராளி இயக்கமாக இருந்தாலும் விடுதலைப் புலிகள் என்றுதான் போடுவார்கள். அதுபோல கிராமங்களில் லுங்கி கட்டிக் கொண்டு இலங்கைத் தமிழைப் பேசி விட்டால் அவர்கள்

விடுதலைப் புலிகள் ஆகி விடுவார்கள். இந்தப் பிரச்சாரத்தைத் தவிர்க்கத்தான் அவர்களை எல்லாம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டுமென்று விரும்பினோம். இதைச் சொல்கிற காரணத்தினால் வன்முறைகளை அவர்கள் செய்யவில்லையென்று நான் சொல்ல மாட்டேன். சில வன்முறைகளிலும் அவர்கள் ஈடுபட்டது உண்டு. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய காவல் துறையைக் கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சவாலுக்கு இழுத்தது உண்டு. சில இடங்களில் அவர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டி, கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டபோது - இங்கே சொன்னார் திரு. திருநாவுக்கரசு, கைது செய்வதாக இருந்தால் ஸ்பெசிபிக் குற்றத்திற்காக கைது செய்தால் போதாதா என்று. அப்படிக் கைது செய்யப்போனபோது, அவர்கள் சயனைடு குப்பிகளை வைத்துக்கொண்டு, உள்ளே வந்தால் அதைத் தின்று இங்கேயே மாண்டுவிடுவோம் என்று சொன்னார்கள். அதனால் காவல் துறையினர் எப்படியும் அவர்களை நெருங்க முடியாமல் தவித்தார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டதுண்டு. எனவேதான் எந்தப் போராளிகள் என்பதல்ல. எந்தப் போராளிகளாக இருந்தாலும் அவர்கள் வெளியிலே நடமாடுகின்ற காரணத்தால் இப்படிப் பிரச்சாரம் ஏற்படுகிறது. அவர்கள் இலங்கையில் நடத்துகின்ற அந்தப் போராட்டத்தை நாம் ஆதரிப்பது என்பது வேறு. ஒரு நல்ல தீர்வு அங்கே காணப்பட வேண்டும். அங்கேயுள்ள இலங்கைத் தமிழர்களுக்கெல்லாம் தமிழ் ஈழத்து மக்களுக்கெல்லாம் நல்ல நிம்மதியான வாழ்வு, நிலையான வாழ்வு ஏற்பட வேண்டும்; அதற்கு நம்மால் என்ன உதவி செய்ய முடியுமோ மத்திய அரசு மூலமாக என்ன உதவிகளைச் செய்யச் சொல்ல முடியுமோ அவற்றைச் செய்ய நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம். ஆனால், தமிழகத்தை வன்முறைக்களமாக ஆக்கக்கூடாது. இன்னும் ஒன்று, இலங்கையிலே புதிதாக ஒரு அரசைத் தமிழர்களுக்காக ஏற்படுத்துவதற்காக முனையும்போது, இங்கே இருக்கிற அரசை இழந்து விட்டால், நான் முதலமைச்சராக இருக்கவோ, பேராசிரியர் அமைச்சராக இருக்கவோ, சாதிக்கோ, நாஞ்சிலாரோ, மற்றவர்களோ அமைச்சர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக அல்ல, அது எங்கே போய்ச் சேரும் என்பதை எண்ணிப் பார்த்தால், 5 கோடி மக்களை அப்படிப்பட்ட தலைவர்களிடத்திலே கொண்டு போய் ஒப்படைக்க எங்களுக்கு

மனமில்லை என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. யாரிடத்தில் கொண்டுபோய் ஒப்படைக்கப் போகிறோம் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அப்படி ஒப்படைத்தால் என்னவாகும்? பெரியார் செத்துவிடுவார், பெரியாரின் கொள்கைகள் செத்துவிடும். அண்ணா ஆயிரம் அடி குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடுவார். அம்பேத்கார் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுவார். சுயமரியாதைக் கொள்கைகள், தன்மானக் கொள்கைகள், சமூக நீதிக் கொள்கைகள் இவைகள் எல்லாம் ஒரு காலத்திலே தமிழ்நாட்டிலே உலவின என்று அகராதியில், வருங்காலச் சரித்திரத்தில் படித்துப் பார்க்கக் கூடிய இடத்திலேதான் வருமேயல்லாமல், அவைகளுக் கெல்லாம் பிற்காலத்திலே நிச்சயமாக வாழ்வு இல்லாமல் போய்விடும். அவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான், எல்.டி.டி.ஈ. யினர் இந்த அரசையோ, அவர்களை ஆதரிக்கும் எதிர்க் கட்சியினரையோ தர்மசங்கடத்தில் ஆழ்த்தக் கூடாது என்று நேற்றுக்கூடச் சொன்னேன். அதை மறந்துவிடக்கூடாது. அந்தப் போராளிகளுக்குள்ளே என்ன நடக்கிறது? திருச்சியிலே கொட்டாம்பட்டி என்ற ஒரு இடத்திலே அந்தப் போராளிகளுக் குள்ளேயே எல்.டி.டி.ஈ இல்லை அங்கே - அங்கே இருக்கிற போராளிகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டும், வெட்டிக்கொண்டும், குத்திக் கொண்டும் செத்துப் போனார்கள். பிறகு அவர்களைப் பிரித்து வேறு இடத்திற்கு அனுப்பினோம். இன்றுகூடப் பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். இராமேஸ்வரத்திலே ஒரு கத்திக் குத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளது. டெலோ இயக்கத்திற்குள்ளே. இப்படி ஒரு சகோதர யுத்தத்தை அவர்களே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அகதிகள் முகாமிலே இருக்கிறவர்களால் கூட சுமுகமாக இருக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் தமிழ் நாட்டிலே வன்முறையை ஏற்படுத்தக் காரணமாக இருக்கிறது. வேலூரிலே கொண்டு போய் நல்ல பராமரிப்போடு - கேரம்போர்டு வேண்டுமென்று கேட்டால் கேரம்போர்டு; டி.வி. பார்க்க வேண்டுமென்று கேட்டால் டி.வி.; ரேடியோ கேட்க வேண்டு மென்று கேட்டால் ரேடியோ; இன்னும் சொல்கிறேன் இந்த அவையிலே - சீட்டு ஆட வேண்டுமென்று கேட்டால் சீட்டுக் கட்டு; அவர்களுக்கு நல்ல உணவு - இவ்வளவும் தரப்பட்டது. எல்.டி.டி.ஈ.யினருக்கு மாத்திரமல்ல. புழலிலே இருக்கிற ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆக இருந்தாலும் சரி, புதுக்கோட்டையிலே

இருக்கிற டெலோ இயக்கமாக இருந்தாலும் சரி, அத்தனை இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நல்ல பராமரிப்போடு, அவர்களைச் சிறைக் காவலர்கள் கண்காணிக்காமல், போலீசார், காவல் துறை நண்பர்கள் கவனிக்கவும், சிறை அதிகாரிகள் சென்று அவர்கள் பராமரிப்புகளைக் கவனிக்காமல், தாசில்தார் அளவிலே ஒரு அட்மினிஸ்டிரேட்டர் என்கின்ற ஒரு புதிய பதவி உருவாக்கப்பட்டு அவர்களை கவனிக்கின்ற அளவிலேயும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும்கூட, வேலூரில் இரண்டு பகுதிகளைப் பிரிக்க இடையிலே அமைக்கப்பட்ட சுவர் இடிக்கப் பட்டு, அந்தச் சுவற்றிலுள்ள கற்கள் எல்லாம் எடுத்து வீசப்பட்டு, காவல் துறையினர் காயப்படுத்தப்பட்டு, உள்ளே பரிமாறுவதற்குச் சென்ற ஒரு போலீஸ் அதிகாரி பிடிக்கப்பட்டு, அவரை மீட்க உள்ளே சென்றபோது அவர்மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்துகின்ற முயற்சி நடைபெற்று, அங்கே பெண்களும் இருக்க வேண்டுமென்று விரும்பி, குடும்பத்தோடு சென்ற அந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பிற்காக இருந்த பெண் போலீசாரை பர, பரவென்று உள்ளே பிடித்து இழுத்துச் சென்று, அவர்களை மீட்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்திலே போய் முடிந்து ஒருவர் கொல்லப்படக்கூடிய சூழலும் ஏற்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், இதே வன்முறைக் களமாக தமிழகம் ஆகக்கூடாது என்பதுதானே தவிர வேறு ஒன்றுமில்லை.

அவர்களுடைய உரிமைப் போராட்டத்திற்குத் தலைமை வகிக்கிறவர்கள்தான் இவைகளை எல்லாம் செய்யச் சொன்னார்கள் என்று சொல்லமாட்டேன். எந்த ஒரு இயக்கத்திலும் இருக்கிற தொண்டர்கள், கடைசி நிலையிலே உள்ளவர்கள், தலைவர்களைச் சந்திப்பதற்குக்கூட வாய்ப்பு அற்றுப்போனவர்கள், அவர்களாகவே சில காரியங்களைச் செய்துவிடுவார்கள். அதற்காக அவர்களுடைய உரிமைப் போராட்டத்தைக் களங்கப் படுத்த விரும்பவில்லை. அதைப் பற்றி இந்திய அரசு மேலும் அக்கறை எடுத்துக்கொண்டு, பேச்சு வார்த்தைகள் மூலமாக ஒரு சுமூகமான நிலைமையை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் இங்கே வீற்றிருக்கக்கூடிய அனைவருடைய கோரிக்கை என்பதை நாம் மறந்துவிடவில்லை. இன்னமும்கூட இந்த அரசு அதைத்தான் இந்திய அரசுக்கு வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறது என்பதை

நான் மறந்துவிடவில்லை. எனவே, பிரதமர் என்னை வற்புறுத்தி அதனால் செயல்பட்டேன் என்று நான் எங்கும் சொல்லவில்லை. பிரதமரோடு அமர்ந்து பேசி, மத்திய-மாநில அரசுகள் சேர்ந்து, இணைந்து எடுத்த முடிவுதான் இப்போது நடைமுறைப்படுத்தப் படுகிறது என்றுதான் சொன்னேன்.

அடுத்து நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுக்கு வர வேண்டுமேயானால், பிரதமர் என்ன பேசி இருக்கிறார் என்றால், அதே நாளில் அதே பேச்சின் தொடர்பாக "I have information that certain information that were just given to the Chief Minister have gone to the LTTE Headquarters not only in Tamil Nadu but even in Jaffna." இது பிரதமருடைய பேச்சு. அப்படியே அந்தப் பிரதியைப் படித்து இருக்கிறேன். இங்கே 'இரகசியம்' என்று எங்கே குறிப்பிடுகிறார்? இன்பர்மேஷனுக்கும், சீக்ரெட்டுக்கும் உள்ள வித்தியாசம் எவ்வளவு தொலைவானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர் குறிப்பிட்டது, 'I have information எனக்குத் தகவல் வந்தது "I have information that certain information that were just given to the Chief Minister have gone to the LTTE Headquarters not only in Tamil Nadu but even in Jaffna." இதையும் சொல்லிவிட்டு, அவர் சொல்கிறார், Inspite of this, I have repeatedly stated that nothing will be done against the Government. அதையும் பிரதமர் அங்கே சொல்லி இருக்கிறார். அப்படி ஒரு இன்ஃபர்மேஷன் ஜஃப்னாவுக்குச் சென்றது தேச விரோதம் என்று பிரதமர் எண்ணி இருப்பாரேயானால், இந்த சர்க்காரைக் கலைக்க மாட்டேன் என்று சொல்லி இருப்பாரா? 'தேசத் துரோகம்' என்று அவரே கருதவில்லை. முதலமைச்சருக்குச் சொல்லப்பட்ட ஒரு தகவல், 'இன்ஃபர்மேஷன்'. 'தகவல்' என்பதுதான் சரியான தமிழ் என்று நான் கருதுகிறேன். 'இன்ஃபர்மேஷன்' என்றால் 'இரகசியம்' என்று இருக்க முடியாது. 'சீக்ரெட்' என்று இருந்தால் தான் 'இரகசியம்' என்ற அந்தப் பொருள் வரமுடியும். எனவே 'இன்ஃபர்மேஷன்'தான். அவருக்குக் கிடைத்ததும் 'இன்ஃபர்மேஷன்'; அவர் எனக்குச் சொன்னது இன்ஃபர்மேஷன்' அந்த 'இன்ஃபர்மேஷன்' யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களுடைய தலைமையகத்திற்கு சென்று விட்டது என்று குறிப்பிடுகிறார். அப்படிப்பட்ட ஒரு 'இன்ஃபர்மேஷன்' நான் யாருக்கும் சொல்லவில்லை. யாருக்கும் தெரிவிக்கவில்லை. ஆனால் நானும் அவரும் பேசிக்கொண்டு சில காரியங்களை

எப்படி நடைமுறைப் படுத்த வேண்டும் என்று முடிவு எடுத்தோமோ, அவைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய நேரத்தில், அந்தத் தகவல்கள் வெளிப்பட்டத்தான் தீரவேண்டும். இவைகளைச் செய்ய வேண்டும் என்று பிரதமரோ அல்லது மத்திய அரசோ எங்களைக் கட்டாயப் படுத்தவில்லை என்று நான் மீண்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த நம்பிக்கை வைத்து இருப்பவன். 'எமர்ஜென்ஸி' நேரத்திலே கூட, கட்சியின் சார்பாக எமெர்ஜென்ஸியைத் தீவிரமாக எதிர்த்து அன்றைக்குத் தீர்மானம் நிறைவேற்றி, மாநாடுகள் நடத்தி, போராட்டங்கள் நடத்தி, கிளர்ச்சிகள் நடத்தி எமர்ஜென்ஸியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் 'சுவாசிக்கின்ற இடம்' இதுதான், என்று ஈ.எம்.எஸ். போன்றவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் நடந்துகொண்ட அந்தக் காலகட்டத்திலே கூட Administrative side – நிர்வாக நிலையில் மத்திய அரசோடு மாநில அரசு அன்றைக்கே கூட ஒத்துழைத்து இருக்கிறது. அந்தச் சூழ்நிலையில் நானும், பிரதமரும் பேசிய பிறகு முதலாவது நடைபெற்றது ஒரு ஆலோசனைக் கூட்டம் என்றால், அடுத்தது அந்த ஆலோசனை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டம். அதற்கு அடுத்து அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது. உதாரணமாக ஒரு தீவிரவாதி – 'மிலிடன்ட்' – இலங்கைப் போராளியை ஒரு தனி முகாமிற்கு அழைத்துச்சென்று வைக்க வேண்டுமென்றால், அவரை அழைக்கச் செல்லும்போது அவர் வர மறுத்தால் – ரமணி இங்கே சுட்டிக்காட்டியதைப் போல அவர் வர மறுத்தால் – 'வந்து தீரவேண்டும் : இல்லாவிட்டால் நீங்கள் உங்கள் நாட்டுக்கு அனுப்பப்படுவீர்கள்' என்று சொல்ல வேண்டும் என்று நான் காவல் துறைக்குச் சொல்லி இருக்கிறேன். காவல் துறை அதைச் சொன்னால்தான் அவர்கள் அந்த முகாமிற்கு வருவார்கள் என்றால், காவல் துறை அதைச் சொல்லித்தான் தீர வேண்டும். அப்படிச் சொன்னது – ஏற்கனவே அவர்கள் பல வயர்லெஸ்களை வைத்து, 1983ஆம் ஆண்டிலே இருந்து பல வயர்லெஸ்களை வைத்து அவர்களுடைய தலைமைக்குப் பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள் தமிழ்நாட்டிலே இருந்து; இப்போது இந்த ஆட்சியிலே கூட கடந்த இரண்டு மாதத்துக்கு முன்பு 2 அல்லது 3 வயர்லெஸ் கருவிகள் இந்த அரசால் பிடிக்கப்பட்டு இருக்கின்றன – அந்த வயர்லெஸ் மூலம் அவர்கள் கேட்டு

இருக்கலாம். 'எப்படி நீ சிக்கினாய்? சிக்கலாமா?' என்று 'என்ன செய்வது, சிக்காவிட்டால் எங்களை இலங்கைக்கே அனுப்பி விடுவதாகச் சொன்னார்கள்' என்று சொல்லி இருக்கலாம். இது தான் 'தகவலே' தவிர இதைத் தவிர இந்தியாவின் வேறு இரகசியம் எதுவும் எனக்குச் சொல்லப்படவும் இல்லை; நான் வேறு எந்த இரகசியத்தையும் வெளியிடவுமில்லை என்பதைத்தான் என்னுடைய 'அக்னிப் பிரவேசமாக' இங்கே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.) இதை வைத்துக்கொண்டு இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும், தேசத் துரோக ஆட்சி என்று எல்லாம் இங்கே பேசப்பட்டது. ஜனநாயக நாட்டில், அவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப் போல, அப்படிப்பட்ட இரகசியங்கள் எதற்கும் இடம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

மத்திய அரசினுடைய இரகசியங்களே கூட, ஆட்சி கலைக்கப்படப் போகிறது என்ற இரகசியம் கூட, 1976ஆம் ஆண்டு அன்று காலையிலேயே எனக்குத் தெரிந்துவிட்டது. மாலையில் நான் விழாவிற்குப் போனபோது, விழா முடிந்து வரும்போது என்னுடைய காரிலேயே ஏறிக்கொண்டுவந்தேன். அப்போது அங்கிருந்தவர்கள் ஏனென்று கேட்டபோது, இன்னும் ஐந்து நிமிடத்தில் என்னுடைய கார் போகும். அது இப்போதே போகட்டும் என்று சொன்னேன். அதற்காக மத்திய அரசின் இரகசியத்தைச் சொல்லிவிட்டேன் என்று சொல்ல முடியாது. இவைகள் இரகசியங்கள் அல்ல. சில தகவல்கள்தான். நான் வேண்டுமென்றே பிரதமர் சொன்ன ஒரு இரகசியத்தை இந்தியாவிற்கு விரோதமாக அனுப்பவேண்டும் என்று எண்ணுகிற தேசத் துரோகியல்ல. நான் தேசத் துரோகி என்று இகழப்பட்டாலும் தேசத்திற்காகப் பாடுபட்ட பெரியாருடைய பரம்பரையில் வந்தவன். (மேசையைத் தட்டும் ஒலி). தேசத் துரோகி என்று அண்ணாவே அழைக்கப்பட்டார். ஆனால் அதே அண்ணாதான் இந்தியாவினுடைய விடுதலையை விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று பெரியாரை எதிர்த்துக்கொண்டு அன்றைக்குப் போராடி, பத்திரிகையில் எழுதி, அதைக் கடைப்பிடித்த அந்த அண்ணா அவர்களுடைய தம்பியாக இருப்பவர்கள் நாங்கள். நாங்கள் ஒருக்காலும் தேசத் துரோகத்திற்காக உடன்பட மாட்டோம்.

நண்பர் குமரி அனந்தன் அவர்களே சொன்னார்கள். எங்களைச் சொல்லுவது இருக்கட்டும். பேராசிரியரையோ,

என்னையோ, மற்றவர்களையோ தேசத் துரோகி என்று சொல்லுவது இருக்கட்டும். அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் வீரவாஞ்சி - வாஞ்சிநாதனுக்கு ஒரு நினைவாக, அவருடைய தியாகத்தின் நினைவாக அவருடைய மனைவிக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று கருதி மாதா மாதம் 200 ரூபாய் அந்த அம்மையாருக்கு அனுப்பி வைத்தார். அந்த பணம் போய்ச் சேருவதற்குள் அந்த அம்மையார் இறந்துவிட்டார். அப்போது குமரி அனந்தன் அவர்களே பல கூட்டங்களில் பேசினார்கள். "தேசத் துரோகி கையால் அந்தப் பணத்தை வாங்கக் கூடாது என்று அந்த அம்மையார் இறந்து விட்டார்" என்று சொன்னார்கள். அண்ணாவுக்கே அந்தக் கதி என்றால் எங்களைப் பற்றிச் சொன்னால் என்ன? கவலையில்லை. தேசத் துரோகிகளுடைய இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்குமேயானால் திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு பிரிவினையை விட்டிருக்காது. 1962ஆம் ஆண்டு பிரிவினைக் கொள்கையை விட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். தேசத்திற்காக சிறைச்சாலையில் நாங்கள் வாடியபோது, அடிப்பட்ட போது - அண்ணா அவர்கள் வேலூர் சிறைச்சாலையிலும், நானும் பேராசிரியர் போன்றவர்களும் திருச்சி சிறைச்சாலையில் இருந்த நேரத்தில்தான் சீன ஆக்கிரமிப்பு நடைபெற்றது. அந்த நேரத்திலே வேலூர் சிறையில் இருந்த அண்ணா அவர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு, "நாங்கள் நேருவினுடைய கரத்தைப் பலப்படுத்த தயார்" என்று அறிவித்தார்கள். இந்த இயக்கத்திற்கும் அப்படிப் பட்ட அறிவுரையைச் செய்தவர் அறிஞர் அண்ணா ஆவார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்குக் குமரி அனந்தன் அந்தக் கடிதத்தைப் படிக்கும்போது, கவர்னருக்கு நேராகப் படிக்கும்போது பல பெயர்களையெல்லாம் சொன்னார்கள். தேசத் தலைவர்கள் எல்லாம் வாழ்ந்த நாடு என்றெல்லாம் சொன்னார்கள். கட்டபொம்மனைச் சொன்னார். மருது பாண்டியரைச் சொன்னார். வ.உ.சி.யைச் சொன்னார். அவர்களையெல்லாம் ஞாபகப்படுத்தியதே நான்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மறந்துவிடக் கூடாது. விடுதலைக்குப் போரிட்ட கட்டபொம்மனுக்கு 20 ஆண்டுக் காலம் ஆட்சி செய்தவர்கள் இடிந்து போன கோட்டையை நிமிர்ந்து பார்த்தார்களா? பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டையைக் கட்டியது நான் அல்லவா? மருது பாண்டியருக்கு திருப்பத்தூரிலே இன்றைக்கு

நினைவகம் எழுப்புவதற்குத் திட்டமிட்டு அந்தப் பணியை ஆரம்பித்து வைத்திருப்பவன் நான் அல்லவா? விடுதலை வீரர்களுக்கு மாத ஊதியம் ரூ. 250 என்று இருந்ததை ரூ. 350 ஆக உயர்த்தி, நானும், பேராசிரியர் அவர்களும் வள்ளுவர் கோட்டத்திலே கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இரண்டு வாரத்திற்கு முன்பு ரூ. 400 ஆக உயர்த்தியிருப்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். இதன் மூலமாகப் பயன்பெறும் தியாகிகள் 6,681 பேர். விடுதலைப் போராட்டம், எல்லைப் போராட்டங்களில் கலந்து கொண்ட தியாகிகள் இறந்துவிடுவார்களேயானால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு உடனடியாக ஈடகக்கடன் செய்வதற்காக ரூபாய் ஆயிரம் தரவேண்டும். தாசில்தார் பதவிக்குக் குறையாத ஒருவர் சென்று மலர் வளையம் வைக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருப்பது இந்தியாவிலே இந்த ஆட்சியில்தான்.

காமராஜருடைய தொண்டர் வைரவன் என்று ஒருவர் இருந்தார். அவரை மறந்து போய் இருப்பார் குமரி அனந்தன். காமராஜர் மறைந்த பிறகு இந்த 13 ஆண்டுக் கால ஆட்சியில் அவர் என்ன ஆனார்? திருமலைப் பிள்ளைத் தெருவில் காமராஜ் வீட்டுக்குப் பின்னால் ஒரு சிறிய வீட்டில் அவர் குடியிருந்து வந்தார். தன்னுடைய குழந்தைகள், மனைவியோடு குடியிருந்தார். அந்த வீட்டிலிருந்து வைரவன் துரத்தப்பட்டார். வீடு, வாசல் இல்லாமல் அவர் தவித்தார். திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு நண்பர் நாத்திகம் இராமசாமி அந்த வைரவனை அழைத்து வந்து அவருடைய பரிதாப நிலைமையைச் சொன்னார். அவருக்கு உடனடியாக வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக ஒரு வீடு கொடுக்கப்பட்டது. அது மாத்திரமல்ல. காமராஜ் நினைவகத்திலே மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் வைரவனுக்கு ஒரு வேலையும் கொடுக்கப்பட்டது. காமராஜருடைய அத்தியந்தத் தொண்டர், சீடர், உயிருக்கு உயிராகக் கூடவே இருந்தவர். அவரையும் மறந்துவிட்டார்கள். விடுதலைப் போராட்ட வீரர் பரலி நெல்லையப்பர், 1970ல் தி.மு.க. ஆட்சியில் அப்போது இருந்த பண மதிப்பில் மாதம் ஒன்றுக்கு மாத ஊதியமாக ரூ. 100 அவருக்குத் தரப்பட்டது. தற்போது அவருடைய மகள் பூங்கோதைக்கு, அவருடைய கோரிக்கையை ஏற்று 16-10-1989 முதல் ரூ. 500 ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. நாங்கள் தேசத் துரோகியாம்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களுடைய பேத்தி சேதுலட்சுமிக்கு இந்த அரசு 9-3-1989 முதல் 31-7-1989 வரையில் மாதம் 250 ரூபாயும், 1-8-1989 முதல் 350 ரூபாயும் ஓய்வூதியமாக வழங்கிக்கொண்டு இருக்கிறது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவரும், அரசின் அனைத்துப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இலவசமாகப் பயணம் செய்ய அவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது இந்த ஆட்சியில்தான்.

வ.ரா. உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? வ.ரா. பற்றி காங்கிரஸ்காரர்களே, ஞாபகம் இருக்கிறதா? அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று அண்ணா அவர்களால் போற்றப்பட்ட வ.ரா. காங்கிரஸ் பேரியக்கத்தின முதுபெரும் தொண்டர் ஆவார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறைச்சாலையில் வாடியவர். அவரை மறந்து விட்டார்கள். அவருடைய மனைவியாரை அழைத்து, மாதம் ரூ. 1000 ஓய்வூதியம் தருகின்ற அரசு இந்த அரசு. (மேசையை தட்டும் ஒலி) கடந்த ஆண்டிலிருந்து தரப்படுகிறது.

சுதந்திர போராட்ட வீரர் தியாகி ஸ்ரீபாதசங்கர். அவருக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக பொது நிவாரண நிதியிலிருந்து அண்மையில்தான் ரூ 5,000 வழங்கப்பட்டது.

காமராஜருடைய தமக்கை நாகம்மாள் அவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 உதவித் தொகை வழங்கப்பட்டது. அவருடைய பேத்திக்கு நானே முன்னின்று தலைமை வைத்து திருமணத்தை நடத்தி வைத்து, திருமணச் செலவையும் ஏற்றுக்கொண்ட அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) பல காங்கிரஸ்காரர்கள் அந்தத் திருமணத்திற்கு வரவேயில்லை.

அண்மையில் திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு சுதந்திரப் போராட்ட வீரர் "சுப்பிரமணிய சிவா மாளிகை" என்று பெயர் வைத்தோம். அதுவும், திருமதி. பொன்னம்மாள் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று. அவரும் சேர்ந்து அவையிலிருந்து போய்விட்டார். அதைப்போல அங்கே அந்த வளாகத்திற்கு "வேலுநாச்சியார் வளாகம்" என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு "குமாரசாமி ராஜா நகர்" என்று பெயர் சூட்டப்பட்டது.

அப்படி ஒரு பெயரே காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது - குமாரசாமி ராஜா என்று ஒரு முதலமைச்சர் இருந்தார் என்று. காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு குமாரசாமி ராஜா நகர் என்று பெயர் சூட்டப்பட்டது. அதேபோல, சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு, "அன்னை சிவகாமி அம்மையார் வளாகம்" என்று பெயர் சூட்டியவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) என்னைச் சொல்கிறார்கள் தேசத் துரோகி என்று.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு "தியாகி சுந்தரலிங்கம் வளாகம்" என்றும், ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடத்திற்கு "புலித்தேவன் மாளிகை" என்றும் பெயர் சூட்டப்பட்டது. இங்கே இருக்கிற, தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட பத்தடுக்கு மாளிகைக்கு, கட்டி முடித்த இந்த 13 ஆண்டுக் காலத்தில் எந்தப் பெயரும் வைக்கப்படவில்லை. மீண்டும் இந்த ஆட்சி வந்த பிறகு, கட்டியவன்தான் பெயர் வைக்கவேண்டுமென்ற விதியின்படி, "நாமக்கல் கவிஞர் மாளிகை" என்ற பெயர் சூட்டப்பட்டது. எங்களைப் பார்த்து தேசத் துரோகிகள் என்று சுலபமாகச் சொல்லி விட்டார்கள். ஒரு கருத்தை உங்களுக்குப் படித்துக்காட்ட விரும்புகிறேன். இந்தப் புத்தகத்தில் அச்சியற்றப்பட்ட கருத்து. இது ஒருவருடைய உரை.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைஞரைப் பற்றி என்ன சொல்கிறார் என்று காலையில் தாள்களைப் புரட்டிப் பார்த்த நேரத்தில், அவர் சொல்லியிருக்கிறார் : கழகத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் என்னை முழுக்கத் தெரிந்தவர்கள்தான். ஆனால் என்னை முற்றிலும் முழுக்க முழுக்கத் தெரிந்தவர் கலைஞர்தான்" என்று அவர் எழுதியிருக்கிறார். பேராசிரியர் போன்றவர்கள் எல்லாம், தங்களுடைய வயதுக்கு இளையோர்களை வாழ்த்துகிறார்கள் என்று சொன்னால், வாழ்த்துவதற்குரிய அற்புதமான ஆற்றலை அவர் பெற்றிருக்கிறார் என்பதுதான் காரணம். அவருக்கு வந்த துன்பங்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொன்னால், அவரைத் துன்புறுத்த வேண்டுமென்று பலர் நினைத்ததையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னும் ஒருபடி மேலே போய்ச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அவருடைய ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று

பெருந்தலைவர் காமராஜரால் போற்றப்படுகின்ற தலைவர்கள் சொன்ன நேரத்தில் கூட, மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற கலைஞர் ஆட்சியைக் கலைக்கக் கூடாது என்று பெருந்தலைவர் காமராஜரே சொன்னாரே, அதைப் பக்கத்தில் இருந்து கேட்டவன் மட்டுமல்ல, எல்லாப் பக்கங்களிலும் எடுத்துச் சொல்கின்ற பணியை மேற்கொண்டிருக்கின்ற தொண்டன் என்ற காரணத்தால் சொல்கிறேன், அவருடைய ஆட்சி கலைக்கப்படுவதை காமராஜர் விரும்பவே இல்லை. ஏற்கனவே எத்தனையோ பேர் எங்கெங்கேயோ எதை எதையோ சொன்னாலும் சரி, பெருந்தலைவர் காமராஜர் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட வேண்டுமென்று விரும்பவும் இல்லை. அவர் உயிரோடு இருந்தவரை இந்த ஆட்சி கலைக்கப்படவும் இல்லை என்பதை உங்களுக்கு நினைவுப்படுத்த நான் விரும்புகிறேன்". இதைச் சொன்னவர், குமரி அனந்தன். (மேசையைத் தட்டும் ஒலி) 1983ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் தேதி நடைபெற்ற எனது 60வது பிறந்த நாள் விழாவில் அவர் ஆற்றிய உரை இது. இவர்கள் சொல்கிறார்கள் தேசத் துரோகி என்று. அவர்கள் சொல்கிற காரணத்தால் நான் தேசத் துரோகியாக ஆகிவிட மாட்டேன்.

இன்னும் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசில் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு கூட எந்தவிதமான கட்சிக் கண்ணோட்டத்தோடும் எதையும் அணுகவில்லை என்பதற்காக சொல்கிறேன். நம்முடைய காங்கிரஸ் கட்சிக் கொறடா திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு கடிதத்தை எழுதினார்கள். நீங்கள் சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடைய மகன்களுக்கு மாத்திரம் தான் இப்போது மருத்துவக் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி ஆகியவற்றில் இடம் தருகிறீர்கள்: சுதந்திரப் போராட்டத் தியாகிகள் எல்லாம் வாழ்ந்து ரொம்ப காலம் ஆகிவிட்டது. இப்போது அவர்களுடைய மகன்கள் என்றால் அவர்கள் எல்லாம் 40, 50 வயது கடந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பேரன், பேத்திகளுக்கு வழங்க வேண்டும் : அந்த விதியை திருத்த வேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக அதை ஏற்றுக் கொண்டேன்.

சென்ற ஆண்டில் திரு. செங்கல்வராயன் அவர்களுடைய பேத்திக்கு - செங்கல்வராயன் என்பவரையே பல

காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது, திரு. கே. விநாயகம் அவர்களுடைய பேரனுக்கு மருத்துவ கல்லூரியில் இடம். இந்த ஆண்டு திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடுவின் பேரன் ரவிக்கு, திரு. டி.கே. சண்முகம் அவர்களின் பேத்தி அலமேலு மீனாவுக்கு, திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களுடைய பேத்திக்கு, மணலி கந்தசாமி அவர்களுடைய பேரனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் தந்த ஆட்சி தேசத் துரோகிகளாக இருக்கிற எங்களுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே, தேச பக்தி என்றால் விலை என்ன என்று கேட்பவர்கள் எங்களைப் பார்த்து தேசத் துரோகிகள் என்று கூறுகிற ஒரு காலம் இன்றைக்கு வந்திருக்கிறது. அதற்குக் காரணம் தேசத் துரோகி என்று சொல்லியாவது இந்த ஆட்சியைக் கலைத்து விட முடியாதா என்பது தான். நேற்றைக்கு, தம்பி மோகன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். யார் யாரையெல்லாம் தேசத் துரோகிகளாக ஆக்கி இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அதற்காக இன்றைக்கு அவர்கள் சட்டம் - ஒழுங்கு, அமைதி சீர் குலைவதற்காக எடுத்திருக்கிற முயற்சிகளைப் பற்றியும் இங்கே எல்லா உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். அன்றைக்குப் பேசிய நண்பர் வரதராசன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் நேற்று முன்தினம் பேசியிருக்கிறார். இப்படிப் பல பேர் இங்கே பேசியிருக்கிறார்கள். எல்லோரும் பேசியிருக்கிறீர்கள். ஆனால் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தச் சாலை மறியல் போராட்டம் எதற்காக நடைபெறுகிறது என்பதை எல்லோரும் மிக நன்றாக அறிவோம். சாலை மறியல் போராட்டத்திற்கு முதல் நாளோ, மறு நாளோ இந்த ஆட்சி கலைந்து விடும் என்ற எதிர்பார்த்து இந்தக் காரியம் இப்போது நடைபெறுகிறது. இதிலே தொண்டர்களைத் தூண்டி விடுவதற்காகச் சென்றிருக்கிற முன்னணித் தலைவர்கள் என்னென்ன பேசினார்கள் என்ற தகவலும் அரசுக்குக் கிடைத்து இருக்கிறது. ஏற்கெனவே கருணாநிதியின் தலையை வெட்ட வேண்டுமென்று கூறிய தலை வெட்டித் தம்பிகள் எல்லாம் என்ன பேசியிருப்பார்கள் என்று நான் சொல்லத் தேவையில்லை. கருணாநிதி ரயிலடியிலிருந்து வெளியே போகக் கூடாது, அங்கேயே பிணமாகி விட வேண்டும் என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. பிறந்தவர்கள் ஒரு நாள் பிணமாகத்தான் ஆக வேண்டும். அதுவும்

இந்த நாட்டினுடைய சட்டம் - ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்ற, தமிழ் மக்களுக்காக பாடுபட்டதற்கு, பணியாற்றியதற்கு ஒரு பரிசாக அது கிடைக்குமேயானால் நான் அந்தப் பரிசையும் பெறத் தயாராக இருக்கிறேன். அதற்காக நான் அஞ்சவில்லை. ஆனால் இன்றைக்குத் தமிழ் நாட்டு மக்களை ஏமாற்றி 28 ஆம் நாள் சாலை மறியல், - 28 ஆம் நாள் உங்களுக்கெல்லாம் தெரியும். ஒவ்வொரு ஊரிலும் 4 கல்யாணமாவது, 10 கல்யாணமாவது இருக்கிறது. அப்படிப்பட்ட முக்கியமான திருமணநாள். அந்தத் திருமண நாளில் ஒரு சாலை மறியல் போராட்டத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த மறியல் போராட்டத்திற்குப் பிரச்சார நாள் எது தெரியுமா? எம்.ஜி.ஆர். பிறந்த 17 ஆம் தேதி, அன்றைக்குப் பிரச்சாரம் ஆட்சியைக் கலைப்பதற்கு. எம்.ஜி.ஆர். பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஒரு கேடயம்தானே எம்.ஜி.ஆர்.? அந்தப் பெயரை வைத்துக் கொண்டு இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பேசுங்கள் என்று வெளிப்படையாக அறிக்கை விட்டார்கள்.

அதைப் போலவே 25ஆம் தேதி இன்றைக்கு. இன்று மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துகின்ற நாள். இந்த நாளில் கூட நீங்கள் சாலை மறியலைப் பற்றித்தான் பேச வேண்டும் என்று அவர்களுடைய சொற்பொழிவாளர்களுக்கு தாக்கீது, வெளிப்படையான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நாம் இவ்வளவையும் சந்திக்கத்தான் போகிறோம். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு பலாத்காரத்தைத் தூண்டினாலும், எவ்வளவு வன்முறையைத் தூண்டினாலும், தமிழக மக்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே ஆளும் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள், முன்னணியினர், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இந்த நாட்டில் அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்று விரும்புகிறவர்கள் அத்தனை பேரும் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு கையும், இன்னொரு கையும் மோதிக்கொண்டால் தான் சத்தம் கேட்கும். இங்கே பார்த்தோம். கடந்த 4, 5 நாட்களாக நடைபெறுகின்ற சம்பவங்களில் ஆளும் கட்சியினர் மிக அமைதியாக இருந்த காரணத்தாலும், தோழமை கட்சியினர் மிக அமைதியாக இருந்த காரணத்தாலும், பெரிய அமளிகள் உருவாகாமல் போனதை நாம் பார்த்து இருக்கிறோம். இது சான்றாக

அமைந்து இருக்கிறது. அதைப் போலவே சாலை மறியலில் ஈடுபடுகிறவர்கள் எவ்வளவு பலாத்காரத்தைத் தூண்டிவிட்டாலும் திருநாவுக்கரசு அவர்கள் சொனன்தைப்போல 10 பஸ், 12 பஸ் ஒரு மாவட்டத்திற்கு எரிக்க வேண்டுமென்று திட்டங்கள் இருந்தாலும் கூட, சட்டம்-ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்றுவது எப்படி என்பதை இந்த அரசு சிந்தித்துச் செயல்படும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு எல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சியைக் கலைக்கலாம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கலைக்கலாம் என்று எண்ணினால், அது மக்களுக்கு விடப்படுகின்ற அறைகூவல் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுடைய சுயமரியாதைக்கு விடப்படுகின்ற சவால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால், மக்கள் பார்த்து ஒரு ஆட்சியை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த ஆட்சியைக் கலைப்போம் என்று சொல்வது அந்த மக்களுக்கு எதிராக விடப்படுகின்ற சவால். அந்தச் சவாலை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பார்கள். இப்படிச் சொல்வதால் அந்தக் கிளர்ச்சிகளைப் பொதுமக்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற அந்தப் பொருளில் நான் பேசவில்லை. சாலை மறியலைக் காரணங்காட்டி வன்முறையைத் தூண்டுவதற்கு ஒரு துளியும் இடம் தராமல் பொதுமக்களின் நலன்களைப் பாதுகாக்கத் தகுந்த ஏற்பாடுகளை எல்லாம் இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அதற்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இன்னும் பல விஷயங்களைப் பேச வேண்டும் என்று இருந்தாலும் கூட, அவைகளை எல்லாம் வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்திலே வைத்துக்கொள்கிறேன் என்று கூறி, நேரம் அதிகமாகி விட்ட காரணத்தால், இந்த அளவில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து, இந்த அளவில் அமைகிறேன், வணக்கம்.

உரை : 21 **நாள் : 30.01.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் ஆற்றியுள்ளஉரையின்மீது முப்பத்தெட்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வழங்கியிருக்கின்றார்கள். சற்றொப்ப பதினொரு மணி நேரம் விவாதம் நடைபெற்றிருக் கின்றது. இந்த உறுப்பினர்களைக் கட்சிவாரியாக எடுத்துக் கொண்டால், ஆளுங் கட்சி எந்த அளவுக்கு ஜனநாயக நிலைக்கு மதிப்புக் கொடுத்து வரவேற்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

38 பேரில் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டுமேயானால் நியமன உறுப்பினர் ஒருவர். ஆகவே அந்த ஒருவரும் பேசியிருக்கிறார். தேவேந்திரர் சங்கத்தின் சார்பில் ஒருவர், அவரும் பேசியிருக்கின்றார். அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் இருவர், அதிலே ஒருவர் பேசியிருக்கின்றார். ஜனதா தளத்தின் சார்பில் ஒருவர், அவர் பேசியிருக்கின்றார். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி-மார்க்சிஸ்ட், அந்தக் கட்சியின் சார்பில் ஒருவர், அவர் பேசியிருக்கிறார். பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் ஒருவர், அவர் பேசியிருக்கிறார். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நான்கு பேர், அதிலே இரண்டு பேர் பேசியிருக்கின்றார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான்கு பேர், அதிலே மூன்று பேர் பேசியிருக்கின்றார்கள். இந்திய தேசிய லீக்கின் சார்பில் 5 பேர், அதிலே 3 பேர் பேசியிருக்கின்றார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 8 பேர், அதில் 3 பேர் பேசியிருக்கின்றார்கள். தமிழ் மாநிலக் காங்கிரசின் சார்பில் 39 பேர், அதில் 10 பேர் பேசியிருக்கின்றார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே 166 பேர். அதிலே 11 பேர்தான் பேசியிருக்கின்றார்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவருவதற்குக் காரணம், கடந்த காலங்களில் ஆளுங்கட்சிக்கே வாய்ப்புத் தரப்பட்ட நிலை இந்த மன்றத்திலே இருந்ததும், இன்றைக்கு எதிர்த்தரப்புக் கருத்துக்கள், தோழமைக் கட்சிகளின் கருத்துக்களைக் கேட்பதற்கு மிகுந்த அளவு வாய்ப்புத் தரப்படுகிறது. அப்படித் தரப்படுவது. இந்த அரசு தன்னுடைய குறைகளை அகற்றி, நிறைவு செய்து கொள்வதற்காகவும் (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் இந்த மன்றத்திலே கருத்துக்களைக் கூறக் கூடிய உரிமைகளைத் தரவேண்டுமென்ற ஜனநாயகப் பண்பாட்டோடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஆளுநர் உரை இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற இந்தக் காலகட்டத்தில் நாம் மூன்று ஆளுநர்களை நினைவுகூர வேண்டிய, அவர்களைப் பற்றி முறையே, பேசவேண்டிய, அவர்கள் ஆற்றிய உரையைப் பற்றிக் கருத்துக்களைக் கூற வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கின்றோம். இந்த மன்றத்தில் இந்தத் தொடரை நாம் ஆரம்பிக்கும்பொழுதே, தமிழகத்திலே ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்து இந்தியாவினுடைய தலை சிறந்த தலைவர்களில் ஒருவராக விளங்கி, பல பொறுப்புக்களை நிர்வாகத் திறனோடு ஆற்றி, மறைந்த சென்னா ரெட்டி அவர்களுக்கு நம்முடைய அஞ்சலியைச் செலுத்தி அவருடைய புகழை இங்கே நாம் பேசியிருக்கின்றோம்.

அடுத்து, இந்த உரையை இங்கே ஆற்றியவர், ஆந்திரத் தினுடைய கவர்னராகவும், அதே நேரத்தில் இந்த மாநிலத்திற்கும் சேர்த்து தற்காலிகப் பொறுப்பை ஏற்றுள்ள கவர்னராகவும் விளங்கிய, இன்றைக்கு ஆந்திர மாநில கவர்னராக விளங்கிக் கொண்டிருக்கின்ற திரு. கிருஷ்ண காந்த் அவர்களுடைய உரை. திரு. கிருஷ்ண காந்த் அவர்கள் ஆற்றிய உரையை விவாதிக்கின்ற நேரத்தில், 25 ஆம் தேதி இந்த மாநிலத்திற்கு, ஐந்தாண்டுகளுக்கு ஒரு நிரந்தர கவர்னர் என்ற வகையில், செல்வி பாத்திமா பீவி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்கள் முதலில் தன்னுடைய வாழ்க்கையை ஒரு முன்சீப் என்கின்ற அளவிலே தொடங்கி, பிறகு சப்-ஜட்ஜாக வளர்ந்து, மாவட்ட நீதிபதி என்ற அளவுக்கு உயர்ந்து, கேரள மாநிலத்தினுடைய உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆகி, உச்சநீதிமன்ற நீதிபதியின் பொறுப்பையும் ஏற்று, படிப்படியாக பல்வேறு பணிகளை ஆற்றி, அறிவுத்திறன் ஆற்றல் இத்தனையும் வாய்ந்தவராக அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே கவர்னராகப் பொறுப்பேற்றிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, சிறுபான்மைச் சமுதாயத்தினுடைய பிரதிநிதியாக ஒரு கவர்னர், தமிழகத்திலே வருவது, அதிலும் ஒரு பெண் கவர்னர் தமிழகத்திற்கு வருவது இதுவே முதல் தடவை என்ற வகையில், நாமெல்லாம் பெருமை யடைகிறோம். மகிழ்ச்சியடைகின்றோம். அவர் கவர்னராக வருவதற்கு முன்புகூட, தேசிய மனித உரிமைக் கழகத்தின் உறுப்பினராக இருந்தவர் என்பதும்பாராட்டுக்குரிய ஒன்றாகும், வாழ்த்துவதற்குரிய ஒன்றாகும். இந்த கவர்னர் உரை, நான் குறிப்பிட்ட இந்த மூன்று கவர்னர்களையும் பின்னிப்பிணைத்திருக் கின்ற ஒரு உரையாக இருந்ததை நீங்கள் எண்ணிப் பார்த்தாலே கவர்னர் உரை என்பது அந்த உரையை யார் ஆற்றுகிறார்களோ அவர்களுடைய உரை அல்ல, இது அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்க ஏடு என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும். திராவிட முன்னேற்றக் கழகஆட்சி மீண்டும் 1996 ஆம் ஆண்டு அமைந்த பிறகு ஏழு மாதங்களில் எந்த அளவிற்கு வளர்ச்சி நிலைகளை நோக்கி நாம் சென்றிருக்கிறோம். தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம் என்பதை ஆளுநர் அவர்களுடைய உரை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தொழில் வளத்தில் தமிழகம் மேலும் முன்னேற வேண்டும் என்ற தங்களுடைய ஆசையைத் தெரிவித்து அதற்கான பல்வேறு கருத்துகளை எல்லாம் வெளியிட்டு இருக்கின்றார்கள். இந்த ஏழு மாதங்களில் தொழில் வளர்ச்சியிலே இந்த அரசு எந்த அளவிற்கு அக்கறை காட்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். நேற்றைக்கு இங்கே பேசிய பசும் பொன் கிருட்டிணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தொழில் வளர்ச்சிக் காகப் பல யோசனைகளைச் சொல்லக்கூடிய உயர்மட்டக் குழு

ஒன்று இந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்டு, அந்தக் குழு அமைக்கப்பட்டு, அண்மையிலே அந்தக் குழுவினுடைய கூட்டம் நடைபெற்ற போது தொழில் முனைவோர்களைச் சந்தித்து நான் என்ன பேசினேன் என்பதை நினைவூட்டுவதும், நடவடிக்கைக் குறிப்பிலே பதிவு செய்வதும் என்னுடைய கடமையென்று கருதுகிறேன். "தொழிலதிபர்கள் அவர்களுடைய குறைகளையும் வேண்டுகோள்களையும் உயர்நிலையில் நேரடியாகத் தெரிவிக்க, ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்படும்; முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு தொழில் வளர்ச்சி குறித்த உச்சநிலைக் குழு ஒன்று உருவாக்கப்படும். இதில் பல்வேறு வர்த்தகத் தொழில் அமைப்புகளின் நியமனதாரர்கள் 12 பேர்களும், அரசு நியமிக்கும் 6 முக்கியத் தொழிலதிபர்களும், பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் உறுப்பினர்களாக இருப்பார்கள்" என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து இருந்தேன். அதன்படி கூட்டப்பட்ட கூட்டத்திலே நான் ஆற்றிய உரையிலே, "நம் மாநிலத்தை எதிர் நோக்கியிருக்கும் முக்கியமான ஒரு பிரச்சினை படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டமாகும். புதிய வேலை வாய்ப்புகளை அளித்து இப்பிரச்சினைக்கு நிலையானதோர் தீர்வுகாண தொழில் துறையில் முன்னேற்றம் அடைவதுதான் மிகவும் அவசியமாகும். அதற்காக உறுதியான ஒரு கொள்கையைப் பின்பற்றி, தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க இந்த அரசு முனைந்துள்ளதுகடந்த சில ஆண்டுகளில் தமிழக அரசின் ஈடுபாடற்ற தன்மையின் காரணமாக தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்திலே சுணக்கம் ஏற்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். தற்போது மீண்டும் வாய்ப்பு கிடைத்தபோது நம்முடைய முயற்சிகளை முழுமையாகப் பயன் படுத்த வேண்டுமென்ற ஆவலோடு நான் இருக்கிறேன்.

அதனால்தான் பன்னாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் குடியிரா இந்தியர்கள், இந்திய நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சிறு தொழில் முனைவோர் மற்றும் சிறுதொழில் கைவினைஞர்கள் போன்ற அனைத்து தரப்பினரிடமிருந்தும் முதலீடுகளை ஊக்குவிக்கும் தொழில் முதலீட்டாளர்களுக்கு சிரமத்தினை முற்றிலும் அகற்றும் பொருட்டு விதிகளையும், விதிமுறைகளையும் எளிமைப்படுத்தவும் இந்த அரசு விரும்புகிறது. முதலீட்டாளர் களுக்கு நேசக்கரம் நீட்டக்கூடிய ஒரு வெளிப்படையான

Transparent - நிர்வாகத்தை உறுதி செய்வதற்கான முடிவெடுத்ததும் இதற்காகத் தான், கடந்த 6, 7 மாதங்களில் தொழில் துறையிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மனதிற்கு நிறைவு தரக்கூடியதாக இருந்தாலும்கூட, மேலும் உற்சாகத்துடன் செயல்பட்டு, இந்தியாவிலேயே முதன்மையான இடத்திற்கு தமிழகத்தைக் கொண்டுவர உங்களுடைய ஒத்துழைப்பை வேண்டுகிறேன். அதற்கான ஆக்கப் பூர்வமான யோசனைகளை இன்றையதினம் நான் உங்களிடமிருந்து எதிர்நோக்கியிருக் கின்றேன்.

மாநிலங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு அதிகமான சில சலுகைகளை விரும்பத்தகாத வகையில் அளித்து தொழில் முனைவோர்களைக் கவர முயற்சிகளை மேற்கொள் கின்றன.அதேபோல, சில சலுகைகளைக் காட்டி தொழில் துறையில் முதலீடு செய்ய வைக்க முடியுமென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. தொழில் அதிபர்கள் புத்திசாலிகள், தொலைநோக்கு உள்ளவர்கள். ஏதோ சில ஆண்டுகளுக்கு மட்டும் சலுகைகளை வைத்து தொழிலைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. தொழில் அதிபர்களாகிய அவர்கள் அடிப்படை வசதிகள் அனைத்தும் உறுதியாய் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள்.

இதைப் புரிந்து கொண்ட இந்த அரசு மின்சார வசதி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி, செய்தித் தொடர்பு வசதி போன்ற சில அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. நம் தொழிலாளர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். சிக்கலான தொழில் நுட்பங்களை எளிதில் புரிந்து கொண்டு திறமையாகப் பணியாற்றி உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் - பெருக்குவதில் தமிழ் நாட்டுத் தொழிலாளர்களுக்கு ஈடு இணை யாரும் இல்லை.

அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரையில் நாம் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஓரளவுக்குத் திருப்திகரமான நிலையில் இருக்கிறோம்.

அதே நேரத்தில் மின்சாரத் துறையிலே கடந்த 4, 5 வருடங்களில் புதிய திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

சாலைப் பராமரிப்பு முதலிய துறைகளிலும் உண்மையாக வேலை நடைபெறாத சூழ்நிலையில் நமது போக்குவரத்து வசதி மிகவும் தரம் குறைந்துவிட்டது. இந்த நிலைமைகளை எல்லாம் சரிசெய்வதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. மேலும் நிலைமையைச் சீர் செய்ய பல தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இந்த அரசு சில முக்கியமான முடிவுகளை மேற்கொண்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் உங்களுடைய ஆக்கபூர்வமான யோசனைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு பல புதிய தொழில்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்தும் வகையில் தங்களுடைய கருத்துக்களை அறிந்துகொள்ள நான் ஆவலோடு இருக்கிறேன்" என்று குறிப்பிட்டு, அவர்களும் நீண்டநேரம் தங்களுடைய கருத்துக்களை இந்த அரசுக்கு, தொழில் வளர வேண்டும் என்ற நோக்கத்தோடு எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்தக் குழு அடிக்கடி கூடி தொழில் வளம் தமிழகத்திலே மேலும் உயர்ந்திட முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை, நேற்றும், அதற்கு முன்தினமும் இங்கே பேசிய நம்முடைய நண்பர் சுப்பராயன் போன்றவர்கள் தொழில் வளம் சிறக்க வேண்டும், அது மிக முக்கியம் என்று எடுத்துக்காட்டிய அந்தக் கருத்துக்கு அரணாக நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டுள்ளேன் தொழில்கள் எந்த அளவிற்கு இந்த 6, 7 மாத காலங்களிலே வளர்ந்திருக்கின்றன என்பதற்கு ஒரு சிறிய புள்ளிவிவரத்தை உங்களுக்கு நான் படித்துக்காட்ட விரும்புகின்றேன். புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு வசதியாக 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படவுள்ளது. இதில் தூத்துக்குடிக்கு அருகே 650 ஹெக்டேர் பரப்பளவு சிப்காட் தொழில் மைய விரிவாக்கத்திற்காகவும், இருங்காட்டுக்கோட்டையிலே 1,800 ஏக்கர் நிலப்பரப்பும் அடங்கும்.

நம்முடைய நண்பர் சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன் அவர்கள் நேற்றையதினம் அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும், போக்குவரத்து வசதிகளை நல்லமுறையிலே செம்மையாக வழங்கவேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிடுகிற இந்தத் தொழிற்சாலைக்கு எல்லாம் அத்தகைய உறுதி தரப்பட்டு செயல்படுத்தப்படுகிற சூழ்நிலையிலே

ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி பணிகள் தொடங்கி இருக்கின்றன என்பதையும் நான் கூற விரும்புகிறேன்.

மோட்டார் வாகனத் (ஆட்டோமேட்டிவ் இண்டஸ்ட்ரிஸ்) தொழிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த Thrust area தொழிலாகக் கருதி, சில சிறப்புச் சலுகைகள் அவைகளுக்கு அளிக்கப்படுகின்றன. கிரானைட் போன்ற சிறு கனிமம் குத்தகை வழங்குவதிலே உள்ள முறைகேடுகளைக் களைந்து சீரான நடைமுறையைப் பின்பற்ற இந்த அரசு ஆணையிட்டுள்ளதும், அதன் காரணமாக கடந்த காலத்தை விட அதிக ஆதாயம் அரசுக்குக் கிட்டியிருப்பதும் உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும்.

புதிய தொழில்களுக்கான ஒப்பந்தங்கள் என்று எடுத்துக் கொண்டால், 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சம் கார்கள் தயாரிக்கும் ஹூண்டாய் தொழிற்சாலை; 550 கோடி ரூபாய் முதலீட்டில் மறைமலை நகரில் பில்கிங்டன் நிறுவனம் அமைக்கும் மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலை; 30 கோடி ரூபாய் முதலீட்டில் ஜப்பான் நாட்டு 'பியூஜிகுரா' நிறுவனம் அமைக்கும் கண்ணாடி இழை கேபிள் தொழிற்சாலை; 350 கோடி ரூபாய் முதலீட்டில் கொரியா நாட்டின் கும்ஹோ டயர்ஸ் கம்பெனி நிறுவும் ரேடியல் டயர் தொழிற்சாலை; 38 கோடி ரூபாய் முதலீட்டில் கல்கத்தாவைச் சேர்ந்த ராய் சுரானா நிறுவனம் அமைக்கும் தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை; 450 கோடி ரூபாய் முதலீட்டில் பிரெஞ்ச் நாட்டின் செயின்ட் கோபைன் நிறுவனம் அமைக்கும் மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலை; 630 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு பத்தாயிரம் கார்கோ வாகனம் தயாரிக்க ஓசூரில் அசோக் லேலண்ட் நிறுவனம் தொடங்கிய விரிவாக்கத் திட்டம்; துபாயைச் சேர்ந்த எம். கே. க்ரூப் நிறுவனம் எருமை மாட்டு இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை 125 கோடி ரூபாயிலே அமைக்கும் முயற்சி; 20 கோடி ரூபாய் முதலீட்டில் எல்காட் நிறுவனமும் ஹூண்டாய் நிறுவனமும் இணைந்து அமைக்கும் தொழிற்சாலை, இது தவிர, பின்வரும் திட்டங்களும் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

300 கோடி ரூபாய் முதலீட்டில் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனம் மிட்சுபிஷி நிறுவனத்தோடு இணைந்து திருவள்ளூர்

அருகே 30 ஆயிரம் லான்சர் கார்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை; செம்பியத்தில் டிராக்டர்ஸ் மற்றும் பார்ம் எக்யுப்மென்ட் தொழிற்சாலை, ஆண்டு ஒன்றுக்கு தயாரிக்கும் திறனை 48 ஆயிரத்திலிருந்து 72 ஆயிரமாக உயர்த்த விரிவாக்கம் செய்யும் திட்டம்; 95 கோடி ரூபாய் முதலீட்டில் இத்தாலிய நிறுவனத்தோடு இணைந்து கிரீன்ஸ் நிறுவனம் ராணிப் பேட்டையிலே தொடங்கும் டிராக்டர் தொழிற்சாலை.

தொழிற்சாலை வளர்ச்சிக்கு மின்சாரம் மிக இன்றிய மையாதது. அடிப்படை வசதிகளில் மின்சாரம் மிக முக்கியமான ஒன்று என்பதை இந்த அரசு தக்கபடி உணர்ந்து நான் நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டியதை போலவும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே விளக்கிக் கூறியதைப் போலவும், 20 புதிய மின் திட்டங்கள் ஒவ்வொன்றும் 100 மெகாவாட் திறனோடு தமிழ்நாட்டிலே தொடங்கப்பட இருக்கின்றன. ஏதோ அறிவித்தோம், அத்துடன் விட்டுவிட்டோம் என்று இல்லாமல், அதற்கு 8,000 கோடி முதலீட்டில் அவைகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 8,000 கோடி எப்படி வரும் என்று கேட்பீர்களேயானால் ஒரு மெகாவாட் உற்பத்தி செய்ய ரூ. 44 கோடி ஒரு மெகாவாட் உற்பத்திக்கு. இப்படி 20 திட்டங்கள். இதுவரையில் இந்த 20 திட்டங்களுக்கும் 73 பேர் டெண்டர் கோரியிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். எனவே இந்த டெண்டர்கள் சரிபார்க்கப்பட்டு, உரியவர்களுக்கு நியாயமான முறையிலே இவை கொடுக்கப்பட்ட பிறகு, இந்தத் திட்டங்கள் விரைவிலே நிறைவேற இருக்கின்றது.

நம்முடைய நண்பர் கிருஷ்ணன் அவர்கள் கிராஃபைட் தொழிற்சாலையைப் பற்றி குறிப்பிட்டார். அதிலே அவருக்கு உள்ள அதே அக்கறை, ஆவல், அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர் களுக்கு, அந்தப் பகுதியில் உள்ள உறுப்பினர்களுக்கு உள்ள ஆவல். அந்தப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய நிதியமைச்சருமான அன்புக்குரிய சிதம்பரம் அவர்களுக்கும் உண்டு. எனவே அவரோடு நான் பலமுறை அதுபற்றி கலந்து பேசியிருக்கின்றேன். அந்தத் தொழிற்சாலையை தனிக்

கம்பெனியாக ஆக்குவதற்கான வேலைகள் எல்லாம் இப்போழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக ஒரு அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார். அது கம்பெனியாக விரைவிலேயே ஆக்கப்பட்டு விடுமேயானால், கிருஷ்ணன் இங்கே குறிப்பிட்டதைப்போல சுத்திகரிப்பு நிலையமும், அந்த நிறுவனம் நடைபெறும் இடம் எல்லாம் அந்தக் கம்பெனிக்கு உரியதாக ஆகிவிடும் என்பதை நான் இங்கே தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

இந்தத் தொழிற்சாலைகள் மாத்திரமல்லாமல் இந்த அரசு இந்தக் குறுகிய காலத்தில், நண்பர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல், சொக்கர் பாராட்டுத் தெரிவித்ததைப் போல், வேறு சில நண்பர்கள் இந்த முயற்சிக்கு தங்களுடைய பாராட்டுகளைவழங்கியதைப் போல், உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலை எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் நாம் நடத்தி முடித்திருக்கிறோம்.

அதைப்போலவே ஆரம்பக்கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களையும் வெற்றிகரமாக நாம் நடத்தி முடித்திருக்கிறோம். மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு வசதி, பேருந்து வசதி போன்றவைகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆட்சிக் காலத்தில் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு ஏதோ ஒரு விதமான சலுகையைப் பெற்று, கிராமங்களுக்குத் தங்களுடைய பேருந்துகளை விடாமல் லாபகரமான முறையை மாத்திரமே கருத்தில்கொண்டு கிராம மக்களை பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாக்கினார்கள். அந்தச் சங்கடத்தை இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் தாங்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் எங்களுக்குப் பேருந்து இல்லை, இருந்த பேருந்து எடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னபொழுதுதான் அதைப்பற்றி ஆராய்ந்து, ஏன் எடுக்கப்பட்டது, எப்படி எடுக்கப் பட்டது, எதற்காக எடுக்கப்பட்டது, எந்த நிலையிலே எடுக்கப்பட்டது என்பவைகளை எல்லாம் தெரிந்து, இந்த அவையிலேயே அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அவர்களுக்கு தளர்த்திக் கொடுக்கப்பட்ட அந்தச்

சலுகைகளை எல்லாம் திரும்பப் பெற்று, எல்லாக் கிராமங்களுக்கும் பேருந்துகளை லாப நஷ்டம் பார்க்காமல் விடக் கூடிய அந்த அளவிற்கு தனியார் பேருந்துக்காரர்கள் செல்லக் கூடிய ஒரு சூழ்நிலையையும் இந்த ஆட்சிதான் இந்தக் குறுகிய காலத்திலே ஏற்படுத்தியிருக்கின்றது.

கழக ஆட்சி ஏற்பட்ட இந்தக் குறுகிய காலத்தில், சென்னைக்கு கிருஷ்ணா தண்ணீர் கொண்டுவந்தது என்று இந்த ஆறு மாத காலத்திலே முதல் முயற்சி தொடங்கி, இடைக்கால முயற்சி தொடங்கி, முற்றுப்பெறுகிற முயற்சியிலே நாங்கள்தான் இதைச் செய்தோம் என்று யாரும் மார்தட்டிக் கொள்ளவில்லை. கிருஷ்ணா தண்ணீரைப் பொறுத்தவரையிலே தமிழ்நாட்டிலே அதிலும் குறிப்பாக சென்னையில் வாழ்ந்த என். டி. ராமராவ் அவர்கள் முதலமைச்சராக ஆந்திரத்திலே பொறுப்பேற்றிருந்த பொழுது, அருமை நண்பர், எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபொழுது, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபொழுது. அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால் தொடங்கப்பட்ட திட்டம், பெரும் தொய்விற்கு உள்ளாகி, இடையிலே ஆந்திராவிற்குத் தரப்பட வேண்டிய பணம் சரியாகப் போய்ச் சேராத சூழ்நிலையில், அதுகிடப்பிலே போடப்பட்டுவிட்ட ஒரு நிலைக்கு ஆளானது. அதற்குப் பிறகு 1989-90-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முகிழ்த்தபோது, அப்போது சென்னா ரெட்டி அவர்கள் ஆந்திரத்தினுடைய முதலமைச்சராக இருந்தார்கள். அவரிடத் திலும், அதற்கு முன்பு சிறிது காலம் முதலமைச்சராகப் பொறுப் பேற்றிருந்த என்.டி.ராமாராவ் அவர்களிடத்திலும், நானும் பொதுப் பணித் துறை அமைச்சரும் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குப் பிறகு அந்தத் திட்டம் விரைவு படுத்தப்பட்டு, பிறகு இந்த ஐந்து ஆண்டு காலத்திலும் அவர்கள் அப்படியே விட்டு விட்டார்கள் என்று சொல்லமாட்டேன். ஆனால் போதிய கவனம் செலுத்தாமல், இன்னும் விரைவுபடுத்த முயற்சி மேற்கொள்ளாமல் அது கிடப்பிலே இருந்த நேரத்தில் மீண்டும் இந்த ஆட்சி உருவான பிறகு, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களிடத்திலே பலமுறை பேசி கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வந்தது என்ற அளவிற்கு நாம் ஆறுதல் பெருமூச்சு விட்டுக்

கொண்டிருக்கிறோம். அந்தத் தண்ணீர் இன்னும் முழுமையாக சென்னை மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பது ஒரு குறையானாலும் கூட, எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட இயற்கையின் சீற்றத்தால், ஆந்திரத்தில் வீசிய புயலால், இந்தத் தண்ணீர் வருவதற்காக வெட்டப்பட்ட வாய்க்கால் பெருமளவுக்கு சேதமுற்று, இப்போது அந்த சேதங்களையெல்லாம் சீரமைக்கின்ற பணியை ஆந்திர அரசே மேற்கொண்டிருக்கிறது. அதற்கான செலவு 5 கோடி ரூபாயையும் ஆந்திர அரசே இன்றைக்கு பொறுப்பேற்றுக்கொண்டு, விரைவில் தண்ணீர் கிடைக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆந்திரத் திலேயிருந்து வருகின்ற கிருஷ்ணா தண்ணீர் நாள்தோறும் சென்னைக்குக் கிடைக்கக் கூடிய அளவுக்கு ஒப்பந்தம் போடப்பட வில்லை. ஒரு ஆண்டில் எந்தெந்த மாதங்கள் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அந்தந்த மாதங்களில் தண்ணீர் கிடைப்பதற்கு எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாமல் இப்போது அங்கே வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப்படி மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வரும்போதுதான், இரண்டு முறை, தமிழகத்திலே, அதிலும் குறிப்பாக, சில மாவட்டங்களிலே பெருமழை பொழிந்து வெள்ளச் சேத நிவாரணம் அளிக்கக்கூடிய அந்தக் கட்டத்திற்கு நாம் தள்ளப் பட்டோம். ஒரு புறத்திலே வெள்ள நிவாரணம். இன்னொரு புறத்திலே வறட்சி நிவாரணம் என்ற அளவுக்கு இருபுறமும் தாக்கப் படுகின்ற ஒரு சூழ்நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது. முதன் முறையாக ஜூன் மாதத்திலே பெருமழை பெய்தபோது, ஏற்கெனவே இருந்த நிவாரண உதவிகளையெல்லாம் அதிகப்படுத்தி, இந்த அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியதை நீங்கள் யாரும் மறந்து இருக்கமாட்டீர்கள். முன்பு, வெள்ளத்தால் குடிசைகள் பாதிக்கப்பட்டால் 500 ரூபாய் என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1,000 ரூபாய் என்று உயர்த்தியது. பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு 250 ரூபாய் என்று இருந்ததை 500 ரூபாய் என்று ஆக்கினோம். இறந்து போனகால்நடைகளுக்கு எந்த உதவியும் இல்லாத நிலைதான் முன்பு இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இறந்து போன

கால்நடைகளுக்கு, மாடுகளுக்கு 5,000 ரூபாய், கன்றுகளுக்கு 3,000 ரூபாய், ஆடுகளுக்கு 1,000 ரூபாய் என்று நிவாரணம் கொடுத்ததும் இந்த அரசுதான், இறுதியாக, இந்த இரண்டாவது முறை வெள்ளம் ஏற்பட்டு, பெருமழையினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் சேத மதிப்பை இந்த இரண்டாவது முறை மழையிலே நாம் கணக்கிடும்போது நீர்ப்பாசன ஆதாரங்களைப் பொறுத்தவரை 48 கோடி ரூபாய்க்கும், பொதுப்பணித்துறைக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில் 10 கோடி ரூபாய்க்கும், நெடுஞ்சாலை மற்.றும் ஊரகப் பணிச் சாலை, பாலங்கள் முதலியவற்றைப் பொறுத்த வரையில் 246 கோடி ரூபாய்க்கும், தேசீய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 19 கோடி ரூபாய்க்கும், சென்னை மாநகராட்சியின் சாலைகளைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 67 கோடி ரூபாய்க்கும், வேளாண்மைப் பயிர்களைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 863 கோடி ரூபாய்க்கும் தோட்டப் பயிர்களைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ 56 கோடி. ஊரக உள்ளாட்சி நிர்வாகத்தின் சொத்துக்கள் ஏறத்தாழ 50 கோடி, நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தின் சொத்துக்கள் பேரூராட்சியிலே 26 கோடி, நகராட்சியிலே 39 கோடி, கைத்தறிகள் உபகரணங்கள் சேதம் 2 கோடியே 40 இலட்சம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளி விடுதிக் கட்டிடங்கள் 88 இலட்சம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழக கட்டிடங்களும், இயந்திரங்களும், 12 கோடி, மீன்வளத் துறை வலைகள், கட்டுமரங்கள், வல்லம் முதலியவை 63 இலட்சம், கால்நடைகள் இழப்பு 60 இலட்சம், குடிசைகள் சேதம் 40 கோடி 60 இலட்சம், ஆக 1,482 கோடி ரூபாய் மொத்தத்திலே சேத மதிப்பு. சேத மதிப்பு என்பது வேறு, அதற்கு அளிக்கப்படுகின்ற நிவாரணம் என்பது வேறு. மொத்த சேதத்திற்கும் நிவாரணம் அளித்துவிட முடியாது. நிவாரணம் என்பதே முழுவதுமாகக் கொடுக்கவில்லை. நிவாரணமாகக் கொடுக்கிறேன் என்பதே, ஓரளவுக்குத்தான் கொடுக்கிறேன் என்ற பொருளில்தான் அதை நிவாரணம், உதவி என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இப்படிப் பார்த்தால், சேதத்திலே ஒருபங்குதான் நாம் கொடுத்திருக்கிறோம். 1,482 கோடி ரூபாய்க்கு சேதம் என்பது சேதத்தினுடைய மதிப்பைத்தான் காட்டுகிறது. இந்த இயற்கையின் சீற்றம் உருவானவுடன் அதனால் பாதிக்கப்பட்ட

மக்கள் பதறித் துடித்த நேரத்தில், உடனடியாக 1,260 உணவு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதிலே 10 நாட்கள் வரையில் 18 லட்சத்து 42 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டிருக்கிறது.

வெள்ள நிவாரணப் பணிகளில் ஊழல் நடைபெறாமல், அலட்சியம் ஏற்பட்டுவிடாமல், அக்கறை காட்ட வேண்டும் என்பதற்காக பல எதிர்க்கட்சித் தலைவர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், அவையிலே உள்ளவர்கள், இல்லாதவர்கள், இவர்கள் எல்லாம் விடுத்த அறிக்கையை மதித்து ஆங்காங்கே மாவட்ட அளவிலும், கிராம அளவிலும் நகர அளவிலும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளைக் கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு அவர் களுடைய முன்னிலையிலேயே நிவாரண உதவிகள் பெரும் பகுதிவழங்கப்பட்டு இருக்கின்றன. ஆண்டுதோறும் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலே சராசரி மழை 439 மில்லி மீட்டர்தான் பெய்யும். ஆனால் 1996-ல் அக்டோபர் முதல் டிசம்பர் வரை பெய்த மழை அளவு 543 மில்லி மீட்டர். அது சராசரி அளவைவிட 104 மில்லி மீட்டர் அதிகமானது என்பதை உறுப்பினர்கள் அறிந்திட வேண்டும். இதிலே உயிர் இழப்பு - மனித உயிர் இழப்பு 151, கால்நடைகள் உயிர் இழப்பு 3,738. ஆளுநர் உரையிலே இந்தக் குறிப்பு இருந்தாலும்கூட கவனத்திற்காகச் சொல்கிறேன். சேதம் அடைந்த குடிசைகள் - முழுமையாகச் சேதம் அடைந்தவை 58313, ஓரளவு சேதம் அடைந்தவை 6,29,987. சேதம் அடைந்த வேளாண்மைப் பயிர்கள் - முழுமையாகச் சேதம் அடைந்தவை 3,08,112 ஹெக்டேர். ஓரளவு சேதம் அடைந்தவை 2,20,913 ஹெக்டேர். இதிலே நிவாரணம் பெறக்கூடியவர்கள் 7,14,155 பேர்கள். சேதம் அடைந்த தோட்டப் பயிர் - முழுமையாகச் சேதம் அடைந்தது 15,437 ஹெக்டேர். ஓரளவு சேதம் அடைந்தது 6,651 ஹெக்டேர். நிவாரணம் பெறுபவர்கள் 27,916 பேர். சேதம் அடைந்த நீர்ப்பாசன ஆதாரங்கள் - ஏரிகள் குளங்கள் 823. ஆறுகள் 1,845. பாசனக் கால்வாய்கள் 2,774. சிறுபாசன ஆதாரங்கள் 1,206. சேதம் அடைந்த சாலைகளுடைய விவரத்தைப் பார்த்தால் - தேசிய நெடுஞ்சாலை 256.44 கிலோ மீட்டர். மாநில நெடுஞ்சாலைகள் 9,846.61 கிலோ மீட்டர். உள்ளாட்சி சாலைகள் 3,202.42 கிலோ மீட்டர். சேதம்

அடைந்த பாலங்கள் - பெரிய பாலங்கள் 62. சிறு பாலங்கள் 476. சேதம் அடைந்த கட்டிடங்கள் - சத்துணவுக் கூடங்கள் 700. ஊராட்சி ஒன்றியப் பணிகள் 1,745. அலுவலகக் கட்டிடங்கள் 824.

நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட, கண்காணிக்க, உடனடியாக மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு எல்லாம் அரசின் சார்பில் அனுப்பி வைக்கப் பட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அன்றாடம், தவறாமல் அறிக்கை அனுப்ப வேண்டும் என்று ஆணையிடப்பட்டார்கள். அவ்வாறு அறிக்கைகள் தலைமைச் செயலகத்திற்கு வந்த வண்ணம் இருந்தன. இதிலே நிவாரணத் தொகை ஒவ்வொரு துறையின் மூலமாக எப்படி வழங்கப்பட்டு இருக்கின்றது என்ற விவரத்தையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

வருவாய்த் துறையின் மூலமாக, மனித உயிர் இழப்பு - இதற்காக அளிக்கப்பட்ட நிவாரணம் ரூ. 22 இலட்சம். சேதமுற்ற குடிசைகளுக்காக ரூ. 37 கோடியே 16 இலட்சம். கால்நடை இழப்புக்காக ரூ. 60 இலட்சம். அரிசி, மண்ணெண்ணெய் வழங்கிய வகையில் ரூ. 2 கோடியே 94 இலட்சம். சேலை மற்றும் வேட்டிகள் வழங்கிய வகையில் ரூ. 11 கோடியே 67 இலட்சம். உணவுப் பொட்டலம் வழங்கிய வகையில் ரூ. 3 கோடியே 18 இலட்சம் இவைகள் எல்லாம் வருவாய்த் துறையின் மூலமாக வழங்கப்பட்டன.

பொதுப்பணித் துறையின் மூலமாக, நீர்ப்பாசனத் துறை மூலமாக ரூ. 10 கோடி. பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் மூலமாக ரூ. 1 கோடி. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை மூலமாக ரூ. 37 கோடியே 25 இலட்சம். மீன்வளத் துறை ரூ. 32 இலட்சம் வேளாண்மைத் துறை ரூ. 49 கோடியே 75 இலட்சம். தோட்டக்கலைத் துறை ரூ. 7 கோடியே 50 இலட்சம். கைத்தறி மற்றும் நெசவுத் துறை ரூ. 1 கோடி சிட்கோ ரூ. 1 கோடி. ஆதிதிராவிடர் நலத் துறை ரூ. 25 இலட்சம். ஊரக வளர்ச்சித் துறை ரூ. 5 கோடி. நகரப் பஞ்சாயத்துத் துறை ரூ. 3 கோடி. நகராட்சி நிர்வாகம் ரூ. 7 கோடி சென்னை மாநகராட்சி ரூ. 15 கோடி. சென்னை மாநகராட்சி உணவுப் பொட்டலங்கள் வழங்கியது ரூ. 1 கோடியே 14 இலட்சம். ஆக மொத்தம் 195 கோடி ரூபாயை நிவாரணத் தொகையாக அளித்திருக்கிறோம்.

அஃதன்னியில், சாலைச் சீரமைப்புக்கு, நிரந்தரமான சீரமைப்புக்கு - நிரந்தரம் என்றால் பல்லாண்டு காலத்திற்கு அல்ல; ஒரு ஐந்தாண்டுக் காலம், ஆறு ஆண்டுக் காலத்திற்கு - பழுது படாமல் - இப்பொழுதெல்லாம் இருக்கின்ற சாலைகள் ஒரு துளி தண்ணீர் வானத்திலிருந்து விழுந்தால், கரைந்து போய்விடுகிறது. தார் போட்ட சாலையா அல்லது உப்பு போட்ட சாலையா என்று தெரியாத அளவுக்கு கரைந்து போய் விடுகிற நிலைமை இருக்கிறது. இவைகளை எல்லாம் பக்கா சாலைகளாக, திடமான சாலைகளாக, நல்ல சாலைகளாக, மேடு பள்ளம் விழுந்து பல்லாங்குழிப் பலகை போல மாறி விடாத சாலைகளாக அமைக்கின்ற. நிரந்தரச் சாலைகளுக்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 345 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த வெள்ள நிவாரணத்திற்காக, இதிலே முதல் கட்டமாக 20 கோடி ரூபாய் அரசின் சார்பில் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக ஒதுக்கப்பட்ட தொகை 50 கோடி ரூபாய். இதற்கிடையில் வெள்ள நிவாரணப் பணிகள்எப்படி நடைபெறு கின்றன என்று கவனிக்க பலமுறை அமைச்சர் பெருமக்கள், குறிப்பாக நல்வாழ்வுத் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், சென்னை மாநகர மேயர் இவர்களை எல்லாம் கொண்ட கூட்டம், அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டம் தலைமைச் செயலகத்திலே என் தலைமையிலே நடைபெற்று நடவடிக்கை களை முடுக்கிவிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. அதற்குப் பிறகு 50 கோடி ரூபாய் இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்டது. மூன்றாவது கட்டமாக 125 கோடி ரூபாய் வழங்கப்பட்டபோது அப்போதும் நெல் பயிருக்கு ஆயிரம் ரூபாய் எக்டேர் ஒன்றுக்கு நிவாரணத் தொகை என்றும், பகுதி சேதம் அடைந்த நெல் பயிருக்கு 500 ரூபாய் என்றும்; நிலக்கடலை முழுமையாக சேதப்பட்டால் 2,500 ரூபாய் என்றும், பகுதி சேதமுற்றால் 1,250 ரூபாய் என்றும்; கேழ்வரகு, எள், சோளம், கம்பு முழுதும் சேதமுற்றால் 400 ரூபாய் என்றும், ஒரு பகுதி சேதமுற்றால் 200 ரூபாய் என்றும்; பயறு வகைகள், சூரியகாந்தி முழுச் சேதத்திற்கு 600 ரூபாயும், பகுதி சேதத்திற்கு 300 ரூபாயும், கரும்பு முழுச் சேதத்திற்கு 4,000 ரூபாயும், பகுதி சேதமென்றால் 2,000 ரூபாயும்,

மக்காச்சோளம் முழுச் சேதத்திற்கு 500 ரூபாயும், பகுதிக்கு 250 ரூபாயும்; பருத்தி முழுச் சேதத்திற்கு 1,500 ரூபாயும், பகுதிச் சேதத்திற்கு 750 ரூபாயும்; இதுதவிர மிளகாய், காய்கறிகள், வெங்காயம், வெற்றிலை, பூக்கள், கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, வாழை ஆகிய தோட்டப் பயிர்களுக்கு முழுச் சேதமென்றால் 4,000 ரூபாயும், பகுதி என்றால் 2,000 ரூபாயும் அளிக்கப்பட்டது.

தறிகளுக்கு, அவர்களையும் கைவிட்டுவிடாமல் அந்தத் தறிகளுக்கும் நிவாரண உதவியாக முழுவதும் சேதமடைந்த பருத்திக் குழித்தறி, அதாவது கைத்தறித் தறிகளுக்கு நிவாரணம் 2,000 ரூபாய். பகுதிச் சேதமடைந்தால் ஆயிரம் ரூபாய். முழுவதும் சேதமடைந்த பட்டுக் குழித்தறி என்றால் நிவாரணம் 3,500 ரூபாய், பகுதிச் சேதமடைந்த பட்டுக் குழித்தறி ஒன்றுக்கு நிவாரணம் ஆயிரம் ரூபாய் என்றும் வழங்கப்பட்டது.

ஆந்திராவுக்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கியது. தமிழ்நாட்டுக்கு இன்னும் வழங்கவில்லை என்ற குறையை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் அப்படி அவர்கள் குறைகள் சொல்வதன் மூலமாக மத்திய அரசுக்கு இந்த அரசினுடைய வேண்டுகோளை வலியுறுத்துகிறார்கள் என்ற அளவிலே நான் அவைகளை எல்லாம் எடுத்துக்கொள்கிறேன். மத்திய அரசைக் குறை சொல்வதாகவோ, மாநில அரசைக் குறை சொல்வதாகவோ, அவர்கள் யாரும் பேசியதாக நான் கருதவில்லை. இது பொதுப் பிரச்சினை. வெள்ள நிவாரணம் என்பது பொதுப் பிரச்சினை. ஆந்திராவிலே அந்த முதலமைச்சர் மத்திய அரசைக் கேட்டது 5 ஆயிரம் கோடி ரூபாய். அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை நிவாரணத் தொகை 142 கோடி ரூபாய்தான். நாம் ஏறத்தாழ 600 கோடி ரூபாய்க்கு மேல் கேட்டிருக்கிறோம். எவ்வளவு தருவார்கள் என்று தெரியாது. தராமல் இருந்து விடமாட்டார்கள். 25 கோடி ரூபாய் அறிவித்ததையே தரவில்லை, எனவே தரப்போகிறார்களா என்ற கேள்விக்கு இடமில்லை என்றே நான் கருதுகின்றேன்.

இந்த நிவாரணப் பணிகளைக் கவனிக்க, சேதத்தைப் பார்வையிட மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நேரிலேயே வந்தார்கள். அவர்கள் வந்து சென்ற பிறகு ஒரு குழு

அனுப்பப்பட்டது. அந்தக் குழுவும் வெள்ளப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டு, என்னையும், அதிகாரிகளையும் கலந்து பேசிச் சென்றார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கை இப்போது அங்கே பரிசீலிக்கப்பட்டு வருவதாக எனக்குச் செய்தி கிடைத்திருக்கின்றது. நாம் 630 கோடி ரூபாய் கேட்டிருக் கின்றோம். 5 ஆயிரம் கோடி ரூபாய் கேட்ட ஆந்திராவுக்கே 142 கோடி ரூபாய்தான் கிடைத்திருக்கும்போது 630 கோடி ரூபாய் கேட்டுள்ள நமக்கு எவ்வளவு கிடைக்கும் என்று தெரியாது.

ஆனால் இதுபோன்ற நிவாரணப் பணிகளுக்கு மத்திய அரசு 'National Calamity Relief Fund' என்ற ஒரு நிதியை வைத்திருக்கின்றது. அந்த நிதியிலிருந்து தரும்போது அதை மானியமாகவும தருவார்கள், வேறு இனத்தில் கடனாகவும் தருவார்கள். நமக்குத் தரப்போகின்ற பணம் முழுவதும் மானியமாக வேண்டும் என்றுதான் நாம் கேட்க இருக்கிறோம். இதுவரையிலே வரவில்லை என்றாலும் கூட, வருகிற 20-ஆம் தேதி அன்று மத்திய திட்டக் குழுவினுடைய கூட்டம் இருக்கிறது. மாநிலத் திட்டத்தைப்பற்றி பேசுவதற்காக, விவாதிப்பதற்காக வருகிற 20-ஆம் தேதியன்று டெல்லியில், மத்தியத் திட்டக் குழுவினுடைய கூட்டம் இருக்கிறது. அதற்குள் அந்த உதவித் தொகை, ஒரு வேளை வந்துவிடக்கூடும், வராவிட்டால், மத்தியத் திட்டக் குழுவிலே இந்தக் கருத்தை எடுத்து வைத்து, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கட்சி சார்பற்ற முறையில் எடுத்துள்ளகருத்துக்களையெல்லாம் அங்கே அவர்களிடத்திலே தொகுத்துக் கூறி, நீங்கள் நிதியை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள இருக்கிறேன்.

இதற்கிடையிலே நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று வெள்ள நிவாரண நிதியாக தமிழ்நாட்டிலே உள்ள தொழிலதிபர்கள், வணிகப் பெருமக்கள், பல்வேறு நிறுவனங் களைச் சேர்ந்தவர்கள், தனிப்பட்டவர்கள் - ஆளுநர் உரையிலே 14 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டி ருந்தாலும்கூட, இன்று வரையிலே வந்திருக்கிற தொகை 16 கோடியே 79 இலட்சம் ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்,

அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.

வெள்ள நிவாரணப் பணிகளிலே பெரும் ஊழல் நடை பெற்று விட்டது என்றெல்லாம் இங்கே ஒருசிலர் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்பொழுதுகூட, நான் கருதுவது, ஊழல் நடை பெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்னார்கள் என்றுதான் எடுத்துக் கொள்ளுகின்றேன். ஏதோ என்னையோ, இந்த அரசையோ குற்றம் சாட்டியதாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. ஊழல் நடைபெறக் கூடாது என்பதிலே கண்ணும்கருத்துமாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று அவர்கள் அறிவுரை கூறுவதற்காகச் சொன்னார்கள் என்று எடுத்துக்கொள்ளுகின்றேன். இது ஒரு பெரிய பட்டியல் போடுகின்ற அளவிற்கு அதிகாரிகளோ மற்றவர்களோ நடந்து கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஒருசில இடங்களில் தவறு நடக்காமலும் இல்லை. அதிலே குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் - வள்ளலார் மாவட்டம் என்று கருதுகிறேன். அங்கே வெள்ள நிவாரணத் தொகை குறைத்து வழங்கப்பட்டதாகப் புகார் கூறியதன் பேரில் 4 கிராம நிர்வாக அலுவலர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இதுபோன்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள்நேரடியாக எழுதிக் கொடுத்தாலும் அல்லது அஞ்சல் மூலமாக எழுதி அனுப்பினாலும் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாவட்டவாரியாக நிதி வழங்கியதிலேகூட ஏதோ பாரபட்சம் இருப்பதைப்போல, எங்களை ஏமாற்றி விட்டீர்கள் என்றெல்லாம் திரு. ஞானசேகரன் நேற்றுக்கூடப் பேசினார்கள். வேறு சில மாவட்டங்களிலும் சொன்னார்கள். மாவட்டவாரியாக இந்த நிதி எப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சென்னை மாவட்டத்திற்கு 12 கோடியே 66 இலட்சம்; அண்ணா மாவட்டத்திற்கு 16 கோடியே 86 இலட்சம்; எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கு 16 கோடியே 89 இலட்சம்; வடாற்காடு அம்பேத்கர்

மாவட்டத்திற்கு 4 கோடியே 34 இலட்சம்; லட்சங்கள் கூட வரவில்லை. இல்லை என்று சொன்னார் ஞானசேகரன்; ஆனால் 4 கோடியே 34 இலட்சம் தரப்பட்டுள்ளது. திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்திற்கு 9 கோடியே 36 இலட்சம்; விழுப்புர - இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு 20 கோடியே 70 இலட்சம்; தென்னார்க்காடு - வள்ளலார் மாவட்டத்திற்கு 24 கோடியே 80 இலட்சம்; சேலம் மாவட்டத்திற்கு 2 கோடியே 23 இலட்சம்; தர்மபுரி மாவட்டத்திற்கு 3 கோடியே 14 இலட்சம்; தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 11 கோடியே 44 இலட்சம்; நாகை - காயிதே மில்லத் மாவட்டத்திற்கு 11 கோடியே 31 இலட்சம்; திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திற்கு 7 கோடியே 92 இலட்சம்; புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2 கோடியே 82 இலட்சம்; தீரன்சின்னமலை மாவட்டத்திற்கு 15 இலட்சம்; பெரும்பிடுகு முத்தரையர் திருச்சி மாவட்டத்திற்கு 1 கோடியே 69 இலட்சம்; பெரம்பலூர் - திருவள்ளுவர் மாவட்டத்திற்கு 9 கோடியே 59 இலட்சம்; நீலகிரி மாவட்டத்திற்கு 1 இலட்சம்; இராஜாஜி மாவட்டத்திற்கு 60 இலட்சம்; சென்னை மாநகராட்சிக்கு 15 கோடி - இப்படி 171 கோடி ரூபாய் மாவட்டவாரியாக மொத்தமாக தரப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் இந்த அவைக்கு நான் அளிக்கிறேன்.

குறிப்பாக, விலைவாசியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள். எனக்கு முன் பேசிய நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கொறடா, நண்பர் திரு. சொக்கர் அவர்களும் அதைப்பற்றி ஒரு விளக்கம் அளித்திருக்கின்றார். அவர்கள் இன்றைக்குப் பேச, ஆரம்பிக்கும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். இன்றைக்குப் பேச வேண்டிய எதிர்கட்சியினுடைய தலைவர் இங்கு வர இயலாத காரணத்தால் நான் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றேன். அதற்கு மகிழ்ச்சி அடையவில்லை என்ற அந்த முன்னுரையோடு தன்னுடைய பேச்சைத் தொடங்கினார். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உடல் நலிவுற்று மருத்துவமனையிலே இன்றைக்கு இருக்கிறார். அவர் விரைவில் குணம் பெற்று இந்த அவை நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வேண்டுமென்ற என்னுடைய

விருப்பத்தை எல்லா உறுப்பினர்களின் சார்பாகவும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விலைவாசி உயர்வைப்பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. மணி அவர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. பழனிசாமி அவர்களும் மற்றவர்களும் இங்கே பேசியிருக்கின்றார்கள். தமிழ் மாநில காங்கிரசிலே சிலபேர் விலைவாசி உயர்வைப்பற்றி, கொஞ்சம் வேகமாகக்கூடப் பேசினார்கள். அவர்கள் வேகமாகப் பேசினாலும், பத்திரிகையிலே அது வேகமாக வராது. "விலைவாசியை உடனடியாகக் குறைக்க வேண்டும்'' என்று சப்தம் போட்டுப் பேசலாம். ஆனால் பத்திரிகையிலே வரும்பொழுது, "விலைவாசியைக் குறைக்க வேண்டும்" என்றுதான் அச்சாகும். எனவே, வேகமாக வராது. சிலபேர் தூண்டிவிடப் பார்க்கிறார்கள் நாம் மோதிக்கொள்ள. அதற்கு நாங்கள் இடம் தரமாட்டோம் என்பதை இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலே நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்.

காலையிலே நான் வழக்கமாக 'அக்காள்' என்று அழைக்கின்ற நம்முடைய பொன்னம்மாள் அவர்கள் பேசிய அந்தப் பேச்சிலேகூட அவர்கள், சிறுமலைத் திட்டம் 'எப்போது' என்று ஆத்திரமாகக் கேட்டாலும்கூட, பத்திரிகையிலே வரும் போது உருக்கமாக இருக்குமே தவிர, அது உணர்ச்சிமயமானதாக இருக்காது. அந்த உருக்கத்தை, தம்பி துரைமுருகன் உணர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீர்த்தேக்கத் திட்டத்திற்கு, வருகின்ற வருமானத்தைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார். அவர் மறந்திருப்பார் என்று கருதுகிறேன். மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டபோது - இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டிலேதான், முன்பு நான் முதலமைச்சராக இருந்தபோது, மாநிலத் திட்டக் குழுவை அமைத்தேன். அதை இந்தியாவிலேயுள்ள பல தலைவர்களும் பாராட்டினார்கள். ஒரு மாநிலத்திலே திட்டக் குழு அமைப்பது இதுதான் முதல் தடவை என்று மதிப்பிற்குரிய சி. சுப்பிரமணியம் அவர்கள்கூட - அன்று மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தார்கள் - அவரும்

அதைப் பாராட்டிப் பேசினார், அறிக்கை விடுத்தார். மாநிலத் திட்டக் குழுவை ஆரம்பிக்கும்போது, இதே தலைமைச் செயலகத்திலே நடைபெற்ற அந்த ஆரம்பக் கூட்டத்தில் நான் பேசியதை பலமுறை நான் பொதுப்பணித் துறை அமைச்சருக்கு நினைவூட்டியிருக்கின்றேன். என்ன சொன்னேன் என்றால், அணைக்கட்டுத் திட்டங்கள் அமைக்கப்படும்போது, எத்தனை விவசாயிகள் அதிலே பயன்பெறுகிறார்கள் என்று பார்க்க வேண்டும். எவ்வளவு அதன்மூலமாக, போட்ட பணம் வரும் என்று எதிர்பார்க்கக்கூடாது. ஒரு 100 விவசாயிகள் பயன் பெற்றால்கூட அதற்கு ஒரு அணைக்கட்டுத் திட்டம், ஒரு நீர்ப்பாசனத் திட்டம் தேவையென்றால், அதை நாம் செய்து கொடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இல்லை. பெரிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிவிட்டு, இந்தத் திட்டங் களுக்கும் பிறகாவது முன்னுரிமை தரவேண்டும். ஆனால், முதன் முதலாக அதற்கு உரிமை தர வேண்டுமென்றில்லை. இவைகளை அறவே கைவிட்டுவிடக்கூடாது. அநாதைப் பிள்ளைகளாக இவைகளை ஆக்கிவிடக் கூடாது என்று நான் அன்றைக்குச் சொல்லியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறுமலைத் திட்டம் பற்றி அவர்கள் சொன்னார்கள். சிறுமலையிலே இரயிலே கவிழ்ந்து போய்விட்டது என்று சொன்னார்கள். அவர்கள் பேசும் போது சிறுமலையாலே ஆட்சியே கவிழ்ந்து போய்விடும் என்ற அளவுக்கு எனக்கு பயம்கூட வந்துவிட்டது. அந்த அளவுக்குஅவர்கள் பேசினார்கள். ஆனால், உள்ளத்திலே ஒன்றுமில்லை. அவர்களுடைய தொகுதிக்கு உடனடியாக இந்தத் திட்டம் தேவையென்ற அளவிலேதான் அம்மையார் அவர்கள் அதைப் பேசினார்கள் என்று நான் எடுத்துக்கொள்கிறேன்.

அதைப்போல ஒவ்வொரு தொகுதிக்கும் தேவைகள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய சொக்கர் அவர்களும், நேற்றைக்குப் பேசிய நம்முடைய சுப்பராயன் அவர்களும், மற்றவர்களும், லட்சுமணன் அவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல, கவர்னர் உரையிலே பேசுகின்ற பேச்சுக்கள், இவைகளெல்லாம் அடுத்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே அந்தத் தொகுதிக்கான திட்டங்கள் இடம்பெற வேண்டும்

என்பதற்காகப் பேசப்படுகின்ற பேச்சுக்கள். எல்லாக் கோரிக்கைகளும் இடம்பெறுமா என்பது வேறு விவகாரம். இந்த அறிக்கையிலே இடம்பெறாவிட்டாலும் அடுத்து அறிக்கையி லேயாவது அது இடம்பெற வேண்டும். நம்முடைய லத்தீப் அவர்கள் எத்தனையோ திட்டங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர் சொன்ன ஊர்களையெல்லாம் பார்க்கும் போது, தவறாமல் தொகுதிக்கு போய்க் கொண்டிருக்கிறார் என்று நாம் நம்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். (சிரிப்பு) அந்த அளவுக்கு திட்டங்களையெல்லாம் அருமை நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார். அவைகள் அத்தனையும் நிறைவேறா விட்டாலும்கூட ஒன்றிரண்டு திட்டங்களை படிப்படியாக நிறைவேற்றுகின்ற அந்த நிலையை அரசு எடுக்கும் என்ற நம்பிக்கையை திட்டங்களைத் தெரிவித்த உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில் பொன்னி போன்ற சூப்பர் பைன், மிக உயர்ந்த ரக, மிக மிக உயர்ந்த ரக அரிசியினுடைய விலை வெளி மார்க்கெட்டிலே உயர்ந்திருக் கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அந்த உயர்வு எதனால் ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இங்கே ஏற்பட்ட வெள்ளம், ஆந்திராவில் ஏற்பட்ட பெரும் புயல், வெள்ளம், இயற்கைச் சீற்றத்தினால் விளைந்த சீரழிவு இவைகள் காரணமாக ஆந்திராவிலிருந்து இங்கே அரிசி வர முடியாத ஒரு நிலை, வருகிற அரிசியையும் தடுக்கின்ற நிலை, காரணம் அவர் களுடைய மாநிலத்தினுடைய தேவைக்காக தடுக்கின்ற ஒரு நிலை. அதைப்போல, தமிழகத்திலும் வெள்ளம், பெரும் மழை, பல இடங்களில் உடைப்பு எடுத்த நிலை. பயிர்களுக்கு நாசம், சேதம், அந்தக் காரணத்தினால் நாமும் சங்கடத்திற்கு ஆளாகியிருக் கின்றோம். கடந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் அதாவது இந்த ஆட்சி அமைவதற்கு முன்பு, புழுங்கல் அரிசி, சன்ன அரிசியினுடைய விலை ஒரு கிலோ 9.33 ரூபாயாக இருந்தது கடந்த டிசம்பர் மாதம் இது 10.84 ரூபாயாக உயர்ந்து, தற்போது 10.26 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது என்பதையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக் கின்றேன். புழுங்கல் அரிசி, சாதாரண அரிசி ஏப்ரல் 96-ல் ஒரு

கிலோ விலை 7.99 என்று இருந்து டிசம்பர் மாதம் 9.36 என்ற அளவிற்கு உயர்ந்து, சனவரி '97-ல் இப்போது 9.19 என்ற அளவிற்கு குறைந்திருக்கின்றது.

பச்சரிசி, சன்ன அரிசி, ஏப்ரல் 96-ல் ஒரு கிலோ விலை 9.79 ரூபாய் என்று இருந்து, கடந்த மாதம் டிசம்பர் 96-ல் 11.19 ரூபாய் என்று உயர்ந்து, இந்த மாதம் 10.85 ரூபாய் என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது. பச்சரிசி, சாதாரண அரிசி ஏப்ரல் 96-ல் 8.66 ரூபாய் என்று இருந்து, டிசம்பர் 96-ல் 9.69 ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்து இப்போது 11.97, ஜனவரியில் 9.45 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து, அரிசி விலை கடந்த மாதத்தைவிடக் குறைந்திருக்கிறது என்பது புரிகிறது. இதே நிலைதான் கடந்த ஆண்டுகூட, இப்படி உயர்ந்து, மறுபடியும் குறைந்தது என்ற நிலை இருந்திருக்கிறது.

அரிசியைத் தவிர்த்து மற்ற அத்தியாவசியப் பொருட்களை எடுத்துக்கொண்டால், ஒரு சில பொருட் களினுடைய விலை ஏறியிருந்த போதிலும், நம்முடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் படித்ததைப் போல். எல்லா பொருட்களினுடைய விலையும் ஏறிவிடவில்லை என்பதை எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக் கின்றேன். அத்தியாவசியப் பொருட்களைப் பற்றி நம்முடைய திரு. மணி அவர்களும் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். நம்முடைய அ.தி.மு.க. சார்பில் தலைவராக வீற்றிருக்கின்ற, சட்டமன்றத் தலைவராக வீற்றிருக்கின்ற (சிரிப்பு) தம்பி திரு. திருநாவுக்கரசு அவர்களும் இங்கே எடுத்துக் கூறினார்கள். மற்ற அத்தியாவசியப் பொருட்கள் என்று எடுத்துக்கொண்டால், இந்த வரியை நாம் நீக்கிய காரணத்தால் அல்லது குறைத்த காரணத்தால் விலை ஒன்றும் குறைந்துவிடவில்லை. வியாபாரிகள் சங்கத்திலேகூட ஒரு நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். திரு. அழகிரி படித்திருப்பார் என்று கருதுகிறேன். வியாபாரிகளை நம்பாதீர்கள் என்று திரு. அழகிரி இங்கே பேசியதைக் கண்டித்து அவர்கள் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். அதற்காக நான் திரு. அழகிரியையும் விட்டுக்கொடுக்க மாட்டேன்; வியாபாரிகளையும் விட்டுக் கொடுக்க மாட்டேன். பயப்படத் தேவையில்லை. நாங்கள் ஆட்சிக்கு

வருவதற்கு முன் ஒரு கிலோ துவரம் பருப்பு விலை, 1996 ஏப்ரலில் ரூபாய் 31.07 என்று இருந்தது; இப்போது ரூபாய் 28.83 என்று ஆகியிருக்கிறது. உளுத்தம் பருப்பு ஏப்ரல் 1996-ல் ரூபாய் 28.18 என்று இருந்தது, இந்த ஆட்சியிலே ரூபாய் 24.32 என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. பாசிப்பருப்பு விலை ரூ. 24.68 என்று ஏப்ரல் 1996-ல் இருந்த விலை, இந்த ஆட்சியில், இப்போது ரூபாய் 23.15 என்று ஆகியிருக்கிறது. கடலை எண்ணெய் ரூபாய் 39.73 என்று முன்பு இருந்த விலை, இந்த ஆட்சியிலே ரூபாய் 37.61 என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது. நல்லெண்ணெய் ரூபாய் 43.40 என்று இருந்த விலை இந்த ஆட்சியிலே ரூபாய் 39.79 என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. இவைகள் எல்லாம் சென்னை போன்ற சுற்றுப்புறங்களிலேயுள்ள கடைகளின் விலை. எனவேதான், கொஞ்சம் வெளிப்புறத் திலேயிருந்து இந்த விலைவாசிகளை அறிந்துகொள்ள வேண்டும் என்று, திருவண்ணாமலையிலே இருந்து ஒரு கடையினுடைய விபரங்களைக் கொண்டு வரச் சொன்னேன். அந்த விலையைப் படித்தால், திருவண்ணாமலையில் சனவரி 1996-ல் கடலைப் பருப்பு ஒரு கிலோ 17 ரூபாய்; இப்போது 14 ரூபாய் 50 காசு, துவரம் பருப்பு நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 1996-ல் 32 ரூபாய், இப்போது 26 ரூபாய். 1996 ஜனவரியிலே, உளுத்தம் பருப்பு 27 ரூபாய்; இப்போது 24 ரூபாய். பயத்தம் பருப்பு ஜனவரி 1996-ல், 26 ரூபாய் இப்போது 24 ரூபாய். மஞ்சள் 28 ரூபாய் சனவரி 1996-ல், இப்போது 24 ரூபாய். சீரகம் முன்பு 90 ரூபாய், இன்றைக்கு 70 ரூபாய். சோம்பு முன்பு 70 ரூபாய், இன்றைக்கு 55 ரூபாய். வெந்தயம் முன்பு 18 ரூபாய், இன்றைக்கு 16 ரூபாய். கடுகு முன்பு 20 ரூபாய், இப்போது 18 ரூபாய். மிளகாய் முன்பு 40 ரூபாய், இப்போது 38 ரூபாய். புளி போன்ற சில பொருட்கள், ஆந்திராவிலேயிருந்து வரவேண்டிய மிளகாய் போன்ற சில பொருட்களின் விலை, மிகுந்த அளவிற்கு குறையாவிட்டாலும் கூட, அதிகமாகிவிடவில்லை என்பதை இந்தப் பட்டியல் காட்டும் என்று கருதுகின்றேன். காய்கறி விலையுயர்வு பற்றியும் இங்கே கூறப்பட்டது. நான் ஏற்கெனவே சொன்ன காரணம்தான், பெருமழை பொழிந்ததால், இங்கே சென்னையை எடுத்துக் கொண்டால், காய்கறி விலை. கோயம்பேடு அங்காடியிலே ஒரு

விலை; அங்கிருந்து மெல்ல மெல்ல அந்தக் காய்கறி நகர்ந்து மயிலாப்பூருக்கு வரும்போது இன்னொரு விலை. ஏனென்றால் போக்குவரத்துச் செலவு, ஆட்டோவிலே வந்தால் அந்தச் செலவு; பேருந்திலே வந்தால் அந்தச் செலவு, இப்படி பகுதிக்குப் பகுதி மாறி, கோயம்பேட்டிலேயிருந்து மயிலாப்பூர் வருவதற்குள் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு காய்கறி விலை உயர்ந்து விடுகின்றது.

அதற்குக் காரணம் போக்குவரத்து வசதி சரியில்லை என்ற ஒன்றும் கூறப்படுகின்றது. பொது விநியோக முறை - அது சீர்திருத்தப்பட வேண்டும் என்பதை நம்முடைய நண்பர் மணி அவர்களும், திருநாவுக்கரசு அவர்களும் இங்கே நேற்றைக்கு கோடிட்டுக் காட்டினார்கள். பல கட்சிகளின் சார்பிலும், இந்திய தேசிய லீக்கின் சார்பிலும், நம்முடைய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் இந்தப் பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டன.

ஆனால் எனக்கு ஒரு வருத்தம். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் பேசியவர்கள், பெருமளவுக்கு இலங்கைப் பிரச்சினையில் நேரத்தை செலவிட்டு விட்டார்கள். பெருமளவு எல்.டி.டி.ஈ.-க்காக நேரத்தை செலவிட்டுவிட்டார்கள். கவர்னர் உரையைப் பற்றி அதிக நேரம் அவர்கள் பேசாத காரணத்தால், எனக்குக் கிடைக்க வேண்டிய பொருட்கள், கருத்துக்கள் அவர்களிடமிருந்து கிடைக்காமல் போய்விட்டதே என்று எனக்கு ஒரு வருத்தம் உண்டு. நிதிநிலை அறிக்கையிலேயாவது அந்தக் கவலையை அவர்கள் போக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

பொது விநியோக முறையில் ஒரு குழப்பம். குழப்பங் களெல்லாம் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் சட்ட மன்றத்திலிருந்து எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைத்து, அவர்கள் தருகின்ற பரிந்துரைகளைச் சிந்தித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக, அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களும் அந்தக் கருத்துக்களைக் கொண்டு வந்து என்னிடத்திலே கொடுத்து

இருக்கிறார்கள். அது ஆராயப்பட்டு வருகின்றது. அதற்கிடையில் எல்லோரும் சொன்ன ஒரு கருத்து, கூட்டுறவுத் துறையும், நுகர்-பொருள் வாணிபக் கழகமும், இவைகள் இணைந்து செயலாற்றாத காரணத்தால் பொது விநியோக முறையில் பல குளறுபடிகள் இருந்து வருகின்றன என்று சொன்னார்கள். அந்தக் கருத்தையும் ஏற்றுக்கொண்டுதான் கூட்டுறவுத் துறைக்கும், உணவுத் துறைக்கும் ஒரே அமைச்சராக இருக்கவேண்டும் என்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறோம். இதற்குப் பிறகும், பொது விநியோக முறையிலே, திட்டத்தைச் செம்மைப்படுத்திட, ஒரு உயர்மட்டக் குழு, வெளிமாநிலங் களுக்கு சென்று வந்த குழு, தந்துள்ள அந்தக் கருத்துக்களையும் பரிசீலித்து அவைகளையும் நடைமுறைப்படுத்த இந்த அரசு முன்வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது 3 ரேஷன் கார்டுகள் - குடும்ப அட்டைகள், சிவப்பு நிறத்திலே ஒன்று, பச்சை நிறத்திலே ஒன்று, மஞ்சள் நிறத்திலே ஒன்று என்று 3 அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன. சிவப்பு நிறத்திலே வழங்கப்படுகின்ற அட்டைக்கு எல்லாப் பொருட்களையும் ரேஷனில் வாங்கிக் கொள்ளலாம். பச்சை நிறத்திலே கொடுக்கப்படுகின்ற அட்டைகளுக்கு அரிசி நிச்சயமாக தரப்பட மாட்டாது, ஏனென்றால், 10,000 ரூபாய், 15,000 ரூபாய் மாதந்தோறும் சம்பாதிக்கக்கூடியவர்களுக்கு, வசதி படைத்த குடும்பத்தினருக்கு, அவர்களுக்கு அரிசி தரப்பட மாட்டாது. மற்ற பொருட்கள் ரேஷனில் தரப்படும். சிவப்பு கார்டுகளுக்கு எல்லாம் பொருட்களும், அரிசி உட்பட, எல்லாப் பொருட்களும் தரப்படும். இந்த மஞ்சள் கார்டுகளுக்கு, அவர்களின் விருப்பத்திற்கு விட்டுவிடுகிறோம். அரிசி வேண்டுமா, வேண்டாமா? என்று, அரிசி வேண்டும் என்றால் கொடுக்கிறோம். சிவப்பு கார்டுக்குத் தருகின்ற அதே ரேஷன் தரப்படும் 'எனக்கு அரிசி வேண்டாம், சர்க்கரையோ, மண்ணெண்ணையோ கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுங்கள்' என்று சொன்னால் இரண்டில் ஒன்றை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தரப்படும். இதுதான் மஞ்சள் கார்டுக்கு உள்ள இலக்கணம். இவைகளிலே ஏதாவது குளறுபடிகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதி அனுப்புவார்

களேயானால் அல்லது நேரிலே சொல்வார்களேயானால், அவைகளை சிந்தித்துப் பார்த்து ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி அமலுக்கு வருகின்ற இந்தத் திட்டத்தை - சிக்கல்களையெல்லாம் களைந்து எறிந்து - நிறைவேற்ற இந்த அரசு முன்வரும் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உள்ளாட்சிமன்றத் தேர்தல்களைப் பற்றியெல்லாம் இங்கே பேசப்பட்டது. அதிலே ஒன்றியத் தலைவர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சொன்னார்கள். மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தில் இந்த அரசுக்கு மாறுபாடே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் எந்தவிதமான மாறுபாடான கருத்தோ இந்த அரசுக்கு இல்லை. ஆனால் பஞ்சாயத்து ராஜ் சட்டம் வரும்பொழுதே அது இணைக்கப்பட்டு, அதை மாற்ற முடியாத ஒரு சூழ்நிலையிலே நாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எல்லாவற்றுக்கும் நேரடித் தேர்தல் வைத்து விட்டு, ஒன்றியத் தலைவர்களுக்கு ஏன் இல்லை என்பதை எண்ணும்போது வேடிக்கையாக இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது. அதனுடைய விளைவு, இன்றைக்கு வருந்தத்தக்க அளவிலும் இருக்கிறது. திருப்திகரமான நிலையிலும் இல்லை. ஆனால் அதையே சிந்தித்துக் கொண்டு, மாநில அரசின் சார்பாக மாற்றி அமைத்திருந்தால், இந்தத் தேர்தல் நடைபெற்று இருக்கவே முடியாது. அதைத்தான் நான் அந்த நேரத்திலேயே சொன்னேன். எப்படியோ தேர்தலை நடத்திவிடுவோம், பிறகு இருக்கின்ற சிக்கல்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் களைந்து எறிவோம் என்று அன்றைக்கே சொன்னேன். அதைப்போல இந்தக் கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அந்தக் கருத்தை நிலைப்படுத்த, நியாயப்படுத்த அந்தக் கருத்தை நடைமுறைப் படுத்த மத்திய அரசோடு கலந்து பேசி ஆவன செய்வதற்கு அரசு முன்வரும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் சுப்பராயன் அவர்கள், மாநிலத்திலே ஒரு திட்டக் குழு இருப்பதைப் போல, மாவட்ட திட்டக் குழுக்கள் இருந்திட வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே யார், யார் இடம் பெற

வேண்டுமென்றும் சொன்னார்கள். மாநிலத் திட்டக் குழுவில் 10, 15 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். மாவட்டத்திலே திட்டக் குழு என்று சொன்னால், அவர்கள் சொன்ன கணக்கின்படி பார்த்தால், அது ஒரு பெரிய குழுவாக ஆகிவிடும்.

டி.டி.சி. என்று ஏற்கெனவே ஒன்று இருந்தது, டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற பெயரில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் உள்ளன. அதிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள், அதிகாரிகள் இவர்களெல்லாம் இடம் பெற்று திட்டங்களைத் தீட்டுவார்கள். இப்போதும் ஒன்றும் மோசம் போய்விடவில்லை. உள்ளாட்சி மன்றங்களுடைய தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இவர்களெல்லாம் இடம் பெறுவதற்கு எந்த வகையிலே, எதிர்காலத்திலே உள்ளாட்சி மன்றத்திற்காக அதிகாரங்களைத் தரப்போகிறோம் என்று நிர்ணயித்து, அதை அறிவிக்கிற நேரத்திலே திரு. சுப்பராயன் அவர்களுடைய கருத்தும் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்த முடியுமா என்ற செய்தியை இந்த அவையிலேயே அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றதைப் பற்றி, நாம் ஏதோ அவசரப்பட்டு அறிவித்துவிட்டோம், தவறாக அறிவித்துவிட்டோம் என்றெல்லாம் குறைபாடுகள் சொன்னாலும் கூட, இப்போது 25-1-1997 அன்று தினமணியில் எழுதப்பட்ட தலையங்கத்தை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை. தலையங்கத்தில், "கருணாநிதி அரசு பொறுப்பேற்ற ஆறு மாதங்களுக்குள்ளாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்தி, அவை மீண்டும் ஜனநாயக வடிவம் பெற வழிவகுத்து விட்டது. தனி அதிகாரிகளின் தலைமையில் இயங்கி வந்த உள்ளாட்சி நிறுவனங்களில் இப்பொழுது மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு அஞ்சினார்கள். தில்லியிலிருந்து கடுமையான எச்சரிக்கைகள் வந்தபோதிலும், அரசு அசைந்து கொடுக்கவில்லை. வகைவகையான சாக்குப்போக்குகளைக் கூறி உள்ளாட்சித்

தேர்தல்களை கடைசி வரை தவிர்த்துவிட்டது. அந்தப் பின்னணியுடன் கவனிக்கும்போது ஆட்சிப் பொறுப்பேற்ற ஆறே மாதங்களுக்குள், தமிழகமெங்கும் பரவலாக அமைந்துள்ள 12,584 ஊராட்சிகளுக்கும், 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், 635 நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், 28 மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்கும், 104 நகராட்சிகளுக்கும் 6 மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தி முடித்தது பாராட்டுக்குரியது. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புக்களையும் கூடுதலாக நிதி ஆதார வசதிகளையும் செய்து தர அரசு முடிவு செய்திருப்பது மகிழ்ச்சி அளிக்கக் கூடியது." இதைத்தான் உறுப்பினர்களெல்லாம் இங்கே எதிரொலித்திருக்கிறீர்கள், வருகிற நிதிநிலை அறிக்கையில் என்னென்ன அதிகாரங்கள், என்னென்ன பொறுப்புகள், என்னென்ன நிதி உதவிகளெல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தரப்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இருக்கிறோம்.

மேலும் 'தினமணி' கூறுகிறது; "இந்த விஷயம் சட்டப் பேரவையில் கவர்னர் நிகழ்த்திய உரையில் முக்கிய இடம் பெற்றிருப்பதிலிருந்து. இதில் அரசு எவ்வளவு ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கிறது என்பது புலனாகிறது. உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் பொறுப்புகளை ஒப்படைப்பது சம்பந்தமாக, சட்ட – நிர்வாக மற்றும் நிதி அடிப்படையிலான கூறுகளை' ஆராயுமாறு மாநில திட்டக் குழுவை அரசாங்கம் கேட்டுக்கொண்டது. அதை யொட்டி, திட்டக் குழு செய்துள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொள்ளும் முடிவுகள் நிதி நிலை அறிக்கை கூட்டத் தொடரின்போது அறிவிக்கப்பட இருக்கின்றன. இம்முடிவுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்ட வரைவும் பேரவையிலே கொண்டு வரப்படும்' என்று தினமணி எழுதியுள்ள தலையங்கத்தினுடைய கருத்தைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்று எடுத்து வைத்த கோரிக்கைகளுக்கு நான் பதிலாக அளித்து, வருகிற நிதிநிலை அறிக்கைக்கு முன்பே உள்ளாட்சி மன்றங்களுக்கான அதிகாரங்கள், உரிமைகள், பொறுப்புக்கள் எவையெவை என்று ஆய்ந்து, பகுத்து, அவைகள்

வெளியிடப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய வல்லரசு அவர்கள் இங்கே பேசும்போது விவசாயிகளுக்கு எல்லோருக்கும் மின் இணைப்பை வழங்கி விடுங்கள் என்ற ஒரு கருத்தை வெளியிட்டார். இந்தியா முழுவதும் இன்றைக்கு எடுத்துக்கொண்டால் விவசாயிகளுடைய பம்பு செட்டுகளினுடைய தொகை 112 இலட்சம் ஆகும். 112 இலட்சம், இந்தியா முழுவதுமுள்ள விவசாய பம்பு செட்டுகளினுடைய எண்ணிக்கை. இதை 25 மாநிலங்களுக்கும், 7 யூனியன் பிரதேசங்களுக்கும் என்று வகுத்துப் பார்த்தால் ஒரு மாநிலத்திற்கு சராசரி 4 இலட்சம் பம்பு செட்டுகள் இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய தமிழகத்திலே மாத்திரமுள்ள பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 15 இலட்சம் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்வேன்.

1967-ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது 2 இலட்சம் பம்பு செட்டுகள்தான் இருந்தன. 1933-ஆம் ஆண்டுதான் தமிழ்நாட்டிலே மின்சாரம் எட்டிப் பார்த்தது. 1933-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு அறிமுகமான மின்சாரம், 34 ஆண்டுகளுக்குப் பிறகு கூட 2 இலட்சம் பம்பு செட்டுக் களுக்குத்தான் இணைப்பு என்ற அளவிலே அது வளர்ந்திருந்தது.திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1967-ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பிறகு. அண்ணா அவர்கள் அதிலே காட்டிய அக்கறையின் காரணமாகவும், தொடர்ந்து நாங்கள் அண்ணா வழியிலே அந்த அக்கறையை மேலு:ம காட்டி முயற்சித்த காரணத்தினாலும் வளர்ந்து வந்து, கடந்த ஆட்சி களிலே மேலும் வளர்ந்து, வளர்ந்து, இன்றைக்கு 15 லட்சம் பம்பு செட்டுகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன

1967-ஆம் ஆண்டு இரண்டு இலட்சமாக இருந்த பம்பு செட்டுகள், 1973-74-லே 6 இலட்சம் பம்பு செட்டுகளாக அது பெருகி இன்றைக்கு 15 இலட்சம் பம்பு செட்டுகள் என்ற அளவிற்கு வந்திருக்கின்றன. ஆண்டொன்றுக்கு 40 ஆயிரம் பம்பு செட்டு

களுக்குத்தான் இணைப்பு வழங்கப்பட முடியும். ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வழங்கப் படுகிறது. ஆனால் இணைப்புக் கேட்டு வந்திருக்கின்ற கோரிக்கைகள் எண்ணில் அடங்கா. இலட்சக் கணக்கில் வந்திருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடத்திலேயிருக்கின்ற பணத்தையெல்லாம் வாங்கினாலும்கூட அது முடியாத காரியம். எனவே, மெல்ல, மெல்ல, ஆனால் படிப்படியாக உறுதியாக எல்லா பம்பு செட்டுகளுக்கும் இணைப்பு தருகின்ற ஒரு காரியத்தை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக நம்முடைய ஞானசேகரன் அவர்களும், வேறு சில உறுப்பினர்களும், அ.தி.மு.க. சார்பில் பேசிய சுந்தரம் அவர்களும் எடுத்துக் கூறிய கருத்து, கள்ளச்சாராயம் இன்றைக்குப் பெருகிவிட்டது. அதை ஒழிப்பதாகச் சொன்னார்கள், அது ஒழிக்கப்படவில்லை என்றெல்லாம் இங்கே எடுத்துக் காட்டப்பட்டது. கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழித்துவிட்டதாக ஒரு அதிகாரி பத்திரிகையிலே அறிக்கை விட்டதாகக் கூடச் சொன்னார்கள். அந்த அதிகாரியிடம் நான் கேட்டேன். 'எனக்கே தெரியாமல் பத்திரிகையில் போட்டுவிட்டார்கள் என்று அவர் சொன்னார். நான் அப்படிச் சொல்லவேயில்லை; அப்படிப் போட்டுவிட்டார்கள் என்று அவர் சொன்னார். இந்தக் கள்ளச் சாராயத்திலே மாமூல் பெருகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டிய காரணத்தினாலேதான், மாமூலைஒழிப்பதற்காக காவல்துறை மதுவிலக்கு தனிப் பிரிவை இந்த ஆட்சி கலைத்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் கள்ளச்சாராயச் சோதனைகள் நடைபெற்று, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ப் பட்டிருக்கின்றன என்பதற்குச் சில குறிப்புகளை நினை வூட்டுகிறேன்.

மீன்சுருட்டியில் காவல்துறை நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 3,880 லிட்டர் கள்ளச் சாராயமும், 2,19,137 லிட்டர் ஊறலும் கைப்பற்றப்பட்டன. 207 பேர் கள்ளச்சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்பனை செய்தமைக்காகவும் கைது செய்யப்பட்டார்கள். 4 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த டிசம்பர் திங்களில், குமரி மாவட்டம் களியக் காவிளை காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் மதுவிலக்கு சோதனை செய்து டி.ஏ.சி. 5787 என்ற எண்ணுள்ள லாரி மற்றும் ஒரு ஜீப், ஒரு வேன், ஒரு கார் ஆகியவைகள் கைப்பற்றப்பட்டு, அவற்றிலிருந்த எரிசாராயம் 1,75,000 லிட்டர் கைப்பற்றப்பட்டது. புதிய அரசு அமைந்த பிறகு 1-6-1996 முதல் எடுக்கப்பட்ட நடவடிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வழக்குகள் 2,95,298. எப்படிப் பெருகியுள்ளது என்பதை இந்தக் கணக்கிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

கைது செய்யப்பட்ட நபர்கள் 2,81,893 பேர். கைப்பற்றி அழிக்கப்பட்ட கள்ளச்சாராயம் 35,47,425 லிட்டர். கைப்பற்றி அழிக்கப்பட்ட சாராய ஊறல் 2,99,53,398 லிட்டர். கைப்பற்றிய சாராயப் பாக்கெட்டுகள் 10,31,914. கைப்பற்றிய எரிசாராயம் 2,92,991 லிட்டர். கைப்பற்றிய மதுக் கசாயம் 59,755 லிட்டர். கைப்பற்றப் பட்ட போலி மது மற்றும் இரண்டாம் தர மது வகைகள் 1,26,218 லிட்டர். பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் 2,362. குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டோர் 227 பேர். நீதிமன்றங்களில் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ. 2,64,19,099. காவல் துறையினரால் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ. 4,49,25,394. கள்ளச் சாராயத்திற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்த வகையில் ஒரு டி.எஸ்.பி., 8 இன்ஸ்பெக்டர்கள், 11 சப்-இன்ஸ்பெக்டர்கள், 15 தலைமைக் காவலர்கள் மற்றும் 46 காவலர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 4டி.எஸ்.பி.கள், 8 இன்ஸ்பெக்டர்கள், 40 சப்-இன்ஸ்பெக்டர்கள், 14 தலைமைக் காவலர்கள், 198 காவலர்கள் ஆகியோர் கள்ளச் சாராயம் காரணமாக வேறு இடங்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒரு சப்-இன்ஸ்பெக்டர், 4 தலைமைக் காவலர்கள், 12 காவலர்கள் மீது கிரிமினல் வழக்கே போடப்பட்டிருக்கிறது. ஒரு டி.எஸ்.பி., 41 இன்ஸ்பெக்டர்கள், 46 சப்-இன்ஸ்பெக்டர்கள், 14 தலைமைக் காவலர்கள், 104 காவலர்கள் மீது துறையின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நடவடிக்கைகள் எடுத்தும்கூட, இதனால் அறவே கள்ளச் சாராயம் ஒழிந்து விட்டது

என்று நான் நம்பத் தயாராக இல்லை. மேலும் இதற்கு யார் யார் ஊக்கம் அளிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும்கூட தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு, மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள், உறுப்பினர்கள் சார்ந்துள்ள கட்சியிலே இருக்கின்றவர்கள் அத்தனை பேரும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். கள்ளச் சாராயப் பேர்வழிகளைப் பிடிப்பதிலும், அவர்களுக்குத் தண்டனை வழங்கினால் குறுக்கே நிற்காமல் இருப்பதிலும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தக் கள்ளச் சாராயத்தைப்போல, இன்னொரு கயமைச் செயல், இதைவிட மோசமான செயல், பல ஏழையெளிய, நடுத்தர, பாமர மக்களை, படித்த மக்களையும் ஏமாற்றிய ஒரு மோசடி, தமிழ்நாட்டில் பல ஆண்டு காலமாக நடைபெற்று, இந்த அரசு வந்த பிறகு, அந்த மோசடிப் பேர்வழிகள் எல்லாம் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலைகளிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். 168 கோடி ரூபாய் பொதுமக்களுடைய பணம், நிதிநிறுவனங்களின் மூலம் சுரண்டப்பட்டிருக்கிறது. மோசடி செய்த நிறுவனங்களின் பெயர்கள் :

தேவி கோல்டு ஹவுஸ் குரூப் கம்பெனிகள்,

ஈஸ்வரி குரூப் கம்பெனிகள்,

மேக்ஸிமா குரூப் கம்பெனிகள்,

சினேகம் குரூப் கம்பெனிகள்,

திருமகள் குரூப் கம்பெனிகள்,

ஒமேகா கமர்ஷியல் கிரடிட் அண்டு இன்வெஸ்ட்மென்ட்,

நியூ இந்தியா நிதி அண்டு முதலீடு,

லஷ்மி கோல்டு ஹவுஸ்,

ரமேஷ் கார்ஸ் குரூப்,

பாரதி ஜெம்ஸ் அண்டு ஜுவல்ஸ் குரூப்,

கார் சென்டர்,

மதுவந்தி நிதி,

சூரியா எஸ்டேட்,

எஸ்.கே.எஸ். கோல்டு ஹவுஸ்,

ஸ்ரீராமுலு செட்டி ஜுவல்லரி அண்டு நிதி,

சென்னை மோட்டார் நிதி அண்டு உத்தரவாதம் நிறுவனம்,

தட்சிணா குரூப்,

இந்த மோசடி நிதி நிறுவனங்கள் எல்லாம், பத்திரிகைகளில், டி.வி.க்களில் விதவிதமான விளம்பரங்களை வெளியிட்டு, அவர்கள் சொல்லுகின்ற வட்டியைப் பார்த்து ஏமாந்துபோய், பல பேர் இந்த நிறுவனங்களிலே தாங்கள் உழைத்து, கஷ்டப்பட்டு சம்பாதித்த தங்களுடைய பணத்தின் ஒரு பகுதியைக் கொண்டு போய் கொடுத்து, ஏமாந்த நிலையிலே, 168 கோடி ரூபாய் இன்றைக்கு சூறையாடப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து, எங்களுடைய பணத்தைத் திருப்பி வாங்கித் தாருங்கள் என்று கேட்டவண்ணம், இழந்த மக்கள், பொருளிழந்த மக்கள், கண்ணீரும் கம்பலையுமாக கையேந்தி நிற்கின்றார்கள். அந்தக் கஷ்டத்தை எப்படித் தீர்ப்பது என்பதற்கு சட்டப்பூர்வமான நிலைகளை அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்கிடையில், நிறுவனங்களையெல்லாம் கட்டுப்படுத்த ஒரு புதிய சட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே அரசு கொண்டுவரவும் இருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அந்தச் சட்டமும் வரவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, இந்த நிறுவனங்கள் மீது நடைபெறுகின்ற வழக்குகளைக் கூர்மைப்படுத்த, விரைவுபடுத்த, தொகுத்து ஒன்றாக்கி நடத்திட, தனி நீதிமன்றமே அமைக்கப்பட்டு, அந்த நீதிமன்றத்திலே இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு, இழந்த பொருள்களில் ஒரு முக்கால் பகுதியாவது அவர்களுக்குத் திரும்பக் கிடைக்கக்கூடிய ஒரு நிலையை அரசு நிச்சயமாக ஏற்படுத்தும் என்ற உறுதியை, பொருளிழந்தவர்களுக்கு எல்லாம் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

அதேபோல், சந்தனக் கட்டை கடத்தல் பற்றியும், குறிப்பாக நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மலைகள் எல்லாம் மொட்டையாக இருக்கின்றன என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். எல்லா சந்தன மரங்களும் போய் விட்டன என்றெல்லாம் சொன்னார்கள். இந்த ஆட்சி, சந்தனக் கடத்தல் காரர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. எந்த ஆட்சியும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. ஆனால், கடந்த ஆட்சிகளைவிட, இந்த ஆட்சி, மேலும் தீவிரமாக, சந்தனக் கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1995 ஆம் ஆண்டிலே 13-5-1995 முதல் 31-12-1995 வரை கண்டு பிடிக்கப்பட்ட குற்றங்கள் 1690; 1996-இல் 13-5-1996 முதல் 31-12-1996 முடிய இந்த ஆறு ஏழு, மாத காலத்தில் கண்டுபிடிக்கப் பட்ட குற்றங்கள் 2107. சந்தனக் கட்டைகளுடைய அளவு - 1995 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட சந்தனக் கட்டைகளின் அளவு 362 டன்; இப்போது 561 டன் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதைச் சொன்னால், கேட்கக்கூடும் முன்பு 362 டன் தான் திருட்டுப் போயிருக்கிறது. இப்போது நிறைய போயிருக்கிறது என்று கூடச் சொல்லக்கூடும். அதுவல்ல; நிறைய கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. போவது, போய்க் கொண்டுதான் இருக்கிறது. நான் இல்லை யென்று மறுக்கவில்லை. 561 டன் சந்தனக் கட்டை இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. முன்பு பிடிக்கப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு 6.34 கோடி ரூபாய். இப்போது 12.69 கோடி ரூபாய்க்கான சந்தனக் கட்டைகள் அவைகள் கண்டுபிடிக்கப்பட்டு, பறிக்கப்பட்டிருக்கின்றன. பிடிக்கப்பட்ட வாகனங்களினுடைய எண்ணிக்கை முன்பு, 1995-இல், 367. இப்போது 527. அதிலே எந்த வாகனத்தையும் கடந்த ஆட்சியிலே பறிமுதல் செய்யவில்லை.

இப்போது 355 வாகனங்கள் பறிமுதல் செய்யப் பட்டிருகின்றன. கடந்த ஆட்சியிலே 94-ஆம் ஆண்டு 788 டன் சந்தனக் கட்டைகள் ஏலம் விட்டதற்கு 18 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. இப்போதும் அதே அளவு 1996-ல் 790 டன், 2 டன் தான் கூட. இதை ஏலம் விட்டதில் கிடைத்திருக்கக் கூடிய பணம் 41 கோடி ரூபாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஒரு வேளை

அன்றைக்கிருந்த நிலவரத்திலே ஏலம் அப்படிப் போயிருக்கலாம். இருந்தாலும் சந்தனக் கட்டை விவகாரத்திலே யாரையும் நாம் விட்டு விடவுமில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்களையும் விட்டுவிடவில்லை. சந்தனக் கட்டைகள் மூலமாக கிடைக்க வேண்டிய ஏலத் தொகையையும் நாம் விட்டுவிடவில்லை. இதிலே உஷாராக இருக்கிறோம். இன்னும் உஷார் தேவை என்பதை மறந்துவிடாமல் இருக்கின்றோம்.

சில உறுப்பினர்கள், அதிலும் குறிப்பாக திருநாவுக்கரசு பேசும்போது ரவுடிகளைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு 5-7-1996-ல் எழும்பூர் நீதிமன்றத்திலே நடைபெற்ற கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட மாலைக்கண் செல்வம் மற்றும் நம்பி என்ற ரவுடிகள் அன்றைக்கு இரவே கைது செய்யப்பட்டார்கள். ரவுடித்தனம் நடைபெறலாம்; கொலைகள் நடைபெறலாம், இருந்தாலும் அதை உடனடியாக கண்டுபிடித்து தண்டிக்கின்ற அந்தக் காரியங்கள் தொடர்ந்து இந்த ஆட்சியில் நடைபெற்று இருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

அதே கலாச்சாரம்தானே இப்போதும் என்று கேட்டுவிடக் கூடாது. இப்போது இருந்தாலும் கூட, அந்தக் கொலை நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும்கூட, விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடை பெற்றாலும்கூட உடனடியாக இந்த அரசு, காவல்துறை நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்கின்ற அந்தப் பொறுப்புமிகுந்த காரியத்தை நடத்தியிருக்கிறது என்பதற்குத்தான் இவைகளை எல்லாம் சொல்கின்றேன். 23-7-1996 அன்று மாட்டு சேகர் என்று ஒரு ரவுடியும் அவனது நண்பர்களும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்கள். இந்த அவையிலேயே பலரும் பாராட்டி இருக்கிறார்கள். ரவுடிகளை அடக்குவதற்கு இந்த அரசு மேற்கொண்டிருக்கின்ற நடவடிக்கையையும், காவல்துறை அதன் காரணமாக மேற்கொண்டிருக்கின்ற கடமைகளையும் இந்த அவையிலேயே பலரும் பாராட்டியிருக்கிறார்கள்.

27-7-1996 புரசைவாக்கத்தில் ரவுடிகள் செந்தில்குமார் என்ற குமார், குமரகுருபரன், முத்துக்குமார், குமரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருக்கிறார்கள். 31-7-1996 அன்று

வளசரவாக்கம் சுதாகர் ரெட்டி அவர்களின் மகன் சுத்தீரை கடத்திச் சென்ற ரவுடிகள் ஆசைத்தம்பி,. மனோ மற்றும்கோபால் ஆகியோர் காவல்துறையால் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். அதைப்போலவே கபிலன் என்ற ஒரு பெரிய ரவுடி காவல்துறையால் அடையாறு பக்கத்திலே சுட்டுக் கொல்லப்பட்டான். இவர்கள் எல்லாம் சுட்டுக் கொல்லப்பட்டபோது மகிழ்ச்சி தெரிவித்து வரவேற்று, பாராட்டியவர்கள் பலர் உண்டு. ஆனால் திருநாவுக்கரசு அவர்களுக்கு சொல்லிக் கொள்கின்றேன். ஆசைத்தம்பி, மனோ இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, அவர்களுடைய தலைவி, செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுத்த அறிக்கையை நாம் மறந்துவிடக் கூடாது. என்ன அறிக்கை விடுத்தார்கள் என்றால், 'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எதிராக பொய் வாக்குமூலம் கொடுக்கும்படி கருணாநிதி தலைமையிலான இன்றைய தி.மு.க. அரசு ஆசைத்தம்பியை நிர்ப்பந்தப்படுத்தி வந்ததாகக் கூறப்படுகிறது. ஆசைத்தம்பி அத்தகைய பொய்யான வாக்குமூலத்தைக் கொடுத்தால் அவரை சிறையில் நல்ல முறையில் நடத்துவதாக உறுதி அளித்ததாகக் கூறப்படுகிறது. தான் பொய் வாக்குமூலம் கொடுக்கமுடியாது என்று அவன் கூறியதாகவும் பின்னர் சில நாட்கள் காவல் துறையினர் கொடுத்த நெருக் கடியினால் அதற்கு சம்மதம் தெரிவித்ததாகவும் தெரிகிறது. ஆனால் - கூறப்படுகிறது, தெரிகிறது' என்று ஜாக்கிரதையான வார்த்தைகளைப் போட்டிருக்கிறார்கள் - ஆனால் காவல் துறையினரின் கவனக்குறைவினால் அவர்களுடைய கண்காணிப்பில் ஒளிந்து இருந்த ஆசைத்தம்பி அந்த இடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டாதாக சொல்லப்படுகிறது. இதற்குப் பிறகுதான் காவல் துறையினரால் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட, பார்த்ததும் துப்பாக்கிச் சூடு என்ற நாடகம் நடத்தப் பட்டது என்றும், அந்த போலிச் சம்பவத்தினால் லயோலா கல்லூரி அருகில் ஆசைத்தம்பி சுட்டுக்கொல்லப்பட்டான் என்று நம்பகமான தகவல் வந்துள்ளது' என்று ஒரு பொறுப்புள்ள, முன்னாள் முதலமைச்சராக இருந்தவர்கள், இன்றைய ஒரு பெரிய கட்சியினுடைய தலைவர் என்று சொல்லிக்கொள்பவர்கள், ரவுடிகள் ஒழிக்கப்படுகிற நேரத்தில், பலரும் பாராட்டுகிற நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு அறிக்கையை வெளியிட்டது சரிதானா

என்பதை திருநாவுக்கரசு போன்றவர்களுடைய சிந்தனைக்கே நான் விட்டுவிடுகிறேன். ஏனென்றால் தினந்தோறும் ரவுடிகளுடைய தொல்லை இன்றைக்கும் இருக்கிறது. ஒரு 5, 6 பேரை சுட்டுக் கொன்றுவிட்ட காரணத்தால் ரவுடி ராஜ்யமே ஒழிந்துவிட்டது என்று சொல்லமுடியாது. ரவுடிகள் ஓரளவுக்கு இன்றைக்கு அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அச்சத்தை ஏற்படுத்தியிருப்பது இந்தக் காவல் துறை, இந்த அரசு. இந்த அரசை ஊக்கப்படுத்தி, காவல் துறையை ஊக்கப்படுத்தி, இந்த ரவுடி ராஜ்யத்தை ஒழிப்பதற்கு எல்லோரும் முன்வர வேண்டும். அந்த வகையிலே தலைவி கொடுத்த அறிக்கையை மறந்துவிட்டு, தம்பி திருநாவுக்கரசு அவர்கள் ரவுடி ராஜ்யத்தை ஒழிக்க வேண்டுமென்று முன்வந்து சொன்னதை நான் வரவேற்று, பாராட்டி மகிழ்கின்றேன்.

கொலைகளைப் பற்றி இங்கே பேசுகிறபோது நம்முடைய பா.ஜ.க. உறுப்பினர் நண்பர் வேலாயுதம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கடந்த சில வருஷங்களில் அவருடைய கட்சியைச் சேர்ந்த 27 பேர் கொல்லப்பட்டிருப்பதாக இங்கே அவர்கள் உருக்கமாகச் சொன்னார்கள். இது ஏற்கெனவே பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. பா.ஜ.க.-வினுடைய தலைவர்கள் கொடுத்துள்ள அந்தச் செய்தி 'இந்த ஆட்சியிலே' என்று சில பத்திரிகைகளிலும், 'கடந்த சில ஆண்டுகளில்' என்று சில பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. எனவேதான், இந்த 27 கொலைகளும் இந்த ஆட்சியில் நடைபெற்றது என்று யாரும் எண்ணிக்கொள்ளக் கூடாது என்பதற்காக அந்த விவரங்களையும் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

1989-ஆம் ஆண்டு, அதாவது 31-8-1989 அன்று கோவையில், கழக ஆட்சியின் போது, வீரகணேஷ் என்ற இந்து முன்னணிக்காரர் படுகொலை செய்யப்பட்டார். 24-3-1990 அன்று திண்டுக்கல்லில் நாகராஜ் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் தி.மு.க. ஆட்சியில் நடைபெற்றவை. அதற்குப் பின்னால் வந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் 5-9-1991 அன்று கோவையில், வீரசிவா என்ற சிவக்குமார் கொலை

செய்யப்பட்டார். 4-12-1992 ராமேஸ்வரத்தில் முனியசாமி என்பவர் கொலை செய்யப்பட்டார். 8-8-1993 சென்னையில் குண்டு வீச்சில் 11 பேர், காசிநாதன், தேசிகன், சேஷாத்திரி, ராமசுப்பிரமணியன், பாலன், ராஜேந்திரன், ராமகிருஷ்ணரெட்டி, பிரேம்குமார், மோகன பிரேம்குமார், லலிதா,ரவீந்திரன் ஆகிய 11 பேர் கொல்லப்பட்டார்கள். 10-10-1994 அன்று மதுரையில் ராஜகோபாலன், இந்து முன்னணித் தலைவர் கொலை செய்யப்பட்டார். 14-4-1995 அன்று சென்னையில் பைபிள் சண்முகம் என்பவர் குண்டு வீச்சினால் கொலை செய்யப்பட்டார். 15-4-1995 அன்று சென்னை புதுப்பேட்டையில் பிரபு என்பவர் கொலை செய்யப்பட்டார். 16-4-1995 அன்று கோவையில் ராஜேந்திரன் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். 3-7-1995 அன்று நாகையில் திருமதி தங்கம் என்பவர் குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டார். 5-7-1995 அன்று நாகையில் முருகன் என்பவர் கொலை செய்யப்பட்டார். இவைகள் எல்லாம் முன்பு நடைபெற்றவை. பிறகு இந்த ஆட்சியிலே என்று எடுத்துக் கொண்டால் 1-12-1996-ல் உத்தமபாளையத்திலே ஆறுமுகம், 3-1-1997-ல் ரங்கநாதன், 10-1-1997-ல் எஸ்.டி. மாணிக்கம் துரைராஜ், இன்று தாம்பரத்தில் ராமச்சந்திரன், என்ற இந்தக் கொலைகள்.

நான் இந்த எண்ணிக்கையை ஒப்பிட்டுக்காட்டி இந்த ஆட்சியைவிட அந்த ஆட்சியிலே அதிகக் கொலை, அந்த ஆட்சியைவிட இந்த ஆட்சியிலே குறைவான கொலை என்று கூற, அந்த வாதத்திற்கு வர நான் விரும்பவில்லை. இப்படி ஒரு நிலை, தமிழகத்தில் இந்து முன்னணியினர் மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடையிலே ஏற்பட்டுள்ள நிலையை வரவேற்பதற்கு நாம் யாரும் தயாராக இருக்க முடியாது. சொல்லிக் கொண்டே இருக்கிறோம். ஒவ்வொரு முறையும் பேசிக்கொண்டே இருக்கிறோம். இது பெரியார் பிறந்த மண், காமராஜர் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா பிறந்த மண், காயிதே மில்லத் பிறந்த மண், இங்கே மதவாதங்களுக்கு, சாதிச்சண்டைகளுக்கு இடமில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்திலே அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தகைய வன்முறைச் செயல்கள் மதவெறியின் காரணமாக நடைபெற்று விடுகின்றன. மதவெறி ஆட்டத்திலே

ஈடுபடுகின்றவர்கள், இந்து முன்னணியின் பெயரால் ஈடுபட்டாலும், அல்லது இஸ்லாமிய சமுதாயத்தின் பெயரால் ஈடுபட்டாலும், எந்த அமைப்பின் பெயரால் ஈடுபட்டாலும் அவர்கள் எல்லாம் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஒரு கடுமையான நடவடிக்கையின் மூலம் அவர்களை எல்லாம் சீர்திருத்த முடியும் என்றால் அந்தக் கடுமையான நடவடிக்கையை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்பதை நான் திட்டவட்டமாக இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொலைகள் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் ஆகாது. கருத்துக்குக் கருத்து, எழுத்துக்கு எழுத்து, பேச்சுக்குப் பேச்சு என்கின்ற அளவில் எண்ணங்களை வெளியிட்டு சிலரைத் திருத்த முற்பட வேண்டுமே அல்லாமல் கொலையினால் எப்படி ஒரு கொள்கையைத் திணித்துவிட முடியும்; ஒரு கொள்கையைப் பரப்பிவிட முடியும் என்பதை அவர்கள் இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இஸ்லாமிய சமுதாயத்தினுடைய மன்றங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எண்ணிப்பார்க்க வேண்டும். இத்தகைய தீவிரவாதிகள் இருதரப்பிலும் இருக்கின்றார்கள். இஸ்லாமிய சமுதாயத்திலே ஒரு கொலை விழுந்தால் மறுநாள் இந்து சமுதாயத்திலே இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட வேண்டும் என்று நியதி இல்லை. அதைப்போல தொடர்ந்து நடக்கக்கூடாது என்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டும், சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக பழிக்குப்பழி என்ற முறையிலே வெட்டிக்கொண்டே போனால் நாடு காடாகிவிடும். இரத்தக் களறிதான் மிஞ்சும். அதை எண்ணிப்பார்த்திட வேண்டும்.

நம்முடைய நண்பர் பழனிபாபா கொல்லப்பட்டுவிட்டார். அவர் தமிழ்நாட்டிலே உள்ள எல்லாத் தலைவர்களிடத்திலும் நட்பும் கொண்டிருந்தார், விரோதமும் கொண்டிருந்தார். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே நண்பராக இருந்தார். பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சியிலே அவர் கண்டிக்கப்பட்டார், தண்டிக் கப்பட்டார் என்றுகூடக் கருதுகிறேன். சிறைச்சாலைக்குச் சென்றாதகக் கூட நினைவு. பிறகு எனக்கு நண்பராக இருந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைகளுக்கு ஆதரவாகப் பேசினார். பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்ப்பாகவும் பேசினார். அப்துல் சமது அவர்களுக்கு நண்பராக இருந்தார். லத்தீப் அவர்களுக்கு நண்பராக இருந்தார். பிறகு இந்த இருவருமேகூட, அவர் நம் மேடைக்கு வராமல் இருப்பது நல்லது என்று சொல்லுகின்ற அளவுக்கு அவருடைய பேச்சு அதிக உஷ்ணத்தோடு, அதிகக் கொதிப்போடு அமைந்ததையும் எல்லோரும் அறிவீர்கள். எனவே, அவர் பேசியது அவருடைய கொலைக்குக் காரணமாக இருக்கக்கூடாது. அதற்குச் சட்டம் இருக்கிறது. அந்தப் பேச்சை எதிர்கொள்ளக்கூடிய வாதங்கள் மற்றொரு முனையிலே இருக்க வேண்டுமேயல்லாமல் அது கத்திமுனையில் தீர்மானிக்கக்கூடிய செய்தியாக இருந்துவிடக் கூடாது. பழனிபாபாவினுடைய கொலைக்கு, நானும் இந்த அரசும், ஏன் இங்கே வீற்றிருக்கின்ற அவை உறுப்பினர்கள் அத்தனை பேரும் தங்களுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்கள்தான், தெரிவித்துக் கொண்டிருக் கின்றோம். இருந்தாலும் கூட, இப்படிப்பட்ட நிகழ்வுகளிலே, எதிரிகள் தப்பித்துவிடாமல், கொலையாளிகள் தப்பித்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய அந்தக் கடமை உணர்வு அரசுக்கும் இருக்கிறது, காவல்துறைக்கும் இருக்கிறது. அந்தப் பொறுப்பை நாங்கள் நிறைவேற்றுவோம் என்ற உறுதியையும், இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உரையினிடையே நம்முடைய சுப்பராயன் அவர்கள், கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில், விற்பனையாளர்களுடைய பணியைப் பற்றியும், அவர்களுக்கு இந்த அரசு செய்ய வேண்டிய சலுகை அல்லது உரிமை அல்லது உதவி, இதைப்பற்றியும் நேற்றைக்கு எடுத்துச் சொல்லி, அதற்கு முதல்வர் பதில் அளிப்பார் என்று கருதுகிறேன் என்று எண்ணுவதாகச் சொன்னார். சொல்லிவிட்டு என்னிடத்திலே இன்றைக்கு ஊருக்குப்போகிறேன் என்று சொன்னார். வரமாட்டார் என்று நான் அதைப்பற்றிக் கவலைப் படாமல் இருந்து விட்டேன். பிறகு அவர் வந்துவிட்டார். நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புவது, 5 ஆண்டுகள் பணி முடித்த விற்பனையாளர்களுக்கு 430 ரூபாய் அடிப்படைச்

சம்பளம் என்றும், 5 ஆண்டுகள் பணி முடிக்காதவர்களுக்கு 800 ரூபாய் தொகுப்பு ஊதியம் என்றும் வழங்கப்பட்டு வந்தது. அதை, இந்த அரசு 800 ரூபாய் தொகுப்பு ஊதியத்தை. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, 11-9-1996 அன்று Retrospective effect - உடன் 900 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இதனால் 84 இலட்சம் ரூபாய் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அதிகமாகச் செலவாகும். அரசுக்கு 63 இலட்சம் கூடுதல் மானியச் செலவும் ஏற்படும். கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 3326 பேர், கட்டுனர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ரூ. 600 தொகுப்பு ஊதியமாகப் பெற்று வந்தார்கள். இந்தத் தொகையை 800 ரூபாயாக Retrospective effect - உடன் 11-9-1996 அன்று உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு 80 லட்ச ரூபாயும், அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு 27 இலட்சம் ரூபாயும் கூடுதலாகச் செலவாகும். இதற்க மேலும் அவரது கோரிக்கை வளருமேயானால், அதைப் பற்றியெல்லாம் அலட்சியப்படுத்தி விடாமல், நிதிநிலை அறிக்கைக்கு முன்பு அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் - முடிவாகச் சொல்லிவிட முடியாது - பரிசீலிக்கும் என்பதை மாத்திரம் நான் திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஞானசேகரன் பேசும்போது ஒன்றைச் சொன்னார். தமிழ் ஆட்சி மொழித் துறை கடந்த ஆண்டில் என்ன செய்தது என்று கேட்டார். கேள்வியிலேயே அவர் அந்தக் கருத்தை வைத்தார். கேள்வி எழுப்பினால்தான் கூடாக இருப்பதாகத் தெரியும் என்ற எண்ணத்தோடு அவர் அந்தக் கருத்தை இங்கே வைத்தார். இந்த ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகுதான், தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ்ப் பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்காக ஒரு தனி அமைச்சகத்தையே உருவாக்கி இருக்கிறது என்பதை அவர் அறியாதவர் அல்ல. ஆட்சி மொழித் துறையால், தமிழ் வளர வேண்டுமென்பதற்கு, உடனடியாக 500 புதிய தமிழ் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. தட்டச்சுப் பொறிக்கும் தமிழுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டுவிடக் கூடாது. தமிழில் அடிக்க வேண்டிய செய்திகளையெல்லாம், தரவேண்டிய செய்தி களையெல்லாம் அடிப்பதற்கு ஒரு தட்டச்சுப் பொறி தேவை. அதில் 500 பொறிகள் இப்போது வாங்கப்பட்டிருக்கின்றன. அப்படி

வாங்கிய காரணத்தினால் தற்போது 874 ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகள் 374-ஆகக் குறைக்கப்பட்டுவிட்டன. 304 தமிழ் தட்டச்சுப் பொறிகள் 804 ஆகக் கூடியுள்ளன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எடுக்கப்பட்ட 500 ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளின் விசைப்பலகைகளும், தமிழில் மாற்றப்பட உள்ளன. Key Board, இவைகளெல்லாம் கூடத் தமிழிலே மாற்றப்பட உள்ளன. அரசு ஆணைகள் அனைத்தும் தமிழிலும் வெளியிடப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும் ஆணைகள் வரவேண்டும். தமிழிலும் அந்த ஆணைகள் வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் தமிழிலே எழுதும் கடிதங்களுக்கு, வேண்டு கோள்களுக்கு, முறையீடுகளுக்கு, அரச அதிகாரிகள் தமிழிலேயே அவர்களுக்கு விடை தரவேண்டுமென்றும்; அப்படி எழுதாத அலுவலர்கள் குறித்துச் செய்தி வந்தால் தக்க நடவடிக்கைக் குறிப்பும் அவர்களுக்கு இப்போது அனுப்பி வைக்கப்படுகிறது. கோப்புகளிலே கூட கூடுமானவரையில் நான், முழுவதும் என்று சொல்லமாட்டேன், கூடுமானவரையிலே, பெரும்பாலும் தமிழிலேயேதான் இன்றைக்குக் கோப்புகள் அமைச்சர்களுக்கு வருகின்றன. ஒரு சில கோப்புகள், பழைய கோப்புகள், தொடர்ந்து எழுதப்பட வேண்டிய கோப்புகள், அவைகள் வேண்டுமானால் ஆங்கிலத்திலே வரலாம். கவர்னருக்கு அனுப்பப்பட வேண்டிய கோப்புகள் இதுவரையில் தமிழிலே வரவில்லை. ஆங்கிலத்திலே மாத்திரம் வந்தன. இனிமேல் தமிழிலும் வரலாம். ஏனென்றால், இப்போது வந்திருக்கிற கவர்னருக்கு தமிழும் தெரிந்திருக்கிற காரணத்தால் ஆளுநருக்கு அனுப்பக்கூடிய கோப்புகளையும் கூட தமிழிலேயே அனுப்பக் கூடிய அளவிற்கு இந்த அரசு தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்குவதிலே அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி, நெல்லை - கட்டபொம்மன், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மதுரை, கோவை, தர்மபுரி, திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு, அதிகாரிகளுக்குத் தெளிவான கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பொதுவாகவும், துறை

வாரியாகவும், தனித்தனியாகவும் உள்ள 84 அகராதிகளை மறு ஆய்வு செய்து, அத்தோடு புது கலைச் சொற்களையும் சேர்த்து, புதிய அகராதி விரைவில் வெளியிடப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வணிகர்கள் தங்கள் வணிக நிறுவனத்தின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுத வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளனர். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். வணிகர்கள் பெயர்ப் பலகைகளில் பயன்படுத்திட 515 சொற்களைக் கொண்ட வணிகச் சொற்பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டு அது நாடெங்கும் இன்றைக்குப் பரப்பப்பட்டுள்ளது. இவைகள் தமிழுக்காக, தமிழ் ஆட்சி மொழிக்காக இதுவரை ஆற்றியுள்ள பணிகள், இன்னும் ஆற்றவேண்டிய பணிகளை திரு. ஞானசேகரன் குறிப்பிட்டு எழுதுவாரேயானால் அந்தப் பணிகளையும் ஆற்ற இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேச்சை முடிப்பதற்கு முன்பு, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி. கே. லட்சுமணன் அவர்கள் தியாகிகள் மானியத்தைச் சற்று அதிகப்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஓய்வூதியத்தையும் அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையினுடைய விவாதம் முடிந்து பதில் அளிக்கின்ற நேரத்தில் அல்லது நிதிநிலை அறிக்கையில் அவர்களுடைய கோரிக்கை பரிசீலித்து ஏற்கப்படும் என்ற உறுதியை நான் அவருக்கு வழங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. திருநாவுக்கரசு அவர்கள், செல்வி ஜெயலலிதாவுக்கு உள்ள பாதுகாப்பு பற்றிக் கேட்டார்கள். நேற்றைக்கே நான் சொல்லியிருக்கின்றேன். இன்று சிறு விளக்கம் அளிப்பதாகச் சொன்னேன். அந்த விளக்கத்தை அளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அவர்கள் தேர்தலுக்குச் செல்லுகிற நேரத்தில், புதுக் கோட்டை ஆனாலும், அல்லது வேறு பொதுக் கூட்டங்களுக்கு எங்கேயாவது சென்றாலும், அவர்கள் நீதிமன்றத்திலே

பெற்றிருக்கின்ற அந்த அனுமதியின் அடிப்படையில், அவர்கள் செல்லுகின்ற நேரத்தில் அரசு தக்க பாதுகாப்பு அளிக்கும் என்று நேற்றைக்குக் குறிப்பிட்டிருக்கின்றேன். இந்தப் பாதுகாப்பில் என்.எஸ்.ஜி. பிரிவுக்கு வண்டிகள் தரப்படவில்லை என்று திருநாவுக்கரசு சொன்னார். இப்போது எத்தனை பேர் பாதுகாப்புக்கு என்று சொல்கிறேன்.

'இசட்' பிரிவிலே உள்ளவர்களுக்கு அனுமதிக்கப்படக் கூடியது 27 பேர். மாநகரக் காவல் துறை சார்பில் மேலும் 16 பேர். தேர்தல் பிரச்சாரத்திற்காக மேலும் 25 பேர். பிரத்யேகமாக அனுப்பி வைக்கப்பட இருக்கிறார்கள். என்.எஸ்.ஜி. பிரிவிலே இருந்து 8 பேர். மொத்தம் 76 பேர். என்.எஸ்.ஜி. பிரிவிலே 40, 50 பேர்கள் இருந்தாலும்கூட, ஒவ்வொரு நாளைக்கும் 8 பேர்தான் ஒதுக்கப் படுவார்கள். அந்த என்.எஸ்.ஜி. பிரிவுக்கு நாங்கள் வாகனங்கள் அளிக்காததற்குக் காரணம், மத்திய அரசு இந்த என்.எஸ்.ஜி. பாதுகாப்பை செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கியபோது, அவர்கள் வாகனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்று எங்களுக்கு எந்தத் தாக்கீதும் அனுப்பவில்லை. அதுமாத்திரமல்ல, திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்களுக்கும் 'இசட்' பிரிவுதான். அவருக்கு சி.ஆர்.பி.எப். பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்களுக்கு வாகனங்கள் அளிக்கின்ற பொறுப்பை, நான்கைந்தோ, அல்லது ஐந்தாறோ, இந்த வாகனங்கள் அளிக்கின்ற பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டது. சுப்பிரமணிய சுவாமிக்கு ஏற்றுக்கொண்ட அந்தப் பொறுப்பை செல்வி ஜெயலலிதாவுக்கு வாகனங்கள் தருகின்ற பொறுப்பை ஏன் மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை என்று எங்களுக்குத் தெரியவில்லை. எனவேதான், அந்தக் கடிதப் போக்குவரத்து, எங்களுக்கும் மத்திய அரசுக்கும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. இறுதியாக, இப்போது அவர்கள் தேர்தலுக் கெல்லாம் செல்ல வேண்டும் என்ற காரணம் இருப்பதால், இந்த இலக்கணங்களைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சட்டங்களைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்று அரசு முடிவு செய்து என்.எஸ்.ஜி. பிரிவினர் 8 பேர் செல்லுகின்ற நேரத்தில் அவர்களுக்குத் தேவையான வாகனங்களும் அனுப்பி

வைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த 76 பேர்களிலே கூடுதல் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஒருவர், ஆய்வாளர் 3 பேர், உதவி ஆய்வாளர் 5 பேர், தலைமைக் காவலர் 6 பேர், காவலர்கள் 61 பேர். இவர்களுக்கு - 'Z' பிரிவினருக்கு இரண்டு அம்பாசிடர் கார், மாநகரக் காவல் துறை சார்பில் ஒரு ஜீப். தேர்தல் பிரச்சாரத்தின் போது பிரத்யேகமாக ஒரு பேருந்தும் அனுப்பி வைக்கப்படும் அந்தக் காவலர்கள் ஏறிச் செல்வதற்காக. என்.எஸ்.ஜி. பிரிவினருக்காக மூன்று கார்கள், ஆக மொத்தம் 7 வண்டிகள் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த 'இசட்' பிரிவுக்காக உள்ள முறையில், கடுகளவும், அணுகளவும் பிசகாமல் பாதுகாப்பு இந்த அரசின் சார்பில் அளிக்கப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய உறுப்பினர்கள் சில பேர் இங்கே பேசும்போது ஊழல் பேர்வழிகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள், தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றீர்கள். அரசு, ஊழல் நடவடிக்கை புரிந்தவர்கள்மீது நீதி மன்றத்தின் சார்பாக, சட்டத்தின் சார்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகின்றது. நான் அதை விரிவாக இங்கே பேச விரும்பாததற்குக் காரணம், அதிலேயே நம்முடைய பொழுதைக் கழித்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், மக்கள் பிரச்சினைகள் இவற்றிற்காக நாம் நேரத்தைச் செலவிட வேண்டும். அது ஏதோ ஒரு சைடு. இவைகளையெல்லாம் கெடுக்க வருகின்ற, நல்ல திட்டங்களை எல்லாம் பாழ்படுத்தி வருகின்ற சில செயல்களைத் தடுக்க வேண்டும்; நடந்த செயல்களைத் தடுப்பதன் மூலம், அதைத் தண்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இந்த அரசின் சார்பிலும் அத்தகைய தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற அந்த முறையிலேதான் இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் ஆட்சிக்கு வந்தால், வராதா என்று கேட்டால், வரட்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான் நாங்களும் இன்று நடவடிக்கை எடுத்து

வருகின்றோம். தாராளமாக அதைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஏனென்றால் அப்படிச் சொல்வதற்குக் காரணம், எந்தக் குற்றமும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வது என்கின்ற சத்தியம் செய்துவிட்டுத்தான் இந்த ஆட்சிப் பொறுப்பிலே நான் அமர்ந்து இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக் குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அது தி.மு.க.-வாக இருந்தாலும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் நான் சொன்னதைத் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். யாராக இருந்தாலும், என் மகனாக இருந்தாலும், யாராக இருந்தாலும் நிச்சயமாக ஊழல் புரிந்தால் அவர்கள், மீது உடனடியாக நடவடிக்கை உண்டு என்பதைத் தெரிவித்து இந்த அரசு அந்த நல்ல வழியிலே நடைபோட அனைவரும் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டு, கவர்னர் உரையிலே கொடுத்துள்ள திருத்தங்கள் அல்லது பிரேரணைகளை திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, உரையாற்றிய நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு . . . .

திருமதி ஏ.ஏஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணி இரண்டு ஆகிறது. நீங்கள் உட்காருங்கள். திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் கைது செய்யப்பட்டபோது. அதையொட்டி அ.தி.மு.க. தொண்டர்களும் சில பேர் கைது செய்யப்பட்டார்கள். அப்போது பஸ் எரிப்பு, அல்லது பஸ் மறியல் - இதிலே நடந்த சம்பவங்களையொட்டி கைது செய்யப்பட்டார்கள். முதல் குற்றவாளிகள்கூட. அதற்கு முன்னாலே பல குற்றங்கள் இருந்தாலும் கூட பரவாயில்லை. இதை மட்டும் வைத்து அந்த

முதல் குற்றவாளிகள் சில பேர் மீது பல இடங்களில் குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே அவர்கள் கைது செய்யப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சொல்லப்படுகிறது. நாங்களும் கேள்விப்படுகிறோம். கிரிமினல் கேஸ் என்பது வேறு. அதை மட்டும் வைத்துக் கொண்டு குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே அவர்களைக் கைது செய்ய சில இடங்களில், மாவட்டங்களிலே காவல் துறை அதிகாரிகள் முயற்சிப்பதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். கேஸ் போடுகிறார்கள். கிரிமினல் கேஸ் போடுகிறார்கள். அதை சந்திக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி யாரையும் குண்டர்கள் சட்டத்திலே தேவையில்லாமல் போடுகிற நிலைமை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்ன அந்தக் கூற்றை ஆராய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன், , , , ,

திருமதி ஏ.ஏஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைக் கூப்பிடவில்லை. நீங்கள் உட்காருங்கள் திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசிடமிருந்து நான் பெற விரும்புகிற விளக்கம் - முன்னரே மாண்புமிகு முதல்வர் அவர்கள். இந்த அவையிலே அறிவித்தபடி மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களுக்கு, அந்தி இழைக்கப்பட்ட அந்தத் தொழிலாளர் களுக்கு சர்வீஸ் தொடர்ச்சியோடு பணியில் அமர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை தெரிந்து கொள்வதோடு, நான் பேசும்போது குறிப்பிட்டேன், உண்மையிலேயே தனியார் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் அரசியல் சட்டப் படியான உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு முயலுகின்ற

குற்றத்திற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டு, 506 என்கிற பெயிலில் வரமுடியாத செக்ஷனில் தொழிலாளர்கள் வழக்குக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை வாபஸ் பெறுவதோடு அவர்கள் மீண்டும் பணியில் அமர்வதற்கான முயற்சியையும் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பலர் பேசியிருக்கின்றார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் நான் பதில் சொல்லவில்லை. திரு. சுப்பராயனுக்குத்தான் மூன்று முறை அவருடைய பெயரைச் சொல்லி பதில் சொல்லி இருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் தன்னுடைய பெயரைப் பதிவு செய்ய விரும்புகிறார். நான் அவர் சொன்ன அந்தக் கருத்துக்களை உடனடியாக நிறைவேற்றுவேன் என்று பதில் சொல்ல இயலாவிட்டாலும்கூட, இதயத்திலே பதிய வைத்துக் கொள்கிறேன். நிதித்துறை மானியம் இங்கே வரும்போது அதைப்பற்றிக் கூறுகிறேன் என்று குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, சுந்தரலிங்கனார் போக்குவரத்துக் கழகத்தினுடைய பயணச்சீட்டுகள் எல்லாம் எரிக்கப்பட்டதாக மக்கள் மத்தியிலே, தென் மாவட்டங்களிலே ஒரு பீதி இருக்கிறது. அதற்கு என தேதியை தமிழக முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன்.

இருந்தாலும், ஏற்கெனவே அது அரசு பதிவிலே வந்திருக்கிறது. அதற்கான நாளை தமிழக முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே - ஏதோ தி.மு.க. ஆட்சியிலே சுந்தரலிங்கத்தை மறந்து விட்டோம் என்பதைப் போல ஒரு பாவனை செய்து. பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மன் கோட்டையில் எல்லாத் தோரண வாயிலும் இருக்கிறது; சுந்தரலிங்கத்தின் பெயரால் தோரண வாயில் இல்லை என்ற ஒரு அவதூறைச் சொல்லி - அப்படி ஒரு தோரண வாயில் இருக்கிறது

என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பிறகு சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் அமைப்பதாகச் சொன்னார்கள். சுந்தரலிங்கத்தைப் பொறுத்தவரையில், கட்டபொம்மனுடைய தளநாயகர்களில் ஒருவராக அவரும் விளங்கினார். இது கதையிலே கூறப்பட்டு இருக்கின்ற செய்தி. நான் எழுதிய பாயும் புலி பண்டாரக வன்னியன் என்கின்ற புதினத்திலேகூட முதல் அத்தியாயமே, சுந்தரலிங்கத்தைப்பற்றித்தான் எழுதி இருக்கிறேன். அவர் இலங்கைக்குச் சென்றாரோ இல்லையோ, எனக்குத் தெரியாது. இலங்கைக்குத் தூதராக அவர் அனுப்பி வைக்கப் பட்டதாகவே சுந்தரலிங்கத்தைப்பற்றி நான் எழுதி இருக்கிறேன். எனவே, சுந்தரலிங்கத்தையோ, சுந்தரலிங்கம் போன்றவர்களையோ அலட்சியப்படுத்துகின்ற மனோபாவம் இந்த அரசுக்கு இல்லை. அவர்கள் சொன்ன கருத்தை - பேருந்துக்கு, போக்குவரத்துக் கழகத்துக்குப் பெயர் வைக்கின்ற அந்தக் கருத்தை - கடந்த காலத்திலே என்ன நடைபெற்று இருக்கிறது என்பதை எடுத்துப் பார்த்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ் ஆட்சிமொழி ஆகிட என்னென்ன எல்லாம் செய்யப்பட்டன என்பதை விவரித்தார்கள். ஆனால், சென்ற ஆளுநர் உரையில் 6-வது பத்தியில், தமிழ் மொழி ஆட்சி மொழிகளில் ஒன்று ஆக்கிட மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதற்காக இங்கே சொல்லப்பட்டு இருந்தது; மத்தியிலே நம்முடைய தமிழை ஆட்சி மொழிகளில் ஒன்று ஆக்கிட இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். இப்போது அங்கம் வகித்துக் கொண்டிருக்கிற ஐக்கிய முன்னணியில் தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் நான்

முதலமைச்சரிடம் பதில் கேட்கவில்லை. அதாவது 2 லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. அந்த நேரத்திலே தான் காமராசர் இருக்கும்போது குந்தா மின்திட்டம், நெய்வேலி நிலக்கரி மின்திட்டம், பெரியாறு திட்டம், சமயநல்லூர் மின்திட்டம் எல்லாம் போட்டு மின்சாரத்தை உற்பத்தி பண்ணி வைத்துவிட்ட பிறகு, காங்கிரஸ் தோல்வி அடைந்தது. அதன் பிறகு இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாம் இங்கு அமைச்சராக வந்து அதை நல்ல முறையிலே மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. இது அனைத்து உறுப்பினர் களுடைய விருப்பமாகவும், அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களுடைய ஏகமனதான விருப்பமாகவும் இருக்கிற காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, செய்யக்கூடிய கோரிக்கை என்ன ஆயிற்று என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கோடி கொடுப்பதாகச் சொன்னார்கள். மொத்தம் 39 பேர்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள்; 39 கோடியோடு முடிந்து விடுகிறது. நாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 லட்சம் கொடுப்பது என்றால் 117 கோடி ரூபாய் தேவை. 50 லட்சம் கொடுத்தால்கூட 117 கோடி ஆகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற ஒரு கோடியை சட்டமன்ற உறுப்பினர்கள் பகிர்ந்துகொள்ளலாம். அது ஒரு வகை இருக்கிறது. அல்லது 50 லட்சத்துக்குப் பதிலாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்னும் குறைத்து, 25 லட்சம் என்று ஒதுக்கலாமா என்பதை யோசித்து (மேசையைத் தட்டும் ஒலி), அதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதை அமைச்சரவைக் கூட்டத்திலே கலந்து பேசி, அதிகாரிகளையும் சரி செய்து அறிவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உரை : 22 நாள் : 23.03.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பல்வேறு கட்சித் தலைவர்களும் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, இறுதியாக அவர்கள் எடுத்து வைத்த கருத்துக்கள் எல்லாவற்றின் மீதும் என்னுடைய பதில்களைச் சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் கூட, அடுத்து தொடர்ந்து வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நடைபெறுகின்ற பொது விவாதம், தனித்தனித் தலைப்புகளிலே வருகின்ற மானியங்களின் விவாதங்கள் இவற்றில் அதற்கான விளக்கங்களை, விடைகளை அளிக்க முடியும் என்ற நிலையில், குறிப்பிட்ட சில மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி மாத்திரம் எடுத்துக் கூறி சில பொதுவான செய்திகளை இந்த மாமன்றத்திலே பரிமாறிக் கொள்ளலாம் என்ற அளவோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுற்று அந்தத் தேர்தல் முடிவுகளைப் பற்றி மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது கவர்னருடைய உரையேயல்ல; கருணாநிதியினுடைய உரை என்று கூட விமர்சிக்கப்பட்டு வெளியிலே பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. இந்த அவையிலும் கூறப்பட்டிருக்கின்றது. ஒரு உண்மையை இதுவரையிலே உணராமல் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இருப்பார்களேயானால் அவர்கள் உணர்ந்து கொள்வதற்காகத்தான் சொல்கிறேன். எந்த ஓர் ஆளுநர்

உரையாக இருந்தாலும் அது அரசாங்கத்தினுடைய உரைதானே தவிர, முதலமைச்சர் அவர்களுடைய உரையைத்தான் ஆளுநர் அரசின் சார்பாக அவைக்கு வழங்குகிறார் என்பதுதான் உண்மையே தவிர, முழுக்க முழுக்க அரசுக்குச் சம்பந்தம் இல்லாத உரை என்று யாரும் கருதிவிடக் கூடாது.

நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இன்று ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தோழமைக் கட்சிகள், அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மற்றும் அதனுடைய கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப் பெரும்பாலான இடங்களிலே வெற்றி பெறவில்லை என்ற உண்மை உலகத்திற்கே தெரிந்தது. எனவே, அதைப்பற்றி நான் விளக்க விரும்பவில்லை. ஆனால், இத்தகைய முடிவுகளின்போது இதற்கு முன்பு இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்து கொண்டது என்பதையும், குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், வேறு சில கட்சிகளும் தற்போது எப்படி இங்கே நடந்து கொண்டன என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

1980ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காந்தி அவர்களுடைய தலைமையிலான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உடன்பாடு கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டபோது, புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளில் 38 நாடாளுமன்றத் தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ் அணி மகத்தான வெற்றியைப் பெற்றது. எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அந்தக் கூட்டணிக்குக் கிடைத்த இடங்கள் இரண்டே இரண்டு இடங்கள்தான். அப்போது நான் எதிர்க்கட்சியிலே இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இப்போது நடந்து கொண்டதைப் போல, நடக்கின்ற, நடக்க வேண்டும் என்கின்ற நினைவே எங்கள் யாருக்கும் அப்போது

வரவில்லை. ஆனால் எனக்கு நேராக, இந்த அவையிலே தாங்கள் அமர்ந்திருக்கும்போது, ஆளுநர் உரையாற்றிய நேரத்தில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. 'இந்த அரசு பதவி விலக வேண்டும்' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் இங்கே காட்டப்பட்டன. இதுபோன்ற மரபுகள் எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டே இரண்டு இடங்களைப் பெற்று தோல்வியைத் தழுவிய நேரத்தில், இங்கே எந்தக் கட்சியாலும் கடைப்பிடிக்கப்படவில்லை. அன்றைக்கு இந்த அவையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ இந்த முறையைப் பின் பற்றுவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல; கஷ்டமான காரியம் அல்ல. ஆனால், நாம் இந்த அவையிலே போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணுகின்ற அந்த மரபுக்கு விரோதமாக நடக்கின்ற மனப்பான்மை கிஞ்சிற்றும் ஏற்படாத காரணத்தால் அன்று இந்தக் காட்சியை இந்த அவை காணவில்லை. ஆனால், இப்போது அந்தக் காட்சியை இந்த அவை கண்டது. அது எவ்வளவு பெரிய தவறு என்பதைத் தாங்கள், தங்களுடைய பெருந்தன்மையான தீர்ப்பின் மூலமாக இந்த அவைக்கு விளக்கி நாட்டிற்கு உணர்த்தியிருக்கிறீர்கள், அந்த உறுப்பினர்களுக்கும் உணர்த்தி இருக்கிறீர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகமோ தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ கூட்டணி சேர்ந்து இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டு பெரும்பாலான இடங்களைப் பெறவில்லை என்பதற்கு, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், மற்றும் பல உறுப்பினர்களும் தங்களுடைய விமர்சனங்களைச் சற்று வேகமாகவே இங்கே செய்திருக்கிறார்கள். ஆனால், அதற்காக நான் வருத்தப்படவில்லை. சில நேரங்களில், அனுபவங்கள் அடுத்து நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகளுக்கு உதவிடக் கூடும்; துணையாக இருக்கக்கூடும் என்ற அளவில் கடந்த கால அனுபவங்களை நாங்கள் இன்றைக்கு எங்களுக்குப் பெருந் துணையாகக் கொள்கின்றோம்.

திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது. நீங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

கட்சியை விட்டுவிட்டீர்கள்; எங்களை விட்டுவிட்டீர்கள்; புதிய தமிழகம் கட்சியை விட்டுவிட்டீர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் புதிய தமிழகத்தை என்றும் விட மாட்டோம். புதிய தமிழகமாகத் தமிழகத்தை ஆக்க வேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் தன்னுடைய பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறது. நடந்து முடிந்ததற்குப் பிறகு சில விஷயங்களை நாம் ஆராய்ந்து, யார் மீது குற்றம், எவர் மீது குற்றம் என்று ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொண்டிருப்பதை விட, நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்கின்ற அந்த முனைப்போடு பயணத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அந்த அடிப்படையிலே தான், நடைபெற்று முடிந்த தேர்தலில் ஏற்பட்ட முடிவை இரு கூறாகப் பிரித்து, ஒரு முடிவில் தமிழக சட்டமன்றத்திற்காக நடைபெற்ற இடைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் இந்தக் கூட்டணி வெற்றிபெற மக்கள் ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியும், நாடாளுமன்றத்திற்கு அளித்த வாக்கு மத்தியிலே ஒரு நிலையான ஆட்சி அவர்களால் எதிர்பார்க்கப் பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதையும் கவர்னருடைய உரை விளக்கியிருக்கின்றது. இதனை எல்லோரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக மக்கள் இருக்கிறார்கள் என்று எண்ணி யாரும் ஏமாறத் தயாராக வேண்டாம் என்று நான் அவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அவையில், பல பிரச்சினைகள், கொந்தளிப்பான பிரச்சினைகள், பரபரப்பான பிரச்சினைகள், இந்தப் பேச்சினால் என்ன விளைவு ஏற்படுமோ என்று நானே அஞ்சுகின்ற அளவிற்குப் பேசப்பட்ட பல பிரச்சினைகள் எல்லாம், பல்வேறு தலைவர்களாலும் உறுப்பினர்களாலும், இங்கே பேசப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குச் செல்வதற்கு முன்பு, நம்முடைய உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய தொகுதிகளைப்பற்றி எடுத்துச் சொன்ன அந்தச் செய்திகளுக்கு நான் முதலில் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றேன். குறிப்பாக, திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது அறந்தாங்கிச் சர்க்கரை ஆலை என்ன

ஆயிற்று என்று கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகின்றேன். மத்தியிலே இருந்த ஐக்கிய முன்னணி அரசு, - அதனுடைய தொழில் துறை அமைச்சர் முயற்சியால் நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்க, - 21-3-1997 அன்று இ. ஐ. டி. பாரி நிறுவனத்திற்குத் தினசரி 2500 டன் கரும்பு அரைவை செய்யும் திறன் உள்ள சர்க்கரை ஆலை ஒன்றைப் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலே நிறுவ அனுமதி அளித்துள்ளது. அந்த ஆலைக்குக் கரும்பு பயிரிட, கரும்புப் பகுதி ஒதுக்கீடு செய்யும்படி 25-6-1997 அன்று இ. ஐ. டி. பாரி நிறுவனம், சர்க்கரைத் துறை ஆணையருக்கு விண்ணப்பித் துள்ளது. இந்த விண்ணப்பம் சம்பந்தமாக, அரசால் நியமிக்கப் பட்ட பகுதி ஒதுக்கீட்டுக் குழு, நிலப் பகுதிகளை ஒதுக்கீடு செய்கின்ற அந்தக் குழு பரிசீலித்து, அரசுக்கு அதனுடைய பரிந்துரையை அனுப்பியுள்ளது. அதன் அடிப்படையில், அறந்தாங்கி ஆலைக்குப் பகுதி ஒதுக்கீடு ஆணை, சர்க்கரைத் துறை ஆணையரால் 5-2-1998 மற்றும் 17-2-1998 அன்று வழங்கப் பட்டுள்ளது. இ. ஐ. டி. பாரி நிறுவனம், அறந்தாங்கி வட்டத்திலே உள்ள குரும்பூர் என்ற கிராமத்தில் இந்த ஆலை அமைக்க ஏதுவாகத் தேவைப்படும் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆலையை நிறுவுவதற்கு, நிதி நிறுவனங்களிடமிருந்து தேவைப்படும் கடனைப் பெறவும், இந்த நிறுவனம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஆலை நிறுவுவதற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்டபின், ஆலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தருவித்து ஆலையை நிர்மாணம் செய்து முடித்து, இந்த ஆலை 1999ஆம் ஆண்டு இறுதியில் இயங்கத் தொடங்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தொடக்கத்திலே உரையாற்றிய நம்முடைய சுப்பராயன் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழகத்திலே 8 விழுக்காடு மாத்திரமே நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவது மிகக் குறைவானது என்றும், வேறு சில மாநிலங்களைச் சுட்டிக்காட்டி அங்கெல்லாம் 40 விழுக்காடு, 30 விழுக்காடு வழங்கப்படும் போது, இங்கே மாத்திரம் 8 விழுக்காடு என்ன நியாயம் என்றும்

கேட்டார்கள். இந்த 8 விழுக்காடு என்பது 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே மொத்த வரி வருவாயிலே 8விழுக்காடு என்பதாகும். அதன்படி உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் 662 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இவை தவிர கேளிக்கை வரியிலே 90 விழுக்காடு 100.67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப் பட்டுள்ளது.

மேலும் முத்திரைத்தாள் மீதான மேல் வரி, நில வரி வருவாயிலே தல வரி, தல மேல் வரி, பண்ணைக் காடுகள் வளர்ச்சி வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யும் தொகை, 10-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி உள்ளாட்சி மன்றங்களுக்கான மானியங்கள், குடிநீர் வழங்குவதற்கான கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற மானியம், பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான மானியங்கள், குறைந்த அளவு தேவைத் திட்டத்தின்கீழ் மானியங்கள் போன்ற பல்வேறு மானியங்களின் கணக்கில் 539.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக 1997-98 ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 1301.91 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இது 9 அல்லது 10 சதவீதம்தான் இருக்கும். ஆனால், கர்நாடகத்திலே 36 விழுக்காடு இருக்கிறதே என்று திரு. சுப்பராயன் அவர்கள் வினவக் கூடும். அதற்கான விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே நம்முடைய மாநிலத்தில் எல்லாப் பொறுப்பு களையும் அரசு ஏற்றுக்கொண்டு, சில பொறுப்புகளைத்தான் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தந்து, அந்தப் பொறுப்புக்கான தொகை ஒதுக்கும்போது 8 சதவீதம் அல்லது 9 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்கின்ற அளவிற்குத்தான் அதுபோய் நிற்கின்றது. உதாரணமாக, கர்நாடக மாநிலத்தில் 10ஆம் வகுப்பு வரையிலே உள்ள ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான சம்பளம், அவர்களைப் பற்றிய பொறுப்பு அத்தனையும் மாவட்டப் பஞ்சாயத்துகள் மூலம்தான் நிர்வகிக்கப்படுகின்றன. இங்கே ஆசிரியர்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைத்தால், நாளைக்கே போர்க்கொடி தூக்குவார்கள். அந்தப் போர்க் கொடிக்கு அடுத்த கொடியாக சுப்பராயனுடைய கொடி நிற்கும்

என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏற்கனவே அனுபவப்பட்டு இருக்கின்றோம். எம்.ஜி.ஆர். காலத்திலும் சரி, அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி, ஆசிரியர்களுடைய ஒரு பெரும் கோரிக்கையே, எங்களை ஒன்றியத்திலோ அல்லது உள்ளாட்சி மன்றங்களிலோ ஒப்படைத்து விடாதீர்கள் என்பதுதான். எனவே, அவர்களை எல்லாம் ஒன்றியத்திலே, உள்ளாட்சி மன்றங்களிலே ஒப்படைத்தால், இன்னும்கூட அதிக சதவீத நிதி ஒதுக்கீட்டை நாம் அவர்களுக்குச் செய்ய முடியும். அதுமாத்திரமல்ல. மருத்துவமனையிலேகூட, 50 படுக்கைகளுக்குக் குறைவாக உள்ளவற்றின் எல்லா மருத்துவச் செலவினத்தையும் அங்கெல்லாம், கர்நாடகா போன்ற மாநிலங்களில், பஞ்சாயத்துகளே, மாவட்டப் பஞ்சாயத்துகளே ஏற்றுக்கொண்டு உள்ளன. இதைச் சொல்லும்போது ஒரு கேள்வி எழும். அப்படிப் பட்ட உரிமைகளை, ஆசிரியர் அல்லாத மற்ற உரிமைகளை ஏன் ஊராட்சி மன்றங்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரக்கூடாது என்று கேட்கக் கூடும். இதற்காகத்தான் ஒரு குழுவையே நாம் இப்போது அமைத்து இருக்கின்றோம்.

இதற்கிடையில், மேற்கு வங்கத்தைப் பார்த்தால், அங்கே 16 சதவீதம்தான். அவர்கள் பேசிய பிறகு, அங்கெல்லாம் தொடர்பு கொண்டு, அதிகாரிகளைவிட்டு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, மேற்கு வங்கத்திலே 16% உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, மேற்கு வங்கத்தில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகபட்சப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன என்ற உண்மையை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதுமாத்திரமல்ல, அரசியலமைப்புச் சட்டத்திலே 73, 74-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான இனங்கள், உதாரணமாக கல்வி, சுகாதாரம் ஆகிய இனங்கள் எல்லாம் உள்ளாட்சி அமைப்புகளிலேதான் மேற்கு வங்கத்திலே ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இங்கே மேற்கு வங்கத்தை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்ட்கள் இருந்தாலும்கூட, உள்ளாட்சி மன்றங்களிடத்தில் ஆசிரியர்களை ஒப்படைத்தால், அதை நிச்சயமாக ஏற்கமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இவற்றை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான்

இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டும். எனவேதான், இன்னும் என்னென்ன அதிகாரங்களை அவர்களுக்குத் தரலாம், வழங்கலாம் என்பதற்கான குழு, உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்டு இருக்கின்றது. அந்தக் குழுவினுடைய பணிகள் எப்பொழுதோ நடைபெற்று முடிந்து இருக்க வேண்டும். ஆனால், குழு அமைப்பதற்காக ஒவ்வொரு கட்சியினுடைய தலைவருக்கும் கடிதம் எழுதி, உங்கள் கட்சியின் சார்பாக ஓர் உறுப்பினரை வழங்குங்கள் என்று கேட்டபோது, பல கட்சிகளிடமிருந்து பதில் உடனடியாக வரவில்லை; மிகத் தாமதமாகத்தான் வந்தது. எந்தக் கட்சிகள் என்று நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை; யாரும் என்னை ஆவலோடு, அதிர்ச்சியோடு பார்க்கத் தேவையில்லை. எந்தக் கட்சியினுடைய பெயரையும் நிச்சயமாகக் குறிப்பிட மாட்டேன். ஆனால், அப்படித் தாமதமாக வந்த காரணத்தால், அந்தக் குழுவினருடைய பணி தொடங்கவும் தாமதம் ஆயிற்று. ஒரு கூட்டமோ அல்லது இரண்டு கூட்டங்களோதான் அந்தக் குழுவினுடைய கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது. ஆகவே அந்தக் குழு கூடுவதற்கு நேரமில்லாமல் போய்விட்டது. இனி அந்தக் குழுவை நம்முடைய சட்டமன்றப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோதே கூட இடைப்படுகின்ற நேரத்தில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நான்கைந்து தடவைகளாவது கூட்டி, இன்னும் என்னென்ன அதிகாரங்களை உள்ளாட்சிக்குத் தரலாம் என்பதை நிர்ணயித்து, அரசுக்கு அறிக்கையாக அளிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இங்கே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மணி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் தொழிற்சாலை அமையவேண்டும் என்பதற்காக, அவர்களும் சரி, குமாரதாஸ் அவர்களும் சரி, நீண்டகாலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரப்பரைப் போலவே அந்த ரப்பர் தொழிற் சாலையும் நீண்டு கொண்டே போகின்றது. இருந்தாலும் 1994ஆம் ஆண்டில் செண்பகராமன்புதூர் என்ற கிராமத்திலே வாகன டயர் திட்டம் ஒன்றை அமைக்க 70 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த முன்பிருந்த அரசு நடவடிக்கை எடுத்தது. நிலச் சொந்தக்காரர்கள்

அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, இடைக்காலத் தடையாணையை 1995ஆம் ஆண்டு பெற்று விட்டார்கள். ஆனால் அந்தத் தடையாணையை விலக்குவதற்குக் கடந்த கால அரசு விரைவான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், நிலத்தைக் கையகப்படுத்துவதிலே ஏற்பட்ட தாமதத்திற்காக வேதனைப்பட்டு அங்கே ரப்பர் தொழிலைத் தொடங்க முனைந்த அந்தத் தொழில் முனைவர், இந்தத் திட்டமே தேவையில்லை என்று, அதைக் கைவிட்டு விட்டுச் சென்றுவிட்டார். அவர் அந்தத் திட்டத்தைக் கைவிட்ட பிறகு, டிட்கோ நிறுவனம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. டிட்கோ நிறுவனம் அந்த நிலங்களுக்கான தொகையை அளித்து, நிலத்தைக் கையகப்படுத்தும் அலுவலரிடம் அந்தப் பொறுப்பை இப்போது வழங்கி யிருக்கின்றது. அதே நேரத்தில், நீதிமன்றத் தடையாணையை விலக்குவதற்கும் பெரு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்த நிலத்தில் ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழிற் பூங்கா - Industrial Park - ஒன்றை அமைக்க இந்த அரசு கருதியுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்காக ஏற்கெனவே கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு அருகில் இன்னொரு 150 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அவற்றையும் கையகப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் தொழிற் பூங்கா - ரப்பர் பூங்கா - சிறிய மற்றும் நடுத்தர ரப்பர் தொழில்கள் அமைக்க முன்வருகின்ற தொழில் முனைவோருக்கு உதவும் வகையில், தடையில்லாத மின்சாரம், நீர் வளங்கள், உற்பத்தியாகும் ரப்பர் தரங்களைப் பிரித்தெடுத்து ஒரே இடத்தில் சோதனை மற்றும் சான்றிதழ் வழங்குகின்ற வசதிகள், பொது நீர் வெளியேற்றம், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள், தகவல் தொடர்பு வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமையும் என்பதையும் இப்பூங்காவுக்கான பூர்வாங்கமான திட்ட மதிப்பீடு ரூ. 50 கோடியாகும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் எடுத்துக் கூறி இதை விரைந்து முடிக்க டிட்கோ நிறுவனம் எல்லாவிதமான முனைப்பான நடவடிக்கை களையும் எடுத்து வருகின்றது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொதுப் பிரச்சினையாக - தொகுதிப் பிரச்சினைகளாக இல்லாமல், மாநிலம் தழுவிய பிரச்சினையாக, குறிப்பாக - பொது விநியோகம் பற்றி இங்கே பேசப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே அதைப்பற்றி விளக்கமாகப் பேசியிருக்கின்றார்கள். பேசிய எல்லா உறுப்பினர்களுமே இந்தக் குடும்ப அட்டை, நியாய விலைக் கடைகள், பொது விநியோகம் இவைபற்றி இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதில் தாமதம் ஆனது உண்மைதான். ஆனால் திட்டமிடுகின்ற நேரத்தில், மூன்று வண்ணங்களில் அட்டைகள் என்று எண்ணித் திட்டமிடப்பட்டது. அந்த அட்டைகளை அச்சிடுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்தவர்கள், இதற்குத் காலதாமதம் ஆகும் என்று தெரிவித்த நேரத்திலே, விரைந்து முடித்துக் கொடுக்க வேண்டுமென்று நானும் உணவு அமைச்சரும் மற்றும் அதிகாரிகளும் ஐந்தாறு தடவையாவது அவர்களிடத்திலே விவாதித்திருக்கின்றோம். இருந்தாலும் கூட அதை அச்சேற்றுகின்ற பணி விரைந்து முடிக்கப்படவில்லை. அந்த நேரத்திலேதான், இந்த ஆளுநர் உரைக்கு முன்பு எனக்குத் தோன்றிய யோசனையாக, இந்த மூன்று வண்ண அட்டைகள் தேவையா, பச்சை அட்டை, மஞ்சள் அட்டை, இளம் சிவப்பு அட்டை என்று மூன்று அட்டைகள் தேவையா, அவரவர்கள், இஷ்டத்திற்கு அதாவது option-லே ஓர் அட்டை, மற்றவர்களுக்கு அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்களைத் தருவதற்கு ஓர் அட்டை என்றிருந்தால் போதாதா? ஒருவருக்கு இல்லவே இல்லை என்று சொல்வதற்கு ஓர் அட்டை தேவையா என்று யோசித்தபோதுதான், வேண்டாம் என்று சொல்கிறவர்களுக்கு இல்லவே இல்லை என்ற நிலையிலே அந்த அட்டை வழங்கப்படலாம்; எனவே இரண்டு அட்டைகள் போதுமானது என்று அந்த அட்டைகளைக் கணக்கிடும்போது நம்முடைய திரு. தாமரைக்கனி குறிப்பிட்டதைப் போல பச்சை மீது வந்துள்ள வெறுப்பால் அல்ல; வெறுப்பு ஒன்றும் வரவில்லை; என்றைக்கும் வராது; ஏனென்றால் பச்சை பசேல் என்றுள்ள இயற்கையைப் பார்ப்பதிலேதான் எல்லோருக்கும் மகிழ்ச்சி; அந்த எண்ணத்தால் இந்த நிறத்தை விலக்கிடவில்லை; இந்தத் திட்டத்தை நாங்கள் மாற்றி அமைக்க எண்ணியபோது, அச்சடிக் கப்பட்டிருக்கிற அட்டைகள் எத்தனை என்று கணக்கிட்டபோது,

எந்த நிறத்தைக் குறைத்தால் இழப்பு, குறைவாக இருக்கும் என்று எண்ணிப்பார்த்து பச்சை நிற அட்டைகள்தான் குறைவாக அச்சடிக்கப்படும்; ஏனென்றால், இல்லை என்று சொல்கிற கார்டுகள்தான் குறைவாக இருக்கும்; ஆகவே அதை விலக்கி விட்டு, மற்ற நிறங்களை அச்சிடலாம் என்றொரு முடிவுக்கு வந்து, மஞ்சள், இளம் சிவப்பு என்ற அந்த இரண்டு வண்ண அட்டைகளை வெளியிடுவது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது. இதிலே வருமான அடிப்படை பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய நண்பர் ஆர்.எம். வீரப்பன் அவர்கள் எம்.ஜி.ஆர். மன்றத்தினுடைய தலைவர், அவருடைய கட்சி சார்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இன்றைக்கு வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வருமான அடிப்படையே கூடாது, எல்லோருக்கும் கார்டுகள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இங்கே உணவு அமைச்சர் எடுத்துக்காட்டியதுபோல, மத்திய அரசு, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு தானியங்கள் வழங்க வேண்டும், அது அரிசி ஆனாலும் கோதுமை ஆனாலும், என்கிற முடிவை ஐக்கிய முன்னணி அரசு எடுத்தபோது, அந்த முடிவு எடுக்கிற கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன் என்ற நிலையில் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் என்கிற முறையில் மாத்திரமல்ல, நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கிற முறையிலும் நான் எடுத்து வைத்த கருத்து; 'ஏற்கெனவே, நீங்கள் சொல்கின்ற விலையைவிட குறைவான விலைக்குத்தான் தமிழ்நாட்டிலே நாங்கள் அரிசி விற்பனையை நியாயவிலைக் கடைகளிலே நடத்திக் கொண்டிருக்கிறோம்' என்பதை எடுத்துக் காட்டி, 'நீங்கள் கொண்டு வருகின்ற இந்த முறையின் காரணமாக எங்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற அரிசியைக் குறைத்துவிடக் கூடாது' என்ற உத்தரவாதத்தைப் பெற்றுக் கொண்ட பிறகுதான், நான் அவர்கள் எடுத்த அந்த முடிவுக்கே ஒப்புதலை அளித்தேன். அந்த உத்தரவாதத்தை, அன்றைய பிரதமரும், உணவு அமைச்சரும்கூட அந்தக் கூட்டத்திலே எனக்கு வழங்கினார்கள். அந்த உத்தரவாதத்தின்படி நமக்கு அவர்கள் அரிசி வழங்கி வருகிறார்கள்

என்பது ஆளுநர் உரையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள்.

இந்த வருமான வரம்பு, வறுமைக்கோடு எது என்பதை நிர்ணயிப்பதற்காக மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஒன்றாகும். இந்த வருமான வரம்பு இருக்கிற காரணத்தினால், 1250 ரூபாய் இருப்பவர்களுக்கு மாத்திரம்தான், இந்த சிவப்பு அட்டை; அரிசி மற்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் என்று இல்லை. அதற்கு மேலாக மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள்கூட அவர்கள் விரும்பினால் - option அவர்களுக்கு - அரிசிதான் வேண்டும் என்றால் வாங்கிக் கொள்ளலாம். எனவே, அப்போது, எனக்கு அரிசிதான் வேண்டும் என்று மஞ்சள் அட்டைக்காரர் சொல்வாரேயானால், மஞ்சள் அட்டையும், இளஞ்சிவப்பு அட்டையும் ஒரே தரம்தான். அப்போது, இல்லை, இல்லை எனக்கு வேண்டாம், எனக்குத் தேவையில்லை என்று அவர்களாக முன்வந்து 'வேண்டாம்' என்று சொன்னால் தவிர, அவர்களுக்கு அரிசி வழங்குவது நிறுத்தப்படமாட்டாது. மஞ்சள் அட்டைக்கும் அரிசி உண்டு என்பதை நான் மிகத் தெளிவாக இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வருமான அடிப்படையிலே இருக்கின்ற இந்த முறை தீது, இதனால் கெடுதி ஏற்படும் என்ற விமர்சனத்திற்கு எள்ளளவு இடமுமில்லை. அப்படி யாரும் அதற்காக வருத்தப்படத் தேவையில்லை. அதற்காக அதிர்ச்சி அடையத் தேவையும் இல்லை என்பதையும் இந்த விளக்கத்தின் மூலமாக அவர்களுக் கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே இந்த அட்டை வழங்கத் தொடங்கப்பட்டு, விரைவிலே முடிவுறும் என்று மாதக் கணக்கிலே, முதலிலே சொல்லப்பட்டது உண்மைதான். ஆனால் எதிர்பாராமல் ஏற்பட்டு விட்ட காலதாமதத்தால் அந்த நாட்களைச் சற்று நீட்டிக்க வேண்டிய இன்றியமையாமை இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்காக இங்கே நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டதைப்போல, இந்த இடைக்காலத்திலே யாரும் குடும்ப அட்டை இல்லாமல் அவதிப் படுகின்ற நிலை நிச்சயமாக வராது. ஏன் என்றால், ஏற்கனவே இருக்கின்ற

அட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள், நியாயவிலைக் கடைகளிலே அவர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இன்றைக்கும் இருக்கின்றது. அவர்களுக்கு மேலும் உதவிகரமாகவும், அதே நேரத்திலே அரசாங்கத்தினுடைய பொருளாதார இழப்பின் சுமையைக் குறைப்பதற்காகப் போலி அட்டையைக் கண்டு பிடிப்பதற்காகவும்தான் இந்த முறையை நாம் கொண்டு வந்திருக்கின்றோம் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

சென்னை மாநகரத்தில், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப் போல மே முதல் தேதி முதல் இந்த அட்டைகள் வழங்கப்படும். அது ஜூன் மாதம் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வரும்; அந்தப் பொருட்களை வாங்கிக் கொள்ளக் கூடிய அளவுக்கு நடைமுறைக்கு வரும். அதேபோல், சென்னை மாநகரத்திலே மே முதல் தேதி வழங்கப்படும் அதே கால கட்டத்தில், மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய மாநகரப் பகுதிகளிலும் அதே முதல் தேதி குடும்ப அட்டைகள் வழங்கப் படும். திருநெல்வேலி மாநகரப் பகுதியில் மே மாதம் 16ஆம் தேதி முதல் இந்தக் குடும்ப அட்டை வழங்கப்படும். மாவட்டங் களில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய குடும்ப அட்டைகள், இந்த வண்ண அட்டைகள், 1-6-1998 முதல் வழங்கப்படும். கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 8 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் கூட 1-6-1998-ல் இந்த அட்டைகள் வழங்கப்பட்டு விடும். நான் குறிப்பிட்ட இந்த 8 மாவட்டங்களில் மாத்திரம் 1-7-1998 முதல் இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, தற்போதுள்ள குடும்ப அட்டைகளை, அதுவரையிலே நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவாதத்தினையும் நான் தருகிறேன். எனவே, மாநிலம் முழுவதும் இந்தப் புதிய இரு வண்ணக் குடும்ப அட்டைகள் வழங்கும் பணி மே மாதம் 1 ஆம் தேதி தொடங்கப்பட்டு, ஜூலை மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் அழகிரியும், மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்களும், இன்னும் சில குடும்பங்கள், குடும்ப அட்டைகள் இல்லாமலே இருக்கின்றன என்ற குறையை இங்கே எடுத்துச் காட்டியிருக்கின்றார்கள். கடந்த சில ஆண்டுகளாக புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளன என்ற கருத்தும் ஆளுங் கட்சி சார்பிலும், எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர்கள் சார்பிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படி, இதுவரையில் குடும்ப அட்டைகளே பெறாமல் விட்டுப்போன குடும்பங்களுக்கு, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் ஜூலை மாதத்திற்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான அறிவிப்புகளும் விரைவிலே வரும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாநகராட்சிப் பகுதிகளில் விடுபட்டுப் போன குடும்பங்களிலிருந்து, புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஏற்கெனவே மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த குடும்ப அட்டைப் பிரச்சினைக்கு அடுத்து, - ஏன் அடுத்து என்றுகூடச் சொல்ல முடியாது. இதைவிடச் சற்று மேலாகவே - கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினை பற்றி இங்கே பேசப்பட்டு இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு சுப்பராயன் அவர்களும், மாண்புமிகு பெரியசாமி அவர்களும், ஏன் எல்லோருமே, நம்முடைய திருநாவுக்கரசு போன்றவர் களும், அத்தனை எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களும், இந்தப் பிரச்சினையைப் பற்றி மிகுந்த உருக்கத்தோடு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களே கழகத்திற்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் உள்ள ஈடுபாட்டைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். 1955-56 ஆம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்களும், நானும் மற்றும் நம்முடைய பேராசிரியர் போன்ற கழகத்தினுடைய தலைவர்களும், கைத்தறித் துணிகளைத் தலையிலும், முதுகிலும் சுமந்து, 'கைத்தறி வாங்கலையோ கைத்தறி' என்று அப்போது உடுமலை நாராயண கவிராயர் எழுதிய 'செந்தமிழ்நாட்டுக்

கைத்தறிச் சேலை, வேட்டிகள் வாங்கிடுவீர், நம் கைத்தறியாளர் சேமமுறவே வாங்கிடுவீர்' என்ற பாடலைப் பாடிக் கொண்டு, அண்ணா அவர்கள் திருச்சியிலும், நான் சென்னையிலும் கைத்தறித் துணிகளை விற்றோம். அன்றைக்கு ஒருநாள் விற்பனை 1 லட்சம் ரூபாய். அன்றைக்கு 1 லட்சம் ரூபாய் என்றால், இன்றைக்கு எவ்வளவு என்று எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். 1 லட்சம் ரூபாய்க்கு அன்றைக்குக் கைத்தறித் துணிகளை விற்று, தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளுக்கு ஒரு மவுஸ் - ஒரு மகத்துவத்தை ஏற்படுத்துகின்ற நிலையை நாங்கள் உருவாக்கினோம். அப்படி விற்றபோதுதான், அதுவரையிலே கதர் ஆடையிலேயிருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், சென்னையிலே நான் விற்ற கைத்தறி ஆடைகளை அன்றைக்கு அவருடைய இல்லத்தில் 5 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வாங்கி, அதற்குப் பிறகு, கைத்தறி கட்ட ஆரம்பித்தார் என்ற ஒரு வரலாற்றுச் செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய நிலையில் உலகம் முழுவதும் இந்தத் துணித் தொழிலில் ஒரு முடக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். கைத்தறியாளர்களுடைய குறைகளைத் தமிழகத்திலே போக்குவதற்கு இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் ஒன்றிரண்டை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகும்.

1989ஆம் ஆண்டிலேதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளியவர் களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவது என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, விரிவாக அது நடைமுறைப்படுத்தப் பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தத் திட்டத்தின்கீழ் 1997-98-ல் ரூ. 92.60 கோடி மதிப்புடைய சேலைகளும், வேட்டிகளும் தமிழகத்திலே உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல் நல்ல தரமான வேட்டிகள், சேலைகள் - சிலபேருக்கு வழங்கப்படாமல் விட்டுப் போயிருக்கலாம், ஆங்காங்கே உள்ள குறைகளின் காரணமாக - தரமான வேட்டி சேலைகள், நடுத்தர

வர்க்கத்தினர்கூட 'எங்களுக்குத் தரக்கூடாதா' என்று கேட்கின்ற அளவிற்கு அவ்வளவு தரமான வேட்டிகளும், சேலைகளும், ரூ. 92 கோடிக்கு அத்தனையும் நெசவாளர் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலேதான் உற்பத்தி செய்து தரப்படவேண்டுமென்று கூறப்பட்டு, ரூ. 92 கோடி அவர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது.

அதேபோல் 1998-99 ஆம் ஆண்டுத் திட்டப்படி, வேட்டி, சேலை இலவசமாக வழங்கப்படும் திட்டப்படி, இந்தச் சங்கங்களுக்கே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஒரு மீட்டர் துணிகூட வெளி மாநிலங்களிலிருந்தோ, தனியாரிடமிருந்தோ கொள்முதல் செய்யப்படவில்லை என்பது இந்த அரசு கைத்தறி நெசவாளர்கள்மீது கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவச சீருடைகளுக்காக ரூ. 56.74 கோடி மதிப்புடைய 188 லட்சம் மீட்டர் துணிகள் தமிழக நெசவாளர்களால்தான் உற்பத்தி செய்யப் படுகின்றன. ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் ஆகிய துறைகள் நடத்துகின்ற, பள்ளி மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்குகின்ற திட்டத்திற்கு ரூ. 6.83 கோடி வழங்கப்பட்டு, 22 லட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் தமிழக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமேதான் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. இவை எல்லாம் துணிகள் தேங்கிக் கிடக்கக் கூடாது என்பதற்காக, நெசவாளர்களுக்கே போய்ச் சேரவேண்டும்; அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே போய்ச் சேர வேண்டுமென்பதற்காக, ஒரு மீட்டர் துணிகூட வெளியிலே வாங்காமல் அவர்களுக்கே போய்ச் சேர இந்த அரசு வகுத்த வழிகள் ஆகும்.

அதுமாத்திரமல்லாமல் கைத்தறித் துணிகளுடைய விற்பனையை மேம்படுத்த இந்த அரசு உச்சவரம்பு இல்லாமல்

ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் (Rebate 20 Per cent) வழங்கி ஆணை பிறப்பித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இதன் விளைவாக 1997-98-ஆம் நிதியாண்டில், முதல் 5 மாதங்களில், அதாவது 1-4-1997 முதல் 31-8-1997 முடிய ரூ. 147 கோடியாக இருந்த விற்பனை அடுத்த 6 மாதங்களில் 1-9-1997 முதல் 28-2-1998 முடிய ரூ. 235 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, இந்த 20 விழுக்காடு ஆண்டு முழுவதும் என்று ஆக்கிய காரணத்தால் அதிக விற்பனை - ரூ. 88 கோடிக்கு - ஆகியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதுமாத்திரமல்ல. கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு 1-4-1997 முதல் 10 விழுக்காடு அகவிலைப்படியும், 1-10-1997 முதல் அடிப்படைக் கூலியிலே 10 விழுக்காடு உயர்வும் அளிக்கப் பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து, ஓய்வுபெறும் நெசவாளர்களுக்கு மாதம் ரூ. 150 ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. அந்த ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 60-ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது 1-9-1996 முதல்.

நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 15,000 ரூபாய் என்பது 18-9-1996 முதல் இந்த அரசினால் 25,000 ரூபாயாக உயர்த்தப் பட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு உதவிகளைச் செய்தும்கூட, இந்த அளவிற்குப் பக்கபலமாக இருந்தும்கூட அவர்களுக்கு இன்னமும் முழுமையாகத் துன்பம் தீர்ந்தபாடில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களைப் போலவே நானும் உணர்ந்து வருந்துகிறேன். எனவே, இவற்றை நல்லமுறையில் ஆராய்ந்து அவர்களுடைய வாழ்விலே வளம் சேர்க்கவும், நலம் சேர்க்கவும், அவர்களுக்கு எளிதாக, நியாய விலையிலே நூல் கிடைக்கவும், அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணியைக் கொள்முதல் செய்வதற்கும், அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கவும், அவர்களுக்குத் தேவையான கடன் வசதியை எளிதில் தரவும் என்னென்ன செய்யலாம்

என்பதைப்பற்றி நன்கு பரிசீலித்து, இந்த அரசுக்கு ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குவதற்காக, நெசவாளர்களுடைய பிரதிநிதிகள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, அந்தக் குழு மிக மிக விரைவில் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும். அந்தக் குழு உறுப்பினர்கள் யார், யார் என்பதை நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிடுகிறேன். அதற்குள்ளாக, அவர்களையெல்லாம் கலந்து பேசி, அந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கொண்டு, நெசவாளர் துயர் நீங்க நல்ல முடிவுகளை நாம் எல்லோரும் சேர்ந்து எடுப்போம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த அவையில் National Agenda பற்றி விவாதிக்கப் பட்டிருக்கிறது. இதுபற்றி நேற்றைக்கு முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் சில விளக்கங்களை நான் தந்திருக்கிறேன். இந்த National Agenda, 17 கட்சியினுடைய தலைவர்கள் கையெழுத்திட்டு, வெளியிட்டுள்ள ஒன்றாகும். வாஜ்பாய் அவர்கள், அத்வானி அவர்கள், செல்வி ஜெயலலிதா அவர்கள், வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், வைகோ. அவர்கள், டாக்டர் ராமதாஸ் அவர்கள், இத்தனை பேரும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள, 17 பேர் கையெழுத்திட்டுள்ள அறிக்கை ஆகும். இந்த National Agenda -வில் இன்னின்ன திட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்ற நிபந்தனை விதித்தும், அது சேர்க்கப்படாத சூழ்நிலையைப் பார்க்கும்போது, சேர்க்கப்பட்டதும் தமிழக நலன்களுக்கு சமுதாய நலன்களுக்கு, விவசாய நலன்களுக்கு விரோதமாக ஆக்கப் பட்டிருப்பதைக் காணும்போது, இந்தக் கோரிக்கைகளை வைக்காமலேயே இருந்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. ஏதோ முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நான் போட்டி போட்டுக்கொண்டு அதை எதிர்க்க வேண்டுமென்று கருதுகின்றவன் அல்ல. உங்களுக்கு நன்றாகத் தெரியும்

என்னைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டு, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, காவிரிப் பிரச்சினையிலே அவருக்குக் கை கொடுக்கின்ற வகையிலே நடந்துகொண்டது தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதுபோல அவரும், இதே அவையில், இதே இடத்தில் நின்று கொண்டு பேசிய பேச்சு காவிரிப் பிரச்சினையானாலும், வேறு சில பொதுப் பிரச்சினை களானாலும், அதிமுகவும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இருக்கும் என்று சொன்ன சொல் இன்னமும் என்னுடைய செவிகளில் ரீங்காரம் செய்துகொண்டு தான் இருக்கிறது.

அந்த அளவிற்கு காவிரிப் பிரச்சினையிலே ஒருமித்த கருத்து இருந்தது. எம்.ஜி,.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து, அதைப்பற்றிப் பேசுவதற்கு அழைத்தபோதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள், ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சர்வ கட்சிக் கூட்டங்களுக்கு அழைப்பு அனுப்பியபோதெல்லாம் 'நீ காவிரிப் பிரச்சினைக்கு துரோகம் செய்து விட்டவன்; ஆகவே, அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்ள முடியாது' என்று அறிவித்து, அப்படி எழுதப்பட்ட கடிதங்களை வெளிப்படையாகவே பத்திரிகைகளுக்குத் தந்து, அந்தக் கூட்டங்களிலே கலந்து கொள்ள மறுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள்.

இங்கேகூட, ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989-90-ல், திரு. வி.பி. சிங் அவர்கள் அங்கே பிரதமராக இருந்தபோது, நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக, பொதுப் பணித்துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு நம்முடைய தீர்மானத்தை நிறைவேற்றி எடுத்துக்கொண்டு டெல்லிக்குச் சென்ற நேரத்தில், வருவதாக ஒப்புதல் அளித்த திரு. எஸ்.ஆர்.இராதா - அப்போது அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். முதலில் கொஞ்சநாள் தம்பி திருநாவுக்கரசு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு எஸ்.ஆர்.இராதா அவர்கள் என்று நினைவு - அவரும் வருவதாகச்

சொல்லி, எல்லோருக்கும் சேர்த்து டெல்லிக்குச் செல்ல விமானத்திற்கான பயணச் சீட்டு பெறப்பட்டு, கடைசி நேரத்திலே நாங்கள் வர இயலாது என்று கூறியது மாத்திரம் அல்ல; அவர்கள் வராதது மாத்திரமல்ல; எங்களோடு வர இருந்த காங்கிரஸ் நண்பர்களையும் வரவிடாமல் அன்றைக்குத் தடுத்து விட்டார்கள். அன்றைக்கு ஒரே ஒரு காங்கிரஸ் எம்.பி. வைஜயந்தி மாலா, அவர்கள்தான் துரைமுருகனுடைய தலைமையில் சென்ற அந்தத் தூதுக் குழுவினுடைய சந்திப்பிற்கு வி.பி. சிங் அவர்களுடைய அலுவலகத்திற்கு வந்தார்கள். மற்றவர்கள் யாரும் அன்றைக்கு வரவில்லை. அப்படிப் புறக்கணிக்கப்பட்டது. ஒரு பெரிய பிரச்சினை. பொதுவான பிரச்சினை; அரசியல் கண்ணோட்டத்தோடு அன்றைக்கு அணுகப்பட்ட காரணத்தால் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் என்றைக்கும் நாங்கள் அப்படிப் புறக்கணித்தது இல்லை. இந்தப் பொதுவான பிரச்சினைகளில் எங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற அரசோடு ஒத்துழைக்காமல், எதிர்க்கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் புறக்கணித்ததும் இல்லை; ஒதுங்கியிருந்ததும் இல்லை. எங்களுடைய கருத்துக்களை வேகமாக எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டிய முயற்சிகளில் நாங்கள் என்றைக்கும் விட்டுக் கொடுத்தது இல்லை. அந்த வகையிலே இன்றைக்கு இந்தக் காவிரிப்பிரச்சினையில் அதிகம் பேச நான் விரும்பவில்லை. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே இது குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதையொட்டி நேற்றைக்கு முன்தினம் எழுந்த சர்ச்சையிலும் நீண்ட விளக்கத்தை நான் வழங்கியிருக்கிறேன். ஆனால் கேட்டது என்ன; கிடைத்தது என்ன என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் நீதி வழங்கப்பட வேண்டும். அது இந்த Agenda-விலே வரவேண்டும்; இந்த - National திட்டத்திலே - தேசிய திட்டத்திலே வரவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா அவர்கள் வாதாடினார்கள்; போராடினார்கள்; பத்திரிகையிலே செய்தி வந்தது. தனிப்பட்ட சிலபேருடைய மந்திரி பதவிகளுக்காக அல்ல; தமிழ்நாட்டினுடைய பொதுப் பிரச்சினைக்காக வாதாடுகிறேன் என்று சொன்னபோது அதைக் கேட்க இனிப்பாக இருந்தது. ஆனால் நடைபெற்றிருப்பது

என்னவென்றால் காவிரி என்ற சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை. குடகிலேயிருந்து பூம்புகார் வரையிலே நீண்டு பரந்து வந்துகொண்டிருக்கிற அந்தக் காவிரி இந்தச் சிறிய ஏட்டில் ஒரு இடத்திலேகூட காவிரி என்கின்ற 3 எழுத்து தமிழையோ அல்லது ஆங்கிலத்திலே CAUVERY என்ற சொல்லையோ இதிலே காண முடியவில்லை. இரண்டு நாளைக்கு முன்பு தினமணி பத்திரிகையிலே ஒரு தலையங்கம் பார்த்தேன். அதிலேகூட கர்நாடக முதலமைச்சர் என்ன சொல்கிறாரோ அதைத்தான் இந்த தேசிய திட்டத்திலே அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள் என்று தினமணிகூடத் தலையங்கம் தீட்டியிருக்கிறது; படித்துப் பார்த்தேன்.

அதுமாத்திரம் அல்ல. கர்நாடகத்தினுடைய குரல் இன்றைக்கு ஹெக்டே மூலமாக அங்கே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஹெக்டேயினுடைய குரல்தான் இந்தத் திட்டத்திலே இருப்பதாக என்னால் உணர முடிகிறது; உணர முடிகிறது என்ன, உண்மையும் அதுதான். என்ன இருக்கிறது? "We will adopt a National Water Policy which provides for effective and prompt settlement of disputes and time-bound implementation", என்றுதான் இருக்கிறது. அந்த தேசிய நதிநீர்க் கொள்கை என்பது National Water Policy என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒன்றுதான். அதை யாரும் மறுக்கவில்லை. தேசிய நதிநீர்க் கொள்கையை யாரும் மறுக்கவில்லை; வெறுக்கவில்லை; அதை, ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். ஆனால் அதை வைத்து, அந்தத் தீபத்தை வைத்து, இந்த வீட்டைக் கொளுத்தி விடக் கூடாது. பார்ப்பதற்குத் தீபம்தான். ஆனால் தீபம் என்னுடைய வீட்டைக் கொளுத்தப் பயன்பட்டால் தடுத்தேதான் தீருவேன் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தீபம் என்பதற்காக வீட்டைக் கொளுத்த முடியுமா? திரு. பட்டேல் என்ன சொல்கிறார்; கர்நாடகத்தின் முதலமைச்சர் என்ன சொல்கிறார்; கர்நாடக மாநில அரசு என்ன சொல்கிறது; இப்போது ஒன்றும் இந்தப் பிரச்சினையை எடுக்க வேண்டாம்; பேச்சுவார்த்தைக்கு வா, நான் சொல்வதைக் கேள், ஏற்றுக்கொள் என்றது. பேச்சுவார்த்தைக்கு நாம் மறுத்தபோதுகூட உச்ச நீதிமன்றம்தான் தாக்கீது தந்தது, பேசுங்கள்

என்று. பேசாவிட்டால் உச்சநீதிமன்றம் தவறாகக் கருதிக்கொள்ளும் என்று, பேசிப் பார்த்தோம். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றிப் பெறவில்லை. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று சொன்னோம். பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை; உங்கள் தீர்ப்பை வழங்குங்கள் என்று சொன்னோம். உச்சநீதி மன்றம் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்டது. ஐக்கிய முன்னணி அரசைப் பார்த்துக் கேட்டது.

ஐக்கிய முன்னணி அரசில் கர்நாடகத்தைச் சேர்ந்த ஜனதா தளத் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தேவகவுடா, ஐக்கிய முன்னணிக் கட்சியினுடைய தலைவர் அவர்தான். அவர் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப்பட்டபோது நானும், திரு. மூப்பனார் அவர்களும்தான் அவரை முன் மொழிந்து, வழி மொழிந்து ஐக்கிய முன்னணியினுடைய Chairman ஆக அந்தக் குழுவினுடைய தலைவராக அவர் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அவர் இருக்கிறார். அவர் இருந்தபோதுகூட மத்திய அரசு அவருக்காக வளைந்து கொடுக்காமல் - தேவ கவுடாவுக்காக வளைந்து கொடுக்காமல் ஐக்கிய முன்னணி அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து உச்ச நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறது.

என்ன திட்டம்? ஒரு Authority, Cauvery Valley Authority, அது என்ன சொல்கிறது? Authority யினுடைய வேலை என்ன? நடுவர் மன்றம் கொடுத்திருக்கின்ற இடைக்கால Award இருக்கிறதே; அந்தத் தீர்ப்பு இருக்கிறதே; அதை எப்படி நிறைவேற்றுவது? - நிறைவேற்றுவதா இல்லையா என்பதல்ல - எப்படி நிறைவேற்றுவது என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தை மத்திய அரசு கொடுத்தது. இதைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று உச்ச நீதிமன்றம் நம்முடைய மாநிலத்தைக் கேட்டது. நாம் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக இருந்ததால் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதைப் போலவே புதுவை மாநிலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கேரள மாநிலம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலம் ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்தது. இழுத்தடிக்கும்போது அது சொன்னது எல்லாம் "Authority வேண்டாம்: Committee போதும்'' என்பதுதான். அதுமாத்திரம் அல்ல, "இந்தப் பிரச்சினையைத் தேசிய நதிநீர்க் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு பேசிக்கொள்ளலாம்" என்றார்கள்.

இது இப்போது திரு. ஹெக்டே வாயிலாக இந்த National Agenda-வில் ஏற்றப்பட்டிருக்கிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அன்றைக்கு முழங்கிய அந்த முழக்கம் இதில் இடம்பெறவில்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு அவர் பாடுபட வேண்டும்; போராட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேனே தவிர, அவரை இழித்தும், பழித்தும் பேசுவதற்காகச் சொல்லவில்லை. ஏன் என்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் அக்கறையோடு செய்ய வேண்டும். எனக்குள்ள சந்தேகம் எல்லாம் நடுவர்மன்றம் நான் கேட்டபோது அம்மையார் ஒருமுறை சொன்னார்கள்; அப்படியே நடுவர்மன்றம் கொடுத்தாலும்கூட அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு ஒன்றும் விதியில்லை என்று ஒருமுறை அம்மையார் சொன்னார்கள். அதையெல்லாம் நினைத்தால் பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வோடு இதை அணுகினால் நம்முடைய பிரச்சினை நல்லமுறையில் தீருமா என்ற அச்சம் ஏற்படுகிறதே தவிர வேறு அல்ல.

அடுத்து B.C. மற்றும் M.B.C.-க்கு இட ஒதுக்கீடு. இந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே 69 சதவீதத்திற்கான சட்டம்கூட நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் அரசமைப்புச் சட்டத்தினுடைய 9-வது அட்டவணையில் கூடச் சேர்க்கப்பட்டது. இப்படிச் சேர்க்கப்பட்ட பிறகும்கூட உச்ச நீதிமன்றத்திலே நமக்குக் கிடைத்த முடிவு என்ன? இந்த முடிவுக்கு யார் காரணம்? 17-11-1994 அன்று உச்ச நீதிமன்றத்திலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது உச்ச நீதிமன்றம் தன்னுடைய ஆணையில் என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால்; It is significant to notice that after the order dated 18th August 1994 was passed, the State itself moved for modification of that order in the circumstances stated in its application. That application was filed on 23rd September 1994. In that application no plea was raised based upon the inclusion of the said Act in the 9th Schedule and orders were obtained on 3rd October 1994. இப்படி ஒரு சட்டம் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருப்பதையே இவர்கள் யாரும் உச்ச நீதிமன்றத்திலே சுட்டிக்காட்டவில்லை என்று உச்ச நீதிமன்றம்

சொல்கிறது. சுட்டிக்காட்டாத காரணத்தால் நான் இந்த 69 சதவீதத்தைப் பெற முடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்று நாம் மாத்திரமல்ல; நானும், அருமை நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்கள் அத்தனைபேரும் ஒரே குரலிலே முழங்கியிருக்கிறோம். இதை யாரும் மறந்து இருக்க முடியாது. அதற்காகப் போராட்டம் கூட நடத்தியிருக்கிறோம். இதை சுட்டிக்காட்டவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

உச்ச நீதிமன்ற ஆணை என்னவென்றால் 18-8-1994 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டதற்குப் பின்னர் மாநில அரசே அந்த ஆணையை மாற்றம் செய்வதற்கான சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது கவனத்திற்குரியது. அந்த மனு 23-9-1994 அன்று தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிடப்பட்ட சட்டம், இந்த 69 சதவீத சட்டம் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளதை ஒட்டி எந்தவித கோரிக்கையும் அந்த மனுவிலே எழுதப்படவில்லை. இப்படி உச்ச நீதிமன்றமே சுட்டிக்காட்டுகின்ற அளவுக்குக் கடந்த கால அரசு பிழை புரிந்து விட்டது என்பதை யாரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. ஆனால் அதை இடம் பெறச் செய்வோம், அது எங்களுடைய நிபந்தனைகளில் ஒன்று; இல்லாவிட்டால் பட்டமளிப்பு விழாவிற்கே - மன்னிக்க வேண்டும் - பதவியேற்பு விழாவிற்கே வரமாட்டோம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆனால், Agenda -வில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், என்ன இருக்கிறது என்றால், அன்றைக்கு தீரன் குறிப்பிட்டதைப் போல, "We will provide legal protection to existing percentages of reservation in educational institutitons at the State level." என்றுதான் இருக்கிறது. ஏற்கெனவே, கல்வி, வேலை வாய்ப்பு இரண்டிலேயும் இருந்தது, இந்த National Agenda -வைப் படித்த பிறகு, எனக்கு வருகிற பயம் என்னவென்றால், அவர் கேட்ட உறுதிமொழியின் காரணமாக, நிபந்தனையின் காரணமாக, இந்த வேலைவாய்ப்பும் போய் விட்டதோ; அதிலே உள்ள இட ஒதுக்கீடும் (reservation) போய் விட்டதோ என்கின்ற அச்சம் என்னைப் பிடித்து வாட்டுகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும்

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் ஒரு பீதி இதன் காரணமாக இன்றைக்குத் தோன்றியிருக்கிறது. "We will provide legal protection to existing percentages of reservation in educational institutitons at the State level." என்றுதான் இருக்கிறது. கல்விக் கூடங்களில் இந்த இட ஒதுக்கீட்டிற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இருக்கிறது. எவ்வளவு இட ஒதுக்கீடு? அந்தப் புள்ளி விவரம் இதிலே காட்டப்படவில்லை. எவ்வளவு காலத்திற்கு? அது காட்டப்படவில்லை. யாருக்கு என்பது எல்லாம் காட்டப்பட வில்லை. எனவே, ஆங்கிலத்தில் சொல்வார்களே (Vegue) என்று. அது மாத்திரம் அல்ல; Vague ஆக மாத்திரம் அல்ல; "போக்கவும்" இது அமைந்திருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, பெண்களுக்கு 33 சதவீதம் கேட்ட பொழுது, அம்மையார் சொன்னது "பெண்களுக்கு என்று மாத்திரம் இருந்தால் போதாது, அந்தப் பெண்களிலும் தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு சதவீதம் வேண்டும். அதோடு கூடிய சதவீதம்தான், ஒதுக்கீடுதான் தேவை" என்று சொன்னார்கள். இதிலே பார்த்தால் அப்படி எதுவும் இல்லை. "33% of the seats in Parliament and State Assemblies for women." என்று இருக்கிறதே அல்லாமல், அதிலே B.C. உண்டா? S.C. உண்டா, M.B.C. உண்டா என்பதெல்லாம் இதிலே காணப்படவில்லை.

பிறகு, மொழிப் பிரச்சினை. மொழியைப் பொறுத்த வரையில் எல்லா மொழிகளும் மத்தியிலே உள்ள இந்தி, ஆங்கிலம், ஆகிய இந்த இரண்டு மொழிகளோடு சேர்ந்து மத்திய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும்; எல்லா மொழிகளும் ஆக வேண்டும்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நீண்ட காலமாக எடுத்து வைக்கப்பட்டு வருகின்ற ஒரு கொள்கை முடிவு, மொழியைப் பொறுத்து. அதிலே மேலும் ஒரு திருத்தத்தோடு 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் முரசொலி மாறன் முன்மொழிந்து, நம்முடைய கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம், "மத்தியிலே ஆட்சி

மொழி அட்டவணையிலே, அரசமைப்புச் சட்டத்திலே அட்டவணையிலே உள்ள எல்லா மொழிகளும். குறிப்பாக எல்லா மாநிலங்களிலும் உள்ள ஆட்சி மொழிகளும் இடம் பெற வேண்டும்; அதற்குக் காலக்கெடு வேண்டுமென்றால் எல்லா வகையிலும் வளம் பெற்ற, இலக்கிய வளம், இலக்கண வளம், தொன்மை அத்தனை சீரும் நிறைந்த தகுதி வாய்ந்த எங்கள் தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும்" என்பது தீர்மான வாசகம் ஆகும்.

அதை யார் எடுத்துக் கொண்டாலும், எனக்கு மகிழ்ச்சிதான். அதை ஜெயலலிதா அவர்கள் எடுத்துக் கொண்டு, அவர்களுடைய கட்சி மாநாடுகளிலும் தீர்மானம் போட்டிருக் கிறார்கள். ம.தி.மு.க. மாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சிதான். இந்தக் கொள்கை எல்லோருக்கும் சொந்தமாக வேண்டுமென்பதுதானே நம்முடைய கொள்கை.

அப்படி வந்ததில், இதிலே தமிழை ஆட்சிமொழியாக, இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற நிலை, இந்த National Agenda-விலே இருக்கிறதா என்றால் இல்லை.

அன்றைக்கு ஒரு பெரியவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய தலைவர், கண்ணித்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள்; அரசியல் நிர்ணய சபையிலே இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கலாம் என்று பிரச்சினை வந்தபொழுது தமிழகத்திலேயிருந்து ஒலித்தது காயிதே மில்லத் அவர்களுடைய குரல். எல்லா வளமும் நிறைந்த, எல்லா இலக்கிய இன்பமும் வாய்ந்த, எல்லா இலக்கணச் செறிவும் மிக்க தமிழ் மொழியைத்தான் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்று அன்றைக்கு உரத்த குரல் கொடுத்தார்கள். ஆனால் அந்தக் குரலும் அன்றைக்கு வெற்றி பெறவில்லை.

அதே நிலையிலேயிருந்து தமிழ் மொழி, ஆட்சி மொழியாக ஆக வேண்டும், அது ஒரு நிபந்தனை என்று விதிக்கப்பட்டு, பின்னர் தயாரிக்கப்பட்டு, அவர்களும் கையெழுத்திட்டுள்ள Agenda-விலே என்ன இருக்கிறது என்றால், "A Committee will be set up to study the feasibility of treating all

19 languages included in Schedule VIII of the Constitution as Official Languages." இதற்கு ஒர Committee போடப்பட்டு, இது சாத்தியமா என்று ஆராயும். சாத்தியமா என்று ஆராயும்போது, ஒவ்வொரு மொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும். 19 மொழிகளும் சாத்தியமா என்று ஆராய்ந்தால் சாத்தியமில்லையென்றுதான் முடிவு வரும். தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டா என்ற அந்த முடிவைத்தான் தெரிவிப்பார்கள். எனவே, தமிழ் மொழி அங்கே ஆட்சி மொழியாக, மத்திய ஆட்சி மொழியாக ஆவதற்கான அந்தச் சூழல் இந்த Agenda-விலே இடம்பெற வில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இப்படிச் சுட்டிக்காட்டுவது குறை கூற அல்ல. மேலும் இதற்கான முயற்சிகளை இப்போது அங்கே பொறுப்பேற்றிருக் கின்ற அமைச்சர்கள் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேனேயல்லாமல் குறை கூறுவதற்காக நான் சொல்ல வில்லை. இவையெல்லாம் நிறைவேற வேண்டும் என்கின்ற ஆசையின் காரணமாகக் கூறுகிறேன். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் ஏதோ சில நிர்பந்தங்கள், ஏதோ சில பதவிகளுக்காகத்தான் செய்யப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு விரோதமாக சில காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்பட்டன என்ற ஓர் எண்ணத்தை உறுதிப் படுத்தக்கூடிய அளவுக்கு ஆகிவிடும் என்பதற்காக, இதிலே மேல் நின்று முயற்சிகளை முனைப்போடு செய்ய வேண்டும் அவர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமாக இங்கே பேசப்பட்ட வெடிகுண்டுச் சம்பவங்கள். இதிலே நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லையென்றாலும், ஒரு தகவலை, இந்த அரசுக்குக் கிடைத்த இந்தத் தகவல் எப்படியெல்லாம் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு எங்கே இதிலே சோடை ஏற்பட்டது என்பதை உங்களுக்கு விளக்குவதற்காகச் சொல்கின்றேன். ஏற்கெனவே, செய்தியாளர்களிடத்திலே ஒரு சிலவற்றைச் சொல்லியிருக் கின்றேன். முழுமையாக இந்த மாமன்றத்திலே சொல்ல வேண்டும் என்பதற்காக இவற்றை நான் நினைவூட்டுகின்றேன். கோவை

குண்டுவெடிப்புச் சம்பவம் நடப்பதற்கு முன்பே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றெல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கின்ற பதிலை ஒரு அறிக்கை போல இங்கே வைக்க விரும்புகின்றேன்.

கோவை மாநகரக் காவல் நிலையத்தையும், காவல் துறை வாகனங்களையும் வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்காக இஸ்லாமியத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்' என்ற செய்தியை தமிழ்நாடு காவல் துறையின் புலனாய்வுத் துறை, 11-12-1997 அன்று அரசுக்குத் தெரிவித்தது. மத்திய புலனாய்வுத் துறையல்ல; கவனமாகக் கேட்க வேண்டும், தமிழ்நாடு காவல் துறையினுடைய புலனாய்வுத் துறை - D.I.G.- 11-12-1997 அன்று அரசுக்குத் தெரிவித்தது. உடனடியாக அரசின் சார்பில் இந்தத் தகவல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாநகரக் காவல் ஆணையருக்கும் அனுப்பப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. 'கோவை மாநகரக் காவல் நிலையம், காவல் துறை வாகனங்கள் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும் தீவிரவாதிகளால், அதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள்' என்ற செய்தி 11-12-1997 அன்று கிடைத்த செய்தி உடனடியாகக் கோவை மாநகரக் காவல் துறை ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

பிறகு 21-12-1997-ல் சென்னையிலே உள்ள மத்திய புலனாய்வுத் துறை இணை இயக்குநர் - ஐ.பி.யினுடைய இணை இயக்குநர் - தமிழ்நாடு காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 21-12-1997 -ல் ஒரு தகவல் அனுப்பினார். அதில் "1997 நவம்பர், டிசம்பர் மாதங்களில் கோவை நகரில் நடந்த மதக் கலவரங்களில் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு பதில் அடி கொடுக்கும் வகையில் கோவை நகர் வெளிப்புறத்தில் சில வன்முறைகளில் அல்-உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும், காவல் நிலையங்கள், கோவை காவல் ஆணையர் அலுவலகம், எரி வாயு ஏற்றிச் செல்லும் லாரிகள் போன்றவை பாதிக்கப் படலாம்" என்று அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தத் தகவலும் புறக்கணிக்கப்படவில்லை.

உடனடி நடவடிக்கைக்காகக் கோவை மாநகரக் காவல் துறை அதிகாரிகளுக்கு மாநில காவல் துறை அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட்டது. பிறகு, 24-12-1997 அன்று அரசின் தலைமைச் செயலாளருக்கு ஒரு தகவல் தரப்பட்டது. இந்தத் தகவலும் நான் முதலிலே குறிப்பிட்ட அதே தகவல்தான், என்னென்ன நடைபெறும் என்ற தகவல்தான் தரப்பட்டது. உடனடியாக, தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், காவல் துறை இயக்குநர், காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் ஒழுங்கு), காவல் துறை கூடுதல் இயக்குநர் (உளவுத் துறை) ஆகியோரைக் கொண்ட உயர்மட்ட அலுவலர்களுடைய கூட்டம் கோட்டையிலே நடந்தது. இந்தக் கூட்டத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட மதத் தீவிரவாதிகளுடைய செயல்பாடுகளை உன்னிப்பாகத் தொடர்ந்து கண்காணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, அதற்கான திட்டம் - Contitagency Plan- ஒன்றைத் தயாரித்து உடனடியாக அமல்படுத்த வேண்டும் எனக் காவல் துறை அதிகாரிகளுக்கு அந்தக் கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதேபோல், அல்-உம்மா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பால் கேன் போன்று தோற்றம் அளிக்கக்கூடிய பொருட்களில் வெடி பொருட்களை மறைத்துவைத்து, எரி வாயு ஏற்றிச் செல்லும் லாரிகளையும், காவல் நிலையங்களையும் தாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற தகவலை தமிழ்நாடு அரசின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு S.B., C.I.D. 27-12-1997 அன்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது. அதையொட்டி தலைமைச் செயலாளர், காவல் துறைத் தலைவர் (D.G.P.) காவல் துறை கூடுதல் தலைவர் (புலனாய்வு), (A.D.G.P.) Intelligence ஆகிய உயர் மட்ட அலுவலர்களைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டி அது பற்றி விவாதித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. மத்திய அரசின் உள் துறையிடமிருந்து 24-1-1998 அன்று ஒரு எச்சரிக்கைச் செய்தி வந்தது. அதிலே, ரம்ஜான் பண்டிகையையொட்டி அல்-உம்மா இயக்கம் கோவை நகரில் குண்டுவெடிப்பிற்குத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்

பட்டிருந்தது. இந்தத் தகவலும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், கோவை மாவட்ட காவல் துறை ஆணையர் அவர்களுக்கும், காவல் துறை இயக்குநருக்கும் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 24-12-1997 அன்று கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தீவிர அறிவுரைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மத்திய புலனாய்வுத் துறையின் இணை இயக்குநர் 21-12-1997 அன்று கடிதத்தில் என்ன தெரிவித்திருந்தாரோ அதே எச்சரிக்கைச் செய்தியை மத்திய புலனாய்வுத் துறை இயக்குநர் 2-1-1998 அன்று மாநில காவல் துறைத் தலைவருக்கு அனுப்பியிருந்தார். இக்கடிதம் 5-1-1998 அன்று காவல் துறைத் தலைவரால் பெறப்பட்டது. மத்திய புலனாய்வுத் துறை இணை இயக்குநர் தமிழக அரசின் காவல் துறைக் கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 19-1-1998 அன்று எழுதிய கடிதத்தில் ரம்ஜான் பண்டிகையைத் தொடர்ந்து ஒருவார காலத்திற்குள் வன்முறைச் செயல்களில் அல்-உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும் என்றும் தெரிவித்திருந்தார். இதுவும், உடனடியாக கோவை காவல்துறை அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது. தெரிவிக்கப்பட்டு, இதைப் பற்றியெல்லாம் கண்காணிப்போடு செயல்படுங்கள் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

14ஆம் தேதி கோவையிலே வெடிகுண்டுச் சம்பவம் நடப்பதற்கு முன்பு இதோபோல் பல எச்சரிக்கைகள் செய்யப் பட்டும், அந்த எச்சரிக்கையின் பேரில் திருநெல்வேலி மாவட்டம் - கூடங்குளம், விழுப்புரம் மாவட்டம் - சின்னசேலம், தர்மபுரி மாவட்டம் - பாப்பாரப்பட்டி, அஞ்சட்டி, பென்னாகரம், கடலூர் மாவட்டம் - சிதம்பரம், செங்கற்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்தில் தாம்பரம், மாங்காடு, மதுரை மாவட்டம் - பேரையூர், சென்னையில் வேப்பேரி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மாப் பேட்டை, சேலம் மாவட்டத்தில் தலைவாசல், ஆத்தூர், மகுடஞ் சாவடி, மேச்சேரி, கருமலைக் கூடல், தாரமங்கலம், வீரகனூர், கொண்டலாம்பட்டி, சங்ககிரி, தீவட்டிப்பட்டி, சூரமங்கலம், தம்மம்பட்டி, ஓமலூர், சேந்தமங்கலம்,

விருதுநகர் மாவட்டத்தில் திருத்தங்கல், காரியாப்பட்டி, மாரனேரி, வச்சகாரன்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் - மொரப்பநாடு, ஆத்தூர், குமரி மாவட்டத்தில் இரணியல், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம், கோவை மாவட்டத்தில் மடத்துக்குளம் ஆகிய இடங்களில் முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரையில் கோவை ஒன்றைத் தவிர எல்லா இடங்களிலும் முறையாக அரசு தாக்கீதை ஏற்று D.G.P.-யினுடைய தாக்கீதை ஏற்று ஆங்காங்குள்ள காவல் துறை ஆணையாளர்கள், D.I.G.-கள், S.P..-கள், இவர்கள் முறையாகச் சோதனையை அங்கே நடத்தினார்கள். 1-2-1998 முதல் 13-2-1998 வரை 13 நாட்களில், கண்டுபிடிக்கப்பட்டவை, நாட்டு வெடிகுண்டு 2019, ஜெலட்டின் குச்சிகள் 586, டெட்டனேட்டர்கள் 1595, பட்டாசுகள் 2675 மற்றும் 11 பண்டல்கள் Fuse wire 362 metres,

இதர வெடிமருந்துப் பொருட்கள் 207 கிலோ, துப்பாக்கிகள் 6, கைத்துப்பாக்கிகள் 2, எஸ்.பி.எம்.எல்.2, கேட்ரிட்ஜ்கள் 5, பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களையொட்டி தொடரப்பட்ட வழக்குகள் 49. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 95 பேர். இந்த 95 பேரில் கைது செய்யப்பட்டவர்கள் 81 பேர். ஆனால், கோவையிலிருந்து வந்த பதில் என்னவென்றால், நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டதற்கு வந்த பதில் என்னவென்றால், கோவையிலும் பல்வேறு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், சில இடங்களில் மத்தியக் காவல் படை (C.R.P.F.) துணையோடு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், ஆனால் அந்தச் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்க வில்லை என்றும் கோவை மாநகரக் காவல் அதிகாரி அறிக்கை அனுப்பினார். ஏன் முன்கூட்டியே தெரியவில்லை, என்ன செய்தாய் என்றால், இதற்கெல்லாம் முதலமைச்சரா போய்ப் பார்க்க முடியும்? அதிகாரியைத்தானே நம்பினோம். கோவை மாநகரக் காவல் துறை அதிகாரி தெளிவாகச் சொல்கிறார். கோவையிலே பல இடங்களில் சோதனைகள் செய்யப்பட்டன; சில இடங்களில் மத்திய காவல் படை (C.R.P.F..) துணையோடு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன; ஆனால் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கோவை மாநகர அதிகாரி அரசு கேட்ட

விளக்கத்திற்குப் பதில் அனுப்பினார். அதற்குப் பிறகுதான் 14 ஆம் தேதி சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற நாளில் சிந்தாதரிப் பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினுடைய இறுதிக் கூட்டம். நானும், மூப்பனாரும், நல்லக்கண்ணு அவர்களும், சங்கரய்யா, வடிவேலு போன்றவர்களும் அதற்குப் பிறகு அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கலந்து பேசிக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு பேசினோம். உடனடியாக அதே நாளில் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக இரண்டு தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து அரசு ஆணை பிறப்பித்தது. அந்த நேரத்தில் கோவைக்குப் பிரச்சாரத்திற்கு வந்திருந்த திரு. அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பவேண்டுமென்று, 10 நிமிடங்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியரோடு தொடர்பு கொண்டு பேசினேன். இன்னும் சொல்லப்போனால், 14ஆம் தேதி காலையில் திரு. அத்வானி அங்கே வருகிறார் என்ற செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தவுடன், உடனடியாக நான் போலீஸ் கமிஷனர், கோவை அவர்களோடு, தொலைபேசியில் தொடர்புகொண்டு, 'அத்வானி வருகிறார், பாதுகாப்பு சரியாக இருக்கட்டும், பல கடிதங்கள் ஏற்கெனவே வந்து போயிருக்கின்றன. அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டபடி கண்காணியுங்கள்' என்று சொன்னபோது, சரி என்றுதான் சொன்னார். ஆனால் நிலைமை இப்படி ஆகிவிட்டது.

இருந்தாலும் கூட நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் லட்சுமணன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, திரு. அத்வானி பேசவிருந்த அந்தக் கூட்டத்திற்கும், வெடிகுண்டு வெடித்த இடத்திற்கும் கிட்டத்தட்ட 820 மீட்டர் தொலைவு. 820 மீட்டர் தொலைவிலே வெடி குண்டு வெடித்து, திரு. அத்வானி அவர்களை அந்தக் கூட்டத்திலே கொன்றிருக்க முடியுமா என்பதை நான் உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இவற்றையெல்லாம் கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய விசாரணைக் குழு ஆராய்ந்து பதில் சொல்ல விருக்கிறது. எனவே அதிலே எதையும் நான் திட்ட வட்டமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் எங்களுக்கு இருந்த கவலை, நானும் மூப்பனாரும் உட்கார்ந்து கொண்டு 10 நிமிடங்களுக்கு ஒரு முறை கலெக்டருக்கு Phone செய்து, திரு. அத்வானி

அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று சொன்னபோது, அவர் கேட்கமாட்டேனென்கிறார். மருத்துவ மனைக்குப் போக வேண்டுமென்று சொல்கிறார்' என்று பதில் சொன்னபோது, சரி, என்று சொல்லி பலத்த பந்தோபஸ்தோடு, ஒரு பிரதமருக்குப் போடுகின்ற பந்தோபஸ்தைவிட அதிக பாதுகாப்பு திரு. அத்வானி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர் மருத்துவமனைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார். பிறகு, திருச்சியிலும், அதைவிட அதிகமான பந்தோபஸ்தோடு கூட்டம் அங்கே நடைபெற்று, திரு. அத்வானி அவர்கள் பத்திரமாக திரும்பிச் செல்வதற்கான வழிவகை ஏற்பட்ட பிறகுதான் நான் பெருமூச்சே விட முடிந்தது. அந்த அளவிற்கு அந்த நாள் அமைந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். வெடிகுண்டு சம்பவத்திற்கான காரணங்களைக் கண்டறியவும், காவல் துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட எச்சரிக்கைச் செய்தி மீது இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காகவும், கோவை மாநகரக் காவல்துறை அதிகாரி செயல்பாட்டில் குறைகள் இருப்பின், அவை பற்றிய உண்மை நிலையை அறியவும், நஷ்ட ஈடு எவ்வளவு தரவேண்டுமென்பதைப்பற்றி அறியவும், இதற்கெல்லாம் மூல காரணம் என்ன என்பதைப்பற்றி அறியவும்தான், நீதிபதி பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய குழு அமைக்கப் பட்டிருக்கிறது. உங்களுடைய அனுமதியோடு சொல்லிக் கொள்கிறேன். இப்படிப் பொறுப்பற்ற ஒரு காவல் துறை அதிகாரி மீது - உங்களுடைய அனுமதியோடு - இந்த அரசு விளக்கம் கேட்டுக் கடுமையான நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொடர்ந்து இங்கே எதிர்க்கட்சித் தலைவர்கூட C.B.I. விசாரணை வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மாநிலக் காவல் துறை உயர் அதிகாரிகள் மற்றவர்களுடைய விளக்கங்கள் கோரப்பட்ட அந்தச் சூழ்நிலையில், விரிவான புலனாய்வு ஒன்றை நடந்த பரம்வீர்சிங் என்ற I.P.S. அலுவலர், I.G. அந்தஸ்தில் உள்ளவர் தலைமையில் - 15-2-1998 முதல், மறுநாளே விசாரணை ஆரம்பமாகிவிட்டது.

இந்த விசாரணை மிகத் திறமையாக நடைபெற்று வருகிறது. நான் C.B.I. வேண்டாம் என்பதற்காக இதைச் சொல்ல வில்லை. மிகத் திறமையாக இவர்கள் இந்த விசாரணையை நடத்தி வருகிறார்கள்.

கேரளத்திலே விட்டுவிட்டார்களே என்று கூட தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலே யாரையும் விடவில்லை. அங்கே 8 பேர் பிடிபட்டதாகச் செய்தி வந்தது. அவர்களுக்கும் கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகத்தின் பேரிலே பிடித்து வைத்திருந்தார்கள். இவர்களும் பரபரப்போடு அங்கே ஓடிச் சென்று பார்த்தார்கள். இந்தச் சம்பவத்திற்கும், இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் அவர்கள் விடப்பட்டார்களே அல்லாமல், குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டவர்கள் யாரும் விடப்படவில்லை.

இதுவரையில் 104 பேர் குற்றவாளிகள் என்று கண்டறியப் பட்டு 42 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ளனர். தொடர்ந்து தமிழகத்திலே, மாநிலத்திலே எந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; சென்னை மாநகரம் எப்படிக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக, தெளிவாக அறிவீர்கள். இதற்கெல்லாம் மூல காரணங்களை ஆராய்ந்து அதைப் பற்றி நாம் இங்கே பேசும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக அருமையாக எரிகிற நெருப்பிலே எண்ணெய் வார்ப்பதாக நம்முடைய பேச்சுக்களுக்கோ எழுத்துக்களோ அமைந்து விடக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் சில நேரங்களில் மூண்டெழுகின்ற உணர்ச்சிகளை அடக்க முடியாமல் சிலர் தங்களுடைய எண்ணங்களை வெளியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அந்த நிலையில் நம்முடைய அன்பிற்குரிய இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர், அருமைமிகு நண்பர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பல செய்திகளை இங்கே சொன்னார்கள். அதற்குப் பதிலாக மற்றொன்று நடைபெற்றது. நவம்பர் கடைசி நாளும் டிசம்பர் முதல் நாளும் கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு மாற்றாக பதிலடியாக

இந்தச் சம்பவம் நடந்தது என்ற நிலையிருந்தாலும்கூட அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல. சட்டத்தை நாமே கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதை திரு. அப்துல் லத்தீப் அவர்களும் மறுப்பவர்கள் அல்ல; ஏற்றுக் கொள்ளக் கூடியவர்தான். அத்தகைய பண்பு வாய்ந்தவர்தான் அவர். அவரைப்போலவேதான் எல்லோரும்.

நம்முடைய திரு. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது கூட மிகுந்த வேகத்தோடும், கொந்தளிப்போடும், குமுறல் களோடும் இங்கே தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் வெளிக் காட்டினார்கள். நான் அந்த அடிப்படைகளையெல்லாம் மறைக்க வில்லை; மறைக்கவும் விரும்பவில்லை. அந்த அடிப்படைகளை யெல்லாம் உணர்ந்தவன்தான் நான். அந்த அடிப்படைகள் சரிசெய்யப்பட வேண்டும் என்கிற பேரியக்கத்தில் தந்தை பெரியார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வழி நடத்தப்பட்டு இன்றைக்கு உங்களோடு இருப்பவன்தான் நான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். எனவே அந்த அடிப்படைகளைப்பற்றி திரு. லத்தீப் அவர்களோ, திரு. கிருஷ்ணசாமி அவர்களோ, மற்றவர்களோ எடுத்துச் சொல்கிற அந்தக் கருத்துகள் எனக்கு முரண்பாடானவை அல்ல. இருந்தாலும்கூட வன்முறைக்கு வன்முறை பரிகாரம் ஆகாது.

சென்னையிலே பிடிபட்டிருக்கின்ற நான்கைந்து இளைஞர் களுடைய படங்களைப் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். எவ்வளவு இளைஞர்கள் அவர்கள். அழகானவர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று இஸ்லாமியத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி – அவர்களைப் பார்க்கும்போது நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. அவர்களிடம் இந்த உணர்வைத் தட்டி எழுப்பக்கூடிய அளவிற்கு மூளைச் சலவை என்பார்களே, அதேபோன்று சலவை செய்யப்பட்டு அவர்கள் இப்போது முடுக்கிவிடப்பட்டு இருக்கிறார்கள். நபிகள் நாயகம் என்ன சொன்னார்? இவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரிக் காரியங்களைச் செய்து விட்டு, செத்துப்போனால்கூட மோட்சத்திலே நமக்கு மகிமை உண்டு என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பிடிபட்ட சில இளைஞர்களில் ஒருவர் தன்னுடைய மனைவிக்கு

எழுதிய கடிதத்தில் இதைப் குறிப்பிட்டு இருக்கிறார். 'நாம் இதுபோன்ற காரியங்கள் செய்து மரணம் அடைந்தால், மரண லோகத்தில் நமக்கு எல்லாவிதமான சுகமும் உண்டு. நம்முடைய லட்சியத்திற்காகப் பெறுகின்ற வெற்றி அது' என்று குறிப்பிட் டிருக்கிறார். இப்படி ஒரு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் அழகாகச் சொல்லியிருக்கிறார். 'மத மாச்சரியத்திற்காகப் போரிடுவதும் நல்லதல்ல. அதற்காக மரணம் அடைவதும் நல்லதல்ல. அவர்கள் எல்லாம் நம்மவர்களும் அல்ல' என்று கூறியிருக்கிறார். இதை அந்த இளைஞர்கள் உணர வேண்டும். ஏதோ ஒரு காரியத்திற்காக பழிக்குப் பழி வாங்குதல் என்ற காரியத்திற்காக, மொத்த சமுதாயத்தையும் அழித்துவிடக் கூடாது. அப்படியே - நான் வாதத்திற்காகச் சொல்கிறேன் - பழி வாங்குவது, பகை தீர்த்துக்கொள்வது என்றால் குறிப்பிட்ட ஒரு நபரையா பழி தீர்க்கிறோம்; பலி வாங்குகிறோம்? அல்ல. யாரையோ பழி வாங்குவதாக எண்ணிக்கொண்டு, அப்பாவி மக்கள். இதைப் பற்றியே தெரியாத மக்கள், இன்னும் சொல்லப் போனால் பலபேருக்கு பாபர் மசூதி என்றால் என்னவென்று தெரியாது. அங்கே என்ன பிரச்சினை என்று பல பேருக்குத் தெரியாது. அப்படிப்பட்ட மக்கள் தெருவிலே வியாபாரம் செய்து கொண்டு போகிறவர்கள், பால் விற்றுக் கொண்டு போகிறவர்கள். காய்கறி விற்றுக் கொண்டு போகிறவர்கள், தன்னுடைய அண்ணனையோ தம்பியையோ பார்க்கச் செல்கின்றவர்கள், தாயைக் காணச் செல்கின்றவர்கள், சகோதரனைப் பார்க்கச் செல்கின்றவர்கள், குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புகின்ற தாயார், இப்படிப்பட்ட ஏழையெளிய மக்கள், சாதாரண அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்களே, அந்த நேரத்திலே அது நம்முடைய தாயாக இருந்தால், அப்படி இறந்தவர் நம்முடைய தந்தையாக இருந்தால், கொல்லப்பட்டது நம்முடைய குழந்தையாக இருந்தால் நம்முடைய மனம் எப்படித் துடிக்கும் என்று ஒரு கணம் எண்ணினால், இப்படிப்பட்ட தீய சிந்தனையிலிருந்து தங்களை அவர்கள் விடுவித்துக் கொள்ள முடியும். இந்த வெடிகுண்டுப் பிரச்சினையில் ஓர் அரசு எப்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரோடும் சேர்ந்து நானும் இணைந்து கொள்ள விரும்புகிறேன்.

இதில் மாறுபட்ட கருத்து உடையவன் அல்ல நான். நான் எழுதிய கடிதத்தில் இதைப் குறிப்பிட்டு இருக்கிறார். 'நாம் இதுபோன்ற காரியங்கள் செய்து மரணம் அடைந்தால், மரண லோகத்தில் நமக்கு எல்லாவிதமான சுகமும் உண்டு. நம்முடைய லட்சியத் திற்காகப் பெறுகின்ற வெற்றி அது' என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி ஒரு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். மார்க்ரெட் தாட்சர். இங்கிலாந்து நாட்டினுடைய பிரதமராக இருந்தவர், இந்தத் தீவிரவாதத்தைப் பற்றி ஒன்று சொல்லி யிருக்கிறார். "If the terrorists succeed once, it is a great victory for them. But, we have to succeed everytime against their activities."

தீவிரவாதிகளை அடக்க முனையும் அரசு 100 தடவை முயன்றாலும் அந்த 100 தடவையும் வெற்றிபெற்றாக வேண்டும். அதாவது 100 தடவை முயன்றாலும், 100 தடவை வெற்றிபெற்றாக வேண்டும். ஆனால், தீவிரவாதிகளோ அவர்களது முயற்சியில் ஒருமுறை வெற்றி பெற்றாலும் அதைப் பெரும் வெற்றியாகக் கருதுவார்கள். அதையும் மனதிலே வைத்து இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிகுந்த பணிவன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற பல தலைவர்கள் குறிப்பிட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளுக் கெல்லாம் அடுத்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே அதற்கான விளக்கங்களைத் தருவேன். எவையெவை ஏற்றுக் கொள்ளப்பட்டவை, எவையெவை ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பதையும் அதில் நீங்கள் காணலாம்.

ஆதி திராவிடர்களுக்கு மொத்த வருவாயிலே 25 சத விகிதம் தரப்பட வேண்டும் என்று நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். 25 சதவிகிதம் என்பது, பார்ப்பதற்கு அவ்வளவுதானே கேட்கிறார்; குறைவாகத்தானே கேட்கிறார்; கொடுத்தால் என்ன என்று கேட்கத் தோன்றும், ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன்; வருவாயிலே 50 சதவிகிதம் எங்கே போகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாளைக்கு

அவர்களுக்காகப் பேச இருக்கிறார்கள் மாண்புமிகு உறுப்பினர்கள். அரசு அலுவலர்களுக்கு நம்முடைய வருவாயிலிருந்து 50 சதவிகிதம் செல்கிறது. 25 சதவிகிதம் ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டால், 25 சதவிகிதம்தான் மற்றவர்களுக்கு எல்லாம். அதை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். 25 சதவிகிதமோ அல்லது அதற்குக் குறைவானதோ ஆதி திராவிடமக்களுக்கு நாம் ஒதுக்குகிறோம் என்றால், மிச்சம் இருக்கின்ற எல்லாத் தொகையும் ஆதி திராவிடர் அல்லாதவர் களுக்குப் போய்ச் சேருவதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. மிச்சத் தொகையும் ஆதி திராவிடர்களுக்கும் சேர்த்துத்தான். சாலை போட்டால் அதில் ஆதிதிராவிடர்களும் நடக்கிறார்கள்; அல்லாதவர்களும் நடக்கிறார்கள். குளம் வெட்டினால், அதில் ஆதி திராவிடர்களுக்கும் உரிமை இருக்கிறது. சில இடங்களில் உரிமை இல்லாமல் இருக்கலாம். அந்த உரிமையைப் பெற்றுத்தர வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அதைப்போல எல்லாவிதமான நன்மைகளிலும், அவர்களும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், எல்லா வகைகளிலும் ஆதி திராவிடர்களுக்குப் பங்கு இருக்கிறது. எனவே, தனியாக அவர்களை மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான். பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு என்று, சில சலுகைகளுக்காக, அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இந்த ஒதுக்கீடே தவிர, இதுவேதான் அவர்களுக்கு, இதற்கு மேலே ஏதும் அவர்களுக்குத் தர முடியாது என்று நூல் கட்டி, உச்ச வரம்பு வைத்து இந்த நிதி ஒதுக்கப்படவில்லை.

இறுதியாக, இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டிப்பாகக்கூடப் பேசினார், இந்த பஸ் கட்டணத்தைப் பற்றி எல்லோரும் பேசியிருக்கிறார்கள். இது பற்றிப் பல விளக்கங்கள் நான் அளித்திருக்கிறேன். ஏற்கெனவே 14 காசு என்று இருந்தது 22 காசு என்று உயர்த்தப்பட்டது. பொது மக்கள், அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு ஏற்ப 22 காசு என்பது 20 காசாகக் குறைக்கப்பட்டது. அப்படி 20 காசாகக் குறைக்கப்பட்ட நிலையிலும்கூட போக்குவரத்துத் துறைக்கு, ஏற்பட்ட நஷ்டம், சுமார் ரூ. 280 கோடி. அவர்களுக்கா நஷ்டம்?

அரசுக்கு நஷ்டம். அரசு கொடுக்க வேண்டும் அவர்களுக்கு. நாம்தானே கொடுக்க வேண்டும் அந்த 280 ரூபாயை? 20 காசு என்று நம் மாநிலத்திலே நிர்ணயித்தபோது, ஆந்திராவிலே - நம்முடைய சுப்பராயன் அவர்கள் கேட்பார்கள், அங்கே 36% கொடுக்கிறார்களே, இங்கே கொடுத்தீர்களா என்று. அதற்கு மாத்திரம் அதை Compare செய்வார்கள். திரு. பழனிச்சாமி, திரு. சுப்பராயன் எல்லோரும் அதை Compare செய்வார்கள். அதை இங்கே கொடுப்பீர்களா என்று கேட்பார்கள் - ஆந்திராவிலே, கேரளாவிலே, கர்நாடகாவிலே, ஒரு கிலோ மீட்டருக்கு 22 காசுகள், அதைவிட இங்கே 2 காசுகள் குறைவு. இராஜஸ்தானிலே கிலோ மீட்டருக்கு 24 காசு. உ. பி. பெரிய மாநிலம். அங்கே 27.80 காசு; அதைவிட நாம் 7.80 காசு குறைவாக வைத்திருக்கிறோம். இருந்தாலும்கூட, தொடர்ந்து ஆளுநர் உரைமீதான விவாதத்திலே அத்தனை பேரும் பேசி ஆளுங்கட்சி உறுப்பினர்களும் என்னை அரித்தெடுத்த காரணத்தினால், பேருந்துக் கட்டணம் கிலோ மீட்டருக்கு மேலும் 2 காசு குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பற்றி எல்லோரும் பேசியாகி விட்டது. திரு. கணேசன் உட்பட எல்லோரும் பேசியாகிவிட்டது. நான் அவரது பெயரையும் சொல்கிறேன். அத்தனை பேரும் பேசியாகிவிட்டது. எல்லா கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகையினால், பொதுமக்களுடைய நன்றி, எனக்கு மாத்திரம் அல்ல; உங்கள் எல்லோருக்கும் சாரும் என்று கூறி, கிலோ மீட்டருக்குக் கட்டணம் 18 காசாக ஆக்கப்படும்; அதற்கேற்றபடி, மற்ற நிலைகள் எல்லாம் வகுக்கப்பட்டு, அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, நல்ல கருத்துக்களைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.



உரை : 23 நாள் : 23.02.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இதுவரையிலே இந்த அவையில் 38 உறுப்பினர்கள், ஏறத்தாழ 9 மணி நேரம் விவாதம் நடத்தி, அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளின் அடிப்படையில், எல்லாவற்றுக்கும் அல்ல, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன்.

இந்த உரை குறித்து இங்கே கருத்துக்களைச் சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் எடுத்துச்சொன்ன செய்திகளை இந்த அரசு, தான் கொண்டுள்ள பண்பாட்டின்படி நிச்சயமாக அலட்சியப்படுத்தாது என்பதைத் தெளிவாக முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றையெல்லாம் தொகுத்து, இங்கே திரு. திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்குத் தேவையான ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து, அதற்கேற்ப இந்த அரசு தன்னுடைய செயல்முறைகளை வகுக்கும், இயன்ற வரையிலே நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் என்பதையும் நான் முதலிலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். பாராட்ட வேண்டியவற்றை பாராட்டி, இருக்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றையெல்லாம் தீர்த்துவைக்க வேண்டுமென்ற முறையிலே ஆக்கபூர்வமாகப் பல உரைகள் இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

எடுத்த எடுப்பில், பொத்தாம் பொதுவாக இது என்ன உரையா என்று கேட்கின்ற அளவில் உள்ளேயும் சிலர்,

வெளியிலேயும் சிலர் இந்த உரை பற்றிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஆளுநர் உரை வெறும் காகிதம் காகிதம், இது கவைக்கு உதவாது என்றெல்லாம்கூட கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. பொறுப்பாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அல்ல. ஆனால், பொறுப்பிலே இருந்தவர்களால் சொல்லப்பட்ட கருத்துக்கள்.

இந்த உரையிலேதான், நீண்டகாலமாக நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களும் வலியுறுத்தி வருகின்ற, விவசாயிகளுடைய குறைந்தபட்ச ஊதியம் குறித்த கோலப்பன் குழுவின் அறிக்கை இந்தக் கூட்டத்தொடரிலே வைக்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

மிக முக்கியமான சமுதாயத் தொண்டாகக் கருதப்படுகின்ற மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும், சுமக்கவுமான இழிவு நிறைந்த நிலையை அகற்ற சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும், பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் கணினி அறிவு பெற்றவர்களாக இருக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆண்டைக் கணினி ஆண்டாகவே கொண்டு இந்த அரசு செயல்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு, அதற்கேற்ப அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்ற தமிழ் இணைய மாநாடு குறித்து பாராட்டும், வாழ்த்தும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒன்றே ஒன்றுதான் – எல்லா உறுப்பினர்களுக்கும் கணினி வழங்க வேண்டும் என்பதுதான் – சற்று சிக்கலான விஷயம். ஏனென்றால், கணினியும் வழங்கி, கற்றுத்தருகின்ற பயிற்சியும் அவர்களுக்குக் கொடுத்து, அதைப் பொறுமையோடு இருந்து நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் கற்றுக்கொள்வார்களானால், நிச்சயமாக அடுத்தத் தேர்தலிலே அவர்களுடைய தொகுதிகளிலே அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதை இப்போதே என்னால் உறுதியாகக் கூற முடியும். ஏனென்றால், அவ்வளவு அக்கறை கணினியிலே அவர்களுக்கு வருமேயானால், எதிர்க்கட்சித் தலைவரைவிட நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் வரி வடிவங்கள் ஒரே சீராகத் தொகுத்துத் தரப்படுவதற்கும் தமிழ் கணினி விசைப் பலகைகளைத் தரப்படுத்துவதற்கும் 'தமிழ்' இணையம் 99' என்று நடத்தப்பட்டு, இந்த உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளில், தமிழர்கள் வாழுகின்ற நாடுகளில் இருந்து வந்துள்ள தமிழ் மேதைகள் அரிய கருத்துக்களை எடுத்துச்சொல்லி, - ஒன்றுபட்ட கருத்து உருவாகுமா என்று எதிர்பார்த்த நிலையில் ஒன்றுபட்ட கருத்து உருவாகிட - Internet என்று சொல்லப்படும் தமிழ் இணையத்தில் இனிமேல் வேறு மொழிகள் இடம்பெற்றாலும்கூட தமிழ் மொழி தலையாய இடம் பெறும் - உலகத்தில் எந்தக் கோடியில் இருக்கின்ற தமிழனும் தமிழ் வாயிலாகச் செய்திகளை அறிந்துகொள்ள முடியும், தகவல்களைப் பெறமுடியும் என்ற நிலையை நாம் உருவாக்கவிருக்கிறோம். இந்தியாவிலேயே இந்த முயற்சியை முதன் முதலாகத் தொடங்கி அதிலே வெற்றி காணவிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை எண்ணும்போது நாம் அனைவரும் பெருமிதம் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் தொடர்பு என்பது இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றால், ஒரு காலத்தில் ஆப்ரகாம் லிங்கன் கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துத்தான் லண்டனுக்கே தெரிய வந்தது என்பார்கள். அப்போது தந்தி என்ற சாதனம் இருந்தும்கூட லிங்கன் கொல்லப்பட்ட செய்தி 5 நாட்கள் கழித்துத்தான் லண்டனுக்கே வந்து சேர்ந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி அல்ல, ஆஸ்திரேலியாவில் ஆடுகின்ற கிரிக்கெட் ஆட்டத்தில் இப்போது யார் out ஆனார்கள் என்பதை உடனடியாக, நேரிலேயே தெரிந்துகொள்ளுகின்ற அளவுக்குத் தகவல் தொடர்பு பெருகியிருக்கின்ற விஞ்ஞான உலகத்திலே நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இது மேலும் வளர்ந்து, உலகம் என்பது ஒரு சிறிய குக்கிராமம், குக்கிராமத்தைவிட இன்னும் சிறிய அளவுக்குச் சுருங்கிவிட்ட ஒரு வடிவம் என்ற நிலையை எதிர்காலத்திலே இந்தத் தகவல் தொடர்பு உருவாக்க இருக்கிறது. அந்த நேரத்திலே நம்முடைய தமிழ் அதிலே ஆக்கம் பெற வேண்டும், இடம்பெற வேண்டும் என்பதற் காகத்தான் இந்தப் பெருமுயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

இந்த உரையிலே மகளிருக்கான சிறு வணிகக் கடன் திட்டம் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு வரியில்

குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதனுடைய விளைவு, பயன் மகத்தானதாக எதிர்காலத்திலே இருக்கத்தான் போகிறது. மகளிர் தாங்கள் நடத்த விரும்புகின்ற சிறுசிறு தொழில்களுக்காகக் கடன் வாங்குவதற்கு வங்கிகளுக்குச் சென்றால், அதிக வட்டி தர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அல்லது, யாராவது வியாபாரிகளிடத்திலே வட்டிக்கடைக்காரர்களிடத்திலே சென்று கடன் பெற்றால், அதற்கு அளவுக்கு மீறிய வட்டி தர வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கணக்கிலேகொண்டு, கூட்டுறவு வங்கிகள் மூலமாக, ஒரு ரூபாய் வட்டிக்கு, 500 ரூபாய் முதல், 2000, 3000 ரூபாய் வரை சிறு கடைகள், காய்கறி வியாபாரம் போன்ற சிறு வியாபாரங்களில் ஈடுபடுகின்ற மகளிருக்குக் கடன் தருவதற்கான ஒரு வழிவகை உருவாக்கப்பட்டு, சென்னை மாநகரத்திலே, முதலில் சேப்பாக்கத்திலே இது தொடங்கப்பட்டு, அண்ணா நகரில் அது தொடர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் இந்தச் சிறு வணிகக் கடன் திட்டம் மகளிருக்காகப் பரப்பப்பட இருக்கிறது. மாநகரங்களுக்கு மாத்திரமில்லாமல், எல்லா நகரங்களிலும் இந்தத் திட்டத்தை நாம் பரவலாக நடத்த இருக்கிறோம். நகரங்களில் முடிவுற்ற பிறகு, கிராமங்களிலேகூட இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் மகத்தானதாக, எல்லோராலும் பாராட்டக்கூடியதாக, இந்தியாவிலே முதன்முதலாகத் தமிழகத்திலே உருவாக்கப்பட்ட திட்டமாக அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

அதைப்போல, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், ஏற்கெனவே இருக்கின்ற மாவட்டங்கள் அன்னியில், மேலும் ஏழு மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது. பத்தாயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தரிக நில மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலேதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விரைவுபடுத்தப்பட்ட தோட்டக்கலைப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காவிரி கழிமுகப் பகுதிகளிலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலும் தூர்வாரும் பணிக்கு அதிக நிதி எதிர்காலத்திலே ஒதுக்கப்படும் என்றும் இந்த உரை கூறுகின்றது. சென்னை, தரமணியில் 320 கோடி ரூபாய் செலவில் உலகத் தரத்திலான கணினி மென்பொருள் பூங்கா (Software Park) அமைகிறது என்ற செய்தியையும் இந்த உரைதான் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தொழில் வளர்ச்சியில் 1996 ஏப்ரலில் ஐந்தாம் இடத்தில் இருந்த தமிழ்நாடு 1998 அக்டோபரில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி இருக்கிற செய்தியையும் இந்த உரைதான் விளக்கியிருக்கிறது. ஆயிரக்கணக்கான மெகாவாட் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் பற்றிய குறிப்புகளும் இந்த உரையிலே இடம்பெற்றிருக்கிறது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிக்கும், நகர்ப்பகுதி அமைப்புகளின் வசதிக்கும் கணிசமான நிதி உதவி கிடைத்திட, தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டம் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கு ஆரச் சாலைகளை அகலப்படுத்தி, வலுவூட்டும் பணி, முக்கியமான சந்திப்புகளில் 10 சிறு மேம்பாலங்கள் கட்டும் பணி, பெருநகர்ப் பகுதிக்கான வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால் திட்டப் பணி இந்த உரையிலே இடம்பெற்றிருக்கிறது. ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரப் பகிர்வு தரப்படும் என்ற உறுதியும் இந்த உரையிலே இடம் பெற்றிருக்கிறது. நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய அனைவரும் பாராட்டக்கூடிய இந்தத் திட்டங்களை மேலும் மேம்படுத்துவோம் என்ற உறுதிமொழியும் இந்த உரையின் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்குவதை மேம்படுத்த 500 கோடி ரூபாயிலே திட்டம் தயார் என்று இந்த உரையிலே அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் தூத்துக்குடி பகுதிகளில் ஆஸ்திரிய அரசின் உதவியோடு கடல்நீரைக் குடிநீர் ஆக்கும் திட்டம் வகுக்கப்படுவதையும் இந்த உரை எடுத்துக்காட்டுகிறது.

2-1-1999 அன்று பெரியபாளையத்தில் பணி தொடங்கப்பட்ட 106 பாலங்கள் அன்னியில், மாநிலம் முழுவதும் 360 கோடி ரூபாய் செலவில் இந்த ஆண்டு 104 பாலங்கள் கட்டுவதற்கான பணியும் அண்மையிலே தொடங்கப்பட்டிருக்கின்றது. உலக வங்கி நிதியுதவியோடு தமிழ்நாடு சாலைப் பகுதித் திட்டம் இந்த உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க சமத்துவபுரங்கள் தொடரும் என்ற அறிவிப்பும் இந்த உரையில் இடம்பெற்றிருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு அதிக நிதி ஒதுக்கப்படும்

என்ற செய்தியும் இந்த உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி கற்கும் வயதடைந்த அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் வகையில், தமிழ்நாடு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அந்தக் குறிக்கோள் நிறைவேற அரசு பாடுபடும் என்ற சூளுரையும் இந்த உரையின் வாயிலாக எடுக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகள், தொடர் முயற்சிகள் இவையும் ஆளுநர் உரையிலே இடம்பெற்றிருக்கின்றன. நேர்மையான, ஒளிவுமறைவற்ற மற்றும் பொறுப்புள்ள நிர்வாகத்தை ஏற்படுத்தவும், ஊழலைத் தடுக்கவும் நீதிபதி இராமானுஜம் குழு பரிந்துரைகள் செயலாக்கம்பெற இந்த அவையிலேயே அந்த அறிக்கை, அரசினுடைய குறிப்புகளோடு விரைவில் இந்தக் கூட்டத் தொடரிலே வைக்கப்படும் என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் தொடக்கத்திலேயே தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கவில்லை என்றும், தமிழக மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

1996-97-ல் தமிழகத்தினுடைய தனிநபர் சராசரி வருமானம் 2918 ரூபாய். 1997-98-ல் தமிழ்நாட்டினுடைய தனிநபர் சராசரி வருமானம் ரூ. 3057 ஆக உயர்ந்துள்ளது. புள்ளியியல் துறை மதிப்பீட்டின்படி இந்த ஆண்டும் தனிநபர் சராசரி வருமானம் ரூபாய் 3164 ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தனிநபர் சராசரி வருமானம் 1980-81 ஆம் ஆண்டு விலைப் புள்ளிகளைக் கொண்டு மதிப்பிடப்பட்டதாகும். 1991-92 ஆம் ஆண்டு விலைப் புள்ளிகளைக்கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனிநபர் வருமானம் மேலும் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது நம்முடைய மாநிலம் என்பதை இங்கே எடுத்துக் கூறினேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உரையாற்றும்போது, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொழில்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்று சில தொழில்கள் தொடரப்படாமலே முடிந்துவிட்டதை எடுத்துக்காட்டினார்கள்.

குறிப்பாக Pilkington Glass தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். Market-போதிய தேவை (demand) இல்லை என்று கணித்த காரணத்தால், Pilkington நிறுவனம் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. இதற்கு நான் பொறுப்பாளி அல்ல. அவர்களே market நிலவரத்தை அறிந்து அதைக் கைவிட்டுவிட்டார்கள். அதற்குக் காரணம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செயின்ட் கோபெயின் (St. Gobain) என்ற நிறுவனம் இந்த கிளாஸ் தொழிற்சாலையை வேகமாக உருவாக்கி வருகிறது. பெரிய அளவிலே அத்தொழிற்சாலையைத் தமிழகத்திலேயே அது உருவாக்கி வருகிற காரணத்தினால் அவர்கள் அந்தத் தொழிற்சாலையை கைவிட்டுவிட்டார்கள்.

கும்ஹோ டயர் (Kumho Tyres) தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். அவருக்கும் தெரியும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். பொருளாதாரத்திலே ஏற்பட்ட மந்த நிலை எந்த அளவிற்குக் கொரியாவை தாக்கியது என்று நன்றாகத் தெரியும். இது தென்கொரியாவிலே உள்ள ஒரு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படுவதாக இருந்த தொழிற்சாலையாகும். இந்தோனேஷியாவிலே தொடங்கி ஹாங்காங் போன்ற இடங்களில் பரவி, கொரியா வரையிலே வியாபித்த இந்த பொருளாதார மந்த நிலையினால், தென்கொரியாவிலே உள்ள இந்த பிரச்சினையின் காரணமாக இந்த கும்ஹோ டயர் (Kumho Tyres) நிறுவனம் தனது திட்டத்தை அடியோடு ரத்து செய்துவிடவில்லை, தள்ளிப் போட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நார்க்ஸ் ஹைடிரோ, (Norx Hydro) உலக அளவில் பி.வி.சி.-க்கு (P.V.C.) Market குறைந்துள்ளதால் அதுவும் தனது திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. உலக அளவிலே பி.வி.சி. (P.V.C.) பைப்பிற்கு Market நிலவரம் குறைந்துவிட்ட காரணத்தால் அதுவும் தன்னுடைய திட்டத்தைக் கைவிட்டுவிட்டது. ஆனால் அதே நேரத்தில் Mitsubishi, ஹூண்டாய் Hyundai ஆகிய நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த மாமன்றம் மிக நன்றாக அறியும் என்று கருதுகிறேன். Ford நிறுவனம் அக்டோபர் திங்களில் தனது உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது.

கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின்கீழ் (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு கேட்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் பேசிமுடித்த பிறகு கேளுங்கள். திரு. சுந்தரம், இப்போது உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின்கீழ் தற்போது சுமார் 141 Megawatt மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். வரும் ஆண்டுகளில் மேலும் சுமார் 100 Megawatt மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழ்நாட்டைப் பார்த்தால், Centre for Monitoring Indian Economy என்கின்ற பெரிய நிறுவனம், மத்திய அரசினுடைய புள்ளிவிவரங்களையெல்லாம் தருகின்ற ஒரு பெரிய நிறுவனம், Centre for Monitoring Indian Economy. Survey of Investment Projects, May, 1996 - அதன்படியும், அதற்குப் பிறகு எடுத்த surveyன்படியும் உள்ள குறிப்புகளை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன்.

மே 1996-ல் Trends in total Investment by States என்ற தலைப்பில் கர்நாடகாவில் ஒரு இலட்சத்து பதினோராயிரத்து நானூற்று அறுபத்தி நாலு கோடி முதலீடு; (Investment) குஜராத்தில் ஒரு இலட்சத்து மூவாயிரத்து நானூற்று அறுபத்தொரு கோடி Investment; ஒரிசாவில் ஒரு இலட்சத்து ஆயிரத்தொன்பது கோடி Investment; மராட்டியத்தில் ஒரு இலட்சத்து ஐந்நூற்றுப் பதினாறு கோடி Investment; தமிழ்நாடு தொண்ணூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி Investment, மே 1996-ல்.

பிறகு, உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் இவை எல்லாம் இதற்கு அடுத்துதான் வருகின்றன. ஆறாவது, ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது

இடங்களில் இவை எல்லாம் வருகின்றன. இது 1996ஆம் ஆண்டில் மே மாதத்தினுடைய நிலைமை. அப்போது, தமிழ்நாடு தொண்ணூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி முதலீட்டிலே இருந்தது.

ஜனவரி 1999-வரை Investment என்பதற்கான Rankஐ பார்த்தால் மகாராஷ்டிரம் ஒரு இலட்சத்து ஐம்பத்தொன்றாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று எட்டு கோடி Investment; தமிழ்நாடு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தியேழு கோடி (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இரண்டாவது இடத்திற்கு தமிழ்நாடு வந்துவிட்டது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றோம்.

இதிலே என்ன வித்தியாசம் என்றால் மகாராஷ்டிரத்திலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று எட்டு கோடி Investment. தமிழ் நாட்டிலே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தேழு கோடி Investment. அது 11.52 சதவிகிதம் மகாராஷ்டிரா; தமிழ்நாடு 11.49 சதவிகிதம். அதாவது 0.03 அவ்வளவுதான் வித்தியாசம். மராட்டியத்தோடு வித்தியாசம் 0.03% தான். ஒரு சதவிகிதம் கூட அல்ல 0.1 சதவிகிதம் கூட அல்ல. நாம் இரண்டாவது இடத்திற்கு வருகிறோம். அதேநேரத்தில் மற்ற மாநிலங்கள் பற்றி நான் சொல்லவில்லை. குஜராத் மூன்றாவது இடத்திற்குப் போய்விடுகிறது. நாம் இரண்டாவது இடத்திற்கு வந்தது மாத்திரமல்ல, மே 1996ஆம் ஆண்டு முதலீட்டிற்கும் ஜனவரி 1999க்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்றால் - மராட்டியத்திலே ஐம்பத்தோராயிரத்து எண்பத்திரண்டு கோடி, தமிழ்நாட்டிலே அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தி ஏழு கோடி. மராட்டியத்திலே 21.03% தமிழ்நாடு 24.94%. 3.9% அதிகம். எனவே, இந்த வித்தியாசம் என்ற வகையிலே கணக்கிட்டால் தமிழ்நாடு முதலிடத்திற்கே வந்துவிட்டது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அகில இந்தியாவினுடைய மொத்த முதலீடு என்று எடுத்துக்கொண்டால், ஜனவரி 1999-இல் பதின்மூன்று லட்சத்து பதினைந்தாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று இரண்டு கோடி

அதிலே தமிழ்நாட்டிற்கு ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று முப்பத்தியேழு கோடி. இதே நிலை 1996-லே பார்த்தால் அகில இந்தியாவில் பத்து இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்துமூன்று கோடி; அப்போது தமிழ்நாட்டில் தொண்ணூறு ஆயிரத்து அறுநூற்று ஐம்பது கோடி, அதாவது 8.45 சதவிகிதம் இரண்டரை ஆண்டுகளிலே உயர்வு இந்திய அளவில் இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தொன்பது கோடி; தமிழ்நாட்டிலே அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தியேழு கோடி. இரண்டு இலட்சம் அகில இந்தியாவில் அதிகம். தமிழ்நாட்டிலே அறுபதாயிரம் கோடி அதிகம். இது 24.94 சதவிகிதம் என்பதையும் நாம் எண்ணிப்பார்த்து பெருமையடையலாம்.

தொழிற்சாலைகள் வளருகின்றன, தொழில்கள் வளருகின்றன என்று சொல்கிற நேரத்தில் சில தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றனவே என்கின்ற ஆதங்கமும் நம்முடைய உறுப்பினர்களுக்கு இல்லாமல் இல்லை. இவர்கள் எல்லாம் இங்கே இதைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கின்றார்கள். மூடப்பட்ட அல்லது மூடப்படுகின்ற தொழிற்சாலைகளுக்காக இந்த அரசும் வருத்தப்படுகிறது, கவலையைத் தெரிவிக்கிறது. ஆனால், பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது இயற்கை. அதற்காக மூடப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டது சரிதான் என்று நான் வாதிக்க விரும்பவில்லை. அதற்குப் பின்னாலே இருக்கின்ற தொழிலாளர்களுடைய வயிறு என்னுடைய நினைவுக்கு வருகிறது, அவர்களுடைய வாழ்க்கை என்னுடைய நினைவுக்கு வராமல் இல்லை. இருந்தாலும், வாழை மரம் வளர வளர, பிறகு கன்று வளர வளர ஏற்கெனவே இருந்த வாழை போய்விடுவதைப்போல தமிழ்நாட்டிலே சில தொழில்கள் நலிவடைந்து இருக்கின்றன என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால் நீண்ட காலமாகவே இயங்காமல் இருக்கிற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் 43. இவை பெரும்பாலும் நிதி நெருக்கடி பங்குதாரர்களுக்குள் மன வேறுபாடு ஆகிய காரணங்களினால் மாத்திரமே இயங்காமல் உள்ளன. இவை தொழிலாளர் பிரச்சினையால் மூடப்பட்டவை அல்ல. அதேபோல், தொழில் தகராறு சட்டம் பிரிவு 25(0)-ன் கீழ் அனுமதி

வழங்கப்பட்டு, மூடப்பட்ட நிறுவனங்களும் எதுவும் இல்லை. மேற்கூறிய 43 நிறுவனங்களில் கலைப்பு அதிகாரி (Official Liquidator) முன் நிலுவையில் உள்ளவை 11 நிறுவனங்கள் ஆகும். தொழில் நிதி மற்றும் புனரமைப்பு வாரியம் (B.I.F.R./A.A.I.F.R.) முன்பு நிலுவையில் உள்ளவை 8 நிறுவனங்கள் ஆகும். 2 நிறுவனங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தாததால், அந்த நிறுவனம் இவற்றைக் கையகப்படுத்தியுள்ளது. 3 நிறுவனங்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே உள்ளது. 12 நிறுவனங்கள் மூடுதல் பிரச்சினை தொடர்பாக தொழிற்சங்கங்கள் எழுப்பிய தாவாக்களில் அரசு நீதிமன்றத் தீர்ப்புக்கு விட்டு, ஆணை பிறப்பித்துள்ளது.

இதைத்தவிர, சென்னை B & C Mill கதவடைப்புப் பிரச்சினையை அரசு நீதிமன்றத் தீர்ப்பிற்கு அனுப்பியபின், தமிழக அரசின் அறிவுரைப்படி 28-3-1998 அன்று தொழில் தகராறு சட்டம், பிரிவு 12 (3)ன்கீழ் ஆலை மீண்டும் திறப்பது குறித்தும், தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தில் செல்ல விருப்பம் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய இழப்பீட்டுத் தொகை குறித்தும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் அமலாக்கம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இயங்காமல் உள்ள இத்தகைய 43 நிறுவனங்கள் தவிர, தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் இயங்காமல் உள்ள 19 நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றில் 5 நிறுவனங்களின் பிரச்சினை அரசால் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை பற்றி திரு. ஞானசேகரன் நேற்றைய தினம் குறிப்பிட்டார்கள். அந்த நூற்பாலை புனரமைப்பு செய்யப்பட அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆலை திறப்பது குறித்து கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை திரு. ஞானசேகரன் அவர்களுக்கு ஆறுதலாகக் கூறிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்காமல் உள்ள நிறுவனங்கள் அனைத்துமே நிதி நெருக்கடி காரணமாக மட்டுமே மூடப்பட்டு, இயங்காமல் உள்ளன. அது தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை.

இவற்றில் தொழிலாளர் பிரச்சினை எதுவும் இல்லை. நிதி நெருக்கடி காரணமாகவே மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், அரசுத் தரப்பிலே நிதி ஆதாரத்திலும், இப்போது உள்ள சூழ்நிலையிலும் அரசு அந்த அளவிற்கு அகலக் கால் வைப்பதற்குத் தயாராக இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே கூறியபடி இவற்றில் பெரும்பாலான நிறுவனங்கள் கலைப்பு நடவடிக்கையிலும், B.I.F.R. மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின்முன் வழக்குகள் நிலுவையிலே உள்ள நிலைமையிலும், இவற்றின்மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகத்தினர் B.I.F.R. முன்பு எடுத்துச் சென்று, புனரமைப்புத் திட்டம் தயார் செய்து, ஒப்புதல் பெற்று, அதற்குரிய நிதி மூலதனத்தை உரிய நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகளிடமிருந்து பெற்று ஆலையைத் திறந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது. மூடப்பட்டு இயங்காமலேயே உள்ள நிறுவனங்களைத் திறந்து நடத்த வேறு ஏதேனும் வாய்ப்பு உள்ளதா என்பதை ஆராய தொழிலாளர் நலத்துறை அமைச்சர், சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர், மற்றும் தொழிற் சங்கத்தரப்பினர் மற்றும் அரசு அதிகாரிகளோடு மண்டல வாரியாக கூட்டங்கள் நடத்தி விவாதித்துள்ளார்கள். இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மீண்டும் பேச்சு வார்த்தை நடத்த தொழிற் சங்கங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதிகாரிகள் முன்னிலையிலேயே பேச்சுவார்த்தை, நடவடிக்கை களும் தொடரப்பட்டன. ஆனாலும், சுமுக முடிவு எதுவும் இதுவரையிலே ஏற்படவில்லை.

அரக்கோணம் எஃகு நிறுவனத்தைப் பொறுத்தவரை, அது நலிவடைந்து, மூடவேண்டிய நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, அந்த ஆலையிலே வேலை செய்துவந்த 722 தொழிலாளர்கள் தானாகவே முன்வந்து, தன்னிச்சையாக ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் (Voluntary Retirement Scheme) செல்வதற்கு ஒப்புதல் தெரிவித்ததன் பேரில், அவர்களுக்கு 16,76,30,681 ரூபாய் வழங்கப் பட்டுவிட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகள்பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள்கூட அதைப்பற்றி இங்கே எடுத்துக்காட்டினார்கள். கடந்த ஆட்சியில் திட்டமிட்டு தரம் குறைந்த பஞ்சை அதிக விலை கொடுத்து வாங்கி பல கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதால் கூட்டுறவு நூற்பாலைகளுடைய நிதி நிலைமை மிகவும் சீர்கெட்டது. தரமற்ற நூலைத் தயாரித்து விற்க முடியாமல் தத்தளிக்கும் நிலைமைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் தள்ளப்பட்டன. கையிலே பணம் இல்லாமல் காசோலை வழங்கி, அதன் காரணமாக நிர்வாக இயக்குநர்கள் கைது செய்யப்பட்ட நிலை எல்லாம் கடந்த ஆட்சியிலே நடைபெற்று, கூட்டுறவு நூற்பாலைகள் முடமாக்கப்பட்டதை நான் இங்கே வேதனையோடு நினைவுகூர்கின்றேன்.

நலிவடைந்துள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 16 ஆலைகளுக்கு ரூ. 185.25 கோடி மதிப்பில் புனரமைக்கும் திட்டத்தை ஏற்று, அரசு ஆணை வழங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், உடனடியாக 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மட்டும் தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD) புனரமைப்புத் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. அரசு 5 ஆலைகளுக்கு ரூ. 2.23 கோடி விளிம்புத் தொகை (Margin Money) அளித்துள்ளது. இந்த ஆலைகளுக்குத் தேவையான பஞ்சு வகைகள் Tamil Nadu Spinning Mills Federation (TAN SPIN) மூலம் வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகள், சட்டப்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைப் பைசல் செய்யும் பொருட்டு ரூ. 7.11 கோடி வழங்க அரசாணை பிறப்பித்து, அதிலே ரூ. 1.7 கோடி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் கடன் எல்லாம் எப்போது வாங்கப்பட்டது ? கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட தொல்லைகளை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் அவர்கள்மேல் பரிதாபப்பட்டு, அவர்களுடைய நிலைகளை எனக்கு அடிக்கடி உணர்த்துகின்ற

பணியில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கூட ஈடுபட்டிருந்தார். இவற்றையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்தப் பணிகள் அரசின் சார்பாக முடுக்கிவிடப்பட்டன. ICICI, IFCI, IDBI போன்ற நிதி நிறுவனங்களுக்கு இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் செலுத்த வேண்டிய ரூ. 4.4 கோடியை அரசுதான் வழங்கியது. கூட்டுறவு நூற்பாலைகள் தனியார் பஞ்சு வியாபாரிகளுக்கு கடந்த ஆட்சிக் காலத்திலே செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் முதல் தவணையாக ரூ. 1.65 கோடியையும் இந்த அரசுதான் வழங்கியது. மீதியை விரைவிலே வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கான பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடைபெற்று எவ்வளவு குறைத்துக்கொள்ளலாம் என்று ஒரு settlement-க்கு வந்து, அப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகையிலே ரூ. 1.65 கோடியை அரசு வழங்கிவிட்டது. மீதியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய இன்னல்களுக்கிடையிலேகூட இந்த அரசு திட்டங்களை, நிதி நிர்வாகத்தைச் சரிவர நடத்தி வருகிறது என்பதற்கு யாரும் நமக்கு நற்சான்றிதழ் அளிப்பதற்கு முன்பாக மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்ற திரு. கே. சி. பந்த் அவர்கள் - கோவிந்த வல்லப பந்த் அவர்களுடைய திருக்குமாரன் - இப்போது திட்டக் குழுவினுடைய துணைத் தலைவராக இருக்கின்றார்.

அவர் மத்திய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் கே. சி. பந்த். பிப்ரவரி 19-ஆம் தேதி, தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்பொழுது பின்வருமாறு கூறுகின்றார் :

"Projection of a plan, far beyond what the resources would warrant, leads to distortion of priorities and to thin spread of resources. I must hasten to add that a number of States are exceptions to this, for example, Goa, Gujarat, Karnataka, Kerala, Maharashtra and Tamil Nadu. Their prudence in deciding the Plan size and realising it, I am sure, makes a better impression on the public than announcing large plans and not realising them." அதாவது நிதியாதாரத்திற்கு அதிகமாக திட்டத்தின் அளவை நிர்ணயிப்பது முன்னுரிமைத் திட்டங்களைப் பாதிக்கும். மேலும், நிதியாதாரங்களைச் சிதறச் செய்துவிடும்.

அப்படி இல்லாமல் சில மாநிலங்கள் இருக்கின்றன. உதாரணமாக, கோவா, குஜராத், கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். பெருமளவிலான திட்டங்களை அறிவித்துவிட்டு அவற்றைச் செயல்படுத்தாமல் இருப்பதைவிட விவேகமான முறையில் திட்டத்தின் அளவை நிர்ணயம் செய்து அதை நிறைவேற்றுவதுதான் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் என்று கூறி, தமிழ்நாடு அப்படித்தான் நிதி நிர்வாகத்தை, Financial Management-ஐ நடத்துகிறது என்பதற்கான நற்சான்றை அவர் வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் மேற்கு வங்கத்திலேயிருந்து வந்த ஓர் அம்மையார் மதுரையிலே ஒன்றும், மதராஸ் வீதியிலே ஒன்றுமாகப் பேசியதை நீங்கள் அறிவீர்கள். மதராஸ் என்று நானே சொல்வதற்காக மன்னிக்கவும். அடுக்குத் தொடராகச் சொல்லிவிட்டேன். சென்னையிலே ஒன்றுமாகப் பேசுகிறார்கள். சென்னையிலே அன்னையைச் சந்தித்த பிறகு அவர்களுடைய விமர்சனம் அதுவாக அமைந்தது.

தமிழ்நாட்டினுடைய நிதி நிர்வாகத்திற்கு திட்டக் குழுவினுடைய துணைத் தலைவரே இந்தச் சான்று வழங்கிய பிறகு யாரோ மம்தா போன்றவர்கள் வந்து ஏதோ பேசிவிட்டுப் போனார்கள் என்பதற்காக நாம் கவலைப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : அன்னை என்று சொன்னால் இந்திரா காந்தியைத்தான் குறிக்கும். ஆனால் சாதாரணமானவர்கள் எல்லாம் அன்னை ஆக முடியாது.

திரு. கே. சுப்பராயன் : அன்னை கஸ்தூரிபாய் இருக்கிறார்கள்.

திரு. ச. அழகிரி : அன்னை என்று சொல்வதற்குப் பதிலாக அக்காவைச் சந்திக்கச் சென்றார்கள் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் அக்கா என்று சொன்னால் பொன்னம்மாள் அம்மாவைக் குறிப்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. (சிரிப்பு)

நம்முடைய திரு. ஜி.கே. மணி அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இங்கே உரையாற்றும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான் அப்போதே விளக்கம் அளித்தேன். இருந்தாலும் விரிவாக அதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 108 ஜாதிகளைச் சேர்த்துவிட்டு, அதிலே 20% கொடுத்தால் நியாயமா என்ற ஒரு கேள்வி; இதை திரு. மணி மாத்திரம் அல்ல; அந்தக் கட்சியினுடைய தலைவர் அன்புக்குரிய நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் இந்தக் கேள்வியை அடிக்கடி எழுப்பியிருக்கிறார். நம்முடைய திரு. கணேசன் அவர்களும் சென்றமுறை இங்கே பேசும்போது அதைக் குறிப்பிட்டிருக்கிறார். 108 ஜாதிகள் என்று சொல்லும்போது மலைப்பாக இருக்கிறது. அடேயப்பா! 108 ஜாதிகளுக்கு 20% தானா என்று ஒரு மலைப்பாக இருக்கிறது. இதில் உண்மை என்ன என்பதை அறிய வேண்டும்.

1982ஆம் ஆண்டு திரு. அம்பாசங்கர் தலைமையிலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டது இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு. அதற்கு முன்பு முதல் பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவை நான் முதலமைச்சராக இருக்கும்போது அமைத்தேன். பிறகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு அமைக்கப்பட்டது. அது 1985ஆம் ஆண்டு வழங்கிய அறிக்கையில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள வன்னியர் உள்ளிட்ட 109 ஜாதிவாரியான மக்கள் தொகை அறிவிக்கப்பட்டது. அதனுடைய விவரம், அந்த 109 ஜாதிகளுடைய மொத்த மக்கள் தொகை 1,23,34,987 பேர் - குறித்துக்கொள்ளலாம். மணி - அதிலே வன்னியர் மாத்திரம் 65,04,855 பேர். அதுதான் பெரும் தொகை. சுமார் 1 கோடியே 23 இலட்சத்திலே 65 இலட்சம் பேர் வன்னியர் பெருமக்கள். அஃதன்னியில் மறவர், பிரமலைக் கள்ளர், அம்பலக்காரர், சேர்வை, அப்பநாடு, கொண்டயம் கோட்டை மறவர், அம்பலக்காரர் (சூரியனூர்), கந்தர்வக்கோட்டை கள்ளர், கூட்டப்பால் கள்ளர், பெரிய சூரியூர் கள்ளர், செம்பநாடுமறவர் உட்பட உள்ள சீர்மரபினர் 17,18,532 பேர்.

இவைபோல எஞ்சியுள்ள 41,11,600 பேரில் எத்தனை ஜாதிகள் வருகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த

எண்ணிக்கை என்ன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சலவைத் தொழிலாளிகள் 4,45,637. மருத்துவர், நாவிதர், மங்களா என்று சொல்லப்படுகின்ற வகுப்பினர் 4,26,427. போயர், ஒட்டர் 4,09,567. ஆண்டிப்பண்டாரம் 2,23,770. இசை வேளாளர் 58,327. குலாலா 3,01,179. குரும்பர் 1,83,689. குரும்பர் என்றால் பெரிய 'று' அல்ல; சின்ன 'ரு'. (சிரிப்பு). மீனவர் 2,71,764. தொட்டிய நாயக்கர் 2,71,318. வேட்டுவ கவுண்டர் 1,25,886. டொம்மாரா 4,436. எரவல்லர் 1,377. கொரச்சா 3,429. குருகினிசெட்டி 4,225. நோக்கர் 7,559. முக்குவர் அல்லது முகயர் 4,358. பண்ணையார் 9,758. தொண்டமான் 14,036. பட்டுதுர்காஸ் 441. 441 பேரெல்லாம் இருக்கிறார்கள். இதெல்லாம் சேர்த்துத்தான் 108 ஜாதிகள் என்கிறோம். டோம்ஸ் 260 பேர். தொங்க போயா 238. தொங்கஊர் கொரச்சார் 287. தேவகுடி தலையாரி 1955. தொப்பை கொரச்சாஸ் வெறும் 51.

குடு தாசரிகள் 482, மொண்ட கொரவர் 196, மொண்ட கொல்லா 64, சேலம் மேல்நாடுகொரவர் 1,839, சேலம் உப்புக் கொரவர் 2,782, சாரங்க பள்ளி கொரவர் 54. தோகமலை கொரவர் அல்லது கேப்மாரிகள் 512 (பலத்த சிரிப்பு). இது ஒரு ஜாதியினுடைய பெயர் வயல்பாடு அல்லது நாவல்பேடா கொரச்சாஸ் 15, வடுவார்பட்டிக் கொரவர் 381, வரகனேரி கொரவர் 313.

இப்படி ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 14. 50,000த்திற்கு மேற்பட்ட ஆனால் 1 இலட்சத்திற்குக் குறைவாக மக்கள்தொகை கொண்ட ஜாதிகள் 10. 10,000-த்திற்கு மேல், ஆனால் 50,000-த்திற்குக் கீழே மக்கள் தொகை உள்ள ஜாதிகள் 19. 1000 முதல் 10,000 வரை மக்கள் தொகை உள்ள ஜாதிகள் 40. 1000-த்திற்கும் கீழே மக்கள் தொகை கொண்ட ஜாதிகள் 25. இப்படித்தான் 108 ஜாதிகளே அல்லாமல், இதிலே அதிகமான பலனைப் பெறக்கூடியவர்கள், நான் முதலிலே குறிப்பிட்ட இரண்டு வகுப்பினர்கள். வன்னியப் பெருமக்கள், அதற்கடுத்த அளவிலே பயனைப் பெறக்கூடியவர்கள் சீர்மரபினர் மற்றும் மறவர், பிரமலைக்கள்ளர் என்பவர்கள்தான். எனவே, 108 ஜாதிகளுக்கும் பிரித்து எல்லோருக்கும் குறைத்துக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது தவறு. இந்த 20 சதவிகிதம் கொடுத்த பிறகு - பெரிய போராட்டத்தை நடத்தி, அதிலே

28 பேரை பலி கொடுத்து, அதற்குப் பிறகும் கிடைக்காத இந்த 20 சதவிகிதத்தை, 1989 ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், உடனடியாக அந்தத் தலைவர்களை அழைத்துப் பேசி, 20 சதவிகிதத்தை அறிவித்தது. அதன்பிறகு பட்டியலைப் பார்த்தால், நீங்கள் புரிந்துகொள்ளலாம் - மருத்துவக் கல்லூரியில், பொறியியல் கல்லூரியில், வேளாண்மைக் கல்லூரியில் மற்றும் பல தொழிற் கல்லூரிகளில் எந்த அளவிற்கு இந்த மக்களுடைய விகிதாச்சாரம், இந்த 20 சதவிகித ஒதுக்கீடு காரணத்தால் உயர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

அடுத்து, இங்கே பெரும்பாலான உறுப்பினர்களால் அதிகமாகப் பேசப்பட்ட ஒரு செய்தி, குடும்ப அட்டைகளைப் பற்றியது ஆகும். அதைப்பற்றி இப்போது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட கோடிட்டுக் காட்டினார்கள். நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள்கூட ஒரு பத்திரிகையிலே அதைப்பற்றி எழுதியிருக்கிறார். எல்லோருக்கும் குடும்பக் கார்டு கொடுக்கப்பட்டுவிட்டது என்று இந்த அரசு சொல்வது, முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற மாதிரி என்று சொல்லியிருக்கிறார். இந்த உதாரணத்தைப் பார்த்துவிட்டு நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஏனென்றால், ஒரு முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிற அளவுக்கு சோறு இருந்தால் தமிழ்நாடு எவ்வளவு வளமாக இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். (சிரிப்பு).

சொல்லும்போது ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும். நான் எப்போதும், சொல்லும்போதும், எழுதும்போதும் அப்படி எழுதமாட்டேன். முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது போல என்று சொன்னால், அந்த அளவுக்குச் சோறைக் கொட்டி, அதிலே பூசணிக்காயை மறைத்துவிடலாம். அதனாலே 'முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பது போல' என்று போட்டால் சரியாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால், இலையையும் வைத்து மறைக்கலாம். இலையும் வருகிறது, அதிலே மறைப்பதற்கு சோறும் வருகிறது. அவருக்கும் மற்றும் அவரைப்போல இங்கே இந்தக் குடும்ப அட்டை விநியோக முறையிலே உள்ள குறைகளைச் சொன்ன திரு. அழகிரி, எதிர்க்கட்சித் தலைவர், நம்முடைய அருமை நண்பர்

லத்தீப் மற்றும் திரு. பழனிசாமி போன்றவர்களெல்லாம் சொன்ன அந்தக் கருத்திற்கு சில விளக்கங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமான விஷயமாக இருப்பதால், சில விளக்கங்களை நான் சொல்லியாக வேண்டும். தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்ள குடும்பங்கள் 136.95 இலட்சம் குடும்பங்கள். ஆனால், இதுவரை கொடுக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 142.79 இலட்சம். மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலே உள்ள குடும்பங்களை விட அதிகமாகக் குடும்ப அட்டைகள் தரப்பட்டிருப்பது 5.84 இலட்சம் ஆகும்.

இந்த அளவிற்கு அதிகமாக வரக் காரணம், ஒரே குடும்பத்தில் உள்ளவர்களே தனித்தனியாக இரண்டு அட்டைகளை, தந்தைக்கு ஒன்றும், மகனுக்கு ஒன்றுமாக வாங்கியதால் இருக்கலாம். புதிய அட்டைகள் வழங்குவதற்கு முன்னதாக கடந்தமுறை புழக்கத்தில் இருந்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 148 இலட்சம். இதிலே போலி அட்டைகள் ஏராளமாக இருந்தனவெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு களையப்பட்டது சுமார் 11 இலட்சம். அச்சடிக்கப்பட்டு பெற்றுக்கொள்ள யாரும் வராமல் இருக்கின்ற அட்டைகள் மட்டும் சுமார் இரண்டு இலட்சம். இந்த இரண்டு இலட்சம் அட்டைகளுக்கு உரியவர்கள் போலிகள் என்பதால் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் வரவே யில்லை. எனவே, பழைய குடும்ப அட்டைதாரர்களுக்கெல்லாம் எந்தவிதமான குழப்பமும் இன்றி அட்டைகள் வழங்கப்பட்டு முடிவுபெற்றுவிட்டன. அதிலே எந்தவிதமான தவறும் இல்லை ஆனால் இதற்கு முன்பு குடும்ப அட்டைகள் வைத்திருக்காமல், புதிதாக விண்ணப்பம் போட்டு அவ்வப்போது அட்டை பெற வேண்டியவர்கள் மாத்திரம்தான் தொடர்ந்து புதிய அட்டைகளைக் கோரி மனு கொடுத்து வருகின்றார்கள். அரசு பழைய அட்டைகளுக்குப் பதிலாக மாற்று அட்டைகள் வழங்குகின்ற பணியிலே தொடர்ந்து அக்கறை செலுத்திவந்ததால் புதிய மனுக்களைத் தனியாக எடுத்துக்கொண்டு அவற்றுக்கும் அட்டைகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு முந்தைய குடும்ப அட்டைகள் இல்லாமல் புதிய அட்டைகள் கோரி வந்த மனுக்கள் மாத்திரம் 22 இலட்சம் ஆகும். இந்த 22 இலட்சம்

மனுக்கள்மீது ஒவ்வொரு மாவட்ட விநியோக அலுவலரும், கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டபோது அதில் உண்மையானதுதான் என்று தெரிந்தது 4.5 இலட்சம் மனுக்கள்தான். இதிலும் 2 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 2.5 இலட்சம் மனுக்களுக்கான குடும்ப அட்டைகளும் தொடர்ந்து அச்சடித்து வழங்கப்படும் பணி முறையே நடந்துகொண்டுள்ளது.

இந்த 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர்களில் உள்ளவர்கள் தான், மாண்புமிகு உறுப்பினர்களைச் சந்தித்து எங்களுக்கு அட்டை வரவில்லை, அட்டை வரவில்லை என்று ஆங்காங்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குடும்ப அட்டைகள் பிரச்சினையை இத்தோடு முடித்துவிட முடியாது. தொடர்ந்துகொண்டே இருக்கக்கூடியது. புதிய, புதிய குடும்ப அட்டைகள், தமிழகத்தில் புதிது புதிதாகக் குடும்பங்கள் தொடங்கப்படும்போதெல்லாம் அவர்கள் கொடுத்துக்கொண்டேதான் இருப்பார்கள். எனவே, இது முடிவுறாத பணியாகும் என்று நான் முன்பு சொன்னதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். இவ்வாறு, புதியதாகக் குடும்ப அட்டைகள் பெறுபவர்களுக்கு அவை கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால், உடனே ஒட்டுமொத்தமாக குடும்ப அட்டைகள் வழங்குவதில் கோளாறு என்று கூறுவதில் அர்த்தம் இருக்க முடியாது என்று மாத்திரம் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். குறைகள் அறவே இல்லையென்று சொல்ல மாட்டேன். ஆனால் இங்கே எடுத்துக்காட்டுகின்ற அளவிற்குப் பூதாகரமாக இதிலே குற்றம் இல்லை; குறையில்லை என்பதைத்தான் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற இந்தக் குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால், குறிப்பிட்ட குறைகள் இருக்குமேயானால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தத் துறை நிச்சயமாக முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது. போலி அட்டைகளை வைத்துக்கொண்டு ஊழல் செய்வதற்காக ஒரு கூட்டம் அலைந்துகொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தப்

போலி அட்டைகளைக் கொண்டு Ration கடைகளிலே அரிசியை வாங்கி அல்லது ஏதாவது உணவுப் பொருட்களை வாங்கி, அதை வேறு இடங்களிலே விற்று, அவற்றைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் வேறு இடங்களிலே அதிக விலைக்கு விற்று அதிலே சம்பாதிக்க வேண்டும் என்று ஒரு கூட்டம் தமிழகத்திலே அலைந்துகொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்ப அட்டைகளுக்கு அடுத்தபடியாக, போக்குவரத்துத் துறை பற்றித்தான் அதிகமாக இந்த அவையிலே, ஆளுநர் உரையிலே பேசப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி நான்காவது முறையாக ஏற்பட்ட இந்த 2½ ஆண்டுகளில் பேருந்துகள் இயக்கப்பட புதிய வழித்தடங்கள் உருவாக்கும் வகையில், 1,245 தடங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஆட்சியிலே 410. அதையும் இந்த ஆட்சியில் எடுத்து நடத்தியதில் மொத்தம் புதிய வழித்தடங்கள் 1,655 ஆகும். நடத்த முடியாது என்று விட்டவையெல்லாம், தனியாருக்குச் சென்றதெல்லாம், அந்தக் கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும் அவற்றையெல்லாம் ஏற்று நடத்தி நஷ்டத்தால் கைவிடப்பட்ட தடங்களையும் ஏற்று நடத்தி 1,655 புதிய வழித்தடங்கள் இந்த 2½ ஆண்டுக் காலத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த கால ஆட்சியிலே 5 ஆண்டுக் காலத்தில், வாங்கப்பட்ட புதிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை 10,673. இந்த 2½ ஆண்டுக்கால ஆட்சியிலே வாங்கப்பட்ட பேருந்துகள் 7,212. போக்குவரத்துக் கழகங்களில், முந்தைய ஆட்சிக்காலத்திலே பேருந்துகளுக்கு உதிரி பாகங்கள் கொள்முதல் செய்தல், மேற்கூடு கட்டுதல் Body கட்டுதல் - ஆகியவற்றில் ஊழல் மிகுந்து காணப்பட்டதால் இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றவுடன் புதிய கொள்முதல் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டது. உதிரி பாகங்கள் கொள்முதல் முறை சீரமைக்கப்பட்டது. பேருந்து மேற்கூடுகளைக் கட்டும் பணி அந்தந்த அரசுப் போக்குவரத்துக் கழகப் பணி மனைகளிலேயே செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாற்றங்களினால் பேருந்து மேற்கூடு கட்டும் செலவு, 1995-96ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது 30 சதவீதத்திற்கு மேலாகக்

குறைக்கப்பட்டு அந்த வகையிலே மாத்திரம் இந்த 2½ ஆண்டு களில் 48 கோடி ரூபாய் அளவிலே சேமிப்பு ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தவிர, உதிரி பாகங்கள், டயர் போன்ற செலவினங்களில் 68 சதவீதம் குறைக்கப்பட்டு, நடப்பாண்டில் ரூபாய் 14 கோடி அளவிலே சேமிப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்திலே பேருந்துகளை இயக்குவதற்கான பல்வேறு செலவுகள் ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே வருகிறது என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

சராசரியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இயக்கப்படும் பேருந்து ஒவ்வொன்றும் அன்றாடம் 405 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது. போக்குவரத்துக் கழகங்களின் மூலம் அன்றாடம் இயங்கும் பேருந்துகளுடைய எண்ணிக்கை 15,346. 1996-97-ல் பேருந்தை ஒரு கிலோ மீட்டர் ஓட்டுவதற்கு டீசல் செலவு 2.12 ரூபாய் என்று இருந்தது. தற்போது அந்தச் செலவு 2.73 ரூபாயாக உயர்ந்துள்ளது. இடையிலே டீசலுக்கு விலை உயர்த்தப்பட்டு, குறைக்கப்பட்ட பிறகும் இந்த நிலைதான். 1996-97 இலே 2.12 ரூபாயாக இருந்தது ஒரு கிலோ மீட்டர் டீசல் செலவு. இப்பொழுது ஒரு கிலோ மீட்டருக்கு டீசல் செலவு 2.73 என்று உயர்ந்திருக்கிறது. அதாவது 61 பைசா ஒரு கிலோ மீட்டருக்குக் கூடியுள்ளது.

அதேபோன்று வட்டிச் செலவு 1996-97-இல் ஒரு கிலோ மீட்டருக்கு 49 பைசாவாக இருந்தது தற்போது 71 பைசாவாக உள்ளது. சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஒரு கிலோ மீட்டருக்கு 1996-97-இல் 3.77 ரூபாயாக இருந்தது தற்போது 4.48 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு சிரமங்கள் பல இருந்தாலும்கூட, இந்தியாவில் தமிழ்நாட்டிலேதான் பயணக் கட்டணம் குறைவாக இருக்கிற தென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நான் வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை; பயப்பட வேண்டாம். ஆந்திராவிலே புறநகருக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 24 காசு; கர்நாடகத்திலே 21 காசு; கேரளத்திலே 22 காசு; தமிழ்நாட்டிலே 18 காசு. ஓரளவு சொகுசு உள்ள விரைவுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 34 காசு; கர்நாடகத்திலே 25.5 காசு; கேரளத்திலே 34 காசு; தமிழ்நாட்டிலே

20 காசு. சொகுசுப் பேருந்துக்கு புறநகர் சொகுசுப் பேருந்துக்கு ஆந்திராவிலே 39 காசு; கர்நாடகத்திலே 31 காசு. கேரளத்திலே 39 காசு; தமிழ்நாட்டிலே 25 காசு.

இதையெல்லாம் சொன்னால், கட்டணமும் குறைவாக இருக்க வேண்டும், வசதியும் அதிகமாக இருக்க வேண்டும், 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்ற நிலைமையிலே யிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த இரண்டு ஆசைகளிலே எந்த ஆசையை விடப்போகிறார்கள் என்று நான் மிகுந்த பவ்யமாக, பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பட்ஜெட்டுக்கு முன்பு கோரப்படுகின்றது இவ்வளவு அரிய யோசனைகளையெல்லாம் சொன்னீர்கள். திரு. திருநாவுக்கரசு அருமையான யோசனைகளையெல்லாம் சொன்னார். இதற்கும் ஒரு யோசனையை நீங்களெல்லாம் சொல்ல வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரும் மிக நிதானமாகச் சிந்திப்பவர். அதனால் அவரும் அதற்கு நல்ல யோசனையைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விலையைப்பற்றி இங்கே சொல்லப்பட்டது. ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்களே, என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று கேட்டீர்கள். நானும் எப்படியோ ஏமாந்து போயிருக்கிறேன். எப்படியென்றால், இந்த ஆட்சி ஆரம்பித்தபோது நம்முடைய சுதர்சனம்தான் ஒரு கேள்வியைக் கேட்டார். ஆயிரம் ரூபாய் கரும்பு விலை என்று தேர்தல் அறிக்கையிலே போட்டிருக்கிறோமே, எப்பொழுது நிறைவேற்றப்போகிறீர்கள் என்று சுதர்சனம் சொன்னால் சரியாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு நானும் நாயுடு பேச்சை நம்பி (சிரிப்பு), அன்றைக்கு இந்த அவையிலே விரைவில் ஆயிரம் என்பது ஒரு குறிக்கோள்தான், அதை நிச்சயமாக அடைந்து தீருவோம், மெல்ல மெல்ல அடைந்து தீருவோம் என்று சொல்லிவிட்டேன்.

அடிக்கடி பேசப் பேச, அப்படி ஒரு வாசகத்தைத் தேர்தல் அறிக்கையிலேயே போட்டிருக்கிறோமா என்று தேர்தல் அறிக்கையை எடுத்துவந்து பார்த்தேன். இது தேர்தல் அறிக்கை.

1996 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே, எங்கேயும் ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொல்லவே இல்லை. இது புதிதாக Print பண்ணியது இல்லை. தமிழ் மாநிலக் காங்கிரஸ் Office-லே கூட இருக்கும் அது. கம்யூனிஸ்ட் கட்சி Office-லேயும் இருக்கும். எடுத்துப் பார்க்கலாம். அதில் என்ன போட்டியிருக்கிறோம் என்றால், "கரும்புக்கு அதிக விலை" என்கிற தலைப்பிலே, என்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோம் என்றால், ''மற்ற மாநிலங்களைப்போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை" - இங்கே அழகராஜா சொன்னாரே அது மாதிரி, "மற்ற மாநிலங்களைப் போல வெட்டுக்கூலி, வண்டி வாடகை முதலியவற்றை ஆலையே ஏற்று கரும்பு விலையை உயர்த்தி நிர்ணயிக்கும் விதத்தில்" - அதுகூட நிர்ணயிப்போம் என்று சொல்லவில்லை - "முத்தரப்பு மாநாடு கூட்டி எல்லோருடைய யோசனையையும் பெற்று, உரிய முடிவெடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள் கிறோம்" - இதைத்தான் தேர்தல் அறிக்கையிலே போட்டிருக்கிறோம்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே சொல்லவில்லை. 1996-ல் திருச்சியில் நடைபெற்ற 96-வது மாநாட்டிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே அறிவித்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதுவும் ஞாபகம் என்றுதான் சொல்கிறார் அவர். (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன் : தீர்மானம். . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இல்லை, இல்லை. மாநாட்டிலே தீர்மானம் போட்டிருக்கலாம். அந்தத் தீர்மானத்தை மறுபரிசீலனை பண்ணித்தான் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. (சிரிப்பு) நான் அதற்காகப் பின்வாங்குவதாக அர்த்தம் அல்ல. கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன்.

கரும்பு விலையைப் பொறுத்தவரையிலும், ஒரு ஒப்பீடு பார்த்தால், இந்த விலை, சர்க்கரைக் கட்டுமானம் (recovery) பிழிதிறன் என்பதை வைத்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். இதிலே recovery

குறைவாக இருந்தாலும்கூட அதிகமாகக் கொடுப்பது நாம்தான். உதாரணமாக, ஆந்திராவில் சர்க்கரைக் கட்டுமானம் (recovery) 10.22 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் விலை 630 ரூபாய். கர்நாடகாவில் recovery 10.54 சதவீதம். அங்கே 730 ரூபாய் டன் ஒன்றுக்கு விலையாகக் கொடுக்கிறார்கள். மராட்டியத்தில் recovery 11.11 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 680 ரூபாய். குஜராத்தில் சர்க்கரைக் கட்டுமானம் (recovery) 10.72 சதவீதம். அங்கே டன் ஒன்றுக்கு விலை 648 ரூபாய். தமிழ்நாட்டில் recovery பத்தும் இல்லை, பதினொன்றும் இல்லை, ஒன்பதும் இல்லை. 8.94 சதவீதம். அதற்கு நாம் தருகின்ற விலை 753 ரூபாய். எல்லா மாநிலங்களையும்விட அதிகமாகக் கொடுக்கிறோமே நாம், பாராட்ட வேண்டாமா நீங்கள் ? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

கூட்டுறவு மற்றும் பொதுத் துறையில் இயங்கிவரும் 19 சர்க்கரை ஆலைகளில் 1997-98 ஆம் ஆண்டு முடிய 364 கோடி ரூபாய் திரண்ட நட்டம் (cumulative loss) ஏற்பட்டுள்ளது. இந்தப் பெரிய நட்டத்திற்குக் காரணம், சர்க்கரை உற்பத்திக்காகும் செலவை ஈடுகட்ட முடியாத நிலை. 1994-95 மற்றும் 1995-96ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கூடுதல் கரும்பு உற்பத்தி காரணமாக, அரவைக் காலத்தை நீட்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் கட்டுமானமே - (Recovery) குறைந்து போயிற்று.

1997-98-ல் அரவைப் பருவத்தில் பெருமழை. அதே 1997-98 அரவைப் பருவத்தில் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம். கடந்த ஆட்சியில் விரிவாக்கப் பணிகளை, காலத்திலே அவர்கள் முடிக்கவில்லை என்பதும் ஒரு காரணம்.

கடந்த ஆட்சியில் சில ஆலைகளில் உபரி கரும்பு இதர ஆலைகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டது. அதுவும் ஒரு காரணம். இப்படி தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால், 14 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 1997-98 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கான மாநில அரசு மற்றும் மைய அரசு நிர்ணயம் செய்த கரும்பு விலைக்கான வித்தியாசத் தொகையை வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டது. இந்த வித்தியாசத் தொகையை வழங்க முடியாத சூழ்நிலை அந்த ஆலைகளுக்கு ஏற்பட்டது.

கரும்பு விவசாயிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 82 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியது. எதற்காக ? அந்த ஆலைகளுக்கு அல்ல. அந்த விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணத்திற்காக 82 கோடி ரூபாயை இந்த அரசு உதவியாக வழங்கியது கரும்பு விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவைத்தொகை, தீபாவளிக்கு முன்பே வழங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டது. கழக அரசு வழங்கிய நிதியுதவியின் காரணமாக 70,273 கரும்பு விவசாயிகள் பயன் அடைந்தார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு மேலும் நம்முடைய ஞானசேகரன், ஐ. கணேசன் போன்றவர்கள் வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிறீர்கள் என்று சொல்லாமல் இருந்தால் நலம் என்று நம்புகின்றேன். இதற்கு மேலும் தருவதற்கு, முத்தரப்பு மாநாட்டை நாம் நடத்தி, அதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையில் தங்கள் மூலமாகக் கரும்பு விவசாயிகளுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள், ராசிபுரம் தொகுதிக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்ற ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நானும் அதிர்ச்சியடைந்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, அவரிடமிருந்து ஒரு அறிக்கையைப் பெற்றேன். அந்த அறிக்கையின்படி, ராசிபுரம் தொகுதியில் நான் எல்லாப் பணிகளையும் சொல்ல விரும்பவில்லை, நேரமாகும். இந்த இரண்டரை ஆண்டுகளில் நடைபெற்ற பணிகளில் சிலவற்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சித் துறை மூலம், சமத்துவபுரப் பணிகள் நடைபெற்றவை 101. செலவு 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் 39 - செலவு 48 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய். நமக்கு நாமே திட்டப் பணிகள் 17 - செலவு 16 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய். தொகுப்பு வீடுகள் 769 - செலவு 2 கோடியே 16 இலட்சம் ரூபாய். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 61 - செலவு

33 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய், வேளாண்மைப் பொறியியல் துறைப் பணிகள் 59 - செலவு 87 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக இதர பணிகள் உள்ளிட்ட பணிகள் மாத்திரம் 7,227 - செலவு 11.18 கோடி ரூபாய்.

தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் 47 Transformers அமைக்கச் செலவு 70 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். உயர் மற்றும் குறைந்த மின்னழுத்த இணைப்புகள் பெற 1.53 கோடி ரூபாய். உயர் அழுத்த மின் இணைப்பு 3 பெற 6 இலட்சம் ரூபாய் விவசாயத்திற்கு 466 மின் இணைப்புத் தர 1 கோடியே 63 இலட்சம் ரூபாய். 162 குடிசைகளுக்கு மின் இணைப்புத் தர 1 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய். தெரு விளக்குகள் 396 அமைக்க 19 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். மேல்நிலை குடிநீர்த் தொட்டி 55-க்கு 22 இலட்சம் ரூபாய். இப்படி மின் துறை மூலமாக ஆன செலவு 7 கோடியே 19 இலட்சம் ரூபாய்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 84 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கியதற்குச் செலவு 1 கோடியே 39 இலட்சம் ரூபாய் வருவாய்த் துறை மூலம் பயனாளிகளுக்கும் செலவு 1.47 கோடி ரூபாய். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 514 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கியதற்கானச் செலவு 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

பொதுப்பணித் துறை மூலமாக சிக்கலாந்தபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்.

ராசிபுரம் அரசு மருத்துவமனையிலே புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்ட 20 இலட்சம் ரூபாய்.

உடையார்பாளையம், ஆர். புதுப்பாளையம் மற்றும் வெண்ணாந்தூர் உயர்நிலைப் பள்ளிகளிலே கூடுதல் வகுப்பறை கட்ட 15 இலட்சம் ரூபாய்.

ராசிபுரம் மேல்நிலைப் பள்ளியிலே அறிவியல் ஆய்வுக் கூடம் கட்ட 18 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக 84 கிலோமீட்டர் நீளச் சாலைப் பராமரிப்புப் பணிக்காக 1.55 கோடி ரூபாய்.

போக்குவரத்துத் துறை மூலம் பேருந்து வழித்தடம் - 5 புதிய பேருந்து வழித்தடங்கள் மற்றும் 23 புதிய பேருங்கள், 33 மினி பேருந்துகள்.

முழு நேர நியாயவிலைக் கடை மற்றும் 14 பகுதி நேர நியாயவிலைக் கடைகள் இந்தத் தொகுதியிலே புதியதாக 2½ ஆண்டுகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கல்வித்துறை மூலமாக ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு பள்ளி +2 தேர்வு மையமாக புதியதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்தமாக, எல்லாவற்றையும் இப்படிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இந்த 2½, 3 ஆண்டுக்காலத்தில் மொத்தமாக 52.41 கோடி ரூபாய் அளவுக்குப் பணிகளும், பயன்களும் ராசிபுரம் தொகுதியிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்:டும் பலத்த ஒலி)

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட ஏதோ என்னுடைய தொகுதிக்குத் தனிப்பட்ட முறையிலே செலவு செய்ததாகச் சொல்ல முடியாது. (பல உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்) இதெல்லாம் Routine work, சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் (பல உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும். திரு. சுந்தரம், முதல்வர் அவர்கள் அப்படியெல்லாம் சொல்லவில்லை; உங்களுடைய தொகுதியிலே எந்த வேலையுமே நடைபெறவில்லை என்று நீங்கள் சொன்னதற்கு, எல்லாத் தொகுதிகளிலேயும் செய்துள்ளமாதிரி உங்களுடைய தொகுதியிலும் எல்லா வேலைகளும் நடைபெற்றிருக்கின்றன என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே. . .

திரு. பி. ஆர். சுந்தரம் : இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதற்காக நீங்கள் பேச முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரம் இருக்கிறது என்றால், நீங்கள் பேச வேண்டும் என்று இருக்கிறதா ? நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் தனிப்பட்ட முறையிலே செய்ததல்ல என்று சொன்னார். யாருக்கும் தனிப்பட்ட முறையிலே செய்ய முடியாது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

(திரு. பி. ஆர். சுந்தரம் நின்றுகொண்டே பேசிக் கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள், நான் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நண்பர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஒரு புகாரைச் சொன்னார். திருவில்லி புத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். குறை இருக்கலாம். ஆனால் எப்போதுமே அவர் அதிகமாகத்தான் சொல்வார். 500 பேர் என்றால் 5000 பேர் என்பார். 500 பேர் வந்திருந்தால் 5000 பேர் வந்திருந்தார்கள்; 5000 பேர் வந்திருந்தால், 50000 பேர் வந்திருந்தார்கள் என்றெல்லாம் கூட்டத்திலே சொல்லும்போது சொல்லலாம். 15 கோடி ரூபாய் ஊழல் என்றார். அதைப்பற்றி விசாரித்தபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், இணைப் பதிவாளரிட மிருந்து அறிக்கை பெற்று எனக்கு அனுப்பி இருக்கிறார். அவர் அனுப்பிய தகவல்படி, அந்த வங்கியின் மூலமாக நுகர்பொருள் கடன் மாத்திரம் 362 பேருக்கு 61 இலட்சம் ரூபாய்தான் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள் ரிப்பேர் கடன் என்ற தலைப்பில் 130 பேருக்கு ரூ. 53.88 இலட்சம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைசாராக் கடன்கள் என்ற தலைப்பில் 31 பேர்களுக்கு 14.02 இலட்ச ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கியின் மூலமாக இந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்களே

1,29,29,000 ரூபாய்தான். இதில் எப்படி 15 கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இதைப்பற்றிப் பிறகு விளக்குவாரேயானால், அதைப்பற்றி அறிந்து ஆவன செய்கின்றேன். ஆக, வழங்கப்பட்ட கடனே ஒரு கோடி சொச்சம்தான், அதிலே 15 கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்திருக்க முடியாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல. பிறகு ஜப்தியைப் பற்றி. . .

திரு. இரா. தாமரைக்கனி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சற்றுப் பொறுங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பேசுங்கள். முதலமைச்சர் அவர்கள் தவறே நடக்கவில்லை என்று சொல்லவில்லை. கையாடல் 15 கோடி ரூபாய் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அந்த வங்கியில் கடனே 1.5 கோடி ரூபாய்க்குத்தான் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த 1.5 கோடி ரூபாயில் தவறு நடந்திருந்தால் சொல்லுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : **

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 15 கோடி ரூபாய்க்கு அந்த சங்கத்திலே ஊழல் நடைபெற்றதாக அவர் இங்கே குறிப்பிட்டார். அதைப்பற்றி விசாரித்த அளவில் கூட்டுறவுத்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எனக்கு அனுப்பியுள்ள விவரத்தில், அங்கே 15 கோடி ரூபாய்க்கு ஊழல் நடைபெற்றதற்கான ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கொடுக்கப்பட்ட கடனே 1 கோடியே சொச்ச ரூபாய்தான் என்கிறபோது 15 கோடிக்கு ஊழல் நடைபெற்று இருக்க இயலாது என்று சொன்னேன். ஊழல் இந்த ஒரு கோடி ரூபாய்க்குள்ளே நடைபெற்று இருக்குமேயானால், அதை மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி எனக்கு சுட்டிக்காட்டுவாரேயானால், நான் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன் என்று அப்போதும் சொல்லி இருக்கின்றேன்,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதை மறைக்க விரும்பவில்லை. எங்கே ஊழல் நடைபெற்றாலும், அதை இந்த அரசு நிச்சயமாகக் கண்டுபிடித்து (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுக்கும் என்பதிலே தாமரைக்கனிக்கு சந்தேகம் தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன்.

தலைவர் அவர்களே, ஒரு நல்ல நிகழ்ச்சியைத் திசைதிருப்புவதுதான் தாமரைக்கனி போன்ற நண்பர்களுடைய முயற்சியாக இருக்குமேயானால், அதற்காக நான் ஆச்சரியப்படவில்லை. எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகளில்கூட அ.தி.மு.க.வினர் கலந்துகொண்டு திசைதிருப்பிய கட்டங்கள் எல்லாம் அண்மைக் காலத்தில் பல நடைபெற்றிருக்கின்றன.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர்கள் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் ஆக்கப்பூர்வமான உரைகள் பலவற்றை நிகழ்த்தி, அதற்கான விளக்கங்களை நான் தருகிறேன். அது சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம். அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது சில கருத்து விளக்கங்களைப் பெறுகிற நேரத்தில் மாலைப் பத்திரிகையிலே தாமரைக்கனியைப்பற்றிதான் செய்தி வர வேண்டுமென்பதற்காக உரத்த குரல் எழுப்புவதை. . .

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள் ? நீங்கள் பிறகு கேளுங்கள், நான் அனுமதி கொடுக்கிறேன். இப்போது முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். தாமரைக்கனி சாட்டிய குற்றச்சாட்டு, 15 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாகச் சொன்னார். அதைப்பற்றி விசாரித்ததில் எனக்கு வந்த தகவலைத்தான் சொல்லியிருக்கிறேன். கலெக்டரும் மற்றும் உள்ள அதிகாரிகளும் தந்துள்ள தகவல். அந்தத் தகவல் குறிப்புகள் இங்கே என்னிடத்திலே இருக்கின்றன. அவர்களுடைய கைப்பட வந்த கடிதங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அங்கே கொடுக்கப்பட்ட கடனே 1 கோடியே சொச்சம் ரூபாய்தான் என்கிற போது 15 கோடி ரூபாய் ஊழல் என்று சொல்லப்படுவது மிகையாக

இருக்கிறது. அந்த ஒரு கோடிக்குள் ஏதாவது ஊழல் நடை பெற்றிருந்தால் சொல்லுங்கள், நான் விசாரிக்கிறேன், நடவடிக்கை எடுக்கிறேன் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். விசாரிப்பதும் நடவடிக்கை எடுப்பதும்கூட உங்களால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை என்றால் என்ன செய்ய முடியும்? யாரோ அ.தி.மு.க. விலிருந்து ஊழல் செய்துவிட்டு தி.மு.க.-வுக்கு வந்துவிட்டார்கள் என்று சொல்கிறார். அ.தி.மு.க.-வில் அவர் ஊழல் செய்யும்போது மௌனமாக இருந்தவர், அவர் தி.மு.க.-விற்கு வந்த பிறகு அதை வெளியிடுகிறார் என்றால் இந்த ரகசியம் எனக்குப் புரியவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்க வில்லை, நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அடுத்த கட்டத்திற்குச் செல்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளிடத்தில் ஜப்தி நடைபெறுகிறது என்பதைப்பற்றி நம்முடைய பழனிசாமி அவர்களும் மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எல்லா உறுப்பினர்களும் சொல்லாவிட்டாலும், குறிப்பிட்ட சில உறுப்பினர்கள் ஜப்தியைப்பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு வங்கிகளுக்கான கடனை நாம் திருப்பிச் செலுத்தாவிட்டால், மீண்டும் அந்த நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற முடியாது என்பது எல்லோருக்கும் புரிந்த எளிமையான இலக்கணம்தான்.

30-6-1999 தேதியின்படி அந்தப் பகுதியிலே மொத்தமாக ஏற்படும் தவணைத் தொகை, இந்தக் கூட்டுறவுக் கடன் 43.10 கோடி ரூபாய். - 43 கோடியே 10 இலட்ச ரூபாய். இந்தத் தொகையில் குறைந்தது 40 சதவீதம் அளவுக்காவது வசூல் செய்தால்தான் வருகிற ஆண்டு மீண்டும் நாம் NABARD வங்கியின் மூலம் தொகையைப் பெற்று விவசாயிகளுக்கு மீண்டும் சலுகை வட்டியிலே கடன் தர இயலும். அந்த உரிமையை நாம் ஏன் இழக்க வேண்டும்; முழுக்கக் கேட்கவில்லை, 40 சதவீதம்தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட ஏற்கெனவே வசூல் செய்யப்பட வேண்டிய 43 கோடி ரூபாயில் 40 சதவீதம் என்பது 17.24 கோடி ரூபாய்தான். இதில் 17-2-1999ஆம் நாள் வரை

வசூலிக்கப்பட்ட தொகை வெறும் 36 இலட்சம்தான், இன்னும் வசூலிக்க வேண்டிய தொகை 16.88 கோடி ரூபாய். வசூலிக்க வேண்டியது 40 சதவீதம் முழுமையாக அல்ல. இந்தக் கடன் தொகையைக் கட்ட வேண்டிய தவணைத் தவறிய விவசாயி களுடைய எண்ணிக்கை 81,553 மொத்தம் தவணை தவறிய தொகை 43 கோடியே 10 இலட்ச ரூபாய்.

இதிலே பெரிய விவசாயிகள் 21,898 பேர். இந்தப் பெரிய விவசாயிகள் மாத்திரம் தர வேண்டிய கடன் 19 கோடியே 22 இலட்சம். பெரிய விவசாயிகள் என்றால் யார்? 5 ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவர்கள், டிராக்டர் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி சாகுபடி செய்பவர்கள், நிலங்கள் அன்னியில் மாத ஊதியம் பெற்று வேலையில் இருப்பவர்கள், இவர்கள்தான் பெரிய விவசாயிகள் என்ற அந்த வரம்பில் வருகிறார்கள். மொத்தம் 81,553 தவணை தவறிய விவசாயிகளில் சுமார் 60,000 பேர் சிறு விவசாயிகள். அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. அவர்களுக்கு Notice கூட அனுப்பப்படவில்லை. பெரிய விவசாயிகளான 21 ஆயிரம் பேருக்கு மாத்திரம்தான் உடனடியாக கடன் தொகையை, அந்த 40 சதவீதத்தைக் கட்ட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் Notice அனுப்பப்பட்டது, விளம்பரம் செய்யப்பட்டது. இதிலே தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பில் Notice மாத்திரம்தான் அனுப்பப்பட்டிருக்கிறது. யாருடைய பொருளையும் ஜப்தி செய்யவில்லை.

கும்பகோணம் சங்கத்தின் மூலம் - அதிலே திருவாரூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், நாகை மாவட்டம் எல்லாம் இருக்கிறது. இதில் கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியில் மாத்திரம் 60 பேர் மீது அதாவது, திருவாரூர் மாவட்டத்தில் 10 பேர் மீதும், தஞ்சை மாவட்டத்தில் 29 பேர் மீதும், நாகை மாவட்டத்தில் 21 பேர் மீதும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்கள் எல்லாம் யார்? அவர்கள் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று கட்சியின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை நான், பெயரை மாத்திரம் சொல்கிறேன் சுவாமிநாதன், அவர் கடன் வாங்கியது 1991ல், செலுத்த வேண்டிய தொகை 1 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய். இந்த பெரிய விவசாயிடமிருந்து கடன் தொகையைக் கேட்கக்கூடாதா? 40 சதவீதத்தைக் கொடுக்கக்கூடாதா

அவர் ? சுவாமிக்கண்ணு, 74 ஆயிரம் ரூபாய் 1996-ல் வாங்கினார், கொடுக்கவில்லை. சண்முகவேல், 85 ஆயிரம் ரூபாய் 1996-ல் வாங்கிய கடன். எம். மாரியப்பன், 1996-ல் வாங்கிய கடன் 53 ஆயிரம் ரூபாய். சம்பந்தம், 1991-ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்". கலியமூர்த்தி குடும்பம் 1992-ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். இவர் விவசாயச் சங்கத் தலைவர்கூட. கண்ணபிரான், 1990ல் வாங்கிய கடன் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய். எஸ். செந்தில், 1992ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய். கோபாலகிருஷ்ணன், 1993-ல் வாங்கிய கடன் 1 இலட்சம் ரூபாய் திருஞானசம்பந்தம், 1996ல் வாங்கிய கடன் 59 ஆயிரம் ரூபாய். சுந்தரப்பா, 1996ல் வாங்கிய கடன் 79 ஆயிரம் ரூபாய். மந்திரமூப்பனார், 1 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய், 1996-ல் வாங்கிய கடன். சண்முகம், 1995ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் சேரன் குடும்பத்தார் 1995ல் வாங்கியிருக்கிறார்கள், 1991லும் வாங்கியிருக்கிறார்கள், 9 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய். விவசாயச் சங்கக் கூட்டுக் குழுவின் தலைவர் அவர். அவர் கட்டவேண்டாமா ? 40 சதவீதமாவது அவர் கட்ட வேண்டாமா ? சுந்தரமூர்த்தி 1996-ல் வாங்கிய கடன் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய். இராமகிருஷ்ணன், 1994-ல் வாங்கிய கடன், 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். ஆனந்தன், 1992ல் வாங்கிய கடன் 74 ஆயிரம் ரூபாய். குணசேகரன், 1996 வாங்கிய கடன் 61 ஆயிரம் ரூபாய். இந்த மாதிரி வந்துகொண்டே இருக்கிறது.

சில M.L.A.-க்கள் எல்லாம் இருக்கிறார்கள். நான் பெயரை எல்லாம் சொல்ல விரும்பவில்லை. சொல்லிவிட்டு, அவர்கள் முகத்தைப் பார்க்க எனக்கும் கஷ்டமாக இருக்கும், அவர்களுக்கும் கஷ்டமாக இருக்கும். இதிலே இந்த ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களில் ஆர் மகாலிங்கம், பூண்டி; இவர் கட்ட வேண்டிய தொகை 18 ஆயிரத்து 902 ரூபாய் இவருக்கு 8.78 ஏக்கர் நிலம் சொந்தம். அரிசி ஆலை நடத்திக்கொண்டிருக்கிறார். அவரிடம் கேட்கக் கூடாதா ? கட்டாயப்படுத்தக் கூடாதா ?

பன்னீர்செல்வம், ஆச்சாள்புரம், கட்ட வேண்டிய தொகை 32 ஆயிரத்து 410 ரூபாய். இவருக்கு 8 ஏக்கர் நிலம் இருக்கிறது, கல்யாண மண்டபம் இருக்கிறது, நெல் வியாபாரம் இருக்கிறது, உரக் கடையும் இருக்கிறது. இவ்வளவும் இருக்கிறது. சிறிய விவசாயியா இவர் ?

ராஜதுரை, தேவநாஞ்சேரி, பாக்கித் தொகை 15 ஆயிரம் ரூபாய்தான். இவருக்கு 8 ஏக்கர் நிலம் இருக்கிறது, சொந்தத்தில் டிராக்டர் உள்ளது.

மணிவண்ணன், செம்பியமாதேவி, 43 ஆயிரம் ரூபாய் பாக்கி இவருக்கு 10 ஏக்கர் நிலம் இருக்கிறது, அஞ்சல் துறையில் பணியாற்றுகிறார்.

பெருமாள், வலங்கைமான், பாக்கி 19 ஆயிரம் ரூபாய். இவருக்கு 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஜவுளிக் கடை சொந்தத்தில் நடத்துகிறார்.

எம். ராணி, திருப்புறம்பியம், 23 ஆயிரம் ரூபாய் பாக்கி. 6 ஏக்கர் நிலம் இருக்கிறது. செங்கல் காளவாய் போட்டு செங்கல் வியாபாரம் செய்கிறார். இவர்களிடமிருந்தெல்லாம் பாக்கி வசூல் பண்ணக்கூடாதா? அதுவெல்லாம் ஜப்தி என்று பழனிசாமி போன்றவர்கள் எல்லாம் சொன்னால் கம்யூனிசத் தத்துவத்தை எப்போது மாற்றிக்கொண்டீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு).

மிக முக்கியமாக டாக்டர் கிருஷ்ணசாமி ஒன்று சொன்னார். யாரோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று சொன்னார். நானும் கொடுத்ததாகத் தெரியவில்லை. நிதித் துறையைக் கேட்டேன், அவர்களும் கொடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஏதோ தவறான தகவல் அது. அதேநேரத்தில் கொலை செய்யப்படுகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் ஆதிதிராவிட மக்களாக இருந்தாலும் அல்லது ஆதிதிராவிடர் அல்லாத மக்களாக இருந்தாலும், ஜாதிச் சண்டையில் கொலை செய்யப்பட்டால் ஏற்கெனவே 50 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை இலட்சம் ரூபாயாக ஆக்கி, இப்போது 2 இலட்சம் ரூபாய், அவர்கள் ஜாதி இந்துக்களாக இருந்தாலும் சரி, ஆதி திராவிடர்களாக இருந்தாலும் சரி, இரண்டுபேருக்கும் 2 இலட்சம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இதிலே, ஏதோ சேட்டு மகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுத்தோம் என்று கூறி ஆதிதிராவிட மக்களைத் தூண்டிவிடுகின்ற முறையிலே பேசுவது சரியில்லையென்றே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. லத்தீப் அவர்கள் பேசியதைப்பற்றியும் நான் சில வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். இதற்கிடையிலே இந்த

ஆளுநர் உரையினை வெறும் தாள் என்று சொன்னார்களே அதைப்பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். அதில் என்னுடைய உள்ளத்தைக் கவருகின்ற ஒரு திட்டம், உணர்ச்சிமயமான ஒரு திட்டம், மனிதக் கழிவுகளை அகற்றும் இழிநிலை போக்குகின்ற ஒரு திட்டமாகும்.

இதுபோன்ற திட்டங்களை இந்த அரசு இன்றல்ல; நான் முதல் முறையாக முதலமைச்சராக ஆன அந்தக் காலந்தொட்டு இதுவரையிலே தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. கண்ணொளி வழங்குகின்ற திட்டம் பரவலாக தமிழகம் முழுவதும் நடத்தப்படுகின்ற திட்டம். கை ரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா இலவசமாக வழங்கிய திட்டம் இந்த அரசு அறிமுகப்படுத்திய திட்டம். தொழுநோய் இரவலர் ஏறத்தாழ 4 ஆயிரம் பேர், 5 ஆயிரம் பேருக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரவலர் விடுதிகள், மறுவாழ்வு இல்லங்களை அமைத்து அவர்களைப் பராமரித்து வருகின்ற திட்டம்; அப்பொழுது, 1976-க்கு முன்பே ஆரம்பித்து தொடர்ந்து நடந்துவருகின்ற திட்டம். ஏழைப் பெண்களுக்கு திருமண உதவி, மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவாக நடத்தப்படுகின்ற திட்டம். சமத்துவபுரம் திட்டம், நீங்கள் அனைவரும் பாராட்டிப் பேசி இருக்கின்றீர்கள்.

ஆதிதிராவிட மக்களுக்கு இந்தியாவிலே முதன் முதலாக இலவசமாக கான்கிரீட் வீடு கட்டிய திட்டத்தை தமிழகத்திலே தி.மு.க. ஆட்சியிலேதான் நாம் அறிமுகப்படுத்தினோம். (மேசையைத் தட்டும் ஒலி). குடிசை மாற்று வாரியம், முன்பெல்லாம் குடிசை மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது; அதை மாற்றி, மேம்பாடு ஒரு பக்கம் நடைபெறட்டும்; Slum Clearance - இருக்கின்ற குடிசைகளை அகற்றிவிட்டு, அங்கு மாடி வீடுகளைக் கட்டித்தருவது; குடிசைவாசிகளுக்கு இந்தத் திட்டம், இந்தியாவுக்கு வழிகாட்டுகின்ற முறையிலே தமிழ்நாட்டிலேதான் தொடங்கினோம்.

+2 மாணவர்களுக்கு bus pass இலவசமாக வழங்குகின்ற திட்டம் இப்படிப் பல திட்டங்கள் ஏழையெளிய மக்களை அடிப்படையாக வைத்து நடத்தப்படுகிற திட்டம். எப்படி மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாவை

அகற்றினோமோ, அதைப்போல மனிதக் கழிவுகளை அகற்றுகின்ற இழி நிலையை மனிதனிடமிருந்து விலக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இந்த ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எல்லாவற்றையும் எதிர்த்துப் பேசிய சிலபேர், - பல பேர் பாராட்டியும் குறையும் சொல்லிப் பேசி இருக்கின்றீர்கள்; அது வேறு விஷயம்; எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமே என்று எதிர்த்துப் பேசியவர்கள் - இந்தத் திட்டத்தையாவது ஆதரிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் அதையும்கூட ஆதரிக்கவில்லை.

ஒரு நல்ல Parliamentarian என்பது பற்றி A.T. பன்னீர்செல்வம் அவர்கள் ஒரு தடவை சொல்லி இருக்கிறார். அவரை ஒருவர் கேள்வி கேட்கிறார். 'நீங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கிறீர்களே; நீங்கள் ஆக்கபூர்வமாக என்ன செய்தீர்கள்' என்று, ஆக்கபூர்வமாக செய்த காரியங்களை எல்லாம் சொல்கிறார். திடீரென்று கேள்வி கேட்கிறார் செய்தியாளர். 'அரசு ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தருகிறது என்று சொன்னால், அதை நீங்கள் ஆதரிப்பீர்களா' என்று கேட்டார். உடனே, A.T.P. சொன்னார், 'ஆதரிப்பேன். ஆதரித்துவிட்டு, வீடு கட்டித் தந்தால் மட்டும் போதாது; ஆளுக்கு 200 ரூபாய் கொடுக்க வேண்டும் அப்படீன்னு சொல்லுவேன்' என்று சொன்னார்.

அதுமாதிரி, நீங்கள் ஆக்கபூர்வமாகச் சொல்லுங்கள்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஓர் எதிர்க்கட்சி அந்தமாதிரி ஆக்கபூர்வமாக ஈடுபடலாம். ஆனால் இருக்கிற எந்தத் திட்டத்தையுமே, ஒரு நல்ல திட்டத்தைக்கூட ஆதரிக்காமல், இந்த ஆளுநர் உரை வெறும் வெற்றுத் தாள்; வெறும் காகிதம் என்றால் காகிதத்தில்தான் அச்சடிக்க முடியும்; என்ன, currency note-லேயே அச்சடிக்க முடியும் ? (சிரிப்பு) currency note-லே அச்சடிக்கப்பட்ட ஆளுநர் உரை அல்ல இது; இது காகிதத்திலேதான் அச்சடித்து இருக்கிறோம். ஏழையெளிய மக்களுடைய இரத்தத்தைத் துடைக்க, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) காலங்காலமாக இருந்து வருகின்ற இழிவைப் போக்க, மகாத்மா காந்தியடிகள், தந்தை பெரியார் - இவர்கள் எல்லாம் எதற்காகப் பாடுபட்டார்கள் ? மனிதனுடைய இழிவுகள் நீக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டார்கள்; அவர்களுடைய

சுயமரியாதைக்காகப் பாடுபட்டார்கள். அதை மனதிலே வைத்துத்தான் இந்தத் திட்டத்தை நான் அறிவித்து இருக்கிறேன். இந்தத் திட்டம்பற்றி நேற்றையதினம் தினமணி பத்திரிகையிலே டாக்டர் வா.செ. குழந்தைசாமி, முன்னாள் துணைவேந்தராக அண்ணா பல்கலைக்கழகத்திலும், இந்திரா காந்தி பல்கலைக் கழகத்திலும் பணியாற்றிய பெருந்தகை சொல்கிறார் :

"இந்த ஆண்டு ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சங்கள் பல இருக்கலாம். ஆனால், என் நெஞ்சைத் தொட்ட ஓர் அறிவிப்பு, இனம் அறிய இயலாத ஒரு மனநிறைவு, அங்கம் முழுவதும் அலைபோலப் பரவச் செய்த ஒரு பிரகடனம், 'மனிதக் கழிவுகளை மனிதன் சுமக்கும் அவலம் தமிழ் மண்ணிலே இருந்து விரைவில் மறையும்' என்பதுதான். மாந்தர் கழித்ததை மாந்தர் சுமக்கும் அவலத்தை அகற்றும் இந்த முடிவு ஒரு நிகழ்ச்சியை என் நினைவிற்குக் கொண்டு வருகிறது. 1989-90 நிதி ஆண்டில் கலைஞர் தலைமையில் நடந்த தமிழகத் திட்டக் குழுக் கூட்டம் ஒன்றில் இக்கொடுமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டு, அப்போது மைய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன் தேசிய அளவில் இந்தப் பழக்கத்தை ஒழிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதாக முதல்வர் கலைஞரிடம் கூறினார். எனவே, அதைப்பற்றிக் குழு விவாதிக்கவில்லை. பின்னர் மைய அரசு கவிழ்ந்தது. மாநில அரசும் கலைக்கப்பட்டது. இந்தச் சாபக்கேடு தொடர்ந்தது.

கங்கை வெள்ளமும் கழுவ இயலாத இந்தக் களங்கத்தைத் தலைமுறை தலைமுறையாகச் சுமந்து, வயிற்றைக் கழுவி, வாழ்க்கை நடத்தும் அப்பாவி மக்களின் உள்ளக் குமுறல்களின் உருவகமாக அமைந்ததுதான் பின்வரும் கவிதை" என்று அவர் எழுதிய கவிதையில் 4 வரி மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்.

"மாந்தர் கழித்தலை மாந்தர் சுமந்திடும்
வாழ்வு தொடர்ந்திடும் நாட்டினிலே,
போந்த சுதந்திரம், பேசு சமத்துவம்
பொய்யடா; யாவையும் ஏட்டினிலே.

இந்த ஆண்டு முதல் மனித இனத்தையே மாசுபடுத்தி வந்த ஓர் இழிவு மறைகிறது. தன்மான உணர்வுள்ள சமுதாயம் தலை குனிய வேண்டிய ஒரு மாசு அகல்கிறது. தமிழ்ச் சமுதாயத்தின் சரிதையில் கறை படிந்த பக்கம் கடந்த காலச் செய்தியாகிறது. ஆளுநர் உரையில் ஒரு நீண்ட வாக்கியத்தின் சிறு பகுதியாக மட்டுமே இடம்பெற்றிருக்கும் இந்த அறிவிப்பு, ஒரு சாதாரணத் திட்டம் அன்று; தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம். வரலாறு பதிவு செய்யத் தவறாது. இதன் தாக்கம் மற்ற மாநிலங்களிலும் எதிரொலிக்கும். வைதீக மொழியில் கூறுவதானால், வைக்கம் வீரரின் ஆவி வாழ்த்தும்." (மேசையைத் தட்டும் ஒலி) - என்று குழந்தைசாமி அவர்கள் இப்படி ஒரு நற்சான்றை தினமணிப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். இதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிட வேண்டும் இதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர் களுக்கு கழிவைச் சுமக்கின்றவர்களுக்கு மாற்று வேலை தருகின்ற திட்டத்தினை வெகு விரைவிலே இந்த அரசு அறிவிக்கும். 6, 7 மாதங்களுக்குள்ளாக இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடிப்போம் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக, திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். என்மீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை, இந்த அரசுமீது அவருக்கு இருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தினார் இஸ்லாமியர் சமுதாயத்தின் மீது, சிறுபான்மையின சமுதாயத்தின்மீது, அது இஸ்லாமியராக இருந்தாலும் கிறிஸ்துவராக இருந்தாலும், சிறுபான்மையினருக்கு என்றைக்கும் தி.மு.க. ஆட்சி துணையாக இருக்கும்; இன்னும் சொல்லப்போனால் அமைந்திருக்கின்ற தி.மு.க. கூட்டணி என்றைக்கும் துணையாக இருக்கும் என்ற உறுதியை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் சார்பிலும், இங்கே வீற்றிருக்கின்ற மற்ற தோழமைக் கட்சிகளின் சார்பிலும், நான் திரு. இலத்தீப் அவர்களுக்கும், இஸ்லாமிய சமூகத்தினருக்கும் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.


இங்கே யாரும் சிறுபான்மையினச் சமுதாயம் சீரழிக்கப்பட வேண்டும்; சீர்குலைக்கப்பட வேண்டும்; வன்முறைக்கு ஆளாக்கப்பட வேண்டுமென்கிற எண்ணத்தை ஏற்றுக்கொள்பவர்கள்

அல்ல. திரு. இலத்தீப் அவர்கள் சொன்ன ஒரே ஒரு குறை, தீவிரவாதிகளை வேட்டையாடுவது என்கின்ற பெயரால் அப்பாவி மக்களைத் துன்புறுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இதை எடுத்துச்சொல்லச் சொல்ல - காவலர்கள் அதில் எவ்வளவு நிதானமாக நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வளவு நிதானமாக நடக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்ன உதாரணத்தைத்தான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பள்ளி வகுப்பில் ஆசிரியருடைய பேனா காணாமல் போய்விட்டது என்றால் அவர் உடனே இவன்தான் எடுத்திருப்பான் என்று 2 பேரைக் கூப்பிட்டு, 'நீதான் எடுத்தாய்' என்று சொன்னால் வம்பு வரும். அதற்காக என்ன செய்வார் என்றால், அந்த ஆசிரியர் எல்லா பையன்களும் கையிலே வைத்திருக்கிற பையைத் திறந்து காட்டுங்கள் என்று சொல்வார். எல்லோரும் கையில் உள்ள பையைத் திறந்து காட்டுவார்கள். அப்போதுதான் மற்றவர்களுக்கு இவர்மீது கோபம் வராது. நம்மைத் திருடன் என்று நினைத்துவிட்டாரே என்று கோபம் வராது. எல்லோருடைய பைகளையும் திறந்து பார்த்து, உண்மையான திருடனைக் கண்டுபிடிப்பதைப்போல, சில காரியங்கள் தமிழகத்திலே காவல் துறைமூலம் நடைபெற்றிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக இஸ்லாமியப் பெருமக்களானாலும் சரி, கிறிஸ்தவப் பெருமக்களானாலும் சரி, மனம் வருந்தத் தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியா முழுவதும் ஆங்காங்கே நடைபெறுகின்ற வன்முறைகள், சிறுபான்மையின சமுதாயத்திற்கு இப்போது அறைகூவல் விடுகின்ற முறையிலே நடைபெறுகின்ற வன்முறைகளையெல்லாம் இந்த மாமன்றம் கண்டித்திருக்கிறது. நம்முடைய மணி அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பேசும்போது விலைவாசி உயர்வைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். பீகார் அரசு கலைப்பைக் கண்டிக்கவில்லை என்று சொன்னார்கள். நான் கண்டிப்பேன். வெளியிலேயும் கண்டிப்பேன், உள்ளேயும் கண்டிப்பேன். ஆளுநர் உரையின்

மூலமாகக் கண்டிக்க வேண்டிய அளவிற்குத்தான் கண்டிக்க முடியும் என்பதை மணி அவர்கள் உணராதவர் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உரைக்கு நன்றியுரை பகர்ந்தவர்களுக்கும், கருத்துரை பகர்ந்தவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்து இந்த அளவில் அமைகின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி.)



உரை : 24 நாள் : 09.03.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில், என்னையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் தவிர்த்து 37 பேர் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கின்றார்கள். அதிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர், தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்தவர்ள் 8 பேர், மற்றவர்ள் 19 பேர் - மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 10 பேரும் இரண்டு மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த 8 பேரும் இரண்டேகால் மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். இந்த விவாதத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டசபையிலே நாலைந்து நாட்களாகப் புயல் அடித்தது, அடித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் புயலுக்கு மாறாக அவருடைய பேச்சு தென்றலாக அமைந்து நமக்கெல்லாம் தெம்பூட்டி யிருக்கின்றது.

பொதுவாக, தமிழ்நாட்டு மக்கள், சட்டமன்றத்திலே எது நடக்கிறது, யார் எதை, எப்படி பேசுகின்றார்கள், அதனால் யாருக்கு என்ன பலன் என்பதையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். சட்டமன்றத்திற்குள்ள அந்தச் சிறப்பான தனி உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு, எதை வேண்டு மானாலும் பேசலாம், பொத்தாம்பொதுவில் புழுதி வாரித் தூற்றலாம் என்றால், மக்கள் மன்றம் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்காது. குறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது, அதனைக் களைந்திடல் வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன்

எடுத்துரைக்கும்போது அதுபற்றிய உண்மையை அறிய விசாரணை நடத்திடல் வேண்டும். நடவடிக்கை எடுத்திடல் வேண்டுமென்ற அக்கறை உள்ளவன் நான் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக, இந்த அவையில் உள்ளவர்கள் அறிவீர்கள்.

இதுவரை நடந்து வந்துள்ள நிகழ்வுகளை கவனித்தால் இந்த உண்மை நிச்சயமாக விளங்கும் என்றே நான் நம்புகிறேன். ஜனநாயகத்திலும் ஜனநாயகத்தின் காப்பகமாக விளங்கிடும் சட்டமன்றத்திலும், நாம் எல்லோரும் மிகுந்த நம்பிக்கையும், ஈடுபாடும் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இங்கே வந்து அமர்ந்து நாட்டு நலத்திற்கும், வளத்திற்குமாக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது பற்றிப் பேச அவையிலே போதுமான இடம் இல்லை என்ற காரணத்தால்தான் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்து அவர்களுக்காகப் பேச, வாதாட, விவாதிக்க இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, இங்கே பேசுகின்றவர்கள் யாராக இருந்தாலும், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் அல்லது எதிரிக் கட்சியாகவே இருந்தாலும்கூட, நாம் பேசுகின்ற விஷயங்கள் நாட்டுக்கு, தொகுதிக்கு, மக்களுக்கு, எந்த அளவிற்கு பயனுள்ளதாக பலன் தருவதாக இருக்கும் என்பதை முடிவு செய்து கொண்டு பேசுவதுதான் மக்களாட்சியின் மாண்புக்கு நாம் செலுத்திடும் மரியாதையாக அமைந்திடும் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நானோ, இங்கே உள்ள அமைச்சர்களோ, ஆளும் கட்சி உறுப்பினர்களோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களும் இல்லை. விமர்சனத்திற்குப் பயந்து ஒளிந்து கொள்கிறவர்களும் இல்லை. பொது வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம். எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற அளவில்தான், செய்யப்படுகிற விமர்சனங்கள்தான், தரம் உள்ளவையாக இருந்தாலும், தரம் தாழ்ந்தவையாக இருந்தாலும் 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்று எல்லாவற்றையும் அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல பொறுத்துக்கொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதில் எள் முனையளவும் பிசகாமல் நாங்கள் நடந்து வருகிறோம். அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர பகைவர்களும் இல்லை என்று பேரறிஞர் அண்ணா சொன்னது

கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல. அரசியலில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும்தான். நண்பர்களாக இருக்கும்போது போற்றிப் பாராட்டிப் புகழ்வதும், எதிர் முகாமிற்குச் சென்றதும் இல்லாததைப் பொல்லாததைப் பேசுவதும்தான் அரசியல் என்று ஆகிவிட்டால் பொது வாழ்க்கை என்பதே வெறும் போர்வையாக ஆகிவிடும், அதுமாத்திரமல்ல, அரசியல், பொது வாழ்க்கை என்றாலே மக்களிடம் கசப்பும், வெறுப்பும் ஏற்பட்டு விடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே, நாம் அனைவரும் இவற்றையெல்லாம் கவனமாகக் கருத்திலே கொண்டிட வேண்டுமென்று விரும்புகின்றேன், கேட்டுக்கொள்கின்றேன். அந்த அடிப்படையிலே இங்கே நடைபெறுகின்ற வாதப் பிரதிவாதங்கள் அமைய வேண்டும் என்பது என்னுடைய விழைவு. வாதப் பிரதிவாதங்களில் சில நேரங்களில் சூடு பறந்து, சில நேரங்களில் விரசம் தலைகாட்டி, கவலைக்கு உள்ளாக்கியது என்றாலும்கூட, ஒருசிலர் மிகுந்த கவனத்தோடு, எச்சரிக்கையோடு தங்களுடைய வாதங்ளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல செய்திகளை இங்கே எடுத்துக்கூறி, இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நீக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் ஒரு முறை அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் அறிக்கை பற்றி தொடக்கத்தில் எடுத்த எடுப்பில், இது ஒரு ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொல்லி பத்திரிகையிலே அந்த செய்தி வெளிவந்தது. அதை நான் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறேன். 'அக இருள் அகற்றி அறிவு ஒளி வீசச் செய்யும் இடம்தான் கல்லூரி' - அவர் சொன்னது - கல்லூரியினுடைய ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொன்னார். கல்லூரி என்பது சாதாரணமானது அல்ல. அவர் கல்லூரியைக் கேவலமாக எண்ணி சொல்லியிருக்கமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அக இருள் அகற்றி அறிவு ஒளி வீசச் செய்யும் இடம்தான் கல்லூரி, அங்கு சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மாணவர்கள் தேர்ச்சி அடையக்கூடிய பணி மேற்கொள்ளப் படுகிறது. அதேபோல இப்போது தமிழகத்திலே, கல்வியிலே

கணினியினைப் புகுத்தி, சமூக ஒற்றுமைக்கு சமத்துவபுரங்களை நிறுவி, கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, மக்களின் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு, வரும் முன் காப்போம் போன்ற திட்டங்களால் இந்த ஆண்டில் தமிழகம் அடைந்துள்ள மேம்பாடுகளை உள்ளடக்கிய ஆளுநர் உரையின் சிறப்பை, ஒரு கல்லூரியின் ஆண்டு அறிக்கைக்கு ஒப்பிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) சுருக்கமாக, அதேநேரம், மிக சிறப்பானதாக அவர் எடுத்துரைத்தது, அதுபோல வேறொரு வாழ்த்துரையை நாம் எங்கும் காண இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஆண்டறிக்கைத்தான். நான்கு ஆண்டு காலம் ஆண்டு இப்போது தரப்படுகின்ற அறிக்கைதான் இந்த அறிக்கை என்பதையும் நான் அவர்களுக்கு கூற விரும்புகின்றேன்.

ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது என்ற ஒரு கேள்வி. சில விஷயங்களைப் பாராட்டி நம்முடைய பழனிசாமி போன்றவர்கள் - சுப்பராயன் அன்றைக்கு என்ன ஒன்றுமே இல்லை இதிலே உள் வாங்குவதற்கு - உள் வாங்குவது என்பது அவருக்கே உரிய ராயல்டி வார்த்தை - இதிலே உள் வாங்குவதற்கு என்ன இருக்கிறது என்று அன்றைக்கு அவர் கேள்வியை எழுப்பினார்கள். ஆளுநர் உரையில் ஒன்றுமே இல்லை என்கின்ற விவாதம் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து பல பேரால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழ் எழுத்தாளர்களுக்கு குறள்பீட விருது, இது நம்முடைய அருமை நண்பர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் ஒரு புத்தக வெளியீட்டு விழாவிலே எடுத்துச்சொன்னார்கள். ஞானபீட விருது தரப்படுவது போல இங்கேயும் ஒரு பீடம் ஏற்படுத்தி ஒரு விருது தர வேண்டும். அந்த விருதை வழங்குகின்ற அகடமிக்கு முதலமைச்சர் தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளே இருந்து எதிர்க்கட்சிகள் சொல்வதை மாத்திரம் அல்ல. வெளியிலே இருந்து எதிர்க்கட்சிகள் மூலமாக தரப்படுகின்ற கருத்துகளைக்கூட 'உள்வாங்குகின்ற' அரசுதான் இந்த அரசு என்பதற்கு அடையாளமாகத்தான்

அவருடைய விருப்பப்படி நானே தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டு குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப் பலகை ஒன்றை நிறுவி இருக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே உருது அகடமி அமைக்க 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 15 இலட்ச ரூபாய் இப்போது முன்பணமாக அதற்கு வழங்கப்பட இருக்கிறது. சமூக சீர்திருத்தத் துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தி அன்றைக்கு இங்கே பேசப்பட்டது போல பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப மூடநம்பிக்கைகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நாம் முனைந்திருக்கிறோம்.

ஏகபோகக் கொள்முதல் முறையின்கீழ் மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். கடந்த கால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று அமைக்கப் பட்டு, 10 மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலங்கள் தரிசு நில மேம்பாட்டுப் பணி முடிக்கப்பட்டு விட்டது. வரும் ஆண்டில் சுமார் 30,000 எக்டேர் நிலப் பரப்பு மேம்பாட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடை வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் புதிய கொள்கையை உருவாக்க வேண்டுமென்று மாநில திட்டக் குழுவை நான் கேட்டுக்கொண்டு அந்த முயற்சியிலே மாநில திட்டக் குழு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. வருகிற நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் இடம்பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

100 நகர்ப்புற மையங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப் பட்டுள்ளன. உழவர் சந்தையைப் பற்றிப் பேசப்பட்டது. நல்ல திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வேறு சிலரும் இங்கே பேசி அதிலே உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றி தெரிவிக்கின்றேன். குறைகளே இல்லையென்று நான் சொல்ல மாட்டேன். எதிலும் குறை இருக்கிறது. சந்திரனுக்கேகூட களங்கம்

இருக்கிறது. அதுபோல எந்த திட்டமாக இருந்தாலும் குறைகள் இருக்கும். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உழவர் சந்தை தொடங்கப்பட்டது நவம்பர் மாதம், 14ஆம் தேதி மதுரையில். பேரவைத் தலைவர் அவர்கள் முன்னிலையில் இந்த உழவர் சந்தை தொடங்கப்பட்டது. இதுவரையில் 27 சந்தைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவை பல தேதிகளில் தொடங்கப் பட்டிருக்கின்றன. இந்த 27 உழவர் சந்தைகளில் 8-3-2000 வரை, நேற்று வரை, விற்பனையான காய்கறிகளின் மதிப்பு 11,08,31,708 ரூபாய் என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். விற்பனையினுடைய அளவு எத்தனை கிலோ காய்கறிகள் என்றால் 1,89,32,086 கிலோ காய்கறிகள் விற்பனையாகி இருக்கின்றன. இதிலே பயன்பெற்ற விவசாயிகள் - பயன்பெற்ற விவசாயிகள் என்றால் வந்தவர்களே மறுநாளும் வரக்கூடும், ஆனால் தொடர்ந்து வந்தவர்கள், திரும்பத்திரும்ப வந்தவர்கள் என்ற கணக்கைப் பார்த்தால் 1,55,998 விவசாயிகள். பயன்பெற்ற பொது மக்கள், அவர்களும் திரும்பத்திரும்ப வந்திருக்கக்கூடும். அந்தக் கணக்கைப் பார்த்தால் 68,32,673 பேர் பொது மக்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். மேலும் 73 உழவர் சந்தைகள் விரைவிலே தொடங்கப்பட இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மதுரையிலே 17 கோடி ரூபாய் செலவிலே நெல் விற்பனை அங்காடி அமைக்கும் பணி தொடங்கப்பட்டாகிவிட்டது. திருச்சியிலே 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வெல்ல விற்பனை அங்காடியினுடைய பணியும் தொடங்கப்பட்டு விட்டது. பெருந்துறையில் 30.89 கோடி ரூபாய் செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி பணி தொடங்கப்பட்டுவிட்டது. அதுபற்றி நேற்றைய தினம் நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் சிலாகித்து நன்றி கூறி பேசினார். நல்ல நேரத்திலே நான் இல்லாமல் போய்விட்டேன். அதற்கு நான் வருந்துகிறேன். பிறகு கேள்விப் பட்டேன். படித்துப் பார்த்தேன் பேச்சை. அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

தரமணியில் 338 கோடி ரூபாய் செலவிலே டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படுகிறது. 10 இலட்சம் சதுர அடி கொண்ட அந்தப் பூங்காவிற்கு மே மாதத்திலே திறப்பு விழா நடைபெற

இருக்கிறது என்பதையும் பெருமையோடு இங்கே கூறிக்கொள் கின்றேன்.

தீப்பிடிக்காத கல்நார் வீடுகள், மாநகராட்சிகளிலே இந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட இருக்கிறது. 19 கிலோ மீட்டர் நீளம் உள்ள சென்னை புறவழிச்சாலை, இந்த ஆளுநர் உரையிலே அந்தத் திட்டம் இடம் பெற்றிருக்கிறது. 213 கோடி ரூபாய் செலவிலே சென்னையைச் சுற்றியுள்ள ஆரச்சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. அரசு மேல்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் கணினி வசதிக்காக, இதுவரையிலே 666 மேல்நிலைப் பள்ளிகளிலே கணினிப் பயிற்சிக்கான ஏற்பாடு நடைபெற்றதைத் தொடர்ந்து மேலும் 535 மேல்நிலைப் பள்ளிகளில் இந்த ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு முடிவடைய இருக்கிறது.

420 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு இரண்டாவது திட்டம் - Urban Development திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. மேலும், 86 சமத்துவபுரங்கள், இதுவரையிலே 64 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றிலே ஒன்றிரண்டு சமத்துவபுரங்களிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. அவற்றை எல்லாம் சரிபடுத்தியுள்ளோம். 35,000 ரூபாய் போதாது என்று சொன்னார்கள். அதைவிடக் குறைந்த செலவிலே கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எல்லாம்கூட நல்ல முறையிலே இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் கணினிமய மாக்குகின்ற திட்டம், எல்லா மாவட்டங்களுக்கும் இந்த ஆண்டு விரிவாக்கப்பட இருக்கிறது. கணினிமயம் என்பது சாதாரணமான விஷயமல்ல. இன்றைக்கு இந்தியாவிலே கணினிமயமாக்குகின்ற திட்டத்தில் தமிழ்நாடுதான் முதல் இடம் வகிக்கிறது என்பதையும் (மேசையை தட்டும் ஒலி) நான் சிறப்பாக இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நகர்ப்புறப் பகுதிகளில் 215 கோடி ரூபாய் செலவில் தெருக்களையும், சாலைகளையும் மேம்படுத்தும் திட்டம். 10 கோடி ரூபாய் செலவில் உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் நீரடிக்

கழிப்பிடங்களாக மாற்றும் திட்டம். இது சாதாரணமான திட்டமாகத் தெரியலாம். ஆனால், உலர் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதால் மலத்தைத் தலையிலே அள்ளிச் சுமக்கின்ற மனிதனுடைய விடுதலை, சமுதாய விடுதலை இதிலே தொக்கி நிற்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. 20 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்போருக்குப் பட்டா வழங்கப்படும். அரசுக்குத் தேவையில்லாத பட்சத்தில் அந்த இடம் அவர்களுக்கே உரிமையாக்கித் தரப்படும். 300 கோடி ரூபாய் செலவில் சென்னையிலே உள்ள நீர்வழிகளில் தூர்வாரும் பணி ஒரு திட்டம். அது இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தென் மாவட்டங்களில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காக உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சீத்தாராமதாஸ், தமிழக அரசின் ஓய்வு பெற்ற அதிகாரி வெங்கட்ராமன், செகரட்டரி முருகன் இவர்களைக் கொண்டு ஒரு குழு தென் மாவட்டங்களை எல்லாம் சுற்றுப் பயணம் செய்து அவர்கள் ஒரு திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். ஒரு பகுதி வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த பகுதி விரைவிலே வழங்கப்பட இருக்கிறது. அவை வழங்கப்பட்ட பிறகு என்னென்ன பணிகள் தொடங்கப்படும் என்பதை வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவிப்பேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக, ஆளுநர் உரையிலே முதல் பக்கத்திலே அல்லது இரண்டாம் பக்கத்திலே இடம் பெற்ற, அரசியல் சட்டத்திலே மாறுதல் அல்லது ஆய்வு அல்லது திருத்தம், இதில் ஏதோ ஒன்று நடைபெறும்போது, எந்தெந்த பிரச்சினைகள் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும் என்பதை வகுத்துச் சொல்லியிருக்கிறோம். 1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலையொட்டி உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியினுடைய தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாசகத்தை இங்கே படித்துக் காட்ட விரும்புகின்றேன்.

"We shall appoint a Commission to review the Constitution of India not only in the light of experiences and developments since 1996,

but indeed, of the entire post-independence period and to make suitable recommendations.

We are convinced that there is a clear case for devolution of more financial and administrative powers and functions to the States. We will take suitable steps to ensure harmonious Centre-State relations in the light of the recommendations of the Sarkaria Commission and also effect decentralisation right upto the grass roots level by activating and involving Panchayats and local bodies" என்று 1999 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தல் அறிக்கையிலே இதை இணைத்து வெளியிட்டு இருக்கிறோம். அதாவது, "1996 ஆம் ஆண்டிலிருந்து மேலும் நாடு விடுதலை பெற்றதிலிருந்து நமக்கு ஏற்பட்டு வரும் அனுபவங்கள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்வது, உரிய பரிந்துரைகளை வழங்க ஒரு நிதி கமிஷனை அமைப்போம். மாநிலங்களுக்கு மேலும் அதிக நிதி மற்றும் நிர்வாக ஆதாரங்களையும், செயல்பாடுகளையும் வழங்குவதற்கு தெளிவான நிலை ஏற்பட்டு இருப்பதை நாங்கள் நம்புகிறோம். சர்காரியா கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய, மாநில உறவுகள் இணக்கமான வகையில் அமைவதை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். மேலும் ஜனநாயக அமைப்பின் வேர்களாக விளங்கும் ஊராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களை ஈடுபடுத்தும் வகையில், அவைகளுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவோம்" என்ற தேர்தல் அறிக்கைக்குப் பிறகு 1-2-2000 அன்று மத்திய அரசினுடைய அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் - நேற்று இரண்டு நாட்களாக இங்கு பிரச்சினைக்குரியதாக ஆக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட அந்தக் கருத்து அமைச்சரவைத் தீர்மானமாக நிறைவேறியபோது உள்ள வாசகத்தைப் படித்துக்காட்ட விரும்புகின்றேன்.

"The Commission shall examine in the light of experiences of the past 50 years as to how far the existing provisions of the Constitution are capable of responding to the needs of efficient, smooth

and effective system of governance and socio-econonic development of modern India and to recommend changes, if any, that are required to be made in the Constitution within the framework of parliamentary democracy without interfering with the basic structure or basic features of the Constitution.

இதுதான் அமைச்சரவைக் கூட்டத்திலே நிறைவேற்றப் பெற்றுள்ள தீர்மானம். அதாவது "அரசமைப்புச் சட்ட மறு ஆய்வு கமிஷன் கடந்த 50 ஆண்டுக் காலமாக ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில், தற்போது உள்ள அரசமைப்புச் சட்டத்தின் அம்சங்கள், திறமையான, சுமுகமான நல்ல விளைவுகளை வழங்கக்கூடிய நிர்வாக அமைப்பின் தேவைகளை எப்படியெல்லாம் நிறைவு செய்துள்ளது என்பதைப் பரிசீலனை செய்து, நவீன இந்தியாவின் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஆய்வு செய்து, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பையோ, அடிப்படை அம்சங்களையோ குலைத்திடாத வகையில் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற வட்டமைப்புக்குள் தேவையான பரிந்துரைகளை வழங்கும்" என்று அமைச்சரவையிலே தீர்மானிக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969 ஆம் ஆண்டு பொங்கல் விழாவையொட்டி 'காஞ்சி' இதழில் எழுதிய கட்டுரையில் - அதுதான் அவர் எழுதிய கடைசிக் கட்டுரை; தம்பிக்குக் கடிதம் என்று அண்ணா கடைசியாக எழுதிய, அவர் மறைவதற்கு முன்பு எழுதிய கடிதம், தம்பிக்கு எழுதிய கடிதம், அதிலே குறிப்பிடுகிறார் -

"மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரம் பெறத்தக்க விதத்தில், இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், தம்பி, நான் எடுத்துக் கூறி வருகின்றேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கிறது என்பதில் எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி.

நமது கழகம் மாத்திரமல்லாமல் வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதை வலியுறுத்த முன்வந்துள்ளன.

அரசியல் கட்சிகளைச் சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றார்கள்.

நமது அரசு நடத்தியதால் கிடைத்திருக்கின்ற நற்பயன்களில் இதுவும் ஒன்று என்றே நான் கருதுகின்றேன்."

பொங்கலையொட்டி வெளியிடப்பட்ட 'HOME RULE' - அவர் நடத்திய ஆங்கிலப் பத்திரிகையில், 'HOME RULE' இதழில் 'HAIL THE DAWN' என்ற தலைப்பில் அண்ணா எழுதிய கட்டுரையில், "If by being in office, the D.M.K. is able to bring to the notice of the thinking public, that the present Constitution is a sort of dyarchy by the back door that would be a definite contribution indeed to the political world." அதாவது பதவியில் இருப்பதன் மூலம் இன்றைய அரசமைப்புச் சட்டம் கொல்லைப் புறமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொது மக்கள் கவனத்திற்கு தி.மு.க. கொண்டுவர முடியுமானால், அது உண்மையிலே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும் என்று அண்ணா 'HOME RULE' - லே எழுதுகிறார்.

சோவியத் ரஷ்யாவில் 1918 ஆம் ஆண்டு, பின்னர் 1924 ஆம் ஆண்டு, பின்னர் 1936 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளில் 4 முறை அரசமைப்புச் சட்டத்தினைத் திருத்தினார்கள். மன்னிக்க வேண்டம். திருத்தவில்லை, அடியோடு மாற்றினார்கள். திருத்தங்களைச் செய்யாமல், பழைய பிரிவுகளை நீக்காமல், புதிய பிரிவுகளை இணைக்காமல், மாறிவரும் சூழ்நிலைகளையும், மக்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு புதிய அரசமைப்புச் சட்டங்களே சோவியத் ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசமைப்பு சட்டத்தைப் பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார் "While we want this Constitution to be as solid and as permanent in structure as we can make it, nevertheless there is no permanence in Constitutions. There should be a certain flexibility. If you make anything rigid and permanent you stop a nation's growth, the growth of a living, vital, organic people.

In any event we should not make a Constitution such as some other great countries have, which are so rigid that they cannot be adapted easily to changing conditions. Today, especially, when the world is in turmoil and we are passing through a very swift period of transition, what we may do today may not be wholly applicable tommorrow." அதாவது, இந்த அரசமைப்புச் சட்டம் கெட்டியானதாகவும், நிரந்தரமானதாகவும் அமையத்தக்க வகையில் நாம் உருவாக்கினாலும்கூட, அரசியல் சட்டங்களில் நிரந்தரமானது என்று எதுவும் இல்லை. அதில் நெகிழ்வுத் தன்மை இருக்க வேண்டும். எதையும் இறுக்கமானதாகவும் நிரந்தரமானதாகவும் அமைத்து விட்டால், நாட்டின் வளர்ச்சியையும், வாழும், உயிர்ப்பு சக்திமிக்க மக்களின் வளர்ச்சியையும் நிறுத்திவிடுகிறீர்கள் என்று ஆகிவிடும்.... ஒரு சில நாடுகளில் இருப்பதைப்போல, இறுக்கமான, மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மாற்றி பின்பற்ற முடியாததான அரசியல் சட்டத்தை நாம் உருவாக்கிவிடக் கூடாது. கொந்தளிப்பான சூழலில் உள்ள இன்றைய உலகில், வேகமாக மாறி வரும் சூழ்நிலைகளில், இன்று நாம் உருவாக்குவது, நாளையே முழுதும் பயனற்றதாகப் போய்விடும். மேலும் சொல்கிறார், "A Constitution which is unchanging and static - it does not matter how good it is - is a Constitution that has outlived its use. It is in its old age already and gradually approaching its death. A Constitution to be living must be growing, must be adaptable, must be flexible, must be changeable."

அதாவது "எவ்வளவு நல்ல அரசமைப்புச் சட்டம் என்றாலும், ஓர் சட்டம் மாறாமல் நிலைத்துவிட்டதாக இருக்குமானால், அந்த அரசமைப்புச் சட்டம் அதன் பயன்பாட்டை இழந்துவிட்டது என்று பொருள். அது ஏற்கெனவே முதுமை அடைந்துவிட்டது என்று அர்த்தம். அப்படிப்பட்ட அரசமைப்புச் சட்டம் மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாக பொருள். ஓர் அரசமைப்புச் சட்டம் உயிரோடு இருக்குமென்றால், அது வளர்ந்து வருவதாக, பின்பற்றக் கூடியதாக, நெகிழ்வுத் தன்மை உள்ளதாக, மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கவேண்டும்."

டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார் "A Constitution is not an end in itself, rather a means for ordering the life of a nation. The generation of yesterday might not know the needs of today, and if

yesterday is not to paralyse today; it seems best to permit each generation to take care of itself." அதாவது "அரசமைப்புச் சட்டம் என்பது, அதுவே முடிந்த முடிவாக அமைந்துவிட முடியாது. அது ஒரு நாட்டின் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் வழிமுறை மட்டுமேயாகும். நேற்றைய தலைமுறையினருக்கு, இன்றைய தலைமுறையினரின் தேவைகள் எவையென்று தெரிந்திருக்க முடியாது. 'நேற்றைய தினம்' என்பது 'இன்றைய தினத்தை' வலுவிழக்கச் செய்யக் கூடாது. ஒவ்வொரு தலைமுறையினரும் தமது தேவைகளுக்கேற்ப வழிமுறைகளை வகுத்துக்கொள்ள அனுமதிப்பதே சிறந்தது."

இத்தனைக் கருத்துக்களுக்கு இடையேதான். . .

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியில் சங்மாவை சேர்த்திருக்கிறார்கள் இல்லையா? சங்மாவை சேர்த்தது எந்த வகையில்? அவர் முழுக்க முழுக்க ஒரு அரசியல்வாதி. அதோடு காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்திக்கு பரம எதிரியாக இன்று கருதப்படுபவர். அவரைச் சேர்த்தது எந்த வகையில் நியாயம்? அதை ஏன் நீங்கள் எதிர்க்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விரிவான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரசமைப்புச் சட்டத்தை எந்த வகையிலேயும் மாற்றக் கூடாது என்று சொல்லப்படுகின்ற வாதங்களுக்குப் பதிலாக அது அமைந்திருக்கக் கூடும். நான்கூட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுகிறபோது மிகுந்த எச்சரிக்கையோடுதான் குறிப்பிட்டேன். அரசமைப்புச் சட்டம் மாறுதலுக்கு அப்பாற்பட்டதல்ல. அரசமைப்புச் சட்டம் மாற்றப்பட வேண்டும்தான். ஆனால், சமூக வளர்ச்சியின் தேவைக்குத் தக்கபடி முற்போக்கான திசைவழியில் மாற்றுவதா அல்லது சமூகச் சக்கரத்தை பின்னுக்கு இழுக்கிற முறையில் மாற்றுவதா என்பதுதான் கேள்வி. மத்தியிலே இருக்கிற பி.ஜே.பி. அரசு

ஒருபோதும் சமூகத்தை முன்னுக்குக் கொண்டு போகிறபடி சிந்திக்காது என்பதால் அவர்கள் அப்படி மாற்றமாட்டார்கள் என்ற அச்சத்தைத்தான் நாங்கள் தெரிவித்தோமே தவிர வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சோவித் ரஷ்யாவில் 4 முறை அரசமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப் பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். அந்த தேசத்தை உருவாக்கியவர்கள், புரட்சி செய்தவர்கள். அவர்கள் அந்தச் சட்டத்தை மாற்றி அமைத்தார்கள். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை சுதந்திரப் போராட்டத்திற்கு சம்பந்தம் இல்லாதவர்கள், மகாத்மா காந்தியை தேசத் தலைவர் என்று ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் இந்த அரசமைப்புச் சட்டத்தை மாற்றி அமைத்தால் இந்த அடிப்படையே மாறும் என்பதுதான் எங்களுடைய கருத்து. சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டு வரலாம். ஆனால், அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படையை மாற்றுவதை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைத்தான் எங்களுடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற விவாதத்திலே நாங்கள் சொன்னோம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 'விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு இராமன் சித்தப்பா' என்று சொன்னதாக ஒரு பழமொழி உண்டு. அதேபோல, அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றப்படக் கூடாது என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் கூறிக்கொண்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் இந்தக் குழுவும் போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள், சங்மாவைச் சேர்க்கலாமா என்று. நாம் இப்பொழுது விவாதிப்பது கமிட்டியிலே. . . (குறுக்கீடு).

திரு ஜே. ஹேமச்சந்திரன் : அரசமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கான ஒரு கமிட்டி உருவாக்குகிற நேரத்தில் அதுவும் நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்டு, நாடாளுமன்றம் நிறை வேற்றுகிற குழுவாக அமைவதுதானே அது சிறந்ததாக இருக்கும் என்பதை முதல்வரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சங்மாவைச் சேர்க்கலாமா என்று கேட்டார்கள். இப்பொழுது நான் சதாவதானம் எடுத்து 4 கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும். அழகிரி கேள்விக்கு பதில் சொல்லிவிட்டேன். மற்ற தலைவர்களும் கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். சங்மாவைச் சேர்க்கலாமா என்று. கமிட்டியிலே யாரைப் போடுவது என்பது பற்றியல்ல நாம் இப்பொழுது பேசிக் கொண்டிருப்பது. இப்பொழுது நான் சொல்லிக் கொண்டிருப்பது, அரசமைப்புச் சட்டத்திற்கு மாறுதல் தேவையா, இல்லையா என்ற வாதத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கமிட்டியிலே போட்டவர்களைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம்.

நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள், இது முற்போக்காக மாற்றப்படவேண்டுமென்று சொன்னார்கள். எப்படி மாற்றப்படும் என்று இப்பொழுது நான் ஒன்றும் ஜோசியம் சொல்ல முடியாது. இது நல்ல முறையில் மாற்றப்பட்டால் நாம் ஆதரிக்கப் போகிறோம், இல்லையென்றால் எதிர்க்கப் போகிறோம். நாமெல்லாம் மிக விழிப்போடு இருந்து அதை கவனித்துக் கொண்டு இருக்கப்போகிறவர்கள். அதனால் இது நமக்குத் தீங்கு அளிக்கக்கூடிய முறையில், சிறுபான்மை சமுதாயத்திற்கோ அல்லது நம்முடைய ரிசர்வேஷன் போன்ற கொள்கைகளுக்கோ எதிரானதாக, அடிப்படையை மாற்றக் கூடியதாக இருந்தால் நாம் வன்மையாகக் கண்டிப்போம் என்பதிலே எள்ளளவும் சந்தேகம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நாடாளுமன்றத்தைக் கூட்டி அல்லவா கமிட்டி போட்டு இருக்கவேண்டும் என்ற கேட்டார்கள். இந்தச் சட்டம் அந்தக் கமிஷனால் ஆலோசிக்கப்பட்டு, அது உருவாக்கப்பட்டு வந்த பிறகு நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமல் அது நிறைவேற முடியாது. கடைசி எல்லை நாடாளுமன்றம்தான். அப்படி இருக்கும்போது நாம் அஞ்சத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதை மாற்றலாம், மாற்றும்போது ஒழுங்காக மாற்றப்படவேண்டும் என்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து. அடிப்படை மாறாமல் மாற்றப்பட வேண்டுமென்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து.

ஆனால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அ.தி.மு.க. வுடைய தலைவி அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில் 'அரசமைப்புச் சட்டம் ஒரு தனிப்பட்ட கட்சி நலனுக்காக ஏற்படத்தப்பட்டதல்ல. இது பி.ஜே.பி. கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளாக இருந்தாலும் சரி, அவற்றின் நலனுக்காக அரசமைப்புச் சட்டத்தை மாற்றக்கூடாது. அரசமைப்புச் சட்டம் உண்மையிலேயே புனிதமானது. அதிலே மாறுபட்ட கருத்து எல்லோருக்கும் உண்டு. அது புனிதமானதா அல்லவா என்பது. புனிதமானதாக இருந்தால் 80 முறை அதில் கை வைத்திருக்கமாட்டார்கள். அதைத் திருத்துவதற்கு அவசரப்பட்டு எதுவும் செய்யக்கூடாது. மிகவும் கவனமாகவும், ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் மாற்றம் செய்யவேண்டும். ஆட்சியில் இருக்கும் ஒரு அரசியல் கட்சியின் சலனத்தால் ஏற்படும் கருத்துக்கும், கற்பனைக்கும் ஏற்ப அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்யக் கூடாது' என்று அம்மையார் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள். ஆனால், அதே அம்மையாரைத் தலைவராகக் கொண்ட அ.தி.மு.க. கட்சி 24-9-1996 அன்று அவர்களுடைய பொதுக் குழுவிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. 'தற்போதுள்ள ஆட்சி முறையில் தக்க மாற்றம் கொண்டு வந்து, நாட்டின் ஜனாதிபதியிடம் முழு அதிகாரம் வழங்கப்பட்டு அமெரிக்க ஜனநாயக அமைப்பைப் போன்ற, ஜனாதிபதியை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை அமையவேண்டுமென்றும், அதற்கேற்ப அரசமைப்புச் சட்டமே மாற்றப்பட வேண்டுமென்றும் இப் பொதுக்குழு கோருகிறது. அதே நிலையில், மாநிலங்களின் கவர்னர் பதவிகளெல்லாம் நீக்கப்பட்டு, மாநில ஆட்சித் தலைவர் மாநில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை உருவாகத் தேவையான மாற்றங்களை அரசமைப்புச் சட்டத்தில் செய்யவேண்டுமென்று இப் பொதுக்குழு கோருகிறது.' என்னென்ன மாற்றமோ, அது வேறு விஷயம். ஆனால், அரசமைப்புச் சட்டத்திலே மாற்றங்கள் செய்யலாம் என்று 1996 ஆம் ஆண்டு பொதுக் குழுவிலே தீர்மானித்துவிட்டு, இப்பொழுது மாற்றவே கூடாது என்று கூறுகின்ற அந்த விபரீதமான முரண்பாடுகள்கூட இன்றைக்கு நாட்டிலே காணப்படுகிற காட்சிகளாக அமைந்திருக்கின்றன.

இன்னொன்று, இதன் தொடர்பாகப் பேசிய பிரச்சினைகளில் மிக முக்கியமானது ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை. என்னையே ஒரு ஆர்.எஸ்.எஸ். என்பதுபோல் சிலபேர் இங்கே உருவகப்படுத்திப் பேசினார்கள்; அல்லது கருதிக்கொண்டு தங்களுடைய வாதத்தை இங்கே எழுப்பினார்கள். நாங்கள் முஸ்லீம் லீகை ஆதரித்தபோது எங்களையெல்லாம் வகுப்புவாதிகள் என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள்; முஸ்லீம் லீகோடு நாங்கள் உறவு கொண்டிருந்தபோது. இப்போதல்ல. ஜின்னா காலத்திலே சொல்லுகின்றேன் அந்தக் காலத்திலிருந்தே, ஜின்னா, அண்ணா என்று பேசப்பட்ட அந்தக் காலத்திலேயே முஸ்லீம் லீகில் சேர்ந்தவர்கள் எல்லாம் வகுப்புவாதிகள் என்று நாங்கள் அன்றைக்குப் புறக்கணிக்கப்பட்டோம். ஆர்.எஸ்.எஸ்-க்கு ஒன்றும் நான் வக்காலத்து வாங்க விரும்பவில்லை. இருந்தாலும் பழைய அரசியல் வரலாறுகளை நினைவூட்டுவது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்பதால் நினைவூட்ட விரும்புகின்றேன்.

1967 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில், தேர்தல் முடிவுக்குப் பிறகு பஞ்சாப், உ.பி, பீகார் ஆகிய 3 மாநிலங்களிலும், அகாலி தளம், பாரதிய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி அரசில் இந்திய கம்யூயினிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஜனசங்கம் என்பது ஆர்.எஸ்.எஸ். கட்சியினுடைய நிழல் என்று சொல்லப்படுகின்ற ஜனசங்கம், பாரதிய கிரந்தி தளம், அகாலி தளம் ஆகிய இந்தக் கட்சிகள் எல்லாம் பங்குபெற்ற அரசில் சி.பி.ஐ. கட்சி அங்கம் வகித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அணியிலே பங்குபெற மறுத்துவிட்டது. ஆனால், அந்த அரசுகளுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவை அளிக்க மார்க்சிஸ்ட் கட்சி ஒப்புக்கொண்டது. இது, 1967-ல் சட்டசபைத் தேர்தல் எல்லாம் முடிந்த பிறகு. பிறகு, 1977-ல் தேர்தல் முடிந்த பிறகு . . .

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒரு மாநிலக் குழு தீர்மானித்து, அப்படிப் பங்குபெற்றது தவறு என்று மத்தியத் தலைமை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே, அதை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அதிகாரபூர்வமான கருத்தாக எடுத்துக்கொள்ள இயலாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் அந்த அரசில் அங்கம் வகித்தார்கள் என்றுதான் சொன்னேன். அது மாநிலக் குழுவா, மத்தியக் குழுவா என்பதெல்லாம் அல்ல. அப்படிப்பட்ட அரசில் சி.பி.ஐ. அங்கம் வகித்தது என்பதுதான்; ஜனசங்கம் இருந்த அரசில்.

பிறகு, 1977-ல் கடந்த தேர்தலில் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையிலே ஜனதா அரசு அமைந்தது. ஜனதாவிலே இடம் பெற்ற கட்சிகளில் ஒன்று ஜனசங்கம் என்பதை அனைவரும் அறிவீர்கள். அந்த அரசில் வாஜ்பாய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள். மார்க்சிஸ்ட் கட்சி வெளியே இருந்து அரசுக்கு ஆதரவு கொடுத்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

1989-90-ல் வி.பி.சிங் தலைமையிலே மத்தியில் ஆட்சி. அப்போது சி.பி.எம்., பா.ஜ.க. இரண்டுமே வெளியே இருந்து வி.பி. சிங் ஆட்சியை ஆதரித்தார்கள். அத்துடன், பல மாநிலங்களில் மைனாரிட்டி பலத்தோடு அமைந்த ஜனதா அரசுகளையும் பா.ஜ.க. ஆதரித்தது. என்னவோ, தி.மு.க. மாத்திரம்தான் ஜனசங்கத்தை அல்லது ஆர்.எஸ்.எஸ்.-ஐ ஆதரிப்பதாகச் சொல்லி, ஆர்.எஸ்.எஸ் - ஐ நாங்கள் ஆதரிக்காத காலத்தில்கூட, பி.ஜே.பி.-ஐ ஆதரிக்கின்ற காரணத்தினாலேயே நாங்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்.-ஐ ஆதரிக்கிறோம் என்று சொல்லிக் குற்றம் சாட்டுகின்ற அந்தத் தன்மைக்காகத்தான் இந்த சரித்திரத்தை நான் எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

நம்முடைய அழகிரி அவர்கள், பெரியாருடைய கொள்கையிலும், அண்ணாவினுடைய கொள்கையிலும் நாங்கள் திடமாக இருக்கவேண்டம் என்பதில் ரொம்ப அக்கறையாக இருக்கிறார். பெரியாருக்கே அந்த அளவுக்கு அக்கறை இருக்குமோ, இருக்காதோ, அண்ணாவுக்கே அந்த அளவுக்கு அக்கறை இருக்குமோ, இருக்காதோ, அவ்வளவு அக்கறையாக இருக்கிறார். மூப்பனார்கூடச் சொன்னார். கருணாநிதி செய்கின்ற இந்த வேலையைப் பார்த்து பெரியாரும் அண்ணாவும்

இருந்திருந்தால் ரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்கள் என்று சொன்னார். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. குத்தூசி குருசாமி, 'விடுதலை'யிலே 'பலசரக்கு மூட்டை' என்ற தலைப்பிலே எழுதுவார். அதிலே அவர் எழுதியிருந்தார் திராவிடக் கழகத்துக்காரர்கள், பெரியார், இவர்கள் கட்டை விரல்களை எல்லாம் வெட்ட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் பேசிய காலத்தில், திராவிடக் கழகத்துக்காரர்கள் கட்டை விரல்கள் எல்லாம் வெட்டப்பட வேண்டுமென்று பேசிய காலத்தில் குத்தூசி குருசாமி, 'பலசரக்கு மூட்டை' என்ற தலைப்பில் 'விடுதலை'யில் எழுதிய அந்தக் கட்டுரை எல்லாம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

Water படத்தைப் பற்றிச் சொன்னார். என்னவோ இங்கே எல்லாம் தாராளமாகப் படம் எடுக்கிற மாதிரி. 'பராசக்தி' படத்தைப் பற்றிச் சொன்னார். 'பராசக்தி' படம் என்ன பாடுபட்டு வெளியே வந்தது, எத்தனை முறை அதற்கு தடை விதிக்கப்பட்டது! 'பராசக்தி' படம் வந்தபோது காங்கிரஸ் நண்பர்கள் தெருவுக்குத் தெரு கூட்டம் போட்டுக் கேட்டார்களே! நம்முடைய நண்பர் சின்ன அண்ணாமலை அவர்கள் 'பராசக்தி' எதிர்ப்புக்காக ஒரு அணியை அமைத்து தெருவுக்கு தெரு, சென்னையிலும் சரி, திருச்சியிலும் சரி, கோவையிலும் சரி, கூட்டம் போட்டு என்ன தெரியுமா சொன்னார்? 'பராசக்தி' படம் பார்க்க தியேட்டருக்க பெண்களே நீங்கள் எல்லாம் கையில் துடைப்பக்கட்டையோடு செல்லுங்கள் என்று பேசினார்.

அவர் மறைந்துவிட்டார். இருந்தாலும், அவர் பேசிய பேச்சு ஞாபகத்தில் இருக்கிறது. நான் அவரை ஒன்றும் இப்போது குறை சொல்ல விரும்பவில்லை. அந்த அளவிற்குப் 'பராசக்தி' படத்திற்கு எதிர்ப்பு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது தடை செய்யப்படும்; தடை செய்யப்படவேண்டும் என்றெல்லாம்கூட சொல்லப்பட்டது. ஒரு வாரப் பத்திரிகையில் 'பராசக்தி'யைத் தாக்கிப் பேசுவதை எழுதுவதற்காக ஒரு அட்டைப் படமே போட்டார்கள். 'பரப்பிரம்மம்' என்று போட்டு, ஒரு நிர்வாணப் பெண்ணை அந்த அட்டைப் படத்திலே போட்டு 'பரப்பிரம்மம் - கதை வசவு தயாநிதி' என்றே அதைச் சித்தரித்தார்கள் அந்த அட்டைப் படத்திலே. அந்த

அளவுக்கு எதிர்ப்பு 'பராசக்தி' வந்தபோது இருந்தது. அதைப்போல, 'சொர்க்க வாசல்'. 'சொர்க்க வாசல்' படத்திலே ஒரு பாட்டு, உடுமலை நாராயண கவியுடைய பாட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது அறிந்து சொல்வீரே
நன்றாய் புரிந்து கொள்வீரே"

என்று ஒரு பாட்டு. அது சென்சாரிலே அப்போது வெட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது அறிந்து சொல்வீரே
நன்றாய் புரிந்து கொள்வீரே"

என்ற அந்த வரிகள் சென்சாரிலே அப்போது வெட்டப்பட்டது.

அதற்குப் பிறகு அந்தப் பாட்டை நாராயண கவி மாற்றி எழுதிக் கொடுத்தார்.

"ஆகும் நெறி எது; ஆகா நெறி எது அறிந்து சொல்வீரே
நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

என்ற எழுத வேண்டிய நிலைமை அன்றைக்கு இருந்தது.

'காஞ்சித் தலைவன்' படத்திலே. . (குறுக்கீடு) முழுக்க முடித்துவிடுகிறேன். என் கதை முழுவதையும் முடித்துவிட்ட பிறகு உங்கள் கதையைச் சொல்கிறேன். 'காஞ்சித் தலைவன்' படத்திலே வாதாபி என்ற ஒரு ஊர். காஞ்சிபுரம் என்ற ஓர் ஊர். இரண்டு ஊருக்கும் சண்டை. வாதாபியிலேயிருந்து படையெடுத்து வருகிறவன் "வெல்க வாதாபி, வெல்க வாதாபி" என்று சொல்லிக் கொண்டு வருகிறான். காஞ்சிபுரத்திலேயிருந்து படையெடுத்துப் போகிறான் நரசிம்மவர்மன். அவன், "வெல்க காஞ்சி, வெல்க காஞ்சி" என்று பாடக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். வெல்க காஞ்சி என்று சொன்னால் அது அண்ணாவைக் குறிக்கும் என்று சொல்லி, சென்சாரிலே கட். அதை மாற்றிப்போடச் சொல்லி விட்டார்கள் "வெல்க நாடு, வெல்க நாடு" என்று. அதுவும் நாடுதான். இதுவும் நாடுதான். எந்த நாடு வெல்வது? இருந்தாலும், வெல்க நாடு என்று மாற்றிப் போடச் சொன்னார்கள்.

'திரும்பிப் பார்' படத்திலே, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் மீது இருக்கும் - தலைவர்களே, திரும்பிப் பாருங்கள். அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி

விழுந்திருக்கிறீர்கள்" இது ஒரு வசனம். அது வெட்டு. ஏன் என்று கேட்டால், சொல்கிறார் சென்சார் ஆபிசர், 'திருக்கோஷ்டியூர் கோவில் கோபுரத்திலே இராமானுஜாச்சாரியார் ஏறி நின்று, குதித்துக் கீழே விழுந்து செத்துப் போய்விட்டார். அதனால் நீ அவரைக் கிண்டல் பண்ணுகிறாய்' என்று சொன்னார். நான் எழுதியது, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் மேல் இருக்கும் தலைவர்களே, திரும்பிப் பாருங்கள். அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள், திரும்பிப் பாருங்கள்." அதை ஏற்றுக்கொள்ளவில்லை அன்றைக்கு இருந்த சென்சார். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையிலேதான் அப்போது படம் வெளிவர முடிந்தது. இப்போது உள்ள இந்தக் கஷ்டங்களைப் பார்க்கும்போது அந்தக் கஷ்டங்களெல்லாம் சாதாரணமானவை என்று யாரும் கூறிவிட முடியாது.

திரு. ச. அழகிரி : தலைவர் அவர்களே, எவ்வளவு சிரமங்கள் இருந்தபோதும், 'பராசக்தி' படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி 'பராசக்தி' படத்தை நீங்கள் எடுப்பதற்கு அனுமதி மறுக்கவில்லை, தடை செய்யவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கிற பாரதிய ஜனதா அரசாங்கம் 'வாட்டர்' படத்தை எடுப்பதற்கே இங்கே அனுமதிக்கவில்லை. அந்த மாநிலத்திலே அவர்களால் திரைப்படமே எடுக்க முடியாமல், வேறு மாநிலத்தை நோக்கி ஓடியிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோதுதான் அதை நான் தவறு என்று சொன்னேன். அதற்காக நீங்கள் கேட்கவில்லையே என்றுதான் நாங்கள். . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பிரச்சினை அத அல்ல. அரசாங்கம் அனுமதித்தது. ஒரு சாரார் அதை எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான் பிரச்சினை. அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. வெளிநாட்டுக்காரர் வந்து படம் எடுக்கிறார். அதை இந்திய அரசாங்கம் அனுமதித்துவிட்டது. அதாவது, பி.ஜே.பி. அரசு அனுமதிக்கவில்லை என்று சொல்வது தவறு. அனுமதித்துவிட்டது. இங்கே உள்ளவர்கள் அது தங்களைப் புண்படுத்துகிறது என்று சொல்லி, எதிர்க்கிறார்கள். நான் சொல்வது, கருத்துச் சுதந்திரத்தை எதிர்ப்பது முறையல்ல என்பதில் நான் அழகிரியோடு ஒத்துப்போகிறேன். அதே நேரத்தில் கருத்துச் சுதந்திரம் என்கின்ற பெயரால், எல்லாவற்றையும் சொல்லி,

மற்றவர்களின் மனதைப் புண்படுத்தவும் கூடாது. அதையும் மறந்துவிடக்கூடாது. இந்து மதத்திலே உள்ள சில தவறான நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகளையெல்லாம் ஒரு இந்துவைக் கொண்டு சொன்னால், அந்த விஷயம் வேறு. அதை இன்னொரு மதத்தைச் சேர்ந்தவனைக் கொண்டு சொன்னால், அந்த விஷயம் வேறு. இதையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும். விரிவாக நான் இதைப்பற்றிப் பேசுவது நல்லதல்ல என்பதால் விட்டுவிடுகின்றேன்.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புகின்ற படங்களுக்குக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தடை விதிக்கப்பட்டது என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த Water திரைப்படம், ஒரு விதவையான இந்துப் பெண், அவள் விதவையாக இருக்கின்றபோது, தவறான வழியிலே நடப்பதற்கு நிர்ப்பந்திக்கப் படுகிறார். அதிலிருந்து மீண்டு, அவள் ஒரு பொதுக் காரியத்திலே ஈடுபடுகின்ற ஒரு சிறப்பான செயலைத்தான் ஒரு தாழ்த்தப்பட்ட சகோதரனை மணந்து கொள்கிற வகையிலே கதை போகிறது. இப்படிப்பட்ட ஒரு படமும், ஒரு சீர்திருத்த, புரட்சிகரமான படம்தான். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எந்தவகையிலே நியாயமானது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதே கேள்வியை நானும் கேட்டிருக்கிறேன். அதனால், எனக்கு முரண்பாடான கேள்வியை தீரன் அவர்கள் கேட்கவில்லை.

இங்கே உரையாற்றிய நமது குமாரதாஸ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தேசத்தைப் பற்றிய, தேசத்தின் பாதுகாப்பைப் பற்றிய ஒரு குற்றச்சாட்டு. அதனால் நான் பதில் சொல்லியே ஆகவேண்டும். அவர்கள் சொன்னார்கள், 'தமிழ்நாட்டினுடைய சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சுமார் 3 தினங்களுக்கு முன்பு மேற்குப் பகுதியின் இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் சென்னைக்கு வருகை தந்து ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். நீங்கள் இந்த விஷயத்தை மிகக் கண்ணும் கருத்துமாக கவனிக்கவேண்டும், நடவடிக்கை

எடுக்கவேண்டும். பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வழியாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது' என்று டாக்டர் குமாரதாஸ் அவர்கள் அன்றையதினம் பேசியிருக்கிறார்கள். லெப்ட்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் அவர்கள் அப்படி பேசவில்லை என்பதுதான் உண்மை. 4-3-2000 அன்று சென்னை இராணுவ அதிகாரிகள் பயிற்சி அகடமியில் நடைபெற்ற பயிற்சி நிறைவு ஆண்டு அணிவகுப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர் பத்திரிகைகளுக்கு ஓபராய் பேட்டி அளித்தார். அப்போது 'நமது நாட்டைச் சீர்குலைக்க பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. பல்வேறு வகைகளிலும் சதி செய்கிறது' என்று குறிப்பிட்டிருந்தார். "Pakistan's ISI was trying to destabilise India. Oberoi said" என்று The New Indian Express, Chennai, 5-3-2000 அன்று வெளிவந்தது. PTI -ல் கூட "Lt. Gen. Oberoi said forces like the Pakistani Inter-services Intelligence were going all out to destabilise the country in various ways and hence the armed forces had always to be fully on the guard." என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார். இதுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது. எனவே பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வாயிலாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று சொன்னதாக நம்முடைய டாக்டர் குமாரதாஸ் சொன்ன அந்தக் கருத்து தவறான கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு.) மறுக்கப் போகிறீர்களா?

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நமது மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே வேறுபடவில்லை. ஆனால் ஒரு கருத்து. பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு தமிழ்நாடு வழியாகக் கடத்தினார்கள் என்று இராணுவத் தளபதி கூறியதாக நான் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் நான் திருத்திக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் கடைப்பகுதி நெல்லை மாவட்டம் சாத்தான்குளம். திருச்செந்தூர் ஆகிய பகுதிகளிலே கடந்த 1, 1-1/2 ஆண்டுகளாக கிட்டத்தட்ட 100 முதல் 200 கோடி ரூபாய் போதைப் பொருள்கள் பிடிபட்டிருக்கின்றன என்பது பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வந்த செய்தி. அவை பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு விடுதலைப் புலிகளின்

மூலமாகக் கடத்தப்படுவதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் இலங்கையையும் தமிழ்நாட்டையும் சார்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலே விடுதலைப் புலிகளின் ஊடுறுவல் இந்தப் பகுதியிலே இருக்கிறது. போதைப் பொருள்கள் கடத்துகிற ஒரு பகுதியாக தமிழ்நாடு அமைந்துவிடக்கூடாது என்ற உணர்வின் அடிப்படையிலே சொல்லப்பட்டது. போதைப் பொருள்கள் அப்படிக் கடத்தப்படுகிற செய்திகள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வந்திருக்கின்றன என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தாகச் சொன்னால் தவறு இல்லை. Lt. Gen Oberoi அவர்கள் சொன்ன கருத்தாகச் சொன்னதால்தான் தவறு என்று நான் குறிப்பிடுகிறேன். இது உறுப்பினருடைய கருத்தாக இருக்குமேயானால் அதற்கும் என்னிடத்திலே பதில் இல்லாமல் இல்லை. மத்திய அரசினுடைய வருவாய்த் துறை, நுண்ணறிவுப் பிரிவினரும், போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவினரும் மத்திய சுங்கத் துறை அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டத்தை மத்திய உளவு பிரிவினரும், மாநில க்யூ பிராஞ்ச் பிரிவினரும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள் என்பதையும் அதனால்தான் கடத்தப்பட்ட பொருள்கள் எல்லாம் பிடிபட்டிருக்கின்றன என்ற செய்தியைக்கூட தாங்களே சொல் கிறீர்கள் என்பதையும் நான் நினைவூட்டக் கடமைப்பட் டிருக்கிறேன்.

உறுப்பினர் சொன்னதற்காக அல்ல. குறிப்பாக குற்றச் சாட்டுக்களைச் சொல்வது தவறு அல்ல. எப்படிக் குறைகளைச் சொன்னால் அதைக் களையவேண்டுமோ அதைப்போல குற்றச் சாட்டுக்களைச் சொன்னால் விசாரித்து அறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது ஒரு ஜனநாயக அரசினுடைய தார்மீகக் கடமையாகும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறன். ஆனால், குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது, ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்பது ஒரு முறை. ஆதாரமே தேவையில்லை என்ற

ஒரு வாதம் எழுப்பப்பட்டு தலைவராகிய தாங்கள் அதற்கு அன்று தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். எனவே, அதற்குள்ளேயே நுழைய நான் விரும்பவில்லை. பொதுவாக நான் இந்த அவையிலே எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்தபோது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, குறைகளையும் சொல்லியிருக்கிறேன், குற்றச்சாட்டுக்களையும் எடுத்து வைத்திருக்கிறேன். ஆனால், ஆதாரங்களோடு அந்தக் குற்றச்சாட்டுக்களை எடுத்து வைத்திருக்கிறேன்.

ஒருமுறை, மின்சார வாரியத்திற்காக எருக்கஞ்சேரியிலே நிலம் வாங்கியதிலே நடைபெற்ற ஊழலை விஸ்தாரமாக விவரித்துப் பேசும்போது, அப்போது மின்வாரியத் துறை அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் எழுந்து, என்ன ஆதாரங்களோடு பேசுகிறீர்கள் என்று கேட்டார். ஆதாரங்களை நான் அவைத் தலைவரிடத்திலே கொடுத்திருக்கிறேன்; இப்போதும் தருகிறேன் என்று சொல்லி அதுசம்பந்தமாக எல்லா பத்திரங்களையும் எடுத்து மேசைமீது வைத்தேன். அதை வாங்கிக்கொண்டு, நாளை விசாரித்து, அதைப்பற்றிப் பேசுகிறேன் என்று ஆர்.வி. அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அதை ஏற்றுக்கொண்டார்கள். அதற்குப்பிறகு விசாரிக்கப்பட்டது. விசாரிக்கப்பட்டு நான் சொன்ன குற்றச்சாட்டு உண்மைதான் என்றும் நிரூபிக்கப்பட்டது.

அதேபோல், எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, பல்கேரியா - பால்டிகா கப்பல் பேரத்தில் நடைபெற்ற சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஒன்று, இரண்டு, மூன்று என்று இருபது ஆதாரங்களை, இதே அவையிலே, இந்த இடத்திலே நான் எடுத்துவைத்துப் பேசினேன். அன்று பதிலளிக்க வேண்டிய எம்.ஜி.ஆர். அவர்கள், அவருடைய பதிலுரையை அன்றைக்கு நிகழ்த்தாமல், நாளையதினம் நிகழ்த்துகிறேன் என்று சொல்லிவிட்டு மறுநாள் வந்து அந்தப் பதிலுரையை நிகழ்த்தினார்கள். அப்போது சொன்னார்கள், எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துவைத்த அந்த ஆதாரங்களையொட்டி அந்தக் கப்பல் வாங்குகிற முயற்சி கைவிடப்பட்டு விட்டது என்று அவர்கள் சொன்னார்கள். எனவே,

எதற்கும் ஆதாரங்களை எடுத்து வைத்துப் பேசவேண்டும் என்பதற்காகத்தான் இதை சொல்கிறேனேயல்லாமல், வேறல்ல. ஆனால், இங்கே ஒரு கடத்தலைக் கண்டுபிடித்துவிட்டோம் என்பதற்காக பதவி விலகுங்கள் என்று சொல்வதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு கடத்தலைக் கண்டுபிடித்து, வெறும் டிரைவரை அல்ல; சாதாரண அப்பாவி ஆட்களை அல்ல; அதற்கு மூலகர்த்தாக்களாக இருந்தவர்களையே கைது செய்து, அவர்களுக்குச் சொந்தமான 5 லாரிகளையும் பறிமுதல் செய்து, வழக்கைத் தீவிரமாக நடத்துகிறோம். புலன் விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற போது, 'நீங்கள் பதவி விலகுங்கள்' என்று அவசரப்பட்டு சொல்வது வெறும் அரசியலுக்குத்தான் பயன்படுமேயல்லாமல், அது ஆக்கப்பூர்வமான ஒரு காரியமாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

பக்குவத்திற்கும் அமைதிக்கும் பெயர்பெற்ற பழனிசாமி கூட, அதைச் சொன்னால்தான் தன்னுடைய பேச்சு வேகம் என்று எண்ணிக் கொள்வார்கள் என்பதைப்போல, நேரு உடனடியாக பதவி விலக வேண்டும் என்று சொன்னார். நேரு பதவி விலக வேண்டுமென்று, நேரு காலத்திலிருந்தே சொல்லப்படுகிற விஷயம்தான் (சிரிப்பு). ஆனால் ஒரு குற்றச்சாட்டைக் கண்டுபிடித்து, கைது செய்ததற்காக, அந்தக் கடத்தலைத் தடுத்து நிறத்தியதற்காக, பறிமுதல் செய்ததற்காக, அதைச் செய்தவர்களை உடனடியாக பதவி விலக வேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதற்காகச் சொல்கிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தப் பிரச்சினையிலே விளக்கம் தருகிறபோது, அமைச்சர் அவர்கள், 1996-97ஆம் ஆண்டு, 1997-98ஆம் ஆண்டு என்று ஆண்டுவாரியாக புள்ளி விவரங்களைத் தந்தார்கள். 1996-97ஆம் ஆண்டு கோடிக்கணக்கான ரூபாய் அரிசி கடத்தப்பட்டது என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், இந்த அரசு முழுமையாக அந்தப் பிரச்சினையிலே ஒரு நிரந்தர தீர்வைப் பெற வேண்டும் என்று, அல்லது அந்தத் துறையினுடைய அதிகாரிகள் விழிப்புணர்வோடு செயல்படுகிறார்கள் என்று சொன்னால், 2000-2001-ஆம்

ஆண்டிலே இந்தத் தவறு நடந்திருக்கக் கூடாது. 1996-97-லே என்ன நடந்து கொண்டிருந்ததோ, அதுதான் தொடர்ந்து நான்காண்டுகளும் நடந்து கொண்டிருக்கிறது. எனவேதான் நாங்கள் சொல்கிறோம், அந்தத் துறையைப் பொறுத்தவரை, நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது என்று.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உங்கள் திருப்திக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். இப்படியே சொல்லிக் கொண்டிருக்க முடியும் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் திருப்திக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியில். . . (குறுக்கீடு).

திரு. பி.ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். உங்களுக்குப் பதில் சொல்லும் போது நீங்கள் கேட்கலாம். உட்காருங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம் : எனக்கு இனிமேல் என்ன பதில் கிடைக்கப் போகிறது? ஒன்றே ஒன்று, இந்த உணவு கடத்தலிலே C.B. C.I.D விசாரணை வைத்திருக்கிறீர்கள். இது உங்களால் ஏற்படுத்தப்பட்ட விசாரணை. நீங்களாகவே ஏற்படுத்திய விசாரணை ஒழுங்காக நடக்காது. அங்கே பெங்களூரில், அரிசி வாங்கிய ஜெகதீசன் என்பவரை இதுவரை பிடிக்கவில்லை. ஆகவே, இதிலே நீங்கள் நீதி விசாரணையை நடத்த வேண்டும்; அதை நீதிபதிகளை வைத்து நடத்த வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்தக் கடத்தலிலே ஈடுபட்டவர்களை. . .

திரு. பி.ஆர். சுந்தரம் : ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசியதை எல்லாம் பேசிவிட்டு, திரும்பவும் இப்போது பேசவேண்டும் என்றால் என்ன அர்த்தம்? உட்காருங்கள் (குறுக்கீடு).

திரு. மு. அப்பாவு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஒன்றும் அனுமதி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

திரு. மு. அப்பாவு : முதலமைச்சர் அனுமதி கொடுத்துவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி கொடுக்கவில்லை உங்களுக்கு. (குறுக்கீடு) நான் கொடுக்கவில்லை. முதலமைச்சர் கொடுக்க முடியாது. நான் கொடுக்கவில்லை. நீங்கள் எல்லோரும் குறுக்கிட்டால் நான் அவையை நடத்த முடியாது. உட்காருங்கள்.

திரு. மு. அப்பாவு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்கள் சொன்னதாலே நான் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கிடையாது, நீங்கள் ஒவ்வொருவராக எழுந்தால் என்றைக்கு நான் சட்டசபையை முடிப்பது?

திரு. மு. அப்பாவு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்றுக்கொள்கிறேன். இந்து பத்திரிகையிலே, மத்தியிலே, ஆட்சி செய்கிற மத்திய உளவுத் துறையினுடைய உயர் அதிகாரியே, தமிழகத்தில் மத்தியத் தொகுப்பிலிருந்து எடுக்கப்படுகின்ற அரிசியில் பெரும்பகுதி வெளிமார்க்கெட்டில் விற்கப்படுகிறது என்பதை அவரே சொல்லும்போது, இந்த ஆதாரம் போதாதா? என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அப்படி விற்கப்பட்ட, எடுக்கப்பட்ட, கடத்தப்படுகிற அரிசியெல்லாம் பிடிக்கப்படுகிறது. அந்த விவரத்தைத்தான், தன்னுடைய உரையில் இறுதியாக, நம்முடைய அமைச்சர் நேரு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியிலே - அவர் சொன்ன வார்த்தைகள் - அரிசி கடத்தல்கள் அப்போதும் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், அப்போது வழக்குகள் போட்டு பொருள்களைக் கைப்பற்றினார்களே தவிர, ஒருவரைக்கூட, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கவில்லையென்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கழக அரசில் நான்கு ஆண்டுக் காலத்தில் 14 பேரை, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைத்திருக்கின்றோம். ஜெயலலிதா ஆட்சியில் 18,871 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கழக ஆட்சியில் 16,991 வழக்குகள். அரிசி கடத்துவது ஒரு மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். 100 மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். இது வழக்குகளினுடைய எண்ணிக்கை. ஆனால், இந்த கடத்தலிலே சம்பந்தப்பட்டவர்கள் யாரையும் தண்டிக்கின்ற, சிறையிலே அடைக்கின்ற காரியங்கள் கடந்த ஆட்சியில் நடைபெறவில்லை. இந்த ஆட்சியிலேதான் அந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

29-11-1999 அன்று, அப்பாவு சொன்ன அதே 'இந்து' பத்திரிகையிலேதான் எழுதியிருக்கிறார்கள். பொது விநியோகத்தில் சாதாரண ரக அரிசியை நிறுத்திய அரசின் அறிவிப்பால், இதுவரை வேறு வகையிலே விநியோகித்து பலன் பெற்றவர்களுக்குத்தான் பாதிப்பே தவிர, ஏழை குடும்ப அட்டைதாரர்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது என்று. அந்த ஏழை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று 'இந்து' எழுதுகிறது. அதை ஏற்றுக் கொண்டால் இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, திரு. அப்பாவு அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ, இங்கே விலை எறிவிட்டது, விலை ஏறிவிட்டது என்ற ஒரு பிரச்சாரம். அரிசி விலையை ஏற்றி விட்டோம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம் என்று கூறுகிறார்கள். முன்பு மூன்று கிலோ, 2 ரூபாய் வீதம் கொடுத்தோம், அது 6 ரூபாய். 17 கிலோ 3.75 வீதம் கொடுத்தோம், அது 63.75 காசு, ஆக மொத்தம், 69.75 செலவழித்த ஒருவன், இப்போதுள்ள 20 கிலோ அரிசியும் ரூ. 3.50 வீதம் கொடுக்கும்போது 70 ரூபாய்தான் செலவழிக்கிறான்.

அதிகமாக 25 பைசாதான் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், 20 கிலோ அரிசியும் நல்ல அரிசியாக கிடைக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

மாநிலத்தினுடைய ஒப்பீடுகளைப் பார்த்தால்; மேற்கு வங்கத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 5 ரூபாய், கிலோ அரிசி; மேலே உள்ளவர்களுக்கு 10 ரூபாய் 40 காசு, எவ்வளவு கிலோ தருகிறார்கள் என்றால் ஒருவருக்கு 2 கிலோ அரிசிதான் கொடுக்கிறார்கள்.

கர்நாடகத்திலே 10 கிலோ அரிசிதான் கொடுக்கிறார்கள். வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 3 ரூபாய் 50 காசு, மேலேயுள்ளவர்களுக்கு 9 ரூபாய் 80 காசு.

கேரளாவிலே வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர் களுக்கு 3 ரூபாய் 90 காசு, மேலேயுள்ளவர்களுக்கு 9 ரூபாய் 60 காசு, மொத்தம் கொடுக்கிற அரிசி 10 கிலோதான்.

ஆந்திராவிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே, 3 ரூபாய் 50 காசு, மேலேயுள்ளவர்களுக்கு 9 ரூபாய் 50 காசு, 20 கிலோ தருகிறார்கள்.

தமிழ்நாட்டிலே வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ளவர் களுக்கும், மேலேயுள்ளவர்களுக்கும், 3.50 ரூபாய் வீதம் 20 கிலோ அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைக் குறை கூறுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அப்பாவு இன்னொன்று சொன்னார். கோவில்பட்டியில் ஒரு அதிகாரி T.S.O. அவர்களுடைய சாவைப்பற்றி சொன்னார். அதைப் பற்றி நான் விசாரித்தேன். ஏற்கெனவே அதுபற்றி தகவல்கள் வந்திருக்கின்றன என்னிடம். மீண்டும் அதை விசாரித்து உறுதிப்படுத்திக் கொண்டேன். கோவில்பட்டி வட்ட வழங்கல் அதிகாரி, T.S.O. ராஜகோபால் என்பவர் 7-1-1998 அன்று இரண்டு வருடங்களுக்கு முன்பு - இப்போதுள்ள பிரச்சினைகளோடு அப்பாவு இதை சேர்த்துப் பேசினார். இது 1998-ஆம் ஆண்டு பிரச்சினை. 1998-ல், தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டதுபற்றி கோவில்பட்டி

கிழக்கு காவல் நிலைய எண் 21/98, பிரிவு 174, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்களும், மற்றவர்களும் புகார் கூறியதால், இவ்வழக்கு 302 ஐ.பி.சி. பிரிவாக மாற்றப்பட்டு C.B. C.I.D. விசாரணைக்கு அனுப்பப்பட்டது. 15-2-1999 அன்று இவ்வழக்கு தற்கொலைதான் என்று முடிவு செய்யப்பட்டது. 3-1-1998 அன்று TCG 9805, TSF 5254 என்ற இரு லாரிகள் அருப்புக்கோட்டையிலிருந்து அரிசி ஏற்றிச் செல்லும்போது எட்டையபுரத்தில் அவை ராஜகோபால் மற்றும் அதிகாரிகளால் மறிக்கப்பட்டு பின்னர் கோவில்பட்டி அரிசி வியாபாரி பழனிச்செல்வம் மூலம் 13,000 லஞ்சம் பெற்றுக்கொண்டு ராஜகோபால் அந்த லாரிகளை விடுவித்தார். 6-1-1998 அன்று அருப்புக்கோட்டை அரிசி வியாபாரிகள் கோவில்பட்டி, கோட்டாட்சியரிடம் இதுகுறித்து புகார் செய்யவே, கோட்டாட்சியர் ராஜகோபாலை அழைத்து, பணத்தை திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தினார். ஏற்கெனவே 1981 ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கில் சிக்கி சிரமத்திற்கிடையே இருந்த ராஜகோபால் எவ்வாறாக பணத்தைத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று எண்ணி முயற்சி செய்ததாகவும், ஆனால் பணத்திற்கு வழி செய்ய இயலாததால் மனமுடைந்து 7-1-1999 அன்று விடியற்காலையில் தற்கொலை செய்துக் கொண்டதாகவும் C.B. C.I.D. முடிவுக்கு வந்தது என்ற விவரத்தை நான் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். நம்முடைய செல்லக்குமார் கொடைக்கானல் உட்லன்ட்ஸ் ஹோட்டல் பற்றிச் சொன்னார்கள். Change of land use. அதிலே அதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதை செல்லக்குமார் சுட்டிக்காட்டினார். இதற்கும் வேறு ஒரு கொடைக்கானல் கேசுக்கும் சம்பந்தம் கிடையாது. அது மலை, இது மடு என்பதை மாத்திரம் தம்பி செல்லக்குமாருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்கள் இன்னொன்று சொன்னார்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று ஹோட்டல்களுக்கான அனுமதியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த மன்றத்தின் மூலமாக முதலமைச்சரைக் கேட்பது, அமைச்சருடைய

தகவலுக்கு, பார்வைக்கு வராமல் ஒரு அரசாணை ஒரு அரசிலே பிப்பிக்கப்படுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசாணை பிறப்பிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை உணர்வு காரணமாக அதை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்குத்தான் நான் பாராட்டும் தெரிவித்தேன். ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், துறையினுடைய உயர் அதிகாரிகளுடைய பார்வைக்கு வந்து அதன் பிறகு அமைச்சருடைய பார்வைக்கும் வராமல் ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்க முடியாது. எனவேதான் சொல்கிறேன், நீங்கள்கூட சொல்ல முடியும் நான் ரத்து செய்து விட்டேன் என்று. நான் ஒரு சிறு உதாரணத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் ஒரு திருட்டை செய்து விட்டாலும்கூட அந்தத் திருட்டுப் பொருளை அந்த இன்ஸ்பெக்டர் கண்டுபிடித்து மீட்டுக் கொடுத்தால், நான் மீட்டுக் கொடுத்துவிட்டேன், எனவே, களவு செய்த அல்லது தவறு செய்த காவலர் தண்டனைக்கு ஆட்பட வேண்டுமா என்று ஒரு கேள்வி கேட்டால் அது எந்தவிதத்திலும் பொருத்தமாக இருக்காது. இங்கே அரசாணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. தவறு நடந்திருக்கிறது. கொடைக்கானல் பிரச்சினை என்பது இந்தியா முழுவதும் தெரிந்த பிரச்சினை. ஒரு தெரியாத பிரச்சினையிலே ஒரு தவறு நடந்திருந்தால் அது தெரியாமல் நடந்திருக்கலாம் என்று நாம் விட்டுவிட முடியும். இந்தப் பிரச்சினை நான்கு ஆண்டுகாலமாக இந்த மன்றத்திலே பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு பொதுக் கூட்டங்களிலே பேசப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, தண்டனையும் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நான் சொல்கிறேன், முதலமைச்சர் அவர்கள் இதைத் தட்டிக் கழிக்காமல் தவறு யார் செய்திருந்தாலும் அந்தத் தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தன் ராஜினாமாவை அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அவர் சொன்ன கொடைக்கானல் பிரச்சினை வேறு, இந்த கொடைக்கானல்

பிரச்சினை வேறு. நான்கு ஆண்டுகாலமாக நாட்டிலே விவாதிக்கப்படுவது இதுவல்ல. அந்த விவகாரமே வேறு; எல்லோரும் தடுத்து, செயலாளர்கள் எல்லாம் தடுத்து, அதைக் கேட்காமல் போடப்பட்ட கையெழுத்து அது. அது நீதிமன்றத்திலே ஏற்கெனவே இருந்து தண்டிக்கப்பட்ட விவகாரம். மறுபடியும் நீதிமன்றத்திலே appeal-லிலே இருக்கிற விவகாரம். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால், இதில் ஒரு செயலாளர், இன்னொரு செயலாளருக்கிடையிலே ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அமைச்சர், அந்த மாறுபாடு ஏற்பட்டதும், ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவினர் சென்று அதைப் பார்த்து விட்டு விவரம் தெரிந்து கொண்டு வந்து சொன்னார்கள். போனவர்கள், இவர்களுக்குக் கொடுக்கலாம், விதிவிலக்கு அளிக்கலாம் என்று சொன்னார்கள். அமைச்சர் அதை ஏற்றுக் கொண்டார். இந்த விவரம் எனக்குத் தெரிந்தவுடன் உடனடியாக அதைப்பற்றி விசாரிக்கச் சொல்லி, தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டு, தலைமைச் செயலாளர் அந்த உத்தரவின்படி நடந்துகொண்டு இரண்டு செயலாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஒழுங்கு நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் சொல்ல முடியும்.

அடுத்து World Tel பற்றி செல்லக்குமார் இங்கே சொன்னார். சென்ற ஆண்டே இதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்திலே பேசி இருக்கின்றோம்.

அவர் இப்போது கூறிய குற்றச்சாட்டு - அந்த நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல என்பதுதான் நான் சொல்கிற பதில். அந்த நிறுவனத்திற்கு ஏன் Global tender போடவில்லை என்று கேட்கிறார். Global tender போடுவது எது எதற்கு என்றிருக்கிறது. நேற்றையதினம்கூட மக்கள் நல்வாழ்வத் துறை அமைச்சர் இங்கே ஒரு நிகழ்வின்போது அதை விளக்கியிருக்கிறார். ஒரு தொழில் தொடங்குவதற்காக தனியாரோ - அல்லது அரசு நிறுவனத்தோடு இணைந்து கூட்டு நிறுவனமாக, joint venture அடிப்படையிலே முன்வரும்போது அதற்கு Global tender விடத் தேவையில்லை என்பது மரபு.

உதாரணமாகக் கூறவேண்டுமேயானால் (குறுக்கீடு) நான் முழுவதுமாக முடித்துவிடுகிறேன். Ford, Hyundai போன்ற

தொழிற்சாலைகள் Global tender விட்டுத் தரப்படவில்லை. இது தனியார் தொழில் தொடங்குவதற்கு உதாரணம். M.O.U போட்டு விடப்பட்டது. Joint venture -க்கு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் ஸ்பிக் தொழிற்சாலை கூட்டு நிறுவனத்திற்கு உதாரணமாகும். அதுவும் Global tender விட்டுத்தரப்படவில்லை.

இந்தத் திட்டத்தில் வெளிநாட்டு ஒத்துழைப்பு இருக்கும் வகையில் 30-11-1999 அன்று மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. World Tel நிறுவனம் 18-1-2000 அன்று மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறையிலிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்கள் ஏற்படுத்த அடிப்படைத் தேவையான தேசிய நெடுஞ்சாலைகள், மாநிலச் சாலைகள் மற்றும் இதரச் சாலைகள் வழியாக Optic Fibre Cables அமைக்கத் தேவையான அனுமதி பல்வேறு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தகவல் தொடர்பு சம்பந்தமான தாராளமயமாக்கல் கொள்கையின்படி, இணையம் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு, யார் வேண்டுமானாலும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படி இதுவரை மத்திய அரசிடமிருந்து நூறு நிறுவனங்கள் அனுமதிகளைப் பெற்றுள்ளன. அனுமதி வழங்குதலை மத்திய அரசு தாராளமயமாக்கியதன் நோக்கமே, V.S.N.L. மற்றும் Dot தவிர, மற்ற நிறுவனங்கள் இணைய சேவையை எளிதாக எல்லா இடங்களுக்கும் வழங்கிட வேண்டும் என்பதுதான்.

இந்த Optic Fibre Network என்பது மாநிலம் முழுவதும் தொலை தூரத்தில் உள்ள கிராமங்களிலேகூட இணைய வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான அதிநவீன, அதிவேகம் கொண்ட தொடர்பு சாதனமாகும். இது இணையத்திற்காகக் காத்திருக்கும் நேரத்தை வெகுவாகக் குறைத்து விடுகிறது. இந்த நிலையில், World Tel நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் இணைய மையங்களை அமைப்பதற்கு முன்வந்துள்ளது.

World Tel நிறுவனம் Optic Fibre Network-ஐ தமிழ்நாடு முழுவதும் அமைத்ததற்குப் பிறகு சேவையை கட்டாயம்

பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று யாரையும் யாரும் நிர்ப்பந்திக்க முடியாது.

V.S.N.L. என்ற நிறுவனம், நாட்டிற்கு வெளியே இணைய தொடர்பு (Internet Access) மற்றும் தகவல் இணைப்பு (Data Links) ஆகியவற்றை வழங்குவதற்கென்றே உருவாக்கப்பட்ட நிறுவனம். மாநிலத்திற்குள் தகவல் தொடர்புக்கு அடிப்படைத் தேவையான கட்டமைப்புகளை அந்த நிறுவனம் வழங்குவதில்லை. M.T.N.L. என்ற நிறுவனத்தைப் பொறுத்தவரை மும்பையிலும் டெல்லியிலும் மட்டுமே அது செயல்பட்டு வருகிறது. சென்னையில் இல்லை. DoT -ஐப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் தகவல் தொடர்பு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளைச் செய்ய இதுவரை முன்வரவில்லை. அதனால்தான், சென்னை தொலைபேசித் துறையை ஒரு நிறுவனமாக மாற்றி, அதிக முதலீடுகளைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து கோரி வருகின்றோம்.

World Tel நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்டுள்ளது ஒரு கூட்டு நிறுவன ஒப்பந்தம் மட்டுமே. இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது Tender. Bidding என்பதெல்லாம் தேவை இல்லை. மாநில மக்களுக்குப் பயன்படும் என்று தோன்றும்போது, திறன் பெற்றுள்ள எந்த நிறுவனத்தோடும் இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் (Joint Venture) செய்துகொள்ளலாம். இப்படி கூட்டு நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையோ அல்லது உருவாக்கப்படும் சேவைகளையோ, அரசோ அல்லது அரசு நிறுவனங்களோ வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே உரிமை (Non-Exclusive Basis) என்ற அடிப்படை எதுவும் இல்லாதது.

World Tel நிறுவனம் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் போல, அரசு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் எந்த நிறுவனமும், அது போன்றதொரு கூட்டு முயற்சியாகவோ தனியாகவோ ஒப்பந்தத்தை செய்துகொள்ள முன்வரலாம். இதில் ஒளிவுமறைவு எதுவும் கிடையாது.

செல்லக்குமார் சொல்லியதுபோல இன்போசிஸ், சத்தியம், டிஷ்னெட், அல்காடில், சீமென்ஸ் போன்ற நிறுவனங்கள் World Tel நிறுவனத்திற்கு இணையாக தமிழ்நாட்டில் இணைய மையங்களுக்கத் தேவையான கட்டமைப்பு வசதிகளை அமைக்க முன் வந்தால் World Tel நிறுவனத்திற்கு என்ன நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டதோ, அதோபோல அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, World Tel நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஒரு நிறுவனத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று சொன்னால், Company Law Board-ல் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும். நம்முடைய Company Law Board-லே 27-7-1999 அன்று எல்காட் நிறுவனத்தினுடைய அலுவலகத்தினுடைய முகவரியைக் கொடுத்து care of address-லே World Tel Tamil Nadu Private Limited ஒரு. . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கூட்டு நிறுவனங்களுக்கு tender விடத் தேவையில்லை. ஏன் tender விடவில்லை என்று கேட்டார்? அதற்குத்தான் இது. ஒரு நீண்ட பிரசங்கமாக வைத்தால் ஒரு நாள் தனியாகவே ஒரு விவாதம் (குறுக்கீடு) தனியாகவே World Tel பற்றி ஒரு விவாதம் வைத்துக்கொள்ளலாம். இப்போது நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. (குறுக்கீடு) tender விடத் தேவையில்லை. கூட்டு நிறுவனத்திற்குத் தேவையில்லை.

டாக்டர் அ. செல்லக்குமார் : தனியார் நிறுவனம் என்பதற்கு நான் சொல்கிறேன். 27-7-1999 அன்று Company Law Board அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய பங்குதாரர்கள் யார் என்று சொன்னால்,

1. B. H. Kothari, No.11, M.G. Road, Chennai - 34
2. Dr. N. Ravi, 302, Pinner Road, Horrow, Middlesex, HAI, 4 LB, U.K.

இவர்கள் இரண்டு பேரும்தான் பங்குதாரர்கள் என்று மத்திய அரசாங்கத்தினுடைய Company Law Board-லே பதிவு செய்யப்பட்ட சான்றுகள் அதற்கான அத்தாட்சிகளை நான் வைத்திருக்கிறேன். அதனுடைய பதிவு எண் கூட சொல்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தனியார் நிறுவனம் என்பதைச் சொல்லுங்கள். அதைப்பற்றி எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. ஒப்பந்தம் - tender call for பண்ண வேண்டிய முறை தேவையில்லை என்பது முதலமைச்சருடைய வாதம். ஆகையினால் நீங்கள் அதற்கு மேலே வாதம் பண்ணுவதற்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) என்ன செல்லப் போகிறீர்கள்? அரசினுடைய வாதம் அதிலே tender call for பண்ண வேண்டியதில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : யார் வேண்டுமானாலும் இந்த வேலையைச் செய்யலாம் என்று இருக்கும்போது அதற்கு tender தேவையில்லை. M.O.U போதும் என்பதுதான் என்னுடைய வாதம். அவ்வளவுதான் நான் சொல்வேன்.

டாக்டர் அ செல்லக்குமார் : நான் சொல்லி முடித்து விடுகிறேன். கேட்ட கேள்விகளுக்கு நான் பதில் கொடுத்து விடுகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இங்கு செல்லக்குமார் சொன்ன அந்தக் கம்பெனிகளும்கூட வரலாம். அவை வருவதற்குத் தடை கிடையாது.

டாக்டர் அ. செல்லக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் Hyundai கார் வந்ததும் Ford கார் வந்ததும் அதற்கெல்லாம் Global tender விடவில்லை என்று சொன்னார்கள். Hyundai காரோ, Ford நிறுவனமோ இங்கே அவர்கள் ஒரு தொழிற்சாலையை நிறுவியிருக்கிறார்களே தவிர வியாபார ஒப்பந்தத்தை முழுமையாக அவர்களே ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். அரசாங்கத்தினுடைய வாகனங்களுக்கு மொத்தமாக அவர்களே குத்தகை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், நாம் வைக்கப்போவது 13,000 centres வைக்கிறோம். எதற்காக? தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து நிறுவனங்களையும் கல்வி நிலையங்களையும் Internet - இணையத்தோடு இணைப்பதற்காக.

எனவே தமிழகத்திற்குரிய - நாளை - எதிர்காலத்திலே Internet இணைப்புகளைக் கொடுப்பதற்காக உருவாக்கப்படுகின்ற இயக்கம் என்கிற காரணத்தினாலே இதற்கு Global tender நிச்சயமாக வைக்கப்படவேண்டும். இது ஒரு தனிப்பட்ட முறையிலே வியாபாரம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்கள் கருத்து. அரசாங்கம் கருத்து அது அல்ல என்ற சொல்லிவிட்டார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அது அவருடைய கருத்து. அரசாங்கத்தினுடைய நிலை அது அல்ல. ஏனென்றால் யார் வேண்டுமனாலும் வரலாம் அந்தத் தொழிலுக்கு என்று இருக்கும்போது அதற்கு டென்டர்கள் தேவையில்லை என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. இந்த ஆளுநர் உரையில் மிக முக்கியமான ஒரு சீர்திருத்தமான புறம்போக்கு நிலங்களை 20 ஆண்டுகள் குடியிருந்தவர்களுக்கு, அரசுக்குத் தேவைப்படாமல் இருந்தால், அவர்களுக்கே வழங்கப்படும் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திலே இந்த அரசுக்கு நீண்டகாலமாக இருந்து வருகின்ற ஆர்வத்தினுடைய அடையாளமாகவும் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய வீடு, மனை இவற்றுக்காக நாம் ஆக்கபூர்வமாகச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறோம். இவையெல்லாம் ஒரு தொடர்கதை. நில உச்ச வரம்புச் சட்டம் 1960 ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்கின்ற அளவுக்கு அறிவிக்கப்பட்டபோது பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்த சீரிய திட்டத்தை காமராஜரையே ஏமாற்றுகின்ற அளவிற்கு அன்றையப் பலர் செயல்பட்டு நிலங்களைப் பிரித்துக்கொண்டு அதன்காரணமாக வெற்றிபெற முடியாமல் செய்தார்கள். அன்றைக்கு தமிழ்நாட்டிலே இருந்த நிலத்தில் 24,194 ஏக்கர்தான் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு 16,330 ஏக்கர்தான் கைப்பற்றப் பட்டு அதிலே ஒரு ஏக்கர்கூட உபரி நிலமாக யாருக்கும் வழங்கப்படவில்லை. அதையொட்டித்தான் 15-2-1970-ல் நான் முதலமைச்சராக இருந்தபோது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற ஒரு சட்டத்தைப் போட்டு எடுக்கப்பட்ட உபரி நிலம் 1,97,900 ஏக்கர். நிலம் அற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 1,71,673 ஏக்கர். மீதம்

உள்ள நிலங்கள் நீதிமன்றங்களிலே இன்றைக்கும் பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்துவிட்டு பிறகு 1,97,900 ஏக்கர் எடுத்தோம். 1,71,673 பேருக்கு நிலத்தை வழங்கினோம். அதிலே பயன் பெற்ற உழவர்களுடைய எண்ணிக்கை 1,37,236 பேர்.

இவர்களில் ஆதிதிராவிடர்கள் 61,985 பேர். பழங்குடி மக்கள் 204 பேர். 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு மனைச்சட்டம் என்றவொரு தீவிர சட்டத்தைக் கொண்டு வந்து 1,75,00 பேருக்குக் குடியிருப்புக்களைச் சொந்தமாக்கிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை அனைவரும் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அப்போது மதிப்பிற்குரிய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், அந்த விழா திருத்துறைபூண்டியிலே நடைபெற்றபோது - நம்முடைய பழனிசாமி அவர்களெல்லாம் ரொம்ப இளைஞர் அப்போது - அந்த விழா நடைபெற்றபோது மணலி சொன்னார்கள் "பல தோழர்களுடைய ரத்தத்தைச் சொரிந்தும் கிடைக்காத இந்த வரத்தை ஒரு துளி மையைச் செலவழித்து கருணாநிதி சட்டமாக ஆக்கியிருக்கிறார்" என்று அப்போது பேசி பெருமைப்படுத்தினார். ஆதிதிராவிடர்கள் மாத்திரம் இலட்சத்து இரண்டாயிரம் பேர் அதிலே பலன் பெற்றார்கள். இப்படி வரிசையாக நிலச் சீர்திருத்தத்திலே அக்கறைகொண்டுள்ள இந்த அரசு இப்போது பட்டாக்கள் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக, 20 ஆண்டுகள் புறம்போக்கு நிலங்களிலே குடியிருந்தவர்களுக்கு மனைப்பட்டா, அரசுக்குத் தேவைப்படாத பட்சத்தில் வழங்குகின்ற அந்தத் திட்டத்தையும் அறிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : Point of clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு இப்போது பட்டா வழங்குவதற்காகக் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தை நிச்சயமாக வரவேற்கிறோம். ஆனால், 20 ஆண்டுகள் என்று நீங்கள் வைத்திருப்பது, ஏற்கெனவே 2 ஆண்டு 3 ஆண்டுகளுக்கு முன்னால்கூட ஒருவர் வீடு கட்டிவிட்டால். அந்த இடத்திலே

இருக்கிற வீட்டையும் சென்று இடிக்கப்போவதும் இல்லை, அது அரசுக்கு வரப்போவதும் இல்லை. நம் உள்ளாட்சித் துறைகள் அவற்றிற்கு வரி போடாமல் இருந்துகொண்டு நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த 20 ஆண்டுகள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் பாலிசியைக் கொஞ்சம் நீங்கள் மாற்றியமைத்து, ஓராண்டு, ஈராண்டுகளுக்கு முன்னால் கட்டியிருந்தாலும்கூட, இனி நாம் இடிக்க முடியாதவற்றை நீங்கள் பட்டா கொடுத்துவிடுவதற்கு ஆவன செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறி விரும்புகிறேன்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு முக்கியமான விஷயம். ஒரு மாநில . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பராயன் நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். உரையிலே மாண்புமிகு முதலமைச்சர் சொல்வதிலே ஏதாவது தெளிவில்லை என்றால் விளக்கம் கேட்கலாம். நீங்கள் புதுச் சலுகையைக் கேட்பதற்கு பெயர் point of order-ஆ? இது நீங்கள் பேசும்போது சொன்னது, அதற்கு அவர்கள் பதில் சொல்கிறார்கள், பதில் இல்லை என்றால் பதில் இல்லை என்றுதான் அர்த்தம். Point of order என்று இதையெல்லாம் கேட்கக்கூடாது. நீங்கள் முறையில்லாமல் நடக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. கே. சுப்பராயன் : Point of clarification. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியென்றால் கேளுங்கள். இல்லாவிட்டால் நான் அனுமதிக்கமாட்டேன்.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 20 ஆண்டுகளாகக் குடியிருக்கிற புறம்போக்கு நிலத்தை ஏழைகளுக்குப் பட்டா வழங்குவதற்கு எளிய வழிவகை செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில், புறம்போக்கு என்று பொதுவாக சொல்லப்படுகின்றபோது நிலத்தின் Classification-ல் பல பிரச்சினைகள் வருகின்றன. அதுகுறித்த விவரங்கள் முதலமைச்சர் அறிவிப்பிலே இல்லை என்பது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும்.

ஏனென்றால் நடைமுறையிலே பட்டா வழங்குவதில் பெரும் சிக்கலே, மந்தைப் புறம்போக்கு, குட்டைப் புறம்போக்கு, ஆற்றோரப் புறம்போக்கு என்று இந்தமாதிரி பிரச்சினை இருக்கிறது. (குறுக்கீடுகள்). என்னுடைய பேச்சை முடித்து விடுகிறேன். Please, நான் சொல்வது, ஸ்பீக்கரிடத்திலே பேசிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்). ஆம், நீங்கள் என்னோடு பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது, பலவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அரசாணை வெளியிடுகிறபோது, இவையெல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு எளிமைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஆளுநர் உரையிலே இந்த அறிவிப்பு செய்திருக்கிறோம். நான் எதிர்பார்த்தேன், எல்லோரும் இதுபற்றி பேசுவீர்கள் என்று. யாரும் பேசவில்லை. இந்தத் திருத்தங்களை (குறுக்கீடுகள்). ஆம், நீங்கள் பேசினீர்களா? சில நண்பர்கள் பேசியிருக்கின்றீர்கள், எல்லோரும் இதைப்பற்றி பேசவில்லை. ஏனென்றால் இது மிக முக்கியமான அறிவிப்பு. இருந்தாலும்கூட இப்போது சொல்லப்பட்ட கருத்துக்கள், திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் அவர்களெல்லாம் சொல்லிய அந்தக் கருத்துக்களை மனதிலே வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் தயாரிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு முக்கியமான அறிவிப்போடு என்னுடைய பேச்சை முடிக்க இருக்கின்றேன். அரசுத் துறைகளிலே பணியாளர் நியமனம் செய்யும்போது சுழற்சி முறைப் பற்றி டாக்டர், அன்பிற்குரிய நண்பர், ராமதாஸ் அவர்களும் மற்றும் இங்கே பேசிய பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர்களும், தீரன் போன்றவர்களும்கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு அரசுக்கும் இயல்பாக உள்ள அந்த உணர்வோடு இதை அறிவிக்கின்றேன்.

அரசுத் துறைகளிலே பணியாளர் நியமனம் செய்யும்போது, எந்த இடத்திலே இட ஒதுக்கீடு சுழற்சி முறை பின்பற்றப்பட

வேண்டும் என்பது குறித்து அரசின் நிர்வாகச் சீர்திருத்தத் துறை 13-8-1992-ல் ஒரு ஆணை, ஆணை எண் 280-ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி, முதல் 10 பணிகளுக்குத் தற்போது பின்பற்றி வரும் சுழற்சி முறையின்படி பொதுப் பட்டியலிலே உள்ளவர்களுக்கு 4 இடங்கள் என்றும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு இடம் என்றும் இப்போது இருக்கிறது.

இந்த முறையை பொதுப் பட்டியலிலே உள்ளவர்களுக்கு 3 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2 இடங்கள் என்றும் மாற்றியமைக்கும்படி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இதுகுறித்து பரிசீலித்து உரிய ஆணை வெளியிடப்படும். எனவே, இந்தக் கோரிக்கைகளை ஏற்று இனிமேல் முதல் 10 இடங்களுக்கு சூழற்சி முறையைக் கணக்கிடும்போது மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு இதுவரை ஒரு இடம் என்பதற்கு பதிலாக 2 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்கான அரசாணை விரையில் பிறப்பிக்கப்படும் என்று கூறி ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய எல்லா உறுப்பினர் களுக்கும், எதிர்த்தும், ஆதரித்தும் பேசிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு - ஞானசேகரன் தூண்டிவிடுகிறார். Walk-out உண்டா என்று கேட்கிறார். ஆளுநர் உரையிலே Walk-out மரபல்ல என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

உரை : 25 நாள் : 30.05.2006

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சட்டப்பேரவை விதி 88(1)-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேவைப்பட்டால் உட்கார்ந்தே பேச அனுமதியளிக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைப்படும்பொழுது உட்கார்ந்து கொண்டு பேசுகிறேன். அதுவரையில் நிற்க அனுமதியுங்கள். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையாற்றியவர்கள் எல்லோரும், நன்றி கூறுகின்ற ஒரு படலத்தை நிறைவேற்றிவிட்டு பேச்சைத் தொடங்கியதுபோல, நானும் என்னுடைய உரையைத் தொடங்க விரும்புகின்றேன். முதலமைச்சராகிவிட்ட காரணத்தால், நான் என்னுடைய சேப்பாக்கம் தொகுதி மக்களை மறந்துவிட முடியாது. என்னை இந்த அவையிலே ஒரு உறுப்பினராக வருவதற்கு வழி செய்து, மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு ஆளுகின்ற கட்சியின் தலைவனாகவும் ஆக்குவதற்குக் காரணமாக இருந்த சேப்பாக்கம் தொகுதி மக்களுக்கும், செந்தமிழ் நாட்டு வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, இந்தியாவினுடைய தலைசிறந்த தலைவர்களில் ஒருவராக மலர்ந்து கொண்டிருக்கின்ற திருமதி சோனியா காந்தி அவர்களுடைய (மேசையைத் தட்டும் (ஒலி) வழிகாட்டுதலோடு, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல்மிகு ஆட்சித் திறனோடு நடைபெறுகின்ற ஆட்சியாயினும், கட்சியாயினும், அந்த காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய துணையும், அதேபோல தமிழகத்திலே சமூக நீதிக் காவலராக

விளங்குகின்ற அய்யா டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பாட்டாளி மக்கள் கட்சியினுடைய துணையும், இடதுசாரி கொள்கைகளை என்னுடைய இதயத்திலே பதியவைத்துக்கொள்வதற்கு வழிவகுத்துக்கொண்டிருக்கின்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சட்சி ஆகிய கட்சிகளினுடைய துணையும் (மேசையைத் தட்டும் ஒலி), மதச்சார்பற்ற நிலை என் மனதில் என்றென்றும் இருப்பதற்கு வழிகோலிய இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் ஆகிய தோழமைக் கட்சிகளுடைய துணையும், என்னை இந்த மாமன்றத்திலே ஆட்சித் தலைவராக அமரச் செய்திடத்தக்க தகுதியை வழங்கி யிருக்கின்றன. அந்தக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய உயிரனைய அன்பு உடன்பிறப்புகளுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆளுநர் உரையில் இதுவரை கட்சிகளின் தலைவர்கள் உட்பட 26 உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். நான் 27-ஆவது பேர்வழியாகப் பேசிக்கொண்டிருக்கின்றேன். புராணீகர்கள் 27 நட்சத்திரம் என்பதை ஒப்பிட்டுப் பார்த்தக்கொள்ளலாம். 27 நட்சத்திரங்கள் சிறப்புக்குரியவை என்பது அவர்களைப் பொறுத்து. அந்த வகையிலே, நான் 27-ஆவது பேர்வழியாக அந்த உரைகளுக்கு எல்லாம் விளக்கம் அளிக்கின்ற நிலையைப் பெற்று இருக்கின்றேன். அந்த 26 பேர்களில், காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 6 பேர், ஆளுங்கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 5 பேர், அகில இந்திய அ.தி.மு.க. சார்பாகப் பேசியவர்கள் 2 பேர். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 4 பேர். ம.தி.மு.க. சார்பாகப் பேசியவர் ஒருவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக 2 பேர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசியவர்கள் 2 பேர். விடுதலைச் சிறுத்தைகள் சார்பாகப் பேசியவர்கள் 2 பேர். இருப்பவர்கள் 2 பேர்; பேசியவர்களும் 2 பேர். தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக திரு. விஜயகாந்த் அவர்கள் ஒருவர். மற்றும் சுயேட்சை உறுப்பினர் ஒருவர் ஆக 26 பேர் பேசி,

அவர்களுடைய கருத்துகளுக்கெல்லாம் பதிலல்ல, மெருகூட்டுவதைப் போன்று சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக இன்றைக்கு நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், சட்டமன்றக் கட்சிக்கும் தலைவர், திரு. கோ. க. மணி அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சுதர்சனம் அவர்களும் எடுத்துரைத்துள்ள கருத்துக்கள் மிகமிக வரவேற்கத்தக்க கருத்துக்களாக அமைந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த ஆளுநர் உரைக்கான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முதலில் நன்றி தெரிவித்து முன்மொழிந்தவர் திரு. அப்பாவு அவர்கள். அப்பாவு அவர்களுடைய பேச்சு ஆர்வத்தின் அடையாளமாக உருவாகி, நம்முடைய சுதர்சனம் அவர்களுடைய பேச்சு, அனுபவத்தின் அடையாளமாக இன்றைக்கு நிறைவுற்று இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இடையிலே நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய பேச்சுத்தான் பிரளயத்தையே இங்கே ஏற்படுத்திவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). அவருடைய நோக்கம் பிரளயத்தை உருவாக்க வேண்டும் என்பதல்ல. அவருடைய பேச்சைப் பயன்படுத்திக்கொண்டு இங்கே ஒரு பிரளயம் உருவாயிற்று. அதன் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளுக்கு நான் உங்கள் அனைவரோடும் சேர்ந்து, ஜனநாயகத்திலே நம்பிக்கையுடைய அத்தனை அரசியல்வாதிகளோடும் சேர்ந்து, நான் என்னுடைய வருத்தத்தை, ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும் 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற வள்ளுவருடைய வாசகத்திற்கு ஏற்ப கடுமையான நடவடிக்கை என்று எடுத்தாலும்கூட, அவர்கள் தொடர்ந்து அவைக்கே வராமல் இருந்துவிட வேண்டும் என்று ஒரு முடிவு எடுக்காமல் அடுத்த கூட்டத்தொடர். நிதிநிலை அறிக்கைத் தொடர், நீண்ட நாள் நடைபெறக்கூடிய தொடரில் அவர்கள் கலந்துகொண்டு, அரிய விளக்கங்களை, நாடு வாழ, நலிவு தீர, மக்கள் பிரச்சினைகளை எல்லாம் முன்னிறுத்தி அவர்கள் பேசவேண்டும் என்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தால்தான், நேற்று நான் வேண்டுகோள் விடுத்து, தாங்களும் அதை ஏற்று, இந்த அவையும் அதனால் ஒரு பூரிப்பை அடைந்திருக்கின்றது.

இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துகள் சிலவற்றை முதலில் ஆராய நான் விரும்புகின்றேன். குறிப்பாக, ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுடைய பேச்சின் இறுதியில் தங்களுடைய தொகுதியைப்பற்றிப் பேசத் தவறவில்லை. ஏனென்றால், அவர்கள் தொகுதிக்குத் திரும்பச் செல்ல வேண்டும். அதற்காக, அந்தக் காரணத்திற்காக மாத்திரமல்ல, உள்ளபடியே அவர்களுக்கு அந்தத் தொகுதியின்மீது உள்ள அக்கறையை வெளிப்படுத்தவும், யாரிடத்திலே சொன்னால் நடக்கும், எங்கே சொன்னால் நடக்கும் என்ற நம்பிக்கையின் காரணமாகவும், அந்தத் தொகுதிப் பிரச்சினைகளை எல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். அவை ஒவ்வொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டு அதிலே இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் 122 வாக்குறுதிகளை தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்தோம். நேற்றையதினம் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் பேசும்போது சொன்னதைப்போல், அந்த வாக்குறுதிகள் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உள்ளத்திலே மாத்திரம், மூளையிலே மாத்திரம் உதித்து, மக்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிகள் என்று நான் ஆணவம் கொள்ளவில்லை. தற்பெருமை பேச விரும்பவும் இல்லை. அந்த வாக்குறுதிகள், எல்லா கட்சிகளுடைய உள்ளத்திலும், எண்ணத்திலும் இருக்கின்ற அந்த வாக்குறுதிகள்தான் ஆசைகள்தான், அவாக்கள்தான். அதைத்தான் 122 வாக்குறுதிகளாகத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தேர்தல் அறிக்கையிலே தந்தோம்.

அந்தத் தேர்தல் அறிக்கைக்குப் பெரும் சிறப்பாக மத்திய நிதியமைச்சர் நண்பர் சிதம்பரம் அவர்கள், இந்தத் தேர்தலிலே கதாநாயகனே இந்தத் தேர்தல் அறிக்கைதான் என்று அவர் குறிப்பிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தக் கதாநாயகனாக விளங்கிய தேர்தல் அறிக்கை எத்தகைய வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டு மக்களுடைய ஒத்துழைப்போடு, நம்முடைய கூட்டணியிலே உள்ள கட்சிகள் 163 பேர் மகத்தான வெற்றி பெறுவதற்கு ஒரு நல்ல நிலையை உருவாக்கி இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

என்ன சொல்லப்பட்டது ஏடுகளில் - வார ஏடுகளில், நாளேடுகளில் ? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டணி தொலைந்தது, தலை எடுக்காது, திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர், இருவர்கூட வெற்றிபெற்று மன்றத்திற்குச் செல்லமாட்டார்கள். இதோ திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வரலாறு முடிந்துவிடும். இதுதான் இறுதிப் போராட்டம். இது பரம்பரை யுத்தம். அந்தப் பரம்பரை யுத்தத்திலே இது இறுதி யுத்தம். இந்த யுத்தத்தில் கருணாநிதி என்கின்ற இராவணன் ஒழிவான் என்றெல்லாம் பேசப்பட்டது. ஆனால் இந்த இராவணனுக்கு பத்து தலை இல்லை. இந்த இராவணனுக்கு தமிழ்நாட்டின்மீது 'பற்றுதலை'. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). அந்தப் 'பற்றுதலை' இருந்த காரணத்தால் தமிழ் மக்களும் என்பால் கொண்ட 'பற்றுதலை' வெளிப்படுத்தி, நம் அனைவருக்கும் 163 இடங்களைத் தருகின்ற மாபெரும் வெற்றியை வழங்கி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இதிலே 122 வாக்குறுதிகள் என்று சொன்னேன் அல்லவா ? அதில் 54 வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றிய அறிவிப்புகள் இந்த ஆளுநர் உரையிலே இடம்பெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அஃதன்னியில், தொழிற்கல்வி பயில ஏற்பாடு, கல்வியாளர்கள் கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடு, நுழைவுத் தேர்வை அகற்ற குழு, ஒட்டுமொத்த சுற்றுலாத் திட்டம், மேட்டூர் நீர் திறப்பு போன்ற 14-க்கும் மேற்பட்ட அறிவிப்புகள் உட்பட மொத்தம் 68 அறிவிப்புகளை இந்த ஆளுநர் உரை கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). எஞ்சிய அறிவிப்புகள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல, படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை இங்கே நான் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். உட்கார்ந்துகொண்டு பேசுகிறேன்.

(பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமர்ந்துகொண்டு பேசினார்).

மாண்புமிகு கோவை தங்கம் அவர்கள் வால்பாறை தொகுதியிலே வெற்றி பெற்றவர். காங்கிரஸ் கட்சியின் சார்பாக உரையாற்றியபோது, வால்பாறை மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி பாரதியார் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அமைக்க வேண்டும் என்று

கோரினார்கள். இவரது கோரிக்கையைப் பரிசீலிக்கலாம் என்று அதிகாரிகள் சொன்னார்கள். நான் அதிகாரிகளிடத்திலே வலியுறுத்திச் சொல்லி இருக்கிறேன். வால்பாறை தனித் தீவுபோல இருக்கின்ற ஒரு பகுதி. அங்கே வாழ்கின்ற மக்கள் இன்னமும் இந்த உலகத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய, உலகத்தோடு ஒட்டி ஒழுகவேண்டிய ஒரு நிலையிலே இருக்கின்ற மக்கள். அந்த மக்கள் குறைந்தபட்சம் ஓர் அரசு கலைக் கல்லூரியை, பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக அமைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். எனவே, ஒரு சிறப்பு நேர்வாக இதை நாம் செய்து கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளிடத்திலே கூறி, அவர்களும் இதற்கு ஒப்புதல் தந்துள்ளார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆலங்குடி தொகுதி உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் ஊரகப் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் போதுமான அளவுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஒரு இடத்திலே மாத்திர மல்ல, பல இடங்களில் இந்தக் குறைபாடு இருக்கின்றது. இந்தக் குறைபாடு நீக்கப்பட்டு, அங்கு மாத்திரமல்ல, ராஜசேகரன் சொன்ன ஆலங்குடியிலே மாத்திரமல்ல, ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையிலும் தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்பட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய வேலூர் ஞானசேகரன் அவர்கள் உரையாற்றும் போது 80 ஆண்டுகாலமாக இயங்கிவந்த அரசு மருத்துவமனை தற்போது செயல்படாமல் உள்ளது. இதுகுறித்து இந்த அரசு பரிசீலித்து அந்த மருத்துவமனை தொடர்ந்து செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மருத்துவமனைக்கு வயது 80 ஆண்டு, அது உறுதியாக நிறைவேறும் என்று வாக்களிக்கிற எனக்கு 83 ஆண்டு (சிரிப்பு) என்பதை நான் ஞானசேகரன் அவர்களுக்குத் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் மகிழ்ச்சிகரமாக நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள், செங்கல்பட்டு தொகுதியிலே உள்ள கொளவாய் ஏரியைத் தூர் வாரி, தூய்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தளி இராமசந்திரன் அவர்கள், யாரையும் கேட்காமல் வெற்றிபெற்றவர். (சிரிப்பு) அவரது தொகுதியிலே யானைகளால் தாக்கப்பட்டு அடிக்கடி விவசாயிகள் இறக்க நேரிடுகிறது என்றும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உடனடியாக இதற்கெல்லாம் இழப்பீடு வழங்கப்பட்டது என்றும், ஆனால், இந்த ஆட்சியிலே, இந்த ஆட்சி என்றால் கடந்த ஆட்சியில் இத்தகைய இழப்புகளுக்கு தொகைகள் வழங்கப்படவில்லை என்றும் பேசும்போது தெரிவித்தார்கள். நேற்றையதினமே யானையினால் பாதிக்கப்பட்ட அந்த விவசாயி குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இதுபோல பழைய சம்பவங்கள், யாரும் பாதிக்கப்பட்டிருந்து, அந்தப் பட்டியல் தரப்படுமேயானால், அவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு ஆவன செய்யும் என்ற உறுதியையும் நான் இங்கே வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வாணியம்பாடி தொகுதியைச் சேர்ந்த அப்துல் பாசித் அவர்கள், அவர் தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஒன்றியத்தில் மலைக் கிராமங்களான காமன்திட்டு, பனங்காட்டூர், நாட்டுநேரி போன்ற கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லாத காரணத்தால் 20 அல்லது 25 கிலோ மீட்டர் தூரம் அந்தத் தொகுதி மக்கள் நடந்துதான் நகரங்களுக்குச் செல்ல வேண்டும் என்று தெரிவித்தார்கள். அந்தச் சிரமம் போக்க, அந்தக் கோரிக்கை குறித்து உடனடியாகப் பரிசீலிக்க உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அது கவனிக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மன்னார்குடி நண்பர் சிவபுண்ணியம் அவர்கள், தனது தொகுதியிலே முன்பிறந்ததுபோன்ற புகைவண்டி வசதி மீண்டும் தேவை என்று, அதைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இதுகுறித்து இந்த

அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு, மத்திய அரசினுடைய இணை அமைச்சர் இங்கே இருக்கின்ற காரணத்தால், அவர்களோடு தொடர்புகொண்டு, - ஏற்கெனவே அவரிடத்திலே நானே ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். என்னுடைய எட்டுக்குடி, திருக்குவளை பகுதிகளுக்கெல்லாம் இரயில் விடவேண்டுமென்று; அதையும் சேர்த்து நிறைவேற்ற வேண்டுமென்று அவரிடத்திலே கேட்பேன். ஆனால், எனக்கு சிவபுண்ணியம் ஒரு உத்தரவாதம் தரவேண்டும். அந்த இரயில் போகும்போது அதற்குப் போதுமான பயணிகள் (சிரிப்பு) - ஏனென்றால். மிகக் குறைவான தூரம், அதுமாத்திரமல்ல, எவ்வளவு வேகத்திலே அந்த இரயில் போகும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதிலே நான் போய் பழக்கப்பட்டவன். ஆமையோடு போட்டிப் போட்டு செல்லக்கூடிய இரயில் அது. அந்த இரயிலை அங்கே இயக்குவதற்கு நான் உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொன்னார், சிவபுண்ணியம் அவர்கள். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை வழியிலே வந்த நாம், அண்ணா வழியிலே வந்த நாம் தமிழகத்திலே பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்ப வேண்டிய அவசியம் இருப்பதைக் குறிப்பிட்டு, அதற்காக ஒரு தனி இலாகாவே, ஒரு துறையே அமைக்க வேண்டுமென்று கேட்டார். அவர் மறந்திருப்பார் என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆடசியிலேதான், கடந்த காலத்தில் இந்த ஆட்சிமாற்றம் ஏற்படுவதற்கு முன்பு, 2000 ஆம் ஆண்டு இறுதியில், 'சமூக சீர்திருத்தத் துறை' என்ற ஒரு துறையை உருவாக்கி அது செயல்பட ஆரம்பித்தது. உடனடியாகத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலுக்குப் பிறகு, வெற்றி பெற்றவர்கள், சமூகத்தை இன்னும் சீர்திருத்தத் தேவையில்லை என்று அந்தத் துறையையே கலைத்துவிட்டாக்ள் என்பதை நான் நண்பர் சிவபுண்ணியம் அவர்களுக்குத் தெரிவிப்பதோடு, அடுத்து, நிச்சயமாக அந்தத் துறை புதுப்பிக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி). அந்தத் துறை பணியாற்றும். அந்தத் துறை பணியாற்றுகின்ற காரணத்தால், அமைச்சர்கள்மீது ஏற்படுகின்ற சந்தேகங்களெல்லாம்கூட, நீங்குகின்ற அளவுக்கு நம்முடைய பகுத்தறிவுப் பகலவன் நமக்கு

உதவுவார் என்பதை சிவபுண்ணியம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் ஒன்றாக வாழவேண்டு மென்ற அடிப்படையில் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" உருவாக்கினோம். 113 இடங்கள் என்று எனக்கு நினைவு. அங்கெல்லாம் சமத்துவபுரங்கள் அமைத்தோம். அவைகளில் பல சமத்துவபுரங்கள் பாழடைந்து கிடக்கின்றன, புதுப்பிக்கப்பட வில்லை. அந்தத் திட்டம் தொடரவில்லை. எப்பொழுதுமே ஒரு அரசு நல்ல காரியங்களைச் செய்தால், அடுத்து வருகின்ற அரசு அதைத் தொடரவேண்டும் என்பதுதான் ஜனநாயகத்திலே வரவேற்கத்தக்க அம்சம். அதற்கு சாட்சியாகத்தான், கடந்த அரசு உருவாக்கிய சைக்கிள் வழக்கும் திட்டத்தை இந்த அரசு தொடரும் என்று நாம் கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி). அப்படி அது தொடரப்படாமலே போய்விட்டது. சமத்துவபுரம் திட்டம், அது மீண்டும் நிச்சயமாக தொடரும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி), அழகான முறையிலே முதன்முதலில் தொடங்கப்பட்ட அம்பத்தூர் உழவர் சந்தை, அம்பத்தூருக்கு அருகிலே உருவாக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரம், இவைகளையெல்லாம் நானே சென்று திறந்து வைப்பதாக இருக்கின்றேன் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள், திருப்பூரிலே உள்ள சாயப்பட்டறை பிரச்சினை குறித்து இங்கே உரையாற்றி னார்கள். என்னை நேரில் சந்தித்து அதுபற்றி விவரமாகக் கூறியிருக்கின்றார். பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன், அந்த நிறுவனங்களுடைய உரிமையாளர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு என்னைச் சந்திக்க வருவதாகவும் சொல்லியிருக்கின்றார். நானும் சந்திப்பதாக உறுதி அளித்திருக்கின்றேன். அப்போது அந்தப் பிரச்சினை குறித்து கலந்து பேசி நிச்சயமாக நல்ல முடிவு காண முயற்சிப்பேன் என்று அவருக்கு நான் சொல்லிக்கொள் கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும், பனியன் தொழிலாளர்களுக்கு பேருந்து வசதி கூடுதலாக செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட போக்குவரத்துத் துறை அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்பதையும் தெரிவித்துக்கொள் கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக மங்களூர் செல்வம் அவர்கள் இங்கே உரையாற்றினார்கள். அவருடைய தொகுதியிலே உள்ள திட்டக்குடி, முருகன்குடி, பெண்ணாடம் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால், தரைப் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என்றும், அவற்றைச் சீர்படுத்த வேண்டுமென்றும் கூறினார்கள். பாலங்கள் மீண்டும் அமைக்கும் பணியை அதன் தொடர்புடைய துறை அமைச்சர்களும், அதிகாரிகளும் விரைந்து மேற்கொள்வார்கள். பாலம் அமைப்பது ஒன்றும் சிரமல்ல, பாலத்தை இடிப்பதுதான் சிரமம். (சிரிப்பு). பாலம் அமைக்க வேண்டுமென்று என்றைக்கும் கருதுகின்றவன் நான். எனவே, இந்தப் பாலமும் நிச்சயமாக அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மேல்மலையனூர் தொகுதி, பா..ம.க. சட்டமன்ற உறுப்பினர், செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்கப்பட்ட நெல்லுக்கான விற்பனைத் தொகை பல மாதங்களாக பட்டுவாடா செய்யப்படாமல் நிலுவையிலே உள்ளது என்று குறிப்பிட்டார். உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்ற உறுதியை அவர்களுக்கு நான் வழங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய ஞானசேகரன் அவர்களும், திருமதி சங்கரி நாராயணன் அவர்களும் கிழக்குக் கடற்கரை சாலையிலே அதிக அளவில் ஏற்படுகின்ற விபத்துகளைக் குறைக்கவும், அந்த விபத்துகளில் காயமடைந்தோருக்கு உடனடி மருத்துவ சிகிச்சை உதவி தரவேண்டுமென்றும் கூறினார்கள். ஞானசேகரன் அவர்கள், Highway Patrol இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். உண்மைதான். நானே ஒவ்வொரு நாளும், ஒன்றரை மணிக்கு, பிற்பகல் ஒன்றரை மணிக்கு உணவருந்த உட்காரும்போது, தொலைக்காட்சியைப் பார்த்தால், சாலை விபத்திலே 5 பேர் சாவு,

6 பேர் சாவு என்று, அந்தச் சவங்களைத் தூக்கிச் செல்கின்ற அந்தக் காட்சியை ஒவ்வொரு நாளும் காண வேண்டியிருக்கின்றது.

இந்த ஆட்சி, அந்த ஆட்சி என்று அல்ல, எந்த ஆட்சியிலும் இது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில் நடைபெற்றது, அந்த ஆட்சி வந்தபிறகும் இது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஒருவேளை இவைகளெல்லாம் தொடர வேண்டும் என்று கருதுகிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. இது தொடராமல் இருப்பதற்கு காவல் துறை மிகுந்த கண்காணிப்போடு இருக்க வேண்டும். அதைத் தடுத்து நிறுத்த முடியாது. இப்படிப்பட்ட வாகனங்கள் வேகத்தை எந்த அளவிற்குக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை அமல்படுத்த வேண்டும்.

இரவு நேரங்களில் நாமே அனுபவித்து இருக்கிறோம். நம்முடைய பயணத்தில் எதிரே வருகின்ற லாரிகள் அல்லது பெரிய கார்கள் எந்த அளவிற்கு விளக்கு வெளிச்சத்தோடு வருகின்றன என்பதும், முன்பெல்லாம் அந்த விளக்கின் முன் பகுதியிலே ஒரு கருப்புக் கறை இருக்கும் இப்போது அந்தக் கருப்புக் கறை எல்லாம் கிடையாது. கருப்புக் கறையும் இல்லாமல் வெட்ட வெளிச்சத்தோடு, பயங்கர வெளிச்சத்தோடு லாரிகள் வருகின்றன. அவர்களுக்குள்ள துணிச்சல், நாம் அடித்தால் நமக்கு ஒன்றும் காயமில்லை. அடிபடுகின்ற கார்களுக்குத்தான், வாகனங்களுக்குத்தான் சேதம். அதிலே வருபவர்களுக்குத்தான் உயிரிழப்பு என்ற தைரியத்தில் அது நடந்துகொண்டிருக்கிறது. இந்த விபத்துகளைத் தடுப்பதை ஒரு முக்கியமான பணியாக இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நெசவாளர் பிரச்சினை குறித்து நம்முடைய பள்ளிப்பட்டு தொகுதி உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பாக பல அருமையான கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்துரைத்தார்கள். அவருடைய கருத்துகளைக் கேட்ட நேரத்மல, தமிழைக் கேட்டு இரசிப்பவன் நான். இன்றல்ல, முன்பெல்லாம்கூட, அப்படிப்பட்ட அருமையான கருத்துகளை அவர் இங்கு எடுத்துவைப்பார். சிட்டாநூலுக்கான இரண்டு சதவீத விற்பனை வரியை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பு நிதியமைச்சர் அவர்கள் எல்லா வணிகர்களையும் அழைத்து வைத்து, இதுபோன்ற நிறுவனங்களையும் அழைத்து வைத்து, கலந்துபேசித்தான் நிதிநிலை அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுவது தி.மு.க. அரசைப் பொறுத்தவரையிலே வழக்கமாக இருந்து வருகின்றது. அந்த வழக்கம் மாறாமல் இந்த முறையும் அது கடைப்பிடிக்கப்பட்டு, இத்தகைய கோரிக்கைகள் குறித்து எல்லாம் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நம்முடைய நண்பர் ஜான் ஜோசப் அவர்கள் நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் நீர்ப்பாசனத்திற்குத் தேவையான நீரை கேரள அரசு வழங்குவதில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள். இந்த அரசு இதுகுறித்து நெய்யாறு இடதுகரைக் கால்வாய் நீர்ப்பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீரை வழங்குவதற்கு கேரள அரசை வலியுறுத்த கேரள அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால், பக்கத்து மாநிலங்களோடு ஒரு பக்குவமான அணுகுமுறை நமக்குத் தேவை என்பதை இன்று நேற்றல்ல, பல ஆண்டு காலமாக நான் வலியுறுத்தி வருபவன் என்பதை அனைவரும் அறிவீர்கள். அந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி இதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ராஜீவ் காந்தியினுடைய நினைவாக Rajiv Gandhi Institute of Aeronautical Science and Training of Pilots Academy ஒன்றை ஸ்ரீ பெரும்புதூர் பகுதியிலே தொடங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு நிச்சயமாக (மேசையைத் தட்டும் ஒலி). அந்த நிறுவனம் அமைய ஆவன செய்யும். எப்பாடுபட்டேனும் அந்த நிறுவனத்தை இங்கே அமைப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசோடு வாதாடி, தேவையானால் போராடி, அதை வெற்றிகரமாக முடிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த அப்பாவு அவர்கள், தன்னுடைய பேச்சில் முக்கியமாக தொழிற்கல்வி படிப்புகளில் கிராமப்புற மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க கழக ஆட்சியிலே 15 சதவீதம் ஒதுக்கப்பட்டதுபற்றி குறிப்பிட்டார்கள். அது மேலும் 25 ஆக உயர்த்தப்பட்டவுடன் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று 15 சதவீதமும் சேர்த்து அடியோடு போய்விட்டது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கிராமப்புறத்தே உள்ள நம்முடைய மாணவர்கள். 'நம்முடைய' என்பதற்கு உங்களுக்குப் பொருள் தெரியும் என்று கருதுகிறேன். நம்முடைய மாணவர்கள் அதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். இதை எப்படி, ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும் என்றால், solve செய்து, எந்த முறையிலே மீண்டும் அந்தக் கிராமப்புறத்து மாணவர்களுக்கு இந்த 15 சதவீதமாவது கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பதைப்பற்றி அரசு ஆலோசித்து உரிய நடவடிக்கைகளைச் சட்டப்பூர்வமாக எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பண்ருட்டி தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் விவாதத்திலே பங்கேற்றுப் பேசியபோதும் சரி, அதற்குப் பிறகு அவரைத் தொடர்ந்து இங்கே பேசிய நம்முடைய கோ.க. மணி அவர்கள் பேசியபோதும் சரி, - ஜி. கே. மணி என்று இருந்தது முன்பெல்லாம், இப்போது அவர் கோ.க. மணி. நான்கூட வேடிக்கையாகச் சொல்வதுண்டு. கோர்த்த மணி ஓட்டையாக இருக்கும். இது கோர்க்காத மணி, ஓட்டை இல்லாத மணி (சிரிப்பு) என்று சொல்லி இருக்கிறேன். இந்த கோ.க.மணி அவர்கள் - அவரும், உறுப்பினர் வேல் முருகனும் ஒரு கோரிக்கை வைத்தார்கள். தனியார் ஆசிரியர் பட்டயப் பயிற்சி நிலையங்களும், இளநிலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் அதிக எண்ணிக்கையிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. இதற்குத் தேவையான கட்டமைப்பு வசதி என்பது கிடையாது. இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டதோடு இப்பிரச்சினையைக் கவனமாகப் பரிசீலித்து என்னதான் நடந்திருக்கிறது என்பதை நாட்டுக்குச் சொல்ல ஒரு உயர்நிலை விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக்

கொண்டார்கள். நிச்சயமாக ஒரு உயர்நிலை விசாரணைக் குழு அமைக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி), இதில் எப்படி எல்லாம் தவறு நடந்திருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து நாட்டிற்கு அறிவிக்கப்படும்.

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் பேசும்போது இன்றைக்கு நூலகங்களில் வாங்குகின்ற நூல்களில் பிரதிகள் அதிகபட்சம் 750 படிகள்தான் வாங்கப்படுகின்றன. அது ஒரு 1,500 படிகளாவது வாங்கினால்தான், அதை எழுதிய எழுத்தாளருக்கு ஏதாவது கிடைக்கும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இப்போது நான் அறிவிப்பது, இதில் கொஞ்சம் என்னுடைய சுயநலமும் கலந்தது. ஏனென்றால், அடுத்த வாரம் என்னுடைய புத்தகங்கள் இரண்டு வெளிவர இருக்கின்றன. அதற்காக நான் சொல்லவில்லை. இருந்தாலும் நம்முடைய ரவிக்குமார் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, இனிமேல் 750 படிகள் வாங்குவதற்குப் பதிலாக குறைந்தபட்சம் 1,000 புதிய படிகள் வாங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல செய்தியை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தி.மு.கழக ஆட்சியில் 3-6-1989 முதல் ஆரம்பிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் குறித்து நம்முடைய சேரன்மாதேவி உறுப்பினர் வேல் முருகன் அவர்கள் கேட்டார்கள். அவருக்குப் பதிலாக (குறுக்கீடு) ஆம், வேல்துரை அவர்கள் கேட்டார்கள். தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் இத்திட்டம் மீண்டும் தொடரப்படும் என்றும், திருமண நிதி உதவி 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் நேற்றையதினம் அதைக் குறிப்பிட்டு கேட்டுள்ள காரணத்தால் உறுதியாகவும், - உத்தேசமாக அல்ல - நிச்சயம், நிச்சயப்படுத்தி அவர்களுக்குச் சொல்கிறேன். இந்தத் திட்டம் 3-6-2006-ல் தொடங்கப்பட்டு, இந்த நிதியாண்டில் 33,333 ஏழைப் பெண்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருமண நிதி உதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் தம்பி விஜயகாந்த், - தம்பி என்று சொல்லலாம் என்று நினைக்கிறேன். - தம்பி விஜயகாந்த் அவர்கள்

இந்த ஆளுநர் உரையை வரவேற்று, சில விமர்சனங்களைச் செய்து பேசியபோது வேலைவாய்ப்புகளை உருவாக்க குறிப்பிடத் தக்க திட்டங்கள் தேவை என்றெல்லாம் பேசினார். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் விரைவில் தொடங்கப் படும் என்று உரையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தொடர்ந்து ஆதரவும் நிதி உதவியும் நல்க இருப்பதால் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் மகளிருக்குக் கிடைக்கும் என்றும் உறுதி அளிக்கிறேன்.

முந்தைய ஆட்சியில் அரசு வேலை நியமனத் தடையாணை நடைமுறையிலே இருந்த காரணத்தால் அரசு வேலைவாய்ப்புகளை இழந்திருக்க இலட்சக்கணக்கான இளைஞர்கள் அரசுப் பணிக்கு விண்ணப்பிக்க முடியாத அளவிற்கு வயதைக் கடந்துவிட்டார்கள் எனவே, அதைச் சிந்தித்து இந்த அரசு தேர்தல் அறிக்கையிலே என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால் அரசுப் பணிக்கான அதிகபட்ச வயது வரம்பை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க முடிவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் அவர்கள் இழந்த அந்த வாய்ப்புகளை நிச்சயமாக பெற முடியும் என்பதை நான் திரு. விஜயகாந்த் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கு நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இன்னொரு கோரிக்கையை என்னிடத்திலே விடுத்தார்கள். தமிழக அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் பாடத் திட்டத்தில் தமிழ் வழியிலே கற்பிக்கும் அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது என்ன இருக்கிறதென்றால், இப்போது அரசு மானியம் பெறாத பள்ளிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் கிடையாது. அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் இப்போது உள்ள நிலையில் இல்லை. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்ற காரணத்தால், அரசு மானியம் பெறாத பள்ளிகளில் பயிலுகின்ற எல்லா மாணவ மாணவியருக்கும் இலவச பாடப்

புத்தகங்கள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழ் மொழிக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையாக தமிழ்ப் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்பு இருந்தது. கைத் தட்டாதீர்கள் அதற்குள். தி.மு.க. ஆட்சியில் இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் அந்த முறை இரத்து செய்யப்பட்டுவிட்டது. இப்போது நான் அறிவிப்பது, இனிமேல் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளுக்கு இணையாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலேயும் தமிழ்ப் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்க மீண்டும் அனுமதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

அரசு, நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு அரசாணைகள் கல்வியாண்டின் தொடக்கத்திலேயே இதுவரையில் பிறப்பிக்கப்படாததால் அப்பள்ளிகளிலே பயிலும் மாணவர்கள் மேற்கொண்டு கல்வியைத் தொடர வேறு பள்ளிகளில் சேர நேரிடுகிறது. இந்த நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, இந்த ஆண்டு 100 அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் 10 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) தரம் உயர்த்தி, கல்வியாண்டின் தொடக்கத்திலேயே அதாவது ஜூன் மாதத்திலேயே ஆணையிடப்படும் என்று தெரிவித்துக்கொள் கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முன்பெல்லாம் அரசுப் பள்ளிகளிலே கட்டடங்கள் கட்டும்போது அதற்கானப் பணத்தையும் செலவழிக்கிற சில நன்கொடையாளர்கள், வள்ளல்கள் இருப்பார்கள், அவர்கள் கட்டித் தருகின்ற அந்தக் கட்டடங்களில் ஏதாவது ஒரு கூடத்திற்கோ அல்லது ஓர் அறைக்கோ அல்லது அந்த முழுக் கட்டடத்திற்கோ அவர்கள் தந்த பணத்திற்கேற்றவாறு அவர்களுடைய பெயரை வைக்கின்ற வழக்கத்தை தி.மு.க. ஆட்சியிலே மேற்கொண்டிருந்தோம்.

அதைக் கடந்த ஆட்சியிலே இரத்து செய்துவிட்டார்கள். ஆனால், அரசு பள்ளிகளில் சில கட்டடங்களைத் தங்கள் சொந்தச் செலவிலே கட்டிக்கொடுக்க முன்வரும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரை அந்தக் கட்டடத்தில் பொறிக்கலாம் என்று தி.மு.க. ஆட்சியிலே இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் அந்த முறை நீக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அந்த முறை நடைமுறைக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி).

2001 ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலேயிருந்து 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை அவதூறு பேச்சுக்கள் என்றும், அவதூறு செய்தி வெளியீடுகள் என்றும், ஆட்சேபகரமான பேச்சுக்கள் என்றும், டெஸ்மா சட்டத்தின்கீழும் பல வழக்குகள் போடப்பட்டுள்ளன. டெஸ்மா சட்ட வழக்கு என்மேல்கூட உண்டு. அரசு ஊழியர் என்ற முறையிலே, நான் அரசு ஊழியர் (சிரிப்பு), அவதூறாகப் பேசியதாக அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மற்றும் மேடைப் பேச்சாளர்கள்மீது மட்டும் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 267.

அவதூறுகளாகச் செய்திகளை வெளியிட்டதாகக் கூறி செய்தித்தாள் மற்றும் வாரப் பத்திரிகை ஆசிரியர்கள். பதிப்பாளர்கள், அச்சிட்டவர்கள் மற்றும் வெளியிட்டோர்மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 9. ஆட்சேபகரமாகப் பேசியதாகக்கூறி வழக்குப் பதிவு செய்ய முன் அனுமதி வழங்கப்பட்ட நேர்வுகள், டெஸ்மா சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 2. கட்சிகள் என்ற அடிப்படையிலே பார்த்தால், தி.மு. கழகத்தின்மீது 147 வழக்குகள், காங்கிரஸ் மீது 14 வழக்குகள், சி.பி.ஐ. மீது 2 வழக்குகள், பா.ம.க. மீது 7 வழக்குகள், ஜனதா தளம் மீது ஒரு வழக்கு, விடுதலைச் சிறுத்தைகள் மீது 3 வழக்குகள், பா.ஜ.க. மீது 2 வழக்குகள், வி.எச்.பி. மீது 2 வழக்குகள், பத்திரிகைகயாளர்மீது 2 வழக்குகள், மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது 87 வழக்குகள். மொத்தம் 324 வழக்குகள். அந்த 87 வழக்கையும் சேர்த்து எல்லாவற்றையும் திரும்பப் பெறுகின்ற ஆணை இன்று பிறப்பிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). இவைகள் அன்னியில், சிவில் சப்ளைஸ் இலாகா ஊழியர்கள்மீது உள்ள வழக்குகளும் திரும்பப் பெறப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொரு நற்செய்தியாக, அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இடமாற்றம், ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான (transparent), கலந்தாய்வு முறை (counselling) மூலமாக வரும் கல்வியாண்டில் - 2006-2007 ஆம் கல்வியாண்டில், ஜூன் திங்கள் முதல் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆளுநர் உரையில் குறிப்பிட்டபடி, மகளிர்க்கு பொழுது போக்குக்காகவும், அவர்கள் பொது அறிவு பெறவும், வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், அண்ணா பிறந்த, பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களை யொட்டி இவ்வாண்டே தொடங்கப்பட்டு, படிப்படியாக நிறைவேற்றப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த 14 அங்குலம், 14 inches வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் திறந்த சர்வதேச ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்யப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பத்தினர் அனைவருக்கும் படிப்படியாக வழங்கப்படும். இவற்றுக்கான Tender, ஒப்பந்தப்புள்ளி பற்றி முடிவு எடுக்கவும், முறையாகக் கொள்முதல் செய்யவும், குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

ஊராட்சிகளில் ஏற்கெனவே பல்வேறு மக்கள் நலப் பணிகளை மேற்கொள்வதற்காக, தி. மு. கழக ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட 13,000 மக்கள் நலப் பணியாளர்கள் முந்தைய ஆட்சியால், 1-6-2001 முதல் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். சாலைப் பணியாளர்கள் அன்னியில் அவர்கள் மக்கள் நலப் பணியாளர்கள். இவர்கள் தங்களை மீண்டும் நியமனம் செய்யவேண்டும் என்று வேண்டுகோள் வைத்துள்ளார்கள். ஒரு ஊராட்சிக்கு ஒரு மக்கள் நலப் பணியாளர் என்ற வீதத்தில் 31-5-2001 அன்று பணியில் இருந்த மக்கள் நலப்பணியாளர்கள் அனைவரையும் மீண்டும் மக்கள் நலப் பணியாளர்களாகப் பணிபுரிய (மேசையைத் தட்டும் ஒலி) சம்மதித்து இந்த அரசு ஆணையிடுவதோடு, மாதாந்திர தொகுப்பு ஊதியமான ரூ. 750/-ஐ, ரூ. 950/- ஆக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஏற்கெனவே பெற்றுவந்த மாதாந்திர பயணப் படியான ரூ. 50/-ஐயும்

சேர்த்து ஒத்துமொத்தமாக மாதம் 1,000 ரூபாய் பெறுகின்ற வகையில் ஆணை பிறப்பிக்கப்படும். இதற்கு ஆண்டு ஒன்றுக்கு, 17 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய எதிர்க்கட்சித் தலைவரும், அன்றைய எதிர்க்கட்சி உறுப்பினராகவும் உரையாற்றிய செல்வி ஜெயலலிதா அவர்கள், ஆளுநர் உரையில் நாம் குறிப்பிட்டிருக்கிற வளர்ச்சி விகிதத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் உண்மைக்கு மாறாக ஏதோ வெளியிட்டு இருப்பதாகக் கூறினார். அது உண்மைக்குப் புறம்பான தகவல் அல்ல. அவர்கள் குறிப்பாக இரண்டு ஆண்டுகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு இந்த ஆண்டில் வளர்ச்சி விகிதம் அதிகம் என்று சுட்டிக்காட்டினார்கள். ஆனால், நாம் நம்முடைய ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட தமிழகத்தின் பொருளாதார சராசரி வளர்ச்சி விகிதம் சரிந்து விழுந்துள்ளது. இதனை மீட்டெடுத்து வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்ல அரசு உறுதிபூண்டுள்ளது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம். இதிலே எதுவும் உண்மைக்கு மாறான தகவல் இல்லை. 2001-2006 என்ற இந்த ஐந்து ஆண்டுக்காலத்தில் தமிழகத்தின் பொருளாதார சராசரி வளர்ச்சி 4.3 விழுக்காடு. The Department of Economics and Statistics, Central Statistics Organisation, Delhi அவர்கள் தயாரித்துக் கொடுத்த புள்ளிவிவரம் இது. அதன்படி ஐந்து ஆண்டு காலம் 2001-லிருந்து 2006 அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.3 விழுக்காடு. அப்போது இந்திய நாட்டினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதார சராசரி வளர்ச்சி விகிதம் 6.7 விழுக்காடு. தமிழகத்தின் கடந்த ஐந்து ஆண்டு கால சராசரி வளர்ச்சி விகிதம், இந்திய நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட குறைவு என்பதை இந்த ஒப்பீட்டிலிருந்து எல்லோரும் புரிந்துகொள்ள முடியும். 2004-2005 ஆம் ஆண்டுமாத்திரம் தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் இந்திய நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட அதிகம் என்று அவர் தெரிவித்தார். அதைத்தான், அவர் இங்கே நாம் தவறு செய்து விட்டதாகக் குறிப்பிட்டார். ஒருவகையிலே நாம் சொல்வதும் சரி, அவர்கள் சொல்வதும் சரி. நான் சொல்வது ஐந்து ஆண்டு கால

சராசரி வளர்ச்சி. அவர்கள் சொன்னது ஓராண்டு காலத்தினுடைய நிலை. இரண்டுபேரும் சரிதான், புள்ளிவிவரத்தைப் பொறுத்த வரையிலே (சிரிப்பு).

அதேநேரத்தில், தி.மு.க. ஆட்சியிலே இருந்த, 1996-2001 ஆம் ஆண்டுகளை எடுத்துக்கொண்டால் அந்த ஐந்து ஆண்டு காலத்தில் இந்தியாவினுடைய சராசரி வளர்ச்சி விகிதம் 5.9 விழுக்காடு என்பதையும், தமிழகத்தின் சராசரி வளர்ச்சி விகிதம் 6.3 விழுக்காடு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மற்றொரு தகவல். மிடாஸ் நிறுவனத்தைப்பற்றி இங்கே பேசப்பட்டது. அதிலே அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருந்த திரு. பன்னீர்செல்வம் அவர்கள் ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். மிடாஸ் ஒன்றும் அதிகமாக உற்பத்தி செய்யவில்லை, கொள்முதல் செய்யவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த நிறுவனம் 2003ஆம் ஆண்டுதான் அமைக்கப்பட்டது. தொடங்கப்பட்டது. அதற்கு முன்பாக Mohan Breweries, Siva Distilleries, Balaji Distilleries என்று இப்படி பல நிறுவனங்கள் உண்டு, ஐந்து நிறுவனங்கள் உண்டு. 2003-ல்தான் இந்த மிடாஸ் நிறுவனம் தொடங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு Mohan Breweries நிறுவனத்திடமிருந்து கொள்முதல் 54.33 இலட்சம் பெட்டிகள், 2003-ல் 2004-2005-ல் 35.47 இலட்சம் பெட்டிகள் எனக்குறைந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. Mohan Breweries-ல் 2003-ல் 54 இலட்சம் பெட்டியாக இருந்தது இவர்கள் ஆரம்பித்த பிறகு, மிடாஸ் ஆரம்பித்த பிறகு, 2004-2005-ல் 35.47 என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது. பிறகு 2005-2006-ல் 30.03 இலட்சம் பெட்டியாக மேலும் குறைந்துவிட்டது.

Siva Distilleries Limited நிறுவனத்திடம் செய்யப்பட்ட கொள்முதல் 2003-2004-ல் 53 இலட்சம் பெட்டி முதலில். 2004-2005-ல் 40 இலட்சம் பெட்டி. 2005-2006-ல் 43.86 இலட்சம் பெட்டி. அதேமாதிரி Balaji Distilleries Limited நிறுவனத்தில் 2003-2004-ல் 44.09 இலட்சம் பெட்டி 2004-2005-ல் 45,72 இலட்சம்

பெட்டி. 2005-2006-ல் 50.19 இலட்சம் பெட்டி. இப்படி குறைந்துகொண்டே வருகிறது. Midas Golden Distilleries நிறுவனத்தில் செய்யப்பட்ட கொள்முதல் எவ்வளவு தெரியுமா? 2003-2004-லே ஆரம்பித்தபோது 12.85 இலட்சம் பெட்டிதான். 2004-2005-லே 28.68 இலட்சம் பெட்டி. 2005-2006-லே 51.04 இலட்சம் பெட்டி. ஒரு நிறுவனத்திலே மாத்திரம் இந்த அளவிற்கு உயர வேண்டிய காரணம் என்ன என்பதைத்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

இந்த மிடாஸ் நிறுவனம் தொடங்கிய 3 ஆண்டுகளில் எந்த அளவிற்கு வர்த்தகம் பெருகி இருக்கிறது தெரியுமா? Turn over, 2003-2004-லே, turn over மிடாசுக்கு 146 கோடி ரூபாய். 2004-2005-லே turn over 400 கோடி ரூபாய். 2005-2006-லே 600 கோடி ரூபாய். 146 கோடியிலே turn over-லே ஆரம்பித்து 600 கோடி ரூபாயிலே வந்து நின்றிருக்கிறது. நின்றிருக்கிறது. (சிரிப்பு). நல்ல காலம் தேர்தல் வந்துவிட்டது அப்புறம் காணோம்.

அப்புறம், கூட்டுறவுக் கடனைப்பற்றி ஒரு பெரிய ஆராய்ச்சி இங்கே நடைபெற்றது. கேட்டார்கள், அந்த அம்மையார் இங்கே கேட்டார்கள். விவசாயிகள் தேசிய வங்கிகளிடம் கடன் பெற்றிருக்கிறார்கள், அவர்கள் மட்டும் விவசாயிகள் இல்லையா? அவர்கள் வறட்சியால் பாதிக்கப்படவில்லையா? அந்தக் கடன்களை ஏன் தள்ளுபடி செய்யவில்லை? இது என்ன நியாயம் என்றெல்லாம் கேட்டார்கள். கடன் தொகையைக் கட்டியவர்களுக் கொல்லாம் திருப்பிக்கொடுத்துவிடுவீர்களா என்றும் கேட்டார்கள். 2001 ஆம் ஆண்டு இந்த அம்மையார் முதலமைச்சராக இருந்தபோது ஒரு 300 கோடி ரூபாயோ என்னவோ கடன் இரத்து பண்ணினார்கள், வட்டி தள்ளுபடி. இதையெல்லாம் அப்போது கடைப்பிடித்தார்களா என்பதுதான் தெரியவில்லை. அப்போது தேசிய வங்கிகளுக்குத் திருப்பிக் கொடுத்தார்களா? அந்தக் கடனை இரத்து பண்ணினார்களா? அப்போது ஏற்கெனவே கடன் கட்டியவர் களிடம் திருப்பிக் கொடுத்தார்களா என்பது தெரியவில்லை. ஆனால் தி.மு.க. ஆட்சியிலே நாம் கூட்டுறவுக் கடன் 7,000 கோடி ரூபாய், ஒன்றிரண்டு அல்ல 7,000 கோடி ரூபாய், இந்திய நாட்டு சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி)

அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். அரசு நபார்ட் வங்கியோடு கலந்து பேசி, கூட்டுறவு வங்கிகளுக்குத் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை இரத்து செய்திருக்கிறோம் என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) இது எப்படி? ஏன் இவர்களுக்கெல்லாம் கொடுக்கவில்லை, அவர்களெல்லாம் விவசாயிகள் இல்லையா என்று கேட்கிறார்கள். எல்லோரும் விவசாயிகள்தான். திராட்சைத்தோட்டம் போட்டிருப்பவர்கள்கூட விவசாயிகள் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). எல்லோரும் விவசாயிகள்தான். ஆனால், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த 300 கோடி ரூபாய் வட்டியைத் தள்ளுபடி செய்தார்களே, அப்போது நான் எதிர்க்கட்சிக்காரனாக இருந்தாலும்கூட அதை வரவேற்று முரசொலியிலே எழுதிய கடிதத்திற்கு 'நல்லதைப் பாராட்டாத கல் நெஞ்சம் நமக்கு இல்லை' என்ற தலைப்பில் அதைப் பாராட்டி எழுதியவன்தான் இந்த கருணாநிதி என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாநில அரசினுடைய வருவாய்மூலமே - இப்போது கேட்கிறார்கள், நபார்டு வங்கியிடம் பெர்மிஷன் வாங்கிவிட்டீர்களா? மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்ததா என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆனால் இவர்கள். நாம் கூட்டுறவுக் கடனை இரத்து செய்வோம் என்று சொன்னவுடன் பத்திரிகையிலே கொடுத்த அறிக்கையிலே, வேறு பத்திரிகையைக்கூட நான் நம்பமாட்டேன், தினத்தந்தியிலே வந்த அறிக்கையிலேயே, 'மாநில அரசின் வருவாய் மூலமே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனை இரத்து செய்வேன் - தினத்தந்தி 28-04-2006', தேர்தலுக்கு முன்னாடி இந்த அம்மையார் கொடுத்த அறிக்கையில், 'மாநில அரசின் வருவாய் மூலமே விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனை இரத்து செய்வேன்' என்று அன்றைக்குக் கூறியிருக்கின்றார்கள் அவர்கள் நம்மைப் பார்த்து, எப்படி தள்ளுபடி செய்வாய் என்று கேட்பது விந்தையிலும் விந்தை. இதைத்தவிர நான் வேறு எதுவும் சொல்ல விரும்பவில்லை.

இந்த அரசைப் பொறுத்தவரை நான் செய்தியாளர்களுக்காகக் கூறுகிறேன் இதை. கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்தால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படுகிற இழப்பை தமிழக அரசே ஏற்றுக்கொண்டு அந்த வங்கிகளுக்கு இழப்புத் தொகையைக்

கொடுத்து ஈடு செய்யும் - Repayment. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், வரும் ஆண்டுகளிலும் தேவையான மறு நிதி உதவி, Refinance support-ஐப் பெறும். இதுதான் அதற்குள்ள இலக்கணம் என்பதைப் பொருளாதாரம் தெரிந்தவர்களுக்குக் குறிப்பிட விரும்புகின்றேன், நிதி ஆதாரம் புரிந்தவர்களுக்குக் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). விவசாயிகளுக்கு வழங்கப்படும் கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்து அறிவிக்கப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் 31-03-2006 ஆம் ஆண்டு நிலுவையிலேயிருந்த கூட்டுறவுக் கடன்களைப் பெற்றிருந்த ஒவ்வொரு விவசாயிக்கும் இரத்து செய்யப்படும் மொத்தத் தொகையையும் குறிப்பிட்டு, முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக, 'கூட்டுறவுக் கடன் நிலுவை இல்லை' என்ற சான்றிதழ், 'No Due Certificate' வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). அவரவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அந்தச் சான்றிதழ் இதுபோல அமைந்திடும்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றிதழின் மாதிரியைக் காண்பித்தார்.)

இறுதியாக, அரசாங்கத்திடம் இருப்பது 3½ இலட்சம் ஏக்கர் தரிசு நிலம்தான். எப்படி வந்து ஏழைகளுக்கு நிலத்தை எல்லாம் கொடுக்க முடியும்? 1 கோடியே 82 இலட்சம் விவசாயிகள் என்றெல்லாம் கேட்டிருக்கின்றார்கள். நம்முடைய தேர்தல் அறிக்கையிலேயும் சரி, பிறகு ஆளுநர் உரையிலேயும் சரி, குறிப்பிட்ட சில வாசகங்களைச் சரியாகப் படிக்காமல் அல்லது படித்து வேண்டுமென்றே திருத்தி அதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்றே கருதுகின்றேன். அதிலே என்ன இருக்கிறது என்றால், நிலமற்ற விவசாயக் குடும்பம் என்றிருக்கிறது. விவசாயிகளின் எண்ணிக்கையைச் சொல்லவில்லை. விவசாயக் குடும்பங்களுக்கு என்றுதான் தேர்தல் அறிக்கையிலே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். குடும்பங்கள் என்று இருக்கிறது. ஒரு குடும்பத்திலே 3 பேர், 4 பேர்கூட இருப்பார்கள். அதனாலே விவசாயக் குடும்பங்களுக்கு என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம்.

அதன்படி கொடுப்பதற்கு முடியும் என்பது நம்முடைய கருத்து. அரசு நிலம் அவ்வளவு எங்கே இருக்கிறது என்று ஒரு கேள்வி வருகிறது. நாம் அது அவ்வளவும் அரசு நிலம் என்று சொல்லவில்லை. ஏழைகள் நிலம் என்று சொல்கிறார்கள். ஏழைகள் நிலமாக இருந்தாலும்கூட, கிராம பாஷையிலே சொன்னால், செய்நேர்த்தி என்று சொல்வார்களே, அதைச் சீர் செய்து, செய்நேர்த்தி செய்து, பதப்படுத்தி, பண்படுத்தி வைக்காத நிலமாக இருந்தால், அந்த ஏழை விவசாயியிடம் பணம் இருக்காது, எனவே, அதைப் பண்படுத்திக்கொடுத்து, அந்த ஏழை விவசாயிக்கு அது வேண்டும் என்றால், அவனுக்கே திரும்பிக் கொடுக்கிற காரியம். வேண்டாம் என்றால், அதற்கு ஒரு விலையைக் கொடுத்து, இன்னொரு ஏழை விவசாயிக்கு அதைக் கொடுக்கிற காரியம்தான் நான் சொன்ன தத்துவமே தவிர, வேறு அல்ல என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, நம்முடைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் நேற்றைக்குச் சொல்லியிருக்கிறார். தமிழகத்திலே 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு தலா 2 ஏக்கர் நிலம் கொடுப்பதாக இருந்தால், 1 கோடியே 72 இலட்சம் ஏக்கர் தேவைப்படும். தமிழகத்தில் எங்கே அவ்வளவு நிலம் இருக்கிறது? அரசிடம் 3 இலட்சம் ஏக்கர் நிலம்தான் உள்ளது என்ற புள்ளிவிவரங்களை விரல் நுனியிலே வைத்துக்கொண்டு, கேள்விகளைக் கேட்டு, ஆளுங்கட்சியை திணறடித்தாரே, அதற்கு இவர்களால் பதில் கூற முடிந்ததா என்று வை.கோ. அவர்கள் அவருக்கே உரிய புயல் வேகத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். 3 முறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இதைக்கூட எப்படி புரிந்துகொள்ளாமல் இருக்கிறார் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

தமிழகத்திலே 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நான் முதலிலே சொல்லியபடி விவசாயக் குடும்பங்கள் என்று பார்த்தால், 20 இலட்சம் குடும்பங்கள்தான் வரும். நாம் வந்து எல்லோருக்கும் நிலம் கொடுக்கிறோம் என்று சொல்லவில்லை. எல்லோருக்கும் நிலம் கொடுப்பதாகச் சொல்ல வில்லை. நாம் சொல்வது என்னவென்றால், இருக்கிற நிலத்தை

எடுத்துப் பிரிக்கும்போது, நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுப்போம் என்று சொல்கிறோம். இருக்கிற நிலத்தை எடுத்து நாம் பிரித்துக் கொடுக்கும்போது, நிச்சயமாக ஒரு 20 இலட்சம் பேருக்குக் கொடுக்க முடியும். அவ்வளவு நிலம் இருக்கிறது என்பது நம்முடைய கணிப்பு. அந்தக் கணிப்பின்படிதான் சொல்கிறோம்.

1 கோடியே 72 இலட்சம் ஏக்கர் தேவைப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், இந்தச் சந்தேகம் அவர்களுக்கு எப்போது வந்து இருக்க வேண்டும்? இது மதி.மு.க.-வுடைய தேர்தல் அறிக்கை. பம்பரம் போட்டிருக்கிறது. தேர்தல் அறிக்கை.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையின் நகலைக் காண்பித்தார்.)

இந்தச் சந்தேகம் வந்து வை.கோவிற்கு எப்பொழுது வந்திருக்க வேண்டும்? அவர்கள் தேர்தல் அறிக்கையிலே, ஒரு பகுதியை படித்துக் காண்பிக்கின்றேன்.

'தமிழகத்தில் - 'நிலமற்ற விவசாயத் தொழிலாளர் நலம்' என்கின்ற தலைப்பில் - 'தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, ஏறத்தாழ 86 இலட்சம் நிலமற்ற விசாயக் கூலிகள் உள்ளனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 31 விழுக்காடு ஆவர். 'வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு தரிசு நிலங்களை தலா இரண்டு ஏக்கர் நிலம் வழங்கவேண்டும் என்று மறுமலர்ச்சி தி.மு.க. வலியுறுத்தும்.' இதை எழுதும்போது, எங்கே போயிற்று இந்த புத்தி? (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது கேட்கிற இந்த அறிவு, தெளிவு இதெல்லாம் அதை எழுதும்போது இருக்க வேண்டாமா? (குறுக்கீடு) இல்லை, இல்லை, கூட்டணி நம்மகூட இருந்தால் புத்தி இருக்காதா என்ன? (சிரிப்பு). கூட்டணியிலே இருந்தால்தான் புத்தி இருக்கும். (சிரிப்பு). இது அவர்கள் தேர்தல் அறிக்கை அவர்களோடு இணைந்தபிறகு வந்த தேர்தல் அறிக்கையிலே. இதை தெரிவித்திருக்கிறார்கள். 86 இலட்சம் பேருக்கு தலைக்கு இரண்டு ஏக்கர் வீதம் கொடுப்போம். தலா இரண்டு ஏக்கர் வீதம் கொடுப்போம். அப்போது இந்த ஒரு கோடியே 72 இலட்சம் ஏக்கர் எங்கேயிருந்து வரும்? வேண்டுமென்றே நம்முடைய பெரிய

திட்டங்களை சிறுமைப்படுத்த வேண்டும் என்பதற்காக (குறுக்கீடு) அவர் சொல்லுவதுபோல், கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காக இதெல்லாம் சொல்லப்படுகிறது.

இவ்வளவும் முடியுமா, அது வேறு விஷயம், முடியாதுதான். முடியாததை முடித்துக் காட்டுவதுதான் உண்மையாக, மக்களுக்கு ஆற்றக்கூடிய ஒரு அரசினுடைய கடமையாக இருக்கமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி). அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த மாமன்றத்திலே கூடியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகு, என்னுடைய விளக்கங்களை ஏற்று, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு தீர்மானத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா. . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சிறு அறிவிப்பு, ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட இருப்பதால் குறுவை சாகுபடிக்குப் புதிய பயிர்க் கடனை கூட்டுறவு வங்கிகள் தரப்போகிறதா இல்லையா என்ற கேள்விக்குப் பதிலாக இந்த அறிவுப்பு. குறுவை சாகுபடிக்குத் தேவையான புதிய பயிர்க் கடன்களை டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கிடத்தக்க வகையில், ஜூன் 12 ஆம் தேதிக்கு முன்னதாகவே தொடக்கக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தேவையான நிதி உதவியை அரசு வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

உரை : 26 நாள் : 27.01.2007

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 நாட்களாக இந்த மாமன்றத்தில் இதுவரையிலே ஆளுநர் உரையின்மீது 37 பேர் உரையாற்றி, 38-வது நபராக நான் என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்க உங்களுடைய அனுமதியோடு இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன்.

ஆளுநர் உரையிலே, காங்கிரஸ் கட்சியின் சார்பாக, முதல் குரல் எழுப்பிய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் - எப்போதுமே அவருடைய உரை இனிப்பாக இருக்கும் கேட்பதற்கும், இரசிப்பதற்கும். அந்த இனிப்பு சில நேரங்களில் கற்கண்டை மெல்லுவதைப்போல இருக்கும். அதாவது, கொஞ்சம் கரடு முரடாகவும் இருக்கும். (சிரிப்பு). ஆனால், இனிப்பாக இருக்கும். அந்த வகையிலே அவருடைய உரையை அன்றைக்கு ஆற்றி, இந்த அரசுக்குத் தரவேண்டிய முன்னறிவிப்புகளை, எச்சரிக்கைகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடல் மடை திறந்தாற்போல, நம்முடைய கழக உறுப்பினர்களுடைய சார்பில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதத்தைத் தொடங்கிவைத்துப் பேசிய திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள், பல கோரிக்கைகளை எடுத்து வைத்து, அவருடைய உரையை நிகழ்த்தியிருக்கின்றார். இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய அந்தக் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும்,

காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் உரையாற்றிய நம்முடைய சுதர்சனம் அவர்களும், இந்த அரசுக்குத் தேவையான அறிவுரைகளை எல்லாம் அனுபவரீதியாக எடுத்து வைத்து இருக்கிறார்கள்.

இந்த அரசுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்பதிலே காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்கள் காட்டிய அக்கறை, இப்போது அமைதியாக இருக்கிற தமிழகத்தில் அமளிகளை உருவாக்குவதற்காக ஏதேதோ செய்திகளைச் சிலர் வெளியிடுவதைப் பற்றியதாகும். அந்தச் செய்திகளின் மூலமாக, தமிழகத்திலே மீண்டும் இலங்கையினுடைய தீவிரவாதிகள் படையெடுத்திருக்கிறார்களோ என்கின்ற அச்சத்தை உருவாக்க, பீதியைக் கிளப்ப, பெருமுயற்சி நடைபெறுகிறது என்றெல்லாம் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

முக்கியமாக இலங்கைப் பிரச்சினையைப்பற்றி அவர் பேசும்போது, இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதி சிவா என்கின்ற சிவகரன், தமிழகத்திலே மண்டப முகாமை விட்டு வெளியே வந்து, சென்னை, திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலே தங்கியிருந்தார். அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்ததில், அவர் மேலும் சிலரோடு சேர்ந்து, கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவந்தது. 23-1-2007 அன்று, இந்த சிவகரன் தன் கூட்டாளிகள் 7 பேரோடு, 5 இலங்கைத் தமிழர்கள் மற்றம் தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 பேர், இவர்களோடு இணைந்து, சென்னை பெரியமேட்டில் ஒரு லாரியில் சந்தேகத்திற்கிடமான பொருட்களை ஏற்றிக்கொண்டு இருக்கும்போது, 'Q' பிரிவு போலீசார் சோதனை செய்ததில், ஒரு மினி லாரியில், 8 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட, 2,000 கிலோ எடையுள்ள இரும்பு குண்டுகள், 40 சாக்கு மூட்டைகளில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பணம், மினி லாரி, ஒரு டாட்டா இண்டிகா கார் மற்றும் 3 செல் போன்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் செய்தி தரப்பட்டிருக்கிறது. விசாரணையில், மேற்படி இரும்பு குண்டுகள் மும்பையிலேயிருந்து லாரி சர்வீஸ் மூலமாக தருவிக்கப்பட்டன என்று தெரிவித்தார்கள்.

மேலும். நடைபெற்ற விசாரணையில், 60 சாக்கு மூட்டைகளில், இரும்பு குண்டுகள், இலங்கைக்கு கடத்தப்

படுவதற்காக, தூத்துக்குடியிலே வசிக்கும் பிரபாகரன் என்கிற வேலுச்சாமி என்பவர் ஏற்பாடு செய்த வீட்டில் இருப்பதாகக் கிடைத்த தகவல்படி, அவர் அடையாளம் காட்டிய டேவிஸ்புரம் என்ற இடத்திலுள்ள வாடகை வீட்டைச் சோதனை செய்ததில், தலா 50 கிலோ எடை கொண்ட 60 சாக்கு மூட்டைகளில் இரும்பு குண்டுகள் கைப்பற்றப்பட்டு, எதிரி பிரபாகரன் என்கிற வேலுச்சாமி, 24-1-2007 அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக, வழக்கு பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட 9 எதிரிகளும், நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டு, சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். 'Q' பிரிவு போலீசார், மராட்டிய மாநிலத்திற்கும் புலன் விசாரணைக்கெனச் சென்று வந்திருக்கிறார்கள். இந்தச் செய்தியைத்தான் நம்முடைய சுதர்சனம் அவர்கள் பேசும்போது, இந்த அபாயத்தை மேலும் வளரவிடக் கூடாது; அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தனக்கே உரிய பாச உணர்வோடு, இங்கே சுட்டிக்காட்டி யிருக்கின்றார்.

நான் அவருக்கும், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாத் தோழமைக் கட்சிகளினுடைய உறப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்வேன், திராவிட முன்னேற்றக் கழக அரசு இதுபோன்ற வன்முறைகளை நிச்சயமாக அனுமதிக்காது என்பதை நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இலங்கைப் பிரச்சினையிலே ஒரு சுமுகமான முடிவு காண வேண்டும் என்று எல்லோரும் எண்ணுகிற நேரத்தில், "நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்கின்ற அளவிற்கு, பலர் இன்றைக்கு சிந்திக்கின்ற இந்தக் காலகட்டத்தில், இதுபோன்ற செய்திகள் பின்னடைவைத்தான் அவர்களுக்கு ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

சில தகவல்கள் இங்கே கூறப்பட்டன. அதிலும், குறிப்பாக, நம்முடைய சுதர்சனம் அவர்கள் சொன்னார்கள். எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. வேறு மாநிலங்களில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கெல்லாம் அதிகத் தொகை வழங்கப்படுகிறது; ஆனால்,

இங்கே 500 ரூபாய்தான் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவருக்கு யாரோ ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் சுதந்திரமாக ஒரு தவறாக கருத்தை சொல்லியிருப்பார் என்று கருதுகின்றேன்.

மாநில அரசின் ஓய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களுடைய எண்ணிக்கை 1,112. அவர்களுக்குத் தரப்படுகின்ற ஓய்வூதியம் 3,000 ரூபாய். அஃதன்னியில், மருத்துவப் படி 15 ரூபாய் தரப்படுகிறது. அந்த ஓய்வூதியம் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு - அவர்களுடைய எண்ணிக்கை 2,114 - அவர்களுக்கு 1,500 ரூபாய் தரப்படுகிறது. 500 ரூபாய அல்ல (மேசையைத் தட்டும் ஒலி). தயவுசெய்து அவர்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் அதிகம் வேண்டுமென்றால், பட்ஜெட் நேரத்திலே நம்முடைய நிதியமைச்சர் அதைப் பற்றிக் கவனிப்பார் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பொழுதுள்ள நிலைமையை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு தவறான தகவல், நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் பேசும்பொழுது சொன்னார், கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு போனஸ் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார். கூட்டுறவு அமைப்புகளிலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு உரிய போனஸ் அல்லது பொங்கல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அவர் இப்போது இல்லாத காரணத்தால் இதைக் கேட்டு வேல்முருகன் அவரிடத்திலே சொல்ல வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். இப்படிச் சில தகவல்கள் திருத்தப்படவேண்டியவைகளாக இங்கே சொல்லப்பட்டாலுங்கூட அந்தத் தகவல்களிலே உண்மை இருக்குமேயானால் அவைகளை நிச்சயமாக கவனித்து இந்த அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் என்று நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்னொன்று குறிப்பிட்டார். மறைமலையடிகளாரை நாம் மறந்துவிட்டதைப்போல நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் இங்கே சொன்னார்கள். இல்லை. மறைமலையடிகளாருடைய புத்தகங்களையெல்லாம் இந்த அரசு பெற்று, அதற்கான உரிய

தொகையை, நல்ல தொகையை ஏற்கெனவே வழங்கியிருக்கிறது. 1997ஆம் ஆண்டு கழக அரசு இருந்தபோது மறைமலையடிகளுடைய நூல்களை நாட்டுடைமையாக்கி அவரது மரபுரிமையாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றோம். தற்போது மறைமலையடிகளுடைய பெயர்த்தி சுந்தரத்தம்மையார் வைத்திருக்கும் நூல்களைப் பெற்றுக்கொண்டு ஒரு இலட்சம் ரூபாயும், அவரது மருத்துவச் செலவுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கியதோடு, சுந்தரத்தம்மையாரது மகள் கலைச்செல்விக்கு அரசுப் பணியும் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மறைமலையடிகளின் நினைவைப் போற்றி இந்த அரசு அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிட ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்கள். நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1967-ல் ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகம் 1969-லே அண்ணா மறைவுக்குப் பிறகு நான் பொறுப்பேற்றுக் கொண்டபொழுது அங்கே சைதாப்பேட்டைக்கருகிலே இருந்த பாலத்திற்கே மறைமலையடிகள் பாலம் என்று பெயர் வைத்தவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி). அப்படிப்பட்ட நான் மறைமலையடிகளுடைய தபால் தலை வெளியிடுவதற்குத்தானா தயங்குவேன் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நிச்சயமாக அது நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ஜி.கே. மணி அவர்கள் மிக முக்கியமான ஒகேனக்கல் திட்டத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார். ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதியுதவி அதற்காகக் கோரப்பட்டுள்ளது. இந்த வாரம்தான் ஜப்பான் நாட்டு நிபுணர்கள் தருமபுரி மாவட்டம் சென்று திட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளார்கள் மைய அரசும் இத்திட்டத்திற்கு ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெற மிகுந்த முன்னுரிமை அளித்து ஜப்பான் அரசுக்குத் தெரிவித்துள்ளது. ஜப்பான் அரசுக்குத் தெரிவித்துள்ள இந்தச் செய்தி, ஜப்பான் நாட்டு நிதியுதவி கிடைக்க வாய்ப்புகளை அதிகமாக்கியிருக்கிறது. எனினும் ஜப்பான் நாட்டு நிதியுதவி ஏதேனும் ஒரு காரணத்தால் கிடைக்கா விட்டால் அரசு வேறு நிதி ஆதாரம் பெற்று இத்திட்டத்தை

நிச்சயமாக நிறைவேற்றும் என்பதை திரு. மணி அவர்களுக்கு நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அவர்கள் கேட்டுக்கொண்டபடி, மக்கள் தொகை கணக்கெடுப்புத் திட்டத்தில் பணியாற்றிய தற்காலிகப் பணியாளர்களுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அரசுப் பணி வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெளிவாக்க விரும்புகின்றேன். அவர்களுக்குப் பணி கொடுக்காமல் இல்லை. பணி வழங்கப்பட்டு வருகின்றது.

நம்முடைய ஊராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்ததைப் பற்றியும், பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற இடங்களில் ஆதி திராவிட மக்கள் பெற இருந்த உரிமையை கடந்த காலத்திலே பெற முடியாமல் போய், இப்பொழுது இந்த ஆட்சியில் இங்கே வீற்றிருக்கின்ற எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களுடைய ஒத்துழைப்போட அங்கே தேர்தல் நடைபெற்று அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் இப்பொழுது அங்கே அந்தக் கிராம ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அது மாத்திரமல்ல, ஆதி திராவிட மக்களுக்காக இந்த அரசு எடுத்த முயற்சி அதோடு மாத்திரம் நிற்கவில்லை. உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேனி மாவட்டத்தில், தேனி மாவட்டக் கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் ஒரு ஆதி திராவிடர். தனித் தொகுதி அது. தேர்தல் நடந்தது. தி.மு.க. 6 பேராக இருந்தார்கள் - 4 பேர் அ.தி.மு.க. தி.மு.கழகத்தின் சார்பில் 6 பேர் வெற்றி பெற்றிருந்த போதிலும் அதிலே ஒருவர்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் இல்லை. ஆனால் அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற 4 பேரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் வாக்களிக்காவிட்டால் அங்கே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு ஆதி திராவிடத் தோழர் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. இந்த நிலைமையிலே தேர்தல் ஒத்திவைக்கப்பெற்றது. இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வந்த பிறகு, நண்பர் திருமாவளவன் அவர்கள் என்னைச் சந்தித்து, நானும் அவரும் இதைப் பற்றிப் பேசினோம். நான் அவரிடத்திலே சொன்னேன், யாரும் கவலைப்பட வேண்டாம், ஓர் ஆதி திராவிடர், மாவட்டக் கவுன்சிலுக்குத் தலைவராக வருவதை நாம் யாரும் இந்தச் சூழலில் நிறுத்திவிடக் கூடாது, எனவே தி.மு.க. தன்னுடைய

ஓட்டுகளை அவருக்குப் போடத் தயாராக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, அ.தி.மு.க.-வைச் சேர்ந்த ஆதி திராவிடத் தோழருக்கு தி.மு.க.வினுடைய 6 ஓட்டுகளையும் போட்டு, அவர் இன்றைக்கு தேனி மாவட்டத்தினுடைய பஞ்சாயத்துக் குழுத் தலைவராக ஆகியிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரியலூர் மாவட்டத்தைப் பற்றி மணி அவர்கள் சொன்னார்கள். மாவட்டத்தைப் பிரித்ததற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்; ஆனால் இன்னும் அதிகாரிகள் வேலையைத் தொடங்கவில்லை என்றார்கள். மணி அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இப்பொழுது தேர்தல் ஆணையத்தின் சார்பாகத் தொகுதிகளைப் பிரித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அது பூரணத்துவம் பெற்ற பிறகுதான், அந்தப் பணிகள் நடக்க முடியும். அது விரைவிலே முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏப்ரல் மாதத்திற்குள் அது முடிந்துவிடும். முடிந்த பிறகு அரியலூர் மாவட்டம் செயல்படத் தொடங்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற மாநிலங்களிலே உள்ள பள்ளிகளில் தமிழ்ப் பாடம் படிக்கும் மாணவர்களுக்குப் பாட நூலும், தமிழ் வழிக் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட பாட நூல்களும், தமிழ் நாடு பாட நூல் கழகம் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு கிடைக்கவில்லையே என்கிற கவலை மணி அவர்களுக்குத் தேவையில்லை. இப்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் ஏதாவது தயக்கமோ, சுணக்கமோ இருந்தால், தெரிவித்தால் உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்றும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல், எதிர்க்கட்சியின் சார்பாக இங்கே யாரும் கடந்த 5, 6 நாட்களாக அவையிலே நடவடிக்கைகளிலே கலந்து கொள்வதில்லை; வந்து கையெழுத்துப் போட்டுவிட்டு, வாங்க வேண்டியதை வாங்கிக்கொண்டு போய் விடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). நான் வாங்க வேண்டியது என்று சொல்வது இன்றைக்கு என்னென்ன குறிப்புகள் அவையிலே வைக்கப்படுகின்றன; (சிரிப்பு) - உறுப்பினர்களுக்குத்

தரப்படுகின்றன என்ற முறையிலே வாங்கிக் கொண்டு போகிறார்கள் என்று சொன்னேன். தவறாக யாரும் கருதிக்கொண்டு சிரித்தால், அந்தச் சிரிப்பிற்கு நான் பொறுப்பாளியல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 8 மாதக் காலத்தில் இந்த அரசு மக்களுக்கு எதுவும் செய்யவில்லை; அதையெல்லாம் தொகுத்துத்தான், எதுவும் செய்யாத சர்க்கார் இது, செய்யாததை யெல்லாம் தொகுத்துத்தான் இந்த அவையிலே ஆளுநர் உரை என்ற பெயரால் வெளியிட்டிருக்கிறார்கள்; இதைக் குப்பைத் தொட்டியிலேதான் போட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருக்கின்றார்; அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். பேசியிருந்தாலும்கூட பேசவில்லையென்று மறுத்துவிடலாம். அறிக்கையே அச்சடித்து வெளியிடப்பட்டிருக்கிறது. நான் குப்பைத் தொட்டியை இழிவாகக் கருதவில்லை. நான் 15 ஆண்டுகளுக்கு முன்பு 'குப்பைத் தொட்டி' என்றே ஒரு சிறுகதை எழுதி, அந்தக் கதை, ஆங்கிலத்தில், மலையாளத்தில், தெலுங்கில், இந்தியில் (மேசையைத் தட்டும் ஒலி). Illustrated Weekly வரையிலே மொழி பெயர்க்கப்பட்டு, இந்தியா முழுவதம் பரவிய கதை, 'குப்பைத் தொட்டி' என்ற அந்தக் கதை. ஒருவேளை அந்தக் குப்பைத் தொட்டியிலே இதைப் போடச் சொன்னார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. நான் அதற்காக கவலைப் படுவதில்லை.

ஆனால் எனக்குள்ள ஒரே ஒரு வருத்தம்; இந்த ஆளுநர் உரையில் என்னுடைய வாசகங்கள் மாத்திரமல்ல, அறிஞர் அண்ணா அவர்களுடைய வாசகம், இந்திய அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும், புதிய சிந்தனை வேண்டும் என்றெல்லாம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு மாநிலங்களவையிலே அண்ணா பேசியதை இதிலே தொகுத்திருக்கின்றோம்; அதையும் சேர்த்துக் குப்பைத் தொட்டியிலே போடுங்கள் என்று, அண்ணா பெயரைக் கட்சிக்கு வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் சொன்னார்களே என்பதை எண்ணும்போது, எனக்கு வேதனையாக இருக்கின்றது. இதை நான் மக்களுடைய தீர்ப்புக்கு விட்டுவிடுகின்றேன்; நான் மனதைக் குழப்பிக்கொள்ள விரும்பவில்லை.

எட்டு மாதக் காலத்திலே தி.மு.க. ஆட்சியில் எதுவும் செய்யவில்லையா? என்னென்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை

நீங்களெல்லாம் சொல்லியிருக்கின்றீர்கள். இருந்தாலுங்கூட, நானும் பேசி பதிலுரையிலே குறிப்பிட்டு, அவற்றையெல்லாம் பதிய வைக்க வேண்டும் என்று விரும்புவது இயற்கைதான்.

7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் அறவே தள்ளுபடி செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் பயன் பெற்றவர்கள் 22 இலட்சத்து 39 ஆயிரத்து 111 பேர்.

நடப்பாண்டு பயிர்க் கடன் வட்டி விகிதம் 7 விழுக்காடாகக் குறைப்பு. அதனால் பயன்பெற்றோர் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர். நடப்பாண்டில் விவசாயக் கடன்களுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு. இந்த ஆண்டு புதிதாக விவசாயக் கடன் பெற்றவர்கள் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 872 பேர். வழங்கப்பட்ட கடன் தொகை 818 கோடி ரூபாய்.

விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிச் சட்டம், 22-2-2007 அன்று தஞ்சை மாவட்டத்திலே தொடங்க இருக்கிறது; நான் சென்று தொடங்கி வைக்க இருக்கின்றேன். இந்தத் திட்டம் ஏதோ அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு கோடி பேருக்குமேல் வழங்கப்பட்டது என்றும், இப்போது 66 இலட்சம் பேர்களுக்குத்தான் என்று சொல்கிறார்கள் என்றும் அறிக்கை விடுகிறார்கள். உண்மை அதுவல்ல. இந்த 70 இலட்சம் பேர் என்பது 72 இலட்சம் குடும்பங்கள். 72 இலட்சம் குடும்பங்கள் என்றால், 2 கோடியே 25 இலட்சம் பேர் பயன் பெறுவார்கள் என்ற கணக்கு அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் - (மேசையைத் தட்டும் ஒலி) நான் குடும்பம் என்ற கணக்கைச் சொல்கிறேன். அவர்கள் குடும்பத்தை விட்டுவிட்டு தனிநபர் என்ற கணக்கை அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு கோடியே 99 இலட்சம். 72 இலட்சம் குடும்பங்களுக்கு, தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த வாரியத்தால் பயன் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம். இதனால் பயன்பெற்றோர் சுமார் 50 ஆயிரம் பேர். சுமார் 50 ஆயிரம் ஏக்கர் இரண்டு கட்டங்களில் தந்திருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு

அமைச்சர் சென்று இந்த நிலத்தை விநியோகித்தது, உங்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். எவ்வளவு நிலம் இருக்கிறது? நாங்கள் வைத்திருக்கிற நிலம் இவ்வளவுதான் என்றெல்லாம் சொன்னபோதுகூட அது எவ்வளவு இருந்தாலும் பரவாயில்லை, கையகல நிலமாக இருந்தாலும், அது ஏழை விவசாயிகளுக்குத் தான் வழங்கப்படும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) இதே மாமன்றத்திலே சொல்லி, அப்படித்தான் இன்றைக்கு அது வழங்கப்பட்டு வருகிறது.

தரமான அரிசி, கிலோ 2 ரூபாய். நேற்றுகூட ஒரு அறிக்கை பார்த்தேன். நாம் கொடுக்கிற அரிசியை மாடுகளுக்குப் போடுகிறார்களாம். அந்த மாடுகள் செத்துவிடுகின்றனவாம். எவ்வளவு வேடிக்கையான வேதனையான அறிக்கை, இது என்பதை - அதுவும் யார் வெளியிடுகிற அறிக்கை? யாரோ ஏனோ தானோக்கள் வெளியிட்ட அறிக்கை அல்ல. நாம் வழங்குகின்ற அந்த அரிசி 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று வழங்குகிறோமே, இதனால் பயனடைவோர் ஒரு கோடியே 79 இலட்சம் குடும்பங்கள்.

750 கோடி ரூபாயில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம். 25 இலட்சத்து 30 ஆயிரம் குடும்பத்தினர் பயன்பெறுகிறார்கள். இது மிகப்பெரிய திட்டம்; பிரம்மாண்டமானத் திட்டம். இதை மிகுந்த ஜாக்கிரதையாக, ஒளிவு மறைவின்றி, எந்தவிதமான ஊழலுக்கும், புகாருக்கும் இடமின்றி வழங்க வேண்டுமென்பதற்காக, சட்டமன்றத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்களையெல்லாம் பங்கு பெறச் செய்து, குழு அமைத்து, அந்தக் குழுவின் ஆலோசனைப்படிதான், யாரிடத்திலே வாங்கலாம், எந்தக் கம்பெனியிலே இந்த தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கலாம், அவற்றை யார் யாருக்கு வழங்கலாம், எந்த முறையில் வழங்கலாம் என்று இவை அனைத்தையும் சிந்தித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நேற்றைக்குக்கூட, இங்கே ஒரு விவாதம் நடந்தது. நாங்கள் கிராமங்களில் இந்த அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்துகொண்டு செய்யவேண்டும்; அதை ஏற்கெனவே உள்ளாட்சித் துறை

அமைச்சர் ஒத்துக்கொண்டிருக்கிறார் என்றெல்லாம் விவாதம் நடந்தது. ஆனால், அப்போது எண்ணிக்கொண்டேன். சட்டமன்ற உறுப்பினர்களை ஒரு குழுவிலே போட்டால் எல்லோரும் வருகிறார்களா? பார்த்தோமே அனுபவத்தில்! எல்லோரும் வந்தால் பரவாயில்லை, வருவதில்லை. எல்லோரும் அதிலே அங்கம் வகிப்பதில்லை, இடம் பெறுவதில்லை. குறை சொல்வதற்கு வேண்டுமானால் அவர்கள் இருப்பார்களே தவிர, சேர்ந்து ஒத்துழைத்து, மக்களுக்குப் போய்ச் சேருகின்ற காரியம்தானே! அரசோடு ஒத்துழைப்போம் என்று எண்ணுகின்றவர்கள் யார் இருக்கிறார்கள்? யாருமே இல்லையென்று சொல்லவில்லை. எதிர்க்கட்யிலே யாரும் இல்லை. அதற்குத் தயாராக இல்லை. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து, இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக்கூட, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக்கூட, எப்படிச் செயல்படுத்தலாம் என்பதை அமர்ந்து பேசுங்கள். ஆனால் நான் கருதுவது 'நெல்லுக்கு இறைத்த நீர், வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் பொசியக்கூடாது; நெல்லுக்கு நேராகவே செல்லவேண்டும். அப்படிப்பட்ட முறையிலே போய்ச் சேர, நீங்கள் ஒரு ஆலோசனையைச் சொல்லுங்கள். நானே முன்னின்று அந்தக் கூட்டத்தை நடத்துகின்றேன். அந்தக் கூட்டத்திலே நீங்கள் எடுக்கின்ற முடிவின்படி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை, கிராமங்களிலே நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏனென்றால், நேற்றைக்கு இந்தப் பிரச்சினை வந்தபோது, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. அவர் சொன்னதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அதற்கு அதிக ஆதரவு அங்கேயிருப்பதைவிட, இங்கே ஆளுங்கட்சியில் அதிகமாக இருக்கிறது. (சிரிப்பு). அதனால்தான் சொல்கின்றேன், அதிகாரிகளும் அதிலே ஈடுபடலாம், அதே நேரத்தில் மக்கள் பிரதிநிதிகளும் ஈடுபடலாம். இரண்டுபேரும் ஈடுபட்டால்தான், இவர் தவறு செய்தால், அவர் கண்டுபிடிக்கலாம்; அவர் தவறு செய்தால், இவர் கண்டுபிடிக்கலாம்; இரண்டுபேரும் தவறு செய்தால், அதை நான் கண்டுபிடிக்கலாம். (சிரிப்பு). (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, அந்தத் திட்டம், மிக உயர்ந்த திட்டம்;

சிறந்த திட்டம்; பெரிய திட்டம்; மக்களிடையே போய்ச் சேரக்கூடிய திட்டம். அதை ஒழுங்காக நாம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பொங்கல் முதல், நடப்பு ஆண்டில் இலவச எரி வாயு அடுப்பு இணைப்பின்மூலம் பயன் அடைவோர் மூன்று இலட்சம் குடும்பங்கள். இப்படி நம்முடைய பழைய திட்டங்கள் பலவற்றை இடையிலேயிருந்த ஆட்சி ஒழித்துவிட்டது என்றாலும், அவற்றையெல்லாம், இன்றைக்கு மீண்டும் செயல்படுத்துகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சுனாமி வந்தது. சுனாமி வந்து இரண்டு ஆண்டுகாலம் ஆகிறது. 2004 ஆம் ஆண்டு சுனாமி வந்தது. வந்தபோது எனக்கே, என்னுடைய வாழ்விற்கே சுனாமி வந்ததைப்போல, நான் சுருண்டு படுத்துவிட்டேன். அப்படிப்பட்ட சுகவீனம் எனக்கு ஏற்பட்டது. நான் மருத்துவமனையில் இருந்ததைப் பார்க்க, நம்முடைய அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய திருமதி சோனியா காந்தி அவர்கள் நேரடியாக மருத்துவமனைக்கே வந்து உடல்நலம் விசாரித்தார்கள். அப்போதுகூட, 1 கோடி ரூபாயை தி.மு.க. அறக்கட்டளையிலேயிருந்து அவர்களிடத்திலே வழங்கி, அதைச் சுனாமி நிதியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி). சுனாமி நிவாரணப் பணிகளுக்கு, 2004-ல் டிசம்பர் 26ஆம் தேதி, சுனாமி காரணமாக தமிழ்நாடு பாதித்தபோது, நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து இராஜிவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் - இவ்வாறு பெயர் வைக்கவேண்டும் என்று சொன்னதே நான்தான் அப்பொழுது. டெல்லியிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில், அந்தத் திட்டத்திற்கு, இராஜிவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று நான் கேட்டு, அது ஏற்கப்பட்டது - அன்றைக்கு அதற்கு 2,347 கோடி ரூபாய்; பன்னாட்டு உதவிகள் மூலமாக 2,550 கோடி; மொத்தம் ரூபாய் 4,897 கோடி ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட இந்தப் பணத்தில், உடனடி நிவாரணத்திற்கு ஓரளவுத் தொகை வழங்கப்பட்டதே அல்லாமல், நிரந்தர நிவாரணங்களுக்காகச் செலவிடப்படவில்லை. அதற்காகச் சென்ற கோப்புகள் எல்லாம் கையெழுத்துப்

போடப்படாமலே தூங்கிக் கொண்டிருந்தன. நாம் ஆட்சிக்கு வந்தபிறகுதான், அந்தக் கோப்புகளையெல்லாம் தட்டியெழுப்பி, வேலை பார்க்க வைத்தோம்.

அதுமாத்திரமல்ல; ஏழு மாதங்களுக்குப் பிறகு - 2004 டிசம்பரில் சுனாமிப் பேரலைகள் வீசியது என்றால், அதற்குப் பிறகு, பல மாதங்களுக்குப் பிறகு - மன்னிக்க வேண்டுகிறேன். ஏழு மாதங்கள் அல்ல; பதினேழு மாதங்களுக்குப் பிறகு, நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், உடனடியாக, பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை நாமக்கல் கவிஞர் மாளிகையிலே கூட்டினேன். கூட்டத்தைக் கூட்டி, என்ன வேலை நடைபெற்றிருக்கிறது என்று கேட்டால், அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நிரந்தரமான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை' என்று சொன்னார்கள். எப்பொழுது? பதினேழு மாதங்கள் கழித்துச் சொல்கிறார்கள். தற்காலிக உதவிகள், வேலைகள் செய்யப் பட்டிருக்கின்றன. ஆயிரம், இரண்டாயிரம், 500, 600 என்று தற்காலிக உதவி, உடனடி உதவி செய்யப்பட்டதே அல்லாமல், அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டுகின்ற இந்தப் பணி தொடங்கப்படவும் இல்லை; நிறைவு செய்யப்படவும் இல்லை.

54,087 வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு மாறாக, தொண்டு நிறுவனங்கள் மூலம் கட்டப்பட்ட வீடுகள் 8,406. அதுவும் அரசின் சார்பாக அல்ல. 54,087 வீடுகள் கட்டுவதாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள்மூலம் 8,406 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. இந்தப் பணி, என்னுடைய ஆய்வுக் கூட்டத்திற்குப் பிறகு 18,828 வீடுகள் கட்டுகின்ற அளவிற்குத் தீவிரப்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). மேலும், இந்த நிதியாண்டின் இறுதிக்குள், 32,668 வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில தொண்டு நிறுவனங்கள் கட்டுவதாக வாக்களித்து, கட்ட இயலாத 3,000 வீடுகளையும் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தற்போது அரசே கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுனாமி பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் பகுதியில், மாதா அமிர்தானந்தமயி அவர்களின் அறக்கட்டளையின் சார்பில் கட்டப்பட்டுள்ள சுமார் 400 வீடுகளை, வரும் 31ஆம் தேதி, நானே சென்று திறந்து வைக்க இருக்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மாதா அமிர்தானந்தமயி அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களை, ஏழையெளியோருக்கு, நலிந்தோருக்கு, பாதிக்கப்பட்டோருக்குச் செய்கின்ற அருள் உள்ளம் படைத்தவர்கள்; மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, இன்றைக்குக் கேரள மாநிலத்தில் மிகப் பிரம்மாண்டமான மருத்துவமனை, கல்லூரி இவற்றையெல்லாம் நடத்துகின்ற அளவிற்கு உயர்ந்தவர்கள். அவர்கள் என்னை அழைத்திருக் கின்றார்கள். நான் நாகைக்குச் சென்று, இந்த 400 வீடுகளை, 31ஆம் தேதி அன்று திறந்து வைப்பதற்காக இருக்கின்றேன்.

24-6-2006 அன்று இந்த அரசு நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், நான் முன்பு சொன்னேனே, அந்தக் கூட்டத்தில் விடுபட்ட மீனவர்களுக்கு வலைகள், படகுகள் வழங்குதல் மற்றும் ஏற்கெனவே உதவி அளிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதல் வலைகள், ஐஸ் பெட்டிகள், பாதுகாப்புக் கவச உடைகள், சைக்கிள்கள் போன்றவை வழங்க 110 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், கல்விக் கட்டணச் சலுகைகள் கூடுதலாக ஓராண்டுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளன.

மத்திய அமைச்சர்களுடைய அதிகாரமளிக்கப்பட்ட குழு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், முதற்கட்டமாக நாகை, கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கக்கூடிய 325 சதுர அடி பரப்பளவு கொண்ட நிரந்தர வீடுகள் தலா 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான

செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அடிப்படை வசதிகளுக்காக ஒரு வீட்டுக்கு சுமார் 40,000 ரூபாயும், 10 ஆண்டுகள் காப்பீடு செய்ய 1,000 ரூபாயும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இராஜிவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 550 கோடி மதிப்பீட்டில் 22,000 வீடுகள் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நண்பர் பீட்டர் அல்போன்ஸ் பேசும்பொழுது, தமிழ்மொழிக்குப் பேரகராதித் தொகுப்பும், அறிவியல் கலைச் சொற்களும், கலைக் களஞ்சியமும் புதிதாக உருவாக்கும் பணியை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார். 1974ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அகர முதலித் திட்டம் மொழிஞாயிறு தேவநேய பாவாணர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின்கீழ் இதுவரை 18 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆறு தொகுதிகள் அச்சில் உள்ளன. எஞ்சிய ஏழு தொகுதிகள் தயாரிப்பில் உள்ளன. அச்சில் உள்ளதையும், தயாரிப்பில் உள்ளதையும் இந்த அரசு விரைவுபடுத்தி வெளியிடும் என்பதை பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). கழக ஆட்சி அமையும்போதெல்லாம் அகர முதலித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு விரைவுபடுத்தப்படுவதும், அதற்குப் பிறகு பெரும் தொய்வும், தளர்ச்சியும் ஏற்படுவதும், அது மீண்டும் புத்துயிர் பெறுவதுமான நிலை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதையொட்டி, தமிழ் அறிவியல் களஞ்சியத்தின் 16 தொகுதிகள் தயாரிக்கப்பட்டுவிட்டன. 17, 18, 19 மற்றும் 20ஆம் தொகுதிகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 2008ஆம் ஆண்டுக்குள் இவற்றைத் தயாரித்திட நடவடிக்கைகள் முனைப்போடு மேற்கொள்ளப்படும்.

மேலும், தமிழக அரசால், அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டுள்ளதை அனைவரும் அறிவீர்கள். தமிழ் மொழியில் புதிய அறிவியல் சொற்களும், கலைச் சொற்களும் கொண்ட அறிவியல் கலைச் சொல் அகராதி தயாரிக்கும் பணி விரைவாக நடைபெற இந்த மன்றம் ஆவன செய்யும். தமிழ்ப் பேரகராதி திருத்தப் பணி தற்போது சென்னைப் பல்கலைக்கழக

தமிழ் மொழித் துறையில் நடைபெற்று வருகிறது. முந்தைய பேரகராதியைவிட மும்மடங்கு பெரிதாக, சுமார் ஐந்து இலட்சம் சொற்களோடு இந்த அகராதி வெளியிடப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள்; அவருடைய மாவட்டத்தில் குலவணிகர்புரம் பகுதியில் அமைந்துள்ள இரயில்வே கடவு எண் 4-க்குப் (Rail-way gate) பதிலாக மேம்பாலம் கட்டப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். இந்தக் கடவு எண் 4 இரயில்-வாகன அலகு (Trafic Vehicle Unit) 1,13,547 ஆக இருக்கிறது. இது குறைந்தபட்ச அளவான 1,00,000-ஐவிட அதிகமாக இருப்பதால், கடவுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டுகின்ற தகுதியைப் பெறுகிறது. ஆனால், இச்சாலை தேசிய நெடுஞ்சாலை 7-ல் வருவதால் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் இசைவு பெற்று இரயில்வே மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களும், திரு. நன்மாறன் அவர்களும் தகவல் தொழில்நுட்பப் பூங்காவைப்பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். அவர்கள் பேசும்போது, சென்னைக்கு அடுத்தபடியாக, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். சென்னைக்கு அடுத்தபடியாக, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதன் அடிப்படையில், கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பப் பூங்கா தொடர்பாகத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கிண்ணிமங்கலம் கிராமத்தில் 39 ஏக்கர் நிலமும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம்,

இலந்தைக்குளம் கிராமத்தில் 21.77 ஏக்கர் நிலமும், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கக் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், காமராஜர் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 200 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையிலே உள்ளது. இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நிலம் எடுப்பது என்பது இப்போது பெரிய பிரச்சினையாக ஆகியிருக்கிறது. சில நேரங்களிலே, இதிலே அரசியலும் குறுக்கிடுகின்ற காரணத்தால், நிலம் எடுப்பு நினைத்தபடி நடக்க முடியவில்லை. நினைத்தபடியெல்லாம் நிலத்தை எடுக்க வேண்டுமென்று நான் கருதுபவன் அல்ல. எல்லோரும் நினைக்கிறபடி, ஏனையெளியவர்கள், குடிசைவாழ் மக்கள், நம்முடைய பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர்கள், தோழர்கள், இவர்கள் எல்லாம் கருதுகிற இடத்தில்தான் நிலத்தை எடுக்க வேண்டுமென்று கருதுகிறோம். பயிர் செய்யப்படுகின்ற நிலங்களை நிச்சயமாக இந்த அரசு தொடாது என்ற உறுதியை நான் அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதே நேரத்தில், தொழில்கள் வர வேண்டும் என்று விரும்புகிறபோது, கொஞ்சம் விட்டுக் கொடுக்க வேண்டும். அரை ஏக்கர், ஒரு ஏக்கர் இருந்தால் அதைச் சாக்கிட்டு, 'அரை ஏக்கர் நிலம், அய்யோ போச்சே' என்று சொன்னால், எதுவுமே ஆரம்பிக்க முடியாது. நாடும் வளம் பெற வேண்டுமென்று கருதுகின்றோம், தொழில்களும் வளர வேண்டுமென்று கருதுகின்றோம். வேலைவாய்ப்பும் பெருக வேண்டுமென்று கருதுகின்றோம். இவ்வளவுக்குப் பிறகு, நாம் தொழிற்சாலைகளே உருவாகக் கூடாது என்று எண்ணினால், தடையாக இருந்தால் என்ன ஆகும் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது மேற்கு வங்கத்திலே என்னவாயிற்று? தொழிற்சாலை அமைக்க அவர்கள் எடுத்த முயற்சிக்கு ஏற்பட்ட இடையூறுகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதற்காக இந்தியா முழுவதும் கொந்தளித்ததும் உங்களுக்குத் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட கொந்தளிப்புகளும், குழப்பங்களும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு எல்லாம் இருக்கின்றது. ஏழை

எளியவர்களை, உங்களுக்கு இடமில்லை என்று துரத்திவிட்டு, நாம் அங்கே பங்களா கட்டிக்கொள்வதோ, ஆலை அமைத்துக் கொள்வதோ, இந்த அரசினுடைய கொள்கையாக நிச்சயம் இருக்காது என்பதை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. மணி அவர்களும், திரு. வேல்முருகன் அவர்களும் பேசும்பொழுது, இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டு விற்பனை முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டுகள் விற்பனைக்கு எதிராக முதலில் 1,308 வழக்குகள் போடப்பட்டன. இதெல்லாம் 2006-க்கு முன்பே. மே மாதத்திற்கு முன்பே 2006-ல் வழக்குகள் போடப்பட்டன. 2006-ல் அதற்குப் பிறகு, அப்பொழுதும் 1,847 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. ஆக, தொடர்ந்து இந்தக் கள்ள லாட்டரிச் சீட்டுகள் விற்பனைமீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே அனுமதிக்கப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வேறு மாநிலங்களிலேயிருந்து இங்கே வந்து விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள். அதை அடக்குவதற்கு, முடக்குவதற்கு, அப்படி நடைபெறுகின்ற காரியங்களைத் தண்டிப்பதற்கு நிச்சயமாக, தீவிரமாக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வேல்முருகன் அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. பண்ருட்டி தொகுதியிலே, தனி நீதிமன்ற வளாகம் தேவையென்று அவர் தெரிவித்திருக்கின்றார். இதற்காக ரூ. 2.23 கோடி செலவில், பண்ருட்டியில் தனி நீதிமன்ற வளாகம் அமைத்திட ஒப்புதல் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அவர் இங்கே கலாச்சாரத்தைப்பற்றி மிகக் கவலையோடு குறிப்பிட்டார். புதிய கலாச்சாரத்தை உருவாக்குபவர்களாக நாம் இருக்க வேண்டியிருக்கிறது என்ற கொள்கையை நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசும்பொழுது எடுத்துரைத்தார்கள். கலாச்சாரத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், பேசவதே பெண்களை இழிவு

படுத்துகின்ற கலாச்சாரமாக இருக்கிறது என்று நாம் அந்த முறைகளைக் கண்டித்துப் பேசும்பொழுதே பின்விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடாது. அதனால்தான் பாலபாரதி அவர்களுக்கு அவ்வளவு கோபம் என்று கருதுகின்றேன். அவர்கள் தன்னுடைய பேச்சை ஒரு வகையாகத் திருப்பிச் சொன்னார்கள். கலாச்சார நடிவடிக்கை என்று பார்த்தால், இன்றைக்கு பொங்கல் நாளை சமத்துவப் பொங்கலாக இந்த அரசாங்கம் அறிவித்திருப்பதே ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்குவதற்காகத்தான் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய ரவிக்குமார் அவர்களும், செல்வப் பெருந்தகை அவர்களும், அரசுக் கல்லூரிகளில் விரிவுரையாளர் பணியிடங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான பின்னடைவு (backlog) பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். விரிவுரையாளர் பின்னடைவுப் பணியிடங்கள், அரசுக் கல்லூரிகளில் உள்ள 1,062 விரிவுரையாளர் காலி பணியிடங்களை நிரம்பும்பொழுது, 522 பின்னடைவுப் பணியிடங்கள், தனி நியமனம் (Special Recruitment) மூலம் மூன்று கட்டங்களாக நிரப்பப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). கைதட்டிவிட்டீர்கள். மூன்று கட்டங்கள் என்பது திருப்தியளிக்காது என்று கருதினேன். திருப்தியளிக்காவிட்டால் இன்னும் அதைப்பற்றி யோசிப்பேன்.

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே உரையாற்றிய எதிரொலி மணியன் அவர்கள், பெரணமல்லூர் காவல் நிலையம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஆகியவற்றிற்குக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார். திருவண்ணாமலை மாவட்டம், வடவணக்கம்பாடி காவல் நிலையம் ஏற்கெனவே புதிய கட்டடத்தில் இயங்கி வருகிறது. பெரணமல்லூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம், காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும், இந்த இரண்டு காவல் நிலையங்களைச் சேர்ந்த பணியாளர் களுக்குக் குடியிருப்புகள், "ஆண்டுதோறும் 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்"கீழ் வரும் நிதியாண்டில்

கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. அ. தமிழரசு அவர்கள் பேசும்போது, ஓமலூர் தொகுதியில் அரசு கயிறு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். சேலம் மாவட்டம், தாரமங்கலம், ஓமலூர் பகுதியை உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள கயிறு திரிக்கும் தொழிலாளர்களுக்காக, மத்தியி அரசின் பாரம்பரியமிக்க தொழில்களைப் புத்துயிரூட்டும் நிதித் திட்டத்தின்கீழ், ரூ. 117 இலட்சம் மதிப்பீட்டில் கயிறு குழுமம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

தலைவாசல் தொகுதி, திரு. கே. சின்னதுரை அவர்கள், தனது தொகுதியில் கங்கவல்லி தாலுகா அலுவலகம், சொந்தக் கட்டடம் இன்றி இயங்கி வருவதால், தாலுகா அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். வரும் நிதியாண்டில் கங்கவல்லி தாலுகா அலுவலகத்திற்கு புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

விவாதத்தின்போது பேசிய பல உறுப்பினர்கள் தமது தொகுதிகளிலுள்ள அரசு மருத்துவமனைகளில் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டுமென்றும், போதிய மருத்துவர்கள் பணியமர்த்தப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கோரியவாறு இத்திட்டத்திற்கு திருவாரூர் மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையில் ரூபாய் 95 இலட்சம் செலவிலும், சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் 25 இலட்சம் ரூபாய் செலவிலும், திருச்சி மாவட்டம், லால்குடி அரசு மருத்துவமனையில் 40 இலட்சம் ரூபாய் செலவிலும், நாமக்கல் மாவட்டம், வேலூர் அரசு மருத்துவமனையில் 65 இலட்சம் ரூபாய் செலவிலும், கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் 10 இலட்சம் ரூபாய் செலவிலும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவ மனையில் 65 இலட்சம் ரூபாய் செலவிலும், காஞ்சி

மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு மருத்துவமனையில் 85 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டடப் பராமரிப்பு பணிகள், புதிய கட்டடங்கள் கட்டுதல், வார்டுகள் அமைத்தல், கழிப்பிட வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூர் சாயப் பட்டறை பற்றி - நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன் என்று திரு. சிதம்பரம் சொன்னார் - அதுமாதிரி திருப்பூர் சாயப் பட்டறைதான் இந்த சட்டப்பேரவையிலேயே கதாநாயகனாக ஐந்து நாட்களாகப் பேசப்படுகின்ற ஒன்று. அந்தக் கழிவுகளை அகற்றுவதுபற்றி திரு. சிவபுண்ணியம் பேசினார். சி.பி.எம். சார்பாக திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசினார்கள். காங்கிரஸ் கட்சி சார்பாக திரு. ஞானசேகரன் அவர்கள் முழங்கினார்கள். பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. ஜி. கே. மணி அவர்கள் பேசியிருக்கிறார்கள். திரு. விடியல் சேகரும் அதைப்பற்றி பேசினார் இடையிலே புகுந்து. (குறுக்கீடு). நான் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கே பதில் சொல்வதற்கு இவ்வளவு கஷ்டப்படுகிறேன், நேற்று எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பேன் பேசியிருந்தால் என்பது உங்களுக்குத் தெரியும், அதனால்தான் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தேன்.

அதைப்பற்றி அதிகாரிகளுடன் கலந்து பேசினேன். குழாய்களின் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளைக் கொண்டு போய் கடலில் விடுவது என்றால், மற்ற மாநிலங்களுக்கு அது வசதி. இப்போது, குஜராத் என்றால் கடலே இருக்கிறது; அருகிலேயே கடல் இருக்கிறது. அதேமாதிரி, மராட்டியத்திலேயும் கடல் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திருப்பூர் தொழிற்சாலைக்கும், கடலுக்கும் வெகு தூரம் இருக்கிறது. அதனால் நீளமாகத்தான் அந்தக் குழாய்களை அமைக்க முடியும். அதற்கு எவ்வளவு தூரத்திற்கு இந்தக் குழாய், எந்தக் கடலில் கொண்டு விடுவது, நாகப்பட்டினமா அல்லது வேறு இடமா, எந்த இடத்திலே கடலில் கொண்டு அந்த குழாய்களை விட்டு, கழிவுநீரைக் கடலில் கலக்க வைக்கிறது என்று பார்த்தால் அதற்கு சுமார், உத்தேசமாக

700 கோடி ரூபாய் அளவிற்குச் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த 700 கோடி ரூபாய் தமிழக அரசு சார்பில் 15 சதவீதமும் - அது சுமார் 100 கோடி ரூபாயாகும், 15 சதவீதமென்றால் - மத்திய அரசின் சார்பில் 25 சதவீதம் என்றால் 175 கோடி ரூபாய் ஆகும். மீதத் தொகையை சாயப் பட்டறை அதிபர்களும் செலவிட்டு, அவர்கள் சார்பிலேயே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் நிறைவேற்றுவதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று கருதுகிறேன். அதுபற்றி அவர்களையும் அழைத்துப் பேசி, நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகளுக்குத் தொல்லை வராமல் அதை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் அப்பொழுது நீதிமன்றத்தினுடைய பிரச்சினைகள் முடிந்துவிடும் என்றும் நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இரண்டு, மூன்று அறிவிப்புகளை வெளியிட விரும்பு கின்றேன். மாநில நெடுஞ்சாலைகளையும், பிற நெடுஞ்சாலை களையும் மேம்படுத்த சிறப்புத் திட்டத்தின்கீழ் மாநில அரசின் நிதி ஆதாரத்திலிருந்து ரூ. 722.40 கோடி ஒதுக்கீடு செய்து பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளித்திருக்கின்றோம். இதில், 1078.50 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள், 1390 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் 1354.50 கி.மீ நீள மாவட்ட இதர சாலைகள் மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தவிர 50 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் பல முக்கியச் சாலைகளை மேம்படுத்த நிதி ஒதுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதனை ஏற்று, சுமார் 918 கி.மீ. நீளத்தில் 280 சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளக் கூடுதலாக ரூ. 230.17 கோடி ஒதுக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இதில் 433 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளும், 485 கி.மீ. நீள மாவட்ட முக்கியச் சாலைகளும் மேம்படுத்தப்படும்.

ஒரு முக்கிய அறிவிப்பு. தமிழ்நாட்டில் உள்ள 63 உப வடிநிலங்களில் அமைந்துள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், மதகுகள் ஆகியவற்றைச் செப்பனிட்டு நீர் மேலாண்மை செய்து

விவசாயிகளுடைய வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த நீர்வள நிலவளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். இத்திட்டத்திற்கான ஒப்புதலை ஜனவரி 23ஆம் தேதி உலக வங்கி அளித்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 2547 கோடியாகும். அதாவது, 566 மில்லியன் டாலர்கள். இத்திட்டத்திற்கான உடன்படிக்கை விரைவில் டெல்லியில் கையெழுத்தாகவுள்ளது. இத்திட்டம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடித் திட்டமாக அமைந்து தமிழக விவசாயப் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேன்மையடையச் செய்யும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவு செய்து காத்திருப்போர்களில் பலர் பல்வேறு காரணங்களினாலும் மற்றும் முந்தைய அரசால் விதிக்கப்பட்ட வேலை நியமனத் தடையின் காரணமாகவும், தங்களது பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியுள்ளார்கள். இவர்களுக்கு உதவும்வகையில், வயது வரம்பை இந்த அரசு ஐந்தாண்டுகள் தளர்த்தியதோடு, 2004 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்காதவர்களுக்கு, மீண்டும் வாய்ப்பளித்து சிறப்புச் சலுகையும் வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

இதேபோன்று 2001, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில், பதிவினைப் புதுப்பிக்காதவர் களும் புதுப்பித்துக்கொள்ள, சிறப்புச் சலுகை வழங்கி இந்த அரசு ஆணையிடுகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). இதனால், இவர்கள் அரசு வேலைவாய்ப்பைப் பெறவும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர நிதி உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெறவும் முடியும்.

தமிழகத்தினுடைய நிதிநிலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்ல வேண்டும். இதற்கிடையில், 1955ஆம் ஆண்டு 29-9-1955 அன்று இதே சட்டப் பேரவையில் "நான் தமிழன், என்னுடைய மொழியே இந்த இராஜ்யத்தில் ஆட்சி

மொழியாக இருக்க வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி மன்றத்திலும், நியாய மன்றத்திலும், நிர்வாகத் துறையிலும், தமிழ் மொழியே இயங்க வேண்டும். உயர்நீதிமன்றத்திலும் தமிழ்தான் வழக்கு மொழியாக இருக்க வேண்டும். கல்வியில் தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டும்" என்று பேசியவர் அண்ணன் ப. ஜீவானந்தம் அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது நூற்றாண்டுதான் இது. அவரது நூற்றாண்டை தமிழக அரசின் சார்பில் 21-8-2007 அன்று சிறப்பான முறையில் கொண்டாடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நான் சொன்ன இந்த திட்டங்களைப் போல, மேலும் இந்த அரசு செலவழிக்க வேண்டிய - அரசுக்கு திட்டங்களால் இழப்புதான் ஏற்படும். செலவு என்றாலே இழப்புதான். இந்த வரி, மதிப்புக் கூட்டு வரியினால் இழப்பு ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. உண்மைதான். ஆனால் ஏற்படுகிற இழப்பு எப்படி ஏற்படுகிறது. எதனால் ஏற்படுகிறது என்பதைச் சிந்தித்தால், அந்த இழப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இழப்புதான். மதிப்புக் கூட்டு வரி முறைக்கு முன்னர் இருந்த பொது விற்பனை வரி முறையின்கீழ் 1, 4, 8, 10, 12, 16, 20 சதவிகிதம் என அதிகபட்சம் 20 சதவிகிதம் வரை பல்வேறு விகிதங்களில் பொருட்களின்மீது வரி விதிக்கப்பட்டு வந்தது.

இப்போது மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின்கீழ், 1, 4, 12.5 என்ற மூன்று விகிதங்களில் மட்டுமே வரி விதிக்கப்பட்டுள்ளது. அதற்குமேலே கிடையாது. முன்பு போல் பல பிரிவுகளில் வரி விதிக்கப்படுவது கிடையாது. இதில் அதிகபட்சமே 12.5 சதவிகிதம்தான். 20 சதவிகிதம் என்ற அளவிற்குக் கிடையாது என்கிறபோது அரசுக்கு வருமானம் குறைவாகத்தான் இருக்கும்; அதனால் வருவாய் இழப்புதான் ஏற்படும் என்றால் ஆமாம் நஷ்டம்தான். அந்த நஷ்டத்தை வணிகர்களுக்காக, மக்களுக்காக இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதுதான் மதிப்புக் கூட்டு வரியின் தத்துவம். (மேசையைத் தட்டும் ஒலி).

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளதால், முந்தைய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ்

விதிக்கப்பட்ட கூடுதல் விற்பனை வரி (additional sales tax) உபரி வரி (surcharge) மறு விற்பனை வரி (resale tax) ஆகியவை நீக்கப்பட்டுள்ளன. எனவே, மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பல்வேறு பண்டங்களுக்கு விதிக்கப்படும் சராசரி வரி விகிதம் குறைந்துள்ளது.

மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் அரசுக்கு வர வேண்டிய வருவாய் மேற்கூறிய காரணங்களால் குறையும். இந்த இழப்பை மக்களுக்காக அரசே ஏற்றுக்கொள்கின்றது.

இந்த இழப்பில் 75 விழுக்காட்டினை மைய அரசு, தமிகத்திற்கு இழப்பீடாக வழங்கும். ஏன் மைய அரசு வழங்குகின்றது, எதற்காக வழங்கவேண்டும் என்ற கேள்வி எழும். மைய அரசு இந்தியா முழுமையும் ஒரே சீரான வரி விதிப்பு இருக்க வேண்டும் என்று கருதுகிறது. ஆகவே, இதை அமல்படுத்துகிற மாநிலங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பீட்டைச் சமாளிக்க மைய அரசு இந்த பாரத்தை ஓரளவு தாங்குகிறது.

திருப்பூரிலே பனியன்களுக்கு வரி வேண்டாம் என்று சொன்னீர்கள். தி.மு.கழக ஆட்சியில் அதை எடுத்தோம். இப்பொழுது இருக்கிறதா என்று தெரியாது. அப்போது நான் வரியை எடுத்தேன் மறுபடியும் போட்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு). போட்டதாக திரு. பீட்டர் அல்போன்ஸ் தெரிவிக்கிறார். போடாமல் இருந்தால்தான் ஆச்சரியம். அதேமாதிரி, சமையல் எண்ணெய்க்கு வரி இல்லை என்று சொன்னோம். அதற்கு என்ன காரணம்? மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக, அத்தியாவசியப் பொருட்களான சமையல் எண்ணெய், அதேபோன்று சீயக்காய், சூடம், சாம்பிராணி இதற்கெல்லாம் வரி இல்லை என்று சொன்னோம். அப்படி வரி இல்லை என்ற சொன்னபோது - நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும் - அதனால் யாருக்கு இலாபம் என்றால், மக்களுக்குத்தான் இலாபம். அதைப்போல, இந்த மதிப்புக் கூட்டு வரியினால், வருவாய் குறைந்தால், அது மக்களுக்கு இலாபமாகப் போய்ச் சேருகிறது. மக்களுக்குத்தான் பயன் அளிக்கிறது. ஆகவே, வரியைக் குறைக்க, சீராக ஆக்க, இந்திய அரசு எடுக்கின்ற அந்த முயற்சிக்கு

ஆதரவாகத்தான் நாம் இந்த மதிப்புக் கூட்டு வரியை இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

2007-2008 ஆம் நிதியாண்டில் மதிப்புக் கூட்டு வரியைச் செயல்படுத்துவதால் ரூபாய் 2,700 கோடி இழப்பீடு ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. திரு. பீட்டர் அல்போன்ஸ் இங்கே ஆதங்கமே பட்டார். ஐயா, இதோடு நிறுத்துங்கள்; இதற்குமேல் வேண்டாம்; எவ்வளவு சாதனைகள்? அடுப்பு கொடுக்கிறீர்கள்; நிலம் கொடுக்கிறீர்கள்; தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொடுக்கிறீர்கள்; முட்டை கொடுக்கிறீர்கள்; எல்லாவற்றையும் கொடுக்கிறீர்கள்; நிறுத்துங்கள் இதற்குமேல் கொடுக்க ஒன்றும் கிடையாது என்று சொன்னார். ஏன் சொன்னார் என்றால், அவருக்கும், திரு. சுதர்சனம் போன்றவர்களுக்கும், நம்முடைய மணி போன்றவர்களுக்கும் பயம் - ஆனால், கம்யூனிஸ்டுகள் இன்னும்கூடக் கொடுக்க வேண்டும் என்பார்கள். (சிரிப்பு). ஏனென்றால், இரண்டு ஏக்கரா நிலம் கொடுக்கும்போது 3 ஏக்கரா கொடுங்கள் என்று கேட்கிறார்கள். சிவபுண்ணியத்திற்கு, நம்முடைய திருப்பூர் எம்.எல்.ஏ-வுக்கு இவர்களுக்கெல்லாம்கூட அந்த எண்ணம் இருக்கும். இதற்குமேல் செலவழிப்பதற்கு என்ன வழி இருக்கிறது என்று கேட்கிறார்கள்.

ஆனால் வேறு சிலர் இப்போதே இந்த அரசு திவாலாகப் போகிறது என்று ரொம்ப வருத்தப்படுகிறார்கள். நான் சொல்கிறேன், ஆங்கிலத்தையும் தமிழையும் சேர்த்துச் சொல்கிறேன். The Wall - தி வால்; தி வால் ஆகப் போகிறதென்றால் இந்த அரசின் நிதி நிலைமை வால் மாதிரி, அனுமார் வால் மாதிரி நீளப் போகிறதே தவிர குறையப் போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). அனுமார் வால் நீண்டதால்தான் இராவணனுக்கு நேராக வாலையே சுற்றிச் சுற்றி அதன்மேலே ஏறி அனுமார் உட்கார முடிந்தது, இராமாயணக் கதையில். அதனால் "தி வால்" ஆனால் எங்களக்கு இலாபமே தவிர, அதனால் ஒன்றும் நஷ்டம் கிடையாது. திவால் ஆவதற்கு எந்த வழியும் கிடையாது. ஏனென்றால், பொருளாதாரத்தில் ஒரு தத்துவமே, ஒரு மாநிலத்தினுடைய உற்பத்தி, பெருக்கெடுக்கின்ற அந்த உற்பத்திப் பெருக்கத்திலே 3% வரையிலும் அவர்கள் செலவழிக்கலாம். நிதிப் பற்றாக்குறை

3% தாங்கும். அதற்குமேலே போனால்தான் நீங்கள் யோசிக்க வேண்டும். 3% வரையிலும் தாங்கக்கூடிய அளவுக்குத்தான், நாங்கள் செலவு செய்து, நிதானமாக செய்துகொண்டிருக்கிறோம். நாங்கள் செய்கின்ற செலவு, இந்த சதவிகிதத்தை மீறாமல்தான் செய்துகொண்டிருக்கிறோம்.

திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 38,732 கோடி என மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் வருவாய் வரவுகளில் இந்த நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களிலேயே ரூபாய் 24,548 கோடி அரசால் பெறப்பட்டுள்ளது. இந்த அரசால் செயல்படுத்தப் பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், நிருவாகச் செலவினங்கள் மற்றும் மூலதனப் பணிகள் ஆகியவற்றிற்காக ரூபாய் 23,594 கோடி இதுவரை செலவிடப்பட்டுள்ளது. அப்படி திவாலாகும் என்று சொன்ன செய்திக்காகத்தான் இந்தக் கணக்கையெல்லாம் உங்களுக்குச் சொல்கிறேன். குறிப்பாக, அரசின் ஒட்டுமொத்த வருவாய் கடந்த ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடும்போது, நடப்பாண்டில் சுமார் 20 சதவிகித அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

செலவினங்களை பொறுத்தவரையில், இந்த அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களுக்கும் அனைத்து திட்டப் பணிகளுக்கும், திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் உரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கிலோ ஒன்றுக்கு ரூ. 2/- என்ற விலையில் அரிசி வழங்கும் திட்டத்திற்கு உணவு மானியமாக ரூபாய் 1,950 கோடி; வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூபாய் ஒன்பது கோடி மற்றும் இரண்டாம் கட்டத்திற்கு ரூபாய் 750 கோடி; இலவச அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி, விவசாயக் கூட்டுறவுக் கடன் இரத்து செய்ததற்கு கூட்டுறவு நிறுவனங்களுக்கு இந்த ஆண்டிற்கு மட்டும் ரூபாய் 1,435 கோடி; டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி; மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி மற்றும் அரசு அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்க ரூபாய் 250 கோடி என அனைத்துத்

திட்டங்களுக்கும், நல உதவிகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நிதி இல்லையென்று சொல்லி, அரசு உழியர்களைப் பட்டினி போடவில்லை, எதிர்த்துக் கேட்டவர்களை சிறையிலும் போடவில்லை.

இத்தகைய பெரும் திட்டங்கள் அனைத்திற்கும் போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளபோதிலும், தமிழ்நாடு நிதி நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலக்கின்படியே, அரசின் நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் - GSDP (Gross State Domestic Product) 3 சதவிகிதத்திற்குக் குறைவாகவே இருக்குமாறு உறுதி செய்யப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, செலவுப் பொறுப்புகள் அதிகரித்துள்ளபோதிலும், இந்த அரசின் திறமையான நிதி நிருவாகத்தால் அரசின் நிதிநிலைச் சமன்பாடு சீராகவே உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்துகிறேன். ஆனால் தவறான பிரச்சாரம், திவாலாகி விட்டது, திவாலாகி விட்டது தொலைக்காட்சிப் பெட்டியெல்லாம் ஓட்டையாகிப் போய்விட்டது. எரிவாயு அடுப்பு எல்லாம் எரியவே இல்லை. அரிசியை மாடு தின்கிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் தின்றால் அதற்கு நான் என்ன செய்வது? (மேசையைத் தட்டும் ஒலி).

எதற்கெடுத்தாலும் முதலமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும், உள்ளாட்சித் துறை அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும், இந்த அரசைக் கலைக்கவேண்டும் என்றெல்லாம் உண்மையான ஜனநாயகவாதிகள் யாரும் எண்ணிப் பார்க்க முடியாத கோஷங்களையெல்லாம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் அதே பணி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் அதைப்பற்றி பேசவில்லை. பேசாததற்குக் காரணம் நான் நானாகவே இருக்க விரும்புகிறேன். நான் அவர்களான இருக்க விரும்பவில்லை. (மேசையை தட்டும் ஒலி). என்னென்ன பேசிவிட்டு இங்கேயிருந்து செல்கிறார்கள் என்னென்ன வார்த்தைகளைச் சொல்கிறார்கள் என்பதெல்லாம் உங்கள் காதுகளிலே விழாமல் இல்லை. விழும். நான் இவைகளை விட அதிகமான, கசப்பான, காழ்ப்பான வார்த்தைகளையெல்லாம் கேட்டுக்கேட்டு பழகியவன். “வாழ்க வசவாளர்கள்” என்று சொன்ன

அண்ணாவின் தம்பி நான் என்ற காரணத்தினால் அதைப்பற்றி யெல்லாம் நான் கவலைப்படவில்லை.

ஒன்றை மாத்திரம் உங்களுக்கு சொல்ல விரும்புகின்றேன். ஒரு போரில், இரண்டு தரப்பு வீரர்களும் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். அப்போது ஒரு வீரன், மற்றவனிடம் சொல்கிறான். "என்னப்பா, 'எங்களை மாதிரி வீரர்கள் உங்களிடம் இல்லையா?' என்றான். மற்றொருவன் என்னவென்னு கேட்டதற்கு 'எங்கள் வீரர்களுக்கு எல்லோருக்கும் மார்பில் காயம் இருக்கிறதே தவிர, முதுகிலே யாருக்கும் காயம் இல்லையே' " என்கிறான். அதாவது, அவர்கள் புறமுதுகு காட்டமாட்டார்கள் என்பதைச் சொல்வதற்காக அவ்வளவு வீரர்கள், 'நாங்கள் மார்பில்தான் காயம் தாங்குவோம், முதுகில் காயப்பட்டவர்கள் அல்ல' என்று சொன்னான். உடனே இந்த வீரன் அவனிடம் சொன்னானாம். "எங்கள் தளபதி இருக்கிறாரே, அவர் ஓடுகிறவர்களை தாக்குபவர் இல்லை, அதனால்தான் உங்கள் முதுகிலே காயம் படவில்லை" என்று சொன்னானாம். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, முதுகிலே காயம் படாததற்கு ஓடுகிறவர்களை தாக்காததுதான் காரணம் என்பதை மாத்திரம் இங்கே சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி). நாங்கள் ஓடுகிறவர்களைத் துரத்திப் பழக்கப்பட்டவர்கள் அல்ல துரத்தவும் மாட்டோம் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

C1002309

894.8115
TAM



